Kovilоor Digital Library

தெய்வத்தின் குரல்

நான்காம் பகுதி



ACC.NO: 2056
R65

வானதி பதிப்பகம்

Koviloor Digital Library

Koviloor Digital Library

4-6
2056

தெய்வத்தின் குரல்

ஜகத்குரு ஸ்ரீ காஞ்சி காமகோடி பீடாதீச்வர
ஸ்ரீ சந்திர சேகரேந்திர ஸரஸ்வதி
சங்கராசார்ய ஸ்வாமிகளின் அருள்வாக்குகள்

நான்காம் பகுதி

தொகுப்பாசிரியர் : ரா. கணபதி

KOVILOOR ANDAVAR LIBRARY KOVILOOR
A. No. 2056

வானதி பதிப்பகம்
13. தீனதயாளு தெரு
தி.நகர், சென்னை-17.

1988 –
60/-

Koviloor Digital Library

முதற் பதிப்பு : செப்டம்பர், 1985
இரண்டாம் பதிப்பு : மே, 1988
உரிமை பதிவு

திருநாவுக்கரசு தயாரிப்பு

விலை ரூ. 60-00

அச்சிட்டோர் :

மாருதி பிரஸ்,
173, பீட்டர்ஸ் ரோடு,
சென்னை - 600 014.

Koviloor Digital Library



ஸ்ரீ சந்திரசேகரேந்திர சரஸ்வதி
ஸ்ரீ சங்கராசார்ய ஸ்வாமிகள்

Koviloor Digital Library

Koviloor Digital Library

4-6

தெய்வத்தின் குரல்



Koviloor Digital Library

முக்கிளை தீபத்தின் மையத் தண்டு ஜ்யோதியிலிருந்து ஏற்றிய இரு பக்கக் கொழுந்துகளைப்போல் ஸ்ரீ சந்த்ரசேகர ஜ்யோதியில் கிளைத்த ஸ்ரீ ஜயேந்த்ர—ஸ்ரீ சங்கர விஜயேந்த்ரக் கொழுந்துகளுக்கு இந்த ஞான விளக்கினை ஸமர்ப்பிக்கிறோம்.

Koviloor Digital Library

ஸ்ரீ ஜயேந்திர சரஸ்வதி
ஸ்ரீ சங்கராசார்ய ஸ்வாமிகள்

Koviloor Digital Library

Koviloor Digital Library



ஸ்ரீ சங்கரவிஜயேந்திர சரஸ்வதி
ஸ்ரீ சங்கராசார்ய ஸ்வாமிகள்

Koviloor Digital Library

Koviloor Digital Library

பதிப்புரை

தெய்வத்தின் திருவருளினாலும் குருவருளினாலும் தெய்வத்தின் குரல் நான்காம் பகுதி புத்தக வடிவில் மக்களுக்குக் கிடைத்துள்ளது.

நான்காம் பகுதி எப்பொழுது வரும்; எப்பொழுது வரும் என்று வாசகர்கள் நேரிலும் கடிதங்கள் மூலமும் விசாரித்த வண்ணமிருந்தனர். தெய்வ மாமுனிவர் கட்டளையும் தெய்வத்தின் குரல் நான்காம் பகுதியை விரைவில் கொண்டு வந்துவிடு என்பதுதான். தொகுப்பாசிரியர் திரு. ரா. கணபதி அவர்கள் பரமாச்சார்யாள் அவர்களின் அருளுரைகளையெல்லாம் துருவித் துருவி ஆராய்ந்து சேகரிக்க இவ்வளவு நாட்களாகிவிட்டன. புத்தகத்தைப் பார்த்தால் பொன்னுரைகளைத் திரட்டும் பணி எவ்வளவு அற்புதமாக நிகழ்ந்திருக்கிறதென்பதை நீங்களே வியப்படைவீர்கள். ஆயிரத்துக்கு மேற்பட்ட பக்கங்களில் கருணை மாமுனிவரின் கருத்துரைகள் விரிந்திருக்கின்றன. எடுக்க எடுக்கக் குறையாத ஞானச் சுரங்கத்திலிருந்து ஞானச் செல்வத்தைத் தொகுத்தளித்துத் தந்துள்ளார் தொகுப்பு ஆசிரியர் திரு. ரா. கணபதி அவர்கள். அவரை எவ்வளவு பாராட்டினாலும் தகும்.

தெய்வத்தின் குரல் நான்காம் பகுதி வானதி பதிப்பகத்தின் சிறப்பு வெளியீடாக வெளிவருகிறது. இந்த நல்வாய்ப்பு ஸ்ரீ மகாதிரிபுர சுந்தரி சமேத சந்திரமௌளீசுவரர் அருட் கடாட்சமும் குருவருளும் என்றே கருதுகிறேன். உலகமகா குரு ஸ்ரீ காஞ்சிப் பெரியவர்களின் அன்பையும்,

Koviloor Digital Library

அருளையும் கருணை உள்ளத்தையும் என்னால் என்றுமே மறக்க முடியாது. தினம் தினம் அடியேன் போற்றி வணங்கும் தெய்வம் ஸ்ரீ சந்திரசேகரேந்திர சரஸ்வதி சங்கராசார்ய ஸ்வாமிகள் ஆவார்கள். என் இதய அஞ்சலியை முதற்கண் ஸ்ரீ காஞ்சிப் பெரியவர்கள் காலடியில் சமர்ப்பிக்கிறேன்.

தெய்வத்தின் குரல் பகுதி பகுதிகளாக வானதி பதிப்பகத்தில் வருவதற்கு அன்போடு அருளாசி வழங்கி வானதியின்பால் அன்பை வர்ஷித்துக் கொண்டிருக்கும் ஸ்ரீ ஜயேந்திர சரஸ்வதி சங்கராசார்ய ஸ்வாமிகளின் பொன்னடிகளைப் போற்றி வணங்குகிறேன்.

மெய்யறிவும் ஞானச் செல்வமும் நிறைந்த இந்த தெய்வத்தின் குரல் உங்கள் உள்ளங்களில் இல்லங்களில் எல்லாம் ஒலித்துக்கொண்டேயிருக்கட்டும்.

நூல் இவ்வளவு அழகாக, அற்புதமாக உருவாகியதற்கு தொகுப்பாசிரியர் திரு. ரா. கணபதி அவர்களே காரணம். அவர்களுக்கு எவ்வளவு நன்றி சொன்னாலும் தகும்.

இந்நூலை அழகாக அச்சிட்டுத் தந்த மாருதி அச்சகத் தாருக்கு நன்றி.

உலகெங்கும் தெய்வத்தின் குரல் ஒலிக்கட்டும்!

வணக்கம்

ஏ. திருநாவுக்கரசு
வானதி பதிப்பகம்

Koviloor Digital Library

முகவுரை

★ குருநாதன் திருவருளால் மீளவும் ஸந்திக்கிறோம். முன் மூன்று ஸந்திப்புக்களில் கூறிய முகமனுக்கு அதிகமாகச் சொல்ல வேண்டியது ஸ்வல்பமே.

★ இத் தொகுப்புகளுக்குச் செய்துள்ள விஷயதானத்துக்காக நாம் என்றென்றும் நன்றிக்கடன் பட்டுள்ளவர்களில் மறைந்த மூவருக்கு நினைவஞ்சலி செலுத்துகிறேன்.

ஸ்ரீ சரணர்களின் உரைகளில் தமிழ் இலக்கிய—ஸமயப் பண்பாடுகள் குறித்து எனக்கு ஏற்பட்ட பல ஐயங்களுக்கு எள்ளெனும் முன்னே எண்ணெயாகத் தெளிவு தந்து உதவியவர் படிப்பாளரும் பண்பாளருமான ஸ்ரீ ந. ரா. முருகவேள் அவர்கள். "ஈடு செய்ய இயலாதது" எனும் சொற்றொடரை அவர் மறைவு குறித்து உள்ளத்தின் அடித்தளத்திலிருந்து கூறுகிறேன். ஆயினும் ஸத்குருநாதர் பணிக்கு எவ்விதமேனும் உதவி கிடைக்காமற் போகாதாதலால் நா. ரா. மு. நாளும் வழிபட்ட தமிழன்னை இனியும் ஓர் உத்தமக் கருவியை அளித்து உதவுவாள் என உறுதியாய் நம்புகிறேன்.

நேராக விஷயதானம் செய்வது எனும் முறையில் நம் தொகுப்புக்களுக்கு ப்ரஹ்மஸ்ரீ ஸாம்பமூர்த்தி சாஸ்த்ரிகளவர்கள் பேருதவி புரிந்ததாகச் சொல்வதற்கில்லை. ஆயினும் இப்பணியில் நான் தளராது ஈடுபடத் தமது நிறைந்த, எளிய, அன்பு மனத்தினால் அவர் தளராது

Koviloor Digital Library

அளித்துவந்த ஊக்கம் நூல்களின் ஆக்கத்துக்குச் செய்துள்ள உதவி பெரியது. அந்தப் பெரியவரின்—பூஜ்ய ஸ்ரீ மஹா பெரியவர்களின் பூர்வாச்ரம ஸஹோதரரின்—புண்ய நினைவுக்கு என்றும் நமஸ்காரம்.

நேராக நம் தொகுப்புக்களுக்கே மிக மிக உபகரித்தவர்களில் முன்னணியில் நின்ற ஒரு பெரியார் தம்மைப் பற்றிக் குறிப்பிடவே கூடாது என்று ஆணையிட்டு விட்டதால், முன் மூன்று தொகுப்புக்களில் அவரைச் சொல்லி வந்தனம் கூறும் பாக்யம் கிடைக்கவில்லை. இப்போது அவர் ப்ரஹ்மபூதராகி விட்ட பிறகே துர்பாக்யவசமாக அந்த "பாக்யம்" கிட்டியுள்ளது! "ஆஞ்ஜநேய ஸ்வாமிகள்" என்றழைக்கப்பட்ட பூஜ்ய ஸ்ரீ அநந்தாநந்தேந்த்ர ஸரஸ்வதி ஸ்வாமிகள்தாம்! பல்லாண்டுகள் ஸ்ரீ சரணர்களுடன் இருந்தவர்கள். மௌனமில்லாத நாட்களில் அநேகமாக ப்ரதி தினமும் இவர்களை வைத்துக்கொண்டுதான் ஸ்ரீ சரணர்கள் மணிக் கணக்கில் பல துறை விஷயங்களை அலசுவது வழக்கம். எனவே பொது ப்ரஸங்கங்களில் ஸ்ரீ சரணர்கள் கூறுததாக நம் தொகுப்புக்களில் வந்துள்ள (வரப்போகும்) ஏராள மான விஷயங்களில் கணிசமான பகுதி ஆஞ்ஜநேய ஸ்வாமிகளின் உபயம்தான். இத்தொகுப்பிலேயே "அத்வைதம்" என்ற பகுதி உள்ளதே, அதில் பெரும்பாகம் அவரது அன்பளிப்புத்தான் எனலாம். தோன்றும் துணையாக அவர் இருந்தபோதே அவரிடமிருந்து திரட்டிய பொக்கிஷத்தில் எஞ்சியுள்ள அநேக விஷயங்கள் இனியும் நம் தொகுப்புக்களை உருவாக்குவதற்கு அவரது தோன்றாத்துணையை வேண்டுகிறேன்.

★ விஷயப் பிரிவினை பற்றி ஓரிரண்டு.

"குருகுலம்; கடிகாஸ்தானம்" எனும் பேருரை "பண்பாடு" என்ற பிரிவின்கீழ் வரத்தக்கது. ஆயினும் விநாயகனை அடுத்து குருவின் பெயரில் ஒரு பிரிவு வெளியிட்டு வருகிறோமாதலின் இதனை அப்படியொரு பிரிவாக்கிக் கொடுத்திருக்கிறது.

Koviloor Digital Library

ஒரு பொருளை எடுத்துக்கொண்டு ஸ்ரீ சரணர்கள் மாநதியாக விஸ்தாரம் செய்யும்போதே அதில் வேறு பல பொருள்களும் உபநதிகளாகப் பிரியும். Digressions எனப்படும் இவற்றைப் பிரித்துப் பிரித்து எடுத்து, ஒவ்வோர் உரையும் முக்யமாக ஒரு பொருள் குறித்ததாகவே இருக்குமாறு பகுத்தும் தொகுத்தும்தான் நம் நூல்கள் உருவாக்கப்படுகின்றன. ஆயினும் இதற்கு ஒரு மாற்ருக, ஸ்ரீ சரணர்களின் செழித்தசிந்தனை என்ற மஹாவ்ருக்ஷம் ஒருமையப்பொருளில் வானோங்கும் நடுமரமாக வளரும்போதே, அதில் எத்தனை அழகாக வேறு பொருள்கள் கிளைகளாகக் கப்பும் கவடும் விட்டு நாற்றிசையும் பரவுகின்றன என்பதை வாசகர்கள் அறிந்து மகிழ்வதற்காக ''வண்டு ஸ்தோத்ரம்'' என்ற பேருரை பல digression -களுடனேயே கொடுக்கப்பட்டிருக்கிறது.

★ தேவாமுதத் திரட்டை நாலாம் முறையாக நானிலத்துக்கு விநியோகிக்கும் நல்லன்பர் ''வானதி'' ஸ்ரீ திருநாவுக்கரசு அவர்களுக்கும், அமுதத்தை ஏந்திய கும்பத்தை அழகுற அமைத்துள்ள மாருதி அச்சகத்தினருக்கும் அமுதரின் ஆசி அமரமாகக் கிடைக்குமாக! அமுதம் பருகும் வாசக நேயர்களுக்கும்தான்!

சென்னை
30-8-85

ரா. கணபதி

Koviloor Digital Library

Koviloor Digital Library

பொருளடக்கம்

பொருள் — பக்கம்

மங்களாரம்பம்

பெரிய இடத்துப் பிள்ளை — **3**

குழந்தை வழியே உலகப் பெற்றோரிடம் — 3
பயத்தோடு, ப்ரியத்தோடு — 5
எளிதில் கிடைப்பவர் — 6
பாட்டனார் பெருமை — 8
மாமா மஹிமை — 12
திருமாலும் அம்பிகையும் — 13
திருமால் செய்த கோணங்கி — 15
"சுக்லாம்பரதரம்" — 18
பெற்றோர் பெருமை — 21
முருகனும் மூத்தோனும் — 22

பிற தெய்வங்களும் போற்றும் பிள்ளையார் — **25**

மரியாதைக்குரிய குழந்தை — 25
முழுமுதற் கடவுளாக — 26
தந்தை பூஜித்த தனயர் — 28
ஸமீபகால சம்பவத்தில் புராண நிரூபணம் — 29
அன்னைக்கு உதவிய ஐங்கரன் — 30
முருகனுக்குதவிய முன்னவன் — 34
ராமபிரானும் விநாயகரும் — 36

கண்ணன் பூஜித்த கணநாதன் — **40**

ஸ்யமந்தகத்தின் கதை — 40
ஸூர்யனும்விநாயகரும் — 41

Koviloor Digital Library

தவத்தால் பெற்ற திவ்யமணி	43
கண்ணனின் வைராக்யம்	44
ஜாம்பவான்	48
கண்ணன் கண்ட நாலாம் பிறை	50
ஜயத்துக்கு ஆளான ஜயன்	51
கண்ணன் துப்பறிந்தார்!	53
மணியும் பெண்மணியும்	57
சண்டையில் ஸ்பரிச இன்பம்	59
மணியில் விளைந்த திருமணங்கள்	63
பெண்ணால் விளைந்த பகைமை	65
மீண்டும் வெற்றி, மீண்டும் பழி	68
அக்ரூரரும் மணியும்	73
அபவாதத்துக்குக் காரணம்	74
பாத்ரபதம்; பஞ்சாங்க வித்யாஸம்	75
கேள்வி பதில்; கதைக்குள் கதை	78
சந்திரனின் கர்வ பங்கம்	80
சாபத்தின் உட்கிடை	82
சாப விமோசனம்	83
பாலசந்த்ரன்	86
ஸங்கட ஹர சதுர்த்தி	88
கண்ணனும் சந்த்ரனும்	89
அபவாதம் நீங்க வரம்!	90
லீலையின் பயன் லோகக்ஷேமம்	92
ஒரு ச்லோகம் போதும்!	94
அபவாத நீக்கம்	94
ஜயந்திகளின் விசேஷம்	98
முடிவுரை	99

குரு

குரு குலம்; கடிகா ஸ்தானம்	**103**
குரு, ஆசார்யர், வாத்தியார்	103
வேதத் தொடர்பு	104

Koviloor Digital Library

உபாத்யாயரும் ஆசார்யரும்	106
போதனை ஜீவனோபாயமாக	108
குரு - ஆசார்ய ஒற்றுமை - வேற்றுமை	108
வீட்டில் இல்லாத குருகுலச் சிறப்பம்சம்	111
தாய் தந்தையர் பெருமை	114
வயதில் சிறிய குரு	116
அன்னை - தந்தை - ஆசான்	117
அத்யாபகர்	118
''உபாத்யாயர்'' பெற்ற உயர்வு	118
ஈச்வர ஆராதனையாக	120
''ஏற்பது இகழ்ச்சி''	122
பிற நாடுகளில் இல்லாத சிறப்பு	124
உலகியல் படிப்பிலும் உத்தம ஆசார்யர்கள்	126
ஸ்தாபன ரீதியில்லை; தனிமனிதர் மூலமே	128
''குலபதி''	129
பூர்வகால போதனையமைப்பின் வளர்ச்சி	132
மொழி, ஒலி ஒழுங்கு	134
எழுத்தில்லாத போதனை!	135
குலம், சாகை, சாத்ரன், சரணம் முதலியன	138
குருதக்ஷிணை	141
பூர்வகாலக் கலைகளும் ஸயன்ஸ்களும்	141
தர்மம்—ப்ரஹ்மம்	144
வைதிகமாகவே ஸகல வித்யைகளும்	145
எல்லா ஜாதியாரும்	146
கட்டாயக் கல்வி	146
பாத்திரமறிந்து	147
பிற்கால மாறுதலும் தற்கால விபரீதமும்	149
''யாரார் வாய் கேட்பினும்''	151
இன்னோர் உண்மை	153
வித்யாதானத்தின் உயர்வு	154
கல்வித் திட்டத்தில் கால அளவைகள்	155
க்ஹருஸ்தர்களுக்கு ஏன்?	160
விடுமுறை நாட்கள்	161

Koviloor Digital Library

மாணவனை அடிக்கலாமா? 162
மாணவன் லக்ஷணம் 164
ஆரோக்ய வளர்ச்சிக்கும் உதவி 165
தனிமனிதரையே மையமாக 166
தனிப்பட்ட ஆசான் பெருமை 167
ஸ்தாபனத்தின் குறைபாடு 168
உள்ளம் திறந்து குரு - சிஷ்யர்கள்
உபநிஷத உதாரணங்கள் 170
ச்ரத்தை; பரிப்ரச்னம் 174
சோதித்துத் துலக்குவது 176
குரு பத்னி 177
தெய்வசக்திகள் போதித்தாலும் குருபக்தி)
குறையாதது 179
பரீக்ஷை செய்து படிப்படியாக உபதேசம்;
மாணவனின் ஸ்வயசிந்தனைக்கும் ஊக்கம் 183
கண்ணன் கதையில் ஆசானின் அன்புடைமை 188
கேள்வி கேட்டுக் கற்பது 191
குரு லக்ஷணம்; குருவை சிஷ்யன் உரு செய்வது 193
குரு பீடத்துக்கும் பொருந்தும் 194
தனித் துறவியும், பீட குருவும் 197
ஸ்தாபனம்: "அவச்யத் தீமை"க்கு
ஆசார்யாள் பணி 199
பழங்காலக் கல்விப் பெருநிலையங்கள் 201
புது மதங்களும் பெரிய கல்வி நிலையங்களும் 206
"ப்ரத்யேகச் சூழ்நிலை" 207
பாட திட்டத்தில் வேறுபாடுகள் 212
மாறுபாடான இரு கதைகள் 213
புத்தர் கால அந்தணர் நிலைமை 217
க்ஷத்ரியரும் ப்ராம்மணரும் 221
வைதிகத்தில் நான்காம் வர்ணத்தவரின் அபிமானம் 223
தேச ஒருமை வேத தர்மத்தினாலேயே;
பிற தர்மங்களால் கட்டுக்குலைவே! 226
அத்வைதமும் அரசாங்கமும் 229

Koviloor Digital Library

மோதலிலும் மரியாதைப் பண்பு	231
அறிவு ரீதியிலேயே எதிர்ப்பு	232
புது மதங்களில் பெரிய வித்யாசாலைகள்	235
அந்தணரை மையப்படுத்தி குருகுலங்கள் வளர்ச்சி	236
மாணவன், மாணுக்கன்	239
தொழில் முறையில் பாதிப்பு இல்லை	240
பௌத்தம் - சமணம் :	
தேசிய ரீதியில் என்றுமே ஊன்றவில்லை	246
பொதுமக்களுக்கு வாழ்க்கை வழிகாட்டிகள்	254
ஆதிசங்கரரின் அரிய ஸாதனை	256
நிகழ்கால - பூர்வகால ஒப்புவமை	261
பௌத்த - ஜைனர் கல்விச் சிறப்பு	268
எழுத்துக்கு முக்யத்வம்	270
வைதிகக் கல்விக்கும் பெரிய கலாசாலை	276
பெரும் கலாசாலையிலும் குருகுல அம்சங்கள்	280
காஞ்சியின் கல்விப் பெருமை	283
என் "ரிஸர்ச்"; கடிகை பற்றி	285
பெயர்க்காரணம்	286
கடிகையின் தொன்மை	290
கற்கோயிலின் தோற்றம்	293
கோயிலும் கடிகையும்	296
எட்டாம் நூற்றுண்டில்	297
சாஸனத்தின் அமைப்பு	298
ஏழாயிரம் மாணவர்கள்!	299
ஆந்திர, கர்நாடகங்களில்	300
சோழ நாட்டிலும்	302
மஹாராஷ்டிரத்திலும் பெருமை	303
கடிகைக்கு கடிகாரத் தொடர்புண்டா?	303
கடிகாசலம், நான்மணிக்கடிகை	304
பலன் கிடைத்தது!	305
கி. மு. ஐந்தாம் நூற்றுண்டிலேயே;	
ப்ரயாகையிலும்!	305
பெயர் விளக்கம்	307

Koviloor Digital Library

சிறிது ஸம்ஸ்க்ருத பாடம் 311
கும்பத்தின் பொருத்தம் 312
தமிழகத்தின் வேதக் கலாசாலைகள் 313
அதர்வவேதமும் அநுஷ்டானத்தில் 315
பல சாஸ்த்ரங்களுக்கு ஆதரவு 316
வேத - ஆகமங்கள் 317
ஸமரஸ அம்சம் 318
ஆலயமும் வித்யையும் 318
பெருமையும் சிறுமையும் 320
ஸ்வதேச வித்யைகளுக்கு "திட்டம்" 323
அதற்குரிய முறைப்படி 323
கிராமப் புள்ளிவிவரங்கள் 325
தேவைப்படும் ஒரு புள்ளிவிவரம் 326
படிப்பும் குற்றமும் 327
முரண்பாடு எதனால்? 329
வெள்ளையர் நாடுகளும் இஸ்லாமியர் நாடுகளும் 330
கம்யூனிஸ்ட் நாடுகளில் 331
விநயத்தோடு இணைந்த வித்யை 333
அஹம் அடிபடவே குருகுலம் 334
ஏன் ஸாத்யமில்லை? 335
பொதுமக்களின் பொறுப்பு 336
வேதவித்யை வளர 336
வித்யையும் வித்தமும் 338
பிக்ஷாசர்யம் 339
ஆதர்ச நிலையை அழியவிடலாகாது 340
வாரச் சாப்பாடு 340
ஓரிருவர் போதும்! 341
அவர்கள் தியாகமும் நமது தியாகமும் 341
வேதபாஷ்யம், வேதாங்கம், வேதாந்தம் 343
பல ஸித்தாந்த ஒப்புவமை 347
ஸ்வதேச விதேச ஒப்புவமையும் இசைவும் 348
புராணம் 349
ஆகம சாஸ்த்ரம் 350

Koviloor Digital Library

வாஸ்து சாஸ்த்ரம் 351
சில்ப சாஸ்த்ரம் 351
கிராமக் கலைகள் 354
ஆசிரியர்களையும் உண்டாக்க வேண்டும் 354
இயற்கை விதிகளுக்குப் பிடிபடாத வித்யைகள் 355
வைத்ய சாஸ்த்ரம் 356
யோக சாஸ்த்ரம் 357
'தியரி' மட்டும்; 'ப்ராக்டிஸ்' இல்லை 359
வேதாந்த விஷயத்திலும் இப்படியே 360
செய்யவேண்டிய பணிகள் 361
கற்றவன் கற்பிப்பவனாக வேண்டும் 361
பிரசாரப் புரளி 363
திரவிய உதவியும் ஸமூஹ கௌரவமும் 365
ஒவ்வொருவரும் வித்வானாக வேண்டும் 367
அஹம் குறைய "அவனைத்" தொடர்புறுத்துக! 368
வீணாகும் நேரம் வித்யைக்கு ஆகட்டும் 370
அனைவரும் வித்வானாயிருந்த காலம் 371
வாழ்க்கை முறையும் வயதும் தடையாகா 373
அரசாங்கமல்ல; மக்களும் சீடர்களுமே பொறுப்பு 374
அரைகுறை ஞானத்துக்கே ஆதரவு 375
வித்வான்களுக்குக் கோரிக்கை 378
நேரில் கண்ட ஆதர்ச வித்வான்கள் 378
வருங்காலத்துக்காக 383
உயிரோடு ஒட்டி வைக்கவேண்டும் 383
எல்லாத் துறையிலும் குருகுலவாஸம் 385
அம்பாள் அருள்வாளாக! 386

பொது வாழ்க்கை

உத்தரமேரூர் உத்தமத் தேர்தல் முறை 391

வேதத்திலும் ஜனநாயக அம்சம் 391
ஜாதி நாட்டாண்மை 396

Koviloor Digital Library

தகுதி தேவை	397
தேசத் தலைமைக்கு அரசன்	398
ஊர்த் தலைமை	399
தேர்தல் மூலம் ஊர் ஸபையில் அங்கம்	402
குடியரசு, ஜனநாயகம்	404
அபிப்ராய பேதம்	406
விசித்ர அம்சம் கொண்ட தேர்தல் முறை	409
சோழ வம்சம்	410
தேர்தல் குறித்த கல்வெட்டு	411
ராஜ்யப் பிரிவுகள்	411
க்ராம ஸபையின் அமைப்பு	413
கல்வெட்டைப் பற்றிய விவரம்	414
அந்தண - வேளாள அதிகாரிகள்	416
வேட்பாளரின் யோக்யதாம்சங்கள்	417
திருத்தக்கூடிய விதிகளும், திருத்தக்கூடாத விதிகளும்	418
சாஸ்திர அறிவும், காரியத்திறனும்	421
ஜீவஸாரமான தகுதி; அர்த்த சுத்தமும் ஆத்ம சுத்தமும்	421
தொடர்ந்து அங்கம் வகிக்கலாகாது	422
உறவினர் உதவாது	423
ஸொத்து குறித்து நிபந்தனை	423
லக்ஷ்ய தர்மமும், நடைமுறை ஸாத்யமும்	424
துருக்கர், வெள்ளையர் ஆட்சிகளில்	426
"ஸொந்த" ஸர்க்காரின் அத்துமீறல்!	430
ஸொத்துத் தகுதி பற்றி	431
குறைவான லஞ்ச ஹேது	432
கையூட்டு	434
ஸொத்துப் பரிபாலன அநுபவம் அவசியம்	436
"தன் மனை" என்றதன் காரணம்	437
வயதுத் தகுதி	437
"வ்ருத்த" லக்ஷணம்	441
தர்ம ஒழுங்கின் ஸத்ய அடிப்படை	443

Koviloor Digital Library

விதிவிலக்கான வயோதிகர்கள் 447
அலுவலக வேலையும் பொதுச்சபைப் பணியும் 449
மூதறிஞர்களின் ஆலோசனைக் குழு 449
ஆதிக்கத்தை நிரந்தரமாக்கிக் கொள்ளாதிருக்க 451
கல்வித் தகுதி 453
ப்ராம்மணரை மட்டும் குறிப்பதாகாது 454
உயிர்நிலை 457
ஸர்வஜன அசுத்திக்கு ஹேது 459
ஆத்ம சுத்தம் 462
பிற்பாடும் அசுத்தி ஏற்படாதிருக்க 463
ஐந்து வருஷப் பதவிக்காலம் 464
புது ரத்தம் பிடிக்க 465
தார்மிக நிர்வாஹத்தின் முதுகெலும்பு 466
ராஜபீட விஷயமும் ஊர்ச்சபை விஷயமும் 468
பதவி நீக்கமும் நிரந்தரத் தடையும் 471
தகுதி இழக்கும் உறவினர்கள் 472
பஞ்சமாபாதகம் 472
சாஸ்த்ரமும் சட்டமும் 474
தகுதித் தடைகள் சில 476
வேட்பாளர் இல்லாத, வாக்காளர்
இல்லாத தேர்தல்! 477
அபேக்ஷகர் யார்? 478
ஸெலக்‌ஷன், எலக்‌ஷன் பொறுப்பாளர்கள் 480
தேர்தல் நடந்த விதம் 484
ஈச்வர ஸம்மதமான தேர்வு 487
ஒளிவு மறைவுக்கு இடமில்லை 488
தனி மனிதக் கவர்ச்சியம்சமே இல்லை 488
பெரும்பான்மை அடிப்படை இல்லை 490
"சந்திர ஸூரியர் உள்ளவரை" 492
நிர்வாஹப் பிரிவுகள் 492
புதுக்கதையும் பழங்கதையும் 494
கவலைக்குரிய அம்சங்கள் 495
பக்குவம் செய்தபின் பொறுப்புத் தருக! 499

Koviloor Digital Library

பழைய தேர்தல் தரும் தேறுதல் 501
குறையும், குறைக்கு ஸமாதானமும் 503
ராமராஜ்யம் 507

அத்வைதம்

போர் தீர்ந்து அமைதி காண 513

தேவாஸுரர் யார்? 513
அஸுரப்போக்கு தோன்றுவது ஏன்? 517
பயத்துக்கு இடம் தரும் த்வைதம் 518
அத்வைதமே அபயம் 520
அபயம்—மோக்ஷம்; பயம்—ஸம்ஸாரம் 522
நரக பயம் 523
மனமே பந்த காரணம் 524
மனமற்ற ஆத்மாவின் ஆனந்தம் 524
மனமற்ற நிலையிலும் "நாம்" 526
நிஜ "நாம்" 527
மனக் கலப்பில்லாத உயிர் உணர்வு 528
ஆத்ம உணர்வும் மனோ வாழ்க்கையும் 530
ஆத்மாவுக்கு த்விதீயமான மனம் 533
ஆத்மாநுபவமே அபய மோக்ஷம் 536
கர்மத்தை தளர்த்தும் தர்மம் 537
ப்ரேயஸ், ச்ரேயஸ் 539
கர்ம நோய்க்கு தர்ம மருந்து 541
தார்மிக கர்மா நேரான மோக்ஷ உபாயமல்ல 543
மனத்தின் நிறைவுக்கும் தர்ம கர்மா போதாது 543
அன்பு, பக்தி 545
சாஸ்த்ர கர்மாவுக்குப் பின்னணியான ஸத்சிந்தனை 546
ஸத்கர்மாவில் சித்தச் சிதறல் குறைவது 547
கார்யமும் த்யானமும் 549
கர்மயோகமும் பற்றின்மையும் 553
ஸத்கர்மா பலிக்காததேன்? 557
பய வாய்ப்புக் குறைதல் 558

Koviloor Digital Library

செத்தாலும் ஸ்வதர்மம் 561
நேர்ப்பயன் உலக நலனுக்கு 562
உலக நாடகமும் ப்ரளயங்களும் 565
உலக வாழ்வின் உயர் நலன்களுக்காக 567
உலக வாழ்விலேயே ஒழுங்கு ஏற்பட 569
பரதர்மம் ஏன் கூடாது? 573
பாபத்தில் தள்ளும் சக்தி எது? 576
காம - க்ரோதம் 580
தீயவை அனைத்தும் ஆசையிலிருந்தே 584
ஸந்தோஷத்திலேயே கஷ்டம் 588
ஆனந்தமும் த்ருப்தியும் 589
ஆசையும் இன்ப துன்பங்களும் 590
ஐம்புலனாலும் அழிவடையும் மானுடன் 592
சாச்வத இன்பம் ஆசையால் விளையாது 594
கால - தேசாதிகளின் பாதிப்பு 597
ஆசையை விழுங்கும் இன்னோர் ஆசை 599
தன் உடம்பிலேயே ஆசை வித்யாஸம் 600
மனம் ஆத்மாவுக்கும் புலனுக்கும் இடைப்பட்டது 604
மனத்தின் இன்பமும் நிலைத்ததல்ல 605
அலுத்துப் போனாலும் அற்றுப் போவதில்லை 607
அத்வைதம் தவிர அனைத்திலும் துக்கம் 611
பிறரை வருத்தியும் 612
உயர் பண்புகளுக்கு ஊறு செய்யும் ஆசை 614
அகண்ட ஆனந்தம் மனத்துக்கு இல்லை 615
யுத்தம் தீர ஆசையை அழிக்க! 617
மரணத்தால் ஆசை அழியுமா? 618
பிறவித் தண்டனை 621
வேப்பம்பழத் தித்திப்பு 623
விடாமுயற்சி வேண்டும் 624
ஆசையின் செயலும் "அதிஷ்டான"மும் 626
அர்ஜுனனின் குறை 628
கண்ணன் சொல்லும் உபாயம் 628
ஆத்மா : மாறுபாடு அற்றது 630

II

Koviloor Digital Library

"நிஜ" ஆத்மாவும் பொய்வேஷ மனஸும் 635
ஆத்மாவினாலேயே மனத்தின் இயக்கம் 637
மாயை 638
இருக்கும் நிலையும், செய்யும் நிலையும் 639
ஆசைப் பசியின் விளைவுகள் 640
கொள்ளுவதும் தள்ளுவதும் 642
தூக்கமல்ல வழி 644
வைராக்யமும் அப்யாஸமும் 646
ஆனந்த ஞான சாந்தம் 647
ஆத்மாநந்த கிரணமே வெளியின்பம் 650
மனத்துக்குப் புரியாத சாந்தாநந்தம் 652
(பரா) சக்தியின் ஆனந்தமும் சாந்த ஆத்மாவிலேயே 654
நித்ரை நிலை 658
கனவு நிலை 660
மனம் ஆத்மாவிடம் வசப்படுவது எப்படி? 662
ஈச்வர க்ருபையால் 664
தர்க்கத்துக்கு அப்பாற்பட்டது 666
ப்ரத்யக்ஷச் சான்றுகள் 666
ஜீவன்முக்தர்கள் 670
ஆத்மாவிடமிருந்தே ஆனந்தம் 670
"உடைய" அல்ல; உடையவரே! 672
ஆசையும் ஆத்மாவைக் குறித்ததே 674
அஸுரப்படை அழிவு ஆத்ம ஜயமே 677
தொல்லையின் மூலகாரணம் 678
இந்த்ரியத்துக்கும் உயர்வுண்டு 681
"ஸத்"தான ஆத்மா 689
படிப்படியாய் ஆத்ம நிலைக்கு 690
"ஆத்மாவை ஆத்மாவினால் அடக்குவது" 696
ஈச்வர க்ருபையைக் குறிப்பிடாததேன்? 697
ஈச்வரன்: த்வைத - அத்வைதப் பாலம் 700
அத்வைத சாஸ்த்ரமும் ஈச்வராநுக்ரஹமும் 701
ப்ரஹ்மம் - ஆத்மா - ஈச்வரன் 704

Koviloor Digital Library

ஜீவன் ஈச்வரனிடமிருந்தே 705
விடுவிப்பு ஈசனாலேயே 706
மாயையை அடக்குவது ஈசனே 707
ஜீவ - ஈச்வர வித்யாஸம் 708
த்வைதத்திலிருந்து அத்வைதத்துக்கு 709
இடைநிலைகள் 711
அதிகாரிகளையொட்டி உபதேச மாறுபாடு 715
ஈசன் செய்வதற்கு சாஸ்த்ரம் எதற்கு? 720
கீதையில் வெளிப்படக் கூறிய உண்மை 721
ஆதிசங்கரரும் கூறும் ஈசனது ஞானக் கொடை 723
குரு என்ற த்வைதம் இடறுவதில்லை 731
மாயாசக்தியே ஞானமும் அளிப்பது 732
கர்ம பந்தம் ஈசனால்;
ஞான ஸித்தியும் அவனாலேயே! 733
ஈச்வரனைப் பற்றி ஸூசனை 736
ஆத்ம ஞானமே ஆசாநாசம் 737
இகத்திலேயே மோக்ஷம் 738
புத்தருக்கு முற்பட்ட கருத்து 739
மனம் நின்ற பின் 741
மெய்யறிவு ஆத்ம ஞானமே 742
மன வாழ்க்கையின் குறைபாடு 745
போகவேண்டியது தேஹமல்ல; மனமே 747
பிறவி, முக்தி குறித்த கொள்கைகள் 748
தேவை விடுதலைக்கு முயற்சியே! 752
முடிவுள்ளதே ஸம்ஸாரம் : ஏகோபித்த கருத்து 753
த்வைத நிலைகளை ஒப்புக்கொள்ளும் அத்வைதம் 754
ஸத்ய, ஸந்தோஷங்கள் அத்வைதத்திலேயே 759
ஆசையின் அனர்த்தங்களில் பயமும் ஒன்று 761
பலவற்றைக் குறிக்கும் த்வைதம் 763
மனஸ் தனிப்பட்டு இராது 763
தனித்து நிற்பது ஆத்மாவே 767
மின்ஸார உபமானம் 768
பரமாத்ம - ஜீவாத்மாக்கள் 769

Koviloor Digital Library

பரமாத்மா : ஜகத் காரணன், அந்தர்யாமி 770
ஈச்வரன் அல்லது ஸகுண ப்ரஹ்மம் 773
வேதாந்த "ஈச்வரன்" சிவனல்ல 774
ஈச்வர உபாஸனே 775
ஸத்ய ஆராய்ச்சி—
ஜீவகோணத்திலும், ஜகத்கோணத்திலும் 777
ஜீவ ஆத்மா, ஈச்வர ஆத்மா 780
த்வைத - விசிஷ்டாத்வைதங்களில்
ஜீவாத்ம - பரமாத்மாக்கள் 785
தொடர்புகொண்ட இரண்டு வஸ்துக்கள் 788
"ஈச்வராத்மா"வுக்குப் பதில் ஏன் "பரமாத்மா?" 789
அத்வைதக் கொள்கைகளில் சில 790
ஜீவன் ஈசனுக முடியாது 792
த்வைத ஜீவனுக்கு ஈசன் தொடர்புண்டு 797
ஈசன் - ஜீவன் : அவித்யை - அந்தஃகரணம் 799
த்வைத 'மோக்ஷ'மும் ப்ரக்ருதி (மாயை)யும் 803
த்வைத ருசிக்குத் துன்பம் தவிர்க்கவொண்ணுதது 807
பரிசுத்தி செய்துகொள்ளும் பணி 809
பாஷை ஆராய்ச்சி :அதிலும் பரமாத்ம -
ஜீவாத்மா! 810
பாத்திரம் தேய்ப்பது போல 812
'ரவை ஸல்லா' உவமை 816
நல்லதில் கெட்டது கலக்காமலிருக்க 821
அன்பின் பல பெயர்கள் 823
பக்தி - அன்பின் லக்ஷணம் 824
பக்தியால் அத்வைத முக்தி 825
பக்தி - அன்பின் அவசியம் 828
அநுபூதி பெற்றோர் விஷயம் 831
நமக்கான வழி 837
பிற மார்க்கத்தொடர்பு;எதையும்
கண்டிக்கலாகாது 838
தன்னியல்பான ஸாதனே முதிர்வு 840
தர்ம மருந்து 841

Koviloor Digital Library

தவருன குற்றச்சாட்டு 842
தர்ம - அதர்மங்களும் அத்வைதியும் 845
ஞானியும் வினைப்பயனும் 846
தர்மமும் அன்பும் 858
மனம் பட்டுப்போக அன்பு தேவை 862
உயர்லக்ஷ்யமில்லாவிடில்
உயர்நிலை ஸித்திப்பதில்லை 864
தேவசக்திகளும் பீடிப்பதுண்டு 869
குறியைப் பொறுத்தே இறைவன் அருள் 870
திருமூலர், திருவள்ளுவர் அறிவுரை 872
ஆரம்பத்திலிருந்தே அத்வைத நினைப்பு 875
கட்டவிழ்க்கும் கஷ்டங்கள் 877
சுமை தெரியாமலே கார்யம் செய்வது 879
முதலிலிருந்தே மூன்று மார்க்கமும் 881
கீதை போடும் அத்வைத அஸ்திவாரம் 886
இன்றிலிருந்து தொடங்குக! 889
நல்லதற்கும் மேலே செல்க! 890
ஆத்ம சிந்தனை அனைவர்க்கும் அவசியம் 892
ஆலோசித்து அறியவேண்டியவை 895

பக்தி

"வண்டு" ஸ்தோத்ரம் 903
அத்வைத தத்வமும் நடப்பு நிலையும் 903
நடப்புநிலையிலிருந்து அத்வைதத்துக்கு 905
ஆதிசங்கரரின் பக்தித் துதிகள் 906
ஷட்பதீ ஸ்தோத்ரம் 907
பதம் : செய்யுட் பகுதி 907
உயிரும் மெய்யும் உயிர்மெய்யும் 909
இருவகைச் சந்தங்கள் 911
ஆறு ச்லோகத் துதி 919
சிலேடை மர்மம் 922

Koviloor Digital Library

எதற்கு வேண்டுவது?	923
பகவானின் கருத்து	924
லௌகிக ப்ரார்த்தனைக்கு ஸமாதானம்	929
ப்ரார்த்தனை ஈடேறுமையும் நாஸ்திகமும்	935
ஆத்ம ச்ரேயஸுக்கான ப்ரார்த்தனை	936
ஞானத்துக்கும் விஷ்ணு	937
மனம் ஸரியாக	938
முக்யப் பண்பு விநயமே	942
சங்கரரும், சிஷ்யர்களும், விநயமும்	944
ஸிக்கியர் மதத்தில்	951
இருவித அடக்கம்	953
கானல் நீர்	957
பாலைவன உவமையின் பொருத்தம்	960
ஸஹாரா—ஸாகரம்	963
ஏன் தாந்திக்குப் பின் சாந்தி?	964
தனது உய்வோடு உலகமும் உய்ய	965
"அக்கரை அடைவிப்பாய்!"	968
இனிய எளிய ச்லோகம்	971
திருமகளும் தாமரையும்	973
கங்கை சுரக்கும் திருவடி	975
ஸம்ஸாரம் நீக்கி ஸதாநந்தம் அருளும் அடி	976
பக்தி - த்வைதம் கூறும் அத்வைத ஆசார்யள்	978
அதிசய அந்தாதி	985
கருத்திலும் தொடர்ச்சி காட்டும் ச்லோகம்	988
தர்சனத்தால் ஸம்ஸாரம் நீக்கம்	994
திருமாலுக்கு ஈச்வர சப்தம்	996
அவதாரங்கள்	998
பன்னிருநாமங்கள் : நெற்றிக்கிடும் நாமம்	1001
தாமோதரன்	1003
திருப்பெயர்களின் பொருள்	1005
நிர்குணமும் குணநிலயமும்	1007
க்ருஷ்ண பக்தர்களான அத்வைதிகள்	1010
கோவிந்த - ஹர நாமச் சிறப்பு	1017

Koviloor Digital Library

"குறைவொன்றுமில்லாத கோவிந்தா!" 1020
குரு - தெய்வ "கோவிந்த" 1023
மூன்றில் ஒன்று 1024
பவக்கடல் கடையும் பகவத் மத்து! 1025
சில உதாரண புருஷர் போதும் 1029
துதியின் ஸாரம் :ஸம்ஸாரத் துன்ப நீக்கம் 1032
ஆதி வார்த்தை அந்தத்திலும் 1034
பலச்ருதி போன்ற சரணுகதி விண்ணப்பம் 1037
ப்ரஹ்ம பாவனேயும் சரணுகதியும் ஒன்றே 1039
ஆறு ச்லோகமும் ஆறு வார்த்தையும் 1042
"வண்டு"ப் புதிர் அவிழ்கிறது! 1043

பண்பாடு

கவிகளின் தன்மான உணர்ச்சி 1053

அரசருக்கும் மேலே! 1053
மஹான் - கவி வித்யாஸம் 1055
மன்னனேப் பொருட் படுத்தாத மஹான்கள் 1056
வைராக்யமும் மான உணர்வும் 1059
காளிதாஸனும் போஜராஜனும் 1060
நட்பு முறிந்தே பகைமை 1060
தனக்கே சரமகவி கேட்டவன்! 1061
காளிதாஸன் மறுப்பும் அதன் சிறப்பும் 1062
மாறு வேஷம் 1065
மரபுவழிக் கதைகளும் ஆராய்ச்சியும் 1066
கம்பரும் குலோத்துங்கனும் 1070
நட்பு பகையாவதன் நுட்பம் 1071
கம்பரின் ரோஷமும் சபதமும் 1072
கம்பர் - காளிதாஸன் ஒப்பீடு 1073
சேரநாட்டு விஜயமும் சேரன் குணநலமும் 1075
சோழ ஸபையில் "அடைப்பைக்கார"ச் சேரன் 1077

Koviloor Digital Library

கம்பரின் உயர் பண்பு 1078
இரண்டு "குட்டி"கள் 1080
ஷாஹஜி மன்னர் 1081
அரசனைப் போற்றும் கவிதை 1082
மன்னரும் குழந்தையும்: பரஸ்பரப் பாராட்டு 1085
ப்ரதாப ஸிம்ஹனும் குட்டிகவியும் 1088
எருமைத் துதி 1089
நாட்டைக் காத்த கவி 1091
வங்க வித்வானை வென்ற வாலிபர் 1092
சரபோஜிக்குப் பணியாத சாஸ்த்ரியார் 1093
ஸ்நேஹத்திலும் சிறந்த சாஸ்த்ரியார் 1094
மைஸுர் மன்னருக்கு மறுதலிப்பு 1097
"நம் பந்து" 1098

கவிஞர், அறிஞரின் தற்பெருமை 1099

அதுவும் ஓர் அழகு! 1099
தெய்வத் தீர்ப்பு கோருவது 1101
காளிதாஸனும் அம்பிகையும் 1102
கம்பரும் அவ்வையும் 1109
வில்லிப்புத்தூராரும் அருணகிரிநாதரும் 1111
நீலகண்டரும் மஹாதேவரும் 1111
விகாரமும் ஏற்றம் பெறுகிறது! 1118

மங்களாரத்தி

மாருதி மஹிமை 1119

Koviloor Digital Library

மங்களாரம்பம்

Koviloor Digital Library

Koviloor Digital Library

பெரிய இடத்துப் பிள்ளை

குழந்தை வழியே உலகப் பெற்றோரிடம்

ஒரு சின்னக் குழந்தையானுல் கூட, அது ரொம்பவும் பெரிய மநுஷ்யாள் வீட்டுக் குழந்தையாயிருந்து விட்டால் அதனிடம் எல்லாரும் அதிகம் அன்பு காட்டிக் கொஞ்சு வார்கள். அதற்குப் பயப்படக்கூடச் செய்வார்கள். பழைய நாளில் 'ராஜாப்பயல்' என்று அன்போடும் பயத்தோடும் சொன்னுர்கள். அப்புறம் 'கலெக்டர் அகத்துப் பிள்ளை யாக்கும்' என்று சொல்லி வந்தார்கள். இப்போது 'மந்திரி—எம். எல். ஏ. வீட்டுப் பிள்ளை' என்று சொல்கிருர்களோ என்னவோ? பெரிய மநுஷ்யாள் குழந்தை என்ருல் அது ஏதாவது சண்டித்தனம் பண்ணிஞல்கூட, மற்ற குழந்தைகளை அதட்டுகிற மாதிரி அதட்டாமல் அது கேட்பதைக் கொடுத்துவிடுவார்கள்.

ஏன் என்ருல்,

இந்தக் குழந்தை போய், ரொம்பவும் செல்வாக்குள்ள அதன் தகப்பஞரிடம் ஒருத்தரைப் பற்றி ஏதாவது புகார் பண்ணிவிட்டால், அவ்வளவுதான், அந்த ஆஸாமிக்கு இந்தத் தகப்பஞர்காரரிடமிருந்து பெரிய உபத்ரவங்கள்

Koviloor Digital Library

வந்து சேரும். எவரும் தங்களேயே திட்டினுல்கூடப் பொறுத்துக் கொள்ளக்கூடும். போனுல் போகிறதென்று விட்டுவிடலாம். ஆனுல், காக்கைக்கும் தன் குஞ்சு பொன் குஞ்சு என்கிருர்களே. அப்படி ரொம்பவும் அருமையாக இருக்கப்பட்ட தங்கள் குழந்தையை யாராவது ஏதாவது சொல்லிவிட்டார்களானுல் கோபம் பொத்துக்கொண்டு வந்துவிடும். இப்படி ஒரு பெரிய மநுஷ்யர் கோபித்துக் கொண்டு கிளம்பினுல் ரொம்ப ஆபத்து அல்லவா?

அதனுல்தான், "இது பெரிய இடத்துப் பிள்ளே அப்பா! இதனிடம் வம்புக்குப் போகப்படாது" என்று சொல்வது.

இதற்கு நேர் எதிராக, ஒரு குழந்தையை மெச்சி விட்டால் அதன் தகப்பனுருக்கு அவரையே மெச்சுவதைவிட ஸந்தோஷமாய்விடும்; உச்சி குளிர்ந்துவிடும். இப்படி ஒரு பெரிய மநுஷ்யரை ப்ரீதி செய்துவிட்டால் ஸுலபமாக அவரிடமிருந்து பெரிய பெரிய லாபங்களேப் பெற்றுவிட லாம். பெரியவர்களே நேராக த்ருப்தி செய்வது கஷ்டம். குழந்தைகளேயோ ரொம்பவும் எளிதில் த்ருப்திப் படுத்தி விடலாம். ஒரு சின்னச் சொப்பையோ சாக்லேட்டையோ காட்டிவிட்டால் போதும். இல்லாவிட்டால் ஏதோ கொஞ்சம் கோணங்கி விளேயாட்டுக் காட்டினுல் அதிலேயே ஒரு குழந்தைக்குக் குஷி பிறந்துவிடும். அந்தக் குழந்தையின் ஸந்தோஷத்தில் அதன் அப்பாவுக்கும் ஏக ஸந்தோஷம் உண்டாகிவிடும். தன் குழந்தையை ஸந்தோஷப்படுத்தின வருக்குத் தன்னுலான எல்லா நன்மையும் பண்ணிவிடுவார். அதாவது, ஸுலபத்தில் த்ருப்திப்படுத்த முடியாத ஒரு பெரியவரால் நமக்கு ஒரு காரியம் ஆகவேண்டுமானுல், அதற்கு வழி ஈஸியாக த்ருப்தியாகிவிடும். அவருடைய குழந்தையை ஸந்தோஷப்படுத்துவதுதான்.

இதனுல் என்ன ஏற்படுகிறது? நமக்கு எல்லாவிதமான நன்மைகளேயும் ஒன்றுகூடப் பாக்கியில்லாமல் செய்வதற்கு சக்தி படைத்த பெரிய மநுஷ்யராக ஒருத்தர் இருந்து,

Koviloor Digital Library

அவருக்கு ஒரு குழந்தையும் இருந்து விட்டதானால் போதும், நமக்கு அப்புறம் ஒன்றும் கஷ்டமே இல்லை. அந்தக் குழந்தையைப் பிடித்து நாம் ஸுலபத்திலே குஷிப்படுத்தி விட்டாலே போதும், அந்த மஹா பெரிய மநுஷ்யரிடமிருந்து நாம் கொஞ்சங்கூட ச்ரமமேயில்லாமல் பெரிய பெரிய லாபங்களைப் பெற்றுவிடலாமென்று ஏற்படுகிறது.

இப்படியிருக்கக்கூடிய மஹா பெரிய இடத்துப் பிள்ளை யார் என்று பார்த்துக் கொண்டே போனால்—ஊர்ப் பெரிய மநுஷ்யருக்கு மேலே ஜில்லாவின் பெரிய மநுஷ்யர், அவருக்கு மேலே மாகாணத்தின் (மாநிலத்தின்) பெரிய மநுஷ்யர், தேசத்தின் பெரிய மநுஷ்யர் என்று போய்க் கொண்டேயிருக்கும். முடிவாக ஸமஸ்த லோகத்துக்கும் எவன் ராஜாவோ அந்தப் பரமேச்வரனிடம் போய் நிற்கும். ராஜராஜேச்வரி என்றே பெயரிருக்கிற அம்பாள் - ஈச்வரன் என்ற தம்பதிதான் எல்லாருக்கும் உச்சியில் இருப்பார்கள்.

அப்போது நாம் முடிவாக நிற்கும் "பெரிய இடத்துப் பிள்ளை" யார் என்று பார்த்தால்,

பிள்ளையார்தான் என்று தெரியும்.

பயத்தோடு, ப்ரியத்தோடு

ராஜாக்கள், ப்ரஸிடென்ட்கள் எல்லோருக்கும் மேலே த்ரிலோகங்களுக்கும் ராஜாவாக இருக்கப்பட்ட ஈசனுடைய குழந்தை அவர். மூத்த குழந்தை. மூத்தது ஸாது என்று வசனம். அதனால் இவரை த்ருப்தி செய்வது ரொம்பவும் ஸுலபம். அதற்காக இஷ்டப்படி இருந்துவிட முடியாது. நமக்கு ரொம்பவும் இடம் கொடுத்துப் போய்விடப் போகிறதேயென்றுதான் கம்பீரமான யானை ஸ்வரூபமாயிருக்கிறார்! அதனால் கொஞ்சம் ஜாக்கிரதையாகவுந்தான் இருக்க வேண்டும். இல்லாவிட்டால் விக்னங்கள் பண்ணுவார்! இவருடைய மஹா பெரிய தகப்பனார், தாயார் சொன்னேனே, அவர்களுக்கே விக்னம் பண்ணி, "உம்,

Koviloor Digital Library

ஜாக்ரதை!" என்று அதன் மூலம் நமக்கும் 'வார்ன்' பண்ணு கிறார்.

'சின்ன எசமான்' என்று ப்ரியத்தோடேயே கொஞ்சம் பயமும் சேர்த்து இவரைப் பூஜை பண்ணிவிட்டால் அப்படியே ப்ரீதியாகி விடுவார். அதிலேயே பார்வதி பரமேச்வராளும் உச்சி குளிர்ந்துவிடுவார்கள். இவருடைய மாதா பிதாக்களான அந்த அம்பிகையும் ஈச்வரனுந்தானே இத்தனை லோகங்களையும், அவற்றில் உள்ள நம் போன்ற ஸமஸ்த ப்ராணிகளையும் ஸ்ருஷ்டித்து, ரக்ஷித்து வருகிற ஸர்வ சக்தர்கள்? அவர்களுடைய அநுக்ரஹத்தைப் பெற்று விட்டால் நாம் இஹம் பரம் இரண்டிலும் எந்த நன்மையும் பெற்றுவிடலாம். ஆனால் நேராக அவர்களையே பூஜை பண்ணி அநுக்ரஹத்தைப் பெறுவது அவ்வளவு ஸுலப மில்லை. சிவபூஜை, அம்பாள் பூஜை ஆகியவற்றுக்கு அநேக நியமங்கள் உண்டு. அதையெல்லாம் நாம் க்ரமமாக அநுஸரிப்பது ச்ரமம். 'ஆசுதோஷி', 'க்ஷிப்ர ப்ரஸாதினி' என்றெல்லாம் ('எளிதில் த்ருப்தியாகி அநுக்ரஹிக்கிற வர்கள்' என்று அர்த்தம் கொடுக்கும்) பெயர்கள் அவர் களுக்கு இருக்கிறதென்றாலும் சிவன் கோயில், அம்பாள் கோயில் என்று போனால், இங்கேதான் நிற்கணும், இங்கேதான் நமஸ்காரம் பண்ணணும், இன்ன புஷ்பம், இன்ன நைவேத்யம்தான் அர்ப்பணம் பண்ணணும் என்றெல் லாம் எத்தனை கட்டுப்பாடு இருக்கிறது? ஸ்ரீ சக்ர பூஜையில் கொஞ்சம் தப்பு ஏற்பட்டுவிட்டால்கூட என்னென்னவோ (கெடுதல்) ஏற்பட்டுவிடுகிறது என்கிறார்கள்! 'சிவ ஸொத்து, குல நாசம்' என்கிற மாதிரி வசனங்களைக் கேட்டாலே பயமாயிருக்கிறது!

எளிதில் கிடைப்பவர்

இப்படியெல்லாம் பயமாக, கஷ்டமாக இருப்பவைகளை எளிதாக ஆக்கித் தருவதற்குத்தான் நமக்குப் பிள்ளையார் இருக்கவே இருக்கிறார். எங்கே பார்த்தாலும் படர்ந்து

Koviloor Digital Library

கிடக்கும் அருகம்புல்லைப் பிய்த்து அவர்மேலே போட்டு விட்டால் போதும், அதிலேயே த்ருப்தியாகி விடுவார். மநுஷ்யர்கள் எவரும் வைத்துக் கொள்ளாத பூ, அதனால் கடையில் விலைக்கு வராத பூ, செடியிலே யதேஷ்டமாகப் பூத்துக் கிடக்கிற அந்த எருக்கம்பூவில் நாலு, கைக்காசுக்குச் செலவில்லாமல் பறித்து வந்து பிள்ளையார் பாதத்தில் போட்டுவிட்டால் அப்படியே பரம ஸந்தோஷம் அடைந்து விடுவார். ஏதோ பிரப்பம் பழமோ, கொய்யாப் பழமோ, பரம ஏழைக்குக்கூட கிடைக்கக் கூடியது, அதைக் கண்ணில் காட்டினால் குளிர்ந்து போய்விடுவார். இன்னும் கொஞ்சம் நமக்கு வசதி இருந்தால் ஒரு தேங்காய் அர்ப்பணம் பண்ண லாம். அதைக்கூட மந்த்ரம், கிந்த்ரம் சொல்லி நைவேத்ய மென்று பண்ண வேண்டுமென்பதில்லை. "சிதறு காய்" என்று அவருக்கு முன்னால் போட்டு உடைத்தாலே போதும். அந்தத் துண்டத்தை நாலு ஏழைக் குழந்தைகள் பொறுக்கித் தின்றுவிட்டால் அந்தக் குழந்தைகளின் ஸந்தோஷத்தி லேயே ஸாக்ஷாத் ஈசனின் மூத்த குழந்தையும் பரமானந்தம் அடைந்துவிடும்.

இதை விடவும் ஸௌகர்யம் இருந்தால் இந்தக் குழந் தைக்குச் சாக்லேட்டுக்குப் பதில் மோதகம் நிவேதனம் செய்யலாம். இதையும் அவர் கண்ணில் காட்டிவிட்டு, மற்ற குழந்தைகளுக்குத் தந்து நாமும் சாப்பிட்டே அவரை ஸந்தோஷப்படுத்திவிடலாம். 'மோதகம்' என்றால் ஆனந்தம் என்று அர்த்தம். பொங்கும் ஆனந்தமே உருவான ஆனைக்குட்டியாக அவர் இருப்பதால் அவரைப் புதிதாக நாம் ஸந்தோஷப்படுத்துவது என்பதுகூட இல்லை. அவரிடம் போய் நின்று விட்டாலே போதும், ப்ரீதியடைந்து விடுவார். நாமும் அவர் ப்ரீதியை ஸம்பாதித்துக் கொண்டு விடலாம். தத் த்வாரா (அதன் வழியே) ஈச்வரன், அம்பாள் ஆகியோரின் ப்ரீதியையும் பெற்றுவிடலாம்.

அவரிடம் போய் நிற்பதிலும் கஷ்டமில்லை. அவர் கோயிலுக்கு என்று நாம் ச்ரமப்பட்டுக்கொண்டு, எங்கேயோ

Koviloor Digital Library

அலேந்து திரிந்துகொண்டு போகணும் என்பதே இல்லே. எந்த சந்து பொந்துப் பக்கமாக, ஆற்றங்கரை குளத்தங் கரைப் பக்கமாக, அரசமரப் பக்கமாக நாம் போனுலும் அரை மைலுக்குள் நாலு பிள்ளேயார் கோவிலாவது கண்ணில் பட்டுவிடும், கொடிக்கம்பத்துக்கு அந்தண்டை நமஸ்காரம்; கர்ப்ப க்ருஹத்துக்குள்ளே போகப் படாது; நந்திக்குக் குறுக்காலே போகப்படாது—இந்த மாதிரிக் கட்டுப்பாட்டுக்கெல்லாம் இடமில்லே. அவர் இருக்கிறதே ஒரே உள்தான். அல்லது அதுகூட இல்லாமல், ஆகாசம் பார்க்க அவர் பாட்டுக்குக் காற்ருட மரத்தடியில் உட்கார்ந்து கொண்டிருப்பார். தீண்டாதாரா, இதர மதஸ்தர்களா—பார்க்கலாமா, கூடாதா என்ற கேள்விக் கெல்லாம் இடமில்லாமல் ஸகல ஜனங்களின் கண்ணிலும் படும்படி உட்கார்ந்திருப்பார்.

பாட்டனுர் பெருமை

ஒரு குழந்தையிடம் நாம் மரியாதை காட்டும்படி இருக்கு மானுல், "அது யாரகத்துக் குழந்தை தெரியுமா? இன்னுர் அதற்கு அப்பா, இன்னுர் தாத்தா" என்று 'ப்ரவரம்' சொல் வார்கள். இப்படிப் பிள்ளேயாருக்கு ப்ரவரம் சொல்லி ஒரு ச்லோகம் உண்டு.

மாதாமஹ மஹாசைலம்
மஹஸ்தத் அபிதாமஹம் ।
காரணம் ஜகதாம் வந்தே
கண்டாதுபரி வாரணம் ॥

ப்ரவரத்தில் கொள்ளுத்தாத்தா பேரும் சொல்லணும். இங்கே அப்படி இல்லே. தாத்தாவோடு நின்றுவிடுகிறது.

"விஷ்ணு ஸஹஸ்ர நாமம்" பூர்வ பாகத்தில் வ்யாஸரைப் பற்றி வரும் ஒரு ச்லோகத்தில்தான் அவருடைய கொள்ளுத் தாத்தாவான வஸிஷ்டரில் ஆரம்பித்து, பிள்ளே சுகாசார் யாள்வரையில் வரிசையாய் எல்லார் பேரும் சொல்லியிருக் கிறது. சுகர் ப்ரம்மசாரி. இல்லாவிட்டால் அவருடைய

Koviloor Digital Library

பிள்ளை, பேரன் என்றெல்லாமும் சொல்லிக்கொண்டே போயிருக்குமோ என்னவோ?* சுகரிலிருந்து புத்ர பரம்பரையாயில்லாமல், சிஷ்ய பரம்பரையாக, சுகருடைய சிஷ்யர் கௌடபாதர், கௌடபாதரின் சிஷ்யர் கோவிந்த பகவத் பாதர் என்று போய், அந்த கோவிந்தரின் சிஷ்யராகத்தான் நம்முடைய ஆசார்யாளான சங்கர பகவத் பாதாள் வந்தார்.

எல்லாவற்றுக்கும் முதல், குரு வந்தனம் முதலில் பூஜை பண்ண வேண்டிய விக்நேச்வரர் ஸமாசாரத்தில் குரு பரம்பரையின் ஸ்மரணை சேர்ந்தது பாக்யம். அதுவும் தவிர விக்நேச்வரருக்கு வ்யாஸ ஸம்பந்தமுண்டு. 'வ்யாஸ கணபதி' என்றே அவருக்கு ஒரு ரூப பேதமுண்டு. வ்யாஸருக்காக மஹா பாரதம் எழுதினவர் அவர்தானே?** இதனாலும் வ்யாஸர் பேச்சு வந்ததில் ஸந்தோஷந்தான்.

பிள்ளையாரைப் பற்றிய உறவுமுறை ச்லோகத்தில் அவருடைய அம்மா வழிப் பாட்டனாரில் ஆரம்பித்திருக்கிறது. 'ப்ரவர'த்தில் அப்பா வழிமாத்திரம் சொல்வார்கள். தர்ப்பணத்தில் மட்டுந்தான் அம்மா வழியிலும் முன் மூன்று தலைமுறைகளைச் சொல்வார்கள். நம் பிள்ளையாருடைய பிதாவுக்கோ பிதாவே கிடையாது. சிவனுக்கு யார் அப்பா? அவர் ஸ்வயம்பு. அம்மாவான பராசக்தியும் அநாதியானவள் தான். ஆனாலும் தன் குழந்தைகளோடு குழந்தையாகத் தானும் லோக ஜனங்கள் மாதிரி இருக்கவேண்டுமென்று

---

* வ்யாஸம் வஸிஷ்ட நப்தாரம் சக்தே பௌத்ரம் அகல்மஷம் ।
பராசராத்மஜம் வந்தே சுகதாதம் தபோநிதிம் ॥

வஸிஷ்ட நப்தாரம் - வஸிஷ்டருக்குக் கொள்பேரரும்; சக்தே : பௌத்ரம்- சக்தி மஹர்ஷிக்குப் பேரரும்; பராசர ஆத்மஜம் - பராசரருக்குப் புத்திரரும்; சுகதாதம் - சுகருக்குத் தந்தையும்; தபோநிதிம் - தவச் செல்வரும்; அகல்மஷம்- தோஷமற்றவருமான; வ்யாஸம் - வ்யாஸரை; வந்தே - வணங்குகிறேன்.

** "தெய்வத்தின் குரல்" —மூன்றும் பகுதியில் "பிள்ளையார் சுழி" என்ற உரையில் "எழுத்துப் பணியில் விநாயகர் தொடர்பு" என்னும் பிரிவு பார்க்க.

Koviloor Digital Library

அவதாரங்களும் பண்ணியிருக்கிறாள்—அவற்றிலே ஒன்றின் தகப்பனுரைப் பிள்ளையாரின் தாத்தாவாகச் சொல்லி ச்லோகத்தை ஆரம்பித்திருக்கிறது.

மாதாமஹ மஹாசைலம் : மஹா பெரிய பர்வதமான ஹிமோத்கிரியைத் தாயார்வழிப் பாட்டனுராகப் பெற்றவர்.

'மதாமஹர்' என்ருல் அம்மாவின் அப்பா. 'பிதாமஹர்' என்ருல் அப்பாவின் அப்பா.

அம்பாளுக்கு வாஸ்தவத்தில் பிறப்பு கிடையாது, அப்பா அம்மா கிடையாது. அவள்தான் ஆதிகாரணி, அகிலாண்ட ஜனனி. ஆனுலும் லீலா நிமித்தமாக தக்ஷன் குமாரி தாக்ஷாயணி, ஹிமவான் குமாரி பார்வதி, மலயத்வஜ குமாரி மீநாக்ஷி, காத்யாயனரின் குமாரி காத்யாயனி என்பது போல் பலருக்குப் பெண்ணுகவும் தோன்றியிருக்கிருள்.

பரமசிவன் என்ற மாத்திரத்தில் பார்வதி என்றுதான் அவரோடு சேர்த்துச் சொல்கிரேும். பார்வதி என்ருல் பர்வதத்தின் புத்ரி என்று அர்த்தம். ஹிமயபர்வதத்துக்குப் பெண்ணுக அவள் அவதரித்து, அப்புறம் தபஸிருந்து, காமாரியான பரமேச்வரன் மனஸை இள்க்கி அவரைக் கல்யாணம் பண்ணிக்கொண்டு க்ருஹஸ்தராகும்படிப் பண்ணியது பார்வதியாக வந்தபோதுதான். அந்தப் பார்வதியை வைத்துத்தான் "மாதாமஹ மஹாசைலம்" என்று சொல்லியிருக்கிறது.

'என்ன அம்மா வழியில் ஆரம்பிக்கிறீர்களே, இது க்ரமமில்லையே, பிதா வழியைச் சொல்லுங்கள்' என்ருல் அதற்கு பதில் உடனே வருகிறது : மஹஸ் தத் அபிதாமஹம்.

இதிலே 'மஹஸ் தத்' என்பது பிள்ளையாரைக் குறிப்பது. 'ஜ்யோதிஸ்வருபமாக இருக்கப்பட்ட அவர்' என்று அர்த்தம். 'அபிதாமஹம்' என்ருல் பிதா வழியில் தாத்தாவே இல்லாதவரென்று அர்த்தம்.

Koviloor Digital Library

"இது எத்தனை பெரிய இடத்துப் பிள்ளை தெரியுமா? இதன் அம்மா, அப்பா பெருமை தெரிய வேண்டுமானால் நேரே அவர்களைப் பற்றிச் சொல்ல வேண்டுமென்பதில்லை. அவர்களுடைய பிதா யார் யாரென்று பார்த்தாலே போதும். அம்மாவின் தகப்பனார்தான் இந்த லோகத்திலேயே பெரிசாக இருக்கப்பட்ட மஹா பர்வதமான ஹிமோத்கிரி. அப்பேர்ப்பட்ட ஹிமவானே தபஸ் இருந்து பெண்ணைப் பெற்றவள் இவருடைய தாயார். பிதாவின் பிதா யாரென்றால், அப்படியொருத்தரே கிடையாது. தனக்குத் தகப்பனாரென்று எவரும் இல்லாமல் தானே தோன்றிய பெருமை இவருடைய தகப்பனாருடையது என்று இதிலிருந்து தெரிகிறதல்லவா?'' என்று ச்லோகம் சொல்லாமல் சொல்கிறது.

மாதாமஹ மஹாசைலம் மஹஸ்ததபிதாமஹம்

இப்படி ச்லோகத்தின் முதல் பாதியில் சொல்லிவிட்டு இரண்டாம் பாதியில், 'இவர் மாத்திரம் நிஜமாகவே தாயார் தகப்பனார் மூலம் பிறந்த பிள்ளைதானாக்கும் என்று நினைக்க வேண்டாம். இவரும் பிறப்பில்லாத பரப்ரஹ்ம ஸ்வரூபம்தான். லோகத்துக்கெல்லாம் காரணப் பொருள் இவர்தான்: காரணம் ஜகதாம். ஜகத்காரணமான மூல வஸ்துதான் சிவ - சக்தி குமாரராக வந்தது. அவரை நமஸ்காரம் பண்ணுகிறேன்: வந்தே. 'காரணம் ஜகதாம் வந்தே' சொல்லியிருக்கிறது.

ஜகத்காரணப் பொருள் நாமெல்லாம் பார்த்துப் பார்த்து ஸந்தோஷப்பட வேண்டுமென்பதற்காக, நராகாரமாக மட்டுமின்றி, மநுஷ்ய சரீரத்திலேயே கழுத்துக்கு மேலே யானையாக ரூபம் கொண்டிருக்கிறது; திரும்பத் திரும்ப ஆராத ஆசையோடு பார்க்கச் செய்கிற யானை முகத்தை வைத்துக் கொண்டு தோன்றியிருக்கிறது: கண்டாதுபரி வாரணம். 'கண்டாத் உபரி' என்றால் 'கழுத்துக்கு மேலே'; வாரணம் என்பது யானை என்று தெரிந்திருக்கும்.

Koviloor Digital Library

மாமா மஹிமை

ஹிமோத்கிரியே மாதாமஹர் என்ற பெருமை, பிதா மஹர் என்றே ஒருத்தரில்லாத பெருமை இரண்டையும் பெற்ற விக்நேச்வரருக்கு மாமாவை வைத்தும் பெருமை சொல்லியிருக்கிறது இன்னொரு ச்லோகத்தில்.

ஸ்ரீகாந்தோ மாதுலோ யஸ்ய ஜநநீ ஸர்வமங்களா |
ஜநக: சங்கரோ தேவ: தம் வந்தே குஞ்ஜராநநம் ||

வழக்கத்துக்கு வித்யாஸமாக முதலில் சொன்ன ச்லோகத்தில் தாயார்வழித் தாத்தாவில் ஆரம்பித்திருக் கிறது என்றேன். அதற்கும் ஸமாதானம் இருக்கிறது. பெற்றோரைப் பிரித்துச் சொல்லும் போது மாதா - பிதா, தாய் - தந்தை என்று அம்மாவை முன் வைத்தே சொல்வது தானே வழக்கமாயிருக்கிறது? வேதத்திலேயே 'மாதாவை தெய்வமாகக் கொள்ளு' என்ற அப்புறந்தான், 'பிதாவை தெய்வமாகக் கொள்ளு' என்று வருகிறது. அவ்வை வசனமும் 'அன்னையும் பிதாவும் முன்னறி தெய்வம்' என்பதாக இந்த இரண்டு தெய்வங்களில் முதலிடத்தை அன்னைக்கே தந்திருக்கிறது. ஆனதால் இரண்டு வழித் தாத்தாக்களைச் சொல்லும்போதும் முதலில் மாதா மஹரைத்தான் சொல்லவேண்டுமென்று நியாயம் சொல்லலாம்.

அதையும்விட விநோதமாக, இந்த இன்னொரு ச்லோகத் தில் பெற்றோருக்கும் முந்தி மாமாக்காரரைச் சொல்லியிருக் கிறது!

ஸ்ரீகாந்தோ மாதுலோ யஸ்ய—"எவருக்கு மாமா மஹா விஷ்ணுவோ." மாதுலர் என்றால் மாமா. பிள்ளையாருக்கு ப்ரியமானது மாதுளம் பழம். அவரோ மாதுலருக்கு ப்ரிய மானவர்! ஸ்ரீகாந்தன் என்றால் லக்ஷ்மீபதியாக இருக்கப் பட்ட மஹாவிஷ்ணு. இந்தப் பேரைச் சொன்னதால் ச்லோகத்தை மங்களமாக ஸ்ரீ என்று ஆரம்பிப்பதோடு, மாமாவை மட்டுமில்லாமல் மாமியான மஹாலக்ஷ்மியையும்

Koviloor Digital Library

சொன்னதாக ஆகிறது. லோகங்களையெல்லாம் பரிபாலிக்கிற மஹாவிஷ்ணு, லோகம் நடப்பதற்கு முக்ய காரணமாக இருக்கிற செல்வத்துக்கு அதிதேவதையான மஹாலக்ஷ்மி ஆகியவர்களின் மருமானாக இருக்கும் 'பெரிய இடத்துப் பிள்ளை' இது என்று காட்டியதாக ஆகிறது.

ஸுப்ரஹ்மண்யருக்கு மாமா உறவு ஜாஸ்தி என்று தெரிந்திருக்கலாம். 'முருகன்' என்றவுடனேயே 'மால் மருகன்' என்றும் சேர்த்துச் சொல்கிறோம். எத்தனையோ திருப்புகழ் பாடல்களில் 'முருகோனே - மருகோனே' சேர்ந்து சேர்ந்து வரும். மருகன் என்பது மருமகன். பிராம்மணர்கள் மாப்பிள்ளை என்று சொல்வதை மற்றவர்கள் மருமகப்பிள்ளையென்றுதான் சொல்வார்கள். மாமாவுக்கும், அத்தைக்கும் ஒருவன் ஆகவேண்டிய உறவுதான் மருமகன் என்பது; 'மருமான்' என்று (பிராம்மணர்கள்) சொல்வது. அநேகமாக தக்ஷிணத்தில் மாமன் பெண்ணையோ, அத்தை பெண்ணையோதான் 'முறைப் பெண்' என்று கல்யாணம் செய்துகொள்வதாயிருப்பதால் மருமானே மாப்பிள்ளையுமாகிவிடுகிறான்.

திருமாலும் அம்பிகையும்

மஹாவிஷ்ணு அம்பாளுக்கு உடன்பிறப்பு. 'நாராயண ஸஹோதரி' என்றே அம்பாளுக்குப் பெயர். தாக்ஷாயணி, பார்வதி, மீநாக்ஷி என்ற மாதிரி அம்பாள் அவதாரம் செய்ததில் எதிலும் மஹாவிஷ்ணு இப்படி ஸஹோதரராகப் பிறக்கவில்லை. க்ருஷ்ணாவதாரத்தின் போது மட்டுமே அவர்கள் கொஞ்சம் கொஞ்சம் ஸஹோதர - ஸஹோதரிகள் மாதிரிப் பிறந்தது. அதாவது க்ருஷ்ண பரமாத்மா தேவகீ வஸுதேவர்களுக்குப் புத்ரராக அவதாரம் செய்த அதே ஸமயத்தில், பிற்பாடு க்ருஷ்ணருக்கு வளர்ப்புப் பெற்றோராகவிருந்த நந்தகோபர் - யசோதா தம்பதிக்குப் புத்ரியாக அம்பிகை அவதாரம் பண்ணினாள். பகவான் அவதரித்தவுடன் லோகமெல்லாம் மயங்கிக் கிடந்தபோது

Koviloor Digital Library

வஸுதேவர் அவரைத் தூக்கிக் கொண்டுபோய், யசோதை பக்கத்தில் விட்டுவிட்டு அவளுக்குப் பிறந்திருந்த அம்பாளான குழந்தையை எடுத்துக் கொண்டு வந்துவிட்டார். பகவான் உத்தரவுப்படி இப்படிச் செய்தார். அப்புறம் கம்ஸன் நந்தகோபர் பெண்ணான அந்த அம்பாளவதாரத்தையே தன்னைக் கொல்லப் பிறந்த வஸுதேவரின் குழந்தை என்று நினைத்து, வதம் செய்யப் போனான். குழந்தையை அவன் கல் தரையில் அடிக்க ஓங்கியபோது அது சடக்கென்று ஆகாசத்திலே போய் அம்பாளாய் நின்றுகொண்டு, 'அட முட்டாளே! உன்னைக் கொல்ல வந்திருக்கிறது வேறு ஆஸாமிடா!' என்று சொல்லி அந்தர்தானமாகிவிட்டதாக பாகவதக் கதை போகிறது.

இதற்கெல்லாம் முன்னாலிருந்தே, அவதாரங்களுக்கெல்லாம் மூலமாக இருக்கப்பட்ட நாராயணன், பராசக்தி இவர்களையே ஸஹோதரர்களாகச் சொல்கிற வழக்கமிருந்திருக்கிறது. நாராயணனுக்கும் ஸரி, பராசக்திக்கும் ஸரி மாதா பிதாக்கள் கிடையாது. அவர்கள் ஸாக்ஷாத் பரப்ரஹ்ம ஸ்வரூபமேதான். ஆனால் பொதுவிலே சிவன் லோக வியவஹாரம் முடிந்துபோன சாந்த நிலைக்கு மூர்த்தியாக இருக்கிறாரென்றால் இவர்களோ லோக வியவஹாரத்தைத் தங்களுடைய மாயா சக்தியால் நடத்தி லீலையில் ரமிப்பவர்களாக இருக்கிறார்கள். இரண்டுமில்லை, மூன்றுமில்லை, ஒன்றுதான். அதையே வ்யாவஹாரிகம் (விவகார நிலை) தொடாத பரமசாந்த பாவத்தில் சொல்லும்போது சிவன் என்றும், வ்யவஹாரக் கூத்திலே கொண்டாட்டம் போடும்போது புருஷ ரூபத்தில் பாவித்தால் நாராயணன் என்றும், ஸ்த்ரீ ரூபத்தில் பாவித்தால் பராசக்தி என்றும் சொல்கிறோம். ஒரே மாதிரியான கார்யத்தையும், ரூபம், குணம் முதலானதுகளையும் கொண்டிருப்பதால் விஷ்ணுவையும் அம்பாளையும் உடன் பிறந்தவர்களாகச் சொல்கிறோம். ஸஹோதரர்கள்தானே ஒரு மாதிரி இருப்பார்கள்? அதனால்.

Koviloor Digital Library

மருமானே மாப்பிள்ளையுமாக, அதாவது ஒருத்தனே இரண்டு அர்த்தத்திலும் "மருமவப் பிள்ளை"யாக இருப்பதைச் சொல்லிக் கொண்டிருந்தேன். ஸுப்ரஹ்மண்ய ஸ்வாமி மஹாவிஷ்ணுவுக்கு ஸஹோதரியின் பிள்ளையாதலால் மருகனாக இருப்பது மட்டுமில்லை; அவர் கல்யாணம் பண்ணிக் கொண்ட வல்லீ தேவஸேனைகளும் பூர்வத்தில் மஹாவிஷ்ணுவின் புத்ரிகளாக உத்பவித்து அப்புறந்தான் ஒருத்தி வேடராஜாவிடமும் இன்னொருத்தி தேவராஜாவிடமும் போய்ச் சேர்ந்து வளர்ந்தார்களென்று கதை. அதாவது முருகன் மஹாவிஷ்ணுவுக்கு இரண்டு அர்த்தத்திலும் மருமகன். அதாவது இவருக்கு அவர் மாமா, மாமனார் இரண்டுமாக வேண்டும்.

திருமால் செய்த கோணங்கி

இப்படி விவாஹ ஸம்பந்தமில்லாவிட்டாலும், பிள்ளையாருக்கு மாமா மஹாவிஷ்ணுவிடம் ரொம்ப நெருக்கமுண்டு.

குழந்தைகளுக்குக் கோணங்கி காட்டினால் போதும், அதனிடம் எதையும் ஸாதித்துக்கொண்டு விடலாமென்றேன் அல்லவா? இப்படி மாமாக்காரரான மஹாவிஷ்ணு செய்த கோணங்கியாட்டம்தான் இப்போதும் விக்நேச்வர வழிபாட்டில் ரொம்பவும் முக்யமாயிருக்கிறது. பிள்ளையாரென்றால் உடனே தோப்புக்கரணத்தைத்தான் நினைத்துக் கொள்கிறோம். மற்ற ஸ்வாமிகள் மாதிரி இவர் ரொம்ப ச்ரமம் தருகிற ஸ்வாமி இல்லை என்று சொன்னேன். பெருமாளென்றால் அங்க ப்ரதக்ஷிணம்; 'முழங்கால் முறிச்சான்' மலை ஏறணும். முருகனுக்குக் காவடி என்று பெரிசாகக் கட்டித் தூக்கிக் கொண்டு மைல்கணக்காக மலை மேல் ஏறிப் போகணும்; அலகு செடில் குத்திக் கொள்வது என்றெல்லாம் கூட உண்டு. ஈச்வரனுக்கோ ஒரே பசியும் பட்டினியுமாய் உபவாஸமிருக்க வேண்டும். இப்படியெல்லாமில்லாமல் ரொம்பக் கொஞ்சமாக வேலை வாங்குகிறவர், ஸ்வல்ப ச்ரமமே தருகிறவர் பிள்ளையார்தான். அதுவுங்கூட வேடிக்

Koviloor Digital Library

கையாக, குழந்தை விளையாட்டு மாதிரி, அல்லது குழந்தைக்கு விளையாட்டுக் காட்டுகிற மாதிரித்தானிருக்கும். நெற்றியில் குட்டிக் கொள்வது, தோப்புக் கரணம் போடுவது இரண்டையுந்தான் சொல்கிறேன். ஒருத்தர் தோப்புக் கரணம் போட்டால் குழந்தையே முதற்கொண்டு அதை வேடிக்கையாகப் பார்த்துக் கொண்டு, தன் ஸ்வபாவப்படி தானும் அப்படி 'இமிடேட்' பண்ணும்.

இந்தத் தோப்புக்கரணத்தை ஆதியில் உண்டாக்கியவர் மஹாவிஷ்ணுதான். அவர் ஒரு ஸமயம் ஸஹோதரியைப் பார்ப்பதற்காகவும், தமக்கு ரொம்பவும் ஆப்தமான பரமேச்வரனோடு ஸல்லாபிப்பதற்காகவும், மருமான் கணேசரைக் கொஞ்சி விளையாடுவதற்காகவும் கைலாஸத்துக்கு வந்திருந்தார். அப்போது தம்முடைய சக்ரத்தைச் சுற்றிக் குழந்தைக்கு வேடிக்கை காட்டினர். உடனே குழந்தை தும்பிக்கையை நீட்டிச் சக்ரத்தைப் பிடுங்கிக்கொண்டு லபக்கென்று வாய்க்குள் போட்டு நன்ருக அடக்கிக் கொண்டுவிட்டது. மஹாவிஷ்ணு நயமாகவும் பயமாகவும் எத்தனை பண்ணியும் அது சக்ரத்தை வெளியே போட மாட்டேனென்று அடம் பண்ணி விளையாடிற்று. அப்போது தான் மஹாவிஷ்ணு யுக்தி பண்ணி, இப்படிக் காதைப் பிடித்துக் கொண்டு தோப்புக் கரணம் போட்டார். அதைப் பார்த்ததும், எப்போதுமே சிரித்த முகமாயிருக்கும் 'ப்ரஸன்னவதன'க் குழந்தை விழுந்துவிழுந்து சிரிக்க ஆரம்பித்தது. சிரிக்கிறபோது வாயில் அடக்கிக் கொண்ட சக்ரமும் குபுக்கென்று வெளியிலே வந்து விழுந்தது. சடக்கென்று அதை மஹாவிஷ்ணு எடுத்து வைத்துக் கொண்டுவிட்டார்.

மஹாவிஷ்ணு கைகளால் காதைப் பிடித்துக் கொண்டது ஸம்ஸ்கிருதத்தில் "தோர்பி : கர்ணம்" என்று குறிப்பிடப்பட்டது. "தோர்பி:" என்ருல் "கைகளால்." "கர்ணம்" என்பது காது என்று தெரிந்ததே. கையால் காதைப் பிடித்துக் கொள்ளும் 'தோர்பி(ஹ்) கர்ண'மே

Koviloor Digital Library

தோப்பிக்கரணம், தோப்புக்கரணம் என்றெல்லாம் ஆகி விட்டது. குட்டிக்கரணம் என்கிற மாதிரி இங்கே கரணம் இல்லை; கர்ணம் என்று சொல்லவேண்டும்.

முதலில் யாரோ மநுஷ்யாள் இதை ஆரம்பிக்காமல் மஹாவிஷ்ணுவே ஆரம்பித்தார் என்பதற்கும் 'தோர்பி(ஹ்) கர்ணம்' என்ற வார்த்தையிலேயே 'எவிடென்ஸ்' (சான்று) இருக்கிறது. அதைப் புரிய வைப்பதற்குக் கொஞ்சம் ஸம்ஸ்க்ருத இலக்கணம் சொல்லித் தரணும்.

தமிழ், இங்கிலீஷ் முதலான பாஷைகளில் ஒருமை—பன்மை, ஸிங்குலர்—ப்ளூரல் என்று இரண்டுதான் இருக்கின்றன. ஒன்றுக்கு மேற்பட்ட எல்லாம் பன்மை, ப்ளூரல் என்று வைத்துவிடுகிறோம். ஸம்ஸ்க்ருதத்தில் மட்டும் ஏகவசனம், த்வி வசனம், பஹு வசனம் என்று மூன்று இருக்கின்றன. ஏகவசனம் என்பது ஒருமை. த்விவசனம் என்பது தமிழிலும் இங்கிலீஷிலும் இல்லாதது. அதை 'இருமை' என்று வேண்டுமானால் சொல்லலாம். இரண்டு பேர் அல்லது இரண்டு வஸ்துவை மட்டும் அது குறிக்கும். இரண்டுக்கு மேலே போகிற எல்லாம் பஹு வசனம். சிவம்—சக்தி, பரமாத்மா—ஜீவாத்மா, பகவான்—பக்தன், ஸதி—பதி, குரு—சிஷ்யன் என்றிப்படியும், ஒரு மநுஷ்ய ஜீவனை எடுத்துக்கொண்டால் அவனுக்கு இரண்டு கண், இரண்டு காது, இரண்டு கை, இரண்டு கால் என்றெல்லாமும் இருப்பதாலோ என்னவோ இரண்டு என்பதற்குத் தனி ஸ்தானம் தந்து 'த்வி வசனம்' என்ற ஒன்றை வைத்திருக்கிறது.

மநுஷ்யர்களால் தோப்புக்கரணம் ஆரம்பிக்கப்பட்டிருந்தால், 'கைகளால் காதைப் பிடிப்பது' என்பதில் 'கைகளால்' என்பதற்கு த்வி வசன வார்த்தைதான் இருக்கவேண்டும். ஏனென்றால் மநுஷ்யனுக்கு இருப்பது இரண்டு கைதானே? 'தோஸ்' என்பது கை. முதல் வேற்றுமை ஒருமையில் ஒரு கையை 'தோ:' என்கவேண்டும். 'கைகளால்' என்பது மூன்றும் வேற்றுமை. 'ஒரு கையால்' என்பதற்கு 'தோஷா'

Koviloor Digital Library

என்று சொல்லவேண்டும். 'இரண்டு கைகளால்' என்பதற்கு 'தோர்ப்யாம்'. மநுஷ்யர்களான நாம் இரண்டு கைகளால் போடும் தோப்புக்கரணத்தை 'தோர்ப்யாம் கர்ணம்' என்று தான் சொல்லவேண்டும். இது பேச்சு வழக்கில் திரிந்தால்கூட 'தோப்பாங்கரணம்' என்றுதான் ஆகியிருக்குமே தவிர, இப்போது நாம் சொல்வதுபோல 'தோப்பிக்கரணம்' என்றோ, 'தோப்புக்கரணம்' என்றோ ஆகியிருக்காது. "தோர்பி:" என்று மூல ரூபத்தில் இருந்திருந்தால்தான் அது சிதைந்து 'தோப்பி', 'தோப்பு' என்று ஆகியிருக்கும். "தோர்பி:" என்பதோ இரண்டுக்கும் மேற்பட்ட பல கைகளைக் குறிக்கும் பஹுவசனமாயிருக்கிறது. தோஷா—ஒரு கையால்; தோர்ப்யாம்—இரண்டு கைகளால்; தோர்பி(ஹ்)—இரண்டுக்கு மேற்பட்ட கைகளால்.

விஷ்ணுவுக்கு எத்தனை கை? நாலு கை. இரண்டுக்கு மேற்பட்ட நாலு கைகளால் அவர் காதைப் பிடித்துக் கொண்டதால்தான் தெளிவாக பஹுவசனத்தில் "தோர்பி(ஹ்)" என்று சொல்லி, அது 'தோப்பி' என்று ஆகிவிட்டிருக்கிறது.

மாமா—மருமான் உறவைச் சொல்ல வந்தேன். பிள்ளையாருக்குப் பிடித்த, எல்லாப் பிள்ளைகளுக்குமே பிடித்த, தோப்பிக்கரணத்தை அவரது மாமா மஹாவிஷ்ணுதான் 'இனாகுரேட்' பண்ணியிருக்கிறார்!

"சுக்லாம்பரதரம்"

"சுக்லாம்பரதரம்" ச்லோகம் எதற்கும் ஆரம்பத்தில் சொல்கிறோமே, அதிலே ஒரு பெரிய வேடிக்கை! என்னவென்றால், அதில் பிள்ளையாருடைய பெயர் எதுவுமே வரவில்லை! கணபதி, கணேசர், விநாயகர், விக்நேச்வரர் என்ற மாதிரி அவருக்கே ஏற்பட்ட பெயரோ, பெற்றோரைவைத்து ஏற்பட்ட சிவாத்மஜன், கௌரீஸுதன் என்ற மாதிரிப் பெயரோ, அவருடைய வாஹனம், ஆயுதம், இஷ்டமான வஸ்து ஆகியவைகளை வைத்து

Koviloor Digital Library

ஏற்பட்ட மூஷிக வாஹனர், பாசஹஸ்தர், மோதக ப்ரியர் முதலான ஏதாவதொரு பெயரோ, அவரது ரூப லக்ஷணங்களைக் குறிக்கிற பெயர்களான கஜமுகர், ஏகதந்தர், லம்போதரர் (தொங்கும் தொந்திக்காரர்) முதலானதுகளில் ஏதாவதொன்றே, அல்லது அவரது லீலைகளை வைத்து ஏற்பட்ட ஏராளமான பெயர்களில் எது ஒன்றுமோ 'சுக்லாம்பரதர' ச்லோகத்தில் வரவில்லை. சொல்லிப்பாருங்கள்.

சுக்லாம்பரதரம், விஷ்ணும், சசிவர்ணம், சதுர்புஜம்|
ப்ரஸந்ந வதநம் த்யாயேத் ஸர்வ விக்நோபசாந்தயே||

"சுக்லாம்பரதர": வெள்ளை வஸ்திரம் கட்டிக் கொண்டிருப்பவர். ஸரஸ்வதியும் ஈச்வரனும்கூடத்தான் வெள்ளை கட்டிக்கொள்பவர்கள். புருஷர்களில் எல்லோருமே வெள்ளைதான் கட்டிக்கொள்வார்கள். வித்யாஸமாக மஞ்சள், சிவப்பு கட்டிக்கொள்கிற ஸ்வாமிகளைப் பீதாம்பரதாரி, ரக்தாம்பரதாரி என்றெல்லாம் சொன்னால் அது அவர்களைத்தான் ஸ்பெஷலாகக் குறிக்கிறது என்பதுபோல, 'சுக்லாம்பரதரர்' என்பது பிள்ளையாரை மாத்திரம் குறிப்பிட்டுவிடவில்லை.

அடுத்ததாக, "விஷ்ணு." இதற்காகத்தான் நான் இந்த ச்லோகத்தைச் சொல்லவந்தேன். மாமா பேரையே மருமானுக்குச் சொல்லியிருக்கிறது. அத்தனை அந்நியோந்நியம்! விஷ்ணு என்றால் எல்லா இடத்திலேயும் பரவியிருப்பவர், ஸர்வ வ்யாபி என்று அர்த்தம். பிள்ளையார் எங்கேயும் இருக்கிறாரென்பதால் 'விஷ்ணு' என்று சொல்லியிருந்தாலும், அந்த வார்த்தையைக் கேட்டவுடனேயே நமக்கு அவருடைய மாமா நினைவுதானே வருகிறது?

"சசிவர்ண": நிலா மாதிரி நிறமுடையவர். ஈச்வரனும், ஸரஸ்வதியும்கூடத்தான் அப்படிப் பால்நிலா மாதிரி இருப்பவர்கள்.

"சதுர்புஜ": நாலு கை உள்ளவர். அநேகமாக எல்லா ஸ்வாமிக்குமே நாலு கைதானிருக்கிறது. அதனால் இதிலும்

Koviloor Digital Library

இவருக்கென்று ஸ்பெஷலாக அடையாளம் கிடைத்துவிட வில்லே.

"ப்ரஸந்ந வதந": நல்ல மலர்ந்த முகமுள்ளவர். பின்னே, எந்த ஸ்வாமியாவது அழுமூஞ்சியாக இருக்குமா என்ன? காளி, வீரபத்ரர், நரஸிம்ஹ மூர்த்தி மாதிரி உக்ர மாக இருக்கப்பட்ட சில ஸ்வாமிகளேத் தவிர மற்ற எல்லா ஸ்வாமியும் பக்தர்களிடம் அநுக்ரஹத்தோடு ஆனந்தம் நிறைந்த முகத்தோடு இருப்பதைத்தான் இத்தனே ஆயிரம் விக்ரஹங்களிலும் பார்க்கிருேம். அவர்களேயெல்லாம்விட இன்னம் ஆனந்தம் சொட்டிக் கொண்டிருக்கும்படியாகப் பரந்த, விசாலமான ஆனேமுகத்தோடு இவர் இருக்கிருர் என்று வேண்டுமானுல் சொல்லலாம்.

இப்படி சுக்லாம்பரதரம், விஷ்ணும், சசிவர்ணம், சதுர்புஜம், ப்ரஸந்ந வதநம் என்று வருகிற ஐந்து வார்த்தைகளில் எதுவுமே பிள்ளேயாரொருவரை மட்டுந் தான் குறிக்கிறது என்று சொல்வதற்கு இடமில்லாமலிருக் கிறது.

(இந்த ஐந்து வார்த்தைகளில் ஒவ்வொன்றுக்கும் ஒரு குட்டாக ஐந்து தரம் நெற்றிப் பொட்டில் குட்டிக்கொள்ள வேண்டும்.)

அப்புறம், 'த்யாயேத்' என்பதற்கு 'த்யானிக்க வேண்டும்' என்று அர்த்தம்.

எதற்காக த்யானிக்க வேண்டும்? "ஸர்வ விக்ந உப சாந்தயே"—எல்லா விக்னங்களும், அதாவது, தடை களும் இடையூறுகளும் அடங்கி மறைந்து போவதற்காகவே. இங்கேதான், ஒரு நாமாவாகச் சொல்லாவிட்டாலும், பிள்ளேயாருக்கென்றே ஏற்பட்ட விசேஷ லக்ஷணம் தெரிகிறது. எடுத்த கார்யம் விக்னமில்லாமல் நடக்க வேண்டுமென்ருல் அதற்கென்று பிரார்த்திக்கப்படவேண்டிய ஸ்வாமி பிள்ளேயார்தான். அதனுல்தான் எந்தக் கார்யத் தையும் ஆரம்பிக்கிறபோதே அவருக்குப் பூஜை பண்ணி

Koviloor Digital Library

விடுவது: இந்த ஒரு ச்லோகமாவது சொல்லி நெற்றியில் குட்டிக் கொண்டுவிடுவது.

ச்லோகம் சொல்லிக் கொள்ளக்கூடிய வயஸுக்கு முந்தியே ஒரு சின்னக் குழந்தையிடம்கூட, 'அப்பா! பிள்ளை யாரை நினைச்சுக்கோ! அப்போதான் எந்தக் கஷ்டமும் வரா மலிருக்கும்' என்று சொல்லிக் கொடுத்துவிடுவார்கள். அதனால், ச்லோகம் கற்றுக் கொள்கிற வயஸு வந்தபோது, இப்படி 'ஸர்வ விக்நோபசாந்தயே' என்று சொல்லிக் கொடுத்துவிட்டாலே போதும், 'இடைஞ்சல் வராமலிருப்ப தற்காக இந்த ஸ்வாமிக்கு ஸ்தோத்ரம் சொல்லணுமா? அப்படியானால் அவர் பிள்ளையாராகத் தானிருப்பார்' என்று அந்தக் குழந்தைகூடப் புரிந்துகொண்டுவிடும்.

'விஷ்ணு' என்றே இந்த ச்லோகத்தில் இருப்பதிலிருந்து பிள்ளையாருடைய உறவு முறைகளில் மாமாவின் அருமை தெரிகிறது.

அதை வைத்துத்தான், சற்றுமுன் சொன்ன ச்லோகத் தில் "ஸ்ரீ காந்தோ மாதுலோ யஸ்ய"—எவருக்கு மாமா லக்ஷ்மிபதியான மஹாவிஷ்ணுவோ—என்று ஆரம்பிக்கிறது. (மலையாளத்தில் 'மருமக்கத்தாயம்' என்று மருமான் வழி, மருமான் வழியாக ஸொத்து போகும் முறை ஞாபகம் வருகிறது.)

பெற்றோர் பெருமை

மாமாவுக்கு முதல் இடம் கொடுத்துச் சொல்லிவிட்டு, அவருடைய ஸஹோதரியாக, இவருடைய தாயாக இருக்கப் பட்ட அம்பாளைச் சொல்லியிருக்கிறது.

ஜநநீ ஸர்வமங்களா

(பிள்ளையாருடைய) அம்மா, ஜனனி, யார்? ஸர்வ மங்களா. ரூபம், குணம், கார்யம் முதலான ஸர்வமும் பரம மங்களமாக இருக்கப்பட்ட பராசக்திதான் இவருக்கு அம்மா.

Koviloor Digital Library

அம்பாளைப் பற்றி எல்லாருக்கும் தெரிந்திருக்கக்கூடிய ச்லோகம் அவளை ஸர்வமங்களை என்று சொல்லித்தான் ஆரம்பிக்கிறது.

ஸர்வ மங்கள மாங்கல்யே சிவே ஸர்வார்த்த ஸாதிகே |
சரண்யே த்ர்யம்பகே கௌரி நாராயணி நமோஸ்து தே ||

மஹாவிஷ்ணுவின் அநேகம் பெயர்களில் ஸ்ரீ காந்தன் என்றதில் 'ஸ்ரீ' என்பதால் ஸகல ஸௌபாக்யங்களையும் சொன்னதற்கேற்ப அம்பாளின் பல பெயர்களில் ஸர்வ மங்களா என்று சொல்லிவிட்டு, அப்புறம் அப்பாவைப் பற்றிக் குறிப்பிட்டிருக்கிறது. அன்னைக்குப் பிறகே பிதா என்ற நியாயப்படி, அம்பாளை முதலில் சொன்னபின் "ஜநக : சங்கரோ தேவ:" என்று "இவருடைய தகப்பனுர் யாரென்ருல் பரமசிவன்" என்பதாகச் சொல்லியிருக்கிறது.

பரமேச்வரனுக்கு எத்தனையோ பெயர்களிருந்தும், பரம மங்களமாக 'ஸ்ரீ காந்தன்', 'ஸர்வமங்களா' என்ற பெயர்களைச் சொன்னுற்போல, இங்கேயும் 'சங்கரன்' என்று சொல்லியிருக்கிறது. 'சங்கர' என்ருல் நல்லதையே செய்கிறவர், பரம ஸுகத்தை உண்டாக்குபவர் என்று அர்த்தம். ஸ்ரீ, மங்களம், ஸுகம் எல்லாம் தருபவர் விக்நேச்வரர் என்று காண்பிக்கும் வகையில் அவருக்குள்ள மாமா, அம்மா, அப்பாவின் 'பெரிய இடத்து' ஸம்பந்தத்தைச் சொல்வதாக ச்லோகம் இருக்கிறது.

ஸ்ரீ காந்தோ மாதுலோ யஸ்ய ஜநநீ ஸர்வமங்களா |
ஜநக : சங்கரோ தேவ : தம் வந்தே குஞ்ஜராநநம் ||

"தம் குஞ்ஜராநநம் வந்தே"—இப்படிப்பட்ட அந்த யானை முகனை நமஸ்கரிக்கிறேன்.

முருகனும் மூத்தோனும்

தாத்தா, அப்பா, அம்மா, மாமா எல்லாரும் ரொம்பவும் பெரியவர்களாயிருக்கிருர்கள். அது மட்டுமில்லை. கூடப் பிறந்தவரும் ரொம்ப மஹிமையுள்ளவர். கூடப் பிறந்தவ

Koviloor Digital Library

றென்றால், இவருக்கு அண்ணா கிடையாது. இவர்தான் மூத்தபிள்ளை. "மூத்த பிள்ளையார் மும்மணிக்கோவை" என்றே இவர்மேல் ஒரு ஸ்தோத்ரம் இருக்கிறது. ப்ரபஞ்சத்துக்கே முதல் குழந்தை அவர். "ஜ்யேஷ்ட ராஜா" என்பது வேதமே அவருக்குக் கொடுத்திருக்கிற பெயர். கணபதிதான் எல்லாருக்கும் அண்ணா. அவருக்குத் தம்பிதான் உண்டு.

தமையன் பெரிய ஆஸாமியாயிருந்தால் அவன் பெயரை வைத்துக்கொண்டே தம்பி தடபுடல் பண்ணுவதுண்டு. இப்படியே தம்பிக்காரன் பிரமுகனாயிருந்தாலும், தனக்காக யோக்யதையில்லாத அண்ணன்காரன் அதைக்காட்டி அதிகாரம் பண்ணுவதுண்டு. இங்கேயோ ஈச்வர புத்ரர்கள் இரண்டு பேருமே சக்தி, ஸாமர்த்யங்களிலும் அநுக்ரஹத்திலும் ரொம்பவும் உயர்ந்தவர்களாக இருக்கிறார்கள். அதனால் பிள்ளையாருக்கு உறவுகளைச் சொல்லிப் பெருமை காட்டும்போது தம்பியையும் சொல்ல வேண்டியிருக்கிறது.

பிள்ளையாருக்கு விசேஷமாகப் பதினாறு பெயர்கள் உண்டு. ஷோடச நாமாக்கள் என்று சொல்வார்கள். (ஷோடசம் என்றால் பதினாறு.) அஷ்டோத்தர (சத)ம் சொல்லிப் பூஜை பண்ண முடியாவிட்டாலும் இந்தப் பதினாறு நாமாக்களையாவது சொல்ல வேண்டும்.

ஸுமுகச்ச ஏகதந்தச்ச கபிலோ கஜகர்ணக: |
லம்போதரச்ச விகடோ விக்நராஜோ விநாயக: ||

தூமகேதுர் கணாத்யக்ஷோ பாலசந்த்ரோ கஜாநந: |
வக்ரதுண்ட: சூர்ப்பகர்ணோ ஹேரம்ப: ஸ்கந்தபூர்வஜ: ||

கடைசிப் பெயர் 'ஸ்கந்தபூர்வஜர்'—அதாவது 'ஸ்கந்தனுக்கு முன்னாடிப் பிறந்தவர்.' தம்பியை வைத்துத் தமையனாருக்குப் பெருமை கொடுக்கும் பெயர்!

இப்படி இவருடைய பல உறவுக்காரர்களைப் பார்த்தாலும் இவர் ரொம்ப பெரிய இடத்துப் பிள்ளை என்று தெரியும். அதனால் அந்தப் பிள்ளையை நாம் மனங் குளிர்ந்திருக்கும்படியாகப் பண்ணவேண்டும். அதற்குக் கோபம்

Koviloor Digital Library

உண்டாகும்படியாக எதுவும் பண்ணுமல் ஜாக்ரதையா யிருக்கவேண்டும். மூவுலகத்தின் மூத்த குழந்தையுடைய ப்ரீதியை நாம் முக்யமாக ஸம்பாதித்துவிட வேண்டும். நல்ல மனஸ், அருள் உள்ளம், இரக்க குணம் உள்ள அவர் எளிதிலே த்ருப்தி கொண்டுவிடுவார். எப்போதுமே ஆனந்த மாயிருக்கும் அவரை நாமும் கொஞ்சம் குஷிப்படுத்தி விட்டால், அவருடைய மாதா பிதாக்களான பார்வதீ பரமேச்வரர்களின் மனஸையும் குளிரப்பண்ணி அவர்களிட மிருந்து ஸகல நலன்களேயும் பெற்றுவிடலாம்.*

* அடுத்த உரையும் இதன் தொடர்புடையதே.

Koviloor Digital Library

கோவிலூர் ஆதீனம்
2056
R65
கோவிலூர்-630 307

பிற தெய்வங்களும் போற்றும் பிள்ளையார்

மரியாதைக்குரிய குழந்தை

பெரிய இடத்துப் பிள்ளை என்பதாலேயே, 'நாம் நமக்கென்று ஒரு யோக்யதையும் ஸம்பாதித்துக்கொள்ள வேண்டியதில்லை. நம்முடைய பெரிய ஸம்பந்தத்தைக் காட்டியே ஊரை ஆட்டி வைத்துக்கொண்டிருக்கலாம்' என்று இருப்பவர்கள் உண்டு. அநேகம் பெரிய மநுஷ்யரகத்துப் பசங்கள் தறுதலைகளாகவோ, அசட்டுப் பிசட்டென்றோ இருப்பதைப் பார்க்கலாம்.

ஆனால் இந்தப் பெரிய இடங்களுக்கெல்லாம் உச்சியிலுள்ள மஹா பெரிய இடத்துப் பிள்ளை, 'உச்சிப் பிள்ளையார்' என்கிறோமே, அவர் எப்படியிருக்கிறார்? தேஹ பலமா, புத்திக் கூர்மையா, கார்ய சக்தியா, அன்புள்ளமா எல்லாவற்றிலும் தமக்கு மேல் யாருமில்லை என்று இருக்கிறார். பெரிய இடத்துப் பிள்ளை என்பதால் மாத்திரம் அவருக்குப் பெருமையில்லை. அவருக்காகவே அவருக்குப் பெருமை என்பது "பிள்ளை"க்கு "யார்" போட்டு அவரைப் "பிள்ளையார்" என்று மிகவும் மரியாதையாகச் சொல்வதிலிருந்தே தெரியும்.

Koviloor Digital Library

பொதுவாகத் தாய், தகப்பன், பாட்டன், பாட்டி, தமையன், தமக்கை ஆகிய பெரியவர்களைத்தான் மரியாதையாகத் தாயார், தகப்பனுர், பாட்டனுர், பாட்டியார், தமையனுர் தமக்கையார் என்றெல்லாம் சொல்வது வழக்கம். பிள்ளைக்கு அப்படி மரியாதை விகுதி சேர்த்துச் சொல்கிற வழக்கம் எங்கேயும் கிடையாது. இதற்கு மாறுதலாக இவர் ஒருவர் விஷயத்தில் மட்டும் "பிள்ளை" என்காமல் "பிள்ளையார்" என்றே சொல்கிறோம்.

முழுமுதற் கடவுளாக

பிள்ளையார் ப்ரீதியை நாம் பெற்றுவிட்டால் அவரிடம் மிகவும் அன்புகொண்ட பார்வதி பரமேச்வரர்களின் அநுக்ரஹத்தைப் பெற்றுவிடலாமென்றேன். நாம் பொதுவாக ஈச்வரனையும் அம்பாளையும் முக்யமாகக் கொண்டு வழிபடுபவர்களாதலால், அவர்களுடைய செல்லப் பிள்ளையை நாம் ஸந்தோஷப்படுத்துவதாலேயே அவர்களிடமிருந்து எல்லா அநுக்ரஹமும் பெற்றுவிடலாமென்பதற்காகச் சொன்னேன். இதனுல் அநுக்ரஹ சக்தி அவர்களுக்குத்தான் உண்டு, பிள்ளையாருக்குக் கிடையாது என்றதாக ஆகாது. அப்பாவும் அம்மாவுந்தான் அருள் செய்யவேண்டும் என்றில்லாமல் அவரே எதையும் அருள வல்லவர்தான்.

ஈச்வரனுக்கும் அம்பாளுக்கும் புத்ரர் என்பதற்காக இல்லாமல், அவரே முழுமுதற் கடவுள் என்று உபாஸிக்கிறவர்கள் இம்மை மறுமை நலன்கள் எல்லாவற்றையும் அவரே அநுக்ரஹிப்பாரென்று கொண்டிருக்கிறுர்கள். கணபதியே பரதெய்வம் என்று உபாஸிக்கிற இவர்களுக்கு 'காணபதர்கள்' அல்லது 'காணபத்யர்கள்' என்று பெயர். தங்களுடைய உபாஸனு மூர்த்தியின் உத்கர்ஷம் (உயர்வு) பற்றி அவர்கள் பிற உபாஸகர்களிடம் சொல்லும் ஒன்றை எவரும் ஒப்புக் கொள்ளத்தான் வேண்டும். "சிவனையோ, அம்பாளையோ, முருகனையோ, விஷ்ணுவையோ பரதெய்வமாகப் பூஜிக்கிற நீங்களும் உங்கள் ஸ்வாமியைப் பூஜை

Koviloor Digital Library

பண்ண ஆரம்பிக்கும்போது முதலில் 'சுக்லாம்பரதரம்' குட்டிக் கொண்டு, மஞ்சள் பிள்ளையார் பிடித்து வைத்து எங்கள் ஸ்வாமியை வேண்டிக் கொள்ளத்தானே வேண்டி யிருக்கிறது? பிள்ளையாரையே பரமாத்மாவாகப் பூஜை பண்ணும் நாங்கள் உங்கள் ஸ்வாமிகளில் எவரையும் இப்படி வேண்டிக் கொள்வதில்லையே!" என்று அவர்கள் சொல்வார்கள்.

விஷ்வக்ஸேனர், தும்பிக்கையாழ்வார் என்ற பெயர் களில் வைஷ்ணவர்கள் முதல் பூஜை செய்வதும் விக்நேச் வரரின் ஒரு அவஸரத்துக்குத்தான் (கோலத்துக்குத்தான்) என்று சொல்லலாம்.

தாமே அக்ர (முதல்) பூஜை பெறுகிற உயர்வோடு விளங்குபவர் பிள்ளையார்.

"இவரைப் பற்றிய ச்லோகங்களில் ஈச்வரன், அம்பாள், விஷ்ணு, முருகன் முதலியவர்களைப்பற்றி வருவதால், அந்த ஸ்வாமிகளாலேயே இவருக்குப் பெருமை என்று நினைத்தால் அது ஸரியே இல்லை. அந்த ஸ்வாமிகள் எல்லாருங்கூட ஏதாவது ஒரு ஸந்தர்பத்தில் இவர் தயவை நாடித்தான் கார்ய ஸித்தி அடைந்திருக்கிறார்கள்" என்று கணபதி உபாஸகர்கள் புராணங்களைக் காட்டுவார்கள்.

தெய்வங்களில் உசத்தி தாழ்த்தி இல்லை; இல்லவே இல்லைதான். ஆனாலும் ஒரே பரமாத்மா லீலானந்தத்துக் காகவும், ஜனங்களின் விதவிதமான மனப்போக்குகளில் ஒவ்வொன்றுக்கும் பிடித்த மாதிரியும், பல ரூபங்களில் வருகிறபோது, அவரவருக்கும் தங்கள் மூர்த்தியிடம் பக்தி ஒருமுகப்படுவதற்காக ஒவ்வொரு மூர்த்தியும் மற்ற வற்றைச் சில ஸந்தர்பங்களில் ஜயித்ததாகப் புராணங்களில் பார்க்கிறோம். ஒவ்வொரு மூர்த்தியும் இப்படி மற்றவற்றை ஜயித்தது என்பதாலேயே ஒவ்வொன்றும் மற்றவற்றிடம் தோற்றும்தான் இருக்க வேண்டுமென்றாகிறதல்லவா? இப்படி ஒவ்வொரு தெய்வமும் சில ஸந்தர்பத்தில் ஜயித்து, சில ஸந்தர்பத்தில் தோற்றுப் போவதில் ஜயித்தவைகளை

Koviloor Digital Library

மட்டுமே அந்தந்த தெய்வத்தின் பக்தர்களும் எடுத்துக் கொண்டு அதனிடம் தங்கள் பக்தியை வலுவாக்கிக் கொள்கிறார்கள். இதில் பிள்ளையார் தோற்றுப் போனதாக மட்டும் ஒரு கதையும் ப்ரஸித்தமாயிருக்கவில்லை.

ஆனால் மற்ற ஸ்வாமிகள் இவரைப் பூஜித்ததற்கு நிறையக் கதைகள் இருக்கின்றன.

தந்தை பூஜித்த தனயர்

தகப்பனாரான ஈச்வரனையே எடுத்துக்கொள்ளலாம். அவர் த்ரிபுர ஸம்ஹாரத்துக்காகப் புறப்படுகிறபோது பிள்ளையை—அவர் மரியாதை கொடுக்கப்பட வேண்டிய பிள்ளையார் என்பதை மறந்து—ஸ்மரிக்காமலே கிளம்பினார்.

பிள்ளையார் தமக்கு வேண்டிய due-வைப் பெறாமல் விடமாட்டார்! 'பிள்ளையாருக்கு முதல் பூஜை' என்பது தேவதைகள் எல்லோருமாகத் தீர்மானித்தது. அப்படியிருக்க, ஒரு ரெஸொல்யூஷன் ஏகமனதாகப் பாஸ் ஆகிச் சட்டமாய் விட்டதென்றால் அதைத் தகப்பனாராகத்தான் இருக்கட்டும், அந்தத் தகப்பனார் ஸர்வ ஜ்கத்துக்கும் ஈச்வரராகத்தான் இருக்கட்டும், மீறினால் குற்றம்தானே? தப்புச் செய்தவரைப் பிள்ளையார் சும்மா விடமாட்டார்.

ஆகையால் த்ரிபுராஸுரர்களை நோக்கி ஈச்வரனின் ரதம் போய்க்கொண்டிருக்கும் வழியில் அதன் அச்சு முறிந்து போகும்படியாகப் பிள்ளையார் பண்ணிவிட்டார். ரதம் நின்றுபோய்விட்டது.

உடனே ஈச்வரனுக்குப் புரிந்துவிட்டது. 'ரொம்பவும் பெரியவனானகையால் நமக்குச் சட்டம் இல்லை என்று இருப்பது தப்பு. ரொம்பப் பெரியவனாயிருப்பதாலேயே நாம் தான் லோகத்துக்கெல்லாம் உதாரணமாக நடந்து காட்ட வேண்டும். அதன்படி சட்டத்துக்கு ரொம்பவும் அடங்கிப் போக வேண்டும். சட்டம் என்று வருகிறபோது அப்பா—

Koviloor Digital Library

பிள்ளை முதலான உறவுகளுக்கு இடமில்லை, என்று பரமேஸ்வரன் நினைத்தார்.

உடனே, கொஞ்சங்கூட ஸ்தானம் பார்க்காமல் பிள்ளையாருக்குப் பூஜை பண்ணினார். (இன்னொரு ஸந்தர்ப்பத்தில் இளைய பிள்ளையிடமும் கீழ்ப்படிந்து ப்ரணவோபதேசம் வாங்கிக் கொண்டிருக்கிறார்!)

பிள்ளையாரும் அப்பா கொஞ்சம் நினைத்தவுடனேயே ஓடிவந்துவிக்னத்தை அகற்றிவிட்டார்.

அதற்கப்புறம் ரதம் ஓடி, முடிவில் 'த்ரிபுராந்தகர்' என்று பெரிய பெயர் வாங்கும்படியாக ஈச்வரன் அந்த அஸுரர்களை ஜ்யித்தார்.

செங்கல்பட்டுக்கும் திண்டிவனத்துக்கும் நடுவில் "அச்சரப்பாக்கம்" என்று இருக்கிறதே, அந்த ஊர்தான் ஈச்வரனுடைய ரதத்தின் அச்சு இற்றுப்போன "அச்சிறுப்பாக்கம்" என்று சொல்வார்கள்.

ஸமீபகால ஸம்பவத்தில் புராண நிரூபணம்

அப்படிச் சொல்வது நிஜந்தானென்று நிரூபிக்கிறதாக ஸமீபத்தில் ஒன்று நடந்தது. ராமேச்வரத்தில் சங்கர மண்டபம் கட்டிக்கொண்டிருந்தோம்.* அதில் ப்ரதிஷ்டை செய்யவேண்டிய ஆசார்யாள் பிம்பத்தை லாரியில் எடுத்துக் கொண்டு போயிற்று. ஜெய்ப்பூரிலிருந்து ஸலவைக்கல் தருவித்து காஞ்சீபுரத்தில் ஆசார்யாளுக்கும், அவருடைய நாலு சிஷ்யர்களுக்கும் பெரிசு பெரிசாக பிம்பம் பண்ணி அங்கேயிருந்து ராமேச்வரத்துக்கு லாரியில் எடுத்துக் கொண்டு போயிற்று. அப்போது வழியில் ஸரியாக இந்த அச்சிறுப்பாக்கத்திலேயே லாரி Break down ஆகி நின்று

---

* ஸ்ரீ மடத்தால் ராமேச்வரம் அக்னி தீர்த்தக்கரையில் நிர்மாணிக்கப் பட்டு, 1963 சங்கர ஜயந்தியன்று கும்பாபிஷேகம் கொண்ட மண்டபம்.

Koviloor Digital Library

விட்டது! அப்புறம் பிள்ளையாருக்கு நூற்றியெட்டுத் தேங்காய் உடைத்து விட்டே, லாரியைப் பழுதுபார்த்துக் கிளப்பிற்று. அதற்குப் பிற்பாடு எந்த விக்னமுமில்லாமல் கும்பாபிஷேகம், ப்ரதிஷ்டை எல்லாம் ஜாம்ஜாமென்று நடந்தது. இந்த விக்னமும்கூட அநுக்ரஹம் என்றுதான் எனக்குத் தோன்றிற்று. தாம் கைலாஸ சங்கரனேதான் என்று நமக்கு உறுதிப்படுத்துவதற்காகவே நம்முடைய சங்கரபகவத் பாதாள் இங்கே தம்முடைய நவீனகால ரத அச்சான லாரி ஆக்ஸிலை முறித்துக்கொண்டிருக்கிருரென்று தோன்றிற்று.

அன்னைக்கு உதவிய ஐங்கரன்

அம்பாளும் விக்நேச்வரரை உத்பவிக்கப்பண்ணி அவர் ஸஹாயத்திஞலேயே ஜயம் பெற்ருளென்று லலிதோபாக்யானத்தில் வருகிறது.

லலிதாம்பிகை பண்டாஸுரஞேடு யுத்தம் செய்தபோது சக்திஸேனை என்பதாக முழுக்கவும் தேவஸ்த்ரீகளையே கொண்ட படையோடு போஞள். போய்ப் படைவீடாக ஒரு அக்னிக்கோட்டை கட்டப்பண்ணி அதற்குள் ஸேஞ ஸமூஹத்தோடுகூட முகாம் போட்டிருந்தாள். பண்டாஸுரனுக்கு மந்த்ரபலம் நிறைய உள்ள விசுக்ரன் என்ற ஒரு அஸிஸ்டன்ட் இருந்தான். அவன் என்ன பண்ணிஞனென்ருல் விக்ன யந்த்ரம் என்ற ஒன்றைப் பண்ணி அதை அக்னிக் கோட்டைக்குள்ளேபோய் அம்பாளின் கூடாரத்தில் விழும் படியாக விசிறி எறிந்தான். அந்த யந்த்ரத்தின் தன்மை என்னவென்ருல், இந்த நாளில் Psychological Warfare என்கிருர்களே, அப்படி அது எதிராளியை பௌதிகமாகத் தாக்காமல் அவர்களுடைய மனஸையே சத்ருபக்ஷமாக மாற்றிவிடும். இப்போது Propagandaவிஞல் (பிரசாரத்திஞல்) கொஞ்சம் கொஞ்சமாக மனஸை மாற்றுகிற மாதிரியில்லாமல், மந்த்ரசக்தி வாய்ந்த யந்த்ரமாதலால் அது உடனேயே மன மாறுதலை உண்டாக்கிவிடும்.

Koviloor Digital Library

விக்ன யந்த்ரம் வந்து விழுந்தவுடன் அதன் மயக்கும் சக்தியால் சக்திஸேனைகளின் புத்தியே மாறிவிட்டது. "எதற்காக அஸுரர்களை நாம் கொல்லணும்? இது ஜீவ ஹிம்ஸை தானே? அம்பாளுக்கு அவர்களிடம் விரோதமென்றால் நமக்கென்ன வந்தது? இன்னம் அடி அஸ்திவாரத்துக்கே போனால் எதற்காக இந்த அம்பாளுக்கு அடங்கி நாம் வேலைக்காரப் பிழைப்புப் பிழைக்கணும்? நம்மால்தான் அவளுக்கு பலம் என்பதால்தானே நம்மைச் சேர்த்துத் திரட்டிக் கொண்டு வந்திருக்கிறாள்? இத்தனை நாளாக நாம் என்னவோ புத்தியில்லாமல் அவள்தான் நமக்கெல்லாம் மேலே, அவளுக்கே நம்மை அடக்கி ஆள்கிற பலம் இருக்கிறது என்றெல்லாம் நினைத்துக்கொண்டு ஏவல் செய்து விட்டோம். இப்போதுதான் மயக்கம் தெளிந்திருக்கிறது. இனிமேலும் இப்படித் தப்புப் பண்ணக்கூடாது. இப்போது நாம் என்ன செய்யவேண்டுமென்றால் ஆயுதங்களைப் போட்டு விட்டு அப்படியே ஸ்ட்ரைக் பண்ணிவிடவேண்டும். யஜமானி-பணியாளி என்கிற கதை இனிமேலே பலிக்காது. எல்லாரும் ஸமம்தான்" என்றெல்லாம் அந்த ஸேனைகள் ட்ரேட் யூனியனிஸம், கம்யூனிஸம் எல்லாம் பேச ஆரம்பித்து விட்டன!

"வேர்க்க விருவிருத்துக்கொண்டு, அடியும் குத்தும் பட்டுக்கொண்டு இனிமேலே இவளுக்காக யுத்தம் செய்ய வேண்டியதில்லை. நாம் பாட்டுக்கு நிர்விசாரமாகத் தூங்கலாம். அக்னிக் கோட்டைதான் இருக்கவே இருக்கிறது. அதைத் தாண்டி யாரும் வந்து நம் தூக்கத்தைக் கெடுக்க முடியாது" என்று சொல்லிக்கொண்டு ஸேனா ஸமூஹம் முழுக்கப்படுத்துக்கொண்டு 'கொர் கொர்' என்று குறட்டை விட ஆரம்பித்துவிட்டன.

புத்தியை முதலில் மாருட்டமாகக் கலக்கிவிட்டு, அப்புறம் அது ஸ்தம்பித்துச் செயலிழந்து தூங்கும்படிச் செய்யும் சக்தி விக்ன யந்த்ரத்துக்கு இருந்ததால் இப்படி நடந்தது.

Koviloor Digital Library

ஜ்ரும்பணாஸ்த்ரம் என்று ஒன்று உண்டு. அதை போட்டு விட்டால் அதற்கு ஆளாகிறவர்கள் கொட்டாவி கொட்டாவியாக விட்டுக்கொண்டு அசந்து விழுந்துவிடுவார்கள். 'ஜ்ரும்பணம்' என்றால் 'கொட்டாவி விடுவது.'

நவீன கால ஆயுதங்களைவிட பயங்கரமான, விசித்ரமான ஆயுதங்களை மந்த்ர சக்தியாலேயே ஆதிகாலத்தில் செய்திருக்கிறார்களென்று புராணத்திலுள்ள விவரங்களைப் பார்த்தால் தெரியும். ப்ரஹ்மாஸ்த்ரம், நாராயணாஸ்த்ரம், பாசுபதாஸ்த்ரம் முதலியவற்றின் சக்தியைப் பற்றிப் படிக்கும்போது ஆடம் பாம்(ப்), ஹைட்ரஜன் பாம்(ப்) எல்லாம் ஒன்றுமேயில்லை என்று தோன்றும். இப்போது இந்த பாம்(ப்)களின் ரேடியேஷனால் கர்ப்பச்சேதமேற்படுகிறது என்கிறார்களென்றால், அந்தக் காலத்தில் அச்வத்தாமா போட்ட அபாண்டவாஸ்த்ரம் உத்தரையின் கர்ப்பத்திலிருந்த சிசுவைப் பாதித்திருக்கிறது! கிருஷ்ண பரமாத்மாதான் அதை ரக்ஷித்துக் கொடுத்தார்.

அம்பாள் தன்னுடைய படைகள் ஸ்ட்ரைக் பண்ணிவிட்டு ஆனாலும் நல்லவேளையாக sabotage (நாசவேலை) செய்யாமல், அமர்க்களமாய் டெமான்ட்ரேஷன்கூடச் செய்யாமல், அததுகளும் நன்றாகத் தூங்கிக்கொண்டு கிடப்பதைப் பார்த்தாள். ஞானஸ்வரூபிணியாக இருக்கப்பட்ட அவளுக்குத் தெரியாததா? இதெல்லாமும் அவள் லீலைதான்!

விக்நேச்வரரின் ப்ரபாவம் வெளிப்படவேண்டுமென்று தான் அவளே இப்படி ஒரு விக்னத்தை விசுக்ரன் என்ற வ்யாஜத்தில் உண்டாக்கிக் கொண்டிருந்தாள்.

சிவ—சக்திகளாக எப்போதும் இருப்பவர்களில் சக்தியே பண்டாஸுரனை வதைப்பதற்காக இப்போது லலிதாம்பிகையாக ஞானாக்னி குண்டத்திலிருந்து தோன்றியிருந்தாள். கல்யாணமாகாத கன்னியாக இவள் யுத்தத்துக்குப் போகக் கூடாது என்பதனால் இவளை விவாஹம் செய்துகொள்வதற்காக சிவனும் காமேச்வரர் என்ற ரூபத்தில் வந்தார்.

Koviloor Digital Library

கல்யாணம் ஆயிற்று. காமேச்வர - காமேச்வரி என்று அந்த் தம்பதியைச் சொல்வது வழக்கம். அந்த காமேச்வரிதான் நம்முடைய காமாக்ஷியாக இருப்பது. அவளுடைய ஸ்தானம் தான் காமகோடி பீடம்.

கல்யாணமானவுடன் பண்டாஸுர வதத்துக்காகப் புறப்பட்ட அம்பாள் ஈச்வரனைக் காமேச்வரனாக வரவழைத்தது மட்டும் போதாது, தன்னுடைய அருமைக் குழந்தை கணபதியையும் இந்த லலிதாம்பிகை ஆவிர்பாவத்தில் வரவழைத்து அவன் பெருமையை ப்ரகடனப்படுத்த வேண்டுமென்று நினைத்தாள். அதற்கு வாய்ப்பாகவே இப்போது சக்தி ஸேனை விக்ன யந்த்ரத்தால் தூங்கிக்கொண்டு கிடந்தது.

உடனே காமேச்வரன் மேல் தன் ப்ரேம கடாக்ஷத்தைச் செலுத்தி மந்தஸ்மிதம் (புன்னகை) செய்தாள் அம்பாள். அவர் முகத்திலும் மந்தஹாஸம் படர்ந்தது. இப்படி ஆதி தம்பதியின் பரஸ்பர அன்பில் உண்டான சிரிப்பின் காந்தி ஸமூஹம் ஒன்று சேர்ந்ததோ இல்லையோ, அதிலிருந்தே மஹா கணபதி உத்பவித்துவிட்டார்! ஆனந்த ஸ்வரூபமாக, எப்பொழுதும் ப்ரஸன்ன முகமாக, ஸுமுகராக இருக்கிற அவர் ரொம்பவும் பொருத்தமாக, ஸாக்ஷாத் அம்பாள் - ஈச்வரன் ஆகியவர்களின் முகத்திலிருந்து பெருகுகிற சிரிப்பு ஒன்று சேர்ந்ததிலிருந்து உத்பவித்துவிட்டார்.

பிள்ளையாரின் பல ஆவிர்பாவங்களில் இது லலிதோபாக்யானத்தில் வருவது. லலிதோபாக்யானம் என்பது பதினெட்டுப் புராணங்களில் ஒன்றான ப்ரஹ்மாண்ட புராணத்தில் வருகிறது.

ஈச்வரனின் முகத்தைப் பார்த்துச் சிரித்தே அம்பாள் பிள்ளையாரை அவதரிக்கச் செய்ததை லலிதா ஸஹஸ்ரநாமத்தில் "காமேச்வர முகாலோக கல்பித ஸ்ரீ கணேச்வரா" என்று சொல்லியிருக்கிறது.

எந்த தேவதையானாலும் அதன் சக்தியெல்லாம் எவளொருத்தியின் அம்சலேசம்தானோ அப்பேர்ப்பட்ட

Koviloor Digital Library

ப்ராசக்தி, தானே விக்ன யந்திரத்தைச் சக்தியற்றதாகச் செய்திருக்கலாமாயினும், விக்ன நிவாரணத்துக்காகவே ஒரு விக்நேச்வரனை ஏற்படுத்தியிருக்கும்போது அவர் ஸஹாயத்தினல்தான் இதைச் செய்ததாக இருக்கவேண்டுமென்பதற்காக இப்படி லீலை செய்தாள்.

அவள் இப்படி ஒரு சட்டத்துக்கு அடங்கியிருந்ததற்கேற்ப, அவளுடைய கடாக்ஷத்திலிருந்து உண்டான விக்நேச்வரரும், 'என் ஸஹாயத்தைத்தானே ஆனைப்பட்ட பராசக்தியும் நாடவேண்டியிருக்கிறது?' என்று கர்வப் படாமல் அவளை நமஸ்காரம் பண்ணினர். பணிவோடு அவளுடைய ஆசீர்வாதத்தை வாங்கிக்கொண்டே விக்ன யந்த்ரத்தை அழிப்பதற்காகப் புறப்பட்டார்.

அக்னிக் கோட்டையின் ஒரு மூலையில் யந்த்ரம் புதைந்து கிடந்தது. பிள்ளையார் அதைக் கண்டுபிடித்து, தந்தத்தால் குத்தித் தவிடு பொடியாக்கினர்.

உடனே தேவி கணங்கள் தூக்கம் கலைந்து எழுந்தன. அவற்றுக்கு ஏற்பட்டிருந்த மனோ பேதமும் மாறி, அம்பிகையிடம் பழையபடி பக்தி விச்வாஸம் கொண்டன. முன்னைவிட உத்ஸாஹமாக யுத்தம் செய்தன. முடிவில் பண்டாஸுரன் தோற்றுப் போனன்.

முருகனுக்குதவிய முன்னவன்

தாயார், தகப்பனரே இப்படித் தங்கள் வெற்றிக்கான 'க்ரெடிட்'டைப் பிள்ளையாருக்குக் கொடுத்திருக்கிறர்கள். அப்படியிருக்கத் தம்பிக்கு மட்டும் இவர் ஸஹாயமில்லாமல் நடக்குமா? ஆனல் இது சத்ரு ஜயம் அல்ல. ஸுப்ரஹ்மண்ய ஸ்வாமி தன்னுடைய ச்ருங்கார ஜயத்துக்காகவே அண்ணவின் ஸஹாயத்தை நாடவேண்டியிருந்தது!

குழந்தையாயிருந்தபோது அவர் ஸந்நியாஸியானதற்கு, தண்டாயுதபாணி என்று ஆண்டிப்பண்டாரமாகப்போனதற்கும் இதே அண்ணதான் காரணம். பழத்துக்காக உலகத்தை

Koviloor Digital Library

ப்ரதக்ஷிணம் பண்ணவேண்டும் என்று அண்ணா - தம்பி ஓட்டப் பந்தயம் போனது தெரிந்த கதைதானே? அப்போது ஆண்டியாகப்போன ஸுப்ரஹ்மண்யரை அப்புறம் ஈச்வரனும் அம்பாளும் நல்லவார்த்தை சொல்லி அழைத்துக் கொண்டு வந்தார்கள். எதற்காக அவருடைய அவதாரம் ஏற்பட்டதோ அந்த சூர ஸம்ஹாரமும் அப்புறம் பண்ணினார். அதற்கப்புறம் இவருக்காகவே உருகிக்கொண்டிருந்த வள்ளியிடம் மாறு வேஷத்தில் வேடனாக, விருத்தனாகப் போய் விளையாட்டுப் பண்ணினார். அவள் இவர் யார் என்று புரிந்து கொள்ளாமல் உதாஸீனம் செய்தாள். அப்போது அவர் ஸுப்ரஹ்மண்யராகக் காட்சி கொடுத்திருந்தாலே போதும், அவள் உடனே அவரிடம் ப்ரேமை கொண்டிருப்பாள். ஆனால் அவர் அப்படிப் பண்ணாமல் தமையனின் பெருமையை உலகத்துக்குத்தெரிவிக்கப் பண்ண இது ஒரு நல்ல ஸந்தர்பம் என்று நினைத்தார். எடுத்த காரியத்துக்கு இடைஞ்சல் ஏற்பட்டால் பிள்ளையாரைப் பூஜித்தே அதை நிவ்ருத்தி செய்துகொள்ளவேண்டும் என்று ஜனங்கள் உணரும்படிப் பண்ணவேண்டுமென்று நினைத்தார். அதனால் உடனே மஹா கணபதியை த்யானம் பண்ணினார்.

தம்பி கூப்பிட்டவுடனே தமையனார் பெரிய மதயானை ரூபத்தில் ஓடி வந்து வள்ளியைத் துரத்து துரத்து என்று துரத்தினார். திக்குத் திசை புரியாமல் "முருகா முருகா!" என்று ஓடின வள்ளி விருத்த ரூபத்தில் எதிர்ப்பட்ட அந்த முருகனையே—முருகன் என்று தெரிந்துகொள்ளாவிட்டாலும்—பயத்தினால் ஒரு குழந்தை அதன் தாத்தாவைக் கட்டிக் கொள்கிற மாதிரி, அப்படியே இறுகப்பிடித்துக் கொண்டு விட்டாள். 'இதற்கு மேலும் விளையாடப்படாது; விநாயக ப்ரபாவத்தை வெளிப்படுத்தியாச்சு' என்று ஸுப்ரஹ்மண்யரும் அப்போது தம்முடைய ஸ்வய ரூபத்தை எடுத்துக் கொண்டு வள்ளியை ஸந்தோஷத்தில் ஆழ்த்தினார்.

அப்புறம் வள்ளி கல்யாணம் நடந்தது. கட்டைப் பிரம்மசாரியான கணேச மூர்த்தியே தம்பியின் காதல் கல்யாணத்துக்கு உதவி பண்ணியிருக்கிறார்!

Koviloor Digital Library

அருணகிரிநாதர் திருப்புகழில் பாடியிருக்கிற விக்நேச்வரர் ஸ்துதியில் ஈச்வரனின் த்ரிபுர ஸம்ஹாரம், ஸுப்ரஹ்மண்யரின் வள்ளித் திருமணம் இரண்டிலும் மஹாகணபதிக்கு உள்ள பங்கைச் சொல்லியிருக்கிறார்.*

முப்புர மெரிசெய்த அச்சிவ னுறைரதம்
அச்சது பொடிசெய்த அதிதீரா
அத்துய ரதுகொடு சுப்பிர மணிபடும்
அப்புன மதனிடை யிபமாகி
அக்குற மகளுட னச்சிறு முருகனை
அக்கண மணமருள் பெருமாளே!

ராமபிரானும் விநாயகரும்

மாமாக்காரர் மஹாவிஷ்ணு மருமானுக்கு மரியாதை பண்ணி அவர் மஹிமை தெரியும்படியாகச் செய்ததைச் சொல்லவேண்டும்.

மஹாவிஷ்ணு என்ற மூலரூபத்தில் அவர் இவரிடமிருந்து சக்ரத்தை வாங்க முடியாமல் தோப்பிக்கரணம் போட்டது மட்டுமில்லை; ராம க்ருஷ்ணாதி அவதாரங்களிலும் பிள்ளையாருக்கு சாஸ்த்ரோக்தமாசப் பூஜை பண்ணியிருக்கிறார்.

ராமாவதாரத்தில் ராவண ஸம்ஹாரம் ஆன பிற்பாடு அவர் ராமலிங்க ப்ரதிஷ்டை செய்து சிவாராதனம் பண்ணியது எல்லாருக்கும் தெரிந்திருக்கும். ராவண ஸம்ஹாரத்துக்கு முன்னாடி, கிஷ்கிந்தையிலிருந்து போகிற போதே ஸேது பந்தம் நிர்விக்னமாக நடக்க வேண்டுமென்பதற்காக அவர் ராமநாதபுரம் ஸமுத்ரக்கரையில் நவபாஷாணம் என்ற இடத்தில் நவக்ரஹ ப்ரதிஷ்டை செய்து பூஜை பண்ணினாரென்பதும் சில பேருக்காவது தெரிந்திருக்கும். தேவி பட்டணம் என்பது அந்த நவபாஷாணந்தான். இப்போதும் ராமேச்வர யாத்திரை போகிறவர்கள், சுற்றுப்

* ''கைத்தல நிறைகனி' எனத் தொடங்கும் பாடல்.

Koviloor Digital Library

பட்ட க்ஷேத்ரங்கள் பலவற்றுக்குப் போகும்போது நவ பாஷாணத்துக்கு நிச்சயமாகப் போகிறார்கள். மிகவும் க்ரமமாக இந்த யாத்திரை பண்ணினால் முதலில் போக வேண்டிய ஊர் ஒன்று இருக்கிறது. விஷயம் தெரிந்தவர்கள் ஸேது யாத்ரா என்றால் அங்கேயிருந்துதான் ஆரம்பிப்பார் கள்.

ஆரம்ப ஸ்வாமியான விக்நேச்வரரை ராமசந்த்ரமூர்த்தி பூஜை பண்ணிய ஊர்தான் அது. உப்பூர் என்று பெயர். ராமர் மாதிரி வடக்கேயிருந்து வந்தால் நவபாஷாணத் துக்கு முன்னால் அது வந்துவிடும். அதுதானே பொருத்தம்? நவக்ரஹங்களைப் பூஜிப்பதற்கும் முதலில் 'சுக்லாம்பரதரம்' குட்டிக்கொண்டுதானே ஆகவேண்டும்?

எல்லாம் மநுஷ்ய ரீதியில் சாஸ்த்ரோக்தமாக, ஸம்ப்ர தாய பூர்வமாகப் பண்ணி வழிகாட்டியவர் ராமர். அவர் ஸேதுபந்தத்துக்கு முன் நவக்ரஹங்களை ப்ரீதி செய்தா ரென்றால், அதற்கும் முந்தி ஸர்வ விக்ன ஹர்த்தாவான பிள்ளையாரையும் பூஜை பண்ணித்தானிருப்பார். அப்படி அவரால் பூஜிக்கப்பட்டவர்தான் நவபாஷாணத்துக்குப் பக்கத்தில் இருக்கும் உப்பூர்ப் பிள்ளையார். வரப்ரஸாதி என்று அந்த வட்டாரத்திலுள்ளவர்களெல்லாம் கொண் டாடும் மூர்த்தி. மற்றவர்களுக்கு வரம் கொடுப்பாரே தவிர தமக்கு ஒரு கூரைகூட இல்லாதவர். தமக்கு மேலே விமானம் கட்ட அவர் விடுவதேயில்லை. எதையாவது விக்னத்தை உண்டுபண்ணி அதை தடுத்துவிட்டு, எளியவர் களில் எளியவராக, வெய்யில் மழை எல்லாம் தம்மேலேயே விழும்படி உட்கார்ந்திருக்கிறார்! "வெயிலுகந்த விநாயகர்" என்றே அவருக்குப் பெயர்.

தொந்தி கணபதிக்கு "டுண்டி" என்று ஸம்ஸ்க்ருதத்தில் ஒரு பெயருண்டு. டுண்டிராஜ கணபதி காசியில் பிரக்யாதி யோடு இருக்கிறார். அதன் ஸம்பந்தமாகத் தானிருக்க வேண்டும், தமிழ் தேசத்திலும் "தொண்டி" என்று விநாயக

Koviloor Digital Library

க்ஷேத்ரம் இருக்கிறது. இதுவும் ராமர் பூஜித்த க்ஷேத்ர மாகத்தான் சொல்லப்படுகிறது. வேதாரண்யத்திலிருந்து ஸமுத்ரக்கரை ஓரமாகவே தெற்காக வந்தால், ஏறக்குறைய வேதாரண்யத்துக்கும் உப்பூருக்கும் நடுபாதியில் தொண்டி இருக்கிறது. முதலில் ராமர் இங்கேயிருந்துதான் லங்கைக்கு அணைகட்ட நினைத்தாராம். இங்கே அதற்காக அவர் பிள்ளையார் பூஜை பண்ணப் பிள்ளையாரும் ப்ரஸன்னமானார். ராமருக்கு வெற்றி நிச்சயம் என்று வரம் கொடுத்துவிட்டு, ஆனால் 'இங்கேயிருந்து அணைகட்டாமல் இன்னம் தெற்காகப் போய்க் கட்டினால் வேலை குறையும். தள்ளிப்போய்க் கட்டினால்தான் சுற்றி வளைக்காமல் லங்கைக் கோட்டையின் வாசல் பக்கத்துக்கே போய்விடலாம்' என்றும் பிள்ளையார் யோசனை சொன்னாராம்.

இந்தத் தொண்டி விநாயகரும் தமக்கு மேலே விமான மில்லாமல்தான் உட்கார்ந்து கொண்டிருக்கிறார். மாமாக் காரர் மழையிலும் வெய்யிலிலும் அலைந்து கொண்டு லங்கைக்கு அணைகட்டிக்கொண்டு போகும்போது நாம் மட்டும் கோவில் கட்டிக்கொண்டு கொண்டாட்டம் அடிக்கக் கூடாதென்றுதான் இப்படி இரண்டு இடத்திலுமே இருக் கிறார் போலிருக்கிறது. ஆசார்யாள் "கணேச பஞ்சரத்ந" ஸ்தோத்ரம் செய்திருப்பது தொண்டி கணபதி மேல்தான்.

ஈச்வரஸூதனை ஸ்ரீராமர் ஆராதனை பண்ணி அநுக்ரஹம் பெற்ற பலன்தான், கடைசியில் அவர் ராவண ஸம்ஹாரம் பண்ணி விஜய ராகவனாக, அதோடுகூட இப்போது பறி கொடுத்திருந்த பத்னியைத் திரும்பவும் பெற்ற ஸீதா ராமனாகத் திரும்பிவந்து அந்த ஈச்வரனையே ராமலிங்கமாக ப்ரதிஷ்டை செய்தது.

ஆசார்யாள் பிம்பம் லாரியில் ராமேச்வரத்துக்குப் போயிற்று என்று சொன்னேனே, அப்போது அச்சரப் பாக்கத்தில் செய்த மாதிரியே உப்பூரிலும் நூற்றியெட்டுத் தேங்காய் உடைத்தது. ஈச்வரனுக்குப் பிள்ளையார் இடைஞ்

Koviloor Digital Library

சலேப் போக்கினது முதல் ஊரில் என்றால், பின் ஊரில் அவரை ராமர் பூஜித்த விசேஷம்தானே, ஈச்வரனின் ஜ்யோதிர்லிங்க மஹாக்ஷேத்ரமான ராமேச்வரம் ஸாக்ஷாத் ஸ்ரீராம ப்ரஸாதமாக நமக்குக் கிடைத்திருப்பது! ராமர், ஈச்வரன் இரண்டு பேருடனும் இப்படித் தம் ஸம்பந்தத்தை ராமேச்வரத்துக்கு போன ஆசார்யாள் காட்டிக்கொண்டு விட்டார்.

க்ருஷ்ணாவதாரத்தில் மஹாவிஷ்ணு மருமானைப் பூஜித்தது ஸ்வாரஸ்யமான பெரிய கதை.*

---

* இது அடுத்த உரையாக விரிகிறது.

Koviloor Digital Library

கண்ணன் பூஜித்த கணநாதன்

ஸ்யமந்தகத்தின் கதை

'ஸ்யமந்தகமணி உபாக்யானம்' என்று பாகவதத்தில் ஒரு கதை இருப்பதாகத் தெரிந்திருக்கலாம். அந்தக் கதை என்ன என்று தெரியாவிட்டாலும், 'ஸ்யமந்தகமணி உபாக்யானம்' என்ற பெயரையாவது கேட்டிருக்கலாம்.

ஆக்யானம் என்றால் கதை என்று அர்த்தம். உப ஆக்யானம் - உபாக்யானம் என்றால் கிளைக்கதை. பெரிசாக ஒரு கதையை ஒரு இதிஹாஸமோ, புராணமோ சொல்லிக் கொண்டு போகும்போது அதில் கிளைக்கதையாக வருவதே உபாக்யானம். 'மெயின்' கதையின் பாத்ரங்கள் ஸம்பந்தப் படாமல் முழுக்க வேறு பாத்ரங்களைப் பற்றியே உபாக்யானங்கள் வருவதுமுண்டு. மஹாபாரதத்தில் இப்படித்தான் பஞ்சபாண்டவர் ஸம்பந்தமேயில்லாத நளோபாக்யானம் முதலான பல கிளைக்கதைகள் வருகின்றன. இப்படியில்லாமல் 'மெயின்' கதையின் பாத்ரங்களுடைய ஸம்பந்தமுடையதாக மெயின் கதையிலிருந்து எடுக்கமுடியாத அதன் ஒரு பிரிவாகவே, அங்கமாகவே, ஆனாலும் ஒரு தனிக் கதாம்சமுள்ளதாக, அதாவது கழித்துக் கட்டமுடியாத கிளைகளாக உள்ள உபாக்யானங்களும் உண்டு.

Koviloor Digital Library

ஸ்யமந்தகமணி உபாக்யானம் பாகவதத்தில் இப்படித் தான் part and parcel - ஆக இருக்கிறது. ஸ்யமந்தகம் என்ற தெய்விகமான மணியை மையமாக வைத்து ஸாக்ஷாத் ஸ்ரீ க்ருஷ்ண பரமாத்மாவுக்கே ஏற்பட்ட பெரிய அபவாதம், அதைப் போக்கிக்கொள்ள அவர் பாடுபட்டது இவற்றை இந்தக் கதை சொல்கிறது.

இதே கதை விஷ்ணு புராணத்திலும் வருகிறது. கொஞ்சம் மாறுதலோடு ஸ்காந்தத்திலும் வருகிறது; அதில் நந்திகேச்வரருக்கும் ஸநத்குமாரருக்கும் நடந்த ஸம்வாத ரூபமாக (ஸம்பாஷணை உருவில்) வருகிறது. இந்த ஸ்காந்தக் கதையில்தான் விக்நேச்வரர் ஸமாசாரம் வருகிறது. நான் சொல்லப் போவது ஸநத்குமாரருக்கு நந்திகேச்வரர் சொன்ன இந்தக் கதைதான். அங்கங்கே பாகவதம், விஷ்ணு புராணம் ஆகியவற்றின் version - களை யும் கொஞ்சம் அவியல் பண்ணிக் கொள்வேன்.

ஸூர்யனும் விநாயகரும்

ருக்மிணி கல்யாணம் ஆகி பகவான் த்வாரகையில் வாஸம் பண்ணிக்கொண்டிருந்த ஸமயம். த்வாரகையில் யாதவ குலத்தின் முக்ய புருஷர்களில் இருவராக ஸத்ராஜித், ப்ரஸேனன் என்று ஒரு அண்ணன் - தம்பி இருந்தனர்.

அண்ணாவான ஸத்ராஜித்துக்கு ஸூர்ய பகவானிடம் பக்தி.

தற்காலத்தில் ஸூர்யனைப் பரிவார தெய்வங்களில் ஒன்றாக மட்டும் வைத்து, ஏதோ சிறிது ஸூர்ய நமஸ்காரம் பண்ணுவது, ஆதித்ய ஹ்ருதயம் சொல்வது என்பதோடு மதாபிமானமுள்ளவர்கள்கூட நின்றுவிட்டாலும் பூர்வத் தில் ஸூர்ய பகவானையே முழு முதற் தெய்வமாக உபாஸித் தவர்கள் நிறைய இருந்திருக்கிறார்கள். நம்முடைய மதத்தில் ஆறு பிரிவுகள் - ஆறு உபாஸனா மூர்த்திகளைக் குறித்ததாக ஷண்மதம் என்று உண்டு. பிள்ளையார், ஸுப்ரஹ்மண்யர், அம்பாள், ஈச்வரன், மஹாவிஷ்ணு என்று இப்போதும் ஸுப்ரஸித்தமாக இருக்கிற ஐந்து மூர்த்திகளோடு

Koviloor Digital Library

ஆருவதாக ஸூர்ய பகவானும் இவர்களில் இருக்கிறார். அவரையே பரமாத்ம ஸ்வரூபமாக வழிபடும் மதப்பிரிவுக்கு 'ஸெளரம்' என்று பெயர். வெளிநாட்டுக்காரர்கள் கூடப் பார்த்துப் பிரமிப்பதாகக் கோணார்க்கில் உள்ள ஆலயம் ஸூர்ய பகவானுக்கானதுதான். கோண - அர்க்கம் தான் கோணார்க். 'ஸூர்யனுடைய பகுதி' என்று அதற்கு அர்த்தம். 'அர்க்கன்' என்றால் ஸூர்யன். அர்க்கனுக்கான கோணம் 'கோணார்க்'.

'அர்க்கன்' என்றதும் ஒன்று ஞாபகம் வருகிறது. பிள்ளையார் தொடர்பாகத்தான். பேசிக்கொண்டே போவதில் இப்படித்தான், கேட்பவர்களுக்கு ப்ரயோஜனமிருக்கிறதோ இல்லையோ, அவர்களுக்கு ஸ்வாரஸ்யமாயிருக்கிறதோ இல்லையோ, ஒன்றிலிருந்து ஒன்றாகப் பல ஸப்ஜெக்ட்களுக்குப் போகும்போது பேசுபவருக்கே புதிசாகச் சில 'லிங்க்'கள் அகப்பட்டு ஆத்ம த்ருப்தியும், நூதனமாக ஒரு விஷய ஞானமும் உண்டாகின்றன. ஷண்மதம் என்று சொல்லி அதில் ஸுப்ரஸித்தமாயுள்ள ஐந்து மூர்த்திகள் என்று சொல்லும்போதே, 'இந்த ஐந்திலே பிள்ளையார் போக, பாக்கியுள்ள ஈச்வரன், அம்பாள், ஸுப்ரஹ்மண்யர், விஷ்ணு ஆகிய நாலு பேருக்கும் பிள்ளையார் ஸம்பந்தம் காட்டிவிட்டோம்; ஆருவதாக இருக்கிற ஸூர்யனுக்கும் அவருக்கும் ஸம்பந்தம் உண்டா?' என்று உள்மனஸ் யோசிக்க ஆரம்பித்தது. ஏதோ தற்செயலாய் பேச்சு கோணார்க், அர்க்கன் என்று போனவுடன், 'தேவலையே! ஸம்பந்தம் கிடைத்து விட்டதே!' என்று எனக்கே ஒரு ஸந்தோஷம், த்ருப்தி ஏற்பட்டிருக்கிறது.

'அர்க்க' ஸம்பந்தம் பிள்ளையாருக்கு இருக்கிறது. அவருக்கு அர்ச்சனை செய்ய, ஹாரம் சார்த்தி அலங்கரித்து அழகு பார்க்க எந்தப் புஷ்பம் ரொம்பவும் உகந்தது? எருக்கம் பூதானே? எருக்கம்பூவுக்கு அர்க்க புஷ்பம் என்றே பெயர். 'அர்க்க'தான் 'எருக்கு' என்றாகியிருக்கிறது, ஸூர்யன், எருக்கு இரண்டுமே அர்க்க நாமமுடையவையா

Koviloor Digital Library

யிருக்கின்றன. ஸூர்யனுர் கோயிலில் எருக்குதான் ஸ்தல விருக்ஷம். ராத்ரியில் மலரும் சில பூக்களைத் தவிர பாக்கி எல்லாப் புஷ்பங்களையும் மலர்த்துவிக்கிற ஸூர்யனேதான் எருக்கம்பூவில் விசேஷ ஸாந்நித்தியத்தோடு இருந்து கொண்டு, பக்தர்கள் பிள்ளையாருக்கு அந்தப் பூவால் பண்ணும் ஒவ்வொரு அர்ச்சனையிலும் அவர் பாதத்தில் போய் விழுந்து நமஸ்காரம் பண்ணுகிருனென்று வைத்துக் கொள்ளலாம்.

இதனுல் ஷண்மத தெய்வங்களில் பிள்ளையார் நீங்கலாக உள்ள ஐந்து பேருமே அவருடைய உத்கர்ஷத்தை ஒப்புக் கொண்டதாக ஏற்பட்டு விடுகிறது. இந்த விஷயம் இருக்கட்டும்.

தவத்தால் பெற்ற திவ்யமணி

ஸத்ராஜித் ஸூர்ய பகவானிடம் பக்தியுள்ளவனென்று சொல்லிக்கொண்டிருந்தேன். அவன் ஸமுத்ரக் கரையில் தன் இஷ்டமூர்த்தியைக் குறித்துக் கடுமையான தபஸ் பண்ணினுன். ஸூர்ய பகவான் ப்ரஸன்னமானுர். "என்ன வரம் வேண்டும்?" என்று கேட்டார்.

அவர் கழுத்தில் பளபளவென்று ஒரு மணி போட்டுக் கொண்டிருந்தார். அதற்குத்தான் 'ஸ்யமந்தகம்' என்று பெயர். அது பார்க்க ஒரே ஜ்வலிப்பாயிருப்பதோடு, பரம ச்ரேயஸ்கரமானது, ஐச்வர்ய ப்ரதமானது (ஐச்வர்யத்தைக் கொடுக்கவல்லது) என்று ஸத்ராஜித்துக்குத் தெரியும்.

அதனுல், என்ன வரம் வேணும் என்று கேட்டவுடன் அவன், "நீங்கள் போட்டுக்கொண்டிருக்கிற ஸ்யமந்தக மணியை எனக்கு அநுக்ரஹிக்கணும்" என்று ப்ரார்த்தித்துக் கொண்டான்.

தெய்வங்கள் 'வரம் தருகிறேன்' என்று சொல்லி விட்டால், அப்புறம் பக்தன் எதைக் கேட்டாலும், 'ஆஹா' என்று கொடுத்துவிடும். ஸூர்ய பகவான் தன் கழுத்

Koviloor Digital Library

திலிருந்த ஸ்யமந்தக மணியை உடனே கழற்றித் தாமே ஸத்ராஜித்தின் கழுத்தில் போட்டுவிட்டார்.

"என்னுடைய இன்னொரு ரூபம் மாதிரியே ப்ரகாசமாயிருக்கும் இந்த மணி இருக்கிற இடத்தில் வ்யாதி, வ்யஸனம் எதுவும் இருக்காது. அதோடு, இது இருக்கும் க்ருஹத்தில் எட்டு பாரம் ஸ்வர்ணம் உண்டாகும். ஆனால் இத்தனை ஸம்பத்துக்களைப் பெறுவதற்குப் பாத்ரனாக இதை தரித்துக் கொண்டிருப்பவன் உள்ளும் புறமும் பரிசுத்தமாயிருக்க வேண்டும். ஆசௌசம் (மடித்தப்பு) ஏற்பட விடக்கூடாது. சுத்தம் தப்பினால் பெரிய ஹானி உண்டாகும்" என்று எச்சரிக்கை செய்துவிட்டு, மறைந்துபோய் விட்டார்.[1]

பளபளவென்று ஜ்வலிக்கிற ஸ்யமந்தக மணியைப் போட்டுக் கொண்டு ஸத்ராஜித் ஊருக்குத் திரும்பி வந்தான். த்வாரகை ஜனங்களுக்கு அதனுடைய பெரிய glare-ல் அதைப் போட்டுக்கொண்டிருக்கிற ஆஸாமியே கண்ணுக்குத் தெரியவில்லை. ஜ்யோதி ப்ரகாசம் மட்டுந்தான் தெரிந்தது. தெருவோடு இப்படி ஒரு ஜ்யோதிஸ் போகிறதை ஆச்சர்யத்துடன் பார்த்து, ஸூர்ய பகவானேதான் க்ருஷ்ண பரமாத்மாவை தரிசிப்பதற்காக வருகிறார் போலிருக்கிறது என்று நினைத்தார்கள். அப்புறம் ரொம்பக் கிட்டத்தில் பார்த்தபின்தான் ஸத்ராஜித்தை அடையாளம் கண்டு கொண்டு, அவனிடம் பேசி, ஸூர்ய ப்ரஸாதமாக அவனுக்கு ஸ்யமந்தக மணி கிடைத்திருப்பதைத் தெரிந்து கொண்டார்கள்.

க்ருஷ்ணர் ரஸிகரானதால் அந்த மணியின் அழகை ரொம்பவும் ச்லாகித்தார். அவர் புகழ்ந்ததைக் கேட்ட ஸத்ராஜித்துக்கு, அந்த மணி தனக்கே வேண்டுமென்று பகவானுக்கு ஆசை வந்துவிட்டது என்று தோன்றிவிட்டது.

கண்ணனின் வைராக்யம்

வெளியிலே எத்தனை கூத்தடித்தாலும், ஜார சோர சிகாமணி என்னும்படியாக வெண்ணெயைத் திருடுவது,

Koviloor Digital Library

கோபஸ்த்ரீகளோடு ராஸலீலை பண்ணுவது, பதினாறாயிரம் பத்னிகளோடு குடும்பம் நடத்துவது என்றெல்லாம் பண்ணினாலும், உள்ளூர ஒன்றிலும் ஒட்டாமல், ஆசாபாசமேயில்லாமலிருந்த பரமஞானி, பரப்ரஹ்ம வஸ்து கிருஷ்ண பரமாத்மா, கம்ஸனை வதம் பண்ணினவுடன் அவர் தமக்கே ராஜ்ய பட்டாபிஷேகம் செய்து கொண்டிருக்க எல்லா நியாயமும் உண்டு. அவரிடம் அப்படியே மோஹித்துப் போயிருந்த மதுரா ஜனங்களும் அவர் தங்களுக்கு ராஜாவாகிறாரென்றால் ரொம்ப ஆனந்தப்பட்டுத் தானிருப்பார்கள். ஆனாலும் ராஜ்யாதிகாரத்தில் ஆசையில்லாத அவர் கம்ஸனின் தகப்பனாரான உக்ரஸேனனைத்தான் ராஜாவாக்கினார். உக்ரஸேனன் இவருக்கும் தாய்வழிப் பாட்டனார். சொந்தப் பாட்டனார் இல்லை. அம்மா தேவகிக்குச் சிற்றப்பா. கம்ஸவதம் ஆன அப்புறம் பகவான் மதுராவை விட்டுவந்து சின்ன ராஜ்யமாக த்வாரகா நிர்மாணம் பண்ணிக்கொண்டு 'த்வாரகாதீசன்' என்னும் படியாக வாழ்ந்தபோதுங்கூட, தம்மை அதற்கு 'ஸாவரின்' என்னும் தனி ராஜாவாக ப்ரகடனம் பண்ணிக்கொள்ளவில்லை. அண்ணா பலராமருக்கு த்வாரகையில் உயர்ந்த ஸ்தானம் கொடுத்துத் தாம் இரண்டாவதாகவே இடம் எடுத்துக் கொண்டார். பூர்ணாவதாரமாயிருந்தும் இப்படி அடக்கமாகவும், பொருளாசையற்ற வைராக்யத்துடனும் க்ருஷ்ணர் வாழ்ந்து காட்டினார்.

அம்ருதம் கடைந்து மஹாலக்ஷ்மி உத்பவித்து மஹாவிஷ்ணுவைப் பதியாக வரித்த இடத்திலேயே இப்படித்தான் (பாகவதத்தில்) மஹாவிஷ்ணுவைப் பற்றிச் சொல்லியிருக்கிறது. அவர் மண்ணாசை பொன்னாசை மாதிரியே பெண்ணாசையும் கொஞ்சங்கூட இல்லாதவர். பாக்கி எல்லா தேவர்களும் லக்ஷ்மி தனக்கு மாலைபோட மாட்டாளா, தனக்கு மாலை போடமாட்டாளா என்று தவித்துக்கொண்டிருந்தபோது மஹாவிஷ்ணு மட்டும் பரம வைராக்யமாக அவர் பாட்டுக்கு ஒதுங்கி உட்கார்ந்து கொண்டிருந்தாராம்.

Koviloor Digital Library

அதனுலேயே, 'இத்தனை த்ருடமனஸ் உள்ளவரைப் பதியாய் அடைந்து அவருடைய ப்ரேமையையும் பெறும்படியாக நாம் வாழ்ந்து காட்டினுல்தானே நமக்குப் பெருமை?' என்று லக்ஷ்மி நினைத்து அவருக்கே மாலை போட்டாளாம். அவருக்கு எத்தனைக்கெத்தனை வைராக்யமுண்டோ அத்தனைக்கத்தனை கருணையும் உண்டாதலால் உடனே அவளைத் தூக்கி மார்பிலேயே வைத்துக் கொண்டுவிட்டார்!

க்ருஷ்ணர் ஆசையேயில்லாதவரென்று சொல்லவந்தேன். தானுகவே அவரைத் தேடிக்கொண்டு எல்லா ஐச்வர்யங்களும் வந்தன. மஹாவிஷ்ணுவின் சங்கு சக்ரம் கருடன் எல்லாம்கூட அவரிடம் அவ்வப்போது வந்ததாகப் பார்க்கிறோம். ராமர்கிட்டே இப்படி எதுவாவது வந்ததோ? இதேபோல மஹாவிஷ்ணு தரித்துக் கொண்டிருக்கும் கௌஸ்துப மணியும் க்ருஷ்ணர்கிட்டேதான் வந்தது. 'கஸ்தூரி திலகம் லலாட பலகே வக்ஷஸ்தலே கௌஸ்துபம்' என்று பாடுகிறோம். அப்பேர்ப்பட்ட திவ்ய கௌஸ்துபத்தைப் போட்டுக் கொண்டிருப்பவருக்கு ஸ்யமந்தகத்திடம் எதற்கு ஆசை வரப்போகிறது?

ஸ்யமந்தகத்தை ஸத்ராஜித் தந்தால் தரட்டுமே என்று த்வனிக்கும்படியாக அவர் கொஞ்சம் பேசியிருந்தால் கூட, உக்ரஸேன மஹாராஜாவுக்கு அதை அவன் தரலாமே என்ற அபிப்ராயத்தில்தான் சொன்னுரே தவிர, தமக்காகச் சொல்லிக் கொள்ளவில்லை. அதுவுங்கூட தேசம் முழுவதன் க்ஷேமத்தை உத்தேசித்துத்தான் இப்படி hint பண்ணிஞரே தவிர, பாட்டனுரிடமிருந்த ப்ரியத்துக்காக அல்ல. ஸத்ராஜித் ஒரு தனி ப்ரஜை. ஆனபடியால், ஸ்யமந்தகம் அவனிடமிருந்தால் அது அளிக்கக்கூடிய மங்களங்கள்— ஆரோக்யம், எட்டு பாரம் தங்கம் முதலானதுகள் — அவன் குடும்பத்துக்கு மட்டுந்தான் போகும். அதுவே ராஜாவிடமிருந்தால் இந்த நன்மைகள் தேசம் பூராவுக்கும் சேருமே என்பதால்தான் சொன்னுர்.

Koviloor Digital Library

அர்த்த சாஸ்த்ரப்படி, ஒரு தனி ஆஸாமியிடம் ராஜாவுக்கு இல்லாத ஒரு பெரிய ஸொத்து இருந்தால் அவன் ராஜாவுக்கு மேற்பட்டவன் என்கிற எண்ணத்தை ஜனங்களுக்குக் கொடுத்து அவர்களை அராஜகத்தில் தூண்டக் கூடுமென்பதால் இதை அநுமதிக்கவில்லை. விலைமதிப்பிட முடியாத ரத்னங்கள் ராஜாவைச் சேர்ந்தவைதான் என்பது அர்த்தசாஸ்த்ரத்தின் முடிவு. "ராஜா ரத்நஹாரி" என்று வசனம்.

இந்த அபிப்ராயத்தில் பகவான் ஏதோ ஸூசனையாகச் சொல்லப் போகத்தான் ஸத்ராஜித், "ராஜாவுமாச்சு, மந்த்ரியுமாச்சு? இவன் பார்த்து வைத்த ராஜாதானே? தாத்தா வேறே! அவன் பேரைச் சொல்லி இவனே தட்டிக் கொண்டுபோகப் பார்க்கிறுன்" என்று நினைத்துவிட்டான்.

பொருளாசை எப்படியெல்லாம் புத்தியை பேதகமாக நினைக்க வைக்கும் என்பதுதான் இந்த உபாக்யானத்தின் 'மாரல்' (நீதி).

க்ருஷ்ணரைத் தப்பாக நினைத்ததோடு மட்டுமில்லாமல் அவரிடம் ஸத்ராஜித் பயப்படவும் செய்தான். 'மஹாமல்லர்களான சாணூரன், முஷ்டிகன் முதலானவர்களை பால்யத்திலேயே கொன்றவன்; கம்ஸனை த்வம்ஸம் பண்ணினவன்; மஹாபராக்ரமசாலியான ஜராஸந்தனைப் பதினேழு தடவை அடித்துத் துரத்தினவன். அதோடு எல்லாக் கபடமும் செய்யக்கூடிய மாயாவி. இப்படிப்பட்டவனின் விரோதத்தை ஸம்பாதித்துக்கொண்டால் எப்படி ஈடுகொடுக்க முடியும்?" என்று பயப்பட்டான்.

ஸ்யமந்தகத்தை விடவும் மனஸில்லாமல், வைத்துக் கொள்ளவும் தைர்யமில்லாமல் அவஸ்தைப்பட்டான்.

பொருள் என்ன பாடுபடுத்தும் என்று நமக்கெல்லாம் காட்டும் கதை.

அப்போதைக்கு மணியைத் தம்பி ப்ரஸேனனிடம் கொடுத்து வைத்துக் கொஞ்சம் நிம்மதிப்படுத்திக் கொண்

Koviloor Digital Library

டான். அவன் இவனைவிட புத்திசாலி; பலிஷ்டனுங்கூட. அதனால் உபத்ரவத்தை அவனிடந்தான் கொஞ்சம் தள்ளி விடுவோமே என்று தள்ளிவிட்டான்.

தம்பி ப்ரஸேனன் ஸந்தோஷமாக அந்த ஸ்யமந்த கத்தைப் போட்டுக் கொண்டு வேட்டைக்குப் புறப்பட்டான். (கிருஷ்ணனோடேயேதான் அவன் வேட்டைக்குப் போனானென்று ஸ்காந்தக் கதை. இங்கே சொல்வது பாகவதத்தை யும், விஷ்ணு புராணத்தையும் அநுஸரித்தது.)

ஸ்யமந்தகத்தைப் போட்டுக் கொண்டிருப்பவன் உள்ளும் புறமும் சுத்தமாயிருக்கவேண்டுமென்று நிபந்தனை அல்லவா? ஆனால் இவன் காட்டுக்குப் போன இடத்தில் ஒரு அசுசி ஏற்பட்டது. அப்புறம், பக்கத்தில் எங்கேயும் ஜலா சயம் இல்லாததால், இவன் கை, கால் அலம்பிக்கொள்ள முடியவில்லை. இப்படி சரீர பரிசுத்தி கெட்டுப் போயிருந்த ஸமயம் பார்த்து ஒரு சிங்கம் வந்து அவனை அடித்துப் போட்டுத் தின்றுவிட்டது. குட்டி ஸூர்யனைப்போல இருந்த ஸ்யமந்தகம் சிங்கத்தையும் வசீகரப்படுத்தியது.

இருட்டு மூடின காட்டைப் பட்டப் பகலாக்குகிற அந்த ரத்னத்தைக் கவ்விக்கொண்டு சிங்கம் போய்க் கொண் டிருந்தது.

ஜாம்பவான்

அந்தக் காட்டிலுள்ள ஒரு மலைக்குகையில் ஜாம்பவான் வாஸம் பண்ணிக் கொண்டிருந்தார். ராமாவதாரத்தின் போது ராவண யுத்தத்தில் வானர ஸேனையோடுகூட ராமருக்கு ஸஹாயமாயிருந்த கரடித் தலைவரான அதே ஜாம்பவான்தான்.

கடைசியில் ராமர் ஸரயுவில் தம் சரீரத்தை விட்டு வைகுண்டத்துக்கு ஆரோஹணம் செய்தபோது, அத்தனை பேரையும் தம்மோடு பரமபதத்துக்கு அழைத்துக்கொண்டு போனாரென்றாலும் ஆஞ்ஜநேயர், ஜாம்பவான் ஆகிய

Koviloor Digital Library

இரண்டு பேரை மட்டும் விட்டுவிட்டுப் போய்விட்டார். ராம ஸ்மரணம் மாத்திரம் ஒருவனுக்கு ஸதாவும் இருந்து விட்டால் அவனுக்கு இந்தப் பாபமயமான, துக்கமயமான பூலோகமே பரமபதமாகத் தானிருக்கும் என்று ரூபித்துக் காட்டக்கூடிய யோக்யதை இவர்களுக்கு இருந்தது. ஆகையால், 'இந்த உண்மையை உலகத்துக்குக் காட்டுவதற்காக இவர்கள் இங்கேயே சிரஞ்ஜீவியாக இருந்து கொண்டிருக்கட்டும்' என்று நினைத்தார். அதனால் அவர்களை பூலோகத்திலேயே இருக்கும்படியாக ஆக்ஞாபித்து விட்டுப் போய்விட்டார். இதே மாதிரி விபீஷணனையும் லங்கையில் சிரஞ்ஜீவியாக இருந்து கொண்டிருக்கும்படிப் பண்ணி விட்டார்.

மநுஷ்ய ஜாதியை ரொம்பவும் உயர்வாகச் சொல்லிக் கொள்கிறோம். ஆனால் ராமசந்த்ரமூர்த்தி மநுஷ்ய ஜாதியைச் சேர்ந்த எவருக்கும் இப்படிச் சிரஞ்ஜீவித்வம் வஹிக்கும்படியான யோக்யதாம்சம் (யோக்யதாம்சம் என்றால் வேறென்ன? ஸதா ஸர்வதா அவரையே ஸ்மரித்துக் கொண்டிருக்கும் த்ருட பக்திதான்! அப்படிப்பட்ட யோக்ய தாம்சம்) இருப்பதாக நினைக்கவில்லை. அஸுர ஜன்மா ஒருத்தன், குரங்கு ஒன்று, கரடி ஒன்று என்று மூன்று பேரைத் தான் தம் பக்திக்கு சாச்வதச் சின்னங்களாக விட்டுப் போயிருக்கிறார்.

> அச்வத்தாமா பலிர் வ்யாஸோ ஹநூமாம்ச்ச விபீஷண: ।
> க்ருப: பரசுராமச்ச ஸப்தைதே சிரஜீவிந: ॥

என்று ஏழு சிரஞ்ஜீவிகள் இருப்பதாக ச்லோகம். அச்வத்தாமன், மஹாபலி, வ்யாஸர், ஹநுமார், விபீஷணன், க்ருபர், பரசுராமர் என்ற இந்த ஏழு பேரில் ஜாமபவான் இல்லாவிட்டாலும் அவரும் சிரஞ்ஜீவியாக இருந்து கொண்டிருப்பவர்தான். எந்த ஃபீல்டிலுமே (துறையிலுமே) பழம் தின்று கொட்டை போட்டவர்களை "ஜாம்பவானுச்சே!" என்கிறோமல்லவா?

Koviloor Digital Library

அகஸ்த்யர், என்றும் பதினாருயிருக்கும் மார்க்கண்டேயர் ஆகியவர்களும் (மேலே சொன்ன ச்லோகத்தில் குறிப்பிடப் படாவிட்டாலும்) சிரஞ்ஜீவிகள்தான்.

த்ரேதா யுகத்து ராமர் காலத்திலிருந்து, த்வாபர முடிவில் இந்தக் கதை நடக்கும்போதும் இருந்த ஜாம்பவான் மணியைக் கவ்விக்கொண்டு வரும் சிங்கத்தைப் பார்த்தார். அவருக்கு அப்போது ஸுகுமாரன் என்று பெயர் கொண்ட ஒரு பிள்ளைக் குழந்தை இருந்தது. அத்தனை வயஸுக்கா என்றால் கரடி, அதிலும் சிரஞ்ஜீவி—அதைப் பற்றி எது, எப்படியென்று நமக்கென்ன தெரியும்? ஜ்வலித்துக் கொண்டிருக்கும் மணி தம் குழந்தைக்கு நல்ல விளையாட்டுப் பொருளாயிருக்கும் என்று நினைத்தார்.

உடனே மஹா பலசாலியான அவர் சிங்கத்தோடு சண்டை போட்டு அதைக் கொன்று விட்டார். மணியை எடுத்துக்கொண்டு போய்க் குழந்தையின் தொட்டிலுக்கு மேலே பொம்மையும் கிளிச்சட்டமும் கட்டித் தொங்க விடுகிறது போல ஸ்யமந்தகத்தைக் கட்டி வைத்தார். (வாலி தன் பிள்ளை அங்கதனுடைய தொட்டிலுக்கு மேலே ராவணனையே 'பத்து தலைப் பூச்சி' என்று சொல்லிக் கட்டி வைத்தானாம்!)

கண்ணைப் பறிக்கிற ஸ்யமந்தகத்தின் ஜொலிப்பும் கரடிக் குழந்தையானதால் அதற்குக் கூசவில்லை. நம்மகத்துக் குழந்தைக்கு டார்ச்லைட் அடித்துக் காட்டினால் வேடிக்கை யாயிருக்கிற மாதிரிதான் கரடிக் குழந்தைக்கு மணி இருந்தது போலிருக்கிறது!

கண்ணன் கண்ட நாலாம் பிறை

(பிள்ளையார் ஸமாசாரம் ஸ்யமந்தக உபாக்யானத்தில் சேர்கிற) ஸ்காந்தக் கதையில் இங்கே ஒரு புது விஷயம் வருகிறது. இந்த 'வெர்ஷன்'படி ப்ரஸேனன், க்ருஷ்ணன் இரண்டு பேரும் சேர்ந்து வேட்டைக்குப் போனார்கள் என்று முன்னேயே சொன்னேன்.

Koviloor Digital Library

அப்புறம் ப்ரஸேனன் தனியாக எங்கேயோ பிரிந்து போய் சிங்கத்தினுல் அறையப்பட்டுச் செத்துப் |போனுன். மணி ஜாம்பவானிடம் முடிவாகப் போய்ச் சேர்ந்தது.

ப்ரஸேனனைக் காணுேமே, காணுேமே என்று பகவான் ரொம்ப நாழி தேடிப் பார்த்தார். ஸூர்யாஸ்தமனம் ஆனது கூடத் தெரியாமல் தேடிக்கொண்டேயிருந்தார். அஸ்தமனத்துக்குக் கொஞ்ச நாழி கழித்து, அகஸ்மாத்தாக அவர் ஆகாசத்தைப் பார்த்தபோது அங்கே பளிச்சென்று நாலாம் பிறைச் சந்திரன் தெரிந்தது.

அமாவாஸ்யைக்கு அப்புறம் குறிப்பாகப் பளிச்சென்று தெரிவது நாலாம் பிறைதான். மூன்றும் பிறை என்பது காலை சுமார் எட்டு மணிக்கு உதித்து ராத்திரி எட்டு மணிக்குள் அஸ்தமித்துவிடும். ஸாயங்காலம் ஆறு மணி ஸுமாருக்கு ஸூர்யாஸ்தமனம் ஏற்படும்வரை, ஸூர்ய வெளிச்சத்திலே பிறை தெரியவே தெரியாது. Twilight என்கிற ஸந்த்யா வர்ணஜாலம் அடங்கும் ஆறரை ஏழு மணி ஸுமாருக்கு மூன்றும் பிறை மேற்கே ரொம்பவும் கீழே சாய்ந்திருக்கும். அதனுல் கவனமாகப் பார்த்தாலே தெரியும். நாலாம் பிறை இப்படியில்லை. அது கார்த்தாலே ஒன்பது மணி ஸுமாருக்கு உதித்து ராத்ரி ஒன்பதுக்கு அஸ்தமிப்பது. அதனுல் ராத்ரி ஏழு, ஏழரை மணிக்குத் தலையை 'நாச்சுரலாக' ஒரு 30, 40 டிகிரி உசத்திப் பார்க்கிறபோது அது டக்கென்று கண்ணில் பட்டுவிடும். இப்படித்தான் க்ருஷ்ணர் பார்த்தார்.

உடனே, "ஸரி, இருட்டி விட்டதே! இன்னம் காட்டிலே தேடிக்கொண்டிருக்க வேண்டாம்" என்று நினைத்து, கூட வந்தவர்களோடு த்வாரகைக்குத் திரும்பி விட்டார்.

ஐயத்துக்கு ஆளான ஐயன்

ப்ரஸேனன் வேட்டையிலிருந்து திரும்பி வராததைப் பார்த்தவுடன் ஸத்ராஜித்துக்கு க்ருஷ்ணரிடம்தான்

Koviloor Digital Library

ஸந்தேஹம் உண்டாயிற்று. ஸந்தேஹமென்று சொன்னால் போதாது; நன்றாக confirmed ஆகவே, 'க்ருஷ்ணன்தான் காட்டிலே தம்பியை மடக்கிக் கொன்று போட்டிருக்கிறான்' என்று தோன்றிவிட்டது. பாகவதத்தின்படி, க்ருஷ்ணன் ப்ரஸேனனோடு போகாவிட்டாலும் ஆளைவிட்டு அவனைக் கொன்றதாக நினைத்தான். 'ஏற்கனவே ஸ்யமந்தகத்தின் மேலே ஒரு கண் வைத்திருந்தான்! ப்ரஸேனன் அதைப் போட்டுக் கொண்டு காட்டுக்குப் போனது நல்ல வாய்ப்புக் கொடுத்து விட்டது. வேட்டைக்குப் போனவன் திரும்பி வராவிட்டால் ஏதோ துஷ்ட மிருகம் அடித்துப் போட்டு விட்டது என்று ஊரார் நினைத்துக் கொள்வது ஸஹஜம் தானே? அப்படி இதையும் நினைத்துக் கொண்டு போகட்டு மென்று க்ருஷ்ணனேதான் ஆட்களை அனுப்பி அவனைத் தீர்த்துக் கட்டிவிட்டு, மணியைத் தன்னிடம் அவர்கள் சேர்ப்பிக்கும்படி ஏற்பாடு பண்ணியிருக்கிறான்' என்று முடிவு செய்துவிட்டான்.

ஸாக்ஷாத் பரமாத்மாவே நராகாரமாக அவதாரம் பண்ணினால் மநுஷ்யர்களுக்கு ஏற்படுகிற எல்லாக் கஷ்டங் களும் அவருக்கும் வருகின்றன! அபவாதம்கூட வருகிறது! மநுஷ்யர்களோடு மநுஷ்யனாகக் கஷ்டங்களுக்கு ஆளாகிற மாதிரி இருந்து கொண்டே அதன்மூலம் அவர்களுக்கு அநேக பாடங்களை போதிக்கவேண்டுமென்பதுதான் அவதார ரஹஸ்யம்.

"க்ருஷ்ணன் ப்ரஸேனனைக் கொலை பண்ணியிருக்கிறான்; மணியைத் திருடிக்கொண்டு எங்கேயோ ஒளித்து வைத்திருக் கிறான்" என்று நிரபராதியான பகவான் மேல் ஸத்ராஜித் இரண்டு க்ரிமினல் குற்றங்களைச் சுமத்தினான். எங்கே பார்த் தாலும் இந்த மித்யாபவாதத்தை (பொய்யான நிந்தை யை)ப் பரப்பினான்.

ஊர்வாய் பொல்லாதது. ஜனங்கள் மனஸ் சாஞ்சல்யம் (சஞ்சலத்தன்மை) வாய்ந்தது. ஒருநாள் 'ஹாஹா' என்று

Koviloor Digital Library

தலைக்கு மேலே தூக்கி வைத்துக் கொண்டு கொண்டாடுகிற தலைவர்களை இன்னொரு நாள் சீந்தாமலே தூக்கி எறிவதை ப்ரக்ருதத்திலே (நடைமுறையில்) பார்க்கிறோமல்லவா? என்றைக்குமே கொஞ்சம் இப்படித்தான் இருந்திருக்கிறது. எந்த க்ருஷ்ணனால்தான் கம்ஸாதிகளின் கொடுமையிலிருந்து தப்பி யதுகுலம் ஸகல ஸந்துஷ்டியும் ஐச்வர்யமும் அடைந்ததோ, எவனுடைய கருணைதான் எந்த ஆபத்திலும் அவர்களை ரக்ஷித்ததோ, அந்த க்ருஷ்ணனையே, அவனுடைய அந்த ஸொந்த ஜனங்களிலேயே பல பேர் இப்போது ஸத்ராஜித்தோடு சேர்ந்து கொண்டு அபாண்டமாகப் பேச ஆரம்பித்தார்கள். "குழந்தை நாளிலேயே வெண்ணெய் திருடினவன்தானே? திருடும், கபடும் அவன் தேஹத்தோடு பிறந்தவை. இதுவும் பண்ணியிருப்பான், இன்னமும் பண்ணியிருப்பான்" என்று வாய்கூசாமல் நிந்தித்தார்கள். காளிங்கனிடமிருந்து காப்பாற்றியது, கோவர்தனத்தைத் தூக்கிப் பிடித்து ப்ரளய வர்ஷத்தைத் தடுத்தது எல்லாம் மறந்தே போய்விட்டது!

தான் மனஸாலும் நினைக்காத குற்றத்தைத் தன்மேல் தன்னைச் சேர்ந்தவர்களே சுமத்துகிறார்களே என்று பகவான் மனக்லேசம் அடைந்தார்—அதாவது அப்படி நடித்தார். மநுஷ்யனைப் போல மனக்லேசம் அடைந்ததற்குப் பொருத்தமாக, தமது ஐச்வர்யமான (ஈச்வரத் தன்மைக்குரிய) ஸர்வஜ்ஞத்தையும் விட்டமாதிரி நடித்தார். (எதையும் தன்னால் அறியும்) ஸர்வஜ்ஞத்வத்தைக் காட்டாமல் மநுஷ்யர்கள் மாதிரியே 'இன்வெஸ்டிகேட்' செய்து ப்ரஸேனன் எப்படிச் செத்துப் போனான் என்று எல்லாருக்கும் 'ப்ரூவ்' பண்ணிக் காட்டுவது என்று முடிவு செய்தார்.

கண்ணன் துப்பறிந்தார் !

அதன்படி க்ருஷ்ணர் ஸத்ராஜித்தின் பக்ஷமாயிருந்தவர்களில் சிலரையும் தம்மோடு அழைத்துக்கொண்டு ப்ரஸேனன் போன காட்டுக்குப் போனார். அவனுடைய குதிரையின் குளம்படியையே பின்பற்றி எல்லாரும் போனார்கள். ரொம்ப

Koviloor Digital Library

தூரம் போனதும் ஒரு இடத்துக்கு மேலே அடிச்சுவடு போகவில்லை. அந்த இடத்தில் ஒரே ரத்தக் கறையாக இருந்தது. கொஞ்சம் எலும்புத் துண்டுகளும் கிடந்தன. மநுஷ்ய அவயவங்கள், குதிரையின் அவயவங்கள் ஆகிய இரண்டிற்குமான அஸ்திகளாக அவை இருந்தன. ப்ரஸேனன் உடுத்திக் கொண்டிருந்த வஸ்திரத்தின் கிழிசல், அவனுடைய ஆபரணத் துண்டுகள், குதிரையின் லகான், சேணம் முதலானதுகளின் அறுதல்கள் எல்லாம் சிதறுண்டு கிடந்தன. இந்தத் தடயங்களிலிருந்து ஒரு துஷ்ட மிருகம்தான் ப்ரஸேனன், அவனுடைய குதிரை ஆகிய இரண்டு பேரையுமே அடித்துப் போட்டிருக்கிறது என்று எல்லாருக்கும் தெரிந்து விட்டது. மநுஷ்யர்களை வைத்து பகவான் அடித்துப் போட்டிருந்தால் இப்படி ஏதோ கொஞ்சம் அஸ்தி இருந்த மாதிரி இல்லாமல், அழுகிப்போன முழு உடம்புகளுமல்லவா இருந்திருக்கும்?

ஆனால் இதை எப்படி conclusive proof (தீர்மானமான நிரூபணம்) என்று சொல்வது? முதலில் மநுஷ்யர்கள் அடித்துப் போட்டுவிட்டு, அப்புறம் அந்த ம்ருத சரீரங்களை புலி, சிங்கம் எதுவாவது தின்றிருக்கவும் கூடுமல்லவா?

இப்படி, கூடப் போனவர்களின் ஸந்தேஹ மனஸ் நினைத்தது. அதோடுகூட, மற்ற ஆபரணங்கள் உடைந்து கிடைந்து காணப்பட்டாலும், முக்யமான ஸ்யமந்தகத்தைக் காணுமே? இது ஸந்தேஹத்துக்கு பலம் கொடுத்தது.

இந்த ஸமயத்தில் நல்ல வேளையாக பகவான் அங்கே சிங்கம் வந்துவிட்டுப் போன அடையாளங்கள் பதிந்திருப்பதைக் கவனித்தார். "அந்த வழியில் போகலாம்; எங்கு கொண்டு போய்விடுகிறது பார்ப்போம்; அதிலிருந்து மேலும் 'க்ளு' கிடைக்கலாம்" என்று மற்றவர்களையும் அழைத்துக் கொண்டு ஸிம்ஹம் போன வழியிலே போனார்.

கொஞ்சதூரம் போனதும் சிங்கத்தின் ப்ரேதம் கிடந்தது. நம் தேசத்துக் கரடி மாம்ஸபக்ஷிணி இல்லையோல்

Koviloor Digital Library

லியோ? அதுவுமில்லாமல் மாம்ஸபக்ஷிணிகள்கூட, ஆடு, மாடு, மான், முயல் முதலான சாகபக்ஷிணிகளைத்தான் தின்னுமே தவிர இன்னொரு மாம்ஸபக்ஷிணியைத் தின்னாது.

சிங்கத்தின் உடம்பு கிடந்த இடத்திலேயே, ஒரு கரடி யின் காலடி பூமியில் அழுத்தமாகப் பதிந்திருந்தது. சிங்கம் முதலான மற்ற எந்த மிருகங்களையும்விட கரடிக்குப் பாதம் பெரிசு. அதோடு, மற்ற எந்த மிருகம் மாதிரியுமில்லாமல் கரடியும் மநுஷ்யக் குரங்கும் மாத்திரம் இரண்டு கால் களாலே மநுஷன் மாதிரி நிற்கக்கூடியவை அல்லவா? அதனாலே உடம்பு 'வெயிட்' முழுக்கத் தாங்குகிற இரட்டைப் பாதத்தின் சுவடு பூமியில் நன்றாகப் பதிந்துவிடும். அதிலே யும் மஹா பலசாலியான ஜாம்பவானுடைய உடம்பு என்றால் கேட்பானேன்?

அதனாலே, அதற்கப்புறம் ஸுலபமாகக் கரடியின் சுவட்டைப் பின்பற்றிக்கொண்டே பகவானும் மற்ற ஜனங் களும் போனார்கள். அது ஒரு குஹை வாசலில் கொண்டு விட்டது. குஹைபாட்டுக்கு ஒரே இருட்டாக, எங்கே முடி கிறதென்றே தெரியாமல் நீளக்கப் போய்க் கொண்டே யிருந்தது. அதிலே போவதற்கே மற்ற ஜனங்களுக்கு பயமா யிருந்தது. அவர்கள் ஏற்கெனவே அவரை ஸந்தேஹித்தவர் கள் வேறு ஆயிற்றே! அதனால், 'என்ன நாடகமோ நடித்துக் கடைசியில் நம்மைக் குஹையிலே தள்ளி ஆபத் துக்கு ஆளாக்கிவிடப் போகிறானே!' என்று நினைத்தார்கள்.

க்ருஷ்ணரின் ஸ்வபாவமோ என்றால் பிறத்தியாரை ஆபத்துக்குக் காட்டிக் கொடுக்காமல் தாமே அதை ஏற்றுக் கொள்வதுதான். ஆபத்பாந்தவனாகவே இருப்பவர் அவர். அதனாலே, கூட வந்தவர்களை குஹைக்கு வெளியிலேயே இருக்கும்படிச் சொல்லிவிட்டு அவர் மட்டும் அதற்குள்ளே போனார். நீல ஜ்யோதிஸ்ஸாக அவருடைய சரீரமே ப்ரகா சிக்க அந்த வெளிச்சத்திலேயே இருட்டு குஹைக்குள் போனார்.

Koviloor Digital Library

ரொம்ப தூரம் போன பிற்பாடு திடீரென்று குஹை மத்தியில் நல்ல வெளிச்சமாக ஒரு இடம், விஸ்தாரமான ஹால் மாதிரி இருப்பதைப் பார்த்தார்.

வெளிச்சத்துக்குக் காரணம்—உங்களுக்கே புரிகிற தோல்லியோ?—ஸ்யமந்தக மணிதான்!

அந்த விஸ்தாரமான அங்கணம் நல்ல வாஸ யோக்ய மான ஒரு க்ருஹம் மாதிரி எல்லா வசதியும் கொண்டதாக இருந்தது. நடுப்புற (நடுவில்) ஒரு தொட்டில் போட்டிருந் தது. தொட்டிலில் ஒரு குழந்தை படுத்துக்கொண் டிருந்தது தொட்டிலுக்கு மேலேதான், அந்தக் கரடிக் குழந்தைக்கு விளையாட்டு ஸாமானாக திவ்ய ரத்னமான ஸயமந்தகத்தைக் கட்டித் தொங்கவிட்டிருந்தது!

இதெல்லாம் கண்ணுக்குத் தெரிவதற்கு முந்தியே ஏதோவொரு வெளிச்சம் மட்டும் பகவானுக்குத் தெரிந்தது. மதுரமான பாட்டு சப்தமும் மெதுவாக அவர் காதில் கேட்டது. இப்போது கிட்டே போனதில், நன்றாகவே பாட்டு கேட்டது.

ஸெளந்தர்யவதியான ஒரு கன்னிகை தொட்டிலை ஆட்டிக் கொண்டே பாடிக் கொண்டிருந்தாள்.

ராமாயண - பாகவதாதிகளில் சொல்லியிருக்கும் ருக்ஷ (கரடி) - வானரங்கள் மநுஷ்யாள் மாதிரியே பேசிப் பாடிய உயிரினங்களாகத் தெரிகின்றன. அதுகளில் சிலபேரை, முக்யமாக ஸ்த்ரீகளை, ரொம்பவும் அழகாக இருந்ததாக வர்ணித்திருப்பதிலிருந்து பார்வைக்குக்கூட மநுஷ்ய இனம் மாதிரியும் அவற்றில் சில இருந்திருப்பதாகத் தெரிகிறது. பூர்ண மநுஷ்ய ஜாதியும், அதற்கு 'இவால்வ்' ஆகிக்கொண் டிருந்த (பரிணமித்துக் கொண்டிருந்த) இனங்களும் சேர்ந்து இருந்த காலமாயிருக்கலாம் என்று டார்வின் - கொள்கைக் காரர்கள் சொல்லக்கூடும்.

அவள் பாடினது ஏற்கெனவே இருந்த தாலாட்டு இல்லை. அவளே இட்டுக் கட்டிப் பாடிக்கொண்டிருந்தாள்.

Koviloor Digital Library

"க்ஞு' தேடிக்கொண்டு வந்த பகவானுக்கு, ஏதோ கொஞ்சம் கோடி காட்டுவதாக மட்டுமில்லாமல் நடந்ததை முழுக்கத் துப்புத் துலக்கித் தருவதாகவே அந்தப் பாட்டு இருந்தது.

எனக்குப் பாடத் தெரியாது;* ச்லோகமாக ஒப்பிக்கிறேன்.

ஸிம்ஹ : ப்ரஸேநம் அவதீத் ஸிம்ஹோ ஜாம்பவதா ஹத : |
ஸுகுமாரக மா ரோதீ: தவ ஹ்யேஷ ஸ்யமந்தக : ||

இது பாகவதத்தில் இல்லை. விஷ்ணு புராணத்திலும் ஸ்காந்தத்திலும்தான் இருக்கிறது.

என்ன அர்த்தமென்றால், "சிங்கம் ப்ரஸேனனைக் கொன்றது. அப்புறம் அந்த சிங்கமும் ஜாம்பவானால் கொல்லப்பட்டது. ஸுகுமாரன் என்று பெயருள்ள குழந்தையே! இனிமேலே நீ அழவேண்டாம். ஸ்யமந்தகமணி உனக்கே உனக்குத்தான்."

"உனக்கே உனக்கு" என்று அவள் நினைத்துக்கொண்டிருந்தாள்! பகவான் என்ன நினைத்துக் கொண்டிருந்தானென்று அவளுக்கு எப்படித் தெரியும்?

அந்த பகவான் மநுஷ்யன் மாதிரி—அதிலேயும் ஊர் நிந்தையையெல்லாம் வாங்கிக் கட்டிக்கொண்ட 'இளிச்சவாய்' மநுஷ்யன் மாதிரி—உள்ளே ப்ரவேசித்தார். நிந்தையைப் போக்கிக் கொள்ளும்படியான உண்மை இப்போது அவருக்கு தெரிந்துவிட்டது.

அவரைப் பார்த்தவுடன் அந்த ஸௌந்தர்யவதிக்கு ஒரே ஸமயத்தில் ப்ரேமையும் பயமும் பொங்கிக்கொண்டு வந்தன. பயம் என்றால் அவரிடம் இல்லை; அவருக்காக பயம்!

மணியும் பெண்மணியும்

அந்தப் பெண் யாரென்றால் ஜாம்பவானுடைய புத்ரிதான். அப்பாவின் பெயரையொட்டி அவளுக்கு

* இது ஸ்ரீசரணர்கள் அடக்கமாகவும் ஹாஸ்யமாகவும் கூறியது. அவர்கள் இசைக்கலையிலும் வல்லுநர்கள்தாம்.

Koviloor Digital Library

ஜாம்பவதி என்று பெயர். 'யாருமே வரமுடியாததாக அப்பா அமைத்திருக்கிற குஹை வீட்டுக்குள் இந்த லாவண்ய மூர்த்தி வந்து விட்டாரே; அப்பா கோபித்துக்கொண்டு இவரை என்ன பண்ணிவிடுவாரோ?' என்று பயப்பட்டாள்.

அந்த ஸமயத்தில் ஜாம்பவான் நன்றாகத் தூங்கிக் கொண்டிருந்தார். அதனால் ஜாம்பவதி ரஹஸ்யக் குரலில் க்ருஷ்ணரிடம், அவர் யார், என்ன கார்யமாக வந்திருக்கிறாரென்று சுருக்கமாகப் பதில் சொல்லும்படிக் கேட்டாள்.

பகவான் அப்படியே சொன்னார்.

உடனே அவள், "இங்கே நீங்கள் வந்ததற்கே என் பிதா கோபப்படுவார். ஸ்யமந்தகத்தை வேறே நீங்கள் யாரோ ஒருத்தருக்காக எடுத்துக் கொண்டுபோக நினைக்கிறீர் களென்று அவருக்குத் தெரிந்தால் எரிகிற கொள்ளியில் எண்ணெய் விட்ட மாதிரி ஆகும். அதனால் இப்போதே நீங்கள் சத்தம் செய்யாமல் அதைக் கழற்றி எடுத்துக் கொண்டு ஓடிப்போய்விடுங்கள்" என்றாள்.

அவரைப் போகச் சொல்வதற்கு அவளுக்கு மனஸ் இல்லைதான். இருந்தாலும் அப்பாவால் அவருக்கு ஹானி உண்டாகிவிடப்போகிறதே என்பதால், அவரிடம் கொண்ட ப்ரேமையாலேயே உண்டான த்யாக எண்ணத்தில் இப்படிச் சொன்னாள்.

பகவானிடம் ப்ரேமை கொண்ட ஒரு பெண்—ருக்மிணி— தன்னையே அவர் எடுத்துக்கொண்டு ஓடிப்போய்விட வேண்டு மென்று தூது அனுப்பினாள். இந்தப் பெண்ணோ, ஸ்திரீகளுக்கு இருக்கிற நகை ஆசையைக்கூட விட்டு, லேசிலே கிடைக்காத திவ்யமணியை அவர் எடுத்துக்கொண்டு ஓடிவிட வேண்டு மென்று ப்ரார்த்தித்துக் கொண்டாள்.

பகவானோ ரஹஸ்யத்தைக் காப்பாற்றாமல் கலகல வென்று சிரித்தார். "போதும் போதும், எனக்கு ஏற்கெனவே ஏற்பட்டிருக்கிற திருட்டுப் பட்டங்கள். ஸத்ராஜித்தின் வாயிலிருந்து தப்ப வழிகிடைத்ததே என்று நான் இப்போது தான் ஸந்தோஷப்பட்டேன்; நீயானால் உன் அப்பாவின்

Koviloor Digital Library

வாயில் விழச் சொல்கிருய். ஒன்று அவரே ஸ்யமந்தகத்தை இஷ்டப்பட்டுத் தரட்டும். அல்லது அவருடன் நேரே யுத்தம் பண்ணி ஜயித்து அதை எடுத்துக்கொண்டு போகிறேன்" என்ருர்.

"அப்பா குணம் எனக்குத் தெரியும். 'கரடிப்பிடி' என்று அவர் தமக்குக் கிடைத்த பண்டத்தைக் கொடுக்கவே மாட்டார். அதுவும் வயஸுக்காலத்தில் பிறந்த செல்லக் குழந்தைக்காக அவர் ஸம்பாதித்து வந்திருக்கும் அபூர்வ மான மணியை ஒருநாளும் இஷ்டப்பட்டுக் கொடுக்க மாட்டார். ஆனதினுல், நீங்கள் நேர்வழியில்தான் வாங்கிக் கொள்வீர்களென்ருல், அவருக்கு முன்னுல் கைநீட்டி யாசித்துத் தோற்றுப்போக வேண்டாம். யுத்தத்திலேயே ஆரம்பியுங்கள்" என்ருள் ஜாம்பவதி. அவருடைய மானுவ மானங்களில் தனக்கும் பங்கு இருப்பதாக நினைக்கிற அளவுக்கு அவளுக்கு அவரிடம் சுத்தமான ப்ரேமை உண்டாகியிருந்தது.

உடனே இதுவரையில் இந்தக் கதையில் ஊர் அபவாதத்தை வாங்கிக் கட்டிக்கொண்டு சோப்ளாங்கி மாதிரியிருந்த பரமாத்மா மஹா கம்பீரமாகச் சங்கை யெடுத்து 'பூம் பூம்' என்று கோஷம் பண்ணினுர்.

சண்டையில் ஸ்பரிச இன்பம்

ஜாம்பவான் விழித்துக் கொண்டார். க்ருஷ்ணரின் உத்தேசத்தைத் தெரிந்து கொண்டவுடன், "அப்படியா ஸமாசாரம்? என்னை என்னவோ, 'கிழட்டுக் கரடி, ஸுலபமாய் ஜயித்து விடலாம்' என்று நினைத்துச் சண்டைக்கா அழைக்கிருய்? பார் இந்தக் கிழட்டுக் கரடியின் பராக்ரமத்தை" என்று தோளைத் தட்டிக்கொண்டு பாய்ந் தார்.

வாஸ்தவமாகவே ரொம்பவும் வலுவாகத்தான் அவர் பகவானைத் தாக்கினுர். பகவான் அதை அநாயாஸமாகப்

Koviloor Digital Library

பொறுத்துக் கொண்டு பதிலடி கொடுத்தார். ஜாம்பவானின் வீரமும் பலமும் லோகத்துக்கெல்லாம் தெரியவேண்டு மென்ற கருணையில் பகவான் தம்முடைய பூர்ணசக்தியை வெளிப்படுத்தாமலே அவரைத் தாக்கி, அவர் எதிர்த் தாக்குதல் பண்ணவைத்தார்.

தம்முடைய ஆராதனு மூர்த்தியான ராமசந்த்ர மூர்த்தியேதான் எதிரே நிற்பவரென்று தெரியாமல் ஜாம்பவான் ஸாஹஸ யுத்தம் செய்கிருர்! விஷயம் நன்ருகத் தெரிந்தும் அவரை மிஞ்சாமல் அவருக்கு ஸமபலத்திலேயே தம்மைக் கட்டுப்படுத்திக்கொண்டு பகவானும் யுத்த விளையாட்டு விளையாடுகிருர்! இவர் யுவராகவும் அவர் கிழவராகவுமிருந்தாலும், 'நம் குழந்தையின் சூரத்தனம் எப்படிப்பட்டது என்று நாமே அடி வாங்கிக்கொண்டு அநுபவ ஞானத்தோடு ரஸிக்கலாமே' என்று நினைக்கிற தகப்பனுராக விளையாடுகிருர்!

கைகலந்தும், கட்டிப் புரண்டும் சண்டை போட்டார் கள். இப்படித் தம்முடைய திவ்ய சரீர ஸ்பர்சம் அந்தப் பரம பக்தருக்குக் கிடைக்கும்படியாகப் பண்ண வேண்டு மென்பதுதான் பகவானின் உத்தேசமே! ராமாவதார காலத்தில் ஜாம்பவானுக்கு ரொம்ப ஆசை, பகவானை ஆலிங்கனம் பண்ணிக்கொள்ள வேண்டுமென்று. ஆனுல் அதை வெளியே சொல்லிக் கொள்ளக் கூச்சம். ராமருடைய சரீரம் எப்படியிருக்கும்? ஸில்க்குக்கு மேலே ம்ருதுவாயிருக் கும். பரம ம்ருதுவான அவருடைய கருணை உள்ளமேதான் அப்படி பச்சை வெல்வெட் மாதிரியான சரீரமாக ஆகி யிருந்தது. 'அப்படிப்பட்ட உடம்பை இந்தக் கரடி உடம்பை வைத்துக் கொண்டு ஆலிங்கனம் பண்ண நினைப்பதா?' என்றே ஜாம்பவான் தம்முடைய ஆசையை அடக்கி வைத்துக் கொண்டிருந்தார். அப்படியே இவர் ஆசைப் பட்டிருந்தால்கூட ராமர், எத்தனைதான் கருணுமூர்த்தி என்ருலும் அதற்கு ஒப்புக் கொண்டிருக்கமாட்டார். ஏனென்ருல் தம் சரீரத்தை மாத்திரம் அவர் ஸீதை

Koviloor Digital Library

ஒருத்திக்கே ஸொத்து என்று கொடுத்து விட்டவர். அவரைப் போல ஏகபத்னி வ்ரதாநுஷ்டானத்தில் தீவிரமாயிருந்தவர் யாருமில்லை. ஜாம்பவான் மட்டுந்தானென்றில்லை, எல்லா ஆசைகளையும் விட்ட தண்டகாரண்ய ரிஷிகளுக்கே ராமருடைய திவ்ய மங்கள மூர்த்தியைப் பார்த்தவுடன் அப்படியே சேர்த்துப்பிடித்து - 'சிக்கெனப் பிடித்தேன்' என்கிறதுபோல - கட்டிக் கொள்ளணும் போலத்தான் இருந்ததாம். அவர்கள் நல்ல யோக்யதையுள்ளவர்களாதலால், ஜாம்பவான் மாதிரி தயங்காமல், ராமரிடமே போய்த் தங்களுடைய ஆசையை விஞ்ஞாபித்துக் கொண்டார்களாம். அப்போது ராமர், "இந்த அவதாரத்திலே இந்த சரீரத்தில் ஸீதை ஒருத்திக்குத்தான் பாத்யதை. அதனால் அடுத்த அவதாரத்திலே உங்கள் ஆசையைத் தீர்த்துவைக்கிறேன்" என்று சொல்லிவிட்டாராம். அந்த ரிஷிகள்தான் க்ருஷ்ணாவதாரத்தில் கோபிகா ஸ்த்ரீகளாகப் பிறந்தார்கள் என்று சொல்வதுண்டு.

ரிஷிகள் ஸமாசாரம் இது. கரடி ஸமாசாரம் என்ன ஆவது? கரடியைத்தான் ராமர் சிரஞ்ஜீவியாக்கிவிட்டாரே! அது எப்படி ரிஷிகள் மாதிரி இன்னொரு ஜன்மா எடுத்து க்ருஷ்ணாவதாரத்தில் தன் ஆசையைப் பூர்த்தி பண்ணிக் கொள்ள முடியும்? இப்போதும் அது, ராமர்தான் க்ருஷ்ணராக வந்திருப்பது என்று தெரிந்து கொண்டால்கூட, 'இந்தக் கம்பளி உடம்பை வைத்துக்கொண்டு அந்தப் புஷ்ப சரீரத்தை ஆலிங்கனம் செய்துகொள்வதாவது?' என்று ஆசையை அமுக்கித்தானே வைத்துக்கொள்ளும்? அதனால் அதன் இஷ்ட பூர்த்திக்கு ஒரே வழி சண்டையில் கட்டிக் கொண்டு புரளும்படிப் பண்ணுவதுதான் என்று பகவான் 'ப்ளான்' பண்ணி வைத்திருந்தார். மநுஷ்ய லீலைக்குள்ளேயே இப்படி ரஹஸ்யமாக அநேக திவ்ய உத்தேசங்கள்!

இப்படியேதான் அர்ஜுனன் உபாஸித்து வந்த பரமேச்வரனும் கிராத (வேட) வேஷத்தில் அவனோடு கட்டிப்

Koviloor Digital Library

புரண்டு சண்டை பிடிக்கும் வியாஜத்தில் அங்கஸங்க பாக்யத்தைக் கொடுத்தார்.

நாள் பாட்டுக்கு ஒன்று, இரண்டு என்று ஓடிக்கொண்டிருந்தது. வெற்றி தோல்வி இல்லாமல் க்ருஷ்ணரும் ஜாம்பவானும் யுத்தம் செய்துகொண்டிருந்தார்கள். கொஞ்சநாள் வரையில் வெளியில் காத்துக்கொண்டிருந்த யாதவ ஜனங்கள், 'இன்னம் எத்தனை நாள் வீடு வாசலை விட்டுவிட்டுக் காட்டிலே காத்துக்கொண்டு கிடப்பது. உள்ளே போன க்ருஷ்ணன் கதை முடிந்து போயிருக்கும். நாம் ஆபத்தில் சிக்கிக் கொள்ளவேண்டாம்' என்று த்வாரகைக்குத் திரும்பிவிட்டார்கள். மநுஷ்ய ஜாதியின் நன்றி விச்வாஸம் அவ்வளவுதான்!

குகைக்குள்ளே இருபத்தோரு நாள் த்வந்த்வ யுத்தம் நடந்தது. அத்தனை நாளுக்குள்ளேயே ஜாம்பவானுக்கு அசக்தம் வந்துதான் விட்டதென்றாலும், அந்த நீலமேக ச்யாமள காத்ரம் தம்மேல் படுவதில் தமக்கே காரணம் தெரியாத ஒரு பெரிய ஸௌக்யத்தை அவர் அநுபவித்ததால் தான் ஒருமாதிரி ஈடுகொடுத்து வந்தார். இப்போது, முழுசாக மூன்று வாரம் ஆன பிறகு ஜாம்பவானால் அதற்கு மேல் தாக்குப் பிடிக்க முடியவில்லை. ராமசந்த்ர மூர்த்தியின் அநுக்ரஹ பலமே தம் பலம் என்று நன்றாகத் தெரிந்து கொண்டவர் அவர். 'ராமா, ராமா' என்று சொல்லிக் கொண்டேதான் அவனுடைய அடுத்த அவதாரத்தை அடித்துக் கொண்டிருந்தார்!

'அந்த அநுக்ரஹ பலத்தையும், நாமாவின் சக்தியையும் மிஞ்சித் தம்முடைய வலுவை எதிரேயிருக்கிற ஆஸாமி குன்ற வைக்கிறானென்றால், அவன் யார்? யாராயிருக்க முடியும்? அவனுடைய ஸ்பர்சம் ஏன் இத்தனை இன்பமாயிருக்கிறது?' என்று கொஞ்சம் யோசித்தார்.

பளிச்சென்று புரிந்துவிட்டது.

Koviloor Digital Library

'இந்த விளையாட்டையே இன்னம் எத்தனை நாள் விளையாடுவது? இன்னம் எத்தனையோ விளையாட்டெல்லாம் விளையாடியாகணுமே!' என்று பகவானேதான் ஜாம்பவானுக்கு உண்மையைப் புரியவைத்தாரென்று சொல்லலாம்.

'அடாடா! என்ன அபசாரம் பண்ணிவிட்டோம்? தேடிக்கொண்டு இந்தக் காட்டுக்குஹைக்கு வந்திருக்கிற நம்முடைய உபாஸனு மூர்த்தியையே இப்படி அநியாயமாக அடித்துப் புடைத்துவிட்டோமே' என்று ரொம்பவும் பச்சாத்தாபத்தில் மனஸ் உருகினுர் ஜாம்பவான். பகவானின் காலில் விழுந்து மன்னிப்புக் கேட்டுக்கொண்டார்.

அடிப்பதை 'பூசை கொடுப்பது' என்கிற வழக்கமிருக்கிறது. யாரைப் பூஜிக்கவேண்டுமென்று ஜாம்பவான் நினைத்துக் கொண்டிருந்தாரோ அவரையே சாத்து சாத்து என்று சாத்தியதில்தான் இந்த வசனம் பிறந்ததோ என்னவோ?

காலில் விழுந்த பக்தரை பகவான் தட்டிக்கொடுத்து அன்போடு க்ஷமித்து ஆச்வாஸம் பண்ணினுர்.

மணியில் விளைந்த திருமணங்கள்

ஜாம்பவான் அவரிடம், "நானே உங்கள் உடைமைதான். ஆனதால், உங்களுக்கில்லாமல் எனக்கென்று எந்த உடைமையும் கிடையாது. உங்களுடையதேயான ஸ்யமந்தக மணியை உங்களுக்கே திரும்பவும் அர்ப்பணம் பண்ணுகிறேன். அதோடு கன்யாமணியான இந்த ஜாம்பவதியையும் தாங்கள் அங்கீகாரம் செய்துகொள்ளவேணும்" என்று விஞ்ஞாபித்துக் கொண்டார்.

பெண்மணி, நாரீமணி என்பதாக ஸ்திரீகளை ரத்னத்தோடு வைத்து உயர்த்திச் சொல்கிற வழக்கமிருக்கிறதல்லவா?

ஜாம்பவதியின் அபிலாஷையும் பூர்த்தியாயிற்று. பகவான் ஸ்யமந்தகத்தோடு, அவளையும் ப்ரீதியுடன் பத்னியாக ஏற்ருர்.

Koviloor Digital Library

த்வாரகைக்குப் புது பத்னியோடும், தம் மீதான பழி திரும்படி ஸ்யமந்தகத்தோடும் திரும்பி வந்தார் பகவான்.

முதல் கார்யமாக அந்த மணியை ஸத்ராஜித்திடம் சேர்ப்பித்துவிட்டார்.

ப்ரஸேனன் சிங்கத்திடம் தன் உயிரோடு சேர்த்துப் பறி கொடுத்த மணியை, அப்புறம் அந்த சிங்கத்திடமிருந்து இன்னொருவர் அடைய, அந்த ஒருவரை இவர் யுத்தத்தில் ஜயித்தே மணியைப் பெற்றதால் சட்டப்படி அதை இவரே வைத்துக் கொள்ள நியாயமிருந்தது. ஆனால் பொருள் பற்று பகவானுக்கு எள்ளளவும் இல்லாதலால், தாம் குற்றவாளி அல்ல என்று ஸமஸ்த ஜனங்களுக்கும் இப்போது நிரூபித்துக் காட்டியதோடு த்ருப்தியடைந்து விட்டார். உதார மனஸோடு மணியை ஸத்ராஜித்துக்கே கொடுத்துவிட்டார். அவன்தானே அதை ரொம்பவும் பெரிசாக எண்ணித் தபஸிருந்து அடைந்தவன்?

இப்போது பகவான் கையிலிருந்து அதைப் பெற்றுக் கொண்ட பிறகோ அவனுக்கு அது அபூர்வ வஸ்துவாக ஆனந்தம் கொடுக்கவில்லை. அவன் மனஸை அது உறுத்தத் தான் செய்தது. 'ஒரு பாபமுமறியாத க்ருஷ்ணனைப் பற்றி மித்யாபவாதம் செய்த தோஷத்துக்கு ஆளாகிவிட்டோமே!' என்று ரொம்பவும் வ்யாகுலப்பட்டான். என்ன ப்ராயச்சித்தம் பண்ணலாம் என்று யோசித்தான்.

ஜாம்பவான் செய்ததையே தானும் செய்வதுதான் ப்ராயச்சித்தம் என்று முடிவு செய்து, தன்னுடைய குமாரியான ஸத்யபாமாவை பகவானுக்குக் கன்யாதானம் பண்ணிக் கொடுத்தான். ஜாம்பவானுக்குப் பிள்ளைக் குழந்தையும் இருந்தது. ஸத்ராஜித்துக்கோ ஸத்யபாமா ஏகபுத்ரி. அவள் பூதேவியின் அவதாரம். ருக்மிணிதான் ஸ்ரீதேவி.

ஸ்யமந்தகத்தினால் முதலில் பகவானுக்குப் பழி கிடைத்தது; அப்புறம் ஒட்டிக்கு இரட்டியாகப் பத்னிகள் கிடைத்தார்கள்!

Koviloor Digital Library

ஜாம்பவானைப் போலவே ஸத்ராஜித்தும் கன்யா ரத்னத்தோடு ஸ்யமந்தக ரத்னத்தையும் பகவானுக்கு - 'கோபால ரத்னம்' எனப்படுபவருக்கு - அர்ப்பணம் செய்தான். ஆனால் அவர் பாமாவை மட்டும் அங்கீகாரம் பண்ணிக்கொண்டு, பிடிவாதமாக ஸ்யமந்தகத்தை, ஸத்ரா ஜித்திடமே திருப்பிவிட்டார். "உங்களிடமிருந்தாலும் என்னிடம் இருக்கிற மாதிரிதானே?" என்று அழகாகச் சொல்லிச் சமாளித்து விட்டார். அவனுக்கு இருந்தது ஓரே பெண்ணானதால் அவன் ஸொத்து பூராவும் அப்புறம் இந்த தம்பதிக்குத்தானே வரவேண்டுமென்பதால் அவனும் அதற்குமேல் 'ப்ரெஸ்' பண்ணமல் ஸ்யமந்தகத்தைத் தானே வைத்துக்கொண்டான்.

கதை முடியவில்லை. இன்னும் பிள்ளையார் ப்ரஸ்தாவமே வரவில்லையே!

ஸத்ராஜித் நினைத்தது தன் ஆயுஸ் முழுக்க மணி தன்னிடமிருந்து விட்டு அப்புறம் பெண் - மாப்பிள்ளையை அடையும் என்று. ஆனால் அந்த மணியோ அவனுடைய ஆயுஸையே குடித்துவிட்டு இன்னம் எத்தனையோ கஷ்டங்களையும் உண்டாக்கவிருந்தது!

பெண்ணால் விளைந்த பகைமை

பாமா பரிணயமாகிக் கொஞ்ச நாளுக்கு அப்புறம் க்ருஷ்ண பரமாத்மாவின் அத்தையான குந்தியும், பஞ்ச பாண்டவர்களும் அரக்கு மாளிகையில் எரிந்துபோய் விட்டதாக ஸமாசாரம் வந்தது. அவர்கள் எரிந்து போகாமல் மறைவாக வஸித்து வருகிறார்களென்பது பகவானுக்குத் தெரிந்தாலும் தெரியாததுபோல அந்தக் குடும்பத்து மூத்தவரான த்ருதராஷ்ட்டரனை துக்கம் விசாரித்துவிட்டு வருவதற்காக ஹஸ்தினாபுரத்துக்குப் போனார். அவதாரபுருஷர் இப்படி எல்லாம் மநுஷரீதியில் பண்ணிக்காட்டினார். அப்படி அவர் துக்கம் கேட்கப் போனதனாலேயே த்வாரகையில் அவருடைய புதிய பத்னி பாமாவுக்குப் பெரிய துக்கம் ஸம்பவித்தது.

Koviloor Digital Library

சததன்வா என்று யாதவர்களில் ஒரு முரட்டுப் பேர் வழி. க்ருதவர்மா, அக்ரூரர் என்றும் அவர்களில் இரண்டு முக்யபுருஷர்கள் உண்டு. இந்த இருவர் கிருஷ்ணருக்கு ரொம்பவும் பக்ஷமாக இருக்கப்பட்டவர்கள். அதிலும் அக்ரூரர் பரம பாகவதர். க்ருஷ்ணரையும் பலராமரையும் ப்ருந்தாவனத்திலிருந்து மதுராவுக்கு அழைத்துக்கொண்டு போனவர் அவர்தான். இந்த மூன்று பேருமே (சததன்வா, க்ருதவர்மா, அக்ரூரர் ஆகிய மூவருமே) ஸத்யபாமாவைக் கல்யாணம் பண்ணிக்கொள்ள ஆசைப்பட்டு ஸத்ராஜித் திடம் பெண் கேட்டிருந்தவர்கள். இவர்களில் யாருக்குக் கொடுப்பது என்று தெரியாத ஸத்ராஜித் ஒவ்வொருவரிடமும், 'உங்களுக்கே கொடுக்கிறேன்; கொஞ்ச நாள் போகட்டும்' என்று தள்ளிப்போட்டுக் கொண்டே போனுன். அதற்குள் ஸ்யமந்தக மணி ஒரு புதுக் கதையை உண்டாக்க, முடிவில் பெண்ணை பகவானுக்குக் கொடுத்துவிட்டான்.

இதனுல் விசித்திரமான விளைவுகள் ஏற்பட்டன. இங்கே மநுஷ்ய மனஸின் க்ருத்ரிமங்களைப் புராணம் நன்ருகப் படம் பிடித்துக் காட்டுகிறது. என்ன ஆச்சு பார்க்கலாம்.

பெண்ணைக் கொடுக்காமல் என்னவோ ஸால்ஜாப்பு சொல்லிக்கொண்டே போகிருனே என்று அந்த மூன்று பேருக்கும் ஸத்ராஜித்தின்மேல் வெறுப்புத்தட்ட ஆரம்பித்தது. இந்த ஸமயத்தில்தான் க்ருஷ்ணர்மீது அவன் ஸந்தேஹப்பட்டு அபவாதம் சொல்ல ஆரம்பித்தது. அவரிடம் ப்ரியம் கொண்ட அக்ரூரரும் க்ருதவர்மாவும் அப்போது ஸத்ராஜித்திடம் வெளிப்படையாகவே த்வேஷம் காட்டி, க்ருஷ்ணன் பக்ஷத்தில் பேசினுர்கள். கடைசியில், க்ருஷ்ணரே இவர்கள் ஆசைப்பட்ட பெண்ணைத் தட்டிக் கொண்டு போய்விட்டார். ஸத்ராஜித் அவருக்கு மாமனுராகிவிட்டான்; அவனுக்கே அவர் ஸ்யமந்தகத்தையும் கொடுத்துவிட்டார், என்று ஆனதும் நல்ல அக்ரூரருக்கும், க்ருதவர்மாவுக்குமே புத்தி மாறிவிட்டது. க்ருஷ்ணரிடம் பக்தி போய்விட்டது. பெண்ணுசை, த்வேஷம், (இதெல்லா

Koviloor Digital Library

வற்றுக்கும் மூலமாகத்) 'தான் நினைத்த மாதிரி நடக்காமல் போவதா?' என்ற அஹங்காரம் முதலானதுகள் வந்து விட்டால் எத்தனை பக்தியையும் அடித்துக்கொண்டு போய் விடும் என்று நமக்கு எச்சரிக்கிறது கதை.

இப்போது க்ருஷ்ணர் ஹஸ்தினுபுரம் போனது அவர் களுக்கு சதி செய்ய வாய்ப்புக் கொடுத்துவிட்டது. பெண்தான் கிடைக்கவில்லை, மணியையாவது அபஹரித்தா லென்ன, அந்த மணியின் சொந்தக்காரனை ஒழித்துவிட்டா லென்ன என்று தோன்றியது. ஆனாலும் இவர்களுக்குத் தாங்களே அப்படிச் செய்ய தைர்யமில்லாததால் போக்கிரி யான சததன்வாவிடம் போனார்கள்.

ஒரே பெண்ணுக்காகப் போட்டி போட்டவர்களென்ற முறையில் இந்த மூன்று பேரும் பரஸ்பரம் விரோதம் பாராட்டிக் கொள்ளவேண்டியவர்கள். ஆனாலும் 'எனிமி' யின் 'எனிமி' ஒருத்தனுக்கு 'ஃப்ரெண்டா'கி விடுவானென்று வேடிக்கையாகச் சொல்வதுபோல, ஸத்ராஜித்திடம் மூன்று பேருமே த்வேஷம் கொண்டிருந்ததால் இப்போது தங்களுக் குள் ஒத்துப்போய் ஒன்று சேர்ந்தார்கள்.

"க்ருஷ்ணனின் பக்கபலம் இப்போது ஸத்ராஜித்துக்கு இல்லை. ஆகையால் இப்போதே போய் அவனைத் தீர்த்துக் கட்டிவிட்டு ஸ்யமந்தக மணியை எடுத்துக்கொண்டு வந்து விடு" என்று க்ருதவர்மாவும் அக்ரூரரும் சததன்வாவுக்கு யோசனை சொல்லிக்கொடுத்தார்கள்.

அந்த துஷ்டனும் அப்படியே போய் ஸத்ராஜித்தை அக்ரமமாகக் கொலைசெய்துவிட்டு, மணியை அபஹரித்துக் கொண்டு வந்தான். ஸத்ராஜித்தோடு அவன் நேராக யுத்தம் பண்ணி ஜயித்து அதைக் கவரவில்லை. நீசத்தன மாகக் கொலை பண்ணிவிட்டு அபஹரித்துக்கொண்டான்.

ஸத்யபாமா ஒரேயடியாக ப்ரலாபித்துக்கொண்டு, 'எப்போது பதி ஹஸ்தினுபுரத்திலிருந்து திரும்புவார்?

Koviloor Digital Library

அவரிடம் சொல்லிப் பாபி சததன்வாவை தண்டிக்கலாம்?" என்று காத்துக் கொண்டிருந்தாள்.

ஸ்யமந்தகம் இருக்குமிடத்தில் வியாதி வராது, வேதனை இருக்காது. தினமும் பவுனுகக் குவியுமென்று சொல்லப் பட்டாலும் நாம் பார்க்கிறதோ அதனுல் அனர்த்தத்துக்கு மேல் அனர்த்தமாக வந்திருக்கிறது என்பதைத்தான். எதற்கும் உரிய கூலி கொடுக்கவேண்டும். பலவிதப்பட்ட நன்மைகள் செய்யக்கூடிய திவ்யமணியிடமிருந்து பயன்பெற வேண்டுமானுல், அதற்குக் கூலியாக அகச் சுத்தியையும் புறச் சுத்தியையும் ரக்ஷித்துக்கொள்ள வேண்டுமென்று முதலிலேயே ஸூர்ய பகவான் சொன்னது இதனுல்தான். ஆனுல் ஸத்ராஜித்துக்கோ ஸாக்ஷாத் பரமாத்மா உள்பட யாரைப் பார்த்தாலும் அந்த மணியின் நிமித்தமாகவே தப்பெண்ணம்தான் உண்டாயிற்று. ஹ்ருதயத்துக்குள்ளே இப்படித் தப்பெண்ணமும் ஸந்தேஹமும் இருப்பதே ஒரு மநுஷ்யனுக்குப் பெரிய அசுசிதானே? சரீர அசுத்தத்துக்காக ப்ரஸேனன் உடனே உயிரைவிட வேண்டியிருந்ததென்றுல் நீண்டகாலம் மன அசுத்தத்தை வளர்த்துக்கொண்டுவிட்ட ஸத்ராஜித்தும் கடைசியில் அதற்காக ப்ராணனையே கொடுத்துப் பதில் சொல்லும்படியாயிற்று.

துஷ்ட மிருகத்தைக் கொன்று மணியை எடுத்துக் கொண்ட சிரஞ்ஜீவியான ஜாம்பவானிடங்கூட அது சிரஞ்சீவியாக நிலைத்து இருக்கவில்லைதான்.

இப்படியெல்லாமிருக்க க்ரூர ஸ்வபாவமுள்ளவனும், ஜீவஹத்தி மூலம் அதை அபஹரித்தவனுமான சததன்வா விடம் மட்டும் அது நீடித்து நிற்குமா? அவன் உயிரைத்தான் அது நீடித்து விட்டு வைக்குமா?

மீண்டும் வெற்றி, மீண்டும் பழி

க்ருஷ்ணர் த்வாரகைக்கு வந்தவுடனே ப்ரியபத்னி பாமா புலம்பினுள். மாமனுரைக் கொன்றவனைப் பழி தீர்த்துக்கொள்ள பகவானும் ஸங்கல்பித்துவிட்டார்.

Koviloor Digital Library

க்ருஷ்ணருக்குக் கோபம் உண்டாகிவிட்டதென்று தெரிந்தவுடனேயே சததன்வா நடுங்க ஆரம்பித்துவிட்டான். ஸமீபத்தில்தானே அதி பலிஷ்டரான ஜாம்பவானையே அவர் தோற்கடித்திருந்தார்? அப்படிப்பட்ட மஹா பராக்ரமசாலி தன்னிடம் கோபத்தைத் திருப்பியிருக்கிறு ரென்று தெரிந்தும் சததன்வாவின் சூரத்தனமெல்லாம் ஓட்டம் பிடித்துவிட்டது. அவன் த்வாரகையை விட்டு ஓட்டம் பிடித்தான்.

ஓட்டம் பிடிப்பதற்கு முந்தி என்ன பண்ணினுனென்றுல் ஸ்யமந்தகத்தை அக்ரூரரிடம் போட்டு விட்டான். அதற்குப் பதில் பகவானிடமே போட்டுவிட்டு அவர் காலிலே விழுந்து மன்னிப்புக் கேட்டுக் கொண்டு பிழைத்துப் போயிருக்கலாமேயென்றுல் இது தான் துர்புத்தியின் சேஷ்டை! தான் ஓடிப்போவதால் க்ருஷ்ணருக்கு ஏற்படும் வெற்றிப்பெருமை போதாதென்று, ஸ்யமந்தகமும் அவரை அடைகிறதா என்ற கெட்ட எண்ணம்தான்! சததன்வாவே அதை வைத்துக் கொண்டிருக்கலாமேயென்றுல், 'அது முன்னே அதை வைத்துக் கொண்டிருந்தவர்களுக்குப் பண்ணினதுபோல என்ன அனர்த்தத்தைத் தனக்கும் பண்ணி விடுமோ? அந்த அனர்த்தம் அக்ரூரரைத்தான் அடையட்டுமே' என்பது ஒரு காரணம். இன்னொரு காரணம், 'க்ருஷ்ணன் ஒரு வேளை தன்னைத் துரத்திக்கொண்டு வந்து பிடித்துவிட்டால் அப்போது அதை எடுத்துக்கொண்டு விடுவானே! இந்த வெற்றியை மட்டும் அவனுக்குத் தரவே கூடாது; தன் உயிரை எடுத்தாலும் எடுக்கட்டும்; ஆனுல் ஸ்யமந்தகத்தை அவன் எடுத்துக்கொள்ள விடப்படாது' என்ற துர் எண்ணம். துஷ்டர்களுக்கு வீம்பும் விரோதமும் கடைசிவரை போகாது. அதனுல், அனர்த்தம் தரக்கூடிய மணியை விரோதியான க்ருஷ்ணருக்குச் சேரவிடாமல், தன்னிடம் ஸ்நேஹிதமாக வந்த அக்ரூரரிடமே சேர்ப்பித்தான்! அக்ரூரர் நல்ல பக்தர், விவேகி என்று பெயரெடுத்திருந்ததால் அவரிடம் மணி இருந்தால்தான் க்ருஷ்ணர்

Koviloor Digital Library

அதற்காகச் சண்டைக்குப் போகாமலிருப்பாரென்றும் நினைத்து இப்படிச் செய்தான் போலிருக்கிறது!

சததன்வா ஊரைவிட்டு ஓடுகிறானென்று ஸ்வாமிக்குத் தெரிந்தது. வாஸ்தவத்தில் அவருக்குக் கோபமுமில்லை, ஒன்றுமில்லை. கோர க்ருத்யம் பண்ணிய சததன்வாவைத் தண்டிக்க வேண்டியது தர்ம ஸம்ஸ்தாபனத்துக்காக வந்துள்ள தம்முடைய கடமை என்பதால் கோபம் வந்த மாதிரி காட்டிக்கொண்டார்.

இப்போது அவன் அதிவேகமாக ஓடுகிற குதிரையின் மேலேறித் தப்பியோடப் பார்க்கிறானென்றதும், பகவான் பலராமரையும் அழைத்துக்கொண்டு ரதாரூடராக அவனைப் பிடிக்கப் புறப்பட்டார்.

தேர்க்குதிரைகள் காற்றாகப் பறந்தன. கண்ணுக் கெட்டிய தூரத்தில் அதிவேகமாக ஓடும் சததன்வாவின் குதிரையும் தெரிந்தது. பாவம், அந்தக் குதிரையால் அதற்கு மேல் ஓடமுடியவில்லை. களைத்துப்போய் மேலே ஓட முடியாமல் அப்படியே விழுந்து நுரை தள்ளிவிட்டுச் செத்துப் போயிற்று.

சததன்வா கால்நடையாக ஓட ஆரம்பித்தான். அவன் காலால் ஓடும்போது தாம் ரதத்தில் போய் அவனைப் பிடிப்பது தர்மயுத்தமில்லை என்று ஸ்வாமியும் ரதத்திலிருந்து குதித்துத் தாமும் காலால் ஓடியே அவனைத் துரத்தினார்.

பலராமர் தேரிலேயே உட்கார்ந்திருந்தார்—களைத்துப் போய்விட்ட ஒரு ஒற்றை எதிராளியை இரண்டு பேர் தாக்குவது தர்மமில்லை என்ற எண்ணத்தில்.

பகவான் சததன்வாவைப் பிடித்து விட்டார். அப்புறம் இரண்டு பேருக்கும் யுத்தம் நடந்தது. பகவானை யார் எதிர்த்து நிற்க முடியும்? சததன்வா அவர் கையால் ஸம்ஹரிக்கப்பட்டான். அதனால் மஹாபாபியான அவனுக்கும் புண்யலோகம் கிட்டச் செய்யணுமென்றுதான் அவர் இப்படித் தேராலேயும் காலாலேயும் ஓடி ஓடி வந்தது!

Koviloor Digital Library

ஜாம்பவானிடம்போலவே சததன்வாவிடமும் பகவானுக்கு ஜயசாலி என்ற பெருமை ஸ்யமந்தகத்தினுல் ஏற்பட்டது. ஆனுல் அது எடுபடாமல் மறுபடி பழியும் வந்தது!

செத்துப் போனவனிடம் ஸ்யமந்தகம் இருக்கிறதா என்று தேடித் தேடிப் பார்த்தார். கிடைக்கவில்லை. அவன் தான் அக்ரூரரிடம் அதைப் போட்டுவிட்டானே!

கீதையில் பகவான் தம்மைப்பற்றி

வேதாஹம் ஸமதீதாநி வர்த்தமாநாநி சார்ஜுன |
பவிஷ்யாணி ச பூதாநி மாம் து வேத ந கச்சன ||

என்று சொல்லிக்கொள்கிறுர். அதாவது, "அர்ஜுனு! இறந்த காலம், நிகழ்காலம், எதிர்காலம் எல்லாவற்றிலும் நடக்கும் ஸமாசாரங்கள் எனக்குத் தெரியும்; ஆனுல் என்னைத்தான் எவராலும் தெரிந்துகொள்ள முடியாது" என்று சொல்லிக்கொள்கிறுர். அப்படிப்பட்ட ஸர்வஜ்ஞர் தான் சததன்வாவிடம் மணி இருப்பதாக நினைத்துத் துரத்திய மாதிரியே ஆட்டம்போட்டிருக்கிறுர்! அண்ணுவையும் இந்த அபிப்ராயத்தைச் சொல்லித்தான் அழைத்து வந்தார். இன்னொரு அவதாரமான அவரும் தம்பிக்கு ஏற்கவே தமக்கும் ஞானத்ருஷ்டியில்லாத மாதிரி காட்டிக்கொண்டு அத்தனை தூரம் கூடவந்தார்.

ஊராரிடம் மித்யாபவாதப்பட்டது போதாது, ஸொந்தத் தமையனுரிடமும் அபவாதப்பட்டு, மநுஷ்ய வாழ்க்கையின் அடி உதைகளை நன்றுக வாங்கிக்கொள்ள வேண்டுமென்றே ஸ்வாமி மாய விளையாட்டுப் பண்ணினுற்போல இருக்கிறது!

சததன்வாவை வதம் செய்துவிட்டு ரதத்துக்குத் திரும்பியவர், "அண்ணு! அவனைக் கொன்றுவிட்டேன். ஆனுல் மணியை அவனிடம் காணவில்லை" என்றுர்.

இவருடைய மாயா நாடகத்துக்குத் தாமும் அநுஸரணையாகப் போக வேண்டுமென்பதாலேயே பலராமர் இவரிடம் விரோதமாக நடக்க வேண்டியிருந்தது! அதனுல், க்ருஷ்ணர்

Koviloor Digital Library

இப்படிச் சொன்னாரோ இல்லையோ, பலராமருக்கு ரௌத்ரகோபம் உண்டாகிவிட்டது.

"டேய் க்ருஷ்ணா! நீ எப்போதுமே கபடியாகத்தான் இருந்திருக்கிறாய். இப்போதும் மணியை நான் எங்கே கேட்டு விடுவேனோ என்றுதான் கபடம் பண்ணுகிறாய். அதை எங்கேயோ ஒளித்து வைத்துக்கொண்டே நீ கதை அளக்கிறாய் என்பதில் எனக்குக் கொஞ்சங்கூட ஸம்சய மில்லை. உன்னை பந்து என்று சொல்லிக் கொண்டு ஸஹவாஸம் பண்ணுவதே யோக்யர்களுக்கு முடியாத கார்யம்" என்றெல்லாம் வாயில் வந்தபடித் திட்ட ஆரம்பித்துவிட்டார்.

பூர்ணாவதாரமாக வந்த பரமபுருஷன் ஸொந்த ப்ராதா விடம் இப்படிப்பட்ட நிந்தனையை வாங்கிக் கொண்டும் பொறுமை இழக்காமல், பணிவு குறையாமல், "அண்ணா! நீங்கள் என்னை இப்படி ஸந்தேஹிக்கக் கூடாது. நான் சொல்வது ஸத்யம். வேண்டுமானால் நீங்களே என்னை சோதித்துப் பார்த்துக் கொள்ளுங்கள்" என்று தழைந்து கேட்டுக்கொண்டார்.

பலராமருக்கோ கோபம் வந்துவிட்டால் லேசில் தணியாது. எதிர்வாதமே அவருடைய மனஸில் அப்போது ஏறாது. ஆனபடியால் க்ருஷ்ணர் எத்தனை சொல்லியும் அவர் 'கன்வின்ஸ்' ஆகவில்லை. "உன்னை சோதனை போட்டு என்ன ப்ரயோஜனம்? நீ எந்த இந்த்ரஜாலமும் செய்யக்கூடியவன். திரஸ்கரிணி (கண்கட்டு) வித்தையால் மணியை மறைத்து விடுவாய். போடா போ! இனிமேல் உன் மூஞ்சியில் நான் முழிக்கமாட்டேன்" என்று சத்தம் போட்டுவிட்டு, க்ருஷ்ணரோடு த்வாரகைக்கு திரும்பாமல் அங்கிருந்தே விதேஹ ராஜ்யத்துக்குப் போய்விட்டார்.

க்ருஷ்ணர் ஒரே விசாரமாக த்வாரகைக்குத் திரும்பினார். பட்டதெல்லாம் போதாது என்று மறுபடி ஊர் ஜனங்களின் மொத்துப் பேச்சுக்கு ஆளானார். "மணியிடம் பேராசையால் தமையனையும் பகைத்துக்கொண்டு ஊரை விட்டே விரட்டி

Koviloor Digital Library

விட்டானே!" என்று ஜனங்கள் பழி சொல்வதைக் கேட்டு மனஸ் நொந்து கஷ்டப்பட்டார்.

ஸாதாரணமாகவே ஜனங்களின் குணம், ஒருத்தரிட முள்ள நல்லதற்காகக் கொண்டாடுவதைவிட, அவர் என்ன தப்பு பண்ணியிருக்கிறார், பண்ணியிருக்கக்கூடும் என்று பார்த்து அதற்காகக் கண்டனம் பண்ணுவதுதான். நம்மிலே பேப்பர் படிக்கிறவர்கள், பொது விஷயம் பேசுபவர்கள்கூட அவரவருடைய அபிமானத் தலைவர்களைப் புகழ்வதைவிட, பிடிக்காத மற்ற கட்சிக்காரர்களைக் காரஸாரமாக விமர்சிப் பதில்தானே அதிக ருசி காட்டுகிறோம்? திட்டிப் பேசுவதில் இன்றைய ஜனங்களுக்குள்ள ஈடுபாடு என்றைக்குமே இருந் திருக்கிறது என்று இந்தப் புராணக் கதையிலிருந்து தெரி கிறது.

அக்ரூரரும் மணியும்

க்ருஷ்ணர் த்வாரகைக்கு வந்து விட்டாரென்றதும் ஸ்யமந்தகத்தை வைத்துக்கொண்டிருந்த அக்ரூரருக்கு பயம் பிடித்துக் கொண்டது. 'அபயம் தருகிறவன் இவன்தான்' என்று எந்த க்ருஷ்ணரின் ஸாமீப்யத்துக்கு (அணுக்கத்துக்கு) இத்தனை நாளாக ஆசைப்பட்டுக் கொண்டிருந்தாரோ, அவரிடமே இப்போது பயப்பட்டுக் கொண்டு, அவர் பக்கத் திலேயே இருக்கவேண்டாமென்று அக்ரூரர் நினைத்தார்! த்வாரகையை விட்டு வெளியேறி விட்டார். 'அர்த்தம் அனர்த்தம்' என்று ஆசார்யாள் சொன்னாற் போல, பொருள் படுத்தும் பாடு!

க்ருஷ்ணர் விஷயத்தில் அக்ரூரருக்கு ஏதோ இப்படி அசட்டுத்தனமான பயமும் ஸம்சயமும் ஏற்பட்டாலும் மற்றபடி அவருடைய ஸ்வாபாவிகமான ஈச்வர பக்தி, நல்ல எண்ணங்கள் எல்லாம் போய்விடவில்லை. ஆனபடியால் த்வாரகையை விட்டுப் புறப்பட்டவர் எங்கேயோ ஊர் சுற்றாமல் க்ஷேத்ராடனம் பண்ணிக் கொண்டே போய்க் காசியை அடைந்தார்.

Koviloor Digital Library

அங்கே போனபின் அவர் மனஸ் எந்தக் கெடுதலும் இல்லாமல் தூய்மையாக ஆயிற்று. மணியினுல் ஸ்வயலாபம் அடைய வேண்டுமென்ற எண்ணமும் அவருக்கு இல்லை. ஆனதால் ஸ்யமந்தகம் தினமும் எட்டு பாரத் தங்கம் கொடுக்க ஆரம்பித்துவிட்டது. அக்ரூரர் அதைக் கொண்டு தனக்கோ தன் குடும்பத்துக்கோ எதுவும் பண்ணிக் கொள்ளும் எண்ணமில்லாமல் காசியில் அநேக தேவாலயங் களை நிர்மாணித்துத் திருப்பணிகள் பண்ணி இறை தொண்டு செய்து கொண்டிருந்தார்.

திவ்யமணி அவரை பாஹ்யாந்தர சௌசமுள்ள வராகவே (உள்ளும் புறமும் சுத்தமானவராகவே) கருதி தினமும் ஸ்வர்ண பாரம் கொடுத்ததோடு, அவர் இருக்கிற இடத்தைச் சுற்றி ரோகம், துக்கம், அதிவ்ருஷ்டி (பேய் மழை) அநாவ்ருஷ்டி (வறட்சி) முதலான ஈதிபாதைகள் இல்லாமல் நல்ல ஸுபிக்ஷத்தை உண்டாக்கி வந்தது.

அபவாதத்துக்குக் காரணம்

இங்கே த்வாரகையில் பகவான் பல தினுஸாக எண்ணி துக்கப்பட்டுக் கொண்டிருந்தார். “இந்த ஸ்யமந்தகத்தால் எத்தனை கஷ்டம் வந்துவிட்டது? ப்ரஸேனன், ஸத்ராஜித், சததன்வா என்று மூன்று பேரை அது பலி வாங்கிவிட்டது. முதலில் அது ஸத்ராஜித்திடமிருந்து நமக்கு அபவாதம் வாங்கி வைத்தது; இப்போதோ அண்ணுவே நம்மை விகல்ப மாக எடுத்துக்கொண்டு தேசாந்தரம் போகும்படிச் செய் திருக்கிறது. அக்ரூரர் ஊரிலில்லை யென்பதால் அவர்தான் அதோடு போய்விட்டாரென்று ஊஹிக்கவேண்டியிருக்கிறது. அதாவது ஸத்தான அந்த ஆத்மாவை இங்கேயில்லாத படி பண்ணியிருப்பதும் ஸ்யமந்தகம்தான். ஸத்யபாமா வுக்கோ பிதாவின் மரணத்தினுல் அது பெரிய சோகத்தை இழைத்திருக்கிறது. ஊரே நம்மை ஸந்தேஹப்படுகிறது. எதனுல் இப்படிப் பல கஷ்டங்கள்? எதனுல் இப்படி மறுப்படி மறுபடி மித்யாபவாதத்துக்கு ஆளாகிறோம்?” என்று யோசித்துக் கொண்டிருந்தார்.

Koviloor Digital Library

அப்போது நாரத மஹர்ஷி வந்தார். எப்போது வரணும், எப்போது வந்தால் கதையில் ஸ்வாரஸ்யமான திருப்பம் உண்டாக்கமுடியும் என்று அவருக்குத் தெரியும்.

"ஸ்வாமீ! தாங்கள் ஏதோ விசாரத்தில் ஆழ்ந்திருப்பதாகத் தெரிகிறதே, என்ன காரணம்?'' என்று பகவானைக் கேட்டார்.

பகவான் ஸ்யமந்தகத்தினால் உண்டான அனர்த்த பரம்பரையை அவருக்குச் சொன்னார். "எனக்கு ஏன் இப்படி மித்யாபவாதம் திரும்பத் திரும்ப ஏற்படுகிறது? தேவர்ஷியான தங்களுக்குத் தெரியாததில்லை; தாங்கள்தான் காரணம் சொல்லவேண்டும்'' என்று ஸாக்ஷாத் பரமாத்மா தம்மைக் குறைத்துக்கொண்டு விநயத்தோடு கேட்டார்.

"ஓ அதுவா? இதோ சொல்கிறேன். நீங்கள் ஒரு பாத்ரபத சுக்ல சதுர்த்தியின் போது சந்த்ரனைப் பார்த்து விட்டீர்கள். அதனால்தான் விக்நேச்வர சாபத்தினால் வீண் அபவாதத்துக்குப் பாத்ரமாகிவிட்டீர்கள்" என்று நாரதர் சொன்னார்.

'பிள்ளையாரென்று ஆரம்பித்துவிட்டு என்னவோ க்ருஷ்ணர் கதையே சொல்லிக்கொண்டு போகிறாரே' என்று நினைத்தவர்களுக்கு இப்போதுதான் விஷயம் வர ஆரம்பித்திருக்கிறது!

பாத்ரபதம்; பஞ்சாங்க வித்யாஸம்

பாத்ரபதம் என்பது ஒரு இரட்டை நக்ஷத்ரம். பூர்வ பாத்ரபதம், உத்தர பாத்ரபதம் என்று அந்த இரண்டு நக்ஷத்ரங்களுக்கும் பேர். ப்ரோஷ்ட பதம் என்றும் சொல்வார்கள். பொதுவாக, மாஸத்தைக் குறிக்கும் போது—அதாவது இந்த நக்ஷத்ரங்களில் ஒன்றில் பௌர்ணமி வருகிற மாஸத்தைக் குறிப்பிடும்போது — பாத்ரபதமென்றும், நக்ஷத்ரத்தையே குறிப்பிடும்போது ப்ரோஷ்டபதம் என்றும் சொல்வது வழக்கம். பூர்வ ப்ரோஷ்டபதீ, உத்தர

Koviloor Digital Library

ப்ரோஷ்டபதீ என்று இருப்பதைத்தான் திரித்துப் பூரட்டாதி, உத்திரட்டாதி என்கிறோம். பௌர்ணமியன்று ப்ரோஷ்டபதி நக்ஷத்ரத்தைக் கொண்ட மாஸமாகிய ப்ரோஷ்டபதீயைத் தான் இன்னொரு விதத்தில் திரித்துப் புரட்டாசி என்கிறோம்.

ஆனால் நம்முடைய புரட்டாசியும் ஸரி, இதே மாதிரி நக்ஷத்ரங்களின் பேர்களையுடைய மற்றப் பதினொரு மாஸங்களும் ஸரி, கரெக்டாக அந்தப் பௌர்ணமியில் அந்த நக்ஷத்ரம் வருவதாகத்தானிருக்க வேண்டுமென்றில்லாமல் ஒரு மாஸம் முன் பின் தள்ளியும் போய்விடுவதுண்டு, காரணம், நாம் மாஸப் பேரை பௌர்ணமி நக்ஷத்ரத்தைக் கொண்டு சித்ரா, விசாகம், கார்த்திகம் என்கிறதுபோல நக்ஷத்ரத்தின் பேரில் வைத்துக்கொண்டாலும், வாஸ்தவத்தில் இதற்கு ஸம்பந்தமில்லாமல் மாஸப் பிறப்பை ஸூர்யன் பன்னிரண்டு ராசிகளில் ஒவ்வொன்றாகப் பிரவேசிக்கும் தினமாகத்தான் வைத்துக் கொண்டிருக்கிறோம். தமிழ் தேசத்திலுள்ள நாம் பின்பற்றும் இந்த விதமான மாஸத்துக்கு 'ஸௌரமானம்' என்று பேர்.

தெலுங்கர், கன்னடஸ்தர் முதலானவர்களும், வடக்கத்தியர்களில் பெரும்பாலாரும் அநுஸரிக்கும் 'சாந்த்ரமானம்' என்ற பஞ்சாங்கத்தின்படி அமாவாஸ்யையை அடுத்து வரும் வளர்பிறைப் பிரதமையில் ஒவ்வொரு மாஸமும் பிறக்கும். அந்த விதமான மாஸத்தில்தான் அந்த மாஸத்தின் பெயர் எந்த நக்ஷத்ரத்தை வைத்து இருக்கிறதோ அதுவும், வாஸ்தவமாகவே அந்தப் பௌர்ணமியில் அல்லது பௌர்ணமிக்கு நெருக்கமான திதியில் வருகிற நக்ஷத்ரம் எதுவோ அதுவும் முன்னே பின்னே தள்ளிப்போகாமல் கரெக்டாக ஒத்துப் போகும்.

பண்டிகைகளெல்லாம் இந்த சாந்த்ரமான மாஸப்படியே நிர்ணயமானவை. ஆகையால் பிள்ளையார் சதுர்த்தி பாத்ரபத மாஸத்தில் சுக்ல பக்ஷச் சதுர்த்தியன்று என்றால், அது எப்போதும் தெலுங்கர், கன்னடஸ்தர் ஆகியவர்களுக்கு அவர்களுடைய பாத்ரபத மாஸத்திலேயேதான் வரும்.

Koviloor Digital Library

நமக்கு (ஸௌரமானத்தைப் பின்பற்றும் தமிழ் தேசத்தவர்களுக்கு) இப்படியில்லாமல், பிள்ளையார் சதுர்த்தி புரட்டாசியாகவுமிருக்கலாம், அல்லது ஆவணியிலேயே வந்தாலும் வந்துவிடலாம். காரணம் என்னவென்றால் நம்முடைய பங்குனி அமாவாஸ்யை ஆன மறுதினமே அவர்களுடைய சித்திரை பிறந்து, இதேபோல ஒவ்வொரு மாஸத்திலும் நடந்து, நம்முடைய ஆவணி அமாவாஸ்யையான மறுதினமே அவர்களுடைய புரட்டாசி (அதாவது பாத்ரபத மாஸம்) பிறந்துவிடும். அதிலே நாலு நாளுக்கப்புறம் சதுர்த்தி வருகிற போது ஸூர்யன் ஸிம்ஹ ராசியைவிட்டுக் கன்யா ராசிக்குப் போகாமலே இருக்கலாம். (அநேகமாக இப்படித்தானிருக்கிறது.) ஸூர்யனின் கன்யா ப்ரவேசத்தன்றுதான் நம் புரட்டாசி பிறப்பதால், இம் மாதிரி வருஷங்களில் நமக்கு ஆவணியிலேயே பிள்ளையார் சதுர்த்தி வந்துவிடுகிறது.

இதே மாதிரிதான் ஸ்ரீராம நவமி என்றால், அது எப்போதும் சாந்த்ரமானக்காரர்களுக்கு சித்திரை மாஸ நவமியாகவே இருக்க, நமக்கோ சில ஸமயம் பங்குனி, சில ஸமயம் சித்திரை என்று இருக்கிறது. இப்படியே கோகுலாஷ்டமி, நவராத்திரி முதலான எல்லாப் பண்டிகையுமே நமக்கு (முறையே) ஆடியாகவோ ஆவணியாகவோ இருக்கலாம், புரட்டாசியாகவோ ஐப்பசியாகவோ இருக்கலாமென்றிருக்க, அவர்களுக்கு கோகுலாஷ்டமி என்றால் ச்ராவண (அவர்களுடைய ஆவணி) க்ருஷ்ண பக்ஷ அஷ்டமிதான், நவாராத்ரி என்றால் ஆச்வின (ஐப்பசி) சுக்லபக்ஷத்தின் முதல் ஒன்பது தினங்கள்தான் என்று தீர்மானமாக இருக்கிறது.*

சாந்த்ரமான பாத்ரபத மாஸத்தில் அதாவது நம்முடைய ஆவணி அல்லது புரட்டாசி மாஸத்தில் வரும் வளர் பிறைச்

---

* சாந்த்ரமான, ஸௌரமான மாதங்கள் விஷயமாக ''தெய்வத்தின் குரல்''—மூன்றாம் பகுதியில் 'ஆசாரமும் ஆஹாரமும்' என்ற உரையில் 'சாதுர்மாஸ்யமும் அதில் போஜன விதியும்' என்ற உட்பிரிவிலும் கூறப்பட்டுள்ளது.

Koviloor Digital Library

சதுர்த்திதான் நாரத பகவான் குறிப்பிட்ட 'பாத்ரபத சுக்ல சதுர்த்தி' என்று சொல்ல வந்தேன்.

அதுதான் பிள்ளையார் சதுர்த்தி தினம்.

அப்படிப்பட்ட ஒரு தினத்தில் க்ருஷ்ணர் ஆகாசத்தில் தெரியும் சந்த்ரனைப் பார்த்துவிட்டார். அது எந்த தினம் என்று உங்களுக்கு நினைவிருக்கலாம். ப்ரஸேனனோடு வேட்டைக்குப் போய், அங்கே அவன் பிரிந்துபோய், பகவான் ரொம்ப நாழி காத்திருந்து, அப்புறம் ஆகாசத்தைப் பார்த்து, 'அடடே, நாலாம் பிறைகூட உதித்து விட்டது!' என்று ஊருக்குத் திரும்பினாரே, அந்த தினம்தான்!

இப்படிச் சதுர்த்திச் சந்த்ரனை அவர் பார்த்தால்தான் அவர்மீது விக்நேச்வரரின் சாபம் பலித்துத் தப்பான அபவாதம் ஏற்பட்டுவிட்டது என்று நாரதர் தெரிவித்தார்.

அவர் இப்படிச் சொன்னவுடன் பகவான், "சுக்லபக்ஷ சதுர்த்தியில் சந்த்ரனைப் பார்ப்பதால் இப்படி தோஷம் ஸம்பவிக்க வேண்டுமென்று விக்நேச்வரர் ஏன் சபித்தார்?" என்று கேட்டார்.

நாரதர் அவருக்கு ஸவிஸ்தாரமாகக் கதை சொல்ல ஆரம்பித்தார்.

கேள்வி பதில்; கதைக்குள் கதை

புராணங்களில் இப்படித்தான் ஒருத்தர் கேள்வி கேட்டு இன்னொருத்தர் பதில் சொல்வதாகவே வ்ருத்தாந்தங்கள் வரும். எல்லாப் புராணங்களுமே ஜெனரலாக நைமிசாரண்ய முனிவர்களின் கேள்விகளுக்கு ஸூதர் பதிலாகச் சொன்னவைதான். அது தவிர ஒவ்வொரு புராணமும் 'பர்ட்டிகுலராக' ஒருத்தர் கேள்விக்குப் பதிலாக இன்னொருத்தர் சொன்னதாகும். த்ருஷ்டாந்தமாக, பாகவதமும் ஸூதர் நைமிச ரிஷிகளுக்கு உபதேசித்தது தானென்றாலும், அதைக் குறிப்பாக பரீக்ஷித்துக்கு உபதேசித்த சுகாசார்யாளின் வாக்கிலேயே நாம் பெற்றிருக்

Koviloor Digital Library

கிஷேம். இதிஹாஸங்களான ராமாயண, மஹாபாரதங் களைப் பார்த்தால்—வால்மீகி மஹர்ஷி, 'ஸகல உத்தம குணங்களும் நிறைந்து இருக்கிறவன் யார்?' என்று கேட்க, அதற்குப் பதிலாக நாரதர் ராமசரித்ரத்தைச் சொன்னதாக வும், அப்புறம் அதை வால்மீகி ஸ்ரீமத் ராமாயண காவ்ய மாக்கி லவ குசர்களுக்குக் கற்றுக்கொடுத்தபடி அந்த இரண்டு குழந்தைகளும் ராமருக்கு முன்னேயே அச்வமேத மஹா மண்டபத்தில் பாடினதாகவும் இருக்கிறது. பாரதமும் நைமிச ரிஷிகளுக்கு ஸூதர் சொன்னதுதான். ஆதி காவ்யம் என்கப்பட்ட ராமாயணத்துக்கு மட்டும் ஸூதர் - நைமிசாரண்ய ரிஷிகள் ஸம்பந்தமில்லை. பார்ட்டி குலராக பாரதக் கதையைப் பாண்டவர்களுடைய கொள்ளுப் பேரனை ஜனமேஜயனுக்கு வைசம்பாயனர் சொன்னதாகவும், இதையே வ்யாஸர் காவ்யமாக்கிச் சொல்ல விக்நேச்வரர் எழுதிவைத்ததாகவும் கதை. இப்படி ஒருத்தர் இன்னொருத்தருக்குச் சொல்லும் ஒவ்வொரு புராண - இதிஹாஸத்தின் நடுநடுவிலேயும் கதாபாத்ரங் கள் கேள்வி கேட்க, நாரதர், அகஸ்த்யர், மார்க்கண்டேயர் முதலான ரிஷிகள் பதிலுக்கு உபாக்யானங்கள் சொன்ன தாக வரும். ராமாயணத்தின் உத்தரகாண்டத்தில் ராவணாதியர் சரித்ரமெல்லாம் அகஸ்த்யர் ராமருக்குச் சொன்னதாகவே வருகிறது. இந்த அகஸ்த்யரே கேள்வி கேட்க அவருக்கு ஹயக்ரீவர் சொன்னதுதான் ப்ரஹ்மாண்ட புராணத்தில் வரும் லலிதோபாக்யானம். மஹாபாரதத் தில் இப்படி அநேக ரிஷிகள் அநேக உபாக்யானங்களைப் பாண்டவர்களுக்குச் சொன்னதாக - குறிப்பாக அவர்களு டைய வனவாஸ காலத்தில் சொன்னதாக-வருகிறது. அப்ப டித்தான் இங்கே ஸ்காந்தத்தில் க்ருஷ்ண பரமாத்மா 'வளர் பிறையில் சதுர்த்திச் சந்த்ரனை ஏன் பார்க்கக்கூடாது?' என்று

* புராணத்துக்கும் இதிஹாஸத்துக்குமுள்ள மாறுபாடு குறித்து "தெய்வத்தின் குரல்" இரண்டாம் பகுதியில் 'புராணம்' என்ற உரையில் 'இதிஹாஸம்—புராணம்; பெயர் விவரம்' என்ற உட்பிரிவு பார்க்க.

Koviloor Digital Library

கேள்வி கேட்டதற்கு நாரதர் பதிலாகச் சொன்ன கதை வருகிறது. அப்புறம் இப்படி க்ருஷ்ணர் நாரதரைக் கேட்ட விவரத்தையும் சேர்த்து இந்தக் கதையை நந்திகேச்வரர் ஸநத்குமாரருக்குச் சொன்ன final shape-ல் கொடுத்திருக்கிறது.

சந்திரனின் கர்வ பங்கம்

மஹா கணபதி மூஷிகத்தின் மேல் ஏறிக்கொண்டு ஸர்வ லோகங்களிலும் ஆனந்தமாக ஸஞ்சாரம் செய்து கொண்டிருப்பார். இப்படி ஸஞ்சாரம் செய்யும்போது ஒரு ஸமயம் சந்த்ரலோகத்துக்குப் போனார். 'சசிவர்ணர்' எனப்படுபவர் சசியின் உலகத்துக்குப் போனார். குழந்தைக்கு அம்புலி பிடிக்குமல்லவா?

சந்த்ரனுக்குத் தன்னுடைய அழகைப் பற்றி ரொம்ப கர்வம். கவிகள் பகவானை வர்ணிப்பதானால்கூட 'பூர்ண சந்த்ரன் மாதிரி முகமுள்ளவர்' என்று தானே சொல்கிறார்கள்? இதனால் அவனுக்கு கர்வம் தலைக்கேறி விட்டது. தன்னைத்தானே மெச்சிக்கொள்ள ஆரம்பித்துவிட்டால் அப்புறம் மெச்சத் தகுந்ததாக இருக்கிற மற்றதெல்லாம் மட்டமாகத்தான் தெரியும். இப்படித்தான் பிள்ளையாரின் அழகு சொட்டுகிற குழந்தை ரூபத்தைப் பார்த்ததும் சந்த்ரனுக்கு இளக்காரமாகத் தோன்றியது.

சாந்தமும் அன்பும் ஞானமும் ததும்பும் அவருடைய ஆனைமுகம், விசிறி மாதிரி ஆடிக்கொண்டிருக்கும் அவருடைய விஸ்தாரமான காது, நல்ல த்ருப்தியையும் குழந்தையின் கொழு கொழுப்பையும் காட்டும் அவருடைய தொப்பை, குட்டிக்கால் என்று எதைப் பார்த்தாலும் நமக்கு, "இப்படியும் ஒரு அழகு உண்டா, உண்டா?" என்று தெவிட்டாத ஆனந்தமாக இருக்க, சந்த்ரனுக்கோ, "இதென்ன, அசிங்கமாகத் தும்பிக்கையும், முறம் மாதிரிக் காதும், பானையாட்டம் வயிறும், கூழைக்காலும்?" என்று பரிஹாஸமாக இருந்தது. பக்தியுள்ளவர்களுக்கு எதெல்

Koviloor Digital Library

லாம் ரொம்பவும் கொண்டாடத் தக்கதாக இருக்குமோ அதுவே பக்தியில்லாதவர்களுக்கு நிக்ருஷ்டமாக (தாழ்வானதாக), கேலியாக இருக்கும்.

பிள்ளையாரைப் பார்த்ததும் சந்த்ரன் கேலியாகச் சிரித்தான்.

உடனே அவருக்குக் கோபம் வந்துவிட்டது. துஷ்டத்தனத்தைச் சிஷித்துத் திருத்த வேண்டியது தெய்வங்களின் பொறுப்பானதால் கோபம் வந்தது; தன்னை அவமதித்து விட்டானே என்பதற்காக அல்ல.

சந்த்ரனிடம் பிள்ளையார் மஹாகோபமாகப் பேச ஆரம்பித்தார்.

"அடேய், சந்த்ரா! நீ வெள்ளை வெளேரென்று கண்ணுக்குக் குளிர்ச்சியா யிருக்கிறாய், உன்னைக் கவிகளெல்லாம் ஸ்தோத்ரம் பண்ணுகிறார்கள் என்பதில்தானே உனக்கு கர்வம் தலைக்கேறியிருக்கிறது? நீ வெளுப்பாயிருந்தாலும் அந்த வெளிச்சம் உன் ஸொந்தச் சரக்கா என்ன? ஸூர்ய வெளிச்சத்தை இரவல் வாங்கிக்கொண்டு அந்தக் கடன் சரக்கில் அல்லவா நீ பளபளக்கிறாய்? அந்த வெளிச்சம் படாத உன்னுடைய அங்கங்கள் சந்த்ர மண்டலத்திலேயே அசிங்கமாக, திட்டுத்திட்டாகக் கரேலென்றுதான் இருக்கின்றன என்பதை மறந்துவிட்டாய் போலிருக்கிறது.

"அதுதான் போகட்டும், ரூபத்தைவிட குணம்தான் முக்யமென்றால், அதிலும் உன் லக்ஷணம் என்ன? ரூபத்திலுள்ள களங்கம் போலவே குணத்திலும் உனக்குள்ள களங்கத்தினால்தான் பத்னிகளுக்குள்ளேயே பாரபக்ஷம் பண்ணி, மாமனார் சாபத்தை வாங்கிக் கட்டிக்கொண்டு தினம் கொஞ்சமாகத் தேய ஆரம்பித்தாய். (இருபத்தியேழு நக்ஷத்ர கன்னிகளையும் கல்யாணம் செய்துகொண்டிருந்த சந்திரன் ரோஹிணி ஒருத்தியிடம் மட்டும் ப்ரியம் காட்டி மற்ற பத்னிகளை உதாஸீனம் செய்தான். இதனால் அவர்களுடைய தகப்பனாரான தக்ஷன் அவனைச் சபித்துவிட்டார்.)

Koviloor Digital Library

அப்புறம் என் தகப்பனுர் தான், தேய்ஞ்சு மாய்ஞ்சு கிடந்த உன்னே அந்த மூன்ரும்பிறை ரூபத்திலேயே தூக்கித் தன் தலேமேலே வைத்துக்கொண்டு உனக்கு மறுபடி அந்தஸ்து ஏற்படுத்திக் கொடுத்தார். அதோடு நீ ஒரேயடியாகத் தேய்ந்து மறைந்துபோய்விடாமல் உன்னேக் கொஞ்சகொஞ்சமாக வளருமாறு பண்ணினுர். ஆனுல் அப்போதுகூட உன்னேயே தெய்வமாக நம்பிவந்த பத்னிகளுக்கு நீ செய்த த்ரோஹத்தை முழுக்க மன்னிக்ககூடாது. நீ இப்பேர்ப்பட்ட தப்பு பண்ணினவனென்று லோகம் மறந்து போகக்கூடாது என்றுதான், நீ பூர்ணமாக வளர்ந்தவுடனேயே மறுபடி தேய ஆரம்பிக்கவேண்டும், மாறி மாறி அவருடைய கருணையைக் காட்டுவதற்காக வளர்வதாகவும் உன்னுடைய குணஹீனத்தைக் காட்டுவதற்காகத் தேய்வதாகவுமிருக்க வேண்டுமென்று ஏற்படுத்திவிட்டார். இதையோ, குரு பத்னியிடமே நீ தப்பாக நடந்துகொண்டதையோ எவரும் மறந்துவிடவில்லே. குண ஸம்பத்துக்காக உன்னே யாரும் பார்க்கவில்லே. கண்ணுக்குக் குளுத்தியாக வெள்ளே பூசிக் கொண்டிருக்கிருயே என்றுதான் பார்க்கிறார்கள்.

"இனிமேல் உன் ரூப ஸம்பத்துக்காகவும் உன்னே யாரும் பார்க்க மாட்டார்கள். அப்படி நான் சாபம் கொடுக்கிறேன். இனிமேல் எவரொருத்தர் உன்னேப் பார்த்தாலும், களங்கமுள்ள உன்னேப் பார்த்ததற்குப் பலனுக, அவர்களுக்கும் லோகத்தில் களங்கம் கற்பிக்கப் படட்டும்; உன்னேப் பார்க்கிறவர் மித்யாபவாதத்துக்கு ஆளாகட்டும்" என்று சபித்துவிட்டார்.

சாபத்தின் உட்கிடை

'ரொம்பவும் அழகாக இருக்கிரும், ப்ரமாதமாக அலங்காரம் பண்ணிக்கொண்டிருக்கிரும்' என்று அஹம் பாவப்படுபவர்களுக்குப் பெரிய 'பனிஷ்மென்ட்' அவர்களே யாரும் ஏறெடுத்தும் பார்க்காமல் அலக்ஷயப்படுத்தும்படிச் செய்வதுதான். அதனுல்தான் பிள்ளேயார் இப்படிச் சாபம்

Koviloor Digital Library

கொடுத்தார். சந்திரனுக்கே நேரே ஹானி உண்டாகும்படியாக, "உன் கண் அவியணும்", "நீ கல்லாகப் போகணும்" என்ற மாதிரிச் சாபம் தராமல் அவனைப் பார்க்கிறவர்களுக்கு அபவாதம் உண்டாகும்படியாகச் சபித்தார். இவர் அவனை சபிக்காவிட்டாலும், அவனைப் பார்த்துவிட்டு அபவாதப்படும் அத்தனைபேரும், "இந்த பாழாய்ப் போகிற சந்திரனை பார்த்துத்தான் நமக்கு இந்தக் கஷ்டம் வந்தது" என்று வயிறெரிந்து சபிப்பார்களல்லவா?

இன்னொன்றுகூடச் சொல்லலாம். ஒருத்தன் எத்தனைதான் குணஹீனனாக இருந்தாலும், அவனுக்கு அழகோ, அதிகாரமோ இருந்துவிட்டால் அவனை மெச்சி ஸலாம் போடும் லோக வழக்கத்தைக் கண்டிக்கவும் பிள்ளையார் இப்படிச் செய்திருக்கலாம்.

ரூபத்தினால் கர்வப்படுபவனுக்குத் தான் 'இக்னோர்' செய்யப்படுவதுதான் ஸரியான தண்டனை. குணத்தைப் பார்க்காமல் ஒருத்தனுடைய ரூபத்தை மாத்திரம் பார்த்து ஸ்தோத்ரம் செய்பவர்களுக்கு, அவர்களுடைய குணத்துக்கே தோஷம் கற்பித்து உண்டாக்கும் அபவாதம்தான் ஸரியான தண்டனை.

தன்னை இனிமேல் யாரும் ஏறெடுத்துப் பார்க்கமாட்டார்களே என்பதில் அவமானம், தப்பித் தவறிப் பார்த்துவிட்டால் அப்புறம் அபவாதத்துக்கு ஆளாகிக் கரித்துகொட்டுவார்களே என்பதில் பயம்—இரண்டும் சேர சந்த்ரன் தான் உதித்த ஸமுத்ரத்துக்குள்ளேயே போய் ஒளிந்துகொண்டுவிட்டான்.

சாப விமோசனம்

ராவேளைகளில் சந்த்ரனில்லாமல் லோகம் பலவிதமாகக் கஷ்டப்பட்டது. ஓஷதிகள் (மூலிகைகள்) சந்த்ரிகையாலேயே வளர்ப்பவையாதலால், இப்போது நிலா இல்லாமல் அவை வாடிப்போனதில் எங்கே பார்த்தாலும் வியாதிகள் உண்டாயின. எத்தனை பார்த்தாலும் போதுமென்ற

Koviloor Digital Library

த்ருப்தியைத் தராத பால் நிலவு இல்லாமல் ரஸிகஜனங்கள் வருத்தப்பட்டார்கள்,

அதனால் தேவர்கள், ரிஷிகள் எல்லாரும் லோகத்திடம் பரிவுகொண்டு ப்ரம்மாவிடம் போய் முறையிட்டார்கள்.

எப்போதுமே மும்மூர்த்திகளில் முதல்வரான ப்ரம்மா விடம்தான் முதலில் போய் வேண்டிக்கொள்வார்கள். அப் போது சில ஸமயங்களில் அவரே குறை தீர்த்துவைப்பார்; சில ஸமயங்களில், ரொம்பப் பெரிய அநுக்ரஹமாகச் செய்ய வேண்டியிருந்தால் அப்போது, தம்மிடம் பிரார்த்திப்பவர் களை விஷ்ணுவிடமோ ஈச்வரனிடமோ அம்பாளிடமோ அழைத்துக்கொண்டு போய், தாமும் சேர்ந்து முறையிடு வார். இப்படித்தான் புராணங்களில் இருக்கிறது.

சந்த்ரனை மறுபடி ஆகாசத்தில் ஸஞ்சாரம் பண்ணும் படிச் செய்யவேண்டுமென்று தேவ, ரிஷிகள் ப்ரம்மாவிடம் பிரார்த்தித்ததும் அவர், "மஹா கணபதி கொடுத்த சாபத் துக்கு நான் எப்படி விமோசனம் சொல்வது? பரமேச்வரனா லும் முடியாததாச்சே அது! ஆனபடியால் சாபம் கொடுத்த வரையே உபாஸியுங்கள். அவர் காலிலேயே விழுந்து ப்ரார்த்தனை செய்யுங்கள். அவருக்கு உகந்த திதியான சதுர்த்தியில் நக்த வ்ரதமிருந்து, விசேஷ பூஜை பண்ணுங்கள். மோதகம், அப்பம், பழம், தேங்காய் எல்லாம் நிறைய நிவேதனம் பண்ணி, மனஸ் உருக வேண்டிக்கொண்டு அவர் மனஸையும் உருக்கி அநுக்ரஹத்தை ஸம்பாதித்துக் கொள் ளுங்கள்" என்று சொல்லிவிட்டார்.

பொதுவாக வ்ரதமென்றால் பகலில் மட்டும் போஜனம் பண்ணிவிட்டு, ராத்ரி உபவாஸமிருப்பது வழக்கமென்றாலும் சில வ்ரதங்களுக்கு பகலில் உபவாஸமிருந்துவிட்டு ராத்ரி போஜனம் பண்ணவேண்டும். இப்படி மத்யான்னமெல்லாம் உபவாஸம், பூஜை, பாராயணம் என்று இருந்துவிட்டு ராத்ரி ஆஹாரம் பண்ணுவதுதான் நக்த வ்ரதம் என்பது. நக்தம் என்றால் ராத்ரி Nocturnal என்று சொல்வது இதிலிருந்து தான்.

Koviloor Digital Library

ஒவ்வொரு தெய்வத்துக்கு ஒவ்வொன்று முக்யம். சிவனுக்கு அபிஷேகம்; விஷ்ணுவுக்கு அலங்காரம்; பிள்ளையாருக்கு நைவேத்யம். ஒரு குழந்தையென்றால் அது எப்போது பார்த்தாலும் "ஹாவு ஹாவு" என்று எதையாவது தின்னத் தான் பறக்கும். கத்தியா, கபடாவா, வாயில் கொள்ளுமா கொள்ளாதா என்றில்லாமல் எதைப் பார்த்தாலும் வாயிலே அடைத்துக் கொள்ளத்தான் குழந்தை பறக்கும். அது என்ன விஷமம் பண்ணினாலும், "அப்பிச்சி தரேன்" என்றுதான் ஸமாதானம் படுத்துகிறோம்! குழந்தைஸ்வாமியான பிள்ளையாருக்குக் குறைவில்லாமல் கொழுக்கட்டை, அப்பம், பொங்கல், தேங்காய், பழ வகைகளெல்லாம் நைவேத்யம் பண்ணவேண்டும். அவ்வையாரும் அவரை ஸ்துதிக்க ஆரம்பிக்கும்போதே "பாலும் தெளிதேனும் பாகும் பருப்பும்" என்று சாப்பாட்டில்தான் ஆரம்பிக்கிறாள். இப்படியே, திருப்புகழிலும் எடுத்த எடுப்பில் "கைத்தலம் நிறைகனி அப்பமொ(டு) அவல் பொரி" என்று சாப்பாட்டு தினுஸுகளைத்தான் அடுக்கியிருக்கிறது!

தேவர்களெல்லோரும் ப்ரம்மா சொன்னபடியே பிள்ளையாரை மனோ வாக் காயங்கள் ஒன்றுபட்டுப் பூஜை பண்ணி வந்தார்கள். ஸமுத்ரத்துக்குள்ளே போய் சந்திரனைக் கண்டு பிடித்து, "நாங்கள் வேண்டிக்கொள்வது பெரிசில்லை. நீ தப்பை உணர்ந்து க்ஷமாபனம் (மன்னிப்பு) கேட்டுக் கொள்வதுதான் முக்யம். விக்நேச்வரரும் அப்போது சடக்கென்று மனஸ் இறங்கி அநுக்ரஹம் செய்துவிடுவார்" என்றார்கள்.

அவமானம், கஷ்டம் ஆகியவை வந்தால் அவையே அஹம்பாவம் பிடித்தவர்களுக்குக் கொஞ்சம் நல்ல புத்தியை உண்டாக்கிவிடுவது வழக்கம்.

சந்த்ரனுக்கும் இப்படி கொஞ்சம் நல்லறிவு உண்டாயிருந்தது. தேவர்கள் சொன்னபடி அவர்களோடு சேர்ந்து விக்நேச்வரரைப் பணிவோடு வழிபட ஆரம்பித்தான்.

கருணாமூர்த்தியான கணேசர் ப்ரஸன்னமானார். ப்ரார்த்தனைக்குச் செவி சாய்த்தார்—பெரிய செவி! 'சூர்ப்ப

Koviloor Digital Library

கர்ணம்' என்று சொல்லப்படுவது! (சூர்ப்பம் என்றால் முறம்.)

சந்த்ரன் பச்சாத்தாபத்தோடு மன்னிக்கச் சொல்லிப் ப்ரார்த்தித்தான். பெரிய மனஸோடு பிள்ளையாரும் மன்னித்தார்.

சந்த்ரனைப் பார்க்கிறவர் அபவாதத்துக்கு ஆளாக வேண்டுமென்ற சாபத்தை ரத்து பண்ணினார்—ஒரு சின்ன கண்டிஷனோடு. "ஏன் அப்படியே ரத்து பண்ணாமல் ஒரு கண்டிஷன் போடுகிறேனென்றால், என் வாயிலிருந்து ஒரு தரம் வந்துவிட்ட வார்த்தை எதுவும் அடியோடு வீணாகப் போகப்படாது. அதோடுகூட, எந்தக் காரணத்துக்காகவும் கர்வப்படக்கூடாது; இவன் அழகுக்கு கர்வப்பட்டாற்போல் வித்யை, செல்வம், அதிகாரம் முதலான எதற்கு கர்வப் பட்டாலும் உலகம் ஏற்றெடுத்தே பார்க்காத அவமானநிலைக் குத்தான் ஆளாக வேண்டிவரும் என்று ஜனங்களுக்கு என்றென்றைக்கும் ஞாபகம் இருப்பதற்காக இவனுக்குத் 'தூளிப்போற'வாவது தண்டனை இருக்கத்தான் வேண்டும். ஆகையினால் என் ஆவிர்பாவ தினமான சுக்ல பக்ஷச் சதுர்த்திகளில் மட்டும் எவரும் சந்த்ரனைப் பார்க்கக் கூடாது என்றும், மீறினால் மித்யாபவாதத்துக்கு ஆளாக வேண்டு மென்றும் ஆக்ஞை செய்கிறேன்" என்றார்.

எப்போதுமே சந்த்ரனைப் பார்க்கப்படாதென்பதைப் பரம க்ருபையோடு மாற்றி மாஸத்தில் ஒருநாள் மாத்திரம் பார்க்கப்படாது என்று செய்தார். அதை சுக்ல சதுர்த்தி யாக வைத்ததால் தம்முடைய ஸம்பந்தம் நினைவு வரும்படி யாகப் பண்ணினார்.

"பால சந்த்ரன்"

'பனிஷ்மென்டை' இவ்வளவு 'கன்டோன்' பண்ணினது (குறைத்தது) போதாதென்று, மிகவும் அருள் நெஞ்சோடு சந்த்ரனுக்குச் சில 'ப்ரிவிலேஜ்'களும் கொடுத்தார். பெரிய

Koviloor Digital Library

'ப்ரிவிலேஜ்' என்னவென்றால் பிறைச் சந்திரனைத் தூக்கிப் பிள்ளையார் தம் கிரீடத்திலேயே சூட்டிக்கொண்டதுதான்!

பரமேச்வரனைப் போலவே, அம்பாள் விக்நேச்வரர் ஆகிய இரண்டு பேருக்கும் தலையில் சந்த்ரகலை உண்டு.

இதனால் பிள்ளையாருக்கு "பாலசந்த்ரன்" என்றே ஒரு பெயரிருக்கிறது. அவருடைய ஷோடச நாமாக்களிலேயே* இது ஒரு பெயர். Baala-Chandran, அதாவது 'குழந்தை சந்த்ரன்' என்று ரொம்பப் பேர் இதைத் தப்பாக நினைத்துக் கொண்டிருக்கிறார்கள். Baa இல்லை. அது தப்பு. Bhaa என்பதே ஸரி. pa, pha, ba, bha என்று ஸம்ஸ்க்ருதத்தில் நாலு இருப்பதில் நாலாவதான dha-காரம் போட்டு Bhaala-Chandran என்று சொல்ல வேண்டும். Bhaalam என்றால் நெற்றி அல்லது முன்தலை. முன்னந் தலையில் எவர் சந்த்ரனை தரித்துக் கொண்டிருக்கிறாரோ அவர் Bhaala-Chandran. அல்லது இரண்டாவது 'ப'-வாக Phaala என்று சொல்லலாம். அப்படிச் சொன்னால் கேசத்தில் இரண்டு பக்கங்களில் ஒன்று. ஈச்வரன் ஜடாபாரத்தில் நேராகச் சந்த்ரனை வைத்துக் கொள்ளாமல் இடது பக்கமாகச் சாய்த்து வைத்துக் கொண்டிருப்பதாக அநேக சில்ப சித்ரங்களில் பார்க்கிறோமல்லவா? அங்கே பரமசிவன் Phaala-Chandraனாகவே இருக்கிறார். ஆனால் பாலசந்த்ரன் என்ற பேர் முக்யமாகப் பிள்ளையாருடையதுதான்.

ஏனென்றால் பரமேச்வரன் சந்த்ரன் பண்ணின தப்பை க்ஷமித்தது பெரிசில்லை. சந்த்ரன் ஈச்வரனிடமே நேராகத் தப்புப் பண்ணவில்லை. பத்னிகளுக்குத்தான் தப்புப் பண்ணினான். அவர் தண்டித்தார். அவன் மன்னிப்புக் கேட்டுக்கொண்டான். அவரும் மன்னித்துவிட்டார்.

பிள்ளையாரிடமோ சந்த்ரன் நேராகவே அபசாரப்பட்டு விட்டான். அவரையேதான் அவன் பரிஹாஸம் பண்ணினது. அப்படிப் பண்ணினவனை அவர் க்ஷமித்ததுதான் பெரிசு.

---

* முதல் உரையான "பெரிய இடத்துப் பிள்ளை"யில் கடைசிப் பகுதியான "முருகனும் மூத்தோனும்" பார்க்க.

Koviloor Digital Library

ஒருத்தரை ரொம்பவும் ஸ்தோத்திரித்தால், "என்ன, தலைக்கு மேலே தூக்கி வெச்சுண்டு கூத்தாடறே?" என்று கேட்கிற வழக்கமிருக்கிறது. தன்னைப் பரிஹாஸம் செய்த சந்த்ரனிடம் பரிவு கொண்ட கணபதி அவனை நிஜமாகவே தூக்கித் தலை மேல் வைத்துக்கொண்டு ஆனந்தமாகக் கூத்தாடினார். 'ந்ருத்த கணபதி', 'கூத்தாடும் பிள்ளையார்' என்று அவருக்குப் பெயர்.

'எத்தனை பார்த்தாலும் தெவிட்டாதது' என்ற பெருமை யானை, சந்த்ரன் இரண்டுக்கும் உண்டு. இப்போது இவற்றில் ஒன்று மற்றொன்றின் தலையில் போய் உட்கார்ந்துவிட்டது, பரஸ்பரம் அழகுக்கு அழகு செய்துகொள்கிற மாதிரி!

ஸங்கடஹர சதுர்த்தி

சந்த்ரனுக்கு இன்னொரு பெருமையும் கொடுத்தார் பிள்ளையார்.

ஸாதாரணமாக ஒவ்வொரு தெய்வத்துக்கும் ஒரு குறிப்பிட்ட திதி விசேஷமானதாகும். அது வளர்பிறை, தேய்பிறை என்கிற இரண்டில் ஏதோ ஒன்றில் வருவதாகத்தானிருக்கும். முருகனுக்கு ஷஷ்டி என்றால் அது சுக்ல ஷஷ்டிதான், க்ருஷ்ண பக்ஷ ஷஷ்டியில்லை. பரமேச்வரனுக்குச் சதுர்தசி என்றால் அது க்ருஷ்ண பக்ஷச் சதுர்தசிதான். அதற்கு மாஸ சிவராத்ரி என்று பெயர். ராமருக்கு நவமி பூஜை என்றால் சுக்ல நவமிதான். க்ருஷ்ணருக்கு அஷ்டமீ பஜனை என்றால் க்ருஷ்ண பக்ஷ அஷ்டமிதான். (கறுப்பன் க்ருஷ்ணன், வெள்ளை சிவன் இரண்டு பேருக்கும் க்ருஷ்ண பக்ஷம்!) அம்பாளுக்குப் பௌர்ணமி—அது சுக்லபக்ஷத்தில் மட்டுந்தான் உண்டு. ஆனால் பிள்ளையாருக்கு மட்டும் சதுர்த்தி விசேஷமென்றால், சுக்லபக்ஷ சதுர்த்தி, க்ருஷ்ண பக்ஷ சதுர்த்தி இரண்டுமே அந்த விசேஷத்துக்கு உரியனவாக இருக்கின்றன!

அவர் ஆவிர்பவித்தது சுக்ல சதுர்த்தியில்தான். அதனால் அவருக்கு ரொம்பப் பெரிய உத்ஸவமான பிள்ளையார்

Koviloor Digital Library

சதுர்த்தி சுக்ல பக்ஷத்தில்தானிருக்கிறது. அதே மாதிரி மாஸாமாஸமும் சுக்ல சதுர்த்தியில் வ்ரதம் இருப்பதுண்டு. அதோடுகூட 'ஸங்கடஹர சதுர்த்தி வ்ரதம்'' என்றும் இன்னொன்று கேள்விப்பட்டிருக்கலாம். ('ஸங்கட ஹர' என்றால் 'உபத்ரவங்களைப் போக்குகிற' என்று அர்த்தம். ஆனால் 'ஹர' என்ற இந்த முக்யமான வார்த்தையை விட்டுவிட்டு 'ஸங்கட சதுர்த்தி' என்றே சொல்கிறார்கள்!) இதுவும் விக்நேச்வரருக்கு (வேண்டுதலாக) இருக்கும் வ்ரதம்தான். இது சுக்ல சதுர்த்தியல்ல; க்ருஷ்ண பக்ஷ சதுர்த்தியேயாகும்.

இந்த ஸங்கட ஹர சதுர்த்தியைப் பிள்ளையாரேதான் ஏற்படுத்திக்கொண்டார். அது இந்த ஸமயத்தில்தான். தண்டனையை ரொம்பவும் குறைத்து, யாரும் சந்த்ரனை சுக்ல சதுர்த்தியில் பார்க்கப்படாது என்று சொன்னதுகூட அவருடைய கருணையுள்ளத்துக்குக் கஷ்டமாயிருந்தது. அதனால், அதைக் 'காம்பன்ஸேட்' செய்கிறதாக, க்ருஷ்ண பக்ஷ சதுர்த்தியில் அவனை எல்லாரும் கொஞ்சம் பஹுமானிக்கும்படிப் பண்ண வேண்டுமென்று நினைத்துச் சொன்னார். ''க்ருஷ்ண பக்ஷச் சதுர்த்தியில் வ்ரதமிருந்து எனக்குப் பூஜை பண்ணினால் நான் விசேஷமாக ப்ரீதியடைந்து எல்லா ஸங்கடங்களையும் போக்கடிப்பேன். இந்தப் பூஜை முடியும் போது ரோஹிணீ ஸமேதனான சந்த்ரனையும் பூஜை பண்ண வேண்டும்'' என்றார்.

சந்த்ரன் ரோஹிணியிடம் மட்டும் அதீத ப்ரியம் வைத்திருந்ததைக்கூட மன்னிக்கிற அளவுக்குப் பிள்ளையாரின் அருள் உள்ளம் இளகியிருந்திருக்கிறது!

கண்ணனும் சந்த்ரனும்

கோகுலாஷ்டமியில் க்ருஷ்ண பரமாத்மாவைப் பூஜிக்கும் போதும் கடைசியில் சந்த்ரனுக்கு அர்க்யம் கொடுக்கவேண்டுமென்று இருக்கிறது. பின்னாலே நம் கதையின் போக்கைப் பார்த்தால் விக்நேச்வரர் மனஸை அநுஸரித்தே க்ருஷ்ணர்

Koviloor Digital Library

தம் பூஜையிலும் இப்படி சந்த்ரனை பஹுமானிக்கும்படி ஆக்ஞை செய்திருப்பாரோ என்று தோன்றுகிறது.

இன்னொரு கதைகூடச் சொல்வதுண்டு. ராமர் ஸூர்ய வம்சத்தில் அவதாரம் பண்ணி ரவிகுல திலகன், இனகுல திலகன் என்றெல்லாம் பேர் வாங்கினதைப் பார்த்து சந்த்ரனுக்கு துக்கம் துக்கமாக வந்ததாம். அவர்கிட்டே போய், 'என்னைமட்டும் அலக்ஷ்யப்படுத்திவிட்டீர்களே!' என்று அழுதானாம். உடனே அவர், 'அழாதே! உன் பேரை என் பேரோடேயே சேர்த்துக் கொண்டுவிடுகிறேன். இனி மேலே என் பேர் ராமசந்த்ரன் தானென்று கெஜட்டிலேயே போட்டுக் கொண்டுவிடுகிறேன். இதுமட்டும் போதாது என்றால் அடுத்த அவதாரம் உன் வம்சத்திலேயே பண்ணு கிறேன்' என்று வாக்குக் கொடுத்தாராம். அதனால்தான் க்ருஷ்ணாவதாரம் சந்த்ரவம்சத்தில் பண்ணினாராம். அதோடு கூட தமக்கு ஜனனோத்ஸவ பூஜை பண்ணும்போதே சந்த்ரனை நினைத்து அர்க்யம் தரவேண்டும் என்று ஆக்ஞையிட்டு விட்டாராம்.

அபவாதம் நீங்க வரம்!

தேய்பிறைச் சதுர்த்தியில் இப்படிச் சந்த்ரனுக்கு ஒரு கௌரவம் தேடித் தந்ததோடு, வளர்பிறையிலேயே, அவனைப் பார்க்கப்படாது என்று மட்டம் தட்டிவைத்த சதுர்த்திக்கு முந்தி ஒரு தினத்தில் அவனைப் பார்த்தால் ரொம்பப் புண்யம் ஏற்படும் என்ற உயர்வையும் பிள்ளையார் அநுக்ரஹித்தார். "அமாவாஸ்யைக்கு அப்புறம் சந்த்ரன் நன்றாகத் தெரிய ஆரம்பிக்கிற முதல் திதியில் அவனைப் பார்த்தால் புண்யம் ஏற்படும்; இதனால் சதுர்த்தியில் அவனைப் பார்க்கும் தோஷம்கூட நிவ்ருத்தியாகிவிடும்" என்றார்.

அப்படித் தெரிவதுதான் மூன்றாம் பிறை என்பது. அதைத்தான் ஈச்வரன், பிள்ளையார், அம்பாள் முதலானவர்கள் சிரஸில் தரித்திருக்கிறார்கள். ப்ரதமையில் சந்த்ரன் தெளிவாக அடையாளம் கண்டு கொள்ளும்படித் தெரியாது. த்விதீயையில்தான் தெரியும். அதைத்தான் 'பிறை

Koviloor Digital Library

பார்க்கிறது' என்று சொல்லிப் பார்ப்பது. அந்த நாளை 'சந்த்ர தர்சனம்' என்றே பஞ்சாங்கத்தில் போட்டிருக்கும். சதுர்த்திச் சந்திரனைப் பார்க்கப்படாது என்பதைச் சதுர்த்தித் திதிக்கு அநேகமாக ஒரு நாள் முந்தி வருகிற நாலாம் பிறையாகவே அநுஷ்டானத்தில் வைத்துக் கொண்டிருக்கிறோம். "நாலாம் பிறை பார்த்தால் நாய் பட்ட பாடு" என்று வசனமே இருக்கிறது.

இப்படிப் பிள்ளையார் சாபவிமோசனம் தந்தபின் சந்த்ரன் மறுபடி ஆகாசத்தில் ஸஞ்சாரம் செய்ய ஆரம்பித்தான். அவனுக்கும், ஸகலருக்குமே ஸந்தோஷமாயிற்று.

சந்த்ரன் விக்நேச்வரரிடம் பரிபவப்பட்ட கதையை நாரதர் க்ருஷ்ணருக்குச் சொல்லிவிட்டு, "நீங்கள் சதுர்த்திகளிலேயும் ரொம்ப விசேஷமுள்ளதான பாத்ரபத சுக்ல சதுர்த்தியிலேயே ஒரு தரம் சந்த்ரனைப் பார்த்துவிட்டீர்கள். 'லோகத்தில் மநுஷ்யாளுக்கு ஏற்படுவதெல்லாம் நமக்கும் ஏற்படட்டும்' என்று நீங்களே ஸங்கல்பித்துக்கொண்டு இப்போது நரலீலை செய்துகொண்டிருப்பதால் விக்நேச்வர சாபம் உங்களை பாதித்துவிட்டது. அதுதான் இப்படி ஊர் வாயிலெல்லாம் விழுந்து புறப்பட்டுக்கொண்டிருக்கிறீர்கள். பரிஹாரமாக சதுர்த்தி வ்ரதமிருந்து மஹாகணபதியைப் பூஜை பண்ணுங்கள்" என்று சொன்னார்.

க்ருஷ்ணரும் பிள்ளையார் தன்னுடைய மருமான்தானே என்று நினைக்காமல், அப்படியே விதிவத்தாகப் பூஜை பண்ணினார்*. க்ருஷ்ண பக்ஷ சதுர்த்தி, சுக்ல பக்ஷ சதுர்த்தி

---

* இசைக்கலைஞரொருவர் ஸ்ரீ பெரியவாளின் திருமுன் 'ஸித்தி விநாயகம்' என்ற தீக்ஷிதர் க்ருதியைப் பாடியபின், அவர்கள் அவரிடம் ஸாஹித்யத்தைப் பதம் பதமாகக் கேட்டு, நடு நடுவே அர்த்தமும் கூறினார்கள். சரணத்தில் வரும் 'ரௌஹிணேய அநுஜார்ச்சிதம்' என்பதற்கு, "ரோஹிணியின் புத்ரன் ரௌஹிணேயன். இங்கே ரோஹிணி என்பது சந்த்ர பத்னி இல்லை; வஸுதேவ பத்னி. அவளுடைய பிள்ளையான பலராமரே ரௌஹிணேயன். அவருக்குத் தம்பி, அதாவது க்ருஷ்ணர்தான், ரௌஹிணேய அநுஜன்; அநுஜன் என்றால் தம்பி. பலராமரின் தம்பியான க்ருஷ்ணனால் அர்ச்சிக்கப்பட்டவர் பிள்ளையார் என்பதால் 'ரௌஹிணேயாநுஜார்ச்சிதம்' என்று சொல்லியிருக்கிறது. க்ருஷ்ணருக்கு எத்தனையோ பெயரிருக்க, சுற்றிவளைத்து இப்படி 'ரோஹிணியின் பிள்ளைக்குத் தம்பி என்பானேன்?' என்றால்—இந்த "ரோஹிணி" சப்தத்தைக் கேட்டால் உடனே சந்த்ரன் நினைவுவரும், அதனால் சந்த்ரனைப் பார்த்த தோஷத்

Koviloor Digital Library

இரண்டிலுமே பண்ணிஞரென்று வைத்துக்கொள்ளலாம். இல்லாவிட்டால் இதில் எது உசத்தி, எது தாழ்த்தி, ஒன்றை மட்டும் வைத்துக்கொண்டு இன்னென்றை விட்டு விடலாமா, என்றெல்லாம் தோன்றும்.

க்ருஷ்ண,சுக்ல பக்ஷ சதுர்த்திகளில் பூஜித்த க்ருஷ்ணருக்கு சுக்லாம்பரதரரான விக்நேச்வரர் தாசனம் கொடுத்தார். "நீங்கள் மநுஷ்ய ரூபத்தில் வந்து மநுஷ்யர்களைப் போலவே நடந்துகொண்டு அவர்களுக்கு வழி காட்டுகிறீர்களென்பதால்தான் என்னுடைய சாபம் உங்களையும் பாதிக்கும்படியாக ஏற்பட்டது. சீக்ரத்திலேயே உங்களுக்கு மித்யாபவாதம் நீங்கி, மேகத்திலிருந்து வெளிப்பட்ட சந்த்ரனைப் போல ப்ரகாசமாக விளங்குவீர்கள்" என்று மருமான் மாமாவுக்கு வரம் கொடுத்தார்!

லீலையின் பயன் லோகக்ஷேமம்

உடனே க்ருஷ்ணர் பிள்ளையாரை இன்னென்று கேட்டுக் கொண்டார். லோகக்ஷேமந்தான் க்ருஷ்ணருக்கு எப்போதும் மனஸில் இருப்பது. நடுவாந்தரத்தில் ஏதோ கொஞ்சம் ஒரு திவ்ய தீர்த்தத்தைப் பாசி மூடுவதுபோல, அபவாதத்தால் வந்த ஸொந்தக் கஷ்டம் அவருடைய உயர்ந்த மனஸை மூடுவதற்கு அவர் அநுமதித்தாலும் இப்போது அது தீர்ந்தவுடனேயே அவருக்கு லோகத்தின் நினைப்புத்தான் வந்தது. அதனால் விக்நேச்வரரிடம், "நீங்கள் நேரே வந்து என் க்லேசம் தீர்த்தது உங்களுடைய உதார மனஸைக் காட்டுகிறது. ஆனாலும் நீங்கள் வந்திருப்பது என் ஒரே ஒருத்தனுக்கு க்ஷேமம் கொடுப்பதோடு முடிந்தால் போதாது. உங்கள் விஜயத்தில் ஜனங்களுக்கெல்லாம் நல்லது உண்டாவதாக ஏதாவது மங்களமாகச் சொல்லிவிட்டுப் போகவேண்டும்" என்றார்.

துக்காகத்தான் க்ருஷ்ணர் பிள்ளையாரை அர்ச்சனை பண்ணிஞரென்பதும் நினைவுக்கு வரட்டும் என்றே இப்படிப் பாடியிருக்கிறார் போலிருக்கிறது" என்று விளக்கம் அருளிஞர்.

Koviloor Digital Library

பிள்ளையாருக்கும் அதுதான் பிடித்தது. முன்னே சந்த்ரனை முன்னிட்டு லோகத்திலுள்ளவர்களையெல்லாம் சபித்தோமே, அதற்கு எதிர்வெட்டாக இப்போது க்ருஷ்ணரை முன்னிட்டு லோக ஜனங்களுக்கெல்லாம் ஒரு வரம் கொடுக்க வேண்டுமென்றுதான் அவரும் நினைத்துக் கொண்டிருந்தார்.

அதனால், "சுக்ல சதுர்த்தியன்று சந்த்ரனைப் பார்த்தால் மட்டும் அபவாதம் வரத்தான் செய்யுமென்று, ஏறக் குறைய ஒரு மாஸத்துக்கு அப்புறம் வரும் பிறை தர்சனத் தால்தான் அது நீங்குமென்றும் முன்னே சொல்லியிருந் தேனல்லவா? இப்போது அவ்வளவு இடைவெளி இல்லாமல் அபவாதம் உடனே நீங்க இன்னொரு உபாயம் சொல்கிறேன். உங்களை (க்ருஷ்ணரை) ஞாபகப்படுத்திக் கொள்கிறதாகவும் இருக்கும் உபாயம் சொல்கிறேன். அதாவது என்னை நீங்கள் பெருமைப்படுத்தியிருக்கிற இந்த ஸ்யமந்தக மணி வ்ருத்தாந்தத்தைப் படித்தாலோ, கேட்டாலோ போதும், உடனேயே மித்யாபவாதம் போய்விடும். சதுர்த்திச் சந்த்ரனைப் பார்த்து விட்டு அப்போதே இப்படிப் பாராயணமோ ச்ரவணமோ பண்ணினால்கூட அந்த க்ஷணமே தோஷம் நிவ்ருத்தியாகிவிடும்; அபவாதம் உண்டாகாது. ஸாக்ஷாத் என்னுடைய ஆவிர்பாவ தினமான (பிள்ளையார் சதுர்த்தியான) பாத்ரபதத்தில் வரும் மஹா சதுர்த்தியில் சந்த்ரனைப் பார்த்திருந்தால்கூட ஸரி, அந்த தோஷத்தையும் இந்த உபாக்யானம் போக்கிவிடும். இது மட்டுமில்லை. பொதுவாகவே என்ன மனோ சஞ்சலம் ஏற்பட்டாலும் இந்தக் கதையின் படனம் அல்லது ச்ரவணம் —அதாவது இதைப் படிப்பது, அல்லது கேட்பது—அதைப் போக்கி நல்ல சாந்தியையும் தெளிவையும் கொடுத்துவிடும்" என்று அநுக்ரஹித்தார்.

அவதார புருஷர்களுக்கு உண்டாகும் கஷ்டங்கள்கூட முடிவில் லோகோபகாரமாகவே ஆகும். அவதார லீலை எதுவானாலும் முடிவிலே லோகக்ஷேமத்துக்கே காரண மாகும்.

Koviloor Digital Library

ஒரு ச்லோகம் போதும்!

மித்யாபவாதம் போகவும், நாலம் பிறை பார்த்த தோஷம் போகவும் ஸ்யமந்தக மணி சரித்ரத்தை முழுக்கப் பாராயணம் பண்ணமுடியாவிட்டாலும் அந்தக் கதையை மனஸிலாவது நினைத்துப் பார்க்கவேண்டும். அதோடு இதிலே ஒரு ச்லோகத்தை மட்டும் சொல்லிவிடவேண்டும். ஸ்யமந்தகம் என்ன ஆச்சு என்று தெரியாத மாதிரி நரலீலையில் பகவான் துப்பு துலக்கிக் கொண்டிருந்தபோது நடந்ததையெல்லாம் அவருக்கு வெட்ட வெளிச்சமாக்குவதாக ஜாம்பவதி ஒரு ச்லோகம் பாடினளே, அந்த key ச்லோகத்தைத்தான் சொல்லவேண்டும்.

ஸிம்ஹ: ப்ரஸேநம் அவதீத் ஸிம்ஹோ ஜாம்பவதா ஹத: |
ஸுகுமாரக மா ரோதீ: தவ ஹ்யேஷ ஸ்யமந்தக: ||

இந்த ஒரு ச்லோகத்தைச் சொல்லும்போதே தன்னுல் முன்னும் பின்னுமாக இந்த உபாக்யானம் முழுக்க நினைவு வந்துவிடும். இரண்டாம் வரி நமக்கே சொல்கிற மாதிரி ஆறுதலாக இருக்கிறது. "ஸுகுமாரக மா ரோதீ :— அழாதேடா குழந்தே! "ஸுகுமார!" என்று ஜாம்பவானின் பிள்ளையுடைய பேரைச் சொல்லிக் கூப்பிட்டாலும், 'ஸு-குமாரன்' என்றுல் 'நல்ல பிள்ளை' என்று அர்த்தமானதால், அது நமக்கும் பொருந்தும். தவ ஹ்யேஷ ஸ்யமந்தக: —மணி உனக்கேதான்!" பிள்ளையார் என்கிற மணி, கண்ணன் என்கிற மணி, இரண்டு மணியும் நமக்கே நமக்குத் தான்! அவர்களுடைய அருள் இருக்கும்போது நாம் எதற்கும் அழவேண்டாம்.

பூஜையிலேயே இந்த ச்லோகத்தைச் சொல்ல வேண்டுமென்று வ்ரத முறைகளை விவரிக்கும் "வ்ரத சூடாமணி கல்ப"த்தில் சொல்லியிருக்கிறது.

அபவாத நீக்கம்

பிள்ளையார் வாழ்த்தி வரம் கொடுத்தாற்போலவே க்ருஷ்ண பரமாத்மாவின் மேலே சுமத்தின அபவாதம் சிறிது காலத்தில் விலகிற்று. எப்படியென்றுல்—

Koviloor Digital Library

த்வாரகையிலே துர்பிக்ஷம் உண்டாயிற்று. அந்த ஸமயத்தில் காசியிலே ஸகல ஸுபிக்ஷங்களும் நாளுக்கு நாள் வ்ருத்தியாகிக்கொண்டு வருவதாக த்வாரகைக்குத் தகவல் கள் வந்தன. அங்கேதான் அக்ரூரர் இருக்கிறார்; அபரிமித மாக ஆலய கைங்கர்யங்கள் பண்ணிக் கொண்டிருக்கிறா ரென்றும் ஸமாசாரம் வந்தது. அதிலிருந்து இரண்டும் இரண்டும் நாலு' என்பதுபோல விஷயம் புரிந்துவிட்டது. "அக்ரூரரிடம்தான் ஸ்யமந்தகம் இருக்கவேண்டும்; அதன் ப்ரபாவந்தான் இந்த ஸுபிக்ஷம்' என்று புரிந்துவிட்டது.

ஸர்வஜ்ஞரான பகவானுக்கு வெளியிலிருந்து ஒரு ந்யூஸும் வரவேண்டாம், 'ராய்ட்டர்' வேண்டாம், 'பி.டி.ஐ' வேண்டாம் என்றாலும் இப்போது எல்லாம் நர லீலையாகத்தானே பண்ணிக்கொண்டிருந்தார்? அதனால் இப்படி ந்யூஸ் வந்ததால்தான் தமக்குத் தெரிந்ததுபோல அக்ரூரருக்கு ஆளனுப்பினார்.

ஆள் மூலம் ஸந்தேசம் (சேதி) அனுப்பினார். "ஸத்தான தாங்களில்லாமல் த்வாரகை த்வாரகையாக இல்லை. அதனாலே தாங்கள் உடனேயே திரும்பி வந்து யதுகுலத்துக் குப் பெரியவராக இருந்துகொண்டிருக்க வேண்டும். ஸ்யமந்தகம் உங்களிடம் இருந்தால்கூடப் பரவாயில்லை. ஸத்ராஜித்தோ போய்விட்டார். அவருக்கு ஆண் ஸந்ததியு மில்லை. ஸத்யபாமாவுக்குத் தகப்பனார் போய்விட்டதில்தான் துக்கமே தவிர ஸ்யமந்தகம் இருப்பதிலோ போவதிலோ அவளுக்குக் கருத்து இல்லை. எனவே, வேறு யாரிடமும் இருப்பதைவிட நல்ல அநுஷ்டானமும், சீலமும் உள்ள உங்களிடம் அது இருப்பதே நல்லது. (தனக்கு அதை வைத்துக்கொள்ள ஸகல உரிமையும், யோக்யதையும் இருந்துங்கூட பகவான் இதைக் கொஞ்சங்கூடக் காட்டிக் கொள்ளாமல் ஸ்ந்தேசம் அனுப்புகிறார்.) ஆனாலும் என் தமையனாருக்கு ஸ்யமந்தகம் விஷயமாக என்னிடம் ஸந்தேஹம் ஏற்பட்டிருக்கிறது. அவருக்கே ஏற்பட்டிருக்கும்

Koviloor Digital Library

போது. நாளைக்கு ஜாம்பவதிக்கும் கூடஇல்லாத பொல்லாத ஸந்தேஹங்கள் ஏற்படலாம். ஒருவேளை மணி என்னிடம் தான் இருக்குமோ, ஸத்ராஜித்துத்தான் அதைத் தபஸினுல் முதலில் பெற்றவராகையால் அவருடைய பெண்ணுக்குப் பிற்பாடு தந்துகொள்ளலாமென்று அதை ஒளித்து வைத்துக் கொண்டிருக்கிறேனே என்று ஜாம்பவதி ஸந்தேஹப் படலாம். சிங்கத்துடன் சண்டை போட்டு வதம் செய்து மணியை அடைந்த ஜாம்பவானுக்குத்தான் அது ஸொந்தம் என்று நான் நினைத்து, பிற்காலத்தில் அவர் பெண்ணான ஜாம்பவதிக்கு அதைக் கொடுக்கவேண்டுமென்றே ஒளித்து வைத்துக்கொண்டிருக்கிறேனே என்று பாமா நினைக்கலாம். அதனுல் இவர்கள் ஸந்தேஹமும், த்வராகா ஜனங்கள் எல்லோருடைய ஸந்தேஹமும் தீர்கிற முறையில் நீங்கள் மணி உங்களிடம்தான் இருக்கிறது என்று பஹிரங்கமாகக் காட்டி, இங்கே நம் ஊரிலேயே அதை வைத்துக்கொண்டு நிம்மதியாக வாஸம் பண்ணவேணும். அதனுல், தற்போது துர்பிக்ஷம் கண்டுள்ள நம் ராஜ்யமும் ஸுபிக்ஷமடைய உபகாரம் பண்ணவேணும்" என்று சேதி அனுப்பினுர்.

சேதியில் நிஜமான அன்பும் அபிமானமும் இருக்கும் போதே 'டிப்ளமஸி'யும் இருக்கிறது!

நடுவிலே ஏதோ அக்ரூரர் மனஸ் குழம்பிப் போயிருந் தாலும் உள்ளூர அவர் பரம பாகவதரானபடியால் இப்போது பகவானே தன்னைக் கூப்பிட்டனுப்புகிருரென்ற தும், பழைய பக்தி கரை புரண்டுவர அப்படியே த்வார கைக்கு ஓடோடி வந்தார். பகவானின் காலில் விழுந்தார்.

"நீ வெச்சுக்கோ" என்று பகவான் சொல்லியிருந்த போதிலும், 'ஸகல செல்வமும், அந்த லக்ஷ்மீபதி ஒருத்தனைத் தான் சேர்ந்தது! இத்தனை நாள் அவனுக்குத் தெரியாமல் மணியை நாம் வைத்திருந்து ராஜ்யத்தைவிட்டே கடத்திக் கொண்டு போனது மஹா தப்பு, அபசாரம்' என்றுதான் அக்ரூரர் நினைத்தார்.

Koviloor Digital Library

'அதனால் ஸ்யமந்தகத்தை பகவானுக்கே அர்ப்பணம் செய்தார்.

பகவான் அவரைவிடப் பிடிவாதமாக, "நானேதான் இதை உங்களுக்குக் கொடுக்கிறேனென்று வைத்துக் கொள்ளுங்கள். நான் ப்ரியமாகக் கொடுக்கிற ஒன்றை நீங்கள் வேண்டாமென்று மறுக்கலாமா? எனக்கு வேண்டிய தெல்லாம் என் மீதுள்ள அபவாதம் போகவேண்டும், மணி யின் மஹிமையால் த்வாரகை துர்பிக்ஷம் நீங்கி ஸுபிக்ஷமாக இருக்கவேண்டும் என்பதுதான்" என்று சொல்லி, ஸ்யமந்த கத்தை அக்ரூரரே வைத்துக்கொள்ளுமாறு செய்துவிட்டார்.

த்வாரகையை நிர்மாணித்தவர், உக்ரஸேன ராஜா வையே ராஜாவாக்கியவர், யதுகுலத்தின் ச்ரேஷ்டமான தலைவர் என்ற முறைகளில் பகவானுக்குப் பொது வாழ்க்கை யின் (Public life என்கிறார்களே, அதில்) முக்யமான ஸ்தான மிருந்தது. இப்படிப்பட்டவர்கள் ஏதோ தங்கள் ஸொந்த கௌரவத்துக்காக மட்டுமின்றி, ஸமூஹம் இவர்களைப் பற்றிய வம்பு தும்புகளினால் கெட்டுப்போகக்கூடாது என்பதை உத்தேசித்தும் ஸந்தேஹத்துக்கு இடமில்லாதவர்களாக வாழவேண்டும்; தாங்கள் அப்படி வாழ்கிறோமென்று நிரூபித்தும் காட்டவேண்டும். வெள்ளைக்காரர்களுங்கூட, "ஸீஸரின் பெண்டாட்டியானால் 'ஸஸ்பிஷ'னுக்கு இடம் தராமல்தான் இருக்கணும்" என்று சொல்கிறார்கள். இந்த ரீதியில்தான் பகவான் தம் மீதான மித்யாபவாதத்தைப் போக்கிக்கொள்ளப் பாடுபட்டது; வாஸ்தவமாகவே தம் முடைய கௌரவதையிலுள்ள ஸ்வய அபிமானத்தால் அல்ல! ட்ராமா நாடக ரஸத்தோடு இருக்கவேண்டுமென்றே தாம் நிஜமாக இதற்காக வ்யஸனித்ததாக வேஷம் போட்டார்!

இந்த ட்ராமாவைச் சேர்ந்ததுதான் மணி போனதால் த்வாரகையில் துர்பிக்ஷம் என்று காட்டியதும், இப்போது அது வந்து ஸுபிக்ஷம் ஏற்பட வேண்டுமென்றதும். மங்களங்களுக்கெல்லாம் நிலயமான பகவானே த்வாரகை

Koviloor Digital Library

யில் இருக்கும்போது மணியால்தானு அதற்கு மேன்மையும் தாழ்மையும் ஏற்படவேண்டும்? ஏதோ கர்மாவுக்காக த்வாரகா ஜனங்களுக்கு துர்பிக்ஷத்தைக் கொடுத்தார். இப்போது அநுக்ரஹிக்க வேண்டுமென்று எண்ணம் கொண்டார். இதையே லீலையாக ஸ்யமந்தகத்தோடு பொருத்திவிட்டார்.

அவர் சொன்னபடியே அக்ரூரர் த்வாரகையில் ஸ்யமந்தகத்தோடு தங்கினுர்.

ஜனங்களுக்கு உண்மை தெரிந்தது. பகவான்மேல் சுமத்தப்பட்ட அபவாதம் நீங்கிற்று.

மணியை க்ருஷ்ணர் அபஹரிக்கவில்லை; அக்ரூரரிடம் தான் அது இருக்கிறது; அதை வைத்துக்கொண்டு அவர் த்வாரகையிலேயே இருக்கிறுர்; ஊரும் செழிப்பாகிவிட்டது என்று தெரிந்ததும் பலராமர் விதேஹ ராஜ்யத்திலிருந்து திரும்பி வந்துவிட்டார். க்ருஷ்ணரை ஸந்தேஹித்ததற்காக ரொம்பவும் பச்சாத்தாபப்பட்டு வருத்தம் தெரிவித்துக் கொண்டார்.

க்ருஷ்ண பரமாத்மா, "இது உங்கள் யாருடைய தப்புமில்லை. நான் சதுர்த்திச் சந்த்ரனைப் பார்த்த தப்புத்தான் எல்லாவற்றுக்கும் காரணம். முடிவில் எல்லாம் நல்லதற்குத் தான்—இது அத்தனையும் விக்நேச்வரர் ப்ரபாவத்தைத் தானே வெளிப்படுத்தியிருக்கிறது?" என்றுர்.

க்ருஷ்ண பரமாத்மாவுக்கும் விக்நேச்வரர் பூஜிக்கப்படும் தெய்வமாக இருந்து அநுக்ரஹம் செய்த கதை இதுதான்.

ஜயந்திகளின் விசேஷம்

ஸௌரமானப் பஞ்சாங்கத்தைப் பின்பற்றும் தமிழ் தேசத்தவர்களுக்கு ஒரு பெரிய அத்ருஷ்டம் நம்முடைய ஆவணி மாஸமொன்றிலேயே பெரும்பாலும் இந்த இருவரின்

Koviloor Digital Library

அவதார தினங்களான கோகுலாஷ்டமியும் பிள்ளையார் சதுர்த்தியும் வந்துவிடுகின்றன. மற்றவர்களுக்கு கோகுலாஷ்டமி ச்ராவண மாஸத்தில், விநாயக சதுர்த்தி பாத்ரபத மாஸத்தில் என்று இருக்கிறது.

ஆவணி மாஸத்தில்தான் வெள்ளரிக்காய் யதேஷ்டமாகக் காய்ப்பது. வெள்ளரிக்காயின் விசேஷம் என்ன என்றால் இது ஒன்றுதான் பழுக்காமல் காயாய் இருக்கும் போதே அப்படியே சமைக்காமல் ருசித்துச் சாப்பிடக் கூடிய ஸாத்விகமான ஸ்வதேசக் காய்கறி. பிஞ்சுப் பிராய லீலைகளாலேயே மனஸைக் கொள்ளை கொள்ளும் க்ருஷ்ணர், பிள்ளையார் இரண்டு பேருக்கும் பொருத்தமாகப் பிஞ்சாகச் சாப்பிடக்கூடிய வெள்ளரி இவர்களுடைய ஜயந்தியில் நிறையக் காய்க்கிறது. நாமோ மனஸில் பழுத்துப் பக்வமாகாத காயாக இருப்பவர்கள். வெள்ளரிக்காய்களை இவர்களுடைய ஜனனோத்ஸவ பூஜையில் அர்ப்பணம் பண்ணி ப்ரஸாதமாகச் சாப்பிடவேண்டும். "நீங்கள் காயாக இருந்தாலும் உங்களையும் இந்த வெள்ளரிப்பிஞ்சு மாதிரி ருசியாக, குளிர்ச்சியாகச் செய்கிறோம்" என்று அந்த இரண்டு பேரும் அநுக்ரஹம் செய்வார்கள்.

முடிவுரை

இப்படியாகப் பிள்ளையார் தாம் பெரிய இடத்துப்பிள்ளையாக இருப்பது மட்டுமில்லாமல், தம் குடும்பத்துப் பெரியவர்களான அப்பா, அம்மா, மாமா எல்லோருக்கும் ஒவ்வொரு ஸந்தர்பத்தில் தாமே பெரியவராக இருந்திருக்கிறார்.

விக்னங்கள் தீர்ந்து வெற்றி கிடைப்பதற்காகப் பரமேச்வரன், லலிதாம்பிகை, ராமர் ஆகியவர்களும், விவாஹமாவதற்காக ஸுப்ரஹ்மண்யரும், லோகாபவாதம் நீங்குவதற்காக க்ருஷ்ண பரமாத்மாவும் பூஜை பண்ணின அந்தப் பெரியவரை—குழந்தையிலும் குழந்தையாக இருந்து கொண்டே பெரிய பெரிய தெய்வங்களுக்கும் பெரியவரா

Koviloor Digital Library

யிருந்தவரை - தாமும் நம்முடைய வாழ்க்கைப் போராட்டத்தில் ஏற்படும் அநேக இடையூறுகள் நீங்கி வெற்றி கிடைப்பதற்காகவும், குறைகள் - தோஷங்கள் - அபக்யாதிகள் விலகுவதற்காகவும் பயபக்தியோடு, அன்போடு வழிபடுவோம்.

Koviloor Digital Library

குரு

Koviloor Digital Library

Koviloor Digital Library

குரு குலம்; கடிகா ஸ்தானம்

குரு, ஆசார்யர், வாத்தியார்

குரு, ஆசார்யர்* என்ற வார்த்தைகளை உசந்த மட்டத்தில்தான் உபயோகிக்கிறோம். ஸாதாரண லெவலில், ஒன்றைச் சொல்லிக் கொடுக்கிறவருக்கு "வாத்தியார்" என்றே பெயர் சொல்கிறோம். பெரிதாக தீக்ஷை கொடுத்து மந்த்ரம், பூஜை எடுத்து வைப்பவரையும், யஜ்ஞம், ஹோமம் விஸ்தாரமாக நடத்திக் கொடுப்பவரையும் ஆசார்யர் என்கிறோம். சின்னதாக திவஸம், திங்கள் பண்ணி வைப்பவரையும், சதுர்த்தி பூஜை, த்வாதசி பூஜை நடத்தித் தருபவரையும் வாத்தியார் என்கிறோம். தத்வ சாஸ்த்ரமோ, வேறே சாஸ்த்ரமோ, ஸங்கீதம் முதலானதோ ஒருத்தரையே ஆச்ரயித்து அவரிடம் பல வருஷம் கற்றுக்கொண்டால், அவரை குரு என்கிறோம். ஸ்கூலில், காலேஜில் பல பேரில் ஒருத்தராகப் பாடம் சொல்லிக் கொடுப்பவரை வாத்தியார் என்று சொல்கிறோம். பள்ளி 'ஆசிரியர்', கல்லூரி 'ஆசிரியர்' என்பதாக எழுதும்போதும், ப்ரஸங்கத்திலும் மட்டும்

---

* "தெய்வத்தின் குரல்" மூன்றும் பகுதியிலுள்ள "குரு, ஆசார்யர்" என்ற உரை பார்க்க.

Koviloor Digital Library

'ஆசிரியர்' என்கிறோம். பேச்சு வழக்கிலே ஆசிரியர் என்று சொல்வதில்லை; வாத்யார்தான். 'ஆசார்யர்' என்பதுதான் ஆசிரியராயிருக்கிறது.

தமிழ் நாட்டில் மட்டும் எப்படியோ எழுத்தாளர்களையும் பத்ரிகை எடிடர்களையும் கதாசிரியர், பத்ரிகாசிரியர் என்றெல்லாம் 'ஆசிரியர்' பேர் கொடுத்துச் சொல்வதாக ஏற்பட்டிருக்கிறது. கல்விச் சாலையில் எழுத்தறிவிப்பவன் ஆசிரியன் எனப்படுவதிலிருந்தே எழுத்தைத் தொழிலாகக்கொண்ட ரைட்டர்கள், எடிடர்கள் ஆகியவர்களையும் ஆசிரியரென்று சொல்லும் வழக்கம் வந்துவிட்டது போலிருக்கிறது. அல்லது, நடைமுறை எப்படி இருந்தாலும், கதை எழுதுகிறவர்களும் பத்ரிகை நடத்துகிறவர்களும் ஆசார்ய ஸ்தானத்திலிருந்துகொண்டு நல்லறிவை வளர்ப்பவர்களாக இருக்க வேண்டுமென்ற அபிப்ராயத்தில் அவர்களை ஆசிரியர்களாகச் சொல்லும் வழக்கம் உண்டாயிருக்கலாம்.

பேச்சு வழக்கில் சொல்லும்போது ஸமய ஸம்பந்தமானாலும் ஸரி, மற்ற கலைகள் சாஸ்த்ரங்கள் ஸம்பந்தமானாலும் ஸரி, நமக்கு ஒன்றைச் சொல்லிக் கொடுப்பவரை 'வாத்தியார்' என்றே சொல்கிறோம்; ஆசிரியர், ஆசார்யர் என்றெல்லாம் அல்ல.

'உபாத்யாயர்' என்ற ஸம்ஸ்க்ருத வார்த்தைதான் வாத்யார் என்றாகியிருக்கிறது.

உபாத்யாயர் என்றால் என்ன?

உப அத்யாயர்தான் உபாத்யாயர்.

அத்யாயர் என்றவுடன் "அத்யாயம்" நினைவு வரும்.

வேதத் தொடர்பு

'அத்யாயம்' என்றால் தொடர்கதையில் ஒவ்வொரு வாரமும் வருகிற பாகம் என்று சொல்வீர்கள்! இது தற்காலத்

Koviloor Digital Library

தில் ஏற்பட்ட பேர். ஒரு புஸ்தகத்தின் ஒரு ஸெக்ஷனுக்கு 'அத்யாயம்' என்ற பேர் பிற்காலத்தில் வந்தது. ஆதியில், எழுதவே கூடாத புஸ்தகமாக, காதால் கேட்டுக் கேட்டே பாடம் பண்ண வேண்டிய புஸ்தகமாக உள்ள வேதத்தைப் படிப்பதற்குத்தான் அத்யயம், அத்யயனம், அத்யாயம் என்றெல்லாம் பேர் இருந்தது. வேதத்தை வைத்துத்தான் நம் வாழ்க்கையில் ஸகலமுமே. ஆதலால், பிற்பாடு கதை, காவ்யம், ஸெக்யுலர் ஸயன்ஸ், ஆத்மார்த்தமான சாஸ்த்ரம் எதுவானாலும் அதில் படிக்க வேண்டியவற்றைப் பகுதி பகுதியாக வரையறை செய்தபோது அவற்றுக்கும் அத்யாயம் என்று பெயர் கொடுத்தார்கள். புஸ்தகத்தின் ஸெக்ஷன் (பகுதி), ஸப் ஸெக்ஷனுக்கு (உட்பிரிவு) அநேகப் பெயர்கள் இருப்பதில் அத்யாயம் என்பதும் ஒன்றாயிற்று. காண்டம், கண்டம், ஸர்கம், படலம், பர்வம், பரிச்சேதம், உச்சவாஸம், உல்லாஸம், அங்கம், ப்ரகரணம், ஸ்கந்தம் என்றிப்படி அநேகப் பெயர்களில் ஒரு புஸ்தகத்தின் பகுதிகளைச் சின்னதும் பெரிசுமாகப் பிரிப்பதுண்டு. அவற்றிலே வேத அடிப்படை கொண்ட வார்த்தையாக அத்யாயம் என்பது இருக்கிறது.

எப்படி ஸகலத்திலும் வேத ஸம்பந்தமிருக்கிறது என்பதற்கு இன்னொன்று சொல்கிறேன். Lesson என்பதைப் 'பாடம்' என்கிறோம். அது ஜாக்ரஃபியானாலும், "வேதம் பொய்" என்று சொல்கிற நம்முடைய ஆராய்ச்சியாளர்களின் ஹிஸ்டரியானாலும், எந்த லெஸனும் 'பாடம்'தான். இதே போலப் பள்ளிக்கூடத்தைப் 'பாடசாலை' என்கிறபோதும் அதிலே 'பாடம்' வந்து உட்கார்ந்து கொண்டிருக்கிறது! நாஸ்திகம் சொல்லிக் கொடுப்பதற்கே ஒரு ஸ்கூல் வைத்தால் அதுவும் பாடசாலைதான். ஆனால் 'பாடம்' என்பதற்கு ஒரிஜினல் அர்த்தம் என்னவென்றால் வேதம் ஓதுவதுதான். நித்ய கர்மாக்களில் ஒன்றாக ப்ரஹ்ம யஜ்ஞம் என்று வேத அத்யயனம் செய்வதற்கே பாடம் என்று பெயர். "பாட (tha)" என்று அழுத்திச் சொல்லவேண்டும்.

Koviloor Digital Library

வேத வாக்யங்களைக் கற்று ஒப்பிப்பவன் 'பாடி'. உதாரணமாக 'கனம்' என்ற முறையில் வேதத்தின் பதங்களைக் கோத்து வாங்கிச் சொல்வதற்கு அறிந்தவர் கனபாடி. ஒருத்தரோடு சேர்ந்து வேத அத்யயனம் பண்ணுகிற மாணவனை ('மாணவன்' என்ற வார்த்தைக்கு அப்புறம் வருகிறேன்) ஸஹபாடி என்பார்கள். நடைமுறையிலோ, வேதஸம்பந்தம் இருக்கவேண்டுமென்றில்லாமல் எந்தத் துறையிலும் நம்முடன்கூட வேலை செய்பவரை 'சகபாடி' என்கிறோம். தமிழ் தேசத்தில் வேத வழக்கு எப்படி ஆழ ஊறியிருக்கிறது என்பதற்காகச் சொல்கிறேன்.

உபாத்யாயரும் ஆசார்யரும்

வாத்யார்-உபாத்யாயர்-அத்யாயம் என்பதிலிருந்தோம். அத்யாயம் என்கிற வேதக் கல்வியைச் சொல்லிக் கொடுப்பவர் எவரோ அவர் அத்யாபகர். வேதம் கற்றுக் கொடுப்பதற்கு 'அத்யாபனம்' என்றும், கற்றுக்கொள்வதற்கு 'அத்யயனம்' என்றும் பெயர். கற்றுக் கொடுப்பவர் அத்யாபகர். உப-அத்யாபகர்தான் உபாத்யாயர். உபாத்யாபகர் என்றில்லாமல் 'உபாத்யாயர்' என்றே இருக்கிறது.

'உப' என்று ஒரு வார்த்தைக்கு முன்னே சேர்க்கிற prefix-குப் பல அர்த்தங்கள். அதில் நமக்கு குறிப்பாகத் தெரிவது, மூலமாக முக்யமாக இருக்கப்பட்ட ஒன்றுக்குக் கீழே, அதற்குத் துணையாக, அதன் கார்யத்தையே சின்ன அளவில் செய்வதாக இருப்பதை 'உப' என்பது. அங்கம்—உபாங்கம்; புராணம்—உபபுராணம்; ஜனாதிபதி — உப ஜனாதிபதி. "உப" என்பது, "உப" போடாமல் வரும் மூலத்துக்கு subordinate (கீழ் ஸ்தானத்தில் அடங்கியிருப்பது). முக்யமாயிருப்பதற்கு இது கீழ் லெவல். 'உப' போடாதது ஸுபீரியர்; 'உப' போட்டது இன்ஃபீரியர் என்ற அர்த்தத்திலேயே பொதுவாக வருகிறது.

'உபாத்யாயர்' என்பவர் அத்யாபகருக்கு உதவியாக, துணையாக, அவருக்கு அடுத்த ஸ்தானத்தில் இருப்பவர்.

Koviloor Digital Library

அத்யாபகருக்கு உள்ள பெருமை இவருக்கு இல்லாமல் கொஞ்சம் இன்ஃபீரியராக நினைக்கும்படியும் சாஸ்த்ரத்தில் சொல்லியிருக்கிறது. அது என்னவென்று சொல்கிறேன்.

வேதம் கற்றுக்கொடுப்பவரான அத்யாபகர் என்பவரில் இரண்டு தினுஸு உண்டு; ஒன்று ஆசார்யர், இன்னொன்று உபாத்யாயர் என்று ஸ்ம்ருதிகளில் சொல்லியிருக்கிறது. ஆசார்யருக்கும் உபாத்யாயருக்கும் என்ன வித்யாஸமென்று ஸ்ம்ருதிகளில் ரொம்பவும் சிறப்பாகக் கருதப்படும் மநு ஸ்ம்ருதியிலிருந்து தெரிகிறது.

ஆசார்யரென்பவர் வயிற்றுப் பிழைப்புக்காகப் பாடம் சொல்லிக் கொடுப்பவரல்ல. பிராம்மணனின் கடமை தனக்குத் தெரிந்த வித்யை தன்னோடு அழியாமல் என்றும் ப்ரகாசித்துக் கொண்டிருக்கும்படிச் செய்வது என்ற ஒன்றுக் காகவே அவர் குருகுலம் அமைத்துப் பாடம் சொல்லித் தருவார். சேர்கிற சிஷ(சிஷ்ய)ப் பிள்ளைகளிடம் அவர் ஃபீஸ் (தக்ஷிணை) பேசிக்கொள்ள மாட்டார். பாடமெல்லாம் கற்றுக் கொடுத்து முடித்த பிறகுதான்—ஸாதாரணமாக இதற்குப் பன்னிரண்டு வருஷங்கள் ஆகும்—சிஷ்யனே விஞ்ஞாபித்துக் கொண்டதன் மேல் அவர் ஏதாவது தக்ஷிணை கேட்பார். பொன்னை வைக்கிற இடத்தில் பூவை வைத்தாலும் த்ருப்தியாயிருந்து விடுவார். ஸத்வித்யை ஸத்பாத்ரத்தில் போய்ச் சேரவேண்டுமென்ற ஒன்றுக்காகவே தொண்டதண்ணி வற்றப் பாடம் சொல்லிக் கொடுத்து அதோடு 'ஸ்கூல் பீரியட் முடிந்தபின் மாணவன் தொல்லை யில்லை' என்றில்லாமல் அவனைத் தன்னுடனேயே வருஷக் கணக்கில் சேர்ந்து வஸிக்கும்படியாக குருகுலம் வைத்துக் கொண்டு .அவன் நல்ல ஒழுக்கசாலியாக உருவாவதற்கும் பொறுப்பு எடுத்துக்கொள்பவரே ஆசார்யர்.

இப்படி அநேக குருகுலங்கள் அங்கங்கேயும் இருந்த தேசம் இது என்று நினைத்தாலே பெருமையாயிருக்கிறது. பசித்தவன் பழங்கணக்குப் பார்ப்பதாக இது முடிந்து போகக் கூடாது என்பதற்காகத்தான் இதையெல்லாம்

Koviloor Digital Library

'ஆசார்ய'ப் பெயர் போட்டுக் கொண்டிருக்கும் நாங்கள் தொண்டைதண்ணி வற்றச் சொல்லிக்கொண்டிருப்பது.

போதனை ஜீவனோபாயமாக

இம்மாதிரி, வருங்காலத்தில் வித்யை வாழ வேண்டு மென்ற உயர்ந்த நோக்கத்துக்காக இல்லாமல் வயிற்றுப் பிழைப்புக்காகப் பாடம் சொல்லித் தருபவர்தான் உபாத்யாயர் என்று அவரை 'ஆசார்ய'ரிலிருந்து வித்யாஸப் படுத்தி மநுஸ்ம்ருதி சொல்லியிருக்கிறது. ஃபீஸுக்காகச் செய்கிற இவரை 'ப்ருதக அத்யாபகர்'—கூலிக்காக வேலை செய்பவர்—என்று சொல்லியிருக்கிறது. வேத வித்யையில் ஏதாவது ஒரு பகுதியை மட்டும் போதித்து அதற்காக இவர் சம்பளம் பெறுவார். ("ஏகதேசம் து வேதஸ்ய வேதாங் காங்யபிவா புந: | யோ (அ)த்யாபயதி வ்ருத்யர்த்தம் உபாத்யாய: ஸ உச்யதே||")

பழைய நாட்களில் இப்படி வ்ருத்யர்த்தம் (ஜீவனோபாயத்துக்காகவென்றே), வயிற்றுப் பிழைப்புக்கென்றே பாடம் சொல்லிக் கொடுத்தவர்கள் மிகவும் குறைவு. குரு குலங்கள் இந்தக் கொடுக்கல் வாங்கல் அசுத்தி படியாமல் நல்ல ஆசார்யர்களாலேயே நடத்தப்பட்டு வந்தன. ஆனாலும் இப்படிக் கூலிக்காக வேலை செய்கிறவர்களும் சில பேர் அப்போதே இருந்திருப்பதால்தான் தர்ம சாஸ்த்ரங் களிலேயே இவர்களைப் பற்றிய ப்ரஸ்தாவம் வந்திருக் கிறது.

குரு-ஆசார்ய ஒற்றுமை-வேற்றுமை

குரு யார், ஆசார்யர் யார், உபாத்யாயர் யார் என்றெல்லாம் தர்ம சாஸ்திரங்களில் **definition** (இலக் கணம்) கொடுத்திருக்கிறது.

உபநயனத்தில் ப்ரஹ்மோபதேசத்தில் (காயத்ரியை உபதேசிப்பதில்) ஆரம்பித்து முடிவான வேதாந்த தர்சனம் வரையில் எவர் கற்பிக்கிறாரோ அவரே குரு என்றும், ப்ரஹ்

Koviloor Digital Library

மோபதேசமில்லாமல் சாஸ்த்ரங்களை மட்டும் எல்லா வற்றிலுமோ, அல்லது சிலவற்றையோ போதிப்பவர் ஆசார்யர் என்றும் ஒரு பாகுபாடு உண்டு. த்ருஷ்டாந்த மாக, க்ருஷ்ணருக்கு உபநயனம் பண்ணியவர் கர்கா சார்யர்; வித்யாப்யாஸம் கொடுத்தவர் ஸாந்தீபனி என்ற வேறொருவர்.

பொதுவாக 'குரு' என்ற பதம் ஸம்ப்ரதாயக் கட்டில் அதிகம் வராமல் அருளினால் எவருக்கும் எதையும் சொல்லிக் கொடுப்பவரைக் குறிப்பதாகவும், 'ஆசார்ய' பதம் குறிப் பிட்டவர்களுக்கு மட்டும் கட்டுத்திட்டமுள்ளதான போதனையை வித்வத்தினால் கொடுப்பவரைக் குறிப்பதாக வும் நினைக்கும் வழக்கமிருக்கிறது. இதற்குப் பொருந்து வதாக, தர்மசாஸ்த்ரங்களிலேயே ஒன்றில், எந்த பாஷையில் வேண்டுமானாலும் உபதேசம் தருபவர் குரு என்றும், வேத அத்யாபனம் மட்டும் பண்ணிவைப்பவர் ஆசார்யர் என்றும் சொல்லியிருப்பதாக ஞாபகம்.

குரு என்பவர் தத்தாத்ரேயரைப் போல, எந்தக் கட்டுப் பாடான ஸம்ப்ரதாயத்திலும் வராமல் அருள் சக்தியா லேயே ஆத்மாபிவ்ருத்தி அளிப்பவரென்றும், ஆசார்யர் என்பவர் கட்டுப்பாடான ஒரு ஸம்ப்ரதாயப்படி வரை யறுக்கப்பட்ட ஸித்தாந்தத்தை விஸ்தாரமாக, நம் பகவத் பாதாளைப்போல போதிப்பவரென்றும் பொதுவாய் சொல் கிறோம்.* இதனால்தான் தத்தகுரு என்கிறோமே தவிர தத்தாசார்யர் என்பதில்லை. அறிவு வழியில் ஸிஷ்டமாடிக் காக உபதேசித்த பகவத்பாதாள் போன்றவர்களுக்கு அருள் சக்தியும் இருந்தபோது சங்கராசார்யர், சங்கர குரு என்று இருவிதமாகவும் சொல்வதற்க ஏற்பட்டது. ஆனால் மேலே காட்டினாற் போல், சாஸ்த்ரங்களைப் பார்த்தால் definition-கள் வேறு விதமாய் இருக்கின்றன. தர்ம ப்ரமாணங்களில்

---

* பகுதி மூன்றில் ''குரு, ஆசார்யர்'' என்ற உரையில் பெரும்பாலும் இக் கருத்தே அலசப்பட்டுள்ளது.

Koviloor Digital Library

எல்லோரும் குறிப்பிட்டுச் சொல்லும் மநு ஸ்ம்ருதியில் மேலே குருவுக்குச் சொன்ன இலக்கணத்தையேதான் ஆசார்யனுக்கும் சொல்லியிருக்கிறது. அதாவது, அவன் சிஷ்யனுக்குப் பூணூல் போட்டு காயத்ரீ உபதேசிப்பதில் ஆரம்பித்து வேத சாஸ்த்ரங்கள் முடிய ஸகலமும் பாக்கியில்லாமல் கற்பிக்கணும் என்று சொல்லியிருக்கிறது.

உபநீய து ய :சிஷ்யம் வேதம் அத்யாபயேத் த்விஜ: ।
ஸகல்பம் ஸரஹஸ்யம் ச தம் ஆசார்ய ப்ரசக்ஷதே ॥

'குரு' என்பதற்கு ரொம்பவும் தெய்வத்தன்மை கொடுத்து இன்னொரு அர்த்தம் சொல்வதுண்டு. பரப்ரஹ்மம் என்பது குணமும் ரூபமும் இல்லாத வஸ்து. அப்படிப்பட்ட ஒன்றை எப்படி நாம் குண - ரூபங்களையே அறியக்கூடிய மனஸில் கொண்டு வருவது? இப்படிக் கொண்டு வருவதற்காகத்தான், 'பரப்ரஹ்மமே கருணையோடு குணத்தையும் ரூபத்தையும் தரித்துக் கொண்டு மநுஷர் மாதிரி வருகிறது. அவரைத்தான் குணத்தைக் குறிப்பிடும் 'கு', ரூபத்தைக் குறிப்பிடும் 'ரு' ஆகிய இரண்டையும் சேர்ந்து 'குரு' என்று சொல்வது' என்பதாக அர்த்தம் சொல்வதுண்டு.

ரொம்பவும் பூர்வத்திலே ஒவ்வொரு தகப்பனார்க்காரருமேதான் தன் பிள்ளைக்கு ப்ரஹ்மோபதேசம் செய்து வைத்துத் தனக்குத் தெரிந்த வித்யையைக் கற்றுக் கொடுத்து வந்தார். அப்போதிருந்த வித்யைகள் ரொம்பவும் குறைச்சல். ஒவ்வொரு குடும்பத்திலும் ஒரு வித்யை குலதனம் மாதிரிப் பாரம்பர்யமாகப் போயிற்று. அப்போது அப்பாவேதான் குரு. ராமாயணம் மாதிரியான ரொம்பப் பழைய புஸ்தங்களில் குரு என்று தகப்பனாரைத்தான் சொல்லியிருக்கும். பிற்காலத்திலும் காவ்யங்களில் அப்படிச் சொல்லியிருப்பதைப் பார்க்கிறோம்.

அப்புறம் வித்யைகள் அதிகமாகி, 'ஏனிப்படி ஒவ்வொரு வித்யை ஒவ்வொரு குடும்பத்தோடு போகவேண்டும்? கலந்து பரிவர்த்தனை பண்ணிக்கொள்வோமே!' என்ற அபிப்ராயம் வளர்ந்தபின், இதர வித்யைகளைக் கற்றுக்கொள்

Koviloor Digital Library

வதற்காக அப்பாவை விட்டுப் பிள்ளை வேறே பெரியவர்களிடம் போகும் பழக்கம் ஏற்பட்டது. ஒரு வித்யை மாத்ரமின்றி அநேக வித்யைகளிலும் படுவான (தேர்ச்சி பெற்ற) பலர் உண்டானார்கள். அப்போது ஒரு வித்யை அல்லது ஒரு சில வித்யை மட்டும் தெரிந்த தகப்பனாரிடம் படிப்பதைவிட, முதலிலிருந்தே இப்படி அநேக வித்யைகளும் தெரிந்தவர்களிடம் பையனைப் படிக்க விடுவது நல்லது என்று தெரிந்தது. அப்படிப்பட்டவர்களிடமே பையன் ப்ரஹ்மோபதேசம் பெற்று அப்புறம் அவர்களுடைய ஆச்ரமத்துக்கே போய் குருகுல முறையில் படிப்பதாக ஏற்பட்டது.

வீட்டில் இல்லாத குருகுலச் சிறப்பம்சம்

பிறகு தகப்பனாரே மஹா வித்வானாக இருக்கும்போது கூட இன்னொரு வித்வானிடம் பையனை சிக்ஷைக்கு விடுவதுதான் அவனைச் செல்லம் கொடுத்துக் கெடுக்காமல், நல்ல ஒழுக்கங்களோடு வளரும்படியாகக் கண்டிப்புச் செய்கிறது என்று தெரிந்ததால், யாரானாலும் குரு என்று வித்யாப்யாஸத்துக்கே ஒருத்தரை வரித்து அவரிடம் போய் குருகுல வாஸம் செய்து கல்வி கற்பது, அப்போது பிக்ஷை எடுத்து எளிமையையும் விநயத்தையும் கைக்கொள்வது என்ற வழக்கம் ஏற்பட்டது. இந்த வழக்கம் வந்தபோதுதான் அடியிலிருந்து நுனிவரை சொல்லிக் கொடுக்கும் குருவே பையனுக்கு ப்ரஹ்மோபதேசமும் பண்ணி வைப்பது என்று வந்தது.

விட்டிலே படிக்கும்போது ஸ்வாதீனம், உறவுப் பாசம் ஆகியன கல்வி கற்பது, ஒழுக்கத்துடன் உருவாவது ஆகிய இரண்டுக்கும் ஊறு உண்டாக்கக்கூடும். ஆகவே குருகுல வாஸம்தான் வித்யையின் வளர்ச்சி, வித்யார்த்தியின் வளர்ச்சி ஆகிய இரண்டுக்கும் ரொம்ப உகந்தது என்று புரிந்துகொண்டு அதையே நடைமுறையாக்கினார்கள்.

ஆனாலும் மஹான்களான பிதாமார்கள் குருகுலம் நடத்தியபோது அவர்களுடைய புத்ரர்களும் அதில்

Koviloor Digital Library

படித்ததாகவும் த்ருஷ்டாந்தங்கள் அங்கங்கே பார்க்கிறோம். இப்படிப்பட்ட ஒரு பிதா தாமும் கற்றுக் கொடுத்து, மற்ற குருமார்களிடம் புத்ரன் கற்று வருவதற்காக அனுப்பிவைப்பதையும் உபநிஷத்துக்களில் பார்க்கிறோம். தங்கள் ஸந்ததியின் அறிவு வ்ருத்தியாவதிலும், ஆத்மா சுத்தமாவதிலும் அவர்களுக்கு எத்தனை அக்கறையிருந்திருக்கிறது என்பதை நினைத்தால் ஆச்சர்யமாயிருக்கிறது.

இப்போது பெரும்பாலான தகப்பனார்களுக்கு இந்த இரண்டைப் பற்றியும் கவலையே இல்லை. எப்படியோ ஒரப்படி பிள்ளை பர்ஸ் நிறையக் கத்தை கொண்டுவந்துவிட்டால் போதுமென்ற எண்ணந்தானிருக்கிறது. எந்த தேசத்துக்குப் போய் எப்படிக் குட்டிச்சுவரானாலும் பரவாயில்லை; எந்தப் படிப்புப் படித்தாலும், எந்தத் தொழில் செய்தாலும் பரவாயில்லை என்று அனுப்பிவிடுகிறார்கள். அல்லது அவர்கள் அனுப்பவேண்டும் என்றில்லாமல் பிள்ளையே கத்தரித்துக் கொண்டு போய்விடுகிறான்; பர்ஸில் சேரும் கத்தையிலும் ஒரு நோட்டுகூட அப்பனிடம் காட்டாமல் அவனே வைத்துக் கொள்கிறான்.

ஆதியிலோ மகன் சான்றோன் என்று புகழ்பெற்றுக் கேட்கவேண்டும் என்று, சின்னக் குழந்தையை த்யாகமாக ப்ரஹ்மோபதேசத்தின்போதே குருவிடம் அர்ப்பணம் செய்தார்கள்.

பிற்காலத்தில் எப்படியோ மறுபடியும் தகப்பனாரே ப்ரஹ்மோபதேசம் செய்வதாய் வந்து, தற்போது பழைய வித்யாப்யாஸம் அடியோடு போய்விட்டாலும், பூணூல் போடுவது என்று ஏதோ ஒரு ஸாங்கியம் "பேருக்கு" நடக்கிற போது அப்பாவே ப்ரஹ்மோபதேசம் செய்வதாக நடைமுறையில் இருக்கிறது.

பூர்வ காலத்தில் தன்னுடைய தகப்பனாரையும் வீட்டையும் விட்டுவிட்டு குருகுலவாஸம் என்று இன்னொரு பெரியவரிடம் போய்ப் படிப்பது பையனை நல்லமுறையில் உருவாக்கு

Koviloor Digital Library

வதற்கு ரொம்பவும் ப்ரயோஜனப்படுகிறதென்று தெரிந்த போது, ஸத்வித்வானாக இருக்கப்பட்ட பிதாமார்கள்கூடத் தங்களுடைய தந்தையுரிமை, வித்வத்தில் யோக்யதை இரண்டையும் த்யாகம் செய்து இன்னொரு வித்வத் ச்ரேஷ்டரைக் கொண்டு பிள்ளைக்கு ப்ரஹ்மோபதேசம் செய்வித்து அவரிடமே வித்யாப்யாஸத்துக்கு விட ஆரம்பித்தார்கள். இதனால்தான் ப்ரஹ்மோபதேசச் சடங்குக்கே 'உபநயனம்' என்ற பேர் ஏற்பட்டது. 'உபநயனம்' என்றால் 'ஸமீபத்தில் கொண்டுபோய்ச் சேர்ப்பது' என்று அர்த்தம். இந்தச் சடங்கானது ஒரு பையனை குருகுலம் நடத்தும் ஆசார்யரிடம் கொண்டு சேர்த்தது என்பதாலேயே இப்படிப் பெயர். அகத்தில் அப்பாவிடமே பாடம் சொல்லிக்கொள்வதற்குக் 'கொண்டு போய்ச் சேர்ப்பது' என்று சொல்ல வேண்டியதில்லையல்லவா?

(முதலில் பையனை அவனுடைய பிதா ஆசார்யரின் ஸமீபத்தில் கொண்டுபோய்ச் சேர்க்கிறான். அப்புறம் ஆசார்யர் அவனை ஈச்வரனின் ஸமீபத்தில் கொண்டு சேர்க்கிறார். அது இரண்டாவது 'உபநயனம்' என்று சொல்லலாம். நேராக இப்படி பரதத்வ ஸமீபத்துக்கே கொண்டு சேர்ப்பது கடைசி ஆச்ரமத்தில் ஸந்நியாஸம் தரும் குரு. அந்த 'உபநயன'த்தின்போது முதல் உபநயனத்தில் போட்ட பூணூல் போய்விடுகிறது!)

கர்ப்பாதானம் செய்து ஒரு ஜீவனை உண்டுபண்ணி, அது பிறந்த பின் ஜாதகர்மம், நாமகர்மம், சௌளம் (குடுமி வைப்பது) முதலான ஸம்ஸ்காரங்களைச் செய்யும் பிதாவே குரு; உபநயனம் செய்து அப்புறம் அத்யாபனம் செய்விக்கிறவன் ஆசார்யன் என்பதாக மநுஸ்ம்ருதி, யாஜ்ஞவல்க்ய ஸ்ம்ருதி ஆகியவற்றில் சொல்லியிருக்கிறது. அதாவது இங்கே "குரு" என்பதோடு நின்று, "ஆசார்ய"ராகாத அப்பாவுக்கு உபதேசம், வித்யா போதனை என்பவற்றின் ஸம்பந்தமேயில்லை. அவர் இக்காலத்து "வெறும் அப்பா" போலவே இருக்கிறார்; இப்படிச் சொல்வதுகூட ஸரியில்லை

Koviloor Digital Library

—இக்கால அப்பாக்கள் ஸம்ஸ்காரபூர்வமான கர்ப்பாதானத்திலிருந்து சௌளம் வரையிலான ஸம்ஸ்காரங்களையும் புத்ரருக்குப் பண்ணுவதாகக் காணோமே!

ஒரு குழந்தையைப் பூணூல் போட்டு ஆசார்யரோடு அனுப்பும்போது அதற்கு எங்கேயோ, யார் அகத்துக்கோ போகிறோமென்ற துக்கம் ஏற்படக்கூடுமல்லவா? இப்படிக் கூடாது என்றே ஆசார்யரை, "இவரும் உன் அப்பாதான்" என்று நினைக்கும்படியாக அவருக்கும் பிதாவுக்குள்ளதான குரு என்ற பெயரையே கொடுத்து, அவருடைய ஆச்ரமத்துக்கும் குரு குலம் என்று பெயர் சொல்வதாக ஏற்பட்டிருக்கலாமோ என்னவோ?

தாய் - தந்தையர் பெருமை

வித்யாப்யாஸம் கொடுக்காவிட்டாலும்கூட பிதா என்கிறவன் ஆசார்யனுக்கு மேலே என்று மநுஸ்ம்ருதியில் உயர்ந்த ஸ்தானம் கொடுத்திருக்கிறது. (சம்பளத்துக்குச் சொல்லிக் கொடுக்கும்) பத்து உபாத்யாயர்களைக் காட்டிலும் ஆசார்யர் உயர்ந்தவர், நூறு ஆசார்யர்களைக் காட்டிலும் பிதா உயர்ந்தவர் என்று சொல்லியிருக்கிறது. இந்த இடத்திலேயே எல்லாரைவிடவும் உயர்ந்த சிறப்பிடத்தை அம்மாவுக்குக் கொடுத்து, "ஆயிரம் பிதாக்களைக் காட்டிலும் மாதா உயர்ந்தவள்" என்று சொல்லியிருக்கிறது.

யாஜ்ஞவல்க்யர் காலத்தில் பிதாவோ, அவனை விட்டால் அடுத்தபடியாகத் தமையனாரோதான் உபநயனம் செய்விப்பதாகவும், இவர்கள் இருவரும் இல்லாவிட்டால் தான் வெளி மநுஷ்யர் செய்வித்திருக்கிறாரென்றும் தெரிகிறது. 'இல்லாவிட்டால்' என்றால், 'உயிரோடு இல்லாவிட்டால்' மட்டுமில்லை; யோக்யதை இல்லாவிட்டாலும் இவர்கள் உபநயனம் செய்விக்கப்படாது என்று சொல்லியிருக்கிறது. என்ன யோக்யதை? அவன் தனக்கான வேத

Koviloor Digital Library

சாகையைப் பூர்ணமாய் அத்யயனம் செய்திருக்கவேண்டும்; அதோடு, மற்றவர்களுக்கு அதைச் (சொல்லிக் கொடுத்து) அத்யாபனமும் செய்பவனுயிருக்க வேண்டும்; ப்ராம்மண னுக்குத் தகாத எந்தத் தொழிலும் செய்பவனுக இருக்கப் படாது. (இந்த 'ஸ்டான்டர்ட்'படி தற்காலத்தில் எந்த அப்பன்காரனுக்காவது பிள்ளைக்குப் பூணூல் போட 'க்வாலி ஃபிகேஷன்' இருக்குமா என்பது ஸந்தேஹந்தான்!)

சில ஸ்ம்ருதிகளில் 'குரு' என்பது 'பெரியவர்கள்' என்று இருக்கிற எல்லோருக்கும் கொடுக்கப்பட்ட பொதுப் பெயராகத் தெரிகிறது. அப்பா, அண்ணு, தாத்தாக்கள், அப்பா - அம்மாவுடன் பிறந்தவர்கள், மாமனுர், தேசத்துக்கு ராஜா யாரோ அவர், ஸகல ஸத் ப்ராம்மணர்கள்—இவர்கள் மாத்ரமில்லாமல், அம்மா, பாட்டிகள், ஆசார்ய பத்னி, அத்தை, சித்தி, பெரியம்மா, மாமியார், அக்கா, ஸபத்னீ மாதா (மாற்றுந் தாய்) ஆகிய ஸ்திரீகளையும்கூட குருக்கள் என்றே அவற்றில் சொல்லியிருக்கிறது.

இப்படிப் பல குருமார்களைச் சொன்னுலும், ஜன்மாவைக் கொடுத்து பிள்ளையை வளர்த்து ஆளாக்கிவிடும் பிதாவையே குறிப்பாக "குரு" சப்தத்தால் சொல்கின்ற மநு, ஆசார்யனும் அறிவைத் தந்து பிதாவுக்கு ஸமதையான ஸ்தானம் பெறுவதால் குரு என்று கௌரவிக்கப்பட வேண்டியவனுகிருன் என்கிருர்.

('கௌரவம்' என்ற வார்த்தைக்கே 'குருவுக்கு உரியது' என்றுதான் அர்த்தம்.)

தர்ம சாஸ்த்ரங்களையோ, அத்யாத்ம சாஸ்த்ரங்களையோ தான் என்றில்லாமல் அறிவுக்கு எந்த ஒரு வித்யையைக் கொடுத்து உபகரிப்பவனையுமே குரு என்று சொல்ல வேண்டுமென்று சொல்லும் மநு, இப்படிச் செய்கிறவர்களுக்குள்ளே ஸத்வித்யையை ஸம்பூர்த்தியாகக் கற்றுக்கொடுக்கும் ஆசார்யன் பெருமையை என்ன சொல்வது என்று வியந்து கேட்கிருர்.

Koviloor Digital Library

வயதில் சிறிய குரு

வயஸில் சிறியவனாயிருந்தாலும் தனக்குக் கற்பிப்பவனைப் பெரியவனாக மதிக்க வேண்டும் என்ற கருத்திலிருந்தே ஆசிரியரை (பெரியவர் என்று பொருள்படும்) 'குரு' என்று சொல்வதாக ஏற்பட்டது என்று தர்ம சாஸ்த்ரங்களிலிருந்து தெரிகிறது. இதிலிருந்து தன்னைவிட வயஸில் சிறியவரிடமும் போதனை பெறலாமென்பது தெரிகிறது. அறிவையும், ஆத்மாபிவ்ருத்திக்கானதையும் பெறுவதில் வயஸில் பெரியவர் சின்னவர் பார்க்கப்படாது என்ற உசந்த கொள்கை வெளிப்படுகிறது.

இதற்கு மநு ஒரு கதையே சொல்லியிருக்கிறார்.

அங்கிரஸ் மஹர்ஷியின் புத்ரன் அவருடைய (அங்கிரஸுடைய) ஸஹோதரர்களுக்கே வித்யோபதேசம் செய்தார். அப்போது அவர்களை அவர், "பிள்ளைகளே!" என்று கூப்பிட்டாராம். உடனே அவர்களுக்குக் கோபம் வந்து விட்டதாம். தேவர்களிடம் போய் 'கம்ப்ளெய்ன்ட்' கொடுத்தார்களாம்.

தேவர்கள், "நீங்கள் கம்ப்ளெய்ன்ட் பண்ணுவது ஸரியில்லை. உங்களுக்கு ஒரு வித்யை தெரியவில்லை. அந்த உங்களுக்குப் பிள்ளை முறையாகிறவனிடம் சொல்லிக் கொள்கிறீர்கள் என்றால், அப்போது நீங்கள்தான் பாலர், அவர் வ்ருத்தர். வயஸு நிறைய ஆச்சு, தலை நரைத்துப்போச்சு என்பதால் வ்ருத்தராகிவிட முடியாது. நன்றாக வேதத்தை அப்யாஸம் பண்ணியிருப்பவனே நமக்கு 'வ்ருத்தன்'" என்று சொல்லி அனுப்பிவிட்டார்களாம்.

எலும்போடு சதை ஒட்டிப்போன மஹா கிழங்களான யோகிச்ரேஷ்டர்கள் நித்ய யுவாவான ஆதிகுரு தக்ஷிணாமூர்த்தியிடம் மௌனப் பாடம் கேட்கிறார்கள் "ஆலமரத்தின் அடியிலே ஆச்சர்யத்தைப் பாருங்கள்! சிஷ்யர்கள் கிழவர்கள், குருவோ யுவா. அந்த வாலிப ப்ரொஃபஸர் எப்படி லெக்சர் கொடுக்கிறாரென்றால், மௌன பாஷை

Koviloor Digital Library

யிலாக்கும்! அப்படியிருந்தும் அந்த சிஷ்யர்களுடைய ஸந்தேஹங்களெல்லாம் பொடியாகித் தீர்ந்து போய்விடுகின்றன" என்று ச்லோகமே இருக்கிறது :

சித்ரம் வடதரோர் மூலே வ்ருத்தா : சிஷ்யா :குருர்யுவா |
குரோஸ்து மௌநம் வ்யாக்யாநம் சிஷ்யாஸ்து சிந்ந ஸம்சயா :||

ஒருவரைப் பெரியவராக நினைப்பதில் ஐந்து விதம் இருக்கிறது; தனத்தை வைத்துப் பெரியவராகச் சிலரை மதிக்கிறோம். பெரிய ப்ரபு என்றால் உடனே ஒரு மரியாதை தோன்றிவிடுகிறதல்லவா? இது ஒன்று. வயஸில் சின்னவர்களாயிருந்தாலும் மதனி, மாமா முறை, சித்தப்பா முறை ஆகிறவர்களென்று பந்துத்வத்தில் உள்ள ஸ்தானத்தினால் சிலரைப் பெரியவர்களாக மதிப்பது இரண்டு. ரொம்ப வ்யஸானவரென்றால் யாராயிருந்தாலும் பெரியவர் என்று மரியாதை பண்ணுவது மூன்று. நாலாவதாக, மஹா யஜ்ஞங்களைச் செய்தவர், பெரிய அநுஷ்டாதா என்றால் வயஸைப் பார்க்காமலே பெருமைப் படுத்துவது. ஐந்தாவதாக வித்யையிலே சிறந்த மஹா வித்வான் என்பதால் மரியாதை செய்வது. இதை தர்ம சாஸ்த்ரத்தில் சொல்லி இப்படி ஒன்று, இரண்டு, மூன்று போட்டதில் முதலில் வருவதைவிட அடுத்து வருவதே உசந்தது என்று கூறியிருக்கிறது—அதாவது ஐந்தாவதாக, வித்யையை வைத்து ஒருத்தரைப் பெரியவராகக் கருதி கௌரவிப்பதுதான் எல்லாவற்றிலும் உத்தமமானது என்று சொல்லியிருக்கிறது.

அன்னை - தந்தை - ஆசான்

ஆசார்யன், (குரு என்கிற) பிதா, மாதா என்று இவர்களுக்குள்ளேயே முந்தியவரைவிடப் பிந்தியவர் உசத்தி என்று சில இடங்களில் சொல்லியிருந்தாலும், பொதுவான கருத்து என்ன என்றால், இந்த மூன்று பேரையுமே ஈச்வராம்சமாக பாவித்து மரியாதை செய்யவேண்டுமென்பதுதான். இதிலே மாதா பிதாக்களைவிட ஆசார்யனை உச்த்திச் சொல்

Koviloor Digital Library

வதையும் சில தர்ம சாஸ்த்ர புஸ்தகங்களில் பார்க்கிறோம். மநுவேகூட, "ஒருத்தன் மாத்ரு பக்தியால் இந்த லோகத்தையும், பித்ரு பக்தியால் அந்தரிக்ஷ லோகத்தையும், ஆசார்ய பக்தியால் ப்ரஹ்ம லோகத்தையும் அடைகிறான்" என்று சொல்லும்போது ஆசார்யனைத்தான் ரொம்பவும் சிறப்பித்திருக்கிறார்.

இவர்களுக்கு சுச்ருஷை செய்யும் பலனை இப்படி உயர்த்திச் சொல்லியிருப்பது போலவே, இவர்களுக்குக் கொஞ்சம் த்ரோஹம் செய்துவிட்டாலுங்கூட மஹாபாபம் ஸம்பவிக்குமென்று எச்சரித்திருக்கிறது.

அத்யாபகர்

சொல்லிக் கொடுத்துத் திருத்துவது, அருள் சக்தியால் திருத்துவது, மந்த்ர சக்தியால் சிஷ்யனை வேதஸம்ஸ்காரம் கொண்டு சுத்தி செய்து தத் - த்வாரா (அதன் வழியே) திருத்துவது என்று மூன்று தினுஸு. அருள் சக்தியை சாஸ்த்ரத்துக்குள் கொண்டுவர முடியாததலால் ஸ்ம்ருதிகளில் அதைப்பற்றிய ப்ரஸ்தாவம் இல்லை. மற்ற இரண்டை எடுத்துக்கொண்டால், 'மந்த்ரோபதேசத்தால் ஸம்ஸ்கார பூர்வமாக (வேதச் சடங்கினால்) சிஷ்யனைப் பரிசுத்தி பண்ணி அப்புறம் பரிபூர்ணமாக வித்யையும் போதிக்கிறவரே குரு; ஸம்ஸ்கார க்ரியை இல்லாமல் முழுக்கவோ, ஒரு பகுதியோ வித்யை மாத்திரம் போதிப்பர் ஆசார்யர்' என்பது ஒரு அபிப்ராயம். இன்னொரு அபிப்ராயம் ஆசார்யரே மந்த்ர பூர்வ ஸம்ஸ்காரத்திலிருந்து வேதாந்த போதனை முடிய எல்லாம் செய்பவர் என்பது. இந்த இரண்டு வித ஆசார்யருக்கும் "அத்யாபகர்" என்ற பெயர் உண்டு. இவரில் கீழ்ப்பட்டவரே சம்பளத்துக்கு போதிக்கும் உபாத்யாயர்.

"உபாத்யாயர்" பெற்ற உயர்வு

ரொம்பவும் பொருத்தமாக, வேத ஸம்பந்தத்தில் உண்டான உபாத்யாயர் (வாத்யார்) என்ற பெயரையே பிற்

Koviloor Digital Library

கால டீச்சர்களுக்கு வைத்துவிட்டார்கள். இந்த டீச்சர்கள் சம்பளத்துக்குச் சொல்லிக் கொடுக்கிறவர்கள்தானே?

ஜீவனோபாயத்துக்காக போதிக்காமல், "போதிப்பது தான் நம் ஜீவதர்மம்" என்று இருந்த நிஜமான ஆசார்யர்கள் குறைந்து குறைந்து, உபாத்யாயர்கள் வளர வளர, உபாத்யாயர் (வாத்யார்) என்ற பெயர் இன்ஃபீரியாரிடியைக் குறிப்பதாக இல்லாமல் மதிப்புள்ளதாகவே ஆகிவிட்டது. 'ஒரிஜினல் மீனிங்' போய், வித்யை போதிக்கும் எவரும் உபாத்யாயர் என்றாகிவிட்டது. ஆசார்யராக இருப்பவரைக்கூட உபாத்யாயர் என்று குறிப்பிடுவதாக ஆகிவிட்டது. இதனால்தான் வேத போதனையே பரம்பரையாகச் செய்துவந்த பல வடக்கத்திக்காரர்கள் 'இன்ஃபீரியாரிடி' எதுவுமில்லாமல் தங்கள் பேரோடேயே 'உபாத்யாயா' என்று சேர்த்துப் போட்டுக்கொள்கிறார்கள்.

வங்காளத்தில் முகர்ஜி, சட்டர்ஜி, பானர்ஜி என்று பலர் இருக்கிறார்களல்லவா? இதையே இன்னும் விரித்து சுத்தமாக முகோபாத்யாயா, சதுரோபாத்யாயா, வந்த்யோபாத்யாயா என்று போட்டுக்கொள்கிறவர்களும் இருக்கிறார்கள். 'முக உபாத்யாயா' என்பதில் 'முகம்' என்றாலே வேதம். முகம் என்றால் ஸம்ஸ்க்ருதத்தில் வாயையும் குறிக்குமென்று தெரிந்திருக்கெல்லாம். வாய் என்பது வார்த்தையைக் குறிப்பது. வார்த்தையென்றாலே வேத வாக்குத்தான் என்று கருதி வேதத்துக்கும் 'முகம்' என்று பெயர் வைத்திருக்கிறது. வேதத்தைக் கற்பிக்கும் உபாத்யாயரே முக உபாத்யாயாவான முகர்ஜி. சதுரோபாத்யாயா என்பதில் வரும் 'சதுர்'—சட்டர்ஜியில் 'சட்டர்' என்றாகியிருக்கும் 'சதுர்'— சதுர்வேதங்களைக் குறிப்பதுதான். ராமக்ருஷ்ண பரமஹம்ஸா ஒரு சட்டோபாத்யாயா குடும்பத்தில் பிறந்தவர்தான். அவருடைய பத்னி, "ஹோலி மதர்" என்கிறார்களே. அந்த அம்மாளுடைய பிறந்தகத்தினர் முகோபாத்யாயர்கள். வந்த்ய உபாத்யாயா என்றால் வணக்கத்துக்குரிய வாத்யாரென்று அர்த்தம். 'வந்த்ய'

Koviloor Digital Library

என்பது 'பந்த்ய' என்று பெங்காலி வழக்கப்படி ஆகி, அதுவும் மாறி மாறி, கடைசியில் 'ஜீ' போட்டுக் கொண்டு பானர்ஜி ஆகியிருக்கிறது.

ஆக உபாத்யாயர் என்பது 'ரெஸ்பக்டபிள்' (மதிப்புக் குரிய) வார்த்தையாகி விட்டது. பிற்காலத்தில் பிரிட்டிஷ் ராஜ்யத்தில்கூட மஹாபண்டிதர்களுக்கு 'மஹாமஹோபாத் யாய' என்று பெரிய கௌரவமாகப் பட்டம் கொடுத்தார் களல்லவா? இந்தப் பட்டம் வாங்கினவர்களில் பலபேர் மிக உயர்ந்த ஆசார்ய லக்ஷணத்தோடு, வருமானத்தைப் பற்றிய எண்ணமே இல்லாமல், தங்கள் கைக்காசையும் ஸொத்தை யுமே செலவழித்துங்கூட குருகுலம் நடத்தியவர்கள்.

ஈச்வர ஆராதனையாக

எத்தனையோ தொழில்கள் இருக்கின்றன. ஜனங்கள் அவற்றில் எதையோ ஒன்றை மேற்கொண்டு ஊழியம் செய்வது ஊதியத்துக்காகத்தான். இதில் தப்பாகவோ, கௌரவக் குறைச்சலாகவோ எதுவும் இருப்பதாக யாரும் நினைக்கவில்லை. ஆனாலும் காசுக்காக ஈச்வர பூஜை பண்ணு வதையும், கல்வி போதிப்பதையும் மாத்திரம் பழைய காலத் தில் ரொம்பவும் நிக்ருஷ்டமாக (தாழ்வானதாக) நினைத்திருக்கிறார்கள். ஆத்ம நிறைவையே தரக்கூடிய வற்றைக் கேவலம் வயிற்றை நிரப்பிக் கொள்வதோடு ஸம்பந்தப்படுத்துவது தகாது என்ற எண்ணமே காரணம். இதிலிருந்து வித்யோபாஸனையை ஈச்வர ஆராதனைக்கு ஸமமாக நினைத்திருக்கிறார்களென்று தெரிகிறது.

அவரவரும் தமது ஜாதிக்கான தொழிலைச் செய்து ஸம்பாதிக்க வேண்டுமென்பது சாஸ்த்ரம். பிராம்மணனின் தொழிலென்ன என்றால், பழந்தமிழ் நூல்களைப் பார்த்து விட்டால் தெரியும்: அவர்களுக்கு 'அறுதொழிலோர்' என்று பெயர். அந்தணர்கள் ஆறு தொழில்கள் செய்யவேண்டும். அவர்களை 'ஷட்கர்ம நிரதர்' என்பார்கள். என்னென்ன? ஒன்று, அத்யயனம்—அவன் வேதங்களைக் கற்க வேண்டும்.

Koviloor Digital Library

இதில் ஸம்பாதனத்துக்கு இடமில்லை. இரண்டு, அத்யாபனம் —பிறருக்கு இவன் கற்பிக்கவேண்டும். வேதங்களை மட்டு மில்லை: எல்லாத் தொழில்களையும் இவன் தெரிந்துகொண்டு அததற்கு ஏற்பட்ட ஜாதியாருக்குக் கற்றுக் கொடுக்க வேண்டும்.

இப்படிச் சொன்னதால் ஒவ்வொரு ப்ராம்மணனும் அத்தனை தொழிலையும் கற்றறிந்திருக்க வேண்டும் என்று நினைக்கக்கூடாது. அது ஸாத்யமில்லை. இவனால் லோக க்ஷேமத்துக்காக நடக்கவேண்டிய வேத போதனைக்கும் கர்மாநுஷ்டானத்துக்கும் குந்தகமன்னியில், அவை போக மிச்சமுள்ள நேரத்தில் இவன் வேறு ஒன்றிரண்டு தொழில் களைப் பற்றியும் அறிந்துகொண்டு அத்தொழிலுக்குரியவர் களுக்குச் சொல்லித்தர வேண்டுமென்றே அர்த்தம். இப் படித்தான் ஆயுர்வேதம், அர்த்த சாஸ்த்ரம், நாட்ய சாஸ்த்ரம், தநுர்வேதம் போன்றவற்றில் ஒவ்வொன்றிலும் ஒரு சில ப்ராம்மணர்கள் 'ஸ்பெஷலைஸ்' பண்ணி அவற்றை உரிய வகுப்பாருக்கு போதித்ததாகப் புராண இதிஹாஸங் களிலிருந்து தெரியவருகிறது.

மற்ற வகுப்பினருக்கான தொழில்களை ப்ராம்மணன் அவர்களுக்கு போதிக்க மட்டுந்தான் வேண்டும்; அந்தத் தொழில் எத்தனை ஸம்பாத்யத்தைத் தருவதாயிருந்தாலும், ஜீவனோபாயமாகத் தானே அதைச் செய்து தொழில் நடத்தி விடக்கூடாது. கற்றுக்கொள்பவர்கள் இஷ்டப்பட்டுத் தரும் தக்ஷிணையிலேயே இவன் த்ருப்தனாயிருக்கவேண்டும். அதாவது மற்றத் தொழிலார்கள் தத்தம் தொழிலைச் செய்து நன்றாய் ஸம்பாதிக்க உதவுபவனாக மட்டும் இருந்துகொண்டு, அந்தத் தொழிலைத் தான் "மூட்டை கட்ட" ப்ரயோஜனப் படுத்திக் கொள்ளாமலிருக்கவேண்டும். இது மாத்திர மில்லை—இவனுக்கே குலத்தொழிலாக உள்ள இந்த 'டீச்சிங், கையுங்கூட இவன் ஸம்பாத்ய நோக்கமில்லாமல், வித்யை யைப் ப்ரசாரம் செய்யவேண்டுமென்பதே நோக்கமாகக்

Koviloor Digital Library

கொண்டுதான் ஈச்வர ப்ரீதியாகச் செய்யவேண்டுமென்று விதித்திருக்கிறது.

இதையெல்லாம் கவனிக்காத குறைதான், ப்ராம்மணன் தன்னலமாக சாஸ்த்ரங்களை எழுதி வைத்துக்கொண்டிருப்ப தாகக் குறை சொல்வது. திறந்த மனஸோடு பார்த்தால் ப்ராம்மணன் ஸொந்த நலனுக்காகத் தனக்கு privilege (சலுகை) எதுவும் வைத்துக்கொள்ளவில்லை; அது மட்டு மில்லாமல் தனக்கே அநேக disadvantageகளையும் (ப்ரதி கூலங்களையும்) வைத்துக்கொண்டு ஆத்மாபிவ்ருத்திக்காக வும் லோக க்ஷேமார்த்தமாகவும் தன்னை உலக வாழ்க்கையில் ரொம்பவும் வாடப்போட்டு வருத்திக்கொண்டானென்று தெரியும்.

"ஏற்பது இகழ்ச்சி"

அறுதொழிலில் அத்யயனமும் அத்யாபனமும் போக பாக்கி நாலு: யஜனம் (இவன்) ஸொந்தமாக யாகம் செய்வது, யாஜனம் (பிறத்தியாருக்கு யாகம் பண்ணி வைப்பது), தானம் (தானம் கொடுப்பது), ப்ரதிக்ரஹம் (தானம் வாங்கிக்கொள்வது). யஜனத்திலும் தானத்திலும் செலவுதானே தவிர ஸம்பாத்யமில்லை. பிறருக்கு யாகம் பண்ணிவைப்பதில் தக்ஷிணை கிடைக்கும்; ப்ரதிக்ரஹத்திலும் மான்யங்கள் பெறலாம். ஆனாலும், இங்கேயும் ஒரு முக்ய மான விஷயம் கவனிக்கவேண்டும். பொதுவாக "ஏற்பது இகழ்ச்சி" என்று வைத்ததோடு, தானம் வாங்கும்போது கொடுக்கிறவனுடைய பாபமும் வாங்குகிறவனுக்கு வந்து விடும் என்றும் பயமுறுத்தி வைத்திருக்கிறது! இன்ன தானம் இன்னானிடம் வாங்கினால் இன்ன ப்ராயச்சித்தம் பண்ணிக் கொள்ள வேண்டுமென்றும் பெரிய லிஸ்ட் கொடுத்து பயமுறுத்தியிருக்கிறது! வேறே யாரோ பயமுறுத்தவில்லை; ப்ராம்மணனேதான் தன்னைத்தானே பயமுறுத்திக்கொண்டு சாஸ்த்ரத்தில் எழுதி வைத்திருக்கிறான்! பெரிய ச்ரௌதி களாக இருப்பவர்கள் தாங்களே யாகம் செய்யும் யஜமான

Koviloor Digital Library

ராக இருந்து யஜ்ஞ பலனைத் தான் பெற விரும்புவார்களே யன்றி, இன்னொருத்தருக்குப் பண்ணிவைத்து இந்தப் பலனை விட மிகக் குறைந்ததான தக்ஷிணை என்பதைப் பெற விரும்பு மாட்டார்கள். 'யாஜனம்' பிராம்மணனின் கடமையாச்சே என்பதற்காகவே பண்ணிவைத்து, அதில் கிடைக்கும் தக்ஷிணையை ஏதாவது புண்யத்துக்குச் செலவழித்துவிடுவார் கள்.

ஆக ஆறு தொழிலென்று சொன்னாலும் ஸம்பாத் யத்தைப் பார்த்தோமானால் அத்யயனம், யஜனம், தானம் என்ற மூன்றிலும் வரவுக்கு இடமேயில்லை. யாஜனத்திலும், ப்ரதிக்ரஹத்திலும் ஸம்பாதிப்பதற்கும் ஏகப்பட்ட கட்டுப் பாடு. பாக்கியுள்ள ஒன்றே ஒன்றான டீச்சிங் (அத்யாபனம்) நியாயமான வருமானம் நிறையக் கொடுக்கக் கூடியதென்றா லும் அதையும் வித்யாதானமாகத்தான் செய்து அதன் தெய்வாம்சத்தை ரக்ஷிக்கவேண்டுமேயன்றி அதை வரு மானக் கண்ணோட்டத்தோடு மேற்கொள்ளக்கூடாது என்று வைத்துக் கொண்டுவிட்டார்கள்.

கேட்காமலே சிஷ்யனாகக் கொடுக்கிறபோது, அதை ஆசார்யர் ஏற்றுக்கொண்டாலும், இங்கேயுங்கூட உசந்த ஆசார்யர்கள், 'கற்றுக் கொண்டாச்சு' என்று சிஷ்யன் த்ருப்திப்பட்டு தக்ஷிணை கொடுப்பதை விஷயமாக நினைக்கா மல், 'கற்றுக் கொடுத்தாச்சு' என்று தாங்களே த்ருப்தி அடைந்தால்தான் தக்ஷிணையை ஏற்றுக்கொண்டிருக்கிறார் கள். ''ப்ருஹதாரண்யக'' (உபநிஷ)த்தில் (நாலாவது அத்யாயம், முதல் ப்ராஹ்மணத்தில்) வருகிறது : யாஜ்ஞ வல்க்யர் ஒவ்வொரு உபதேசமாகப் பண்ணப் பண்ண, ஜனகர் ஒவ்வொரு தரமும் அவருக்கு ஸம்பாவனை பண்ண ஆரம்பிக்கிறார். ஆனால் யாஜ்ஞவல்க்யரோ, ''பூர்ணமாக உபதேசம் பண்ணாமல் தக்ஷிணை வாங்கிக் கொள்ளக்கூடாது என்பது என் பிதாவின் அபிப்ராயம்'' என்று சொல்லி, திரும்பத் திரும்ப தக்ஷிணையை ஏற்க மறுக்கிறார்!

Koviloor Digital Library

பிற நாடுகளில் இல்லாத சிறப்பு

இதனாலேதான் மற்ற எந்த தேசத்திலும் "டீச்சர்" என்பதற்கும், நம் தேசத்தில், "குரு", "ஆசார்யார்" என்று சொல்வதற்கும் மதிப்பு மரியாதைகளிலே அஜகஜாந்தரமாக இருக்கிறது. 'டீச்சர்' என்பவன் ஈச்வரனே, அல்லது அவனுடைய ப்ரதிநிதி, அவனிடம் மாணவன் ஸர்வஸங்க பரித்யாகம் செய்துவிட வேண்டும் என்ற அபிப்ராயங்கள் மற்ற தேசத்துக்காரர்களுக்கு அடியோடு தெரியாது. ஏதோ 'அவன் ரொம்ப கெட்டிக்காரன். அநேக விஷயங்கள் தெரிந்து கொண்டிருக்கிறான், தெரிந்து கொண்டதோடு அதைப் பிறருக்கும் அழகாகச் சொல்லிக்கொடுக்கத் திறமை பெற்றிருக்கிறான்' என்பதோடு நிறுத்திக்கொண்டார்கள். டீச்சராக இருக்கப்பட்டவனும் தன்னை அப்படித்தான் நினைத்துக்கொண்டு அந்த மாதிரி தன்னை வளர்த்துக்கொள் வதோடு நின்றுவிட்டான்.

நம் தேசத்திலோ பொருளுக்காக வித்யோபதேசமில்லை என்பதிலிருந்து. ஆசார்யனாகப்பட்டவன் ரொம்பவும் தூய வாழ்வு வாழ்ந்து ஆத்மாநுபவியாகவே இருக்கவேண்டு மென்ற அளவுக்கு அவனுடைய யோக்யதாம்சம் ரொம்பவும் உச்சத்துக்குப் போய்விட்டது. புத்திசாலித் தனம், நிறைய விஷயம் தெரிந்து கொண்டிருப்பது, அதை எடுத்துச் சொல்லிப் புரியவைக்கிற ஸாமர்த்யம் எல்லாம் மூளையின் கார்யங்கள். மற்ற தேசங்களைப் போல இந்த மூளைச் சிறப்போடு மட்டும் நம் தேச ஆசார்யன் நின்றுவிட வில்லை. அவன் வாழ்க்கையில் பரிசுத்தனாயிருக்கவேண்டும்; வேதம் சொல்லிக் கொடுக்கிறானே, அதன்படி வழுவாமல் கர்மாநுஷ்டானம் செய்பவனாயிருக்கவேண்டும் என்றும் வைத்தார்கள்.

மூன்று லக்ஷணம் உள்ளவர்தான் 'ஆசார்யர்' என்று வைத்தார்கள். ஒன்று, சாஸ்த்ர ஸித்தாந்தத்தை நன்றாகத் தெரிந்து கொண்டிருக்கவேண்டும் ("ஆசிநோதி

Koviloor Digital Library

ஹி சாஸ்த்ரார்த்தம்''); இரண்டு, தெரிந்ததை வாழ்க்கையில் நடத்திக்காட்டும் ஆசார ஸம்பந்தராக இருக்கவேண்டும் (''ஸ்வயம் ஆசரதே''); மூன்று, இப்படித் தனக்குத் தெரிந்து, அநுஷ்டிக்கும் சாஸ்த்ரத்தைப் பிறருக்கும் கற்றுக்கொடுத்து அவர்களேயும் ஆசார வாழ்க்கையில் நிலேநாட்டவேண்டும் (''ஆசாரே ஸ்தாபயத்யபி''). தெரிந்துகொண்டு மட்டுமிருப்பவர் 'வித்வான்'—அவருக்கு 'ஆசார்யர்' என்ற ஏற்றம் கிடையாது. கற்றுக்கொடுக்காமல் தான் மட்டும் சாஸ்த்ரோக்தமாய், அதன் தத்வத்தை உணர்ந்து வாழ்பவரை 'அநுஷ்டாதா' என்றும், இன்னம் உயர்ந்தால் 'அநுபவி' என்றும்தான் சொல்வார்களே தவிர 'ஆசார்யர்' என்று சிறப்பிக்கமாட்டார்கள். வாழ்க்கையில் நடத்திக் காட்டாமல், தெரிந்ததைப் பிறருக்குச் சொல்லிக்கொடுப்பவரை 'ப்ரசாரகர்' என்பதற்கு மேல் சொல்வதற்கில்லே. மூன்றும் சேர்ந்தாலே 'ஆசார்ய' பட்டம்.

கசடறக் கற்றபின் அதற்குத் தக்கபடி ஒருத்தன் வாழ்க்கை நடத்தவேண்டும்—''நிற்க அதற்குத் தக''—என்று திருவள்ளுவர் சொன்ஞர். இப்படித் தான் கற்று, கற்றவழி நிற்பதோடு பிறருக்கும் கற்பித்து, கற்பிப்பதோடு விடாமல் அவர்களும் கற்றவழி நிற்க 'ட்ரெயின்' செய்கிறவன்தான் ஆசார்யன். அப்படி அநேகர் இருந்து வந்திருப்பதுதான் நமக்குப் பெருமையிலெல்லாம் பெரிய பெருமை.

பொருளில்லார்க்கு இவ்வுலகம் இல்லே என்று ரொம்பவும் பெரியவரான அந்த வள்ளுவரே சொல்லிவிட்டார். அப்படிப்பட்ட பொருளேப் பொருட்டாக நினேக்காமல், 'வித்யை வளரணும் என்பதற்காகவே பாடம் சொல்லிக்கொடு' என்று இவனுக்கு விதி செய்து இவனே த்யாக சிந்தையிலே நன்ருக ஊறப் போட்டார்கள். த்யாக சிந்தை வந்து லோகோபகாரமாகவே நிஷ்காம்ய கர்மா ஒருத்தன் பண்ண ஆரம்பித்துவிட்டால் அப்புறம் அவனிடம் எல்லா ஆத்ம ஸம்பத்துக்களும் ஒன்று பாக்கியில்லாமல் வந்துவிடும்.

Koviloor Digital Library

"த்யாகத்தினுலேயே பலபேர் அம்ருதத்வத்தை அடைந்திருக்கிறுர்கள்" என்று ச்ருதியே சொல்கிறது.*

நிரம்பக் கர்மாநுஷ்டானங்களைப் பண்ணி அதனுல் ஏற்படும் சித்த சுத்தியோடுகூட பொருள்பற்று இல்லாமல் நிஸ்ப்ருஹனுக ஒருத்தன் ஊரான் வீட்டுப் பசங்களைத் தன் பர்ணசாலையிலேயே வைத்துக்கொண்டு ஸதா ஸர்வதா வித்யாதானம் பண்ணி வந்ததனுல்தான் அவன் உயர்ந்த ஆத்ம ஸம்பத்துக்களைப் பெற்றுத் தானுகவே நிரம்ப ரெஸ்பெக்ட் கம்மாண்ட் பண்ண முடிந்தது. விஷயம் நன்ருகத் தெரிந்த புத்திமான் என்பதற்காக மாத்திரம் ஒருத்தனை 'தெய்வமாய் நினை, அவனிடமே ஸர்வ ஸங்க பரித்யாகம் பண்ணு' என்ருல் யார் கேட்பார்கள்? அவனிடம் தூய்மையான வாழ்க்கை, த்யாக புத்தி, ஊரான் வீட்டுக் குழந்தைகளைத் தன் வயிற்றில் பிறந்த குழந்தைகளாக நினைத்துப் பராமரிக்கிற அருளியல்பு முதலானதுகளும் நம் தேசத்தில் இருந்ததால்தான் சிஷ்யர்கள் அவனை ஈச்வரனுக நினைத்து சரணுகதி செய்ய முடிந்தது. இப்படி வேறெந்த நாட்டிலும் பார்க்க முடியாது.

உலகியல் படிப்பிலும் உத்தம ஆசார்யர்கள்

வேதம் சொல்லிக்கொடுத்தவர்தானென்றில்லை, மற்ற ஸெக்யுலர் ஸப்ஜெக்ட்கள் (உலகியல் படிப்புகள்) சொல்லிக் கொடுத்தவர்கள்கூட இப்படிப்பட்ட உத்தமமான யோக்ய தாம்சங்களைப் பெற்றவர்களாக இருந்திருக்கிறுர்கள். ஆத்மாநுபவம், திவ்யாநுபவங்கள் வேண்டுமானுல் அவர்களிடம் இல்லாதிருந்திருக்கலாம். ஆனுல் மிகவும் உயர்ந்த தான மநுஷ்ய குணங்கள் அவர்களுக்கு இருந்திருக்கின்றன. பொதுவாக இப்படியிருந்தால்தான் அவர்களிலேயே கோபிஷ்டராக, பக்ஷபாதமுள்ளவராகச் சில ஆசார்யர்கள் வந்தபோதுங்கூட இவர்களிடமும் சரணுகதி பண்ணிவிட்டு

* தைத்திரீயோபநிஷத்—நாராயணவல்லீ—தஹரவித்யை.

Koviloor Digital Library

பக்தி விச்வாஸத்தோடு இவர்களுக்கு ஸேவகம் செய்யும் சிஷ்யர்கள் சேர்ந்திருக்கிறார்கள். இல்லாவிட்டால் சண்டை போடச் சொல்லிக் கொடுக்கும் தநுர்வேத ஆசார்யராகவே இருந்த த்ரோணரிடம் ஏகல்வ்யன் (ஏகலைவன்) எப்படி சரணாகதி பண்ணியிருப்பான்? பரசுராமருக்கு எப்படிக் கர்ணன் அடிமை மாதிரிப் பணிவிடை பண்ணியிருப்பான்?

டான்ஸ் கற்றுக் கொடுப்பவனுக்குக்கூட 'ஆசார்ய' பட்டம் கொடுத்து "ந்ருத்யாசார்யன்" என்னும்படியாக, நம் தேசத்து டீச்சர்கள் தங்களுடைய வித்தையில் தேர்ச்சி பெற்றிருந்தது மட்டுமல்லாமல் ஒப்பற்ற ஒழுக்கமான வாழ்க்கை வாழ்ந்திருக்கிறார்கள். ஸங்கீதத்திலே பெரிய ஸிம்ஹம், தான் ஸேன் என்ற உஸ்தாத் அக்பர் ஸபையில் இருந்திருக்கிறான். அவனுடைய ஸங்கீத ஆசார்யர் ஹரி தாஸைப் பற்றிப் படிக்கும்போது அவர் ரிஷி மாதிரியான மஹானாக இருந்திருக்கிறாரென்று தெரிகிறது. ஹரிதாஸ் ஸ்வாமி என்றே சொல்கிறார்கள்.

இங்கேயே திருவையாற்றிலே நூறு வருஷத்துக்குள்ளே மஹா வைத்யநாத சிவன் என்று ஸங்கீத வித்வான் இருந் திருக்கிறார். பெயரையே சொல்லாமல் 'சிவன்வாள்' என்றே சொல்லும்படியாக அத்தனை உயர்ந்த வாழ்க்கை நடத்தியிருக்கிறார். ஒருநாள் சிவபூஜை தப்பினது கிடை யாது; ஒருவேளை ஸந்த்யாவந்தனம் தப்பினது கிடையாது. வெளியூர்களில் கச்சேரிக்குப் போகிறபோது பூஜைப் பெட்டி வந்துசேராவிட்டால் அன்றைக்குப் பட்டினிதான். ஸாயம் ஸந்த்யோபாஸனைக்குக் குந்தகமில்லாமல் கச்சேரியை மூன்று மணிக்கே ஆரம்பித்து ஆறு மணிக்குள்ளே முடித்து விடுவாராம். அப்படிச் செய்ய முடியாவிட்டால் ஸந்த்யா வந்தனம் ஆனவிட்டு ஆறரை மணிக்கு மேலேதான் கச்சேரி ஆரம்பிப்பாராம். நிர்பந்தமாக எங்கேயாவது நாலு மணி, அஞ்சு மணிக்கு ஆரம்பிக்க நேர்ந்தாலும் ஸரியாக ஸந்த்யா காலத்திலே கச்சேரியை நிறுத்திவிட்டுப் போய் ஸந்த்யா வந்தனம் பண்ணிவிட்டுத் திரும்பிவந்துதான் கச்சேரியை

Koviloor Digital Library

விட்ட இடத்தில் ஆரம்பிப்பது என்று வைத்துக் கொண்டிருந்தாராம்.

பணம், காசு, வழக்கு எல்லாம் முழுக்க அவருடைய அண்ணா ராமஸ்வாமி சிவன்தான் கவனித்துக் கொண்டிருக்கிறார். அவரும் நல்ல பக்தி, ஸாஹித்ய வ்யுத்பத்தி எல்லாம் உள்ளவர். அறுபத்தி மூன்று நாயன்மார்களைப் பற்றிப் பெரிய புராணக் கீர்த்தனைகள் என்று பண்ணியிருக்கிறார். அவர் பொறுப்பிலேயே எல்லாம் விட்டுவிட்டுத் தம்பி ஸங்கீதம், சிவபூஜை, காயத்ரி இதுவே வாழ்க்கை என்று இருந்திருக்கிறார். சிஷ்ய பரம்பரை உண்டாக்கிக் கொள்ள வேண்டுமென்ற எண்ணம்கூட அவருக்கு இல்லை. ஆனாலும் அவருடைய சீலத்தினால் அவரை தெய்வமாக மதித்துத் தாங்களாகவே ஒரு இருபது முப்பது சிஷ்யர்கள் எப்போது பார்த்தாலும் அவருடைய க்ருஹத்திலே இருந்துகொண்டு, அவர் இவர்களை உட்கார்த்தி வைத்து சிக்ஷை என்று சொல்லிக் கொடுக்காவிட்டாலும்கூட இவர் பாட்டுக்கு ஆத்மார்த்தமாகப் பாடிக்கொண்டிருப்பதைக் கேட்டுக் கேட்டே பாடம் பண்ணிவிடுவார்களாம். அந்த இருபது முப்பது பேருக்கும் இவரே சாப்பாடு போட்டிருக்கிறார், குரு தக்ஷிணை என்று எதுவும் வாங்கிக் கொள்ளாமலே!

ஆடல் பாடல் கற்றுக் கொடுத்தவர்கள், கத்தியைச் சுழற்றி யுத்தம் போடச் சொல்லிக்கொடுத்தவர்கள் ஆகியவர்கள்கூட 'ஆசார்யன்' என்ற மரியாதைக்குகந்த பெயரைப் பெறும் யோக்யதை ஸம்பாதித்துக் கொண்டிருந்தார்களென்றால், வேத சாஸ்த்ரம் சொல்லிக் கொடுக்கிறவர்கள், 'இவனே ஈச்வரன்' என்று சிஷ்யர்கள் சரணாகதி பண்ணக் கூடியவர்களாகத்தான் இருந்திருப்பார்கள் என்பதில் ஸந்தேஹமென்ன?

ஸ்தாபன ரீதியில்லை; தனிமனிதர் மூலமே

டீச்சிங் என்பது பிஸினஸ்ஸாக இல்லாததே இந்த உயர்வுக்கு முக்யமான காரணம். பிஸினஸ் இல்லாத

Koviloor Digital Library

த்யாகமாக அது உயர்ந்ததற்குக் காரணம் நம் தேசத்தில் ஆதியிலிருந்து சில நூற்றாண்டுகளுக்கு முன் வரையில் (ஏன், ஸமீபத்திலேயும்கூட அங்கங்கேயாவது) கல்வி என்பதை "இன்ஸ்டிட்யூஷனலைஸ்" செய்யாமல் "இன்டிவிஜுவல்" கள் மூலமே பரப்பினதுதான் (ஸ்தாபன ரீதியாக இன்றி, தனித் தனிமனிதர்கள் மூலமே பரப்பினதுதான்).

நாலந்தா, தக்ஷசிலா (Taxila என்கிறார்கள்) முதலிய இடங்களில் இன்ஸ்டிட்யூஷனாகவே இந்நாள் யுனிவர்ஸிடி மாதிரி ஸர்வகலாசாலைகள் எழும்பினது பௌத்தர்கள் காலத்தில்தான். அதற்கு முன் நம் வைதிக மதத்துப் பூர்விகர்கள் ஏற்பாட்டில் இப்படிப் பல வாத்யார்கள் பல ஸப்ஜெக்ட்களை ஒரே இடத்தில் கூடிப் பலதரப்பட்ட மாணவர்களுக்கும் சொல்லிக் கொடுப்பதென்பது பரவலாக ஏற்படவில்லை. தனித்தனி ஆசார்யர்கள்தான் அவரவரது ஆச்ரமத்தை ஒரு குருகுலமாக நடத்திவந்தார்கள். உப-அத்யாபகராக ஒன்றிரண்டு அஸிஸ்டென்ட் வேண்டுமானால் அவருக்கு இருந்திருக்கலாம்.

"குலபதி"

அபூர்வமாகச் சில இடங்களில் சதுர்தச வித்யைகளிலும் உள்ள ஸகல சாஸ்த்ரங்களையும் ஸாங்கோபாங்கமாக ஆராய்ந்து கற்றுக்கொடுப்பதற்காக பல ஆசிரியர்களைத் தம் கீழே வைத்துக்கொண்டும், ஸீனியர் ஸ்டூடென்ட்களைக் கொண்டு ஜுனியர்களுக்குக் கற்றுக் கொடுத்தும் ஏராளமான மாணவர்களுக்குக் கல்வி அளித்த குருமார்கள் இருந்திருக்கிறார்கள். இவர்களுக்குத்தான் "குலபதி" என்று பெயர்.

குலபதி முன்ஷி என்கிறோம். மெட்ராஸில் குலபதி (பாலக்ருஷ்ண) ஜோஷி என்று இருக்கிறார். இரண்டு பேரும் குஜராத்திக்காரர்கள்! இருவர் பேரும் 'ஷி'யில் முடிகிறது!

Koviloor Digital Library

ஆனல் இவர்கள் நான் இப்போது சொன்ன ஒரிஜினல் அர்த்தப்படி 'குலபதி'கள் இல்லை. காலப்போக்கில், கல்வி ப்ரசாரத்தில் மிகவும் சிறப்பாகத் தொண்டு செய்யும் ஒரு பெரியவரைக் 'குலபதி' என்று சொல்வதாக ஏற்பட்ட திலேயே இவர்களைக் குலபதி என்கிறோம். முன்ஷி அநேக வித்யாசாலைகளும், நம்முடைய கலாசார ப்ரசாரத்துக்காக வித்யாபவனமும் வைத்தவர். ஜோஷி அநேக வருஷங்கள் உசந்த முறையில் ரொம்பவும் நல்ல பெயருடன் தியலாஜிகல் ஹைஸ்கூலில் ஆசிரியராக இருந்தவர். அதனல் இவர்களைக் 'குலபதி' என்று சிறப்பித்துச் சொல்கிறோம்.

வஸிஷ்டர் மாதிரி மஹா பெரியவராக ஒரு குரு இருக்கிறபோது அவரிடம் நாலு வார்த்தையாவது நேரே கற்றுக்கொண்டு "வஸிஷ்ட சிஷ்யன்" என்று பெயர் வாங்க வேண்டுமென்று ஏராளமானவர்களுக்கு ஆசையாய் இருந் திருக்குமல்லவா? இவர்களுடைய ஆசையைப் பூர்த்தி செய்வதற்காக அந்த மஹா பெரியவர்களும் ஆசையோடு வருகிற அத்தனை வித்யார்த்திகளையும் குருகுலத்தில் சேர்த் துக் கொண்டு, நிறைய ஆசிரியர்களைத் தங்களுக்குக் கீழே அமர்த்திக் கொண்டு இவர்கள் மூலம் அவர்களுக்குப் பாடம் சொல்லித் தருவது, ஆரம்ப கட்டங்களில் ஏதோ ஒன்றிரண்டு விஷயங்கள் மட்டும் தாங்களே சொல்லிக் கொடுத்து, "அட்வான்ஸ்ட்" கட்டம் வரும்போது ஸவிஸ் தாரமாக க்ளாஸ் எடுப்பது என்று வைத்துக் கொண்டிருந் திருக்கிறார்கள்.

போன (பத்தொன்பதாம்) நூற்றாண்டில் மன்னார்குடி ராஜு சாஸ்த்ரிகள் என்று வித்யா பாரங்கதராக ஒருவர் இருந்தார். பாரங்கதர் என்றால் கரை கடந்தவர். 'பாரம்' (paaram) என்றால் அக்கரை. அவருடைய சிஷ்யர்கள் என்று ரொம்பப் பேர் அடுத்த தலைமுறையில் வந்தார்கள். அவ்வளவு பேரும் முழு வித்யாப்யாஸமும் அவரிடம் செய்த வர்களில்லை. கடைசி ஸ்டேஜில்தான் இவர்கள் நேரே

Koviloor Digital Library

அவரிடம் பாடம் கேட்டது. அதற்கு முன் அநேகமாக ஸீனியர் மாணவர்களிடம்தான் இவர்கள் படித்ததெல்லாம்.

"ரகுவம்ச"த்தில் (முதல் ஸர்க முடிவில்) வஸிஷ்டரைக் "குலபதி" என்று சொல்லியிருக்கிறது. "சாகுந்தல"த்தில் கண்வ மஹர்ஷியைக் குலபதி என்று சொல்லியிருக்கிறது. சிறிது காலம் கழித்து ஏராளமாக சாஸ்த்ரங்களும் காவ்யங்களும் உண்டாகிவிட்டபோது, பத்தாயிரம் மாணவர்களுக்கு இம்மாதிரி குருகுலம் நடத்துகிறவருக்குத்தான் "குலபதி" என்ற பெயர் கொடுக்கப்பட்டது. பத்தாயிரம் என்பது அதிசயோக்தியாய் (மிகைபடக் கூறலாய்) இருக்கலாம் என்கிறார்கள். எப்படியானாலும் நூற்றுக் கணக்கிலாவது மாணவர்கள் இவற்றில் இருந்திருக்கத்தான் வேண்டும். இதில் கவனிக்க வேண்டியது என்ன என்றால் இத்தனை மாணவர்கள் இருந்தபோதிலும் குருவானவர், அதாவது அந்தக் குலபதியானவர், ஃபீஸையோ தக்ஷிணையையோ நினைக்காமல், அவ்வளவு மாணவர்களுக்கும் ஆசிரியர்களுக்கும் தாமே சாப்பாடு போட்டு ரக்ஷிக்கும் நிஜ ஆசார்யராக இருந்திருக்கிறார்! "யோ அன்ன தானாதி போஷணாத் அத்யா பயதி"—"எவன் சாதம் போட்டுப் பாடம் சொல்லித் தருகிறானோ" - அவனே குலபதி என்று லக்ஷணம் சொல்லியிருக்கிறது. 'நல்ல கார்யம் செய்கிறார், தன் ராஜ்யத்தில் நிறைய வித்வான்களை உருவாக்குகிறார்' என்று ராஜா பாட்டுக்கு இவருக்கு ஸம்பாவனை பண்ணிக் கொண்டிருப்பான். இவரும் ஏராளமான சிஷ்யப்பிள்ளைகளைக் கல்விமான்களாக்குவார். "வ்ருத்யர்த்தம்" (பணத்துக்காக) என்ற வாடையே இராது.

ஆனாலும் மொத்தத்தில் பார்த்தால் பெரிய வித்யாசாலைகள் நடத்திய குலபதிகள் அபூர்வமாகத்தான் இருந்தார்கள். தனியாக ஒரு ஆசார்யன் சிறிதாக குருகுலம் நடத்துவதே பொது விதியாக இருந்தது.

Koviloor Digital Library

பூர்வகால போதனையமைப்பின் வளர்ச்சி

வேதகாலம் என்கிற ஆதி காலத்தில் நம்முடைய தேசத்தில் (நம்முடைய தேசத்தில் மாத்திரமில்லை; உலகத்திலேயே) முதல் முதலில் கல்வி போதிப்பது எப்படி ஆரம்பித்தது என்றால்:

ஒவ்வொரு ரிஷியும் அவருக்கு ஈச்வராநுக்ரஹத்தில் ஸ்புரித்த (அதாவது, reveal ஆன) மந்த்ரங்களையும் வித்யைகளையும் தன்னுடைய புத்ரன், புத்ரன் மாதிரியாக இருக்கப்பட்ட நெருக்கமான பந்துமித்ரர்களின் குழந்தைகள் ஆகியவர்களுக்குச் சொல்லிக் கொடுப்பதில்தான் ஆதி 'ஸ்கூல்' பிறந்தது. வித்யைகள் என்று இங்கே சொன்னது, பிற்காலத்தில் அந்த வார்த்தையில் உள்ளடங்கிய 'ஆர்ட்'களையும் (கலைகளையும்) ஸயன்ஸ்களையும் அந்த ஆரம்பகாலத்தில் அவ்வளவாகக் குறிக்கவில்லை. அக்காலத்தில் ஒவ்வொரு உபாஸனாமார்க்கமும் மட்டுமே ஒரு வித்யை எனப்பட்டது.

நல்ல த்யான லயத்திலே ஒரு ரிஷியின் அந்தஃகரணம் பரமாத்மாவிடம் சொருகிக்கொண்டு கிடக்கும்போது அந்தப் பரமாத்ம ஸ்வரூபமான ஆகாசத்திலேயிருந்து அவர்களுக்குள் மந்த்ரங்கள் ஸ்புரிக்கும்;* அந்தப் பரமாத்மாவின் அநுக்ரஹத்தில் அதை அடைவதற்கு உபாயமான ஏதாவதொரு உபாஸனா மார்க்கமும் தானாக 'ரிவீல்' ஆகும் (வெளிப்படும்). யமதர்ம ராஜா நசிகேதஸுக்கு உபதேசித்த மாதிரி, ஸநத்குமாரர் நாரதருக்கு உபதேசித்த மாதிரி ஒரு தேவதை அல்லது தெய்வத்தன்மை அடைந்த ஒரு மஹா புருஷர் ஒரு ரிஷிக்கு, அல்லது வேறொரு ஸத்பாத்ரத்துக்கு இப்படிப்பட்ட வித்யையை உபதேசிப்பார். ஸ்வர்க்க லோக

* இவ்விஷயமும் இதன்பின் வரும் விஷயங்களில் சிலவும் நம் நூலின் இரண்டாம் பகுதியில் "வேதம்" என்ற உரையிலுள்ள "அநாதி-அபௌருஷேயம்", "ஒலியும் படைப்பும்" என்ற பிரிவுகளில் விரிக்கப்பட்டுள்ளன. வாசகர்கள் அவற்றில் ஒரு கண்ணோட்டம் விட்டால் இனி படிக்கவிருப்பவை நன்கு தெளிவாகும்.

Koviloor Digital Library

ஸம்பந்தமுள்ள அக்னி வித்யையை நசிகேதஸுக்கு யமதர்ம ராஜா உபதேசித்தார். அந்த வித்யை அதற்கப்புறம் அதைப் பெற்ற சிஷ்யனுன நசிகேதஸின் பெயரிலேயே வழங்கப்படட்டுமென்றும் வரம் கொடுத்தார்.

இதே போலத்தான் இன்னம் சில வித்யைகளும் அவற்றில் உபதேசம் பெற்ற சிஷ்யர் பெயரில் இருக்கின்றன. உபகோஸல வித்யா, ஸத்யகாம வித்யா, மைத்ரேயி வித்யா என்று உபநிஷத்தில் வருகிறவை, அவை யாரைக் குறித்து உபதேசிக்கப்பட்டனவோ அவர்கள் பெயரை வைத்துத் தான். உபதேசிக்கிற குருவின் பேரிலோ, அல்லது உபாஸனு மூர்த்தி அல்லது தத்வத்தின் பேரிலோ இல்லாமல் இப்படிச் சில வித்யைகள் சிஷ்யர் பேரிவிருப்பதிலிருந்து, ச்ரத்தா-பக்திகளுடன் வித்யையைக் கற்றறிய விரும்புகிற மாணவனுக்கு ஆதியில் எவ்வளவு சிறப்புக் கொடுத்திருக்கிருர்களென்று தெரிகிறது. இது ஒரு பக்கம் இருக்கட்டும்.

ஆதிக்கும் ஆதிகால ஸ்கூல் பற்றிச் சொல்லிக்கொண்டிருந்தேன். வித்யைகள் என்பது பற்றிப் பேச்சு வந்தது.

"ப்ரஹ்மவித்யா" என்று எல்லா வித்யைகளுக்கும் முடிவான ஸத்ய தத்வத்தைச் சொல்லும் வேதாந்தமான உபநிஷத்துக்களை ஒரு மொத்தமாகச் சேர்த்துக் குறிப்பிடுவது வழக்கம். "என்ன, பெரிய ப்ரம்ம வித்தையோ?" என்று இதைத்தான் பேச்சு வழக்கில் சொல்வது. இந்த ப்ரஹ்மவித்யையான உபநிஷத்துக்களில் அநேக வித்யைகள்—பஞ்சாக்னி வித்யா, மது வித்யா, வைச்வாநர வித்யா, ஸம்வர்க வித்யா, தஹரவித்யா, அந்தர்யாமி வித்யா என்றெல்லாம் குறிப்பிடப்படுகிறவை—வருகின்றன. Ritual (சடங்கு) நிறைய இருக்கப்பட்ட வித்யைகள், அப்படியில்லாமல் த்யானுதி அப்யாஸங்களால் க்ரஹிக்கக்கூடிய தத்வ ரூபமான வித்யைகள் ஆகிய எல்லாம் நிறைய இருந்திருக்கின்றன. இவற்றை முதலில் ஈச்வர ப்ரஸாதத்தால் பெற்ற ரிஷிகளும், இதே மாதிரி மந்த்ரங்களையும், பல மந்த்ரங்கள்

Koviloor Digital Library

அடக்கிய ஸூக்தங்களையும் ஆகாசத்திலிருந்து அபௌருஷே யமாகப் பெற்ற ரிஷிகளும் இவற்றைத் தங்கள் தங்கள் வாரிசுகளுக்கும், ரொம்பவும் நெருக்கமாக இருக்கப்பட்ட மற்ற பசங்களுக்கும் தங்கள் தங்கள் அகத்திலேயே சொல்லிக் கொடுக்க ஆரம்பித்ததில்தான் ஆதிகால ஸ்கூல் உண்டாயிற்று. ரிஷிகளின் பர்ணசாலைகளைப் பொதுவாக ஆச்ரமம் என்பார்கள். அவற்றில் இந்தமாதிரி போதனை நடைபெற்ற ஆச்ரமங்களை 'ரிஷிகுலம்' என்பார்கள். ரிஷிகுலம்தான் நம்முடைய, அல்லது மனித குலத்துடைய, முதல் பள்ளிக்கூடம்.

இப்படி ரொம்பவும் ஆரம்பத்தில் ஒரு குடும்பப் பாரம்பர்யமாகவேதான் வித்யைகளும், வித்யாசாலைகளும் இருந்திருக்கின்றன. அப்புறம் இந்த ரிஷிகுலக்காரர்களில் ஒருவருக்கொருவர் தொடர்பு, பரிவர்த்தனை ஏற்பட்டு, கல்விமுறை வ்ருத்தியாகி அவரவரும் தங்கள் தங்கள் குடும்ப வித்யையை மட்டுமின்றி மற்ற வித்யைகளையும் மந்த்ர ஸூக் தங்களையும் மற்ற ரிஷிகுலங்களுக்குப் போய்க் கற்றுக் கொள்ள ஆரம்பித்தார்கள்.

மொழி, ஒலி ஒழுங்கு

கற்றுக் கொடுப்பதில் பாஷைதானே முக்யமான உபகரணம்? உலகத்தின் ஆதி நூலாகிய ரிக்வேதத்திலேயே பாஷா ரூபத்தை நிர்ணயிப்பதான வ்யாகரணம் (இலக் கணம்) எவ்வளவு நன்றாக வரையறை செய்யப்பட்டிருந் திருக்கிறது என்பதைப் பார்த்து மேல்நாட்டுக்காரர்கள் ஆச்சர்யப்படுகிறார்கள். வ்யாகரண விதிகள் என்று மற்ற எல்லா பாஷைகளுக்கும் இருப்பவற்றோடு மட்டுமில்லாமல், ஸ்வரங்கள் என்பதாக மந்த்ரங்களின் ஒவ்வொரு அக்ஷரத் தையும் எப்படி ஏற்றியோ, இறக்கியோ, ஸமமாகவோ உச்சரிக்க வேண்டுமென்பதையும் கற்றுக் கொடுத்தார்கள். ஆதியில் அந்த மந்த்ர சப்தங்கள் ரிஷிகளுக்கு எப்படி அநுக்ரஹமாயிற்றோ அதே ரூபத்தில் சொல்லிக் கொடுத்

Koviloor Digital Library

தார்கள். கால வரையறை செய்ய முடியாத அந்த ஆதி ஸ்கூலிலிருந்து ஆரம்பித்து எத்தனையோ யுகங்களுக்கு அப்புறம் இன்றைக்கு ஒரு கனபாடிகள் ஒரு சிஷ்யனுக்குச் சொல்லிக் கொடுப்பது வரையில், இந்த தேசம் பூராவும் கொஞ்சங்கூட, வித்யாஸமில்லாமல் அதே ஸ்வரங்களில் தான் வேதங்களின் அப்யாஸம் இருந்து வந்திருக்கிறது!

எழுத்தில்லாத போதனை !

இப்படிச் சொல்லிக் கொடுத்தது எழுத்தின் மூலம் இல்லை. எழுத்துக்கு முக்யத்வம் வந்தது ரொம்பக் காலத்துக்குப் பிற்பாடுதான். இப்போது பள்ளிக்கூடம் என்றவுடன் நினைக்கப்படுகிற black-board (கரும்பலகை), சாக்பீஸ், ஸ்லேட்-பலப்பம், நோட்டு-பென்ஸில்-பேனா என்கிற எதுவும், புஸ்தகம் சுவடி முதலான எதுவுமே இல்லாதது ஆதிகால ஸ்கூல்! 'படிப்பு' என்று கல்வியைச் சொல்வதே புஸ்தகத்தைப் பார்த்துப் படிப்பதிலிருந்து ஏற்பட்டதுதான். அக்ஷராப்யாஸம் என்று வித்யாரம்பத்தைச் சொல்வதிலும் 'அக்ஷரம்' என்பது எழுத்தைச் சொல்வதாகவே இப்போது புல காலமாக வைத்துக்கொண்டு, குழந்தைக்கு அன்று 'ஆனா' எழுதச் சொல்லிக் கொடுக்கிறோம். இரண்டாயிரம் வருஷத்துக்கு முந்தியே படிப்பில் எழுத்து பிரதானமாக வந்துவிட்டது என்பது திருவள்ளுவர், ஒளவை முதலானவர்கள் எண், எழுத்து என்ற இரண்டையும் இரண்டு கண்களாகச் சொல்வதிலிருந்து தெரிகிறது.

ஆனால் நான் சொல்லும் மிகப் பழமையான வேதகாலத்தில் ஆரம்பித்து, அப்புறம் வெகுகாலம் வரையில் கூட எழுத்து, படிப்பது என்பது அதிகம் இல்லாமல்தான் விஸ்தாரமான வித்யாப்யாஸம் பூராவும் நடந்திருக்கிறது. என்ன செய்தார்களென்றால், வாய்மொழியாகவே சொல்லிக்கொடுத்து அதை மாணவன் காதால் கேட்டு மறுபடி வாயால் ஒப்பிக்கும்படிச் செய்தே பாடம்

Koviloor Digital Library

நடத்தினார்கள். வேதமந்த்ரங்களை எழுதி வைக்க வ கூடாது என்று பண்ணியிருந்தார்கள். ஏனென்றால் தெய்விக மான அந்த மந்த்ர சப்தங்கள் என்றைக்கும் லோகத்தில் இருந்துகொண்டு, அதன்மூலம் லோக க்ஷேமத்தை உண்டாக்க வேண்டுமென்பதற்காகத்தான். இதற்கும் எழுதி வைக்காம லிருப்பதற்கும் என்ன ஸம்பந்தம்?

லோகத்தில் மந்த்ர சப்தங்களைப் பரப்பிக்கொண்டிருக் கும்படியாக ஜனங்களில் ஒரு பிரிவை உறுதியாக ஏற் படுத்தித் தரவேண்டுமானால் அதற்கு என்ன வழி? அவர்கள் எப்போது பார்த்தாலும் இதைச் சொல்லிக்கொண்டிருக்கப் பண்ணி, அப்படிப் பண்ணினால்தான் அவர்களுக்குப் பிழைப்பு உண்டு. தக்ஷிணையோ மான்யமோ கிடைக்கும் என்று வைத்து, வேறே எந்தத் தொழிலுக்கும் அவர்கள் போகப்படாது என்று விதி செய்துவிடுவதுதான். இதற்கு அவர்கள் வேதத்தை ஏதோ அவ்வப்போது புஸ்தகங்களில் பார்த்துப் படிப்பது என்று இருந்தால் ஸரிப்பட்டு வராது. வேதத்தில் வரும் அநேக சப்தங்களை எழுத்தில் கொண்டுவர முடியாது. அதன் ஏற்றல் - இறக்கல் ஸ்வரங்களையும் எழுதிக் காட்ட முடியாது. ஏதாவது பங்க்சுவேஷன் மார்க் போடலாமே என்றால், அச்சுப்பிழை எழுத்துப்பிழை மாதிரி ஏற்பட்டுவிட்டால் மந்த்ர ரூபம் மாறிப்போய் அதன் பலனே விபரீதமாகிவிட இடமுண்டு. இதெல்லாவற்றோடுங் கூட ரொம்ப முக்யமான காரணம், ஏதோ அவ்வப்போது படிப்பது என்பதாக ஒருத்தனுடைய மனஸின் வெளி லெவலோடு மந்த்ரங்களை நிறுத்திவிட்டால் அவற்றின் பூர்ண ப்ரயோஜனம் உண்டாகவே உண்டாகாது. மந்த்ரங்கள் ஒருவனுடைய மனஸ் பூராவையும் வ்யாபித்து அவனுடைய உயிரிலேயே இறங்கி ஊறியிருக்க வேண்டும். அப்போது தான் அவன் சொல்லும் மந்த்ரம் பூர்ணமாக வீர்யவத்தாக இருக்கும். 'எழுதிவைத்துப் படிக்கலாம்' என்று இருந்து விட்டால் ஒருவன், அதை மனப்பாடம் செய்துகொள் ளாமலே, 'அதுதான் சுவடி இருக்கே! ஸமயம் நேரும்போது

Koviloor Digital Library

பார்த்துண்டா போச்சு' என்று இருந்துவிடக்கூடும். அதாவது மந்த்ரம் இவனுக்குள்ளே, அல்லது இவன் மந்த்ரத்துக்குள்ளே ஊறாமல் மேலெழுந்தவாரியாக முடிந்துவிடும். இப்படி விடக்கூடாது என்றுதான் எழுத்தாலில்லாமல் வாய் மொழியாலேயே ஆதிகால ஸ்கூலில் பாடம் நடத்தி எல்லாவற்றையும் மனப்பாடமாகப் பண்ணிக்கொள்ள வைத்தது.

மந்த்ரம் மாணவனுக்குள் ஊறுவதற்காகத்தான் அவனை புத்திசாலியாக மட்டுமில்லாமல் குணசாலியாகவும் இருக்கப் பண்ணினார்கள். ஏனென்றால் சுத்தமான ஜீவனுக்குள்தான் வேத மந்த்ரம் இறங்கி ப்ரகாசிக்கும்; அவனையும் ப்ரகாசிக்க வைக்கும். இதனாலேயே வித்யார்த்திக்கு—ஸ்டூடன்டுக்கு—ப்ரம்மசர்ய நியமத்தை வைத்தார்கள். 'தபஸ்' என்றே சிக்ஷை முறையை வைத்தார்கள். வித்யாப்யாஸம் என்பது ஒரு வ்ரதமாக ஆரம்பத்திலே தீக்ஷையுடன் நடந்தது.

பிறக்கும்போது ப்ராம்மணனும் நாலாம் வர்ணத்தவன் தான்; உபநயன ஸம்ஸ்காரத்தால்தான் அவன் 'த்விஜன்' என்னும் இருபிறப்பாளனாகிறான்; அப்புறம் வித்யாப்யாஸத்தால் அவனுக்கு 'விப்ரன்' என்ற பெயர் உண்டாகிறது; இந்த மூன்றும் சேர்ந்து ஒருத்தனை 'ச்ரோத்ரியன்' ஆக்குகிறது. இப்படி சாஸ்த்ரத்தில் இருக்கிறது :

> ஜந்மநா ஜாயதே சூத்ர :
> ஸம்ஸ்காரேர் - த்விஜ உச்யதே |
> வித்யயா யாதி விப்ரத்வம்
> த்ரிபி : ச்ரோத்ரிய உச்யதே ||

இவன் 'ப்ரஹ்ம' எனப்படும் வேதத்தில் ஊறி, அதே ப்ரஹ்ம பதத்தால் குறிப்பிடப்படும் பரமாத்மாவைப் பற்றிய ஞானத்தில் ஸித்தி அடையும்போதே 'ப்ராஹ்மணன்' ஆகிறான்.

அதாவது, கல்வி என்பது ஸம்பாதிப்பதற்கு ஸாதனம் என்று நாம் வைத்துள்ள நிலைக்கு ரொம்ப ரொம்ப உச்சத்தில்

Koviloor Digital Library

அது ஒருவனுக்கு அறிவையும், ஆத்ம ஞானத்தையும் கொடுத்து அவனுடைய ஜன்மாவையே கடைத்தேற்றி வைப்பதற்காகவே ஏற்பட்டது என்ற உயர்ந்த லக்ஷியத்தை நம்முடைய ஆதி மூதாதையர் கொண்டிருந்தார்கள்.

வாயால் சொல்லி மாணவனைத் திரும்ப ஒப்பிக்க வைப்பதில் வாத்யார் ஒவ்வொரு மந்த்ரத்தையும் ஐந்து தடவை திரும்பத் திரும்பச் சொல்வார். அவர் ஒரு தடவை சொன்னதுமே அதைப் பிடித்துக்கொண்டு ஒப்பித்துவிடும் புத்திசாலிப் பையனைத்தான் "ஏக ஸந்த க்ராஹி" என்பது.

குலம், சாகை, சாத்ரன், சரணம் முதலியன

"குலம், கோத்ரம் பார்க்கணும்" என்ற ஒரு வாக்யம் நம்மிடையே அடிபடுகிறது. (இந்தக் கொள்கையையே அடித்துப் போட்டுவிடவேண்டுமென்பதுதான் நம்முடைய நவீன நாகரிகக்காரர்களின் அபிப்ராயம்.) ஒரே ரிஷியின் வம்சத்தினுடைய பல கிளைப் பரம்பரைகளைச் சேர்ந்த எல்லோரும் ஒரு 'கோத்ரம்'. 'குலம்' என்றால் இப்படி ஒரே கோத்ரமாக இருக்கிறவர்களில் கிட்டின உறவாக ஒன்று சேர்ந்திருக்கிறவர்கள். இந்தக் 'குல'த்தில்தான் ஆதிகால ஸ்கூல் ஏற்பட்டதாக நான் சொன்னது. அப்போது 'குருகுலம்' என்ற பெயரைவிட 'ரிஷிகுலம்' என்ற பெயரிலேயே அது அதிகம் பேசப்பட்டது. குரு - சிஷ்யன் என்கிற போது ரக்தபாந்தவ்யம் (ரத்த உறவு) அதில் தெரியாமல், உறவுக்காரராக இல்லாத இருவர்களில் ஒருவர் சொல்லிக் கொடுப்பதாகவும், இன்னொருவர் கற்றுக் கொள்வதாகவுந் தான் தோன்றுகிறது. ஆரம்பகால ஸ்கூலோ ரக்த பாந்தவ்யமுள்ளவர்களிடையே அமைந்த ஒன்றாக இருந்தது. ஆதியில் பிதா தான் குரு என்று சொன்னேனல்லவா? தங்கள் மூதாதையான ஒரு ரிஷி கண்டுபிடித்த—அல்லது கண்டு கொண்ட—ஒரு வித்யையைத் தங்களுக்குள் அவர்கள் பரப்பிக் கொண்டதால் அது ரிஷிகுலம் என்று பேர் பெற்றது.

Koviloor Digital Library

அப்புறம் இப்படி அநேக ரிஷிகள் கண்டு கொண்ட வித்யைகளையும் மந்த்ரங்களையும் ரிஷிகுலங்கள் பல ஒன்றோடொன்று தொடர்பு கொண்டு பரஸ்பரம் பரிமாறிக் கொள்ளும் காலம் வந்தது. இப்படிக் கூட்டுச் சேர்ந்த அநேக குல கோத்ரர்கள் ஒரே விதமான ஆசரணைகளை மேற்கொண்டனர். அங்கங்கேயும் இப்படி வேறு வேறாகப் பல வேறு ரிஷிகளுடைய மந்த்ரங்களை ஒன்றாகத் திரட்டி ஒவ்வொரு பிரிவினர் அதை அத்யயனம் செய்வதாக ஏற்பட்டது. இப்படிக் கொஞ்சம் கொஞ்சம் வித்யாஸத்துடன் ஒரே வேதத்தில் ஏற்பட்ட பிரிவுகளைத்தான் சாகை (கிளை) என்பது. சரித்ர ரீதியாக வித்யாசாலை என்பது வளர்ச்சி கண்டதைப் பார்க்கும்போது, ரிஷிகுலங்களுக்கு அப்புறம் வருவது ஒவ்வொரு சாகையைச் சொல்லிக் கொடுத்த குருகுலங்களேயாகும். இங்கே ரக்த பந்துக்களிடமிருந்து கல்வி ப்ரசாரம் விரிவடைந்து, ஒரே வேதப் பிரிவைச் சேர்ந்த, ஒரே ஆசரணைகளைக் கொண்ட எல்லாரிடமும் பரவலாயிற்று. அப்புறம்தான் ஒரு வேதத்தின் ஒரு சாகை மாத்திரமில்லாமல் பல வேதங்கள், மற்றும் பல வித்யைகள் ஆகியவற்றையும் கற்றுக்கொடுப்பதாக குருகுலம் விரிவு பெற்றது.

மாணவன், வித்யார்த்தி, சிஷ்யன் என்றெல்லாம் நாம் சொல்லும் பையனுக்கு 'சாத்ரன்' என்று அக் காலத்தில் பேர் இருந்திருப்பதாகப் பாணினியின் வ்யாகரணத்திலிருந்து தெரிகிறது. 'சத்ரம்' என்றால் 'குடை' என்று தெரிந்திருக்கலாம். ஒரு குடை ஒருத்தன் தலைக்கு மேலே கவிந்துகொண்டு அவனை வெயில், மழைகளிலிருந்து காப்பாற்றுகிறமாதிரி, குரு என்பவரால் நன்றாக அரவணைக்கப்பட்டுக் கெடுதல்களிலிருந்து காப்பாற்றப்படுவதாலேயே சிஷ்யனுக்கு 'சாத்ரன்' என்ற பெயர் ஏற்பட்டிருக்கிறது. இதிலிருந்து குருவுடைய உத்தமமான குணமும் அவருடைய, அன்புப் பணியும் தெரிகின்றன. அதாவது கல்வி என்பது அறிவு ஸம்பந்தப்பட்டதாக மட்டும் இன்றைக்குப் போலில்-

Koviloor Digital Library

லாமல், நல்ல குணத்தின் ஸம்பந்தமுள்ளதாகவும் இருந்தது என்பதற்காகச் சொல்கிறேன்.

வித்யாசாலைக்கு அப்போது 'சரணம்' என்ற பேர் இருந்ததாகவும் பாணினீயத்திலிருந்து தெரிகிறது.* 'சரணம்' என்றால் கால். பாதம், பதம் என்று காலைச் சொல்கிறோம். 'பரமபதம்' என்று மிகவும் உயர்ந்த ஸ்தானத்தைச் சொல்லும்போதும் 'பதம்' என்ற வார்த்தை வருகிறது. கால் நம் உடம்பைத் தாங்கி நிற்கச் செய்வதுபோல, நம் உயிரைத் தாங்கி நிலைத்து நிற்கும்படி செய்யும் பெரிய 'ஸப்போர்ட்'தான் பதம். 'சரணம்' என்று இதே அர்த்தத்தில்தான் குருகுலத்துக்குப் பெயர் கொடுத்திருக்கிறது.

அத்யாபகர் என்று பொதுவாகச் சொல்லப்பட்ட டீச்சர் வேத அத்யயன - அத்யாபனங்களில், அதாவது வேத text-களைச் சொல்வதிலும் சொல்லிக் கொடுப்பதிலும் 'கனம்' என்னும் முடிவு வரை போனவராக இருந்தால் அவரை "ச்ரோத்ரியர்" என்பதாகவும்; இப்படி மூலநூலான text - இல் தேர்ச்சி பெற்றிருப்பது மட்டுமில்லாமல் அதன் அர்த்தங்கள், தாத்பர்யங்கள் ஆகியவற்றை நன்றாக விளக்கிக் கூறவும் வல்லவராயிருந்தால் 'ப்ரவக்தா' என்பதாகவும் குறிப்பிட்டதாகத் தெரிகிறது. 'ப்ரவசனம்' பண்ணுபவர் யாரோ அவர் 'ப்ரவக்தா'.

கொஞ்ச காலத்துக்குப் பிற்பாடு முதலிலே சொன்ன ஆசார்யர், உபாத்யாயர் என்ற இரண்டு விதமான டீச்சர்கள் உண்டானார்கள்.

---

* வேதத்தில் மூலமான மந்த்ரங்களைச் சொல்வதான பாகத்துக்கு ஸம்ஹிதை என்றும், அந்த மந்த்ரங்களைக் கொண்டு எப்படி வைதிக கர்மாக்கள் செய்வது என்று விவரிக்கும் பாகத்துக்கு ப்ராஹ்மணம் என்றும் பெயர். ஸம்ஹிதா பாகங்களில் உள்ள ஒவ்வொரு பிரிவுக்கும், அதைக் கற்பித்த வித்யாசாலைக்கும் 'சாகை' எனப்பெயர் என்றும், இதேபோல் ப்ராஹ்மணத்தில் உள்ளவற்றுக்கு 'சரணம்' எனப் பெயர் என்றும் சிலர் சொல்கிறார்கள்.

Koviloor Digital Library

ஒரே குருகுலத்தில் படிப்பவர்களை "ஸப்ரஹ்மசாரிகள்" என்றும் "ஸதீர்த்யர்கள்" என்றும் பாணினி சொல்லியிருக்கிறார். இதே பேர்கள் பிற்காலத்திலும் நீடித்தன. இங்கிலீஷில் class - mates என்கிறோம். வடக்கே "குருபாயீக்கள்" என்கிறார்கள்.

குருதக்ஷிணை

படிப்பு முடிந்து சிஷ்யன் தருகிற தக்ஷிணை என்னவென்று மநு சொல்லியிருக்கிறார். பசு, பூமி, ஸ்வர்ணம், வஸ்த்ரம், தான்யம், காய்கறி, குடை, பாதரக்ஷை முதலியவற்றில் ஒரு சிஷ்யனால் எது முடியுமோ அதைத் தரலாம் என்கிறார்.

முதலிலேயே பேசிக்கொண்டு கொடுக்கல் - வாங்கல் பிஸினஸாக "வ்ருத்யர்த்தம்" கற்பிக்கும் வாத்யார், கற்றுக் கொள்ளும் மாணவன் இரண்டு பேரையுமே ச்ராத்தம் முதலான கர்மாக்களில் ப்ராஹ்மணர்களாக வரிக்கக்கூடாது என்றே மநு தீர்ப்புக் கொடுத்திருக்கிறார். இப்படிக் கற்றுக் கொடுப்பவர்தான் "உபாத்யாயர்" என்று ஞாபகமிருக்கலாம்.

ரக்த பந்துக்கள் மட்டுமேயான ஒரு குலத்திலிருந்து வேதத்தில் அதிகாரமுள்ள எல்லாருக்கும் பொதுவான சாகைக்குக் கல்வி போதனை வளர்ச்சி கண்டபோது ப்ராம்மணர்களோடு க்ஷத்ரிய, வைச்யர்களுக்கும் சேர்த்து போதிக்கும் பெரிய குருகுலங்கள் ஏற்படலாயின என்று தெரிகிறது.

பூர்வகாலக் கலைகளும் ஸயன்ஸ்களும்

இப்படிப் போகப் போக, உபாஸனா மார்க்கம்தான் வித்யை என்பதும் விரிவடைந்து, இப்போது நாம் சொல்கிற அர்த்தத்தில் அநேக 'ஆர்ட்'களும் ஸயன்ஸ்களும் ஏற்பட்டு, இவையும் வித்யை என்று பெயர் பெற்று குருகுலங்களில் கற்பிக்கப்படலாயின. சாந்தோக்ய உபநிஷத்திலேயே

Koviloor Digital Library

இப்படிப்பட்ட வித்யைகளுக்கு ஒரு பெரிய லிஸ்ட் கொடுத்திருப்பதைப் பார்க்கும்போது, "'எத்தனை காலத்துக்கு முன்னேயே நம் பூர்விகர்கள் இத்தனை துறைகளில் தேர்ச்சி கண்டு, அவற்றை முறையாகக் கற்றுக் கொடுத்தும் வந்திருக்கிறார்கள்!' என்பதாக நமக்கு ஆச்சர்யமே உண்டாகிறது.

அநேக வித்யைகளைக் கற்றும் ஆத்ம ஞானத்துக்கு அப்யாஸம் பண்ணாததால் நிறைவு காணாமல் ஏதோ ஒரு ஏக்கம் பிடித்து க்லேசப்பட்டுக் கொண்டிருந்த நாரதர், தாம் படித்த வித்யைகளின் பேர்களை ஸநத்குமாரரிடம் சொல்வதாக அந்த உபநிஷத்தில் வருகிறது. நாலு வேதங்கள், ஐந்தாவது வேதமாக நாரதர் சொல்கிற இதிஹாஸ புராணங்கள் ஆகியவற்றோடு "வேதங்களின் வேதம்" என்று அவர் குறிப்பிடும் வ்யாகரணம், "பித்ர்யம்" என்பதான பித்ரு கர்மாக்களைப் பற்றிய கல்பம், "ராசி' என்பதான கணித சாஸ்த்ரம், "தைவம்" என்னும் சகுன சாஸ்த்ரம், "நிதி" என்கிற பொருளாதார சாஸ்த்ரம், "வாகோவாக்யம்" என்கிற தர்க்க சாஸ்த்ரம், "ஏகாயனம்" என்கிற ராஜநீதி, "தேவ வித்யா" என்பதான நிருக்தம் (அதாவது வேதத்தின் அக்ஷரங்களுக்கு அர்த்தம் சொல்கிற Etymology), "ப்ரஹ்ம வித்யா" (வேதாந்தம் பூராவுக்கும் ஏற்பட்டுள்ள ப்ரஹ்ம வித்யா என்ற பேர் இந்த இடத்தில் வேதமந்த்ர சப்தங்களை வழுவற நிர்ணயித்துத் தரும் சிக்ஷா சாஸ்த்ரம் என்ற Phonetics-ஐ மட்டும் குறிக்கும்), "பூதவித்யா" என்னும் ஜீவஜந்துக்களைப் பற்றியதான Biology, "க்ஷத்ரவித்யா" என்பதான க்ஷத்ரியர்களுக்குரிய யுத்த சாஸ்த்ரம், அஸ்ட்ரானமி அஸ்ட்ராலஜி ஆகிய இரண்டும் சேர்ந்த "நக்ஷத்ர வித்யா", விஷங்களை முறிக்க வழி சொல்லித்தரும் "ஸர்ப்ப வித்யா", "தேவஜன வித்யா" (அதாவது உச்சாணி தேவர்களுக்கும் நம்மைப் போன்ற மநுஷ்ய ஜாதிக்கும் இடையிலேயுள்ள "தேவஜன"ங்களான கந்தர்வர்களுக்குரிய ஸங்கீத நாட்ய நாடக சில்ப

Koviloor Digital Library

சித்ரக் கலைகள்) என்றிப்படி அநேக "கோர்ஸ்"கள் படித்த தாக நாரதர் சொல்கிறார்.*

நாரதர் மஹாமேதை பொருந்தியவர். அதனால் அவரால் இத்தனை படிக்க முடிந்தது. அதோடு இத்தனை படிப்பாலும் ஆத்மானந்த நிறைவைப் பெற முடியவில்லை என்று தெரிந்துகொள்கிற விவேக விநயங்களும் அவருக்கு இருந்தது. அதனால்தான் ஸநத்குமாரரை ஆச்ரயித்து அவரிடமிருந்து ஆத்ம வித்யோபதேசம் பெற்றிருக்கிறார். ஈச்வர தத்வத்தைக் காட்டிக் கொடுக்கவே கல்வி ப்ரயோஜனப் படவேண்டும் என்பதும் இதிலேயே தெரிகிறது. அது இருக்கட்டும். 'நான்' சொல்ல வந்தது—இத்தனை கோர்ஸ்கள், இத்தனை ஸப்ஜெக்ட்கள் ஏற்பட்டுவிட்டனவென்றால் அப்போது குருகுலமும் விஸ்தாரமாகிக் கொண்டே போய் பல டீச்சர்கள் இருந்திருக்க வேண்டும். நாரதரைப் போல இல்லாமல் இவற்றிலே ஒருசில ஸப்ஜெக்ட்களை மட்டும் படிக்கும் மாணவர்களைக் கொண்ட தனித்தனியான பல க்ளாஸ்கள் அமைந்த பெரிய வித்யாசாலைகள் உண்டாயிருக்கவேண்டும். காட்டிலே ரிஷிகள் நடத்திய இப்படிப் பட்ட Forest University-களின் அடிப்படையிலேதான் டாகூர் சாந்தி நிகேதனம் அமைத்தது.

நாரதருக்கு ஏற்பட்ட குறை பொதுவாக அந்தக் கால வித்யார்த்திகள் எல்லாருக்கும் ஏற்பட்டிருக்காது. ஈச்வர ஸம்பந்தம், ஆத்ம ஸம்பந்தம் உள்ளதாகவே அந்நாள் கல்வி இருந்தாலும் ஒரு ஸாமான்ய ஜீவனை வித்யாப்யாஸ காலத்திலேயே ஒரேயடியாக அவனுக்கு எட்டாத ஞானமார்க்கத்தில் பிடித்துத் தள்ளிவிடவில்லை. அறிவு ரீதியில் ப்ரம்ம வித்யையையும் சொல்லிக் கொடுத்தாலும் அதை அப்பொழுதே அவன் அநுபவத்துக்குக் கொண்டுவரவேண்டும் என்று

---

* 'தேவஜன வித்யா' என்பதை இரண்டாகப் பிரித்து, தேவ வித்யா என்பது காந்தர்வக்கலைகள், ஜன வித்யா என்பது வைத்ய சாஸ்த்ரம் என்று கொள்ளும் கருத்தும் உள்ளது.

Koviloor Digital Library

நிர்பந்தப் படுத்தவில்லை. படிப்பு முடிந்த பிறகு அவன் கல்யாணம் கார்த்திகை பண்ணிக்கொண்டு குழந்தை குட்டி களைப் பெற்று இல்லற வாழ்க்கையை நன்றாய் நடத்திப் பழைய கர்மாக்களைத் தீர்த்துக்கொண்டும் தனக்கான கர்மா வைப் பண்ணியும் சித்த பரிபாகம் (பரிபக்குவம்) அடைந்து, அப்புறம்தான் ஸந்நியாஸி ஆகி ஆத்மவிசாரம் செய்ய வேண்டுமென்பதே வேத சாஸ்த்ர வழி. இதற்கு அநுகூலம் பண்ணும்படியாகவே கல்விமுறை இருந்தது.

தர்மம்—ப்ரஹ்மம்

தர்மம், ப்ரஹ்மம் என்று இரண்டு. தர்மம் இஹலோகத் தில் ஒழுங்காக வாழப்பண்ணுவது. ப்ரஹ்மம் பரலோக விஷயம். தர்மத்தின் வழியாக, தர்மத்துக்கான கர்மத்தின் வழியாகத்தான் ஒரு ஸாமான்ய ஜீவன் ப்ரஹ்ம விசாரத்துக் கும் போகமுடியும். தர்மம் என்ன என்று விசாரித்து, அறிந்து, அநுஷ்டிக்கவே பூர்வ மீமாம்ஸையாகிற கர்ம மார்க்க சாஸ்த்ரமும், ப்ரம்மத்தைப் பற்றி விசாரித்தறிந்து அநுபவிக்கவே உத்தர மீமாம்ஸையாகிற வேதாந்தமும் உள்ளன. அக்கால வித்யாசாலைகளில் வேதாந்தம் நிறையச் சொல்லிக் கொடுத்தாலும் அது அடிப்படையாக அதிலே ஒரு பிடிப்பு ஏற்படுத்திக் கொடுப்பதாகவே பெரும்பாலாருக்கு வைக்கப்பட்டது. அதிலேயே அப்போதே ஈடுபட்டுவிட வேண்டுமென்று வைக்கவில்லை. இஹலோக வாழ்க்கையை நன்றாக நடத்தி—அதாவது தர்மத்தின் வழியிலே நடத்தி— உரிய பக்குவம் பெற்றபின்னரே ஒருத்தன் பூர்வத்தில் அறிவு ரீதியில் தெரிந்துகொண்ட ஆத்ம சாஸ்த்ரத்தில் பூர்ணமாக ப்ரவேசிக்கும்படியாகத்தான் ப்ரஹ்மசர்ய ஆச்ரமத்தின் வித்யாப்யாஸமும், பிறகு க்ருஹஸ்தாச்ரமத்தின் வாழ்க்கை க்ரமமும் உருவாக்கப்பட்டன. நாரதர் ஸாமான்ய ஜீவனாக இல்லாமல் அஸாதாரணமாக இருந்தவராதலால் அவருக்கு தார்மிகமான வாழ்க்கையோடு நின்றுவிடுவதில் வித்யா ப்யாஸம் முடித்தபோதே குறை ஏற்பட்டு, ப்ரஹ்மஞானத்

Koviloor Digital Library

துக்கான ஏக்கம் உண்டாயிற்று. க்ருஹஸ்தாச்ரமத்துக்குப் போகாமல் ப்ரஹ்மசர்யத்திலிருந்தே ப்ரஹ்மஞான நிலைக்குப் போய்விட்டார்.

நாரதர் கதை இருக்கட்டும். ஸாதாரணமான ஒரு மநுஷ்யனை அதர்மத்தில் போகவிடாமல் தர்மத்தில் செலுத்தி நல்ல தெய்வபக்தியும் அத்யாத்ம விஷயங்களில் அடிப்படையாக ஒரு பற்றும் கொள்ளும்படி ஆதிகாலக் கல்வி முறை அமைக்கப்பட்டது. அது எப்படி காலக்ரமத்தில் விஸ்தாரமாக வளர்ந்தது என்று சொன்னேன்.

வைதிகமாகவே ஸகல வித்யைகளும்

இன்னொரு முக்யமான விஷயம் சொல்ல வேண்டும். வித்யை என்றால் வைதிகமான வித்யையாகவே இருந்த காலம் அது. அதனால் எந்த ஆர்ட், ஸயன்ஸானாலும் அதுவும் கூட வேத அத்யயனத்தோடும், வேத வித்யைகளான பதினாலோடும் சேர்த்துத்தான் வைதிகமான வாழ்முறைக்குப் பயன்படுவதாகவே போதிக்கப்படும்.

இதிலே வேடிக்கை என்னவென்றால் வேதம் முழுதையும் ஒப்புக்கொள்ளாமல் அதில் ஒரு பகுதியை மட்டும் ஒப்புக் கொள்ளும் பூர்வ மீமாம்ஸை முதலான வித்யைகளையும், அடியோடு வேதத்தையே ஒப்புக்கொள்ளாத சார்வாகம் முதலிய வித்யைகளையும், வேதத்தை ஆதரிப்பதாகவும் சொல்லமுடியாமல் ஆக்ஷேபிப்பதாகவும் சொல்லமுடியாமல் அதற்கு நேர் ஸம்பந்தமில்லாமல் இன்டிபென்டென்ட் - ஆக ஏற்பட்ட ஸாங்க்யம், யோகம் முதலான வித்யைகளையுங்கூட வேத அத்யயனத்தோடு சேர்த்தேதான் சொல்லிக் கொடுத்தார்கள். பிற்பாடு வேத ப்ராமாண்யத்தை ஆக்ஷேபித்து அவைதிகமான பௌத்த மதம் தோன்றி, பௌத்தர்கள் யுனிவர்ஸிடிகள் நடத்தியபோதுகூட அவற்றிலே சதுர்தச (பதினான்கு) வேதவித்யைகளையும் சொல்லிக் கொடுத்தார்கள்.

Koviloor Digital Library

எல்லா ஜாதியாரும்

பல தொழில்களுக்கான பல வித்யைகள் ஏற்பட்ட போது வேத அத்யயனத்துக்குத் தகுதி பெற்ற த்ரைவர்ணிகர்களும் (ப்ராஹ்மண, க்ஷத்ரிய, வைச்யர்களான மூன்று வர்ணத்தினரும்) குருகுலங்களில் சேர்ந்து படித்தார்கள். நான்காம் வர்ணத்தவர்கள் குருகுலத்தின் ஆசார்யர்மார்கள் போஜனம் முடித்தபின் அவர்களிடம் வந்து தங்களுடைய தொழிலுக்கான சாஸ்த்ரங்களைத் தெரிந்துகொண்டு போவார்கள். ஒவ்வொரு வர்ணத்தாருக்கும் குருகுலத்தின் மூலமாக எந்தெந்த அளவுக்கு கல்வி பெறவேண்டிய அவசியமிருந்தது என்பதை அப்புறம் சொல்கிறேன். அப்போது இந்த முறையில் பாரபக்ஷம் எதுவுமில்லை என்பது புரியும்.

மொத்தத்தில் குருகுலவாஸமாகவே குருவோடுகூட இருந்து படித்த த்ரைவர்ணிகர்களும்கூட ஒரே மாதிரியான கோர்ஸ் படிக்கவில்லை. குருகுலவாஸம் எத்தனை வருஷம் என்பதிலும்கூட அவர்களுக்குள் வித்யாஸமிருந்தது. மூன்று வர்ணத்தினரும் வெவ்வேறு வயஸுகளில்தான் உபநயன ஸம்ஸ்காரம் பெற்று குருகுலத்துக்கு அனுப்பப்பட்டார்கள்.*

கட்டாயக் கல்வி

இந்த வித்யாஸங்கள் இருக்கட்டும். நான் சொல்ல வந்த முக்யமான விஷயம் என்னவென்றால், வித்யாப்யாஸத்துக்கு அர்ஹதை உள்ள மூன்று வர்ணத்தாரில் ஸகலரும் கட்டாயமாக ப்ரஹ்மோபதேசம் பெற்று; குருவிடம் கல்வி கற்றே ஆகவேண்டுமென்று சாஸ்த்ரங்களில் விதித்திருக்கிறது. இஷ்டமிருந்தால் படிக்கலாம், இல்லாவிட்டால் போகட்டும் என்று விடாமல் கம்பல்ஸரி எஜுகேஷனை நடத்தியிருக்கிறார்கள். இப்படிச் செய்யாவிட்டால் கடுமையான தண்டனை விதித்திருக்கிறது. அக் காலத்தில்

---

* இவ் விஷயங்கள் இதே உரையில் பிறிதோரிடத்தில் விவரிக்கப்படுகின்றன.

Koviloor Digital Library

யாரும் ரொம்பப் பெரிய தண்டனையாக நினைத்து அவமானப் பட்டது ஜாதிப்ரஷ்டம்தான். வித்யாப்யாஸத்துக்கு வராத ப்ரஹ்ம, க்ஷத்ர, வைச்யர்களை இப்படி ஜாதி ப்ரஷ்டம் செய்யும்படியாகவே சாஸ்த்ரம் சொல்கிறது. இவர்களுடைய ஸந்ததியையும் 'வ்ராத்யர்கள்' என்பதாக ஸமூஹத்திலிருந்து ஒதுக்கிவைத்துவிட வேண்டுமென்று சொல்லியிருக்கிறது. வேத ஞானமும் கல்வியறிவும் அவற்றுக்குத் தகுதிபெற்ற எல்லாரிடமும் பரவுவதை இவ்வளவு முக்யமானதாக நம்முடைய பூர்விகர்கள் கருதி வலியுறுத்தியிருக்கிறார்கள்.

பாத்திரமறிந்து

கட்டாய பாடம் என்பதால், ஏதோ அரை மனஸாக வந்து, கற்றுக்கொண்டதாகப் பேர் பண்ணிவிட்டுப் போய் விடமுடியாது. முழுமனஸுடன் முழு 'கோர்ஸை'யும் நல்ல ப்ரஹ்மசர்ய நியமங்களோடு படிக்கக்கூடிய ஸத்பாத்ரத் துக்கே கற்றுக்கொடுக்க வேண்டுமென்று தர்ம சாஸ்த்ரங்கள் கூறுகின்றன. சுத்தனாகவும், க்ரஹண - தாரண சக்தியுள்ள வனாகவும் வித்யார்த்தி இருக்க வேண்டுமென்கின்றன. சொல்லிக் கொடுப்பதை நன்றாக க்ரஹித்துக் கொள்வதே க்ரஹண சக்தி. அப்புறம் அதை மறக்காமல் புத்தியில் இருத்திக் கொள்வது தாரணசக்தி.

கம்பல்ஸரி என்றும் வைத்துவிட்டு, இப்படித் தகுதியும் வைத்தால் என்ன அர்த்தம்? இயற்கையாகவே க்ரஹண - தாரண சக்தி போதாதவன் என்ன பண்ணுவது?

இதற்காகத்தான் முதலில் ப்ரஹ்மோபதேசம் என்று காயத்ரியை உபதேசித்து, அப்புறம் வித்யாப்யாஸத்தில் விடுவது என்று வைத்தார்கள். காயத்ரியை ஒழுங்காக ஜபித்து வந்தால், எவனுக்கும் க்ரஹண - தாரண சக்திகள் உண்டாகிவிடும்.

முறையாக காயத்ரீ அநுஸந்தானம் செய்யாததால் க்ரஹண - தாரண சக்திகளைப் பெறாதவன், அஸத்தாக

Koviloor Digital Library

இருக்கிறவன் ஆகியோருக்கு வித்யையைக் கொடுக்கக் கூடாது என்றும், அப்படிப்பட்டவர்களை ஸமூஹத்திலிருந்து ஒதுக்கிவிட வேண்டுமென்றும் வைத்தார்கள்.

நல்ல விதையானாலும் ஊஷர பூமியில் (உவர் நிலத்தில் விதைத்தால் வீணாகப் போவதுபோல் ஸத்வித்யையும் அஸத்துக்கு உபதேசிக்கப்பட்டால் வீணாகும் என்று சாஸ்த்ரம் எச்சரிக்கிறது.

இப்படிச் சொல்லியிருக்கிறது: யோக்யதையுள்ள சிஷ்யன் கிடைக்கவேயில்லை என்றாலும்கூட ஒரு வித்வான் தன் வித்யையோடேயே செத்தாலும் சாகட்டும்; ஆனால் என்ன ஆபத்து வந்தாலும் அபாத்ரத்துக்கு மட்டும் அதைக் (கற்றுக்) கொடுத்து விடக்கூடாது. ஒரு கதை மாதிரிக்கூடச் சொல்லியிருக்கிறது: வித்யா தேவதை ஒரு ப்ராம்மணனிடம், "நான் உனக்குக் கிடைத்திருக்கிற பெரிய புதையல். புதையலை எப்படி கவனமாகக் காப்பாற்றி, கருத்தாகச் செலவழித்து, தக்காருக்கே விநியோகம் பண்ணுவாயோ அப்படித்தான் என்னையும் நீ பண்ண வேண்டும். சுத்தனாய், ஜிதேந்த்ரியனாய், ச்ரத்தையோடு வித்யாப்யாஸம் செய்கிறவனாய், 'இதை நிதியாக ஸம்ரக்ஷிக்க வேண்டும்' என்று நினைக்கிறவனாய் உள்ளவனுக்குத்தான் என்னை நீ உபதேசிக்க வேண்டும்" என்று சொல்வதாக (தர்ம சாஸ்த்ரம்) தெரிவிக்கிறது.

அக்கறையோடும், பக்தியோடும் கேட்காதவனுக்கும், தர்ம விரோதமாக வித்யையை ப்ரயோஜனப்படுத்தக் கூடியவனுக்கும் சொல்லிக் கொடுக்கவேகூடாது என்று மநு தர்ம சாஸ்த்ரத்தில் இருக்கிறது.

எல்லா தர்ம சாஸ்த்ர க்ரந்தங்களுமே பாத்ரம் பார்க்காமல் பணத்துக்காக வித்யையைக் கற்றுக் கொடுப்பவன் நரகத்துக்குப் போவான் என்று ரொம்பவும் பயப்படும்படியாகச் சொல்லியிருக்கின்றன.

Koviloor Digital Library

பிற்கால மாறுதலும் தற்கால விபரீதமும்

அறிவு, குணம் இரண்டாலும் வித்யார்த்தி யோக்ய தாம்சமுள்ளவனுக இருக்கவேண்டுமென்பது பூர்விகர் ஏற்பாடு. பிற்பாடு ஸ்கூல் என்று வைத்துவிட்டபின், 'க்ளாஸில் ரொம்ப ரௌடித்தனம் பண்ணுமலிருக்கிருனு?' என்று பார்ப்பதற்கு மேல் குணத்தைப் பற்றிப் பார்க்க வேண்டியதில்லையென்றும், அறிவுக்குறைவை வைத்தே ஃபெயில் பண்ணுவதென்றும் அல்லது முதலிலேயே அட்மிஷன் கொடுக்காமலிருப்பதென்றும் ஆயிற்று. அதுவும் தற்காலத்தில் மாறிப்போய் ரௌடித்தனம் பண்ணுகிற வனின் இஷ்டப்படியே அவனுக்கு மார்க் போட்டு விடுவது என்று பயப்படுகிற ஸ்திதிக்கு வந்திருக்கிறது!

குணத்தையும் பார்க்கவேண்டாம், அறிவையும் பார்க்க வேண்டாம், எலெக்ஷனில் வோட் வாங்க யாருடைய ஆதரவு தேவையாயிருக்கிறதோ அந்த வர்க்கத்தைச் சேர்ந்த பசங்களாயிருந்துவிட்டால் போதும், அது ஒன்று தான் யோக்யதாம்சம் என்று ஆகியிருக்கிறது. ஆனுல் அப்படிச் சொல்லிக்கொள்ளாமல், 'பிற்பட்டவரை முன்னுக்கு கொண்டுவருகிறோம், தாழ்த்தப்பட்டவரை உசத்துகிறோம்' என்று சொல்லிக் கொள்கிறார்கள்.

(இவை) அவச்யம் செய்யவேண்டிய கார்யங்கள்தான். ஆனுல் எதையுமே அளவறிந்தும் முறையுடனும் செய்ய வேண்டும். பொது க்ஷேமத்தையும், ஸகல ஜனங்களுக்கும் கிடைக்கவேண்டிய நீதி ந்யாயத்தையும் கவனிக்காமல் செய்தால் அனர்த்தம்தான் ஏற்படும்.

இன்றைக்கு உள்ள சில ஸமூஹங்களைச் சேர்ந்த பசங் களின் தாத்தாவும் கொள்ளுத்தாத்தாவும் ஆதிகாலப் பூர்விகர்களும் நிறையக் கல்வி கற்றபோது, வேறு சில ஸமூஹத்தினர் அப்படிச் செய்யவில்லை அல்லது செய்யமுடிய வில்லை என்பதற்காக, "என்றைக்கோ உங்கள் தாத்தாவும், அவருக்குத் தாத்தாவுடைய தாத்தாவும் படிப்பிலே கொடி-

Koviloor Digital Library

கட்டிப் பறந்து விட்டார்களோல்லியோ? அதனுலே இன்றைக்கு நீங்கள் எத்தனை புத்திசாலிகளாயிருந்தாலும் உங்களை இரண்டாம் பக்ஷமாகத்தான் கருதிக் கலாசாலை களில் இடம் கொடுப்போம். உங்களைவிடத் தகுதியிலே குறைந்திருந்தாலும் யாருடைய தாத்தா, முத்தாத்தா படிக்கவில்லையோ அவர்களுக்குத்தான் இடம் ரிஸர்வ் பண்ணி வைப்போம்" என்கிருர்கள்.

இப்படிச் சொல்வது வேறு எதற்குப் பொருந்திலுைம் பொருந்தும்—ஆனுல் பகுத்தறிவுக்கு எப்படிப் பொருந்து கிறது என்பது புரியவில்லை. ஆனுலும் தங்களைப் பகுத்தறி வாளிகளாகச் சொல்லிக் கொள்கிறவர்கள்தான் இப்படிச் செய்து வருகிருர்கள்! ஆதியிலே நிஜமாகவே ஜனஸமூஹம் தொழில்களால் ஜாதியாகப் பிரிந்திருந்தபோது, அந்தப் பிரிவினைக்கு ஒத்தாசையாகவே செய்திருந்த கல்வி முறையின் ஏற்பாட்டை ஜாதிக் கொடுமை என்கிருர்கள். இன்றைக்குத் தாங்கள் அறிவுத் தகுதியைவிட ஜாதிதான் முக்யம் என்று ஏகத்தாருக ரிஸர்வ் செய்வது அதைவிட ஜாதிக்கொடுமை யாக இருந்தபோதிலும் இதை முற்போக்கு, ஸமநீதி, பகுத்தறிவாளர் கொள்கை என்றெல்லாம் சொல்வது ஆச்சர்யமாயிருக்கிறது!

பின்னுலிருப்பவரை முன்னுல் கொண்டு போவதை யாரும் ஆக்ஷேபிக்கவில்லை. அதற்காக முன்னுல் இருப்பவர் களில் தாங்களாகவே முன்னேறக் கூடியவர்களையும் பின்னுலே தள்ளிவைப்போம் என்பதற்குத்தான் ஆக்ஷேபம். பசிக்கிறவனுக்குச் சாதம் போடட்டும். அதற்காக, சாப்பிட்டுக் கொண்டிருக்கிறவனின் வயிற்றிலடிக்க வேண்டியதில்லை.

ஸம தர்மம், அபேதம் என்ற பரம உத்தமமான தத்வங்கள் இப்போது விபரீதமாக நடைமுறைக்கு வந்து கொண்டிருப்பதில் ஒரு அம்சம்தான் இதுவும். ஜாதிகள் போகவேண்டுமென்பவர்களே தங்களுடைய கல்வி —

Koviloor Digital Library

உத்யோகக் கொள்கைகளால் ஜாதிகளை ஆழமாக, அழுத்தமாக முத்ரை போட்டுக் கெட்டிப்பது இந்த விபரீதத்தில் பெரிய விசித்ரம்!

"யாரார் வாய் கேட்பினும்"

ஆதி காலத்தில் எப்படிப் படிப்பை ஜாதி ஸம்பந்தமில்லாமல் வைத்திருக்கிறார்கள் என்பது ஒரு கொள்கையிலிருந்து தெரிகிறது. கல்வியை, அதாவது விஷய ஞானம் பெறுவதை அந்தப் பூர்வ காலத்தில் எவ்வளவு பெரிதாக மதித்திருக்கிறார்களென்பதும் இதிலிருந்து தெரிகிறது. அதாவது ஒரு ஜாதியார் தங்களிடம் இல்லாத, அல்லது முற்காலத்தில் இருந்து பிறகு நஷ்டப்பட்டுப் போன வித்யைகளை எந்த ஜாதியாரிடமிருந்தும் கற்றுக் கொள்ளலாமென்று தர்ம சாஸ்த்ரங்கள் தாராளமாக அநுமதித்திருக்கின்றன.

நல்ல வித்யை ஒன்றையோ, அல்லது உயர்ந்த தர்மப் பண்பு ஒன்றையோ, அல்லது ரொம்பவும் உத்தமமான கன்னிகை ஒருத்தியையோ எந்த ஜாதியாரிடமிருந்தும் பெற்றுக் கொள்ளலாமென்று மநுவே சொல்லியிருக்கிறார். ஆனால் இதில் கன்னிகை விஷயம் மாத்திரம் இந்த்ரிய ஸம்பந்தமாகக் காதல் கீதல் என்று போய், அப்புறம் அதற்குச் சப்பைக் கட்டு கட்டுவதற்காக அந்தக் கன்னிகைக்கு உத்தமமான ஸம்பத்தைக் கல்பித்து க்ருத்ரிமங்கள் செய்ய இடங்கொடுத்து விடுமென்பதால் பிற்பாடு தர்ம சாஸ்த்ரத்தில் இவ்விஷயத்தில் வர்ண தர்மத்துக்கு விரோதமாகப் போகவே கூடாது என்று வைத்துவிட்டார்கள். ஆனால், தர்மம், வித்யை—அதாவது அறம், அறிவு—இரண்டையும் ப்ராம்மணன்கூட அப்ராம்மணரிடமிருந்து கேட்டுப் பெற்றுக் கொள்ளலாமென்று சொல்லியிருக்கிறார்கள்.

அறமும் அறிவு நூலால் வருவதே; அறிவு நூலின் பயனும் அறத்துக்கு உதவ வேண்டுவதே. ஆகையால் இவற்றைப் பிரித்துக்கூடச் சொல்லக்கூடாது.

Koviloor Digital Library

அந்நிய தேசத்தினரோ, காட்டுமிராண்டிகளோ ஒரு பிரதேசத்திலுள்ள ப்ராம்மண வித்வான்களையெல்லாம் ஒழித்துவிட்டால், அல்லது வேறே ஏதோ காரணத்தால் ஒரு ப்ரதேசத்தில் ப்ராம்மணர்களுடைய வேதாப்யாஸம் நின்று போய்விட்டதென்றால், இப்படிப்பட்ட ஆபத்துக்காலத்தில் ப்ராம்மணனாகப் பிறந்தவன் அங்கேயுள்ள க்ஷத்ரியர்களிடமோ வைச்யர்களிடமோ வேதத்தையேக்கூடக் கற்றுக் கொள்ளலாம் என்கிற அளவுக்கு மநு போயிருக்கிறார்.

எப்பொருள் யார்யார்வாய்க் கேட்பினும் அப்பொருள்
மெய்ப்பொருள் காண்ப(து) அறிவு

என்று திருக்குறளில் சொல்லியிருக்கிறது.

எந்த விஷயமாகட்டும், அதை யார்தான் எடுத்துச் சொல்லட்டும், அதன் ஸரியான தாத்பர்யம் என்னவென்று பார்த்து ஏற்றுக்கொள்வதே புத்திசாலித்தனம் என்று அர்த்தம். இப்படிச் சொன்னதால் முதலிலேயே எந்த ஒரு வித்யையும் தப்பு என்று ஒதுக்கி வைத்துவிடாமல் அதிலும் ஏதாவது உசந்த கருத்து இருக்குமா என்று ஆலோசிக்க வேண்டுமென்று ஏற்படுகிறது. அதேபோல, "போயும் போயும் இவர்களிடமா கற்றுக்கொள்வது? இவர்கள் சொல்லியா கேட்டுக் கொள்வது" என்றெல்லாம் நினைக்காமல், "சொல்வது யாராக வேண்டுமானாலும் இருக்கட்டும்; சொல்வதில் தாத்பர்யம் இருந்தால் எடுத்துக் கொள்வோம்" என்று நினைக்க வேண்டுமென்றும் ஏற்படுகிறது. இந்த இரண்டு பண்புகளையும் தர்ம சாஸ்த்ரங்களில் வெகுவாக ஆதரித்து வற்புறுத்தியிருக்கிறது.

"விஷயமிருக்கிறதா என்று பார்க்கிறேன்" என்று பொய் ஸமாதானம் சொல்லிக்கொண்டு, கன்னாபின்னா ஸமாசாரங்களைக்கூட ஒருத்தன் படிக்கலாம். அதாவது "எப்பொருளை"யும் படிக்கலாம். ஆனால் உசத்தி தாழ்த்தி பார்க்காமல் "யாரார் வாய் கேட்பது" லேசில் முடியாது.

Koviloor Digital Library

அதனுல் இந்த அம்சத்தை சாஸ்த்ரம் நன்ருக அழுத்தம் கொடுத்து எடுத்துச் சொல்லியிருக்கிறது.

கோபத்திலே கொக்கை எரித்த கொங்கண ரிஷி ஒரு ஸ்த்ரீயிடமிருந்து அநேக தர்மங்களைத் தெரிந்துகொண்டு, அப்புறம் அவள் வார்த்தைப்படி பாக்கியிருந்த தர்மங்களை ஒரு கசாப்புக் கடைக்காரனிடம் கேட்டறிந்ததாக மஹா பாரதத்தில் இருக்கிறது. அந்தக் கதையைவிட நம் பூர்விகர்கள் அறிவுக்காக "யாரார் வாய் கேட்க"வும் தயாராயிருந்ததற்குப் பெரிய சான்று வேண்டாம்.

இன்னேர் உண்மை

இவ்வாறு ப்ராம்மணர்களுக்கும் போதிக்கக் கூடிய அளவுக்கு விஷயமறிந்த நாலாம் வர்ணத்தினர் இருந்திருக்கிருர்கள், "அவர்களிடம் போய் நீங்கள் கற்றுக் கொள்ள லாம்" என்று தர்ம சாஸ்த்ரங்களே குறிப்பிட்டுச் சொல்கிற அளவுக்கு இருந்திருக்கிருர்கள் என்பதிலிருந்து இன்னொரு உண்மையும் தெரிகிறது. தற்காலத்தில் நினைப்பதுபோல ப்ராம்மணர்கள் அவர்களை ஒரேயடியாக அறிவில் இருட்டு நிலையிலேயே ஒதுக்கி வைத்திருக்கவில்லை என்று தெரிகிறது. நேராக அவர்களுக்கு வேத பாடம் சொல்லித் தராவிட்டாலும், அவர்கள் தங்கள் தொழிலில் சாஸ்த்ரக் கல்வி பெறுவதற்காக வரும்போது, அவர்களுக்கு ப்ராம்மணர்கள் தொழிற்கல்வியோடு நிறைய தர்மோபதேசமும், ஞானேபதேசமும் செய்திருக்கிருர்கள். முக்யமாகப் புராணங்களின் மூலமே இந்த உபதேசங்களைச் செய்திருக்கிருர்கள். இப்படியாக அவர்களில் நல்ல தார்மிக, ஆத்மிக வித்யா ஸம்பத்தைப் பெற்றுக் கொண்டவர்களாகப் பல பேர் ஏற்பட்டதால்தான், அப்புறம் ப்ராம்மணர்களிலேயே அவ்வளவு அறிவு பெருதவர்கள் அவர்களிடம் போய்க் கேட்டுக்கொள்ள இடமேற்பட்டிருக்கிறது.

இதிலே ரொம்பவும் ஆச்சர்யப்படத்தக்க த்ருஷ்டாந்தம் முதல் முதலில் அந்தப் புராணங்கள் உபதேசமாகி

Koviloor Digital Library

ப்ரசாரம் செய்யப்பட்டதிலேயே இருக்கிறது. வேதங்களை ப்ராம்மண சிஷ்யர்கள் மூலம் ப்ரசாரம் செய்த வ்யாஸ் பகவான் புராணங்களைச் செய்து அப்ராம்மணராகிய ரோமஹர்ஷண ஸூதர் என்பவருக்கே அவற்றை உபதேசித்து ப்ரசாரம் பண்ண அனுப்பினார். ஸத்பிராமணர் களாகிய நைமிசாரண்யத்து ரிஷிகள் அந்த ஸூதருக்கு ரொம்பவும் மரியாதை செய்து, அவரைப் பீடம்போட்டு உட்கார்த்தி வைத்து, அவரிடம் புராணங்களைக் கேட்டுக் கொண்டார்கள்.

வித்யாதானத்தின் உயர்வு

லோகோபகாரமாகச் செய்யக்கூடிய அநேகப் பணி களில் ஸத்பாத்ரதுக்கு வித்யையை போதிப்பதற்கு ஸமமாக எதையும் சொல்ல முடியாது என்று நம் முன்னோர் அபிப்ராயப்பட்டனர். 'வித்யாதானம்', 'வித்யாதானம்' என்று இதை மிகவும் விசேஷித்துச் சொல்லியிருக்கிறது. 'தானம்' என்ற பதத்தைப் போட்டதாலேயே, கற்றுக் கொடுக்கிற ஆசார்யர் வித்யார்த்தியிடமிருந்து எந்த த்ரவ்ய லாபமும் எதிர்பார்க்கக்கூடாது என்று ஏற்படுகிறது.

மநுஸ்ம்ருதியில் இதைப் பற்றிச் சொல்லும்போது, "தானங்களிலேயே சிறப்பு வாய்ந்தவற்றுக்கு அதிதானம் என்று பேர். கோதானம், பூதானம், வித்யாதானம் ஆகிய மூன்றும் அதிதானங்கள். அன்னதானமும் உயர்வானது. வயிற்றுக்கு அன்னம் போடுவதைவிட அறிவுக்கு அன்னமாக வித்யாதானம் செய்வது சிறப்புடையது. வித்யைகளில் பல இருக்கின்றன. இவற்றில் எதை தானம் செய்வதுமே விசேஷந்தானென்றாலும், வித்யைகளுக்குள்ளேயே தலை சிறந்ததாக உள்ள ஆத்ம வித்யையான ப்ரஹ்ம வித்யையை தானம் செய்வதன் சிறப்பைச் சொல்லிமுடியாது. ப்ரஹ்ம வித்யாதானம் செய்பவனுக்கு தேவலோகமான ஸ்வர்க்கம் மட்டுமின்றி, ஸம்ஸார பந்தமே தீர்ந்து பரமாத்மாவோடு ஐக்யப்பட்டிருப்பதான மோக்ஷமும் கிட்டிவிடுகிறது" என்றெல்லாம் புகழ்ந்து சொல்லியிருக்கிறது.

Koviloor Digital Library

கல்வித் திட்டத்தில் கால அளவைகள்

தற்காலத்தில் வேத பாடசாலைகளில் பன்னிரண்டு வருஷ கோர்ஸ் வைப்பது வழக்கமாயிருக்கிறது. பாஷ்யங்களையும் நன்றாகப் படித்து நல்ல அர்த்த ஞானம் பெறுவதற்கு இதற்கப்புறம் எட்டு வருஷம் படிக்கவேண்டியிருக்கிறது. பூர்வகாலத்தில் மாணவனின் புத்தியைப் பொறுத்தும், அவன் எந்த வித்யைகளை எவ்வளவு தூரம் அப்யஸிக்க விரும்புகிறான் என்பதைப் பொறுத்தும் வித்யாப்யாஸ காலம் நிர்ணயிக்கப்பட்டிருந்தது. பன்னிரண்டு வருஷமே பொதுவாக ஏற்பட்டது. அதம பக்ஷம் ஒன்பது வருஷம். பதினெட்டு வருஷ, முப்பத்தாறு வருஷக் கோர்ஸ்களும் இருந்திருக்கின்றன. வாழ்நாள் முழுதும் நன்றாக ஸ்பெஷலைஸ் பண்ணிக்கொண்டே போவதற்கு வஸதியாக, 'இத்தனை வருஷம்' என்று கட்டுப்படுத்தாமல் கோர்ஸ்கள் வைத்திருந்ததாகக்கூட மநுஸ்ம்ருதியிலிருந்து தெரிகிறது. அறிவுக்கே தன்னை அர்ப்பணித்துக் கொண்டு, கல்யாணம் க்ருஹஸ்தாச்ரமம் இல்லாமல் கல்வியிலேயே ஒருவன் ப்ரஹ்மசாரியாக வாழ்நாள் முழுதும் ஈடுபட்டிருக்க தர்ம சாஸ்த்ரம் அநுமதி தருகிறது. சுத்த ப்ரஹ்மசாரியாக இருக்கக்கூடியவன், விசேஷமான புத்தி ப்ரகாசமுள்ளவன் என்பதாக குரு நன்றாகப் பரீக்ஷித்து நிச்சயப்படுத்திக் கொள்ளக்கூடியவனுக்கு மாத்திரமே இப்படி ஆச்ரம விதிகளிலிருந்து விலக்கு தந்திருக்கிறது. அவனைத்தான் நைஷ்டிகன், நைஷ்டிக ப்ரஹ்மசாரி என்பது.

கல்வித் திட்டத்தில் ஒவ்வொரு வருஷத்தையும் இரண்டு டெர்ம்களாகப் பிரித்திருந்தார்கள். முதல் டெர்ம் சுமார் ஐந்து மாஸம் கொண்டது. இரண்டாவது டெர்ம் சுமார் ஏழு மாஸ காலம். முதல் டெர்முக்கு 'உபாகர்மம்' என்றும் இரண்டாவது டெர்முக்கு 'உத்ஸர்ஜனம்' அல்லது 'உத்ஸர்கம்' என்றும் பெயர்.

Koviloor Digital Library

உபாகர்மம் என்றவுடன் சில பேருக்காவது 'ஆவணியா வட்டம்'—அதாவது வருஷா வருஷம் புதுப்பூணூல் போட்டுக் கொள்ளும் நாள்—என்று நினைவுக்கு வரலாம்.

இது ரிக் வேதிகளுக்கு ச்ராவண மாஸத்தில் ச்ரவண நக்ஷத்ரம் வரும் நாள். ச்ராவண மாஸம் என்பது ஆடி அமாவாஸ்யையிலிருந்து ஆவணி அமாவாஸ்யை வரையுள்ள காலம். ச்ராவணி என்பதன் திரிபுதான் ஆவணி.

யஜுர் வேதிகளுக்கு உபாகர்மம் என்பது ச்ராவண மாஸப் பௌர்ணமியன்றாகும்.

ரிக் வேதிகள் ச்ரவண நக்ஷத்ரத்தை வைத்து நாளை நிர்ணயிக்கிறார்கள்; யஜுர் வேதிகள் பௌர்ணமித் திதியை வைத்து நிர்ணயம் செய்கிறார்கள்.

மிகவும் பூர்வ காலத்தில் ச்ராவண மாஸப் பூர்ணிமை தப்பாமல் ச்ரவண நக்ஷத்ரத்தன்றேதான் வந்து கொண்டிருந்தது, அதனால்தான் அந்த மாஸத்துக்கே அப்படிப் பேர். தப்பாமல் ச்ரவண நக்ஷத்ரமும் பௌர்ணமியும் ஒன்றாகவே இருந்த காலத்தில் அந்த நாளில்தான் ரிக் வேதிகள் யஜுர்வேதிகள் ஆகிய இருவரும் உபாகர்ம டேர்மை ஆரம்பித்தார்கள். அப்புறம் க்ரஹக் கோளாறில் அம்மாஸப் பௌர்ணமியன்று ச்ரவண நக்ஷத்ரத்துக்கு அடுத்தான அவிட்டம் வந்தபோதும் யஜுர் வேதிகள் பௌர்ணமித் திதியிலேயே உபாகர்மாவை வைத்துக் கொண்டார்கள். தர்ம சாஸ்த்ரங்களில் குறிப்பாக 'ச்ராவண பூர்ணிமையில் உபாகர்மம் செய்யவேண்டும்' என்றே சொல்லியிருப்பதால் (பூர்ணிமைத்) திதியை யஜுர் வேதிகள் முக்யமாக எடுத்துக் கொண்டிருப்பதாகத் தெரிகிறது. அதனால் அவிட்டத்தில் அந்தப் பூர்ணிமை வந்தாலும் அன்றைக்கே உபாகர்மா செய்தார்கள்.

இதுதான் "ஆவணி அவிட்டம்"—அதாவது "ஆவணியாவட்டம்" என்று நாம் சொல்வது.

Koviloor Digital Library

ரிக்வேதிகள் இப்போதும் திதியைப் பார்க்காமல் சரவண நக்ஷத்திரத்திலேயே உபாகர்மாவைத் தொடர்ந்து செய்தார்கள். இன்று வரைக்கும் அப்படித்தான் நடக்கிறது. விஷயம் தெரிந்தவர்கள் உபாகர்மாவை "ச்ராவணம்" என்றே சொல்வது இதனுல்தான். இப்படியாக, ரிக்வேதிகளுடைய உபாகர்மாவுக்கு அவிட்ட ஸம்பந்தமேயில்லை. ஆனுலும் தக்ஷிணத்தில் யஜுர்வேதிகளே பெரும்பாலாராயிருப்பதால் அவர்கள் கொடுத்த "ஆவணியாவட்ட"ப் பெயரையே ரிக்வேதிகளும் தங்களுடைய உபாகர்மாவுக்கும் சொல்கிருர்கள்!

இப்போதும் சில வருஷங்களில் ச்ராவண மாஸப் பௌர்ணமி ச்ரவண நக்ஷத்ரத்திலேயே வருகிறது. அப்போது ரிக் வேதிகள் யஜுர்வேதிகள் ஆகிய இரண்டு பேருக்கும் ஒரே நநளில் உபாகர்மா வருகிறது.

ஸாமவேதிகள் இதற்கு ஒரு மாஸம் தள்ளி (ஆவணி அமாவாஸ்யையிலிருந்து புரட்டாசி அமாவாஸ்யை வரையுள்ள ஒரு மாத காலமாகிய) பாத்ரபத மாஸத்தில் ஹஸ்த நக்ஷத்ரத்தில் உபாகர்மா செய்கிருர்கள். அநேகமாக அது பிள்ளையார் சதுர்த்தியாகவோ அல்லது அதற்கு ஒரு நாள் முன்னே பின்னேயோ இருக்கும். ஹஸ்தமும் பஞ்சமியும் ஒன்று சேர்ந்திருந்தால் விசேஷமென்று சாஸ்த்ரங்களிலிருந்து தெரிகிறது. ச்ராவண மாஸப்பூர்ணிமையும் ச்ரவணமும் தப்பாமல் சேர்ந்தே வந்த அக்காலத்து பாத்ரபத மாஸத்தில் ஹஸ்தம் பஞ்சமியிலேயே வந்திருப்பதாகத் தோன்றுகிறது. தற்போது அது அநேகமாகப் பிள்ளையார் சதுர்த்தியன்றே, அல்லது அதற்கு முதல் தினமான த்ரிதீயையாகவோ வருகிறது.

உபாகர்மம் என்பதே இப்போது பல பேருக்குத் தெரியாத வார்த்தை! (தாங்கள் என்ன வேதம் என்பதுகூட அநேகம் பேருக்குத் தெரியாமலிருக்கலாம்!) தெரிந்தவர்களில் பெரும்பாலாரும் அது பழைய பூணூல் சிக்குப்பிடித்து அழுக்காகி விட்டதே என்று புதுப் பூணூல் மாற்றிக் கொள்

Koviloor Digital Library

கிற ஒரு நாள் என்றுதான் நினைக்கிறார்கள். உண்மையில் பூணூல் மாற்றிக்கொள்வதென்பது உபாகர்மாவிலே ஒரு சின்ன அங்கம்தான்.

உபாகர்மா என்பது அந்த ஒரு நாளோடு போகாமல் அடுத்த ஐந்தாறு மாஸங்களான ஒரு டெர்முக்கு ஆரம்ப நாளாக இருப்பதாகும்.

இந்த முதல் டெர்மில் மூலமான வேதத்தை மட்டும் ஆசார்யர் கற்றுக் கொடுத்துச் சிஷ்யர்கள் சொல்லிக் கொள்வார்கள். அதாவது 'ச்ருதி' என்றே சொல்லப்படு வனவான வேதஸம்ஹிதை, ப்ராஹ்மணம், ஆரண்யகம், உபநிஷத்துக்கள் ஆகியவற்றில் பாடம் நடக்கும். புஷ்ய மாஸம் என்கிற நம் தை பிறக்கும்வரையில் இந்தப் பாடம் தொடரும். (புஷ்யத்துக்குத் 'தைஷம்' என்றும் பெயர் உண்டு. 'தைஷம்'தான் 'தை' ஆயிற்று.)

அப்போது 'உத்ஸர்ஜனம்' என்கிற கர்மாவைச் செய்து ச்ருதி பாடத்தை முடிப்பார்கள். புஷ்யமாஸம் பூர்ணிமை யிலாவது அதற்கு முன்வரும் ரோஹிணியிலாவது உத்ஸர்ஜனகர்மா செய்யவேண்டும்.

ஸாமகர்கள் (அதாவது ஸாமவேதிகள்) புரட்டாசியில் தான் உபாகர்மம் செய்வதால், அத்யயன டெர்ம் ஐந்து மாஸமோ அல்லது குறைந்த பக்ஷம் நாலரை மாஸமோ இருக்கவேண்டும் என்ற விதிப்படி, அவர்கள் மாக பூர்ணிமை யில் உத்ஸர்ஜனம் செய்யவேண்டும். தை அமாவாஸ்யைக் குப் பதினைந்து நாட்கள் கழித்துவரும் பௌர்ணமியே மாக பூர்ணிமை.

உத்ஸர்ஜனம் என்றாலும் விஸர்ஜனம் என்றுதான் அர்த்தம் - அதாவது "விட்டு விடுவது". வேத அத்யயன - அத்யாபனங்களை ஒரு கட்டத்தில் விட்டுவிடுவதற்காகச் செய்யும் வைதிக கர்மா உத்ஸர்ஜனம். மறுபடி ஏழு மாஸம் கழித்து அடுத்த "ஆவணியாவட்ட"த்தில், விட்ட கட்டத்தி லிருந்து வேத பாடத்தைத் தொடங்கவேண்டும். 'உபக்ர

Koviloor Digital Library

மணம், என்றால் தொடங்குவது என்று அர்த்தம், அதனால் தான் அன்று செய்கிற கர்மாவுக்கு 'உபாகர்மா' என்று பெயர்.

வேதத்தில் புதுப்பாடங்கள் இல்லாத இந்த ஏழு மாஸந் தான் இரண்டாவது "டெர்ம்". இதில் வேதாங்கம் எனப் படும் வேதத்தின் ஆறு அங்கங்களான* சிக்ஷை, வ்யாகரணம், சந்தஸ், நிருக்தம், ஜ்யோதிஷம், கல்பம் ஆகியவற்றில் பாடம் நடத்துவார்கள். ஏனைய எல்லா வித்யைகளைக் கற்றுக் கொடுப்பதும் இந்த டெர்மில்தான். உபாகர்மாவுக்கான நாள் வந்தவுடன் இதை நிறுத்திவிட்டு, வேத பாடங்களுக் குப் போவார்கள்; அதை உத்ஸர்ஜனம் பண்ணினவுடன் மறுபடி இந்த வேதாங்கங்களிலும் காவ்யம் முதலான இதர வித்யைகளிலும் விட்ட இடத்திலிருந்து ஆரம்பிப்பார்கள், இந்த உத்ஸர்ஜனம்தான் வடக்கே "ஸரஸ்வதி பூஜா" என்று சொல்லும் வஸந்த பஞ்சமி.

தற்போது "ஆவணியாவட்டம்" என்று பண்ணுவதில் போளியும் வடையும்தான் முக்யமாயிருக்கின்றன! ஒரு டெர்ம் முழுதும் கற்க வேண்டிய வேத பாடங்களில் ஆரம்ப ஸூக்தத்தை மட்டும் உபாகர்மாவன்று வாத்யார் சொல்ல, மற்றவர்கள் தப்பும் தவறுமாகத் திருப்பிச் சொல்லி விடுகிறார் கள். அதுமட்டுமில்லை. 'விட்டு விடும்' உத்ஸர்ஜன கர்மாவை யும் அன்றே பண்ணி (இப்படி ஒன்று வாத்யார் பண்ணி வைப்பதாகக்கூடப் பல பேருக்குத் தெரிவதில்லை), வேதாங் கங்களிலும் ஒவ்வொன்றில் ஒவ்வொரு ஸூத்ரத்தை மாத்ரம், வாத்யார் சொல்வதைத் திரும்பவும் உளறிக் கொட்டிவிட்டு முடிப்பதாக ஏற்பட்டிருக்கிறது. ஒரேயடியாக இந்த ஆவணியாவட்டத்துக்கே 'உத்ஸர்ஜனம்' செய்யாமல் ஏதனாலோ விட்டுவைத்திருக்கிறார்கள்! வடை, போளிக்காக இருக்கலாம்! இப்படி நாமே நம்மைப் பரிஹஸித்துக் கொள்ளும்படியான துர்த்தசையில் இருக்கிறோம்.

---

*இரண்டாம் பகுதியில் 'வேத மதம்' என்ற பிரிவில் "ஷடங்கங்கள்" என்ற உரையும் அதை அடுத்து வரும் உரைகளும் பார்க்க.

Koviloor Digital Library

வித்யாப்யாஸ காலத்தில் ஒரு ப்ரஹ்மசாரியானவன் இப்படி மாறி மாறி வேதம், வேதாங்காதி இதர வித்யைகள் என்று இரண்டு டெர்ம்களில் படித்துப் பன்னிரண்டு வருஷங்களில் பூர்த்தி பண்ணவேண்டும். தன் வேத சாகையையும் தன் வேதத்தையும் மட்டுமின்றி மற்ற வேதங்களையும் படிப்பது; இரண்டு வேதம் தெரிந்த த்விவேதி, மூன்று வேதம் தெரிந்த த்ரிவேதி, நாலுவேதம் தெரிந்த சதுர்வேதி என்றெல்லாம் ஆவது; வேதாங்கம் மட்டுமில்லாமல் மற்ற வித்யைகளையும் படிப்பது; இதர ஜாதியாருக்கான வித்யைகளையும் கற்பது: ஸ்பெஷலைஸ் செய்வது என்றெல்லாம் போகும்போதுதான் பதினெட்டு வருஷம், முப்பத்தாறு வருஷம்கூட குருகுலவாஸம் செய்வார்கள்.

க்ருஹஸ்தர்களுக்கு ஏன்?

உபாகர்மாவும் உத்ஸர்ஜனமும் கல்வி ஸம்பந்தமானவை என்றால், இவை வித்யாப்யாஸம் செய்யும் ப்ரஹ்மசாரிக்கு மாத்திரம்தானே இருக்கவேண்டும்? இதை எப்படி க்ருஹஸ்தர்களுக்கும் சாஸ்த்ரத்தில் சொல்லியிருக்கிறது?

(இக்கேள்விக்குப் பதில்:) ப்ராம்மணனுக்கு சாஸ்த்ரப்படியான கடமை அத்யயனம் செய்தபின் (தான் படித்தபின்), அத்யாபனம் செய்வதாகும் (தான் படித்ததைப் பிறத்தியாருக்குச் சொல்லிக் கொடுப்பதாகும்). ஒவ்வொரு ப்ராம்மணனும் இப்படி ஒரு சிஷ்யனுக்காவது சொல்லிக் கொடுக்கும்போது, ஒவ்வொரு டெர்மையும் வேதோக்தமான உபக்ரமண, உத்ஸர்ஜன கர்மாக்களோடு செய்து பரிசுத்தி செய்யவேண்டியதாகிறது. க்ருஹஸ்தனான பின் இவன் யாருக்கும் அத்யாபனம் பண்ணவில்லை என்றாலுங்கூட இவனுக்கே படித்தது மறந்துவிடாமல் காப்பாற்றிக் கொள்ள வேண்டுமல்லவா? அதற்காக அவற்றை இப்படி இரண்டு டெர்மாகப் பிரித்து ஆதியில் கற்றுக்கொண்டது போலவே மறுபடி மறுபடி நெட்டுரு போட்டுக்கொண்டிருக்கவேண்டும்.

Koviloor Digital Library

இதற்காகவும் உபாகர்மாவும் உத்ஸர்ஜனமும் ஒரு க்ருஹஸ்தன் பண்ண வேண்டியதுதான்.

தர்ம சாஸ்த்ரங்களில் க்ருஹஸ்த தர்மங்களை விவரிக்கிற பகுதியில்தான் உபாகர்மா (உத்ஸர்ஜனம் ஆகியவை) பற்றிச் சொல்லியிருக்கிறது; ப்ரஹ்மசர்ய தர்மங்களைப் பற்றிய பகுதியில் அல்ல.

கல்வி என்பதை ஈச்வர ப்ரீதியான ஒரு தபஸாகவே நினைத்த காலமானதால் ப்ரஹ்மோபதேசத்துடன் ஆரம்பித்து, அநேக வ்ரதங்களை அவ்வப்போது அநுஷ்டித்தே அதைப் பூர்த்தி செய்தார்கள்.* பூர்த்தி செய்வதற்கு ஸமாவர்த்தனம் என்று ஒரு சடங்கு உண்டு. அது ஆனபின்தான் ப்ரஹ்மசாரி கல்யாணம் செய்துகொண்டு க்ருஹஸ்தாச்ரமம் ஏற்பது. "உபாகர்மாவை ஸமாவர்த்தனமானவன் இன்ன முறையில் செய்யணும்; ஆகாதவன் இன்ன முறையில் செய்யணும்" என்று சில ஸ்ம்ருதிகளில் பிரித்துச் சொல்வதாலேயே இது ஸமாவர்த்தனம் செய்துவிட்ட க்ருஹஸ்தனுக்கும் உரியது என்று தெரிகிறது. கற்றுக் கொண்டது மறந்து போகாமலிருப்பதற்காக— இதை "தாரணம்" என்று சொல்லியிருக்கிறது—க்ருஹஸ்தனும் ஒரு ஸ்டூடன்டாகவே அத்யயனுதிகளைப் பண்ணிக்கொண்டேயிருக்கவேண்டும் என்று (ஸ்ம்ருதிகளை இயற்றியுள்ள) ரிஷிகளில் சிலர் ஸ்பஷ்டமாகச் சொல்லியிருக்கிறுர்கள்.

விடுமுறை நாட்கள்

இப்படி வைதிக வித்தையின் "அகாடெமிக் இயரி"ல் இரண்டு டெர்ம்கள். லீவுநாளே கிடையாதா என்றுல், உண்டு. குழந்தைகளை எப்போது பார்த்தாலும் படிப்பு என்று கெடுபிடி பண்ணுமல் ரெஸ்ட் கொடுக்கும் அருள் உள்ளம் நம் பூர்விகர்களுக்கு இல்லாமலில்லை. அத்யயன

---

* இரண்டாம் பகுதியில் 'பிரம்மசரியம்' என்ற உரையில் 'பிரம்மசர்ய ஆசிரமம்' எனும் பிரிவு பார்க்க.

Koviloor Digital Library

மில்லாத இந்த லீவுநாட்களுக்கு அநத்யயன தினங்களென்று பெயர். ஒவ்வொரு மாஸமும் அமாவாஸ்யை, பௌர்ணமி, இரண்டு பக்ஷ அஷ்டமி - சதுர்த்தசிகள்' என்று ஆறு நாள் அநத்யயனம். இது தவிர ஒவ்வொரு வருஷமும் உபாகர்மம், உத்ஸர்ஜனம் என்ற ஒவ்வொரு கோர்ஸும் முடிந்தபின் மூன்று மூன்று நாட்கள் அநத்யயனம். இதோடு 'சாதுர்மாஸீ' என்றும் வருஷத்தில் நாலு நாள் லீவ்.

இதெல்லாம் பஞ்சாங்கக் கணக்குப்படி வருஷம் தோறும் தவறாமல் வரும் லீவு நாட்கள். அதனால் இவற்றுக்கு "நித்ய" அநத்யயனம் என்று பெயர். இது தவிர, நாள் கணிக்க முடியாமல் எப்போது வேண்டுமானாலும் ஒரு "நிமித்த"மாக லீவ் விடவேண்டிய "நைமித்திக" அநத்யயனங்களும் உண்டு. மழை அடிக்கிறது, புயல் அடிக்கிறது என்றால், காட்டிலே நெருப்புப் பிடித்துக் கொண்டுவிட்டது என்றால், நாட்டுக்குத் தலை மறைவாக ஒளிந்துகொண்ட கொள்ளைக் கூட்டத்துக்காரர்கள் இங்கே காட்டிலேயும் குருகுலங்களை ஹிம்ஸிக்க வருகிறார்கள் என்றால்—அப்போதெல்லாம் லீவ் விட்டுவிடுவார்கள். இச்சமயங்களில் பாடத்தை நிறுத்திவிட வேண்டுமென்று மநுதர்ம சாஸ்த்ரத்தில் மநுஷ்ய மனஸை அநுதாபத்தோடு அறிந்துகொண்டு சொல்லியிருக்கிறது.

க்ரஹணம் என்பதும் வருஷத்தில் ஒரு குறிப்பிட்ட நாளில் வருவதில்லை. அதுவும் "நைமித்திக" லீவ் நாளாகக் கருதப்பட்டது. (க்ரஹணத்தில் பாடம் சொல்லிக்கொடுக்கப்படாதே தவிர ஏற்கெனவே பாடம் பண்ணிய மந்த்ரங்களை ஜபிக்கவேண்டும். மற்ற காலத்தில் செய்யும் ஜபத்தைவிட க்ரஹண காலத்தில் செய்யும் ஜபத்துக்கு வீர்யம் ரொம்பவும் அதிகமாகும்.)

மாணவனை அடிக்கலாமா?

ரொம்பவும் நெரிப்பு இல்லாமலிருப்பதற்கே அவ்வப்போது அநத்யயனம் என்று லீவ் கொடுத்ததைச் சொல்லும்போது, வித்யார்த்தியிடம் பொதுவாக ஆசார்யர் எப்படி

Koviloor Digital Library

நடக்கவேண்டுமென்பது பற்றிய தர்மசாஸ்த்ரக் கருத்து களையும் தெரிவிக்கத் தோன்றுகிறது.

ப்ரியம் என்று சொல்லிக்கொண்டு ரொம்பவும் செல்லம் கொடுத்துக் குட்டிச் சுவராக்கிவிடக்கூடாது என்பதுதான் பொதுக் கொள்கை. அதற்காகத்தான் வீட்டிலேயே படிப்பதென்றில்லாமல் குருகுலத்தில் சேர்த்ததே. சிஷ்யன் ஸ்வயேச்சைப்படிப் போகவிடாமல் அவனை ஆசார்யரின் வார்த்தைப்படியே நடக்குமாறுதான் சாஸ்த்ரம் கட்டுப் படுத்துகிறது. இதனால் ஆசார்யர் எப்போதும் உர்ரென்று மிரட்டி உருட்டிக் கொண்டிருக்கவேண்டுமென்று ஒரு இடத்தில்கூடச் சொல்லவில்லை. ப்ரியத்தோடு நடத்தும் போதே பையன் ஸ்வாதீனமாகப் போகாதபடியும் அவனை ஒழுங்கு படுத்தவேண்டுமென்பதே சாஸ்த்ரக் கருத்து. உப நிஷத்துக்களில் ஆரம்பித்துப் புராண - இதிஹாஸங்களைப் பார்த்தால் குரு - சிஷ்யாள் பரஸ்பரம் ஆழ்ந்த ப்ரியத்தி லேயே கட்டுப்பட்டிருந்ததற்கு நிறைய த்ருஷ்டாந்தம் கிடைக்கும்.

மதுரமாகப் பேசியும், ப்ரியமாக நடத்தியுமே சிஷ்யனை முன்னேற்றப் பார்ப்பதுதான் வழி என்று சொல்லியிருக் கிறது. "ஸௌம்யா!" என்று சிஷ்யனைக் குளிரக் குளிரக் கூப்பிடுவதிலிருந்து இந்த மாதுர்யம் தெரிகிறது.

சிஷ்யனை அடிக்காமலே சிக்ஷை சொல்லித்தர வேண்டும் என்று கௌதம ஸ்ம்ருதியில் இருக்கிறது. சிக்ஷை தருவது என்றாலே தண்டனை தருவது என்று பிற்பட்டு அர்த்தம் ஏற்பட்டிருந்தாலும், ஆதியில் போட்ட 'ரூல்' இப்படித்தான் இருக்கிறது.

ஆனாலும் தவிர்க்கமுடியாமல் சில ஸமயங்களில் அடிக்க வும் வேண்டியிருக்கலாம். அதனால்தான் "அடியாத மாடு படியாது", "அடி உதவுகிற மாதிரி அண்ணன் தம்பி உதவு கிறதில்லை" என்றெல்லாம் வசனம் இருக்கிறது. "Spare the rod and spoil the child" ('பிரப்பம்பழம்' போடா

Koviloor Digital Library

விட்டால் பிள்ளை குட்டிச் சுவர்தான்) என்று வெள்ளைக்காரர்களும் சொல்கிறார்கள்.

இம்மாதிரி, அடிக்கும்படியாக நிர்பந்தம் ஏற்பட்டால் கூட, சின்னதாக ஒரு கயிறு அல்லது மூங்கில் சிம்பால் தட்டலாமேயொழிய, சவுக்கு, புளியங் கொம்புகளால் வீறுவது என்பது கூடாது என்று மநுஸ்ம்ருதி சொல்கிறது. முதுகில் மட்டும்தான் அடிக்கலாம், வேறே எங்கேயும் அடிக்கப்படாது, தலையில் ஒருகாலும் அடிக்கப்படாது என்று கட்டுப்பாடு செய்திருக்கிறது. தலையில் அடித்தால் பொறி கலங்கிவிடக் கூடுமல்லவா?

இப்படி ஒவ்வொரு சின்ன விஷயத்தையும் சாஸ்த்ரங்கள் கூர்மையாக கவனித்துப் பயனுள்ள உபதேசங்களைத் தந்திருக்கின்றன.

மொத்தத்தில் மாணவன் அந்தப் பருவத்தில் கட்டுப்பாட்டின் கீழ்தான் இருக்கவேண்டும். இதில் அவனே இந்த்ரியத்தைக் கட்டிக்கொள்வது முக்யம்.

மாணவன் லக்ஷணம்

மாணவனுக்கு ப்ரஹ்மசர்ய நியமத்தை மநு விசேஷித்துச் சொல்லியிருக்கிறார். "இந்த்ரிய ஸம்யமம்" (அதாவது புலனடக்கம்) என்பது அவர் சொல்லும் இன்னொரு பேர். இந்த நியமம் எதற்காகவென்று காரணம் சொல்லும்போது, கல்வியின் நோக்கம் அறிவைப் பெறுவதான "வேத க்ரஹணம்" மாத்திரமில்லை, ஆத்மாபிவ்ருத்தியாகிய "வ்ரதா தேசனமே" படிப்பின் லக்ஷ்யம் என்கிறார். இதனால்தான் வித்யாப்யாஸத்தை வ்ரதமாயும் தபஸாயும் சொல்லியிருப்பது.

மாணவனின் அன்றாடக் கடமைகளையும் மநு தெளிவாகச் சொல்லியிருக்கிறார். ஸந்த்யா வந்தனம்; அக்னிஹோத்ரம் (அதாவது ப்ரஹ்மசாரிக்கான ஸமிதா

Koviloor Digital Library

தானம்); தனக்கான பாடத்தை முறைப்படி கற்று மனப் பாடம் செய்வதான "ஸ்வாத்யாயம்"; பிக்ஷை எடுப்பது (பிக்ஷாசர்யம்); ஆசார்யனுக்காக ஜலம் கொண்டுவருவது, விறகு வெட்டிக்கொண்டு வருவது, சுத்திக்கான ம்ருத்திகை (குழைமண்) கொண்டுவருவது, அவருடைய பூஜைக்குப் புஷ்பம் கொண்டுவருவது முதலான எடுபிடிப் பணிகள்; பாடத்தை நன்றாக விளக்கி "ப்ரவசனம்" பண்ணும்படி ஆசார்யரை ப்ரார்த்தித்துக் கொண்டு செவ்வனே கேட்டறிதல்—என்றிப்படி சிஷ்ய தர்மத்தைச் சொல்லியிருக் கிறது. "ஸ்வாத்யாயம்; ப்ரவசனம் ஆகிய இரண்டையும் கொஞ்சங்கூட விட்டுவிடப் படாது" என்று தைத்திரீய (உபநிஷ)த்திலும் சொல்லியிருக்கிறது.

ஆரோக்ய வளர்ச்சிக்கும் உதவி

இதிலே அறிவு வளர்ச்சி, குண வளர்ச்சி மாத்திரமில் லாமல் தேஹாரோக்ய அபிவ்ருத்தியும் கலந்திருப்பதை கவனிக்கவேண்டும். காலங்கார்த்தாலே எழுந்து குளிர்ந்த நீரில் ஸ்நானம் செய்து, ப்ராணயாமம், ஸூர்ய நமஸ்காரம் பண்ணுவதில் புத்தி சக்தியும் ஹ்ருதய சுத்தியும் வ்ருத்தியாவ தோடு தேஹ ஆரோக்யமும் நல்ல வளர்ச்சி பெறும். குருவுக்காக விறகு வெட்டிக்கொண்டு வருவது போன்ற வேலைகளில் இதேபோல, ஒரு பக்கம் மனஸில் எளிமை உண்டாவதோடு மறுபக்கம் சரீரத்திலும் வலிவு ஏற்படும்.

ஒரு மனுஷ்ய ஜீவனென்றால் அவனுக்கு தேஹம், புத்தி, ஆத்மா என்று மூன்று இருக்கிறது. மூன்றையும் நல்ல முறை யில் வளர்ப்பதாகப் பழங்காலக் கல்வி முறை இருந்திருக் கிறது.

மிகவும் பூர்வகாலத்தில் நம்மிடம் இருந்த 'எஜுகேஷன் ஸிஸ்டம்' பற்றி இவ்வளவும் சொன்னேன். இன்னம் அநேக விஷயங்களும் இருக்கின்றன. எனக்கே தெரியாமல் எவ்வளவோ இருக்கும்.

Koviloor Digital Library

தனிமனிதரையே மையமாக

இதற்கப்புறம்தான் பௌத்த - ஜைனர்கள் ஆதரவில், இதற்குமுன்னிருந்ததைவிட அதிகமாகவும் பெரிய அளவிலும் வித்யாசாலைகள் ஏற்பட ஆரம்பித்தது. அதற்கு முந்தியும், சாந்தோக்ய உபநிஷத்படியே, பல வித்யைகள் இருந்து, அதனால் பெரிய வித்யாசாலைகளும் ஏற்பட்டிருந்தன என்றாலும், ஒரு 'ஸென்ட்ரல் கவர்ன்மென்ட்' கீழேயே ஒன்றொன்றும் நிறைய ஸ்வதந்த்ரமுள்ளதாக அநேக 'ஸ்டேட் கவர்ன்மென்ட்கள்' உள்ள "ஃபெடரல் ஸெட் - அப்" மாதிரி, தனித்தனி வாத்யார்கள் ஒவ்வொரு க்ரூப் மாணவர்களுக்குப் பொறுப்பேற்றுக்கொண்டு, அவர்கள் வாழ்க்கையைத் தங்கள் வாழ்க்கையோடு கோத்துக்கொண்டு, அவர்களுக்கு 'இன்டிவிஜுவல் அட்டென்ஷன்' கொடுத்து, அவர்களுடைய அறிவோடு குணத்தையும் வ்ருத்தி செய்வதாகவே நம்முடைய வித்யாப்யாஸ அமைப்பு இருந்தது. அந்த வாத்யார்கள் எல்லோரும், மாணாக்கர்கள் எல்லோரும் குலபதிக்குக் கட்டுப்பட்டிருந்தார்கள். அந்தக் குலபதியின் மிகவும் உயர்ந்த சீலங்கள் தன்னால் இந்த எல்லோரையும் கட்டுப்படுத்தி நன்னெறிப்படுத்தியது. அவருடைய ஸாந்நித்ய மாத்ரத்தின் சக்தியினால் மட்டுமின்றி, அவர் நடைமுறையிலும் 'ஸூபர்வைஸ்' செய்து கண்காணித்துக்கொண்டிருந்ததால் கல்வி என்பது அறிவு, ஸம்பாத்யம் என்பவற்றோடு நிற்காமல் ஒரு ஜீவனின் ஆத்மா பூர்ணத்வம் பெறுவதற்கு வழி போட்டுக் கொடுப்பதாகவே அமைந்தது.

குலபதி என்ற தனி ஆஸாமி உச்சியிலே இருப்பது; அப்புறம் அவர் கீழே ஒவ்வொரு வாத்யாரும் ஒவ்வொரு batch-க்கு தனி ஆஸாமியாக நின்று பொறுப்பேற்றுப் பாடம் சொல்லிக் கொடுப்பதென்பது பெரிய குருகுலங்களில் (நடந்த ஸமாசாரம்). பொதுவாகத் தனித்தனி ஆசார்யர்களே நடத்திய சிறிய குருகுலங்கள்தான் அதிக அளவில் இருந்தன. 'இன்ஸ்டிட்யூஷன்' போதனை குறைவாகவும், 'இன்டிவிஜுவல்' போதிப்பது அதிகமாகவும் இருந்தது.

Koviloor Digital Library

ஒவ்வொரு இன்டிவிஜுவலாகப் பலபேரிடம் போய்ப் பல குருகுலங்களில் படித்து வித்யையை அபிவிருத்தி செய்து கொள்வதென்பது ஆதியிலிருந்து ஸஹஜமாக இருந்திருக்கிறது. ஸமீப காலத்திலுங்கூட மீமாம்ஸை ஒருவரிடம், ந்யாயம் இன்னொருவரிடம், வேதாந்தம் இன்னொருவரிடம் என்று பலபேரிடம் குருகுல வாஸம் செய்தவர்கள் இருந்திருக்கிறார்கள்; இன்றைக்குங்கூட இப்படிச் சிலராவது இல்லாமலில்லை. ஒரே சாஸ்த்ரத்திலேயே ஒரு கட்டம் வரை ஒரு குருவிடம், அப்புறம் இன்னொருவரிடம் என்று சிக்ஷை பெறுவதுமுண்டு.

இதிலே கவனிக்கவேண்டிய அம்சம், ஒரே குருகுலத்தில் இத்தனை ஆசார்யர்களும் சேர்ந்து இருந்து கற்றுக்கொடுக்கவில்லை; ஒவ்வொருவரும் தனியாகத் தன்னுடைய குருகுலத்திலேயே சொல்லிக்கொடுக்கிறார் என்பதுதான். அதாவது இன்ஸ்டிட்யூஷன் என்ற ஒன்று உயிருள்ள பல குருமார்களைத் தன் அங்கமாக ஆக்கிக்கொண்டு போதிக்கும் முறையல்ல இது. தனி குருமார்கள் ஒவ்வொருவரும் இன்டிவிஜுவலாகத் தங்களுடைய வித்யா பலத்தையும், அநுஷ்டான சக்தியையும், குணநலத்தையும் ஆதாரமாகக் கொண்டு கற்றுக்கொடுக்கும் போதிப்பு முறையே இது.

தனிப்பட்ட ஆசான் பெருமை

இப்படி இன்டிவிஜுவலாக நிற்கும்போதுதான் ஒருத்தன் சிஷ்யர்களை ஆகர்ஷிப்பதற்கு நிச்சயமாக சுத்தனாக இருந்தாக வேண்டும். சுத்தமான சரித்ரமும், நல்ல கனிந்த மனஸும் இல்லாத ஒருவனிடம் அவன் என்னதான் மஹா வித்வானென்றாலும், எந்தத் தகப்பனாராவது தன் சின்னப் பிள்ளையை, அந்தப் பிள்ளை தேஹரீதியிலும் புத்தியிலும் மனஸிலும் எல்லாவற்றிலுமே வாழ்க்கை முழுவதற்கும் அஸ்திவாரமான நல்ல வளர்ச்சியைப் பெற வேண்டிய ஸமயத்தில் பத்துப் பன்னிரண்டு வருஷம் குருகுலவாஸம் செய்யும்படியாக அனுப்பிவைப்பாரா?

Koviloor Digital Library

ஸ்தாபனத்தின் குறைபாடு

இன்ஸ்டிட்யூஷன் (ஸ்தாபனம்) என்று பலபேர் சேர்கிற போது அது கலந்தாங்கட்டியாகத் தானிருக்கும்; அப்படி யிருந்தாலும் அது இன்டிவிஜுவலிடம் (தனி மனிதனிடம்) தெரிவதுபோல தோஷமாகத் தெரியாது. தனியாக ஏதாவது ஒரு பூவை மட்டும் வைத்து மாலை கட்டினால் அதிலே நடுவிலே எங்கேயாவது ஒரு தழை, அல்லது துர்நாற்றமெடுக்கும் துருக்க ஜாமந்திப் பூ மாதிரி ஒன்றே ஒன்று சேர்ந்திருந்தால்கூட உடனே காட்டிக் கொடுத்து விடும்; அதைத் தூக்கிப் போட்டுவிடுவோம். இதுவே பலவித புஷ்பங்களும் சேர்ந்த கதம்ப மாலையாக இருந்தால் அதிலே இந்த வாஸனைப் புஷ்பங்களுக்கு ஸமமாகத் தழையும் துருக்க ஜாமந்தியும் இருந்தாலும் தெரியாது. கத்திரிக்காய் ஒரே விதையாயிருக்கிறது, அவரைக்காய் ஒரே முற்றலாயிருக் கிறது என்றால், "தனியாகச் சமைக்க வேண்டாம்; அவிய லிலே போட்டுவிடுங்கள்" என்பார்கள். தனியாக ஒரு பண்டமிருந்து அது கொஞ்சம் மூளியாகிவிட்டால்கூட ப்ரயோஜனமில்லையென்று தூக்கிப்போட்டு விடுகிறோம். ஆனால் இந்தமாதிரி ஓட்டை உடைசல், கண்ணாடிச் சில்லு கள், வீணாய்ப்போன ப்ளாஸ்டிக் துண்டுகள் துணிக் கிழிசல் கள் முதலியவற்றை வைத்தே கண்ணைக் கவருகிறமாதிரி டிஸைன்கள், பொம்மைத்தேர் முதலானதுகள்கூடப் பண்ணு வதாக அவ்வப்போது பேப்பரில் பார்க்கிறோமல்லவா?

இப்படித்தான் நம்மிலும் ஆகாதது போகாததுகளை எல்லாம் வைத்தே ஆர்கனைஸேஷன், இன்ஸ்டிட்யூஷன் என்று ஏற்படுத்தி ப்ரமிக்கப் பண்ணிவிடலாம். நான் அதிகம் சொல்ல வேண்டியதில்லை—உங்களுக்கே தெரியும், இப்போது ப்ரமாதமாக எத்தனையோ ஸங்கங்கள் இருக்கின் றனவே, அவற்றிலே தனியாக ஆள் ஆளாக எடுத்துப் பார்த்தால் எத்தனை பேரை சுத்தம் என்று சொல்லமுடியும் என்பது ஸந்தேஹந்தான். பலபேர் சேர்ந்து இருக்கும் போது தோஷங்களைப் பூசி மெழுகிவிட முடியும்.

Koviloor Digital Library

பசங்களுக்கு புத்தி மட்டும் வளர வேண்டுமென்றில்லாமல் காரெக்டரும் (குணநலனும்) வளரணும் என்றால் அது சுத்தமான இன்டிவிஜுவல் குருமார்களால் நடக்கிற அளவுக்கு இன்ஸ்டிட்யூஷனால் ஒருநாளும் முடியாது. இன்ஸ்டிட்யூஷனில் அறிவைத்தான் பரீக்ஷித்து வளர்க்க முடியும். குணத்தை முடியாது. சிஷ்யனைக் கூடவே வைத்துக் கொண்டு, அவனைப் பணிவிடை செய்ய வைத்து, அவனுக்கு ஆஹாரம் போட்டு வளர்க்கும்போதுதான், கூடவே குணத்தையும் வளர்க்க முடியும்.

ஸ்கூலில் அட்மிஷன்போது முடிவது வெறுமே புத்தியைப் பரீக்ஷித்துப் பார்ப்பதுதான். குணத்தைப் பரீக்ஷித்து, அதை எப்படி அபிவ்ருத்தி பண்ணணும் என்று பார்க்கவும், திருத்த முடியாத சரக்கு என்றால் பாடம் கிடையாது என்று தள்ளி விடவும் இதில் இடமில்லை. நம் பண்டைய முறையிலோ குணத்தோடு சேராத கல்வி கல்வியே இல்லை. கீதையை முடிக்கும்போது பகவான், ''ந அதபஸ்காய, ந அபக்தாய, ந அசுச்ரூஷவே'' என்பதாக, அதாவது தீவிர தாபமில்லாதவனுக்கும், பக்தி இல்லாதவனுக்கும், பணிவிடை செய்யாதவனுக்கும் போதிக்கவே கூடாது என்கிறார். ஒரு வருஷமாவது கூட வைத்துக்கொண்டு வாஸம் பண்ணி சிஷ்யன் குணத்தைப் பற்றி த்ருப்தி அடைந்தாலொழிய பெரிய விஷயங்களைக் கற்பிக்கக் கூடாதென்று சாஸ்த்ரம் (''நாஸம்வத்ஸர வாஸினே ப்ரப்ரூயாத்''). இதுகளுக்கெல்லாம் ஸ்கூலில் இடமில்லை. அதனாலேதான் அறிவை மட்டும் வளர்ப்பதாகவும், புத்தி ஸாமர்த்தியத்தை மாத்திரம் கொண்டு நல்லதற்கில்லாதவைகளையே தினந்தினம் வ்ருத்தி செய்து லோகத்தைக் கெடுப்பதாகவும் ஏற்பட்டிருக்கிறது.

(ஒரு வருஷம் டெஸ்ட் பண்ணிவிட்டுப் பாடம் ஆரம்பிக்கணுமென்று சொன்னதில் இன்னொன்று ஞாபகம் வருகிறது. ஒரு வருஷம் ஆனபிற்பாடு பையனைத் திருப்பியும் அனுப்பாமல், வித்யாப்யாஸமும் ஆரம்பிக்காமல், ''படிப்புக்கு யோக்யதையில்லாவிட்டாலும் நன்றாக மாடு மாதிரி

Koviloor Digital Library

உழைக்கிறுன். அதனுல் வேலை வாங்கலாம்'' என்றே ஒரு ஆசாரியன் தன்கூட வைத்துக் கொள்ளலாமல்லவா? இப்படி வித்யாதானத்துக்காக இல்லாமல், ஸ்வய காரியத்துக் காகவோ அல்லது வேறு ஏதேனும் காரணத்தை உத்தே சித்தோ ஒருவர் தன்னிடம் படிக்கவந்த பையனுக்கு ஒரு வருஷமாகியும் வித்யோபதேசம் பண்ணுமலிருந்தால் அந்தப் பையனின் பாபமெல்லாம் இவரைச் சேர்ந்துவிடும் என்று சாஸ்த்ரத்தில் இருக்கிறது. சிஷ்யனுக ஆன பிற்பாடு ஒருவன் பண்ணும் பாபம் (அவனை நல்வழிப்படுத்தத் தவறிய) குரு வைச் சேரும் என்று சொல்லியிருப்பது மட்டுமின்றி, இப்படிச் சில ஸந்தர்பங்களில் ஒருத்தனை சிஷ்யனுக எடுத்துக்கொள் ளாமலிருப்பதாலேயும் அந்தப் பாபம் ஸம்பவிக்கும் என்று சொல்லியிருக்கிறது! குருவாக இருப்பதில் இத்தனை பொறுப் புக்கள்!

சில பெரிய ரிஷிகள் ரொம்பவும் உத்தமமான மாணவ னின் பக்தியை வெளிப்படுத்துவதற்காகவே பல வருஷங்கள் போதிக்காமலிருந்ததாகவும் அபூர்வமாகச் சில கதைகள் இருக்கின்றன.)

இன்ஸ்டிட்யூஷனுக இல்லாமல் இன்டிவிஜுவல் லெவலி லேயே வித்யாப்யாஸம் நடப்பதென்பதுதான் மாணவனுக்கு மட்டுமில்லாமல் வாத்யாருக்கும் நல்லது. அவர் தனியாக நின்றே சோபிக்க வேண்டுமென்னும் போதுதான் தன்னை அப்பழுக்கற்றவராக்கிக் கொள்ளவேண்டுமென்பது அத்யா வச்யமாய்விடுகிறது.

உள்ளம் திறந்து குரு-சிஷ்யர்கள்: உபநிஷத உதாரணங்கள்

நம்முடைய பண்டைய நூல்களைப் பார்த்தால் இப்படி குருகுலம் நடத்திய குருமார்கள் எத்தனை உசந்த குணவான் களாக, அன்புள்ளம் கொண்டவர்களாக இருந்திருக்கிறுர் களென்று தெரிகிறது.

Koviloor Digital Library

ஒரு லாபத்தையும் எதிர்பார்க்காமல், வேத வித்யை எதிர் காலத்துக்குப் போய் லோகம் க்ஷேமமடைய வேண்டு மென்பதற்காகவே, யாரோ ஊரான் வீட்டுப் பிள்ளையைத் தன்னோடு வருஷக்கணக்காக வைத்துக்கொண்டு, அவனிடம் தொண்டை தண்ணி வற்ற "மாரடித்த" குருமார்கள் இப்படி வம்ச பரம்பரையாக நம் தேசத்திலிருந்து வந்திருப்பதுதான் நமக்குள்ள எத்தனையோ பெருமைகளில் சிகரமாகவுள்ள பெருமையாகத் தெரிகிறது.

தனக்கு என்ன லாபம் கிடைக்கும் என்ற எண்ணமே யில்லாமல், "நான் தங்கள் சிஷ்யனாக வந்துவிட்டேன்" என்று மனஸார ஒருத்தன் வந்துவிட்டால் அவனுக்குத் தாங்கள் கற்றறிந்த ஸகலத்தையும் கற்பித்திருக்கிறார்கள். ப்ருஹதாரண்யக (உபநிஷ)த்திலே (ó-2) கௌதமருக்கு ப்ரவாஹணன் என்ற ராஜா உபதேசம் செய்யுமிடத்தில் இந்த விஷயம் சொல்லப்பட்டிருக்கிறது.

இதே மாதிரி சிஷ்யனும், 'வித்யைதான் வேண்டும்; அதற்குப் பதில் எத்தனை பொருள் கொடுத்தாலும் வேண்டாம்' என்று உதறித் தள்ளியதையும் இதே கதையின் இன்னொரு version வரும் சாந்தோக்ய (உபநிஷ)த்தில் (5-3) பார்க்கிறோம்: "கௌதம பகவானே! பூலோகச் செல்வம் எவ்வளவு வேண்டுமானாலும் கேளுங்கள், தருகிறேன்" என்கிறான் ராஜா ப்ரவாஹணன். "அதொன்றும் எனக்கு வேண்டாம். எனக்குத் தெரியாததாக உனக்குத் தெரிந்துள்ள வித்யைதான் வேண்டும்" என்கிறார் கௌதம ரிஷி. 'பகவான்' என்றே அழைக்கப்பட்ட ஒரு ரிஷி, வர்ணத்தில் தனக்குப் பின்னே வருகிற ஒரு க்ஷத்ரியனிடம் வித்யை வேண்டுகிறாரென்பதிலிருந்து உண்மையை அறிவதில் அக்கால ப்ராம்மணர்கள் எப்படி அஹங்காரமில்லாமல், அடக்கத்தோடு ஆர்வமாயிருந்தார்களென்பதும் தெரிகிறது.

"நிறைகுடம் தளும்பாது" என்பது இங்கே இன்னொரு விதத்திலும் தெரிகிறது.

Koviloor Digital Library

கௌதமருடைய பிள்ளை ச்வேதகேது கொஞ்சம் தலைகனம் உள்ளவன். தலைகனத்துப் போனால் உள்ளே எப்படி வித்யை இறங்கும்? இவனுடைய அறியாமையை இவனே உணர்கிற மாதிரி தகப்பனாராகப்பட்டவர் இவனைக் கேள்வி கேட்டுப் பரீக்ஷித்து, இவனுடைய அஹங்காரம் அடிபட்டுப் போன பின், இன்றைக்கும் லோகம் பூரா கொண்டாடும் ஜீவ - ப்ரம்ம அபேதத்தைச் சொல்வதான மஹாவாக்யத்தை இவனுக்கு உபதேசிக்கிறார். இது பின்னாடி வரும் கதை. இதற்கு முன்னாடி இவன்தான் முதலில் ப்ரவாஹணனிடம் போகிறான். அந்த ராஜா கேட்ட கேள்விகளுக்குப் பதில் தெரியாமல் போனவுடன் இவனுக்கு ரோஷம் பொத்துக்கொண்டு வருகிறது. தகப்பனாரிடம் வந்து, "எவனோ க்ஷத்ரியன் என்று தன்னைச் சொல்லிக் கொள்கிற நீசன் என்னை இப்படியெல்லாம் கேள்வி கேட்டுவிட்டான்" என்று படபடக்கிறான். இதுதான் குறைகுடத்தின் லக்ஷணம் —"ரொம்ப லக்ஷணம்!" என்கிறோமே அப்படிப்பட்ட "லக்ஷணம்"! இதைக் கேட்ட நிறைகுடமான தகப்பனாரோ, "அடடா, இந்த விஷயங்களை நாம தெரிஞ்சுக்கணுமே" என்ற ஆர்வத்தோடும், அடக்கத்தோடும் போய் ராஜாவிடம் உபதேசம் கேட்கிறார்.

இதே கௌதமரிடம் இன்னொரு ஸந்தர்பத்தில் ஐந்து பெரிய வைதிக அநுஷ்டான சீலர்கள் "வைச்வாநர ஆத்மா" என்பது பற்றிக் கேட்டுக் கொள்வதற்காக வருகிறார்கள். (இதிலிருந்து பெரிய பெரிய ச்ரௌதிகளும் எப்படி வித்யைக்காகத் தேடித்தேடிப் போனார்கள் என்பது தெரிகிறது.) அப்போது அவர், "இவர்கள் கேட்பது நமக்குத் தெரிந்த மாதிரி எதையாவது கதைக்கப்படாது" என்று தீர்மானம் பண்ணிக்கொண்டு, திறந்த வெள்ளை மனஸோடு தமக்குத் தெரியாது என்று சொல்லிவிட்டு, கேகய ராஜாவான அச்வபதியிடம் அவர்களை அனுப்பி வைக்கிறார். இப்போது நம் நாளிலோ வேடிக்கையாகச் சொல்கிறார்கள்—"ப்ரொஃபஸர் என்றாலே, வாஸ்தவத்தில் 'ஸப்ஜெக்ட்' தெரிந்தவரல்ல;

Koviloor Digital Library

அப்படி 'ப்ரொஃபஸ்' பண்ணிக் கொள்பவர், அதாவது தெரிந்ததாகச் சொல்லிக் கொள்கிறவர்தான்'', என்று!

இன்னொரு உபநிஷத்திலும்* இப்படியே வருகிறது. அதோடு வேறு பல உசந்த உண்மைகளும் தெரியவருகிறது. ஸுகேசர், ஸத்யகாமர் முதலான ஐந்து பெரியவர்கள் இருக்கிறார்கள். இவர்கள் ப்ரம்மத்தையே தேடித்தேடி அதிலேயே ஊறிவிடுகிற ''ப்ரஹ்ம பரர்கள், ப்ரஹ்ம நிஷ்டர்கள்'' என்று சொல்லியிருக்கிறது. இந்த மஹா பெரியவர்களும் சில தத்வங்களைத் தெரிந்துகொள்ள வேண்டுமென்ற நிஜமான வித்யாபிமானத்தோடு, ரொம்பவும் பணிவாக ஸமித்துக்களை எடுத்துக்கொண்டு பிப்பலாதர் என்கிற மஹானிடம் வந்து, அந்த உபஹாரத்தை (ஸமித்து என்னும் கையுறையை) ஸமர்ப்பணம் பண்ணி, தங்களுக்கு உபதேசிக்கும்படியாக விஞ்ஞாபித்துக் கொள்கிறார்கள். இப்பேர்ப்பட்டவர்களையுங்கூட இன்னும் பரிசோதித்துப் பார்க்கணும், அதனால் எல்லா ஜனங்களுக்கும் பாடம் புகட்டணும் (வேத வித்யா பாடம் ஒருபக்கம் இருக்கட்டும்; அதோடு வாழ்க்கையுதாரணப் பாடமும் புகட்டணும்) என்று பிப்பலாதர் நினைக்கிறார். ''இன்னமும் ஒரு வருஷம் சுத்த ப்ரம்மசர்யத்தோடு தபஸ் பண்ணிவிட்டு நல்ல ச்ரத்தையோடு திரும்பி வாருங்கள். நீங்கள் கேட்பதற்கு பதில் சொல்கிறேன். தயங்காமல் என்ன கேள்வி வேணுமானாலும் கேளுங்கள் (''யதா காமம்'': ''இஷ்டப்படி என்ன வேண்டுமானாலும்'' என்று உபநிஷத்திலிருக்கிறது). எனக்குத் தெரிந்தவரை பதில் சொல்கிறேன்'' என்கிறார். இது இவருடைய விநயம்.

முதலில் ஒரு வருஷ தபஸ் விதித்தது அவர்களுடைய விநயத்துக்கு டெஸ்ட். குரு என்று ஒருவரிடம் போனால் அவர் எது சொன்னாலும் நல்லதுதான், சரிதான் என்று நம்பி அப்படி செய்யவேண்டும் இந்த நம்பிக்கைக்குத்தான் ச்ரத்தை என்று பெயர்.

---

* ப்ரச்னோபநிஷத்

Koviloor Digital Library

ச்ரத்தை; பரிப்ரச்னம்

கீதையிலும் பகவான், தத்வதர்சிகளான ஞானிகளிடம் உபதேசம் பெற வேண்டுமென்று சொல்லிவிட்டு (4-34), நாலைந்து ச்லோகங்களுக்கு அப்புறம் (4-39) "ச்ரத்தாவாந் லபதே ஜ்ஞானம்"—"ச்ரத்தை நிரம்பியவனுக்குத்தான் ஞானம் லபிக்கும்" என்கிறார். அங்கே அவரும், சிஷ்யன் குருவை நன்றாகத் தோண்டித் தோண்டிக் கேள்வி கேட்க வேண்டுமென்கிறார்; "பரிப்ரச்நம்" என்ற வார்த்தையைப் போட்டிருக்கிறார். "ப்ரச்நம்" என்று மாத்திரம் சொன்னால், கேள்வி கேட்டறிவது என்று அர்த்தம். "பரி" என்று இதற்கு அடைமொழி போட்டதால் நன்றாகக் குடைந்து கேட்கணும் என்றாகிறது. இது இந்த நாளில், "வாத்தியாருக்குத் தெரிகிறதா?" என்று அவரைக் குடைந்து பார்த்து அவமானப்படுத்த ஆசைப்படுவதுபோல் அல்ல. விஷயத்தைக் குடைந்து பரிபூர்ணமாக அதைத் தெரிந்து கொள்ள வேண்டுமென்பதே தாத்பர்யம். அதனால்தான் இந்தக் கால மாணவரின் போக்குக்கு மாறான இரண்டு வார்த்தைகள் "பரிப்ரச்நம்" என்பதை இரண்டு பக்கமும் அணைத்துக்கொண்டு வரும்படியாக பகவான் பதப்ரயோகம் செய்திருக்கிறார். "ப்ரணிபாதம்" என்பது "ப்ரிப்ரச்ந"த்துக்கு முந்திவரும் வார்த்தை. "ப்ரணிபாதம்" என்றால் நமஸ்காரம் பண்ணிப் பணிவோடு இருப்பது. "பரிப்ரச்ந"த்துக்குப் பிந்தி "ஸேவா" என்ற வார்த்தையைப் போட்டிருக்கிறார். அதாவது சிஷ்யன் குருவுக்குப் பணிவிடை புரியணும். முதலில் பணியவேண்டும்; அப்புறம் அவருக்கு எல்லாப் பணிவிடையும் செய்யவேண்டும். இதெல்லாவற்றுக்கும் "பேஸிக்"காக (அடிப்படையாக) குரு வார்த்தை, குரு உத்தரவு, குரு உபதேசம் எதுவானாலும் அது நல்லதுதான் என்ற அசைக்கமுடியாத ச்ரத்தை இருக்கவேண்டும். இவற்றோடு கூடிய சிஷ்யனைத்தான் குருவிடம் நன்றாக ஆழ்ந்து கேள்விகள் கேட்டுத் தெரிந்துகொள்ளச் சொல்லியிருக்கிறது.

Koviloor Digital Library

இப்படிப்பட்ட நம்பிக்கைக்கு உரியவராக ஒருத்தர் வாஸ்தவமாகவே இருந்தாகவேண்டும் என்பது தனி மநுஷ்யர் குருகுலம் நடத்தும்போதுதான் யதார்த்தத்தில் நடக்கும். அவரோடேயே ஸதா ஸர்வகாலமும் இருந்தால் தானே அவருக்கு வாஸ்தவமாக உள்ள அறிவு என்ன, அவருடைய குணம் என்ன என்பது தெரியும்? ஸ்தாபன ரீதியில் படிக்கும்போது இதெல்லாம் எப்படி ஸாத்யம்? ஏதோ கொஞ்ச நேரம்தான் ஸ்கூல் அல்லது காலேஜ், அதிலேயும் வெவ்வேறே ஸப்ஜெக்டுக்கு வெவ்வேறே வாத்தியார் என்றிருக்கிற தற்கால அமைப்பில் வாத்தியார் ஏதோ கொஞ்சம் நோட்ஸை உருப் போட்டுவிட்டு வந்து ஒப்பித்தே ரொம்பவும் விஷயஜ்ஞர் மாதிரிக் காட்டிக்கொண்டு விடுவதற்கு இடம் கொடுத்துப் போகிறது. "தெரிந்தமட்டும் பதில் சொல்கிறேன்" என்று உபநிஷத் ரிஷி சொன்னாரே, அந்த உண்மை உள்ளம், அதோடு குரு ஸ்தானத்திலிருந்த போதிலும் அவருக்கு இருந்த humility (விநய ஸம்பத்) இந்த நாளில் பார்க்க முடியுமா? சிஷ்யன் என்றாலே விநீதன், அவன் விநய ரூபமாக இருக்கவேண்டும் என்பதோடு நிற்காமல் இப்படி குருவும் விநயமாயிருந்திருக்கிறார்!

இப்படியெல்லாம் குரு, சிஷ்யன் இருவருமே உண்மையோடு எளிமையோடு ஒழுகியதற்குக் காரணம், குருகுலம் என்று ஒன்றுசேர்ந்து ஒரு அகத்து மநுஷ்யர்களாக குரு - சிஷ்யாள் ஹ்ருதயம் ஒட்டி உறவோடு வஸித்ததுதான். பரஸ்பரம் ஒளிவு மறைவில்லாமல் இருந்திருக்கிறார்கள். அந்த ஹ்ருதய ஒட்டுறவு ஒரு ஸ்தாபனத்தில் எப்படி வரும்? இந்த பாந்தவ்யத்தாலேயே குரு மனஸைத் திறந்து காட்டினார். தன் புத்தியையும் திறந்து, பாத்ரர்களான சிஷ்யர்களிடம் தனக்குத் தெரிந்த ஸகலத்தையும் கொட்டினார். "தெரிந்தவரை சொல்கிறேன்" என்று சொன்ன அதே வாயோடு பிப்பலாதர், "தெரிந்ததில் ஸர்வத்தையும் சொல்கிறேன்" என்று பரிபூர்ணமாக வித்யாதானம் செய்ய முன் வருகிறார். சிஷ்யன் தன்னை மிஞ்சி விடுவானோ என்று

Koviloor Digital Library

பயப்படுவது, சிஷ்யன் எழுதியதையே தன் "தீஸிஸ்" என்று வெளியிடுவது—இப்படியெல்லாம் தற்காலம் கேட்கிறோம்! இதெல்லாவற்றுக்கும் மேலே குருகுலத்தின் பாந்தவ்யத்தில் குரு சிஷ்யனிடம் காட்டிய அன்பும், கரிசனமும் இன்ஸ்டிட்யூஷனில் உண்டாகவே முடியாது.

சோதித்துத் துலக்குவது

பிரகாசம் ஜாஸ்தியாவதற்கே ஒரு மணியைக் கடைசல் பிடிக்கிற மாதிரி, மாணாக்கன் சோபிக்கவேண்டுமென்றே அந்நாள் குரு அவனை எவ்வளவோ சோதித்தார். பாடமே சொல்லித் தராமல் நீண்டகாலம் வேலை மட்டும் வாங்கி அவனைப் பணிவில் புடம் போட்ட ரிஷிகளும் உண்டு.

உதாரணமாக[1] உபகோஸலன் என்று ஒரு சிஷ்யன். குருவின் பேர் ஜாபால ஸத்யகாமர். இவர் அந்தக்கால 'ஸிலபஸ்', 'கர்ரிகுலம்' இதுகளின்படி பன்னிரண்டு வருஷங்களில் அநேக சிஷ்யர்களுக்கு வேத சாஸ்த்ர சிக்ஷை கொடுத்தார். ஆனால் இந்த உபகோஸலன் என்கிற பையனை மட்டும் பாடம் கேட்க அநுமதிக்கவில்லை. பன்னிரண்டு வருஷமும் தம்முடைய அக்னிகளைக் கவனித்துக் கொள்கிற பொறுப்பிலேயே அவனை ஈடுபடுத்தியிருந்தார்[2]. அந்தப் பிள்ளையும் முணமுணக்கவில்லை. குருகுலத்தில் பன்னிரண்டு வருஷம் வஸித்தும் ஒரு பாடம்கூடக் கேட்காமல், அவர் சொன்ன கார்யத்தையே பண்ணிக் கொண்டிருந்தது.

அத்யயனம் பூர்த்தியானவுடன் ஸமாவர்த்தனம் என்று பிரம்மசாரிக்கு (சிஷ்யனுக்கு) ஒரு ஸம்ஸ்காரம் பண்ணி குருகுலத்திலிருந்து அகத்துக்குத் திருப்பி அனுப்புவார்களென்றும் அதற்கப்புறம் அவன் கல்யாணம் செய்து கொண்டு க்ருஹஸ்தாச்ரமம் ஏற்க வேண்டுமென்றும்

---

1. இக்கதை சாந்தோக்ய உபநிஷத்தில் (4-10) உள்ளது.

2. வைதிகரின் மூன்று அக்னிகளைக் குறித்து இரண்டாம பகுதியில் 'க்ருஹஸ்தாச்ரமம்'' என்ற உரையில் ''அக்னி காரியங்கள்'' என்ற உட்பிரிவில் பார்க்க.

Koviloor Digital Library

சொன்னனேல்லவா? இந்த மாதிரி மற்றப் பசங்களுக்கு ஸத்யகாமர் ஸமாவர்த்தனமும் பண்ணிவிட்டார், உபகோஸலனை மட்டும் அப்படியே ignore (அலக்ஷ்யம்) பண்ணிவிட்டு—அல்லது பண்ணின மாதிரி!

அப்போதும் அந்தப் பிள்ளை பாட்டுக்குப் பொறுமையாகவே இருந்தது.

குரு பத்னி

ஆனால் ஸத்யகாமருடைய பத்னிக்குத்தான் அதற்கு மேல் பொறுக்கமுடியவில்லை. அவள் அவரிடம் போய், "இந்தப் பிள்ளை நல்ல ப்ரம்மசர்யத்தோடு, தபஸ்ஸோடு இத்தனை வருஷம் உம்முடைய அக்னிகளைப் போஷித்து வந்திருக்கிறான். நீரானால் அவனுக்குப் பாடமே சொல்லித் தரக் காணோம். இந்த அக்னிகள் உம்மை சபிக்காமலிருக்க வேண்டுமானால் இந்த ஸாதுப் பிள்ளைக்கு இப்போதிலிருந்தாவது பாடம் ஆரம்பியும்" என்று சண்டைக்கு வந்து விட்டாள்.

சண்டை என்றாலும் அதிலேயும் ரஸம் இருக்கிறது. அவள் சொன்னதிலிருந்து அநேக ரஸமான விஷயங்களைத் தெரிந்துகொள்கிறோம். முதலில், குரு பத்னி என்பவள் எப்படி குருவைவிடவும் சிஷ்யப்பிள்ளைகளிடம் வாஞ்சையோடு இருந்தாள், அகத்தைவிட்டு வந்த குழந்தைகளுக்கு எப்படி அம்மாவாக இருந்தாள் என்று தெரிகிறது.

தர்ம பத்னிகளில் உள்ள இரண்டு தினுஸில் ஒன்றும் இங்கே தெரிகிறது. பத்னியின் தர்மம் புருஷன் சொல்வது தர்மமா அதர்மமா என்றே பார்க்காமல் அதன்படி செய்ய வேண்டுமென்று கருதும் பதிவ்ரதைகள் ஒரு தினுஸு. நளாயினி இப்படித்தான் அழுகிச் சொட்டும் புருஷனை அவனுடைய இச்சா பூர்த்திக்காகத் தகாத இடத்துக்குத் தூக்கிக்கொண்டு போனாள். இன்னொரு தினுஸு, பதியானவன் தர்மத்திலிருந்து தப்பிவிடக்கூடாதே என்ற விசாரத்தில் அவனுக்கே தர்மங்களை நினைப்பூட்டுவது

Koviloor Digital Library

தான் பத்னியின் கடமை என்று கருதும் பதிவ்ரதைகள். இப்படித்தான் ஸீதை ராமரிடம், அவர் அவளை விட்டுக் காட்டுக்குப் புறப்பட நினைத்தபோது, "எந்தக் கஷ்ட நஷ்டத்திலும் பதியை விட்டுப் பிரியாமலிருப்பதுதானே ஸ்த்ரீ தர்மம்? இந்த தர்மத்தை உங்களுடைய தாயாருக்கு எடுத்துக் காட்டித்தானே அவர் உங்களோடு காட்டுக்கு வராமல் உங்கள் அப்பாவின் பக்கத்தில் இருக்கும்படிப் பண்ணியிருக்கிறீர்கள்? அப்படியிருக்க எனக்கு மட்டும் அந்த தர்மம் இல்லையா என்ன? என்னைக் காட்டுக்கு வராமல் இங்கேயே இருக்க வேண்டுமென்று நீங்கள் சொல்வது எப்படி நியாயம்?' என்று நிரம்ப வாதம் பண்ணி முடிவில் ராமரையும் ஸம்மதிக்கச் செய்தாள்.

"அக்னி கோபித்துக் கொண்டுவிடும்" என்று ஸத்யகாம ரிஷியின் பத்னி அவரிடம் சொன்னது, "உம்மாச்சி கண்ணைக் குத்திவிடும்" என்று குழந்தைகளை நாம் பயமுறுத்துகிற மாதிரி இல்லை. வாஸ்தவமாகவே ரிஷிகளின் க்ருஹங்களில் திவ்ய சக்திகள் உயிருள்ள ஸாந்நித்யத்தோடு இருந்ததால் அவர்கள் தர்ம விருத்தமாகப் போனால் அவை அவர்களிடம் கோபம் கொள்ளத்தான் செய்யும். 'உபகோஸலன் உபதேச மாகாமல் இப்படிப் பல வருஷங்களாக இருக்கிறானே' என்று அவனுக்காகக் கவலைப்பட்டாற்போலவே, 'இப்படிப் பதி உபதேசிக்காமலிருக்கிறாரே! இவரை அந்தப் பிள்ளை காத்து வளர்க்கிற இவருடைய அக்னியே சபித்துவிடாமலிருக்க வேண்டுமே!' என்றும் வாஸ்தவமாகவே அந்த அம்மாள் கவலைப்பட்டிருக்கிறாள்.

அக்னிகள் அந்த ஆச்ரமத்தில் ரொம்பவும் ஜீவசக்தி யோடு ஸாந்நித்யமாகத்தான் இருந்தன என்பதும் மேலே போகிற கதையில் தெரிகிறது.

அவள் அப்படிச் சொல்லியும் ரிஷி பாட்டுக்கு, இன்னும் சோதித்துப் பார்ப்போமென்கிறாற்போல், வெளியே போய் விட்டார்.

Koviloor Digital Library

'குரு பத்னி சொல்லியும் குரு கேட்கவில்லையே! இப்படி நம் நிமித்தமாக அவர்களுக்குள் அபிப்ராய பேதம் வேறே ஏற்பட்டுவிட்டதே!' என்றெல்லாம் உபகோஸலனுக்கு வேதனையாகிவிட்டது. அவனுக்குச் சாப்பாடே இறங்க வில்லை.

"ஏண்டா கொழந்தே, சாப்பிடாமலிருக்கே?" என்று குருபத்னி விசாரமாகக் கேட்டாள்.

"மனோ வ்யாதிதான். சாப்பாடு கேட்கமாட்டேன் என்கிறது" என்றான் பையன்.

தெய்வசக்திகள் போதித்தாலும் குருபக்தி குறையாதது

அப்போதுதான், அவன் பார்த்துப் பார்த்துப் போஷித்துக்கொண்டு வந்த மூன்று அக்னிகள் தங்கள் ஸாந்நித்யத்தை வெளிக் காட்டின. "பாவம், நமக்கு இத்தனை பண்ணின பிள்ளை சாப்பாடு கொள்ளாத அளவுக்கு வேதனைப் படுகிறானே! இனியும் காலஹரணம் பண்ணாமல் நாமே இவனுக்கு உபதேசம் பண்ணிவிடுவோம்" என்று அதுகள் தங்களுக்குள்ளே முடிவு செய்தன. அந்தப்படியே அவனுக்கு உபதேசமும் பண்ணிவிட்டன. முதலில் அவை மூன்றும் சேர்ந்தும், அப்புறம் ஒவ்வொன்றும் தனித்தனியாயும் அக்னி வித்யையையும் ஆத்மவித்யையையும் உபதேசித்தன.

ஆனாலும் அவனுக்கு குருவின் தேவையில்லாமல் தாங்களே எல்லா உபதேசமும் கொடுத்துவிட்டால் அவர் மரியாதையைக் குறைத்ததாகிவிடும் என்பதால் அக்னி வித்யை ஆத்ம வித்யை இவற்றின் தத்வத்தை (philosphy -ஐ) மட்டும் சொல்லிக் கொடுத்துவிட்டு, "ஸௌம்யா, இனிமேல் ஆசார்யர்தான் உனக்கு இந்த தத்வங்களை அநுபவமாக்கிக் கொள்வதற்குச் செய்யவேண்டிய கார்ய க்ரமங்களை (procedure-ஐயும், technique-ஐயும்) சொல்லிக் கொடுக்கணும்" என்று முடித்துவிட்டன.

Koviloor Digital Library

ஆசார்யர் திரும்பிவந்தார். "உபகோஸலா!" என்று அவனைக் கூப்பிட்டுக் கொண்டேதான் உள்ளே நுழைந்தார்.

"பகவானே!" என்று குரல் கொடுத்துக்கொண்டு அவனும் அவர் முன்னே போய் நின்றான்.

அவர் ஒரு பக்கம் சோதனை பண்ணினாலும், இவன் ஒரு பக்கம் வேதனைப்பட்டாலும் பரஸ்பரம் அன்பு மட்டும் போய் விடவில்லை என்று இங்கே உபநிஷத் ஸூக்ஷ்மமாகக் காட்டு கிறது.

பிள்ளையாண்டானைப் பார்த்தார். அவன் முகம் ஒரே தேஜஸாகப் பிரகாசித்தது. 'ஓஹோ, இப்படியா ஸமாசாரம்!' என்று ஊஹித்துவிட்டார். "ஸௌம்யா, யார் உனக்கு உபதேசம் பண்ணினார்கள்?" என்று அவனையே கேட்டார்.

பையனை பயம் பிடித்துக் கொண்டது. அவரன்னியில் அவருடைய குருகுலத்திலிருந்துகொண்டே உபதேசம் வாங்கிக்கொண்டது தப்போ என்று பயம். கருணையோடு உபதேசித்த அக்னிகளைக் காட்டிக் கொடுப்பதா என்ற தயக்கம் வேறே! குருவிடம் ஒளிக்கவும் கூடாது; நடந்ததை அப்பட்டமாகப் போட்டு உடைக்கவும் கூடாது என்று நினைத்தான். ஜாடை மாடையாய்ப் புரிய வைத்துவிட எண்ணி, "வேறே யார் உபதேசிப்பார்கள் ஸ்வாமி? இந்த அக்னிகள்தான் இப்போது இருக்கிற மாதிரி இல்லாமல் கொஞ்சம் வேறே மாதிரியாக இருந்தன" என்றான்.

அவர் வைத்த கடைசி டெஸ்டிலும் அவன் ஜயித்து விட்டான். 'இனியும் தாங்காமல் அக்னிகள் உபதேசம் பண்ணிவிடும்' என்று அவர் மனஸுக்கே தெரிந்த ஒரு ஸ்டேஜில்தான் அவர் வேண்டுமென்றே அகத்தை விட்டுப் போனார். ஏனென்றால் அவர் வாழ்க்கையிலேயே பூர்வத்தில் இப்படி நடந்திருக்கிறது.

Koviloor Digital Library

* ஹாரித்ரும கௌதம ரிஷி என்பவர் பூர்வத்தில் இந்த ஸத்யகாமருக்கு உபநயனம் செய்துவைத்து நானூறு சோனிப் பசுக்களை அவரிடம் விட்டு மேய்த்துவரச் சொன்னார். அந்த சோனிப் பசுக்களை நன்றாகப் போஷித்துப் புஷ்டி பண்ணி, கன்று போடவைத்து, நானூறை ஆயிரமாக வ்ருத்தி பண்ணிக் கொண்டுதான் குருவிடம் திரும்பி வந்து உபதேசம் வாங்கிக் கொள்வது என்று ஸத்மகாமர் தீர்மானம் செய்து கொண்டு கிளம்பினார். அந்தத் தீர்மானம் கார்யமாக நிறைவதற்கு அநேக வருஷங்கள் பிடித்தன. பசுமந்தையை ஆயிரமாக்கி ஸத்யகாமப் பிரம்மசாரி குருகுலத்துக்குத் திரும்பி வருகிற வழியிலேயே அதிலிருந்த ஒரு ரிஷபம் அவருக்கு ஒரு உபதேசம் பண்ணிற்று. மறுநாள் அக்னி ஒரு உபதேசம் பண்ணிற்று. அதற்கடுத்த இரண்டு நாட்களில் ஒரு ஹம்ஸ பக்ஷியும், மத்கு என்கிற ஒரு (நீர்வாழ்) பக்ஷியும் உபதேசம் பண்ணின. இப்போது உபகோஸலனுக்கு உபதேசம் கேட்டதால் தேஜஸ் உண்டானாற்போலவே அப்போது ஸத்யகாமருக்கும் உண்டாயிற்று. இப்போது இவர் உபகோஸலனைக் கேட்டாற் போலவே அப்போது ஹாரித்ருமர் இவரிடம், "உனக்கு யார் உபதேசித்தது" என்று கேட்டார். இப்போது உபகோஸலன் நாசூக்காக பதில் சொன்னதுபோலவே அப்போது அவர், "மநுஷ்யாள் யாரும் உபதேசிக்கவில்லை" என்று சொன்னார். அதோடு, தம்மைப் பொறுத்தமட்டில் ஹாரித்ருமரேதான் தம்முடைய உபதேச குருவாக இருக்க வேண்டுமென்று தமக்கு ஆசை என்றும் விஜ்ஞாபித்துக் கொண்டார்.

இந்த இடத்திலே அவர் ஆசாரியன் அத்யாவச்யம் என்ற கருத்தையும் வெளியிட்டிருக்கிறார். 'ஆசார்ய முகமாகக் கற்கின்ற வித்யைதான் உத்தமமான பலன் தரும்' என்று அவர் சொல்வதாக இருக்கிறது. சிஷ்யனாக உள்ள தாம் இப்படி முடிவு பண்ணி அபிப்ராயம் சொல்வதுகூட அதிக ப்ரஸங்கித்தனம் என்று நினைத்து அவர், "தங்களைப் போன்ற

* இக் கதை சாந்தோக்யம் 4.4-ல் காண்கிறது.

Koviloor Digital Library

பெரியவர்கள் சொல்லி நான் கேட்டிருப்பது என்னவெனில், ஆசார்யமுகமாக அறிகிற வித்யைதான் உத்தம பலன் தரும் என்பது'' என்கிறார்.

இப்படி ஒவ்வொரு எழுத்திலும் குரு - சிஷ்ய பாவங்கள் எப்படியிருக்க வேண்டுமென்பதை உபநிஷத்துக்கள் நுட்பமாகக் காட்டுகின்றன.

ஸத்யகாமர் சிஷ்யராயிருந்த கதையிலிருந்து ஆசார்யராகியிருக்கிற கதைக்கு வரலாம். உபகோஸலனுக்குத் தாம் உபதேசிக்காவிட்டாலும் திவ்ய சக்திகள் எதன் மூலமாகவாவது உபதேசம் பண்ணும் என்று ஸொந்த அநுபவத்திலிருந்தே அவருக்குத் தெரியும். "இம்மாதிரி உபதேசம் வாங்கிக்கொண்ட பிறகு பையன் எப்படி ஆவான்? 'இனிமேலே இந்த குருவின் உதாஸீனத்தைப் பொறுத்துக் கொள்ள வேண்டியதில்லை. இதே போல திவ்ய சக்திகளிடமிருந்தே எல்லா உபதேசங்களும் வாங்கிக்கலாம்' என்று அஹம்பாவப்படுகிறானா என்று பார்க்கலாம். அப்படியில்லாமல் நம்மிடமே பூர்த்தியாக அத்யயனம் பண்ணுவதென்று இவன் இங்கேயே இருந்தால், (அக்னிகளிடம்) உபதேசம் வாங்கிக்கொண்டதைத் திமிராகச் சொல்லாமல் பயத்தோடு தெரிவிக்கிறானா, பார்ப்போம்'' என்றெல்லாம் அவர் டெஸ்ட் பண்ண உத்தேசித்திருந்தார்.

அதிலே அவன் ரொம்ப நன்றாகப் பாஸ் பண்ணினதில் அவருக்குப் பரம த்ருப்தி ஏற்பட்டுவிட்டது.

"அக்னிகள் என்ன உபதேசம் பண்ணின?'' என்று கேட்டார்.

சொன்னான்.

"அரைகுறையாக அதுகள் சொன்னதை இதோ நான் புஷ்களமாக உபதேசிக்கிறேன்'' என்று சொல்லி இத்தனை காலம் ஏமாற்றியதற்கும் சேர்த்து அநுக்ரஹம் பண்ணி உபதேசம் கொடுத்தார் ஸத்யகாமர்.

Koviloor Digital Library

பரீக்ஷை செய்து, படிப்படியாக உபதேசம்; மாணவனின் ஸ்வய சிந்தனைக்கு ஊக்கம்

குரு என்பவர் தாம் பாட்டுக்குக் கடமை என்று ஏதோ லெக்சர்கள் கொடுத்து 'போர்ஷன் எல்லாம் கவர் பண்ணியாச்சு' என்று நிம்மதியாகப் போய்விடாமல், மாணவனை சோதித்துச் சோதித்துச் சுத்தம் செய்து குணவானாக்கி அதன் பின்பே வித்யையைக் கற்றுக் கொடுத்து அவனை புத்திமானாக ஆக்கினார். குணமில்லாத புத்திசாலித்தனத்தைவிடப் பெரிய ஆபத்து எதுவுமில்லை.

எந்தப் பக்வ ஸ்திதியில் இருப்பவனுக்கு என்ன உபதேசம் தரவேண்டும், அவனை அடுத்த ஸ்டேஜுக்கு எப்படி உயர்த்தி இதற்கு மேலான தத்வங்களை உபதேசிக்க வேண்டும் என்றெல்லாம் நன்றாக யோசித்துத் தீர்மானம் பண்ணிக் கொண்டு படிப்படியாக அவனை டெவலப் பண்ணிக் கொண்டே போய் மேலும் மேலும் உயர்ந்த வித்யைகளைக் கற்பித்துக்கொண்டு போயிருக்கிறார்கள். ப்ருகு தம்முடைய பிதாவான வருணரிடமேதான் சிக்ஷை பெற்றார்*. ஆனாலும் முதலில் அவர் இருந்த அதிகப் பக்வமில்லாத நிலையில் பிதாவானவர் அன்னமய கோசமான இந்த உடம்பே ஸத்யம் என்ற பேஸிஸில் (அடிப்படையில்)தான் ஆரம்பித்தார். அப்புறம் அவரைத் தபஸ் பண்ண வைத்து, அவராகவே உடம்பின் அஸத்யத்வத்தை (மெய்யின் மெய்யின்மையை) உணரும்படியாகப் பண்ணி, அதன்பின் ப்ராணமய கோசம்தான் ஸத்யம் என்று நினைக்கும்படி உயர்த்திவிட்டார். இப்படியே மறுபடி மறுபடி தபஸ் பண்ணவைத்து, அதாவது மேலும் மேலும் ப்ருகுவைப் பக்வப்படுத்திக் கொண்டே போய், "ப்ராணனுமில்லை, மனஸ்தான் ஸத்யம்; மனஸும் இல்லை, விஞ்ஞானம்தான் (அறிவு என்று வைத்துக்கொள்ளலாம்) ஸத்யம்; இல்லை, இதெல்லாம் கடந்தும் இதற்கெல்லாம் அடிப்படையாய்,

---

* தைத்திரீயோபநிஷத்-ப்ருகு வல்லி

Koviloor Digital Library

தன்னியல்பான ஆனந்த ஸ்வரூபமாய் இருக்கும் ஆத்மா தான் ஸத்யம்" என்று கடைசியில் தெரியவைத்தார்.

இப்படியெல்லாம் ஒரு வித்யார்த்தியை (மாணவனை)ப் படிப்படியாகப் பக்வப்படுத்தி அந்தந்த ஸ்டேஜுக்கு உரிய வித்யையைப் புகட்டுவதென்பது இன்ஸ்டிட்யூஷனில் எந்த அளவுக்கு ஸாத்யம்?

இதிலே இன்னொரு முக்யமான அம்சமும் இருக்கிறது. "குழந்தைகளை அவர்களே அநேக விஷயங்களைக் கார்யத்தில் செய்து பார்க்குமாறு விடவேண்டும். இதே மாதிரி, விஷயங்களை அவர்களே யோசித்துப் பார்த்துத் தெரிந்து கொள்ளும்படியும் விடவேண்டும். எல்லாவற்றையும் புஸ்தகத்திலே போட்டு, வாத்தியார் அதைப் பார்த்து ஒப்பித்து அப்புறம் மாணவனும் பொட்டை நெட்ருடுப் போடும்படியாக விடப்படாது" என்று மான்டிஸோரி முதலானவர்கள் சொல்கிறார்கள். தம்முடைய யஜ்ஞாநுஷ்டானத்துக்கான சுற்றுக் கார்யங்களை ஆசாரியரானவர் சிஷ்யனிடம் விடும்போது அவனுக்குத் தானே ஒன்றைச் செய்து பார்த்து தெரிந்துகொள்ள இடமேற்படுகிறது. இதர ஜாதியாரின் குழந்தைகள் தங்களுடைய தொழிலையே முக்யமாக அப்பன், பாட்டன் செய்வதைப் பார்த்துத் தெரிந்துகொண்டு தாங்களும் அம்மாதிரிக் கார்யத்தில் செய்தே அவற்றில் அறிவைப் பெருக்கிக் கொள்ளும்படிதான் நம்முடைய சாஸ்த்ரீயக் கல்வி முறையில் இடம் அளித்திருக்கிறது. இவ்வாறு மாணவர்களை நேராகக் கார்யத்தில் விட்டு அதன் மூலம் "ப்ராக்டிகல் நாலெட்ஜ்" (நடைமுறை அறிவு) பெற வழி வகுத்திருப்பது போலவே அவர்களை ஸொந்தமாகச் சிந்திக்கவிட்டு உண்மைகளைப் பற்றிய அறிவைப் பெறவும் அக்காலக் கல்வி முறையில் இடம் கொடுத்தற்கு ப்ருகு கதை சான்று. யோசித்து, யோசித்து ப்ருகுவே ஸத்யத்தைப்பற்றி அறியும்படி அவருக்குப் பிதாவும் ஆசார்யருமாக இருந்த வருணன் ஊக்கம் தந்திருக்கிறார்.

Koviloor Digital Library

இன்னும் அநேக கதைகளிலும், "குரு உபதேசம் செய்தார். அப்புறம் 'இதைப்பற்றி ஒரு வருஷம் தபஸ் பண்ணிவிட்டு (அதாவது ஆழச் சிந்தித்துவிட்டு) திரும்பி வந்து என்ன தெரிந்து கொண்டாயென்று சொல்லு' என்று சொன்னுர்" என்று வருகிறது.

இன்னொரு உபநிஷத் கதையில் வருகிறது* : சரீரம்தான் ஸத்யம் என்பதற்கு மேலே போகமுடியாதவனுக அஸுரனுன விரோசனன் இருக்கிறுன். ஆனுல் அவனையும்கூட, இப்போது நம்மில் பெரும்பாலோர் இருக்கிறதுபோல எந்த விதத் தத்வ சிந்தனேயுமில்லாமல், வெறும் அரட்டையிலும் சோம்பேறித்தனத்திலும் பொழுதைப் போக்கும் வ்ருதா ஆஸாமியாக இல்லாமல், எது ஸத்யம் என்று கொஞ்சமாவது ஆராய்ந்து, அது சரீரம்தான் என்று தப்பாகவாவது ஒரு கொள்கைக்கு வருவதற்கு குருவான ப்ரஜாபதி உதவி செய்திருக்கிறுர். எதையுமே கழித்துக்கட்டிவிடாமல் கொஞ்சமாவது அபிவிருத்தி செய்து பார்க்கலாம் என்ற நோக்கத்திலேயே அக்கால குருமார்கள் சிஷ்யர்களே ஏற்றுக் கொண்டதற்கு இது proof.

சிஷ்யன் என்று வரும்போது ரொம்பவும் உதவாக்கரை கூட யோக்யதை ஸம்பாதித்துக் கொள்வதற்காக அந் நாளில் பரிச்ரமப்பட்டிருக்கிறுனென்பதும் இங்கே தெரிகிறது —அஸுரன் விரோசனனும்கூட ப்ரஜாபதியின் வார்த்தைக் குக் கட்டுப்பட்டு, தத்வத்தை ஆராய்வதற்கான யோக்ய தையை ஸம்பாதித்துக் கொள்வதற்காக முப்பத்திரண்டு வருஷம் ப்ரம்மசர்யம் அநுஷ்டித்தான் என்று உபநிஷத் சொல்கிறது.

தேவராஜன் இந்த்ரனும் தத்வம் தெரிந்துகொள்வதற் காக விரோசனனுடனேயே ப்ரஜாபதியிடம் போனவன் தான். ஆனுல் விரோசனன் மாதிரி சரீரத்தோடு இவன்

---

* சாந்தோக்யம்-8ம் அத்யாயத்தில்.

Koviloor Digital Library

நின்றுவிடாமல், ப்ருகு கதையில் பார்த்தோமே, அப்படி சரீர ஸௌக்யத்தோடு நிறைவு பெற்றுவிட முடியாமல் மறுபடி ப்ரஜாபதியிடம் வருகிறுன். இதற்கு மேற்பட்ட உண்மைக்கு அதன் அர்ஹனுவதற்காக (தகுதியுள்ளவனுவ தற்காக) அவர் அவனே மறுபடி முப்பத்திரண்டு வருஷம் அவரோடேயே வஸித்து ப்ரம்மசர்யம் காக்கச் சொல்கிறுர். மஹா பெரிய தேவ ராஜாவானுலும் ஸரி, இப்படி கடுமையாக விதிக்கு உட்படுத்தி, அதனுலேயே பெறக்கூடிய பரிசுத்தியை சிஷ்யன் பெறுமாறு பண்ணி அப்புறம்தான் உசந்த தத்வங்களே உபதேசிப்பார்கள். இந்த மாதிரி மொத்தம் நூற்றியொரு வருஷம் இந்த்ரன் இந்த்ரியக் கட்டுப்பாட்டோடு இருந்த பிற்பாடுதான் ப்ரஜாபதி அவனுக்கு முடிவான ஆத்ம தத்வத்தை போதிக்கிறுர்.

தகுதி பார்க்காமல் வித்யையைக் கொடுப்பதால்தான் ஸயன்டிஸ்ட்கள் ஆத்ம ஹானிக்கான நூதன நூதனக் கண்டுபிடிப்புக்களேப் பண்ணுவது, டாக்டர்கள் மஹா பாபங்களுக்கு ஆதரவு தந்து ஊக்குவதான சிகித்ஸைகள் தருவது என்பதெல்லாம் ஸஹஜமாகி வருகின்றன. இதற்கான அநேக காரணங்களில் ஒன்று, ஸ்தாபன ரீதியில் பல மாணவர்களுக்குக் கல்வி புகட்டும்போது, ஒவ்வொருத் தருக்கும் தனிப்பட்ட கவனம் (Individual attention) செலுத்த முடியாமலிருப்பதுமாகும்.

இப்படிக் கண்குத்திப் பாம்பாகக் கவனிப்பது எத்தனேயோ ச்ரமம். இதில் எத்தனேயோ பொறுப்பு. "இவன் யாருடா ஓயாமல் நம்மைப் பரீக்ஷை பண்ணி ஹிம்ஸித்துக் கொண்டிருக்கிறுன்!" என்று சிஷ்யனின் எரிச்சலே வேறு வாங்கிக்கொள்ளவேண்டும். எந்த விதமான ப்ரதிப்ரயோஜனத்தையும் கருதாமலே, 'வித்யை பரவ வேண்டும்; பரவ வேண்டுமென்ருலும் (இப்போது எல்லா வற்றையும் எல்லாருக்கும் அவிழ்த்துக்கொட்டி மதிப்பைக் குறைப்பது போலவும் இல்லாமல்) தக்கவர்களுக்குத்தான்

Koviloor Digital Library

வித்யையைத் தரவேண்டும்; அதற்காக, நிர்தாக்ஷிண்யமாகத் தகுதியைச் சோதித்துப் பார்க்கவேண்டும்; அந்தத் தகுதி என்பது புத்தியைக் குறித்ததாக மட்டுமில்லாமல், மாணவனின் காரெக்டரை, குணத்தைக் குறித்ததாகவுமிருக்க வேண்டும்; முடிந்த மட்டும் தகுதியைப் படிப்படியாக அபிவ்ருத்தி பண்ண ப்ரயாஸைப் படவேண்டும்' என்று ஆதிகால குருமார்கள் இருந்திருக்கிருர்கள்.

இந்தக் கண்டிப்புக்கு மஹா பெரிய தேவராஜனும் உடன்பட்டான், ஏன், அஸுர ராஜன் விரோசனன்கூட உடன்பட்டான் என்பது அக் காலத்தில் மாணவர்களுக்கு வித்யையில் இருந்த ஆர்வத்தைக் காட்டுகிறது. அதோடு நிற்கவில்லை. 'இவ்வளவு கண்டிப்புச் செய்ய இவர் யோக்யதாம்சமுள்ளவர்தான். இத்தனை யோக்யதாம்சமுள்ளவருக்கு நாம் கீழ்ப்படிந்து போவதில் நமக்கு ச்ரேயஸ்தானே தவிரக் குறைவு இல்லை' என்று சீடர்கள் நினைக்கும்படியான உத்தம புருஷர்களாக ஆசார்யர்கள் இருந்ததும் இதிலிருந்து தெரிகிறது. இதிலே இன்னொரு முக்யமான அம்சமும் இருக்கிறது. 'உத்தம புருஷர்' என்றுல் அப்பழுக்கில்லாத சுத்த வாழ்க்கை, நேர்மை, தபஸ், வைராக்யம் ஆகியவை மட்டும் இருந்தால் போதுமா என்ன? இவை பிறத்தியாரிடம் மரியாதையையும் பக்தியையும்தான் தூண்டும். ஆனுல் அவரோடேயே கூட இருந்து வாழ்ந்து கொண்டிருக்க வேண்டும் என்று மாணவன் விரும்பும்படியாக இவை மாத்திரம் அவனை அவரிடம் ஆகர்ஷித்துவிடுமா என்ன? தபஸ்வி, மஹாபுத்திமான், கடும் நேர்மையாளர் என்றுல் தூர இருந்து நமஸ்காரம் பண்ணத் தோன்றுமே ஒழிய, கூட இருந்து வாஸம் பண்ணுகிற ஆசை ஏற்படாதே! இந்த விருப்பத்தை உண்டாக்குவதற்கு குருவானவர் மற்ற எல்லா யோக்யதாம்சங்களுக்கும் மேலாக அன்பு உள்ளத்தவராக, அருள் ஸ்வபாவமுள்ளவராக இருந்தாக வேண்டும். உத்தம புருஷ லக்ஷணங்களில் முதலாக வருவது இந்த அன்புதான், அருள்தான். அன்பேதான் திவ்ய சக்தியைப் பெற்றுப் பிறரை ரக்ஷிக்க

Koviloor Digital Library

வலிமை பெறுகிறபோது அதை அருள் என்றும் அநுக்ரஹம் என்றும் சொல்கிறோம்.

கண்ணன் கதையில் ஆசானின் அன்புடைமை

நம்முடைய சாஸ்த்ர, புராணங்களிலிருந்து இந்த அன்புடைமையில், அருளுடைமையில் அந்நாள் ஆசார்யர்கள் ஆதர்ச புருஷர்களாக இருந்திருப்பது தெரிகிறது. குரு சிஷ்யர்களுக்கிடையிலே பரஸ்பர ப்ரியம் போகவே கூடாது என்றுதான் பாடம் ஆரம்பிக்கும்போதே மந்த்ர பூர்வமாக வேண்டிக்கொண்டிருக்கிறார்கள். "(குரு - சிஷ்யர்களான) நாங்கள் ஒருத்தருக்கொருத்தர் பகைத்துக் கொள்ளாமல் இருக்கவேண்டும்" என்பது பாட ஆரம்பத்திலும், முடிவிலும் வருகிற உபநிஷத் பிரார்த்தனை.

"அடிக்கிற கைதான் அணைக்கும்" என்பதற்கு அப்படியே ரூபகமாக அந்த ஆசார்யர்கள் இருந்திருக்கிறார்கள். கண்டிப்புச் செய்ய வேண்டிய இடத்தில் எப்படி நிர்தாக்ஷிண்யமாகக் கண்டித்தார்களோ அப்படியே அன்பைக் கொட்ட வேண்டிய ஸமயத்தில் கொட்டினார்கள். பாகவதத்தைப் பார்த்தால் போதும்—இரண்டும் தெரியும். பகவானே குசேலரிடம் தாங்களிருவரும் சேர்ந்து குருகுலவாஸம் செய்த நாட்களைப்பற்றி ஞாபகப்படுத்துகிறார்.

கம்ஸவதமான பின் பகவானுக்கும் பலராமருக்கும் உபநயனமாகி அவர்கள் ஸாந்தீபனி என்ற பிராம்மணரிடம் குருகுலவாஸம் செய்கிறார்கள். ஸர்வ வித்யைகளும் அவனிடமிருந்துதான் என்றாலும் லோகத்துக்கு குரு பக்தியை உதாரணம் காட்டவே பகவானும் இப்படி ஒரு ஆசார்யனிடம் போய்ப் படித்தான் என்று பாகவதம் சொல்கிறது. ஆனாலும் பகவானுக்கு அவதார கார்யங்கள் நிறையக் காத்துக் கொண்டிருந்ததால் பன்னிரண்டு வருஷம் வித்யாப்யாஸம் செய்வது என்று வைத்துக்கொள்ளாமல், தன் திவ்ய சக்தியையும் கொஞ்சம் கைக்கொண்டு, ஒரு நாளுக்கு ஒரு சாஸ்த்ரம் வீதம் அறுபத்துநாலே நாளில் அத்தனை

Koviloor Digital Library

சாஸ்த்ரமும் கற்றுக்கொண்டு விடுகிறார். (பலராமரும்தான். அவரும் அவதாரம்தானே?) இதிலிருந்தே க்ருஷ்ணருடைய தெய்விக ப்ரபாவத்தை குரு ஸாந்தீபனி தெரிந்துகொண்டு விடுகிறார். அதனால் பிற்பாடு சிக்ஷை பூர்த்தியாகி, "என்ன தக்ஷிணை தரணும்?" என்று பகவான் கேட்டபோது, ரொம்ப நாள் முந்தி ஸமுத்ரம் அடித்துக்கொண்டு போய்விட்ட தன்னுடைய பிள்ளையை அவர் யமாலயத்திலிருந்து மீட்டுக் கொண்டு வந்து தரவேண்டும், அதுதான் தமக்குவேண்டிய தக்ஷிணை என்கிறார். பகவானும் அப்படியே பண்ணுகிறார். அது இப்போது நமக்கு விஷயமில்லை.

பின்னே எது விஷயம் என்றால், இப்படி தெய்வசக்தி பொருந்தியவராக க்ருஷ்ணரை அவருடைய ஆசார்யர் தெரிந்துகொண்டிருந்தபோதிலும், 'சிஷ்யப்பிள்ளை என்று வந்த ஒருத்தனை ஆசார்யர் நன்றாக வேலை வாங்கி, பணியினா லும் பணிவினாலும் கட்டுப்படுத்தி சுத்தி செய்வார்' என்று லோகத்துக்குக் காட்டவே அவர் இந்த சிஷ்ய வேஷம் போட்டுக்கொண்டிருக்கிறார் என்றும் தெரிந்துகொண்டார். எனவே வேலை வாங்குவதை இவர் விஷயத்திலும் விட்டு விடக் கூடாது என்று இருந்திருக்கிறார்.

அருமையிலும் அருமையான குழந்தை க்ருஷ்ணன், அதே ஸமயத்தில் அறிதற்கரியவராக இருந்த பகவான், குருவின் ஆக்ஞைப்படி காட்டுக்குப் போய் விறகு வெட்டிக் கொண்டு வந்துகூடக் கைங்கர்யம் பண்ணியிருக்கிறார்! அந்த நாட்களில் ஒன்றைப் பற்றித்தான் அப்போது தம் 'க்ளாஸ் மேட்'டாக இருந்த குசேலரிடம் நீண்ட காலத்துக்குப் பின்னால் பகவான் நினைவு படுத்துகிறார்.

க்ருஷ்ணரும் குசேலரும் ஒருநாள் இப்படி விறகுக்காக அடர்ந்த காட்டுக்குப் போனபோது இருட்டிவிட்டது. அதோடு பேய் மழையும் பிடித்துக்கொண்டுவிட்டது. மேடு பள்ளம் தெரியாமல் ஒரே ப்ரளயமாயிற்று. திக்கு திசை புரியாமல் கும்மிருட்டு வேறே. நரலீலையிலே பகவான்

Koviloor Digital Library

நிஜமாகவே தமக்குத் திக்கு திசை புரியாத மாதிரிதான் நடித்தார். "நானும் நீங்களும் பயந்துண்டு, துக்கப்பட்டுண்டு ஒத்தர் கையை ஒத்தர் கோத்துண்டு ராத்ரியெல்லாம் சுத்தி சுத்தி வந்தோமே! ஞாபகமிருக்கோல்லியோ?" என்று அவரே குசேலரைக் கேட்கிறார். குருவின் வேலை வாங்கும் கண்டிப்பால் வந்தது இது!

இனிமேல் குருவின் அன்பையும் பாசத்தையும் பகவான் வாய் வார்த்தையாகத் தெரிந்து கொள்கிறோம். "குழந்தைகளைக் காணோமே-ன்னு அங்கலாச்சுண்டு குருநாதரும் நம்மைத் தேடிண்டு வந்து, ஸூர்யோதய ஸமயத்தில் கண்டு பிடிச்சாரே! 'ஐயோ பாவம்! எனக்காக எத்தனை கஷ்டப் பட்டுட்டேள்?' என்று நம்மிடம் எப்படி உருகிப் போயிட்டார்? அதற்குப் பரிஹாரமாக நமக்கு எப்படி மனஸார அநுக்ரஹம் பண்ணி, 'உங்களுடைய நல்ல நினைப்பெல்லாம் பூர்த்தியாகட்டும். நீங்க படிச்ச வேதம் எந்நாளும் பூர்ண சக்தியோடு உங்களை ரக்ஷிச்சுண்டு இருக்கட்டும்' என்றெல்லாம் வரம் கொடுத்தாரே!" என்று ஞாபகப்படுத்துகிறார்.

மொத்தத்தில் குரு என்பவர் வித்யாஸம்பத்து மட்டுமில்லாமல் குண ஸம்பத்து, அநுஷ்டான ஸம்பத்து, ஆத்ம ஸம்பத்து எல்லாம் ஒருங்கே கூடியவராக இருந்தார்.

இப்படி அவர் இருக்கும்படியாகச் செய்தது அந்தப் பழைய நாளின் குருகுல முறையேதான். சில சிஷ்யர்கள் மட்டும் ஒரு குருவின் ஆதரவில் அவருடைய க்ருஹத்திலேயே இருந்து படிப்பது என்ற கல்வி முறையில் குரு சிஷ்யன் ஆகிய இருவருமே சுத்தர்களாகத்தான் இருந்தாக வேண்டுமென்றிருந்தது. அந்த முறையே அவர்களை அப்படி சுத்தர்களாக உருவாக்கவும் செய்தது.

சிஷ்யர்கள் கூடவே வஸித்தும் அன்பு, மரியாதைகள் செலுத்த வேண்டுமென்றால் குரு நல்லொழுக்கமுள்ளவராகவும், அநுக்ரஹ சக்தி பெற்றவராகவும் இருந்தால்தானே முடியும்? அதேபோல் புத்தி மட்டத்திலும்கூட சிஷ்யன்

Koviloor Digital Library

கூடவே இருந்து, 'பரிப்ரச்நம்' என்று பகவான் சொன்னபடி அவரைக் குடைந்து குடைந்து கேள்வி கேட்கிருனென்ருல் அப்போது அவர் தாம் போதிக்கிற சாஸ்த்ரத்தில் நல்ல ஆழ்ந்த அறிவை உண்டாக்கிக் கொண்டேயாக வேண்டி யிருந்திருக்கிறது.

கேள்வி கேட்டுக் கற்பது

"பரிப்ரச்நம்" என்பதாக இப்படிக் கேள்வி கேட்டு கேட்டுக் கற்றுக்கொள்வதில் ஒரு விசேஷம் இருக்கிறது. உபநிஷத்தில் இப்படித்தான் கேள்வி கேட்டுக்கேட்டு ஸமா சாரங்களைக் கறந்து கொள்வதாகப் பல இடங்களில் வருகி றது. கீதையில் அர்ஜுனன் குறுக்கே குறுக்கே எத்தனை 'கொஸ்ச்சின்' பண்ணுகிருன்? சிஷ்யன் கவனமாக குரு உபதேசத்தைக் கேட்டுக் கொண்டிருக்கிருன் என்பதற்கு இந்தக் குறுக்குக் கேள்வி பெரிய ஸாக்ஷி.

'லெக்சர்' என்று முழுக்க 'ப்ரிபேர்' பண்ணிக்கொண்டு போய் அதை ஒப்பித்துவிட்டு வந்துவிடலாம் என்று ஒரு ப்ரொஃபஸர் இருக்கிறவரையில் அவர் ஸப்ஜெக்டை ஸாங்கோபாங்கமாகப் பார்க்க வேண்டிய கட்டாயமில்லை. தம்முடைய அபூர்ண ஞானத்தைக் கொண்டே எல்லாம் தெரிந்த மாதிரி லெக்சர் கட்டி ஏமாற்றிவிட முடியும். பரிப்ரச்நம் என்று நடு நடுவே தோண்டித் தோண்டிக் கேள்வி கேட்குமாறு மாணவனை விடும்போதுதான் லெக்சரரும் ஸப்ஜெக்டைப் பூர்ணமாகப் பார்த்துப் புரிந்துகொள்ள வேண்டியதாகும். அவர் 'மிஸ்' பண்ணிவிட்ட விஷயம் ஏதாவது இருந்தால் அது சிஷ்யனின் பரிப்ரச்நத்தில் வெளிப் பட்டுவிடும். அவர் அதற்கு மேலே அதற்கான புஸ்தகங் களைப் பார்க்க இடமேற்படும்.

குரு-சிஷ்யாள் இரண்டு பேருமே விஷயங்களை நன்ருகத் தெரிந்துகொள்ள 'பரிப்ரச்நம்' பெரிய தூண்டுகோல். வாத்யார் ஸ்டூடன்டைக் கேட்கிருற்போலவே இவனும் அவரைக் கேட்கணும். இதிலேதான் புதுசு புதுசாக, இன்ட

Koviloor Digital Library

ரெஸ்டிங்காக விஷயங்கள் வரும். (ஜே.) க்ருஷ்ணமூர்த்தி இப்படித்தான் கேள்வி கேட்டு பதில் சொல்கிற ஸெஷன்ஸ் நடத்துகிறார், ஸ்வாரஸ்யமாயிருக்கிறது என்கிறார்கள். நாங்களும் பாஷ்ய பாடம், வாக்யார்த்தம் என்று நடத்தும் போது, கேட்கிறவர்கள் புத்திசாலித்தனமாகக் கேள்வி கேட்கிறபோதுதான் ரஸம் கூடுகிறது. 'அடடா, இது நமக்குத் தெரியலையே! இப்படி நமக்குத் தோணலையே! இதுக்கு பதில் தெரிஞ்சுக்கணும்' என்ற ஆர்வம் பிறக்கிறது.

ஆசார்யாளே இந்த விஷயத்தைச் சொல்லியிருக்கிறார். எந்த ஒரு ஸமாசாரத்தை ஆசார்யாள் சொல்லும்போதும் அதற்கு ஏகப்பட்ட எதிர்க் கேள்வி, குறுக்குக் கேள்விகளை தாமே போட்டுக்கொண்டு ஒவ்வொன்றுக்கும் ஆணித்தரமாகப் பதில் கொடுத்துக்கொண்டு போவது அவருடைய பாஷ்யங்களில் நாம் பார்க்கும் மிகவும் ரஸமான ஒரு அம்சம். "பூர்வபக்ஷம்" என்பதாக எதிர்க்கேள்வி போட்டுவிட்டு, அப்புறமே "ஸித்தாந்தம்" என்பதான தம்முடைய முடிவைச் சொல்வார். ப்ருஹதாரண்யக பாஷ்யத்தில், அதன் இரண்டாம் அத்யாய உபக்ரமத்தில் (உபக்ரமம் என்பதும் உபோத்காதத்தைப் போல இன்ட்ரொடக்ஷன்தான்) இவ்வாறு செய்வதன் சிறப்பை எடுத்துக்காட்டியிருக்கிறார். "எதிர்க் கேள்வியும் பதிலுமாக விஷயத்தைச் சொன்னால் தான் கேட்கிறவருடைய சித்தத்தை அது வசீகரணம் செய்கிறது; இப்படியில்லாமல் தர்க்க சாஸ்த்ரத்தைப்போல சுருக்கமான வாக்யங்களில் ரொம்ப அர்த்தபுஷ்டியாகச் சொன்னால் ஸூக்ஷ்மமான உண்மைகளைப் புரிந்துகொள்வது ச்ரமமாக இருக்கும்" என்கிறார்.

இன்னொன்றுகூட. சில பேருக்கு ரொம்ப விஷயம் தெரிந்திருக்கும். ஆனால் லெக்சர் மாதிரி ரூபம் தந்து அந்த விஷயங்களை எடுத்துச் சொல்ல வராது. கேள்வியாகக் கேட்டுக் கொண்டுபோனால் நன்றாகப் பதில் சொல்லிக்கொண்டு போவார்கள். இப்படியே முழு ஸமாசாரத்தையும் அவரிடமிருந்து கறந்துகொண்டு விடலாம்.

Koviloor Digital Library

மாலேகண்டான் `ஸோமஸுந்தர ஆச்சாரி என்று ஒரு ஸ்தபதி. அவருக்கு எழுதப் படிக்கவோ ப்ரஸங்கம் பண்ணவோ தெரியாது. ஆனால் ரத நிர்மாணத்தில் (தேர் கட்டுவதில்) ஸகல விஷயமும் தெரிந்தவர். தெரிந்தவர் மட்டுமில்லே, அவரே இருபது இருபத்தைந்து க்ஷேத்ரங்களில் ரதங்கள் நிர்மாணித்துக் கொடுத்துப் பெயர் வாங்கியவர். ஆனாலும் பேச வராது. இளேயாத்தங்குடி ஸதஸுக்கு[1] அவர் வந்திருந்தார். 'இவரிடம் ரொம்ப விஷயம் இருந்தும் ஸதஸுக்கு அதை ப்ரயோஜனப்படுத்த முடியாதவராயிருக் கிருரே' என்று அந்த ஸதஸில் ஏற்பாடுகளேக் கவனித்துக் கொண்ட (சா.) கணேசன் ரொம்பவும் வருத்தப்பட்டுக் கொண்டார். அப்போது இந்தப் பரிப்ரச்ன யுக்திதான் எனக்குப் பளிச்சென்று தோன்றிற்று. "உனக்குத்தான் ரத அமைப்பு ஒரு மாதிரி ஜெனரலாகத் தெரியுமே. அதை வைத்துக்கொண்டு கேள்வி கேட்டுக்கொண்டே போ. எல்லா விஷயமும் வந்து விடும்" என்றேன். அதே மாதிரி அவரும் ரொம்ப புத்திசாலித்தனமாகக் கேள்வி கேட்டுக் கொண்டே போனுர். ஆச்சாரியும் ரொம்ப நன்ருக ஆன்ஸர் பண்ணிக்கொண்டு வந்தார். ஒரு அழகான ரதம் நிர்மாண மாகிற மாதிரியே அதன் நிர்மாணத்தைப் பற்றிய விஷயங் களும் நிர்மாணமாயிற்று. ஸதஸிலேயே ரொம்ப விஷய முள்ளதாகவும், ரஸமாகவும் இருந்த அயிட்டங்களில் அது ஒன்று என்று எல்லாரும் கொண்டாடிச் சொன்னுர்கள். ஆச்சாரிக்குத் தங்கத்தோடா போட்டு "ரத சக்ரவர்த்தி" என்றே பட்டம் கொடுத்தது. ரதத்துக்கு சக்ரம் உண்டே! "பரிப்ரச்ன"த்துக்காகச் சொன்னேன்.

குருலக்ஷணம் : குருவை சிஷ்யன் உரு செய்வது

உபநிஷத்தில்* பரமாத்ம தத்வத்தை அறிவதற்காக "குருவையே தஞ்சமாக அடையவேண்டும்" என்று சொல்கிற

1. 1962-ல் ஆகமம், சில்பம் ஆகியன குறித்து ஸ்ரீ சரணர்கள் இளேயாற்றங்குடியில் மிகப் பெரிய அளவில் ஸதஸ் நடத்திஞர்கள்.

2. முண்டகோபநிஷத் 1-2-12

Koviloor Digital Library

இடத்தில் அவருக்கு இரண்டு லக்ஷணங்கள் சொல்லியிருக்கின்றன. ஒன்று, அவர் "ச்ரோத்ரியராக" இருக்கவேண்டுமென்பது. ச்ரோத்ரியர் என்றால் வேதத்தை கரைத்துக் குடித்திருக்க வேண்டும். இது அவருடைய கல்விச் சிறப்பை, அதாவது அறிவுச் சிறப்பைக்காட்டுவது. இன்னொரு லக்ஷணம் அவர் "ப்ரஹ்ம நிஷ்டராக" இருக்கவேண்டுமென்பது. அதாவது பரமாத்மாவைப் பற்றி அறிவினால் படித்துக் கரை கண்டதை அநுபவமாக, ஸ்வாநுபூதியாகத் தம்முடைய ஹ்ருதயத்தில் உணர்ந்து அதில் நிலைத்து நிற்பவராயிருக்க வேண்டும். அன்பு, த்யாகம், பரோபகாரம், ஸத்யசீலம் முதலான உத்தம குணங்களைப் பெற்றிருந்தாலொழிய இந்த ஸ்வாநுபூதி கிட்டாது. அதாவது, உபநிஷத் காட்டுகிற ஆசார்யன் தற்கால ப்ரொஃபஸர்களைப் போல அறிவாளியாயிருந்தால் மட்டும் போதாது. ஆத்மாநுபவத்திலேயே கொண்டு சேர்க்கிற அளவுக்கு உசந்த குண ஸம்பத் வாய்ந்தவனாகவும் இருக்கவேண்டும். Qualities of head and heart என்று சொல்கிறார்களே அப்படி மூளை, ஹ்ருதயம் இரண்டிலும் பெரியவனாக இருக்க வேண்டும். சிஷ்யன் கூடவே வஸிப்பதான குருகுல முறையே அவனை இப்படி ஆக்குவதற்கு ஸாதகமாக இருந்தது.

அதாவது சிஷ்யனை குரு உருவாக்குகிற மாதிரியே சிஷ்யர்களும்தான் குருவை உருவாக்குகிறார்கள்!

குரு பீடத்துக்கும் பொருந்தும்

இப்படிச் சொல்லும்போது பாடம் சொல்லிக் கொடுக்கிற குருவை மட்டும் நினைத்துக்கொண்டு நான் சொல்லவில்லை. ஜனங்களுக்கெல்லாம் நல்லது செய்வதற்காக, நல்ல வழியைக் காட்டிக் கொடுப்பதற்காக, இந்த ஸம்ஸார வனாந்தரத்திலிருந்து ஸாக்ஷாத் ஈச்வரனிடமே கொண்டு சேர்க்கும் வழியைக் காட்டுவதற்காக ஏற்படுத்தி வழி

Koviloor Digital Library

வழியாக வந்துள்ள குரு பீடங்களில் உட்கார்ந்துகொண்டு, குரு பட்டம் கட்டிக்கொண்டிருக்கிற என் மாதிரியானவர் களையும் நினைத்தே சொல்கிறேன்.

சிஷ்யர்கள் நல்ல சிஷ்டர்களாக, அதாவது அவர் களுக்கு ஏற்பட்ட சாஸ்த்ரக் கட்டுப்பாடுகளை வழுவாமல் பின்பற்றுபவர்களாக இருந்தால்தான் நாங்களும் அவர் களுடைய ஆதரவையும் மரியாதையையும் பெறும் விதத்தில் எங்களுக்காக ஏற்பட்ட, அதைவிடக் கடுமையான சாஸ்த்ரக் கட்டுப்பாடுகளைப் பூர்ணமாக அநுஸரித்து நல்ல ஒழுக்கத் தோடும் ஆசார அநுஷ்டானத்துடனும் இருப்போம். அப்படியில்லாமல், சிஷ்யர்கள் அவர்களுக்கான நியமங் களின்படி இல்லாமல் தற்போதுள்ள மாதிரி இருந்தால் என்ன ஆகிறது? இந்த சிஷ்யர்கள் ஸந்நியாஸியான ஒரு குரு அவனுக்கென்று போட்டிருக்கிற ரூல்களைப் பின்பற்ற முயல்வதையே பெரிசாகப் புகழ்கிறார்கள். ஆஹாரம், வாஸ ஸ்தானம், வஸ்த்ரம் முதலானதுகளில் யதியான ஒரு குரு பரம எளிமையானவற்றைத்தான் கைக்கொள்ள வேண்டும். அது அவனுக்கான Imperative (கண்டிப்பான விதி). கொஞ்சம் விழுப்புப் பட்டால்கூட அவன் ஸ்நானம் பண்ணணும், உபவாஸம் இருக்கணும். நிரம்பத் தபஸ் பண்ணிக்கொண்டு, கொஞ்சம்கூடப் பிறழாமல் ஆசார நியமங்களை அநுஷ்டித்துக்கொண்டு அவன் இருந்தால்தான் அவன் தன்னளவில் நிஜமான யதியாக ஆகி ஸித்தி பெற முடியும்; பிறருக்கும் நிஜமாகவே குருவாகி அவர்களை ஸம்ஸாரத்திலிருந்து ஸர்வேச்வரனிடம் கொண்டு சேர்க்கும் பாதையில் அழைத்துப் போக முடியும். அணுசக்தி நிலையத் தில் வேலை செய்பவர்கள் எப்படி 'ரேடியேஷ'னால் பாதிக்கப்படாமலிருப்பதற்காக அநேக 'ப்ரிகாஷன்'களை கவனமாக மேற்கொண்டு, இன்ன மாதிரி ட்ரஸ், இந்த (உ)லோஹம்தான் கிட்டே வரலாம் என்பதையெல்லாம் நுணுக்கமாகப் பின்பற்றுகிறார்களோ அப்படியேதான் நாங்களும் அநாசார ரேடியேஷனைக் குறித்து ஜாக்ரதையாக நடந்து கொள்ளவேண்டும்.

Koviloor Digital Library

அடாமிக் ரியாக்டரில் வேலை செய்கிறவன் அந்த ரூல்களின்படிச் செய்யாவிட்டால் கெடுதல்—அவனுக்கும் கெடுதல்; ரியாக்டருக்கும் ஹானி ஏற்பட்டு 'பெனிஃபீஷியரி' (ரியாக்டரால் பயன்பெற வேண்டியவர்)களும் பயன் பெறுமல் போவார்கள். அதனுல் அவன் ரூல்படிச் செய்யா விட்டால்தான் அவன் மேல் ஆக்ஷன் எடுத்துத் தண்டிப்பார் களே ஒழிய, ரூல்படிப் பண்ணினுல் அதற்காக யாரும் மெச்சிப் பாராட்டு விழா நடத்துவதில்லை. இப்படியே நாங்கள் எங்களுக்கான யதி தர்மங்களைக் கொஞ்சம் விட்டால்கூட அதற்காக எங்களைக் கண்டிக்க வேண்டுமே தவிர, பின்பற்றினுல் அதற்காக ஸ்தோத்ரம் செய்ய வேண்டியதில்லை. பூர்ணமாகப் பின்பற்றுகிறேமா, பின் பற்ற முடியுமா என்றே கவலையாகத்தான் இருக்கிறது. இந்த லக்ஷணத்திலேயே, "ஐயோ, எத்தனை வ்ரதம்? எவ்வளவு நியமம்? எப்படி நமக்காகத் தம்மையே தண்டித் துக் கொள்கிறுர்? என்ன தியாகம்?" என்றெல்லாம் ஸ்தோத் ரம் செய்தீர்களானுல், நாளாவட்டத்தில் அது மண்டைக் குள் ஊறி, இப்போது அறைகுறையாகப் பின்பற்றும் நியமங் களையும் மேலும் கொஞ்சம் கொஞ்சமாக விட்டுக்கொண்டு போனுல் என்ன என்று தோன்ற ஆரம்பித்து விடலாம். அதோடு மடமும் போச்சு, அதனுல் லோகம் பெறவேண்டிய அத்தனை நல்லதும் போச்சு என்ருகிவிடும்.

சிஷ்யர்களும் அவர்களுக்கான வ்ரத உபவாஸங்கள், மற்ற ஆசார நெறிகள், அநுஷ்டானங்கள் ஆகியவற்றைப் பின்பற்றுபவர்களாக இருந்தால் ஆசார்யன் அவனுக்கான விதிகளைக் கண்டிப்புடன் அநுஸரிப்பதை இப்படி 'ஓஹோ' என்று புகழமாட்டார்கள். அதனுல் அவனுக்குத் தலைக்கனம் ஏறுவது; அல்லது அவன் நியமங்களைக் குறைத்துக் கொள்வது போன்ற ஆபத்துக்களுக்கும் இடமில்லாமல் போகும். 'இப்படிப் பரம சிஷ்டர்களான சில சிஷ்யர்களாவது நமக்குக் கிடைக்க வேண்டும். நாமே நியம லோபமாக (குறைவாக) ஏதாவது பண்ணினுல்கூட நம்மையே, 'என்ன

Koviloor Digital Library

ஸ்வாமிகளே, இப்படிப் பண்ணலாமா?' என்று தட்டிக் கேட்டு ஸரிப்படுத்த வேண்டும் என்பதுதான் என் ஆசை.

தனித்துறவியும், பீடகுருவும்

படிப்பு விஷயத்திலும் இது—அதாவது சிஷ்யர்களின் தரமே குருவின் தரத்தையும் நிர்ணயிக்கிறது என்ற உண்மை—குரு பீடங்களுக்கும் பொருந்தத்தான் செய்கிறது. வெறுமே ஒரு ஸந்நியாஸி இருந்தால் அவனுக்கு அவனுடைய ஸமயதத்வ ஸம்ப்ரதாயத்தைப் பற்றிய அறிவு மட்டும் இருந்தால் போதும். அப்புறம் இதையும் கடந்து அவன் ஆத்மாவே ஆத்மா என்று ஞானியாகவோ, ஈச்வரன் விட்ட வழி என்று பக்திமானாகவோ ஆகிவிடவேண்டும். ஆனால் குரு பீடம், மடாலயம் என்பதில் உட்கார்ந்திருக்கும் ஸந்நியாஸியின் விஷயம் இப்படி இல்லை. சாஸ்த்ர விஷயமாக அவர்களைக் கேள்வி கேட்கிற சிஷ்யர்களுக்கு பதில் சொல்லி விளக்க வேண்டிய கடமை, வித்வஸ் ஸதஸ்கள் நடத்திச் சிக்கலான சாஸ்த்ர ஸமாசாரங்களுக்கு தீர்வு காணவேண்டிய கடமை ஆகியன மடாலயத் தலைவர்களுக்கு இருக்கிறது. ஆனபடியால் இவர்களே சாஸ்த்ரங்களில் ஆழ்ந்த கல்வி பெற்றவர்களாயிருக்க வேண்டும்.

சாஸ்த்ர விஷயமாக ஆலோசனையும் புத்திமதியும் கேட்கிற சிஷ்யர்கள் நிறைய இருக்கிறபோதுதான் இப்படிப் பட்ட மடாதிபதிகளுக்கு, 'நாம் நல்ல சாஸ்த்ர ஞானம் ஸம்பாதித்துக் கொள்ளவேண்டும். பண்டித ஸதஸ்கள் நடத்தி சாஸ்த்ரங்களை அலசி முடிவுகள் காணவேண்டும்' என்ற ஆர்வமிருக்கும். இப்படி ஆலோசனை கேட்பதற்கு சிஷ்யர்களுக்கும் சாஸ்த்ரக் கல்வி இருந்தால்தான் முடியும். சாஸ்த்ர அறிவு இல்லாத சிஷ்யர்களுக்கு அதில் தெளிவு படுத்திக்கொள்ள வேண்டியதான ஸந்தேஹங்களே ஏற்படுவதற்கில்லையே! இப்படி ஸந்தேஹம் ஏற்படும்போதுதானே சிஷ்யர்கள் தங்கள் குருவாக இருக்கிற மடாலயத் தலைவரிடம் யோசனை கேட்கப் போவது? வரவர சிஷ்யர்களிடம்,

Koviloor Digital Library

அதாவது பொதுவாகவே நமது ஹிந்து ஜன ஸமூஹத்திடம் சாஸ்த்ர ஞானம் குறைந்து கொண்டே வருகிறது. மக்கள் எவ்வளவுக்கு வித்யையில் ஞானமுள்ளவர்களாக இருக்கிறார்களோ அந்த அளவுக்கே குருபீடங்களும் ஞானமுள்ளதாயிருக்கும்.

இதை நினைக்க ரொம்ப வருத்தமாயிருக்கிறது; தற்போது மக்கள் சாஸ்த்ரியப் படிப்பில் குறைந்துகொண்டே வருவதால் அந்த நிலைக்கு குருபீடங்களும் இறங்கிவிடுகிற ஆபத்தான ஸ்திதியில் இருக்கிறோம். தற்காலத்துக்கும் எதிர்காலத்துக்கும் சாஸ்த்ரங்களைக் காப்பாற்றித் தர வேண்டிய குருபீடங்களே அதில் தரம் குறைந்துபோகுமானால் அதைவிட நம் மதத்துக்குப் பெரிய ஆபத்து என்ன? அதனால் உங்களுக்காகவே நீங்கள் சாஸ்த்ர அறிவு பெற வேண்டுமென்பதோடு, எங்களை நாங்கள் வாஸ்தவமாக இருக்க வேண்டியபடி உருவாக்குவதற்காகவும், நீங்கள் முடிந்த மட்டும் சாஸ்திரங்களை அப்யாஸம் செய்ய வேண்டும். அதாவது, 'குரு பீடங்களிலுள்ள குருமார்களை சாஸ்த்ர ரக்ஷணத்தில் ஊக்கமுள்ளவர்களாக விளங்கச் செய்வது நம் பொறுப்பு' என்ற உணர்வோடு, அதை முன்னிட்டும் நீங்கள் உங்கள் சாஸ்த்ர ஞானத்தை வ்ருத்தி செய்துகொள்ள வேண்டும்.

இப்படி இல்லாதபோது என்ன ஆகிறது? "ஆலை இல்லாத ஊருக்கு இலுப்பப்பூ சர்க்கரை' என்கிறாற்போல நான் ஏதோ இரண்டு விஷயம் சொல்லிவிட்டால் என்னைத் தலைக்குமேல் தூக்கி வைத்துக் கொள்கிறீர்கள். ஒரு என்ஜினீயருக்கு என்ஜினீயரிங் தெரிந்திருக்க வேண்டும், ஒரு டாக்டருக்கு வைத்ய சாஸ்த்ரம் தெரிந்திருக்கவேண்டும் என்கிற மாதிரி ஒரு குருபீடத் தலைவருக்கு சாஸ்த்ரங்கள் தெரிந்துதான் இருக்கவேண்டும். தெரியாவிட்டால்தான் தோஷம். ஏதோ கொஞ்சம் தெரிந்ததற்காகத் தலைக்குமேல் தூக்கிவைத்துக் கொள்ளவேண்டிய அவசியம் இல்லை,

Koviloor Digital Library

பழைய சாஸ்த்ர விஷயங்களோடு பல புது ஸயன்ஸ் விஷயங்கள், ஹிஸ்டரி, கல்வெட்டு, பாஷா சாஸ்த்ரம் என்று சிலதும் சொல்கிறேன். என்னிடம் இந்த எல்லாத் துறைகளைச் சேர்ந்தவர்களும் வருகிறார்களல்லவா? அவர்கள் ஏதோ தங்கள் குறைகளைச் சொல்லிக்கொள்ள வருகிறார்கள். அப்போது நடுவிலே அவர்கள் வாயைக் கிளறி அவர்களுக்கு நிறைவாகத் தெரிந்த அவர்களுடைய ஸப்ஜெக்ட்களைப் பற்றிக் கொஞ்சம் கேட்டுத் தெரிந்துகொள்கிறேன். இப்படியாக அநேக ஸப்ஜெக்ட்களில் A,B,C தெரிந்து வைத்துக் கொண்டுதான் லெக்சர் அடிக்கிறேன். இதையே பார்த்து ப்ரமித்து "ஞான த்ருஷ்டி", "ஸர்வஜ்ஞதை", "கலைக்களஞ்சியம்" என்றெல்லாம் ஸ்தோத்ரம் செய்வதாக இருக்கிறது!

சிஷ்யர் கூட்டம் சிறந்த அறிவாளிகளாயிருந்தால்தான் அதற்குத் தகுந்தாற்போல் குருவும் தன் வித்யா வ்யுத்பத்தியை (கல்வித் தேர்ச்சியை) உயர்த்திக் கொள்ள வேண்டிய நிர்பந்தமுண்டு என்று காட்ட வந்தேன்.

சின்ன ஸ்கேலில் ஒரு குருகுலமாக ஆசார்யனும் மாணாக்கர்களும் மனஸ் ஒட்டி வாழ்கிறபோதுதான் சிறந்த ஆசார்யர்கள், சிறந்த மாணாக்கர்கள் இருவருமே தோன்றுவதற்கு அதிக இடமுண்டு என்பதுதான் மொத்தத்தில் நான் காட்ட வந்த விஷயம்.

ஸ்தாபனம் :
"அவச்யத் தீமை"க்கு ஆசார்யாள் பணி

ஒரு இன்ஸ்டிட்யூஷனுக்குத் தலைவன் என்ற பெயரை வைத்துக்கொண்டு, ஆசார்யன் என்ற பட்டத்தையும் சூட்டிக்கொண்டிருக்கிற நானேதான் சொல்கிறேன்: இன்ஸ்டிட்யூஷன்-பலமில்லாமல் இன்டிவிஜுவலாக நிற்கிறபோதுதான் ஒருத்தன் சுத்தனாக இருப்பதற்கும், ஆவதற்கும் அதிக அவச்யமும் ஹேதுவும் உள்ளன. ஸ்ரீ ஆதி சங்கர பகவத்

Koviloor Digital Library

பாதர்கள்தான் நம் மதத்திலேயே இன்ஸ்டிட்யூஷன் என்பதை வலுவாக ஏற்படுத்தி, ஸ்தாபன ரீதியில் நம் மதஸ்தர்கள் ஒரு கட்டுக்கோப்பில் வந்து அதனால் மதம் எந்நாளும் ஜீவசக்தி குன்றாமலிருக்க வழிசெய்தாரென்று ஸ்தோத்ரம் செய்யும் நானேதான் இதையும் சொல்கிறேன்.

ஸ்தோத்ரமும் நியாயம்தான். ஏனென்றால் இன்டிவிஜுவலின் ஆச்ரமம், அவற்றில் கையடக்கமான சிஷ்யர்கள் என்று சிலர் மாத்திரம் பரம சுத்தர்களாக இருந்துவிட்டால் பாக்கி ஏராளமான ஜனஸமூஹம் என்ன ஆவது?

ஜனஸங்கியை குறைச்சலாக இருந்து, அவரவரும் தங்கள் சாஸ்த்ர வழிகளைப் பின்பற்றிக்கொண்டு, அந்தச் சில சுத்தர்களை ஐடியலாகக்கொண்டு அடக்கத்துடன் வாழ்ந்த மட்டும் எல்லாம் ஸரியாகவே இருந்தது. ஆனால் காலக்ரமத்தில் ஜனஸங்கியை ஜாஸ்தியாக ஆக, 'க்வான்டிடி' அதிகமானால் 'க்வாலிடி' குறைய வேண்டியதுதான் என்ற முறைப்படி 'ஐடியலாக' இருக்கவேண்டிய வகுப்பாரின் தரம் நீர்த்துப்போக ஆரம்பித்தது.

இதைப் பயன்படுத்திக்கொண்டு புறச் சமயங்களான பௌத்த - ஜைன மதங்கள் ஸமூஹத்தில் ஒரு விரிசலையே ஏற்படுத்தின. தங்களை ஆர்க்கனைஸேஷனலாக (ஸ்தாபன ரீதியில்) நன்றாகக் கட்டுக்கோப்பு பண்ணிக் கொண்டால் தான் தங்களுடைய எதிர்ப்புக் கார்யம், வளர்ச்சி இரண்டையுமே சக்திகரமாக ஸாதித்துக் கொள்ளமுடியும் என்று புரிந்து கொண்டு, அப்படியே க்ரியாம்சையிலும் அந்த மதஸ்தர்கள் காட்ட ஆரம்பித்தனர். ராஜாக்கள் ஆதரவையும் பெற்று அந்த மதங்கள் வ்ருத்தி அடைந்தன.

அப்படிப்பட்ட காலத்தில் இந்தப் போக்கை எதிர்த்துச் சமாளிப்பதற்காக நம் மதத்தில் இருந்தவர்களை நெல்லிக்காய் மூட்டையாகச் சிதறிப் போகாமல் புளிப்பானையாக நன்றாகக் கிட்டித்து, ஒட்டிக்கொண்டு இருக்குமாறு செய்தேயாக வேண்டியிருந்தது. இதற்காகத்தான் அவர்களை

Koviloor Digital Library

ஸ்தாபன ரீதியில் ஒரு கட்டுக்கோப்பில் கொண்டுவரும் ஸாதிப்பை நம் ஆசார்யாள் மேற்கொள்ள வேண்டியிருந்தது. அதை இன்றைக்கும் லோகமே ஆச்சர்யப்படுமாறு தேசம் பூராவுக்குமான அடிப்படையில் பண்ணினார். அதனால் எத்தனை ஸ்தோத்ரம் பண்ணினாலும் ந்யாயந்தான்.

ஆனால் இதுவும் "necessary evil" என்ற வகையைச் சேர்ந்ததுதான்—அதாவது ஒரு பெரிய தீமையை விலக்குவதற்கு அத்யாவச்யமாகச் செய்ய வேண்டியிருக்கிற சின்ன தீமை என்றுதான் சொல்லவேண்டும். ஸ்தாபன பலம் இருக்கிறது என்றால் பாடசாலையாகத் தானிருக்கட்டும், மடாலயமாகத் தானிருக்கட்டும், அதிலே ஆசார்ய புருஷனாக இருப்பவன் தன்னுடைய ஆத்மபலம் நன்றாக உறுதி வாய்ந்ததாக இருக்க வேண்டுமென்பதில் அவ்வளவு விழிப்பாக இல்லாமல் ஊக்கம் குன்றிப்போக இடமுண்டு. ஆள்பலம், பணபலம், நிறைய ஸொத்து பலம் எல்லாமே ஆத்மபலத்தை வ்ருத்தி செய்து கொள்வதற்கு disincentiveகள்தான் (ஊக்கக் குலைவு செய்பவைதான்). இதனால்தான் ஆதியில் தனித்தனியாக இருந்து கொண்டு ஆசார்யர்கள் குருகுலம் நடத்தி வந்தார்கள்.

பௌத்த - ஜைனர்கள் தோன்றிய பிறகுதான் வித்யாசாலை என்பதாகப் பல ஆசிரியர்கள் சேர்ந்து ஒரே ஸ்தாபனத்தில் இருந்துகொண்டு பலதரப்பட்ட மாணவர்களுக்கும் பாடம் சொல்லித் தருவது என்ற வழக்கம் விசேஷமாக, விஸ்தாரமாக ஏற்பட்டது. நாலந்தா, தக்ஷசிலா யுனிவர்ஸிடிகள் அப்போது ஏற்பட்டவைதான்.

பழங்காலக் கல்விப் பெருநிலையங்கள்

தக்ஷசிலா பஞ்சாபில் இருப்பது. புத்தர் காலத்துக்கு மிகவும் முந்தி உபநிஷத நாட்களிலிருந்தே புகழ்பெற்ற க்ஷேத்ரமாக அது இருந்திருக்கிறது. அக்காலத்தில் அந்த ப்ரதேசத்துக்கு காந்தார தேசம் என்று பெயர். காந்தாரி

Koviloor Digital Library

அந்த நாட்டு ராஜகுமாரியாகப் பிறந்தவள். பாண்டவர்களின் கொள்ளுப் பேரஞன ஜனமேஜயன் ஸர்ப்பயாகம் பண்ணினதும், அவனுக்கு முன்ஞல் மஹாபாரதம் முதல் முதலாக "அரங்கேற்ற"மானதும் இங்கேதான். இது அந்த ஊருக்கு உள்ள மஹாபாரத ஸம்பந்தம். ராமாயண ஸம்பந்தம் இதைவிட அதிகமாக அதற்கு உண்டு. பரதனின் பிள்ளையாக தக்ஷன் ஸ்தாபித்த ஊரானதாதலால்தான் அதற்குத் தக்ஷசிலம் என்ற பெயரே ஏற்பட்டது. இப்படி வைதிக மத ஸம்பந்தமுள்ளதாயிருந்த அந்த ஊர், கி.பி. ஐந்தாம் நூற்ருண்டில் ஃபாஹியன் இந்தியாவிலே சுற்றுப் பிரயாணம் செய்து குறிப்புக்கள் எழுதியபோது பௌத்தர்களின் சைத்ய, விஹாரங்கள் நிறைந்த இடமாக இருந்திருக்கிறது. அப்புறம் ஹூணர் என்ற அந்நிய நாட்டு ம்லேச்சர்கள் அந்த ஊரைச் சூறையாடிச் சிதைத்துவிட்டனர். ஃபாஹியனுக்கு இருநூறு வருஷத்துக்கு அப்புறம் ஹூவான் த்ஸாங் வந்து சுற்றுப்பிரயாணம் செய்தபோது தக்ஷசிலம் ஒரே 'ருயின்ஸ்' (இடிபாடுகள்) மயமாயிருந்ததாக எழுதி வைத்திருக்கிருர்.

பௌத்தர்களின் பெரிய வித்யா ஸ்தானமாக அது இருந்தபோது ஒரே ஸர்வகலாசாலையின் கீழ் பல துறைகளாக மாணவர்களுக்குப் பாடம் சொல்லிக் கொடுக்கும் 'ஸெட்-அப்'பில் இல்லை என்றும், அநேகச் சின்னச் சின்ன வித்யா சாலைகள் ஒரே இடத்தில் சேர்ந்திருந்ததாக மட்டுமே இருந்தது என்றும் தெரியவருகிறது.

ஒரு ஸென்ட்ரல் 'ஸெட்-அப்'பில் இல்லாவிட்டாலும் இங்கே வேதவித்யை உள்படப் பதினறு ஸப்ஜெக்ட்களில் பாடம் நடத்தியிருக்கிருர்கள். சாணக்யர் போன்றவர்கள் கூட அங்கே வித்யாப்யாஸம் செய்ததாகச் சொல்லப்படுகிறது.

தற்கால யுனிவர்ஸிடி ஸெட்-அப்பிலேயே இருந்தது நாலந்தா வித்யாசாலைதான். அங்கேதான் 'ருயின்'ஸைப் பார்க்கும்போது பெரிய பெரிய லெக்சர் ஹால்கள்,

Koviloor Digital Library

ஹாஸ்டல்கள் ஆகியன இருந்தது தெரியவருகிறது. இது பழைய காலத்தில் மகதம் எனப்பட்ட இன்றைய பீஹாரில் இருக்கிறது. புத்த விஹாரங்கள் நிறைய ஏற்பட்டது மகத தேசத்தில்தான். விஹாரம், விஹார் என்பதே பிஹார் என்ருயிற்று. அதைத் தப்பாக பீஹார் என்கிருேம்! பட்ஞ என்கிற பாடலிபுத்ரத்துக்கு ஸமீபத்தில் புத்தர் வாழ்க்கையோடு ஸம்பந்தப்பட்ட ராஜக்ருஹம் (ராஜ்கிர்) இருக்கிறது, அதற்குப் பக்கத்தில் நாலந்தா இருக்கிறது. பௌத்த தத்வதர்சிகளில் முக்யம் வாய்ந்த ஒருவரான நாகார்ஜுனர் இந்த இடத்தை ஸர்வகலாசாலை, அல்லது விச்வ வித்யாலயம், அல்லது தமிழில் பல்கலைக் கழகம் என்கிற ரீதியில் பெரிய கல்விச்சாலை அமைக்கத் தேர்ந்தெடுத்தார். கி.பி. ஐந்தாம் நூற்ருண்டில் ஆட்சி செய்த நரஸிம்ஹ பாலாதித்யரின் காலத்தில் நாலந்தா விச்வ வித்யாலயம் பூர்ண வளர்ச்சியைப் பெற்றதாகத் தெரிகிறது. பௌத்த சாஸ்த்ரங்கள் மட்டுமின்றி, ஓரளவு வேத வித்யையும் மற்றும் விஸ்தாரமாகவே கணிதம், ஜ்யோதிஷம், தர்க்கம், ஸங்கீதம், வைத்யசாஸ்த்ரம் ஆகியனவும் இங்கே சொல்லிக் கொடுக்கப்பட்டிருக்கின்றன. இங்கே பத்தாயிரம் பேர் ரெஸிடென்ஷியலாகத் தங்கிப் படித்ததார்களென்று தெரிகிறது. ஆசியாவிலுள்ள வெளி தேசங்களிலிருந்தும் ஐரோப்பாவிலிருந்தும்கூட நல்ல அறிவுள்ள மாணவர்கள் கல்வி கற்பதற்காக இங்கே வந்தார்கள் என்று தெரிந்து கொள்ள நமக்கு மிகவும் பெருமையாயிருக்கிறது. ஆனலும், தக்ஷசிலத்தில் அக்கால இன்ஜீனீயரிங் முதலான டெக்னிகல் ஸப்ஜெக்ட்களை போதித்ததுபோல இங்கே செய்யவில்லை என்று சொல்கிருர்கள். எல்லோருக்கும் அட்மிஷன் இருந்தாலும், குறிப்பாக பிக்ஷுமார்களை உண்டாக்குவதே நாலந்தா கலாசாலையின் நோக்கமாயிருந்ததால் காரிய ரீதியில் மிகவும் லௌகிக ஸம்பந்தமுண்டாக்குவதான டெக்னிகல் ஸப்ஜெக்ட்களை இங்கே பாடதிட்டத்தில் சேர்க்கவில்லை என்று ஊஹிக்கப்படுகிறது. ஆனல் ஜ்யோதிஷம் ஒரு ஸப்ஜெக்டாக இருந்ததால் இங்கே வான மண்டலத்தை

Koviloor Digital Library

தீர்க்க த்ருஷ்டிக் கருவிகளால் ஆராய்வதற்காக ஒரு சிறந்த 'ஆப்ஸர்வேடரி' இருந்திருக்கிறது. ஒன்பது மாடிகளுள்ள ஒரு பெரிய லைப்ரரியும் இருந்திருக்கிறது.

கஜனி முஹமது, கோரி முஹமது முதலானவர்கள் படையெடுத்து நம் கலாசாரத்துக்குப் பெரிய ஹானி உண்டாக்கி, அப்புறம் துருக்கர்களின் Slave Dynasty (அடிமைவம்ச) ஆட்சி பதின்மூன்றும் நூற்றுண்டின் ஆரம்பத்தில் ஏற்பட்டபோது நாலந்தா யுனிவர்ஸிடி, அதற்குமேல் தாக்குப் பிடிக்க முடியாமல் நசித்துப் போய்விட்டது. எட்டு நூற்றுண்டுகள் இப்படி ஒரு யுனிவர்ஸிடி நடைபெற்ற தென்பதே மிகவும் பெருமைக்குகந்த விஷயம்.

நாலந்தா யுனிவர்ஸிடி பூர்ணரூபம் பெற்ற ஐந்தாம் நூற்றுண்டுக்கு முன்னூறு வருஷங்கள் அப்புறம், வங்காளத்தில் பால வம்சத்தவர் ஆட்சியில் ஏற்பட்டது விக்ரமசிலம். கங்கைக்கரையில் ஒரு குன்றின்மேல் தர்மபாலன் என்ற அரசின் பௌத்த மடாலயமும் அதைச் சேர்ந்ததாக இந்த வித்யாசாலையும் ஸ்தாபித்தான். திபெத்திலிருந்தே பிக்ஷுக்கள் நிறைய வந்து இங்கே கல்வி கற்றிருக்கிறுர்கள். இங்கிருந்து பிக்ஷுக்கள் திபெத்துக்குப் போயும் பௌத்தமதப் பிரசாரம் செய்திருக்கிறுர்கள். அநேக பௌத்த நூல்கள், குறிப்பாக தாந்த்ரிகமானவை (தந்த்ர சாஸ்த்ரத்தைக் குறித்தவை) பிற்காலத்தில் இந்தியாவில் கிடைக்காமல் திபெத்திலிருந்தே நாம் பெறும்படியாக இருந்தது. இப்போதுங் கூட இப்படிப் பல பழைய புஸ்தகங்கள் திபெத் மடாலயங்களிலேயே கண்டுபிடிக்கப்படுகின்றன. இவை அங்கே போய்ச் சேர்ந்ததற்கு நாலந்தா - விக்ரமசிலா யுனிவர்ஸிடிகளால் ஏற்பட்ட பரிவர்த்தனைதான் காரணம்.

ஹிந்து சாஸ்த்ரங்களிலும், ஹிந்து மதப் பூர்விகர்களின் இதர கலைகள் ஸயன்ஸ்கள் ஆகியவற்றிலும் விஸ்தாரமாக போதனை தரும் இடங்களாகவும் பல ஆதி காலத்திலிருந்து இருந்திருக்கின்றன. இவற்றில் வடக்கே காசியும், தெற்கே

Koviloor Digital Library

காஞ்சியும் முக்யமானவை. மேற்கே காந்தி பிறந்த கத்திய வாரில் வலபீ சிறந்த வித்யா பூமியாக இருந்திருக்கிறது. விக்ரமாதித்யனின் உஜ்ஜயினி மத்ய பாரதத்திலே பெரிய centre of learning—ஆக இருந்திருக்கிறது. வடக்கு, தெற்கு, மேற்கு, மத்தியம் சொன்னேன். கிழக்கு, பாக்கி. அங்கே ஹிந்து மதத்தோடு ஸம்பந்தப்பட்ட வித்யாபூமியாக வங்காளத்தில் நவத்வீபம் இருந்தது. 'நடியா' என்று சொல்கிற இடம். பூர்வத்தில் ஹிந்து தர்சனங்கள் எல்லாமே அங்கே கற்பிக்கப்பட்டிருக்கின்றன. அப்புறம் பதின்மூன்றும் நூற்றுண்டு ஆரம்பத்தில் துருக்கர் செய்த உத்பாதத்தில் நாலந்தாவையும் விக்ரம சிலாவையும் போல நவத்வீபமும் நசித்ததென்ருலும், மறுபடியும் அது பதினைந்தாம் நூற்றுண்டில் தலை தூக்கிற்று. ஆனுல் பூர்வத்தில் ஸகல வித்யைகளுக்கும் அது இருப்பிடமாயிருந்திருக்க, மறுபடி அது புத்துயிர் பெற்றபோது தர்க்க சாஸ்த்ரத்துக்கு மாத்திரமே ப்ரஸித்தி அடைந்தது.

ஆனுல் வைதிகத்தோடு சேர்த்து வித்யை சொல்லிக் கொடுத்த இந்த எல்லா இடங்களிலுமே யுனிவர்ஸிடி அமைப்பில் கல்வி அளிக்காமல் அநேக தனித்தனி குருகுலங்கள் ஒரு இடத்தில் சேர்ந்து கற்றுக்கொடுப்பதாகத்தான் இருந்தது.

இப்படிச் சொல்வதால், இந்த அமைப்பு ஹிந்து மதத்தோடு சேர்ந்த கல்வியில் அடியோடு இருந்ததில்லை என்று அர்த்தமாகாது. பௌத்த-ஜைன மதங்கள் ஏற்படுவதற்கு முன்னுங்கூட அங்கங்கே சில பெரிய குருகுலங்கள் இருந்திருக்கத்தான் செய்தன. வேதமத ஆதாரமான பதிநாலு வித்யைகளில் புதுப்புது வ்யாக்யான நூல்கள், ஆராய்ச்சி நூல்கள் ஒவ்வொரு தலைமுறையிலும் சேர்ந்துகொண்டே போயிருந்திருக்கும்; காவ்ய நாடகாதிகளும் ஏராளமாக ருத்தியாகிக் கொண்டே இருந்திருக்கும்; புதுப்புது சாஸ்த்ரங்கள், ஸயன்ஸ்கள், அலெக்ஸாண்டர் படையெடுப்பிலிருந்து அந்நிய தேசஸ்தர் தொடர்பால் புதிசு புதிசாகத்

Koviloor Digital Library

தெரிய வந்த விஷயங்கள் எல்லாமும் ஜெனரேஷனுக்கு ஜெனரேஷன் அதிகமாகிக் கொண்டேதான் போயிருக்கும். எனவே ஒரே குரு, அல்லது ஓரிரண்டு அஸிஸ்டென்ட்கள் மட்டும் வைத்துக் கொண்டிருக்கும் குரு போதாமல், இந் நாளில் உள்ள யுனிவர்ஸிடி மாதிரியான பெரிய அமைப்பில் அநேக குருக்கள் அநேக சிஷ்யர்களுக்கு ஒரே இடத்தில் சேர்ந்து சொல்லிக் கொடுப்பதென்பது பௌத்த, ஜைன மதஸ்தர்களிடம் மட்டுமின்றி வைதிக வழியிலிருந்தவர் களிடமும் கொஞ்சம் இருந்ததுதான். ஸப்ஜெக்ட்கள் விரிவடைந்தபோது எல்லாவற்றையும் ஒரே மாணவன் படிப்பதென்பதும் ஸாத்யமில்லாததால் 'பேஸிக்'காக (அடிப்படையாகச்) சிலது மட்டும் எல்லா மாணவர்களுக் கும் எனவும், பாக்கியில் ஒவ்வொருத்தனுக்கு ஒவ்வொன்று இஷ்டபாடம் (ஆப்ஷனல்) என்றும் பூர்வத்திலேயே கொஞ்சம் ஆகியிருக்கவேண்டும். இப்படித்தான் சிதம்பரத் தில் பதஞ்ஜலி மஹர்ஷியிடம் பாடம் கேட்க ஆயிரம் பேர் வந்து, பல தினுஸுப் பாடங்களைக் கேட்டபோது, அவர் ஆதிசேஷ அவதாரமாதலால், ஒரு திரையைப் போட்டுக் கொண்டு அதன் பின்னுடி சேஷஸ்வரூபத்தில் ஆயிரம் வாய்களை எடுத்துக்கொண்டு ஒரே ஸமயத்தில் ஒவ்வொரு மாணவனுக்கும் ஒவ்வொரு வாயால் பாடம் சொல்லிக் கொடுத்தாரென்று கதை இருக்கிறது.

புது மதங்களும் பெரிய கல்வி நிலையங்களும்

ஆனாலும் புத்த, ஜின மதங்கள் வந்ததிலிருந்துதான் புது ஸித்தாந்த ப்ரசாரம் மாத்திரமின்றி மற்ற எல்லாக் கலை களும் விஞ்ஞானங்களும் ஜாஸ்தியானதால் பெரிய ஸ்கேலில் வித்யாசாலைகள் நடத்துவது ரொம்பவும் குறிப்பிடும் அளவுக்கு வ்ருத்தியானது. அதற்கு முந்தி, மிகப் பெரும் பாலும் தனி மநுஷ்யராக உள்ள குருவிடம் ஒருசில வித்யார்த்திகளே சிக்ஷைபெறும் குருகுலவாஸ முறைதான்.

புது மதங்களோடு பெரிய ஸ்கேல் வித்யாசாலை வந்ததற்கு இன்னொரு முக்யமான காரணமும் உண்டு.

Koviloor Digital Library

இந்தப் புது மதங்களுக்கு ஹிந்துக்களைத் திருப்பியவர்களுக்கு நிஜமாகவே எல்லா ஜனங்களுக்கும் அறிவை வ்ருத்தி செய்ய வேண்டுமென்ற எண்ணம் இருந்திருக்கலாம். இருந்தாலும் கன்வர்ஷன் (மதமாற்றம்) என்று வரும்போது வேறு உள்நோக்கமும் இருந்திருக்கக்கூடும் என்பது நம்முடைய ஸமீபகால சரித்ரத்தைப் பார்க்கும்போது தெரிகிறது.

ஸமீப காலத்தில் என்ன பார்த்தோம்? இலவசமாகப் படிப்புச் சொல்லித் தருவதற்காக எங்கே பார்த்தாலும் ஸ்கூல் வைத்து, நைஸாக அதன் மூலமே மதப் பிரசாரம், மதமாற்றம் எல்லாம் பண்ணுவதை நிறையப் பார்த்திருக்கிறோமல்லவா? அதனால் ஆதியில் இந்த தேசத்திலேயே அவைதிகமான புது மதங்கள் உண்டானபோதும் ஆள் பிடிப்பதற்கு உபாயமாக வித்யாசாலைகளை பெரிய அளவில் ஏற்படுத்தியிருக்கலாமென்று தோன்றுகிறது. இதைக் காட்டி பொதுஜனங்களை வசீகரிப்பதற்கு நம்முடைய ப்ரத்யேகச் சூழ்நிலை நல்ல வாய்ப்புத் தருவதாக இருந்ததையும் சொல்லவேண்டும்.

''ப்ரத்யேகச் சூழ்நிலை''

"அதென்ன ப்ரத்யேகச் சூழ்நிலை?" என்றால்:

ப்ராம்மணன்தான் எல்லா ஜாதியாருக்கும் அவரவருக்கான தொழிலைக் கற்பிக்க வேண்டியவன் என்பது நம் பூர்விகர்களுடைய ஏற்பாடு. தொழில் மாத்திரமின்றி தர்மம், ஆத்ம க்ஷேமத்துக்கான விஷயம் முதலியவற்றையும் ப்ராம்மணர்கள் பிறருக்கு போதிப்பார்கள். ஆனாலும் இப்படி போதிக்கும்போது நாலாம் வர்ணத்தாராகிய ஜன ஸமூஹத்துக்கு வேதத்தை மட்டும் நேராகச் சொல்லிக் கொடுக்க மாட்டார்கள். ஜனங்களிடையே பலவேறு தொழில்களையும் பாரம்பர்யமாகப் பங்கீடு செய்து வைத்த நம்முடையவர்ண தர்மத்தின்படி வேதக்கல்வியும் அதன்படி

Koviloor Digital Library

யான அநுஷ்டானங்களும் ப்ராம்மணன் ஒருத்தனுக்குத்தான் ஆயுள் காலத் தொழில் என்று பங்கீடு பண்ணி வைத்து விட்டதால் இவற்றை ஓரோர் அளவுக்கு மாத்திரம் க்ஷத்ரியர் களுக்கும் வைச்யர்களுக்கும் சொல்லிக்கொடுப்பது, நாலாம் வர்ணத்துக்குச் சொல்லிக் கொடுப்பதில்லை என்று வைத்துக் கொண்டிருந்தார்கள்.* நேராக வேதத்தைச் சொல்லிக் கொடுக்காவிட்டாலும் அதன் அபிப்பிராயங்களையும், தத்வார்த்தங்களையும் புராண இதிஹாஸங்களாகவும் நீதி நூல்களாகவும் எல்லாருக்கும் சொல்லிக் கொடுத்தார்கள்.

ஆனாலும் இந்த ஆத்மார்த்தமான போதனை என்பது பொது ஜனங்களுக்கு குரு-சிஷ்யரென்று க்ளாஸில் பாடம் நடத்துவதுபோல அதிகம் நடக்கவில்லை. குருகுலத்தில் முக்யமாக வேத அத்யாபனமே நடந்தது. அத்யாபனம் முடித்து, ஆசார்யர்கள் போஜனம் பண்ணிவந்த பிற்பாடே மற்றவர்கள் வந்து அவர்களிடம் போதனை பெறுவதாக இருந்தது. இந்த ஆசார்யர்களை விடப் பௌராணிகர்கள், உபந்யாஸகர்கள் ஆகியவர்கள்தான் புராண இதிஹாஸம், நீதி நூல்கள் ஆகியவற்றைப் பொது ஜனங்களுக்கு அதிகமாக ப்ரசாரம் செய்து தத்-த்வாரா அவர்களுக்கு ஆத்ம முன்னேற்றத்துக்கான விஷயங்களைப் பரப்பினார்கள்.

இதரர்கள் (நாலாம் வர்ணத்தார்) அவர்களுடைய ஜாதித் தொழில்களை வெகு நன்றாகச் செய்து கொண்டிருக் கும்போது அதை விட்டுவிட்டுத் தொழில் கற்றுக்கொள்வ தற்காக எங்கோ ஒதுக்குப்புறத்திலிருந்த குருகுலத்துக்கு அவர்களுடைய குழந்தைகள் போகவேண்டிய அவச்யமிருக்க வில்லை. வீடே அவர்களுக்குப் பள்ளிக்கூடமாகவும் இருந்தது.

வேதத்தைத்தான் ப்ராம்மணனிடமிருந்தே கற்க வேண்டுமென்றும், மற்ற தொழில்களுக்கான சாஸ்த்ரங்களை

---

* வர்ணதர்மம் குறித்து முன் மூன்று பகுதிகளிலும் உரைகளும் உரைப் பகுதிகளும் உள்ளன. குறிப்பாக முதற்பகுதியில் 'வேத ரக்ஷணம் ஏன் ஆயுட் காலத் தொழிலாக வேண்டும்?' என்ற உரை பார்க்கவும்.

Koviloor Digital Library

அந்தந்த ஜாதியாரே தங்களுக்குள் கற்றுக் கொடுத்துக் கொள்ளலாம் என்றும் ஸ்ம்ருதிகள் அநுமதிக்கின்றன. நடைமுறை ஸௌகர்யத்தை உத்தேசித்தே இவ்வாறு அநுமதித்திருப்பது. தொழிலாளி ஸமூஹப் பசங்கள் ஒரு காலத்தில் படித்துவிட்டு, அப்புறம் பிற்காலத்தில் அதை 'அப்ளை' பண்ணித் தொழில் செய்வது என்றில்லாமல், ஆரம்பத்திலிருந்து வீட்டுப் பெரியவர்களுக்கு அஸிஸ்டென்டாகத் தொழிலில் உதவி செய்து, அப்போதே கற்றுக் கொள்ளவும் செய்தார்கள். ஏதாவது ஸந்தேஹம் வந்தாலோ, ஏதோ ஒரு நுணுக்கம் தெரியவேண்டுமென்றுலோ மட்டுமே அந்தத் தொழிலைப் பற்றிய சாஸ்த்ர அபிப்ராயம் தெரிவதற்காக ப்ராம்மண ஆசார்யனிடம் போய்க் கேட்டுக்கொண்டால் போதும் என்று இருந்தது. இப்படிப்பட்ட நுணுக்கங்கள் தெரிந்த அநுபவஸ்தர்களுங்கூட இந்த ஜாதிகளிலேயே இருந்ததால் இதற்குங்கூட "அய்ய"ரிடந்தான் போகணுமென்று கட்டாயம் இருக்கவில்லை. தட்டார்களை, சில்பிகளை, தச்சர்களையெல்லாங்கூட "ஆச்சாரி" என்று சொல்வதிலிருந்து அந்தந்த ஜாதியிலும் அவர்களைச் சேர்ந்தவர்களே நிரம்ப விஷயஜ்ஞர்களாகி ஆசார்யஸ்தானத்தில் இருந்துகொண்டு கற்றுக் கொடுத்திருக்கிறுர்களென்று தெரிகிறது.

வேத வித்யையில் அதிகாரம் பெற்ற மூன்று வர்ணத்தாருக்கும் பழங்கால வித்யாசாலைகளில் சேரத் தகுதியிருந்தாலும் உபநயன ஸம்ஸ்காரத்தை இந்த வர்ணத்தினர்களுக்கு வேறு வேறு வயஸில் வைத்திருப்பதை இங்கே குறிப்பிடவேண்டும். உபநயனத்துக்கு முந்தியே அக்ஷராப்யாஸம் என்று ஒன்று வந்தது பிற்காலத்தில்தான். நாற்பது ஸம்ஸ்காரங்களில் அக்ஷராப்யாஸம் இல்லை*. அக்ஷராப்யாஸத்தில் குழந்தையின் கையைப் பிடித்து எழுதுவிப்பதுதான் முக்யமாயிருக்கிறது. ஆதி ஸ்கூலிலோ எழுதுவது, எழுத்து என்பவையே அதிகம் கிடையாது, காதால் கேட்டுத்தான்

---

* இரண்டாம் பகுதியில் "நாற்பது ஸம்ஸ்காரங்கள்" என்ற உரை பார்க்க.

Koviloor Digital Library

பாடம் பண்ணணும் என்று சொன்னேனே! அப்போது உபநயனமேதான் வித்யாப்யாஸத்துக்கு ஆரம்பமாக இருந்தது. உபநயனத்தில் செய்யும் காயத்ரி மஹாமந்த்ரோபதேசம்தான் வேதத்தைக் காதால் கேட்டுப் பாடம்பண்ணுவதற்கு அங்குரார்ப்பணம். உபநயனம் பண்ணி குருகுலத்தில் விடுவதே வழக்கம்.

இப்படிப் பண்ணுவதில் ப்ராம்மணப் பிள்ளையானால் எட்டு வயஸுக்கே பூணூல் போட்டு குருவிடம் அனுப்புவது என்றும், க்ஷத்ரியப் பிள்ளைக்குப் பதினோரு வயஸிலும், வைச்யப் பிள்ளைக்குப் பன்னிரண்டு வயஸிலும் இப்படிச் செய்வதென்றும் இருந்திருக்கிறது.

ப்ராம்மணப் பிள்ளையைப் பதினாறு வயஸுக்கு மேல் பூணூல் போடாமல் வைக்கப்படாது. இதேமாதிரி க்ஷத்ரியனுக்கு 'அப்பர் லிமிட்' இருபத்திரண்டு வயஸு. வைச்யனுக்கு இருபத்துநாலு.

ரொம்ப சூட்டிகையாயிருந்தால் ப்ராம்மணப் பிள்ளைக்கு ஐந்து வயஸிலும், க்ஷத்ரியப் பிள்ளைக்கு ஆறு வயஸிலும், வைச்யப் பிள்ளைக்கு எட்டு வயஸிலும் பூணூல் போட்டு வித்யாப்யாஸம் ஆரம்பிக்கலாம்.

ஏன் இப்படி ப்ராம்மணனைவிட மற்ற ஜாதியாருக்கு வித்யாப்யாஸத்தை வித்யாஸப்படுத்தியிருக்கிறது, தள்ளிப் போட்டிருக்கிறது என்றால்...

எந்தக் குழந்தையானாலும் அதற்கு அதனுடைய இயற்கையான வீட்டுச் சூழ்நிலையில், அதற்கான வாழ்க்கைத் தொழிலில் இயல்பான ருசி ஏற்படும் என்பதுதான் காரணம். இமிடேட் பண்ணுவது குழந்தையின் குணம். ப்ராம்மணனைத் தவிர மற்றவர்கள் உடம்பாலே நிறையத் தொழில் செய்பவர்கள். ஒருத்தன் கத்தி சுழற்றுவான். இன்னொருத்தன் உழுவான். இன்னொருத்தன் நெசவு செய்வான். இப்படிப் பல. அந்த ஜாதித் தொழில்களை ஸ்வதர்மமாகக் கொண்ட குழந்தைகள் குருகுலத்திலே அந்தத்

Koviloor Digital Library

தொழில்களில் எதுவுமே நடப்பதைப் பார்க்கமுடியாது. தொழில் செய்கிற இடமில்லை குருகுலம். தொழில்முறையை அறிகிற, அறிவைப் பரப்புகிற இடம்தான் அது. இப்போது மாண்டிஸோரி முதலானவர்கள், செய்து தெரிந்துகொள்ள வேண்டியவற்றைப் பாடமாகச் சொல்லிக் கொடுப்பது முறையில்லை; இப்படிச் செய்வது ஒரு குழந்தையை ஸரியாக உருவாக்காது; அந்தக் கார்யமும் இதனால் ஸரியாக உருவாகாது என்று அபிப்ராயப்பட்டு புது தினுஸான கல்விமுறை கொண்டுவந்திருக்கிறார்கள் அல்லவா? இது புது தினுஸே இல்லை. நம் ஆதிகால மூதாதையர் இந்த வழியைத்தான் பின்பற்றினர். அதனால்தான் அறிவை வளர்ப்பதையே ஆயுஸ்காலத் தொழிலாகக் கொண்ட ப்ராம்மண ஜாதியில் பிறந்த குழந்தைகளைத் தவிர மற்ற ஜாதிக் குழந்தைகளை ரொம்பவும் சின்ன வயஸில் குருகுலத்தில் அடைக்க வேண்டாம்; அந்தக் குழந்தைகள் அகத்திலேயே அப்பன் - பாட்டனோடு ஸந்தோஷமாக வஸித்துக்கொண்டும், அவர்களோடேயே ஆயுதசாலைக்கோ கடைக்கோ நிலத்துக்கோ பட்டரைக்கோ போயும் அவர்கள் செய்யும் தொழிலைப் பார்த்துத் தெரிந்துகொண்டு, 'இமிடேஷன்' செய்கிற 'இன்ஸ்டிங்க்டி'ல் அதே மாதிரி செய்துகொள்ளட்டும் என்று விட்டார்கள். இப்படி வேலையில் குழந்தை ஒத்தாசை செய்வது அந்த ஜாதியாருக்கு வேலையையும் குறைத்து வருமான லாபத்தையும் உண்டாக்கிற்று.

இன்னொரு அம்சத்தையும் கவனிக்கவேண்டும். மந்த்ர சக்தியை உண்டாக்கிக்கொள்ள வேண்டியதை முன்னிட்டு ஆஹாரம் முதலானவற்றில் ப்ராம்மணக் குழந்தைக்கு இருக்கிற கட்டுப்பாடு மற்ற ஜாதிக் குழந்தைகளுக்கு இல்லை. ப்ராம்மணன் நடத்தும் குருகுலத்தில் அந்த மற்றக் குழந்தைகளுக்குப் பழக்கமான, அவர்களுக்குத் தேவையான ஆஹாராதிகளை எப்படிச் சேர்க்கமுடியும்?

இத்யாதி காரணங்களால் அந்தக் குழந்தைகள் கொஞ்சம் நாக்கைக் கட்டக்கூடிய பருவத்தில் குருகுலத்

Koviloor Digital Library

துக்கு வந்தால் போதும் என்று உபநயன வயஸை உயர்த்தி நிர்ணயித்தார்கள்.

தங்கள் தங்கள் தொழிலை மட்டும் கற்றுக் கொள்வதானால் மற்ற ஜாதிக் குழந்தைகள் தங்களுடைய குடும்பத்திலிருந்துகொண்டே அதைப் பெரிய அளவுக்குச் செய்து விடலாம். எனவே அவர்கள் குருகுலத்துக்கு வந்ததே முக்யமாக வேத சாஸ்த்ர அப்யாஸத்துக்காகத்தான். இதில் அவர்கள் ப்ராம்மணப் பசங்களைப் போலத் தேர்ச்சி பெற வேண்டிய அவச்யமில்லை. அப்படிச் செய்தால் அப்புறம் அவர்கள் செய்யவேண்டிய ஸ்வதர்மத் தொழிலே பாதிக்கப் பட்டுவிடும். எனவே ஓரளவு வேத சாஸ்த்ர ஞானம் அவர்களுக்குப் போதுமானதாயிருந்தது. இதைப் பெறுவதற்காக அவர்கள் ப்ராம்மணப் பசங்கள் மாதிரி நீண்டகாலம் வித்யாப்யாஸம் செய்ய வேண்டியிருக்கவில்லை.

பாடதிட்டத்தில் வேறுபாடுகள்

ஆனபடியால் குருகுலம், வித்யாப்யாஸம் முதலான ஸமாசாரங்களே போகப் போக ப்ராம்மணர்களை முக்யமாக கொண்ட விஷயங்கள் மாதிரியாகிவிட்டன. க்ஷத்ரியர்களிலும் ராஜகுமாரர்கள், ராஜ குடும்ப முக்யஸ்தர்களின் பிள்ளைகள் ஆகியோர் நீண்ட காலம் குருகுலவாஸம் செய்து நிரம்பவும் வித்யாப்யாஸம் செய்து தேர்ச்சி பெற்றார்கள்.

ஆனால் ப்ராம்மணப் பசங்களின் பாடதிட்டத்தில் சதுர்தச வித்யைகளுக்கு* ப்ராதான்யம் கொடுத்து, தநுர் வேதம், அர்த்த சாஸ்த்ரம் முதலானவற்றை 'எலிமென்டரி' யாகத்தான் சொல்லிக் கொடுத்திருப்பார்கள். ஏனைய ஜாதியினருக்கும் அவர்களுடைய தொழிலை போதிக்க ப்ராம்மணன் தகுதி பெற்றிருக்கவேண்டுமாதலால், ப்ராம்மணப் பசங்களிலேயே பன்னிரண்டு வருஷத்துக்குமேல்

---

* இரண்டாம பகுதியில் "ஹிந்து மதத்தின் ஆதார நூல்கள்" என்ற உரையில் "14 ப்ரமாண நூல்கள்" என்ற உட்பிரிவு பார்க்க.

Koviloor Digital Library

குருகுலவாஸம் செய்கிறவர்களில் சிலருக்கு தநுர்வேதம், சிலருக்கு அர்த்த சாஸ்த்ரம், சிலருக்குச் சில்பம், சிலருக்கு ஸங்கீதம் என்றிப்படிப் பிரித்து, மற்றவர்களுக்கான தொழிலைக் குறித்த கல்வியும் புகட்டினார்கள். ஆக, இது எல்லா ப்ராம்மணர்களுக்குமான பொதுப் பாடதிட்டமில்லை.

க்ஷத்ரியப் பசங்களிலோ அத்தனை பேருக்குமே தநுர் வேதப்படி நிறைய அஸ்த்ர சஸ்த்ர சிக்ஷை தரவேண்டும். ராஜ நீதி, அர்த்த சாஸ்த்ரங்களையும் இவர்களுக்கு deep-ஆக போதிக்கவேண்டும். ஆனதால் ப்ராம்மணப் பசங்களு டையதற்கு வித்யாஸமானதாகவே இவர்களுக்கெனத் தனி 'கர்ரிகுலம்', 'ஸிலபஸ்' போட்டு அதன்படியே சிக்ஷை தந்திருக்கவேண்டும். இவர்களுக்காக முழுக்கவே தனியாக குருகுலம் இருந்திருக்கலாம்; அல்லது வேதாதி சதுர்தச வித்யைகளில் ப்ராம்மணப் பசங்களின் குருகுலங்களிலேயே ஒரு கட்டம் வரையில், அல்லது நடு நடுவே சில க்ளாஸ்களில் சேர்ந்து கல்வி கற்பதாகவும், ஆயுதப் பயிற்சி, ஆட்சி முறைக் கல்வி முதலியவற்றைத் தனியான (exclusive) குருகுலங் களில் கற்பதாகவும் இருந்திருக்கலாம். Inter-collegiate க்ளாஸ்கள் என்று தற்காலத்தில் வெவ்வேறு காலேஜ் மாணவர்கள் சில ஸப்ஜெக்ட்களை மட்டும் சேர்ந்து படிக்கிற மாதிரி இருந்திருக்கலாம். ப்ராமணரான த்ரோணரோ டேயே அவருடைய பிதாவான பரத்வாஜரிடம் க்ஷத்ரியனான த்ருபதன் குருகுலவாஸம் பண்ணியிருக்கிறான். க்ஷத்ரிய க்ருஷ்ணரும், ப்ராம்மண குசேலரும் சேர்ந்து படித்திருக் கிறார்கள்.

மாறுபாடான இரு கதைகள்

ஆனால் இதிலே ஒரு வித்யாஸம். பரத்வாஜர் தநுர் வேதத்தில் கரை கண்டவரானதால் ப்ராம்மண த்ரோணரும் அந்த சாஸ்த்ரத்தை deep - ஆகவே அவரிடமும் பரசுராமரிட மும் அப்யாஸம் பண்ணிப் பிற்பாடு கௌரவ பாண்டவர் களுக்கு தநுர்வேத ஆசார்யராக 'ட்ரெய்னிங்'கும் கொடுத்

Koviloor Digital Library

திருக்கிருர். குசேலர் இப்படி தநுர்வேதம் படித்திருக்க மாட்டார். இரண்டு கதைகளுக்குமிடையில் இன்னெரு பெரிய வித்யாஸம்—நான் எடுத்துக்கொண்ட ஸப்ஜெக்டி லிருந்து எங்கேயோ கதைக்குப் போகிறது. நம் கலாசார வாழ்க்கைக்கு மிகவும் முக்யமானதான மஹாபாரத, பாகவதக் கதைகள் என்பதால், சுருக்கமாகச் சொல்லிவிடு கிறேன்.

பிற்காலத்தில் த்ரோணருக்கு தரித்ரகாலம் ஸம்பவிக் கிறது. அவர் அப்போது அரசாட்சிக்கு வந்துவிட்ட த்ருபத னிடம், "நம் பழைய க்ளாஸ்-மேட் ஆச்சே" என்ற நினைப்பில் உரிமையுடன் உதவிக்குப் போகிருர். அவர் அதிகார போதையில் 'இந்தப் பஞ்சாங்கக்காரப் பிச்சு நம்மோடு friendship கொண்டாடவா?' என்று நினைத்து அவரை அவமரியாதை பண்ணிவிடுகிருன். இதிலே அவனுக்கு எதிரடி தரவேண்டுமென்று த்ரோணருக்குத் தோன்றி அவர் பிற் காலத்தில் அர்ஜுனனைக் கொண்டு த்ருபதனைச் சிறை பிடிக் கிருர். அப்புறம் போனுல் போகிறதென்று பாதிராஜ்யத் தைக் கொடுத்து அனுப்பிவிடுகிருர். இந்த மானபங்கத்தில் அவனுக்கு வர்மம் வளர்ந்து, த்ரோணரை வதம் பண்ணு வதற்கென்றே ஒரு பிள்ளையைப் பெற்றுக்கொள்ளவேண்டு மென்று யாகம் பண்ணுகிருன். யாகாக்னியிலிருந்து த்ருஷ்டத் யும்னன் உண்டாகிருன். த்ரெளபதியும் அப்போது உத்பவித் தவள்தான். பிற்காலத்தில் அர்ஜுனன் ஸ்வயம்வரப் போட்டியில் ஜயித்து இவளைக் கல்யாணம் பண்ணிக்கொள்ள வரும்போது, "நம்மைப் பூர்வத்தில் ஜயித்துச் சிறை பிடித்த வனுச்சே இந்த அர்ஜுனன்?" என்று த்ருபதன் நினைக் காமல் ஸந்தோஷமாகவே கன்யாதானம் பண்ணுகிருன். காரணம் முன்னே தன்னேடு சண்டை போட்டு அவன் ஜயித்தபோது அவன் காட்டிய வீரபெளருஷத்தில் இவனுக்கு அவனைப் பற்றி உயர்ந்த அபிப்ராயமே உண்டாயிருந்தது. அதனுல் இவன் அவனிடம் ஆத்திரப்படாமல், அவனைத் தூண்டிவிட்டுத் தம்முடைய க்ஷாத்ரத்தைத் தீர்த்துக் கொண்ட த்ரோணரிடமே வர்மம் கொண்டான். கடைசியில்

Koviloor Digital Library

பாரதயுத்தத்தில், இதே அர்ஜுனன் ஆசார்யரான அந்த த்ரோணரோடேயே சண்டை போட வேண்டியதாகிறது. அவருடைய யுத்த ஸாமர்த்யத்துக்கு ஈடு கொடுப்பது ரொம்பக் கஷ்டமானபோது, பொறுப்பை பகவான் (க்ருஷ்ணர்) தன் தலையில் போட்டுக்கொண்டு, அவருக்கு ரொம்பவும் ப்ரியமான ஏக புத்ரன் அச்வத்தாமன் செத்துப் போய்விட்டான் என்று ஸத்ய ஸந்தரான தர்மபுத்ரரைச் சொல்ல வைத்தது எல்லாருக்கும் தெரிந்திருக்கும். அச்வத் தாமன் என்ற யானையை நிஜமாகவே அப்போது ஹதம் பண்ணி, "அச்வத்தாம: ஹத: குஞ்ஜர:" என்று தர்மபுத்ர ரைச் சொல்ல வைத்து "குஞ்ஜர" (யானை) என்று அவர் முடிக்கிற ஸமயத்தில் பகவான் பாஞ்சஜன்யத்தைப் பெரிசாக ஊதி, அந்த வார்த்தை த்ரோணர் காதில் விழாதபடி அமுக்கிவிட்டாரென்று கேள்விப்பட்டிருப்பீர்கள். உடனே த்ரோணர் மனஸ் உடைந்துபோய் அப்படியே ஆயுதங்களைப் போட்டுவிட்டு உட்கார்ந்துவிட்டார். அந்த ஸமயம் பார்த்து த்ருஷ்டத்யும்னன் பாய்ந்து வந்து அவரைக் கொன்றுவிடுகிறான். அவன் பண்ணியதைப் பார்த்துப் பாண்டவ ஸைன்யத்தினர் உள்பட எல்லாரும் 'தகாத கார்யம் நடக்கிறதே' என்று விக்கித்துப் போய் அருவருப்பு அடைந்ததாக பாரதம் சொல்கிறது.

இன்னொரு கதையோ இதற்கு நேர்மாறாக, மனஸுக்கு ரொம்பவும் ஹிதமாகப் போகிறது. க்ருஷ்ண பரமாத்மாவின் ஸஹபாடியான குசேலர், த்ரோணர் மாதிரியே தாரித்ரிய ஸ்திதியில் க்ருஷ்ணரிடம் போகிறார். பகவான் அவரை உதாஸீனப் படுத்தாதது மட்டுமில்லை. அவருக்குப் பரமப் பிரியத்தோடு ராஜோபசாரம் பண்ணி, தன்னுடைய பர்யங் கத்திலேயே (கட்டிலிலேயே) அவரை உட்கார்த்தி வைத்து, அவருக்குப் பாதபூஜை செய்து, ருக்மிணியைக் கொண்டு அவருக்குச் சாமரம் போடவைத்து ரொம்பவும் மரியாதை பண்ணுகிறார். தன் மாயாவித்தனத்தின்படியே அவரை தாரித்ரிய நிவ்ருத்தி பற்றி எதுவும் சொல்லவொட்டாமல்

Koviloor Digital Library

பண்ணி, ஊருக்குத் திரும்ப அனுப்பிவிடுகிறார். அங்கே அவர் போய் சேர்வதற்குள் கனகவர்ஷமாகப் பெய்து, "இது நம் அகந்தானா?" என்று அவர் ஆச்சர்யப்படுமாறு செய்கிறார்.

இந்த வ்ருத்தாந்தம் இவ்வளவு நன்றாகப் போக, த்ரோணர் ஸமாசாரம் ஏன் அப்படி ஒன்றுக்கு மேல் ஒன்று த்வேஷமாகவும், அநீதியாகவும், அஸயத்மாகவும் மனஸை உறுத்துகிறாற்போல் போகிறது என்று யோசிக்கும்போது ஒன்று தோன்றுகிறது. குசேலர் எத்தனை தாரித்ரியமாகட்டும், நஷ்டமாகட்டும் ப்ராம்மண தர்மத்தை விடப்படாது என்று வாழ்ந்து, எளிமையுடனும் நல்ல அன்புள்ளத்துடனும் ஸாது ச்ரேஷ்டராக இருந்திருக்கிறார். அதுவே அவருக்கு இத்தனை மரியாதையை வாங்கிக் கொடுத்திருக்கிறது. த்ரோணரும் மஹாபெரியவர்தான். என்றாலும் ப்ராம்மண தர்மப்படி தநுர்வேதம் சொல்லிக் கொடுப்பதோடு நிற்காமல் அதை மீறி இவரே கையிலே ஆயுதத்தை எடுத்து யுத்தம் செய்ததால்தான் எல்லாம் கோளாறாகப் போயிருந்திருக்கிறது. த்ருபதனோடு இவரே சண்டையில் இறங்காமல் அர்ஜுனனைத்தான் தூண்டிவிட்டார் என்றாலும் கூட, தன்னை த்ருபதன் ஏதோ சொல்லிவிட்டானென்று ப்ராம்மணராகப்பட்ட அவர் இத்தனை மானவமானமும் க்ஷாத்ரமும் பாராட்டிப் பழிவாங்க நினைத்ததே ஸரியில்லைதான். ஆரம்பத்திலிருந்தே அவர் ஆயுத அப்யாஸத்தில் அளவுக்கு மீறி மனஸைச் செலுத்தி அப்பாவிடம் மாத்திரமல்லாமல் பரசுராமரிடம் அஸ்த்ர சிக்ஷை கற்றுக்கொண்டதிலிருந்தே கொஞ்சங் கொஞ்சமாக ஸ்வதர்மத்துக்கு ஹானி ஏற்பட்டிருக்கிறது. இப்படிச் செய்தால் தனக்கும் கஷ்டம், பிறத்தியாருக்கும் கஷ்டம் என்கிற மாதிரியே பிற்பாடு அவர் கதை போயிருக்கிறது. ந்யாயமில்லாத துர்யோதனன் கட்சியில் அவர் யுத்தம் பண்ணும்படி ஏற்பட்டது. இது அவருக்கே எத்தனை வேதனையாயிருந்திருக்கும்? யுத்த பூமியிலானால், அர்ஜுனன் போடுகிற அம்பைவிடக் கூராகத்

Koviloor Digital Library

துளைக்கும் வார்த்தையம்புகளை பீமஸேனன் அவர்மேல் வீசி அவர் ப்ராம்மண தர்மத்தை முறைப்படி நடத்தாததற்காக ரொம்பவும் நிந்தித்திருக்கிறுன். வாயைத் திறக்காமல் அவர் அதையும் வாங்கிக் கட்டிக்கொள்ளும்படியாக இருந்திருக் கிறது.

ப்ராம்மணன் ப்ராம்மணனாக இருக்கிறவரைதான் அவனுக்கு மதிப்பு மரியாதை; இதிலே அவன் தப்பிவிட்டால் மாளாத அகௌரவம்தான் என்ற இரண்டு உண்மைகளையே குசேலர், த்ரோணர் கதைகள் பளிச்சென்று எடுத்துக்காட்டு கின்றன.

புத்தர் கால அந்தணர் நிலைமை

புத்தர்காலத்து ப்ராம்மணரில் பலபேர் அவ்வளவாகத் தமக்குரிய தர்மப்படி இல்லாமலிருந்திருக்கவேண்டும். (நான் த்ரோணர், குசேலர் கதைகளை நம் விஷயத்துக்கு ஸம்பந்த மில்லாதது என்று நினைத்தாலும் அவை கடைசியில் இதற்கே கொண்டுவந்து விட்டிருக்கின்றன!) புத்தர் துக்க நிவ்ருத் திக்கு என்ன காரணம் என்று கண்டுபிடிக்கவேண்டுமென்று ரொம்பவும் பாடுபட்டார்; பண்டிதர்களை (அதாவது அவர் காலத்து ப்ராம்மணர்களை) அவர் கேட்டும் அவருக்கு விளக்கம் கிடைக்கவில்லை; அப்புறம் அவரே ரொம்பத் தபஸ் பண்ணி ஆசைதான் துக்கத்துக்குக் காரணமென்று கண்டு பிடித்தார்; அந்த ஆசைக்கும் காரணம் மாயை; லோகத்தை நிஜம் என்று நினைப்பதுதான் மாயை; இந்த மாயையை ஒழித்துக் கட்டினுல் அதுதான் மோக்ஷம்; 'நிர்வாணம்' என்கிற அந்த ஸ்திதியில் எதுவுமே இருக்காது; ஒன்றுமே இல்லாதபோது 'மாயையும் இல்லை, ஆசையும் இல்லை, துக்கமும் இல்லை என்று கண்டுபிடித்துச் சொன்னுர்— என்று புத்தர் கதையில் பார்க்கிறோம்.

அவர் கண்டு பிடித்ததாகச் சொல்கிற இந்த உண்மை களை அவருக்கு முந்தியே வேத உபநிஷத்துக்களிலும், கீதாதி சாஸ்த்ரங்களிலும் சொல்லித்தானிருக்கிறது. அவர் முடி வாகச் சொன்ன நிர்வாணத்தைப் பற்றி அவரே தீர்மான

Koviloor Digital Library

மாக எதுவும் சொல்ல முடியாமல், அது எல்லாம் அற்றுப் போன ஒரு சூன்யமாகத்தானிருக்க வேண்டும் என்கிற மாதிரி விட்டுவிடுகிறார். நம் சாஸ்த்ரங்களிலோ இதற்கும் மேலே போய் அந்த மோக்ஷ நிலையைப் பாழான சூன்யமில்லை, பரிபூர்ணமான ஸச்சிதாநந்த நிலை என்று நன்றாக விளக்கியிருக்கிறது. ஆனாலுங்கூட அவர் கேள்வி கேட்ட போது இதை எடுத்துக்காட்டக்கூடிய ப்ராம்மணர்கள் இல்லையென்றால் அப்போது அந்த ஜாதி கொஞ்சம் தாழ்ந்துதான் போயிருக்கிறதென்று தெரிகிறதோல்லியோ?

புத்தர், ஜினருந்தான்,[1] முக்யமாகப் பண்ணிய இன்னொன்று, யஜ்ஞத்திலே பலி கொடுப்பது ப்ராணி ஹிம்ஸையாகும் என்று சொல்லி அதைக் கண்டனம் செய்தது தாகும். இந்த இரண்டு புதிய மதங்களிலும் அஹிம்ஸை முக்யம். இவர்கள் கண்டித்த வேத மதத்திலும் அஹிம்ஸை முக்யம்தான். ஸகல மநுஷ்யர்களுக்குமான 'ஸாதாரண தர்மங்கள்'[2] என்ற ஐந்தில் முதலாவதே அஹிம்ஸைதான்.

ஆனாலும், பகவான் லோக வியபாரத்தை தேவர்களும் மநுஷ்யர்களும் பரஸ்பரம் ஸஹாயம் பண்ணிக்கொண்டு நடத்த வேண்டும் என்று ப்ளான் போட்டு அந்த ப்ளான் ரிஷிகளுக்கு ஸ்புரிக்குமாறு செய்திருக்கிறான். இதன்படி ரிஷிகள் தேவர்களுக்கு ப்ரீதி அளிப்பவையான யஜ்ஞங்களை வகுத்தார்கள். இதற்கு ப்ரதியாக தேவர்கள் நமக்கு மழை முதலியவற்றைத் தந்து, இயற்கைச் சக்திகள் என்று சொல்லப்படுபவை மநுஷ்யனுக்கு ஸாதகமாக இருக்குமாறு அநுக்ரஹித்தார்கள். இப்படி தேவ ப்ரீதி செய்யும்போது தான் அவர்களுக்குப் பிடித்தமான பலிகளை ஆஹுதி பண்ண வேண்டி வருகிறது.[3]

---

1. ஜினர் என்பது ஜைன ஸ்தாபகரான மஹாவீரரைக் குறிக்கும்

2. முதற் பகுதி, "பொதுவான தர்மங்கள்" என்ற பிரிவு பார்க்க.

3. இரண்டாம் பகுதியில் "வேதம்" என்ற உரையில் "யஜ்ஞம்" என்பதிலிருந்து "கலியில் ஜீவபலி உண்டா?" என்பது வரையிலான உட்பிரிவுகள் பார்க்க.

Koviloor Digital Library

நமக்கு நல்லது செய்யக்கூடிய தேவர்களுக்கு பலியில் ப்ரியமிருக்கும்படி பகவான் படைப்பானு என்று கேட்டால் ஸரியில்லை. அவன் ஸ்ருஷ்டி விசித்ரம், நமக்குப் புரியாதது. எத்தனையோ அழகாகவும் கம்பீரமாகவும் இருக்கிற சிங்கத்துக்கும், கருடனுக்கும் ஏன் மாம்ஸத்தில் ப்ரியமிருக்கும்படி வைத்திருக்கிறுன்? கமகம என்று புஷ்பிக்கிற செடிகள் தங்களுக்கு ஆஹாரமாக துர்கந்தமெடுக்கும் புழுக்கை மாதிரியான எருக்களைக் கேட்கவில்லையா? இப்படி, நல்லதைச் செய்யும் தேவர்களுக்கும் மந்த்ர பூதமாகி (மந்த்ரத்தால் சுத்திகரிக்கப்பட்டு) அக்னி முகமாக அளிக்கப்படுகிற பலியானது ஆஹாரமாக வேண்டியிருக்கிறது.

வேட்டை நாய்களைக்கொண்டு ராஜ்யத்தில் திருட்டுப் புரட்டுத் தொல்லையில்லாமல் ரக்ஷிக்க வேண்டும் என்று ஒரு ராஜா நினைத்தால் அப்போது அந்த வேட்டை நாய்களுக்கு வேண்டிய மாம்ஸத்தை அதுகளுக்குப் போடத்தானே வேண்டும்? இப்படித்தான் தேவர்களால் லோகத்துக்கு நல்லது பண்ணணும் என்னும்போது அவர்களுக்கு ப்ரீதியான வபா ஆஹுதி கொடுத்துத்தான் ஆகவேண்டும். இதில் இன்னொரு முக்யமான விஷயம்: யஜ்ஞ பசு (பசு என்றுல் மாடு என்று அர்த்தமில்லை. பலியாகிற எந்த ப்ராணியும் யஜ்ஞ பசு என்றுதான் சொல்லப்படும்) வேட்டை நாயின் வயிற்றுக்குள் போன ப்ராணியைப்போல் வெறுமே செத்துப் போய், அங்கேயே ஜெரித்து விடுவதில்லை; யஜ்ஞ பசுவின் ஜீவன் புண்ய லோகத்தையே சென்றடையும்.

நானூறு வருஷம் முந்திதான் அப்பய்ய தீக்ஷிதர் இருந்தார். அவருக்கு ரொம்பவும் கருணை உள்ளமானபடியால், "நான் இப்படி ப்ராம்மண ஜன்மா எடுத்ததால் வாயில்லா ஜீவன்களை வதைத்து யஜ்ஞம் பண்ணியாக வேண்டியிருக்கிறதே!" என்று துக்கப்பட்டாராம். "பரமேச்வரா, இந்த ப்ராணிகள் உன் பாதாரவிந்தத்தை அடைகின்றன என்ற நம்பிக்கையிலேயே இவற்றை யஜ்ஞத்திலே கொடுக்கிறேன். இப்படிச் சொல்லும் வேத வாக்கிலே ஜனங்களுக்கு

Koviloor Digital Library

நம்பிக்கை நீதான் உண்டாக்க வேண்டும்'' என்று சொல்லி வாஜபேய (யாக)ம் பண்ணினாராம். அப்போது ஸகல ஜனங்களும் பார்க்கும்படி ஆகாசத்திலிருந்து விமானம் வந்திறங்கிற்றும். அக்னியிலே எந்தப் பசுக்களின் (அதாவது ஆடுகளின்) வபை ஹோமம் பண்ணப்பட்டதோ அவை திவ்ய சரீரத்தோடு எழும்பினவாம். விமானத்துடன் வந்த கந்தர்வ, அப்ஸரஸ்கள் அந்தப் பசுக்களை உபசரித்து அதிலே ஏற்றிக்கொள்ள விமானம் மேலே ஏறி மறைந்தே போயிற்றும். புராணங்களிலும் இப்படிக் கதைகள் வருகின்றன.

யஜ்ஞ பசுவின் புண்யலோக ப்ராப்தியை ப்ரத்யக்ஷமாகக் காட்டாவிட்டால்கூடப் பரவாயில்லை. விதிவத்தாக யாகம் பண்ணினால் அதனால் லோகத்தில் ஸுபிக்ஷம் உண்டாவது ப்ரத்யக்ஷமாகவே தெரியும்-வரட்சி காலத்தில் கொட்டு கொட்டு என்று கொட்டிக் காட்டும், பஞ்ச காலத்தில் யதேஷ்டமாக மாசூல் காட்டும், வ்யாதிக் காலத்தில் எங்கேயும் ஆரோக்யம் தழைக்க ஆரம்பிக்கும். இதைப் பார்த்தே ஜனங்கள் யஜ்ஞத்தால் தேவ ப்ரீதி ஏற்படத்தான் செய்கிறதென்று புரிந்துகொண்டு ஆதரவு தருவார்கள்.

இன்றைக்கு லாபரட்டரிகளில் மநுஷ்யனுக்கு மருந்து கண்டுபிடிப்பதற்காக, பரிசோதனார்த்தமாக எலிக்கும் முயலுக்கும் ஊசி போட்டு அவற்றைக் கொல்வது ந்யாயமானால், யஜ்ஞத்தில் பசுபலியும் ந்யாயம்தான்.

ஆனாலும் புத்தரும் ஜினரும் யஜ்ஞத்தைக் கண்டனம் பண்ணினபோது யஜ்ஞ பசு புண்யலோகம் போய்ச் சேருவதை நிதர்சனமாகக் காட்டவோ, அல்லது சிஷ்டாசாரத்துடன் க்லுப்தமாக யஜ்ஞம் நடத்தி, அதனால் நிதர்சனமாக லோகத்துக்கு நன்மையைக் காட்டவோ சக்தியுள்ள ப்ராம்மணர்கள் இல்லை போலிருக்கிறது. அதனால்தான் வேத ப்ரமாணத்தை ஆக்ஷேபித்து அவர்கள் புது மதங்கள் உண்டாக்கி ப்ரசாரம் செய்ய முடிந்திருக்கிறது. வேதத்தின் காவலராக இருக்க வேண்டிய ஜாதி அதிலே சக்தி

Koviloor Digital Library

குன்றினுல் அதன் மதிப்பு மரியாதையும் குறைந்து, வேத விருத்தமான மதங்களுக்கு ஆதரவு ஏற்படுகிற அளவுக்குப் போய்விடுகிறது.

த்ரோணர் கதை ஸம்பந்தமில்லாத ஸமாசாரம் என்று சொல்லிக்கொண்டு ஆரம்பித்தேன். ஆனுல் அதில் ப்ராம்மணனின் ஸ்வதர்மம் குன்றியதாகச் சொன்னதி லிருந்து, த்ரோணர் போல ஒரு தனி ஆஸாமி மட்டுமில்லா மல் பரவலாக ஜாதி முழுதிலுமே அநுஷ்டான சக்தி குன்றிப் போனுல் அந்த நிலையில் புத்த, ச்ரமண மதங்கள் போன்ற அவைதிக ஸமயங்கள் வேர் பிடித்து விடுவதைப் புரிந்து கொள்வதில் முடிந்திருக்கிறது!

க்ஷத்ரியரும் ப்ராம்மணரும்

இன்னெரு விஷயமும் தோன்றுகிறது. ப்ராம்மண த்ரோணரை எதிர்த்தவன் க்ஷத்ரிய த்ருபதன். ப்ராமணர்கள் அத்யாபனம் செய்து வந்த வேதத்தையும், அவர்கள் அநுஷ்டானம் செய்த யஜ்ஞ கர்மாவையும் எதிர்த்த புத்தரும் ஜினரும்கூட க்ஷத்ரியர்கள்தான். பிற்காலத்தில், அதாவது தற்காலத்துக்கு ஐநூறு வருஷம் முந்தி வேத ப்ராமாண்யம் (வேதத்தின் 'அதாரிடி'), வர்ணுச்ரமம் ஆகிய வற்றை புத்தர், ஜினர் ஆகியவர்களைப் போலவே ஆக்ஷேபித்து, ஆனுலும் ஹிந்து தர்மத்திலிருந்து அடியோடு முறித்துக்கொண்டு போகாமல் இதிலிருந்தே நாம ஜபம், சப்த ப்ரஹ்ம அநுஸந்தானம் போன்றவற்றை எடுத்துக் கொண்டு ஸிக்கிய மதத்தை ஸ்தாபித்த நானக் யார் என்று பார்த்தால் அவரும் க்ஷத்ரியர்தான்.

கொள்கையை எதிர்த்துப் புதுசாக மதம் பண்ணுமல், ஒரு ப்ராம்மணரிடம் தனிப்பட்ட முறையில் த்வேஷம் கொண்டவர்களாக இருந்தவர்களைப் பார்த்தாலும் த்ரோணரிடம் விரோதம் கொண்ட த்ருபதன், அவருக்கு முந்தி ஜமதக்னி மஹர்ஷியிடம் விரோதம் பாராட்டிய கார்த்தவீர்யன் முதலானவர்கள் க்ஷத்ரியர்களாகத்தான்

Koviloor Digital Library

இருந்திருக்கிறார்கள். த்ருபதனுக்கு ஏளனமாக ஆரம்பித்தது த்வேஷமாக முடிந்தது. கார்த்தவீர்யனுக்கோ ஜமதக்னியிடம் பொறாமையில் ஆரம்பித்தது. 'இந்த ப்ராம்மணன் ஒரு கோவணத்தைக் கட்டிக்கொண்டு குடிசையில் உட்கார்ந்திருந்தாலும் இவனுடைய தபோபலத்தால் அல்லவா நம் புஜபலத்தால் பெறமுடியாத தேவலோகப் பசுவான ஸுரபியைப் பெற்று இஷ்டமானதையெல்லாம் கறக்கும் அதைக் கொண்டு, பரிவாரத்தோடு வந்திருக்கும் நமக்கு இவனுடைய பத்னி இவ்வளவு விருந்துபசாரம் பண்ண முடிகிறது?' என்ற பொறாமை கார்த்தவீர்யார்ஜுனனுக்கு முற்றிப் போய்த்தான் த்வேஷமாக ஆகி அவன் அந்த மஹர்ஷியை வதம் பண்ணியது. இதேபோல ப்ராம்மண வஸிஷ்டரிடம் க்ஷத்ரிய விச்வாமித்ரருக்கு ஏற்பட்ட மாத்ஸர்யம், அவர் போட்ட போட்டி, அப்புறம் "வஸிஷ்டர் வாயால் ப்ரம்மரிஷி" ஆனது எல்லாமும் கேள்விப் பட்டிருப்பீர்கள். நம்முடைய சாஸ்த்ர புராணங்களில் ரொம்பக் குறைவான இடங்களில்தான் என்றாலும், அங்கங்கே இப்படி ப்ராம்மணனின் தபோ பலத்துக்கும், க்ஷத்ரியனின் புஜபலத்துக்குமிடையே மோதல் ஏற்பட்டதாகப் பார்க்கிறோம்.

இதை ஆராய்ந்து பார்த்தோமானால் தற்போது வர்ணதர்மத்தை ஆக்ஷேபித்து எழுப்பப்படும் ஒரு புரளி உடைபட்டுப் போய்விடும். தற்காலச் சீர்திருத்தவாதிகள் என்ன சொல்கிறார்கள் என்றால், துருக்கர், வெள்ளைக்காரர் முதலிய அந்நிய தேசத்தார் இத்தனை பெரிய நம்முடைய உபகண்டத்தை அவர்களுடைய ஆதிக்கத்தின் கீழ்க் கொண்டு வந்ததற்குக் காரணமே வர்ண விபாகத்தால் நம்முடைய ஸமுதாயம் பிளவுபட்டு பலஹீனமாயிருந்ததுதான் என்று சொல்கிறார்கள். உள்ளர்த்தம் என்னவென்றால், பிராம்மணர்கள் ராஜாக்களைக் கையில் போட்டுக்கொண்டு மற்ற ஜனங்களை ரொம்பவும் தாழ்த்தி வைத்திருந்தார்கள். இதனால் மனம் கசந்து போயிருந்த மெஜாரிடியான மற்ற ஜாதிக்காரர்கள், 'ராமன் ஆண்டால் என்ன?

Koviloor Digital Library

ராவணன் ஆண்டால் என்ன?' என்று அந்நியர் படையெடுத்தபோது, தங்கள் ராஜாவுடன் ஒத்துழைக்காமலோ, அல்லது அந்நியர்களுக்கு ஸஹாயமே செய்தோ நாம் தோற்றுப் போகும்படியாகப் பண்ணினார்கள் என்பதுதான். ப்ராம்மணர்களைக் குற்றவாளிகளாகப் பண்ணவேண்டும் என்ற எண்ணத்தில் கற்பித்திருக்கிற இந்த அபிப்ராயப்படி உண்மையில் இதர ஜாதியினர்தான் பெரிய குற்றவாளிகளாக ஆக்கப்படுகிறார்கள். தங்களுக்கு உயர்வு இல்லை என்பதற்காக தேசத்தையே பிறரிடம் அவர்கள் காட்டிக் கொடுத்ததாகத்தானே இந்த அபிப்ராயப்படி ஆகிறது? இம்மாதிரி, அவர்கள் ப்ரம்ம - க்ஷத்ரியர்களிடம் த்வேஷம் கொண்டிருந்ததாகவோ, அந்நியர்களுக்கு ஆதரவாக இருந்ததாகவோ சரித்ர ரீதியில் ஸாக்ஷியே கிடையாது. ஆனாலும் இப்படிச் சான்று எதுவும் காட்டாத அந்த சரித்ர புஸ்தகங்களை எழுதியுள்ள வெள்ளைக்காரர்களும், அந்த வெள்ளைக்காரர்களின் மனப்பான்மையிலேயே ஊறிப்போய் விட்ட நம்மவர்களும், "வர்ணபேதம் இருந்ததால்தான் ஹிந்து ஸமுதாயம் கட்டுக்கோப்பில்லாமல் பிறர் ஆதிக்கத்தில் அடிக்கடி விழுந்தது" என்று திரும்பத் திரும்பச் சொல்கிறார்கள்.

நம் ராஜாக்களுக்குள்ளேயே ஒற்றுமையில்லாமலிருந்ததால்தான் அந்நியருக்கு இங்கே ஆதிக்கம் கொடுத்துப் போயிற்றே ஒழிய வர்ண விபாகத்தினால் ஏதோ உட்பூசல் ஏற்பட்டிருந்ததால் இல்லவே இல்லை.

சற்று முன் காட்டிய மாதிரி, எப்போதாவது இரண்டு வர்ணங்களிடையே மோதல் ஏற்பட்டது என்றால் அது ப்ராம்மணர்களுக்கும் க்ஷத்ரியர்களுக்கும் இடையேதான்.

வைதிகத்தில் நான்காம் வர்ணத்தவரின் அபிமானம்

வைச்ய - சூத்ர ஜாதியினர் ப்ராம்மணரை த்வேஷித்து, அந்த ஜாதி அழியவேண்டும் என்று இந்த நூற்றாண்டு ஆரம்பம் வரை நினைத்ததேயில்லை. இப்போதுங்கூட முதலில்

Koviloor Digital Library

க்ஷத்ரியர்தான் ப்ராம்மண ஆதிக்கத்தை எதிர்த்தது. மற்றவர்களுக்கு முந்தி ப்ராம்மணன் தன் தர்மம் கெட்டு, வெள்ளைக்காரன் தந்த படிப்பு, வேலை முதலியவற்றில் போய் விழுந்தான். ஸம்ஸ்தானுதிபதிகள், ஜமீந்தார்கள் ஆகியவர்களின் அதிகாரமெல்லாம் வெள்ளைக்காரன் கைக்குப் போய் விட்ட ஸமயம் அது. அதனுல் அசல் க்ஷத்ரியர்கள், அல்லது அந்த ஸ்தானத்திலிருந்தவர்கள்தான் அப்போது தங்களுடைய செல்வம், செல்வாக்கு முதலியவற்றில் ரொம்பவும் பாதிக்கப்பட்டிருந்தவர்கள். ஒரு ராஜ்யம் கைமாறுகிறது என்ருல் அப்போது ராஜ வம்சத்தினரும் ப்ரபுக்களும்தானே அதிகம் பாதிக்கப்படுவார்கள்? இப்படித்தான் ஈஸ்ட் இன்டியா கம்பெனிக்கும், அப்புறம் (ப்ரிட்டிஷ்) எம்பயருக்கும் இந்தியா கைமாறியபோது நடந்தது. ஆனபடியால் அதற்கப்புறம் ப்ராம்மணர்களே வெள்ளைக்காரர்களின் புது ஆட்சியில் படிப்புக்கும் உத்யோகத்துக்கும் அதிகமாகப் போய்ச் சேர்ந்தபோது ராஜ வம்சம், ஜமீந்தார் வம்சத்துக்கு எரிச்சல் ஏற்படக்கூடியது ஸஹஜம்தானே? 'வெள்ளைக்காரன் நம் பழைய அந்தஸ்தை அடித்துப்போட்டது தொலையட்டும். அது பழைய கதை. இப்போது அவன் தருகிற படிப்பு, பதவிகளைப் பெற்ருவது நாம் தலைதூக்கலாம் என்ருல், ப்ராம்மணன் அல்லவா போட்டியாய் வந்திருக்கிருன்? பாரம்பர்யமான புத்தி ப்ரகாசத்தால் நம்மைப் பின்னுக்குத் தள்ளுகிருன்?' என்ற எண்ணம் அவர்களுக்கு ஏற்படக் கூடியதுதானே? அதனுல்தான் க்ஷத்ரியர்களும், மற்ற அப்ராம்மண ப்ரபுக்களும் முக்யஸ்தர்களாக இருந்த ஜஸ்டிஸ் பார்ட்டி உண்டாயிற்று. பிற்பாடுதான் மனுேபேதம் பரவிப் பரவி மற்றவர்கள் 'பார்ப்பான் ஒழிக' என்று கிளம்பியது.

முன்னுளில் எந்த அளவுக்கு நாலாம் வர்ணத்தவர் வைதிக அபிமான முள்ளவர்களா யிருந்தார்களென்பதற்கு ஒரு அழுத்தமான எடுத்துக்காட்டு தெரிகிறது. ப்ராம்மணராகவே கன்னடதேசத்தில் பன்னிரண்டாம் நூற்ருண்டில் பிறந்த பஸவர் என்பவர் ஒரு சைவ ஸம்ப்ரதாயத்தை

Koviloor Digital Library

ஏற்படுத்தியிருக்கிறார். வீரசைவம் என்கிற அது, வேதியர் ஒருவராலேயே உருவாக்கப்பட்ட போதிலும் வேத ப்ராமாண்யம், வர்ண விபாகம் (ஜாதிப்பிரிவினை) முதலியவற்றைக் கண்டனம் செய்கிறது. இதற்கு அடுத்த நூற்றாண்டில் தமிழ் நாட்டில் வேளாளர் வகுப்பில் பிறந்த மெய்கண்டார் சைவ ஸித்தாந்தத்தை ஏற்படுத்தினார். தமக்கு சிறிது காலந்தான் முன்னால் ஒரு ப்ராம்மணரே அவைதிகமாக சிவமதம் உண்டாக்கியிருந்தும் இவர் வேத நெறிக்கு உடன்பட்டதாகவும், உட்பட்டதாகவுமே தம்முடைய ஸம்ப்ரதாயத்தை உருவாக்கியிருக்கிறார்! வேதியர்களுக்கும் வேளாளர்களுக்கும் நல்ல ஒற்றுமை எப்போதும் இருந்து வந்ததால்தான் இப்படியிருந்திருக்கிறது.

ப்ரம்ம - க்ஷத்ர மோதல் என்பதுங்கூட எப்போதாவது ஏற்பட்டதுதான். நூற்றுக்குத் தொண்ணூற்றொன்பது, ப்ராம்மணரும் க்ஷத்ரியரும் மனமொத்துத்தான் போயிருக்கிறார்கள். எப்போதேனும் பேதம் உண்டான ஸமயத்தில் கூட ஸமூஹச் செல்வாக்குப் படைத்த ப்ராம்மணர்கள் தங்களிடம் ஸௌஜன்யமில்லாத ஸ்வதேச ராஜாக்களுக்கு விரோதமாக அந்நியப் படையெடுப்புக்காரர்களுக்கு ஒத்தாசை செய்ததாக 'ஹிஸ்டாரிகல் எவிடென்ஸ்' (சரித்ரச் சான்று) அடியோடு கிடையாது. மந்த்ராலோசனையில் முக்யப் பொறுப்பு வஹித்தவர்களும், ஊராட்சி ஸபைகளில் அங்கத்தினர்களாக இருந்தவர்களுமான ப்ராம்மணர்கள் ராஜாவை காட்டிக்கொடுத்து த்ரோஹம் செய்ததாக எங்கேயும் இல்லை. அதாவது வர்ண பேதத்தால் தேச ஆட்சி பாதிக்கப்பட்டது என்பதற்கு ஆதாரமே இல்லை.

'வர்ண பேதத்தால் ஜனங்களுக்குள் ஐக்யமில்லை. அதோடு, குறிப்பாக ஜனத்தொகையில் பெருவாரியான நாலாம் வர்ணத்தினர் தாழ்த்தப்பட்ட மனப்பான்மையில் எவ்வித ஊக்கமுமில்லாமல் இருந்தார்கள். இதனால்தான் தேசம் சக்தி இழந்து அடிக்கடி அந்நிய தேசத்தாருக்கு

Koviloor Digital Library

வசமாயிற்று' என்று சொல்லும் குற்றச்சாட்டுக்குக் கொஞ்சமும் ஆதாரமில்லை என்பதற்காகவே சொல்கிறேன்.

தேச ஒருமை வேத தர்மத்தினுலேயே; பிற தர்மங்களால் கட்டுக்குலேவே!

இன்னும் சொல்லப் போனால் உண்மை நிலைமை இதற்கு நேர்மாறானது. என்னதான் சரித்ரத்தை twist பண்ணி (திரித்து)ச் சொல்வதென்றாலும் மறைக்கமுடியாமல் கால வாரியாகப் பல ஸம்பவங்கள் நடந்தபோது உண்மையைத் தெரிவிக்கும்படிதானே ஆகும்? இப்படி வெள்ளைக்காரர்கள் எழுதிய சரித்ரத்திலிருந்தே சூசகமாகத் தெரிவது என்னவென்றால், இப்போது தப்பாக நினைக்கப்படுவதற்கு நேர் எதிராக, வேத மதத்தின் வர்ணாச்ரம தர்மங்கள் செவ்வனே அநுஷ்டிக்கப்பட்ட காலங்களில்தான் தேசத்திலே உறுதியான 'யூனிடி' (ஒருமைப்பாடு) ஏற்பட்டிருக்கிறது; 'எம்பயர்' என்றும் 'பேரரசு' என்றும் சொல்லும் மஹத்தான ஸாம்ராஜ்யங்களும் அவற்றை ஆள்கிற சக்ரவர்த்தி வம்சங்களும் இருந்திருக்கின்றன; அந்நிய தேசத்தார் படையெடுத்து வாலாட்டுவது அப்போதுதான் மிகவும் குறைவாக இருந்திருக்கிறது; வேதத்துக்கு முரணான அஹிம்ஸா மதங்களை ஆதரித்த ராஜாங்கங்களின் கீழேதான் தேச ஐக்யம் குலைந்து, அங்கங்கே உதிரி உதிரி ராஜ்யங்கள் தோன்றுவதாகவும் அந்நிய தேசத்தார் வந்து ஸுலபமாக ஆக்ரமிப்பு நடத்துவதாகவும் இருந்திருக்கிறது.

வெள்ளைக்காரர்கள் எழுதிய ஹிஸ்டரியிலேயே இப்படி சூசகமாகத் தெரிகிறது. இந்த உண்மையை நாம் ஸ்வதந்த்ரம் பெற்றபின் நம்மிலேயே பெரிய ஹிஸ்டாரியன்களாக உள்ள முன்ஷி போன்றவர்கள் நம்முடைய சரித்ரத்தை உள்ளபடி புனர்நிர்மாணிக்க வேண்டுமென்று முயற்சி பண்ணி எழுதுவது வெளிப்படையாகவே அழுத்தமாகத் தெரிவிக்கிறது.

முன்ஷி என் மாதிரி ஸநாதன மடிஸஞ்சி கோஷ்டி இல்லை. "சீர்திருத்தம்" என்ற கொள்கைகள் உடையவர்

Koviloor Digital Library

தான். காந்திக்கு ஆப்தர். நேருவின் மந்த்ரிஸபையில் இருந்திருப்பவர். ஆகையினால் அவரை ஜாதி தர்மம் வேண்டும் என்று பிடிவாதம் பிடிக்கிற "பிற்போக்குக்காரரர்கள்" எனப்பட்டவர்களோடு சேர்ப்பதற்கேயில்லை. ஆனாலும் ஸத்யம் என்ற கண்ணோட்டத்திலேயே அவரும் அவரைப் போன்றவர்களும் இப்படி (மேலே காட்டியபடி) சொல்லியிருக்கிறார்கள்.

நல்ல வைதிக ஆசரணையுடன் வர்ணாச்ரம பரிபாலனம் பண்ணிச் சக்ரவர்த்தியாகயிருந்த சந்த்ரகுப்தன் ஆட்சியில் சீரும் சிறப்புமாயிருந்த மௌர்ய ஸாம்ராஜ்யம், பௌத்தத்தில் தீவ்ர அபிமானமுள்ள அசோகனுக்கு அப்புறம் சிதறிப்போய் 'சகர்'கள் என்னும் Scythians, க்ரீஸின் ஆதிக்கத்தில் Asia Minor என்கிற மத்ய ஆசியாவிலிருந்த பாக்ட்ரியா என்ற பகுதியைச் சேர்ந்தவர்கள், Parthians என்பவர்கள், குஷானர்கள் முதலிய அந்நியர்களுக்கும், இன்னும் பல அநாகரிக ம்லேச்சக் கூட்டங்களுக்கும் கைமாறியது; அப்புறம் மறுபடியும் நல்ல வைதிக வர்ணாச்ரமப் பற்றுடன் வந்த புஷ்ய மித்ர சுங்கர் சக்ரவர்த்தியாக அச்வமேதம் பண்ணி தேசத்துக்குப் புது ரத்தம் பிடிக்கச் செய்தது; இதற்கப்புறமும் சக்ரவர்த்தியாக அச்வமேதம் செய்த ஸமுத்ரகுப்தன், சந்த்ரகுப்த விக்ரமாதித்யன் (முன்னே சொன்னது மௌர்ய வம்ச சந்த்ரகுப்தன், இது குப்த வம்சத்து சந்த்ரகுப்தன்) முதலியவர்களின் ஸாம்ராஜ்யம் நல்ல வர்ணாச்ரம தர்மக்கட்டோடு தலை நிமிர்ந்து உன்னதமாக நின்றது—முதலான பல விஷயங்களை இவர்கள் எடுத்துக்காட்டி, வர்ண தர்மம்தான் முக்யமாக ஸமூஹ ஒற்றுமைக்கும், ஸமூஹ சக்தியைக் கிளறிவிட்டு ஜ்வலிக்கச் செய்வதற்கும் காரணமாயிருந்தது என்று சுட்டிக் காட்டியிருக்கிறார்கள்.

"தனக்கென்று இது காத்துக்கொடுக்கப்பட்ட தொழில்; தன்னை ரக்ஷிக்க இப்படி ஒன்று நிச்சயமாயிருக்கிறது" என்ற அபிமானமும் தெம்பும்; அப்புறம் இப்படி ஒரு தொழிலார்

Koviloor Digital Library

ஸமூஹம் முழுதும் ஜாதி என்று ஒரு கட்டின் கீழ் ஒற்றுமையுடன் இருப்பதில் அவர்களுக்குள் உறவு முறை மாதிரியான பற்றில் பிறந்த ஜீவ சக்தி; வகைதொகை செய்த இப்படிப் பட்ட பல ஜாதிகள் ஒன்றுக்கொன்று கை கொடுத்துக் கொண்டு, இட்டு நிரப்பிக் கொண்டிருப்பதில் அனைவரையும் சேர்த்துப் பிடித்து வைக்கிற ஒட்டுறவு ஏற்பட்டு தேச ஸமுதாயம் முழுதற்குமே இருந்த ஒற்றுமைச் சக்தி; பௌத்த ஜைனர்கள் சொன்ன நிர்வாணம், கைவல்யம் என்று மனஸில் ஒட்டாத தத்வமாக இல்லாமல் கல்யாண குண நிலயமான தெய்வங்களையும், நம்மாதிரி மநுஷ்யர்களாக இந்த பூமியிலேயே வந்து கல்யாணம் பண்ணிக்கொண்டு, குழந்தை குட்டி பெற்றுக்கொண்டு, ராஜ்ய பரிபாலனம் செய்து, (அஹிம்ஸைக் கொள்கை என்று அக்ரமத்தை எதிர்க்காமல் விட்டு விடாமல்) அதர்ம சக்திகளோடு பராக்ரமத்துடன் யுத்தம் செய்து ஜயித்த ராமன் க்ருஷ்ணன் முதலான அவதாரங்களையும் கொண்ட ஹிந்து மதம் கொடுத்த கார்ய சக்தி—இவை எல்லாம்தான் வைதிக ஆசரணை இருந்த ஸமயங்களிலேயே இங்கே மஹாஸாம்ராஜ்யங்களை ஏற்படுத்தின என்று அவர்கள் சொல்வதிலிருந்து எவருக்கும் புரியும்.

ஒரு 'எக்ஸ்ட்ராக்ட்' முன்ஷி எழுதியதிலிருந்து ஒரு பத்ரிகையில் பார்த்தேன். அதிலே பௌத்த விச்வாஸமுள்ள ஹர்ஷ வர்தனன் பெரிய ஸாம்ராஜ்யம் எழுப்பினதாக நினைப்பதுகூட அவ்வளவு ஸரியில்லை என்று காட்டியிருக்கிறார். மஹாகவியான பாணன், ஹர்ஷன் தன்னுடைய 'பேட்ரன்' (போஷகன்) என்பதால் கொஞ்சம் மிகைபடவே எழுதிய "ஹர்ஷ சரித்ரம்" பிராபல்யம் பெற்றதிலேயே இம்மாதிரி ஸரியில்லாத ஒரு அபிப்ராயம் பரவி விட்டதாகச் சொல்லியிருக்கிறார். அவனுக்கு முன்னிருந்த குப்த ஸாம்ராஜ்யத்தோடு ஒப்பிட்டுப் பார்த்தால் ஹர்ஷனின் ராஜ்யம் சின்னதே என்றும், அதுவுங்கூட குப்தர்கள் ஹிந்து தர்மத்தைக் கொண்டு தங்கள் ஸாம்ராஜ்யத்தை நீண்டகாலம் காத்ததுபோலக் காக்கப்படாமல், ஹர்ஷனின் தலை சாய்ந்தவுடன் தானும் சாய்ந்துவிட்டது என்றும் காட்டியிருக்கிறார்.

Koviloor Digital Library

வர்ணாச்ரம வ்யவஸ்தை இல்லாவிட்டால் ஜன ஸமுதாயம் எந்தப் பிடிப்புமில்லாமல் நெல்லிக்காய் மூட்டையாகச் சிதறிச் சோகைபிடித்துப் போகிறது என்பதையும், அந்நிய தேசத்தார்களின் பசிபிடித்த கண்ணுக்கு எப்போதும் இலக்காக இருந்த நம் தேசத்தின் ராஜாங்கங்களை அஹிம்ஸா தத்வம் நிச்சயமாக பலஹீனப்படுத்தி பலியாக்கிவிடும் என்பதையும் பெரும்பாலான பௌத்த—சமணச் சார்புள்ள ராஜாக்களும் உணர்ந்திருக்கவே செய்தனர். அதனால் அவர்கள் பெயருக்கு அந்த மதஸ்தர்களாயிருந்தாலும், சைத்யம் விஹாரம் நிறையக் கட்டிப்போட்டாலும், யுத்தமும் செய்து கொண்டுதான் இருந்தார்கள். அதோடு ஜனங்கள் வர்ண தர்மப்படியே தொழில் செய்து கொண்டு நீடிப்பதை ஆமோதித்து அநுமதித்து வந்தார்கள். க்ஷீணமாகி வந்தாலும், அவர்கள் காலத்திலும் இருந்துவந்த சில ஸத் ப்ராம்மணர்களை அவர்கள் ஆதரித்தே இருந்திருக்கிறார்கள்.

ப்ராம்மணர்களின் வர்ணதர்மக் கட்டுப்பாட்டால் தேசத்தின் சக்தி ஹீனமடைந்து அசலார் இங்கே புகுந்து கொண்டு விட்டார்களென்ற குற்றச்சாட்டுக்கு முற்றிலும் மாறாக, அசோகனுக்கு அப்புறம் மௌர்ய ஸாம்ராஜ்யம் படுத்துப்போனபோது 'டெக்கானி'ல் (தக்காணம் எனும் தக்ஷிணபாரதத்தில்) மறுபடி ஜனசக்தியை ஒன்று திரட்டி சாதவாஹன ஸாம்ராஜ்யத்தை ஸ்தாபித்ததே ஒரு ப்ராம்மணன்தான்!

எதையாவது சொல்லி, ஒரு குடும்பமாக ஒன்று பட்டிருந்தவர்களைக் கலைத்துக் கொடுத்து, அவர்களில் ஒரு பிரிவினரின் மனஸில் விஷ வித்தைப் போட்டுவிடக்கூடாது என்பதற்காகத்தான் இவ்வளவு சொல்கிறேன்.

அத்வைதமும் அரசாங்கமும்

வர்ணதர்மம் தேச ஒற்றுமையைக் குலைத்தது என்கிற புரளி மாதிரி இன்னொன்று சொல்வதையும் கொஞ்சம் உடைத்துவிடுகிறேன். 'மாயை மாயை என்று லோகத்தை

Koviloor Digital Library

ஆசார்யாள் சொன்னதால் ஹிந்துக்கள் கார்ய ஸாஹஸமே யில்லாமல் த்ராபையாக ஆகிவிட்டார்கள். அதனுல்தான் இந்தியா வெளிதேசத்தவர்களுக்கு அடிமைப்பட்டது' என்று சொல்கிருர்கள். அத்வைதத்தையோ, மாயையையோ ஆசார்யாள் ஸர்வஜனங்களும் ஏற்று நடத்தவேண்டிய தத்வங்களாகச் சொல்லவேயில்லை. அவர்களைக் கர்மாநுஷ்டானத்திலும், பக்தி வழிபாட்டிலும்தான் அவர் கொண்டு வந்தார். பக்வப்பட்டபின்தான் அத்வைதத்துக்கும், 'மாயா டாக்ட்ரின்' என்கிருர்களே அதற்கும் போகச் சொன்னுர்.

சரித்ர பூர்வமாக ப்ரத்யக்ஷத்தில் தெரிவதை எடுத்துக் காட்டினுல் போதும். பரம அத்வைத்களாக இருந்த மூன்று பேர்தான்—மூவரும் ப்ராம்மணர்களே—மூன்று ஆக்கசக்தி பொருந்திய ஹிந்து ஸாம்ராஜ்யங்களை ஸ்தாபிக்கக் காரணமாக இருந்தவர்கள்.அந்த மூன்று பேரில் ஒருவர் ப்ரம்மசாரி, இன்னெருவர் க்ருஹஸ்தர், மூன்ருமவர் ஸந்நியாஸி என்பது ஒரு ஸ்வாரஸ்யமான விஷயம்.

மாலிக் காஃபூர் தெற்கே ராமேச்வரம் வரையில் போய் ஆலயங்களைச் சின்ன பின்னப் படுத்தி ஹிந்து ஸமூஹத்தின் மீது ரணகாயம் ஏற்படுத்திவிட்டுப் போனபின் மறுபடி நம்முடைய நாகரிகம் தலைதூக்கிப் பெருமைக்குரிய ஸ்தானத்தைப் பெற்றது விஜயநகர ஸாம்ராஜ்யத்தினுல் தான். அதைப் பதிநாலாம் நூற்ருண்டின் ஆரம்பத்தில் ஸ்தாபித்துக்கொடுத்தது யாரென்ருல் அத்வைத ஸந்நியாஸியாக ஆசார்ய பீடத்திலேயே இருந்த வித்யாரண்ய ஸ்வாமிகள்தான்.

விஜயநகர ஸாம்ராஜ்யத்திலிருந்தே கிளை மாதிரி தஞ்சாவூர் நாயக் வம்ச ராஜ்யத்தை ஸ்தாபிக்கக் காரணமாயிருந்தவர் க்ருஹஸ்தராயிருந்தாலும் "அத்வைத வித்யாசார்ய" ரென்றே கூறப்பட்ட கோவிந்த தீக்ஷிதராவார்.

அவுரங்கஜீபின் மதவெறியில் ஹிந்து ஸமுதாயம் நசித்துப் போகாமல் அதற்குப் புது ஜீவன் ஊட்டி மஹாராஷ்ட்ர ஸாம்ராஜ்யம் ஏற்படுத்தியது சிவாஜி என்ருல், அந்த

Koviloor Digital Library

சிவாஜிக்கு ஜீவ சக்தி ஊட்டித் தட்டி எழுப்பியது அவனுடைய குருவும், பரம அத்வைதியும், சுத்த ப்ரஹ்மசாரியுமான ஸமர்த்த ராமதாஸ்தான்.

நிரம்பவும் விஷயம் தெரிந்தமாதிரி காட்டிக்கொண்டு பொறுப்பில்லாமல் அபிப்ராயம் சொல்லி நம்முடைய பெரிய ஆத்மிக,ஸமய கலாசாரத்தில் நமக்குத் தாழ்வு மனப்பான்மை உண்டாகும்படிச் செய்கிறார்களென்று காட்டவே இதையெல்லாம் சொல்கிறேன்.

ஜனங்களின் மதிப்பிலே யாருக்கு உயர்ந்த ஸ்தானம், வித்தையில் யார் ஓங்கி இருக்கிறார்கள் என்பதைப் பார்த்து ஹிந்து ஸமுதாயப் பிரிவுகளுக்குள்ளே போட்டி பொறாமைகள் இருந்ததேயில்லை. அப்படி கொஞ்சம் எங்கேயாவது தலை தூக்கினால்கூட அது க்ஷத்ரியர்களுக்கு ப்ராம்மணர்களிடம் ஏற்பட்டதாகத்தானிருந்தது.

மோதலிலும் மரியாதைப் பண்பு

ப்ராம்மண - க்ஷத்ரிய மோதல் ஏற்பட்ட ஸமயங்களில் கூட நம்முடைய உத்தமமான தேசப் பண்புக்குரிய சில ப்ரத்யேக அம்சங்களைப் பார்க்கிறோம். மற்ற தேசங்களில் போப்புக்கும் ராஜாங்கத்துக்கும் அபிப்ராய பேதம், உலேமாவுக்கும் ஸுல்தானுக்கும் கருத்து வேற்றுமை என்றால் அதை அசல் சண்டையாகவே போட்டுத்தான் தீர்த்துக் கொண்டிருக்கிறார்கள். வெட்டு, குத்து என்று இறங்கியிருக்கிறார்கள். இங்கேயோ இப்படி புஜபலத்தைக் காட்டி ப்ராம்மணனை அடித்துப் போடுவது என்று ராஜாக்கள் ஒருபோதும் செய்ததில்லை. இப்போது திரித்துச் சொல்வதுபோல ப்ராம்மணன் எல்லார் தலைமீதும் உட்கார்ந்து நசுக்கிக் கொண்டு கொட்டமடித்திருந்தானென்றால், இம்மாதிரி ராஜவம்சத்தினருக்கும் ப்ராம்மணர்களுக்கும் கொஞ்சம் மோதல் உண்டான ஸமயங்களில் மற்ற பொது ஜனங்களெல்லாம் சேர்ந்து க்ஷத்ரியர்களை உசுப்பிவிட்டு ப்ராம்மணர்களை ஒழித்துக் கட்டும்படிப் பண்ணியிருப்பார்கள். இப்படி நடந்ததே இல்லை.

Koviloor Digital Library

கையிலே கத்தியைப் பிடித்த ஒரு ஜாதியினர் மோதலின் போதும் இப்படி மரியாதைக்குக் கட்டுப்பட்டிருந்தார்கள்; வேதத்தில் அதிகாரம் பெறுதபோதிலும் ஜனங்களில் பெரு வாரியாக இருக்கிற ஜாதியாரும் இம்மாதிரி ஸந்தர்ப்பங் களில் தூபம் போட்டுச் சண்டை மூட்டிவிடாமலிருந்திருக் கிறுர்கள் - என்பது அந்த ஜாதியாருடைய உத்தமப் பண்பைக் காட்டுகிறது என்பது வாஸ்தவம்.

அறிவுரீதியிலேயே எதிர்ப்பு

ஆனுல் இதை அதோடு முடித்து விடுவதற்கில்லை. நிஜ மாகவே அறிவுச் செருக்கும், ஜாதிக்கொழுப்பும் படைத்தவர் களாக ப்ராம்மணர்கள் இருந்தால் எத்தனை பண்புள்ள இதர ஜாதியாரும் அவர்களுக்கு உயர்ந்த ஸ்தானம் கொடுத்து வைக்க முடியுமா? ந்யாயமாகவே பார்த்தாலும் இப்படித் திமிரும் அஹந்தையும் பிடித்தவர்களாக ஒரு ஜாதி இருந்தால் அதை அடக்கி, ஒடுக்கித்தானே வைக்க வேண்டும்? தேஹபலம் போதாத ஒரு ஜாதியை ஸுலப மாகவே இப்படி அடக்கியும் போட்டுவிடலாமே! இப்படி யெல்லாமிருந்தும் அம்மாதிரி அடக்கவில்லையென்றுல், இதிலிருந்து என்ன தெரிகிறது? ப்ராம்மணர்களும் நிஜ மாகவே மரியாதைக்குகந்த நல்ல குணசீலங்களையும், சிறந்த புத்தி வன்மையையும் பெற்றவர்களாகத்தான் இருந்திருக்க வேண்டும் என்று தெரிகிறது.

இப்படிப்பட்ட புத்தியை அவர்களுக்கு அளித்தது வித்யை; புத்தி மட்டுமில்லாமல் அதோடு குணசீலங்களைத் தந்தது அக்கால வித்யாப்யாஸ முறை—குறிப்பாக குருகுல முறை.

அபூர்வமாக ப்ராம்மண எதிர்ப்பு வலுவாக ஏற்பட்ட போதும் அது பௌதிக பலத்தைக் காட்டிச் செய்த எதிர்ப்பாக இல்லாமல் வேத மதத்துக்கு விரோதமாகவோ வித்யாஸமாகவோ இன்னெரு மதத்தைக் காட்டி ஸித்தாந்த

Koviloor Digital Library

ரீதியில் செய்த எதிர்ப்பாகவே இருந்ததும் ப்ராம்மணர்களின் வித்யா பலத்துக்குச் சான்றேயாகும். பௌத்த, சமண, ஸிக்கிய மதங்கள் தோன்றியதைத்தான் சொல்கிறேன்.

ஸிக்கிய மதத்தை பௌத்தத்தையும் சமணத்தையும் போல் அவ்வளவு வேத விரோதமானது என்று சொல்லக்கூடாதுதான். வேத மதத்துக்கு முதுகெலும்பாயுள்ள வர்ண, தர்மம், சடங்குகள் ஆகியவற்றை அந்த மதம் விலக்கிவிட்டாலுங்கூட, தன்னைத் தாய் மதத்துக்கு விரோதமானதாக ப்ரகடனம் பண்ணிக்கொண்டதில்லை. துருஷ்கரின் கொடுங்கோன்மைக்கு ஆளான ப்ராம்மண பண்டிதர்களுக்குத் தஞ்சம் கொடுத்து, அவர்களுக்காகத் துருஷ்கர்களோடு யுத்தமே செய்த ஸிக்கிய குருமார்கள் உண்டு.

க்ஷத்ரியர்களான புத்தர், ஜினர், நானக் முதலானவர்கள் ப்ராம்மணர்கள் எந்தத் துறையில் சிறப்புப் பெற்றிருந்தார்களோ, அந்த ஸமயத் தத்வத்திலேயே புதிய அபிப்ராயங்களையும் வழிகளையும் ஸாத்விகமான ரீதியில் காட்டித்தான் அவர்களோடு மோதினார்கள்.

அக் காலங்களில் ப்ராம்மணர்கள் ஆத்ம பலத்தில் கொஞ்சம் பின்னே போயிருந்தாலும் அவர்களிடம் பாரம்பர்யமாக வந்திருந்த சாஸ்த்ரத்தின் பலம்தான் அவர்களுடைய உண்மையான பலம் என்று புரிந்துகொண்டே அந்த சாஸ்த்ரங்களைத் தாக்கி ஜயிப்பதுதான் அவர்களை ஜயிப்பதாகுமே தவிர அவர்களையே ஸ்தூலமாகத் தாக்குவது அல்ல என்று அவர்களிடம் மனோபேதம் கொண்ட க்ஷத்ரியர்களுக்கு ஒரு உணர்ச்சி இருந்திருக்கும் போலிருக்கிறது. 'ரேஸ் கான்ஷஸ்னஸ்', 'க்ளாஸ் கான்ஷஸ்னஸ்' என்றெல்லாம், (தனி மநுஷ்யனுக்கு இருக்கிறாற்போலவே) ஒவ்வொரு கூட்டத்துக்கும்கூட இருந்து அதற்குச் சக்தி வாய்ந்த ப்ரதிநிதிகளாகவே அந்தக் கூட்டத்தில் அவ்வப்போது தலைமை தாங்கும் மநுஷ்யர்கள் தோன்றுவதாக இப்போது மனோதத்வ சாஸ்த்ரத்தில் சொல்கிறார்கள். இம்மாதிரி, எல்லா

Koviloor Digital Library

க்ஷத்ரியர்களுக்கும் இல்லாவிட்டாலும் அதிலே ஒரு பகுதிக்கு, ப்ராம்மணர்களிடமிருந்த மனோபேதத்தில் அவர்களை தத்வ ரீதியில் ஜயிக்கவேண்டும் என்றிருந்த எண்ணத்துக்கு ப்ரதிநிதிகளாகவே புத்தர், ஜினர் போன்றவர்கள் தோன்றினார்கள். இது இரண்டு தரப்புக்குமே பெருமை தரும் விஷயம்.

என்ன சொல்கிறேனென்றால், 'அறிவு, தத்வம் என்பனவற்றுக்கு ப்ராம்மணன்தான் 'ரெபாஸிடரி' (குடியிருப்பு) ஆக இருக்க வேண்டுமென்பதில்லை; அவன் காட்டும் சாஸ்த்ர ரீதிக்கு அடங்கியே, அவனை மந்த்ரியாக வைத்துக்கொண்டு ஆலோசனை கலந்தே செயலாற்றுகிற எங்களுக்கு வெறும் புஜபலம் மட்டுமில்லாமல் இந்த புத்தி பலமும் உண்டு' என்று ஒரு கூட்டு consciousness க்ஷத்ரியர்களில் ஒரு பிரிவுக்கு உள்ளூர இருந்து அதுவே இப்படி அவர்களைப் புது மதங்களை ஸ்தாபிக்கும்படித் தூண்டியிருக்கலாம்.

இந்த ஸைகாலஜி ஸூக்ஷ்மம் இன்னொரு அம்சத்திலுங் கூடத் தோன்றுகிறது. ப்ராம்மணர்களைத்தானே ரொம்பவும் ஸாத்விகர்களாக சாஸ்திரத்தில் வைத்திருக்கிறது? பொது வழக்கிலும் அவன்தானே மற்றவர்களைவிட ஸாதுவாக இருந்திருக்கிறான்? இதற்கு நேர்மாறாக க்ஷத்ரியர்கள் நிரம்ப ராஜஸமுள்ளவர்களாகவும், வீரர்களாகவும், யுத்தத்துக்குத் தினவு எடுத்தவர்களாகவும் இருந்திருக்கிறார்கள். இதனாலேயே ஸைகலாஜிகலாக உண்டாகிற மனப்போக்கில் (ப்ராம்மணனைப் போல அல்லது அவனைவிடவும் தங்களுக்கும் புத்தி பலமும், தத்வ விசார நைபுண்யமும் (நிபுணத்தன்மையும்) உண்டு என்று காட்டிப் புதிய மத ஸித்தாந்தங்களைச் செய்தாற்போலவே), அவனைவிடவும் தாங்கள் ஸாத்விகர்கள் என்று ஸ்தாபித்துக் கொள்ளவும் எண்ணம் இருந்திருக்கலாம். அதனாலேயே புத்தரும், ஜினரும் ப்ராம்மணன் பசுபலி தந்து செய்கிற யஜ்ஞத்தை எதிர்த்து, பரம அஹிம்ஸையை வலியுறுத்தும் மதங்களை ஏற்படுத்தியிருக்கக் கூடும். இதனால் அவர்களுடைய அஹிம்ஸாவாதத்தின் அந்தரங்க சுத்தத்தை ஸந்தேஹிப்ப

Koviloor Digital Library

தாக ஆகாது. இந்த 'கன்விக்ஷ'னுக்கு (உறுதிக்கு) அந்த கான்ஷஸ்னஸும் (உணர்ச்சியும்) உரம் கொடுத்திருக்கலாம் என்பதே அர்த்தம்.

புது மதங்களில் பெரிய வித்யாசாலைகள்

இப்படி புத்தரும் ஜினரும் புது மதங்கள் உண்டாக்கிய போது ப்ராம்மணன் சொல்லிவந்த வேத ப்ராமாண்யம், வைதிக அநுஷ்டானம், வர்ணவிபாகம் இவை அந்த மதங்களில் இல்லை. வேதத்தை இன்னார்தான் அப்யஸிக்கலாம், இன்னார் கூடாது என்று விதி இருப்பதுபோல் இல்லாமல், அந்த மதங்களில் எல்லாரும் அவர்களுடைய ஆதார க்ரந்தங்களைப் படிக்கலாம் என்று வைத்தார்கள். இதனால் அவர்கள் ஸர்வ ஜனங்களுக்குமாக (பழைய வைதிக குருகுலங்கள் போலச் சின்னதாக இல்லாமல்) பெரிய பெரிய வித்யாசாலைகள் வைக்கவேண்டியதாயிற்று.

ஸர்வ ஜனங்களும் சேருவதற்கு ஸாதகமாக இன்னொன்றும் சேர்ந்து கொண்டது. குருகுலங்களில் வ்யாகரணத்தினால் நன்கு சுத்தி செய்யப்பட்ட ஸம்ஸ்க்ருத சாஸ்த்ரங்களே போதிக்கப்பட்டன. ஸாமான்ய ஜனங்களுக்கு ஸம்ஸ்க்ருதம் வராது. அவர்கள் அதன் கொச்சையான ப்ராக்ருத பாஷைகளைத்தான் அறிவார்கள். புத்தமதத்தின் ஆதார நூல்களாகிய த்ரிபிடகம் என்ற மூன்று தொகுப்புக்களும் பாலி என்ற ப்ராக்ருத பாஷையிலேயே எழுதப்பட்டன. ஜைனர்களின் ஆதார நூலான "அங்க"ங்கள் என்பவையும் ப்ராக்ருத பாஷைகளில் இன்னொன்றான 'அர்த்தமாகதி' என்பதில்தான் எழுதப்பட்டவை.

பொது மக்களுக்கு எழுத்தறிவு இல்லாத நிலையில் ஒரு தேசத்தில் பலவந்த முறையில் போகாமல் மதமாற்றம் செய்யும்போது அதற்குப் பள்ளிக்கூடம் வைத்து அவர்களுக்குக் கல்வியறிவு தந்து தங்கள் ஸமய நூல்களைச் சொல்லிக் கொடுப்பது ஒரு முக்யமான அங்கமாகிவிடுகிறது. கிறிஸ்துவ மிஷனரிகள் விஷயம் நமக்குத் தெரிந்ததுதானே? ஐந்நூறு

Koviloor Digital Library

வருஷத்துக்கு முந்தி நானக் இதேபோலப் பஞ்சாபில் தம் முடைய ஸிக்கிய மதத்தைப் பரப்ப நினைத்தபோது அந்த பாஷைக்கு முறையாக லிபியே இல்லை. அதனால் லிபியும் மத குருவே கண்டுபிடிக்க வேண்டியதாயிற்று. (நானக்கை அடுத்து குருவாக வந்து, அவர் உபதேசங்களை எல்லாம் திரட்டி ப்ரசாரம் செய்த அங்கத் என்ற) குருவினால், குருமுக மாக உண்டானதாலேயே அந்த லிபிக்கு "குர்முகி" என்று பெயர். அடித்துப் பிடித்துத் தங்கள் மதத்துக்கு மாற்றாமல் ஸாத்விகமாக, அல்லது ஸாமர்த்யமாக மாற்ற நினைக்கிற மதஸ்தர்கள் பொது மக்களுக்கு வித்யாசாலைகள் வைப்பதன் மூலமும் அதை ஸாதித்துக் கொள்கிறார்கள் என்பதுதான் பாயின்ட். அறிஞர்களுக்கே தெரிந்த ஸம்ஸ்க்ருதத்தைவிட்டு பொதுஜன பாஷையான ப்ராக்ருதத்துக்கு ஏற்றம் தந்து பௌத்த ஜைனர்கள் இந்த உபாயத்தைக் கையாண் டார்கள்.

ஆனால் போகப்போக தத்வ வாதங்கள் கிளைவிட்டுக் கொண்டே போய் நுட்பமான விஷயங்களைச் சொல்ல வேண்டி வந்ததில் பிற்கால பௌத்த - ஜைனர்களும் ஸம்ஸ்க்ருதம்தான் இதற்கு ஏற்ற பாஷை என்று கண்டு கொண்டார்கள். அதிலேயே புஸ்தகங்கள் எழுத ஆரம்பித் தார்கள். கி. பி. ஏழாம் நூற்றாண்டில் ஹர்ஷவர்தனன் காலத்தில் சைனாவிலிருந்து இந்தியாவுக்கு வந்த ஹ்வான்-த்ஸாங், பௌத்தர்கள் ஸம்ஸ்க்ருதத்திலேயே தங்களுடைய ஆலோசனைகளையும் வாதங்களையும் நடத்தினார்களென்று சொல்லியிருக்கிறார். அது எப்படியானாலும் ஆரம்பத்தில் ஸர்வஜனங்களுக்கும் ஸர்வஜனபாஷையிலேயே கல்வி என்று அவர்கள் ஆரம்பித்ததில்தான் விஸ்தாரமான வித்யாசாலை கள் முன்னைவிட மிகவும் அதிகமாக ஏற்படலாயின.

அந்தணரை மையப்படுத்தி குருகுலங்கள் வளர்ச்சி

இதற்கு முன்னிருந்த நிலைமையைத்தான் முன்னேயே சொன்னேன்; ரொம்பவும் specialised ஸமாசாரம் கற்றுக்

Koviloor Digital Library

கொள்வதற்கு மட்டுமே வைச்ய - சூத்ர ஜாதியினர் ப்ராம்மண ஆசார்யனிடம் போகவேண்டியிருந்தது என்றும், மற்றபடி அவனுடைய குருகுலம் ப்ரம்ம - க்ஷத்ர சிஷ்யர்களுக்கானதாகவே இருந்தது என்றும் சொன்னேன். இதிலும் குறிப்பாக ப்ராம்மணப் பசங்களுக்கு உரியனவாகத்தான் அவை இருந்திருக்கின்றன. அந்தக் காலத்தில் குருகுலம், வித்யாப்யாஸம் முதலிய விஷயங்களே முக்யமாக ப்ராம்மணனைக் குறித்தவை மாதிரிதான் இருந்திருக்கின்றன. க்ஷத்ரியர்களிலும் ராஜகுமாரர்கள், ராஜ குடும்ப முக்யஸ்தர்களின் பசங்கள், ப்ரதான அதிகாரிகளின் பிள்ளைகள் ஆகியோர் குருகுலவாஸம் செய்தனர். அந்த ஜாதியில் மற்ற எல்லாச் சிறுவர்களும்—அதாவது ஸாதாரண ஸேநாவீரர்கள், சிப்பந்திகள் ஆகியவர்களது பிள்ளைகள்—வீட்டிலேயே தகப்பனிடமும், அல்லது ஆயுதப் பயிற்சி சாலைகளிலும்தான் அப்யாஸம் செய்திருப்பார்களென்று தோன்றுகிறது. குருகுலவாஸம் செய்த பசங்களும்கூட, தங்களுக்குரிய முழுக் கோர்ஸும் ப்ராம்மணப் பசங்களோடேயே சேர்ந்து கற்றுக் கொண்டிருப்பதற்கில்லை. முன்னேயே சொன்னதை மீண்டும் சுருக்கிச் சொல்கிறேன்.

வேதாதி சதுர்தச வித்யைகளைப் பிராம்மணப் பிள்ளைகளைப்போல அவ்வளவு ஆழ்ந்து, அலசிப் படிக்கவேண்டிய அவச்யம் க்ஷத்ரியர்களுக்கு இல்லை. இதேபோல, பிராம்மணப் பிள்ளைகளில் பிற்காலத்தில் தாங்கள் தநுர்வேத - அர்த்த சாஸ்த்ர ஆசார்யர்களாகிக் கற்றுக்கொடுக்க வேண்டும் என்ற உத்தேசமுள்ள மாணவர்கள் மாத்திரம் இவற்றை ஆப்ஷனலாக எடுத்துக்கொண்டு படித்திருக்கலாமே தவிர மற்றவர்கள் தங்கள் ஜீவனத்துக்கு அவசியமில்லாத இந்த ஆயுத சாஸ்த்ரத்தையும், ராஜாங்க நிர்வாஹ சாஸ்த்ரத்தையும் deep-ஆகக் கற்றுக் கொண்டிருக்க மாட்டார்கள். ஆகையால் ப்ரம்ம - க்ஷத்ர ஜாதி வித்யார்த்திகளுக்கு பாடங்களும், பாட முறையும் வித்யாஸமாக இருந்திருக்கவேண்டும். சதுர்தச வித்யைகளுக்கு மட்டும் அவ்வப்போது ப்ராம்மணப் பசங்களும்,

Koviloor Digital Library

க்ஷத்ரியப் பசங்களும் சேர்ந்து ஒரே குருகுலத்தில் அப்யாஸம் செய்திருக்கிறார்களென்பது நிச்சயம்.

வைச்யர்களுக்கும் வேதத்தில் அதிகாரமுண்டாதலால் அவர்களும் இப்படி ப்ராம்மண குருகுலங்களில் கொஞ்சம் சேர்ந்து படித்திருக்கலாம். ஆனால் நாளுக்கு நாள் ஜனஸங்கியை பெருகி, புதுப் புதுச் சரக்குகளை உற்பத்தி செய்து விற்பது, அந்நியத் தொடர்புகள் அதிகமாகிக் கடல் கடந்து கூட வர்த்தகப் பரிவர்த்தனை விஸ்தரிப்பது என்றெல்லாம் ஏற்பட்டபோது, வேதாப்யாஸத்தைப் பின்னுக்குத் தள்ளி அவர்களுக்கென்றே ப்ரத்யேகமாக ஏற்பட்ட வாணிஜ்யம் (வாணிபம்), கோ ஸம்ரக்ஷணை இரண்டை மாத்திரமே பால்யத்திலிருந்து ஆயுஸ்காலக் கல்வியாகவும் தொழிலாகவும் அவர்கள் மேற்கொள்ளவேண்டி வந்திருக்கிறது. அதோடு அன்றன்றும் உள்ள நிலவரங்களைப் பொருத்துக் கணக்குப் பண்ணித் திட்டம் போடுவதும், அன்றன்றும் கிடைக்கிற வாடிக்கைக்கு ஏற்ப ஸமயோசிதமாக நேரே மநுஷ்யர்களோடு பழகி ஸமாளிக்க வேண்டியதுமான வைச்யர்களின் கார்யத்தைத் திறம்படச் செய்வதற்கு அவர்கள் புஸ்தகத்தைப் பார்த்து முடியாது. இதற்கு அந்நாளில் புஸ்தகமும் இல்லை. ஆகையால் அந்தப் பசங்கள் பெரிசாக வித்யாப்யாஸம் என்று பண்ணப் போகாமல், கொஞ்சம் வேதம், ஸமயாசாரம், தங்கள் தொழிலுக்கான சின்ன சாஸ்த்ரங்கள் இவற்றை மட்டும் படித்துவிட்டு, சின்ன வயஸிலிருந்தே அப்பனோடு, பாட்டனோடு நேரே தொழிலில் பிரவேசித்து அதன் knack-களை (ரஹஸ்யங்களை, ஸாமர்த்யங்களை, நுட்பங்களை)க் கற்றுக்கொள்வதாக ஏற்பட்டது.

மொத்தத்தில் ஆதி நாளில் வித்யாப்யாஸம் பிராம்மணனோடுதான் விசேஷமாகப் பொருத்தப்பட்டது. இதனால் தான் எத்தனையோ காலத்துக்குப் பிற்பாடும் வேதத்துக்கே உரிய "பாடம்" என்பதை வைத்தே கல்விக்கூடத்துக்குப் "பாடசாலை" என்று பெயர் நீடித்து வந்திருக்கிறது. காயத்ரி உபதேசத்தில் ஆரம்பித்து ஸம்பூர்த்தியாகக் கற்பிக்

Koviloor Digital Library

கிறவருக்கு ஏற்பட்ட "ஆசார்ய" என்ற பெயர்தான் இன்று நாஸ்திகம், கம்யூனிஸம் சொல்லிக் கொடுப்பவரிடமும் "ஆசிரியர்" என்பதாக ஒட்டிக் கொண்டிருக்கிறது. காயத்ரி உபதேசம் செய்யாமல், ஜீவனோபாயத்தை உத்தேசித்து வேத சாஸ்த்ரம் கற்பிப்பவருக்குரிய "உபாத்யாயர்" என்பதுதான் இன்றும் "வாத்தியார்" என்று நம் பேச்சில் அடிபடுகிறது.

மாணவன், மாணாக்கன்

சிஷ்யன் என்றும் வித்யார்த்தி என்றும் ஸம்ஸ்க்ருதத்தில் சொல்வதை நாம் மாணவன், மாணாக்கன் என்கிறோம். செய்யுளில் இதுவே "மாணி" என்று வரும். வாமனாவதாரத்தைப் பற்றி திவ்ய ப்ரபந்தத்தில் "மாணி", "மாணி" என்று வரும். "மானவ" என்று இரட்டை சுழி "ன" போட்டு சொன்னால் மநுஷ்யன் என்றுதான் அர்த்தம். மநுவிலிருந்து ஜீவகுலம் தோன்றியது. அதனாலேயே "மநுஜன்", "மநுஷ்யன்", "மானவன்", தமிழில் "மனிதன்", "மானுடன்" முதலான பெயர்கள். Man என்பதும் மநு ஸம்பந்தமானதே. மனஸ் என்ற சிந்தனா சக்தி படைத்தவன் மநு. Man என்றால் thinking animal என்று இதே அபிப்ராயத்தைத் தான் அவர்களும் சொல்கிறார்கள். மானவன் என்றால் மனிதன். "மாணவ" என்று மூன்று சுழி போட்டுச் சொன்னால் 'சிறுவன்' என்று அர்த்தம். சின்ன வயஸிலேயே கல்வி கற்கத் தொடங்குவதால் வித்யார்த்தியை மாணவன், மாணாக்கன் என்று சொல்வதாக ஏற்பட்டிருக்கிறது. தமிழ் "மாணி"யும் இதிலிருந்தே வந்திருந்தாலும், மாணி என்பது, "மாணவன்" என்பதுபோல் எந்த ஜாதியையும் சேர்ந்த ஸ்டூடன்டைக் குறிக்காது; மாணி என்பது உபநயனமான ப்ரம்மசாரியைத்தான் குறிக்கும். ஆதியில் ப்ராம்மண ப்ரம்மசாரியே பெரும்பாலும் ஸ்டூடன்டாக இருந்ததால்தான் இப்படிப் பிற்காலத்திலும் சொல்வதாக வந்திருக்கிறது.

Koviloor Digital Library

இம்மாதிரி அக்காலத்தில் ப்ராம்மணப் பசங்களுக்கு மட்டும் வித்யாப்யாஸம் விசேஷமாக இருந்தது இதரர்களுக்கு வித்யாஸமாகத் தோன்றவில்லை. தங்கள் தொழிலுக்கும் வாழ்முறைக்கும் குருகுலவாஸம் தேவையில்லை; அவசியப்படும்போது தங்கள் தொழிலில் டெக்னிகலான, சிக்கலான ஸமாசாரங்களை மட்டும் 'அய்ய'ரிடம் போய்த் தெரிந்துகொண்டால் போதும் என்ற நல்லறிவு அவர்களுக்கு இருந்தது. 'அவர் மட்டும் ஏதோ சிலது படிக்கிறாரே; அவர் மட்டும் அந்த அநுஷ்டானம் பண்ணுகிறாரே!' என்று நினைக்காமல் அவரும் ஸரி, தாங்களும் ஸரி அவரவருக்குக் குலதர்மப்படி வந்ததைப் பண்ணிக்கொண்டிருந்தாலே எல்லாருக்கும் க்ஷேமம், எல்லாருக்கும் நிறைவு என்ற நல்லெண்ணத்தோடு இருந்து வந்தார்கள். 'அய்யர் சொல்கிற வேதமும், அவர் செய்கிற யாகமும் நம் க்ஷேமத்தையும் உத்தேசித்தது; அவருக்குப் போட்டிருக்கிற கடும் ஒழுக்க விதிகள் நமக்கும் லக்ஷ்யத்தைக் காட்டிக் கொடுக்கிறது.* ஆனபடியால் அவர் கார்யத்தை, அவருக்கான வாழ்க்கை முறையை அநுஸரித்துக்கொண்டு அப்படியே இருக்கட்டும்; அவரைப் போய் நாம் தொந்தரவு பண்ண வேண்டாம், அவரோடு போட்டிபோட வேண்டாம்' என்று இதரர்கள் நினைத்தவரை (இப்படித்தான் யுகாந்தரமாக நடந்து வந்திருக்கிறது) எல்லாம் ஸரியாயிருந்தது. ஸமூஹ வாழ்வு க்ரமமாக, ஐக்ய மனப்பான்மையுடன் போய்க்கொண்டிருந்தது.

தொழில் முறையில் பாதிப்பு இல்லை

புத்தர், ஜினர் போன்றவர்கள் இந்த ஏற்பாட்டைத் தப்பாகப் புரிந்து கொண்டார்கள். அவர்கள் அப்படி நினைக்கும்படியாக அக்கால ப்ராம்மணர்களும் இருந்திருக்

---

* மூன்றும் பகுதியில் 'ஆசார விஷயங்கள்' எனும் உரையில் 'ஆதர்ச நிலையும் நடைமுறை ஸாத்யமும்' என்ற உட்பிரிவும் அதற்கு முன் பின் உட்பிரிவுகளும் பார்க்க.

Koviloor Digital Library

கலாம். அநுஷ்டான சக்தியையோ, வேதாந்த ஞானத்தையோ நன்றாக அபிவ்ருத்தி செய்து கொள்ளாமல், உசந்த ஜாதி என்ற அந்தஸ்து மாத்திரம் கொண்டாடி இருக்கலாம். அப்படியானாலுங்கூட அப்படித் தப்புப் பண்ணுகிறவர்களை மூல உத்தேசப்படித் திருத்தவேண்டும் என்று புத்த - ஜினர்கள் நினைக்காமல், 'உத்தேசமே தப்பு; வர்ண விபாகமே கூடாது; வேத தர்மத்தில் பக்ஷபாதமாகத்தான் ஜாதிப் பிரிவினைகள் பண்ணியிருக்கிறது' என்று எடுத்துக் கொடுத்தவுடனே—மநுஷ்ய மனஸ் தானே?—பொது ஜனங்களுக்கும் பழைய ஏற்பாட்டில் கொஞ்சம் பற்றுவிட ஆரம்பித்தது. இந்த ஸமயத்தில் 'அவர்கள் உங்களுக்குச் செய்யாததை நாங்கள் செய்கிறோம்' என்கிற ரீதியில் பௌத்தர்களும் ஜைனர்களும் வர்ண வித்யாஸம் இல்லாததாகத் தங்கள் மதத்தை அமைத்து, தங்கள் மூல நூல் உள்பட எல்லா சாஸ்த்ரங்களையும் கலைகளையும் ஸர்வ ஜனங்களுக்கும் அவர்களுடைய பேச்சு மொழியிலேயே கற்றுக்கொடுப்பதற்காகப் பெரிய வித்யாசாலைகளாக ஏற்படுத்தத் தொடங்கினார்கள். 'கன்வர்ஷ'னுக்கு இது பெரிய பலமல்லவா?

ஆனாலுங்கூட, கவனிக்க வேண்டிய முக்யமான அம்சம் என்னவென்றால் பௌத்த-ஜைன கன்வர்ஷன் ஒரு பக்கம் நடந்து கொண்டிருந்தபோதுகூட, பாரம்பர்யமாகத் தொழில் பண்ணுவது என்பது எடுபடவே இல்லை. அதாவது ப்ராம்மணர்களைப் பொருத்தமட்டில் வைதிக கர்மாநுஷ்டானமும், வேதாந்த தத்வத்தில் விச்வாஸமும் கொஞ்சம் கலகலத்துப்போன பின்புங்கூட, பொதுமக்களைப் பொருத்தமட்டில் அவர்கள் ப்ராம்மணர்களையே லீடர்களாகக் கொண்டிருந்தது சற்று ஆடிப்போன பிறகுங்கூட, அந்தந்தத் தொழில்காரரும் ஜாதி ரீதியில் அப்படியே தொடர்ந்து தொழில் செய்வது என்பது நீடித்துக்கொண்டுதான் வந்தது. அதாவது அப்ராம்மணர் ஸம்பந்தப்பட்டவரையில் வர்ண தர்மம் எடுபடவே இல்லை. யாகம் அப்ராம்மணன் பண்ணவில்லை. தத்வ விசாரத்தில் அவன் ஈடுபட்டதும் கொஞ்சந்

Koviloor Digital Library

தான். புதுமதக்காரர்கள் பிராம்மணரின் லீடர்ஷீப்பை விடச் சொன்னதைத்தான் அவன் எடுத்துக் கொண்டானே தவிர புதுசாக வந்த ஸமய தத்வங்களை ஆராய்ந்து, புரிந்து கொண்டு எடுத்துக்கொண்டது ரொம்பவும் குறைச்சல்தான்.

ஸாதாரணமாகவே ஒரு இயக்கத்துக்கு அது சொல்கிற எதிர்ப்புக் கார்யத்தை வைத்துத்தான் பொது ஜன ஆதரவு கிடைக்கிறது; இந்த அளவுக்கு அது விதிக்கிற விதிகளுக்கு ஆதரவு கிடைப்பதில்லை. 'வெள்ளைக்காரனை விரட்டு' என்று காந்தி சொன்னதால் எல்லாரும் அவர் கீழே எதிர்ப்புக் கார்யத்தில் ஒன்று சேர்ந்தார்கள். ஆனால் அவர் விதித்த அஹிம்ஸை, ஸத்யம், ஒழுக்கம், ஈச்வர பக்தி முதலானதை எத்தனை பேர் எடுத்துக் கொண்டார்களென்று பார்த்தால் வருத்தமாகத்தான் இருக்கும். வெள்ளைக்காரனிடம் ஏன் நாம் கட்டுப்பட்டிருக்க வேண்டும் என்பதாக, அந்நிய ஆட்சியின் அதர்மத்துக்காக அவ்வளவு இல்லாமல், நம்முடைய ஸ்வேச்சா ஸ்வதந்த்ரங்களில் ஆசையால்தான் பெரிய போராட்டம் நடத்தியது. அந்த காந்தியே நம்மை சில தர்மங்களில் கட்டுப்படுத்துகிறார் என்னும்போது அவற்றை ஏற்றுக்கொள்ள மனஸ் இல்லை. பொதுவாக நம்முடைய தப்பை உணர்ந்து நம்மைத் திருத்திக்கொள்வதைவிட, பிறன் தப்பைச் சொல்லி எதிர்ப்பதில்தான் நமக்கு ருசி. நானே உங்களிடம் நாஸ்திகத்தையோ, கன்வர்ஷனையோ எதிர்த்துக் கூட்டம் போடுங்கள் என்று ஒரு வார்த்தை சொன்னால் உடனே பெரிசாக மஹாநாடு நடத்திக் காரஸாரமாகப் பேசி, தீர்மானங்கள் நிறைவேற்றுவீர்கள்; அதுவே, சாஸ்த்ர ஆசாரப்படி இப்படி இப்படி இருங்கள் என்று ஓயாமல் சொன்னாலும், கேட்கத் தோன்றுகிறதா?

இப்படித்தான் பௌத்த-ஜைன தர்மங்களை, தத்வங்களை ஜனங்கள் விசேஷமாக எடுத்துக்கொண்டு பின்பற்றவேயில்லை. இதிலே அவர்களுக்கு ரொம்பவும் ச்ரமமாக, நடைமுறை ஸாத்யமாக இல்லாத இன்னொரு அம்சத்தையும்

Koviloor Digital Library

சொல்ல வேண்டும். நீக்குப்போக்குள்ள நம்முடைய மதத்தைப் போலில்லாமல் அவை ரொம்பவும் ஐடியல் நிலேயிலுள்ள அஹிம்ஸை, துறவு முதலியவற்றை எல்லா ஜனங்களுக்குமே வற்புறுத்தின. அதோடு ச்ரமண மதத்திலோ மிகவும் கடுமையான நியமங்கள், உடம்பை ஏகமாக வருத்திக்கொள்வதாக. "விட்டுப் பிடித்து", ஸௌக்யமாக, ஒவ்வொரு படியாக முன்னேற்றிக் கொண்டு போகிற நம் மதத்தைப் போல அவை இல்லே.* ஆதலால் பெயரளவில் ஏதோ பௌத்த-ஜைன மதங்கள் பரவியிருந்தாலும் அவற்றை ஜனங்கள் மனமார ஏற்று, நடத்திக் காட்டிவிடவில்லே. முக்யமாக, பாரம்பர்யத் தொழில் என்பது இப்போதும் போகவில்லே. இதை விட்டால் எவனுக்கு எந்தத் தொழில் என்பதில் ஏகப் போட்டியும் பொருமையும் உண்டாகி எல்லாத் தொழில்களும் பாதிக்கப் பட்டு ஸமூஹ வாழ்வே சீர்குலேயும் என்பதை ஜனங்கள் புரிந்துகொண்டு ஜாதித் தொழில் முறையையேதான் பின்பற்றி வந்தார்கள். அசோகர் முதலான புறச் சமயச் சார்புள்ள ராஜாக்களுடைய சாஸனங்களேப் பார்த்தால் நன்ருகத் தெரியும்—அவர்கள் ஆட்சியிலும் வர்ணதர்மம் இருந்துகொண்டேதான் இருந்தது, அவர்களும் அதை ஆதரித்துத்தான் வந்திருக்கிருர்கள் என்பது.

ஒன்று போதும், இதை நிச்சயமாக உறுதிப்படுத்திக் கொள்வதற்கு :

பிற்பாடு உதயஞசார்யர் முதலான தர்க்க சாஸ்த்ர நிபுணர்களும், வைதிக கர்மாநுஷ்டானத்துக்கு அதிமுக்யத்வம் தந்த குமாரிலபட்டர் முதலிய மீமாம்ஸகர்களும், முடிவாக வேதாந்தியான நம்முடைய ஆசார்யாளும் பௌத்த - ஜைன மதங்களே ஜயித்துப் பழையபடி ஸநாதன வேத தர்மமே அதன் வர்ஞச்ரம விபாகத்துடன் நிலே

* முன்சொன்ன "ஆசார விஷயங்கள்" என்ற மூன்றும் பகுதி உரையில் இவ் விஷயம் விரிவாக விளக்கப்படுகிறது.

Koviloor Digital Library

நாட்டப்பட்டது. இது ப்ரத்யக்ஷமாக, ஹிஸ்டாரிகலாக நிரூபணமான விஷயம்.

ஹிந்துக்களை மட்டம் தட்ட வேண்டுமென்ற ஒரே நோக்கத்தில் வெள்ளைக்கார சரித்ர ஆசிரியர்கள் எழுதி வைத்து, இப்போது நம்மவர்களும் வேதவாக்காக மதிக்கும் அபிப்ராயப்படி, இடைக்காலத்தில் இங்கே அந்த மதங்கள் சக்திகரமாகவே ஸகல ஜனங்களிடையிலும் ஆழப் பரவி விட்டனவாம். இப்படியிருந்தால் மறுபடி எப்படி வைதிக மாக வர்ணவிபாகம் செய்திருக்க முடியும்? நடுவிலே எல்லா ஜனங்களும் ஒரே ஜாதியாகப் போன அப்புறம், பகவத் பாதாள் காலத்தில் மறுபடி ஜன ஸமூஹத்தை, 'நீ ப்ராம் மணன், நீ க்ஷத்ரியன், நீ வைச்யன், நீ நாலாம் வர்ணம்' என்று யாரோ உத்தரவுபோட்டு இந்த தேசம் முழுக்க அந்த உத்தரவுப்படிச் செய்ய வைத்தார்களென்பதற்கு ஒரு ஆதாரமுமில்லை. நல்லவேளையாக, ஹிஸ்டரி என்ற பெயரில் எத்தனையோ கதை கட்டியிருப்பவர்கள் இம்மாதிரி எதுவும் ஜோடித்துச் சொல்லவில்லை. ஏனென்றால் இதை எந்த அறிவாளியும் ஒப்புக்கொள்ள மாட்டான் என்று அவர் களுக்குத் தெரியும்.

இயற்கையாகவே அமைந்துவிட்ட ஒன்றைப்போல, நீண்ட காலமாகப் பல ஜாதிகள் பாரம்பர்யப்படி தொழில் செய்து வந்தபோது அதை எதிர்க் கேள்வி கேட்காமல் அந்தந்த ஜாதியில் பிறப்பவர்கள் ஏற்றுக்கொள்வது ஸஹஜ மானது. ஆனால் ஒருதரம் இந்த ஜாதிக்கட்டு ஏற்பாட்டை உடைத்துவிட்டு, அப்புறம் எவரோ வந்து மறுபடி கட்டு கிறேன் என்று ஆரம்பித்து, 'நீ இன்ன ஜாதி, நீ இன்ன ஜாதி' என்று நிர்ணயிக்க ஆரம்பித்தால் அதற்கு எவனும் கட்டுப் பட்டிருக்க மாட்டான். 'ஏன்' அவன்தான் இந்த ஜாதியாய் இருக்கட்டும்; நான் வேறே ஜாதியாயிருக்கிறேனே' என்று தான் ஆக்ஷேபிப்பான், 'பரத கண்டம்' என்றே சொல்லும் படியாக விஸ்தாரமாக உள்ள நம்முடைய தேசத்தில் ஒரு தரம் பரவலாக ஒரு அபேதவாத ஸமுதாயம், அதாவது

Koviloor Digital Library

வர்ண வித்யாஸமில்லாத பௌத்த - சமண ஸமுதாயம் உண்டாகியிருந்தால் அதைப் பழையபடி தேசம் பூராவும் வர்ண தர்மக் கட்டுப்பாட்டுக்குள் கொண்டுவந்திருக்கவே முடியாது.

ஆசார்யாள் காலத்தோடு பர மதங்கள் படுத்துப்போக ஆரம்பித்துவிட்டன என்று எல்லோரும் ஏகோபித்து அபிப்ராயப்படுகிறார்கள். அது வாஸ்தவம். ஆனாலுங்கூட அந்தத் தனி மநுஷ்யர் ஒரு தேச ஜனங்கள் அத்தனை பேரும் ஜாதித் தொழிலை விட்டிருந்தால், இப்படிப் பழைய முறைப் படி மறுபடி வர்ண தர்மத்தின் கீழ் அவர்களைக் கொண்டு வந்திருக்க முடியாது. அவர் ராஜ ஸஹாயத்தினால் கார்யம் செய்ததாகவும் தெரியவில்லை. ராஜாக்ஞையால் வர்ணாச் ரமம் புதிதாக ஸ்தாபிக்கப்பட்டது என்பதற்கும் ஹிஸ்டாரிக லாகவோ, இலக்கியங்களிலிருந்தோ கொஞ்சங்கூட ஆதார மில்லை. நின்றசீர் நெடுமாறனைப் போல ஒரு ராஜா ஜைனம் மாதிரியான ஒரு மதத்துக்குப் போனபோதுகூட ஜனங்கள் நம்முடைய கோயில் குளத்துக்குப் போகவும், பஹிரங்கமாக நம் ஸமயாநுஷ்டானங்களைச் செய்யவும் பயந்துகொண்டு பேசாமல் வேண்டுமானால் இருந்திருக்கிறார்களேயன்றி, அப்படியொன்றும் அத்தனை பேரும் நேராக அந்தப் பர மதங்களைத் தழுவிவிடவில்லை. கொஞ்சம் பெருவாரியாகவே தழுவிய சமயங்களில்கூடக் குலத் தொழில்களை விடாமல் தான் இருந்திருக்கிறார்கள். அதாவது ஸமய சிந்தனா ரீதியில் மாறுதல் ஏற்பட்டபோதுகூட, உலகத்துக்கான நடைமுறைக் கார்யத்தில் மாறுதல் இல்லாமல் ஜாதிப்படிதான் கார்யங் கள் நடந்தன. அதனால்தான் மதாந்தரத்துக்குப்போன ஒரு ராஜாவை ஸம்பந்தர் மாதிரி ஒருத்தர் மறுபடி ஹிந்து மதத் துக்குத் திருப்பியபோது, பயந்து கொண்டிருந்தவர்கள் மறுபடி தைர்யமாகக் கோயிலுக்குப் போவது, வைதிக அநுஷ்டானங்களைப் பண்ணுவது என்று ஆரம்பித்திருக்கிறார் கள்; பிற மதத்துக்கே போனவர்களில் சிலபேர் ஹிந்து மதத்துக்குத் திரும்பியிருக்கிறார்கள்; சிலர் மாறின மதத்

Koviloor Digital Library

திலேயே இருந்திருக்கிறார்கள்; இதெல்லாம் எப்படி யானாலும் முதலிலிருந்து கடைசிவரை ஜாதி ரீதியான தொழில்கள் மாத்திரம் அப்படியே Intact-ஆக (கட்டுக் குலையாமல்) நீடித்துவந்திருக்கின்றன.

பௌத்தம்— சமணம்:
தேசிய ரீதியில் என்றுமே ஊன்றவில்லை

ஆக, பௌத்த சமண மதங்களினால் பெரிய அளவுக்கு ஹிந்து ஸமூஹக் கட்டுக்கோப்பு பாதிக்கப்படவே இல்லை. ஸமூஹ விஷயமில்லாமல் ஸமய ஸம்பந்தமாகவே பார்த் தாலும் அதிலே விசேஷ ஈடுபாடுள்ள ப்ராம்மணர்களும், இதரர்களும் அப்படியே போய் அந்த மதங்களில் சேர்ந்து விடாமல் தங்கள் தாய் மதத்திலேயேதான் இருந்துவந்திருக் கிறார்கள். கூன்பாண்டியன் சமணத்தில் சேர்ந்த பின்னுங்கூட அவனுடைய ஸாக்ஷாத் பத்னியான மங்கையர்க்கரசியும், முக்ய மந்த்ரி குலச்சிறையாரும் அதிலே சேராமல்தானே இருந்திருக்கிறார்கள்?

இதையெல்லாம்விட, நாம் எடுத்துக்கொண்டுள்ள விஷயத்துக்கு முக்யமாக, பௌத்த சமண வித்யாசாலை களுக்குப் போய்க் கல்வி கற்றவர்கள்கூட அப்ராம்மணர் களில் அப்படியொன்றும் பெருவாரியில்லை. குலத்தொழி லையே அவர்கள் தொடர்ந்து செய்ததால், (முன்னேயே நான் எடுத்துக் காட்டினாற்போல்) இதற்கு வீட்டுப் பெரிய வர்களுடன் சேர்ந்து தொழில் செய்ய ஆரம்பிப்பதே ப்ராக்டிகல் கல்வியாக அமைந்துவிட்டதால் அவர்களுக்குப் பள்ளிக்கூடம் போய்த் தனியாக வித்யாப்யாஸம் செய்ய வேண்டுமென்று இல்லை. ஆனாலும், தங்களுக்கும் எல்லா விஷயமும் வித்யாஸமில்லாமல் கற்றுக்கொடுக்கும் பள்ளிக் கூடங்கள் ஏற்பட்டிருக்கின்றன என்பதில், அறிவு நாட்டம் கொண்ட கொஞ்சம் அப்ராம்மணர்கள் மட்டும் அவற்றிலே சேர்ந்து கற்றுக்கொண்டார்கள். மொத்த பாபுலேஷனில் இவர்கள் பெருவாரியாக இல்லை. (ஆனாலும் இதற்காகவே

Koviloor Digital Library

முன்னைவிட நிறையவும், பெரிசாகவும் வித்யாசாலைகள் ஏற்படத்தான் செய்தன.)

அதற்கப்புறம் அவர்களுடைய பிக்ஷு ஸங்கத்திலேயே சேர்ந்தவர்கள் ஸமூஹத்தில் மிகக் குறைவான சதவிகிதத்தினர்தான். முன்னைவிட அதிகமாக பிக்ஷுக்கள் பெருகி, அதனால் பிக்ஷு தர்மம் நீர்த்துக் கேலி செய்கிற அளவுக்குப் போய்விட்டது என்பது வாஸ்தவந்தானென்றாலும், இதனால், ஜனங்களில் பெரிய சதவிகிதத்தினர் இப்படித் துறவியான தாக அர்த்தமில்லை. இதற்கு முன்னெல்லாம் முக்யமாக ப்ராம்மண ஜாதியினர் மட்டுமே முதல் மூன்று ஆச்ரமங்களை வஹித்துவிட்டு அப்புறம் ஸந்நியாஸாச்ரமம் ஏற்றார்கள். அவர்களிலே கொஞ்சம்பேர் நேராக ப்ரஹ்மசர்யத்திலிருந்து ஸந்நியாஸ ஸ்வீகாரம் செய்துகொண்டார்கள். அப்போது பாபுலேஷனில் ஸந்நியாஸிகள் ஒரு பெர்ஸெண்ட், அரை பெர்ஸெண்ட் இருந்ததாக வைத்துக் கொண்டால், பௌத்த - ஜைன மதங்கள் ஏற்பட்டு ஸகல ஜாதிகளிலிருந்தும் அந்த மதங்களின் பிக்ஷு ஸங்கத்தில் ஜனங்கள்சேர இடமேற்பட்டபோது பாபுலேஷனில் நாலைந்து பெர்ஸென்ட் ஸந்நியாசிகளானதாக வைத்துக் கொள்ளலாம். பாக்கி தொண்ணூறு (பெர்ஸெண்டு)க்கு மேலானவர்கள் பழைய படியேதான் இருந்துகொண்டிருந்தார்கள். ஆனாலும் ஒரு டாக்டர் இருக்கிற ஊரிலே மூன்று டாக்டர்கள் வந்தால்கூட ரொம்ப ஜாஸ்தியாகத் தெரிகிறதுபோல, ஒன்று - அரை பெர்ஸென்ட் என்பது நாலைந்து என்பதாகப் பல மடங்கு பெருகினபோது மிக நிறைய பிக்ஷுக்கள், உண்டாகிவிட்டாற் போன்ற எண்ணம் ஏற்பட்டது. அதுவும் தவிர, ஹிந்து ஸந்நியாசிகளைப்போல, ஒவ்வொருவரும் தனித்து ஏகாந்தமாக ஸஞ்சாரம் பண்ணிக்கொண்டிருக்காமல், "ஸங்கம் ஸங்கம்" என்று இந்த பிக்ஷுக்கள் கூட்டமாக ஒன்றுசேர்ந்ததாலும், ஒரு இடத்திலே கூடிக் கல்விச்சாலைகளை நடத்தியதாலும் பெரிய அளவில் இருக்கிறாற்போல் தோன்றலாயிற்று.

Koviloor Digital Library

(கண்டிப்பான கடும் விதிமுறைகளை உடைய ஸந்நியா ஸாச்ரமத்திலே ஸமூஹத்தின் நாலைந்து பெர்ஸென்ட் ஜனங்கள் இருந்தால்கூடத் தாங்காது. அதன் ஒழுக்கம் தளரத்தான் செய்யும். பிற்பாடு அப்படித்தான் ஆயிற்று.)

மொத்தத்தில், ஸமூஹ அமைப்பிலே தொழில் முறையில் வர்ணதர்மம் விசேஷமாக பாதிக்கப்படாமலும்; ஸமயத் துறையில்கூட வைதிகாநுஷ்டானங்களும், வைதிக வித்யையும் நலிந்தாலும் ஒரேயடியாய் எடுபட்டுப்போய் அவைதிக ஸம்ப்ரதாயங்கள் கொழுந்துவிட்டு ஓங்காமலும்தான் எப்போதுமே இந்த தேசத்தில் பொதுவாக இருந்திருக்கிறது. அறிவாளிகள் மட்டத்திலும், அரசாங்க ஆதரவாலும் சிற்சில ஸமயங்களில் மட்டும் வைதிகம் சற்று அதிகமாக நலிந்து, அவைதிக மதங்கள் அதிக வலுவோடு இருந்திருக்கின்றன. அப்படிப்பட்ட ஸமயங்களில் ஒரு சங்கரர், ஒரு ஸம்பந்தர் வந்து வைதிகத்தை முன்னைக்காட்டிலும் ப்ரகாசமாகத் தூண்டிவிட்டிருக்கிறார்கள்.

வெள்ளைக்கார சரித்ராசிரியர்களிலும் எல்லாரும் பக்ஷபாதிகள் என்று சொல்லக்கூடாது. எங்கேயும் ஸத்யத்தை மதிப்பவர்கள் உண்டு; இப்படித் தனிமனிதர்களிலும் உண்டு; ஸ்தாபனங்களிலும் உண்டு. ஆக்ஸ்ஃபோர்ட் யூனிவர்ஸிடிக்காரர்கள் இருக்கிறார்கள். அவர்கள் எதையும் ஆதார பூர்வமாக, நிஷ்பக்ஷபாதமாக ஆராய்ந்து எடுத்துச் சொல்கிறவர்களென்று பெயர் வாங்கியவர்கள். அவர்கள் ஏதாவது ஒரு விஷயம்பற்றி ஒரு ஸமயம் ஒரு புஸ்தகம் போட்டால் அதை அதோடு தீர்ந்துவிட்டது என்று விட்டுவிட மாட்டார்கள். அப்புறமும் அந்த விஷயத்தை ஆராய்ச்சி பண்ணிக்கொண்டே இருப்பார்கள். புது ஆராய்ச்சிகளில் பழைய அபிப்ராயத்துக்கு மாறுதலான அபிப்ராயங்கள், கூடுதலான ஸமாசாரங்கள் கிடைத்து இதுதான் ஆதார பூர்வமானது என்று உறுதிப்பட்டால் தயங்காமல் அதை ஏற்றுக்கொண்டு, புஸ்தகத்துக்குப் புது எடிஷன் போட்டோ, அல்லது புதுப் புஸ்தகம் போட்டோ

Koviloor Digital Library

அதிலே இதைத் தெரிவித்துவிடுவார்கள். இம்மாதிரி அவர்கள் இன்டியன் ஹிஸ்டரி போட்டிருக்கிறுர்கள்*. அதிலே ரொம்பவும் அழுத்தந்திருத்தமாக, "ஒவ்வொரு ஸமயத்தில் இந்திய தேசத்தின் அநேக ராஜ்யங்களில் ஒன்றிரண்டில் பௌத்த - ஜைன மதங்கள் அதீதமான செல்வாக்குப் பெற்றிருந்ததுண்டு; அந்த ராஜ்யங்களின் ஜனத்தொகையில் மிகவும் ஏராளமானவர்கள் அம் மதங்களைத் தழுவியதுண்டு. ஆனாலும், எந்த ஒரு ஸமயத்திலேனும் தேசம் முழுதும் பரவிய பெரிய மதமாக அவை இருந்திருக்கிறதாக யாராவது வர்ணித்தால் அது ரொம்பவும் கேள்விக்கு உரியதேயாகும். தொன்றுதொட்டு ஒவ்வொரு காலத்திலும் ப்ராம்மணர்களின் ஹிந்து மதம் ஜீவித்தே வந்திருக்கிறது, அதைப் பின்பற்றுபவர்களாக ஏராளமான ஜனங்கள் எல்லாக் காலங்களிலுமே இருந்திருக்கிறுர்கள் என்பது நிஸ்ஸந்தேஹமாக (ஐயத்துக்கு இடமில்லாமல்) புரிந்துகொள்ள வேண்டிய விஷயம். அநேக புஸ்தகங்களில் இந்தியாவில் "பௌத்த காலம்", "ஜைன காலம்" என்று சில (கால கட்டங்கள்) இருந்ததாகச் சொல்லியிருப்பது தப்பு; அது வேண்டுமென்றே தவருன அபிப்ராயத்தைக் கொடுப்பதாகும். 'பௌத்த காலம்' என்ற ஒன்றோ, 'ஜைன காலம்' என்ற ஒன்றோ இந்தியாவில் இருந்ததே கிடையாது. அவை ஒரொரு ராஜ்யங்களில் ரொம்பவும் கையோங்கி

---

* ஸ்ரீசரணர்கள் குறிப்பிடுவது வின்ஸென்ட் ஸ்மித் எழுதிய "The Oxford History of India" என்ற நூலாக இருக்க வேண்டுமென்று சரித்திரப் பேராசிரியரொருவர் தெரிவிக்கிறுர். அடுத்து ஸ்ரீசரணர் கூறுவது அந் நூலில் பின்வரும் பகுதியை அடிப்படையாகக் கொண்டிருக்க வேண்டும் என்று எடுத்துக் காட்டுகிறுர்.

"It must be clearly understood that Brahmanical Hinduism continued to exist and to claim innumerable adherents throughout the ages. It may well be doubted if Buddhism can be correctly described as having been the prevailing religion of India as a whole at any time. The phrase 'Buddhist period' to be found in many books is false and misleading. Neither a Buddhist nor a Jain period ever existed. From time to time Buddhism and Jainism obtained exceptional success and an unusually large percentage of adherents in the population of one kingdom or another, but neither heresy ever superseded Brahmanical Hinduism."

Koviloor Digital Library

ஞலும்கூட ஹிந்து மதத்தை அடியோடு பின்னே தள்ளி அதனிடத்தைத் தாங்கள் பிடித்துக்கொண்டதாக ஒரு போதும் நடந்ததில்லை'' என்று கண்டிருக்கிறது.

கல்வி விஷயமாகப் பேச ஆரம்பித்துவிட்டு, இதையெல்லாம் ஏன் சொல்லிக் கொண்டிருக்கிறேனென்ருல் இதற்கும் அதற்கும் ஸம்பந்தமில்லாமலில்லை. கல்வி என்ருல் அது உண்மையைத் தெரிவிப்பதாக அல்லவா இருக்க வேண்டும்? தற்போது நம்முடைய குழந்தைகளுக்குத் தரப்படுகிற கல்வியிலோ உண்மைக்கு மாருக, நம் தேசத்தில் நாகரிக வாழ்வு உண்டாகிச் சிறிது காலத்திலேயே புத்தரும் ஜினரும் தோன்றி வேத வழிமுறையான வாழ்க்கைப் போக்கை ஒரு கலக்குக் கலக்கி, நெடுங்காலம் தேசத்தில் அவர்களுடைய ஸித்தாந்தங்கள் பலமாகப் பரவியிருக்கும்படிச் செய்தார்கள் என்று ஹிஸ்டரி சொல்லிக் கொடுக்கப்படுகிறது. கல்வி ஸம்பந்தமாகப் பேசும்போது இந்தப் பெரிய கோளாற்றைச் சொல்லத்தானே வேண்டும்? பெரிசாக யூனிவர்ஸிடி, டெக்ஸ்ட்-புக் கமிட்டி, அது இது என்று வைத்துவிட்டதால் உண்மையான கல்வி போதிக்கப்படுவதாக அர்த்தமில்லை என்று எடுத்துக்காட்டுவதும் குரு-சிஷ்யர்கள் என்ற தனி மனிதர்களின் ஹ்ருதய சுத்தி, வாழ்க்கைத் தூய்மை ஆகியவற்றை மையமாகக் கொண்டே நடந்த குருகுலக் கல்வியின் சிறப்பை ஒருவிதத்தில் அண்டர்லைன் பண்ணிக் காட்டுகிறது.

ஹிந்து தர்மத்தை ஆசார்யாளோ, ஞானஸம்பந்தரோ புனருத்தாணம் பண்ணிஞர்கள் என்பதற்குக்கூட என்ன அர்த்தமென்ருல், அவர்கள் காலத்தில் தேசத்தின் ஒவ்வொரு பகுதிகளில் ஜனஸமூஹத்திலேயே ஹிந்து தர்மம் அடியோடு மங்கி, புறச்சமயம் ஒரேயடியாக மேலோங்கியிருந்ததை அவர்கள் மாற்றிஞர்கள்; அதைவிடக் குறிப்பாக, வித்வத் ஸமூஹத்தில் ஹிந்து மத ஸித்தாந்தத்தை நிலை நாட்டிஞர்கள் என்பதுதான். தேசம் முழுதிலும் ஹிந்து தர்மத்துக்கு முக்யமாயுள்ள ஸமூஹ அம்சமாகிய

Koviloor Digital Library

(Sociological aspect ஆன) ஜாதித் தொழில் முறை எடுபட்டுப் போனதாகவோ அப்புறம் அதை நம்முடைய மத புருஷர்களில் ஒருவர் பழையபடி அமல் படுத்தினு ரென்றோ நினைக்க இடமில்லை. (சக்ரவர்த்தியின் ஸஹாய மில்லாமல் ஒரு ஸமயத் தலைவர் தாமே இம்மாதிரி ஒரு பெரிய ஸமூஹ மாற்றத்தை உண்டுபண்ணுவதற்குக் கொஞ்சமும் இடமில்லை.)

ஆசார்யாளின் ஒரு பெருமை, யாராலும் ஸாதிக்க முடியாததை அவர் செய்தவரென்ருலும் தம்மைப்பற்றிய தற்பெருமை கொஞ்சங்கூட இல்லாமலிருந்ததுதான். அதனுல்தான் அவர் இத்தனை பாஷ்ய க்ரந்தங்களும் ப்ரகரண க்ரந்தங்களும் ஸ்தோத்ரங்களும்[1] செய்திருந்தும் அவற்றில் எதிலும் தம்மைப்பற்றிய குறிப்பு எதுவுமே கொடுக்கவில்லை. இதனுலேயே அவருடைய கால நிர்ணயம் முதலான பல விஷயங்களைப்பற்றி இன்னமும் பல தினுஸான அபிப்ராயங் கள் இருந்து வருகின்றன. இப்படிப்பட்ட ஆசார்யாளே ஒரே ஒரு இடத்தில் சொல்வதிலிருந்து அவருடைய காலத்தில் இந்த தேசம் முழுதற்கும் ஆக்ஞை செய்து கட்டுப்படுத்தக் கூடிய ஸார்வபௌமன் (சக்ரவர்த்தி) எவனும் இல்லை என்பது நிச்சயமாகத் தெரிகிறது. பிரம்ம ஸூத்ரத்தில் ஓரிடத்தில்[2] தேவர்களைப் பற்றி வருகிறது. இதற்கு ஆசார்யாள் பாஷ்யம் பண்ணும்போது நிஜமாகவே தேவர்களிருப்பதை யும் அவர்களோடு மநுஷ்யர்கள் நேருக்கு நேர் தொடர்பு கொண்டிருந்ததையும் சொல்லிவிட்டு, "இப்போது நம்மில் எவருக்கும் தேவதைகளோடு உறவாடுகிற சக்தி இல்லாத போது பூர்வ காலத்தில் மட்டும் எப்படி மநுஷ்யர்கள் இவ்வாறு செய்திருக்க முடியும் என்று கேள்வி கேட்டால்

---

1. முன்பே இருந்த நூல்களுக்கு இயற்றிய விரிவுரை பாஷ்யம்; சொந்தமாகச் செய்த தத்வ நூல் ப்ரகரணம்; தெய்வபரமாகச் செய்த துதி ஸ்தோத்ரம்.

2 முதல் அத்யாயம், மூன்ரும் பாதம், முப்பத்து மூன்ருவது ஸூத்ரம்.

Koviloor Digital Library

அது ஸரியில்லை. இப்படிக் கேட்பவன் தற்காலத்தில் (அதாவது ஆசார்யாள் ஜீவ்யவந்தராக இருந்த காலத்தில்) நம் தேசத்தில் ஸார்வபௌமன் இல்லாததால் எப்போதுமே இப்படிப்பட்ட சக்ரவர்த்திகள் இருந்ததில்லை; இப்போது இங்கே வர்ணாச்ரமங்கள் வ்யவஸ்தை கெட்டிருப்பதால் எப்போதுமே இங்கே வர்ணாச்ரம ஒழுங்கு இருந்ததில்லை என்றெல்லாங்கூட விதண்டாவாதம் பண்ணலாம்" என்கிறார். இதிலிருந்து என்ன தெரிகிறதென்றால், சக்ர வர்த்தி ஒருத்தன் சட்டம் போட்டு தேசம் பூராவும் ஜாதித் தொழில் முறையை மறுபடி உண்டாக்கமுடியும் என்றே வைத்துக்கொண்டாலுங்கூட (வாஸ்தவத்தில் இது நடக்கக் கூடியதே அல்ல; நடப்பதாக 'ஹைபோதெடிக'லாக வைத்துக் கொண்டாலுங்கூட) ஆசார்யாள் காலத்தில் அப்படிப்பட்ட சக்ரவர்த்தி எவனும் இருக்கவில்லை. அதனால், வர்ணதர்மம் அவருக்குப் பின் பழைய ஜீவனோடு ப்ரகாசிக்க ஆரம்பித்தது என்றால் அவர் காலத்திலுங்கூட அது அடியோடு எடுபட்டுப் போயிருக்கவில்லை என்றே ஆகிறது.

ஸார்வபௌமன் இல்லை என்று ஆசார்யாள் சொல்லி யிருப்பது சற்று முன்னாடி நான் சொன்ன ஒரு விஷயத்தை உறுதிப்படுத்துவதாக இருக்கிறது. பௌத்த - சமண அஹிம்ஸா மதங்களில் ராஜாக்கள் அதிகப் பற்று வைத் திருந்த காலங்களில் சீரும் சிறப்பும் பொருந்திய மஹா ஸாம்ராஜ்யமாக நம் தேசத்தில் எதுவும் நிற்கமுடியவில்லை என்றும், நாகரிகம் குறைந்த அந்நிய தேசத்தினரின் ஆளுகைக்கு அச் சமயங்களில்தான் தேசம் அதிகமாக ஆளாயிற்று என்றும் சொன்னேனே, அந்த விஷயந்தான். ஆசார்யாள் இப்படிப்பட்ட ஒரு காலத்தில் அவதாரம் பண்ணியவர்தான். அதனால் அவர் காலத்தில் ஸாம்ராஜ் யாதிபதியான ஸார்வபௌமன் எவனும் இல்லை. இந்த விஷயம் இருக்கட்டும். ஸாம்ராஜ்யம் இல்லாவிட்டாலும் அப்போதுங்கூட வர்ணதர்மம் ஒரேயடியாய் இல்லாமல் போய்விடவில்லை என்ற விஷயத்தில் இருந்தோம்.

Koviloor Digital Library

"பின்னே நீங்கள்தானே சொன்னீர்கள்! நீங்கள்கூட இல்லை; ஆசார்யாளே சொன்னதாக நீங்கள் இப்போது எடுத்துக்காட்டினீர்களே! அவர் வார்த்தைப்படியே அவர் காலத்தில் ஸார்வபௌமன் இல்லை என்று சொன்னவுடனேயே, அவர் காலத்தில் வர்ணாச்ரமம் வ்யவஸ்தை கெட்டிருந்தாலும் சொல்லியிருக்கிறாரென்று காட்டினீர்களே! இப்போதோ அது அடியோடு எடுபட்டுப் போய்விடவில்லை என்று மாறுபாடாகச் சொல்கிறீர்களே" என்று கேட்கலாம்.

பதில் என்னவென்றால், (வர்ணதர்மம்) அடியோடு எடுபட்டுப் போகவுமில்லை; பூரண ரூபத்தில் ப்ரகாசிக்கவும் இல்லை. ஆசார்யாளே என்ன சொல்லியிருக்கிறாரென்றால் அவர் காலத்தில் ஜாதிப் பாகுபாடுகள் "அவ்யவஸ்தித ப்ராயமாக" இருந்தன என்ற வார்த்தையைத்தான் போட்டிருக்கிறார். இப்படியென்றால் அடியோடு அழிந்து போய்விட்டது என்று அர்த்தமில்லை. 'வ்யவஸ்தை' என்பதாக அதற்கென்று ஏற்பட்டிருந்த வரையறை நலிந்ததாக இருந்தது என்றுதான் அர்த்தம். Irregular-ஆக (ஒழுங்கில்லாமல்) இருந்தது என்கிறாரே தவிர, இல்லாமலே போய்விட்டது என்று சொல்லவில்லை. சற்றுமுன் நான் intact-ஆக இருந்தது என்றது வேண்டுமானால் அவ்வளவு ஸரியில்லை. 'intact' என்று சொல்லும்படியாக அவ்வளவு கட்டுக்கோப்பாகவுமில்லை; அடியோடு போச்சு என்னும்படியான liquidate-ஆன நிலைக்கும் போய்விடவில்லை. எப்படியிருந்தது என்றால்: ப்ராம்மணன் பக்ஷபாதமாகப் பண்ணியிருக்கிறான் என்று ஜனங்களுக்குக் கலைத்துக் கொடுத்ததால், ஒருவேளை அந்தக் காலத்துப் ப்ராம்மணனும் இப்படிக் குற்றம் காட்டுவதற்கு இடம் கொடுக்கிற மாதிரி இருந்திருக்கக் கூடுமாதலால், அவனுடைய செல்வாக்குக் குன்றிப் போயிருந்தது. அவனால் நடந்த யாக யஜ்ஞாதிகளும் தர்மோபதேசமும் ஹீனமடைந்தன. ஸமூஹத்துக்கே ஆத்ம பலம் தரும் இந்த அம்சம் ஹீனமான

Koviloor Digital Library

போதிலும், லௌகிக வாழ்க்கை ஒழுங்காக நடப்பதற்கே பாரம்பர்யமாக ஜாதித் தொழில்களைச் செய்வதுதான் வசதி யாயிருக்கிறது என்பதால் ஜனங்கள் பழைய முறைப்படியே பிறப்புப் பிரகாரம் அவரவருக்கேற்பட்ட தொழில்களை செய்துவந்தார்கள். அவர்களைப் பொறுத்தமட்டில் அவர் களுக்கு ஹிந்துமத வேதாந்த தத்வமும் தெரியாது, பௌத்த ஜைன ஸித்தாந்த வாதங்களும் தெரியாது. அது வரை ஸத் ப்ராம்மணர்களின் உத்தமமான வாழ்க்கை லக்ஷ்யத்தைத் தங்களால் முடிந்த அளவில் பின்பற்றிக் கொண்டு அதனாலேயே ஓரளவு ஆத்ம பரிபக்வம் அடைந்து ராமனை, கிருஷ்ணனைக் கும்பிட்டுக் கொண்டிருந்தார்கள். அவர்களில் பெரும்பாலோர் இப்போது அந்த 'லீடர்ஷிப்' இல்லாமல், அதனால் ஆத்மார்த்தமான உயர்வுமில்லாமல், ஏதோ தங்களுக்குப் பிடித்த ஸ்வாமியைக் கும்பிடுவதோடு நின்றுவிட்டார்கள். வைதிகமான 'லீடர்ஷிப்' போனவுடன், உக்ரமான ஆபாஸமான கோரமான வழிபாட்டு முறைகளைப் பின்பற்றும் காபாலிகர்கள் முதலியவர்கள் இவர்களை வளைத்துக் கொண்டார்கள். இவர்களில் சேராமல் பரமதங் களுக்கே போய்விட்ட மீதி ஜனங்களும் ராமனையோ, க்ருஷ்ணனையோ அல்லது கபாலியையோ காளியையோ கும்பிடுவதற்குப் பதில் புத்தரையோ தீர்த்தங்கரர்களையோ கும்பிட்டார்களே தவிர அவர்களுக்கு அந்த மதக் கோட் பாடுகள் தெரிந்திருந்தன என்று சொல்லமுடியாது.

பொதுமக்களுக்கு வாழ்க்கை வழிகாட்டிகள்

'ப்ராம்மணர்களின் லீடர்ஷிப் மாதிரி, அதனிடத்தில் பௌத்த - ஜைன பிக்ஷுக்களின் லீடர்ஷிப் பொது ஜனங் களுக்கு ஏற்படவில்லையா?' என்று கேட்டால், இல்லை என்று தான் சொல்லவேண்டும். நான் ஹிந்துமத குருவாகப் பேச வேண்டுமென்பதாலன்றி, நிஷ்பக்ஷபாதமாகப் பார்த்துத் தான் இப்படிச் சொல்கிறேன். பௌத்த ஜைன மதங்களில் எத்தனையோ பெரியவர்கள், உத்தமமான துறவிகள், அறிவாளிகள், உபகாரிகள், த்யாகிகள் இருந்திருப்பது

Koviloor Digital Library

வாஸ்தவம். (பௌத்தரான) நாகார்ஜுனரின் 'ஃபிலாஸஃபி'யில் எனக்கே கொஞ்சம் 'அட்மிரேஷன்' உண்டு. இந்தபிக்ஷுமார்கள் ப்ராம்மணர்களைவிடவும் ஏனைய பொது ஜனங்களைக் கிட்டே சேர்த்துக்கொண்டு கலந்து பழகியதும் வாஸ்தவம். இப்படியிருந்தும் மக்களிடையே அவர்களுக்கு 'லீடர்ஷிப்' என்பது ஏற்படவில்லை.

ஏன்?

'லீடர்ஷிப்' என்றால் என்ன? தாங்கள் போகிற வழியில் மற்றவர்களை நடக்கப்பண்ணுவதுதான் லீடர்ஷிப். "இவர்களுடைய வாழ்முறையை நாம் 'ஐடியலா'க் கொள்ள வேண்டும்" என்று நினைத்து ஜனங்கள் யாரைப் பின்பற்ற முடியுமோ, அதே ப்ரகாரம் யாரைப் பின்பற்றுகிறார்களோ அவர்கள்தான் லீடர்ஷிப் உள்ளவர்கள். க்ருஹஸ்தாச்ரமத்தில் தன் மாதிரிப் பெண்டாட்டி, பிள்ளைகுட்டிகளுடன் வாழ்க்கை நடத்துபவனைத்தான் பொதுமக்கள் லீடர்களாகக் கொள்ளமுடியுமே அன்றி, ஒரே வைராக்யம், ஒரே தபஸ் என்று இருக்கிற பிக்ஷுக்களை எப்படித் தங்களுக்கு வழிகாட்டும் லீடர்களாகக் கொள்ளமுடியும்? அவர்களிடம் பக்தி, மரியாதைகள் வேண்டுமானால் வைக்கலாம். ஆனால் வாழ்க்கை வழிகாட்டிகளாக அவர்கள் இல்லாதவரை அவர்களுக்கு 'லீடர்ஷிப்' உண்டாக முடியாது. வேத தர்மத்தில் ப்ராம்மண ஜாதியை ஐடியலாக வைத்திருந்து இந்த ஜாதிக்காரர்களும் வாழ்க்கையின் பெரும் பகுதியை க்ருஹஸ்தாச்ரமிகளாகக் கழிக்க வேண்டுமென்று இருந்ததால் இவர்களை மற்ற ஜனங்கள் ஐடியலாகக் கொண்டு பின்பற்ற முடிந்தது; அப்படியே பின்பற்றினார்கள்.

ஜாதி வித்யாஸமில்லாமல் புது மதம் பண்ணிய புத்தரும் ஜினரும் ஏராளமாக பிக்ஷுக்களை உண்டாக்கிய போது, ஸந்நியாஸாச்ரமத்தின் தரமே குன்றிப்போக ஆரம்பித்தது. எத்தனையோ பேர் தப்பிப் போவதாகப் பிற்காலத்தில் ஏற்பட்டது. பிக்ஷு என்றாலே பொது ஜனங்களுக்கு அது பரிஹாஸமாகக்கூட ஆகிவிட்டது.

Koviloor Digital Library

அதாவது க்ருஹஸ்தனைவிடக் கடும்நெறி உடைய பிக்ஷுக்களை முக்கியமாக்கியதால் முதலில் அவர்களுடைய ஸ்தானத்தின் உயர்வினால் லீடர்ஷிப் ஏற்படாமல் போயிற்று; அப்புறம் கடும் நெறி முடியாமல் பிக்ஷுக்களி லேயே பலர் ஒழுங்கு தப்பினபோது, அந்தத் தாழ்ச்சியினால் ஜன ஸமூஹத்தின் கேலிக்கு அவர்கள் ஆளாக நேர்ந்து, 'லீடர்ஷிப்'புக்கு நேரெதிர் திசையில் போகும்படி ஆயிற்று. மஹேந்த்ரப் பல்லவனின் 'மத்த விலாஸ ப்ரஹஸன'த்தைப் பார்த்தால் போதும்!

நான் காட்டவந்தது என்னவென்றால், பௌத்த - ஜைன மதங்கள் ஏற்பட்ட பிற்பாடுங்கூட, பொது ஜனங்கள் எந்த மதத்தைச் சேர்ந்தவர்கள் என்று தங்களைச் சொல்லிக் கொண்டாலும் குலத்தொழிலை விடவில்லை என்பதுதான்.

ஆதிசங்கரரின் அரிய ஸாதனை

மத ஸித்தாந்தங்கள் அறிவாளிகளான சில பேருடைய மட்டத்தோடேயே நின்றது — 'பண்டிதருலகம்' என்கிறார் களே, அதோடு நின்றது. முதலில் உதயனர், குமாரிலர் முதலியவர்களும், முடிவாக ஆசார்யாளும் செய்தது என்ன வென்றால் அந்தப் பண்டிதருலகில் வாதங்கள் நடத்தி பௌத்த ஜைன மதங்களை நிராகரணம் (மறுதலிப்பு) செய்ததுதான்.

இதிலே யாரும் ஸாதிக்க முடியாத அதிசயமாக ஆசார்யாள் என்ன செய்தாரென்றால் :

ஏற்கெனவே தார்க்கிகர்களும் (தர்க்க சாஸ்த்ரக்காரர் களும்) மீமாம்ஸகர்களும் பாதி தூரத்துக்கு மேலே போகப் பண்ணிவிட்ட பரமதங்களை அவர் முழுசாக வெளியேற்றி விட்டதோடு நிற்கவில்லை. தர்க்கமும் மீமாம்ஸையும் வித்வத் ஜனங்களோடேயே முடிந்துவிடுவது; பொது ஜனங் களின் மதமாக அவை ஒருபோதும் ஆகமுடியாது. ஆசார்யாள் சொன்ன அத்வைதமும் வித்வத் ஜனங்

Koviloor Digital Library

களுக்குத்தான் புரிவது. புரிவதற்கு மேல் அதன் உண்மை உத்தேசமான அநுபவம் என்பதோ லக்ஷத்தில் கோடியில் ஒருத்தருக்குத்தான் ஸித்திக்கக் கூடியது. இப்படிப்பட்ட ரொம்பவும் "அப்ஸ்ட்ரூஸான" ஸித்தாந்தத்தை நிர்த்தாரணம் பண்ணிய அதே ஆசார்யாள்தான், பரமதங்களை நிராகரணம் செய்தபின், அத்தனை பொது ஜனங்களுக்கும் —வித்வத் ஜனங்களுக்கு மட்டுமில்லை; பாமர ஜனங்கள் உள்பட ஜீவ ஸமூஹம் முழுதற்கும்—ஆபாஸமும் கோரமுமில்லாத வழிபாட்டு முறைகளைத் தந்து பரமோபகாரம் செய்தார். வைதிக கர்மாநுஷ்டானங்களைப் பழையபடி ப்ரகாசிக்கச் செய்து மறுபடியும் ஸத்பிராம்மணர்கள் விருத்தியடையச் செய்து அவர்களுடைய 'லீடர்ஷிப்'பில் மற்றவர்களும் முன்னேறச் செய்தார்.

லீடர்ஷிப் என்றால் அவர்கள் ஊர்வலத்தில் முன்னே கொடியை எடுத்துக்கொண்டு போய் மேடையில் ப்ரஸங்கம் செய்து மாலை-பொன்னாடை மரியாதை பெறவில்லை. ஸைலன்ட் லீடர்ஷிப்தான்—மௌனமான தலைமைதான். அவர்கள் பாட்டுக்கு ஒதுங்கித் தியாகமாக, நியமமாக, அஹிம்ஸை, அபயம், பக்தி, அன்பு, அபரிக்ரஹம் (பொருள் பற்றின்மை) முதலியவற்றோடு வாழ்ந்து கொண்டிருந்தார்கள். அதிலிருந்து மற்ற ஜனங்கள் தாங்களாகவே முன்னுதாரணம் எடுத்துக் கொண்டதைத்தான் 'லீடர்ஷிப்' என்கிறேன்.

இந்த லீடர்ஷிப்பில் ஜனஸமுதாயம் முழுதற்கும் பொருள் தருவது எதுவோ, உய்வு தருவது எதுவோ அந்த ஆத்மாபிவ்ருத்தியும் ஏற்படும்படியாக ஆசார்யர்கள்தான் மறுபடி ஏற்படுத்தினர். அதாவது இந்தியா என்றால் தர்மம், பக்தி, ஆத்மஸம்பத்து என்று இதற்கு உயிர் மூச்சாக உள்ள ஆக்ஸிஜனை மறுபடி கொடுத்து இதைப் பிழைக்க வைத்தவர் அவர்தான். ஆரம்பத்திலிருந்து நான் சொன்னதுபோல "ஆசார்யர்" என்ற பெயர் தமக்கே அலாதியாகப் பொருந்தும்படியாக, அதன் லக்ஷணப்படி புத்தியை மட்டும் வளர்க்காமல், ஒழுக்கத்தையும், ஹ்ருதயத்

Koviloor Digital Library

தையும், ஆத்மாவையுமே வளர்க்கும்படியான நிஜமான பாடத்தை தேசம் பூராவுக்கும், லோகம் பூராவுக்குமே சொல்லிக் கொடுத்தார்.

தேசம் முழுவதும் ஸஞ்சாரம் பண்ணி ஆங்காங்கே அறிவாளிகளான மற்ற ஸித்தாந்திகளை அவர் ஜயித்தவுடனேயே அந்த ஸித்தாந்தங்கள் தோற்று ஓட்டம் பிடித்தன. ஆனால் இதனால் மட்டும் வைதிக ஹிந்து மதம் ஜயித்ததாக ஆகாது. ஏனென்றால் வாதத்தால் பெற்ற வெற்றி புத்தியின் ஜயம்தான். ஜன ஸமூஹத்தின் ஒழுக்கம், பக்தி இவற்றுக்கோ, அவர்களில் பக்வமானவர்களுக்கு ஆத்மாநுபவம் ஏற்படுவதற்கோ பரமதங்களின் நிராகரணம் மட்டும் எப்படிப் போதும்? ஆசார்யாளின் அஸாத்ய ஸாதனை என்னவென்றால் இதற்கெல்லாம் வழியாக நான் இப்போது சொன்னபடி தர்மத்தையும் பக்தியையும் அத்வைத ஞானத்தோடேயே அவர் நிலைநாட்டி, பரமதங்களின் அபஜயத்தை அதோடு விடாமல் நேராக வைதிகமதத்தின் வெற்றியாகப் பூர்த்தி செய்து கொடுத்ததுதான்.

கர்மா, பக்தி, ஞானம் என்ற மூன்று மார்க்கங்களில் நம் ஆசார்யாள் ஞானத்தை நிலைநாட்டினவர் என்று பொதுவாகச் சொல்லப்பட்டாலும், அது நிஜந்தான் என்றாலும், கர்மாவையும் பக்தியையும்கூட அவர்தான் புத்துயிர் தந்து ஸ்திரப்படுத்தியிருக்கிறார். கர்மமும் தர்மமும் ஒன்றோடொன்று ஒட்டியவை; கைகோர்த்துக் கொண்டு போகிறவை. வேத சாஸ்த்ர ப்ரகாரம் ஒவ்வொருவனுக்கும் ஏற்பட்ட குலகர்மாவைப் பொறுத்தே அவனது நியாயமான வாழ்க்கை முறையாகிய தர்மம் என்பதும் அமைந்திருக்கிறது. குலதர்மம், ஸ்வதர்மம் என்ற வார்த்தைகள் குலகர்மம், பிறப்பால் ஏற்பட்ட ஸ்வகர்மம் என்ற அர்த்தத்திலேயே கீதாதி சாஸ்த்ரங்களில் சொல்லப்பட்டிருக்கின்றன. இப்படி சாஸ்த்ரம் விதித்த கர்மாவைச் செய்து அதனால் சித்த சுத்தி பெற்று, சுத்தி பெற்ற அந்தச் சித்தத்தால் ஈச்வரனை ஒருமுனைப்பாட்டோடு நினைத்து,

Koviloor Digital Library

அதாவது பக்தி பண்ணி, அப்புறம்தான் அந்த நினைப்பிலேயே தோய்ந்து முடிவாக நினைப்பு என்பதே அழிந்து ஈச்வரனோடு ஈச்வரனாக அத்வைத ஞானம் பெறும்படியாக ஆசார்யாள் க்ரமப்படுத்திக் கொடுத்திருக்கிறார்.

இவற்றில் அவரவரது கர்மத்தை, தர்மத்தைச் சொல்வது தர்ம சாஸ்த்ரமான ஸ்ம்ருதி. பக்தியை ஊட்டி வளர்ப்பது புராணம். அத்வைத ஞானத்துக்கு உபாயம் சொல்வது உபநிஷத்தாகிய வேத அந்தம் (வேதாந்தம்) எனும் ச்ருதி சிரஸ். ச்ருதியின் அடியில் (பாதத்திலிருந்து) ஆரம்பித்துத்தான் இந்த சிரஸான முடிவுக்கு (முடிக்கு)ப் போகவேண்டும். இம் மூன்றுக்குமே—அதாவது ஞானத்துக்கான ச்ருதி, கர்மாவுக்கான ஸ்ம்ருதி, பக்திக்கான புராணம் ஆகிய மூன்றுக்குமே—ஆசார்யாள் ஒரு குடியிருப்பாக இருந்தார்; இவை மூன்றும் குடிகொண்ட கோயிலாக இருந்தார் என்றே அவரைப்பற்றிய ச்லோகம் சொல்கிறது;

ச்ருதி ஸ்ம்ருதி புராணாநாம் ஆலயம் கருணாலயம் |
நமாமி பகவத்பாத சங்கரம் லோக சங்கரம் ||

அதாவது பரமபாவிகளான சிலருக்கு மட்டும் நல்லது பண்ணும் ஞானாசார்யராக மட்டுமில்லாமல் ஸகல ஜனங்களுக்கும் நல்லது பண்ணும் கர்ம - பக்திகளையும் தரும் லோக சம் - கரராக இருந்த அருள்மூர்த்தி (கருணாலயம்) அவர் என்று ச்லோகம் சொல்கிறது. ('சம்' என்றால் நல்லது. 'கர' என்றால் பண்ணுவது. உலகத்துக்கெல்லாம் நல்லது பண்ணிய லோக சம் - கரர் நம்முடைய சங்கர பகவத்பாதாள்.)

அறிவு வாதத்தால் தாய் மதத்துக்குத் திருப்பிய ப்ராம்மணர்களை, நம் பழைய கல்விமுறையில் அறிவை அநுஷ்டானத்தோடு இழைத்தது போலவே ஆசார்யாளும் கர்மாநுஷ்டானங்களில் கட்டிப்போட்டார். அதனால் அவர்கள் தாங்களும் சித்த சுத்தி பெற்று, ஸமூஹ முழுதற்கும் 'ஐடியல்' வாழ்க்கை வாழ்ந்து காட்டும்படியும் செய்தார்.

Koviloor Digital Library

ஒரு ஊருக்குப் போனால் வாதப் போர் செய்வது மட்டு மில்லாமல் அங்கே கோயிலுக்குப் புனர்ஜீவன் உண்டாக்கினார்; யந்த்ர ப்ரதிஷ்டை பண்ணினார்; உக்ர மூர்த்தியை ஸௌம்யமாக்கினார்.

ஆசார்யாள் என்றாலே "அத்வைதம், அத்வைதம்" என்று கொண்டாடுவது அவரைப் பூர்ணமாகச் சொல்வதாகாது. அத்வைதந்தான் லக்ஷ்யம், அதை அசைக்க முடியாத ஸித்தாந்தமாக அவர் ஸ்தாபித்துவிட்டாரென்றாலும், அதை நேராக அப்யஸிக்கக்கூடிய அதிகாரிகள் ரொம்பவும் ஸ்வல்பமே. எல்லா ஜனங்களுக்கும் அவர் செய்த பரமோபகாரம், சித்த சுத்திக்குப் பரம உபாயமான கர்மாவை சாஸ்த்ரப்படி மறுபடி பண்ண வைத்ததும், அன்பு வழியிலேயே அமைந்த ஆலய வழிப்பாட்டைப் பெரிய அளவில் புத்துயிர் பெறவைத்து பக்தியை வளர்த்ததுந்தான். 'ஷண்மதங்கள்' என்பதாக அவரவரும் இஷ்டதெய்வ உபாஸனையை ஸௌம்யமான முறையில் பண்ணவும், அப்படிப் பண்ணும்போதே மற்ற தெய்வங்களை நிந்திக்காமல் அவையும் தங்களுடைய இஷ்ட தெய்வமாகியுள்ள அதே பரமாத்மாவின் வேறு ரூபங்கள்தான் என்ற த்ருஷ்டியுடன் அவற்றையும் 'பஞ்சாயதனம்' என்ற பெயரில் தங்கள் இஷ்ட மூர்த்திக்குப் பரிவாரங்களாக வைத்து ஆராதிக்கவும் அவர் ஏற்பாடு செய்து நம் மதத்துக்குள்ளேயே உட்பிணக்குகள் அறுவதற்கு வழி செய்தார்.*

ஆசார்யர்—உபாத்யாயர் என்று ஆரம்பித்தது எங்கெங்கேயோ போய் ஆசார்யாள் மாஹாத்ம்யத்தில் கொண்டுவிட்டது!

இந்த topic-குக்கு வித்யாஸ்தான விஷயத்தில் எப்படி ஸம்பந்தம் என்று சொல்கிறேன். புறச்சமயத்தினர் பெரிய வித்யாசாலைகள் வைத்து ஸகல ஜாதியினரையும் "வா வா"

---

* பஞ்சாயதனம், ஷண்மதம் இவை தொடர்பாக 'தெய்வத்தின் குரல்' முதற்பகுதியிலுள்ள 'பூஜை' என்ற உரை பார்க்க.

Koviloor Digital Library

என்று கூப்பிட்டபோதிலும் பொது ஜனங்கள் தங்கள் பாரம்பர்யத் தொழிலைத் தொடர்ந்து செய்துகொண்டு போவதில்தான் நாட்டமுள்ளவர்களாக இருந்திருக்கிறார்கள். அதனால், முன்னேயே சொன்னபடி, இவர்களுக்கு வீடே தொழிலைக் கற்பிக்கும் கல்விக்கூடமாகவும் இருந்து, வித்யாசாலைகளின் தேவை தெரியாமலிருந்ததால் இவர்கள் அப்படியொன்றும் குறிப்பிடும்படியாகப் புது கல்வி நிலையங்களில் சேர்ந்து விடவில்லை. ஏதோ ஓரளவு சேர்ந்ததோடு, ஏதோ ஆரம்ப வகுப்புக்கள் படித்ததோடு ஸரி. வித்யை, தத்வம் இவற்றிலேயே பாரம்பர்யமாக ஈடுபாடு கொண்ட பிராம்மணரும், அடுத்தபடி க்ஷத்ரியரும்தான் புதிய வித்யாசாலைகளில் நிறையச் சேர்ந்தவர்களும், முழு 'கோர்ஸு'ம் படித்தவர்களும். அங்கங்கே புத்தர் ப்ராம்மணர்களுடன் வாதம் செய்வது, அவர்கள் அவர் மதத்தில் சேர்ந்து பிக்ஷுவாவது என்றிப்படி கதைகளை அவர் சரித்ரத்தில் பார்க்கிறோம். ஆதலால் ப்ரம்மண்யத்தை எதிர்க்கும் அவர் மதத்துக்கும் அவருடைய மதஸ்தரின் வித்யாசாலைகளுக்கும் பெரிய ஆதரவு கிடைத்ததும் பிராம்மணர்களிடமிருந்துதான். ஸமய தத்வ வாதத்தில் அவர்களுக்குத்தானே அதிகப் பிடிமானம்? அதனால் (இப்படி).

ஆக, பௌத்த - ஜைனர் செல்வாக்கு ஓங்கியிருந்த காலத்தில்தான் எல்லாருக்கும் பொதுவாகப் பல வாத்யார்கள் சேர்ந்து ஸ்தாபன ரீதியில் கல்வி போதிக்கும் முறை ஏற்பட்டது; அந்தக் காலத்திலும்கூட ஜாதி ஏற்பாடு இருந்துகொண்டேதானிருந்தது—என்று சொல்லிக்கொண்டிருந்தேன்.

நிகழ்கால—பூர்வகால ஒப்புவமை

இந்த ஜாதி விஷயத்துக்கு எங்கேயோ பூர்வகால சரித்ரத்துக்குப் போய் மூளையைக் குழப்பிக் கொள்ள வேண்டுமென்பதே இல்லை. அந்த அபிமானம் அநாதி கால

Koviloor Digital Library

மாக நம் ரத்தத்திலேயே ஊறிவிட்டிருக்கிறது என்பதற்கு நம்முடைய காலத்தைப் பார்த்தாலே போதும். பௌத்தர்களையும் ஜைனர்களையும்விட இன்னமும் காரஸாரமாகவும் நையாண்டியாகவும் வெள்ளைக்காரர்கள், முக்யமாக அவர்களுடைய மத ப்ரசாரகர்கள், வர்ண தர்மத்தைக் கண்டனம் செய்திருக்கிறார்கள். அவர்களைப் போலவே இவர்களும் ஸ்கூல்கள், காலேஜ்கள் வைத்திருக்கிறார்கள். ஆனால் ஒரு பெரிய வித்யாஸம். பௌத்த - ஜைனர்கள்கூட நல்லறிவு ஏற்பட வேண்டுமானால் வைதிகமான சதுர்தச வித்யைகளைச் சொல்லிக்கொடுக்கத்தான் வேண்டும் என்று உணர்ந்து தங்களுடைய ஸர்வகலாசாலைகளில் அவ்வாறே செய்திருக்கிறார்கள். அவற்றோடு கூடத்தான் தங்கள் ஸித்தாந்தங்களையும் சொல்லிக் கொடுத்தார்கள். அவர்களுடைய கொள்கையால் ஜாதிகள் எடுபட்டுப் போய், ஸமூஹத்துக்கு அவச்யமான ஏதேனும் ஒரு தொழிலுக்கு எவருமே வராவிட்டால், அல்லது போதிய அளவு ஜனங்கள் வராவிட்டால் அதை ஸமாளிப்பதற்கு அவர்களால் 'ஸப்ஸ்டிட்யூட்' எதுவும் கொடுக்க முடிந்திருக்காது. அதனால்தான்போலிருக்கிறது, அந்த மதங்களின் காலத்தில் ஸமூஹத்தின் சீரான வாழ்க்கையை உத்தேசித்துக் குலத் தொழில்கள் தொடர்ந்து நடக்க விட்டிருக்கிறார்கள்.

ஆனால் வெள்ளைக்காரர் காலத்தில் எப்படி ஆயிற்று? வேத வித்யா சாஸ்த்ரங்களை அப்படியே தூக்கி எறிந்தார்கள். அத்தனை ஜனங்களுக்குமே ஸப்ஸ்டிட்யூட்டாக மிஷின்கள், கோல் (நிலக்கரி), ஸ்டீம், எலெக்ட்ரிஸிடி, ந்யூக்ளியர் பவர் (அணுச் சக்தி) என்று ஒன்றன்பின் ஒன்றாக வந்துவிட்டன. ஜாதிப்படித் தொழில் என்பது ஒருமாதிரி இல்லாமலே போய்விட்டது. அதோடு ஸாமர்த்யமான பொருளாதார வசியம், த்வேஷ ப்ரசாரம், சரித்ரம் - ஆராய்ச்சி என்ற பெயரில் பரப்பிய ஆர்யன் - த்ராவிடியன் ரேஸ் கொள்கை ஆகியவற்றால், மற்ற எந்தத் தொழில் எப்படியானாலும் ஸப்ஸ்டிட்யூட்டினால் நடத்தவே முடியாத வேத அத்யயன -

Koviloor Digital Library

அத்யாபன ஆயுஸ்காலத் தொழில் ஏறக்குறைய நசித்தே போய்விட்டது. இதில் நம் ஜனங்களே, அதிலும் வேதத் தொழிலுக்குரிய ஜனங்களுமே, நன்ருக ஒத்துழைத்துக் "கைங்கர்யம்" பண்ணிப் "புண்யம்" கட்டிக் கொண்டிருக் கிருர்கள். ஆக இப்போது அசட்டு வைதிகக் குடுக்கைகளாக என் மாதிரி எங்கேயோ இருக்கிற நாலு பேரைத் தவிரப் பாக்கி அத்தனைபேருக்கும் ஜாதி என்ருலே மஹா கொடுமை, அநாகரிகம் என்பதுதான் அபிப்ராயமாயிருக்கிறது. இப்படி நிஜமாகவே பாரம்பர்யத் தொழிற் பங்கீடு போய்விட்ட பின்பும், அப்படிப் போவதுதான் நம் முன்னேற்றத்துக்கு வழி என்று ஸகல ஜனங்களும் அபிப்ராயப்பட்ட போதிலும், இப்போதுங்கூடக் கலப்பு மணம் என்ருல் நூற்றுக்குப் பத்துப் பேர்கூடத் துணிந்து முன்வர மாட்டேனென்கிருர்கள். அதாவது இத்தனை கிரிசை கெட்ட நிலையிலும் எங்கேயோ உள்ளே ஜாதியபிமானம் இருக்கத்தான் செய்கிறது. எலெக்ஷனென்ருல் ஜாதிக்குத்தான் ஓட்டு என்றே இன்னமும் இருக்கிறது! இப்படியிருக்கும்போது ஆலைத்தொழில் என்பது ஏற்படாமல் அந்தந்த கிராமமும் அதனதன் கைத் தொழில்களால்தான் நடக்கவேண்டும் என்பதாக 'எகானமி' அமைந்திருந்த பௌத்த - ஜைன காலங்களில் பெயரளவில் மாத்திரமில்லாமல் தொழில் அடிப்படையிலேயே ஜாதிகள் தொடர்ந்து இருந்து வந்ததில் ஆச்சர்யமில்லை அல்லவா?

இன்னொரு விஷயத்திலும் நிகழ்காலத்தை வைத்தே பழங்காலத்தில் எப்படியிருந்திருக்குமென்று ஊஹித்துக் கொள்ளலாம். இப்போது வெள்ளைக்காரக் கல்வி முறை வந்து ரொம்ப வருஷங்களுக்கு அதில் அதிகமாக ப்ரவேசித்துத் தேர்ச்சி பெற்றுவந்தது யார்? ப்ராம்மணர்கள் தானே? இவர்களே எல்லா உத்யோகத்துக்கும் வந்து விடுகிருர்களே என்பதற்காக எதிர்ப்பு இயக்கமே ஆரம்பித்து மற்றவர்களை உசுப்பிவிடும் வரையில் வியாபாரிகளாகவும் தொழிலாளிகளாகவும் இருந்த இதர ஜனங்கள் அதில் விசேஷமாகப் போய் விழவில்லையல்லவா? அவர்கள்

Koviloor Digital Library

பாட்டுக்கு 'நமக்கென்று குலத்தொழில் இருக்கிறது; வயிற்றைக் கழுவிக்கொள்ள அது போதும்' என்றுதானே இருந்துவந்தார்கள்? அறிவு வேலையிலேயே ஈடுபட்ட ப்ராம்மணன்தான் புதிதாக ஸயன்ஸ், ஆர்ட்ஸ் என்று கல்வி முறை வந்தபோது அதிலே போய்ச் சேர்ந்தான். ராஜாக்கள் போய்; அதனால் பிராம்மணனுக்கு ராஜமான்யம் என்பது போய்; ப்ராம்மணனுக்கும் தெய்வ பலத்தில் நம்பிக்கையும் உயிரைக் கொடுத்தாவது ஸ்வதர்மத்தை ரக்ஷிக்கும் தீரம், த்யாக சித்தம் முதலானதுகளும் போய்; அந்த ஸமயத்தில் 'படிப்பை வைத்து உத்யோகம் தருகிறேன்' என்று வெள்ளைக்காரன் தந்திரமாகச் சபலம் காட்டியதால் இவன்தான் வெள்ளைக்காரப் படிப்புமுறைக்கு முதல் அடிமையானான். 'ப்ராம்மண ஆதிக்கம்' என்ற கற்பனையான ஒன்றை ஸ்ருஷ்டித்து, அதை அழிப்பதாகச் சொல்லிக்கொண்டு ஹிந்து மதத்தையே பலஹீனப்படுத்துவதற்காக வெள்ளைக்காரன் கொண்டுவந்த ஸ்கூலிலும் காலேஜிலும் அந்த ப்ராம்மணனேதான் பெருவாரியாகச் சேர்ந்து, இன்னொரு விதத்தில் ப்ராம்மண ஆதிக்கத்துக்குக் காரணமாகி, இதனால் ஜஸ்டிஸ் பார்ட்டி, கழகம் என்றெல்லாம் எதிர்ப்புக்கள் ஏற்பட்டு ஹிந்து ஸமுதாயம் ஒற்றுமை குன்றி பலஹீனமடைந்திருக்கிறது. இது வெள்ளைக்காரன் 'ப்ளான்' பண்ணினதுதான். இதை வைத்தே ஆதியில் பரமதஸ்தர்கள் வர்ண விபாகப்படி இல்லாமல் எல்லாருக்கும் கல்விசாலைகள் என்று ஆரம்பித்தபோது நடந்ததையும் ஊஹிக்கலாம்.

இப்போது போல் அப்போது, 'குலத்தொழில் பண்ணு விட்டாலும் ஸமூஹத்துக்கு பாதிப்பு ஏற்படாமல் மெஷின்கள்ால், ஆலைத் தொழிலால் ஸமாளித்து விடலாம்' என்று இருந்திருக்க முடியாது; ஆனபடியால் இப்போதைவிட அப்போதைய தொழிலாளி வர்க்கங்கள் அந்தக் கல்விசாலைகளில் சேராமல் தங்கள் ஜாதித் தொழிலைப் பார்த்துக் கொண்டிருந்ததாகத்தான் நடந்திருக்கிறது. ப்ராம்மணன் குறிப்பாக இன்டரஸ்ட் காட்டிய சாஸ்த்ரங்கள், தத்வ விசார நூல்கள், காவ்யம், ஜ்யோதிஷம் முதலியன

Koviloor Digital Library

அப்போது நாளுக்கு நாள் வ்ருத்தியானாற்போல், க்ஷத்ரியனுக்குப் புதுப்புது போர் முறைகளோ, இன்றைக்கு பாம்(ப்), நாளைக்கு ஸப்மெரீன், மறுநாள் 'ந்யூக்ளியர் வெபன்' என்பதாகவோ தநுர்வேத சாஸ்த்ரம் பெருத்துக்கொண்டே போகவில்லை. இப்படியே வியாபார சாஸ்த்ரங்களாக பி.காம், பிஸினெஸ் மானேஜ்மென்ட், ஸீ.ஏ. என்றெல்லாமும் தினம் தினம் மூன்றாம் வர்ணத்தாருக்கான படிப்புக்கள் ஏற்படவில்லை. ஆலைத்தொழில் இல்லாததால் நாலாம் வர்ணத்தாருக்குப் பயன்படும்படியான இன்டஸ்ட்ரியல் ட்ரெயினிங் ஸ்கூல், பாலிடெக்னிக் முதலானதுகளும் ஏற்பட வேண்டிய அவசியமில்லாமல், தங்கள் குல முன்னோர்களுடன் உழைக்கும்போதே வேலையும் கற்றுக்கொண்டுவிடும் முறையேதான் பெரும்பாலும் நீடித்தது. ஆனபடியால், புதிதாக வித்யாசாலைகள் பெரிசாக ஏற்பட்டபோதுகூட ப்ராம்மண இதரர்கள் அவற்றில் கூட்டங் கூட்டமாகச் சேரும்படி அவர்களை அதிகமாக இழுக்கவில்லை. நம் தொழிலுக்கு அதிகப் பிரயோஜனமில்லாத படிப்புக்குப் போய், அதனால் ஜீவன வ்ருத்தி பாழாய்விடப் போகிறதே என்றேதான் அவர்களில் பெரும்பாலானோர் இருந்திருக்கிறார்கள். அந்த ஜாதிகளிலும் வசதியுள்ளவர்கள், ஸம்பாதிக்க வேண்டிய நிர்பந்தமின்றி ஸொத்தை வைத்தே சாப்பிடக்கூடியவர்கள், அல்லது எத்தனை கஷ்டமானாலும் வித்யை ஸம்பாதித்துக் கொள்ளவேண்டும் என்ற அறிவுப் பசியும், லோக வாழ்க்கை எப்படிப் போனாலும் நித்ய ஸத்யத்தைப் பற்றித் தெரிந்து கொள்ளவேண்டும் என்ற ஆத்ம தாஹமும் கொண்டவர்கள் ஆகியோர் மட்டுமே இந்தப் பெரிய வித்யாசாலைகளில் சேர்ந்தார்கள். இப்படியும் சில பேர் இருந்திருக்கிறார்கள்—அப்பர் ஸ்வாமிகள் நாலாம் வர்ணத்தவர்தான், சமணப் பள்ளியில் படித்து உயர்ந்த தேர்ச்சி அடையவில்லையா? இருந்தாலும் 'பெர்ஸென்டேஜ்' பார்த்தால் மற்றவர்கள் (அப்ராம்மணர்) வித்யாசாலைக்குப் போனது ரொம்பக் குறைச்சல்தான். ப்ராம்மணனுக்கு அடுத்தபடியாக க்ஷத்ரியர்கள் ஓரளவுக்

Koviloor Digital Library

குப் பெருவாரியாகப் படித்தார்கள். அப்புறம் வைச்யர்கள், நாலாம் வர்ணத்தார் என்று போயிற்று.

அதனால், மெகாலே கல்வித்திட்டம் என்பதாக நம் பாரத ஸமய - கலாசாரங்களின் வேரை நாமறியாமலே நைஸாக அரிபட்டு போகும்படிச் செய்த படிப்புமுறை சென்ற நூற்றாண்டிலே வந்ததும் அதில் பெருவாரியாக பிராம்மணப் பசங்களே போய்விழுந்த மாதிரிதான் பௌத்த - ஜைனர் பள்ளிகள் ஆரம்பித்தபோதும் நடந்திருக்கிறது. இப்போது போலவே (இந்த அளவுக்கு மோசமாயில்லா விட்டாலும்) அப்போதும் ப்ராம்மணர்களின் ஸ்வதர்மம் தான் அதிகம் கெட்டிருந்தது. இல்லாவிட்டால் மற்ற மதங்கள் எப்படி வேர் பிடித்திருக்க முடியும்? அஹிம்ஸை என்று சொல்லி அந்த மதங்கள் முக்யமாக ப்ராம்மணனின் சாஸ்த்ரியக் கடமையான (அதாவது தொழிலான) யாகத்தைத்தானே கண்டனம் செய்தன? "சங்கர விஜயம்" முதலான நூல்களில் தேவர்கள் ஈச்வரனிடம் போய் "யஜ்ஞாநுஷ்டானம் க்ஷீணித்து விட்டதே!" என்று முறை யிட்டதாகத்தான் பார்க்கிறோம். அதனால் ப்ராம்மணன் தான் அக்காலத்தில் தன்னுடைய பாரம்பர்யத் தொழிலால் ஜீவனோபாயம் பெறுவதென்பது பாதிப்படைந்தபோது, அந்த மதங்களில் கொஞ்சம் அதிகமாகவே சேர்ந்து பிக்ஷு வானது. அவர்கள்தான் புதுசாக ஏற்பட்ட அந்த வித்யா சாலைகளிலும் அதிக அளவில் சேர்ந்தார்கள். வயிற்றை உத்தேசித்தே போனார்கள் என்பது முழு உண்மை அல்ல. நிஜமான (genuine ஆன) தத்வ நாட்டம், வித்யையில் ஈடுபாடு இவற்றுக்காகவும் பலபேர் போயிருப்பார்கள். ஏனென்றால், ஸ்வதர்மத்தோடு வரும் கர்மாநுஷ்டானங் களாலும் காயத்ரீ உபாஸனையாலும் ப்ராமணப் பசங்கள் தாங்களாகவே ஸம்பாதித்துக்கொள்ளும் சித்தசுத்தியும், அதன் ஒரு அம்சமாக உண்டாகும் புத்தி ப்ரகாசமும் அப்போது பாதிக்கப்பட்டிருந்தாலும், பாரம்பர்யம் என்று ரத்தத்திலேயே சில திறமைகள், சில குணங்கள் உண்டாகி விடுகின்றன. ரொம்பத் தலைமுறைகள் தள்ளிப் போனால்

Koviloor Digital Library

தான் இவை அடியோடு தேய்ந்துவிடும். (நமக்கு அடுத்த தலைமுறையில் இப்படி ஏற்பட விடப்படாதே என்பதுதான் என் பெரிய விசாரம்.) அந்த ஸ்திதி ஏற்படும்வரை பெடல் பண்ணிவிட்ட ஸைகிளைப்போல, இவர்கள் புதிசாக அநுஷ்டானம் பண்ணிப் பெடலைச் சுழற்றாவிட்டாலும், ஏற்கெனவே உந்திவிட்ட வேகமே ஓட்டிக்கொண்டு போவதுபோல் பூர்விகர்களால் ஏற்பட்ட பாரம்பர்ய பலம் மேலே கொஞ்சம் ஓட்டிக்கொண்டு போய்விடும். இந்த பாரம்பர்ய புத்தி ப்ரகாசப் பெடல் - force பரமதங்கள் வ்ருத்தியான ஸமயத்திலும் ப்ராம்மணனுக்குக் கைகொடுத்தது. (History repeats itself—சரித்ரம் திரும்பத் திரும்ப அப்படியே நடக்கிறது என்கிறபடி இதையெல்லாந்தான் இங்கிலீஷ் படிப்புமுறை வந்தபோதும் ப்ரத்யக்ஷமாய் பார்த்தோம்.) ஆனபடியால் ப்ராம்மண ஜாதியினருக்கே புதுசாக வந்துள்ள மத ஸித்தாந்தங்களை அறிய வேண்டும் என்ற ருசி அதிகம் இருந்தது.

அதோடு பௌத்தத்தை அசோகன் காலத்திலிருந்தே வெளிதேசங்களுக்கும் பரப்புவது என்று வைத்துக் கொண்டதில். க்ரீஸ், சீனு முதலான புராதன நாகரிகங்களை உடையவர்களில் அறிவாளிகளுடன் நமக்குப் பரிசயம் அதிகமானதும் அறிவு நாட்டம் கொண்ட ப்ராம்மணனுக்கு இன்ஸென்டிவ் ஆயிற்று. வெளி தேசங்களிலிருந்து ஜ்யோதிஷம் முதலான சாஸ்த்ரங்களில் நமக்குத் தெரியாமல் அவர்கள் தெரிந்துகொண்டிருந்த விஷயங்களை நாமும் கற்றறிய வேண்டும்; அவர்களுக்குத் தெரியாத நம்முடைய க்ஷேத்ர கணிதமுறை (geometry), ரணசிகித்ஸை முறை (சுச்ருத சாஸ்த்ரமான surgery), முதலியவற்றை அவர்களுக்குக் கற்றுக்கொடுக்க வேண்டும் என்றெல்லாம் ஏற்பட்டதால் புதிய பெரிய வித்யாசாலைகளில் ப்ராம்மணர்கள் சேர்வதற்கு மேலும் மேலும் ஊக்கம் ஜாஸ்தி ஆயிற்று. ஏனென்றால், இவற்றிலே நம் தேசத்தின் எல்லா ஜாதிக்காரர்களும் சேர்ந்து படித்தது மட்டுமில்லாமல், வெளிதேசத்துக்

Koviloor Digital Library

காரர்களும் நம் உபாத்யாயர்களிடம் மாணுக்கர்களாகப் படித்திருக்கிருர்கள். அதே மாதிரி வெளி தேசத்து உபாத்தியாயர்களும் இவற்றில் பாடம் நடத்தி அவர்களிடம் நம்மவர்கள் மாணுக்கர்களாகப் படித்திருக்கிருர்கள். ஆனுலும் நம் நாட்டவர்களில் ப்ராம்மணர்களே அதிகமாகவும், அப்புறம் அதைவிடக் குறைச்சல், மேலும் குறைச்சல் என்ற ரீதியில் க்ஷத்ரிய - வைச்ய - சூத்ரர்களும் இவற்றில் சேர்ந்திருக்கிருர்கள்.

பௌத்த - ஜைனர் கல்விச் சிறப்பு

ஸமய ஸித்தாந்தம், தத்வவாதம், மதமாற்று யுக்திகள், "அஹிம்ஸை" என்று வானளாவச் சொல்லிக் கொண்டே மாற்று மதக்காரரை உப்பரிகையிலிருந்து உருட்டித் தள்ளுவது[1], அவர்களுடைய மடாலயத்துக்கு நெருப்பு வைப்பது[2] ஆகியவையெல்லாம் எப்படியோ போகட்டும். கல்வி, அறிவாற்றல், தத்வ சோதனம் என்று எடுத்துக் கொண்டால் பௌத்தர்களும் ஜைனர்களும் இவற்றில் நல்ல சிறப்புப் பெற்றிருந்ததை ஆக்ஷேபிப்பதற்கில்லை. இலக்கியத்திலும் இவர்கள் தொண்டு அல்ப ஸ்வல்பமானதல்ல. இவர்களில் வடக்கே பௌத்தர் செல்வாக்கு அதிகம். தெற்கே சமணர் செல்வாக்கு அதிகம்.

"பள்ளி" என்று தமிழில் ஸ்கூல்களுக்குப் பேர் வந்ததற்குக் காரணமே முதலில் சமணப் பள்ளிகள் எனப்படும் ஜைனர்களின் துறவிச்சாலைகளிலேயே ஸகல ஜாதி ஜனங்களுக்குமான புதுமுறை போதனை தொடங்கியதுதான் என்கிருர்கள். 'பள்ளி என்று பல ஊர் பேர்கள் முடிவதும் அங்கேயெல்லாம் சமணப் பள்ளிகள் இருந்ததால்தான்; சிரா என்ற சமண முனிவரின் பள்ளி இருந்த இடம்தான் (திருச்)சிராப்பள்ளி' என்றெல்லாம் அபிப்ராயமுண்டு.

---

1. முதற்பகுதியில் "முருகனின் வடநாட்டு அவதாரம்" என்ற உரை பார்க்க.
2. ஞானஸம்பந்தர் வாழ்க்கை குறிப்பிடப்படுவது தெளிவு

Koviloor Digital Library

(பள்ளி என்கிறபோது வேடிக்கையாக ஒன்று: பள்ளி கொள்வது, பள்ளியறை என்கிறபோது பள்ளி என்பது படுத்துக் கொள்வதைத்தானே குறிக்கிறது? மலை குகைகளில் வஸித்த அநேக சமணத் துறவிகள் திறந்த வெளியில் கல்லையே மழமழ என்று நைஸ் பண்ணித் தங்களுக்கு உண்டாக்கிக் கொண்டிருந்த படுக்கைகள் இப்போதும் பாண்டி நாட்டிலும், திருச்சிராப்பள்ளி போன்ற இடங்களிலும் உள்ளன.

கேசத்தை ஒவ்வொன்ருய் பிடுங்கிக்கொண்டே தலையை மொட்டையாக்கிக் கொள்ளவேண்டும்என்பதுபோல,தேஹ ச்ரமத்தையே முக்யமாகக் கொண்டு, அதனுல் "ச்ரமணர்" (சமணர்) என்றே பெயர் பெற்றவர்களானுலும், அவர்களிலும் தாரதம்யம் அதிகம் பார்க்காமல் நிறையத் துறவிகளை உண்டாக்கின போது, கல்லைக்கூடப் பஞ்சாகப் பண்ணிக்கொள்ளும் ஸொகஸுக்கு இடம் கொடுக்கவேண்டியிருந்திருக்கிறது! நான் எந்த மதத்தையும் தாக்கவில்லை; கேலி பண்ணவும் இதைச் சொல்லவில்லை. பொது மநுஷ இயற்கை எப்படியிருக்கிறது; அதை கவனிக்காமல் லக்ஷ்ய நிலையைப் பரவலாக அமல் பண்ணப் பார்த்தால் எப்படி லக்ஷ்யமே நீர்த்துப் போகிறது என்றுதான் காட்டவந்தேன்.

பள்ளி—படுக்கை ஸம்பந்தத்துக்காகச் சொன்னேன்.

சமணப் பள்ளி, பௌத்தப் பள்ளி என்பதை வைத்தே பிற்பாடு துருஷ்க மதம் பரவினபோதும் மசூதிக்குப் பள்ளி வாசல் என்று பெயர் வந்திருக்கிறது. இதிலே பாமர ஜனங்களுக்கு உண்டான குழறுபடியால் பரமதஸ்தரில் எவர் எந்த மதத்தைச் சேர்ந்தவர் என்பது தெரியாமல் மலையாள தேசத்தில் இப்போதும் துருஷ்கர்களை "பௌத்தன்மார்" என்று சொல்வதைக் கேட்கிறோம்!)

சமண - பௌத்தர்கள் கல்விக்கும் இலக்கியத்துக்கும் செய்த ஸேவை பற்றியல்லவா சொல்லிக்கொண்டிருந்தேன்?

ஐம்பெரும் காப்பியம் என்பவையே அவர்களுடையவை தான்.

Koviloor Digital Library

தமிழிலக்கியத்தில் மிகவும் உயர்ந்ததாகச் சொல்லும் "சிலப்பதிகார"த்தை எழுதிய இளங்கோ சமணத் துறவி தான். "மணிமேகலை" எழுதியவர் பௌத்தரான சீத்தலை சாத்தனர். "குண்டலகேசி"யும் பௌத்த காவியம்தான். "சீவக சிந்தாமணி" திருதக்கத்தேவர் என்ற சமணர் செய்தது. "கலிங்கத்துப்பரணி" எழுதிய ஜயங்கொண்டாரும் சமணர்தான். "நன்னூல்" என்ற இலக்கண நூல், "யாப்பருங் கலக்காரிகை" என்ற செய்யுளிலக்கண நூல், "அறநெறிச் சாரம்" என்று வைராக்யத்தைச் சொல்லும் நூல், "நாலடியார்" என்ற நீதி நூல் முதலானவையும் சமணர் எழுதியவைதான். "வீர சோழியம்" என்ற இலக்கண நூல் பௌத்தர் எழுதியது.

வடக்கே பௌத்தர்களின் ஸர்வகலாசாலைகள் அந்நிய தேசங்களிலும் பெயரெடுக்கும்படியாக அவ்வளவு பெரிய அளவில், அநேக faculty-களுடன் (பாடத்துறைகளுடன்) பாடதிட்டமும் ரொம்ப க்ரமமாக வகுத்து நடந்திருக்கின்றன. சீன யாத்ரிகர்கள் பலர் நம் நாட்டுக்கு வந்ததற்கு முக்யமான காரணமே இவற்றில் சேர்ந்து புத்தமத தத்வங்களைப் படிப்பதற்குத்தான். இவர்களில் ஹுவான் - த்ஸாங் என்பவர் இங்கே படித்தது மட்டுமில்லாமல் நாலந்தா ஸர்வ கலாசாலையில், தற்போது Dean என்று சொல்கிற ஸ்தானத்தில், ஆசிரியராகவும் இருந்திருக்கிறார் என்று ஸமீபத்தில் படித்தேன்.

எழுத்துக்கு முக்யத்வம்

பௌத்தர்களுடைய கலாசாலைகள் அடைந்த பெரிய வளர்ச்சிக்கு இன்னொரு காரணம்கூட அதில் பார்த்தேன். ப்ராம்மணர்கள் ஞாபகசக்திக்கு ரொம்பவும் முக்யத்வம் கொடுத்தவர்கள். 'மயி மேதாம்' என்று நல்ல தீக்ஷ்ணமான புத்திக்கே உரிய memory power-ஐ அவர்கள் விசேஷமாகப் ப்ரார்த்தித்துப் போற்றி வளர்த்துக்கொண்டவர்கள். இதை நன்றாக வளர்த்துக்கொண்டு எதையும் காதால் ஒருதரம், அல்லது இரண்டு மூன்று தரம், கேட்டே புத்திக்குள்ளே

Koviloor Digital Library

பதித்துக் கொள்வார்கள். சுத்தமான வாழ்க்கை; லௌகிக ஸௌகர்யங்களுக்குப்பறந்து புத்திசக்தியை வ்ரயம்பண்ணிக் கொள்ளாத எளிய ஜீவனம்; கர்மாநுஷ்டனங்களை நிரம்பப் பண்ணி சரீரத்தைச் சக்கையாய்ப் பிழிந்து அதன் பசிகளை வடித்து ஓட்டுவது—ஆகியவற்ருல் பெறுகிற புத்தி ப்ரகாசம்; அதோடு காயத்ரி, வேதாத்யனம், ப்ராணுயாமம் முதலிய வற்ருல் பிரம்மசர்யத்தின் மூலம் உண்டாகும் அறிவொளி— இத்தனையாலும் நல்ல 'மெமரி பவ'ரை 'டெவலப்' பண்ணிக் கொள்ளவேண்டும் என்பதே ப்ராம்மணர்களின் பழக்கமா யிருந்திருக்கிறது. ஏனென்ருல் இவனுக்கு 'டீச்சிங்' ஆறு கடமைகளில் ஒன்று. பல துறைக்காரர்கள், பல தொழில் காரர்கள் இவனிடம் விஷயங்கள் தெரிந்துகொள்ள வருவார் கள். வித்வத்ஸதஸில் பண்டிதர்கள் இவனைப் பல சாஸ்த்ர விஷயங்களைப் பற்றிக் கேட்பார்கள். அப்போதெல்லாம் இவன் ஒவ்வொன்றுக்கும் புஸ்தகத்தை நோண்டிப் பார்த்துப் பதில் சொல்வதென்ருல் முடியுமா? ஆனதால் அத்தனை புஸ்தகமும் இவன் மூளைக்குள்ளேயே வந்துவிடும்படியாக அப்படிப்புத்தியைப் பளிச்சென்று கருக்காகத் தீட்டிவைத்துக் கொள்ளவேண்டும்; ஞாபக சக்தியை நன்ருகச் சாணை பிடித்து ஜ்வலிக்கப் பண்ணிக்கொள்ளவேண்டும்; இதற்கான த்யாகங்களை இவன் செய்தாகவேண்டும்—என்பதை ஸத் ப்ராம்மணர்கள் ஒரு கொள்கையாகக் கடைபிடித்து வந்தார் கள். அதனுல்தான் இத்தனும் பெரிசான வேதமே "ச்ருதி" (காதால் கேட்கப்பட வேண்டியது; கண்ணுல் படிக்கப்பட வேண்டியதல்ல) என்றும் "எழுதாக் கிளவி" என்றும் பெயர் பெற்றிருக்கிறது. மூளைக்குள்ளே விஷயங்களைக் கொண்டு வராமல், புஸ்தகத்தில், சுவடியில் எழுதிவைப்பது என்ருல், "புஸ்தகம்தான் இருக்கே, அதைப் பார்த்துக் கொண்டால் போச்சு" என்ற எண்ணம் வலுப்பட்டுக் கொண்டே போகிறது. "டெக்ஸ்ட்"டை மனப்பாடம் செய்வதில்லை என்பதோடு மட்டுமில்லாமல், எதையும் ஊன்றிப் படித்து அதன் தாத்பர்யத்தை க்ரஹித்துக் கொள்வதென்பதும் குறைந்துகொண்டு போகிறது. இதை ப்ரத்யக்ஷத்திலேயே

Koviloor Digital Library

பார்க்கிறோம். "எழுதி வைத்துவிட்டாயா? அப்புறம் அது ப்ரயோஜனத்துக்கு வராது என்றுதான் அர்த்தம்" என்ற அளவுக்கு நம் பூர்விகர்கள் நினைத்திருக்கிறார்கள். "ஸஹஸ்ரம் வத—ஏகம் மா லிக: ஆயிரம் விஷயத்தைச் சொல்லு; ஆனால் ஒன்றைக்கூட எழுதிவைக்காதே" என்றே வசனம்.

இந்தப் பழக்கத்துக்கு மாறாக எழுதுவது, எழுதி வைத்த சுவடிகளைப் படித்துப் பாடம் சொல்வது என்று பௌத்தர்களே ஆக்கினார்கள் என்று (ஸமீபத்தில் நான் பார்த்த) அந்தப் புஸ்தகத்தில் போட்டிருந்தது. இந்த நாள் ஆராய்ச்சிக்காரர்களின் அபிப்ராயப்படி, அலெக்ஸாண்டர் படையெடுப்புக்குக் கொஞ்சகாலம் முந்தி, அதாவது கி. மு. ஆறாம் நூற்றாண்டில்தான் நம்முடைய சாஸ்த்ரம் ஒவ்வொன்றையும் ஸார பூதமாகச் சுருக்கித்தரும் "ஸூத்ரங்கள்" என்பவை (ப்ரம்ஹ ஸூத்ரம், யோக ஸூத்ரம், வ்யாகரண ஸூத்ரம் போன்றவை) தோன்றின என்று இதை எழுதியவர் நினைக்கிறார். பாணினியின் வ்யாகரண ஸூத்ரத்தில் 'லிபிகார' (எழுதுகிறவன்) என்ற வார்த்தையும், புஸ்தகம் என்பதைக் குறிக்கும் 'க்ரந்தம்' என்ற வார்த்தையும் வருகின்றன. ஆனதால், ஸூத்ர காலத்திலேயே நம்மவர்களுக்கு 'ரைட்டிங்' (எழுதுவது) என்பது தெரிந்துதானிருந்தது என்பதற்குச் சான்று இருக்கிறதென்றும் அதில் கண்டிருக்கிறது. ஆனால் ரொம்பவும் 'மினிமம்'மாகவே எழுதிவைப்பதை அக்கால இந்தியர்கள் கைக்கொண்டார்கள்; ராஜாக்கள் நிருபம் அனுப்புவது மாதிரியான காரியங்களுக்கு மட்டும்தான் ரைட்டிங்கைப் பயன்படுத்தினார்களே தவிர சாஸ்திரங்களையும்இலக்கிய ஸ்ருஷ்டிகளையும்எழுதாமல் வாயால் சொல்லிக்கொடுத்துத்தான் 'மெமரைஸ்' பண்ண வைத்தார்கள் என்று (அந்தப் புஸ்தகமெழுதியவர்) சொல்கிறார். வேதம் என்று சொன்ன மாத்திரத்தில் நினைக்கப்படும் அதன் 'ஸம்ஹிதா' பாகத்தில் மட்டுமின்றி, அவற்றின் சடங்குகளுக்கு விளக்கமாகச் செய்முறைகளைச் சொல்லும் 'ப்ராம்மணங்கள்' தோன்றிய காலத்தில்கூட இவையும்

Koviloor Digital Library

எழுதப்படவில்லை; இவற்றிலே மரத்திலிருந்து உரித்த பட்டை, தோல் ஆகிய பழங்காலப் பேப்பரைப் பற்றியோ, எழுத்தாணி அல்லது மை பற்றியோ குறிப்பில்லை என்று அவர் சொல்லிவிட்டு, ப்ராம்மி லிபியில் ரொம்பவும் பூர்வ காலத்தியதாக நமக்குக் கிடைத்திருப்பதே கி.மு. மூன்றும் நூற்றாண்டில் பொறிக்கப்பட்ட அசோக சாஸனங்கள்தான் என்று காட்டியிருக்கிறார். இவை பௌத்தமதத் தொடர்புடையவைதான். ராமாயண, பாரதங்களில் ராமர், பாண்டவர்கள் ஆகியவர்கள் வித்யாப்யாஸம் பண்ணியதைப் பற்றி வந்தாலும் அவர்கள் எழுதக் கற்றுக்கொண்டார்கள் என்று அவற்றில் இல்லை என்றும், புத்தர் சரித்ரமான "லலித விஸ்தர"த்தில்தான் அவர் குழந்தையாயிருந்தபோது எழுதக் கற்றுக் கொண்டதாக வருகிறது என்றும் காட்டியிருக்கிறார். காதால் கேட்டு மட்டுமே அறியவேண்டியது "ச்ருதி", நினைவில் வைத்திருந்தே தானும் அநுஷ்டித்துப் பிறருக்கும் சொல்லித்தரவேண்டியது "ஸ்ம்ருதி"; ஆகக்கூடி இந்தப் பெயர்களே எழுதத் தெரிந்தாலுங்கூட அப்படிப் பண்ணி விஷயத்தை "சீப்"பாகவோ, மறந்துபோகும்படியாகவோ பண்ணக்கூடாது என்ற கொள்கையைத்தான் நிருபிக்கின்றன என்று அவர் சொல்கிறார்.

வேதத்தை எழுத்திலே படித்துப் பாடம் பண்ணும் "லிகித பாடக"னை மஹா மட்டமான மாணவன், "பாடகாதமன்" என்றே சொல்லியிருக்கிறது இதற்கு மாறாக சாஸ்த்ரங்களை எழுதி வைப்பதென்று ஆரம்பித்தவர்கள் பௌத்தர்கள்தான் என்று அந்தப் புஸ்தகத்தில் பார்த்தேன்.

இதற்குக் காரணமில்லாமல் இல்லை.

க்ஷத்ரியர்களுக்கு யுத்தகார்யம், உள்நாட்டுப் போலீஸ் கார்யம், ராஜாங்க அதிகாரிகளாகப் பணி ஆற்றுவது முதலியவையே தர்மம். வைச்யன் கோஸம்ரக்ஷணமும் வியாபாரமும் பண்ண வேண்டியவன். நாலாம் வர்ணத்தவர் சரீர உழைப்பை ஜீவனத் தொழிலாகக் கொண்டவர்கள்.

Koviloor Digital Library

இவர்களையெல்லாம் சின்ன வயஸில் ப்ராம்மணப் பசங்களைச் செய்கிற மாதிரியே குருகுலத்தில் வருஷக் கணக்காக அடைத்து வைத்து, 'புத்தி சக்தியைத் தீட்டிக்கணும், ஞாபக சக்தியைக் கூர் பண்ணிக்கணும், எழுதிப்படிக்காமலே மனப்பாடம் பண்ணணும் என்று நெரிப்பதால், பிற்காலத்தில் அவர்கள் நடத்தப்போகிற வாழ்க்கைத் தொழிலுக்கு என்ன ப்ரயோஜனம்? ப்ரயோஜனமில்லாததோடு குந்தகமே கூட உண்டாகும். ஏனென்றால் பின்னாடி மேற்கொள்ளப் போகிற தொழிலுக்குப் பூர்வாங்கமாக பால்யத்திலேயே இவர்கள் அவரவர் வர்ணத்தைப் பொருத்து தநுர்வேதம் அப்யஸிப்பது, நடைமுறையைப் பார்த்தே வ்யாபாரத் திறமைகளைக் கற்றுக்கொள்வது, சிற்றாள் மாதிரி அப்பனோடு பாட்டனோடு உழைத்தே தொழில் கற்றுக்கொள்வது ஆகியவற்றுக்கு அவகாசம் தராதபடி அல்லவா இந்த ஓயாத மனப்பாடமுறை குந்தகம் பண்ணும்? அதோடு நான் சொன்னபடி பூர்விகர் பெடல் பண்ணிவிட்ட பாரம்பர்ய உந்தல் சக்தியும் இவர்களுக்கு இந்த அம்சத்தில் இருக்காதே! அவர்களை நான் குறைவு படுத்திச் சொல்லவே இல்லை. அதனால்தான் 'இந்த அம்சத்தில்' என்று (அழுத்தம் கொடுத்துச்) சொல்கிறேன். அவரவருக்கும் அவரவருக்கான தொழிலில் பாரம்பர்யத் திறமை அலாதியாக சோபிக்கத்தான் செய்யும். ஒரு க்ஷத்ரியப் பிள்ளை கத்தி சுழட்டுகிற மாதிரி லாகவமாகப் பண்ண ப்ராம்மணப் பிள்ளைக்கு ஒரு ஆயுஸ் காலம் பிடிக்கும். ஒரு வைச்யப் பிள்ளை சரக்கைத் தரம் பார்த்தும், லாபமாகவும் கொள்முதல் பண்ணுகிறது போல மற்ற ஜாதிக்காரரில் வயஸு வந்தவர்களாலும் முடியாது. இப்படியேதான் நாலாம் வர்ணத்தவரின் உழைப்புத் திறமையும். நம்மகத்துப் பெண்டுகள் ஒரு பஞ்சபாத்ரம் தேய்க்கிற நாழிக்குள் வேலைக்காரியோடு வருகிற குட்டி அத்தனை பாத்திரங்களையும் தேய்த்து (துலக்கி)ப் போட்டுவிடும்!

நான் சொல்வது என்ன என்றால்—அந்தப் புஸ்தகத்தில் பௌத்தர்கள்தான், கேட்பது (கேள்வி) என்றே அதுவரை

Koviloor Digital Library

இருந்த வித்யாப்யாஸத்தை இப்போது நாம் சொல்கிற மாதிரி படிப்பு என்பதாக எழுதிவைத்துக் கண்ணுல் பார்த்துப் படிப்பதாக ஆக்கினுர்கள் என்று சொல்லியிருப்ப தற்கு ந்யாயமிருக்கிறது என்பதே. ப்ராம்மணர்களுக்கே பெரும்பாலும் வித்யாப்யாஸம் என்று இருந்தவரையில் கேள்வி போதுமானதாயிருந்தது. மற்றவர்களுக்காகவும் சேர்த்து பௌத்தர்கள் வித்யாசாலைகள் ஸ்தாபிதம் பண்ணியபோது, மனப்பாடமாக இல்லாமல் அவ்வப்போது புஸ்தகத்தில் பார்க்கும்படியாக எழுத்து மூலம் கற்றுக் கொடுப்பது அவச்யமாயிற்று.

ஆனுலும் நான் முன்னேயே சொன்னபடி இந்த வித்யா சாலைகளிலும் ப்ராம்மணர்கள், அடுத்தபடி க்ஷத்ரியர்கள் ஆகியோர் சேர்ந்த அளவுக்கு மற்றவர்கள் சேரவில்லை. அதோடு ஸமீபகாலம் வரை அவர்கள் அவர்களுக்கு உண்டான தொழில் எதுவோ அதற்கான திறமையை ஒன்று, 'ப்ராக்டிகல் ட்ரெயினிங்'கால் அநுபவ பூர்வமாகத்தான் பெற்றிருந்தார்கள்; அல்லது, அந்தத் தொழில் குறித்துச் செய்யுள் ரூபமாக, ச்லோக ரூபமாக இருக்கப்பட்ட நூலை ஆதி வழக்கப்படி மனப்பாடம் செய்து அறிந்ததாலேயே பெற்றிருந்தார்கள். ஒரு நாட்டு வைத்தியரிடம் போனுல் தெரியும்: அவர் மருந்துத் தயாரிப்பு முறைகளைப் பாட்டாகவே கடகடவென்று சொல்லிக்கொண்டு போய் விடுவார். ஸ்தபதி ச்லோகமாக ஒப்பித்துக்கொண்டு போவார். "எழுதப் படிக்கத் தெரியுமா?" என்று கேட் கிருேமல்லவா, இதில் அநேக கிராம ஜனங்களுக்குப் போன தலைமுறை வரை இரண்டுமே தெரியாமல், ஆனுல் தங்கள் தொழில் மட்டும் நம்முடைய B.E.க்கும் B. Tech-க்குங்கூடத் தெரியாத அளவுக்கு அத்தனை நுட்பமாகத் தெரிந்திருக்கும். இவர்களில் சிலர் படிப்பதற்கு மட்டும் தெரிந்துகொண்டு படித்ததை மனப்பாடம் பண்ணியிருப்பார்கள். மற்றவர்கள் காதால் கேட்டே மனப்பாடம் பண்ணியிருப்பார்கள். கொஞ்சம் பேருக்கே எழுதவும் தெரிந்திருக்கும். விசேஷ

Koviloor Digital Library

மான 'மெமரி பவர்' இவர்களுக்கு இல்லாதுபோனாலும், அநாவசிய ஊர்க்கதைகள் இல்லாமல் தங்கள் ஸப்ஜெக்டை மட்டும் தெரிந்துகொள்ள வேண்டும் என்னும்போது, அதை மனப்பாடமாகவே மூளைக்குள் வைத்துக்கொள்கிற அளவுக்கு புத்தி தீக்ஷணம் இருக்கவே செய்தது.

இது அத்தனையும் நான் ஜெனரலாகச் சொன்னது. ப்ராம்மணர்களில் மக்குப் பிள்ளைகள் இல்லாமலில்லை. இதர ஜாதிகளில் மஹா புத்திமான்களாக பலபேர் வந்ததையும் பூர்வத்திலேயே பார்த்திருக்கிறோம்; இன்றும் பார்க்கிறோம்.

பெரிய பௌத்தக் கல்விக்கூடங்கள் ஏற்பட்டபின் எழுத்துமூலம் கற்பிப்பதுதான் வழி என்றாகிவிட்டது.

இதற்கு இன்னொரு காரணம் நாளுக்கு நாள் சாஸ்த்ரங்கள் விரிவடைந்துகொண்டுபோனதும், புதுப்புது சாஸ்த்ரங்களும், கலைகளும், 'விஞ்ஞானம்' என்று சொல்லப்படுகிற ஸயன்ஸ்களும் சேர்ந்துகொண்டேயிருந்ததுமாகும். எத்தனை குசாக்ர புத்தியானாலும் (தர்ப்பை நுனிபோல் கூரறிவானாலும்) இத்தனை விஷயங்களை எப்படி ஞாபகத்தில் வைத்தே காப்பாற்ற முடியும்? அதனாலும் எழுதி வைத்து போதிக்க வேண்டியதாயிற்று.

வைதிகக் கல்விக்கும் பெரிய கலாசாலை

பௌத்த - சமணர்கள் பெரிய ஸ்கேல் வித்யாசாலைகளால் ப்ரபலமடைந்தபோது தாய் மதமான வைதிக ஸமயம் மாத்திரம் நன்றாகத் தலைதூக்கி நிற்க வேண்டுமானால் அவற்றுக்குப் பின்தங்கி நின்றுவிட முடியுமா?

அதனால் வைதிக வித்யைகளும், அவற்றோடு மற்ற பாடங்களும் சொல்லித் தருவதற்காக ஹிந்துக்களும் பெரிய பாடசாலைகள் வைக்கத் தொடங்கினார்கள். எப்போதுமே எதிர்ப்பு இருந்தால்தான் ஒரு புதிய விழிப்பு, எழுச்சி, ஊக்கம் எல்லாம் ஏற்படும். நம் நாளில் கூட நாஸ்திக்ய ப்ரசாரம் ஏற்பட்டதாலேயேதான், ஆஸ்திகர்கள் என்று

Koviloor Digital Library

சொல்லிக் கொண்டு பக்தியோ ஆசாரமோ எதுவுமில்லாமல் சோம்பேறிகளாக இருந்தவர்களுக்கு ஒரு விழிப்பு ஏற்பட்டு இவ்வளவு கும்பாபிஷேகங்கள், ப்ரவசனங்கள் என்று நடக்க ஆரம்பித்ததும், அவரவரும் வீட்டில் ஏதோ ஒரு வழிபாடு வைத்துக்கொண்டு சில ஆசாரங்களையும், வ்ரதங்களையுமாவது அநுஷ்டிக்கத் தொடங்கியதும்! இதைப் போலவே விஷயம் தெரியாதவர்களாக ப்ராம்மணர்கள் ஓரளவு ஆகி வந்த ஸமயத்தில் புத்தர் தோன்றி அவர்களுடைய வழியைக் கண்டனம் செய்து, அவருடைய மதத்துக்கு ஆதரவாக பெரிய அளவில் வித்யாசாலைகள் ஏற்பட்டதும் வைதிக ஸமூஹத்திலும் ஒரு பிரிவினர் கொஞ்சங் கொஞ்சமாக விழித்துக்கொண்டு அதே மாதிரித் தாங்களும்செய்து தங்களை விஷயக்ஞர்களாக்கிக் கொள்வதற்காக அவற்றில் பெருமளவில் சேரத் தொடங்கினார்கள். இதனால் வைதிக ஸமயம், புறச்சமயங்கள் இரண்டிலுமே பெரிதான கல்விக்கூடங்கள் நிறையத் தோன்ற ஆரம்பித்தன. இரண்டு தரப்பிலும் தத்வ சாஸ்த்ரங்கள், இலக்கியம், மற்ற கலைகள், ஸயன்ஸ்கள் முதலியனவும் இதன் வழியாய் நாளுக்குநாள் வளர்ந்தோங்கலாயின.

ஆர்கனைஸேஷன் இல்லாமல் தனிமனிதனின் அநுஷ்டான சக்தியாலேயே வைதிக மதமும் கலாசாரமும் ஆதியிலிருந்து வளர்ந்தனவென்றாலும், "ஸங்கம் சரணம் கச்சாமி" என்பதாக ஆர்கனைஸேஷனல் அடிப்படையில் பௌத்தமும் அதேபோல சமணமும் வ்ருத்தியான பிற்பாடு நம் மதத்திலும் ஆர்கனைஸேஷன் என்று ஏற்படுத்தவேண்டிய அவசியம் உண்டாயிற்று. (இதை) முன்னேயே சொன்னேன். இதே மாதிரிதான்—இதன் உபாங்கங்களாகவேதான்—என்னதான் ஆசார்யாள் பழைய ஏற்பாடுகளைப் புனருத்தாரணம் செய்தாலும், புதிதாக ஏற்பட்டுவிட்ட இதர மதஸ்தர்களின் ஸர்வகலாசாலைகளுக்கு ஈடுகொடுக்கத் தனித்தனி ஆசார்யர்களின் குருகுலங்கள் போதாது என்பதால் நம்முடைய ஹிந்து மதத்துக்கும்—வேதவித்யையோடு மற்ற

Koviloor Digital Library

சாஸ்திரங்களை, மற்ற கலைகளை, அக்கால ஸ்யன்ஸ்களைச் சொல்லிக் கொடுப்பதற்கும்—பல வாத்யார்கள் ஸ்தாபன மாகக் கூடி போதிக்கும் கல்விசாலைகளை முன்பிருந்ததைவிட நிறைய அமைக்கவேண்டியதாயிற்று. குருகுலம் என்பதோடு கூட 'பாடசாலை' என்பதும் இப்போதுதான் நிறையச் சேர்ந்தது.

இப்படி வேதக் கல்விக்காக ஏற்பட்ட பெரிய பாடசாலை களைத்தான் வடக்கே 'டோல்' என்கிறார்கள். எலிமென்டரி ஸ்கூல் மாதிரி உள்ளதை வடக்கே பாடசாலா என்பார்கள்; விஸ்தாரமாக வ்யாகரணம், ஜ்யோதிஷம், காவ்யம் எல்லாம் சொல்லிக் கொடுக்குமிடத்தை 'டோல்' என்பார்கள்.

இப்படி ரொம்பவும் பெரிய அளவில் பல, நம்முடைய ஹிந்துமத ஸம்பந்தமுள்ளவையாக இருந்திருக்கின்றன.

சம்பளத்தைக் கருதாமல், வித்யாப்யாஸம் பூர்த்தியான போது சிஷ்யன் என்ன தக்ஷிணை கொடுத்தாலும் அதில் த்ருப்திப்படும் ஆசார்யவர்க்கம் போய், ராஜா அல்லது ப்ரபு, அல்லது ஊர் முக்யஸ்தர்கள் மான்யம் விட்டோ, என்டோ மென்ட் வைத்தோ கல்வி நிலையங்கள் ஏற்படுவதாகவும், அவற்றிலிருந்து ஊதியம் பெறும் உபாத்யாயர் வர்க்கம் தோன்றுவதாகவும் இப்போதே முன்னைவிட மிக அதிகமாக, பரவலாக ஏற்பட்டது.

(ப்ராம்மணன் மட்டுமில்லை; குயவன், வண்ணான் உள்பட எல்லாத் தொழில்காரருக்கும், கிராம தேவதைப் பூசாரி, அங்கே பம்பை அடிக்கிறவன் உள்பட எல்லாருக்குமே குலத் தொழிலைச் செய்து வருவதற்காக ராஜமான்யம் உண்டு.)

ஆதிகால முறையில் அதிகமாக நடைமுறையிலிருந்தது என்னவென்றால்: சிஷ்யன் பிக்ஷை வாங்கிவந்து குரு பத்னி யிடம் கொடுப்பான். அவளும் அகத்தில் சமையல் பண்ணி யிருப்பாள். ஏனென்றால் பிக்ஷான்னத்தைக் கொண்டு வைச்வ தேவ பலி போடவோ ஸ்வாமி நைவேத்யம் பண்ணவோ

Koviloor Digital Library

முடியாது. க்ருஹஸ்தனுகிய குருவுக்குப் பக்வமான ஆஹாராதிகளை—அதாவது சமைத்த பண்டங்களை—பிறத்தியாரிடமிருந்து வாங்கிக்கொள்ள சாஸ்த்ரம் அநுமதிக்கவில்லை. ஆனபடியால் குருவின் அகத்தில் தனிச் சமையல் உண்டு. வித்யாசாலை நடக்க வேண்டுமென்பதை முக்ய உத்தேசமாகக்கொண்டு பிற்காலத்தில் ராஜமான்யம் முதலியன வழங்கப்பட்டதுபோல ஆதிகாலத்தில் வழங்கப்படாவிட்டாலும் ஸத்வித்வான்களைப் போஷித்து அவர்களுடைய ஆசீர்வாதத்தைப் பெறவேண்டுமென்பதற்காகவும், அவர்கள் யாகங்கள் செய்து தேச ஸுபிக்ஷத்தை வளர்க்கவேண்டுமென்பதற்காகவும் ஆதிகால ராஜாக்களும் அந்த ஆசார்யர்களுக்கு ஸம்பாவனைகள் பண்ணிக் கொண்டுதான் இருந்தார்கள். இதிலே கிடைக்கும் பூஸ்திதி (நிலச் சொத்து), ஸ்வர்ணம் முதலியவற்றைக் கொண்டுதான் ஆசார்யர்கள் யாகம் செய்தது—அது மாத்திரமில்லாமல் மேலே சொன்னதுபோல தனிச் சமையல் முதலான குடும்பச் செலவுகளை ஈடுகட்டியது. சிஷ்யனுக்கு அவன் கொண்டுவரும் பிக்ஷான்னத்தோடு இந்த அகத்துச் சமையலையும் சேர்த்துப் போடுவாள் குரு பத்னி. "நன்னு சாப்பிடுடா கொழந்தே" என்று பரிந்து போடுவாள். நாள், கிழமை என்றுல் அவனுக்கு வஸ்த்ராதிகள் குருவே ஆசீர்வாதம் பண்ணிக் கொடுப்பார். இப்படி, சிஷ்யனின் உடல், பொருள் ஆவி குருவிடம் சரணுகதியானுற் போலவே, குருவும் உடல், பொருள், ஆவிகளை சிஷ்யனுக்கு அநுக்ரஹித்தார்.

இந்த உசந்த நிலை போய், மான்யத்திலிருந்து சம்பளம் வாங்கிக்கொண்டு அறிவை மட்டுமே மாணவனுக்கு உபாத்யாயர் கொடுப்பதை முக்யமாகக் கொண்ட முறை பெரிய வித்யாசாலைகள் ஏற்பட்டபோது உண்டாயிற்று. இத்தனை நாழி சொன்னுற்போல, தவிர்க்க முடியாத பல காரணங்களால் இப்படி ஏற்பட்டது.

நாளுக்கு நாள் ஒவ்வொரு ஸப்ஜெக்டிலும் புதுப் புது விஷயங்கள் சேர்ந்துகொண்டே போனதாலும் புதிசு புதிசா

Koviloor Digital Library

கவே பல ஸப்ஜெக்ட்கள் தோன்றிக் கொண்டிருந்ததாலும் பல உபாத்யாயர்களை ஒன்றுகூட்டி வித்யாசாலைகளை நிறுவி, வெவ்வேறு மாணவர்களுக்கு வெவ்வேறு க்ளாஸ்கள் வைத்து நடத்தினால்தான் ஸரிப்பட்டு வரும் என்ற தவிர்க்க முடியாத நிலை ஏற்பட்டது நடுவே ப்ராம்மண தர்மங்கள் மங்கி, பர மதங்கள் பரவியதனாலும் குருகுலமுறை ஆட்டம் கண்டதால் மறுபடி வைதிக வித்யையைப் பிரகாசிப்பிக்க வேண்டு மென்னும்போது இப்படிப்பட்ட பெரிய வித்யாசாலைகளை ஏற்படுத்தினால்தான் முடியும் என்று ஆயிற்று.

பெரும் கலாசாலையிலும் குருகுல அம்சங்கள்

பழைய குருகுல உயர்வு இவற்றில் இல்லாததால், தற் காலக் காலேஜ்கள், யூனிவர்ஸிடிகள் லெவலில் இவற்றைக் கழித்துக்கட்டிவிடக் கூடாது. இவையும் ஒருவிதத்தில் குரு குலங்களாகத்தானிருந்தன. அதாவது இவற்றின் மாணாக் கர்களும் அகத்திலிருந்து கொண்டு தினந்தோறும் வித்யா சாலைக்குப் போனவர்களில்லை; அந்தக் கலாசாலைகளிலேயே தங்கியிருந்து படித்தவர்கள்தான். இப்படிச் சொன்னால் இந்நாள் ஹாஸ்டல் மாதிரி என்று நினைத்துவிடக் கூடாது. ஹாஸ்டலில் ஏகப்பட்ட பசங்களுக்கு ஒரு வார்டன்தான். அங்கே வாத்யார்களுக்கு வாஸமில்லை. நான் சொல்லும் வித்யாஸ்தானங்களில் இப்படியில்லை. பசங்களைப் பிரித்து ஹாஸ்டல் என்று வைக்காமல், வாத்யார்கள் பசங்கள் எல்லாரும் கலந்து ஒரே இடத்தில் வஸித்தார்கள். இதனால் ஏகப்பட்ட பேரை மேற்பார்வை செய்து கட்டுப்படுத்தி நடத்த ஒரே வார்டன் என்பது போலில்லாமல், கட்டுப்பாடு செய்ய நிறைய வாத்யார்கள் கூடவே வஸித்தார்கள். இதில் குறிப்பாக அந்தந்த ஸப்ஜெக்ட், அந்தந்த க்ளாஸ் மாணவர் களுக்கு அவர்களுக்கான வாத்யார் யாரோ அவரே வார்டன் ஸ்தானத்தில் இருந்திருக்க வேண்டும். அதாவது தற்போது மிகவும் கொஞ்சமாகக் கட்டுப்பாடு வைத்து ஹாஸ்டல் பசங்களை அவிழ்த்து விட்டிருக்கிறாற் போலின்றி, தனித்தனி

Koviloor Digital Library

குரு குலங்கள் குறைந்தபின் ஏற்பட்ட பெரிய வித்யாசாலை களிலுங்கூட அவர்கள் குருமார்களின் கண்டிப்பான கட்டுப் பாட்டின் கீழேயேதான் இருந்தார்கள்.

தக்ஷசிலத்தில் பௌத்தர்களின் வித்யாசாலையில் தனித் தனி உபாத்யாயர்கள் ஒவ்வொருவரும் தங்களுக்கென ஒரு சில மாணவர்களை வைத்துக்கொண்டு, ஒரே இடத்திலே பல குருகுலங்கள் அமைந்தாற்போலத்தான் கல்வி அளித் தார்கள். Centralised universityயாக (மையமான ஆளுமை கொண்ட பல்கலைக் கழக அமைப்பாக) அது இல்லை. நாலந்தாதான் பிற்கால யூனிவர்ஸிடி அமைப்பிலேயே இருந்தது. ஆனாலும் தக்ஷசிலத்தில் இருந்தவற்றை குருகுலங் கள் என்று சொல்ல முடியாதபடி அவற்றிலே ஒரு பெரிய குறைபாடு இருந்தது. என்னவென்றால், அங்கே மாணவர் களிடம் சம்பளம் வாங்கிக்கொண்டு படிப்புச் சொல்லிக் கொடுக்கப்பட்டது. ஃபீஸ் கட்ட முடியாவிட்டால் சரீர கைங்கர்யம் செய்யவேண்டுமென்று வைத்திருந்தார்கள். ஸாக்ஷாத் க்ருஷ்ணனாக இருந்தாலுங்கூட சரீர கைங்கர்யம் தான் பண்ண வேண்டுமென்றும், படிப்பு முழுதும் முடிந்து சிஷ்யன் தானாக தக்ஷிணை தருகிறவரையில் ஃபீஸைப் பற்றிய பேச்சே கூடாது என்றும் வைத்திருந்த குருகுலங்களோடு இதை எப்படிச் சேர்ப்பது? பாடம் சொல்லித்தந்தவர்களோ பிக்ஷுக்கள். அவர்களுக்கு வேண்டியதைச் செய்ய வசதி வாய்ந்த புத்த விஹாரமும் அங்கேயிருந்தது. அப்படி யிருந்தும் சம்பளம் வாங்குகிற வழக்கத்தையும் வைத்துக் கொண்டிருந்திருக்கிறார்கள். ஆனாலும் மாணவர்களைத் தனித்தனியாக கவனித்து ('இன்டிவிஜுவல் அட்டென்ஷன்' கொடுத்து) அபிவ்ருத்தி செய்யவேண்டுமென்பதால் ஒவ்வொரு வாத்தியார் பொறுப்பில் இத்தனையித்தனை பசங் கள் என்று பிரித்திருந்தது பாராட்டப்பட வேண்டியது தானே?

நூற்றுக்கணக்கான மாணவர்கள் படித்த வைதிகமான வித்யாசாலைகளில் அவர்கள் பிக்ஷாசர்யம் செய்திருப்பதற்

Koviloor Digital Library

கில்லை. நேராக வேத உபநிஷத்துக்கள் படிப்பவர்களை மட்டும் பிக்ஷாசர்யத்துக்கு விட்டிருக்கலாம். ஆனாலும் மற்றவர்கள் விஷயத்திலுங்கூட இப்போது போல் கண்டதைத் தின்னுவது, கண்டதைப் பார்ப்பது, கண்டதைப் பேசுவது என்பதற்கிடமில்லாமல் இவையெல்லாம் குருமார்களால் ஒழுங்குமுறைப்படி நிர்வஹிக்கப்பட்டன. எல்லாவற்றுக்கும் மேலாக இப்போது கல்விசாலைகளில் எதை அடியோடு ஸம்பந்தமேயில்லாத விஷயம் என்று ஒதுக்கி வைத்து விட்டார்களோ, ஆனால் அந்த எதற்குத்தான் ஆதிகால குருகுலத்தில் முதல் முக்யத்வம் தந்தார்களோ அது இந்தக் கலாசாலைகளிலும் நன்றாக அமலாயின. அதாவது, மாணவர்கள் தங்களுக்குரிய ஸமயாநுஷ்டானங்களைக் கொஞ்சமும் விடாமல் செய்யும்படி இவற்றில் செய்தார்கள். இதுதான் நம் பெரிய நாகரிகம் எப்போதும் ஜீவசக்தியுடன் இருக்கும்படியாக அதற்கு உயிரூட்டிக் கொண்டிருந்த அம்சம்.

அக்கால இலக்கியம், சரித்ரம், சாஸனங்கள் முதலியவற்றைப் பார்க்கும்போது இந்த வித்யாசாலைகளின் ஆசிரியர்கள், மாணவர்கள் ஆகிய இரு சாராரின் தரமும் ரொம்பவும் உயர்வாக இருந்திருக்கின்றன என்று தெரிகிறது. பழைய ரிஷிகளின் ஆச்ரமத்துக்கு ஸமதையாயில்லாவிட்டாலும் இந்த வித்யாசாலைகளிலும் உயர்ந்த குரு - சிஷ்யப் பண்புகள் விளங்கி வந்தன என்று தெரிகிறது. நல்ல அறிவாளிகளாகவும், சீலமுள்ளவர்களாகவும் உள்ள ஆசிரியர்கள் இவற்றில் இருந்துகொண்டு நிஜமாக வித்யையில் ஆர்வமும், அறிவும், அடக்கமும், கட்டுப்பாடும், ஆசார்ய பக்தியும் உள்ள மாணாக்கர்களுக்கு போதித்திருக்கிறார்களென்று தெரிகிறது.

ஒவ்வொரு சாஸ்த்ரம், அல்லது ஒவ்வொரு கலையில் சிறப்பான ஞானம் பெற்றவர்கள் தேசத்தின் ஏதோ ஒரு பகுதியில் நிறைய இருக்கிறார்களென்றால், ஆயிரம் இரண்டாயிரம் மைலுக்கு அப்பாலிருக்கிற வித்யார்த்திகள்கூட, இந்நாளைப் போல ரயிலும், ப்ளேனும், தபாலும் இல்லாத

Koviloor Digital Library

அந்த நாளிலேயே வீட்டை வாசலை விட்டு, பந்துமித்ரர்களை விட்டு தொலைதூரத்திலுள்ள அந்த வித்யாசாலைக்குப் போய்ப் படித்திருக்கிறார்கள். ஒன்று இரண்டு த்ருஷ்டாந்தம் அப்புறம் சொல்கிறேன்.

காஞ்சியின் கல்விப் பெருமை

தேசம் நெடுகிலும் ஏற்பட்ட இப்படிப்பட்ட வைதிக தர்ம ஸம்பந்தமுள்ள பெரிய வித்யாசாலைகளில் குறிப்பாகக் காஞ்சீ மண்டலத்தில் இருந்தவற்றைப் பற்றி மாத்திரம் சொல்கிறேன். காஞ்சீபுரம் எப்போதுமே நானுவித சாஸ்த்ர வித்யைக்கும், பல ஸமயங்களின் தத்வ விசாரம், விவாதம் முதலியவற்றுக்கும் ஒரு கேந்த்ர ஸ்தானமாய் இருந்திருக்கிறது. **கல்வியைக் கரையிலாத கச்சி மாநகர்** என்று அப்பர் ஸ்வாமிகளே புகழும்படியான பெருமை அதற்கிருந்தது. அப்பர் சொன்னர் என்பதில் தனிச்சிறப்பு உண்டு. ஏனென்ருல் சில ஞானிகள், மஹான்கள் இருப்பார்கள். அவர்களுக்கு ஈச்வரானுபவமும் அநுக்ரஹ சக்தியும் நிரம்ப இருக்கும். ஆனால் கல்வியறிவு என்று பார்த்தால் விசேஷமாக இருக்காது. "அது வேண்டாம்" என்று தள்ளிவிட்டுப் போனவர்களாகக்கூட இருப்பார்கள். ஸமீபத்தில் ராமக்ருஷ்ண பரமஹம்ஸர் இப்படித்தான் இருந்திருக்கிறார். வேறு சில மஹான்களைப் பார்த்தால் கல்வியிலும் அவர்கள் கரைகண்டவர்களாக இருப்பார்கள். ராமக்ருஷ்ணரின் ப்ரதம சிஷ்யர் விவேகாநந்தர் இப்படி இருந்தவர்தான். அப்பர் ஸ்வாமிகளும் இப்படிப் பட்டவர்தான். தர்மஸேனர் என்ற பெயரில் அவர் இடைக்காலத்தில் சமணராக இருந்த போது அந்த மத ஸித்தாந்தங்களைத் திருப்பாதிரிப்புலியூரிலிருந்த அவர்களுடைய பள்ளியில் பூர்ணமாகக் கற்றுத் தேர்ந்திருக்கிறார். எளிமையிலும் எளிமையை அவரிடம் பார்க்கும்போதே, அவருடைய தேவாரங்களில் எங்கே தொட்டாலும் உபநிஷத் உள்பட்ட அநேக சாஸ்த்ரங்களில் ஆழ்ந்த அறிவையும் பார்க்கிறோம். இப்படிப்பட்டவர்

Koviloor Digital Library

கல்விக்குக் காஞ்சி என்று விசேஷித்துச் சொன்னால் அது நிஜமாகவே விசேஷந்தானே?

காஞ்சீபுரம் ஸர்வஜ்ஞ பீடம் இருந்த ஊர். ஸகல சாஸ்த்ர பண்டிதர்களும் கேள்விகள் கேட்டு அத்தனைக்கும் பதில் சொல்கிறவர் மட்டுமே ஏறி உட்காரக்கூடிய பீடத்துக்குத்தான் ஸர்வஜ்ஞ பீடம் என்று பெயர். அந்த பீடத்துக்கு நாலு வாசல் இருக்கும், எத்தனையோ படி இருக்கும், ஒவ்வொரு படியிலும் ஒரு ப்ரதிமை இருக்கும், அந்தப் பொம்மைகள்கூடக் கேள்வி கேட்கும், "இதுக்குப் பதில் சொன்னால்தான் அடுத்த படி ஏறலாம்" என்று சொல்லும்—என்றெல்லாம் படிக்கிறோம். அதெல்லாம் எப்படிப் போனாலும் மஹா பண்டிதர்களாக இருந்தவர்கள் பல சாஸ்த்ர விஷயமாகவும் கேள்வி கேட்டுப் பதில் சொல்லக்கூடியவர்தான் ஸர்வஜ்ஞ பீடம் ஏறமுடியும் என்பது நிச்சயம். இப்படி நம்முடைய ஆசார்யாள் காஞ்சீபுரத்தில் ஸர்வஜ்ஞ பீடாரோஹணம் செய்திருக்கிறார்.

ஹிந்து மதம் மட்டுமில்லாமல் பௌத்தம், சமணம் ஆகியனவும் அவற்றின் பெரிய அறிஞர்களும் காஞ்சீபுரத்தில் பிரகாசமாயிருந்திருப்பது சரித்ர பூர்வமாகத் தெரிகிற உண்மை. திங்நாகர், தர்மபாலர் முதலான பௌத்த அறிஞர்கள் காஞ்சீபுரத்தைச் சேர்ந்தவர்கள்தான். மணிமேகலை அறவணவடிகள் என்பவரிடம் பௌத்தமத தீக்ஷை பெற்றது இங்கேதான். திருப்பருத்திக்குன்றம் என்ற காஞ்சீபுரத்தின் பகுதி பெரிய சமண கேந்திரமாயிருந்திருக்கிறது. சமய நூல், தத்வ ஆராய்ச்சி என்று போகாமல், ஒரு விதமான (வேத ஸம்மதமில்லாத) ஆவேச வழிபாட்டுமுறைகள் மட்டுமேயான காபாலிகம், காளாமுகம் முதலான உக்ர மார்க்கங்களும்கூடக் காஞ்சி மண்டலத்தில் வேரூன்றப் பார்த்திருக்கின்றன. அஷ்ட காளிகளை ஆசார்யாள் இங்கே அடக்கிப் போட்டு அம்பாள் காமாக்ஷிக்கு முன்னால் ஸ்ரீ சக்ரம் பிரதிஷ்டை செய்திருக்கிறார். ஆனால் (கல்வியைக் குறித்த)

Koviloor Digital Library

நம் ஸப்ஜெக்டுக்கு அது ஸம்பந்தமில்லாத விஷயம். ஹிந்து ஸமயத்திலேயே உள்ள பல ஸித்தாந்திகளும், பௌத்தம் சமணம் போன்ற புறச் சமய அறிவாளிகளும் ஏராளமாக நிறைந்திருந்து வாதப்போர்கள் நடத்திய இடமாகக் காஞ்சி இருந்ததுதான் நான் சொல்லவந்தது. இதைப்பற்றி நிறையச் சொல்லலாமானாலும் இப்போது அந்தக் கதை வேண்டாம். ஏனென்றால் புதுசாக நான் கண்டு பிடித்திருக்கிற கதையைச் சொல்லவேண்டும்.

"என் ரிஸர்ச்" : கடிகை பற்றி

இதைச் சொல்வதற்குத்தான் பூர்வ பீடிகையாக குரு—வாத்யார் என்று ஆரம்பிக்கப் போக அது எங்கெங்கேயோ இழுத்துக்கொண்டு போய்விட்டது. என் புதுக் கதையை, என் 'ரிஸர்ச்'சை இனிமேல் 'டிலே' பண்ணப்போவதில்லை.

"கடிகா ஸ்தானம்", "கடிகா ஸ்தானம்" என்று ஒரு வார்த்தை கேட்டிருக்கலாம், கேட்ட மாதிரியாவது இருக்கலாம், அல்லது கேட்காமலேகூட இருக்கலாம். ஹாஸ்யம் மாதிரிச் சொன்னாலும் வருத்தத்தோடு சொல்கிறேன். நம் பூர்விக சாஸ்த்ரங்கள், நம்முடைய வித்யாப்யாஸ முறைகள், அதற்கான ஸ்தாபனங்கள் ஆகியவை பற்றிப் பொது அறிவு தற்போது மிகவும் குறைந்துவிட்டதே என்று வருத்தமாக இருக்கிறது. நான் விஷயக்ஞர்கள் என்று நினைத்து கடிகா ஸ்தானத்தைப் பற்றிக் கேட்டவர்களில்கூட சிலருக்கு (அந்தப்) பேர் மட்டும் தெரிந்திருந்ததே தவிர அதைப்பற்றி எந்த விவரமும் தெரியவில்லை. இந்த கடிகா ஸ்தானங்கள் நம் ஊர்களிலேயே நிறைய இருந்திருக்க, இவர்களோ, "கோதாவரி தீரத்தில்தான் கடிகா ஸ்தானம் என்ற பெயரில் வித்யாசாலைகள் இருந்ததாகத் தெரிகிறது. அதற்குமேல் அதைப்பற்றித் தெரியவில்லை" என்றார்கள். இந்தமட்டும் கடிகா ஸ்தானம் என்றால் வித்யாசாலை என்று தெரிந்துகொண்டிருக்கிறார்களே என்று கொஞ்சம் த்ருப்திப் பட்டேன்.

Koviloor Digital Library

வித்யாசாலைகளிலும் நம்முடைய வேத சாஸ்த்ரங்களை மட்டுமோ அல்லது அவற்றோடு இதர கலைகளையும் அந்தக் கால ஸயன்ஸ்களையும் சேர்த்தோ போதித்தவற்றுக்குத்தான் கடிகா ஸ்தானம் என்று பேர். பிற்காலத்தில் வேண்டுமானால் வேத வித்யா ஸம்பந்தமில்லாத கலாசாலைகளுக்கும் இந்தப் பேர் வந்திருக்குமோ என்னவோ? ஒரிஜினலாக வேதாப்யாஸத்தை மையமாகக் கொண்டவற்றுக்கே இந்தப் பெயர். 'கடிகை' என்று தமிழில் சுருக்கிக் குறிப்பிடுவார்கள். குருகுலமாக இல்லாமல், பல வாத்யார்கள் ஏராளமான மாணுக்கர்களுக்கு வேதம், அல்லது வேதத்தோடு 'ஸெக்யுலர் எஜுகேஷன்' (உலகியல் படிப்பு) சொல்லிக்கொடுத்த கலாசாலைகளும் இருந்தன என்றும், புத்தருக்கு முந்திக் குறைச்சலாக இருந்த இவை, அவருக்குப் பிற்பாடு நிறைய ஏற்பட்டன என்றும் சொன்னேனல்லவா? இவற்றுக்குத்தான் கடிகா ஸ்தானம் என்று பேர் என்ற அளவுக்குக் கொஞ்சம் ஆராய்ச்சியிலேயே புரிந்து கொண்டேன். காஞ்சி மண்டலத்தில் இருந்ததாக நான் சொன்ன கல்வி நிலையங்கள் இப்படிப்பட்ட கடிகா ஸ்தானங்களே. கோதாவரிக்கும் போகவேண்டாம், கங்கோத்ரிக்கும் போகவேண்டாம்.

அடுத்த ஆராய்ச்சி என்ன என்றால் எங்கெங்கே இவை இருந்தன என்று சரித்ரத்தை, இலக்கியத்தை, சாஸனங்களைத் தோண்டிப் பார்த்தது. இப்படி நிறையத் தோண்டித் துருவினேன். (அதிலே) கொஞ்சம், பின்னால் சொல்கிறேன். என் பெருமை அடித்துக் கொள்வதற்குத்தானே ஆரம்பித்திருக்கிறேன்?

பெயர்க் காரணம்

இதைவிட எனக்கு ரொம்ப குதூஹலம் (அதாவது curiosity) ஏற்படுத்தி ஆராய்ச்சியில் இறக்கிவிட்ட விஷயம் என்னவென்றால் "கடிகை" என்று ஏன் பேர் வந்தது என்பது தான்.

Koviloor Digital Library

"கடிகை" என்றால் சின்னதான பானை என்று ஒரு அர்த்தம். கடம் : பெரிய பானை. கடிகை : அதைவிடச் சின்ன பானை. கடிகை என்றால் ஒரு நாழிகைப் பொழுது என்று இன்னொரு அர்த்தம். அந்த வார்த்தை எந்த அர்த்தத்தில், அல்லது எந்த விதத்தில் வித்யாசாலைக்குப் பெயராக இடப்பட்டது என்று கண்டுபிடிக்க வேண்டும் என்று ஆர்வம் உண்டாயிற்று. நான் கேட்டுப் பார்த்த யாருக்கும் சொல்லத் தெரியவில்லை. கடைசியில் எத்தனையோ தோண்டித் துருவியதில் என்னுடைய ரிஸர்ச்சில் பாஸ் பண்ணிவிட்டேன். அந்தப் பெருமை அடித்துக் கொள்ளத்தான் இப்போது கதையளந்து கொண்டிருக்கிறேன்.

மெட்ராஸில் இருக்கிற ஓரியன்டல் மானுஸ்க்ரிப்ட் லைப்ரரிக்காரர்கள் தங்களிடமுள்ள சுவடிகளில் பலவற்றை அச்சுப்போட்டு வருகிறார்கள். ஸமீபத்தில்[1] அவர்கள் போட்டிருந்த "ஆபோகம்" என்ற புஸ்தகத்தைப் படித்துப் பார்த்துக் கொண்டிருந்தேன். இது என்ன புஸ்தகம் என்று சொல்லவேண்டுமானால் இதற்கு அப்பாப் புஸ்தகம், தாத்தாப் புஸ்தகம், கொள்ளுத் தாத்தா புஸ்தகம் முதலியவற்றைப் பற்றிச் சொல்லியாக வேண்டும். இவையெல்லாம் அத்வைத சாஸ்த்ரங்களானபடியால் உங்களுக்கும் கொஞ்சம் தெரிந்திருப்பது நல்லதுதான். சொல்கிறேன்.

வ்யாஸர் 'ப்ரஹ்ம ஸூத்ரம்' செய்திருக்கிறார். அதற்கு ஆசார்யாள் பாஷ்யம் பண்ணியிருக்கிறார். அந்த பாஷ்யத்துக்கு பாஷ்யம் மாதிரி விளக்கவுரை வாசஸ்பதி மிச்ரர் செய்திருக்கிறார். இதற்கு 'பாமதி' என்று பெயர். வாசஸ்பதி மிச்ரருடைய பத்னியின் பெயர் பாமதி. அந்தப் பெயரையே புஸ்தகத்துக்கு வைத்தார்.[2] பாஷ்யத்தின் பாஷ்யமான இதற்கும் பாஷ்யம் மாதிரி அமலாநந்தர்

---

1. இவ்வுரையின் இப்பகுதி ஸ்ரீசரணர்கள் 1965-ல் அருளியது.

2. இதற்கான காரணம் இனி வரவிருக்கும் 'தெய்வத்தின் குரல்' பகுதிகளில் ஒன்றில் வெளியாகலாம்.

Koviloor Digital Library

என்பவர் 'கல்பதரு' என்று எழுதியிருக்கிருர். அந்தக் 'கல்பதரு'வுக்கும் விளக்கவுரையாக லக்ஷ்மிந்ருஸிம்ஹர் என்பவர் எழுதியதுதான் 'ஆபோகம்'. அதாவது 'ப்ரஹ்ம ஸூத்ர'த்தின் குழந்தை அதற்கு ஆசார்யாள் செய்த பாஷ்யமென்ருல், பேரக் குழந்தைக்குப் பேரக் குழந்தை 'ஆபோகம்'!

அந்தப் புஸ்தகத்தைப் பார்த்ததிலிருந்து, ஒரு ரெஃபரன்ஸுக்காக அதன் அப்பாப் புஸ்தகமான "கல்பதரு"வைப் பார்க்கவேண்டி வந்தது. அதிலே ஓரிடத்திலே கடிகா ஸ்தானத்தைப் பற்றி வருகிறது.

எந்த இடத்திலே என்ருல், ப்ரஹ்ம ஸூத்ரத்தின் மூன்ரும் அத்யாயம், நாலாம் பாதம், இருபதாம் ஸூத்ரத்தை விளக்கும் இடத்திலே. ஸந்நியாஸ ஆச்ரமம் என்பது உண்டு என்று ஸூத்ரகாரர் (வ்யாஸர்) அபிப்ராயப் படுகிற இடம். 'க்ருஹஸ்தன் பண்ணும் வைதிக கர்மாவிலேயே அவனுக்கு நேராக மோக்ஷம்; வைதிக கர்மாவை விட்ட ஸந்நியாஸம் கூடாது' என்கிற ஜைமினியின் பூர்வ மீமாம்ஸைக் கொள்கையை ஆக்ஷேபித்து இங்கே வ்யாஸாசார்யாள் துரீயாச்ரமத்தை (நாலாவது ஆச்ரமமான துறவறத்தை) ஸ்தாபித்திருக்கிருர்.

ஸந்நியாஸியின் லக்ஷணம் என்ன என்று இங்கே 'கல்பதரு'வில் அமலாநந்தர் கொடுத்திருக்கிருர். ஸந்நியாஸி என்பவன் சிகையை எடுத்துவிட்டு முண்டனம் பண்ணிக் கொள்ளவேண்டும் (மொட்டை அடித்துக் கொள்ளவேண்டும்), பூணூலை அறுத்துப் போட்டுவிட வேண்டும் என்றுதான் பொதுவிலே வைத்துக்கொண்டிருக்கிரும். ஆனுல் சிகையையும் பூணூலையும் கத்திரிக்காமலே ஸந்நியாஸி இருக்கலாமென்ற வழக்கத்தைச் சிலர் வைத்துக் கொண்டிருக்கிருர்கள்—பிற்காலத்தில் வந்த ராமாநுஜ ஸித்தாந்தத்தில் இந்த வழக்கம்தான். இதில் எது ஸரி என்று இங்கே 'கல்பதரு'க்காரர் தம் அபிப்ராயத்தைச் சொல்கிருர்:

Koviloor Digital Library

"யேது சிகா யஜ்ஞோபவீத த்யாக ரூப பாரம ஹம்ஸ்ய வ்ருத்திம் ந மந்யந்தே தே ந பச்யந்தி ப்ரத்யக்ஷ கடிகாஸ்தாநேஷு பட்யமாந ஆதர் வணீம் ச்ருதிம்—ஸசிகம் வபநம் க்ருத்வா பஹிஸ் ஸூத்ரம் த்யேஜத் புத:" என்கிறார்.

"ஸந்நியாஸிகளில் உச்சமான பரமஹம்ஸ முறைக்குப் போகிறவன் தலையைப் 'பண்ணிக்' கொள்ள வேண்டாமென்றும், பூணூலைக் கத்திரித்துப்போட வேண்டாமென்றும் சொல்கிறவர்கள், 'ஸந்நியாச்ரமம் எடுத்துக் கொள்ளும் புத்திமான் சிகையை எடுத்துவிட்டு, பூணூலையும் துறந்துவிட வேண்டும்' என்று கடிகாஸ்தானத்திலே அத்யயனம் செய்பவர்கள் சொல்லும் அதர்வ வேத வாக்கைக் கேட்டதில்லை போலிருக்கிறதே!" என்று அர்த்தம்.

இதிலிருந்து தெரிகிற இன்னொரு முக்யமான விஷயம், பிற்காலத்தில் அதர்வ வேத அத்யயனம் அடியோடு மங்கிப் போய்விட்டாலும் அக்காலத்தில் அந்த வேதமும் போதிக்கப்பட்டிருக்கிறது என்பதாகும். அதிருக்கட்டும். இதிலே கடிகாஸ்தானம் என்பது குறிப்பிடப்பட்டிருக்கிறது. ப்ராசீனமான (தொன்மை வாய்ந்த) அத்வைத ப்ரமாண நூல்களிலொன்றிலேயே 'கடிகா ஸ்தானத்துப் பசங்களின் அத்யயனத்தை இவர்கள் கேட்டதில்லையா என்ன?' என்று வருவதால், கடிகாஸ்தானங்கள் வித்வத் ஜனங்களால் மிகவும் மதிக்கப்பட்டது நன்றாகத் தெரிகிறது.

'கல்பதரு' எழுதிய அமலானந்தர் அதன் முடிவில் சொல்லிக்கொள்வதிலிருந்து அவர் தேவகிரியில் க்ருஷ்ணன், மஹாதேவன் என்ற யாதவ வம்சத்து ஸஹோதரர்களின் ஆட்சிக் காலத்திலிருந்தவரென்று தெரிகிறது. இது கி.பி. பதின்மூன்றும் நூற்றாண்டு மத்தியாகும். (அதாவது ராமாநுஜருக்கு நூறு, நூற்றைம்பது வருஷம் அப்புறம்.) இதற்கு முன்னாடியும் பின்னாடியும் எப்போதிலிருந்து எதுவரை கடிகாஸ்தானத்தைப் பற்றி ஆதாரபூர்வமான

Koviloor Digital Library

சாஸனங்களில் பிரஸ்தாவித்திருக்கிறது என்று தேடிப்பார்த்தேன். ஆராய்ச்சி அமலாநந்தர் காலத்துக்குக் கிட்டத் தட்ட ஆயிரம் வருஷத்துக்கு முன்னுல் கொண்டுவிட்டது!

கடிகையின் தொன்மை

கி.பி. நாலாம் நூற்ருண்டு ஆரம்பகாலத்திலேயே ஒரு ராஜா தன்னுடைய வித்யா குருவோடுகூட ஒரு கடிகாஸ்தானத்தில் வித்யாப்யாஸம் செய்திருக்கிருன். அந்த ராஜா கர்நாடக தேசத்தில் ஷிமோகாப் பகுதியைச் சேர்ந்தவன். அவன் படித்த கடிகாஸ்தானம் இருந்ததோ காஞ்சீபுரத்தில்! ஒரு ராஜாவே எத்தனேயோ நூறு மைல் கடந்து வந்து சேர்ந்து படிக்கும்படியாக அத்தனே உயர்வுடன் காஞ்சீபுரத்தில் கல்வி விலாஸம் இருந்திருக்கிறது! அவனுடைய குருவும் அவனேடு வந்தாரென்பதால் மிகவும் உயர்ந்த, ஸூக்ஷ்மமான சாஸ்த்ரங்கள் இந்த கடிகாஸ்தானத்தில் போதிக்கப்பட்டதாக ஊஹிக்கலாம்.

ரயிலும் ரோடும் இல்லாத ஆதி நாளிலிருந்தே வித்யைக்காக நம் தேசத்தவர்கள் ஆயிரம், ஆயிரத்தைந்நூறு மைல் தாண்டிப் போயிருக்கிருர்கள். காஞ்சியிலிருந்து காசிக்கு, பாடலிபுத்ரத்துக்கு என்றெல்லாம் போயிருக்கிருர்கள். சிதம்பரத்தில் பதஞ்ஜலி பாடம் சொல்லிக்கொடுத்ததாகச் சொன்னேனே, அதற்கு கௌட தேசம் என்கிற வங்காளத்திலிருந்துகூட சிஷ்யர் வந்திருக்கிருர். கௌடர் என்றே அவரைச் சொல்வது. அவருடைய சிஷ்யருக்கு சிஷ்யர்தான் ஆசார்யாள். ஆசார்யாள் காசியில் வேதாந்தம் போதித்த போது கற்றுக்கொள்வதற்காக சோழதேசத்திலிருந்து ஸநந்தனர் என்பவர் அங்கே போயிருக்கிருர். இவர்தான் பிற்பாடு பத்மபாதர் என்று பெயர் பெற்றவர்.

இம்மாதிரி ஷிமோகாவிலிருந்து காஞ்சீபுரத்துக்கு வந்த ராஜாவின் பெயர் மயூரவர்மா. அவனுடைய குருவின் பெயர் வீர சர்மா.

Koviloor Digital Library

(சர்மா—பிராம்மணன்; வர்மா—க்ஷத்ரியன்; குப்தா—வைச்யன்; தாஸன்—நாலாம் வர்ணம்.)

ஸகல சாஸ்த்ரங்களையும் ('ப்ரவசனம் நிகிலம்' என்று சாஸனத்தில் கண்டிருக்கிறது) ஸாங்கோபாங்கமாகப் படிப்பதற்காக இந்த இரண்டு பேரும் போனார்கள் என்று மயூரவர்மாவுக்கு இரண்டு பட்டம் தள்ளி ஆட்சி செய்த காகுத்ஸவர்மா என்பவன் ஷிமோகா ஜில்லாவிலுள்ள தலகுண்டாவில் ஸ்ரீ ப்ரணவேச்வரஸ்வாமி கோயில் தூண் ஒன்றில் பொறித்திருக்கும் கல்வெட்டில் சொல்கிறான். 'எபிக்ராஃபிகா இன்டிகா' எட்டாம் வால்யூமில் சாஸன வாசகம் இருக்கிறது :

"ய : ப்ரயாய பல்லவேந்த்ரபுரீம்"

என்பதாகக் காஞ்சியைப் 'பல்லவேந்த்ரபுரி' என்று சொல்லி 'கடிகாம் விவேச'—கடிகையில் சேர்ந்தான்—என்று முடித்திருக்கிறது.

ஏற்கெனவே குருவிடம் படித்துமுடித்துவிட்ட ராஜா, அல்லது ராஜகுமாரன், அந்த குருவையும் அழைத்துக்கொண்டு ஸகல சாஸ்த்ரத்தையும் ஸாங்கோபாங்கமாகக் கற்க நம் காஞ்சீபுரத்துக்கு வரும்படியான பெருமை அங்கேயிருந்த கடிகைக்கு இருந்திருக்கிறது என்பதிலிருந்து, நாலந்தா, தக்ஷசிலா யூனிவர்ஸிடிகளைப் போல நம் தமிழ் நாட்டிலும் இருந்திருப்பது தெரிகிறதோல்லியோ?

மயூரவர்மாவின் காலமான அந்த நாலாம் நூற்றாண்டு ஆரம்பத்தில் காஞ்சிபுரத்திலிருந்துகொண்டு ஸ்கந்தசிஷ்யன் என்ற பல்லவ ராஜா ஆண்டிருக்கிறான். இவன் ஸத்யஸேனன் என்ற இன்னொரு ராஜாவிடமிருந்து ஒரு கடிகையை ஜயித்துப் பெற்றான் என்று வேலூர்பாளையத்திலுள்ள மூன்றாவது விஜய நந்திவர்மாவின் சாஸனமொன்றிலிருந்து தெரிகிறது. வேலூர்பாளையம் என்பது அரக்கோணத்துக்கு வடமேற்கே ஏழு மைலில் இருக்கிற ஊர். இந்த சாஸனம்

Koviloor Digital Library

'ஸௌத் இன்டியன் இன்ஸ்க்ரிப்ஷன்', இரண்டாம் வால்யூம், ஐந்தாம் பார்ட்டில் பிரசுரமாயிருக்கிறது :

"ஸ்கந்த சிஷ்யஸ் ததோ அபவத்—த்விஜாநம் கடிகாம் ராஜ்ஞ : ஸத்யஸேநாத் ஜஹார ய:"

'த்விஜாநாம் கடிகாம்' அதாவது, 'ப்ராம்மணர்களுடைய கடிகையை' என்று அர்த்தம். இதிலிருந்து வேத சாஸ்த்ர அடிப்படையில் ஏற்பட்ட கல்விசாலேயே கடிகை என்று தெரி கிறது. 'கல்பதரு' மேற்கோளிலிருந்தும் அங்கே தற்போது வழக்கொழிந்துவிட்ட அதர்வவேத அத்யயனங்கூட 'நடந் திருப்பதாகத் தெரிந்ததல்லவா?

எதிரியரசனிடமிருந்து கடிகையைக் கைப்பற்றியதை முக்யமாகச் சொல்லியிருப்பதிலிருந்து அது யூனிவர்ஸிடி போலப் பெரிய ஸ்தாபனமாக இருந்திருக்க வேண்டுமென்று தெரிகிறது.

கடிகைகளில் வேதவித்யை மட்டுமின்றி, வேதத்தில் அதிகாரமுள்ள ப்ரம்ம - க்ஷத்ரிய - வைச்யர்களுக்கான எல்லா வித்யைகளுமே சொல்லிக் கொடுக்கப்பட்டிருக்கலா மென்றும், இவற்றில், க்ஷத்ரியர்களுக்கான தநுர்வேத சிக்ஷை யினுல் எதிர்காலத்துக்கான வீரர்கள் உருவாக்கப்பட்டார் களென்பதால்தான் குறிப்பாக சத்ரு ராஜாவிடமிருந்து கடிகையைக் கைப்பற்றியிருக்கக் கூடுமென்றும் ஒரு அநு மானம். அல்லது அறிவுக்கோட்டை என்ற காரணத்துக் காகவே அறிவை மதித்த அக்காலத்தில் ஒரு ராஜா இன்னெரு ராஜாவின் வித்யாசாலேயைத் தன் வசப்படுத்திக் கொண்டிருக்கலாம்.

'த்விஜர்' என்பதன் நேர் மொழிபெயர்ப்பு, 'இருபிறப் பாளர்' என்பது. உபநயன ஸம்ஸ்காரத்தினுல் இரண்டாவது பிறப்பு எடுப்பதாகக் கருதப்படும் முதல் மூன்று வர்ணத் தாருமே த்விஜர்கள்தான். அதனுல் 'த்விஜர்களுடையவை' எனப்படும் கடிகைகளில் க்ஷத்ரியர்களும் படித்திருக்க இட

Koviloor Digital Library

முண்டு. மயூரவர்மா என்று சற்றுமுன் சொல்லப்பட்டவன் க்ஷத்ரியன் தானே?

'ஸத்ய ஸேனன்' என்ற சத்ரு ராஜாவின் பேரிலிருந்து அவன் அசோக சாஸனம் சொல்லும் 'ஸத்ய புத்த' ('புத்ர' தான் 'புத்த' என்றுயிருக்கிறது) அரசர்களில் ஒருவன், இந்த ஸத்யபுத்ரர்கள்தான் தொண்டை மண்டலாதிபதிகள் என்றெல்லாமும் கொஞ்சம் ரிஸர்ச் பண்ணிப் பார்த்திருக் கிறேன்.*

வேலூர்பாளைய சாஸனம் இன்னொன்றிலிருந்து நரஸிம்ஹ வர்மா காஞ்சீபுரத்தில் கைலாஸநாதர் ஆலயத்தைக் கட்டியதோடு ப்ராம்மணர்களுக்கென (இங்கேயும் 'த்விஜா நாம்' என்று இருக்கிறது) கடிகாஸ்தானமும் மறுபடி கட்டிக் கொடுத்தானென்று தெரிகிறது. 'புநர் வ்யதாத்—மறுபடி கட்டிக்கொடுத்தான்'—என்று இருப்பதால் இவனுக்கு ரொம்ப காலம் முன்பே கடிகை இருந்து அது இவன் நாளில் சிதிலமாயிருக்கவேண்டும்; அதை இவன் அதன் முக்யத்வம் உணர்ந்து புனர் நிர்மாணம் செய்திருக்க வேண்டும் என்று தெரிகிறது. அழகான ச்லோகமாக இருக்கிறது சாஸனம்:

தத் புத்ர ஸூநு : நரஸிம்ஹவர்மா
புநர்வ்யதாத் யோ கடிகாம் த்விஜாநாம்
சிலாமயம் வேச்ம சசாங்கமௌளே :
கைலாஸகல்பம் ச மஹேந்த்ரகல்பம்.

கற்கோயிலின் தோற்றம்

'சிலாமயம் வேச்மம்' என்றால் கருங்கல்லால் ஆன க்ருஹம்; கற்கோயில். இப்போது கோவிலென்றால் கருங் கல்லை அடுக்கிக் கட்டியதுதான் என்றாகி விட்டதால் இதை விசேஷமாகக் குறிப்பிடுவானேன் என்று தோன்றலாம்.

---

* இந்த 'ரிஸர்ச்' விவரம் நம் நூற்பகுதிகளொன்றில் வெளிவரலாம்.

Koviloor Digital Library

ஆனல் காரணத்தோடுதான் இங்கே இப்படிச் சொல்லியிருக்கிறது.

ஏழாம் நூற்ருண்டின் ஆரம்பத்தில் இருந்த மஹேந்த்ர வர்மப் பல்லவனுக்கு முன்பெல்லாம் செங்கல், மரம் முதலியவற்ருல்தான் கோயில் கட்டினர்கள். மஹேந்த்ரவர்மா தான் முதன்முதலில் கற்கோயில் கட்டினவன். 'கட்டினவன்' என்பது தப்பு; கோவில் 'எடுத்தவன்' என்றே அவனைச் சொல்ல வேண்டும். ஏனென்ருல் இவன் காலத்தில்கூட, மலைகளிலிருந்து பாறைகளை வெட்டி slab களாக (துண்டங்களாக)ச் செதுக்கிக் கொண்டு வந்து அவற்றை அடுக்கிக் கோவில் கட்டுவது என்ற வழக்கம் ஏற்படவில்லை. பின்னே எப்படி கற்கோயில் எடுத்தானென்ருல், குன்ருகப் பெரிய பாறைகளிருக்கும் இடத்துக்குப் போய், அங்கே அந்தக் குன்றையே குடைந்து, செதுக்கி அப்படியப்படியே கோவிலாக ஆக்கும்படிச் செய்தான். செங்கல்லாலோ மரத்தாலோ ஆதியில் கோயில் அமைத்ததிலிருந்து இது முதல் டெவலப்மென்ட் (வளர்ச்சி).

இரண்டாவது டெவலப்மென்ட் மஹேந்த்ரவர்மாவுக்கு நூறு வருஷம் பிற்பாடு வந்த இந்த இரண்டாவது நரஸிம்ஹ வர்மாவான ராஜஸிம்ஹ பல்லவனின் காலத்தில் ஏற்பட்டது. அதாவது, இவன்தான் பெரிய பெரிய பாறைகளைத் துண்டங்களாக வெட்டிச் செதுக்கி எங்கே வேண்டுமானலும் எடுத்துக் கொண்டு வந்து அவற்றை அடுக்கி நிஜமாகவே கோயில் கட்ட ஆரம்பித்தான். அந்த முதல் கோவில்தான் காஞ்சி கைலாஸநாதர் ஆலயம்; அதைத்தான் குறிப்பாக 'சிலாமயம் வேச்மம்' என்று சொல்லியிருக்கிறது.

குன்றுகளைக் குடைந்து கோவிலாக்கின போது ("குடைவரைக் கோவில்" என்பது இதைத்தான்) நாம் கல் இருக்கிற இடத்துக்குப் போகவேண்டும். அதாவது ஸ்வாமியைத் தேடிக் கொண்டு நாம் போகவேண்டும். கல் நம்மைத் தேடி வரும்படியாக அதைச் செதுக்கிக்கொண்டு வந்து செங்கல்லைப்

Koviloor Digital Library

போலவே இசைத்துக் கட்டி ஸ்வாமியே நம்மிடம் எழுந்தருளும்படியாகச் செய்த முதல் கற்கோவில் கைலாஸ நாதருடையது. இதைக் "கட்டிடக் கோயில்" என்பார்கள். விஷயம் தெரிந்தவர்கள் "கற்றளி" என்பார்கள். 'கல் தளி' தான் 'கற்றளி'. தளி என்றால் கோவில்.

பூலோக கைலாஸமாக இந்தக் கோவிலைக் கட்டியதைத் தான் 'கைலாஸ கல்பம்' என்று சொல்லியிருக்கிறது. மஹேந்த்ரவர்மா அநுஸரித்த நிர்மாண முறையின் வழியிலேயே இதை நரஸிம்ஹ வர்மா செய்தான் என்பதை 'மஹேந்த்ர கல்ப:' என்று சுருக்கமாகக் குறிப்பிட்டிருக்கிறது.

அப்பர் ஸ்வாமிகளால் சமணத்திலிருந்து வைதிக மதத்துக்குத் திருப்பப்பட்ட மஹேந்த்ர வர்மா மாமண்டூர், மண்டகப்பட்டு, பல்லாவரம் (பல்லவர்புரம்), திருச்சி மலைக்கோட்டைக் கோவிலுக்குக் கீழே எல்லாம் குகைகளில் குடைவரைக் கோவில்கள் கட்டினவன். அவன் ஏழாம் நூற்றாண்டு ஆரம்பத்தில் இருந்தவன். அவனுடைய பிள்ளையும் ஒரு நரஸிம்ஹ வர்மாதான். வாதாபிவரை போய் ஜயித்த மாமல்லன் அவன்தான். ஆனால் கைலாஸநாதர் கோயில் கட்டினவன் அவனில்லை. அவன் முதலாவது நரஸிம்ஹன். இவன் அவனுடைய கொள்ளுப்பேரனான இரண்டாவது நரஸிம்ஹன். முதல் நரஸிம்ஹனோடு இவனைக் குழப்பிக்கொள்ளாமலிருப்பதற்காகப் பொதுவாக இவனை இவனுடைய பட்டப்பெயரான ராஜஸிம்ஹன் என்ற பெயரில் குறிப்பிடுவதே வழக்கம். புகழ்பெற்ற தன் மூதாதையான மஹேந்த்ரவர்மாவின் வழியில் தானும் கோவிலெடுத்ததால் 'மஹேந்த்ர கல்ப:' என்று சொல்லிக் கொண்டிருக்கிறான்.

"சசாங்க மௌளி" என்பது சந்த்ர சேகரனாக இருக்கப் பட்ட பரமேச்வரனைக் குறிக்கும் பெயர்.

"சிலாமயம் வேச்ம சசாங்கமௌளே!" என்று 'ச'காரம் மோனையாக வருவது காதுக்கு மதுரமாயிருக்கிறது.

Koviloor Digital Library

கோயிலும் கடிகையும்

வேதசாஸ்த்ராப்யாஸத்துக்கு கடிகை, தேவதாராதனத் துக்குக் கோவில் என்று இரண்டையும் நரஸிம்ஹவர்மா நிர்மாணித்ததில் ரொம்பவும் பொருத்தமும் பொருளும் இருக்கின்றன. வேத மந்த்ரங்களைக் கொண்டு செய்யும் ப்ராண ப்ரதிஷ்டையும், கும்பாபிஷேகமும், பூஜைகளுந்தான் தெய்வ ஸாந்நித்யத்தை ஆலயங்களில் உண்டாக்குபவை. வேதம் என்ற வேரிலே ஊன்றி நிற்கும் நம்முடைய ஸநாதன தர்மமென்னும் வ்ருக்ஷத்தில் பழமாகத் தொங்குவதே ஆலயம். எல்லாரும் அநுபவிப்பதற்காக வெளியே தொங்கு கிற இந்த ஆலயப் பழம் உண்டாகக் காரணமான வேர் மறைவாக, மறையாக இருப்பதே!

நரஸிம்ஹவர்மா முதலான ராஜாக்களின் வழியிலேயே தான், ராஜாக்கள் எடுபட்டுப் போனபின் நம்முடைய மதத் துக்கு நிரம்பப் போஷணை தந்துள்ள செட்டிப் பிள்ளைகளும் (நகரத்தாரும்) ஒரு கோயிலை ஜீர்ணோத்தாரணம் பண்ணினுல் ஒரு பாடசாலை ஏற்படுத்துவது என்று வைத்துக்கொண்டிருந் தார்கள்.

'பாடசாலையில் கற்றதனுல் ஆய பயன் இதுதான்' என்று வாலறிவன் நற்றுளை காட்டிக் கொடுக்கும்படியாக ஆலயங் களை எழுப்புவது பூர்விகர் வழக்கமாயிருந்தது.

கல்வி கற்பதைச் சொல்லும் இடத்தில் ஈச்வரனுக்கு "வாலறிவன்" என்ற பெயரைத் திருவள்ளுவர் கொடுத் திருப்பது அர்த்தபுஷ்டி வாய்ந்தது. எல்லாம் அறிந்த ஸர்வஜ்ஞனே "வாலறிவன்". எத்தனை கற்றுலும் அதனுல் அஹங்கரிக்காமல் அவனுடைய ஸர்வஜ்ஞத்வத்தில் அது துளிமாத்திரமே என்ற அடக்கத்தோடு அவனுடைய நற்றுள் தொழ வேண்டுமென்றுதான் இந்த வார்த்தையைப் போட்டிருக்கிறுர்.

Koviloor Digital Library

எட்டாம் நூற்றுண்டில்

கடிகாஸ்தானம் பற்றி உள்ள இன்னொரு கல்வெட்டு எட்டாம் நூற்றுண்டிலும் அது சீர்சிறப்புடன் இருந்ததைக் காட்டுகிறது. 'ஸௌத் இன்டியன் இன்ஸ்க்ரிப்ஷன்ஸ்' நாலாவது வால்யூமில் ப்ரசுரமாயுள்ள கல்வெட்டு.) இந்தக் கல்வெட்டு காஞ்சீபுரம் வைகுண்டப் பெருமாள் கோயிலில் இருப்பது.

ஒரு ஸமயம் பல்லவர்களில் ஸிம்ஹாஸனம் ஏறிய மத்யப் பிரிவினரின் வம்சம் ஸந்ததி இல்லாமல் முடிந்துபோய் விட்டது. காஞ்சீபுரத்தில் ராஜா இல்லாமல் அராஜகம் ஏற்பட்டுவிட இருந்தது. அப்போது கிளை வம்சத்தில் ஹிரண்யவர்மா என்று ஒரு குறுநில மன்னன் இருந்தான். காஞ்சீபுரத்தின் ப்ரமுகர்கள் ஒன்று சேர்ந்து அவனிடம் போய் அவனுடைய பிள்ளை பரமேச்வர வர்மாவைக் காஞ்சியில் பட்டாபிஷேகம் செய்துகொண்டு ராஜாவாக இருப்பதற்கு அனுப்பிவைக்க வேண்டுமென்று விஞ்ஞாபித்துக் கொண்டார்கள். அவன் அப்படியே அனுப்பிவைத்தான். அப்புறம் வைதிக ச்ரேஷ்டர்கள் காஞ்சீபுரத்தில் பரமேச்வர வர்மாவுக்கு ராஜ்யாபிஷேகம் செய்துவைத்து நந்திவர்மப் பல்லவன் என்ற பட்டத்தைக் கொடுத்தார்கள். இதைச் சொல்லும் அந்தக் கல்வெட்டு, முதலில் ஹிரண்யவர்மாவிடம் தூதுபோன ப்ரமுகர் கோஷ்டி, பிற்பாடு பரமேச்வர வர்மாவுக்குப் பட்டாபிஷேகம் செய்த வேத ப்ராம்மண கோஷ்டி ஆகிய இரண்டிலுமே காஞ்சியிலிருந்த கடிகையின் ஆசிரியர்கள் இருந்ததாகச் சொல்கிறது. இதிலிருந்து கடிகாஸ்தானத்தின் உசந்த ஸ்தானமும் அதன் அத்யாபகர்களுக்கு இருந்த மதிப்பும் தெரிகிறது.

'விக்ரமாதித்யன்', 'ஸத்யாச்ரயன்' என்ற பட்டப் பெயர்களை பாதாமி (வாதாபி) யிலிருந்து ஆட்சி செய்த சாளுக்கியர்கள் வைத்துக்கொள்வார்கள். இவர்களுக்கும் பல்லவர்களுக்கும் யுத்தங்கள் நடந்ததுண்டு. ஜயாபஜயங்கள் மாறி மாறி வரும். விக்ரமாதித்ய ஸத்யாச்ரயன் என்ற

Koviloor Digital Library

பெயருடைய ஒருவன் பண்ணிய தர்மத்தைப் பற்றிய கல்வெட்டு காஞ்சி கைலாஸநாதர் கோயில் மஹா மண்டபத்துக்கு மேற்கே உள்ள தூண் வரிசைகளில் வடக்கேயுள்ள ஸ்தம்பத்தில் இருக்கிறது. அதிலே காஞ்சீபுரத்து கடிகையில் இருப்பவர்களை "மஹா" ஜனங்கள் என்று மரியாதையாகச் சொல்லி, "இந்த தர்மத்துக்கு ஹானி செய்கிறவர்கள் கடிகை மஹா ஜனங்களை ஹத்தி செய்யும் பாபத்துக்கு ஆளாவார்கள்" என்று (ஸம்ஸ்க்ருதத்தில்) சொல்லியிருக்கிறது.*

சாஸனத்தின் அமைப்பு

பொதுவாக ஒரு ராஜசாஸனமிருந்தால் அதிலே மூன்று பகுதிகள் இருக்கும். முதல் பகுதிக்கு 'ப்ரசஸ்தி' என்று பேர். புகழ்மொழி என்று அர்த்தம். சாஸனத்தின் மூலம் ஏதோ ஒரு தானம் செய்து, அது நிரந்தரமாக இருக்கச் செய்கிற ராஜாவுடைய மூதாதையர்களின் பெருமை, அவனுடைய ஸொந்தப் பெருமை முதலானதுகள் ப்ரசஸ்தியில் கூறப்பட்டிருக்கும். அடுத்ததான மத்யப் பகுதிதான் தான விவரத்தைச் சொல்வது. இன்னாருக்கு, இன்ன ஸமயத்தில், இன்ன தானம் செய்யப்படுகிறது என்று அதில் விவரித்திருக்கும். கடைசியில் 'வ்யாஸ கீத ச்லோகங்கள்' என்ற பகுதி. அதிலே தற்போது ஏற்படுத்தி வைத்த இந்த என்டோமென்டை எந்நாளும் தர்மகர்த்தாக்கள் நேர்மையாக நடத்தி வைக்க வேண்டும் என்று உணர்த்துவதற்காக, 'இந்த சாஸன ப்ரகாரம் நடத்திவைப்பவர்கள் இப்படியிப்படியான புண்யங்களை அடைவார்கள் என்றும், அதற்குக் குந்தகம் செய்பவர் இப்படியிப்படியான பாபங்களுக்கு ஆளாவார்கள்' என்றும் சொல்லியிருக்கும். பொதுவாக, "கங்கைக் கரையில் காராம்பசுவைக் கொன்ற பாவம் ஸம்பவிக்கும்" என்று—இதுதான் பாபங்களுக்கெல்லாம் உச்சம் என்கிற

* எபிக்ராஃபிகா இண்டிகா —மூன்றாம் பகுதி, பக். 360

Koviloor Digital Library

கருத்தில்—சொல்லியிருக்கும். அதற்குப் பதிலாக கடிகை மஹாஜனங்களைக் கொலை செய்வதைச் சொல்லியிருப்பதிலிருந்தே அவர்களுக்கு இருந்த மஹா மதிப்பு மரியாதைகள் தெரிகின்றன.

ஏழாயிரம் மாணவர்கள்!

இன்னொரு கல்வெட்டிலிருந்து ஒரு கடிகை எத்தனை பெரிசாக, ஒரு ஊர் மாதிரி, இருந்திருக்கிறது என்று தெரிகிறது. ஆச்சரியமாகக்கூட இருக்கிறது. ஏழாயிரம் பேர் ஒரே கடிகையில் படித்திருக்கிறார்கள்! வடார்க்காடு குடியாத்தத்துக்கு அருகில் திருவல்லம் கிராமத்தில் நீவா என்ற ஆற்றின் மத்தியிலுள்ள பாறையில் இந்தக் கல்வெட்டு இருக்கிறது. அது எட்டாம் நூற்றாண்டின் முன்பாதியைச் சேர்ந்ததென்று கண்டுபிடித்திருக்கிறார்கள். 'ஸௌத் இன்டியன் இன்ஸ்க்ரிப்ஷன்ஸ்', முதல் வால்யூம், முதல் பார்ட்டில் இது ப்ரசுரமாயிருக்கிறது. அநேகமாகக் கல்வெட்டுக்கள் எல்லாமே ஒருத்தன் செய்த தான தர்மத்தைத்தான் சொல்வதற்கிணங்க இதுவும் ஒரு தர்மத்தைச் சொல்லி, "இந்த தர்மத்துக்கு ஹானி உண்டாக்குபவன் கடிகையிலுள்ள ஏழாயிரம் பேரையும் கொன்ற பாபத்துக்கு ஆளாவான்" என்கிறது.

பிரஸித்தி உடையவையாக நந்திவர்மப் பல்லவனின் "காசாகுடிச் செப்பேடுகள்" என்று உண்டு. நான் முன்னே சொன்ன புஸ்தகத்தின் இரண்டாவது வால்யூம், மூன்றும் பார்ட்டில் போட்டிருக்கிற இந்த சாஸனங்களில் ஒன்றிலிருந்து 'பூதேவர்'கள் எனப்படும் பிராம்மணர்களிடம் எத்தனை பக்தி விச்வாஸத்துடன் 'க்ஷத்ர சூடாமணி'களாயிருந்த ராஜாக்கள் கடிகைகளைக் கட்டிக்கொடுத்திருக்கிறார்களென்று தெரிகிறது. கடிகா ஸ்தான ஆசார்யர்கள் தனியாக குருகுலம் நடத்தாவிட்டாலும், சதுர்வேத பண்டிதர்களாகவும், தர்ம கர்மங்களில் சிறந்தவர்களாகவும்,- தேவ,

Koviloor Digital Library

த்விஜ' என்று தெய்வத்தோடு சேர்த்துச் சொல்லி ஸத்காரம் செய்யத் தக்கவர்களாகவும் இருந்திருக்கிறார்களென்று இதி லிருந்து தெரிகிறது.

ஏழாயிரம் மாதிரியே, மூவாயிரம் பேர், ஓராயிரம் பேர் படித்த கடிகைகளைப் பற்றியும் தெரியவருகிறது. வடார்க்காடு செய்யாறு தாலூகாவில் ப்ரம்மதேசம் என்ற கிராமமிருக்கிறது. ப்ரம்மதேயம்' என்றாலே பிராம்மண னுக்கு தானம் தந்தது என்றுதான் அர்த்தம். அந்த கிராமத் தில் சந்த்ர மௌளீச்வரர் ஆலயம் இருக்கிறது. அதன் கர்ப்பக்ருஹ வடவண்டைச் சுவரில் உள்ள கல்வெட்டில். "த்ரைராஜ்ய கடிகாமத்யஸ்த மூவாயிரவர்" என்று வருகிறது. "மூவாயிரவர்" என்ற தமிழ் வார்த்தை, அந்த கடிகையில் தொடர்ச்சியாக மூவாயிரம் பேர் படித்து, இவ்விஷயம் ஸர்வஜனங்களின் கவனத்தையும் கௌரவத் தையும் பெற்றிருக்க வேண்டுமென்பதைக் காட்டுகிறது. இதேபோல் இன்னொரு சாஸனத்தில் "கடிகை ஏழாயிரவர்" என்றும் தமிழில் வருகிறது. ஆயிரம் பேர் படித்த ஒரு கடிகையை "கடிகா ஸஹஸ்ரம்" என்று ஒரு இடத்தில் குறிப்பிட்டிருக்கிறது.

ஏழாயிரம், மூவாயிரம் என்பதெல்லாம் கொஞ்சம் மிகைபடக் கூறியது என்றும் சிலர் அபிப்ராயப்படுகிறார்கள். அப்படியே வைத்துக்கொண்டாலும் இதில் பாதியாவது இருந்திருந்தால்தானே இந்த அளவுக்கு மிகைப்படுத்தி யிருக்கமுடியும்? இப்படி நிச்சயமாக ஆயிரம் பேருக்கு மேல் ஒரே இடத்தில் சேர்ந்து முக்யமாக வேத சாஸ்திரங்களைப் படித்தார்களென்றாலே பெரிய விஷயம்தானே?

ஆந்திர, கர்நாடகங்களில்

காஞ்சீபுரத்தில்தான் முக்யமாக கடிகை ரொம்பவும் உன்னதமுறையில் போஷித்து வளர்க்கப்பட்டிருக்கிறது என்றாலும், (கி.பி.) ஆறும் நூற்றாண்டிலேயே வடக்கே, தெலுங்கு தேசத்தில் கோதாவரி ப்ராந்தியங்களிலும் ராஜாக்கள் கடிகைகள் ஸ்தாபித்ததாகத் தெரிகிறது.

Koviloor Digital Library

அங்கே துணி (Tuni) தாலுகாவில் சிக்குள்ள அக்ரஹாரம் என்ற இடத்தில் ஒரு குளம் வெட்டுகிறபோது ஒரு தாம்ர சாஸனம் (செப்பேடு என்பது) அகப்பட்டது. அது விஷ்ணு குண்டின வம்சத்தைச் சேர்ந்த இரண்டாவது விக்ரமேந்த்ர வர்மாவினுடையது. அவன் 'முறைப்படி கடிகை ஸ்தாபித்து புண்யக் குவியலை ஸம்பாதித்துக் கொண்டான்' என்று அதில் இருக்கிறது: யதாவிதி விநிர்மாபித கடிகாவாப்த புண்ய ஸஞ்சயஸ்ய."

கர்நாடக தேசத்தில் பதினொன்றும் பன்னிரண்டாம் நூற்றாண்டுக் கல்வெட்டுக்களிலே 'கடிகை' என்ற பெயரைச் சொல்லி, அந்தப் பெயருள்ள கல்விசாலைகள் அங்கேயிருந்ததைக் கூறியிருக்கிறது. 'எபிக்ராஃபிகா கர்நாடகா' வால்யூம்களைப் பார்த்தால் தெரியும்.

பன்னிரண்டாம் நூற்றாண்டின் பின்பாதியில் ஆட்சி நடத்திய த்ரிபுவன மல்லிதேவ சோள மஹாராஜன் என்பவனுடைய கல்வெட்டு தும்கூர் ஜில்லாவிலுள்ள காமகொண்டன ஹள்ளியில் ஹேமவதி தொட்டப்பா ஆலயத்தில் இருக்கிறது. இதில் ஹெஞ்சாரப்பட்டணம் என்ற இடத்திலிருந்த கடிகா ஸ்தானத்தில் ப்ரதிஷ்டையாகியிருந்த நொணம்பேச்வர ஸ்வாமி ஸந்நிதானத்தில் ஒரு கிராமதானம் நடந்ததாகக் கன்னட பாஷையில் சொல்லியிருக்கிறது. "ஸ்ரீமது ஹெஞ்ஜாரப்பட்டணத மஹா கடிகா ஸ்தான ஸ்ரீ நொணம்பேச்வர தேவர ஸந்நிதானதல்லி" என்று சொல்லிக்கொண்டு போயிருக்கிறது.

மைஸூரில் மண்டயம் என்கிறோமே, அந்தப் பகுதியில் ஹளேகெரெ என்ற இடத்தில் சிவமாரமன் என்று பெயருடைய ஒரு ப்ருத்வி கொங்கணி வம்ச மஹாராஜாவின் சாஸனம் கிடைத்திருக்கிறது. அது, ஒரு நிலதானத்தைப் பற்றிச் சொல்லுகிறது. அதில் (தானம் யாரைக் குறித்துச் செய்யப்படுகிறதோ அந்த) doneeயின் பெயர் மாதவ சர்மன் என்றும், அவன் ஹரிதஸ கோத்ரத்தைச்

Koviloor Digital Library

சேர்ந்தவன் என்றும் சொல்லி, இவற்றைச் சொல்வதற்கு முன்பாகவே அவனைப் பெருமைப்படுத்தும் விதத்தில் அவன் "கடிகையைச் சேர்ந்த ஆயிரம் பேரில் ஒருத்தன்" என்று குறிப்பிட்டிருக்கிறது : கடிகா ஸஹஸ்ராய ஹரிதஸ கோத்ராய மாதவ சர்மணே" (Ep. Kar-Mandya Taluk, vol III, p. 108)

சென்னராய பட்டணத்தைச் சேர்ந்த 1442-வது வருஷத்திய கல்வெட்டு ஒன்று, அதாவது பதினைந்தாம் நூற்றாண்டின் மத்திக்கு வந்துவிட்டோம். கி. பி. நாலாம் நூற்றாண்டின் ஆரம்பத்தில் கர்நாடகத்திலிருந்து காஞ்சீபுரம் கடிகைக்கு வந்த மயூரவர்மாவின் காலத்திலிருந்து ஆயிரத்து நூறு வருஷம் தள்ளி வந்துவிட்டோம். இப்போது கர்நாடகத்திலேயே அநேக கடிகைகள் ஏற்பட்டு விட்டன. அவற்றிலொன்று, இந்த சிலாசாஸனத்தின் காலத்தை ஒட்டிய ஒரு துந்துபி வருஷ பாத்ரபத மாஸத்தில் ஸ்தாபிக்கப்பட்டதை அது தெரிவிக்கிறது. "கடிகா ஸ்தானம்" என்பதைவிட இன்னும் பக்தி மரியாதைகளுக்கு உகந்ததாக "கடிகா (ஆ) ச்ரமம்" என்று சொல்கிறது. அதாவது, ஒரு குரு மட்டும் தன் ஆச்ரமத்தில் ரொம்பவும் தூய்மையுடன் குருகுலம் நடத்திய மாதிரியே இங்கே பல பேர் ஒரு இடத்தில் சேர்ந்து நூற்றுக்கணக்கானவர்களுக்கு சிக்ஷையளித்த போதும் அதை ஆச்ரமமாகப் பரிசுத்தத் தோடு நடத்தியிருக்கிறுர்கள் என்று தெரிகிறது.

சோழநாட்டிலும்

சோழ ராஜாக்களும் தங்கள் ராஜ்யத்தை வேத சாஸ்த்ரங்கள் நன்ருக பிரகாசித்த வித்யாபூமியாகத்தான் வளர்த்து வந்தார்களென்ருலும் சோழதேச பாடசாலைகளை 'கடிகை' என்ற பெயரில் குறிப்பிடக்காணோம். ஆனாலும் தஞ்சாவூர் ஜில்லா வேப்பத்தூரில் ("வேம்பற்றூர்" என்பது அதன் ஸரியான பெயர்) மஹாபண்டிதர்கள் கல்வி போதித்து, 'கடிகை' என்றே பெயர் பெற்றிருந்த ஒரு கலா

Koviloor Digital Library

சாலே இருந்ததாகத் தெரிகிறது. திருக்கழித்திட்டை வேத புரீச்வரர் ஆலய கர்ப்ப க்ருஹத்தின் வடவண்டைச் சுவரி லுள்ள முதலாம் ராஜேந்த்ர சோழனின் கல்வெட்டிலிருந்து இது தெரிகிறது.

இது 'கடிகை' என்ற பெயருக்குத் தெற்கு எல்லே.

மஹாராஷ்டிரத்திலும் பெருமை

கடிகையைப்பற்றி ஆரம்பித்தபோது நான் சொன்ன அமலானந்தர் தேவகிரியில் இருந்தவர். தௌலதாபாத் என்று வழங்குகிற அந்த ஊர் மஹாராஷ்ட்ரத்தில் இருப்பது. அவர் கடிகையைப் பற்றிச் சொல்வதால் அங்கேயும் இந்தப் பெயரில் ஸர்வகலாசாலேகள் இருந்ததாகச் சொல்லலாம். அல்லது அவர் காலமான பதின்மூன்றும் நூற்ருண்டு மத்தி யில்கூட காஞ்சிக் கடிகையே தேவகிரி வரை எட்டும் க்யாதி யுள்ளதாக இருந்திருக்கலாம். இந்த கடிகைக்கு தேசத்தின் நாலுபக்கங்களிலிருந்தும் நாலு ஸம்ப்ரதாயஸ்தர்களும் வந்ததால்தான் அவர் இங்கே அதர்வ வேதப் பசங்கள் ஸந்நியாஸியைப் பற்றிச் சொல்லும் மந்த்ரம் இன்னுருக்குத் தெரியாதா என்று கேட்கிருர்—என்றும் வைத்துக் கொள்ள லாம்.

கடிகைக்கு கடிகாரத் தொடர்புண்டா?

கடிகையின் க்யாதி, ப்ரக்யாதிகள் தெரிகிறது. ஆனல் கடிகை என்று ஏன் பெயர் வந்தது? இதற்குப் பதில் சொல் லாமல் "நான் இத்தனே சாஸனங்களேப் பார்த்திருக்கிறேனுக் கும்" என்று பெருமைப் பட்டுக்கொண்டே போகிறேனே! இதை (பெயர் வந்த காரணத்தை)த் தெரிந்துகொண்ட பெருமையைச் சொல்லிக் கொள்ளவேண்டாமா? இந்தப் படலத்தை ஆரம்பிக்கிறேன்.

கடம் என்ருல் பானே என்று எல்லாருக்கும் தெரிந்திருக் கும். அதிலேயே ரொம்பப் பெரிசா யில்லாமலிருப்பது

Koviloor Digital Library

கடிகை என்றேன். லதா - லதிகா; பத்ர—பத்ரிகா என்பது போல கட—கடிகா. ஆனுல் பானைக்கும் பள்ளிக்கூடத்துக்கும் என்ன ஸம்பந்தம்?

'கடிகை' என்ருல் 'நாழிகை' என்றும் அர்த்தம் சொன்னேன். 'அம்ருத கடிகை' என்பது போன்ற வார்த்தைகளில் இந்த அர்த்தத்தில்தான் அந்த வார்த்தை வருகிறது. ஒரு கடத்திலிருந்து சொட்டுச் சொட்டாக ஜலம் விழுவதைக் கொண்டே அந்தக் காலத்தில் நேரத்தைக் கணக்கிட்டதால் நாழிகைக்கு கடத்தின் பெயரை வைத்து 'கடிகா' என்றே இன்னொரு பெயர் சொன்னுர்கள். அதுதான் இப்போது 'கடிகாரம்' என்பதில் வந்திருக்கிறது.

'ஸரி, காலேஜ் மாதிரி இருந்த வித்யாசாலைக்கு ஏன் கடிகா என்று பேர்? எப்போது க்ளாஸ் முடியும் என்று கடிகாவைப் பார்த்துக் கொண்டேயிருந்திருப்பார்களா? அதனுல் இந்தப் பேரா?' என்று வேடிக்கையாகத் தோன்றுகிறது. ஆனுல் ரொம்பவும் ஸீரியஸான அகாடெமி விஷயத்தில்—வேத சாஸ்த்ர ஸம்பந்தமான விஷயத்தில்—இப்படிக் குறும்புப் பேர் கொடுப்பது பொருந்தாது.

கடிகாசலம், நான்மணிக்கடிகை

சோளிங்கர் என்று ஒரு க்ஷேத்ரம் இருக்கிறதே அதற்கு சோளஸிம்ஹபுரம் என்று பூர்வத்தில் பெயர். (சோளலிங்கபுரம் என்றும் சொல்லுவார்கள்.) அதுதான் சோளிங்கராகிவிட்டது. இதற்கே கடிகாசலம் என்று இன்னொரு பெயர். 'கடிகை மலை' என்று அர்த்தம். இந்த இடத்தில் கடிகை என்ருல் என்ன அர்த்தம் என்று விசாரித்துப் பார்த்தேன். இந்த மலையில் ஒரு கடிகை—அதாவது ஒரு நாழிகை—தங்கினுலும் போதும், அங்கே கோயில் கொண்டிருக்கும் நரஸிம்ஹ மூர்த்தியின் சக்தியினுல் எல்லாத் தீமைகளும், ஆவிக்கோளாறுகளுங்கூட பறந்து போய்விடுமென்பதால் இப்படிப் பெயர் என்று சொன்னுர்கள். என் "ரிஸர்ச்"சுக்கு அது ப்ரயோஜனப் படவில்லை.

Koviloor Digital Library

"நான்மணிக்கடிகை" என்று தமிழில் ஒரு நூல் சொல்கிறார்களே, அதில் "கடிகை" என்பது என்னவென்று கேட்டுப்பார்த்தேன். கடிகை என்றால் சின்ன 'பீஸ்' (துண்டு) என்றும், துண்டு துண்டாக உள்ள நாலு நாலு மணியான உபதேசங்களைக் கோத்து இதில் ஒவ்வொரு செய்யுளையும் செய்திருப்பதால் நூலுக்கு இப்படிப் பெயர் என்றும் தெரிந்தது. இதுவும் ஒரு வித்யாஸ்தானத்துக்கு ஏன் கடிகை என்று பேர் வரவேண்டும் என்பதைப் புரியவைக்கவில்லை.

பலன் கிடைத்தது!

ரொம்பவும் தேடிப் பார்த்தேன். யோசித்துப் பார்த்தேன். விஷயம் தெரிந்தவர்களைக் கேட்டுப்பார்த்தேன். புரிபடாமலே நின்றது. அதனாலேயே புரிந்து கொள்ளத்தான் வேண்டும் என்ற ஆர்வமும் ஜாஸ்தியாயிற்று. கடைசியில் பலன் கிடைத்தது.

எப்படி கடிகையைப்பற்றி உத்தர மீமாம்ஸா சாஸ்த்ரங்களில் ஒன்றாகக் கொள்ளத்தக்க 'கல்பதரு'வில் குறிப்புக் கிடைத்ததோ, அப்படியே அந்த நாமகரணத்தைப் பற்றிய விளக்கம் பூர்வ மீமாம்ஸா சாஸ்த்ரங்களில் ஒன்றிலிருந்து கிடைத்தது! இப்படி வித்யாசாலை ஸம்பந்தமான அறிவு நம்முடைய சதுர்தச வித்யா ஸ்தானங்களில் ஒன்றான மீமாம்ஸையிலிருந்தே கிடைப்பதுபற்றி ஸந்தோஷமாக இருக்கிறது.

கி.மு. ஐந்தாம் நூற்றாண்டிலேயே; ப்ரயாகையிலும்!

பூர்வ மீமாம்ஸகர்களில் ஒரு முக்ய புருஷரான குமாரில பட்டர் "தந்த்ர வார்த்திகம்" என்று ஒரு க்ரந்தம் செய்திருக்கிறார். அதில் "கல்பஸூத்ராதிகரணம்" என்ற பகுதியில் ஒரு ச்லோகம் வருகிறது (1-3-6). ச்லோகத்தின் விஷயம் நமக்கு அவச்யமில்லை. அதிலே கடிகா மார்க்க வ்ருத்திஷு என்ற வார்த்தை வருவதுதான் நமக்கு முக்யம்.

Koviloor Digital Library

கி.பி. நாலாம் நூற்ருண்டிலிருந்து அதற்கப்புறம் ஆயிரம் வருஷத்துக்கு மேலாக கடிகைகள் இருந்திருப்பதற்கு 'எவிடென்ஸ்' (சான்று) இருக்கிறது என்று பெருமையாக ராஜ சாஸனங்களை ஸாக்ஷி காட்டினேன் அல்லவா? இப்போதோ ஆசார்யாளுக்கு ஸமகாலத்தவரான குமாரில பட்டரே ராஜ சாஸனத்துக்கு மேலாக, தம்முடைய சாஸ்த்ர வாசகமாக, கடிகையைச் சொல்கிருரென்பதால் கி.பி. நாலாம் நூற்ருண்டுக்கும் கிட்டத்தட்ட ஆயிரம் வருஷத்துக்கு முந்திய கி.மு. ஐந்தாம் நூற்ருண்டிலேயே இப்படிப்பட்ட கலாசாலைகள் இருந்ததாகிறது.*

அதாவது இரண்டாயிரம் வருஷகாலம் 'கடிகை' என்ற பெயரில் வித்யாசாலைகள் கொடிகட்டிப் பறந்திருக்கின்றன. ஹிந்து மதத்தில் ஆசார்யாள்தான் முதலில் இன்ஸ்டிட்யூஷன் ஏற்படுத்தினுரென்ருலும், மதச் சார்புள்ள அதன் கல்வி முறையில் அவர் காலத்திலேயே இன்ஸ்டிட்யூஷனலைஸ் செய்த கடிகைகள் இருந்திருக்கின்றனவென்று இதிலிருந்து தெரிகிறது. பௌத்தர்கள் புத்திமான்களிடம் செல்வாக்குப் பெறத் தொடங்கியதை எதிர்த்துத் தார்க்கிகர்களும் மீமாம்ஸகர்களும் கண்டனம் ஆரம்பித்தவுடனேயே வைதிக வித்யைகளில் பிடிப்புள்ளவர்கள் பண்டிதர்களை ஒன்று திரட்டி இப்படி கடிகைகளை ஆரம்பித்திருக்க வேண்டு மென்று தோன்றுகிறது. அப்படி ஆரம்பித்ததுதான் போகப் போக நன்ருக அபிவ்ருத்தியாகி யிருக்கிறது.

காலத்தில் இத்தனை முற்பட்டிருந்ததோடு, குமாரில பட்டர் சொல்வதால் கடிகாஸ்தானத்தின் எல்லை எது வரை போயிருந்ததென்றும் தெரிகிறது அவர் தற்போது அலாஹாபாத் என்று சொல்லும் ப்ரயாகையில் இருந்தவர். அவர் கல்விமான்களுக்கெல்லாம் ஸஹஜமாகத் தெரிந்த ஒன்ருக, "கடிகா மார்க்க வ்ருத்திஷு" என்பதால்

---

* சங்கரரின் காலம் கி. மு. 508—476 என்ற கருத்தைத் தழுவிக் கூறியது.

Koviloor Digital Library

வடக்கே அலாஹாபாத்திலிருந்து தெற்கே சோளுட்டு வேப்பத்தூர் வரை "கடிகாஸ்தானம்" என்ற பெயரிலான வித்யாசாலேகள் இருந்ததாக ஆகிறது.

'ஆரிஜின்' (தோற்றுவாய்), கால ஸமாசாரம், எல்லே எல்லாமிருக்கட்டும். நாமகரணத்துக்குக் காரணமென்ன என்றல்லவா குடைந்து கொண்டிருந்தோம்?

பெயர் விளக்கம்

குமாரிலபட்டரின் தந்த்ர வார்த்திகத்துக்கு பட்ட ஸோமேச்வரர் என்பவர் செய்திருக்கும் பாஷ்யத்தில்தான் இந்தக் காரணம் புரிந்தது. அதைத்தான்சொல்ல வந்தேன்.

'கடிகாஸ்தானம்' என்பதை அவர் (பட்ட ஸோமேச்வரர்) இப்படி 'எக்ஸ்ப்ளெயின்' பண்ணியிருக்கிருர்:

"வேத கௌசல ஜிஜ்ஞாஸார்த்தம் தத்தத் வேதபாக சிஹ்ந லேகயாநி கடிகாயாம் கும்பாக்யா யாம் நிக்ஷிப்ய, தத்தத் வேதபாக பரீக்ஷாகாலே தான்-யாக்ருஷ்ய, ஆக்ருஷ்ட லேக்ய சிஹ்நிதம் வேதம் பட இத்-யத்யேதார: அநுயுஜ்யந்தே இதி கடிகா மார்க்க வர்த்திநோ அநுயோக:" என்கிருர்.

'அநுயோகேஷு கடிகா மார்க்க வ்ருத்திஷு' என்று குமாரிலபட்டரின் 'தந்த்ரவார்த்திக' மூல ச்லோகத்தில் வருகிறது. அது எதைக் குறிக்கிறது என்று இங்கே பாஷ்யம் செய்தவர் விவரித்துவிட்டு, இதுதான் 'கடிகா மார்க்க வர்த்திநோ அநுயோக:' என்று மூல வாசகத்தைக் காட்டி முடிக்கிருர்.

'கடிகா மார்க்க வ்ருத்தி' என்பது கடிகையின் கல்வி முறைப் போக்கு. அதைப் பின்பற்றுபவர்கள் கடிகா மார்க்க வர்த்திகள். 'அநுயோகம்' என்ருல் அவர்கள் விஷயங்களே விசாரணே செய்வது; பரீக்ஷை நடத்துவது.

Koviloor Digital Library

கடிகா ஸ்தானங்களில் வித்யார்த்திகளுக்கு எப்படிப் பரீக்ஷை வைக்கிறார்களென்பதை இங்கே ஸோமேச்வரர் விளக்குவதில் கடிகை என்ற பெயர் வந்த காரணமும் புரிந்துவிடுகிறது.

"கடிகாயாம் கும்பாக்யாயாம்" என்கிறார். கும்பம் என்றால் குடம், பானை என்று தெரிந்திருக்கும். கடிகை என்பது கும்பமாகிய பானை ஸம்பந்தமுள்ள பெயர்தான் என்று விவரிக்கிறார்.

கடிகைகளில் பானையை வைத்து நடந்த பரீக்ஷை முறையிலிருந்தே அதற்கு அந்தப் பெயர் ஏற்பட்டிருக்கிறது என்று தெளிவுபடுத்துகிறார்.

என்ன பரீக்ஷை முறை? அதிலே பானை எதற்கு வந்தது? வரட்டு நெட்டுருப் போட்டுப் பரீக்ஷை எழுதுவதை 'கடம் அடித்தான்' என்கிறார்களே, அதிலிருந்துதான் கடிகையா? இல்லை. பரிஹாஸப் பெயர் மதிப்புக்குரிய வேத வித்யா ஸ்தானத்துக்கு ஏற்பட்டிருக்கமுடியாது என்று முன்னேயே சொன்னேனே!

வேதத்தில் எந்த மந்த்ரத்தைக் கேட்டாலும் அதை வித்யார்த்தி ஒப்பிக்கவேண்டும். அவன் 'தரோ'வாக அத்யயனம் செய்திருக்கிறானென்று அப்போதுதான் ஏற்படும். இதற்காகவே பரீக்ஷை எப்படி நடத்தினார்களென்றால்:

'அப்ஸ்ட்ராட்' - ஆகச் சொல்லாமல் உதாரணம் காட்டிச் சொன்னால்தான் புரியும் :

உதாரணமாக :

ரிக்வேதத்தில் ஏதாவது ஒரு மந்த்ரம் பையனுக்குத் தெரிகிறதா என்று பார்க்கவேண்டுமென்று வைத்துக் கொள்ளுங்கள். அதன் முதல் வார்த்தையைக்கூட எடுத்துக் கொடுக்காமல் அவனைச் சொல்லப் பண்ணவேண்டும். அத்யயனம் என்பது நெட்டுருப் போடுவதே ஆகையால் முதல் வார்த்தையைச் சொல்லிவிட்டால் அவன் கிடுகிடு

Koviloor Digital Library

என்று சொல்லிக்கொண்டு போய்விடுவான். அதனால், அதைக்கூடச் சொல்லாமல் இன்ன ·மந்த்ரம் என்று ஒரு ஸங்கேதம்—நம்பர்—கொடுத்தே அவனை ஒப்பிக்கப் பண்ண வேண்டும்.

இந்த நம்பரை எப்படிக் கொடுத்தார்கள்?

ரிக்வேதத்தில் பதினாயிரத்துக்கு மேல் மந்த்ரம் இருக்கிறது. இவற்றுக்கு ஒன்றிலிருந்து பதினாயிரம் வரை நம்பர் கொடுப்பது என்பது பெரிய தலைவலியாயிருக்கும். ஆனால் நல்லவேளையாக அந்த வேதத்தைப் பல பாகமாக்கி, ஒவ்வொரு பாகத்தையும் பல பிரிவுகளாக்கி, ஒவ்வொரு பிரிவிலும் ஒரு ஸூக்தம், அந்த ஸூக்தத்தில் இத்தனை ரிக்குகள் என்று பிரித்துக் கொடுத்திருக்கிறது. ரிக் என்பது ச்லோகம் மாதிரி. ஒவ்வொரு ரிக்கும் ஒரு மந்த்ரம்.

இப்படிப் பிரித்திருப்பதில் இரண்டு விதம். பத்து மண்டலங்கள், ஒவ்வொரு மண்டலத்திலும் அநுவாகம் என்ற பிரிவுகள், ஒவ்வொரு அநுவாகத்திலும் ஸூக்தம் என்ற உட்பிரிவுகள் - என்பது ஒருவிதமான பிரிவினை. இன்னொன்று: எட்டு அஷ்டகம் என்று முதலில் பிரித்து ஒவ்வொரு அஷ்டகத்திலும் அத்யாயம் என்ற உட்பிரிவு, அதிலே ஸூக்தம் என்று மேலும் உட்பிரிவு என்பது.

இப்போது பையனுக்கு ஸங்கேதமாக நம்பர் கொடுத்துப் பரீக்ஷிப்பது ஸுலபமாகி விடுகிறது. அதாவது 2-4-3-5 என்று ஏதோ ஒரு நம்பரை பரீக்ஷாதிகாரி கொடுக்கிறாரென்று வைத்துக் கொள்ளுங்கள். அந்த கடிகையில் மண்டலப் பிரிவினையைப் பின்பற்றுபவர்களானால், உடனே பையன் இரண்டாவது மண்டலத்தில் நாலாவது அநுவாகத்தில் வரும் மூன்றாவது ஸூக்தத்தின் ஐந்தாம் ரிக்கை 'டக்'கென்று சொல்ல வேண்டும். அஷ்டகப் பிரிவினையை அநுஸரிப்பவர்களானால், இப்படியே இரண்டாவது அஷ்டகம், நாலா

Koviloor Digital Library

வது அத்யாயத்தில் வரும் மூன்ரும் ஸூக்தத்தின் ஐந்தாவது ரிக்கை ஒப்பிக்க வேண்டும்.

இதற்கும் கடத்துக்கும் என்ன ஸம்பந்தம்?

பரீக்ஷாதிகாரி வாயினுல் இப்படி 2-4-3-5 என்று நம்பர் களைச் சொல்வதைவிட எழுத்திலே கொடுப்பதுதான் மாணவனுக்குத் தெளிவாகப் புரியும். நாலு நம்பர்களைச் சேர்ந்தாற்போல் வாயினுல் சொல்லிக்கொண்டு போனுல் ஸந்தேஹம் வந்துவிடலாம். எனவே இம்மாதிரி ஸங்கேத நம்பர்கள் பலவற்றை ஓலை நறுக்கில் எழுதி ஒரு கடத்தில் போட்டு வைத்தார்கள். இதில் இன்னொரு நன்மை—வாயால் சொன்னுல் அது அப்போதே காற்றோடு போய்விடும். எழுத்தில் இருந்தால் எத்தனை பரீக்ஷைகளுக்கு வேண்டுமானு லும் திரும்பத் திரும்ப உபயோகித்துக் கொள்ளலாமே! அதனுல் ஓலை நறுக்கில் எழுதி கடத்தில் போட்டு வைத்தார் கள். அதோடு எழுத்தில் எழுதினுல் அது ஸாக்ஷி ப்ரமாண முள்ள டாகுமென்டும் ஆகிவிடுகிறது!

பரீக்ஷை ஸமயத்தில் பையன் கடத்தில் கையை விட்டு எந்த நறுக்கு கையில் வருகிறதோ அதிலிருக்கிற ஸங்கேத நம்பருக்கான ரிக்கைச் சொல்ல வேண்டும். தனி ரிக்காக இல்லாமல் அவற்றைவிடப் பெரிய ஸூக்தம், யஜுர் வேத மானுல் பஞ்சாதி என்றும் இப்படியே நம்பர் கொடுத்து, கடத்திலிருந்து ஓலை நறுக்கு எடுத்துப் பார்த்துச் சொல்ல வைத்துப் பரீக்ஷை நடத்தினுர்கள்.

இதைப் பின்பற்றித்தான் பிற்காலத் தமிழரசர்கள் குடவோலைத் தேர்தல் முறை என்று நகராட்சி முறையில் அமலாக்கியிருக்கிருர்கள்.* குடவோலைத் தேர்தலில் ஒன்றும் தெரியாத ஒரு குழந்தை ஓலையை எடுத்ததாகச் சொல்லி யிருக்கிறது. கடிகைப் பரீக்ஷயில் மாணவனே எடுத்திருக்க

* இதே பகுதியில் 'பொது வாழ்க்கை' என்னும் பிரிவில் 'உத்தர மேரூர் உத்தமத் தேர்தல் முறை' என்ற உரையில் 'தேர்தல் நடந்த விதம்' எனும் பிரிவு பார்க்க.

Koviloor Digital Library

லாம், அல்லது ஆசிரியர் எடுத்திருக்கலாம். இருவருமில்லாமல் எவரேனும் மத்யஸ்தர் எடுத்தாலும் எடுத்திருக்கக் கூடும். சொல்லிக் கொடுத்தவரை பரீக்ஷாதி காரியாகப் போடாமல் வேறு மூன்றும் மனுஷரைப் போட்டு அவரை விட்டே (ஓலை நறுக்கை) எடுக்கச் செய்துமிருக்கலாம்.

சொல்லிக்கொடுத்த வாத்யாரானாலும் ஸரி, அசலார் என்று நினைக்கும் மத்யஸ்தரானாலும் ஸரி எவருமே ஒரு மாணவனுக்கு முன்கூட்டியே கேள்வியைச் சொல்லிக் கொடுப்பது முதலான ஒழுங்குத் தப்புக்குக் கொஞ்சங்கூட இடம் கொடுக்கப்படாதென்றுதான் இப்படி ஏகப்பட்ட கேள்விகளை (ஓலை நறுக்கில் உள்ள நம்பர் ஒவ்வொன்றும் ஒரு கேள்வி மாதிரிதானே?) ஒரு கடத்திலே போட்டு வைத்து, அதிலே தற்செயலாக எதெது வருகிறதோ அததுகளுக்கு 'ஆன்ஸர்' பண்ணவேண்டுமென்று கொஞ்சமும் சங்கைக்கு இடமில்லாத முறையில் பரீக்ஷை நடத்தியிருக்கிறார்கள்.

அந்த கடத்தை வைத்துத்தான் வித்யாசாலைக்கே "கடிகை" என்று பெயர் வந்ததென்று பட்ட ஸோமேச்வரரின் 'எக்ஸ்ப்ளனேஷ'னிலிருந்து தெரிந்தது. பெயர் புரிய வந்ததில் ஒரு புதையல் கிடைத்த ஸந்தோஷம்!

சிறிது ஸம்ஸ்க்ருத பாடம்

பாடம் சொல்லிக் கொடுப்பதைப் பற்றியே நிறையச் சொல்லிக்கொண்டு வந்திருக்கிறேனாதலால் உங்களுக்கும் கொஞ்சம் ஸம்ஸ்க்ருத பாடம் சொல்லித் தருகிறேன்—பட்ட ஸோமேச்வரரின் புஸ்தகத்திலிருந்து 'கோட்' செய்தேனே அதற்கு அர்த்தம் சொல்லித் தருகிறேன்.

"வேத கௌசல ஜிஜ்ஞாஸார்த்தம்" - வேதத்தில் எவ்வளவு தேர்ச்சியிருக்கிறதென்று அறிவதற்காக; "தத்தத் வேதபாக" - அந்தந்த வேத பாகங்களின்; "சிஹ்ந லேகயாநி" - ஸங்கேதக் குறிப்புத் துண்டுகளை; "கடிகாயாம்

Koviloor Digital Library

கும்ப (ஆ)க்யாயாம்'' - கும்பங்கள் என்று சொல்லும் கடிகைகளில்; "நிக்ஷிப்ய" - போட்டு; "தத்தத் வேத பாக பரீக்ஷா காலே" - அந்தந்த வேத பாகத்தில் பரீக்ஷை நடக்கும்போது; "தானி ஆக்ருஷ்ய" - அவற்றை (அந்த slip-களை) எடுத்து; "ஆக்ருஷ்ட லேக்ய சிஹ்நிதம்" - எடுத்த தில் எழுதியிருக்கும் ஸங்கேதப்படி; "வேதம் பட இதி" - "வேதம் ஓது" என்று; "அத்யேதார:" - அத்யாபகர்கள்; "அநுயுஜ்யந்தே" பரீக்ஷை நடத்துகிறார்கள்.

கும்பத்தின் பொருத்தம்

வேத வித்யைக்கு இப்படிக் கும்பத்தை ஸம்பந்தப்படுத்தி யிருப்பதைப் பார்க்கும்போது ஒரு பொருத்தம் தெரிகிறது. சற்று முன் சொன்னாற்போல வேத தர்மம் என்பது ஒரு மஹா வ்ருக்ஷம். அதற்கு வேர்தான் வேத அத்யயனம். இந்த வ்ருக்ஷத்தின் முடிவான பலனாக—"பலம்" என்றால் "பழம்" தான், தெரியுமோல்லியோ?—வேத தர்மத்தின் நிறைவாகப் பழுக்கும் பழமாக இருப்பதுதான் நம்முடைய தேவாலயங் கள். வேத மந்த்ரங்களையேதான் அந்த ஆலயங்களில் கோபுரங்களிலும், விமானங்களிலும், தெய்வ மூர்த்திகளி லும், அப்படியே இறக்கி நிரப்பி வைத்து லோகத்துக் கெல்லாம் க்ஷேமத்தை "ரேடியேட்" பண்ணும்படிச் செய் திருக்கிறது. அப்படி மந்த்ர சக்தியை அவற்றுக்குள் செலுத்த வும் கும்பமேதான் வருகிறது. கும்பம் என்ற கடத்துக்குள் உள்ள மந்த்ர தீர்த்தத்தைக் கும்பாபிஷேகத்தில் கோபுர - விமான கலசங்களின் மேலும் (இந்தக் கலசங்களும் கும்பங் கள்தான்!), தெய்வ விக்ரஹங்களின் மேலும் கொட்டித் தான் கோயிலைக் கோயிலாக்குகிறோம். வேதப் பழமான ஆலயத்தில் வரும் கும்பமேதான் வேராக அத்யயனம் சொல்லித்தரும் வித்யாசாலையில் பரீக்ஷை கடமாக வந்து உட்கார்ந்து கொண்டிருக்கிறது!

கடிகாஸ்தனம் என்ற பெயர் இப்படித்தான் உண்டா யிற்று என்று தெரிந்து கொண்டபோது ரொம்பவும்

Koviloor Digital Library

ஸந்தோஷமும் த்ருப்தியும் ஏற்பட்டது. ரிஸர்ச்சில் பாஸ் பண்ணிவிட்டோமென்ற த்ருப்தி.

தமிழகத்தின் வேதக் கலாசாலைகள்

இந்த ஆராய்ச்சி செய்ததில், தொண்டை மண்டலத்தில் "கடிகை" என்ற பெயரில் இருந்த பெரிய வித்யாசாலைகள் போலவே தமிழ்நாட்டில் மற்ற இடங்களிலும் அந்தப் பெயரில்லாமலே இருந்துள்ள பெரிய வேத பாடசாலைகளைப் பற்றியும் தெரிந்துகொள்ள முடிந்தது.

இப்போது நமக்கு அபிப்ராயம் சோழ நாடு, பாண்டிய நாடு, தொண்டை நாடு ஆகியவற்றைப்போலத் தென்னார்க் காடு—வடார்க்காடு—செங்கல்பட்டுப் பகுதிகள் கொண்ட நடுநாடு வித்யையில் அவ்வளவு சோபித்திருக்காது என்று. சாஸனங்களைப் பார்த்தால் இந்த அபிப்ராயம் எவ்வளவு தப்பு என்று தெரியும்! 'கடிகாஸ்தானம்' என்று பேரில்லாத வேறு பெரிய வித்யாசாலைகள் இந்தப் பகுதியில் இருந்திருக் கின்றன. கடலூருக்கும் பாண்டிச்சேரிக்கும் நடுவேயுள்ள பாஹூர் என்ற இடத்தில் ஐந்து செப்பேடுகளில் தொடர்ச்சி யாக ஒரு சாஸனம் அகப்பட்டு ப்ரஸித்தி பெற்றிருக்கிறது. அதிலே இந்த பாஹூரில் சதுர்தச வித்யைகள் பதினாலுக்கும் பதினாலு டிபார்ட்மென்ட்களோடு ஒரு பெரிய வித்யா ஸ்தானம் இருந்ததாகவும், அதன் அபிவ்ருத்திக்காக ஒன்பதாம் நூற்றுண்டின் பின்பாதியில் விஜயந்ருபதுங்கன் என்றும் அரசனின் மந்த்ரி மூன்று கிராமங்களை தானம் பண்ணினதாகவும் சொல்லியிருக்கிறது.

பாஹூருக்குப் பக்கத்திலேயே திரிபுவனம் என்ற ஊர் இருக்கிறது. (தஞ்சாவூர் ஜில்லா திரிபுவனம் அல்ல.) அங்கேயுள்ள வரதராஜப் பெருமாள் கோவிலின் கிழக்கு, மேற்கு, வடக்குச் சுவர்களில் ராஜாதிராஜன் காலத்திய கல்வெட்டுக்கள் இருக்கின்றன: 1048-ல் பொறித்த கல்வெட்டுக்கள். இதிலிருந்து திரிபுவனத்தில் ஸுமாராகப்

Koviloor Digital Library

பெரிசான வித்யாஸ்தானம் இருந்ததாகவும் அதில் 190 பசங்களும் 12 வாத்யார்களும் இருந்ததாகவும் தெரிகிறது. அறுபது பசங்கள் ரிக்வேதமும், இன்னொரு அறுபது பசங்கள் யஜுர்வேதமும், இருபது பசங்கள் ஸாமவேதமும், பாக்கி ஐம்பது பசங்கள் இதர சாஸ்த்ரங்களும் படித்திருக்கிறார்கள். இவர்களில் எழுபதுபேர் வேதாந்தத்திலும், 'ரூபாவதாரம்' என்ற அபூர்வமான வ்யாகரண சாஸ்த்ரத்திலும் ஸ்பெஷலைஸ் பண்ணியதாகத் தெரிகிறது. இவை தவிர ராமாயண, மஹாபாரதங்களும், மநு தர்ம சாஸ்த்ரமும் கற்பிக்கப்பட்டிருக்கின்றன.

வைகாநஸம் என்று ஒரு வைஷ்ணவ ஆகமம். ஸ்ரீ வைஷ்ணவர்களுக்கு ப்ரதானமாக இருக்கப்பட்ட ஸ்ரீரங்கம், திருப்பதி, காஞ்சீபுரம், மேல்கோட்டை என்ற நாலு க்ஷேத்ரங்களில் திருப்பதியில் மட்டும் வைகாநஸ ஆகமப்படி பூஜை நடக்கிறது. மற்ற மூன்றும் பாஞ்சராத்ர ஆகமத்தை அநுஷ்டிப்பவை. திரிபுவனம் பாடசாலையில் இந்த வைகாநஸமும் ஒரு ஸப்ஜெக்ட்.

இந்தக் கல்வெட்டில் குறிப்பிட்டுச் சொல்லவேண்டிய ஒரு அம்சம், வாத்யார்கள் பசங்கள் ஆகிய இரண்டு பிரிவினருமே கல்வியைத் தவிர வேறெந்தக் காரியத்திலும் ப்ரவேசிக்கக்கூடாது என்று நிபந்தனை விதிக்கப்பட்டிருக்கிறது.

விழுப்புரத்துக்கும் திண்டிவனத்துக்கும் நடுவில் எண்ணாயிரம் என்று ஒரு ஊர். ராஜராஜ சதுர்வேதி மங்கலம் என்று அதற்கு இன்னொரு பெயர் இருப்பதிலிருந்தே நாலுவேதமும் அறிந்த ப்ராம்மணர்களுக்கு அந்த ஊர் ராஜராஜனால் தானமாகக் கொடுக்கப்பட்டிருந்தது என்று தெரிந்துகொள்ளலாம். முதலாம் ராஜேந்த்ர சோழனின் சாஸனம் ஒன்று இருக்கிறது: பதினோராம் நூற்றாண்டுச் சாஸனம். அதிலிருந்து இந்த எண்ணாயிரம் கிராமத்தில் 340 பசங்களும் 14 வாத்யார்களும் கொண்ட

Koviloor Digital Library

ஒரு பெரிய வித்யாஸ்தானம் இருந்ததாகத் தெரிகிறது. இதை இரண்டு பாகமாகப் பிரித்து, 270 பசங்கள் கீழ் வகுப்புக்கள் என்றும் 70 பேர் மேல்படிப்புப் படிப்பவர்கள் என்றும் வைத்திருக்கிறுர்கள். அந்த 270 பேரில் 75 பேர் ரிக்வேதம்; 75 பேர் யஜுர்வேதம்; 20 பேர் ஸாமவேதத்தில் சாந்தோக்ய சாகை; 20 பேர் அதே ஸாமவேதத்தில் தலவகார சாகை; 20 பேர் வாஜஸநேயம் என்னும் சுக்ல யஜுர் வேதம் (முதலில் யஜுர்வேதத்தில் 75 பேர் என்று சொன்னது தமிழ்தேசத்தில் இன்றளவும் மிக அதிகம் பேர் பின்பற்றும் க்ருஷ்ண யஜுஸ்ஸாக இருக்கவேண்டும். யஜுர் வேதத்தில் சுக்ல, க்ருஷ்ண என்று இரண்டு உண்டு); அதர்வ வேதம் படித்தவர்கள் 10 பேர். வேத அங்கங்களில் ஒன்றுன போதாயன க்ருஹ்ய கல்பம் 10 பேர் படித்திருக்கிறுர்கள்; முன்னேயே சொன்ன ரூபாவதாரம் 40 பேர்.

அதர்வவேதமும் அநுஷ்டானத்தில்

தற்காலத்தில், ஏன் பல தலைமுறைகளுக்கு முன்பிருந்தே, அநுஷ்டானம் அற்றுப் போய்விட்ட அதர்வவேதத்தைப் பதினேராம் நூற்றுண்டில் இந்தத் தமிழ்நாட்டுப் பாடசாலையில் பத்துப்பேர் அத்யயனம் செய்திருக்கிறுர்கள். கடிகைக் கதையை நான் ஆரம்பித்தபோதே 'கல்பதரு'வில் அதர்வவேத வித்யார்த்திகளைப் பற்றியிருப்பதைத்தானே சொன்னேன்? இப்படியேதான் பாஹூரிலும்கூட அதர்வ வேத அத்யயனம் நடந்திருக்கவேண்டும். ஏனென்றுல், நமது மதத்துக்கு ஆதாரமான பதினாலு வித்யாஸ்தானங்களில் ஒவ்வொன்றுக்கும் ஒரு டிபார்ட்மெண்ட் அந்த வித்யாசாலையில் இருந்ததென்பதால் இந்தப் பதினாலில் ஒன்றுன அதர்வ வேதமும் அங்கே போதிக்கப்பட்டுத்தான் இருக்கவேண்டும். காசாகுடி சாஸனத்திலிருந்தும் அதர்வ வேத அத்யயனம் அங்கே இருந்துவந்ததாகத் தெரிகிறது. எதனுலோ பிற்காலத்தில் அந்த வேதக்காரர்களும், அதைப் படிப்பவர்களும் மறைந்துபோயிருக்கிறுர்கள்.

Koviloor Digital Library

பல சாஸ்த்ரங்களுக்கு ஆதரவு

மேல் க்ளாஸில் இருந்த 70 பேரில் 25 பேர் வ்யாகரணமும், 35பேர் பூர்வ மீமாம்ஸையிலேயே குமாரில பட்டரின் ஸித்தாந்தத்துக்குச் சற்று வித்யாஸமாக உள்ள ப்ரபாகரரின் ப்ராபாகர ஸித்தாந்தமும், 10 பேர் உத்தர மீமாம்ஸை எனப்படும் வேதாந்தமும் படித்திருக்கிறார்கள்.

(கும்பகோணம் நாகேச்வர ஸ்வாமி கோவிலில்கூட ப்ராபாகர மீமாம்ஸைக்கு மான்யம் விட்டதைச் சொல்லும் ஆதித்ய கரிகாலனின் கல்வெட்டு இருப்பது ஞாபகம் வருகிறது.)

இன்னொரு சாஸனத்தின்படி, இதே எண்ணாயிரத்தில் பண்டிதர்களுக்கும், அப்படியில்லாதவர்களான ப்ராம்மணர்களுக்கும் ஸ்ரீவைஷ்ணவர்களுக்கும் நல்ல போஜனம் பண்ணுவிக்க மான்யம் விட்டிருந்ததாகத் தெரிகிறது. இப்படி தினமும் 506 ப்ராம்மணர்களுக்கு ஸந்தர்ப்பணை செய்யப்பட்டிருக்கிறது.

காஞ்சீபுரத்துக்குப் பன்னிரண்டு மைலில் பழைய சீவரம் என்ற ஊர் இருக்கிறது. அதற்குக் கிட்டே பாலாற்றங்கரையில் திருமுக்கூடல் என்ற இடத்தில் உள்ள பெருமாள் கோயிலில் வீரராஜேந்திர தேவனின் 1067 ஆம் வருஷத்திய சாஸனம் இருக்கிறது. அதிலிருந்து என்ன தெரிகிறதென்றால் இந்தக் கோயிலின் வருமானத்திலிருந்து ஒரு வித்யாசாலையும் ஒரு வைத்யசாலையும் நடத்தப்பட்டிருக்கின்றன. இந்த வித்யாசாலையில் 10 பேர் ரிக்வேதம், 10 பேர் யஜுர்வேதம், 20 பேர் வ்யாகரணம், 10 பேர் பாஞ்சராத்ரம் படித்திருக்கிறார்கள். வைகாநஸத்தைவிடப் பரவலாக இருக்கும் ஸ்ரீ வைஷ்ணவ ஆகமம்தான் பாஞ்சராத்ரம் என்று சொன்னது நினைவிருக்கிறதா? அந்த வைகாநஸ ப்ராம்மணர்களில் ஐந்து பேர், இதேபோல் சிவன் கோவிலில் பூஜை செய்பவர்களான (சிவ யோகிகள் என்றும் இவர்களைச்

Koviloor Digital Library

சில இடங்களில் சொல்லியிருக்கிறது) சிவ ப்ராம்மணர்கள் மூன்று பேர் ஆகியோரும் இந்த வித்யாசாலையில் இருந்திருக்கிறார்கள்.

வேத - ஆகமங்கள்

இதிலே கவனிக்கவேண்டிய ஒரு விஷயம் என்னவென்றால், இந்த சாஸனங்களில் ப்ராம்மணர்கள் என்று தனியாக மற்ற வேத சாஸ்த்ரக்காரர்களைச் சொல்லிவிட்டு, ஆலய பூஜையில் ஸம்பந்தப்பட்ட பாஞ்சராத்ரிகள், வைகாநஸர்கள், சிவாகமக்காரர்கள் ஆகியோரை அவர்களோடு சேர்க்காமல் பிரித்துச் சொல்லியிருப்பதாகும். வேதங்களை மாத்திரம் அநுஸரிப்பவர்கள், அவற்றோடு முக்யமாக வழிபாட்டு முறைகளான ஆகம தந்த்ரங்களையும் அநுஸரிப்பவர்கள் என்பவர்களை இப்படி ஒருத்தருக்கொருத்தர் வித்யாஸப்படுத்தியிருக்கிறது. ஒரேயடியாக வித்யாஸப்படுத்திப் பிரித்து வைக்கவுமில்லை—ஒரே வித்யாசாலையிலேயே வேதத்தையும் சொல்லிக்கொடுத்து, ஆகமத்தையும் சொல்லிக்கொடுத்திருக்கிறார்களே! ஒரே ஸநாதன தர்மத்தின் இரண்டு கிளைகளாகவே வேத - ஆகமங்களை மதித்து வளர்த்து வந்திருக்கிறார்களென்று தெரிகிறது.

எண்ணாயிரத்துக்குக் கிட்டத்திலேயே உள்ள பணையவரம் என்ற இடத்தைச் சேர்ந்த ஒரு கல்வெட்டிலிருந்தும் இப்படியே ப்ராம்மணர், சிவயோகி என்பதாக வைதிகர்களையும் ஆகம மார்க்கக்காரர்களை வித்யாஸப்படுத்தி, முன்னவர்களில் ஐம்பது பேருக்கும் பின்னவரில் பத்துப் பேருக்கும் அங்கே நித்யப்படி நன்றாக போஜனம் பண்ணுவித்தது தெரிகிறது. (மலையாள தேசத்தில் இன்றைக்கும் உத்ஸவ காலங்களில் 'அக்ரம்' என்ற பேரில் எல்லா ப்ராம்மணர்களுக்கும் போஜனம் பண்ணுவிப்பதுபோல் அப்போது தமிழ்நாட்டிலும் நடந்திருக்க வேண்டும் என்று எனக்கு ஒரு ஊஹம்.)

Koviloor Digital Library

ஸமரச அம்சம்

பேதத்திலேயே ஒற்றுமை (Unity in diversity) தான் நம் மதத்தின் முக்ய அம்சம் என்பது அநேக சாஸனங்களிலிருந்து தெரிகிறது. முன்னேயே காட்டினமாதிரி ஒரே கூரையின் கீழேயேதான் இப்படி வேதம், ஆகமம் இரண்டும் அப்யஸிக்கப்பட்டிருக்கின்றன. அது மாத்திரமில்லை, வைஷ்ணவத்தில் பாஞ்சராத்ரம், வைகாநஸம் என்று உள்ள இரண்டு ஆகமங்களில் வைகாநஸ ஆகமத்தைப் பல இடங்களில் பாஞ்சராத்ரக் கோயில்களிலேயே போதித்திருக்கிறார்கள். இதையும்விட ஸந்தோஷப்படும்படியாக, சில பெருமாள் கோயில்களில் சைவ ஆகம போதனை நடந்திருக்கிறது!

ஆலயமும் வித்யையும்

கோயில்களில் போதனை என்று சொன்னேன். இதைக் கொஞ்சம் எக்ஸ்ப்ளெய்ன் பண்ணவேண்டும்!

ஏறக்குறைய ஆயிரம் வருஷத்துக்கு முந்தி பல்லவ, பாண்டியர்களுக்கு மேலாகப் பிற்காலச் சோழர்கள் எனப் படுபவர்களின் ஆதிக்கம் பரவிற்று. விஜயாலயன் என்பவன் இப்படி மறுபடி சோழர்களுக்குப் புது எழுச்சி தந்த பிற்பாடுதான் பராந்தகன், ராஜராஜன், ராஜேந்த்ரன் முதலானோர் அவன் வம்சத்திலே வந்து சோழ ஸாம்ராஜ்யத்தைப் பரப்பினார்கள். ஸாம்ராஜ்யம் என்று நீள அகலங்களில் அது பெருகியதைவிட அதிலே கலாசாரம் அதி உன்னதமாகப் பரவியதுதான் அதிகப் பெருமை. பல்லவர் காலத்தில் சிறிய அளவிலும், நடுத்தர அளவிலும் மட்டுமே கட்டப்பட்ட ஆலயங்கள் பெரிய அளவில் விஸ்தாரமாக்கப் பட்டது இந்தப் பீரியடில்தான். இதே ஸமயத்தில் கல்வி - கேள்வி, ஸாஹித்யம், ஸங்கீதம், நர்த்தனம் எல்லாமும் வ்ருத்தியாயின. இதிலே அழகு என்னவென்றால் ஆலயம் பாட்டுக்கு ஒரு பக்கத்தில் வ்ருத்தியாச்சு, கலாசாரம் இன்னொரு பக்கத்தில் அதுபாட்டுக்கு வ்ருத்தியாச்சு, என்றில்

Koviloor Digital Library

லாமல் ஆண்டவனை மையமாக வைத்தே—ஸ்தூலமாக ஆலயத்தைக் கேந்திரமாக வைத்தே—கல்வி, கலாசாரங் களும் வளர்ந்தன.

நேராகக் கோயிலுக்குள்ளேயே கல்விக்கூடம் அமைப் பது என்று இப்போது ஏற்பட்டது. "வியாகரணதான மண்டபம்" எ று அநேக சிவாலயங்களில் இருப்பவை இலக்கண வகுப்பு நடத்துவதற்காக ஏற்பட்டவைதான். இப்போது கோயில் பெரிய பரப்பளவில் கட்டப்பட்டதால் அதற்குள்ளேயே காலேஜ் ஸ்தானத்திலிருந்த உயர்கல்வி நிலையங்களை அமைக்க வசதி ஏற்பட்டது. சிதம்பரம், தஞ்சாவூர் முதலான கோயில்களில் இப்போது பார்த் தாலும் தெரியும்—அவற்றை வெளி மதிலை ஒட்டினாற்போல கோயிலுக்கு உட்புறமாகவே இரட்டை மாடிக் கட்டுமானங் கள் நிறைய இருக்கும். இவை பத்தாம் நூற்றாண்டிலிருந்து பன்னிரண்டாம் நூற்றாண்டுவரையில் சோழ ராஜாக்கள் "திருச்சுற்று மாளிகை" என்ற பெயரில் நிர்மாணித்தவை. இதிலேதான் வித்யாசாலைகள் நடந்தன. அதோடு லைப்ரரி மாதிரியான "ஸரஸ்வதி பாண்டாரம்" என்பவையும் திருச்சுற்று மாளிகையில் இடம் பெற்றன. அவற்றில் நூல் சுவடிகளை எல்லாம் சேகரித்து, ப்ரதிகள் எடுத்து, பத்ரமாகப் பாதுகாத்து, வித்யார்த்திகளுக்கும் ஆசிரியர் களுக்கும் கொடுத்து உபகரித்து வந்தார்கள். பாண்டாரம் என்றால் 'ஸ்டோர்' என்பதுபோல் பண்டங்களைச் சேர்த்து வைக்கிற இடம். தன பாண்டாரம், தான்ய பாண்டாரம் என்றே அக்கால ராஜாங்கத்தில் பதவிகள் உண்டு. கஜானா வுக்குப் பொறுப்பானவர் தன பாண்டாரம். உணவுப் பண்ட ஸப்ளைக்கு (இக்காலம் மாதிரி தினம் ஒரு புகார் கொடுக்க வேண்டியில்லாமல் நடந்த ஸப்ளை!) பொறுப்பேற்றவர் தான்ய பாண்டாரம். ஸாக்ஷாத் வித்யைக்கு அதிதேவதை யான ஸரஸ்வதிக்கு உரிய பண்டங்கள் நிறைந்த ஸ்டோர் ஒன்று உண்டு என்றால், அது நூல் நிலையமாக இன்றி வேறென்னவாக இருக்கமுடியும்? அதனால்தான் "ஸரஸ்வதி

Koviloor Digital Library

பாண்டாரம்'' என்ற அழகான, தெய்வ ஸம்பந்தமுள்ள பெயர்!

கோயிலுக்குள் நடந்த வித்யாசாலைகள் என்பதால் அவற்றில் ஸமயக் கல்வி மட்டும்தான் போதிக்கப்பட்டதாக நினைக்கவேண்டாம். 'க்ராமரு'க்கு என்றே தனி மண்டபம் கோயிலில் இருந்தது என்று சற்றுமுன் சொன்னேனே! ஸெக்யுலர் (உலகியல் சாஸ்த்ரங்கள் குறித்த) படிப்பு என்றாலும் அதையும்கூட ஈச்வரனையும் ஸமயாசாரங்களையும் மறந்து ப்ரயோஜனப் படுத்துவதற்கில்லையல்லவா? இந்த ப்ரக்ஞையை நன்றாக உண்டாக்குகிற ரீதியில்தான் 'ஜெனரல் எஜுகேஷ'னுக்கு (பொதுக் கல்விக்கு) ஏற்பட்ட கலாசாலைகள் ஆலய எல்லைக்குள்ளேயே நடத்தப்பட்டன. அவற்றில் ஆயுர்வேதம் முதலானவையும் கற்பிக்கப்பட்டதற்குச் சான்றுகள் இருக்கின்றன—அக்கால மெடிகல் காலேஜ்!

பெருமையும் சிறுமையும்

இத்தனை கதையும் நம் பூர்விகர்களின் மிக உயர்ந்த கல்விப் பெருமையைக் காட்டுகிறது. இந்தக் கதையில் எத்தனையோ விஷயங்கள் நான் தேடிப் பார்த்து, ஆராய்ச்சி செய்து, ஒன்றுக்கொன்று இசைத்து முடிவுகளுக்கு வர முடிந்திருக்கிறது. புஸ்தகம் படித்தும், சாஸனங்கள் பார்த்தும், வேறு தினுஸிலேயும் ஸமாசாரங்கள் தெரிந்தன. 'நமக்கா தெரிந்தது?' என்று எனக்கே மலைப்புத் தட்டுகிற அவ்வளவு ஸமாசாரங்கள்!

எல்லோராவில் பெரிய குன்றுகளை அப்படியே போட்டுக் குடைந்து ஆச்சர்யப்படும்படி சிற்ப வேலைப்பாடுகளோடு கோவில்கள் கட்டியிருப்பது எல்லாருக்கும் தெரிந்திருக்கும். அவற்றுக்குள்ளும் ரொம்பவும் சிறப்பு வாய்ந்தது கைலாஸ நாதர் ஆலயம். ''என்னமாக இப்படிக் கட்டியிருக்கிறார்கள்?'' என்று பார்க்கிறவர்கள் ப்ரமிக்கிறார்கள். பார்க்கிறவர் மட்டுமில்லை. இத்தனை வேலைக்கும் ஒரு தலைமைச் சிற்பி இருந்திருக்கிறானே, அவனுக்கே இந்தக் கைலாஸக்

Koviloor Digital Library

கோயிலைக் கட்டின பிற்பாடு அதேமாதிரி இன்னும் கோயில்கள் கட்டவேண்டுமென்று ஆரம்பித்துப் பிரயாஸைப்பட்ட போது இப்படி ப்ரமிப்புத் தட்டிற்று. எத்தனை ப்ரயாஸை எடுத்துக்கொண்டு இந்தத் தரத்துக்கு ஈடாக அவனால் இன்னொன்று கட்ட முடியவில்லை. அப்போதுதான் அவனுக்கே சட்டென்று ஒரு ப்ரமிப்பு ஏற்பட்டு "என்ன ஆச்சர்யம்! இப்படி ஒண்ணு என்னாலே எப்படிப் பண்ண முடிஞ்சுது? நான்தான் பண்ணினேனா, எனக்குள்ளே எதுவோ பூந்துண்டு பண்ணுவிச்சுதா?" என்று சொன்னானாம்.

இப்படி அந்தக் கைலாஸநாதர் கோயில் சிற்பி அதே மாதிரி இன்னொன்று நிர்மாணிக்க முடியாமல் போய், அப்புறம், அதை மட்டும் தானா பண்ணினேனென்று ஆச்சர்யப்பட்ட விஷயம் ச்லோக ரூபத்திலேயே ஒரு செப்பேட்டில் இருக்கிறது. (கி. பி.) எட்டாம் நூற்றாண்டில் அந்தக் கோயிலைக் கட்டிய ராஷ்ட்ரகூட அரசனான க்ருஷ்ண ராஜனைப் பற்றியுள்ள "பரோடா காப்பர் ப்ளேட்"களிலொன்றில்* அந்த ச்லோகம் இருக்கிறது:

பூயஸ்-ததாவித-க்ருதௌ வ்யவஸாய ஹாநே:
ஏதந்-மயா கதம் அஹோ க்ருதம் இத்—யகஸ்மாத் |
கர்த்தாமி யஸ்ய கலு விஸ்மயம் ஆப சில்பீ

அந்த சில்பி மாதிரிதான் எனக்கும் நாம்தானா இத்தனை ஆராய்ச்சி பண்ணி கடிகா ஸ்தான ஸமாசாரங்கள் கண்டு பிடித்தது என்று இருக்கிறது.

இப்படி நான் பெருமை அடித்துக்கொள்வதிலேயே சிறுமையும் தெரிகிறது. நம் தேசத்தில் கி. மு. ஐந்தாம் நூற்றாண்டிலிருந்து கி. பி. பதினைந்தாம் நூற்றாண்டு வரையில்கூட—அதாவது இரண்டாயிர வருஷ காலம்—விஸ்தாரமாக இருந்து வந்திருக்கிற வேத வித்யா ஸ்தானங்கள் பற்றி இந்த மதத்துக்கு குரு என்றிருக்கிற எனக்கு

* The Indian Antiquary Vol. XII p.p. 228-230.

Koviloor Digital Library

இத்தனை வருஷம் தெரியாத சிறுமைதான்! அதுமட்டுமில்லாமல் வித்வத் ஸமூஹத்தில் நான் இதைப் பற்றிக் கேட்டு யாருக்கும் எதுவும் சொல்லத் தெரியாதது நமக்கு நம்முடைய புராதன கலாசார விஷயத்தில் உள்ள ஞானக் குறைவையும் அச்ரத்தையையும் காட்டுகிறது. அந்த அளவுக்கு நம்முடைய ஸ்வதேச சாஸ்த்ரக் கல்வி கீழே போயிருக்கிறது! பதினைந்தாம் நூற்றுண்டு வரை கொடி கட்டிப் பறந்த கடிகாஸ்தானங்களும் அந்தப் பெயரில்லாமலே நடந்துவந்த வேத சாஸ்த்ர வித்யா ஸ்தானங்களும் அதற்கு அப்புறம் இந்த ஐந்து நூற்றுண்டுகளில் இருந்த இடம் தெரியாமல் பெயரே மறந்து, அர்த்தம் புரிந்து கொள்ள முடியாத அளவுக்கு நசித்துப் போயிருக்கின்றன என்றுல் இது நமக்கு ரொம்பவும் குறைவு.

போக்குவரத்து வசதி இல்லாத காலத்தில் ஆயிரம் இரண்டாயிரம் மைல் ப்ரயாணம் பண்ணி தேசத்தின் நாலு பாக வித்யார்த்திகளும் ஆயிரம் இரண்டாயிரம் பேர்கூடி இரண்டாயிர வருஷ காலம் வளர்த்து வந்திருக்கிற வித்யா ஸ்தானங்களைப்போல, எத்தனையோ வசதி படைத்த நம் காலத்தில்—வேண்டாததற்கெல்லாம் வெளிநாட்டு ட்ரிப், ட்ரெய்னிங் என்று போய்க்கொண்டிருக்கிற இந்தக் காலத்தில்—ஒன்றுகூட இல்லை என்றுல் தலைகுனிவாகத் தானிருக்கிறது. தொண்ணூறு தொண்ணூற்றைந்து பேர் வேண்டுமானுலும் நவீன ஸயன்ஸ்கள், பிஸினெஸ் கோர்ஸ்கள் என்றிப்படிப் போனுலும் போகட்டும். ஐந்து பெர்ஸென்டாவது நமக்கு என்றே ஏற்பட்ட எத்தனையோ ஸ்வதேச சாஸ்த்ரங்கள் ஆத்மிகமாகவும், ஸமய ஸித்தாந்தமாகவும், வ்யாகரணமாகவும் (grammar), தர்க்கமாகவும் (logic), வைத்ய விஷயமாகவும், இன்னும் இப்போதுள்ள ஃபிஸிக்ஸ், கெமிஸ்ட்ரி, பயாலஜி, அஸ்ட்ரானமி, எஞ்ஜினீயரிங் ஸம்பந்தமாகவும்கூட இருக்கின்றனவே, இவற்றில் எதையாவது கற்றறிந்து ஆராய்வதில் ஈடுபடக் கூடாதா என்று இருக்கிறது.

Koviloor Digital Library

ஸ்வதேச வித்யைகளுக்கு "திட்டம்"

திட்டம் திட்டம் என்று பொருளாதாரத்துக்கே போட்டு ஆயிரம் கோடிக் கணக்கில் செலவழிக்கிற அரசாங்கம் கலாசாரம், கலாசாரம் என்று சொல்வதோடு நிற்காமல் அதில் நூற்றில் ஒரு பங்கு இதற்காகத் திட்டம் போட்டால் கூடப் போதும், இம்மாதிரி ஸ்வதேசிய பூர்வ சாஸ்த்ரங் களுக்காக விச்வ வித்யாலயங்கள் (யூனிவர்ஸிடிகள்) வைத்து, ஸ்காலர்ஷிப் ஸ்டைபென்ட் எல்லாம் கொடுத்து' படிப்பு முடிந்த பின்னும், ரிஸர்ச்சுக்காகவும், ஆயுஸ் பர்யந்தம் இந்தப் படிப்பாளிகளுக்கு 'க்ரான்ட்' ஆகவும் பொருளுதவி செய்து நம்முடைய பெரிய ட்ரெடிஷனைப் போஷித்துவிட முடியும்.

ஆனால் இது சாஸ்த்ரோக்தமாக நடந்தாலே உண்மை யான ப்ரயோஜனத்தைக் கொடுக்கும் என்பதைப் பார்க்கும் போது ராஜாங்கம் இந்தப் பொறுப்பை எடுத்துக் கொள்ளா மலிருப்பதே ஒரு விதத்தில் தேவலை என்று நினைக்கும்படியாக வும் இருக்கிறது. "சீர்திருத்தக் கொள்கை" என்று சொல்லப் படுவதையே எல்லா அரசியல் கட்சிகளும் பின்பற்றுகிற சூழ்நிலையில் சாஸ்த்ரோக்தமான விதி நிஷேதங்களின்படி ராஜாங்க ஆதரவில் எதுவாவது நடக்க முடியுமா என்றே இருக்கிறது. ஆனபடியால் ராஜாங்கத்தை எதிர்பார்த்துக் கொண்டோ, குறை சொல்லிக்கொண்டோ இல்லாமல், சாஸ்த்ராபிமானமுள்ள பொதுஜனங்களேதான் ஆனதைச் செய்வதில் நன்றாக ஈடுபடவேண்டும்.

அதற்குரிய முறைப்படி

ஏனென்றால் நம்முடைய பண்டைய கலைகளுக்கும் சாஸ்த்ரங்களுக்கும் புதிதாக வித்யாசாலைகள் அமைப்பதில் ஜீவநாடியான அம்சமே, இவை மற்ற நாகரிக ஸ்கூல், காலேஜ் மாதிரியில்லாமல், அவற்றுக்கே உரிய பழைய முறைப்படி கற்றுக்கொடுக்கப்பட வேண்டுமென்பதுதான்.

Koviloor Digital Library

ஸப்ஜெக்ட் பழைய சாஸ்த்ரமென்றால், அதைப் படிப்பிக்கும் முறையும் பழசாகவேதான் இருக்கவேண்டும். நம்முடைய கோவிலுக்கோ, மடத்துக்கோ வருவதென்றால் வெள்ளைக் காரிகூடப் புடவை கட்டிக்கொண்டு வருகிறாளோ இல்லையோ? அப்படி அததற்கும் ஏற்பட்ட வழிகளையும் வழக்கங்களையும் பின்பற்றினால்தான் அததற்கு உயிர்க்களை இருக்கும். அமெரிக்காவில் கட்டின கோயில் என்றால்கூட அங்கே பிஸ்கெட் நைவேத்யம் செய்யாமல் புளியோதரை யைத்தானே கொண்டுவர வேண்டியிருக்கிறது? பரத நாட்யம் ஆடுகிறதென்றால் அதற்குக் கோவில் சிற்பத்தில் ஆயிரம் வருஷம் முன்பு காட்டியிருக்கிற ட்ரெஸ்ஸைப் பார்த்துத்தானே இன்றைக்கும் அநுஸரிக்கிறார்கள்? அதே போல ஹிந்து வித்யா - சாஸ்திரங்களுக்கென்று வித்யாசாலை வைத்தால் அதை இப்போதுள்ள யூனிவர்ஸிடிகள் மாதிரிப் பெரிய பெரிய கட்டிடங்களில் இங்கிலீஷ் ட்ரெஸ் போட்டுக் கொண்டு கற்றுக்கொடுப்பதென்றில்லாமல், பழைய ரீதியி லேயே முடிந்தமட்டும் செய்யவேண்டும்.

ஆதியில் குருகுலங்கள் வனத்திலே ரிஷிகளின் பர்ணசாலைகளில் இருந்தாற்போல் இப்போது காட்டுக்குள் கலாசாலை வைப்பதென்றால் முடியாதுதான். அப்புறம் நகரங்களிலேயே பெரிய கடிகாஸ்தானங்கள் ஏற்பட்டன. ஆனால் இப்படி டவுன்களில் நட்டநடுவில் தற்போது நான் சொல்கிற வித்யாசாலைகளை வைப்பதற்கில்லை. ஏனென்றால், கடிகா ஸ்தானங்கள் நடந்த அந்த இடைக்காலத்தில்கூட டவுன்-லைஃப் என்பது இப்போதுபோல் இத்தனை அநாசார மும், லௌகிகமும் தலைவிரித்தாடுவதாக இல்லை.

'டைவர்ஷ'னுக்கு இடமேயில்லாமல், பரிபூர்ண ப்ரம்ம சர்ய அநுஷ்டானத்துக்கு எதிரான சபலங்கள் கொஞ்சமும் இல்லாமல் படிப்பே குறி என்று ஒருமுகப்படுத்தித்தான் பண்டைய குருகுலங்கள் வனங்களிலேயே நடந்தன. (அப்போது நாடு நகரம் குறைச்சல், காடுதான் அதிகம் என்பதையும் சொல்ல வேண்டும்,) கட்டிடத்துக்குள்ளே

Koviloor Digital Library

கட்டிப்போட்டிருக்காமல் இப்படி இயற்கையோடு இயற்கையாகப் பச்சை மரங்களும் ஆற்றுப் பிரவாஹமும் சூழ்ந்த இடங்களில் மான்களோடு விளையாடிக்கொண்டு, மாடு மேய்த்துக்கொண்டு அந்தப் பசங்கள் வாழ்ந்ததும், பரந்த ஆகாசமே கூரையாக உட்கார்ந்துகொண்டு காயத்ரி அநுஸந்தானம் பண்ணினதுமே அவர்களை இப்போதுபோல் செயற்கையான, 'மெகானிக'லான போக்குகளில் போக விடாமல் நல்ல ஜீவசக்தியுடன் ஒவ்வொரு நிமிஷத்தையும் நிஜமாக வாழ்ந்து ஸந்தோஷிக்கும்படிச் செய்தது. இதை ரொம்பவும் ச்லாகித்தே டாகூர் ஒரே தோப்பும் துறவுமான இடத்தில் Forest University என்பதாகத் தம்முடைய விச்வபாரதி ஸர்வகலாசாலையை அமைத்தார் என்று சொன்னது நினைவிருக்கலாம். 'யூனிவர்ஸிடி' என்று சொல்லத் தக்க விதத்தில் ஒரே பெரிய வித்யாசாலை அதிகம் ஏற்படாத ஆதிகாலத்தில்கூட பல ரிஷிகள் பர்ணசாலைகள் அமைத்துக் கொண்டிருந்த வனப்பிரதேசங்களில் ஒவ்வொரு பர்ணசாலையும் ஒரு குருகுலமாக இருந்ததால் இயற்கை அழகு நிறைந்த விஸ்தாரமான பகுதிகள் அப்படியே ஒட்டுமொத்தமாக வித்யாபூமியாக விளங்கின.

தற்போது டவுன்-லைஃப் இருக்கும் சீர்கேடான ஸ்திதியில் எவ்வளவுக்கெவ்வளவு ஊருக்கு வெளியே இருக்க முடியுமோ அப்படி, கூடியமட்டும் இயற்கையான சூழ்நிலை பாதிக்கப்படாத விதத்தில், பெரிய கட்டுமானம், நாகரிக உடுப்பு ஆகியன இல்லாமல் நம் ஸ்வதேசிய சாஸ்த்ரங்களுக்கும், கலைகளுக்கும் வித்யாசாலைகள் ஒருசிலவேனும் அமைக்கவேண்டும்.

கிராமப் புள்ளிவிவரங்கள்

நாள் ஊர் ஊராகச் சுற்றிக்கொண்டிருப்பதில் பஞ்சாயத்து போர்டு (இப்போது என்னவோ தமிழ்ப் பெயர் சொல்கிறார்கள்) உள்ள கிராமங்களின் எல்லையில் ஒரு போர்ட் போட்டு வைத்திருப்பதைப் பார்த்திருக்கிறேன். (பஞ்சாயத்து "போர்ட்" இல்லை!) அதில் இந்த கிராமத்தில்

Koviloor Digital Library

இவ்வளவு 'பாபுலேஷன்', இத்தனை பரப்பு, இன்ன பயிர் விளைகிறது என்பது முதலான விவரங்கள் போட்டிருக்கிறது. அதிலே படித்தவர் எவ்வளவு, படிக்காதவர் எவ்வளவு என்ற விவரமும் இருக்கிறது. அது மாத்ரமில்லை. இங்கிலாண்ட், அமெரிக்கா, ஜப்பான் முதலிய நாடுகளில் படிப்பாளிகள் எத்தனை சதவிகிதம் என்பதைக் காட்டி, நம் நாட்டில் அதையெல்லாம்விட எவ்வளவு குறைச்சல் சதவிகிதமே படிப்பாளிகள் இருக்கிறார்கள் என்றும் போட்டிருக்கிறது. அந்த தேசங்களைப்போல நம் தேசத்தையும் படிப்பிலே முன்னுக்குக் கொண்டுவர வேண்டும் என்று ஆட்சியிலிருப்பவர்களுக்கு எண்ணமிருப்பதாலேயே, "இப்படி எழுதி வைத்தாலாவது ஜனங்கள் மனஸில் தைத்து, அவர்கள் பசங்களை ஸ்கூலுக்கு அனுப்பாதவர்களிடம் எடுத்துச் சொல்லி ப்ரசாரம் பண்ணிக் கல்வியைப் பரப்பட்டும்" என்ற உத்தேசத்தில்தான் இதுபோலச் செய்திருக்கிறார்கள்.

தேவைப்படும் ஒரு புள்ளிவிவரம்

எனக்குத் தோன்றுகிறது—யோக்யர்களாக எத்தனை சதவிகிதம் இருக்கிறார்கள், அப்படியில்லாமல் எத்தனை இருக்கிறார்கள் என்று எப்படியாவது கண்டுபிடித்து அதை போர்டில் போட்டால் எப்படியிருக்கும் என்று! ஒவ்வொரு ஊரிலும் தேசத்திலும் படித்தவர் பெர்ஸென்டேஜையும், போட்டு இப்படி அதற்கு நேரேயே யோக்யர்கள் பெர்ஸென்டேஜையும் போட்டால் என்ன தெரியும்? படித்தவர்கள் நிறைய இருக்கிற இடத்தில்தான் யோக்யர்கள் நிறைய இருக்கிறார்களென்று போர்ட் காட்டுமா?

"யோக்யர்கள் என்று கண்டுபிடிப்பது எப்படி ஸாத்யம்? இது என்ன நடைமுறைக்கு வரமுடியாத யோசனை?" என்று கேட்டால் அது ந்யாயம்தான்.

அடுத்த பக்ஷமாக ஒன்று தோன்றுகிறது. யோக்யர்—அயோக்யர் யார் யார் என்று லிஸ்ட் எடுக்க முடியா

Koviloor Digital Library

விட்டாலும் இன்னொரு லிஸ்ட் ஸுலபமாகத் தயாரிக்கலாம். போலீஸ் டிபார்ட்மென்ட்காரர்களும் ஸிவில் கோர்ட்காரர்களும் ஒவ்வொரு ஊரிலும் இத்தனை ஜேபடிக்காரர்கள் இருக்கிறார்கள்; வரி தராமல் இத்தனைபேர், ஸொத்துக்களை மோசம் செய்தவர் இத்தனைபேர், பெரிய திருட்டுக்களில், ஏமாற்றுப் புரட்டுக்களில் இத்தனைபேர் பிடிபட்டிருக்கிறார்கள்; இன்னும் வ்யபசாரம், கொலை முதலான குற்றங்கள் செய்தவர்கள், அப்பட்டமாகவே போய்த் துப்பாக்கியைக் காட்டிக் கொள்ளையடிப்பவர்கள் ஆகியோர் இவ்வளவு பேர் இருக்கிறார்கள் என்றெல்லாம் புள்ளி விவரம் வைத்திருப்பார்கள். ஆள் இத்தனைபேர் என்று காட்டமுடியாவிட்டாலும், இந்த இனங்களில் இத்தனை கேஸ்கள் இருக்கின்றன என்று காட்டமுடியும். ஆகவே இந்த போர்ட்களில் படித்தவர் இத்தனைபேர் என்பதற்கு நேரேயே குற்றவாளிகள் இத்தனை பேர் என்று—அது முடியாததால் குற்றங்கள் இத்தனை நடந்திருக்கின்றன என்று—போட்டு வைத்தால் நமக்கு ப்ரயோஜனமான உண்மைகள் தெரியுமென்று நினைக்கிறேன்.

படிப்பும் குற்றமும்

அதாவது என்ன தெரியுமென்றால், தற்போது பொதுவாக லோகம் முழுக்கப் படிப்புமுறை இருக்கும் நிலையில் எங்கே படிப்பு ஜாஸ்தியோ அந்த ஊரில், அந்த நாட்டில் தான் குற்றமும் ஜாஸ்தி நடக்கிறதென்று தெரியும். ஹைஸ்கூல், டிகிரி தரும் காலேஜ், டாக்டரேட் தருகிற உயர்ந்த ஸென்டர்கள் என்று ஒன்றுக்குமேல் ஒன்றாக வளர்ந்துகொண்டிருக்கிற நாடுகளில்தான் குற்றங்களும் வளர்ந்துகொண்டிருப்பது தெரியும். எழுத்தறிவில்லாத காட்டுக்குடிகளும் மலைவாஸிகளும் உள்ள இடங்களில்தான் போலீஸுக்கு ரொம்பவும் வேலை குறைச்சல், வக்கீல்களுக்குத் தேவை இல்லை என்று தெரியும்.

படிப்பு ஜாஸ்தியாக ஆக நூதன நூதனமாக ஏமாற்று வித்தைகள் செய்கிற ஸாமர்த்யங்களும் வளர்கின்றன.

Koviloor Digital Library

தொழில்கள் நடத்துகிறவர்களும் அரசியல்வாதிகளும் செய்கிற பேற்று மாற்று, எங்கே போனாலும் ரஹஸ்யத்தில் நடக்கும் லஞ்சம் முதலான அநேகக் குற்றங்கள் இந்த ஸாமர்த்யத்தில் கோர்ட்வரை வராமலே போகின்றன. அதனால் போர்ட் போட்டாலும்கூட அதில் கால்வாசிக் குற்றங்களைத்தான் காட்டமுடியும்! முக்கால்வாசிக் குற்றங்கள் நீதி ஸ்தலத்துக்கும், போலீஸுக்கும் வராமலே போயிருக்கும்! படிப்பினால் புத்தி ஸாமர்த்யம் அதிகரிப்பதில் ஸிவில் குற்றங்கள் மாத்ரம்தான் அதிகரித்திருக்கின்றன என்றில்லை. பெரிதான பாங்குக் கொள்ளை, ஒரு மந்த்ரி ஸபையையே சுட்டுக் கொன்றுவிடுவது, கோஷ்டி கோஷ்டியாகத் தகாத கார்யத்துக்காகப் பெண்களைக் கடத்திப் போவது மாதிரி க்ரிமினல் குற்றங்களும், ராஜாங்கத்தையே வெறும் பௌதிக பலத்தால் புரட்டிவிடும் "கூ" (coup) முதலியனவும், படிப்பு ஸாமர்த்யத்தாலேயே நன்றாக ஜோடித்துத் திட்டம் போட்டு நடத்தப்படுகின்றன. இதெல்லாம் போக நேராகவே அடிதடி, பிஸ்டலைக் காட்டுவது, சுடுவது முதலானவையும் படிப்பாளிகள் உள்ள நாடுகளில் ஏறிக்கொண்டே போகின்றன. யூனிவர்ஸிடி லெக்சரர்கள்கூட ஸெனட்டில் நடக்கும் மீட்டிங்குகளில் கல்லெறிவது, நாற்காலிகளைத் தூக்கி அடித்துக்கொள்வது என்று போகிற அளவுக்கு நிலைமை முற்றியிருக்கிறது,

படிக்கத் தெரியாத ஆதிவாஸிகள் குடும்பச் சண்டை, கோஷ்டிச் சண்டை என்று எப்போதாவது ஒருத்தர் தலையை ஒருத்தர் சீவிக்கொள்வதாயிருக்கலாம். அது ஏதோ ஆத்திர, க்ஷாத்திரத்தில் ஒரு வேகம் வந்த ஸமயத்தில் செய்வதாகத் தான் இருக்கும். மற்றபடி இத்தனை தினுஸு தினுஸான குற்றங்கள் அவர்களுக்குத் தெரியாது. ஃபோர்ஜரியில் ஆரம்பித்து ப்ளான் போட்டு செய்யப்படும் ஏமாற்றுக் குற்றங்களும், organised-ஆகச் செய்யப்படும் திருட்டுப் புரட்டுக்களும் படிக்கத் தெரியாத பழங்குடி மக்களுக்குத் தெரியாது.

Koviloor Digital Library

முரண்பாடு எதனுல்?

அப்படியானுல் கல்வி வேண்டாமா? ரொம்பப் பெரியவர்கள் கல்வி ரொம்ப அவசியம், 'எண்ணும் எழுத்தும் கண்ணெனத் தகும்' என்று சொல்லியிருக்கிருர்களே? ஔவை இன்னென்றுகூடச் சொல்லியிருக்கிருளே—

கவையாகிக் கொம்பாகிக் காட்டகத்தே நிற்கும்
அவையல்ல நல்ல மரங்கள்—சவைநடுவே
நீட்டோலை வாசியா நின்ருன்; குறிப்பறிய
மாட்ட தவன்நன் மரம்

என்பதாக எழுத்தறிவற்றவனை மரத்துக்கு ஸமானம் என்கிருளே! பர்த்ருஹரியோ அவன் மிருகத்துக்கு ஸமானம் —"வித்யாவிஹீந: பசு;"—என்கிருரே!

படித்தவர் லக்ஷணம் நாம் ப்ரத்யக்ஷமாகப் பார்ப்பது ஒரு விதமாயிருக்கிறது. நேர் மாருக ரொம்பப் பெரியவர்களோ கல்வியை ஏகமாக ச்லாகிக்கிருர்கள். ஏன் இப்படி முரண்பாடாக இருக்கிறது?

ஆழ்ந்து அலசிப் பார்த்தால் முரண் எதுவும் இல்லை என்று தெரியும். அந்தப் பெரியவர்கள் சொன்ன கல்வி வேருகவும், இன்று அமலாகிற கல்வி வேருகவும் இருக்கின்றன. இதுதான் முரண்பாட்டுக்குக் காரணம். அவர்கள் சொன்னபடி கல்வி இருந்தால் குற்றம் வளராது; குறைந்து மறைந்தே போய்விடும்.

என்ன சொன்ஞர்கள்? அவர்கள் புத்தி வளர்ச்சி தருகிற கல்வியை மட்டும் சொல்லவில்லை. பக்தி வளர்ச்சி அளிப்பதாகவும் உள்ள கல்வியையே சொன்ஞர்கள்.

கற்றதனுல் ஆயபயன் என்கொல்? வாலறிவன்
நற்ருள் தொழா (அர்) எனின்

என்று திருவள்ளுவர் சொன்னதுதான், அவர்கள் எல்லாருடைய அபிப்ராயமும்.

Koviloor Digital Library

தெய்வ ஸம்பந்தமில்லாமல் அதாவது தெய்வத்திடம் பயப்படவேண்டும் என்று பண்ணுமல் படிப்பை மட்டும் கொடுப்பதால்தான் விபரீதமாகப் போயிருக்கிறது.

வெள்ளையர் நாடுகளும் இஸ்லாமியர் நாடுகளும்

'அநேக தேசங்களில் ஸமயக் கல்வி இருக்கத்தான் செய்கிறது. அங்கேயும் நீங்கள் சொன்ன ஒழுங்கீனம் இருக்கிறதே!'' என்று கேட்கலாம்.

மேல் நாடுகளில் சும்மா ஏதோ 'ப்ரேயர்', பைபிள் கற்றுக் கொடுப்பது என்று வைத்துக்கொண்டிருப்பது போத வில்லைதான்—ஒப்புக்கொள்கிறேன். இதற்குக் காரணம்; அநுஷ்டான முறை என்று ஒன்றுக்குக் கட்டுப்பட ஆரம்பித் தாலே, மனம்போனபடி செய்வது குறைகிறது. மனஸை அது போனபடி விடுவதால்தானே பலதினுஸான குற்றங் களும் இழைக்கப்படுகின்றன? மேல்நாடுகளிலோ பசங்களை ஸமய அநுஷ்டானம் என்று கண்டிப்பாக ஒழுங்குமுறை களில் கட்டுப்படுத்துவதில்லை. அதோடு ஸயன்ஸுக்கு அப்புறம்தான் ஸமயம் என்று ஒரு இரண்டுங்கெட்டான் நிலையில்தான் அங்கே உள்ள அறிஞர்களுக்கு (ஏன், வயஸு வந்தவர்களில் பெரும்பாலோருக்குமே) மதாபிமானமிருக் கிறது. அதுவே, துருஷ்க மதமுள்ள தேசங்களைப் பாருங் கள். நான் சொன்ன குற்றங்கள் இங்கேயெல்லாம் அவ்வளவு வலுக்கவில்லை. ராஜாங்க ரீதியில் பிறநாடுகளை துராக்ரஹம் செய்வது, "கூ" (coup) செய்வது என்றிருந் தாலும், உள் நாட்டிலே அவர்களில் தனிமனிதர்கள் அவ்வளவாக முறைகெட்டுப் பண்ணுவதில்லை. சுற்றிலும் மற்ற தேசத்துக்காரர்கள் ஒரே தப்பு தண்டாவில் போகும் போது இவர்களும் அந்த வழிக்கு இழுக்கப்படத்தான் செய்கிருர்கள். ஆனாலும் மற்றவர்கள் போகிற அளவுக்கு இவர்கள் போவதில்லை. காரணம், ஸமயாநுஷ்டானக் கட்டுப்பாடு அந்நாடுகளில் பலமாயிருப்பதுதான். அதோடு நம்முடைய ஸமய சாஸ்த்ரங்களைச் சேர்ந்த தர்ம நூல்

Koviloor Digital Library

களிலேயே இன்ன குற்றத்துக்கு (பாபத்துக்கு) இன்ன தண்டனை என்று இருப்பது போலவே அவர்களுக்கும் மத நூலாகவே 'ஷாரியத்' என்ற சட்ட புஸ்தகங்கள் இருக்கின்றன. துருஷ்க நாடுகள் பலவற்றின் ராஜாங்கங்கள் புதிதாக Jurisprudence (சட்ட நூல்) செய்து கொள்ளாமல் ஷாரீயத்தைத்தான் சட்டமாகப் பின்பற்றுகின்றன. மேல் நாட்டினரைப் போல இல்லாமல் துருஷ்கர்களுக்கு இன்றளவும் பொதுவாகத் தங்கள் மதத்தில் ஆழமான அபிமானம் இருக்கிறது. ஆதலால், சட்டவிரோதமாகப் போக மற்றவர்கள் துணிந்த மாதிரி, அல்லது அந்த அளவுக்கு, இவர்கள் மத விரோதமாகப் போகத்துணியாததால் குற்றங்களும் சற்றுக் குறைவாகவே உள்ளன. தினம் ஒரு ஃபாஷன் என்று மேல் நாட்டுக்காரர்கள் கன்னுபின்னு என்று போகிற மாதிரி இல்லாமல் துருஷ்கர்கள் தங்கள் பழைய நடை உடை பாவனைகளையே அதிகம் அநுஸரிப்பதைப் பார்க்கிறோமல்லவா? மொத்தத்தில், ஒரு ஒழுங்குக் கட்டுப்பாட்டின் கீழ் வந்தவர்களாயிருந்தால் குற்றத்தில் ஈடுபட மாட்டார்கள். ஹிந்து மதத்துக்கு ஹானியாக எத்தனையோ செய்தவர்களானாலும் அவர்களுடைய மதாபிமானக் கட்டுப்பாட்டைச் சொல்லாமலிருப்பதற்கில்லை.

கம்யூனிஸ்ட் நாடுகளில்

இப்படியேதான் மத உணர்ச்சி என்பதற்கே ஹானி செய்யும் கம்யூனிஸ்ட் நாடுகளிலும் பார்க்கிறோம். ஸமய ஸம்பந்தமே ப்ரஜைகளுக்குக் கூடாது என்று வைத்துக் கொண்டிருக்கிற கம்யூனிஸ நாடுகளான ரஷ்யாவிலும் சைனாவிலும் குற்றங்கள் குறைவாக இருக்கின்றன. கம்யூனிஸத்தை ஆஸ்திகர்களான நாம் ஒப்புக் கொள்வதற்கில்லைதான். அதற்காக, கம்யூனிஸ அரசாங்கங்கள் செய்யும் கெடுபிடிக் கண்டிப்பில் அவற்றின் பொதுமக்கள் அதிகமாகக் குற்றங்களும், மனம் போனபடிப் பண்ணும் அநேக ஒழுங்கீனங்களும் செய்யாமலிருப்பதை ஒப்புக் கொள்ளாமலிருப்பதற்கில்லை. "ஸமயக் கட்டுப்பாட்டி

Koviloor Digital Library

லிருந்து அவிழ்த்து உங்கள் எல்லோரையும் ஸமமாக, 'காம்ரேட்'களாக ஆக்குகிறோம்'' என்று சொல்லித்தான் கம்யூனிஸ ஆட்சியைக் கொண்டுவந்தார்கள். ஆனால் அப்போதே, அந்தக் கட்டுப்பாடு போய்விட்டால் ஜனங்களை ஒழுங்கில் வைத்திருக்க முடியாது என்பதையும் தெரிந்து கொண்டு, அதைவிடக் கடுமையான ராஜாங்கக் கட்டுப் பாட்டில் மக்களைக் கட்டிப் போட்டுவிட்டார்கள்!

ஆனாலும் இப்படி மநுஷ்யனுக்கும், மநுஷ்யன் போட்ட சட்டத்துக்கும், அவன் கொடுக்கும் தண்டனைக்கும் பயந்தே ஒரு ஸமூஹம் கூடியமட்டும் ஒழுங்காயிருக்கிறதென்றால் அது பெருமை இல்லை. ஈசனுக்கு, ஈசன் சட்டத்துக்கு பயந்து ஒழுங்காயிருப்பதுதான் அழகு. அதை விடவும் அழகு, பெருமை எல்லாம் அவனிடம் ப்ரியத்தாலேயே நம் மனஸ் தன்னால் ப்ரியப்பட்டு அவனுடைய ஸ்வரூபமான தர்மத்தின் வழியிலிருந்து கொஞ்சங்கூட விலகாமல் ஒட்டிக்கொண் டிருப்பதுதான்.

ஆனாலும் அந்த அளவுக்கு எல்லாரும் வரமாட்டார்கள் என்பதால் தெய்வத்தால், அவன் போட்ட சாஸ்த்ர சட்டத் தால் இளம் தலைமுறையைக் கட்டுப்படுத்தி, இந்த சட்டத்தை அமல்படுத்தும் போலிஸ்காரர்களாக 'கெடுபிடி யோடு அருளும் நிரம்பிய போலீஸ்காரர்களாக) குருமார் கள் வித்யாசாலைகள் நடத்தினார்கள். பசங்களை நல்வழியில் கொண்டுவந்தார்கள். இப்படிச் செய்து கல்வி என்பது கெடுதலில் தூண்டிவிடாமல் ஸத்குண அபிவ்ருத்திக்கு உதவுவதே என்று காட்டினார்கள்.

ஸமயத்தையே வாழ்க்கை மையமாகக் கொண்டுள்ள நம் தேசத்திலும் ஸமய விரோதிகளான கம்யூனிஸ்ட்களைப் போலவே, 'குடியரசு' ஸர்க்கார் மதச் சார்பில்லாத கல்வி தான் தருவது என்று வைத்துக்கொண்டிருப்பது நம்முடைய மஹத்தான துரத்ருஷ்டமாயிருக்கிறது. கம்யூனிஸ்ட் நாடு களில் உள்ள ராஜாங்கக் கண்டிப்புமில்லாமல் எல்லாரை

Koviloor Digital Library

யும் அவிழ்த்துவிட்டு இப்படிச் செய்திருப்பது......வருத்தம் தான் படணும்.

விநயத்தோடு இணைந்த வித்யை

கல்வியை உண்மையான கல்வியாக்கும் ஈச்வர பக்தியில் ஒரு அங்கம்தான் குருவிடம் பக்தியில் விநயமாயிருப்பது. விநயப் பத்தியம் இல்லாவிட்டால் வித்யை மருந்து பலிக்கவே பலிக்காது என்பதால்தான் க்ருஷ்ண பரமாத்மா விலிருந்து ஆரம்பித்து எல்லோரும் ''வித்யா விநய ஸம்பன்ன'' என்று இரண்டையும் பின்னி வைத்தார்கள். சம்பளத்தை நினைக்காமல் சிஷ்யனுக்கு வாத்யார் சோறு போட்டுத் தன் வீட்டில் வைத்து ரக்ஷிக்கிற குருகுலத்தில்தான் இப்படிப்பட்ட விநயம் உண்டாகும். இந்த விநயம் பூர்த்தியாவதற்கே முழுச் சோறும் அவனே போடாமல் சிஷ்யனை வெளி வீடுகளில் போய் பிக்ஷை வாங்கி வரச் சொல்வது—பிச்சைக்காரனாகப் போய் நின்றால் தன்னால் செருக்கு அறுபட்டுப் பணிவு உண்டாகிவிடும்.

ஈச்வர பக்தியாகட்டும், குருவிடம் விநயமாகட்டும் இவை எதற்கு என்றால் படிக்கிறவனின் அஹங்காரத்தை அடக்குவதற்குத்தான். அஹங்காரம் போகாத வெறும் படிப்பு ஆபத்தைத்தான் உண்டாக்கும். மதாநுஷ்டானம், ஈச்வர பக்தி, குருஸேவை ஆகியவற்றுடன் கூடிய ஸரியான கல்வி ஒருத்தனுக்கு இயற்கையாக உள்ள அஹங்காரத்தை தேய்த்து அகற்றி சுத்தப்படுத்தும். மாறாக இவை இல்லா விட்டாலோ அதே கல்வி, "நான் எவ்வளவு படிச்சிருக் கேன் பார்த்தியா?" என்று அஹங்காரத்தைத் தலைக்கேற்றி விடுகிறது. வித்யாகர்வம் என்றே சொல்வார்கள்.

வெளிப்பார்வைக்கு அநுஷ்டானம், பக்தி, குருஸேவை நன்றாயிருந்தால் போதாது. "பக்திமானாக, அநுஷ்டாதா வாக இருந்தும், 'தான் வித்வான்' என்கிற தாட்பூட் இருக் கிறதே!" என்று பிறர் சொல்லும்படி இருப்பவர்களுண்டு. அநேக பண்டிதர்கள் இப்படித்தான் ஆஸ்திகராகப்

Koviloor Digital Library

பார்வைக்கு இருந்துகொண்டும், தான் அறிவாளி, படிப்பாளி என்பதில் அஹங்கரித்தவர்களாயிருக்கிறார்கள். இவர்கள் நிலையில் தம்மை வைத்துக்கொண்டுதான் தாயுமான ஸ்வாமிகள்

கல்லாத பேர்களே நல்லவர்கள் நல்லவர்கள்!

என்று ஒரு தரத்துக்கு இரண்டு தரமாகச் சொல்லி,

கற்றும் அறிவில்லாத என் கன்மத்தை என் சொல்கேன்?

என்று புலம்பி வைத்துவிட்டுப் போயிருக்கிறார். வெளி மட்டத்தில் மட்டுமில்லாமல் உண்மையான உள்ளூறிய பக்தியோடு, ஸமய ஆசரணையோடு, குரு விச்வாஸத்தோடு கல்வி பயின்றால் இப்படி இருக்காது. கல்லாதபேர் பொதுவாக ஓரளவுக்கு நல்லவர்களாயிருக்கிறார்களென்றால், இப்படி உண்மையான அர்த்தத்தில் கற்றவர்களோ மஹா உத்தமர்களாகவே இருப்பார்கள்.

கல்லாத காட்டுவாஸியைவிடப் படித்தவர் அதிகம் தப்பில் போவதற்குக் காரணம் படிப்புமுறை அஹங்காரத்தை அதிகமாக்குவதாயிருப்பதுதான்.

அஹம் அடிபடவே குருகுலம்

இந்த அஹங்கார நாசத்துக்கு ரொம்பவும் உதவியாயிருப்பது குருகுலவாஸம்தான். "எங்கேயோ இருக்கிற ஈச்வரனிடம் பக்தி பண்ணி, எப்போதோ எழுதிவைத்த சாஸ்த்ர ஒழுக்கத்துக்குக் கட்டுப்பட்டு விநயமாகப் போ" என்றால் இவை உள்ளூர ஏறாமல் மேல்மட்டத்தோடு நிற்பதாகவும், எனவே 'தான்' போகாததாகவுமே இருக்கும். அதனால்தான் ப்ரத்யக்ஷமாக ஒரு பெரியவனை குரு என்று காட்டி, அவன் கிட்டே வஸிக்கும்படியாகக் கொண்டுவிட்டு விநயத்தை வளர்க்கவேண்டுமென்பது. கண்ணுக்கு முன்னால் அந்த குரு செய்கிற சுத்தமான ஈச்வர பக்தியும், அவர் அநுஸரிக்கிற தர்ம கர்ம அநுஷ்டானங்களும் தன்னால் சிஷ்யனுக்குள் புகுந்துவிடும்.

Koviloor Digital Library

ஏன் ஸாத்யமில்லை?

இத்தனை பயனுள்ளதான குருகுலவாஸத்தை 'இந்த நாளில் ஸாத்யமில்லை' என்று சடக்கென்று சொல்லித் தூக்கி எறிந்துவிடக்கூடாது. ஏன் ஸாத்யமில்லாமல்? போன தலைமுறை, ஏன் இந்தத் தலைமுறையின் ஆரம்பம் வரையும் கூட சில சாஸ்த்ரங்களும் கலைகளும் குருகுல வாஸத்தாலேயே வளர்ந்து வந்திருக்கின்றன. அந்த வித்யைகளின் அப்யாஸம் நடக்கவேண்டிய அளவுக்கு ரொம்பக் குறைச்சலாகவே நடந்தாலும், எந்த அளவுக்கு நடந்திருக்கிறதோ அது குருகுலக் கல்வியாகத்தான் இருந்திருக்கிறது.

பரத சாஸ்த்ரம், சிலப்பதிகாரம் முதலான நூல்களில் சொன்ன புராதனமான நம் ஸங்கீத மரபில் துருஷ்க ஆட்சியோடு வந்த அவர்களுடைய ஸங்கீத முறைகளும் சேர்ந்து வடக்கே ஹிந்துஸ்தானி ஸங்கீதம் என்றும், தெற்கே நம்முடையதான பூர்விக பத்ததியே வேறுவிதத்தில் மெருகேறிக் கர்நாடக ஸங்கீதம் என்றும் ஆகியிருக்கின்றன. நானூறு ஐநூறு வருஷங்களாக இந்த இரண்டு பத்ததிகளுமே நன்றாக அபிவ்ருத்தி அடைந்து இன்றைக்கு நமக்கு லோகம் பூராவும் மதிப்புத் தரும் கலாசாரச் செல்வங்களாகியிருக்கின்றன. தலைமுறைக்குத் தலைமுறை இரண்டு பத்ததியிலும் ஏகப்பட்ட மஹாவித்வான்கள், உஸ்தாத்கள் வந்திருக்கிறார்கள். இத்தனையும் ஸ்கூல் என்று, காலேஜ் என்று பெரிசாக நடத்தாமல் குருகுலக் கல்வியாகவே இருந்து ஏற்பட்ட அபிவ்ருத்திதானே? ஸங்கீதத்துக்கு காலேஜ் என்பது நாற்பது, ஐம்பது வருஷத்துக்குட்பட்ட ஸமாசாரந்தானே?

தஞ்சாவூர்ப் படம், பழுக்கா வேலை, நெட்டிவேலை, பத்தமடைப் பாய் என்றெல்லாம், இங்கிலாண்டில் நடக்கிற ராஜகுடும்பக் கல்யாணம், பட்டாபிஷேகம் ஆகியவற்றில் முதற்கொண்டு நம்முடைய பரிசாகப் பெருமையுடன் கொடுக்கிறோமே, இதெல்லாம் எந்த ஸ்கூலில் காலேஜில்

Koviloor Digital Library

கற்றுக்கொடுத்து இந்தத் தலைமுறை வரைக்கும் வந்திருக்கின்றன? இன்டிவிஜுவல் கலைஞர்கள் தங்கள் வீட்டோடு வைத்துக்கொண்ட சீஷப் பிள்ளைகளுக்கு (சொந்தப் பிள்ளைகளையே சிஷ்ப்பிள்ளையும் ஆக்கிக்கொண்டு) கற்றுக் கொடுத்துத்தானே இவை மறையாமல் வந்திருக்கின்றன?

பொதுமக்களின் பொறுப்பு

அதனால் ஏதோ கொஞ்சத்தில் கொஞ்சமாவது இப்போதும் குருகுலவாஸக் கல்வி முறையை உயிர்ப்பித்துத் தரவேண்டும். மற்ற விஷயங்களைவிட வேத வித்யைக்கு இம்முறையை அவசியம் ஏற்படுத்தித் தரவேண்டும். பூர்ணமான ஆசார்ய லக்ஷணப்படி, சிஷ்யனுக்காக எல்லாப் பொறுப்பும் ஏற்றுக்கொண்டு. அவனிடமிருந்து கொஞ்சம் கூட த்ரவ்ய லாபம் எதிர்பார்க்காமல், அவனையும் ரக்ஷித்துத் தன் குடும்பத்தையும் நடத்திக்கொள்ள வசதிபெற்ற வைதிக குருமார் இக்காலத்தில் கிடைப்பதற்கில்லை. முன் காலத்தில் ராஜமான்யம் யதேஷ்டமாக விடப்பட்டதால் இப்படிப்பட்ட குருமார் இருக்க முடிந்தது. அதற்கு பதிலாக இப்போது நாம், அதாவது ஜனநாயகத்தில் ராஜாக்களாக உள்ள பொதுமக்களான நீங்கள் எல்லோருமாகச் சேர்ந்து தான் மூலதனம் வைத்து இந்த அவச்யமான முறை நடைமுறையிலிருந்து மறைந்து போகாமல் செய்யவேண்டும்.

வேதவித்யை வளர

உதிரி உதிரியாக இப்படி அங்கங்கே சில பேர் சேர்ந்து செய்கிறது எடுபடாமல், சாச்வதமாய் நிற்காமல் உதிர்ந்து போய்விடக்கூடிய ஆபத்து இருக்கிறது. அதனால் எல்லாரீ உபகரிக்கக்கூடியதையும் 'ஸென்ட்ரலைஸ்' செய்து (மையப்படுத்தி) நிர்வாஹம் பண்ணவேண்டிய அவச்யம் உண்டாகிறது. இதற்காகத்தான் மடத்தின் ஆதரவிலேயே வேத ரக்ஷணத்துக்காகப் பலவித திட்டங்கள் போட்டு ட்ரஸ்ட்கள் வைத்திருக்கின்றன. வேதரக்ஷண நிதிக்காரர்

Koviloor Digital Library

களைக்* கேட்டால் விவரங்கள் தருவார்கள். அவற்றுக்கு த்ரவ்ய உபகாரம் செய்து வேத சாஸ்த்ர வித்யை வளர, அதுவும் ப்ராசீன முறையிலேயே வளரச் செய்வது உங்கள் கடமை. இந்த தேசத்தில் பிறந்துவிட்டீர்களோல்லியோ! பிடித்தாலும் பிடிக்காவிட்டாலும் இதன் சீதோஷ்ணுதி களால் ஒரு ஸமயம் நடுங்கி விரைத்துக்கொண்டும் இன்னெரு ஸமயம் வியர்த்துக் கொட்டிக்கொண்டும் அவதிப்படுகிறீர் களோல்லியோ? அப்படி ஒரு அவதியாக நினைத்துக் கொண்டாவது இதையும் படுங்கள். என்னை குரு என்று சொன்னுல் என் மிரட்டல் உருட்டலைக் கேட்டுத்தான் ஆகணும். (பெரிதாகச் சிரிக்கிருர்.)

இந்த 'ஸ்கீம்'களின் பொதுவான நோக்கம், வாத்யார் கள் வயிற்றுப்பாட்டைப் பற்றி நிர்விசாரமாக இருக்கும்படி அவர்களுக்கு நன்ருக ஸம்பாவனை செய்வது. 'நன்ருக' என்ருல் அவர்கள் கார் வைத்துக்கொண்டு பங்களா வாஸம் செய்ய வேண்டுமென்று அர்த்தமில்லை. ஆனுலும் அதற்காக சுஷ்கம் பண்ணக்கூடாது. இப்போது நிரந்தர அம்சமாகவே ஆகிவிட்ட 'இன்ஃப்ளேஷ'னில், ப்யூன்கூட (அந்தப் பேரைச் சொன்னுலே கோபித்துக் கொள்வார்களோ, என்னவோ? எனக்கு வேறே பேர் தெரியவில்லை) நானூறு ஐநூறு என்று சம்பளம் வாங்குகிற காலத்தில் வேத பண்டிதர்கள் டாம்பீகமில்லாவிட்டாலும் கௌரவமாக வாழ்க்கை நடத்தும்படி ஸம்பாவனை பண்ணவேண்டும். இரண்டு மணி பாடிவிட்டுப் போகிறவரைக் கலைஞர் என்று கொண்டாடி ஐநூறு, ஆயிரம் கொடுக்கிறீர்களோ இல்லியோ?

சிஷ்யர்கள் இல்லாமல் வாத்யார் ஏது? ஆனதால், நமது வேதம், சாஸ்த்ரம், கலாசாரம் என்ருல் அவற்றின் பக்கமே வர பயப்படும் இன்றைய ஹீனஸ்திதியில், இவற்றுக்கும் பசங்களை இழுக்கும்படியாக அவர்கள் படிக்க ஆரம்பிப்பதி

---

* வேத ரக்ஷண நிதி ட்ரஸ்ட், "ச்ரேயஸ்", 2, ஆருவது மெயின் ரோடு, நங்கநல்லூர், சென்னை-600 061.

Koviloor Digital Library

லிருந்தே அவர்களுக்கு **attractive**-ஆன கணிசமான ஸ்டைபென்ட்கள் தரவேண்டும். படிப்பு முடிந்து போகிற போதும், ஆயுஸ் பூராவும் ஒரு கஞ்சி காய்ச்சிக் குடிப்பதற்காவது தேவைப்பட்ட ஒரு தொகையை அவன் பேரில் "ஃபிக்ஸ"டில் (**Fixed Deposit** -ல்) போட்டுவிட வேண்டும். மூலத்தை அவன் கையாண்டு ஆழும் பாழும் செய்ய இடம் தராமல், வட்டி மாத்திரமே அவனுக்குக் கிடைத்துவரும் படிச் செய்யவேண்டும். இப்படியெல்லாம் இப்போதே கொஞ்சம் நடத்திவருகிறோம். அவனுடைய காலத்துக்கு அப்புறமும் தொகை ட்ரஸ்ட்டைச் சேர்வது என்றில்லாமல் அவன் தலைமுறைக்கு இந்த வட்டி சேருமாறு ஏற்பாடு பண்ணியிருக்கிறது. அப்போதுதான், இப்படி ஒரு பிதுரார்ஜிதம் கிடைப்பதில் வருங்காலத் தலைமுறைகளை மனஸ்ஸாக்ஷி கொஞ்சம் கிளறிவிட்டு, "நாமும் அப்பா, தாத்தா வழியிலேயே வித்யைக்கு வாழ்க்கையை அர்ப்பணம் பண்ணுவோம்" என்று நினைக்கப்பண்ணும். எதிர்காலத்திலும் வேத சாஸ்த்ரக் கல்வி அதற்குரிய முறையில் தொடர்ந்து நடக்கக் கொஞ்சமாவது இடமேற்படும்.

வித்யையும் வித்தமும்

வித்யைக்காகவே வித்யை என்று குருமார்கள் கற்றுக் கொடுப்பதும், சிஷ்யர்கள் கற்றுக்கொள்வதும்தான் உத்தமம். வித்தத்துக்காகவும் (பணத்துக்காகவும்) வித்யை என்பது மத்யமம். வித்தத்துக்காகவே வித்யை என்றால் அது அதமம். வித்யையே இல்லாமல் வித்தம் மட்டும் குறிக்கோள் என்று தற்போது அதமாதமமாக உலகம் முழுதும் ஒரு 'அவுட்-லுக்' உண்டாகியிருக்கிறது. இந்நிலையில் நாம் ரொம்பவும் ஐடியலிஸம் வைத்துக்கொண்டால் ப்ரயோஜனப் படாது. அதனால்தான் ஓரளவு கணிசமான த்ரவிய ஸஹாயம் குரு-சிஷ்யர்களுக்குச் செய்தே வித்யையை வளரச் செய்யவேண்டுமென்கிறேன்.

Koviloor Digital Library

அதே ஸமயத்தில், எங்கேயாவது ஒருசில இடங்களிலாவது பண ஸம்பந்தமேயில்லாத, லக்ஷ்ய நிலையை இன்றைக்கும் நடத்திக் காட்டுவதான குருகுலமும் ஏற்பட வேண்டுமென்று சொல்லிக்கொண்டிருக்கிறேன்.

பிக்ஷாசர்யம்

ரொம்பவும் உசந்த முறை பண எண்ணமே இல்லாமல் நடக்கிற குருகுலக் கல்விதான். பரம த்யாகிகளாக, வயிற்றைக் கட்டி வாயைக் கட்டி வாழத் தயாராக, வித்யை ப்ரசாரம் ஆகவேண்டும் என்ற ஒரே நோக்கத்துடன் போதிக்கிறவர்கள் நடத்தும் குருகுலத்துக்கு எதுவும் ஈடாகாது. இப்படிப்பட்டவரின் அறிவு விசேஷத்துடன் மனஸ் விசேஷமும் சேர்வதால் அப்போதுதான் சிஷ்யர்களுக்கு மிகவும் உயர்ந்த வித்யாவிலாஸம் உண்டாகும். ஆனால், இவன் வயிற்றைக் கட்டிக்கொண்டாலும் சிஷ்யனாக இருக்கிற இள வயசுக்காரனின் வயிறு வாடப்படாதே! அத்யயனம் செய்த ப்ராம்மணன் என்றால் நிச்சயமாக அவனுக்கு மான்யமாக ஸொத்து இருக்கும் என்ற பழங்கால நிலை இப்போது இல்லையே! தனக்கே 'ததிங்கிணதோம்' போடுகிற வேத பண்டிதர் சிஷ்யனை வேறு எப்படிப் பராமரிப்பார்? இங்கேதான் சிஷ்யனின் பிக்ஷாசர்யம் கைகொடுக்கிறது. அவன் பிக்ஷை எடுத்தே தன்னுடைய பாட்டைக் கவனித்துக் கொண்டுவிட வேண்டும். அதுமட்டுமில்லை. தனக்காக நாலு வீட்டுக்குப் போய் பிக்ஷை கேட்க வேண்டுமென்றால், வாத்யாருக்காக இன்னம் நாலு வீட்டுக்குப் போகவேண்டும். முன்னேயே சொன்னமாதிரி அவருக்குப் பக்வமான (சமைத்த) ஆஹாரம் பிக்ஷையாகக்கிடைக்கக் கூடாதாகையால், அவருக்கானதை அரிசி, பருப்பு, காய்கறி என்று வாங்கிவர வேண்டும்.

கல்வி அளிப்பது ஒன்றே நோக்கமாயிருக்கிற த்யாகி வாத்யாரைப்போல, கல்வி பெறுவது ஒன்றே நோக்கமாயிருக்கிற த்யாகி மாணவன்தான் இப்படி பிக்ஷாசர்யம் செய்து குருகுலவாஸம் செய்வான்.

Koviloor Digital Library

ஆதர்ச நிலையை அழியவிடலாகாது

'இம்மாதிரியெல்லாம் இந்தக் காலத்தில் யாராவது கிடைப்பார்களா? இதென்ன கார்யத்துக்கு உதவாத பேச்சு?' என்று நினைக்கலாம். அதற்காக உத்தமமான ஐடியல்களை வாயாலாவது சொல்லி, ஞாபகப்படுத்தக்கூட குருப்பட்டம் கட்டிக்கொண்டவன் தவறிவிடக்கூடாது என்பதால்தான் சொல்கிறேன். ஆதர்ச நிலை என்ன வென்றே தெரியாமல் அழிந்துபோகவிடக்கூடாது. 'யார் follow பண்ணுவார்கள்?' என்று பார்க்காமல்தானே க்றிஸ்து, 'ஒரு கன்னத்தில் அடித்தவனுக்கு இன்னொரு கன்னத்தையும் காட்டு' என்றார்? சொடக்குப் போட்டால் சரக்கு உண்டாகிவிட வேண்டும் என்ற மனோபாவம் ஜனங் களுக்கு வலுத்து, தினம் ஒரு 'மில்' முளைத்துக்கொண்டும், ஜனங்கள் நாசூக்குக்கு மேல் நாசூக்கான சரக்குகளுக்குப் போய்க்கொண்டும் இருந்தபோது காந்தி, "அவரவர்களே ராட்டையில் நூற்றுக் கட்டிக்கொள்ளுங்கள்; கைக்குத்தல் அரிசி சாப்பிடுங்கள்" என்று சொல்லிக்கொண்டே இல்லையா?

நடைமுறைக்கு ஸாத்யமில்லை என்று ஒன்றை விட்டு விட்டால் அது நடக்காமலேதான் போகும். 'லோகத்துக்கு இதனால் என்ன ப்ரயோஜனம்?' என்கிற எண்ணமே இல்லா மல் எவரெஸ்டைப் பிடிக்க வேண்டுமென்று எத்தனையோ காலமாக எத்தனையோ 'டீம்'கள் போய்ப் போய்த் தோற்றுத் தோற்றுத்தான் திரும்பினார்கள். ஆனாலும் ஸாத்யமில்லை என்று விட்டுவிடாமல் முயற்சி பண்ணிக்கொண்டே இருந்த தால் கடைசியில் அதையும் பிடித்துவிட்டார்களோ இல்லையோ? ஆனபடியால், லோகத்துக்குப் பரம ப்ரயோஜன மான குருகுலக் கல்வி முறை ஏட்டுச் சுரைக்காய் என்று விட்டுவிடவே கூடாது.

வாரச் சாப்பாடு

ஒவ்வொரு நாளும் பல க்ருஹங்களுக்குப் போய் பிக்ஷை கேட்பது என்றில்லாமல் "வாரம்" என்ற முறைப்படியாவது

Koviloor Digital Library

செய்யலாம். அதாவது, வித்யார்த்தி வாரத்திலுள்ள ஏழு நாட்களில் ஒவ்வொரு நாள் ஒவ்வொரு அகத்தில் பிக்ஷை வாங்குவது என்று வைத்துக் கொள்ளலாம். அப்போது, போடுகிறவர்களுக்கு 'தினந்தினம் வருகிறானே' என்று இல்லாமலிருக்கும். ஆனால் குருவுக்கும் சேர்த்து வாங்க வேண்டுமென்று இருந்தால் அப்போது பல வீடுகளில் கொஞ்சம் கொஞ்சம் வாங்கினால்தான் முடியும். இதெல்லாம் அந்தந்த குருகுலம் உள்ள நிலைமை, ஊர்க்காரர் மனப்பான்மை, மற்ற ஸந்தர்பங்களைப் பொறுத்து முடிவு பண்ணவேண்டிய விஷயம். மொத்தத்தில் பிக்ஷாசர்யமுள்ள குருகுலவாஸத்தை உயிர்ப்பிப்பது ரொம்பவும் ச்ரேஷ்டம்.

ஓரிருவர் போதும்!

இப்படி ஒரு குரு, ஒரு சிஷ்யன் கிடைத்தாலும் போதும். அந்த குருவின் ஆத்மசக்தி லோகத்தின் கண்ணுக்குத் தெரியாமலே அதற்கு நல்ல எண்ணங்களைக் கொடுக்கத்தான் செய்யும். அந்த சிஷ்யனுக்கு குணமும் ஆசாரமும் மந்த்ர சக்தியும் ப்ரம்ம தேஜஸும் பூர்ணமாய் உண்டாகி வருங்காலத்தில் அவனும் அந்த குருவைப்போல் ஆகிவிடுவான்.

அவர்கள் தியாகமும் நமது தியாகமும்

இப்படிப்பட்ட த்யாகத்துக்கு நாம் செய்யக் கூடியது எதுவுமில்லை. நாம் ஏதாவது செய்துவிட்டால், அதாவது குரு சிஷ்யர்கள் நாம் செய்கிற உபகாரம் எதையோ ஏற்றுக் கொண்டுவிட்டால் அப்புறம் அவர்கள் எப்படி த்யாகிகளாக முடியும்? ஆகவே இப்படிப்பட்ட ஐடியலை நானோ நீங்களோ சொல்லிச் சொல்லி ஒரு ஊக்கம் உண்டாக்குவதைத் தவிர இதில் நாம் செய்வதற்கு ஒன்றுமில்லை.

அடுத்தபடியாகத்தான் நான் சொன்ன 'ஸ்கீம்'கள்: அதாவது மூலதனம் வைத்து ஸம்பாவனை, ஸ்காலர்ஷிப் முதலானதுகள் கொடுத்துப் போஷிப்பது. இங்கேதான் நாம் ஏதோ கொஞ்சம் த்யாகம் செய்ய இடமேற்படுகிறது. த்ரவ்ய ரூபத்தில் (பொருளுருவில்) த்யாகம், நம்முடைய

Koviloor Digital Library

நேரத்தை த்யாகம் செய்து இதைப் பற்றிச் சிந்திப்பது, கார்ய ரூப த்யாகம் ஆகியவை கொஞ்சமாவது செய்து, வேதம் மங்கிப் போகாமல் ரக்ஷித்து, ஈச்வரானுக்ரஹத்தைப் பெறுவதற்கான 'ஸ்கீம்'கள்.

பிக்ஷாசர்யம் ஒரு பையனுக்கு அளிக்கிற பணிவையும், அந்தப் பணிவின் வழியாய் அவனுக்கு ஏற்படும் மற்ற பண்புகளையும் நான் ரொம்பவும் முக்யமாய் நினைப்பதால், இந்த ஸ்கீம்களிலேயே 'நியமாத்யயனத் திட்டம்' (பண்டைய ப்ரம்மசர்ய, பிக்ஷாசர்ய நியமங்களோடு மாணவன் கல்வி கற்கிற திட்டம்) என்பது போலவும் சிலது வைத்து, இவ்வழியில் படிக்கிறவனுக்கு அதிகப்படி ஸம்பாவனைகள் செய்கிறோம்.

ஏதோ ஒரு தினுஸிலாவது "குருகுலவாஸம்" என்ற பெயரும், அதன் உசந்த லக்ஷ்யமும் ஒட்டிக் கொண்டிருக்கும்படியாக ஒரு இன்டிவிஜுவல் குருவுடனேயே பத்துப் பசங்கள் சேர்ந்து வாழும்படியாகத் திட்டங்கள் போட்டு நடத்தி வருகிறோம். "றோம்" என்று உங்களிடமிருந்து பிரிந்து நாங்கள் யாரோ இருக்கிறாற்போலச் சொன்னது ஸரியில்லை. நீங்கள் எல்லாரும் நடத்தி வைக்கவேண்டிய உங்கள் திட்டம்தான் இவையெல்லாம். ரொம்பவும் 'ஓஹோ' என்று ஆதரவு கிடைக்காவிட்டாலும், வேதாப்யாஸம் வேர் பிடித்துக் கொள்ளும் என்று நம்பிக்கை தருகிற அளவுக்காவது 'ரெஸ்பான்ஸ்' கிடைத்திருக்கிறது. இதை 'ஓஹோ' என்றே செய்யவேண்டியது உங்கள் பொறுப்பு.* இதைவிட ஜன்மா எடுத்ததற்கு ப்ரயோஜனமாக நீங்கள் செய்யக்கூடிய தொண்டு இல்லை.

இப்போது அத்யயனம் செய்த ப்ராம்மணர்கள் எங்கேயோ சில இடங்களில்தான் இருக்கிறார்கள். அவர்களிடம், "யாருக்காவது நீங்கள் சொல்லிவைக்கக்கூடாதா?"

---

* இது தொடர்பாக, இரண்டாம் பகுதியில் "வேதம்" என்ற பேருரையில் கடைசி ஐந்து உட்பிரிவுகள் பார்க்க.

Koviloor Digital Library

என்றால், "யாருக்காவது என்றால் யார் வருகிறார்கள்? 'தட்டு தூக்கினாலும் தூக்குவோம்; இதற்கு வரமாட்டோம். இதிலே கால் வயிற்றுக் கூழுக்குக்கூட வழியில்லை என்று நன்றாகத் தெரிந்துகொண்டுள்ள நீங்களே எங்களைக் கூப்பிடுகிறீர்களே!' என்று கேட்கிறார்கள். இனிமேல் யாராவது வந்தால் சொல்லிக் கொடுப்பதற்கு எங்களுக்கே ஞாபகமிருக்குமா என்று ஸந்தேஹம்" என்று பதில் சொல்கிறார்கள்! இவர்கள் தங்கள் வித்யையை அபிவ்ருத்தி செய்துகொள்ள வசதி செய்து தராமல், வாஸ்தவமாகவே அடியோடு மறந்து போகவிட்டால் அதைக்காட்டிலும் நமக்கு அபகீர்த்தி இல்லை.

வேதபாஷ்யம், வேதாங்கம், வேதாந்தம்

எத்தனை வித்யைகள் இருந்தாலும் முடிவாக ப்ரஹ்ம வித்யையில்தான் சேர்க்க வேண்டும். பகவான், "நான் வேதத்தில் ஸாமம், மலைகளில் மேரு, மரங்களில் அரசமரம், மிருகங்களில் சிங்கம், பக்ஷிகளில் கருடன், மாதங்களில் மார்கழி" என்றெல்லாம் கீதையின் விபூதியோகத்தில் சொல்லிக்கொண்டு போகும்போது, "வித்யைகளில் நான் ஆத்ம வித்யையான ப்ரஹ்ம வித்யை" என்று சொல்லியிருக்கிறார் :

"அத்யாத்ம வித்யா வித்யாநாம்".

மடம் ஏற்பட்டிருப்பதும் முடிவாக அதற்குத்தான். அதனால் வேத அத்யயனம் மட்டுமில்லாமல், அதன் அர்த்தத்தை அறிவதான வேத பாஷ்யம், அதற்கு அவயவமாகச் சேர்ந்து வரும் வேதாங்கங்கள், முடிவான ஆத்மவித்யையேயான உபநிஷத்துக்கள் (அதாவது வேதாந்தம்) ஆகியவற்றின் ப்ரசாரத்திலேயே மடம் குறிப்பாக அக்கறை எடுத்துக் கொண்டிருக்கிறது. இன்னமும் நிறைய எடுத்துக் கொள்ளவேண்டும். இப்போது செய்திருப்பது போதவே போதாது.

Koviloor Digital Library

எனக்கு ஆசை, இப்போது பாடசாலைகள் என்பதாக வேத அத்யயனத்துக்கு என்று ஏற்பட்டிருக்கும் எல்லாவற்றிலுமாவது வேதம் ஸம்பந்தப்பட்ட மற்ற வித்யைகளையும் சாஸ்த்ரங்களையும் சொல்லிக்கொடுத்து ப்ரசாரம் செய்ய வேண்டும் என்பது. இப்படி மேலும் அநேக பாடசாலைகளும் புதிதாக வைக்கவேண்டும்.

சென்ற சில தலைமுறைகளில் வேதவித்யை முழுதுமே மங்கிக்கொண்டு வந்திருப்பதில் ரொம்பவும் மங்கிப் போய் விட்ட ஒரு பிரிவு உண்டு. அதாவது வேதத்தில் அத்யயனம் சொல்லிவைக்கவாவது (வேத ஸம்ஹிதைகளின் டெக்ஸ்ட்டை மாத்திரம் உருப்போட்டு மனப்பாடம் பண்ணிவைக்கவாவது) ஏதோ சில பாடசாலைகள் இருக்கின்றன; ஆனால் அவற்றின் அர்த்தத்தைச் சொல்லிக்கொடுக்கும் பாடசாலைகள் மிகமிக அபூர்வமாகிவிட்டன. கனபாடிகளிலேயே பலருக்குக்கூட வேதத்தைச் சொல்லத்தான் தெரிகிறதே ஒழிய, அதற்கு அர்த்தம் சொல்லத் தெரியாமலிருக்கிறது. இதற்காகத்தான் வேதம் படித்தபின் வேதபாஷ்யமும் படித்துப் பரீக்ஷை கொடுக்க ஏற்பாடுகள் செய்துவருகிறது. இதில் எல்லாருடைய ஒத்துழைப்பும் தேவை.

இது நேராக வேதத்தைப் பற்றியது. வேத அங்கங்களையும் மறுபடி நல்ல ப்ரசாரத்துக்குக் கொண்டுவர முயல வேண்டும். குறிப்பாக வேதாங்கங்களில் வ்யாகரணம், வேதாங்க ஜ்யோதிஷத்தின் வளர்ச்சியாகப் பிற்பாடு அபிவிருத்தி கண்டவான சாஸ்த்ர, கணித சாஸ்த்ரங்கள் ஆகியவற்றை இப்படி ப்ரகாசப்படுத்தவேண்டும்.

வேத உபாங்கங்களான நாலில் மீமாம்ஸை என்பதில் உத்தரபாகமாக "வேதாந்தம்" என்பது வந்துவிடுகிறது. சங்கர மதம், ராமாநுஜ மதம், மத்வ மதம் எல்லாமே வேதாந்தத்தின்கீழ் வருபவைதான். இந்த மடத்தைப் பொருத்தமட்டில் அத்வைத வேதாந்தத்தைப் போஷிப்பது முக்ய கார்யமாக இருப்பதால் அதற்கென்று ஸதஸ்கள் நடத்துகிறோம். சென்ற நூற்றாண்டுக் கடைசியிலிருந்தே

Koviloor Digital Library

அத்வைத ஸபா என்பது மடத்தால் நடத்தப்பட்டு வருகிறது. இந்த ஸம்ப்ரதாயத்துக்கான புஸ்தகங்கள் போடுவதற்கும் ஆதரவு தருகிறோம். இப்படியே ராமாநுஜ, மத்வ மடத்தினர் விசிஷ்டாத்வைத, த்வைத வேதாந்தங்களை ரக்ஷித்து ப்ரசாரம் செய்துவருகிறார்கள். (நான் உண்மையைச் சொல்லவேண்டுமானால் ஸ்மார்த்தர்களுக்கு அத்வைத ஸம்ப்ரதாயத்திலும் அதையொட்டியுள்ள ஸமயாசாரத்திலும் இருப்பதைவிட மாத்வ, வைஷ்ணவர்களுக்கு அவர்களுடையதில் பிடிமானம் மிகவும் அதிகம்.)

வேதாந்தம்—ஸித்தாந்தம் என்று பிரித்துச் சொல்வது வழக்கமானாலும் சைவஸித்தாந்தமும் வைதிக மதமாக, வேதாந்த அடிப்படையின் மேல் உருவானதுதான். அதை ஆதீனகர்த்தர்கள் போஷித்து வருகிறார்கள். இன்னம் இப்படியே சைதன்யர், நிம்பார்க்கர், வல்லபர் முதலானவர்களின் ஸம்ப்ரதாயங்களும் அவற்றின் மடாலயங்களால் ரக்ஷிக்கப்பட்டு வருகின்றன.

யூனிவர்ஸிடிகளில் "ஃபிலாஸஃபி" என்று இருப்பது முக்கியமாக வேதாந்த ஸம்ப்ரதாயங்களைப் பற்றியதுதான். லோகம் முழுதிலுமே, ஸமய ஆசரணையைவிட தத்வ விசாரம் முக்யமாயுள்ளதால் வேதாந்தம்தான் நாளுக்கு நாள் பிரபலமடைந்து வருகின்றது. வேதாந்த ஸம்ப்ரதாயங்களிலுங்கூட 'தீயிஸம்' (தெய்வக் கொள்கை, வழிபாட்டு முறை) முதலியவை இல்லாத சுத்த தத்வ விசாரமாயுள்ள அத்வைதந்தான் அகில உலக ரீதியில் ப்ரஸித்தமாயிருக்கிறது. இப்படி வேதாந்தம் என்றாலே அத்வைதம்தான் என்று நினைக்கப்படுகிறதே என்று மற்ற ஸம்ப்ரதாயக்காரர்கள் வருத்தம், கோபம்கூட, படுகிறார்கள். அது ஒருபக்கம் இருக்கட்டும். யூனிவர்ஸிடிகளின் புண்யத்தில் மற்ற சாஸ்த்ரங்களைவிட வேதாந்தம் சற்று ஜீவசக்தியோடு இருக்கிறது என்று சொல்லவந்தேன்.

Koviloor Digital Library

ஆனுல் இதிலும்கூட ஆசார அநுஷ்டானத்துக்கு இடமேயில்லாமலும், ரிஸர்ச் என்ற பெயரில் பூர்விகர்களின் அபிப்ராயத்துக்கும் நம்பிக்கைக்கும் மாறுன அநேக அபிப்ராயங்களைச் சொல்வதாகவும், திறந்த மனஸோடு ஸயின்டிஃபிக்காக ஆராய்வதாகச் சொன்னுலும், இந்த ரிஸர்ச்காரர்களிலும் சிலர் bissed-ஆகத்தான் தங்கள் தியரிகளை உருவாக்குவதாகவும் இருப்பதால் யூனிவர்ஸிடிகள் செய்கிற வேதாந்த ப்ரசாரத்தில் பூர்ண த்ருப்திப்படுவதற்கில்லாமலிருக்கிறது.

அத்வைதத்திலும்கூட pure metaphysics-ஐ (சுத்த தத்வத்தை) மற்ற தேசத்துக்காரர்கள் மெச்சி, தங்களால் முடிந்தவரை அப்யஸித்துப் பார்க்கட்டும். இதிலே ஜன்மாந்தர விசேஷமுள்ள அபூர்வமான சிலர் வேண்டுமானுல் ஸித்தியும் பெறக்கூடும். ஏனென்ருல் ஏதோ ஜன்மாந்தர விசேஷந்தானே அந்த விதேசிகளை இதிலே இழுத்திருக்கிறது? ஆனுல் நம்மவரைப் பொறுத்தமட்டில் வைதிக ஆசாரமில்லாமல், கர்மாநுஷ்டானமில்லாமல் 'அத்வைதா', 'அத்வைதா' என்று ரிஸர்ச்சாகவும், லெக்சராகவும், புஸ்தகமெழுதுவதாகவும் எத்தனைதான் பண்ணினுலும் வாஸ்தவத்தில் அந்த அநுபவத்தின் கிட்டேயே போகாமல் அறிவுமட்டத்தில் அலசியதாக மாத்திரந்தான் விஷயம் முடியும். அத்வைதத்தை ஸ்தாபித்த ஆசார்யாள் கர்மாநுஷ்டானத்தாலும், ஈச்வரோபாஸனையாலும் (இன்ன மூர்த்திதான் என்று மற்ற ஸம்ப்ரதாயஸ்தர்களைப் போல ஒன்றை மட்டும் கொள்ளாமல், எல்லாவற்றுக்கும் மூலமான பரமாத்மாவை ஏதோ ஒரு ரூபத்தில் செய்கிற உபாஸனையாலும்)தான் ஒருத்தன் சுத்தியாகி தத்வ விசாரத்துக்கு வரவேண்டும் என்று தீர்மானமாக விதித்திருக்கிருர். இவற்றுக்கு யூனிவர்ஸிடிப் படிப்பில் எங்கே இடம்? ஆனபடியால் வேதாந்த சாஸ்த்ரங்களிலும் ஸம்ப்ரதாய வித்வான்களை ஆதரித்து, அவர்களிடமிருந்து ஸம்ப்ரதாய பூர்வமாக சிஷ்யர்கள் சிக்ஷை பெற ஏற்பாடு செய்யவேண்டும்.

Koviloor Digital Library

பல ஸித்தாந்த ஒப்புவமை

இதிலே ஒன்றுமட்டும் கொஞ்சம் புதிதாக அபிவ்ருத்தி செய்துகொள்ள வேண்டும். 'கம்பேரடிவ் ஸ்டடீஸ்' என்ப தாக யூனிவர்ஸிடிகளில் ஒரு ஃபிலாஸபி ஸிஸ்டத்தை மட்டு மில்லாமல் பலவற்றைப் படித்து ஒன்றுக்கொன்று எப்படி மாறுபட்டுப் போகிறது, எப்படி எத்தனையோ இடங்களில் அவை ஒப்புதலாகவும் போகின்றன என்று ஆராய்கிறார்கள். இது ச்லாகிக்கவேண்டிய ஆராய்ச்சி. ஸம்ப்ரதாய முறை யிலும் இதர ஸம்ப்ரதாய அபிப்ராயங்களைத் தெரிந்து கொள்ள வேண்டித்தான் இருக்கிறது. ஏனென்றால் எந்த ஸம்ப்ரதாயத்தைச் சேர்ந்த எந்த சாஸ்த்ரத்தை எடுத் தாலும் அதிலே மற்றவர்களின் கொள்கைகளைச் சொல்லி அவற்றைக் கண்டித்துத்தான் ஸ்வபக்ஷத்தை (தன் கட்சியை) நிர்த்தாரணம் செய்திருக்கும். பூர்வபக்ஷத்தில் (எதிராளி யின் கட்சியில்) ஆரம்பித்து அவர்கள் கருத்தை டெவலப் செய்தபின்தான் ஸ்வபக்ஷத்தை நாட்டவேண்டுமென்பதே நம் சாஸ்த்ரகாரகர்கள், முக்யமாக பகவத்பாதாள், கைக் கொண்ட முறை. ஆனால் தற்போது ஸம்ப்ரதாயப்படிப் படிப்பவர்கள், ஏற்கெனவே சாஸ்த்ரகாரகர்கள் மற்ற ஸித்தாந்தங்களில் என்ன quote செய்கிறார்களோ அதற்கு மேல் தாங்களாக அந்த சாஸ்த்ரங்களைப் பார்ப்பதில்லை. அவற்றை இன்னமும் ஊன்றிப் பார்க்கவேண்டும். பிற ஸித்தாந்தங்களை இன்னம் நன்றாக அறிய வேண்டும். கொஞ்சங்கூட ஸொந்த அபிப்ராயங்களினாலும் அபிமானங் களினாலும் prejudice ஆகாமல் ஸத்ய தத்வத்தை அறிவ தற்கு இது உதவும். அவரவருடைய பக்வ ஸ்திதியைப் பொருத்துத்தான் அறிவு வாதமும்கூட ஒவ்வொருவருக்கு ஒவ்வொரு முடிவைக் காட்டும்; அறிவால் ஒரு விதமான முடிவுக்கு வந்தாலுங்கூட அவரவருக்கும் இதற்கு ஸம்பந்த மில்லாமல்கூட எது மனஸுக்குள்ளே நன்றாகத் தைக்கிறதோ அதைத்தான் ஒருத்தர் பின்பற்றுவார்; கடைசியில் பார்த்தால் ஆத்மஸத்யம் என்பது அறிவு

Koviloor Digital Library

வாதங்களுக்கு அப்பாற்பட்டது—என்பதெல்லாம் நிஜந் தான். ஆனாலுங்கூட சாஸ்த்ரப் படிப்பு என்று ஒன்றை மேற்கொள்கிறபோது அதில் நல்ல தேர்ச்சியை ஸம்பாதித் துக் கொள்வதற்கு நான் சொன்னபடி அவரவரும் தங்களுக் குப் பிடித்த ஸம்ப்ரதாயத்தைத் "தரோ"வாகத் தெரிந்து கொள்வதோடு, மற்றவற்றையும் அந்த அளவுக்கு இல்லா விட்டாலும் ஓரளவு நன்றாகவே தெரிந்துகொள்ள வேண்டும். அப்போதுதான் நாம் முடிவாக ஒப்புக்கொள்ள முடியாத ஸித்தாந்தங்களிலும் அறிவிலே பெரியவர்களாக வந்திருப்பவர்களின் பெருமையைத் தெரிந்துகொள்ள முடியும். "நம்முடையதுதான் அப்படியே உசத்தி; மற்றது ஒன்றும் இல்லாதது" என்ற குறுகல் பார்வை அறிவுலகத் தில் கூடாதாகையால் சொல்கிறேன்.

பழைய முறையில் அமைக்கிற கலாசாலைகளில், நல்ல இங்கிலீஷ் ஞானமுள்ள சிலர் நம் தேச ஃபிலாஸஃபிகளை மட்டுமில்லாமல், மற்ற தேச ஃபிலாஸஃபிகளையும்கூட இப்படிச் சேர்த்துப் படித்து ஆராய்ச்சி செய்து, புஸ்தகம் போட்டு, அவற்றின் ஸாரத்தையாவது இக் கலாசாலை வித்யார்த்திகளுக்கு தெரிவிக்கும்படியும் செய்யலாம்.

ஸ்வதேச விதேச ஒப்புவமையும் இசைவும்

இப்படியேதான் நம் தேச ஸயன்ஸ்கள், ஸெமி - ஸயன்ஸ்கள் (இவற்றைப் பற்றிக் கொஞ்சம் நேரத்தில் சொல்கிறேன்) ஆகியவற்றையும் இவற்றிலுள்ள நவீன மேல்நாட்டு சாஸ்த்ரங்களோடு சேர்த்துப் பரிசீலனை செய்ய அறிஞர்களை ஊக்கவேண்டும். அவர்கள் செய்யும் பரிசீலனை யின் பலன் நாம் மறுபடி உயிர்ப்பிக்கிற புராதன முறை யிலான வித்யாசாலை மாணவர்களுக்குக் கிடைக்கச் செய்ய வேண்டும்.

நம் தேசத்துப் பழைய நூல்களில் என்ன சொல்லியிருக் கிறது, தற்போதுள்ள ஸயன்ஸ் தியரிகள் என்ன சொல்

Koviloor Digital Library

கின்றன என்று ஒப்பிட்டுப் பார்ப்பதோடு நின்றுவிடாமல், இதையும் அதையும் எங்கெங்கே ஒன்றுகப் பொருத்திப் பயன் பெறமுடியுமோ அங்கே அப்படிச் செய்யவேண்டும். உதாரணமாக ஆயுர்வேதத்தில் இல்லாத ஒன்று, ஆயுர்வேத முறைக்கு மாருன விளைவு எதையும் ஏற்படுத்தாமல், ஆரோக்யத்துக்கு நல்லது செய்யுமென்ருல் அதை ஆயுர்வேத வைத்யர்கள் எடுத்துக் கொள்ளலாம். இப்படியே அல்லோபதிக்காரர்களும் ஆயுர்வேத சிகித்ஸை முறையில் அவர்களுக்குப் புதிதாக, நல்லதாக இருப்பதை எடுத்துக் கொள்ளலாம்.

புராணம்

வேத உபாங்கங்களில் புராணம் என்பது தற்காலத்தில் உபந்நியாஸங்கள், ப்ரவசனங்கள், ஹரிகதைகள் ஆகியன பரவியிருப்பதால் ஒரளவு நன்ருக ப்ரகாசிப்பதாகத் தோன்றுகிறது. ஆனுலும் இங்கேயும்கூட ஆழ்ந்து பார்த்தால், பதினெட்டுப் புராணங்களில் பல கொஞ்சங்கூட ப்ரசாரத்துக்கு வரவில்லை என்பதும், உப புராணங்களும் ஸ்தல புராணங்களும் ரொம்பவும் மங்கிக்கொண்டே வருகின்றன என்பதும் தெரியும். இவற்றிலும் இருக்கப்பட்ட ஓரிரு பண்டிதர்களை ஆதரித்து, அவர்கள் புதிதாகப் பண்டிதர்களை உண்டாக்கும்படியாக சிஷ்யர்களை ஏற்படுத்திக் கொடுத்து, அதற்கான ஸஹாயங்களைச் செய்யவேண்டும்.

(பூர்வ) மீமாம்ஸை, தர்க்கம் (ந்யாயசாஸ்த்ரம்), தர்ம சாஸ்த்ரம் முதலான மற்ற உபாங்கங்களுக்கும் இப்படியே ஏற்பாடு பண்ணனும். இவற்றில் நம் ஆசார அநுஷ்டானங்களைச் சொல்லிக் கொடுக்கும் தர்மசாஸ்த்ரம் நம்முடைய வாழ்க்கையை நிஜமான பாரதப் பண்பாட்டின்படி வாழும் வாழ்க்கையாக ஆக்குவதற்கு ரொம்பவும் முக்கியம். ஆனுல் அறிவு ரீதியில், வித்யை என்று பார்க்கும்போது மீமாம்ஸா சாஸ்த்ரத்தையும், தர்க்க சாஸ்த்ரத்தையும் ப்ரசாரப் படுத்துவது முக்யமாகிறது.

Koviloor Digital Library

ஆகம சாஸ்த்ரம்

இதெல்லாம் போக, மந்த்ர சாஸ்த்ரம் என்பது அது பாட்டுக்கு ஒரு ஸமுத்ரமாக விரிந்து கிடக்கிறது. (அதில் 'மந்த்ர மஹோததி, என்றே ஒரு புஸ்தகத்துக்குப் பெயர். மஹோததி என்றால் மஹா ஸமுத்ரம்.)

மந்த்ர சாஸ்திரத்தோடேயே ஆகம சாஸ்த்ரம் வருகிறது. மந்த்ர பூர்வமாக தெய்வ ஸாந்நித்யத்தை உண்டாக்கித் தரவே ஏற்பட்ட ஆலயங்களைப் பற்றிய விஷயங்கள் ஆகம சாஸ்த்ரத்திலிருப்பவைதான். ஆலயம் எப்படிக் கட்டுவது, மூர்த்திகளை எப்படி ப்ரதிஷ்டை செய்வது, பூஜை எப்படி, எந்தெந்த மூர்த்திக்கு எப்படி யெப்படி வழிபாடு என்றெல்லாம் நிறைய்...ய ஸமாசாரங்கள் ஏராளமான ஆகமங்களில் சொல்லப்பட்டிருக்கின்றன. அத்தனை பொதுஜனங்களையும் பரமாத்மாவோடு சேர்த்து வைப்பது ஆலயம்தான். அதனாலேயே இந்த சாஸ்த்ரத்தை விசேஷமாக விளங்கச் செய்யவேண்டுமென்பதில் எனக்கு ரொம்பவும் அக்கறையும் கவலையும் இருக்கின்றன. அதனால் தான் தற்போது இருக்கப்பட்ட விஷயஜ்ஞர்களான சிவாசார்யர்கள், பட்டர்கள் ஆகியவர்களைத் தருவித்து ஆகமத்துக்கு ப்ராதான்யம் கொடுத்துச் சில வருஷங்களாக பெரிய ஸதஸ்கள் நடத்துவது. அரசாங்கத்திலும் ஆகமக் கலாசாலைகள் வைத்து ஊக்கம் தந்திருக்கிறார்கள். ஆனால் சாஸ்த்ரப்படிப் போக வேண்டுமென்பதைவிட, தற்போது ஸம்பந்தா ஸம்பந்தமில்லாமல் எதையெடுத்தாலும் அதில் ஜாதி ஸமத்வத்தையும் தாய் பாஷையையும் நிலைநாட்ட வேண்டுமென்பதே அரசியல்காரர்களுக்கு முக்யமாயிருப்ப தால் இது எந்த அளவுக்கு, எத்தனை காலம் சாஸ்த்ரோக்த மாக நடக்குமென்று சொல்லமுடியவில்லை. இந்த சாஸ்த்ரங் களிலும் குருகுல முறையில் ஒரு பட்டரிடமோ, சிவாசாரி யரிடமோ நாலு பசங்கள் படிக்கும் ரீதியில் ஏற்பாடு செய்தால் ஆகம சாஸ்த்ரங்கள் அவற்றின் ஒரிஜினல் ஸ்பிரிட் டோடு (அதுதான் அவற்றின் நிஜஸ் பிரிட்டும்!) ப்ரகாசிக்கும்.

Koviloor Digital Library

வாஸ்து சாஸ்த்ரம்

ஆகமத்தில் கோயில் கட்டுவது பற்றி வந்தாலும், கோயிலை ஊரிலே எங்கே அமைப்பது, அந்த ஊரையே எப்படி அமைப்பது, அதில் வீடுகளை எப்படி அமைப்பது, அந்த வீடு ஒவ்வொன்றையும் எப்படி அமைப்பது என்பதையெல்லாம் சொல்ல ப்ராசீனமாக வாஸ்து சாஸ்த்ரம் என்று ஒன்று தனியாக இருக்கிறது. காற்றும் வெளிச்சமும் இருக்கிற விதத்தில், குடிதண்ணீர் கிடைக்கும் விதத்தில், கழிவு நீர் ஓடுகிற விதத்தில் வீட்டையும் ஊரையும் நிர்மாணம் செய்தால் மட்டும் போதாது. இதை மட்டுமேதான் இன்று கவனிக்கிறார்கள்—அல்லது கவனிப்பதாகப் பேர். இவற்றை யும் சொல்லி, இதைவிட முக்யமாக, எப்படி நிர்மாணித் தால் உத்தமமான திவ்ய சக்திகளின் ரேடியேஷன் ஊருக்கும் வீட்டுக்கும் கிடைக்குமோ, எப்படி நிர்மாணம் பண்ணும் போதுதான் நம் கர்மாநுஷ்டானங்களுக்கு ஸௌகர்யமா யிருக்குமோ அப்படிச் செய்வதற்கு வாஸ்து சாஸ்த்ரம் வழி கூறுகிறது. கூடம், தாழ்வாரம், முற்றம் முதலியவை கூடாது என்று ரூம் ரூமாகக் கட்டினால் ஔபாஸனப் புகை எப்படி வெளியே போகும்? அநுஷ்டானத்துக்கு ஏற்றதாக வீட்டு அமைப்பு இருக்கவேண்டுமானால் வாஸ்து சாஸ்த்ரப்படிதான் செய்யவேண்டும்.

சில்ப சாஸ்த்ரம்

ஆலய நிர்மாணம் என்றவுடனேயே சில்ப சாஸ்த்ரமும் வந்துவிடுகிறது. லோகமே ப்ரமிக்கும் சில்பங்கள் எண்ணி முடியாமல் கொட்டிக் கிடக்கிற தேசம் இது. சித்த விகாரத்தை உண்டுபண்ணுவதற்கில்லாமல், சித்தத்தை சுத்தம் செய்வதற்காக தெய்வ ஸம்பந்தமாக்கப்பட்ட சில்பங்கள். Cultural heritage (பண்பாட்டுப் பிதுரார்ஜிதம்) என்று இவற்றைப் புகழ்ந்துவிட்டால் போதாது. சில்பிகளுக் கும் ஸ்தபதிகளுக்கும் ஊக்க உத்ஸாஹங்களைத் தந்து கௌரவப்படுத்தி, அவர்களிடம் பலபேர் போய் கற்றுக்

Koviloor Digital Library

கொள்ளத் தூண்டுதல் தரவேண்டும். இதைத் தெரிவிக்கவே ஆகம ஸதஸில் இவர்களையும் வரவழைத்து முக்யத்வம் தருகிறோம். நாங்கள் ஆரம்பித்தபின் ஈச்வரனும் கண்ணைத் திறந்து பார்த்ததில் (நாங்கள் ஆரம்பித்ததும் அவனுடைய அநுக்ரஹ பலத்தில்தான்!) நிறைய ஜீர்ணோத்தாரணப் பணிகள் நடந்து, புதுப்புதுக் கோவில்களும் தினம்தினம் உண்டாகிக் கொண்டிருப்பதால் சில்ப சாஸ்த்ரத்துக்கும், அது தெரிந்த சில்பிகளுக்கும், சில்ப சாஸ்த்ர போதனைக்கும் கொஞ்சம் நல்ல தசை ஏற்பட்டுக் கொண்டிருக்கிறது.

இதற்கும் கவர்ன்மென்டில் பள்ளிக்கூடம், பயிற்சிசாலை வைத்திருக்கிறார்கள். நல்லவேளையாக இந்த சாஸ்த்ரம் ஆதியிலேயே ப்ராம்மணர்களால் கற்பிக்கப்பட்டு, தற்பித்துச் செய்யப்பட்ட வேறு ஒரு ஜாதியாரிடம் குலத்தொழில் முறையாகப் போய்விட்டதால் இதிலே இப்போது அதிகமாக சாஸ்த்ர விரோதமான அநாசாரங்களைக் கலக்க இடமில்லை. ஒரு தூணில் வேலைப்பாடு செய்வது, ஒரு மூர்த்தி அடிப்பது என்றால் நாள்கணக்கில், ஒவ்வொரு நாளும் மணிக் கணக்காக உழைத்தால்தானே முடியும்? இதில் ப்ராம்மணன் உட்கார்ந்தால் அவன் ஸகலருடைய க்ஷேமத்துக்காகவும் பண்ணவேண்டிய யக்ஞ கர்மாநுஷ்டானங்கள் என்ன ஆவது? அதனால்தான், வ்யாகரணம், தர்க்கம், மீமாம்ஸை முதலானதுபோல் தினமும் கொஞ்ச நேரம் வாயால் சொல்லிக் காதால் கேட்டு மனஸில் நிறுத்திக்கொள்வதாக இல்லாமல், நாள்பூரா உடம்பால் செய்யவேண்டிய கார்யத்திலேயே தன்னுடைய நோக்கத்தையும் ப்ரயோஜனத்தையும் உடையதான சில்ப சாஸ்த்ரத்தைத் தனியாய் ஒரு வகுப்புக்கு விடவேண்டியதாயிற்று.

இப்படியேதான் வைத்யம் முதலானவற்றையும் பிராம்மணனானவன் 'தியரி'யை மட்டும் போதித்துக் குலத் தொழிலாக இன்னொரு வகுப்பாருக்குத் தந்தது. அதைப் பெற்றுக்கொண்டவர்களுக்கும் அதனால் ஜீவனோபாயம்

Koviloor Digital Library

கிடைத்தது. இது ஒன்றே தொழில் என்பதால் அவர்கள் நல்ல ஒருமுனைப்பாட்டோடு அதிலே ஈடுபட்டு, சிறந்த செய்நேர்த்தியைப் பெற்றார்கள். அநுபவ மெருகு ஏற ஏற 'தியரி' என்று தெரியாமலேகூட தங்கள் பிள்ளைகளுக்கும், சிஷ்யப் பிள்ளைகளுக்கும் ஒரு பழக்க ஸாமர்த்யத்தாலேயே சில்பம் போன்ற கலைகளைச் சொல்லிக்கொடுக்க முடிந்தது.

ஆனால் தெரியவேண்டிய அளவுக்குத் 'தியரி'யும் தெரிந்துகொண்டு, எப்படி சாஸ்த்ர விரோதம் கொஞ்சமும் இல்லாமல் மூர்த்திகளைப் பண்ணவேண்டும், எப்படி மண்டபம் விமானம் முதலானவை எழுப்பவேண்டும் என்பதற்கெல்லாம் சில்ப சாஸ்த்ரங்களை ஒப்பிக்கிற ஞானமும் இவர்களுக்கு இருந்தது. (இப்போதும் இருந்துவருகிறது.) தெரியாத விஷயத்தில் ஸந்தேஹம் வருகிற விஷயத்தில் மாத்திரம் ப்ராம்மண குருவைக் கேட்டுக்கொண்டால் போதும் என்ற அளவுக்கு விச்வகர்ம வகுப்பு எனப்படும் இவர்களே இந்தக் கலையில் வித்யாப்யாஸம் தர வல்லவர்களாகிவிட்டார்கள்.

ஸமீப காலம் வரையில் நல்ல ஸதாசாரத்துடன் குடுமி, கச்ச வேஷ்டியுடன்தான் இவர்கள் இருந்து வந்திருக்கிறார்கள். இப்போதைய அவநிலையிலும்கூட இவர்களில் ரொம்பப்பேர் இப்படி இருக்கிறதைப் பாராட்டிச் சொல்ல வேண்டும். இவர்களுக்குப் பூணூல் உண்டு. சைவபோஜனம் தான் பண்ணுவார்கள். ஸம்ஸக்ருத த்வேஷமும் ப்ரம்மத் வேஷமும் இல்லாமல் சில்ப சாஸ்த்ர ப்ரகாரம் தொழிலைப் பண்ணுவார்கள். அதை நன்றாகப் படித்து விளக்கம் சொல்லும் ஞானமுள்ளவர்களும் இவர்களில் உண்டு. இப்போது "ஸமதர்மம்" என்று எதுவோ ஒன்று சொல்லிக் கொண்டிருக்கிறார்களே அந்த ஐடியாலஜிப்படி சில்பத்துக்கு கவர்ன்மென்ட் ஸ்கூல் அல்லது காலேஜ் என்றால் இதுவெல்லாம் நஷ்டமாக நேரும்தானே என்றால், "ஆமாம்" என்றுதான் வருத்தத்தோடு பதில்சொல்ல வேண்டியதாகிறது. "பின்னே, 'இதில் அநாசாரம் அதிகமாக வராது' என்றீர்

Koviloor Digital Library

களே!" என்றால், அதிகமாக வராது என்றேனேயொழிய வரவே வராது என்று சொல்லவில்லையே! காரணம், வேத சாஸ்த்ராப்யாஸத்துக்கு உள்ளதுபோல் அவ்வளவு கடுமையான நெறிகள் இதைக் கற்றுக் கொள்வோருக்கு இல்லை. நெறி கடுமையாய் இருக்க இருக்கத்தான், தோஷம் ஏற்படவும் அதிக சான்ஸ் உண்டு. மேலும் ஆசாரத்திலே கொஞ்சம் முன்னே பின்னே இருப்பவர்கள் சிற்பக்கலை கற்றுக்கொண்டு மூர்த்திகள் அடித்துக் கோயில்கள் கட்டினாலும்கூட அந்தக் கோவில்களுக்குக் கும்பாபிஷேகம் பண்ணி, மூர்த்திகளை ப்ரதிஷ்டை செய்யும்போது ஸகல அநாசாரங்களும் மந்த்ர பூர்வமாக நிவ்ருத்தி செய்யப்படுவதால், நடுவில் ஏற்பட்ட தோஷங்களும் போய்விடுவதாக த்ருப்திப்படலாம்.

கிராமக் கலைகள்

வம்ச வாரியாகப் பூசாரி உடுக்கடித்து பாரதம் சொல்லிக்கொண்டு வருகிறானா? அப்படியானால் அதுவும் ஒரு கலை. அதுவும் ஒரு சாஸ்த்ரம். அது இந்தத் தலைமுறையோடு போகாமல் பிள்ளைக்கோ, இன்னொருத்தனுக்கோ அவன் சொல்லித் தருவதற்கு சாச்வதமாக திரவிய உதவி ஏற்பாடு பண்ணுங்கள் என்கிறேன். இப்படியே கரகம், பொம்மலாட்டம் எதுவானாலும் கோவில், தெய்வம், புராணம் ஸம்பந்தப்பட்டதாக இருக்கிற அந்த கிராமக்கலை (நம் தேசத்தில் கிராமக்கலை, நகரக்கலை எதுவானாலும் ஈச்வரனை மையமாகக் கொண்டதுதான்) நம் காலத்தோடு நசிக்காமல் அடுத்த தலைமுறைக்குப் போகும்படியாகச் செய்யுங்கள் என்று சொல்லிவருகிறேன்.

ஆசிரியர்களையும் உண்டாக்கவேண்டும்

இன்னம் எத்தனையோ சாஸ்த்ரங்களிருக்கின்றன. இப்போதைய ஃபிஸிக்ஸ், கெமிஸ்ட்ரி, ஜுவாலஜி, ஜியாலஜி, என்ஜினீயரிங் முதலியவற்றுக்கு நம் தேசத்திலேயே மூல சாஸ்த்ரங்கள் இருக்கின்றன. வராஹமிஹிரரின் "ப்ருஹத் ஸம்ஹிதை"யையும், போஜராஜனின் "ஸமராங்கண ஸூத்ர

Koviloor Digital Library

தார"த்தையும் பார்த்தால் இவற்றைப்பற்றி அறியலாம். ஆனல் இவற்றில் மேல்நாட்டு ஸயன்ஸ்களே இங்கேயும் ப்ரசாரமானபின் நம் ஸ்வதேச விஞ்ஞான சாஸ்த்ரம் தெரிந்தவர்களே இல்லாமல் போய்விட்டார்கள். அதனல் இவற்றில் வாத்யார்கள் கிடைப்பதே ஸாத்யமில்லாததாகத் தோன்றுகிறது.

ஆனல் அறிவாளிகளாக, ஆராய்ச்சித் திறன் உள்ளவர்களாக இருப்பவர்கள் பழைய புஸ்தகங்களைப் பார்த்தும், மேலும் பல பழைய சுவடிகளைத் தேடிக் கண்டுபிடித்தும் பழைய வழிமுறைகளையும் அறிய முடியும்.

அறிந்தவர்கள் அப்புறம் வாத்யாராகி சிஷ்யர்களைத் தயாரிக்கவேண்டும்.

இப்படியாகச் சில வித்யைகளை இன்று கற்றுக் கொள்ளச் சிஷ்யர்கள் மட்டுந்தான் இல்லை என்றில்லாமல், அவற்றைக் கற்றுக் கொடுக்க ஆசிரியர்களும் இல்லாமலிருக்கிறது. இப்படிப்பட்டவற்றில், நல்ல புத்தி வன்மை உள்ளவர்களுக்குப் பழைய நூல்களைத் தேடி எடுத்துக்கொடுத்து, அல்லது அவர்களே தேடிப் பெறுவதற்கு எல்லா வசதியும் செய்துகொடுத்து, அவற்றை அவர்கள் படித்து ஆராய்ந்து அறியச் செய்யவேண்டும். இப்படி ஆசிரியரை முதலில் ஸ்ருஷ்டி செய்துவிட்டு, 'அப்புறம் இவரிடம் மாணவர்கள் சேர்ந்து இவர் புதிதாகத் தெரிந்து கொண்ட பழைய வித்யையைக் கற்றுக்கொள்வதற்கு ஏற்பாடு செய்து தரவேண்டும்.

இயற்கை விதிகளுக்குப் பிடிபடாத வித்யைகள்

நமக்குத் தெரிகிற natural forces-ஐ (இயற்கை சக்திகளை)க் கொண்டே ஏற்பட்ட சாஸ்த்ரங்களைத் தவிர நாம் அறிந்த natural laws-ல் (இயற்கை விதிகளில்) பிடிபடாத பல சாஸ்த்ரங்களும் இருந்திருக்கின்றன. அதெல்லாம் 'ஹம்பக்' என்று இப்போது ஒதுக்குகிருர்கள். அப்படிப்

Koviloor Digital Library

பண்ணுமல் அவற்றையும் படித்து, ப்ராக்டிகலாகப் பண்ணிப் பார்த்து, 'ஹம்பக்'கா இல்லையா என்று ரூபிக்கவேண்டும். என் அபிப்ராயம், இந்த சாஸ்த்ரங்களை ப்ராக்டிஸ் செய்யும் மநுஷ்யர்களில் ஹம்பக்குகள் இருக்கலாமே யொழிய, சாஸ்த்ரமே ஹம்பக் இல்லை என்பதுதான். நாடி சாஸ்த்ரம், ப்ரச்னம் என்று கேட்கிருர்களே அந்த சாஸ்த்ரம், சாயாபுருஷ சாஸ்த்ரம் என்று நிழலை வைத்து முடிவுகள் செய்ய ஏற்பட்ட சாஸ்த்ரம் முதலானவை இப்படிப் பட்டனவே.

புது ஸயன்ஸ் நம் பழைய ஸயன்ஸை அடியோடு அடித்துக்கொண்டு போய்விட்டதுபோல் இல்லாமல், "unscientific" என்று தற்போது பரிஹஸிக்கிற, ஆனுல் super-sciences ஆக (ஸயன்ஸுக்கு மேற்பட்டனவாக) இருக்கக்கூடிய இந்த நாடி சாஸ்த்ரம் முதலானவற்றைப் பாரம்பர்யமாக அறிந்து ப்ராக்டிஸ் செய்பவர்கள் ஏதோ சிலர் இன்றைக்கும் இருக்கிருர்கள். இவர்களையும் ஆதரித்து, இவர்களுக்கு சிஷ்யப் பிள்ளைகள் சேர்த்துக் கொடுத்து வித்யாரக்ஷணம் செய்யவேண்டும். ரஸவாத சாஸ்த்ரம், ஜ்யோதிஷம் ஆகியன ஸயன்ஸ், ஸயன்ஸில் வராதவை ஆகிய இரண்டும் கலந்தனவாக "ஸெமி-ஸயன்ஸ்" என்னும் படி இருக்கின்றன. இவற்றையும் இதுவரை சொன்னுற்போல் வ்ருத்தி பண்ணவேண்டும். தனியாகப் பல ஜோஸ்யர்கள் இப்போதும் நல்ல செல்வம் செல்வாக்கோடு இருப்பது வேறு விஷயம். நான் சொல்வது ஜ்யோதிஷ வித்யையின் ரக்ஷணம்.

வைத்ய சாஸ்த்ரம்

இப்படியே ஆயுர்வேத வைத்யர்கள், நாட்டு வைத்யர்கள் ஸித்த வைத்யர்கள் அங்கங்கே இருந்துகொண்டு அவர்களில் சிலபேர் நல்ல ப்ராபல்யத்தோடு இருப்பதால் இவற்றுக்கான சாஸ்த்ரங்கள் அவர்கள்பாடு என்று விட்டு விடக்கூடாது. நம்முடைய இந்தப் புராதன வித்யைகளை நன்ருகக் காப்பாற்றி, கெட்டிப்படுத்தி, வளர்த்துக்

Koviloor Digital Library

கொடுப்பது நம் எல்லோருடைய பொறுப்புமாகும் என்ற உணர்வோடு புது சிஷ்யர்கள் பழைய படிப்பு முறையில் உருவாவதற்கான கார்யங்களைச் செய்யவேண்டும்.

யோக சாஸ்த்ரம்

யோக சாஸ்த்ரத்தை விட்டுவிட்டேனே! "யோக சாஸ்த்ரம்" என்று மாத்ரம் சொன்னால் பதஞ்ஜலி செய்துள்ள அஷ்டாங்க யோகம் என்றுதான் பொதுவில் அர்த்தமாகும். அதன் கிளைகளாகவும், டெவலப்மென்ட்களாகவும் அதில் வராததாகவும் இன்னும் அநேக யோகங்களும் இருக்கின்றன. குண்டலிநீ யோகம், ஹட யோகம், க்ரியா யோகம் என்று எத்தனையோ இருக்கின்றன.

இவை ரொம்பவும் ஜாக்ரதையாக, மிகவும் பக்வப்பட்டவர்களே அப்யஸிக்க வேண்டிய வித்யைகள். ஸ்ாதாரணமாக, மனஸு கொஞ்சம் தெளிந்து சிறிது தெய்வ சிந்தனை செய்வதற்கும் த்யானிப்பதற்குங்கூட சில நிமிஷம் ப்ராணாயாமம் (மூச்சடக்கல்) செய்யும்படி சாஸ்த்ரம் சொல்கிறது. இது யோகத்தின் அங்கம்தான். ஆனால் இதற்கும் மேலே இதில் தீவ்ரமாக ஈடுபடும்போது ஜாக்ரதை தேவை. முறைப்படிப் பண்ணுவிட்டால், அல்லது ஸாதகன் இருக்கிற ஸ்திதிக்கு 'ஓவராகப் போய்விட்டால் மூளைக்கொதிப்பு, ஏன், மூளைக் கலக்கங்கூட உண்டாய்விடும்; தேஹத்தையும் மனஸையும் ஆரோக்யமாகவும், சுத்தமாகவும் ஆக்கிக் கொள்ளவே ஏற்பட்ட அப்யாஸத்தால் இரண்டுக்கும் ஹானியே உண்டாய்விடும். ஸித்தி, கித்தி என்று போய் அதீத சக்திகளை ஸம்பாதித்துக் கொள்வது, அதைக் கொண்டு பெயர் - புகழ் எடுக்கப் பார்ப்பது, ஒருத்தரை வசியம் பண்ணுவது, வசியத்துக்கு மசியாவிட்டால் யோக சக்தியால் ஹிம்ஸிப்பது என்று ஒரு அனர்த்த பரம்பரைக்கே இடமளிப்பதாகவும் ஆகிவிடும்—யோக சாஸ்த்ர சிக்ஷை பக்வமான பாத்ரத்துக்குப் போய்ச் சேராதபோது.

Koviloor Digital Library

தேஹாரோக்யத்துக்கேயான அநேக யோகாஸனங்கள் இருக்கின்றன. இவற்றிலும் கொஞ்சம் ஜாக்ரதை தேவை தானென்றாலும் மற்ற யோகஸாதனைகளைப்போல இதில் கஷ்டமோ, ஆபத்துக்கான ஹேதுவோ அவ்வளவு அதிகமாக இல்லை. சிலகாலமாக ஸ்கூல்களிலேயே இவற்றைச் சொல்லிக் கொடுக்கவேண்டும் என்றும் ஒரு பேச்சு அடிபடுகிறது. கையை காலை உடம்பை நுட்பமாக வளைந்துப் பண்ணவேண்டிய அப்யாஸத்தை அத்தனை குழந்தைகளுக்கும் கவனமாகச் சொல்லிக் கொடுப்பதற்குப் போதிய ஆசிரியர்கள் இருக்கவேண்டும். அதுவுமில்லாமல் யோகாஸனம் போடுவதற்கென்று ஒரு காலம் உண்டு. அப்போது வயிற்றிலே ஆஹாரம் இருக்கப்படாது என்று விதி. இவற்றை மீறினால் ஆரோக்யத்துக்குப் பதில் அநாரோக்யந் தான் வரும். ஆகையால் அதற்கான கட்டுதிட்டம் குலையாமல் கற்றுக் கொடுக்க முடியுமா என்று நிச்சயப்படுத்திக் கொண்டு 'மாஸ்-ஸ்கேலி'ல் ஸ்கூல்களில் சொல்லிக் கொடுக்கலாம். நம்முடைய குழந்தைகள் நல்ல தேஹதிடத்துடனிருப்பதற்காக எப்படியும் யோகாஸனத்தை வ்ருத்தி செய்யத்தான் வேண்டும்.

இதைவிட மற்ற யோகஸாதனைகளின் விஷயத்தில் பல மடங்கு ஜாக்ரதை தேவை.

அவை உத்தமமான யோகிகளே ஸத்பாத்ரமான சிஷ்யர்களுக்குக் கற்பித்துப் பயிற்சி தரவேண்டியவையாக இருக்கின்றன. அப்படிப்பட்ட யோகச்ரேஷ்டர்களை நானோ நீங்களோ போய், "இங்கே எங்கள் குருகுலத்தில் குருவாக வாருங்களேன்" என்று கூப்பிட்டு உட்கார்த்தி வைக்க முடியுமா என்பது ஸந்தேஹந்தான். அவர்களுக்கு சிஷ்யர்களும் நாம் பிடித்துக் கொடுப்பது அவ்வளவாக ஸாத்யமில்லை. எங்கே, எப்படி, எவருக்கு சிக்ஷை தருவது என்று அவர்களே முடிவுபண்ணுவார்கள், அவர்களுடைய ஆத்மசக்தியாலே நடத்திக் கொள்ளவும் செய்வார்கள். இப்போதுங்கூட இப்படி அநேக யோகாச்ரமங்கள் இருக்

Koviloor Digital Library

கின்றன. கொஞ்சம் ஜாஸ்தியாகவே இருப்பதுதான் கவலையாயிருக்கிறது! "Yoga Yoga" என்ற பேச்சு கூடுதலாகவே இருக்கிறது. அதனால் எனக்கு என்ன தோன்றுகிறதென்றால், நான் சொன்ன ரீதியில் யோக அப்யாஸத்துக்காக (அதாவது அதை ப்ராக்டிஸ் செய்வதற்காக) இல்லாமல், அதன் 'தியரி'யை மட்டும் அறிவதற்காக குருகுலம் வைக்கலாம். அப்போது, நிஜமாக 'இதுதான் யோக சாஸ்த்ரக் கருத்து, அது சொல்லும் முறை' என்று தெரிந்தவர்கள் உருவாவார்கள். இப்படி இவர்கள் உண்டாவதாலேயே, யோகம் என்ற பெயரில் எதை வேண்டுமானாலும் சொல்லி ஜனங்களைக் கவருகிறவர்களுக்கு ஒரு பயம் உண்டாக இடமேற்படும். உண்மையான யோகாச்ரமங்கள் மட்டுமே உண்டாகும்.

'தியரி' மட்டும்; 'ப்ராக்டிஸ்' இல்லை

நான் ரஸவாத சாஸ்த்ரம் பற்றிச் சொன்னதைக்கூட இப்படித்தான் எடுத்துக்கொண்டு நடத்தவேண்டும். இல்லாவிட்டால் அதைப் படிக்கிற பலர் பித்தளையை தங்கமாக்குகிறேனென்று புறப்பட்டு அநேக பித்தலாட்டங்களுக்கு இடம் கொடுத்துப்போகும். ('பித்தலாட்டம்' என்ற வார்த்தையே ரஸவாத ஏமாற்றில் உண்டானதுதான். 'பித்தல'வும் 'ஹாடக'மும் சேர்ந்து 'பித்தலாட்டம்' பித்தலம்தான் பித்தளை. ஹாடகம் என்றால் தங்கம்.) "இதுவும் ஸாத்யம், இதற்கு பாஸிபிலிடி இருக்கிறது" என்று அறிவு மட்டத்தில் இம்மாதிரி சாஸ்த்ரங்களைப் போதித்து, ஈச்வரனின் பெரிய வரப்ரஸாதமான மநுஷ்ய அறிவின் ஆற்றல்களைத் தெரிந்துகொள்ளப் பண்ணுவதோடு நிறுத்த வேண்டுமே தவிர, இந்த வித்யாசாலைகளில் ப்ராக்டிகல் க்ளாஸ் என்று வைக்கக்கூடாது. சாஸ்த்ரம் நிஜம்தான் என்று காட்டுவதற்காகக் கொஞ்சம் டெமான்ஸ்ட்ரேஷன் வேண்டுமானால் குரு செய்துகாட்டலாம். ஆகக்கூடி ஜாக்ரதையுடன் கையாளவேண்டிய விஷயம். அதற்காக, 'அழிந்து போகட்டும்' என்று விடக்கூடாத வித்யை,

Koviloor Digital Library

வேதாந்த விஷயத்திலும் இப்படியே

யோக சாஸ்த்ரம்பற்றி நான் சொன்ன ஒரு அம்சம் வேதாந்தத்துக்கும் பொருந்துவதுதான். எப்படி ஒரு யோகியை நாம் குருவாக உட்கார்த்திவைத்து, சிஷ்யன் பிடித்துக்கொடுக்க முடியாதோ அப்படியேதான் வேதாந் தத்தை அப்யஸித்து ஸித்தி பெற்ற ஞானி விஷயமும். பக்திச்சார்புள்ள வேதாந்த ஸம்ப்ரதாயமானுல் அதிலே ஸித்திபெற்ற பரம பக்தரையும் இப்படி நாம் குருகுலத்தில் கொண்டுவர முடியாது. இங்கேயும் அறிவு ரீதியில் வேதாந்த சாஸ்த்ர ஞானம் தரத்தான் நாம் குருகுலம் வைக்கவேண்டியதே தவிர, அதை அங்கேயே அநுபவமாகப் பண்ணித் தருவதற்கு அல்ல. பூர்வகால வித்யாப்யாஸத் திலும் இப்படித்தான் வேதாந்த சிக்ஷை நடந்ததென்று சொன்னேனல்லவா? தற்போது வித்யாசாலேயில் கற்றதைக் கொண்டு வித்யார்த்தி பிற்பாடு ஒரு உத்தமமான ஞான குருவை, அல்லது பக்த ச்ரேஷ்டரை, அல்லது யோகீச்வரரை அடைந்து ஸாதனேக்குப் போய்க்கொள்வான். ஆனுல் அறிவு ரீதியில் சாஸ்த்ரங்களேக் கற்றுக் கொள்ளும்போதுகூட அதை குணத்தோடும் ஆசாரத்தோடும் ஸம்பந்தப்படுத்தா மல் இப்போது விட்டிருப்பதுபோல் இருக்கக்கூடாது. நல்ல ஒழுக்கக் கட்டுப்பாட்டுடனும், பக்தி விச்வாஸம் முதலான பண்புகளுடன் கற்றுக்கொண்டால்தான் மாணவன் நன்ருக உருவாவான்; கல்வியும் பிற்காலத்தில் கொஞ்சங்கூட தப்பு வழியில் ப்ரயோஜனமாகாமல் நல்லதற்கே ஆகும் என்பதைத் தான் திரும்பத்திரும்பச் சொல்லி வந்திருக்கிறேன்.

இப்படி நம் தேசத்துடையதாக வந்துள்ள ஸகல கலேகளுக்கும் சாஸ்த்ரங்களுக்கும் நம் தேச முறைப்படியே தொடர்ந்து வித்யாப்யாஸம் நடக்க நாமெல்லாரும் முனேந்து ஏற்பாடுகள் செய்யவேண்டும். முடிந்தமட்டும் குருகுல அம்சங்கள் இருக்கும்படியாக இந்த வித்யா ப்யாஸத்தை அமைக்கவேண்டும். அப்போதுதான் ஆசார

Koviloor Digital Library

மும் குணமும் வித்யையோடு கைகோத்துக் கொண்டு போகும். ஆசாரம், குணம் இல்லாவிட்டால் வேதமே வேதமில்லை என்று வசனம் ஓதுவதைவிட (அதாவது கற்பதைவிட) ஒழுக்கம்தான் ப்ராம்மணனுக்கு முக்யம் என்று வள்ளுவரே தீர்ப்புச் சொல்லியிருக்கிறாரே!*

செய்யவேண்டிய பணிகள்

இந்தப் பெரிய பணியில் முதல் ஸ்டெப்பாகச் செய்ய வேண்டியது தற்போது மிஞ்சியுள்ள சாஸ்த்ரக்ஞர்களை யெல்லாம் குருகுலமோ, பாடசாலையோ எதுவோ ஒன்றில் பிடித்துப்போட்டு போதிப்பதற்கு ஊக்கம் தரவேண்டும். அங்கே பழைய சாஸ்த்ரங்களின் ஸம்பந்தமான நூல்களை, சுவடிகளையெல்லாம் முடிந்தமட்டும் சேகரித்து வைக்க வேண்டும். இவற்றில் ரிஸர்ச்சுக்கும் தூண்டுதல் அளிக்க வேண்டும். முக்யமான நூல்களையாவது அச்சுப் போடு வதற்கு ஸஹாயம் செய்யவேண்டும்.

கற்றவன் கற்பிப்பவனாக வேண்டும்

நன்றாகப் படித்தறிந்த ஒருத்தர் நாலு பேருக்காவது அதைப் படிப்பிக்காமல் போனார் என்று ஏற்படவே கூடாது. நன்றாகக் கற்று வித்வானாகிற எவனும் அப்புறம் தான் கற்றதை மற்றவர்களுக்கும் கற்றுக்கொடுத்து ப்ரசாரம் செய்தேயாக வேண்டுமென்பது ஆன்றோர் விதித்த விதி. தன்மட்டில் கற்றவனாயிருந்து பயனில்லை; கற்பிப்பவனா யிருந்து கல்வியின் பயன் வருங்கால ஸமுதாயத்துக்கும் போகும்படிச் செய்யவேண்டும்.

மநுஷ்யனுடைய வாழ்க்கையில் ப்ரஹ்மசர்யம், கார்ஹஸ்த்யம், வானப்ரஸ்தம், ஸந்ந்யாஸம் என்று நாலு

---

* மூன்றாம் பகுதியில் "ஆசார விஷயங்கள்" என்ற உரையில், "ஆசாரங்களின் பாகுபாடு : குறள் தீர்ப்பு" என்ற உட்பிரிவு பார்க்க.

Koviloor Digital Library

ஆச்ரமம் உள்ளது என்ருல், கல்வி கற்பிப்பதிலும், நாலு ஸ்டேஜ்கள் உண்டு. அதீதி, போதம், ஆசரணை, ப்ரசாரணை என்று இந்த நாலுக்குப் பேர். அதீதி என்ருல் படிப்பது. முதலில் நன்ருகப் படிக்கவேண்டும். அப்புறம் போதம், அதாவது படித்ததை நன்ருகப் புரிந்துகொண்டு அதிலே மேலும் புது அறிவு பெறுவது. மூன்ருவதாக ஆசரணை. முதலிரண்டும் இப்போதுங்கூடப் பல ஸப்ஜெக்ட்களில் நடந்துவிடுகின்றன. ஆனுல் இந்த மூன்ருவது விஷயத்தில் தான் கோளாருக இருக்கிறது. அது என்ன? ஆசரணை என்ருல் அறிவிலே இறக்கிக் கொண்டதை நம்முடைய வாழ்க்கையிலே இழைத்து, நடைமுறையில் நடத்திக் காட்டுவது என்று அர்த்தம். கற்றபின் அதற்குத் தக நிற்பது ஆசரணை.

இந்த மூன்ருேடு மட்டும் வித்வானின் லக்ஷணத்தை முடிக்காமல், முடிவாக 'ப்ரசாரணை' என்றும் ஒரு நாலாவது லக்ஷணம் சொல்லியிருக்கிறது. இதுதான் தான் கற்ற கல்வி தன்னோடு போகாமல் அதை நாலுபேருக்குக் கற்றுக் கொடுப்பது. ப்ரசாரம் செய்வது ப்ரசாரணை.

ஸ்ரீஹர்ஷர் இந்த விஷயத்தைக் கவி சாதுர்யத்தோடு சொல்லியிருக்கிருர். நளனுடைய கதையை "நைஷதம்" என்ற பெயரில் எழுதியிருப்பவர் அவர். நளன் நிஷத தேசத்து ராஜாவானதால் புஸ்தகத்துக்கு "நைஷதம்" என்று பெயர் வைத்தார். வித்வான்கள் விரும்பும்படியான காவ்யம் அது. "நைஷதம் வித்வத் ஔஷதம்" —நைஷத காவ்யமானது வித்வான்களுக்கு லேஹ்யம் மாதிரி—என்று சொல்வார்கள். அதிலே அவர் நளன் சதுர்தச வித்யைகளைக் கற்றுத் தேர்ந்தான் என்று சொல்லும்போது இந்த ஸமாசாரம் சொல்லியிருக்கிருர். 'சதுர்தச' என்ற வார்த்தையில் சிலேடை செய்து சொல்லியிருக்கிருர்.

'சதுர்தச' என்ற வார்த்தை இரண்டுவிதமாக அர்த்தம் கொடுக்கும். பதிநாலு என்பது ஒரு அர்த்தம். தசம் - பத்து; சதுர்தசம் - நாலு ப்ளஸ் பத்து, அதாவது பதிநாலு.

Koviloor Digital Library

நாலு வேதம், அதன் ஆறு அங்கம், நாலு உபாங்கம் என்பவை சேர்ந்து பதிநாலு வித்யைகள்.

'சதுர்தச' என்பதற்கு இன்னொரு அர்த்தம் நாலு தசை, நாலு விதமான ஸ்டேஜ்கள் என்பது.

சதுர்தச வித்யைகளைக் கற்று, அவற்றுக்கு அதீதம், போதம், ஆசரணை, ப்ரசாரணை என்று சதுர்தசைகளை நளன் கொடுத்தான் என்று (கவி ஸ்ரீஹர்ஷர்) வார்த்தை விளையாட்டுப் பண்ணியிருக்கிறார்.

அதீதபோத ஆசரண ப்ரசாரணை:
தசாச்-சதஸ்ர: ப்ரணயந்-நுபாதிபி:|
சதுர்தசஸ்த்வம் க்ருதவாந் குதஸ்வயம்
நவேத்மி வித்யாஸு சதுர்தசஸ்வயம் ||

பிரசாரப் புரளி

ப்ரசாரணை என்பது இந்த நாளில் எடுத்ததற்கெல்லாம் ஆர்ப்பாட்டமாக ப்ரசாரம், propaganda என்று செய்கிற மாதிரியானதல்ல. இப்போது ஏதோ 'ஸ்டாடிஸ்டிக்ஸ்' களை (புள்ளி விவரங்களை)க் காட்டி ஒரு விஷயத்தை 'ஓஹோ' என்று நினைக்கும்படியாகவே 'ப்ராபகாண்டா' இருக்கிறது. இத்தனை பம்ப் ஸெட் போட்டோம், இத்தனை ஊரில் எலெக்ட்ரிக் லைட் போட்டோம், திட்டத்தில் இதற்கு இத்தனை கோடி செலவழித்தோம் என்கிறாற் போல 'ப்ராபகாண்டா' என்பது நடக்கிறது வாஸ்தவத்தில் (இவற்றால் ஜனங்களுக்கு) ஏற்பட்ட ப்ரயோஜனம் குறிப் பிடும்படியாக இருந்ததா என்று கேள்வி எழுந்தாலுங்கூட ஸ்டாடிஸ்டிக்ஸைப் பார்த்து ப்ரமித்துப் பாராட்டிவிடத் தோன்றிவிடுகிறது.

மதத்தில் கன்வர்ஷன் (மதமாற்றம்) செய்கிறவர்கள் தான் இப்படி ப்ராபகாண்டா செய்வதில் மஹா கெட்டிக் காரர்களாயிருக்கிறார்கள். பணத்தை, காசைக் கொடுத்து, இல்லாவிட்டால் வேறே ஏதோ ஸாமர்த்யம் செய்து

Koviloor Digital Library

வளைத்து, ஒன்றுமறியாத பாமர ஜனங்களை அப்படியே சேரி சேரியாகத் தங்கள் மதத்துக்குத் தள்ளிக்கொண்டு விடுவார்கள். அப்புறம் அவர்களைக் கணக்கெடுத்து (அதோடு கொஞ்சம் சேர்த்துக்கொண்டாலும் சேர்த்துக்கொண்டு!) "பார்த்தீர்களா, இத்தனை பேர் ஹிந்து மதம் உபயோகமில்லை என்று எங்கள் மதத்தில் விச்வாஸம் வைத்துச் சேர்ந்துவிட்டார்கள்" என்று ஸ்டாடிஸ்டிக்ஸ் காட்டி ப்ரசாரம் செய்வார்கள்.

அங்கே அப்புறம் நம்மவர்கள் போய் கன்வர்ட் ஆனவர்களை எப்படியாவது பிடித்து, "நம்ப மதத்திலே உங்களுக்கு என்ன பிடிக்கவில்லை? அந்த மதத்திலே என்ன பிடித்து அதிலே சேர்ந்தீர்கள்?" என்று கேட்டால் அவர்கள் முழிமுழி என்று முழிப்பார்கள். ரொம்பவும் கேட்டால், "எங்களுக்கு ஹிந்து மதத்தில் எதுவும் பிடிக்காமலில்லை. அப்படியே இதில் பிடிக்காததாக ஏதாவது இருந்தாலுங்கூட, அந்த மதத்தில் இதைவிடப் பிடித்ததாக எதுவுமில்லை. நிஜத்தைச் சொல்லப்போனால் எங்களுக்கு இந்த மதத்தைப் பற்றி ஒன்றுமே தெரியாது. இதிலே எங்களுக்கு அபிமானமோ, பொதுவாக மதவிஷயம் என்பதிலேயே எங்களுக்கு அக்கறையோ இல்லை. அவர்கள் எங்களுக்கு இது இதுகளைக் கொடுத்தார்கள்; இன்னம் என்னென்னவோ செய்வதாக வாக்குறுதி கொடுத்திருக்கிறார்கள்; எங்களுக்கு ஏதேதோ 'ரைட்'கள் வாங்கித் தருவதாகச் சொல்லியிருக்கிறார்கள். இதற்காகவெல்லாந்தான் அவர்களுடைய மதத்துக்குப் போனோமே தவிர, அந்த மதக் கொள்கை புரிந்தோ, பிடித்தோ போகவில்லை" என்று உண்மையைப் போட்டு உடைத்துவிடுவார்கள்.

"ப்ரசாரணை" என்ற வார்த்தையைப் பார்த்துத் தற்கால ப்ரசாரம் மாதிரியாக்கும் அது என்று நீங்கள் நினைத்துவிடப் படாதே என்பதற்காகச் சொல்கிறேன். ப்ரசாரம் என்றாலே புரளி ப்ரசாரம்தான் என்று எடுத்துக் கொண்டுவிடக் கூடாது என்பதற்காகச் சொல்கிறேன்.

Koviloor Digital Library

நம்பரைக் காட்டி ப்ரமிக்க வைத்து ப்ரசாரம் செய்வது நம்முடைய தேசாசாரத்தில் கிடையவே கிடையாது. இத்தனை பேர் படிக்கிறார்கள் என்று ஸ்டாடிஸ்டிக்ஸ் காட்டுவதற்காக வித்யா ப்ரசாரம் பண்ணும்படியாக நம் சாஸ்த்ரங்கள் சொல்லவேயில்லை. பாத்ரம் பார்த்து, நிஜமாகவே க்ரஹிக்கக் கூடியவர்களுக்குத்தான் வித்யையை ப்ரசாரம் செய்யவேண்டுமென்று விதித்திருப்பதை முதலிலேயே சொன்னேன்.

இப்படித்தான் ப்ராபகாண்டா பண்ணாமலே ஒவ்வொரு வித்யார்த்தியும் முதலில் தான் வித்வானாகி, அப்புறம் குருவாக ஆகித் தானும் சில வித்யார்த்திகளுக்கு நிஜமாகவே போதித்து அவர்களை நிஜமான வித்வானாக்க வேண்டும் என்று வைத்திருந்தார்கள். சிஷ்யன் குருவாகி வாழையடி வாழையாக மேலும் சிஷ்யர்களைப் பயிலுவிக்க வேண்டுமென்பது நம்முடைய மரபு.

ஒருத்தன் தான் ஸம்பாதித்த ஸொத்தை யாருக்கும் ப்ரயோஜனப்படாமல் புதைத்து வைத்துவிட்டுச் செத்துப் போனால் எத்தனை தோஷமோ, அதைவிட தோஷம், தான் கற்ற வித்யையை நாலு பேருக்குக் கொடுக்காமல் செத்துப் போவது என்பது நம் முன்னோர்களின் கருத்தாக இருந்திருக்கிறது.

திரவிய உதவியும் ஸமூஹ கௌரவமும்

எனவே தற்போது வித்வானாக இருந்துகொண்டும் சிஷ்யர்கள் கிடைக்காமலிருப்பவர்களை முதலில் பிடித்து அவர்களிடம் சில பேராவது சேர்ந்து படிக்கும்படி வசதி செய்துதரவேண்டும்.

Chair என்று யூனிவர்ஸிடிகளில் வைப்பதுபோல் இந்த வித்வான்களை வைத்து அதே போன்ற ஸன்மானம் கிடைக்கச் செய்யவேண்டும். ஸன்மானம் என்பது தாம்பாளத்தில் வைத்து நீட்டுவது மட்டுமல்ல; ஸமூஹத்தில் கௌரவத்தை உண்டாக்குவதும்தான். ராஜாவைவிடப் பண்டிதன் மேல்—

Koviloor Digital Library

இவனுக்குத்தான் "சென்ற விடமல்லாம் சிறப்பு" என்று போற்றிய நம் தேசப்பண்பு மறைய விடக்கூடாது.

அபூர்வமான பழைய சாஸ்த்ரங்களில் பண்டிதர்களாகக் கிடைக்கக் கூடியவர்களையெல்லாம் நம் மடத்திலேயே சேர்த்து நிரந்தரமாகப் பராமரிக்க வேண்டும் என்றும், அவர்களைக் கொண்டு சிஷ்ய பரம்பரைகள் உற்பத்தி பண்ணவேண்டுமென்றும் எனக்குப் பேராசை. அம்பாள் ஸங்கல்பம் எப்படியோ?

எவனாவது ஒரு மாணவன் பழைய சாஸ்த்ரங்களில் ஒன்றைப் பற்றிக் கேள்விப்பட்டு, நிஜமான ஆர்வத்துடன் அதைக் கற்றுக்கொள்ள வேண்டுமென்று நினைத்தால், 'உனக்கு வாத்யாரில்லை; நீயே ஏதாவது புஸ்தகம், சுவடியைத் தேடி முட்டிக்கொள்' என்று சொல்லாமல், 'வாப்பா, உனக்காகத்தான் இதோ வாத்யார் தேடிப் பிடித்து வைத்திருக்கிறோம்; நீ வருவாயா வருவாயா என்றுதான் அவர் எதிர்பார்த்துக் கொண்டிருக்கிறார் என்று நாம் சொல்லும்படியாக ஏற்பாடுகள் செய்து நமக்குப் பெருமை தேடிக்கொள்ள வேண்டும்.

கற்றுக்கொடுக்கத் தெரியாத, அல்லது இஷ்டப்படாத பண்டிதர்களையும் பிரார்த்தித்துக்கொண்டு, "மசித்து", அந்த சாஸ்த்ரம் அவரோடு போகாமல் நாலு சிஷ்யர்களிடம் சேருமாறு செய்யவேண்டும். அவர் இந்த வழிக்கு வர முடியாதவர் என்றே ஏற்பட்டாலும், அல்லது அவரிடம் படிக்க எவனுமே வரவில்லை என்று ஏற்பட்டாலும்கூட, அவருக்குப் பராமரிப்பு தரத்தான் வேண்டும். என்றைக்கோ உப்புக் காய்ச்சிப் பத்துநாள் ஜெயிலுக்குப் போனவர்களை த்யாகி என்று கௌரவப்படுத்தி ஆயுஸ் பூரா பென்ஷன், அவர்கள் "போயிருந்தால்கூட" அவர்களுடைய குடும்பத்துக்குப் பென்ஷன் என்று கொடுக்கவில்லையா? அம்மாதிரி அறிவுக்கே தங்களைத் தந்துகொண்டு எந்த சாஸ்த்ரமானாலும் ஸரி, கலையானாலும் ஸரி, அதை ஸாங்கோபாங்கமாகத்

Koviloor Digital Library

தெரிந்துகொண்டிருக்கிறவர்களுக்கும் நாம் வாழ்க்கை வசதிகள் கொடுத்து, மரியாதை பண்ணி வைத்துக் கொள்ளத்தான் வேண்டும். அவர்கள் சிஷ்யர் என்று வைத்துக்கொண்டு பாடம் சொல்லித் தராவிட்டால்கூட அவர்களை அபிமானித்து, உத்ஸாஹப்படுத்தி வைத்துக் கொண்டால் எப்படியோ ஒரு விதத்தில் அவர்களுடைய சரக்கு வெளியிலே வராமல் போகாது. ஸதஸ்களில் அவர் களைப் பேசப் பண்ணி நோட்ஸ் எடுத்துக்கொள்ளலாம். அறிஞர்களாக உள்ளவர்கள் அவர்களிடம் கேள்விகள் கேட்டு ("பரிப்ரச்னம்" பண்ணி) விஷயங்களைக் கறந்து கொள்ளலாம். அவருடைய சாஸ்த்ரத்தில் குறிப்பாக topic-களைச் சொல்லி வ்யாஸம் (thesis) மாதிரி எழுதப் பண்ண லாம்; அல்லது அவருடைய ஸஹாயத்துடன் அறிவாளி களே எழுதலாம். ஆக, நம் சாஸ்த்ரங்களைக் காக்க நம்மால் என்ன பண்ண முடியுமோ அவ்வளவும் செய்யவேண்டும்.

ஒவ்வொருவரும் வித்வானாக வேண்டும்

ஒரு வாத்யார் எவரோ ஒரு சிஷ்யருக்குப் பாடம் சொல்லிக்கொடுக்க ஏற்பாடு பண்ணித் தருவது மட்டுமில் லாமல்—இது ரொம்பவும் அத்யாவச்யமான கார்யம்தான்; இதற்கு நீங்கள் கைகொடுக்கத்தான் வேண்டும், தோள் கொடுக்கத்தான் வேண்டும்; ஆனால் இப்படி இன்னொருத்தன் படிப்பதற்கு வசதி பண்ணித்தருவதோடு மாத்திரம் நின்று விடாமல்—உங்களில் ஒவ்வொருவருமே நம்முடைய இத்தனை சாஸ்த்ரங்களில், வித்யைகளில், கலைகளில் ஏதாவது ஒன்றிலாவது தேர்ச்சிபெற வேண்டும். 'ஆபீஸுக்குப் போனேன், ஸம்பாதிச்சேன், குடும்பம் நடத்தினேன்' என்பதோடு நின்றுவிடாமல், நூற்றுக்கணக்காக இருக்கப் பட்ட நம்முடைய வித்யைகளில் எதாவது ஒன்றிலாவது ஒவ்வொருத்தரும் நல்ல ஞானம் ஸம்பாதித்துக் கொள்ள வேண்டும். நம் வித்யைகள் வளர ஆசார்யர்களும் சிஷ்யர் களும் உண்டாக்கித் தருவதோடு நிற்காமல் நீங்கள்

Koviloor Digital Library

ஒவ்வொருவரும் சிஷ்யராகி ஏதாவது ஒரு வித்யையை அப்யஸித்து அதில் நீங்களே ஆசார்யராகி இன்னொருத்தருக்குச் சொல்லிக்கொடுக்கக்கூடிய அளவுக்குத் திறமை பெற வேண்டும்.

பாஷா சாஸ்த்ரத்தில் இன்டரெஸ்ட் இருந்தால் வ்யாகரணம், நிருக்தம் இப்படி ஏதாவது நன்ருகக் கற்கலாம். அறிவு வாதத்தில் இன்டரெஸ்ட் இருந்தால் தர்க்கம் படிக்கலாம். ஸங்கீதத்தில் இன்டரெஸ்ட் இருக்கிறதா? வீணை, ம்ருதங்கம், ஜலதரங்கம், வாய்ப்பாட்டு ஏதாவது கற்றுக் கொள்ளலாம். இல்லாவிட்டால் ஒரு உளியை வைத்துக் கொண்டு ஒரு சில்பம் பண்ணக் கற்றுக்கொள்ளலாம். இப்படிப் பலபேர் பல உளிகளை வைத்துக்கொண்டு தட்டியது தான் இன்றைக்கும், 'இந்திய நாகரிகம் என்று ஒன்று வானளாவ இருக்கிறது' என்று உலகத்துக்கெல்லாம் காட்டும் வானளாவும் கோபுரங்களாக உயர்ந்து நிற்கிறது.

அஹம் குறைய "அவனை"த் தொடர்புறுத்துக!

இங்கே அந்த உளி எப்படி ஈச்வர ஸம்பந்தம் பெற்றதோ, சில்பி எப்படி தன் கலைத்திறமையை ஈச்வரார்ப்பணம் பண்ணினுனே அப்படியேதான் எந்தக் கலையானுலும் சாஸ்த்ரமானுலும் ஸயன்ஸானுலும் அதை ஈச்வரார்ப்பணம் பண்ணவேண்டும். இல்லாவிட்டால் 'இதிலே நாம் கெட்டிக் காரன்' என்ற அஹங்காரம்தான் உண்டாகும். ஆச்ரயிப்பவர்களின் அஹங்காரத்தைக் குறைக்கத்தான் மதபீடங்கள் இருக்கின்றன. அதில் ஒன்றில் உட்கார்ந்து கொண்டிருக்கிறேன். நம்முடைய பெரிய பண்பாட்டுப் பாரம்பர்யம் வீணுகப் போகப்படாது என்பதில் எனக்கு இருக்கிற ஆசையினுல் அனைவரும் நம்முடைய வித்யைகளில் ஒன்றையேனும் நன்கு கற்ற அறிவாளிகளாக ஆகவேண்டும், அல்லது கலைஞர்களாகவேண்டுமென்று சொல்லி உங்களைத் தூண்டிக் கொண்டிருப்பதில், பீடத்தின் முக்ய உத்தேசமான அஹங்

Koviloor Digital Library

காரக் குறைப்புக்கு நேர் எதிராகப் பண்ணிவிடக் கூடாதல்லவா? அதனாலே சொல்கிறேன்—அனைவரும் அறிவாளிகளாக வேண்டியதுதான். ஏதாவது ஒரு கலையில் தேர்ச்சிபெற வேண்டியதுதான். ஆனால் அதே ஸமயத்தில் அனைவருக்கும் நல்ல பக்தியும் இருக்கவேண்டும். 'கற்பதெல்லாம் அவன் அருளால்; கலைகளெல்லாம் அவன் ப்ரஸாதம்' என்ற எண்ணத்தோடு கற்கவேண்டும். அப்புறம் அதை ப்ரயோஜனப்படுத்துவதும் முடிவாக அவனை நினைவுபடுத்துகிற விதத்திலேயே இருக்கவேண்டும்.

பாஷா சாஸ்த்ரத்தில் போனாலும் சப்த ப்ரஹ்மத்தைக் காட்டிக் கொடுக்கவேண்டும். ஸங்கீதத்தில் போனால் நாத ப்ரஹ்மத்தில் முடிக்கவேண்டும். வாதம், அறிவாராய்ச்சி என்று போனாலும் இவற்றால் எந்த அளவுக்குப் பரமாத்ம தத்வத்தைக் காட்டிக் கொடுக்க முடியுமோ அந்த அளவுக்கு அதைச் செய்யவேண்டும். கணிதமும் ஸங்க்யை (எண்ணிக்கை)யில் அளவிடமுடியாத ஆத்ம தத்வத்தை நினைப்பூட்ட முடியும்—பாஸ்கர ராயர், ஆர்யபடர் முதலியவர்களுடைய கணித நூல்களின் மங்கள ச்லோகங்களைப் பார்த்தால் தெரியும், அவர்கள் எப்படி இதையும் ஈச்வர ஸம்பந்தமாக்கினார்களென்று. தாவர சாஸ்த்ரமா, biology-யா (உயிரியல் சாஸ்த்ரமா), எதுவானாலும் ஸ்ருஷ்டிகர்த்தாவின் விசித்ர விசித்ரமான கல்பனா சக்தியை ரஸிக்கவைப்பதில் முடிய முடியும். ஜாகரஃபி அவன் எப்படி ஜகத்ஸ்வரூபமாக மலைகள், பீடபூமிகள், நதிகள், பாலைவனங்கள், க்லைமேட்டுகளாக விதவித வேடிக்கை பண்ணுகிறான் என்பதைக் காட்டும்படிச் செய்யமுடியும். 'அஸ்ட்ரானமி' அவன் அந்தரத்தில் கோடாநுகோடி லோகங்களை அதிசய கதிகளில் ஆட்டி வைப்பதைத் தெரிந்துகொள்ள உதவி புரிய முடியும். ஃபிஸிக்ஸினாலே அவன் ப்ருக்ருதி (இயற்கை) ரூபத்தில் போட்டிருக்கிற சட்ட திட்ட ஒழுங்குகளைப் பார்த்து நம்மையும் மநுஷ்யதர்ம ஒழுங்கிலே கொண்டுவந்து கொள்ளுமாறு அறிவுபெற முடியும். இப்படி எந்த ஒரு வித்யையைத் தெரிந்துகொண்

Koviloor Digital Library

டாலும் அதன் மூலம் தானும் பரமாத்ம தத்வத்திலே ஒரு அம்சத்தைப் புரிந்துகொண்டு, மற்றவர்களுக்கும் புரியப் பண்ணவேண்டும். இது ரொம்ப முக்யம். இல்லாவிட்டால் எல்லா அஹங்காரங்களையும்விட மோசமான "வித்யா கர்வ"த்தில் நீங்கள் அமுந்திப்போவதற்கு நான் வழி சொன்னதாக ஆகிவிடும்.

வீணாகும் நேரம் வித்யைக்கு ஆகட்டும்

"எத்தனையோ வாழ்க்கை ப்ரச்னை எங்களுக்கு. ஆபீஸ் கார்யம், வீட்டுக் கார்யம் என்று அலைகிறோம், அவதிப்படுகிறோம். அது தெரியாமல், எங்கேயோ மடத்தில் உட்கார்ந்துகொண்டு, 'அதைக் கத்துக்கோ, இதைக் கத்துக்கோ' என்று நீங்கள் உபதேசம் பண்ணினால் எப்படி?" என்று கேட்கலாம். மனஸிருந்தால் எதையும் செய்துவிடலாம். இத்தனை வாழ்க்கை ப்ரச்னை இருந்தாலும் எத்தனை பொழுது அரட்டை, ந்யூஸ் பேப்பர், ஸினிமா, சீட்டுக்கட்டு இத்யாதியிலே போகிறது? இப்படி வீணாகப்போகிற காலத்தில் பாதி பொதுநலப்பணிகளுக்கு என்றும், பாதி ஏதாவது வித்யாப்யாஸத்துக்கு என்றும் வைத்துவிட்டால் போதும்—ஸமூஹப் பணிகளும் நடந்துவிடும், நம்முடைய வித்யைகளும் ப்ரகாசம் பெற்றுவிடும், நாமும் ப்ரகாசம் பெற்றுவிடுவோம்.

வேலை - வெட்டி, குடும்பத்தொல்லை என்று மன்றாடுபவர்களுக்கு 'டைவர்ஷன்' வேண்டாமா என்று கேட்கலாம். ஆசையோடு மனஸ் ஈடுபட்டு ஏதாவது ஒரு வித்யை அப்யஸிக்க ஆரம்பித்தீர்களானால் உங்களுக்கே தெரியும், இந்த அப்யாஸத்தைவிடப் பெரிய 'டைவர்ஷன்' எதுவும் இல்லையென்று. களைத்துப்போன மனஸுக்கு வேண்டிய உத்ஸாஹத்தை இவையே (வித்யைகளே) ஊட்டிவிடும். அப்படியும் ஒரேயடியாக நீங்கள் 'டைவர்ஷன்' என்பதை விட்டுவிடும்படிச் சொல்லவில்லை. அதுவும் கொஞ்சம் வைத்துக் கொள்ளுங்கள். ஆனால் நீங்களே ஆலோசித்துப் பார்த்து, "இப்படிப் பொழுதை வேஸ்ட் பண்ணுகிறோமே"

Koviloor Digital Library

என்று நினைக்கக் கூடியவைகளை விட்டுவிட்டு—இப்படி நிறைய அகப்படும்—அந்தப் பொழுதை இப்படியொரு pursuit-ல் (தேட்டத்தில்) செலவிட்டால் போதும், ஏதாவதொரு ஸ்வதேச வித்யையில் ஈடுபட்டுத் தேர்ச்சி பெற்று விடலாம். நம் முன்னோர்கள் போன வழி அதுதான்.

மநுஷ்யப் பிறவி கிடைத்தும் அதன் அறிவாலே பெறக் கூடியவற்றைப் பெற்று அதன் மூலம் மநுஷ்யத்வத்துக்கு மேலே போக முயற்சி பண்ணாமல் நாம் செத்துப்போனால் அது ஆடு மாடு ஜன்மாவுக்கு ஸமானந்தான். ஒரு ஆடு ஆடாகவோ, மாடு மாடாகவோ இருந்து மடிவதில் அவற்றுக்குக் குறைவு இல்லை. ப்ரக்ருதியில் ஈச்வரன் அவற்றுக்கு ஏற்படுத்திய தர்மப்படி இருந்ததாகவே ஆகும். ஆனால் மனிதப் பிறவி எடுத்தவர்கள் இதற்கு அவன் அநுக்ரஹித்துள்ள உபரி அறிவின் தர்மப்படி அதை ஒரு வித்யையால் சோபித்துக் கொள்ளச் செய்யாமல் விட்டுவிட்டால் அது ரொம்பவும் துர்பாக்யம். அறிவுக்கு மேலே உள்ள ஆண்டவனுக்காக, ஆத்மாவுக்காகத்தான் அறிவை விட்டுவிட்டு, 'இதெல்லாம் எதற்கு?' என்று ஸகல சாஸ்த்ரங்களையும் வித்யைகளையும் தள்ளலாமே தவிர, நம் நிலையில் அப்படிக் கேட்டு விட்டுவிடுவது தகாது. இது ஒன்றுக்கும் உதவாத சோம்பேறியின் வாய் வேதாந்தந்தான்.

அனைவரும் வித்வானாயிருந்த காலம்

பழைய காலத்தைச் சேர்ந்த க்ராம மஹாஸபைகளின் சாஸனங்கள் இருக்கின்றன அல்லவா? அவற்றிலே ஒரு க்ராமத்தைச் சொல்லும்போது "அசேஷ வித்வத் ஜனங்கள்" அல்லது "அசேஷ வித்வத் மஹாஜனங்கள்" என்று குறிப்பிட்டிருக்கும். நம்முடைய மடத்து ஸ்ரீமுகங்களிலும் இந்த சொற்றொடர் இருக்கிறது. "சேஷம்" என்றால் "மீதி" என்று தெரிந்திருக்கும். "அசேஷ" என்றால் "மீதியில்லாமல்" என்று அர்த்தம். ஒரு க்ராமத்திலே உள்ள பொதுமக்களில் மிச்சம் மீதி இல்லாமல் அனைவரும் வித்வான்களாக இருந்தார்களென்பதையே "அசேஷ வித்வத் ஜனங்கள்" என்பது

Koviloor Digital Library

தெரிவிக்கிறது. அக்காலத்தில் ஸகலருக்கும் வித்வத்—அதாவது ஏதாவதொரு வித்யையில் பாண்டித்யம்—இருந்தது என்பதை இது தெரிவிக்கிறது. இதை அப்படியொன்றும் மிகைப்படுத்திச் சொன்னதாகக் கொள்வதற்கில்லை. ஏனென்றால் ப்ராம்மண இதரர்கள் பள்ளிக்கூடம் போகாவிட்டாலும் தங்கள் தங்கள் தொழிலில், அதற்கான வித்யையில், வித்வான்களாகவே இருந்தார்கள். ப்ராம்மணர்களை எடுத்துக்கொண்டால் இரண்டு வேதம், இரண்டு சாஸ்த்ரத்துக்குக் குறையாமல் வ்யுத்பத்தி (சிறப்பான தேர்ச்சி) உள்ளவர்களாக ஒவ்வொரு க்ராமத்திலும் பலபேர் இருந்திருப்பதாகத் தெரிகிறது. அதற்கேற்றாற்போல் அக் காலத்தில் குரு பீடங்களிலும் நம்முடைய ஆசார்யாள், வித்யாரண்யாள் போன்ற பண்டித ஸிம்ஹங்கள் இருந்திருக்கிறார்கள். இந்தக் காலத்தில் பண்டிதர் என்று இருப்பவரையே, "வேதத்தில் ஒரு பதம் புரியவில்லை, அர்த்தம் சொல்லுங்கள்" என்று கேட்டால், "பாஷ்யத்தைப் பார்த்துக்கொண்டு வந்து பதில் சொல்கிறேன்" என்கிறார்! காலத்துக்கேற்ப குரு பீடத்தில் நான் இருக்கிறேன்!

அதனால்—ஒரு விதத்தில் self-interest (ஸ்வயநல அக்கறை) என்று வேண்டுமானாலும் வைத்துக்கொள்ளுங்கள்—குருபீடங்கள் நல்ல நிலைமையில் ஸகல சாஸ்த்ரங்களிலும் நல்ல ஞானத்துடன் விளங்கவேண்டுமென்பதற்காகவாவது ஸகல ஜனங்களும் நல்ல வித்வத் உள்ளவர்களாக ஆகவேண்டுமென்கிறேன். முன்னேயே சொன்னாற்போல, சிஷ்யர்களின் தரத்தைப் பொறுத்துத்தான் குரு உருவாகிறார். சிறந்த அறிவாளிகளாக சிஷ்யர் கூட்டம் இருந்துவிட்டால் அதற்குத் தகுந்தாற்போல் குருவும் தம் நிலையை உயர்த்திக் கொள்ளவேண்டுமென்று நிர்பந்தமாகவாவது ஏற்பட்டுவிடுகிறது. அவர்கள் ஒன்றைக் கேட்டு இவர் முழிக்கப்படாதல்லவா? அதனால்! ஆனபடியால் குரு பீடங்களிலுள்ள குருமார்கள் நன்றாக சாஸ்த்ரார்த்தம் அறிந்தவர்களாய் இருக்கவேண்டுமென்றால் அதன் பொறுப்பு சிஷ்யர்களதுதான்.

Koviloor Digital Library

வாழ்க்கை முறையும் வயதும் தடையாகா

"இத்தனை நாள் ஏதோவொரு தினுஸிலேயே வாழ்க்கை நடத்திவிட்டோம். இப்போது திடீரென்று ஏதாவது சாஸ்த்ராப்யாஸம் செய்வது, கலையைக் கற்பது என்றால் எப்படி முடியும்? அதற்கு ஒரு வயஸ் இல்லையா? ஐந்தில் வளையாதது (ஐம்பதில் வளையாது) என்று பழமொழி இல்லையா?" என்று கேட்கலாம். அததற்கான வயஸில்தான் அததுவும் ஸுலபமாக வரும் என்பதும், வித்யாப்யாஸத்துக்கு ஏற்ற ஒரு பருவம் உண்டு என்பதும் வாஸ்தவந்தான். ஆனாலும், 'இந்த தேசத்திலே பிறந்துவிட்டு இதன் ஏராளமான சாஸ்த்ரங்களில் ஒன்றுகூடத் தெரியாமலிருக்கிறோமே!' என்ற feeling இருந்தால் எந்த வயஸிலும் வித்யை வரும். ஆர்வமே இளவயஸின் துடிப்பையும், க்ராஹ்ய சக்தியையும் (கல்வியைக் க்ரஹித்துக்கொள்ளும் சக்தியையும்) உண்டாக்கிவிடும்.

இதுவரை ஏதோவொரு வாழ்க்கை முறையில் போய் விட்டோமென்றால் அது ந்யாயமாக நாம் போயிருக்கப் படாத "ஏதோவொரு" முறைதான். ஆகையால், "எந்த ஒரு முறை"யில்தான் நாம் போயிருக்க வேண்டுமோ அதிலே இனியாவது போவது என்ற உறுதியும் ஆர்வமும் இருந்தால் ஈஸியாக அப்படி மாற்றிக்கொள்ளலாம்.

ஐம்பதில் வளையுமா என்று கேட்பதையே 'சாலஞ்ஜா'க எடுத்துக்கொண்டு, 'ஓ! வளையும்' என்று காட்ட முயல வேண்டும். உரிய வயஸிலே ஒன்றைக் கோட்டை விட்டவர்கள் இப்படி 'சாலஞ்ஜ்' பண்ணி ஜயித்துக் காட்டவேதான் அந்தப் பழமொழி ஏற்பட்டிருக்கிறது என்று நினைக்க வேண்டும். ப்ரத்யக்ஷத்திலேயே இப்படிப் பலர் இருந்திருக்கிறார்கள்.

த்ருஷ்டாந்தமாக ஸமீப காலத்தில் ப்ரொஃபஸர் ஸுந்தரராமையர் என்பவர் இருந்தார். (அவர்) ஐம்பது வயஸுக்கு மேல்தான் சாஸ்த்ரம் படித்தார். அப்புறம் (கும்பகோணத்தில் ஸ்ரீமட ஸம்பந்தமுள்ளதாக உள்ள)

Koviloor Digital Library

அத்வைத ஸபை மாதிரியான பெரிய வித்வத் ஸதஸ்களில் கூட, இவற்றிலேயே பழம் தின்று கொட்டை போட்ட பெரிய பண்டிதர்களுக்கும் புரிபடாத தத்வ நுட்பங்களை அவர்களே ஆச்சர்யப்படும்படியாக எடுத்து விளக்கியிருக்கிறார். ஆகவே புதிய இளைஞர் தலைமுறையில் சிஷ்ய பரம்பரை உருவாக்குவதோடு, வயதானவர்களும் இது முதல் நம் சாஸ்த்ரங்களிலோ கலைகளிலோ, ஏதாவது ஒன்று அப்யாஸம் செய்து அதன் வழியாய் ப்ரஹ்ம வித்யைக்குப் போகும் பாக்யத்தைப் பெற முயலவேண்டும்.

அரசாங்கமல்ல; மக்களும் சிடர்களுமே பொறுப்பு

முற்காலத்தில் அரசர்களும் மஹாவித்வான்களாக இருப்பார்கள். ராஜ ஸதஸ்கள் அறிவாளிகள் நிறைந்ததாக இருக்கும். நன்றாக வித்வத் ஸம்பாவனைகள் செய்தும் ராஜ மான்யங்கள் விட்டும் வித்வான்களையும், அதன் வழியாக வித்யைகளையும் வ்ருத்தி செய்தார்கள். இப்போது...நான் சொல்லவேண்டாம்—எஜுகேஷன் மினிஸ்ட்ரி, கல்ச்சுரல் அஃபேர்ஸ் மினிஸ்ட்ரி என்று இருந்தாலும், கொஞ்சத்தில் கொஞ்சமாவது கலாசார அபிவ்ருத்திக்கு அவர்கள் செய்வதை நாம் பாராட்டத்தான் வேண்டுமென்றாலும், ஏதோ குடியரசு நாளில் இத்தனும் கோடி ஜனங்கள் உள்ள தேசத்தில் ஒரு பத்துப் பண்டிதருக்கு கௌரவம் பண்ணுவது; 'ஸான்ஸ்க்ரிட் ப்ரமோஷன்' என்று ஏதாவது இரண்டு பழைய ஓரியன்டல் ஸ்கூல்களுக்கு 'க்ரான்ட்' கொடுப்பது; இரண்டு யூனிவர்ஸிடியில் 'சேர்' வைப்பது; ஒரு சில பேருக்கு ஸ்காலர்ஷிப் தருவது; க்ராமக் கலை உத்ஸவம் என்று ஏதாவது நாலைந்து நாள் பண்ணுவது—என்பதாகச் செய்வதெல்லாவற்றையும் கூட்டிக் கணக்கெடுத்தாலும் பொருளாதாரம், ராணுவம், நீர்ப்பாசனம் முதலியவற்றுக்குச் செலவழிப்பதில் நூறில் ஒரு பங்காவது வித்யாபிவ்ருத்திக்குப் போகும் என்று தோன்றவில்லை. அவற்றிலே காட்டுகிற இன்டரஸ்ட் இதில் யாருக்கும் இல்லை—எந்தக் கட்சிக்குமே இல்லை. ஆனாலும்

Koviloor Digital Library

வெளிதேசங்களும் நம் 'இமேஜை ப்ரொஜெக்ட்' பண்ணிக் காட்டுவதற்காக மட்டும், நம்முடைய வித்யைகளையும் கலைகளையும் பற்றி நிறையப் பேசுவதாக ஏற்பட்டிருக்கிறது. இவற்றுக்காகச் செய்கிற ஏதோ கொஞ்சமும் ஈச்வர ஸம்பந்தமில்லாமலும் சாஸ்த்ரிய வழியில் இல்லாமலும் செய்யப்படுவதால் அவையும் உரியபடி ப்ரயோஜனப் படாமல் போகின்றன. இன்றைய ராஜாங்க ரீதியில் இதற்கு மேல் ஒன்றும் எதிர்ப்பார்ப்பதற்கில்லை. அவர்களைக் குறை கூடச் சொல்லவேண்டாம்.

ஆகவே பொதுவாக வித்யைகள் என்று எடுத்துக் கொண்டால் பொதுஜனங்களும், சாஸ்திரங்களை வளர்க்க வேண்டிய குருபீடங்கள் என்று எடுத்துக்கொண்டால் சிஷ்ய வர்க்கமும்தான் இப்போது விழிப்புணர்ச்சி பெற்றுப் பொறுப்பு எடுத்துக்கொண்டு செய்ய வேண்டியதைச் செய்யணும். ஒரு விதத்தில் ராஜாங்க ரீதியில் நடக்காதது கூட நல்லதற்குத்தான் என்பேன். ஏனென்றால், அப்படி நடந்தால் ஜனங்கள் இவ்விஷயத்தில் அசட்டையாக இருந்துவிட முடியும். அப்படி இல்லாத போதுதான் ஸகல ஜனங்களும், "இவை நம்முடைய மஹத்தான பாரம்பர்ய ஸொத்து. இவற்றை நாம் ரக்ஷிக்கவேண்டும்" என்று ஸொந்த அக்கறையும் விசாரமும் காட்டி ஹ்ருதய பூர்வமாக ஈடுபட அதிக இடம் உண்டாகிறது.

அரைகுறை ஞானத்துக்கே ஆதரவு

வாஸ்தவ நிலை எப்படி இருக்கிறதென்று பார்த்தால் வ்யஸனம்தான் மிஞ்சுகிறது. வர வர வர வித்யையின் தரம் குறைந்துகொண்டே வருகிறது. ஒவ்வொரு சாஸ்த்ரமாக மறைந்துகொண்டே வருகிறது. எத்தனையோ கலைகள் இருந்த இடம் தெரியாமல் போய்க்கொண்டிருக்கின்றன. ஒரே இருட்டிலே சின்ன மின்மினிப் பூச்சி வெளிச்சம்கூடப் பெரிசாகத் தெரிகிறாற்போல, குருபீடங்களிலே ஸ்வல்ப வித்வத்தோடு ஒருத்தர் இருந்துவிட்டால்கூட அவரை சிஷ்யலோகம் "ஸர்வஜ்ஞர்" என்று புகழ்ந்து அவரும் தாம்

Koviloor Digital Library

அதற்குமேல் தெரிந்துகொள்ள வேண்டாமென்று நினைக்கிற அளவுக்குக் கொண்டு விட்டுவிடுகிறது.

மின்மினிப் பூச்சியைச் சொல்லும்போது ஒரு கதை நினைவு வருகிறது. கதை என்றால் நிஜமாகவே நடந்த கதை. நீலகண்ட தீக்ஷிதரும், பழமார்நேரி மஹாதேவ சாஸ்த்ரிகள் என்பவரும் ஸம்பந்தப்பட்ட கதை. நீலகண்ட தீக்ஷிதர் மதுரையில் புகழ்வாய்ந்ததாக உள்ள திருமலை நாயகர் மஹாலையும் புது மண்டபத்தையும் கட்டிய நாயக மன்னருக்கு மந்த்ரியாக இருந்தவர். மஹாபக்தர். இவற்றோடு மஹாவித்வானுமாவார். பழமார்நேரி சாஸ்த்ரி கள் இவர் மாதிரி ப்ரஸித்தி பெறாதவர். ஆனாலும் தீக்ஷிதரும் அவரிடம் எப்படித் தோற்றுப் போனமாதிரி ஆனார் என்று அந்தக் கதை தெரிவிக்கிறது. ஞானசூன்ய உலகத்திலே எப்படி மின்மினிப் பூச்சி மாதிரி துளிப்போற ஞானத்தைப் பகட்டாகக் காட்டிக்கொள்பவர்கள் தங்களை ப்ரமாதப் படுத்திக்கொள்ள முடிகிறது என்று மஹாதேவ சாஸ்த்ரி இடித்துக் காட்டி ச்லோகம் இயற்றிச் சொன்னதில்தான் தீக்ஷிதருக்கு அவரிடம் ரொம்பவும் மரியாதை ஏற்பட்டது என்று கதை*.

வெறும் அரட்டை ஆஸாமிகளும் மின்மினி அறிவினாலேயே ப்ரகாசிக்கிற இருட்டுச் சூழ்நிலையில்தான் இப்போது இருக்கிறோம். இந்த மின்மினி ஒளியை மங்கச்செய்யும் நக்ஷத்ரக் கூட்டங்களின் ப்ரகாசம், நக்ஷத்ரங்களின் ஒளியையும் மழுங்கப் பண்ணும் சந்த்ரோதயம், அந்த சந்த்ரனும் இருக்கிற இடம் தெரியாமல் அமுங்கிப்போகும் ஸூர்யோதயம் என்னும்படியாக மேலும் மேலும் நாட்டில் வித்யா ப்ரகாசம் ஓங்கும்படியாகச் செய்யவேண்டும். இப்போது பூர்ண யோக்யதை உள்ள வித்வான்கள், சாஸ்த்ரஜ்ஞர்கள், பழைய கலைகள் தெரிந்தவர்கள். ஆயுர்வேத வைத்யர்கள், சில்பிகள், ரதகாரர்கள், பரத சாஸ்த்ர நிபுணர்கள் என்று

---

* ஸ்ரீசரணர்கள் சுவைபடக் கூறிய இக்கதையின் விரிவை இதே பகுதியில் ''கவிஞர். அறிஞரின் தற்பெருமை'' என்ற உரையின் ''நீலகண்டரும் மஹா, தேவரும்'' என்ற பிரிவில் காண்க.

Koviloor Digital Library

ஏதோ கொஞ்சமாவது இல்லாமல் போகவில்லை. ஆனாலும் அரட்டைக்குத்தான் மதிப்புத் தருவது. தடபுடாவுக்குத் தான் மரியாதை செய்வது என்று லோகம் இருப்பதில், —கட்சியபிமானம் ஜாதியபிமானம் முதலியன இதிலும் தலைதூக்கியிருப்பதில்—ஸாதுக்களாக அடங்கியிருந்து கொண்டிருக்கிற, நிஜமான யோக்யதையுள்ள இந்தச் சில வித்வான்களுக்கு ஆதரவு கிடைப்பது ச்ரமமாயிருக் கிறது. சவடால்காரர்கள் ஆர்ப்பாட்டமாகத் தங்களுடைய அரைகுறை ஞானத்தில் வேதாந்த சாஸ்த்ரம் வரையில் நம்முடைய வித்யைகளைப் பற்றி எழுதுவது இன்று ஜகத் ப்ரஸித்தி பெறுகிறது. நல்ல ஞானமுள்ள விஷயஜ்ஞர்கள் ரொம்பவும் பரிச்ரமப்பட்டு ஆராய்ச்சி செய்து எடுத்துச் சொல்கிற விஷயங்களை ப்ரசாரம் செய்வதற்கு, ப்ரசுரம் செய்வதற்கு எவரும் முன்வருவதில்லை. இன்றைய நிலையில் தடபுடல்தான் வேண்டும், பூர்ண யோக்யதை அவச்யமில் லாத விஷயம் என்கிறதுபோல ஆகிக்கொண்டு வருகிறது. இதற்குக் காரணம், பொதுவாக வித்யா ஞானத்தின், சாஸ்த்ர அறிவின் லெவல் ரொம்பவும் இறங்கியிருப்பது தான். மேற்கத்தியப் படிப்பிலே தேர்ந்தவர்கள் தற்போது நிறைய இருந்தாலும் ஸ்வதேச வித்யைகளில் பரிசயம் ஜனங்களுக்கு இல்லாததால்தான், இதிலே வாஸ்தவமான ஞானத்தை எடைபோட முடியாமல், படாடோபமான அரைகுறை ஞானத்தை ஆதரிப்பதாக இருக்கிறது. இது ஸரியே இல்லை.

ஆதரிப்பவர்கள் இல்லாவிட்டால் நல்ல வித்வத் உள்ளவர்களுக்கு மனஸு தளர்ந்து போய் அவர்கள் தங்கள் வித்வத்தைத் தங்களுடைய ஸந்ததிக்கோ, சிஷ்யர்களுக்கோ கற்றுக்கொடுக்காமலே போய்விடுவார்கள். நமக்கு வித்யை கள் நஷ்டமாகிப்போகும். இப்படித்தான் தற்போதே நேர்ந்திருக்கிறது. இது மேலும் இப்படியே போய்க்கொண் டிருப்பதற்கு விடப்படாது என்பதற்காகத்தான் இவ்வளவு சொல்வதும்,

Koviloor Digital Library

வித்வான்களுக்குக் கோரிக்கை

அதே ஸமயத்தில் வித்வத் ஸமூஹத்திடமும் ஒன்று கேட்டுக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன். "நீங்கள் பரம த்யாகிகளாக, ஆதரவு அநாதரவு இவற்றைப் பொருட் படுத்தாமல் எப்படியாவது எத்தனை கஷ்டத்திலும் சிஷ்ய வர்க்கத்தை உண்டாக்கி அதனிடம் உங்களுக்குத் தெரிந்த வற்றை ஒப்புக் கொடுக்கவேண்டும்" என்று கேட்டுக்கொள் கிறேன்.

நேரில் கண்ட ஆதர்ச வித்வான்கள்

இம்மாதிரி, பேர், புகழ், பணம், ஆதரவு எதையும் எதிர் பார்க்காமல் அநேக குடும்பங்களில் வித்யைகளுக்கே தங்களை அர்ப்பணித்துக்கொண்டு வருபவர்களையும் நான் ஒன்று, இரண்டு இடத்தில் பார்த்திருக்கிறேன். நான் எத்தனையோ ஊர் சுற்றி எவ்வளவோ பார்த்திருப்பதில் இப்படியும் பார்த் தது எனக்குச் சொல்லி முடியாத ஸந்தோஷமாயிருந்தது.

இவற்றில் ஒன்று எங்கே எப்போது என்றால்: 1927-28 வருஷங்களில் மலையாள தேசத்தில் சுற்றிக் கொண் டிருந்தேன். அங்கே திருவஞ்சிக்களம் என்று ஒரு ஸ்தலம். (திரு அஞ்சைக்களம் என்பதே ஸரியான பெயர்.) பழைய காலத்தில் அதுதான் மலையாள தேசத்துக்குத் தலைநகரமா யிருந்தது. பன்னிரண்டு ஆழ்வார்களில் ஒருவரான குலசேகரப் பெருமாள், அறுபத்தி மூன்று நாயன்மார்களில் ஒருவரான சேரமான் பெருமாள் (இரண்டு பேரிலும் 'பெருமாள்' இருக்கிறது.) ஆகிய ராஜ-பக்தர்கள் இருவரும் திருவஞ்சிக்களத்திலிருந்துதான் ஆட்சி நடத்தியிருக்கிறார் கள். தேவாரத்தால் போற்றப்பட்டுப் 'பாடல் பெற்ற ஸ்தலம்' என்று கூறப்படுகிற க்ஷேத்ரங்களில் "ஒண்ணே ஒண்ணு கண்ணே கண்ணு" என்பதாக மலையாளத் திலிருக்கும் க்ஷேத்ரம் இதுதான். இதே மலையாள தேசத்தில் (ஆழ்வார்களின் பாசுரங்களைப் பெற்றவையான) நூற்றி

Koviloor Digital Library

யெட்டு திவ்ய தேசங்களில் பதின்மூன்று இருக்கின்றன. திருவஞ்சிக்களத்துக்குப் பக்கத்தில் ப்ரஸித்தமான பகவதி க்ஷேத்ரம் ஒன்று இருக்கிறது. கொடுங்கலூர் என்று பெயர். வெள்ளைக்காரர்கள் அதைத்தான் 'க்ராங்கனூர்' என்று ஆக்கியிருக்கிறார்கள். அந்த ஊரிலும் அதைச் சுற்றியுள்ள சில ஊர்களிலுந்தான் நான் சொன்னபடி அநேக வித்வான்கள் வெளியுலகத்தின் ஆதரவைப்பற்றி நினைக்காமல் அநேக சாஸ்த்ரங்களை அப்யஸித்துக் கொண்டிருப்பது.

கொடுங்கலூரிலும், இந்தச் சுற்றுப்புற ஊர்கள் ஒவ்வொன்றிலும் ராஜா என்று ஒருத்தர் இருக்கிறார்—

மலையாளத்திலேயே பொதுவாக ராஜாக்கள் அதிகம். அங்கே பெரும்பாலும் "மருமக்கத் தாயமுறை" என்ற முறைப்படியே ராஜ்யமோ, மற்ற ஸொத்தோ அடுத்த தலைமுறைக்குப் போய்க் கொண்டிருந்தது. அதாவது அப்பா - பிள்ளை என்று பிதுரார்ஜிதமாக மற்ற இடங்களிலெல்லாம் ஸொத்து, ராஜ்யம் ஆகியவை போகின்றனவென்றால், மலையாளத்தில் மட்டும் அம்மா வழியில் மாதுரார்ஜிதமாகப் போவதாகவும் இருந்தன. ஆனாலும் அம்மா என்றால் அவள் ஸ்த்ரீ. அவள் எப்படி ஸொத்துப் பரிபாலனம் செய்வாள்? அதனால் அவளுடைய அண்ணா - தம்பிக்கு ஸொத்துப் போகும். ஆனால் இந்த அண்ணாவோ தம்பியோ கண்ணை மூடுகிறபோது தங்கள் பிள்ளைக்கு (ஸொத்தை) எழுதிவைக்க முடியாது. அந்த ஸஹோதரியின் பெண்ணுக்குத்தான் ஸொத்துப் போகும். முன்னே சொன்ன மாதிரியே அதை இந்தப் பெண்ணுடைய ஸஹோதரன்தான் பரிபாலனம் செய்வான். இவன் இதற்கு முன் ஸொத்தை நிர்வஹித்தவனுக்கு மருமான் (மருமகன்) தானே? இப்படி மாமா - மருமகன் என்று ஸொத்து நிர்வாஹம் போவதாலேயே இதற்கு "மருமக்கத் தாயமுறை" என்று பெயர், "தாய" என்றால் தாயார் ஸம்பந்தப்பட்டது என்று அர்த்தமில்லை. Taaya இல்லை; Daaya. 'தாயம்' என்பது ஸம்ஸ்க்ருத வார்த்தை. அதற்கு 'ஸொத்தின் பாகம்' என்று அர்த்தம்,

Koviloor Digital Library

இப்படி பிதுரார்ஜிதத்தில் பங்கு உடையவர்களுக்குத்தான் "தாயாதி" என்று பேர்.

கொடுங்கலூர்ப் பகுதியில் இருந்த அநேக ராஜாக்கள் இவ்வாறு மருமக்கத் தாயமுறையில் ராஜாவாக இருந்தவர்கள். பேர்தான் ராஜா. நாம் 'மிடில் - க்ளாஸ்' (மத்யதர வகுப்பினர்) என்று சொல்பவர்களைவிடவும் அந்த ராஜாக்களின் வருமானம் ஸ்வல்பமாகவே இருக்கும். நம் ஊரில் பரம ஏழைக்குத்தான் கஞ்சி ஆஹாரமென்றால், அங்கே இந்த ராஜாக்களின் முக்ய ஆஹாரமே கஞ்சிதான்! நம் ஊரில் கஞ்சி சாப்பிடுகிற கலயம், கப்பரை என்று ஏழை மண்ணிலோ, சுரைக் குடுக்கையிலோ ஒன்று வைத்துக் கொண்டிருக்கிறானென்றால், அந்த ராஜாக்களோ இந்தக் கலயம் - கப்பரைகூட வைத்துக்கொள்வதில்லை. அந்த ப்ரதேசங்களில் பலாமரம் செழிப்பாக வளரும். அந்தப் பலா இலைகள்தான் இந்த ராஜாக்களுக்குப் பாத்திரம்! பொருளாதார சூழ்நிலை இப்படியிருந்தாலும் வித்வத்திலே அவர்கள் அத்தனை பேரும், அவர்களைச் சேர்ந்தவர்களுங் கூட, ஆச்சர்யப்படும்படியான தேர்ச்சி பெற்றிருந்தார்கள். புருஷாள் மட்டுமின்றி ஸ்த்ரீகளும் இப்படியே ஏதாவதொரு சாஸ்த்ரத்தில் நல்ல யோக்யதை ஸம்பாதித்துக்கொண்டிருப்பதைப் பார்த்தேன். இவர்களாக வெளியிலே ப்ராபல்யத்துக்கு ப்ரயாஸைப் படாவிட்டாலும், தானாகவே இவர்களில் ரொம்பவும் தேர்ச்சி பெற்றவர்களில் சிலர் பெயர் வெளியில் பரவியிருக்கிறது. இப்படி ஒரு ராஜா மஹாமஹோபாத்யாயா பட்டம்கூட வெள்ளைக்கார ராஜாங்கத்திடமிருந்து பெற்றிருக்கிறார். பெயரளவில் ராஜாக்களாக இருந்துகொண்டு கஞ்சியைக் குடித்துக் காலங்கழிப்பவர்களாக நம்முடைய வேத சாஸ்த்ரங்களையும் மற்ற பூர்விகக் கலைகளையும் வ்ருத்தி பண்ணிக்கொண்டு வந்த இவர்களை வித்வத் ஸமூஹம் முழுதும் 'ஐடியலாக'க் கொள்ளவேண்டும்.

மலையாளத்தில் நான் வித்வத்-ஊரைப் பார்த்தது (ஆயிரத்துத் தொள்ளாயிரத்து) முப்பதுக்கு முந்தி. இதே

Koviloor Digital Library

மாதிரி இன்னொன்று நான் பார்த்து அப்படியும் ஏறக் குறைய நாற்பது வருஷத்துக்கு அப்புறம்.* அது மலேயாளத் தில் இது தெலுங்கு தேசத்தில். அப்போது பார்த்தது வித்வத்-ஊர். இப்போது பார்த்தது அப்படியே ஒரு ஊர் முழுக்க இல்லே; இது வித்வத்-குடும்பம்தான். ஆனாலும் அந்தக் குடும்பமே ரொம்பப் பெரிசாக இருந்ததால், "சாஸ்த்ரங்களிலேயே அத்தனை பேரும் ஈடுபட்டிருப்பதாக இப்படியும் ஒரு குடும்பமா?" என்று ஆச்சர்யப்படும்படியாக வும், ஸந்தோஷப்படும்படியாகவும் இருந்தது.

"ஹரி ஸோதருலு" என்று அவர்களைச் சொல்லுகிறார் கள். தெனாலி கிட்டேயுள்ள ஈப்பூரைச் சேர்ந்த அண்ணா தம்பிகள் ஐந்து பேர். நான் அவர்களைப் பார்த்தது பெஜ வாடா (விஜயவாடா)வில் அவர்களுக்கு உள்ள வீட்டில். பெரியவர் பெயர் ஹரி வேங்கடஸுப்பையா. அவருக்கு நாலு தம்பிகள். அஞ்சு பேரும் ப்ராசீனமான முறையில் ஒவ்வொரு சாஸ்த்ரம் படித்து நல்ல வித்வத்தோடு இருக் கிறார்கள். வேதம், வேதபாஷ்யம், ஸ்ம்ருதிகள், புராணம் என்று ஒவ்வொன்றில் ஒருத்தர் ஸ்பெஷலைஸ் பண்ணியிருக் கிறார். இதெல்லாவற்றையும் ஒன்றுக்கொன்று சேர்த்துத் தொகுத்துப் புஸ்தகம் போட்டிருக்கிறார்கள். அதுகூடப் பெரி சில்லே. தங்களுக்கு அடுத்த தலைமுறையிலும் இந்த வித்யா ஸம்பத் வீணாகிவிடாமல் தங்களுடைய பசங்களுக்கும் நன்றாக சாஸ்த்ராப்யாஸம் கொடுத்திருக்கிறார்கள். அதைத்தான் நான் பெரிசாக நினைக்கிறேன். தங்களகத்துக் குழந்தைகளுக்கு அஞ்சு வயஸு ஆச்சோ இல்லியோ ஸம்ஸ் க்ருத பாடம் ஆரம்பித்துவிடுகிறார்கள். பாடம் என்று புஸ்தகத்தோடு கட்டிப்போடாமல் ஸரளமாக ஸம்ஸ்க்ருதத் திலேயே பேசுவதற்குக் கற்றுக் கொடுத்திருக்கிறார்கள். ஏழெட்டு வயஸு வாண்டுகள் பளிச்சுப் பளிச்சென்று ஸம்ஸ் க்ருதத்தில் பதில் சொல்வதைக் கேட்க ஆனந்தமா யிருந்தது.

---

* 1968 நவம்பரில்.

Koviloor Digital Library

பூர்வகாலத்தில் 'அசேஷ வித்வத்ஜனங்கள்' என்னும் படியாக ஊர் பூராவும், பெண்டுகள்கூட பாண்டித்யத்தோடு இருந்தார்கள்; சாணி தெளிக்கிறவள் ஸம்ஸ்க்ருதத்தில் போடு போடு என்று போடுவதைக் கேட்டே, வாதத்திற்கு வந்த வெளியூர் வித்வான் கம்பி நீட்டிவிட்டார்; கிளிப் பிள்ளைகள்கூட தங்களுக்குள் பெரிய தர்க்க சாஸ்த்ரவாதங்கள் பண்ணிக்கொண்டிருந்தன—என்றெல்லாம் கதைகளில் பார்க்கிறோம், கேள்விப்படுகிறோம். அதற்கு நம் காலத்திலும் ஏதோ ஒன்றிரண்டு இடங்களில் துளியாவது 'ஸாம்பிள்' மாதிரிப் பார்க்க முடிந்தது.

வித்வான்கள் வித்யையை ஈச்வரோபாஸனையாக, அதாவது வேறு ப்ரதிப்ரயோஜனம் எதிர்பாராமல், பேணி வளர்த்துக்கொள்ள ப்ரயத்னம் பட்டால் எப்படியாவது அவை உயிரைப் பிடித்துக்கொண்டு வ்ருத்தியாகிவிடும். அவர்களும் உயிரைப் பிடித்துக்கொண்டு காலம் தள்ள ஈச்வரன் கைகாட்டாமல் போகமாட்டான்.

இப்படி பலர் இருந்துமிருக்கிறார்கள். பரமபக்தரான த்யாகையர்வாள் போன்றவர்கள்தான் ராஜ ஸம்பாவனை, பேர், புகழ் முதலியன வேண்டாம் என்று ஒதுக்கி, ஒதுங்கி அவர்கள் பாட்டுக்கு இருந்தார்களென்றில்லை. மஹாவித்வான்களிலுங்கூடப் பணவசதி, பாராட்டு, ப்ராபல்யம் வேண்டாம் என்றே இருந்தவர்களுண்டு.

வித்வானாக இருக்கிறவர் பணத்தைத் தள்ளுவதை விடப் பாராட்டைத் தள்ளுவது ச்ரமம். தனக்கு நல்லபுத்தி இருக்கிறது, நிறையத் தெரிந்து கொண்டிருக்கிறோம், ஆராய்ச்சி செய்து பெரிசாக எழுதியிருக்கிறோமென்றால் உடனே இதை லோகம் 'ரெகக்னைஸ்' செய்யவேண்டும், தன்னைப் புகழ வேண்டும், மரியாதை பண்ண வேண்டும் என்ற எண்ணங்களும் ஏற்பட்டுவிடுகின்றன. ஒரேயடியாக வித்யா கர்வம் ஏறி, 'இந்த உலகத்துக்கு நம்மைப் புரிந்து கொள்ள சக்தி உண்டா? நம்மைப் பாராட்ட அதற்கு

Koviloor Digital Library

யோக்யதை உண்டா?' என்று நினைக்கிற அளவுக்கும் சில வித்வான்கள் போய்விடுகிறார்கள். ஆதலால் அவர்கள் வித்வத்துக்காகப் பாடுபடுகிறது போலவே, அல்லது அதை விடவும் விநய ஸம்பன்னர்களாவதற்கும் பாடுபட வேண்டும்

வருங்காலத்துக்காக

வித்வான்கள் பணத்துக்காகப் பறக்கப்படாது, ப்ராபல்யத்துக்காகப் பறக்கப்படாது என்று நான் சொன்னதால் அவர்களைக் காயக் காயப் போடவேண்டும், எந்த ரெகக்னிஷனும் இல்லாமல் மூலையில் தள்ளி வைக்க வேண்டுமென்று மற்ற ஜனங்கள் அர்த்தம் பண்ணிக்கொண்டுவிடக் கூடாது. பரம த்யாகிகளாக இருந்தாவது வித்யைகளைப் பேண வேண்டுமென்பது அவர்களுடைய லக்ஷ்யமாக இருக்க வேண்டுமென்பதுபோலவே, அவரவரும் ஏதோ கொஞ்சமாவது பணம், பொழுது முதலியவற்றை த்யாகம் செய்து நம்முடைய தேசத்தின் இந்த அறிவுப் பிதுரார்ஜிதம் நசித்துப் போகாமல் காப்பாற்ற வேண்டுமென்பது மற்றவர்களுடைய லக்ஷ்யமாயிருக்க வேண்டும். அதாவது, இப்போதுள்ள வித்வான்களையும் மற்ற பண்டைய கலைகளை அறிந்தவர்களையும் தேடிக் கண்டுபிடித்து பொருளாதார ரீதியிலும், ஸமூஹ கௌரவத்திலும் அவர்களுக்கு உயர்வு தந்து, அவர்களுக்கு சிஷ்ய பரம்பரை உண்டாகி இந்த வித்யைகள் வருங்காலத்துக்கும் போகும்படியாகப் பண்ணவேண்டும்.

உயிரோடு ஒட்டிவைக்க வேண்டும்

இப்போதும் நம் பண்டைய சாஸ்த்ரங்களில் ரிஸர்ச் என்பது கொஞ்சம் நடக்கத்தான் நடக்கிறது. ஆனால் அது 'அகாடெமிக்'காக, ஸமூஹ வாழ்க்கையோடு ஒட்டாமல் நடக்கிறது. 'பேப்பர்' படிப்பது, 'தீஸிஸ்' எழுதுவது, 'ஸெமினார்' 'ஸிம்போஷியம்' என்று நடத்துவது, ,ஸ்காலர்'கள் என்று பொறுக்கி எடுத்த சிலபேர் மட்டும்

Koviloor Digital Library

'டிஸ்கஸ்' பண்ணுவது, அப்புறம் நூறு இருநூறு என்று விலை வைத்துப் புஸ்தகமாகப் போட்டு லைப்ரரிகளில் வைத்து அந்தப் புஸ்தகங்களில் சிலந்தி கூடு கட்டுவது; புஸ்தகம் ரிலீஸ் ஆகிறபோது விழா நடத்தி மந்த்ரிகளும் ஜட்ஜ்களும் நம் முடைய கல்ச்சரைப் பற்றி லெக்சர் செய்வது, பத்ரிகைகளில் பெரிசாக புஸ்தக விமர்சனம் செய்வது, அப்புறம் கொஞ்சம் காலத்தில் பேசியவர்களும் எழுதியவர்களுமே அடியோடு மறந்துபோய் விடுவது—என்பதாகத்தான் இப்போது நடந்துவருகிறது. இப்போதைய 'ஸெட்-அப்' பில் நம்முடைய பண்டைய வித்யைகளுக்காகவும் ச்ரமம் எடுத்துக்கொண்டு இப்படி ஆராய்ச்சி, விவாத மஹாநாடு, நூல் வெளியீடு என்றெல்லாம் நடத்துகிறுர்களே என்று அவர்களைப் பாராட்ட வேண்டுமென்றுலும் (அவர்கள்) செய்வது "நிறக்காமல்", ஸமூஹத்திலே வேர் பிடிக்காமல் கொஞ்ச காலத்திலேயே எடுபட்டுப் போய்விடுவதைச் சொல்லாம லிருக்க முடியவில்லை. இப்படியில்லாமல் இவற்றை ஸமூஹத் தின் உயிரோடு ஒட்டி வைக்கவேண்டும். அதற்கு இவற்றிலேயே தங்களுடைய உயிரும் வாழ்க்கையும் கலந்து போய்விடும்படியாகப் பண்ணிக்கொள்ளும் குரு - சிஷ்ய பரம்பரை ஏற்பட்டால்தான் முடியும்.

நம்முடைய சாஸ்த்ரங்களை நிஜமாகவே காப்பாற்ற வேண்டுமென்றுல் அவற்றிலுள்ள விஷயங்களை மாத்திரம் புஸ்தகம் போட்டு லைப்ரரியில் வைப்பதில் ப்ரயோஜனமில்லை. அப்படியே இந்தப் புஸ்தகங்களை யாராவது படித்துத் தெரிந்துகொண்டு, இப்போது நடக்கிற ரீதியிலேயே மேலும் ரிஸர்ச் பண்ணி, மேலும் புஸ்தகங்கள் போடுவதாக வைத்துக் கொண்டாலும் அதனுல் நிலைத்து நிற்கிறதாகப் பயன் எதுவும் விளையாது. புஸ்தகப் படிப்பால் பெறுகிற வெறும் விஷயஞானமென்பது எத்தனையோ தப்புக்களுக்கும், விபரீதத் துக்குமேகூட இடம் தரலாம். அல்லது வீணுகப் போய் விடலாம். நம் தேசாசாரப்படி உருவான இவ்விஷயங்களை

Koviloor Digital Library

நம்முடைய தேசாசாரத்தின்படியே ஏற்பட்டுள்ள சாஸ்த்ரிய முறைப்படி, மாணவனுக்கு விநயம், புலனடக்கம், மற்ற ஒழுக்கங்கள், உயர்குணங்கள், ஈச்வரபக்தி முதலியவற்றோடு கலந்து கொடுத்தால்தான் அவனுக்கும் ச்ரேயஸ் ஏற்பட்டு, அவனால் உலகுக்கும் க்ஷேமம் உண்டாகும்.

எல்லாத் துறையிலும் குருகுல வாஸம்

இதற்கு ரொம்பவும் தலைசிறந்த வழி குருகுலக் கல்வி. உண்மையான குருகுல முறையைக் கடைப்பிடித்து, குருவுடைய அறிவோடு அருளையும் சேர்த்து வாங்கிக் கொண்டு வித்யாப்யாஸம் பெற்றால் எல்லாக் குறைபாடுகளும் போய்விடும். ஸெக்யுலர் எஜுகேஷன் (லௌகிகக் கல்வி) கூட இம்மாதிரி ரிடயரான ஆசிரியர்களிடமிருந்தும், ப்ரொஃபஸர்களிடமிருந்தும் அவர்களோடேயே வஸித்து அவர்களுக்குத் தொண்டு செய்துகொண்டே கற்று, ப்ரைவேட்டாகப் பரீக்ஷை எழுத இடமிருந்தால் அப்படிச் செய்வது ரொம்பவும் ச்லாக்யம். 'பிள்ளையாண்டான் ஒரு வருஷம் 'கோட்' அடித்துவிட்டதாக நினைத்துக்கொண்டு ஒரு வருஷமாவது உங்கள் குழந்தைகளை குருகுலவாஸம் செய்ய விட்டு, அதற்கான உதவியை குருவுக்குப் பண்ணுங்கள்; அல்லது கோடை விடுமுறை இரண்டு மாஸத்திலாவது இதை நடத்திப் பார்க்க வழி தேடுங்கள், என்றெல்லாம் அடிக்கடி நானும் சங்கு ஊதிக்கொண்டே இருக்கிறேன். விடிகிற போது விடியட்டும்.

குருகுலக் கல்விக்கு அடுத்தபடியாக, **next best** என்கிறார்களே, அப்படி வருவது சாஸ்த்ரோக்தமான முறையில், குருமார்கள் கட்டுப்பாட்டின்கீழ் பல பசங்கள் ரெஸிடென்ஷியலாக (அங்கேயே வஸித்துக்கொண்டு) படிக்கிற வித்யாசாலைகள்.

இரண்டில் ஒன்று ஏற்பட்டு வ்ருத்தியாவதற்கு உங்களைத் தூண்டி விடுவதற்காகத்தான் இத்தனை நேரம் குருகுலம் பற்றியும், கடிகாஸ்தானம் பற்றியும் சொன்னேன்.

Koviloor Digital Library

அம்பாள் அருள்வாளாக!

நான் எத்தனை சொன்னாலும், அதில் கொஞ்சமாவது உங்கள் மனஸிலே பட அம்பாள்தான் அநுக்ரஹம் செய்ய வேண்டும்.

ஸர்வஜ்ஞானை ஈச்வரனோடு கலந்திருக்கிற அம்பாள் தான் சோபைகளிலெல்லாம் பரம சோபையோடு ப்ரகாசிப்பதான வித்யையின் ஸ்வரூபம் என்று ஆசார்யாள் கேநோபநிஷத் பாஷ்யத்தில் சொல்கிறார். அவள்தான் நம் எல்லார் மனஸிலும் புகுந்து நம்முடைய புராதன வித்யை களை ரக்ஷிப்பதில் நம்மைச் செலுத்தவேண்டும். வித்தம் தான் (பணம்தான்) குறி என்ற நம்முடைய மனப்பான் மையை மாற்றி வித்யையே லக்ஷ்யம் என்ற ஈடுபாட்டை அவளுடைய அநுக்ரஹம்தான் உண்டாக்கித் தரவேண்டும். இதுவரை யுகாந்தரமாக வித்யா ப்ரகாசம் விளங்கி வந்த இந்த தேசத்தில் இருள் மூடுமாறு விடப்படாது. வித்யை தான் பெரிய ப்ரகாசம் என்று சொன்ன ஆசார்யாள், 'உமா பரமேச்வரி மாத்ரம்தான் இப்படி வித்யையால் ஜ்வலித்துக் கொண்டு ஹைமவதி என்று பெயர் பெற்றாள் என்று இல்லை; எவன் வித்யையைப் பயின்று வித்வானானாலும் அந்த வித்யையே அவனுக்கு ஒரு தேஜஸ் மெருகைக் கொடுத்து விடும்' என்று முடித்திருக்கிறார்.

"ஹைமவதி" என்று இந்த இடத்தில் உபநிஷத்திலே அம்பாளுக்குப் பெயர் சொல்லியிருப்பதற்கு இரண்டு விதமாக அர்த்தம் பண்ணலாம். ஒன்று, 'ஹிமம்' என்பது 'பனி' ஆதலால் பனி மலையான 'ஹிமவா'னுக்குப் பிறந்த இவள் 'ஹைமவதி' என்பது. 'ஹிம'த்தைக் குறித்தது 'ஹைமம்'—'சிவ'த்தைக் குறித்தது 'சைவம்' என்கிறாற் போல. இங்கே 'இ'காரம் 'ஐ'காரமாகிறது. இதே மாதிரி ஸம்ஸ்க்ருத இலக்கணத்தில் 'ஏ'காரமாக ஆரம்பிக்கும் வார்த்தையிலிருந்து உண்டாகிற derivative - களும் 'ஐ' ஆகிவிடும். "ஏக"த்திலிருந்து "ஐக்யம்", "கேகயன்" பெண்

Koviloor Digital Library

"கைகேயீ". இந்த ரூல்படி 'ஹிமம்' போலவே 'ஹேமம்' என்ற சொல்லின் அடியாகவும் 'ஹைமவதி'ப் பெயர் ஏற்படும். ஹேமம் என்றால் தங்கம். தங்கமாக ஜ்வலிப்பவள் ஹைமவதி. 'பஹுசோபை உள்ளவள்'என்று உபநிஷத்தே இங்கு அம்பாளைக் குறிப்பதால் ஸ்வர்ண காந்தியாய் ஜ்வலிப்பவள் என்று பொருள் கொள்வதும் ரொம்பப் பொருத்தந்தான். ஆசார்யாள் இரண்டு அர்த்தங்களையும் ஒப்புக்கொண்டு, இந்த சோபைக்கு, ஜ்வலிப்புக்கு அவள் வித்யா ரூபிணியாயிருப்பதே காரணம் என்கிறார். அப்புறம் தம் வாக்ய பாஷ்யத்தை முடிக்கிற இடத்தில், "வித்யா வானாக (வித்வானாக) ஒருவன் இருந்தால், அவன் அங்க லக்ஷணப்படிக் குரூபியாயிருந்தாலும்கூட பஹுசோபை யுடனே ப்ரகாசிக்கிறான்: விரூபோ (அ)பி வித்யாவாந் பஹு சோபதே" என்கிறார். ஸதாசாரத்தோடு படிப்பாளி களாக இருக்கப்பட்டவர்களைப் பார்த்த மாத்திரத்தில், "முகத்திலேயே என்ன அறிவுக் களை, என்ன தேஜஸ்!" என்று சொல்ல முடிகிறது. அதேபோல், "மூஞ்சியைப் பார்த்தாலே சோதாக் களை" என்றும் சொல்கிறோம். முன்னே சொன்ன ஸைகிள் பெடல் உதாரணப்படி நம் பூர்விகர்களின் வித்யா ப்ரகாசத்தின் பலத்தில் இப்போதும் நம்மில் சிலர் முகத்திலாவது இந்தத் தேஜஸ் இருக்கிறது. ஸைகிள் நின்று போகாமல் அவள் க்ருபைதான் ஓட்டுவித்து, எல்லோர் முகத்திலும் சோபையை உண்டாக்கி, தேசம் முழுதிலும் அறிவொளி பரவச்செய்ய வேண்டும்.

Koviloor Digital Library

Koviloor Digital Library

பொது வாழ்க்கை

Koviloor Digital Library

Koviloor Digital Library

உத்தரமேரூர் உத்தமத் தேர்தல் முறை*

வேதத்திலும் ஜனநாயக அம்சம்

பழைய காலத்து ஆட்சி முறையைப் பற்றிப் பொதுவாக நமக்கு என்ன அபிப்ராயமென்றால், அதிலே பொது ஜனங்களுக்குக் கொஞ்சங்கூடப் பங்கே இல்லாமல் ராஜாவுக்கே எல்லா அதிகாரத்தையும் விட்டிருந்தது என்பதுதான். ராஜா என்றால் அந்த ஒரு ஆளை மட்டும் நினைக்காமல் அவனுடைய தர்பாரிலுள்ள ப்ரமுகர்களையும் குறிப்பாகக் கொள்கிறோம். ராஜா முக்யமாகவும் மற்றும் அவனுடைய குடும்பத்தைச் சேர்ந்தவர்களும், மந்திரி - ப்ரதானி ஆகியவர்களும் முடிவுகள் எடுத்து அதிகாரிகள் மூலம் அவற்றை அமல்படுத்தியதுதான் பழங்கால ஆட்சிமுறை

---

* இந்த வியாஸம் பல உரைகளின் தொகுப்பாயினும், இதன் மிகப் பெரும் பகுதி ஸ்வதந்திரம் வருவதற்கு இரண்டாண்டுகளுக்கு முன் 1945-லும், நாம் குடியரசாவதற்கு ஓராண்டு முன் 1949-ல் நமது அரசியல் நிர்ணயச் சட்டவிதிகள் உருவாகி நிறைவேற்றப்பட்டு வந்தபோதும் அருளப் பெற்றவை என்பதைக் கவனித்தோமாயின் ஸ்ரீ சரணர்களின் தீர்க்க த்ருஷ்டியை வியக்காமலிருக்க முடியாது.

Koviloor Digital Library

என்று நினைக்கிறோம். வெள்ளைக்கார சரித்ர ஆசிரியர்கள் ஆராய்ச்சி என்ற பெயரில் தந்த்ரமாக நம்மை வளைத்துப் பழக்கப்படுத்தியிருப்பதில் சிலபேர் இன்னொன்றும் நினைக்கிறோம். அதாவது இந்த ராஜாக்களைப் பிராம் மணர்கள் தங்கள் கையில் போட்டுக்கொண்டு, தங்கள் இஷ்டப்படி, அதாவது தாங்களே உசத்தி என்று கொட்டம் அடித்துக்கொண்டு உட்கார்ந்திருக்க வசதியாகவே எல்லாம் செய்துகொண்டார்கள் என்பதாகவும் ஒரு எண்ணம் இருந்துவருகிறது.

பொதுஜனங்களுக்கும் ஆட்சியிலே பங்கு தருகிற ஜன நாயகம் என்பது மேல்நாட்டினர் சொல்லிக் கொடுத்துத் தான் நமக்குத் தெரியவந்ததென்று பொது அபிப்ராயம் இருக்கிறது.

ஆனால் வாஸ்தவத்திலோ வேதகாலத்திலிருந்தே ஸகல ஜனங்களின் அபிப்ராயமும் ப்ரதிபலிப்பதற்கு இடம் தந்து தான் ராஜ்ய நிர்வாஹம் நடந்து வந்திருக்கிறது. வேதத்திலே "ஸபா", "ஸமிதி", "விததா", என்று இரண்டு, மூன்று அமைப்புக்களைப் பற்றிச் சொல்லியிருக்கிறது. இவற்றில் அறிஞர்களாக இருக்கப்பட்ட ஜனங்கள் கூடி ஆட்சி விஷயங்களைக் கலந்தாலோசித்து முடிவுகள் எடுத்ததாகவும் அவற்றுக்கு இணங்கவே அரசன் பரிபாலாம் செய்ததாகவும் தெரிகிறது. வெள்ளைக்கார சரித்திர ஆசிரியர்கள்கூட இவை பிராம்மணர்களால் மட்டுமோ, அல்லது பிராம்மண—க்ஷத்ரியர்களால் மட்டுமோ அமைந்ததாகச் சொல்லாமல், ஸகல ஸமூஹங்களுக்கும் ப்ரதிநிதித்வம் தருகிற ரீதியில் தான் அமைக்கப்பட்டதாகத் தெரிகிறது என்று சொல்கிறார்கள்.

'நமோ நம' என்று திரும்பத் திரும்ப வருவதாக "ருத்ரம்" என்று அபிஷேக காலத்தில் ஒரு ஸ்தோத்ரம் சொல்லப்படுகிறதே, அது வேதத்திலேயே வருவது—யஜுர் வேதத்தின் தைத்திரீய ஸம்ஹிதையில் வருவது. அதிலே இந்த லோகத்திலிருக்கப்பட்ட எல்லா சேதன, அசேதனங்

Koviloor Digital Library

களையும் சொல்லி, அவை ஒவ்வொன்றுக்கும் 'நமோ நம' என்று நமஸ்காரம் பண்ணப்படுகிறது. எதனுலென்ருல் அது ஒவ்வொன்றிலும் விச்வவ்யாபியான பரமாத்மா நிறைந்திருப்பதால். எல்லாம் சிவஸ்வரூபம் என்று இப்படிச் சொல்லிக்கொண்டே போகிறபோது, "ஸபைகளுக்கெல்லாம் நமஸ்காரம்; ஸபாபதிகளுக்கெல்லாம் நமஸ்காரம்" என்று "நமோ நம" சொல்லியிருக்கிறது. ராஜாங்க கார்யங்களுக்காக ஏற்பட்ட மக்களுடைய ஸபையும், அதற்கு அக்ராஸனராக இருந்த ஸபாபதியுந்தான் இங்கே குறிப்பிடப்படுவது.

நம் காலத்தில் அநேக விதமான ஸபைகளைச் சொல்கிருேம்—அவற்றில் ஸங்கீத ஸபை முக்யமாயிருக்கிறது. "ஸபாவுக்குப் போறேன்" என்ருல் கச்சேரிக்குப் போகிருன் என்றே அர்த்தம் செய்து கொள்கிருேம். ஆனுல் வேத காலத்தில் அடைமொழி கொடுக்காமல் வெறுமே ஸபை என்று சொன்னுல், அது இந்தக் காலத்தில் நாம் "சட்ட ஸபை" என்று அடைமொழி கொடுத்துச் சொல்கிருேமே, அந்த மாதிரியான ஒரு அமைப்புத்தான். 'ஸபை' என்பது தமிழில் 'அவை' என்று ஆயிற்று.

ஜனங்களுக்கு நல்லது பண்ணுவதற்காகப் பல அறிஞர்கள் ஒன்றுகூடி ஒரு ஸபை ஏற்படுத்தினுல் அது ஈச்வர ஸ்வரூபமே என்று மதித்து "ருத்ர"த்தில் அதற்கு நமஸ்காரம் தெரிவித்திருக்கிறது.

பரமேச்வரன் அர்ச்சாரூபத்தில் (விக்ரஹ உருவில்) பரிபூர்ணமாக விளங்கிக் கொண்டிருக்கிற சிதம்பரத்தில் அவருடைய ஸந்நிதிக்கு "ஸபை" என்றுதான் பெயர். அது "கனக ஸபை". அது தவிர, தாம் ஆடிகொண்டே லோகங்களையெல்லாம், சேதனு சேதனங்களையெல்லாம் ஆட்டி வைத்துக்கொண்டு ஆட்சி நடத்துகிற அந்த த்ரிபுவன சக்ரவர்த்திக்கு இன்னம் நாலு ஸபை—ரஜத ஸபை என்று வெள்ளியில் ஒன்று, மதுரையில் இருப்பது; ரத்ன ஸபை

Koviloor Digital Library

என்று திருவாலங்காட்டில் இருப்பது; தாம்ர ஸபை என்று திருநெல்வேலியில் இருப்பது; சித்ர ஸபை என்று சிற்பங்களே இல்லாமல் சித்ரங்கள் மட்டும் நிறைந்திருப்பதாகத் திருக்குற்றாலத்தில் இருப்பது—என்றிப்படி மொத்தம் பஞ்ச ஸபைகள். இந்த ஸபைகளுக்கு preside பண்ணும் 'ஸ்பீக்க'ராக, ஸபாபதியாக அவர் இருக்கிறார்! இல்லை, ஸ்பீக்கர் (பேசுபவர்) இல்லை; டான்ஸர் (ஆடுபவர்)!

அவரை நாம் 'நடராஜா' என்றே பொதுவில் சொல்கிறோமானாலும், தீக்ஷிதர்கள் சிதம்பர ஆலயத்தைக் குறிப்பிட்டு எழுதும்போது "ஸபாநாயகர் கோயில்" என்றுதான் போடுவது வழக்கம். ஈச்வரன் ஸபாநாயகர் அல்லது ஸபாபதி மட்டுமில்லை, ஸபையுமே அவன்தான் என்று நமக்குக் காண்பித்துக் கொடுக்கவே வேத ஸ்துதியான "ஸ்ரீ ருத்ர"த்தில் ஸபைக்கும் நமஸ்காரம் சொல்லியிருக்கிறது. Will of the people is the will of God", "மக்கள் தீர்ப்பு மஹேசன் தீர்ப்பே" என்பதெல்லாம் நம்மிடம் புதுசாக வந்து சேர்ந்திருக்கும் கொள்கைகள் இல்லை; ஆதிக்கு ஆதியான வேத காலத்திலிருந்து இந்த அபிப்ராயம் இருந்து வந்திருக்கிறது என்பதற்கு இது சான்று.

ராஜீய வ்யவஹாரங்களை ஆலோசித்து விவாதிக்கும் ஸபை அங்கத்தினர்களுக்கு நல்ல அறிவு, அதைப்போலவே உயர்ந்த சீலமான நடத்தை, 'பாயின்ட்'களை நன்றாக எடுத்துச் சொல்வதற்கு அவசியமான வாக்கு வன்மை ஆகிய மூன்றும் இருக்கவேண்டும் என்பதை வேதத்திலிருந்து தெரிந்துகொள்கிறோம். இந்த மூன்றையும் வேண்டும் ப்ரார்த்தனை ரூபமான அநேக மந்த்ரங்கள் வேதத்தில் இருக்கின்றன. ரிஷிகள் புத்தியிலும் பெரியவர்கள், ஒழுக்கத்திலும் பெரியவர்களென்று நமக்குத் தெரியும். இவற்றோடு நல்ல வாக்கிச் சக்தியும் பெற்றுத் தாங்கள் ஸபைகளில் அங்கம் வகிக்கவேண்டும், அதன் வழியாக அரசாட்சிக்கும் மக்கள் நலனுக்கும் உதவவேண்டும் என்று அவர்களில் சிலர் விரும்பியிருக்கிறார்கள். "(விததா என்கிற) ஸபையில் வன்மையாகப்

Koviloor Digital Library

பேசும் சக்தி எங்களுக்கு வேண்டும்'' என்று ரிஷிகள் ப்ரார்த்திக்கும் மந்த்ரங்கள் இருக்கின்றன.

''ருத்ரம்'' என்று ப்ரஸித்தமாகச் சொல்லப்படும் ஸ்துதி—ஸபையையும் ஸபாபதியையும்பற்றிச் சொல்வது—யஜுர் வேதத்தில் வருகிறது. ரிக்வேதத்திலிருந்தும் ஈச்வரபரமான ஐந்து ஸூக்தங்களைச் சேர்த்துப் ''பஞ்சருத்ரம்'' என்று சொல்வார்கள். அதிலேகூட ஒரு இடத்தில் இந்த ப்ரார்த்தனை வருகிறது.[1] இப்படி புத்தி, குணம், வாக்கு மூன்றிலும் உயர்ந்தவனாக இருக்கப்பட்டவனையே ''ஸபேயன்'' அதாவது ஸபையில் மெம்பர்ஷிப் வஹிக்கத் தகுதி உள்ளவன் என்று சொல்லியிருக்கிறது. ''ஸபேயன்'' என்று ஒருத்தனைச் சொல்லிவிட்டால் போதும், அவன் குணஸம்பத்து, புத்திபலம், வாக்சக்தி மூன்றுமே உள்ளவன் என்று ஆகிவிடும். பிறப்பால் ஒருவன் ராஜாவாகிவிட்டால் போதாது; அவன் ஸபேயனாக இருக்கவேண்டும் என்று காட்டும் மந்த்ரங்கள் இருக்கின்றன.

மக்களுடைய நலனை ஆராய்ந்து, விவாதித்து முடிவுகள் எடுக்கவேண்டிய ஸபையைச் சேர்ந்தவர்கள் எப்படி ஒன்றுபட்டுச் செயலாற்றவேண்டும் என்பதை ''ஸபேயர்'' களுக்கு உபதேசிக்கும் ஒரு வேத ஸூக்தம் ரிக் வேதத்தின் முடிவிலே, பூர்த்தியாகும் இடத்தில் இருக்கிறது.[2] ''உலகத்துக்கே முதல் நூலாக இருக்கப்பட்ட வேதத்தில் இத்தனை அழகாகச் சொல்லியிருக்கிறதே! இதையே U.N. -க்கு (ஐ. நா. ஸபைக்கு) motto-வாக (லக்ஷ்ய வாசகமாக) வைத்துவிடலாம்'' என்று அறிஞர்கள் புகழ்கிறார்கள். ''ஒன்று கூடுங்கள். ஒருவருக்கொருவர் திறந்து பேசி விவாதித்துக் கொள்ளுங்கள். லோக க்ஷேமம், மக்கள் நலன் ஒன்றே லக்ஷ்யம் என்பதில் உங்கள் எல்லாருடைய மனஸும் ஒத்துப் போகட்டும். ஒரே லக்ஷ்யத்துக்காக ஏக மனஸாகப்

---

1. ரிக்வேதம், 2-33-15
2. ரிக்வேதம், பத்தாம் மண்டலம், 191-வது ஸூக்தம்

Koviloor Digital Library

பாடுபட்டுப் பரஸ்பரம் ஹ்ருதயம் கலந்து ஒன்றுகுங்கள். ஐகமத்யத்தால் (மன ஒற்றுமையால்) எல்லோரும் இன்புற்றிருக்க வழி காணுங்கள்'' என்று அந்த ஸூக்தத்தில் உபதேசித்திருக்கிறது.

பல ஸமூஹத்தினரும் இம்மாதிரி ஸபைகளில் ப்ரதிநிதித்வம் வஹித்துத்தான் நாட்டு நிர்வாஹம் நடந்திருக்கிறது. ப்ராம்மணப் புரோஹிதன் வைத்ததே சட்டமாயிருந்தது என்பது கொஞ்சங்கூட ஸரியில்லை. புரோஹிதனைப் போலவே க்ராமணி, ஸேநானி முதலான பலரையும் அரசாங்க கார்யங்களில் முக்யமானவர்களாகச் சொல்லியிருக்கிறது. க்ராமணி என்பவன் கிராம வாழ்க்கையையும், அதாவது ஸிவில் வ்யவஹாரங்களையும், ஸேநானி என்பவன் மிலிடரி வ்யவஹாரங்களையும் கவனித்து வந்திருக்கிற அதிகாரிகளாகத் தெரிகிறது. ஸேநானி நிச்சயமாக பிராம்மணனில்லை, க்ஷத்ரியன்தான். 'க்ராமணி' என்று இப்போதும் உள்ள ஸமூஹமும் அப்ராம்மண ஜாதியாகத்தான் இருக்கிறது. ஆதியிலேயே இப்படி இருப்பதற்கு இடம் இல்லாவிட்டால் பிற்பாடு அப்படி ஆகி இருக்க முடியாது.

('க்ராமணி' என்பதிலிருந்துதான் 'க்ராம மணியம்' என்பது வந்து, அப்புறம் மணியக்காரன் என்றே வார்த்தை ஏற்பட்டிருக்குமோ என்னவோ?)

ராஜபட்டாபிஷேகத்தைப் பற்றிய வேத மந்த்ரங்களைப் பார்த்தால் ஜன ஸமூஹத்தின் ஒவ்வொரு பிரிவினரும் அவனைத் தங்கள் அரசனாக ஏற்று ப்ரகடனம் செய்திருக்கிறார்களென்று தெரிகிறது. இதில் முடியரசோடு குடியரசும் ஒருவிதத்தில் கைகோத்துக் கொண்டு போகிறதென்று சொல்லலாம்.

ஜாதி நாட்டாண்மை

ஜனநாயகத்தின் அம்சமாக நாம் ஆதிகாலத்திலிருந்தே பார்க்கிற இன்னொன்று, ஸகல ஸமூஹத்தினரும் சேர்ந்து

Koviloor Digital Library

பெரிய அளவில் ராஜ்யம் முழுதற்குமான கார்யங்களை கவனித்ததோடு மட்டுமில்லாமல், அந்தந்த ஜாதியினரும் ஸ்வதந்த்ரமாகத் தங்களுடைய கூட்டு வாழ்க்கையை நாட்டாண்மைகள் மூலம் நிர்வஹித்துக் கொண்டதாகும்.

'குலம்' என்பது ஒரு குடும்பத்தைக் குறித்த ஏற்பாடு; ராஷ்ட்ரம், ஜனபதம் என்கிறவை ஒரு ராஜ்யம் (ஜனபதம் என்றால் டவுனாக இல்லாத 'கன்ட்ரி'—க்ராமப்புறம்—என்றும் சொல்கிறார்கள்); இந்த இரண்டுக்கும் நடுவே 'ச்ரேணி' என்று ஒன்று. அது ஒவ்வொரு தொழில்காரர்கள் ஒன்றாகச்சேர்ந்த அமைப்பு. 'சேணியர்' என்று இப்போது நெசவுத் தொழிலில் உள்ளவர்களைச் சொல்வது 'ச்ரேணியர்' என்பதிலிருந்து வந்ததுதான். அவரவர் தொழிலை வைத்து guild-கள் என்பதுபோல் ஏற்பட்ட ச்ரேணிகளில் நெசவுத் தொழிற்காரர்கள் நன்றாகக் கட்டுக் கோப்புடன் தங்களையும் ஒரு ஸமூஹமாக நெய்துகொண்டு அதனால் ச்ரேணியர், சேணியர் என்றே சிறப்பாகப் பெயர் பெற்றிருக்கிறார்கள் போலிருக்கிறது.

ரொம்பவும் பூர்வகாலத்தில், அதாவது இன்றைக்கு நாகரிக உச்சியிலுள்ள மேல்நாட்டுக்காரர்களுக்கு நாகரிகம் என்றால் என்ன என்று தெரியாத காலத்திலேயே, நம்முடைய தேசத்தில் மக்கள் பலவிதங்களில் குடியரசு, ஜனநாயகம், self-government (ஸ்வய ஆட்சி) முதலானவற்றின் அம்சங்களைப் பெற்றிருந்திருக்கிறார்களென்று காட்டுவதற்காக ஏதோ கொஞ்சம் சொன்னேன். அந்த நாளிலிருந்தே நம் நாட்டில் ப்ரஜை என்பவன் ஆளப்படுபவனாக மட்டுமில்லாமல் ஆட்சியிலும் தானே ஒரு பங்கு பெற்றிருந்தானென்று தெரிவிக்க நினைத்தேன்.

தகுதி தேவை

ஆனாலும் ராஜ்ய நிர்வாஹம் என்பது ரொம்பவும் பெரிய விஷயம்; சிக்கலான விஷயம். ஒரு ராஜ்யத்தைக் கட்டி ஆளுவது, ஒரு பெரிய ஜனஸமூஹத்துக்குக் காப்புத்

Koviloor Digital Library

தருவது, அவர்களுக்காகச் சட்டம் பண்ணுவது, அந்தச் சட்டங்களை அவர்கள் பின்பற்றும்படியாகப் பண்ணுவது என்பதற்கெல்லாம் நிறையப் படிப்பறிவு, பகுத்தறிவு, கார்ய ஸாமர்த்யம், உலக அநுபவம் ஆகியவை இருந்தால் தான் முடியும். வீட்டை ஒழுங்காக நடத்துவதென்பதே கஷ்டமாயிருக்கிறது. ஒரு ராஜ்யத்தை நடத்துவதென்றால் சும்மாவா? ஆனதால், வீட்டை நடத்தவே ஸாமர்த்யம் போதாதவர்களாகத்தான் ஜனங்களில் ரொம்பப் பேர் இருக்கும்போது, நாட்டு நிர்வாஹத்திலும் அவர்களுக்கு நேராகப் பொறுப்புத் தந்தால்தான் என்ன ஆகும்?

அதனால் எல்லாரும் நேராக ராஜ்யப் பாரம் பண்ணுவது என்று இருக்க முடியாது.

அதற்கான தகுதிகள் படைத்த சிலரைக் கொண்டுதான் ஆட்சி நடக்கவேண்டும்.

தேசத் தலைமைக்கு அரசன்

ஆட்சி நடத்துபவர்களிடம் ஒரு கட்டுப்பாடு இருக்க வேண்டும். எனவே கட்டுப்படுத்த ஒரு தலைவன் வேண்டும். ஆளப்படுகிறவர்களுக்கும், தங்களுடைய நாடு என்பது மண்ணும் மலையும் நதியுமாக முடிந்துபோகாமல், அதனிடம் அன்பு, பக்தி, விச்வாஸம் எல்லாம் உண்டாக்குவதாக அதன் ரூபகமான (உருவகமான) ஒரு உயிருள்ள பிடிப்புவேண்டும். இந்த இரண்டு உத்தேசங்களுக்காகவும் ஆட்சியின் தலைவராக, தேசத்தின் தலைவராக ஒருத்தர் இருக்க வேண்டியதாகிறது. ராஜா என்று ஒருத்தனை அப்படி வைத்துக் கொண்டார்கள். பாரம்பர்யமாக இப்படிப்பட்ட ராஜாவை வைத்துக்கொண்டால்தான், குழந்தையாக அவன் பிறந்ததிலிருந்தே அந்தத் தலைமைப் பீடத்துக்கு வேண்டிய எல்லா யோக்யதாம்சமும் அவனுக்கு இருக்கு மாறு பயிற்சி கொடுக்க முடியும் என்பதால் ராஜபதவியை hereditary-யாக வைத்துக் கொண்டார்கள். கற்றுக்

Koviloor Digital Library

கொடுத்துப் பயிற்சி பண்ணுவது மட்டுமில்லாமல், தன்னுடைய background (வாழ்க்கைப் பின்னணி), சூழ்நிலே, ரத்தத்தோடு வந்த குணம் முதலியவற்றிலிருந்தே ராஜா வுக்கு இருக்கவேண்டிய அநேக அம்சங்களேயும் தோரணேகளே யும் ஒருவன் பெறுவதும் பாரம்பர்ய முறையில்தான் ஸாத்ய மாகிறது.

அவன் மனம்போனபடிச் செய்யவிடாமல், தர்ம சாஸ்த்ரம், அர்த்த சாஸ்த்ரம், நீதி சாஸ்த்ரம் என்று ஏற்கெனவே இருக்கப்பட்டவைகளே அநுஸரித்து, அவற்றுக் குக் கட்டுப்பட்டே ஆட்சி பண்ண வேண்டுமென்று வைத்தார் கள். ராஜகுரு, மந்த்ரிகள், புத்திமான்கள் ஆகியோரைக் கொண்ட அநேக விதமான ஆலோசனே ஸபைகளின் அபிப் ராயங்களேக் கேட்டு, அதன்படியே ராஜா ஆட்சி நடத்த வேண்டுமென்று வைத்தார்கள்.

ஊர்த் தலேமை

இது ஒரு ராஜ்யம் பூராவுக்குமாகச் செய்த ஏற்பாடு. அப்புறம் ஒவ்வொரு ஊரிலும் ஊர்க்காரர்களுக்கு வேண்டிய வசதிகளே கவனித்துச் செய்து தருவதற்காக ஸ்தல நிர்வாஹம் என்று தனியாய் ஏற்பாடு செய்தார்கள். ஊருக்கு ஊர் ராஜா வைத்தால் நாடு என்று எல்லாரும் ஐக்யப்பட்டுப் பொதுவாகச் சேர்வதும், அதற்கான ஆட்சி பீடத்துக்கு உரிய மதிப்புத் தருவதும் குலேந்து போகும். அங்கங்கே தங்கள் கார்யங்களேத் தாங்களே நிர்வஹித்துக் கொள்ள ஜனங்களுக்கு ஸ்வதந்த்ரம் இருக்க வேண்டுமானுலும், ஒரு ஊர்க்காரர்கள் செய்வது இன்னெரு ஊர்க்காரர்களே பாதிக் காதபடி மேற்பார்வை செய்து ஊர் ஸபைகளே ஒற்றுமையாக ஒத்துப்போகும்படிச் செய்யவும், தேசம் பூராவுக்குமான கார்யங்களே கவனிப்பதற்கும், ராணுவத்தைக் கொண்டு சத்ருக்களிடமிருந்து ரக்ஷை தருவதற்கும், central authority (மத்ய அதிகார பீடம்) இருக்கத்தான் வேண்டும். ராஜா என்ற அதன் தலேவனும் இருக்கத்தான் வேண்டும். இதற்குக்

Koviloor Digital Library

குந்தகம் பண்ணுவதற்கு இடம் கொடுப்பதாக ஊருக்கு ஊர் ராஜா வைத்துக்கொள்ளக்கூடாது. ராஜாவைக் காட்டியே தேசாபிமானம் உண்டாக்கவேண்டியிருப்பதுபோல ஊர் விஷயத்தில் இல்லை. ஏனென்றால் நாட்டைவிட ஊர் என்பது ஜனங்களுக்கு நெருக்கமாக இருப்பது. 'தங்கள் நாடு' என்று இருப்பதைவிடத் 'தங்கள் ஊர்' என்பதில் அதிக அபிமானம் இயற்கையாகவே இருக்கும்.

முதலில் தான்; அப்புறம் தன் குடும்பம்; அதற்கப்புறம் தன் ஊர்; பிற்பாடுதான் தன் நாடு என்று இருக்கிறது. 'தன் உலகம்' என்றே மனஸ் விஸ்தாரமாகவேண்டுமென்று பெரியவர்கள் சொல்கிறார்கள். அதிருக்கட்டும். நடைமுறையில் ஊருக்கு அப்புறம்தான் நாடு என்று இருக்கிறது. அதுதான் மநுஷ இயற்கை. தினமும் பார்த்துப் பழகுகிற ஆறு, குளம், கோவில், வயல், கடைவீதி, அன்றன்றும் பழகுகிற ஜனங்கள் ஆகியவர்களைக் கொண்டிருப்பதால், சொந்த ஊர் என்ற பாசம் ஏற்படுகிறது. பார்க்காத இடங்கள், பார்க்காத மநுஷ்யர்கள் உள்ள விஸ்தாரமான பரப்பு—அதாவது தேசம்—என்றால் அதனிடம் இத்தனை பிடிப்பு ஏற்பட முடிவதில்லை. எதற்குச் சொல்கிறேனென்றால், தேசம் என்ற ஒன்றிடம் புதுசாகப் பிடிமானத்தை ஏற்படுத்தித் தருவதற்காக அதற்கு 'ஸிம்ப'லாக உயிருள்ள ஒருத்தனை ராஜா என்று வைக்க வேண்டியிருப்பது போல, இயற்கையாகவே ஜனங்களுக்குப் பிடிமானமுள்ள ஊரில், அதாவது ஸ்தல ஆட்சியில் ஒருத்தனை வைக்க வேண்டிய அவச்யமிருக்கவில்லை. ராஜாக்கள் என்று பலபேரை அந்தந்த ஊர் ஜனங்களின் விசேஷ மரியாதை - விச்வாஸங்களைப் பெறும்படி வைத்துவிட்டாலே தேசம் பூராவுக்கும் இருப்பவனின் அதிகார ஸ்தானத்தையும் 'இமேஜை'யும் அது 'வீக்'காக்கி விடும் (பலஹீனப்படுத்தி விடும்).

ஆனாலும் எந்த நிர்வாஹமானாலும் அதிலே ஒரு தலைவன் இருக்கவேண்டும். இப்படி ஊர் ஸபைக்கும் இருக்கத்தான் வேண்டும். ஆனாலும் இவனுக்கு விசேஷமாக ஒரு 'இமேஜ்'

Koviloor Digital Library

இருக்கவேண்டியதில்லே. மத்ய பீட ராஜாவுக்குள்ளது போன்ற பெரிய பொறுப்புகளும் இவனுக்கு இல்லே. ஊர்த் தலேமை என்பது ராஜ்யாதிகாரத்தைப் போலப் பிறந்ததிலிருந்து பழக்கினுல்தான் உரிய யோக்யதாம்சங்களேப் பெறமுடியும் என்கிற அளவுக்கு நுட்பமான பொறுப்பு வாய்ந்த ஒன்றில்லே. தேசத்தின் ராஜாவுக்கு அடங்கி, அவன் அதிகாரத்துக்கும் மேற்பார்வைக்கும் கட்டுப்பட்டு ஊர்த் தலேவன் உள்ளூர் ஸமாசாரங்களே மட்டும் கவனிக்க வேண்டியவன்தான். ஆகையால் இதற்குப் பாரம்பர்ய ரைட் அவச்யமில்லே. பார்க்கப்போனுல், இப்படிச் சின்ன அளவில் அதிகாரமிருக்கும்போது அதைப் பாரம்பர்யமாக்குவதே தான் யோக்யதாம்சம் இல்லாதவர்களிடம் பொறுப்பு போவதற்கு வழி பண்ணிவிடும். 'தனக்குப் பெரிய பொறுப்பு இருக்கிறது; ஒரு பெரிய நிலப்பரப்பையும், பெரிய ஜன ஸமூஹத்தையும் தான் ஆண்டு நிர்வாஹம் செய்து மதிப்புக்குப் பாத்ரமாக வேண்டும்; சத்ருக்கள் வந்தால் ஸமாளிக்க வேண்டும்' என்கிறபோது ஒரு ராஜகுமாரன் ரொம்பவும் கவனத்தோடு, கவலேயோடு யோக்யதை ஸம்பாதித்துக் கொள்ளப் பாடுபடுவான். "எல்லாம் நம் மநுஷர்கள்தான்—நமக்குத் தெரிந்த சேஷன் சுப்பன்தான்" என்று இருக்கும் போது, பொறுப்பும் குறைவாக இருந்து, "இது எப்படியும் ஹெரிடடரி; வேறே யாரும் போட்டிக்கு வர முடியாது" என்றும் இருந்துவிட்டால் ஒருத்தன் யோக்யதை ஸம்பாதித்துக்கொள்ளப் பாடுபடவேண்டியதில்லேதானே!

இம்மாதிரியான பல காரணங்களினுல் ஊர் நிர்வாஹத்தைப் பாரம்பர்யமாக வைக்காமல் விட்டார்கள்.

நாடானுல் ராஜா என்கிறவன் ஆலோசனே ஸபைகளின் துணேயுடன் நிர்வாஹம் செய்யவேண்டும்; ஊரானுல் ஒரு நிர்வாஹ ஸபை தனக்குத் தலேவனுக ஒருத்தனே வைத்துக் கொண்டு கார்யங்களேச் செய்யவேண்டும் என்று வைத்தார்கள். இரண்டுக்கும் இருக்கிற வித்யாஸத்தை கவனிக்க வேண்டும். நாட்டில் ராஜா என்கிறவன்தான் முடிவான

Koviloor Digital Library

நிர்வாஹ அதிகாரம் உள்ளவன். அவனுக்கு ஸபைகள் ஆலோசனை சொல்கின்றன. ஆலோசனைதான். முடிவு அவன் தான் எடுப்பான். ஊரிலே இப்படியில்லை. ஸபையேதான் ஆலோசனை சொல்வதோடு நிற்காமல் நேராக நிர்வஹிப்பது; முடிவு எடுப்பது. தலைவன் என்று ஒருத்தன் இல்லாமல் பல பேர் உதிரியாக இருப்பது ஸரியாய் வராது; பலபேரை ஒரு கட்டுக்கோப்பில் வைப்பதற்காகத் தலைவன் இருக்கத்தான் வேண்டும் என்பதற்காக ஸபை ஒரு தலைவனை வைத்துக் கொள்கிறது.

தேர்தல் மூலம் ஊர் ஸபையில் அங்கம்

ராஜா, அவனுக்கு ஆலோசனை சொல்கிறவர்கள், ஊர் ஸபைக்காரர்கள் ஆகியவர்களால் மொத்தத்தில் நிர்வாஹம் நடந்தது.

யார் வேண்டுமானாலும் ராஜாவாக வரமுடியாது. அது ஹெரிடிடரி.

மற்ற ஸ்தானங்களுக்கு அதாவது அவனுடைய ஆலோசனை ஸபை, ஊராட்சி ஸபை, முதலியவற்றில் யார் வேண்டுமானாலும் இடம் பெறலாமா? 'கூடாது. ஊர் நிர்வாஹம், நாட்டு நிர்வாஹம் ஆகியன சிக்கலான விஷயம். நாட்டு நிர்வாஹத்தைவிட ஊர் நிர்வாஹம் சிக்கல் குறைந்தது, பொறுப்பு குறைந்தது என்றாலும் இதிலேயும் சிக்கல் உண்டு, பொறுப்பு உண்டு. எனவே உரிய தகுதி பெற்றிருப்பவர்களிடம்தான் பொறுப்புக் கொடுத்து மேலே சொன்ன ஸபைகளில் அமர்த்தலாம்' என்று ஏற்பாடு செய்தார்கள்.

இப்படி அமர்த்துவதிலேதான் ஜனங்கள் தங்களுக்கும் பங்கு இருக்கிறதென்று ஸந்தோஷப்படும்படியாக ஒரு தேர்தல் முறையை ஊர் விஷயத்தில் கையாண்டார்கள்.

இப்போது இப்படி உங்களையெல்லாம் மெனக்கெடுத்தி உட்காரவைத்து முக்யமாகச் சொல்ல நினைத்தது, சோழர்

Koviloor Digital Library

களின் ஆட்சிக் காலத்தில் தற்போது ஜனநாயகத்தின் மூச்சாக நினைக்கப்படும் "தேர்தல்" என்ற ஏற்பாடுகூட இருந்தது என்பதைப் பற்றித்தான். தேர்தல் இருந்தாலும் இப்போதுள்ள தேர்தல் முறைக்கு எப்படி அந்தக்கால முறை வித்யாஸமாயிருந்தது என்பதைச் சொல்லி, இப்போதிருப் பதைவிட அந்த முறை எப்படி ச்லாக்யமானது என்று கொஞ்சம் காட்ட ஆசை.

'ராஜ்யத்தையோ, ஊரையோ நிர்வாஹம் செய்பவர் களுக்குத் தகுதி இருக்கவேண்டும், எல்லாரையும் அதில் விட முடியாது' என்ருல், அப்போது, இப்படிப்பட்ட தகுதிகள் அவர்களுக்கு இருக்கிறதா என்பதை ஆராய்ந்து பார்த்துத் தான் அவர்களுக்கு ஸ்தானம் தரவேண்டும் என்றும் ஆகி விடுகிறது. ராஜ்யத்தைப் பொறுத்தமட்டில் ஒரு ராஜ குமாரன் பட்டத்துக்கு வரும்போது, அவனுடைய தகப்பனுருக்குத் துணையாயிருந்த ஸதஸ் பெரியவர்களே இவனுக்கும் ஆலோசனை சொல்லி நல்ல வழியிலே போகப் பண்ணுவார்கள். அப்புறம் அவர்கள் வயோதிகத்தில் பதவியை விட்டு விட்டுப் போனுலோ, அல்லது காலமாய் விட்டாலோ, அந்த ராஜாவே அதற்குள் நல்ல ஆட்சி அநுபவமும், விவேகமும் பெற்றிருப்பானுதலால் தனக்கு ஆலோசனை சொல்லக்கூடியவர் யார் என்று பார்த்து அப்படிப்பட்டவர்களை நியமனம் செய்துகொண்டுவிடுவான். இங்கே ராஜாவேதான் 'அப்பாயின்டிங் அதாரிடி'.

ஊர் விஷயத்தைப் பார்க்கலாம். ஊர் நிர்வாஹத்தை ஏற்று நடத்தும் ஸபையினருக்கும் தகுதிகள் இருக்க வேண்டும். ஆனுலும் ராஜா அல்லது ராஜாங்க அதிகாரியால் அவர்கள் நியமிக்கப்பட்டதாக இல்லாமல், 'தங்கள் ஊரை நிர்வஹிப்பவர்களின் நியமனம் தங்கள் ஊராராலேயே முடிவாயிற்று' என்று ஜனங்களுக்கு ஒரு த்ருப்தி இருக்கும் படிச் செய்தால் நன்ருய் இருக்கும். எந்த ஊரிலோ இருந்து கொண்டு, யாரோ உத்தரவு போட்டு நம்முடைய இந்த ஸொந்த ஊரை நிர்வஹிக்க ஆஸாமிகள் வரவேண்டுமா

Koviloor Digital Library

என்று அவர்கள் நினைக்காமல், தங்களுக்கே இதில் பங்கு இருக்கிறது, 'பார்ட்டிஸிபேஷன்' இருக்கிறது என்று பெருமையுடன் நினைக்கப் பண்ணவேண்டும். இதற்கான ஒரு தேர்தல் முறையைத்தான் சோழர் ஆட்சியில் பார்க்கிறோம்.

ஸரி, அப்படியானால் பொது ஜனங்களையே, "உங்கள் ப்ரதிநிதிகளாக ஸபைக்காரர்களை 'எலெக்ட்' செய்யுங்கள்" என்று விட்டுவிட்டார்களா?

குடியரசு, ஜனநாயகம்

தற்போது (1949) இப்படித்தான் நடக்கவேண்டுமென்று ஏற்பாடாகி வருகிறது. ஊர் மட்டுமில்லை, மாகாணம், தேசம் பூராவுக்குமே இப்படி நடத்துவதுதான் உத்தேசமாயிருக்கிறது. குடியரசாக தேசம் ஆகிறபோது ஜனங்கள் எல்லாரும் வோட்டுப் போட்டுப் பார்லிமென்டுக்கும், அஸெம்ப்ளிகளுக்கும் ப்ரதிநிதிகளைத் தேர்ந்தெடுத்து ஆட்சி நடத்தப் பண்ணவேண்டும் என்பதற்கு ஏற்பாடாகி வருகிறது.

இப்போது முடியரசு ஸாத்யமில்லை. ஈஸ்ட் இன்டியா கம்பெனி கொஞ்சம் கொஞ்சமாகப் பிடித்து அப்புறம் ப்ரிட்டிஷ் ராஜாங்கத்துக்கு தேசம் கை மாறின காலங்களில் இந்தத் தேசம் முழுவதற்கும் ஒரு ராஜா இருக்கவில்லை. பிற்பாடு ஸ்வதேச ஸம்ஸ்தானங்கள் என்று பெயர் பெற்ற ஏராளமான ராஜ்யங்களே அப்போது இருந்தன. நமக்கு ஸ்வதந்த்ரம் வந்தபோது இவற்றில் ஏதோ கொஞ்சம் ஸ்வயாதிக்யம் பெற்றிருந்தவற்றைத்தான் ஸ்வதேச ஸம்ஸ்தானம் என்று சொல்லிக் கொண்டிருக்கிறோம். Native State என்பார்கள். இப்படி ஐநூற்றுக்கு மேல் இருக்கின்றனவென்றால், இம்மாதிரி கொஞ்சம் ராஜ்யாதிகாரம் கூடக் கொடுக்காமல் ப்ரிட்டிஷ்காரர்கள் முழுங்கியேவிட்ட சின்னச் சின்ன ராஜ்யங்கள் எத்தனையோ இருந்திருக்கும். ஏகப்பட்ட ராஜாக்களின் ஆளுகையில் இருந்த தேசம் அப்புறம் வெள்ளைக்கார, 'கிங் எம்பர'ரிடம் போயிற்று. அதிகார

Koviloor Digital Library

யில்லாமல் figure-head என்று ராஜாவாக இருப்பவர் அவர். அந்த ஹிஸ்டரி இப்போது வேண்டாம். சொல்ல வந்தது, இப்போது அந்த ஒரே ராஜாவிடமிருந்து தேசம் நமக்கு திரும்பி வருகிறபோது இது முழுதையும் ஒப்பிப்பதற்கு பாரம்பர்ய ரைட் உள்ளவராக ஒரு ராஜகுடும்ப வாரிசும் இல்லை. ஆனபடியால், மற்ற காரணங்கள் ஒரு பக்கம் இருக்க, இப்போது தேசம் பூராவையும் ஏதோ ஒரு ராஜ வம்சம் வாங்கிக் கொள்வதற்கில்லாமல் ஜனங்கள்தான் வாங்கிக்கொள்ள வேண்டும். குடியரசுதான் இங்கே வரமுடியும். வெள்ளைக்காரர்களோடு ராஜா யாரும் சண்டை போட்டு தேசத்தைத் திரும்பவும் ஜயிக்கவில்லை. ஜனங்களே தான் கூடியமட்டும் அஹிம்ஸை மார்க்கம் என்று சொல்லக் கூடிய முறையில் ஓரளவு ஸாத்விக யுத்தம் செய்து ராஜ்யத் தைத் திரும்பப் பெற்றிருக்கிறார்கள். அதனால் ஜனங்களே இதை ஆண்டுகொள்ள உரிமை பெற்றவர்களாக இருக்கிறார் கள். இதைத்தான் குடியரசு என்பது.

குடியரசு என்றாலும் அத்தனை ஜனங்களுக்கும் ஆட்சியில் நேர்ப்பொறுப்பும் பதவியும் கொடுக்க முடியாது. அதனால் அவர்களுக்கு ப்ரதிநிதிகளாக சிலபேர்தான் ராஜாங்கத்தை அமைத்து நடத்தவேண்டும். இதிலே பொதுஜனங்களுக்கு இடம் தராமல், ப்ரபுக்களாக இருக்கப்பட்டவர்களே சேர்ந்து ஆட்சி நடத்துவதான 'அரிஸ்டாக்ரஸி', மதத்தலைவர்கள் நடத்துவதான 'தியாக்ரஸி'—என்பது போலப் பல இருக் கின்றன. ஒருவரே எல்லா அதிகாரத்தையும் தன் வசமாக்கிக்கொண்டு, ஸர்வாதிகாரி என்றே பெயர் வைத்துக்கொண்டு ஆள்வதை 'ஆடாக்ரஸி' என்கிறார்கள். இம்மாதிரியுள்ள பல ஆட்சி முறைகளில், ஜனங்களில் ஒரு குறிப்பிட்ட வர்க்கத்தை மட்டும் சேர்ந்தவர்களாயில்லாமல் ஸகல ஜனங்களுக்கும் ப்ரதிநிதிகளாக இருக்கப்பட்டவர் களிடம் ஆட்சியைக் கொடுப்பதற்கு 'டெமாக்ரஸி' என்று பெயர். ஜனநாயகம் என்று நாம் சொல்கிறோம். இப்படிப் பொதுவான ஜனஸமூஹம் பூராவுக்குமான ப்ரதிநிதிகளைக்

Koviloor Digital Library

கொண்டே நம்முடைய குடியரசில் ஜனநாயகமாக ஆட்சியை ஏற்படுத்த உத்தேசிக்கப் பட்டிருக்கிறது. இது இப்படித் தான் இருக்க முடியும். கால தேச வர்த்தமானத்தில் இதைத் தவிர வேறு விதமாக ஏற்பாடு செய்வதற்கில்லை எனலாம்.

அபிப்ராய பேதம்

எல்லா வர்க்கத்தினருக்கும் இடம் தரும்படியாக ராஜாங்கம் அமையட்டும். ஆனால் இப்படிப்பட்ட ப்ரதிநிதி களை வயஸு வந்த எல்லா ஜனங்களுமே தேர்ந்தெடுக்கும் முறைதான் ஸரியான வழியா என்பதில்தான் கொஞ்சம் அபிப்ராய பேதம் இருக்கிறது. கொஞ்சம் அபிப்ராய பேதம் என்று சொல்வது அவ்வளவு ஸரியில்லை; நிறையவேதான் அபிப்ராய பேதம். ஆனால் இப்படி ரொம்பவும் கொஞ்சம் பேருக்கே இருக்கிறது. இப்படி இருப்பதால், தேசத்தில் பொதுவாயுள்ள அபிப்ராயத்தைக் கவனிக்கும்போது இந்த அபிப்ராய பேதம் கொஞ்சமாகவே தெரிகிறது.

இம்மாதிரி வித்யாஸமாக நினைப்பவர்கள் என்ன சொல் கிறார்களென்றால்: நிர்வாஹம் பண்ணுவதற்கு ஒரு தகுதி வேண்டுமென்பது போலவே, ஒருத்தர் அப்படிப்பட்ட தகுதி உள்ளவர்தானா என்று எடை போட்டுப் பார்த்து அவரைத் தேர்ந்தெடுப்பதற்கும் ஒரு தகுதி வேண்டும். ஒரு அபேக்ஷகர் (வேட்பாளர்) என்றால் அவர் ஏதோ ஒரு கட்சி யில் இருப்பார். அதற்கென்று கொள்கைகள் இருக்கும். ஸ்வயேச்சை அபேக்ஷகர் என்றால் அவருக்கும் ஏதோ கொள் கைகள் இருக்கத்தான் வேண்டும். தேர்ந்தெடுக்கிறவர்கள் இந்தக் கொள்கைகளைப் புரிந்துகொள்ளக் கூடியவர்களாக இருக்கவேண்டும். 'நம் தேசத்தில், தற்போதுள்ள நிலவரங் களில் இந்தக் கொள்கைகளின் அடிப்படையில் நிர்வாஹம் செய்வது நல்லதா?' என்று சீர்தூக்கி முடிவு பண்ணக் கூடியவர்களாக வோட்டர்கள் இருக்கவேண்டும். "அதைச் செய்கிறேன், இதைச் செய்கிறேன்" என்று எதையாவது

Koviloor Digital Library

சொல்லிக்கொண்டு வோட்டு கேட்டால், "அது ஸாத்யந் தானு? ஸாத்யமானுலும் அப்படிச் செய்யலாமா?" என்று யோசித்துப் பார்த்து, பேச்சில் ஏமாந்து போகாமல் வோட்டுப் போடக்கூடியவர்களாக இருக்கவேண்டும். மொத்தத்தில், குடியரசு எல்லாருக்குமானுலும், அதிலே ராஜாங்கம் அமைப்பவர்கள் எல்லா வர்க்கத்தினருக்கும் ப்ரதிநிதிகளாயிருக்க வேண்டியவர்களானுலும், அவர் களுக்கு நிர்வாஹத்துக்கான யோக்யதாம்சம் இருக்க வேண்டியிருக்கிறது; அப்படிப்பட்ட யோக்யதாம்சம் அவர் களுக்கு இருக்கிறதா என்று பரிசீலனை பண்ணி அவர்களைத் தேர்ந்தெடுப்பதற்கும் ஒரு யோக்யதாம்சம் வேண்டியிருக் கிறது. அதாவது அபேக்ஷகர், வோட் போடுபவர் இருவருக் கும் யோக்யதாம்சம் வேண்டியிருக்கிறது.

ஒரு வேலை கொடுக்கும்போது, மனுப் போட்ட பல பேரிலே யாருக்குக் கொடுக்கலாம் என்று ஸெலக்ட் செய்ய வேண்டியிருக்கிறது. ரொம்பவும் விஷயம் தெரிந்தவர்களைத் தான் ஸெலக்ஷன் கமிட்டியில் போட்டு அவர்கள் மூலம், மனுப் போட்ட பல பேரில் ஒருத்தருக்கு வேலை கொடுக்கிறுர் கள். அதாவது வேலைக்கு வைக்கிறவனின் யோக்யதாம் சத்தைப் பரீக்ஷித்து அவனை ஸெலக்ட் செய்வதற்கு அவனை விட யோக்யதாம்சம் வாய்ந்தவரை நாட வேண்டியிருக் கிறது. குடியரசுத் தேர்தலில் அந்த அளவுக்கு இல்லாவிட் டாலும், இன்னுருக்கு இன்ன யோக்யதாம்சம் என்று சீர் தூக்கிப் பார்க்கவேண்டியவர்களான வோட்டர்களுக்கும் ஓரளவுக்கு யோக்யதை வேண்டித்தான் இருக்கும்.

தேச நிர்வாஹம், அரசியல் கொள்கைகள் முதலிய வற்றைப் பற்றி ஓரளவேனும் விஷயஞானமுள்ளவர்கள் ஆலோசனை செய்து வோட் கொடுத்தால்தான் ஆட்சி ஸரியானவர்களிடம் போகும். விஷயம் தெரியாதவர்கள் எலெக்ட் செய்யும்படி விட்டால் தப்பானவர்கள் அதிகாரத் துக்கு வந்துவிடக் கூடுமே, அதனுல் ரொம்பவும் அனர்த்த மாகி விடுமே—

Koviloor Digital Library

என்பதெல்லாந்தான் நான் சொன்ன "கொஞ்சம் பேரின்" கவலே, ஆக்ஷேபணை எல்லாம்.

விஷயம் தெரிந்தவர்களும் ஸ்வயநலக்காரர்களாயிருக்கிருர்கள், தேச நலனைக் கருதாமல் தங்கள் ஸொந்த அபிமானங்களின் மீது வோட் போடுபவர்கள் அவர்களிலுந் தான் இருக்கிருர்கள்—என்பதை ஒப்புக்கொள்ள வேண்டியதுதான். ஆனுலும் இருப்பதற்குள் நல்லதாக, safe-ஆக ராஜாங்கம் அமையவேண்டுமானுல், அதற்கு, ஒன்றும் தெரியாத பாமர ஜனங்களிடம் தேர்ந்தெடுக்கும் பொறுப்பைத் தருவதைவிடத் தெரிந்தவர்களிடம் தருவது தான் உசிதமானது. இருப்பதற்குள் இப்படிச் செய்தால்தான் குறைச்சல் அனர்த்தம் என்று வைத்துக்கொள்ளலாம்!

ஆனதினுல், படிப்பு, ஸொத்து இம்மாதிரி ஏதோ ஒன்றினுல் ராஜீய விஷயங்களில் ஓரளவு ஞானமும் பொறுப் புணர்ச்சியும் பெற்றிருப்பவர்கள் மட்டுமே வோட்டுரிமை பெற்றுத் தேர்ந்தெடுக்கும் முறையைப் பின்பற்றுவதுதான் ஸரி என்று இந்தக் "கொஞ்சம் பேரு"க்குத் தோன்றுகிறது. ஜாதி, மதம், பொருளாதார வர்க்கம் முதலானவற்றில் குறிப்பிட்ட ஏதோ ஒன்றை மட்டும் சேர்ந்தவர்களாயில்லாமல் எல்லாவற்றையும் சேர்ந்தவர்களான இப்படிப் பட்ட விஷயமறிந்த எல்லாருக்கும் வோட்டுரிமை தர வேண்டும்; அப்படிச்செய்வதால் இது குறிப்பிட்ட ஒரு பிரிவின் ஆட்சியான மற்ற 'க்ரஸி'களில் ஒன்ருக இல்லாமல் 'டெமாக்ரஸி' என்றே மதிக்கப்படவேண்டியதாகும்—என் கிருர்கள். எலெக்ட் ஆகிற அபேக்ஷகரும் இப்படியே ஏதோ ஒரு வர்க்கமாகத்தான் இருக்க வேண்டுமென்று வைக்காத தால் டெமாக்ரஸிக் கொள்கை இன்னம் பலப்படுகிறது. இதற்கு மேல் Adult Franchise (வயது வந்தோர் யாவரும் வோட்டளிக்கும் முறை) என்று போனுல், விஷயம் தெரியாத ஏராளமான பாமர ஜனங்களைக் கொண்ட நம் தேசத்தில் ஸரியானவர்களிடம் நிர்வாஹம் போகாமல் கஷ்டப்பட வேண்டி வரப் போகிறதே என்று நான் சொன்ன "கொஞ்சம்

Koviloor Digital Library

பேர்'' நினைக்கிறார்கள். நவீன முன்னேற்றப்போக்கு இல்லாதவர்கள், பழம் பெருச்சாளிகள் என்று முன்னேற்றத் தலைவர்கள் வர்ணிக்கிற ''கொஞ்சம் பேர்!''

இந்தத் தலைவர்கள் ஜனங்கள் அத்தனை பேரையும் ஸ்வதந்த்ரப் போராட்டத்தில் தூண்டிவிட்டுத்தான் வெள்ளைக்காரனைப் போகப் பண்ணியிருக்கிறார்கள். அதனால் இப்போது அத்தனை பேரும் தேச ஆட்சிக்கு உயிர் நாடியாயுள்ள எலெக்ஷனில் கலந்து கொள்ளும்படிச் செய்யாமல், வோட்டர்களுக்கு யோக்யதாம்சம் நிர்ணயித்தால், ஜனங்கள் தங்களை என்ன பண்ணுவார்களோ என்ற எண்ணமும் இருக்கலாம். 'வெள்ளைக்காரர்களை எதிர்த்து என்னென்ன பண்ணுவதற்கு ஜனங்களுக்குக் கற்றுக் கொடுத்தோமோ அதைத் தங்களிடமே அவர்கள் திருப்பிக் கொண்டால் என்ன பண்ணுவது?' என்றும் இருக்கலாம். இப்படி எவனோ அந்நியனுக்குப் பண்ண வேண்டியிருந்ததை நம் தேசத்தின் தலைமையில் இருக்கும் நம்மவர்களுக்கே பண்ணலாமா என்று யோசிக்காமல் செய்யக் கூடியவர்கள் என்றாலே விஷயம் தெரியாதவர்கள், அரசியல் அறிவு போதாதவர்கள் என்றுதான் அர்த்தம். உபத்ரவம் பண்ணுவார்கள் என்பதற்காக ஒருத்தருக்கு ஒரு உரிமை கொடுக்கப்பட்டால் அப்படிப்பட்டவர்கள் அந்த உரிமையைத் தப்பாகத்தான் ப்ரயோகிப்பார்கள்.

விசித்ர அம்சம் கொண்ட தேர்தல் முறை

இம்மாதிரி ஸமாசாரங்களையெல்லாம் நம்முடைய பழைய காலப் பெரியவர்கள்—சோழர் காலம் என்று சொன்னேனே, அப்போதிருந்த பெரியவர்கள்—யோசித்துப் பார்த்திருக்கிறார்கள். ஆனதினால், ஊர் ஸபைக்காரர்கள் ராஜாங்க அதிகாரத்தின் கீழ் நியமனமாகாமல், தேர்ந்தெடுக்கப்பட்டுப் பதவி வஹிக்கும்படி ஏற்பாடு செய்ய எண்ணியபோதே, அது ஸர்வஜன வோட்டெடுப்பாக இருந்தால் ஸரிப்பட்டு வராது என்பதையும் கவனித்திருக்

Koviloor Digital Library

கிருர்கள். தகுதி நிர்ணயம் பண்ணிச் சில பேருக்கு மட்டும் வோட்டுரிமை தரலாமா என்ருல், இதனுலே ஊர் ஜனங்களிடம் உயர்வு - தாழ்வு எண்ணங்கள் ஏற்பட்டு ஸமூஹத்தில் விரிசல் கண்டுவிடப் போகிறதே என்று நினைத்திருக்கிருர்கள் போலிருக்கிறது.

ஆகையால், நான் சொல்லப்போவது விசித்ரமாக இருக்கலாம்: ராஜாங்க நியமனமாயுமில்லாமல், ஜனங்களில் எல்லோருமோ சிலரோ வோட் போடுவதாகவுமில்லாமலுள்ள ஒரு தேர்தல் முறையை ஏற்படுத்திஞர்கள்.

விசித்ரம் என்று சொன்னதால் அதைத் தெரிந்துகொள்வதில் ஆர்வம் உண்டாயிருக்கும். உடனேயே விசித்ரத்தைச் சொல்லி ஆர்வத்தைத் தணித்துவிடுவதில் ஸ்வாரஸ்யமில்லே. ஆகையால் இது ஸம்பந்தமான மற்ற விஷயங்களேச் சொல்லிவிட்டு அப்புறம் இதற்கு வருகிறேன்.

சோழ வம்சம்

தமிழ்நாட்டின் சரித்ரம் இக்கால ஆராய்ச்சியாளர்கள் ஒப்புக்கொள்ளும்படியாக ஆரம்பிக்கும் கி.மு. மூன்ரும் நான்காம் நூற்ருண்டுகளிலேயே மூவேந்தர்கள் என்று சேர, சோழ, பாண்டிய வம்சங்கள் இருந்திருக்கின்றன. சங்க இலக்கியத்திலேயே பல சோழ ராஜாக்களேச் சிறப்பித்துச் சொல்லியிருக்கிறது. புராண ரீதியாக ப்ரஸித்தி பெற்றவர்கள் திருவாரூரிலிருந்துகொண்டு ஆட்சி செய்த முசுகுந்த சக்ரவர்த்தி, மநுநீதிச் சோழன் முதலான ராஜாக்கள், சரித்ர பூர்வமாக ஒப்புக்கொள்ளும் பழைய சோழ அரசர்களில் கரிகாலச் சோழன், கோச்செங்கட் சோழன் முதலானேர் ப்ரஸித்தி பெற்றவர்கள். அவர்களுடைய காலத்தில் கொடிகட்டிப் பறந்த சோழ அரசு அப்புறம் நொடித்துப் போய், கி.பி. ஐந்தாம் நூற்ருண்டிலிருந்து பல்லவ ஸாம்ராஜ்யம் விஸ்தரிப்புப் பெற்றுப் பெருமை கண்டது. மறுபடியும் ஒன்பதாம் நூற்ருண்டு மத்தியில் விஜயாலய சோழன் காலத்தில் சோழ வம்சம் தலேதூக்கி,

Koviloor Digital Library

தலைமுறைக்குத் தலைமுறை வ்ருத்தியாகி, ராஜராஜன், ராஜேந்திரன் முதலியவர்கள் ஆட்சியில் எல்லாத் துறைகளிலும் மிகவும் அபிவிருத்தியடைந்த மஹாஸாம்ராஜ்யமாக ஆயிற்று. இப்படி சுமார் நானூறு வருஷங்கள் இந்தப் பிற்காலச் சோழ வம்சம் புகழோடு விளங்கிற்று.

தேர்தல் குறித்த கல்வெட்டு

இவர்களில் விஜயாலயனுக்குப் பின்னால் இரண்டாம் பட்டமாக ஆட்சி நடத்திய பராந்தக சோழன் காலத்தில் நான் சொன்னபடி நடந்த தேர்தலைப் பற்றிய விவரங்கள் தெரியவந்திருக்கின்றன. ஆயிரம் வருஷத்துக்கு முந்திய (கி.பி. 920-ம் வருஷத்திய) ஒரு கல்வெட்டில் இதைப்பற்றி விரிவாகவும், ஸ்வாரஸ்யமாகவும் விளக்கமாகச் சொல்லியிருக்கிறது. அந்தக் கல்வெட்டு காஞ்சீபுரத்துக்கு அருகே உள்ள உத்தரமேரூரில் இருக்கிறது. பேரூர் என்றும் அந்த ஊருக்கு பேர்வழங்கி வந்திருக்கிறது.

பார்லிமென்ட், ஸ்டேட் அஸெம்ப்ளிகள் மாதிரி ஒரு ராஜ்யம் முழுவதற்குமோ, அல்லது அதன் பெரிய பிரிவான மஹா மண்டலம் ஒன்றுக்கோ சட்டம் போட்டு திட்டம் போட்டு நடத்துவதற்காக ப்ரதிநிதிகளைப் பொறுக்கி எடுப்பதற்காக நடந்த தேர்தல் அல்ல, இந்த சாஸனத்தில் சொல்லப்படும் விஷயம். பல நூற்றாண்டுகளுக்கு முன் சோழ ராஜாக்களின் ஆட்சியில் அந்தந்த ஊர்க் கார்யங்களைக் கவனிப்பதற்காக, இந்த நாளில் ஸ்தல ஸ்தாபனம் (Local Body) என்று நகர ஸபைகளும் பஞ்சாயத்துக்களும் உள்ள மாதிரி ஸபைகள் இருந்திருக்கின்றன. இவற்றின் ப்ரதிநிதிகளுக்கான தேர்தல்தான் இந்த சாஸன விஷயம்.

ராஜ்யப் பிரிவுகள்

சோழ ராஜ்யத்தைப் பல administrative division-களாக (நிர்வாஹப் பிரிவுகளாக)ப் பிரித்திருந்தார்கள்—தற்போதைய ஜில்லா, தாலுகா, ஃபிர்க்கா முதலான

Koviloor Digital Library

வற்றைப் போல். இப்போதுள்ள பிரிவினைகளின் பெயர் களிலிருந்தே இவை துருக்கர் ஆட்சியில் ஏற்பட்டவை என்று தெரிகிறது. அப்புறம் வெள்ளைக்காரர் ஆட்சியில் இவை மேலும் திட்டமாக வரையறுக்கப்பட்டன. ஆனால் இதற் கெல்லாம் ரொம்ப முந்தியும் நம் நாட்டில் இப்படி ராஜ்யத் தைப் பல பிரிவுகளாகப் பிரித்திருக்கிறார்கள். அதில் சோழராட்சியில் நாட்டின் மிகப் பெரிய பிரிவு 'மண்டலம்' எனப்படும். அப்புறம் ஒரு மண்டலத்துக்குள் ஒவ்வொன்றும் பதினெட்டு ஊர் கொண்டதாக 'வயநாடுகள்' என்ற பிரிவினை வளநாட்டுக்குள்ளே கூற்றம், கோட்டம் என்று போய் முடிவிலே ஊர். ஊர் என்பது பெரும்பாலும் க்ராமமே. வர்த்தகத்தைவிட வ்யவஸாயமே (விவசாயமே) அதிகம் நடந்த அக்காலத்தில் நகரங்கள் என்னும் டவுன்கள் குறைச்சல். அவற்றைவிட க்ராமங்களே சிறப்பாக விளங்கின. உத்தரமேரூர்கூட அப்படிப்பட்ட க்ராமம்தான். க்ராமம் என்றால் ரொம்ப சின்னது என்று நினைக்க வேண்டாம். இப்போது நாம் ஒரு ஊர் ஸபைத் தேர்தலில் 'வார்ட்' என்று சொல்கிற பிரிவுபோல் முப்பத்திரண்டு கொண்ட அளவுக்கு உத்தரமேரூர் விஸ்தாரமாக இருந்திருப் பதாக சிலா சாஸனத்திலிருந்து தெரிகிறது.

இப்படிப்பட்ட ஒரு ஊர் அல்லது க்ராமத்தில் முன்னே சொன்ன வேதகால ச்ரேணியின் அடிப்படையில் ஒவ்வொரு ஜாதிக்கும், அதாவது தொழிற்பிரிவுக்கும், ஒரு நாட் டாண்மை இருந்தது. இவற்றிலே வ்யாபாரிகளுடைய வ்யவ ஹாரங்களை அவர்களே கவனித்துக்கொண்ட அமைப்புக்குத் தான் தமிழ்நாட்டைப் பொறுத்தமட்டில் "நகரம்" என்று பெயர். அதனால்தான் ராமநாதபுர ஜில்லாவில் வ்யாபார வைச்ய ஸமூஹமே முன்னணியில் இருப்பதான நாட்டுக் கோட்டைப் பகுதியினால் அவர்களுக்கு "நகரத்தார்" என்று பெயர் ஏற்பட்டிருக்கிறது. இதேபோல "ஸபை" என்று வெறுமே சொன்னால் அது தமிழ் தேசத்தில் ப்ராம்மணர் கள் தங்கள் ஸமாசாரங்களை விவாதித்து முடிவுசெய்து

Koviloor Digital Library

கொண்ட ஸபைதான். இப்படித் தனிப்பட்ட ஒரு ஜாதிக்காக இல்லாமல் ஊர்முழுவதன் பொது விஷயங்களையும் கவனித்து, அதன் வ்யவஸாயம், நீர்ப்பாசனம் முதலியவற்றை நிர்வஹித்த ஸ்தலஸ்தாபனத்துக்கே "ஊர்" என்று பெயர் இருந்தது. இதில் எல்லா ஜாதியினரும் அங்கம் வஹிப்பார்கள். இதை ஊர்ச்சபை, க்ராமஸபை, க்ராம மஹாஸபை என்றெல்லாமும் சொல்வதுண்டு. அப்படிப்பட்ட உத்தரமேரூர் க்ராம மஹாசபைக்கு எப்படித் தேர்தல் நடந்தது என்பதைத்தான் இரண்டு சிலா சாஸனங்கள் தெரிவிக்கின்றன.

க்ராம ஸபையின் அமைப்பு

இந்த நாளில் ஊரை 'வார்ட்' என்று பல பிரிவுகளாகப் பிரித்திருக்கிறமாதிரி அப்போது ஒவ்வொரு ஊரையும் (கிராமத்தையும்) பல 'குடும்பு'களாகப் பிரித்திருக்கிறார்கள். உத்தரமேரூர் கல்வெட்டுக்குச் சுமார் ஐம்பது வருஷம் முந்தியதும், செந்தலை என்கிற சந்த்ரலேகா சதுர்வேதி மங்கலம் என்ற ஊரிலுள்ளதுமான முதலாம் ஆதித்ய சோழனின் கல்வெட்டிலேயே அந்த ஊரைக் 'குடும்பு'கள் என்ற வார்டுகளாகப் பிரித்திருந்ததைக் குறிப்பிட்டிருக்கிறது. ஒவ்வொரு குடும்புக்கும் ஒரு ப்ரதிநிதி கொண்டதாக க்ராம மஹாஸபை அமைக்கப்பட்டிருந்தது. மேற்படி ப்ரதிநிதிகள், அதாவது ஊர்ச்சபையின் அங்கத்தினர்கள்தான் ராஜாவாலோ, அல்லது ராஜாங்க அதிகாரியாலோ அல்லது அதிகாரக் குழுவாலோ நியமிக்கப்படாமல், தேர்தல் மூலமாகப் பொறுக்கி எடுக்கப்பட்டுப் பதவிக்கு வந்தனர். அதாவது—இதுதான் முக்யமான அம்சம்—ஊராட்சி ஸபையின் மெம்பர்ஷிப் பாரம்பர்யமாகவோ, அல்லது ராஜாங்க நியமனமாகவோ (கவர்ன்மென்ட் அப்பாயின்ட்மென்டாகவோ) இல்லை. மணியம் மாதிரி அப்பா - பிள்ளை என்று தலைமுறை தத்துவமாக இல்லை. Hereditary appointment இல்லை; nominated appointment-ம் இல்லை; elected appointment. இதை ஒரு விதத்தில் ஜனங்களே எலெக்ட்-

Koviloor Digital Library

செய்வதாக இருந்தது என்றுதான் சொல்லவேண்டும். வோட்டுச் சீட்டு மாதிரியே ஒன்றை அநுஸரித்து இந்தத் தேர்தல் நடந்தது என்பது இதில் இன்னொரு ஸாரமான அம்சம். ஆனாலும் வோட்டர்கள் என்று பல பேர் தலைக்கு ஒரு வோட்டுப் போட்டு நடந்த தேர்தல் அல்ல. பின்னே அது என்ன, எப்படி நடந்தது என்று பின்னால் சொல்கிறேன். காக்க வைத்துச் சொல்வதில்தான் ருசி அதிகம்.

கல்வெட்டைப் பற்றிய விவரம்

இப்படி ஊர் ஸபைகளின் அங்கத்தினர்களை எப்படித் தேர்ந்தெடுத்தார்கள் என்பதைக் காஞ்சீபுரத்துக்கு அருகிலுள்ள உத்தரமேரூரில் உள்ள சாஸனத்தால் மட்டுமின்றி, தெற்கு ஜில்லாக்களிலுள்ள வேறே பல செப்பேடுகளிலிருந்தும் கல்வெட்டுக்களிலிருந்தும் தெரிந்து கொள்கிறோம்.

மாயவரம் தாலுகாவில் தலைஞாயிறு என்று (க்ராமம்) இருக்கிறது. அங்கே "குற்றம் பொறுத்தீச்வரர்" என்ற கருணை பெயர் கொண்ட சிவன் கோயில் இருக்கிறது. 'தனிவாழ்க்கையில் தனி மநுஷன் குற்றத்தைத்தான் பொறுக்கும்படி பகவானிடம் வேண்டலாம்; பொதுவாழ்க்கையில் குற்றமில்லாமல் அப்பழுக்காகத்தான் ஒழுகணும்' என்று காட்டுகிற மாதிரி இந்தக் கோவிலிலேயே ஊராட்சி பற்றி ஒரு சோழர் காலக் கல்வெட்டு இருக்கிறது. இத்தனை வயஸுக்கு மேலே ஆனவர்கள், இதற்கு முந்தி இத்தனை வருஷகாலம் ஊர்ஸபையில் அங்கம் வஹிக்காதவர்கள், வேறே தன் உறவுக்காரர்கள் யாரும் ஊர்ஸபையில் இத்தனை வருஷத்துக்கு முந்திவரை மெம்பராயில்லாதவர்கள் ஆகியவர்களைத்தான் 'எலெக்ட்' செய்யலாமென்று இந்தக் கல்வெட்டிலிருப்பது, ஏறக்குறைய உத்தரமேரூர் "பாணி"யிலேயே இருக்கிறது.

சிலாசாஸனமும் (கல்வெட்டும்), தாம்ர சாஸனமுமாக (செப்பேடுமாக) உத்தம சோழன், ஸுந்தர சோழன்,

Koviloor Digital Library

முதலாம் ராஜராஜன், முதலாம் ராஜேந்த்ரன், முதலாம் குலோத்துங்கன் என்று பல பேர் காலத்தியதாக ஊராட்சி விஷயங்களைச் சொல்பவை பல இருக்கின்றன. "அன்பில் Plates", "Leyden Plates" என்று இவற்றில் இருப்பதிலும் இந்த விஷயங்கள் வருகின்றன. ஆனாலும் முக்யமாக, exhaustive ஆக (முழு விவரமும் தருவதாக) இருப்பது உத்தரமேரூர் சாஸனந்தான்.

ஸரியாகச் சொன்னால் உத்தரமேரூரிலேயே இரண்டு சாஸனங்கள் இருக்கின்றன. முதலில் ஒன்றும், அப்புறம் இரண்டு வருஷங்களுக்குப் பின்னால் இன்னொன்றுமாக இரண்டு கல்வெட்டுக்கள் அங்குக் காணப்படுகின்றன. முதல் கல்வெட்டு சுருக்கமாக இருக்கிறது. பிந்தையதுதான் விவரமாக இருப்பது. அதுதான் அதிக ப்ரஸித்தி அடைந்தது. நான் அதிலுள்ள விஷயங்களைத்தான் இப்போது சொல்ல இருக்கிறேன். ஏனைய கல்வெட்டுக்களில் கொஞ்சம் கொஞ்சம் தெரிகிற விஷயங்களைப் பூர்த்தியாகக் கொடுப்பது பராந்தக சோழன் காலத்திய இரண்டாம் கல்வெட்டுத்தான். (கி. பி. 920-ம் வருஷத்தியது.)

ஓர் ஊரில் பொதுக் கார்யங்களில் ஏதாவது குறை ஏற்பட்டிருந்தால், முறையின்மை நடந்திருப்பதாகத் தெரிந்தால், அதை விசாரித்து நிவ்ருத்தி செய்வதற்காகச் சோழ ராஜா (எந்த அரசனுமே) தகுந்த அதிகாரிகளை அனுப்பி வைப்பான். இப்படி ஆயிரம் வருஷத்துக்கு முந்தி 'பராந்தகன்' என்று நாம் சுருக்கமாகச் சொல்லும் வீர நாராயண பராந்தக தேவ பரகேஸரி வர்ம சோழ மஹாராஜா, தத்தனூர் மூவேந்த வேளான் என்னும் அதிகாரியை ஒரு தடவையும், அதற்கு இரண்டு வருஷங்களுக்கு அப்புறம் ஸ்ரீவங்கநகர் ஸோமாசி க்ரமவித்தபட்டன் என்னும் அதிகாரியை இன்னொரு தடவையும் உத்தரமேருருக்கு அனுப்பித் தேர்தல் முறைகளைச் சீர்ப்படுத்தியிருக்கிறான். இந்த இருவரும் மேற்பார்த்துச் செய்த ஏற்பாடுகளைத்தான் முறையே அந்த இரண்டு உத்தரமேரூர்

Koviloor Digital Library

சாஸனங்கள் தெரிவிக்கின்றன. அந்த ஊர்ப் பரிபாலன ஸபையார் கூடி வகுத்துக் கொண்டே தேர்தல் விதிகளை இந்த அதிகாரிகள் ஸுபர்வைஸ் செய்து அதிகார பூர்வமாக அங்கீகரித்திருக்கிறார்களென்று தெரிகிறது.

அந்தண - வேளாள அதிகாரிகள்

இந்த இரண்டு அதிகாரிகளில் வேளான் என்பவன் வேளாளர் ஜாதி என்று சொல்லாமலே புரியும். 'ஸோமாசி', 'க்ரமவித்தன்', 'பட்டன்' என்கிற மூன்று வார்த்தையுமே ப்ராம்மண ஜாதியைக் குறிப்பிடுபவைதான். ஸோமாசி என்றால் பக்ஷணம் இல்லை. ஸோமயாகம் செய்த ஸோமயாஜி'தான் தமிழில் 'ஸோமாசி' ஆனது! ஸுந்தர மூர்த்தி நாயனார் சரித்ரத்தில் 'சோமாசி மாற நாயனார்' என்று ஒருத்தர் வருகிறார். அறுபத்துமூவரில் ஒருத்தர் அவர்.

க்ரமவித்தன் என்றால் என்ன? எழுதி வைக்காமலே காதால் கேட்டுப் பாடம் பண்ணவேண்டியதான வேதத்தின் வாசகங்களில் கொஞ்சங்கூடத் தப்பு வரப்படாது. அப்படி வந்தால் மந்த்ர சக்தியே பாதிக்கப்படும் என்பதால் அவற்றின் பதங்களைப் பலவிதங்களில் ஒன்றோடு ஒன்று கூட்டியும், முன்பின்னாக மாற்றியும் சொல்லிக் கொடுத்து, 'இதுதான் மூலரூபம்' என்று ஆணி அடித்ததுபோல் நிர்ணயம் செய்வதற்கான ஏற்பாடுகளை ரிஷிகள் செய்து கொடுத்திருக்கிறார்கள். இப்படி வேத அக்ஷரங்களைப் பல தினுசாக மாற்றிச் சொல்வதில் வர்ணம், க்ரமம், ஜடை, கனம் என்று பலமுறைகள் உண்டு. 'கனம்'தான் கடைசி— ரொம்ப நுணுக்கமாகப் பதங்களைக் கோத்து வாங்கினது. 'கனபாடி' என்று கேள்விப்படுகிறோமே, 'கனம்' வரையில் பாடம் தெரிந்தவர்தான் கனபாடி. 'ஜடாவல்லபர்' என்றால் 'ஜடை'யில் தேர்ச்சி பெற்றவர். இப்படியே க்ரமம்வரை அத்யயனம் பண்ணினவன் 'க்ரமவித்'; தமிழில் க்ரமவித்தன்'. மூவேந்தர்களின் அநேகக் கல்வெட்டுக்களில் பல க்ரமவித்தர்'களின் பெயர் காணப்படுவதிலிருந்து தமிழ்

Koviloor Digital Library

நாட்டில் அப்போது ஏராளமாக வேத அத்யயனம் பண்ணின ப்ராம்மணர்கள் இருந்ததாகத் தெரிகிறது.

'பட்டர்' என்பதும் 'அய்யர்', 'சாஸ்த்ரி', 'சர்மா' என்ற மாதிரி அக்காலத்தில் ப்ராம்மணனைக் குறிப்பிட்ட பதம்தான். சாஸ்த்ர ப்ரகாரம் ப்ராம்மணன் 'சர்மா' என்றும், க்ஷத்ரியன் 'வர்மா' என்றும், வைச்யன் 'குப்தா' என்றும், நாலாம் வர்ணத்தவன் 'தாஸ' என்றும் போட்டுக் கொள்ளவேண்டும். ஆனாலும் பூர்வகாலத்தில் ப்ராம்மணனை 'பட்டன்' என்று குறிப்பிடுவதே அதிகம் வழக்கத்திலிருந்திருக்கிறது. மஹாராஷ்ட்ர பட்டோஜி, மங்களூர் பட், பெங்காலி பட்டாசார்யா எல்லாரும் பட்டர்களான ப்ராம்மணர்கள்தாம்.

நாலாம் வர்ணத்தைச் சேர்ந்த வேளான், முதல் வர்ணத்தைச் சேர்ந்த பட்டன் இருவரும் முக்ய அதிகாரிகளாக இருந்திருக்கிறார்கள் என்பதைக் கவனித்துக்கொள்ள வேண்டும்.

வேட்பாளரின் யோக்யதாம்சங்கள்

உத்தரமேரூர் கல்வெட்டுக்களிலிருந்து, ஊர் ஸபைக்குத் தேர்ந்தெடுக்கப்படும் அபேக்ஷகருக்கு அநேக யோக்யதாம்சங்கள் நிர்ணயிக்கப் பட்டிருப்பதைத் தெரிந்துகொள்கிறோம். அபேக்ஷகரின் 'க்வாலிஃபிகேஷ'னுக்கு ஒரு லிஸ்டே கொடுத்திருக்கிறது. அந்நாளில் ஊர் ஸபை அங்கத்தினருக்குத் தேவைப்பட்ட அந்தத் தகுதிகள் என்னவென்றால் :

1. அவன் தீர்வை செலுத்தும் கால் வேலி நிலமாவது உடையவனாக இருக்கவேண்டும். ("கானிலத்துக்கு மேல் இறை நிலமுடையான்" என்பது சாஸன வாசகம். இறை என்பதுதான் வரி, அதாவது நிலத்துக்குத் தரும் தீர்வை.)

2. தன்னுடைய ஸொந்த மனையில் வீடு கட்டிக் கொண்டவனாயிருக்க வேண்டும். ("தன் மனையிலே அகமெடுத்துக் கொண்டிருப்பான்.")

Koviloor Digital Library

3. அறுபது வயஸுக்கு அதிகமானவனாகவும், முப்பது வயஸுக்கு குறைந்தவனாகவும் இருக்கப்படாது என்று முதல் கல்வெட்டு சொல்கிறது. இரண்டு வருஷம் கழித்து அதை 'ரிவைஸ்' செய்த இரண்டாம் கல்வெட்டு, அறுபது என்பதை எழுபது என்றும், முப்பது என்பதை முப்பத்தைந்து என்றும் உயர்த்தி நிர்ணயம் செய்திருக்கிறது. "அறுபது பிராயத்துக்குக் கீழ் முப்பது பிராயத்துக்கு மேற்பட்டார்" என்று முதலில் இருந்ததை "எழுபது பிராயத்தின் கீழ் முப்பத்தைந்து பிராயத்தின் மேற்பட்டார்" என்று மாற்றி வயஸு நிர்ணயம் செய்திருக்கிறது.

இதிலிருந்து தெரிகிற இன்னொரு விஷயம், ஏதோ ஒரு ரூல் போட்டுவிட்டால் அதையேதான் பிடித்துக்கொண்டிருக்க வேண்டுமென்றில்லாமல், அவ்வப்போது புனராலோசனை செய்து அதை இன்னும் சீர்படுத்தமுடியுமென்று தெரிகிறபோது 'அமென்ட்மென்ட்'டும் (சட்டத் திருத்தமும்) கொண்டு வந்திருக்கிறார்கள் என்பது.

திருத்தக் கூடிய விதிகளும்
திருத்தக் கூடாத விதிகளும்

அமென்ட்மென்டைப் பற்றிச் சொல்லும்போது இன்னொன்று கவனிக்கவேண்டியிருக்கிறது. ஒரு காலத்தில் நல்லவர்களாக, ஸ்வய நலம் அல்லது ஸ்வய ஜாதி அல்லது ஸ்வய கட்சி நலமில்லாமல் தேச நலனையே கருதுபவர்களாக இருக்கப்பட்டவர்கள் போடும் ரூல் (விதி)களையும் 'லா'க்களையும் (சட்டங்களையும்) பிற்பாடு அப்படியில்லாதவர்கள் ஸ்வய நலனுக்காக மாற்றி அமென்ட் செய்கிற ஆபத்தும் இருக்கிறது. இவ்விஷயமாகப் பழைய காலத்தில் இருந்த உத்தமமான அம்சம் என்ன என்றால், அடிப்படையாக நம்முடைய ராஜ்யங்கள் எல்லாவற்றுக்குமே தர்ம சாஸ்த்ரம்தான் கான்ஸ்டிட்யூஷன் (அரசியல் நிர்ணயச் சட்டம்) மாதிரி இருந்ததாகும். இருக்கப்பட்ட அநேக தர்ம சாஸ்த்ரங்களில்

Koviloor Digital Library

எல்லா விஷயங்களையும் மிகவும் தெளிவாகவும் அழகாகவும் விவரிக்கும் மநுதர்ம சாஸ்திரத்தைத்தான் எந்த அரசனும் பின்பற்றியதாக அவனைப் பற்றிய ப்ரசஸ்திகளிலும் (சாஸன வாயிலாக ஒரு அரசனைப் பற்றிக் கூறப்படும் புகழ்மொழி களிலும்), மற்ற இலக்கியம், காவியம் முதலானவற்றிலும் காணப்படுகிறது. "மநுநீதி வழுவாது" என்று எந்த அரச னின் ஆட்சியையும் பற்றிச் சொல்லப்படுவதால், கொஞ்சங் கூட ஸ்வயச் சார்பே இல்லாமல் ரிஷிகள் வகுத்த தர்ம சாஸ்த்ரங்களின் ஸாரமாக மநு கொடுத்த அந்த ப்ரமாண நூலில் காண்கிற விதிமுறைகள் பின்னால் வந்த அரசர்களால் மாற்றப்படவேயில்லை என்று தெரிகிறது. இந்த அடிப்படைச் சட்டத்துக்கு 'அமெண்ட்மென்ட்' என்பது கிடையாது. அதன் விதிகள் அவற்றின் ரூபம் சிதையாமலே காக்கப்பட்டு வந்தன.

தர்ம நெறிகளைக் குறித்ததாகவும், அவற்றை அநுஸரிப்ப தற்கு ஏற்றவகையில் ஸமூஹத்தைப் பல பிரிவுகளாக்கி அவை ஒன்றுக்கொன்று இசைந்து செயல்படும்படியாகவும் விதிகளைத் தரவே ஏற்பட்டது மநு தர்ம சாஸ்த்ரம். அதற்குப் பேரே தர்ம சாஸ்த்ரமே ஒழிய ராஜீய (அரசியல்) சாஸ்த்ரமல்ல. தேசத்தில் ஒட்டு மொத்தமாகவும், தேச ப்ரஜைகளில் ஒவ்வொருவரின் வாழ்க்கையில் தனித்தனியாக வும் தர்மம் நிலைநாட்டப்பட வேண்டுமென்பதற்கே ஏற்பட்டது அந்த நூல். அந்த நூல் ஒரு ராஜாவின், ராஜாங்கத்தின் கடமையே இப்படிப்பட்ட தர்ம ஸ்தாபனம் தான் என்று உணர்த்துவதாகும். அரசியல் என்பது தர்மத்தை நிலைநாட்டுவதன் ஒரு அங்கமாகத்தான் பூர்விகர் களால் கருதப்பட்டது.

அர்த்த சாஸ்த்ரம், சுக்ரநீதி முதலான நூல்கள் பிற்பாடு அரசியலையே ப்ரதானமாக வைத்துச் செய்யப்பட்டன வென்றாலும், அவையும் தர்ம சாஸ்த்ரத்தை அநுஸரித்தே தான் பெரும்பாலும் செய்யப்பட்டன. யதார்த்த ஸௌகர் யங்களையும், தேவைகளையும் முன்னிட்டு தர்ம சாஸ்த்ர

Koviloor Digital Library

விதிகளை அப்படியே பின்பற்றுமல் சிற்சில விஷயங்களில் கொஞ்சம் மாற்றிச் செய்யவும் ராஜநீதி சாஸ்த்ரங்கள் இடம் தரத்தான் செய்கின்றன. ஆனாலும், இங்கேயுங்கூட அரசியல் சாஸனத்தின் அடிப்படை அமைப்பு—basic structure என்கிறார்களே,—அது போன்ற தர்ம சாஸ்த்ர அஸ்திவாரத்துக்கு ஹானி உண்டாக்காமலே செய்யவேண்டு மென்பதுதான் கொள்கையாயிருந்திருக்கிறது. அப்படி எங்கேயாவது அர்த்த சாஸ்த்ரம் தர்மசாஸ்த்ரத்துக்கு வித்யாஸமாகப் போனாலும் சதுர்தச வித்யைகளிலுள்ள நாலு சாஸ்த்ரங்களில் ஒன்றாய் உள்ள தர்ம சாஸ்த்ரத்தைத் தான் ப்ரமாணமாக எடுத்துக் கொள்ளவேண்டுமென்றும், அந்த வித்யைகளுக்குப் பிற்பட்டே ஸ்தானம் பெறுகிற நாலு உபவேதங்களில் ஒன்று மட்டுமேயான அர்த்த சாஸ்த்ரம் முதலான அரசியல் நூல்களின் அபிப்ராயத்தைத் தள்ளிவிட வேண்டுமென்றும் ஆன்றோர் கருதியிருக்கிறார்கள். அந்த உத்தமக் கொள்கையைக் கடைப் பிடித்துத்தான் தமிழ் நாட்டு அரசர்கள் தங்களை மநு நூல் வழி நடப்பவர் களாகவே சொல்லிக் கொண்டார்கள்; அர்த்த சாஸ்த்ர வழி நடப்பவர்களாக அல்ல.

எதற்குச் சொல்லவந்தேன் என்றால், தமிழ் வேந்தர் களின் ஆட்சிக்காலத்தில் சட்டத்திருத்தம் பண்ண இடமே இல்லாமலும் இல்லை; ஆனால், அதே ஸமயத்தில் சட்டத் திருத்தம் என்ற பெயரில் அவ்வப்போது ஆட்சியிலிருப்பவர் களின் இஷ்டப்படியும் ஸெளகர்யப்படியும் எந்த விதியை வேண்டுமானாலும் மாற்றலாம் என்றும் இல்லாமல், தர்ம சாஸ்த்ர அடிப்படை விதிகளை, intact-ஆக (கட்டுக் குலை யாமல்) ரக்ஷிக்கத்தான் வேண்டும் என்றும் இருந்தது. தர்ம சாஸ்த்ரத்தை வேராகக் கொண்டு ராஜாங்க வ்ருக்ஷம் ரக்ஷிக்கப்பட்டபோது அந்த வேரைக் கொஞ்சம்கூட பாதிக் காமலே, யதார்த்த நடைமுறைகளை யொட்டிக் கிளைகள் மாதிரித்தான் புதுச் சட்டங்கள் போட்டது. அவச்ய மேற்படும்போது கிளைகளைக் கொஞ்சம் வெட்டி விடுகிறாற்

Koviloor Digital Library

போல, ஒன்றிரண்டைக் கழித்துக் கட்டியும் விடுகிருற்போல இந்தப் புதுச் சட்டங்களை 'அமென்ட்' பண்ணவும் செய்தார்கள்.

சோழராட்சியில் க்ராம மஹா ஸபை அங்கத்தினருக்கான க்வாலிஃபிகேஷன்களில் மூன்ருவதான வயஸு பற்றிய விதியை இப்படித்தான் ரிவைஸ் பண்ணினது.

சாஸ்திர அறிவும், காரியத்திறனும்

நாலாவது யோக்யதாம்சம்; அபேக்ஷகர்கள் வைதிக தர்மம் இன்ன என்று தெரிந்தவர்களாக இருக்கவேண்டும். நம்முடைய சாஸ்த்ரக் கொள்கைகளை நன்ருக அறிந்தவர்களாயிருக்கவேண்டும். நல்ல படிப்பறிவு உள்ளவர்களாயிருக்க வேண்டும்.

இதைச் சொன்ன கையோடேயே இந்த யோக்யதாம்சத்துடன் சேர்த்தே இன்னொன்றையும் வலியுறுத்தியிருக்கிறது. சாஸ்த்ரக்ஞர்களாகவும் படிப்பாளிகளாகவும் இருக்கப்பட்ட பல பேருக்குக் கார்யத் திறமை இல்லாமலிருப்பதைப் பார்க்கிறேமல்லவா? ஊர் நிர்வாஹத்தில் பொறுப்பு ஏற்பவர்கள் இப்படி இருக்கப்படாது. அவர்கள் வித்வான்களாக இருப்பது மட்டுமில்லாமல் செயல்திறமையுள்ளவர்களாயும் இருக்க வேண்டும் என்று விதி செய்திருக்கிறது. "வேதத்திலும் சாஸ்த்ரத்திலும் காரியத்திலும் நிபுணர் என்னப்பட்டிருப்பவர்" என்று சாஸன வாசகம் கூறுகிறது.

ஜீவஸாரமான தகுதி: அர்த்த சுத்தமும் ஆத்ம சுத்தமும்

5. இவர்கள் ஸொத்து உள்ளவர்களாயிருக்க வேண்டும் என்பதை முதல் இரண்டு விதிகளாலும் தெரிந்து கொண்டோம். இப்போது அது தப்பு வழியில் ஸம்பாதித்ததாக இருக்கப்படாது, ஸபை மெம்பர் ஆன பிற்பாடும் இவர்கள் தப்பு வழியிலே போய் ஸம்பாதிக்கக் கூடாது

Koviloor Digital Library

என்று தர்மத்தால் அர்த்தத்துக்கு—அறத்தினுல் பொருளுக்கு—வேலி போட்டுக் கொடுப்பதாக ஒரு ஷரத்து வருகிறது. ஸொத்து விஷயம் மட்டுமில்லே, எல்லா விஷயத்திலுமே சிறந்த ஒழுக்கமுள்ளவர்களாயும் ஆத்ம ஸம்பத்தை வ்ருத்திசெய்து கொண்டவர்களாயும் அபேக்ஷகர் இருக்க வேண்டும். அபேக்ஷகர் தேர்ந்தெடுக்கப்பட்டு ஸபையின் அங்கத்தினர் ஆன பிற்பாடும் இதைக் காப்பாற்றிக் கொள்ள வேண்டும். நியாயமான முறையில் அடைந்த ஸொத்துக்களேயும், பரிசுத்தமான நடத்தையும் உள்ளவர்கள்தான் முதலில் அபேக்ஷகராக இருக்கமுடியும்; பிற்பாடு அங்கத்தினராக நீடிக்கவும் முடியும். "அர்த்த சுத்தமும் ஆத்மசுத்தமும் உடையார்" என்று சாஸனம் சொல்லும். இந்த வாசகந்தான் ஊரின் நிர்வாஹஸ்தர்களுக்கான யோக்யதாம்சங்கள் அத்தனேக்கும் ஜீவஸாரம்.

தொடர்ந்து அங்கம் வகிக்கலாகாது

6. இந்தத் தேர்தல் வருஷாவருஷம் நடப்பதாகும். இந்த வருஷமெம்பர் அடுத்த வருஷத் தேர்தலிலும் 'கான்டிடேட்'டாக (வேட்பாளராக) இருக்க முடியாது. இப்படி, ஒரு வருஷ 'டெர்மு'க்குப் பிறகு வருகிற மூன்று வருஷங்களுக்கு அங்கம் வஹிக்க முடியாது. மூன்று வருஷத்துக்கு அப்புறம் வேண்டுமானுல் மறுபடியும் ஸ்பையில் 'மெம்பர்ஷிப்' வஹிக்கலாம். இதை "மூவாண்டினிப்புறம் வாரியம் செய்திலாதார்" என்று சாஸனம் கூறுகிறது. அதாவது, ஒரு தேர்தல் நடப்பதற்கு முந்தைய மூன்று ஆண்டுகளுக்குள் அபேக்ஷகர் ஸபை மெம்பராக இருந்திருக்கப்படாது.

ஒருத்தர் அங்கத்தினரான பிற்பாடு அதிக நாள் பதவி வஹிப்பதாலேயே இதற்கு முந்திய விதியில் சொன்ன அர்த்த சுத்தமும் ஆத்ம சுத்தமும் கெட்டுப்போக ஹேது ஏற்பட்டுவிடப் போகிறதே என்று ஜாக்ரதை செய்வதாகத்தான் இந்த விதி ஏற்பட்டிருக்கிறது.

Koviloor Digital Library

"மூவாண்டின் இப்புறம்" என்பதை, முதலில், "மூவாண்டின் அப்புறம்" என்று படித்துவிட்டு, தொடர்ச்சியாக மூன்று வருஷங்கள் மெம்பராக இருந்த எவரும் அதற்கப்புறம் தேர்தலுக்குத் தகுதிபெற மாட்டார்களென்று அர்த்தம் பண்ணிக் கொண்டுவிட்டேன். அப்புறம்தான் "இப்புறம்" என்பதை ஸரியாகத் தெரிந்து கொண்டு, அதற்கு "முந்தைய மூன்றுண்டுகளுக்குள்" என்று பொருள் என்று புரிந்துகொண்டேன். அதாவது ஒரு வருஷ 'டெர்ம்' வஹித்தபின் மூன்று வருஷ gap (இடைவெளி) கொடுத்து எத்தனை தடவை வேணுமானுலும் ஒருத்தர் தேர்ந்தெடுக்கப் படலாம். ஆனுலும் ஒரு வருஷம் பதவி வஹித்தால் அப்புறம் அதைப் போல மூன்று மடங்கு காலம் பதவி இல்லை என்பதால் எவரும் தப்பான முறையில் தங்களுடைய இன்ஃப்ளூயென்ஸை வளர்த்துக் கொள்ளமுடியாதபடி செய்திருக்கிறுர்கள்.

உறவினர் உதவாது

7. கடைசியாய் வரும் ஏழாவது ஷரத்தும் இந்த ஐந்தாம், ஆறும் ஷரத்துக்களை ஒட்டி அவற்றைக் 'காம்ப்ளிமென்ட்' பண்ணுவதாகவே (இட்டு நிரப்புவதாகவே) இருக்கிறது. அது என்ன சொல்கிறதென்றுல் புதிதாக அங்கத்தினர் ஆகிறவர்கள் ஏற்கெனவே அங்கத்தினர்களாக இருந்தவர்களின் நெருங்கிய பந்துக்களாக இருக்கப்படாது என்கிறது. "வாரியம் செய்தொழித்த பெருமக்களுக்கு ஆத்ம பந்துக்களல்லாதார்" என்பது சாஸன வாசகம்.

ஸொத்து குறித்து நிபந்தனை

இந்த க்வாலிஃபிகேஷன்களை ஒவ்வொன்றுகப் பார்ப்போம்.

முதலில் அபேக்ஷகருக்கு கால் வேலியாவது நிலம் ஸொந்தமாக இருக்கவேண்டுமென்றும், ஸொந்தமனையில்

Koviloor Digital Library

வீடு இருக்க வேண்டுமென்றும் சொல்லியிருக்கிறது. அதோடு நிலத்துக்கு அவன் தீர்வை கட்டவேண்டுமென்றும் இருக்கிறது. நிலம் இருந்தால் வரி (தீர்வை) கட்டத்தானே வேண்டும் என்று கேட்கலாம். அப்படியில்லை. ராஜமான்யமாக ப்ராம்மண ச்ரௌதியிலிருந்து ஏகாலி மாதிரியான தொழிலாளி வரையிலும் ஸ்வஜாதித் தொழில் செய்கிற எல்லாருக்கும் நிலம் கொடுக்கப்பட்டிருந்தது. இதற்குத் தீர்வை கிடையாது. "இறையிலி" என்றே இவற்றை சொல்லியிருக்கும். இப்படி தானமாகப் பெறுமல் ஒருவன் தானே உழைத்தோ, அல்லது தன் பித்ருக்கள் உழைத்துப் பெற்றுப் பிதுரார்ஜிதமாகவோ அந்தக் கால்வேலி நிலம் படைத்தவனாக இருக்கவேண்டும் என்பதே விதி.

லக்ஷ்ய தர்மமும், நடைமுறை ஸாத்யமும்

'ஸொத்து' இருக்க வேண்டும், வரிகட்ட வேண்டும் என்று ஏன் வைத்திருக்கிறது? ஏழைக்கு ப்ரதிநிதித்வம் வஹிக்க ரைட் இல்லையா?' என்று அபேதவாதம் பேசலாம். ஐடியலிஸத்துக்கு (ஆதர்ச வாதத்துக்கு) இந்த வாதம் ஸரியாயிருக்கலாமே தவிர, ஸாதாரண ஜனங்களின் மனப் போக்குகளை வைத்து அன்றாடம் நடக்கிற ப்ராக்டிகலான (யதார்த்த) ராஜீய கார்யங்களுக்கு ஸரிப்பட்டு வராது என்று நம்முடைய மூதாதையர் கண்டிருக்கிறார்கள்.

ஐடியல் நிலையை எடுத்துச் சொன்ன தர்மசாஸ்த்ரங்களே, ப்ரத்யக்ஷ நடைமுறை முழுக்கவும் அந்தப்படிதான் இருக்கவேண்டும் என்று கண்டிப்புப் பண்ணினால் நிச்சயமாக அப்படிப் பண்ண ஸர்வஜனங்களாலும் முடியாமல் போய், வெறும் வேஷமாகவும் ஹிபாக்ரிஸியாகவும்தான் ஆகும் என்பதைக் கருத்தில் கொண்டு வர்ணம், ஆச்ரமம் என்றெல்லாம் பிரித்துக் கொடுத்து யார் யாருக்கு எந்தெந்த ஸ்டேஜில் எத்தெந்த அளவுக்கு அந்த ஐடியலையே இளக்கியும் இறுக்கியும் கொடுக்கவேண்டுமென்று நன்றாக வகை தொகை செய்து தந்திருக்கின்றன. "ஐடியலை இளக்கி"

Koviloor Digital Library

என்றால் அதர்மத்தை விதித்ததாக அர்த்தமில்லை. ஆனால் தர்ம விதியை ஒரு நிலைவரையில் ரொம்பக் கண்டிப்பு செய்யாமல், அதே ஸமயத்தில் ரொம்பவும் கண்டிப்பான அந்த ஐடியல் நிலைக்கு கொஞ்சம் கொஞ்சமாக ஒருத்தனைக் கொண்டு சேர்க்கும்படியாகப் பாகுபாடு செய்தது என்றே அர்த்தம். வாழ்க்கையின் பல துறைகளிலும் இப்படி என்றாலும் பெரிய ஜன ஸமூஹத்தின் அன்றாட உலகியல் நிலவரத்தைக் குறித்ததான பாலிடிக்ஸில் மற்றத் துறைகளைவிடவும் யதார்த்தத்துக்கும் ஸைகாலஜிக்கும் அதிக இடம் தரவேண்டுமென்பதைக் கருத்தில் கொண்டே அர்த்த சாஸ்த்ரம் உண்டான நாளிலிருந்து சோழர் காலம் வரைக்கும் சட்ட திட்டங்கள் செய்ததாகப் பார்க்கிறோம்.

இப்படிச் சொன்னதால் தற்காலத்தில் தர்ம ஸம்பந்தமே இல்லாமல், தெய்வ ஸம்பந்தமே இல்லாமல் பாலிடிக்ஸ் நடத்துகிற மாதிரி அப்போது இருந்ததாக அர்த்தம் இல்லை. தர்மம், தெய்வம் என்று நான் இரண்டாகப் பிரித்துச் சொல்வதுகூடத் தப்புத்தான். நம் அத்தனை பேரையும் ஆட்டிப் படைத்து ஆட்சி பண்ணிக் கொண்டிருக்கும் ஈச்வரனிடம் பயபக்தியிலே கட்டுப்படாமல் தனியாக தர்மம் என்னும் நன்னெறிக் கொள்கைகளுக்கு மட்டும் கட்டுப்பட்டு அவற்றைக் கடைபிடிப்பது என்பது வெறும் சவுடால்தான்.

தெய்வம், தெய்வ ஸங்கல்பத்தைப் புரிந்துகொண்ட ரிஷிகள் செய்த தர்ம சாஸ்த்ரம் ஆகியவற்றை "ஸம்பந்தமில்லாதவை" என்று தள்ளிவிட்டுத் தனியாக அரசியல் கொள்கை, அரசாங்கத் திட்டம் என்றெல்லாம் போனால் அது ஜனங்களின் ஆத்மஹானியில்தான் முடியும். வெள்ளைக்காரர்கள் கொண்டுவந்த அரசியல் ஐடியாலஜிகளிலிருந்துதான் இப்படி தெய்வ ஸம்பந்தத்தையும், சாஸ்த்ர ஸம்மதத்தையும் ஒதுக்கிவிட்டு ராஜ்ய நிர்வாஹம் செய்வதும், அரசியல் என்று தனியாக ஒன்றைப் பெரிசு படுத்துவதும் வழக்கமாயிருக்கிறது.

Koviloor Digital Library

துருக்கர், வெள்ளையர் ஆட்சிகளில்

வெள்ளைக்காரர் ஆட்சிக்கு முன் நடைபெற்ற துருக்கர் ஆட்சி ஸமாசாரம் என்னவென்றால்: முகலாயர்களும், மற்ற அநேக ஸுல்தான்களும் அவர்களைப் பொறுத்தமட்டில் அவர்களுடைய மதத்தில் நிரம்பப் பற்றுக் கொண்டிருந் தவர்கள். நம்மைப்போலவே அவர்களுக்கும் சட்டப் புஸ்த கமே மத ப்ரமாணமுள்ளதுதான. ஷாரியத் என்று அதற்குப் பேர். அதன்படிதான் அவர்கள் தீர்ப்புப் பண்ணியது. ஆனாலும் அது நம்முடைய தர்மசாஸ்த்ர ஸம்பந்தமில்லாதது. நம்முடைய தர்ம ஆசரணைகளையும் அநுஷ்டானங்களையும் முடிந்தமட்டும் அழிப்பதுதான் அவர்களுடைய எண்ணமா யிருந்ததால் பெரும்பாலான ஹிந்து ஸமூஹத்தைப் பொறுத்தமட்டில் ராஜாங்க நிர்வாஹம் அவைதிகமாகத் தான் நடந்தது.

இதைச் சொல்லும்போதே இன்னும் இரண்டு விஷயங் களைச் சொல்லவேண்டும். வேத விரோதமான முறை ரொம்பவும் காரமாகப் போய்விடாமல் இரண்டு ஸ்பூன் நெய்விட்டது போன்ற இரண்டு விஷயங்கள். ஒன்று— பலாத்கார மதமாற்றம் நடக்கத்தான் செய்தது என்றாலும், மதம் மாறாமல் இருந்த ஹிந்து ஸமூஹமானது பெரும் பாலான பிரச்னைகளைத் தங்கள் ஜாதி நாட்டாண்மைகளின் மூலமே தீர்த்துக்கொள்ளும்படி அப்போதும் விட்டிருந்தார் கள். இந்த அளவுக்கு நம்முடைய பூர்விகர்களின் முறையே தொடர்ந்து அநுஸரிக்கப்பட்டது. அக் காலங்களில் அந்தந்த ஸமூஹ நாட்டாண்மையே அந்தந்த ஜனங்களின் பிரச்னை களையும் வழக்குகளையும் விசாரித்து முடிவுகள் எடுப்பது தான் அதிகம். ராஜ ஸமூஹத்தின் விசாரணைக்கும் ராஜாங்க நீதிஸ்தலங்களுக்கும் போன கேஸ்கள் குறைச்சல். இந்த நாட்டாண்மை எடுபடாமல் பழையபடி நடந்தவரைக்கும் அந்த அளவுக்கு தர்மசாஸ்த்ர விதிகளில் ராஜாங்கச் சட்ட திட்டங்களின் குறுக்கீடு குறைக்கப்பட்டிருந்தது. இன் னொன்று—விக்ரஹங்களை உடைப்பது, கோவிலை அழிப்பது,

Koviloor Digital Library

என்றெல்லாம் அவர்கள் பண்ணிஞலும்கூட, ஹிந்து ஸமூஹத்துக்காகச் சட்டம் போடும்போது பஹிரங்கமாக நம்முடைய சாஸ்த்ரீய வாழ்முறையை பாதிக்கும்படியாகவோ, தர்ம சாஸ்த்ர விதிகளுக்கு விருத்தமாகவோ போட்டதில்லை. பலாத்காரமாகப் பலரைத் தங்கள் மதத்துக்கே மாற்றிக் கொண்டு அப்படி மாறியவர்கள் தங்களுடைய மதக் கொள்கைப்படியே நடக்கவேண்டுமென்று நிர்பந்தித்தாலும், இப்படி மாற்ருமல் விட்டு வைத்திருந்த ஸமூஹம் அதன் தர்மப்படியே நடப்பதை ஆக்ஷேபிக்கவில்லை; அதன் தர்ம விதிகளை அரசாங்கச் சட்டத்தால் மாற்றவுமில்லை. (உதாரணமாக ஹிந்து ஸ்த்ரீகள் விவாஹரத்து செய்துவிட்டு இரண்டாம் கல்யாணம் செய்து கொள்ளலாம், ஹிந்து ஸ்த்ரீகளுக்கு ஸொத்தில் பங்கு தரவேண்டும் என்றெல்லாம் அவர்கள் சட்டம் கொண்டுவரவில்லை.)

அவர்களுடைய உள்ளெண்ணம் எதுவாயிருந்தாலும், மிகப் பெரிய மெஜாரிட்டியான ப்ரஜைகளின் அத்ருப்தியையும் விரோதத்தையும் ஸம்பாதித்துக்கொண்டு ஆட்சி நடத்த முடியாது என்பதை உத்தேசித்தாவது அவர்கள் இந்த இரண்டு அம்சங்களை அநுஸரிக்க வேண்டியதாயிருந்தது.

வெள்ளைக்காரர் ஆட்சியிலும் இந்த இரண்டும் தொடர்ந்தது. ஆனுல் முன்னுலே இருந்தவர்கள் அடி, பிடி என்று பலாத்காரமாகவே போவது அதிகமாகவும் தந்த்ரமாக ஏமாற்றிச் செய்வது குறைவாகவும் இருந்தது என்ருல், இவர்களோ அதைத் திருப்பி வைத்து வெளியிலே பலாத்காரம் அதிகம் தெரியாமலே நயவஞ்சகமாகப் பண்ணி ஹிந்து தர்மத்தை உள்ளூர உளுத்துப்போகச் செய்தார்கள். ஆகையால் விக்டோரியா ப்ரகடனத்திலிருந்து நேரடியாக மத விஷயங்களில் ப்ரவேசிக்காதது போலத்தான் சட்டங்கள் செய்தார்களென்ருலும், நேர் அடியைவிடப் பலமாக உள்ளே போய்த் தாக்குகிற தந்த்ர அடியாகத் தங்கள் உத்யோகங்களைக் காட்டி, அதற்குத் தேர்ச்சி பெறு

Koviloor Digital Library

வதற்காக ஒரு கல்விமுறையையும் காட்டி, அந்தக் கல்வி முறையால் ஹிந்துக்களே ஹிந்து தர்ம சாஸ்த்ரவிதிகளில் நம்பிக்கை இழந்துவிடும்படியாகப் பண்ணினார்கள். புதிய அரசியல் கொள்கைகள், ஸமூஹக் கொள்கைகள், சரித்ர ஆராய்ச்சி, பாஷை ஆராய்ச்சி, சாஸ்த்ர ஆராய்ச்சி என்றெல்லாம் ரொம்ப 'இம்பார்ஷிய'லாகச் செய்கிறாற் போலவே பலவற்றைக் கொண்டு வந்து அவிழ்த்துவிட்டுக் கொஞ்சங் கொஞ்சமாக நம்முடைய ஸமூஹ அமைப்பு, சாஸ்த்ராபிமானம் எல்லாம் கலகலத்துக்கொண்டே வரும் படியாகக் 'கைங்கர்யம்' பண்ணினார்கள். ஹிந்து என்பவன் இன்னொரு மதத்துக்கு மாறவேண்டுமென்பதில்லை, ஹிந்துவாக இருப்பது போல இருந்துகொண்டே அந்த மத சாஸ்த்ரங்களில் அடியோடு நம்பிக்கையில்லாதவனாக, அடியோடு, அவைதிகமாக ஆகும்படி பண்ணிகாட்ட முடியுமென்று நிரூபித்துவிட்டார்கள். ஜனங்களில் ஒரு பகுதியை நேராக அவர்களுடைய மதத்துக்குள்ளும் இழுத்துக் கொண்டார்கள்.

இதிலே ஒரு வேடிக்கை! அவர்களுடைய தேசங்களில் மதபீடத்துக்கும் ராஜபீடத்துக்கும் ஓயாமல் பலப் பரீக்ஷை நடந்து, முடிவில் இரண்டையும் தனித்தனியாக எல்லை வகுத்துப் பிரித்து, ராஜாங்கச் சட்டமுறையைப் பெரும்பாலும் மத ஸம்பந்தமில்லாததாகத்தான் செய்து கொண்டிருக்கிறார்கள். ரோமன் காதலிக் மதம், லூதரனிஸம் என்கிற மாதிரி ஒன்றை State Religion என்று அநேக ஐரோப்பிய நாடுகளில் வைத்துக்கொண்டிருந்த போதிலும் இப்படி இருக்கிறது. பிஷப்புகளிலேயே ஒரு பிரிவை இங்க்லாண்டில் ராஜா நியமிப்பது; அவர்களுக்கும் House of Lords-ல் (ப்ரபுக்கள் ஸபையில்; நம்தேச 'மேல் ஸபை' மாதிரியானதில்) ஸ்தானம் தருவது; ஆர்ச்பிஷப் ஆஃப் காண்டரிபரிதான் ராஜாவுக்கு 'காரனேஷன்' (பட்டாபிஷேகம்) பண்ணுவது—என்றெல்லாமிருந்தாலும், நேராக ஸமய விஷயமாயில்லாத ஸமூஹச் சட்டம்

Koviloor Digital Library

எல்லாமே அரசியல் கருத்துக்களின் மேலேயே பண்ணு வதாகத்தான் இருக்கிறது. ஷாரியத் மாதிரி கிறிஸ்துவ மதச் சட்ட புஸ்தகம் என்ற ஒன்று எப்போதுமே இருந்ததில்லை. கிறிஸ்துவுக்கு முன்னாலிருந்த ஹீப்ருக் களுக்கு நம் தர்ம சாஸ்த்ரங்களைப் போலவும் ஷாரியத் போலவும் மத ப்ரமாணமுள்ள சட்டமுறை இருந் தாலும் பிற்பாடு ஹீப்ரு ஸமூஹமானது கிறிஸ்துவம், யூத மதம் என்று உடைந்தபோது கிறிஸ்து தம்மை அநுஸரிப்ப வர்களுக்கு அநேக ஒழுக்கங்களையும், வாழ்முறை நியமங்களை யும் உபதேசித்தாரென்றாலும், சட்ட சாஸ்த்ரம் என்று சொல்லும்படியாக codify செய்து ஒன்றும் கொடுக்கவில்லை. அதனால் அப்புறம் போப்புகளுக்கும் ராஜாங்கங்களுக்கும் நித்ய யுத்தமாக இருந்து, முடிவில் மத பீடம் ராஜாங்க பீடம் இரண்டும் தனித்தனி அமைப்புக்களாக ஆகி, ராஜாங் கங்களால் 'ஜூரிஸ்ப்ருடன்ஸ்' (நீதி சாஸ்த்ரம்) ஏற்படுத்தப் பட்டபோது அவற்றில் மத ப்ரமாணத்துக்கு அதிகமாக இடமே இல்லாமல் 'ஸெக்யுலர்' என்று சொல்லும்படிதான் அமைந்தது. ஸயன்ஸும் இந்த ஐரோப்பிய நாடுகளில்தான் தோன்றி அபிவ்ருத்தி கண்டது. அதிலே கண்ட உண்மைகள் அவர்களுடைய மதக் கொள்கைகளுக்கு ரொம்பவும் வித்யா ஸமாகயிருந்தனவாதலால் அவர்களுக்கு மதாபிமானம், மதாநுஷ்டானம் ஆகியன துருக்கர்களோடு ஒப்பிட்டுப் பார்க்கும்போது ரொம்பக் குறைவாக ஆயின.

நான் வேடிக்கை என்று சொல்ல வந்தது எதையென்றால்: இப்படி அவர்களே ஸ்வமத அபிமானம் குன்றி, ஸயன்ஸிலும் நாகரிக இந்த்ரிய ஸுகத்திலும் அதிகமாக விழுந்த போதி லும்கூட, 'நம்முடைய ஆட்சிக்குக் கீழே வந்துவிட்ட இந்த இந்தியா தேசத்துக்கு இப்படி மஹோந்நதமாக ஹிந்துமதம் என்று ஒன்றா இருப்பதா?' என்று மட்டும் கரித்திருக்கிறது! அதனால் இங்கே அவர்களுடைய மதத்தை வேர் பிடிக்கப் பண்ணவும், நம்முடைய மதத்தின் வேரை அரிக்கப் பண்ண வும் என்னவெல்லாம் தந்த்ரமாகச் செய்யலாமோ அத்தனை யும் செய்தார்கள். இருந்தாலும் சட்டம் என்று செய்யும்

Koviloor Digital Library

போது நம்முடைய மத சாஸ்த்ர விதிகளை நேராக பாதிக்கும்படியாகத் துணிந்து எதுவும் செய்யாமலேதான் இருந்தார்கள்.

''ஸொந்த'' ஸர்க்காரின் அத்துமீறல்!

ஆக, துருக்க—வெள்ளைக்கார ஆட்சிகளில்கூட நம் சாஸ்த்ர ஸம்மதமாகவோ, சாஸ்த்ர ஸம்பந்தமுள்ளதாகவோ நிர்வாஹம் நடக்காவிட்டாலும் அதை அப்பட்டமாக மீறும்படி ஹிந்து ஸமூஹத்தைக் கட்டாயப் படுத்தி ராஜாங்கச் சட்டம் செய்வதென்பது இல்லை. இந்த மஹா பெரிய அத்துமீறல் தம்முடைய 'ஸொந்த'மான ஸ்வதந்த்ர ஸர்க்காரால்தான் செய்யப்பட்டு வருகிறது! தேச ஸ்வதந்த்ரம் என்று சொல்லிக்கொண்டே தங்களுடைய ஸொந்த வாழ்க்கைமுறை, எண்ணப் போக்கு எல்லாவற்றையும் வெள்ளைக்கார வழிக்குப் பரதந்த்ரமாக்கிவிட்டவர்கள் நடத்தும் குடியரசின் ரூபம் இப்படியிருக்கிறது!

மத ஸம்பந்தமில்லாத ஸெக்யுலர் ராஜாங்கம் என்று பேர். ஆனாலும் கிறிஸ்துவ மதம், துருக்க மதம் ஆகியவற்றைச் சேர்ந்தவர்கள் அவர்களுடைய மத ஸம்ப்ரதாயங்களின்படியே செய்யப் பூர்ண ஸ்வதந்திரம் தந்திருக்கிறதே தவிர ஹிந்துக்கள் என்று வரும்போது மட்டும் அவர்கடைய மதக் கொள்கைகளை பாதிக்கும்படியாக என்ன வேண்டுமானாலும் செய்யலாம் என்றே சட்டங்கள் வகுத்து வருகிறார்கள். இப்போது நடக்கும்' ஸெக்யூலரிஸம்' என்பது ஹிந்து சாஸ்த்ரங்களை மீறுவது, அவற்றில் மரியாதையைக் கொடுப்பது என்பதுதான். முக்யமாக, சாஸ்த்ரகாரர்களுக்குத் தெரியாத, அல்லது பிடிக்காத ஸமத்வம் தங்களுக்குத்தான் தெரியும்; அவர்கள் பாரபக்ஷமாகப் பண்ணியதையெல்லாம் தாங்கள் சீர்படுத்தவேண்டும்' என்ற அபிப்ராயத்தில் கார்யங்கள் செய்துவருகிறார்கள்.

கோபித்துக்கொண்டு ப்ரயோஜனமில்லை. சாந்தமாக. ஸாத்விகமாக எடுத்துச் சொல்வதுதான் நம் கடமை. ஈச்வரனை நம்பி, அவனை ப்ரார்த்தித்துக்கொண்டு.

Koviloor Digital Library

நம்முடைய பெரிய மரபையும் நாகரிகத்தையும் சீர்திருத்தம் என்ற பெயரில் சிதைத்துவிட்டால், அப்புறம் லோகம் பூரா வுக்கும் வழிகாட்டியாக இருந்த அதுமாதிரியான ஒன்றை மறுபடி உண்டாக்கவே முடியாது' என்பதைப் புதிதாக நிர்வாஹத்துக்கு வந்திருப்பவர்களுக்கு நன்ருக விளக்கிச் சொல்லவேண்டும். நல்ல வழிக்கு வருவார்கள் என்று நம்பி, கோபதாபமில்லாமல், ஈச்வர ஸ்மரணையோடு சொன்னுல் நிஜமாகவே வழிக்கு வருவார்கள். புது நிர்வாஹம் சின்னக் குழந்தையாயிருக்கிறது. ஒரு குழந்தை எப்படி வீட்டுப் பெரியவரிடம், அவர் ஊருக்கே மதிப்பு வாய்ந்த ச்ரௌதிகள் என்ருல்கூட, ஸ்வாதீனமாகப் போய் அவருடைய சிகையைப் பிய்த்து, குண்டலத்தை இழுத்து, அவர் மேலேயே அசிங்கம் பண்ணிக்கூட விளையாடுமோ அப்படித்தான் ஸொந்த ஸ்வாதீனத்தின் மேல் நம்முடைய குழந்தை நிர்வாஹஸ்தர்கள் பாரத தர்மத்தைப் பண்ணிக்கொண்டிருக்கிருர்களென்றும், அஞ்சு வயஸாகி ஸ்கூலில் போட்டால் குழந்தை அடங்கி, விஷயங் களைப் புரிந்துகொள்கிறது போல், இன்னும் கொஞ்ச காலம் போனுல், நாமும் விடாமல் "வாத்தியார்" பண்ணிக் கொண்டு தர்ம ந்யாயங்களைச் சொல்லிக்கொண்டேயிருந் தால் ஸரியாகி விடுவார்களென்றும் நம்புவோம்.

ஆனுலும் தற்போது அவர்கள் பண்ணுவது தப்பான சாஸ்த்ரம் அல்லது ஸம்ப்ரதாயத்தை ஸரி செய்வதாக நினைத்துக்கொண்டு செய்கிற தப்புதான்.

ஸொத்துத் தகுதி பற்றி

இதில் ஒரு அம்சமாகத்தான், ஸொத்து இருக்கிற வனுக்கு மட்டும்தான் சட்டஸபை, நகரஸபை ஆகியவற்றில் அங்கம் வஹிக்கத் தகுதி உண்டு என்ருல் அது ஒரு vested interest (ஒரு குறிப்பிட்ட கும்பலின் நலனை மட்டும் நிலைப்படுத்தும் பட்சபாத அக்கறை) என்று கண்டனம் செய்து, ஸகல ஜனங்களுக்கும் தகுதி உண்டு என்று பண்ணி விருப்பது.

Koviloor Digital Library

ஆனாலும் இப்போதும் அபேக்ஷகர் டெபாஸிட் தொகை என்று ஒன்று கட்டவேண்டும் என்று வைத்திருக்கிறார்கள். பொழுது போகாமல் எவன் வேணுமானாலும் தேர்தலுக்கு நின்றுவிடப் படாதே என்பதற்காக இப்படி வைத்திருப்பதாகச் சொல்லலாமாயினும், ஏழை இந்தியாவில் டெபாஸிட் தொகைக்குக்கூட வக்கில்லாமல் எத்தனையோ பேர் இருப்பார்கள் என்பதைப் பார்க்கும்போது இது இவர்கள் பெரிதாகச் சொல்கிற ஸமத்வத்துக்கு விரோதமானதுதான். பொருளில்லாத ஒரு அபேக்ஷகன் டெபாஸிட்டுக்காகவே ஒருவன் தயவை நாடவேண்டியதாகும். இதுவே 'கரப்ஷ'னுக்கும், பட்சபாதச் சலுகைக்கும் வழி திறப்பதாக ஆகலாம். வரி கட்டும் தன் ஸொந்த நிலம், ஸொந்த மனைக்கட்டில் வீடு முதலிய ஐவேஜி அபேக்ஷகருக்கு இருக்க வேண்டும் என்று விதி செய்தபோது இந்த ஊழலம்சத்துக்கு இடமில்லை.

குறைவான லஞ்ச ஹேது

மநுஷ்ய ஸ்வபாவத்தைப் பார்த்தால் ஸொத்து, ஸ்வதந்த்ரம் உள்ளவன்தான் லஞ்சம் வாங்குகிற வாய்ப்பு குறைச்சல். இப்படி நான் சொன்னால் நீங்கள் ஒப்புக்கொள்ளாமல் சண்டைக்கு வரலாம். பேர் பேராக ஆஸாமிகளைக் காட்டி, 'லக்ஷம், பத்து லக்ஷம் என்று சேர்த்த பிற்பாடும் இவர்களெல்லாம் இரண்டு கையாலும் வாங்கிக்கொண்டே இருக்கிறார்களே!' என்று கேட்கலாம். ஆனாலும் இப்படி வாழ்க்கையே பணம்தான் என்று பணத்துக்காகப் பறக்கிற போக்கு நம்மிடையே ஏற்பட்டது ஸமீப காலத்தில்தான். ஆத்ம ஸம்பத்து தேய்ந்துகொண்டே வந்து, அதே ஸமயத்தில் நூதன நூதனமாக போக்யப் பொருள்கள் கடைக்கு வருவதாகவும், பேப்பர் ரூபாயென்றும், அதை லக்ஷம்கோடி என்று பாங்க் என்பதாக ஒன்றில் எவ்வளவு வேண்டுமானாலும் போட்டு வைக்கலாம் என்றும் ஏற்பட்ட பிற்பாடுதான் நம் ஜனங்களுக்குப் பணமே குறி, பணம் சேர்ப்பதே வாழ்க்கை லக்ஷ்யம் என்று ஆனது. இதற்கு முந்தி, போக்ய வஸ்துக்களுக்கு ஓர் அளவு இருந்தவரையில், இருந்த வஸ்துக்-

Koviloor Digital Library

களின் அநுபோகத்தையும் கட்டுப்படுத்தும் சாஸ்த்ரங்களில் பொதுவாக ஜனங்களுக்கு பயம் இருந்தவரையில், பாங்கில் ஸர்வ ஜாக்ரதையாக எத்தனை வேண்டுமானால் போட்டு வைத்துக்கொள்ள இடம் இல்லாத வரையில், நம்முடைய மக்களுக்குப் பணத்தில் இத்தனை ஆசை இருக்கவில்லை. அதனால் பணக்காரர்கள் லஞ்சம் வாங்கும் வாய்ப்பு அப்போது ரொம்பக் குறைவுதான். இப்போதுங்கூட, 'கம்பேரடிவ்'வாக (ஒன்றுக்கொன்று ஒப்பிட்டு)ப் பார்த்தால், பணமே இல்லாதவன் பதவிக்கு வந்தால் 'கண்டது காணாதது மாதிரி' என்கிறபடி, வசதி படைத்தவனைவிட ஜாஸ்தியாகத்தான் பணத்தாசை பிடித்துக் கை நீட்டலாம். ஸமத்வம் என்று சொல்லிக்கொண்டு இம்மாதிரியான நடைமுறை உண்மைகளை மறந்து தர்மத்துக்கும் நீதிக்கும் ஹானி செய்வது உசிதமல்ல.

நம்முடைய ஸமத்வ முறையிலேயே காஷியர் மாதிரியான வேலைகளுக்கு ஸெக்யூரிடி கட்டவேண்டுமென்று வைத்துத்தானே இருக்கிறார்கள்? அப்போது அந்த 'போஸ்ட்'டுக்கு ஏழை 'டிஸ்க்வாலிஃபை' தானே ஆகிறான்? இது எப்படி ஸமத்வம்? பணத்திலே புழங்குகிறவன் அவற்றைக் கையாடக்கூடும் என்ற நடைமுறை இயற்கையை இங்கே கருத்தில் கொண்டுதான், பொதுப்பணம் கையாடப் படக்கூடாதே என்பதற்காக இங்கே மட்டும் ஸமத்வத்தை விட்டுக்கொடுத்து, கையாடல் நேர்ந்தாலும் ஈடு கட்டும்படியாக ஸெக்யூரிடி டெபாஸிட் என்று ஒன்றை வைத்து ஒழுங்கு செய்திருக்கிறார்கள். பணத்தில் புழங்குகிறவன் கையாடல் செய்யக்கூடும் என்கிற மாதிரியான இன்னொரு யதார்த்த இயற்கைதான், ஜனங்களோடு புழங்குகிற ஒரு ஊர் ஸபைக்காரன் அவர்களிடம் லஞ்சம் வாங்கிக்கொண்டு அவர்களுடைய ஸ்வய நலத்தைப் பேணும்படியான ஸௌகர்யம் ஏதாவது செய்து கொடுக்கக்கூடும் என்பதும்.

Koviloor Digital Library

கையூட்டு

லஞ்சத்தைச் சோழ சாஸனத்தில் "கையூட்டு" என்று சொல்லியிருக்கிறது. ரூபாயிலே கை கொஞ்சம் ட்ரிக் பண்ணி ட்ராமா ஆடுவதை, விளையாடுவதைக் "கை ஆடல்", கையாடல் என்கிறோம். கையில் ஊட்டிவிடுகிற மாதிரி ரஹஸ்யமாகப் பணத்தை வைத்து லஞ்சம் கொடுப்பதைக் "கை ஊட்டு" என்று அக்காலத்தில் சொல்லி வந்திருக்கிறார்கள். வாயில் சாதத்தை ஊட்டும்போது அது என்ன சாதம், அதற்குள்ளே என்ன "தொட்டுக்கொள்ள" ஒளித்து வைத்திருக்கிறது என்பது எதுவும் வெளியில் தெரியாது; தட்டிலோ, கையிலோ போட்டு அதை ஒருவர் வாயிலே போட்டுக்கொள்ளும்போது பலபேருக்குத் தெரிவதுபோல இல்லாமல், யாருக்கும் தெரியாமல் ஊட்டிவிட்டுப் போய் விடலாம். இதேபோல யாருக்கும் தெரியாமல், எந்தக் கணக்கு வழக்கிலும் வராமல் பணத்தைக் கையிலே ஊட்டுகிற மாதிரி அழுத்திவிட்டுப் போவது கையூட்டு! சாதத்தை வாய் முழுங்குகிற மாதிரி பணத்தைக் கை முழுங்கிவிடும்!

கையாடல் கூடாது என்பதற்காக ஸெக்யூரிடி கேட்பது போலத்தான், கையூட்டுப் பெறும் வாய்ப்பைக் குறைப்பதற்காகவே ஊர்ஸபைக்காரனாகிறவனுக்கு ஏதோ கொஞ்சம் பூஸ்திதி, வீடு என்றெல்லாம் இருக்கவேண்டுமென்று விதி செய்திருப்பது. ஆகவே இது ஸரியானால் அதுவும் ஸரிதான். இங்கே ஸமத்வம் அல்ல நடத்திக் காட்ட வேண்டிய விஷயம்—தூய்மையான நிர்வாஹமே விஷயம். ஸபைக்காரன் பொதுப்பண நிர்வாஹத்திலே தப்பு செய்து விட்டானென்றால் அதனால் ஏற்படும் நஷ்டத்துக்கு அவனுடைய ஸொத்திலிருந்து 'அட்டாச்' செய்துவிடவேண்டும் என்பதாக வைத்து, இதற்கு ஸெக்யூரிடி மாதிரிதான் ஸொத்துத் தகுதி ஏற்படுத்தியிருக்கிறார்கள். இங்கே தனி ஆளின் கௌரவ அகௌரவங்களைக் குறித்த ஸமத்வ வாதத்துக்கு இடமில்லை; ஒரு ஊரின், ஒரு ஜனஸமூஹத்தின்

Koviloor Digital Library

ஸொத்து ந்யாயமாகப் பரிபாலிக்கப்படவேண்டும் என்ற தர்ம நியாயமான தத்வம்தான் இங்கே கவனித்துப் பேணப் பட வேண்டிய விஷயம் என்பதைக் கருத்தில் கொண்டு அப்படியே செய்திருக்கிறார்கள்.

அதோடுகூட ஒரு ஊரிலே நிலபுலன், வீடு வாசல் உள்ள வன் என்றால் அவன் பொறுப்பில்லாமல் அதைவிட்டு ஓட மாட்டான். ஆனபடியால் இப்படிப்பட்டவன் ஊரோடு இருந்து, ஊரின் கஷ்ட நஷ்டங்களை எப்போதும் தெரிந்து கொள்ளும்படியிருக்கும்.

உழைத்துப் பணம் போட்டு ஒரு உடைமையைப் பெற்றவன் அதனிடம் வைத்துள்ள பற்றைப்போல, அக்கறையைப்போல, ராஜமான்ய நிலம் பெற்றவனுக்கு அதனிடம் இருக்காது. பிதுரார்ஜிதமாக ஒரு நிலமோ, வீடோ, வந்தால் அதனிடமும் ஒரு தினுஸான வாஞ்சையே இருக்கும். அம்மாதிரி grant - ஆக, gift - ஆகப் பெற்றதில் இராது. தனக்காக்கும் பஹுமானமாய் வந்தது என்பதில் தற்காலிகமாக ஒரு மோஹம் இருந்தாலும் அது நாள்பட்டு உறுதியான பிடிப்பாக நிற்காது. வெறும் ராஜமான்ய நிலத்திலேயே காலம் கழிக்கிறவன் அதைவிட்டு ஓடவும் இடம் ஏற்படும். இதனால்தான் ஸொந்த அல்லது பிதுரார்ஜித நிலத்தை உடைமையாகப் பெற்றிருந்து அதற்கு வரி கட்டுகிறவனாக இருக்கவேண்டும் என்று விதி செய்திருக் கிறது.

வேத வித்யையில் சிறப்புப் பெற்றவர்களாகவும், வேத பாஷ்யம் போதிக்கிறவர்களாகவும் இருக்கப்பட்டவர்கள் மற்றவர்களைவிடவும் த்ரவ்ய சபலத்துக்கு ஆளாகாமல், போதுமென்ற மனஸோடு எளிமையாக வாழ்ந்துவருவதை அந்நாளில் கண்கூடாகப் பார்த்திருக்கிறார்கள். அதனால் அவர்களுடைய நடத்தை சுத்தத்தில் கொண்ட அதிகப்படி நம்பிக்கையின் பேரில் இப்படிப்பட்டவர்களுக்கு மட்டும் மிகக் குறைச்சலான நிலபுலன் இருந்தாலும் போதும் என்று

Koviloor Digital Library

விதியை 'ரிலாக்ஸ்' செய்து, நிபந்தனையைத் தளர்த்திக் கொடுத்திருக்கிறது. பொதுவாகக் "கானிலத்துக்கு மேல் நிலமுடையான்" என்று யோக்யதாம்சம் நிர்ணயித்ததற்கு sub - clause - ஆக (உபக்ஷரத்தாக), அதில் பாதியான "அரைக்கானிலமே உடையானாயினும் ஒரு வேதம் வல்லானாய், நாலு பாஷ்யத்திலும் ஒரு பாஷ்யம் வக்காணித் தறிவான்" தேர்ந்தெடுக்கப்படலாம் என்று சேர்த்திருக் கிறது.

இருந்தாலும் இவனுக்கும்கூட ரிலாக்ஸேஷன்தான்; எக்ஸெம்ப்ஷன் இல்லை. இவனுக்கும் ஸொத்து கொஞ்சமாவது இருந்தாக வேண்டுமென்றே வைத்திருக்கிறார்கள்.

ஸொத்துப் பரிபாலன அநுபவம் அவசியம்

இப்படி ஊர் நிர்வாஹ ஸபைக்காரர்களுக்கு ஸொத்தினால் தகுதி ஏற்படுத்தியிருப்பதற்கு இன்னொரு காரணம் இருக்கிறது. இவர்கள் பொதுச்சொத்துக்களைப் பராமரிக்கவும், வகையறிந்து செலவழிக்கவும், முறைப்படி கணக்கு வைத்துக்கொள்ளவும் அறிந்திருக்க வேண்டுமல்லவா? எனவேதான் ஸொந்தச் சொத்தின் பரிபாலனத்தில் இவர்களுக்கு அநுபவம் இருந்தால் நல்லது என்று இப்படி ஷரத்து செய்திருக்கிறார்கள். திடீரென்று ஸொந்தமாக ஒரு ஸொத்தைப் பெற்றவன் அதை 'தாம் தூம்' என்று செலவு செய்யும் வாய்ப்பு எப்படி அதிகமோ, அப்படியே ஸொத்தில்லாதவனிடம் ஊர்ப் பொதுச் சொத்தின் நிர்வாஹத்தைத் தந்தாலும் 'தாம் தூம்' தர்பார் நடத்தக் கூடும். அல்லது இன்னொரு 'எக்ஸ்ட்ரீ'மாக ரொம்பவும் யோசனை பண்ணிப் பண்ணி ரொம்பவும் சுஷ்கமாகவே பட்டுவாடா பண்ணி, 'பப்ளிக் வெல்ஃபேர்' (பொது நலப் பணி) அதற்குரிய ஜருருடன் நடக்கவிடாமல் செய்து விடுவான். இதனாலெல்லாந்தான் ஸொத்துடைமை ஒரு க்வாலிஃபிகேஷனாக வைக்கப்பட்டது.

Koviloor Digital Library

''தன் மனை'' என்றதன் காரணம்

'வரி கட்டும் ஸொத்தின் பரிபாலனத்தில் ஒருத்தனுக்கு உள்ள அக்கறை, அபிமானம், சிக்கனம் முதலியன வரி கட்டாத ஸொத்து விஷயமாக இருக்காது; எனவே இப்படிப் பட்டவனிடம் ஊர்ஸொத்தை ஒப்படைக்கப்படாது' என்பது போலவே இன்னொன்று. ஸொந்த பூமியிலே வீடு கட்டிக் கொள்ளாமல் ஏதோ புறம்போக்கை வளைத்துப் போட்டு தன்னுடையதாய் ஜீர்ணம் செய்துகொண்டு அதிலே வீடு கட்டிக்கொண்டவனென்றால், இப்படி வளைத்துப் போட்டு ஏப்பம் விடுகிற ஸமாசாரத்தை நாளைக்கு ஸபையின் வ்யவஹாரத்திலும் அவன் மேற்கொள்ளக்கூடும். அதனால் தான் க்ராம ஸபைக்கு மெம்பராகிறவன் ''தன்மனையிலே அகமெடுத்துக் கொண்டிருப்பவ''னாக இருக்க வேண்டுமென்று விதி செய்திருக்கிறார்கள். பொது வ்யவஹாரத்தின் சுத்திக்காக இப்படியெல்லாம் தர்மவேலி போட்டிருப்பதை ஜன நாயகம் என்ற மயக்கத்தில் கண்டனம்செய்வதும், அவிழ்த்து விடுவதும் ஜன ஸமூஹத்துக்குச் செய்கிற அபகாரமாகவே முடியும்.

வயதுத் தகுதி

அடுத்தபடியாக வயஸுத் தகுதி. போனால் போகிறதென்று இதற்குமட்டும் நம் ஜனநாயகக் குடியரசிலும் ஒரு கீழ் வரம்பு, இருபத்தைந்தோ முப்பதோ எதுவோ ஒன்று வைத்துவிட்டு மேல் வரம்பு இல்லாமல் விட்டிருக்கிறார்கள். ''இளம் தலைமுறை'', ''வருங்கால வாரிசு'' என்றெல்லாம் பெயரைக் கொடுத்து அநுபவமில்லாத சிறுவர்களையும் தங்கள் தங்கள் கட்சிகளுக்குள் இழுத்துக்கொள்ளும் போக்கு தற்போது உண்டாகி இருக்கிறது. இவர்களுடைய ஆதரவைப் பெறுவதற்காகக் கீழ் வரம்பை இன்னம் கீழே கொண்டுபோனாலும் போகலாம். தேர்ந்தெடுக்கப்படுபவர்களைப் போலவே தேர்ந்தெடுப்பவர்களான 'வோட்டர்' (வாக்காளர்)களுக்கும் வைக்கப்பட்டுள்ள ஒரே தகுதி கீழ்வரம்பு வயஸுதான். இருபத்தொன்றில் 'மேஜர்'

Koviloor Digital Library

என்பதைப் பதினெட்டாக மாற்றி, அப்போதே வோட்டுரிமை தந்து வோட்டர் ஆக்கிவிட வேண்டுமென்று இப்போது ஒரு பேச்சு இருப்பதாகத் தெரிகிறது.

தற்காலக் 'கண்டதே காட்சி'க் கோலத்தில், வாழ்க்கையில் அடிபட்டு, கஷ்ட ஸுகங்களை அலசிப் பார்த்துப் புரிந்துகொள்ளும் அநுபவ ஞானம் சென்றுபோன தலைமுறையினரையும்விட புதுத் தலைமுறையினருக்கு 'லேட்'டாகத்தான் உண்டாவதாகத் தெரிகிறது.

"மடத்துக்குள்ளே முட்டாக்குப் போட்டு உட்கார்த்தி வைத்திருக்கிற உனக்கு அதைப்பற்றி என்ன தெரியும்? அந்த ஸயன்ஸ், இந்த ஸயன்ஸ், புதுப்புது நிர்வாஹ முறைகள், வியாபார முறைகள், டெக்னாலஜிகள், கலை ஆராய்ச்சிகள் என்று நாளுக்கு நாள் நாங்கள் என்ன போடு போடுகிறோம் தெரியுமா? இதனால் ஜெனரல் நாலட்ஜ் லெவலே (பொது அறிவு மட்டமே) ரொம்பவும் உசந்துவிட்டது. ஸ்கூல் பசங்கள்கூட யூனியன், பார்லிமென்ட் எல்லாம் வைத்துக்கொள்கிற அளவுக்கு எல்லாருக்கும் அறிவு வெளிச்சம் கொடுத்துவிட்டோமாக்கும்" என்று சொல்லலாம்.

இதெல்லாம் உண்மையாக இருக்கலாம். ஆனால் இது அவ்வளவுமே மூளையும், தாற்காலிக இந்த்ரியஸுகமும் ஸம்பந்தப்பட்ட விஷயம்தான். "வாழ்க்கை என்ன? எதனால் அது ஸாரப்படும்?" என்பதைப் புரிந்துகொள்ள வைக்க இவை ஒன்றும் உதவவில்லை. அதோடு இல்லை. நேர்மாறாக, இந்தக் கண்டுபிடிப்புக்களின் ஜ்வலிப்பில் உண்டான glare-னால் (கண் கூசலினால்) வாழ்க்கையை உள்ளபடிப் புரிந்துகொள்வதில் ஜனங்கள் முன்னைவிட பின்னேதான் போய், அநுபவத்தில் குறைந்தவர்களாக ஆகிவருகிறார்கள். என்னை மடத்துக்குள்ளே முட்டாக்குப் போட்டு உட்கார்த்தி வைத்திருந்தாலும் பலதரப்பட்ட ஜனங்களும் இங்கே வந்து குறைகளைச் சொல்லிக் கொள்கிறார்கள் அல்லவா? இவர்களுடைய பலவிதமான ப்ரார்த்-

Koviloor Digital Library

தனைகளைக் கேட்கிறபோது, ப்ரச்னைகள் என்று நினைத்துக் கொண்டு இவர்கள் ஒப்பித்துவிட்டுப் போகிறவற்றைப் பார்க்கிறபோது, போன தலைமுறையைவிட இப்போது எப்படி ஜனங்கள் உலகத்தைப் புரிந்துகொள்ளும் அநுபவ ஞானத்தில் பின்னே போய்க் கொண்டிருக்கிறார்களென்று நன்றாகத் தெரிகிறது. அநேக ஸந்தர்பங்களில், "என்ன இத்தனை வயஸானவர் இப்படி உலகத்தை, வாழ்க்கையைப் புரிந்துகொள்ளாதவராக இந்த மாதிரி கேட்கிறாரே? நாற்பது வருஷம் முந்தி நாம் பட்டத்துக்கு வந்த நாளாக* ப்ரார்த்தனைகள்—லௌகிக விஷயமாகவுந்தான்—நிறையக் கேட்டே வந்திருக்கிறோம். ஆனாலும் அந்தக் காலத்தில் இந்த மாதிரி இந்த வயஸுக் கட்டத்திலிருந்தவர்கள் கேட்டிருப்பார்களா?" என்று நினைத்துப் பார்க்கிறேன். இந்த நிலையில் வோட்டர்கள், அபேக்ஷகர்கள் ஆகியோருடைய ஏஜ்-லிமிட்டை மேலும் குறைப்பது யதார்த்தத்துக்குப் பொருந்தாததாகவே படுகிறது.

பொது விஷயங்களில் ஆலோசனை செய்து முடிவு எடுக்க வேண்டுமானால் அதற்கு உலக ஞானமும் வாழ்க்கையநுபவமும் இருக்கவேண்டும். நன்றாக அடிபட்டு இவற்றை அறிவதற்கு ஒரு குறிப்பிட்ட அளவு வயஸு முதிர்ச்சி தேவைப்படுகிறது. இவ்விஷயத்தை தீர்க்கமாக அலசிப் பார்த்துத்தான் அக்காலத்தில் ஆயிரம் வருஷத்துக்கு முந்தி, முதல் கல்வெட்டுப்படி அபேக்ஷகருக்கு முப்பது வயஸு என்று கீழ் வரம்பு கட்டினவர்கள் அப்புறம் இரண்டு வருஷம் மேலும் நடைமுறைகளைப் பார்த்துப் புனராலோசனை செய்ததில் அதுகூடப் போதாது என்று இரண்டாம் கல்வெட்டுப்படி முப்பத்தைந்து என்று உயர்த்தியிருக்கிறார்கள். இப்போது பச்சைக் குழந்தைகளைக்கூடத் தங்கள் தங்களுக்கு ஸாதகமாகப் பாலிடிக்ஸில் இழுத்துக்கொள்ள வேண்டுமென்பதே ஒவ்வொரு கட்சியின் தலைவர்கள் என்கப்பட்டவர்களுக்கும்

---

* இது ஏறக்குறைய நாற்பதாண்டு முன் ஸ்ரீ சரணர் அருளியது. அவரது வாக்கு தற்போது மேலும் உறுதிப்பட்டு த்வனிக்கிறது.

Koviloor Digital Library

அடிப்படை எண்ணமாக இருப்பதால் தற்போது செய்கிற புனராலோசனைகளோ வயஸைக் குறைப்பதில்தான் நோக்க மாயிருக்கின்றன.

தற்போது வயஸுக்கு மேல்வரம்பே இல்லை. ஆனாலும் அப்போதோ இயற்கையை கவனித்து இவ்விஷயமாகவும் விதி செய்திருக்கிறார்கள். குறிப்பிட்ட ஒரு வயஸுக்குமேல் போய்விட்டால் வ்ருத்தாப்யத்தில் ஒய்ச்சல் வந்துவிடுகிறது. ஞாபக மறதி ஏற்படுகிறது. இம்மாதிரித் தளர்ந்து உடம்பி லும் உள்ளத்திலும் ஆடிப்போவதை "ஸெனிலிடி" என்கிறார் கள். வியாதிகளும் அப்போது அதிகம் பிடுங்கி எடுக்கின்றன. இவற்றோடு பழங்காலத்தில் அந்த வயஸில் ஆரம்பநாளி லிருந்து பின்பற்றி வந்த சாஸ்த்ர அப்யாஸங்களினால் விவேக வைராக்யாதிகளில் புத்தி அதிகம் போகத்தொடங்கி யிருக்கும். அதனால் எதிலும் ரொம்பப் பட்டுக்கொள்ளாமல், தப்புத் தண்டா நடந்தால்கூட, 'என்னமோ எல்லாம் ஈச்வர லீலை' என்று விட்டுவிடும் மனோபாவம் தோன்றியிருக் கும். பொது நிர்வாஹத்தில் இப்படிப்பட்ட மனப்பான்மை கூடாதாயிற்றே! நல்ல உணர்ச்சி வேகமும் கண்டிப்பும் கார்யச் சுருசுருப்பும் இருக்கவேண்டுமே! அதனால்தான் வயஸுக்கு 'லோயர் லிமிட்'டோடு 'அப்பர் லிமிட்'டும் விதித்திருக்கிறது.

முதலில் அறுபது என்று நிர்ணயித்திருக்கிறார்கள். அப்புறம் இன்னம் ஆழமாகச் சிந்தனையைச் செலுத்தி, இரண்டு வருஷம் நடைமுறையையும் பார்த்ததில் எழுபது என்று உயர்த்தியிருக்கிறார்கள். அறுபதுக்கு மேலே ரொம்ப ஓடி ஆட முடியாதே என்று முதலில் அப்படி நிர்ணயித்திருப் பார்கள் போலிருக்கிறது. அப்புறம் பார்த்ததில், ஓடி ஆட முடியாவிட்டாலும் வயஸு ஏற ஏற எழுபதுவரைகூட அநுபவ முதிர்ச்சி நன்றாக வளர்ந்து பொது விஷயங்களில் புத்திமதி சொல்லவும், திட்டங்கள் சட்டங்கள் வகுக்கவும் திறமை ஜாஸ்தியாகிறது என்று கண்டிருக்கிறார்கள். அறுபது வயஸு ஆகி ஷஷ்ட்யப்த பூர்த்தி பண்ணுகிறார்களே,

Koviloor Digital Library

அதோடு அநேகமாக ஓடி ஆடுவது குறைய ஆரம்பிக்கிறது. அதனால்தான் முதலில் அப்போது 'ரிடயர்மென்ட் ஏஜ்' வந்துவிடுகிறது என்று வரம்பு வைத்திருக்கிறார்கள். ஆனால் இப்படி ஓடி ஆடி உடம்பால் வேலை செய்வது குறைந்த பிற்பாடுதான், ஒருவேளை இதனாலேயே 'கன்ஸர்வ்' செய்யப்படும் எனர்ஜி (சேமிக்கப்படும் சக்தி)யாலோ என்னவோ, அறிவு நல்ல முதிர்ச்சியுடன் ஆற்றலோடு செயல்படுகிறது. இப்படி ஒரு பத்து வருஷம் இருந்தபின் ஸெனிலிடி—"வயஸான தோஷம்" என்கிறார்களே, அது—உண்டாகிறது; அல்லது புத்தி ஞான வைராக்யத்திலே போய்விடுகிறது. அறுபது வயஸு என்று நிர்ணயம் செய்தபின், ஸபையில் அங்கத்தினர்களாக இல்லாமல் அந்த வயஸுக்கு மேலேபோன ஊர்ப் பெரியவர்கள், ஸபை மூலமாக இல்லாவிட்டாலும் தனிப்பட ஊர் நலனுக்கான நல்ல யோசனைகள் தரமுடிவதை கவனித்திருப்பார்கள் போலிருக்கிறது. அதனால், "அதிகம் ஓடியாடிச் செய்ய வேண்டியதைச் செய்ய முடியாவிட்டாலும் பரவாயில்லை; executive wing-ன் அதிகாரிகள், சிப்பந்திகள் அதற்கென்று இருக்கிறார்கள். ஸபைக்காரர்கள் உட்கார்ந்த இடத்திலேயே ஆரஅமர ('அமர' என்றாலே 'உட்கார்ந்து' தானே?) யோசித்துச் சட்ட திட்டங்கள் போடுபவர்களாகவும், அவ்வப்போது மட்டும் ஊரைச் சுற்றிக் கார்யங்களை இன்ஸ்பெக்ட் பண்ணச் சக்தியுடையவர்களாகவும் இருந்தால் போதும்" என்று புனராலோசனை செய்து, இரண்டு வருஷத்துக்கு அப்புறம் அறுபதை எழுபது என்று 'அமென்ட்' செய்திருக்கிறார்கள் போலிருக்கிறது.

"வ்ருத்த" லக்ஷணம்

நடுத்தர வயஸான முப்பத்தைந்திலிருந்தே ஸபை அங்கத்தினராகலாமாயினும் பொதுவாக சோழர் காலத்துக்கும் முன்னாலிருந்து ஐம்பது வயஸுக்கு மேலே போய் "வ்ருத்தர்"கள் என்று குறிப்பிடும்படியாக இருந்தவர்களின் யோசனைதான் அநுபவ கனம் வாய்ந்தது என்பதாக அதிகம்

Koviloor Digital Library

மதிக்கப்பட்டு வந்திருக்கிறது. "Elders" என்று மேல் நாட்டில்கூட ஒரு தனி மதிப்பு தருகிறார்கள் அல்லவா? ஸபா லக்ஷணத்தைச் சொல்லும் ஒரு பழைய ச்லோகத்திலே வயஸான பெரியவர்களுக்குத்தான் விசேஷத் தகுதி கொடுத்திருக்கிறது:

ந ஸா ஸபா யத்ர ந ஸந்தி வ்ருத்தா :
ந தே வ்ருத்தா : யே ந வதந்தி தர்மம் |
ந ஸ தர்மோ யத்ர ந ஸத்யம் அஸ்தி
ந தத் ஸத்யம் யத் - சலேநாநுவித்தம் ||

ஒரு ஸபையில் வ்ருத்தர்கள் இல்லாவிட்டால் அது ஸபையே ஆகாது. (ஸபையைப் பெண்பாலில் 'ஸா' என்று சொல்லியிருக்கிறது. தமிழில் அஃறிணையாகச் சொல்கிற அநேக ஸமாசாரங்களை ஸம்ஸ்க்ருதத்தில் ஆண்பால், பெண் பாலாகச் சொல்லியிருக்கும். நதியைப் பெண்ணாகச் சொல்லியிருப்பது, கங்கா, யமுனா, காவேரி, முதலான பேர்களிலிருந்தே எல்லாருக்கும் தெரிந்திருக்கும். ஆனால் இதிலேயும்கூட ஒரு வித்யாஸமுண்டு. கிழக்கு முகமாக ஓடுகிறவற்றுக்குத்தான் 'நதி' என்று பேர் கொடுத்துப் பெண்பாலாகச் சொல்வது. மேற்கு முகமாக ஓடுவது 'நதி' அல்ல; அது 'நதம்'. உதாரணமாக, நர்மதையையும் நாம் பெண் தேவதா ரூபத்திலேயே சொன்னாலும் அது மேற்கு முகமாய் ஓடுவதால் ஆண்பாலான நதம்தான். இங்கிலீஷில்கூட பல அசேதன வஸ்துக்களை 'ந்யூடர் ஜென்டரா'க வைக்காமல் ஆண்பால், பெண்பால்களாகச் சொல்கிறார்கள். Ship—கப்பலை 'she' என்கிறார்கள். அந்த மாதிரி இங்கே ஸபா என்பதை ஸ்த்ரீலிங்கமாகச் சொல்லியிருக்கிறது. 'ஸபை என்றால் பேச்சுதானே முக்யம், அதனால்!'—என்று வேடிக்கையாய் வைத்துக்கொள்ளலாம்.) என்ன சொல்லியிருக்கிறதென்றால்,

ந ஸா ஸபா யத்ர ந ஸந்தி வ்ருத்தா:

"எதிலே வயஸான பெரியவர்கள் இல்லையோ அது ஸபையே ஆகாது"—அதாவது, வயஸான பெரியவர்கள்

Koviloor Digital Library

அங்கம் வஹிப்பதே முறையான ஸபை. "வ்ருத்தா:" என்பதை வயஸான பெரியவர்கள் என்று சொன்னேன். வயஸினுலே மட்டும் பெரியவர்களாக இருந்துவிட்டால் போதுமா? அவர்களை 'ஸபேயர்'களான வ்ருத்தர்கள் என்க லாமா? கூடாது, கூடாது.

ந தே வ்ருத்தா:யே ந!வதந்தி தர்மம்

"எவர்கள் தர்மத்தை எடுத்துச் சொல்லவில்லையோ அவர்கள் வ்ருத்தர்களாக மாட்டார்கள்." செங்கல்லையும் காரையையும் போட்டு மண்டபம் கட்டி அதிலே யுவர்களா யும், மத்யம வயஸுக்காரர்களாகவும் இருப்பவர்களை மெம் பர்களாகக் கொண்டு விவாதங்கள் நடத்திவிட்டால் அதனுல் அது ஸபை ஆகிவிடாது. வ்ருத்தர்கள் இருந்தால்தான் அது ஸபையாகும். அதேபோல, வயஸு எழுபது ஆச்சு, பல்லுபோச்சு, தலை நரைத்துவிட்டது என்ருல் மட்டும் ஒருத் தர் வ்ருத்தராகிவிட மாட்டார். இப்படிப்பட்ட ஒரு கிழவர் காரஸாரமாகப் பேசுகிருர், ரொம்ப விஷயம் தெரிந்து வைத்திருக்கிருரென்ருல்கூட ஸபைக்குத் தகுதியுடைய வ்ருத்தராக மாட்டார். எத்தனை விஷயம் தெரிந்தாலும் அதெல்லாம் முடிவாகக் கொண்டு சேர்க்கவேண்டிய தர்மம் தெரிந்தவரா? அந்த தர்மத்தை தைர்யமாக எடுத்துச் சொல்வாரா? அப்படிப் பட்டவராயிருந்தால்தான் 'வ்ருத்தர்' என்ற பேருக்கு உண்மையில் உரியவராகி ஸபை யில் அங்கம் வஹிக்க யோக்யதை பெறுவார்.

தர்ம ஒழுங்கின் ஸத்ய அடிப்படை

நடைமுறையில் செய்துகாட்டுவதால் நல்லதை விளைவிக் கும் ஒழுங்குமுறைதான் தர்மம் என்பது. இந்த நடை முறைக்கு ஆதார தத்வமாக ஒரு அடிப்படை இருக்க வேண்டும். ஒரு ஒழுங்கு என்ருல் அது அப்படிப்பட்ட ஒழுங் கிலே இருக்கிறது என்பதை உணர்த்துவதாக ஒரு அடிப்படை உண்மை இருக்கவேண்டும். தீபாலங்காரம் செய்யும்போது,

Koviloor Digital Library

வட்டமாக, சதுரமாக, கோணமாகப் பல வரிசைகளில் தீபங்களை வைத்தால் அந்த ஒழுங்கிலே மனஸுக்கு ஒரு நிறைவு தெரிகிறது. ஏதோ ஒரு ஒழுங்கிலே வளைத்தும் நீட்டியும் கோலம் போட்டிருந்தால் அதைப் பார்க்கிற போது ஒரு ஸந்தோஷம், எதுவோ ஒன்று ரொம்ப ஸரியா யிருக்கிறது என்ற ரஸிப்பு உண்டாகிறது. வட்டமோ, சதுரமோ, வளைவோ, கோணமோ கொஞ்சம் கோணலாக இருந்தால் மனஸுக்கு என்னமோபோல் இருக்கிறது. எதனாலென்றால் இந்த வெளி ஒழுங்குகளுக்கு ஆதாரமாக ஏதோ ஒரு உள்ளொழுங்கான தத்வம் இருக்கிறது. கண்ணுக்கு வெளியொழுங்கு தெரிகிற மாதிரி நம் உள்ளுக் குள்ளே, உள்ளத்துக்குள்ளே அந்த தத்வத்தைப் பற்றி நமக்குத் தெரியாமலே ஒரு ஞானம் இருக்கிறது. எனவே அதற்கு இது—வெளியிலே ஒழுங்கு செய்திருப்பது—ஒத்துப் போகிறபோது மனஸில் நிறைவு உண்டாகிறது.

இதே மாதிரி சுத்தமான அந்தஃகரணமுள்ள ரிஷிகள் முதலான மஹான்களுக்கு உள்ளுக்குள்ளே ஸ்வச்சமாகத் தெரிந்த ஒரு அடிப்படைக்கு ஒத்துப்போவதாக வெளியிலே பின்பற்ற வேண்டிய அநேக ஒழுங்குகளைத்தான் ஒழுக்கம் என்று வைத்து தர்ம வாழ்க்கையை அமைத்திருக்கிறது. இதற்கு அடிப்படையாய் உள்ளே ஒரு தத்வம் இருக்கிறது என்றேனே, அது என்னவென்றால், அதுதான் 'ஸத்யம்' என்பது. நம்முடைய வெளி அறிவுக்கும் புரிகிறமாதிரி இந்த ஸத்யத்தை எடுத்துச் சொல்பவையே வேத, உபநிஷத, சாஸ்த்ரங்கள், ஒழுங்கு மாதிரி, தர்மம் மாதிரி வெளியிலே எத்தனை செய்தாலும் அந்த ஸத்யத்துக்கு இது ஒத்துப் போகாவிட்டால் இது மனநிறைவைத் தராது; வாழ்க்கை நிறைவைத் தராது; அதாவது வாழ்க்கை நிறைந்து ஈச்வர சரணாரவிந்தத்தில் நம்மைக் கொண்டுவிட்டு முடிவதாக ஆகாது.

ந ஸ தர்மோ யத்ர ந ஸத்யமஸ்தி

Koviloor Digital Library

"எதில் ஸத்யமில்லையோ அது தர்மமாகாது" (ஸபாவை "ஸா"—'அவள்' என்று பெண்பாலில் சொன்னதுபோல், தர்மத்தை "ஸ:"—"அவன்" என்று ஆண்பாலில் சொல்லி யிருக்கிறது.)

தர்மம் தெரிந்த பெரியவர்கள் அதற்கு ஆதாரமான ஸத்யத்தையும் அறிந்து அதன்படியே தார்மிகமான நிர்வாஹ க்ரமங்களையும், சட்டவிதிகளையும் ஒழுங்குபடுத்தித் தரவேண்டுமென்று ஏற்படுகிறது.

ஸரி, ஸத்யத்தின் பாற்பட்ட தர்மத்தை அறிந்த வயதானவர்கள்—உபநிஷத் ஞானத்தால் ஸத்யத்தையும், தர்ம சாஸ்த்ர ஞானத்தால் தர்மத்தையும் அறிந்த வ்ருத்தர் கள் ஒன்றுகூடி முடிவு செய்கிறார்களென்றால் அந்த இடம் ஸபையாகி விடுமா? அவஸரப்பட்டு அப்படித் தீர்மானித்து விடவேண்டாம். தர்மம் தெரிந்த பெரியவர்கள், ஸத்யம் அறிந்த வ்ருத்தர்கள் என்று சொன்னோமே, இப்படி தெரிந்து கொள்வது, அறிந்துகொள்வது என்றால் என்ன? சாஸ்த்ரங் களை நிறையப் படித்து இதுதான் தர்மம், இதுதான் ஸத்யம் என்று நன்றாகத் தெரிந்துகொண்டிருப்பதும் அதைத் திறமையோடு பிறருக்கு எடுத்துச் சொல்வதும் ஒருத்தரை ஸபேயரான வ்ருத்தராக்கி விடுமா? ஆக்காது. தாங்கள் கற்றும் கேட்டும் தெரிந்துகொண்ட ஸத்ய தர்மங்களை வாழ்க்கையில் நடத்திக் காட்டுபவர்களாகவும் இருந்தால் தான் உண்மையான வ்ருத்தர்களாவார்கள். கசடறக் கற்றபின் அதற்குத் தக நிற்கவேண்டும் என்று திருவள்ளுவர் சொன்னாற்போல், தர்மாதாரமான ஸத்யத்தைப் பற்றி புத்தியால் அறிந்ததோடு நிற்காமல், அதை அநுபவித்தவர் களாகவும், அதன் வெளி ஒழுங்கான தர்மத்தை வாழ்க்கை யில் அநுஷ்டிப்பவர்களாயும் இருக்கவேண்டும். இப்படிப் பட்டவர்கள் எடுத்துச் சொன்னால்தான் அந்த ஸத்யம் ஜீவ சக்தியோடு பிறர் மனஸில் பாய்ந்து வேலை செய்யும். இல்லா விட்டால் "ப்ரமாதமான பேச்சு" என்ற புகழ்மாலையோடு, அந்தப் பேச்சைப் போலவே காற்றோடு போய்விடும். "மித்யா

Koviloor Digital Library

சாரம்'' என்று (கீதையில்) பகவானும், பொய்யொழுக்கம் என்று தமிழ் நூல்களும் சொல்லும் ''ஹிபாக்ரிஸி''யாக ஒருவன் பெரிசாக வாய்ப்பந்தல் போட்டுவிட்டு வாழ்க்கையில் வேறுவிதமாக இருந்தானானால், அவன் எத்தனை அழகாகத்தான் ஸத்யத்தை எடுத்துச் சொன்னாலும் அதற்குப் பிறத்தியாரை 'இன்ஸ்பயர்' பண்ணும் சக்தி இருக்காததலால் அது ஸத்யத்தோடு சேரவே சேராது. உயிரில்லாத வெற்றுப் பேச்சான ஸத்யம் ஸத்யமேயில்லை.

ந தத் ஸத்யம் யத் சலேநாநுவித்தம்.

''சலேந அநுவித்தம்''. ''சலன்'' என்றால் ஹிபாக்ரிட். ''அநுவித்தம்'' என்றால் ''ஸம்பந்தப்பட்ட.'' ஹிபாக்ரிப்டின் ஸம்பந்தமுடைய, அதாவது ஹிபாக்ரிட்டினால் எடுத்துச் சொல்லப்பட்ட எது ஒன்றும் ஸத்யமாகாது. ''ந தத் ஸத்யம்'' —அது ஸத்யமாகாது.

''வ்ருத்தரில்லாதது ஸபையாகாது; தர்மம் சொல்லாதவர் வ்ருத்தராக மாட்டார்கள்; ஸத்யமில்லாதது தர்மமாகாது; பொய்யொழுக்கக்காரனின் ஸம்பந்தமுள்ளது ஸத்யமாகாது''—இப்படி அந்த ச்லோகம் சொல்கிறது. இதுவும் சட்ட ஸபை, பார்லிமென்ட், ஐ.நா. ஸபை ஆகியவற்றுக்கு 'மாட்டோ'வாக வைக்கக்கூடிய ச்லோகம்தான்.

'ஞான சீல வயோ வ்ருத்தர்' என்று சொல்வது வழக்கம். வயஸினால் கிழவராகிறவர் 'வயோ' வ்ருத்தர் மட்டும்தான். அதோடு அறிவினாலேயும் பழுத்தால் 'ஞான' என்று இன்னொரு அடைமொழி சேரும். அறிந்தபடி தூய ஒழுக்கத்தோடும் வாழ்கிறபோதுதான் 'சீல' என்ற அடைமொழியும் சேர்ந்து ஒருத்தர் 'ஞான சீல வயோ வ்ருத்த'ராவது. இப்படிப்பட்ட வ்ருத்தர்கள்தான் ஸபேயர்கள் என்று அந்த ச்லோகம் காட்டுகிறது.

சோழர்கால சாஸனத்திலும் அறத்தைப் பற்றிய அறிவு, அந்த அறிவை வாழ்க்கையில் பற்றி ஒழுகிக் காட்டும் தூய நடத்தை இரண்டையும் ஸபை அங்கத்தினர்களுக்குத்

Koviloor Digital Library

தேவையான தகுதிகளாக விதித்திருக்கிறது. இதோடுகூட கார்ய ஸாமர்த்தியமும் பொதுப்பணியிலிருப்பவர்களான அவர்களுக்கு இருக்கவேண்டுமென்று பொருத்தமாக ஷரத்து செய்திருக்கிறது. "வேதத்திலும் சாஸ்திரத்திலும் காரியத்திலும் நிபுணர்", "அர்த்த சுத்தமும் ஆத்மசுத்தமும் உடையார்" என்று நாலாவது ஐந்தாவது விதிகளில் சொல்லியிருப்பதில் இந்த எல்லா 'ஆஸ்பெக்ட்'களும் 'கவர்' ஆகிவிடுகின்றன.

வயஸைக் குறித்த மூன்ருவது விதியைப் பற்றித்தான் சொல்லிக்கொண்டிருந்தேன். அதிலேயே நடுவில் அடுத்த விதிகளும் வந்துவிட்டன! தற்காலத்தில் இல்லாததாக வயஸுக்கு 'அப்பர் லிமிட்' கட்டியிருப்பது இதில் குறிப்பிட வேண்டிய அம்சம். முதலில் (அதை) அறுபது என்று வைத்து அப்புறம் எழுபதாக உயர்த்தியிருக்கிறது.

விதிவிலக்கான வயோதிகர்கள்

ரிஷிகள் மனஸினுல் பரத்தில் இருந்துகொண்டே வெளிப்பார்வைக்கு இஹத்திலும் ஈடுபட்டு ஸதாஸர்வகாலம் லோக மங்களத்துக்காகக் கார்யம் செய்துகொண்டிருந்தவர்கள். எத்தனேயோ ஆயிரம் வருஷங்கள் உயிரோடு இருந்தாலும், தேஹ-புத்தி சக்திகள் குறையாமல், 'ஸெனிலிடி' வராமல் இருந்தவர்கள். ஞான வைராக்யமென்பதற்காக லோக கல்யாணத்தை விட்டு விட்டு ஓட வேண்டுமென்றுமில்லாமல், அதில் ஊன்றி நின்ற அதே ஸமயத்திலேயே இதிலும் ஈடுபட்டவர்களாக இருந்திருக்கிருர்கள். வஸிஷ்டர் மாதிரியானவர்கள் எத்தனேயோ தலைமுறைகளுக்குப் புரோஹிதர்களாக இருந்து நல்லதை எடுத்துச் சொல்லி வந்திருக்கிருர்கள். அப்போது 'அப்பர் லிமிட்' தேவைப்படவில்லை. ஆனல் அது ரொம்பப் பழைய கதை. "த்ரேதா யுகத்து ஸமாசாரம்" என்கிருேமே, வாஸ்தவமாகவே அந்தக் காலத்தைச் சேர்ந்த கதை.

Koviloor Digital Library

அப்புறம் எல்லாமே வரவர க்ஷீணித்து வந்திருப்பதில் கலியுகத்தில் ரொம்பப் பெரியவர்களுக்குக்கூட நல்ல வ்ருத்தாப்யம் எழுபது வயஸுக்கு மேல் ஏற்பட்டு, தேஹ சக்தி, புத்தி சக்தி இரண்டும் நலிவதாகத்தான் ஆகி வந்திருக்கிறது. ஆயிரம் வருஷம் முந்தி நிச்சயம் இப்படி ஆகித்தானிருக்க வேண்டுமென்று உத்தரமேரூர் சாஸனத்தி லிருந்து தெரிகிறது.

அபூர்வமாக விதிவிலக்கான வ்ருத்தர்கள் இருக்கிறார்கள். பெர்னார்ட்ஷா இருக்கிறார்*. சர்ச்சில் கொஞ்சங்கூடக் கிழம் தட்டாமல் அவருடையே தேசத்தையே ஆவேசத்தில் கிளப்பி உலக மஹாயுத்தம் நடத்தியிருக்கிறார். காந்தி எத்தனையோ வருஷமாகப் பூஞ்சையாகத்தானிருந்தாலும், மனோபலத்தாலும் ராம நாம சக்தியாலும் கடைசிவரை தீக்ஷ்ண புத்தியுடனும் ஆரோக்யத்துடனும் இருந்திருக்கிறார். விச்வேச்வரய்யா இருக்கிறார். Grand Old Man என்கிறார்கள். இப்படிப்பட்டவர்கள் எக்காலத்திலும் எந்த இடத்திலும் இருக்கக்கூடுமானாலும், ஒரு ஊர் ஆட்சியையோ ராஜ்ய நிர்வாஹத்தையோ ஏற்று நடத்தக்கூடிய பொறுப்பை எப்படிப்பட்டவரிடம் கொடுக்கலாம் என்று விதி செய்யும் போது, ஜனங்களின் ஜெனரல் லெவலைப் பார்த்துத்தான் செய்யமுடியுமே தவிர, விதிவிலக்காக இருப்பவர்களுக்கு இடமளிக்கும்படியான ரீதியில் செய்ய இயலாது. ஒரு கான்ஸ்டபிள் வேலை என்றால் பொதுவாகப் பார்த்து இன்ன உயரம், பருமன், 'வெய்ட்' உள்ளவன்தான் செய்யமுடியும் என்று வைக்கிறார்கள். அதற்கு விலக்காகச் சற்று குட்டை யாக, ஒல்லியாக உள்ள ஒருவன் எத்தனைதான் சூரத்தனம் காட்டிப் பேர் பெற்றவனாயிருந்தாலும், கான்ஸ்டபிள் வேலைக்கு மனுப்போட்டால், "எல்லாம் ஸரிதாம்பா; ஆனால் ப்ரிஸ்க்ரைப் பண்ணின உசரம், பருமன் இல்லையே!" என்று சொல்லிக் கையை விரிக்கத்தான் செய்வார்கள்.

---

* அதாவது உரை ஆற்றபட்ட காலத்தில்.

Koviloor Digital Library

அலுவலக வேலையும் பொதுச்சபைப் பணியும்

வேறெங்கேயோ போவானேன்? சர்க்கார் சிப்பந்திகளையே எடுத்துக் கொண்டால் ஐம்பத்தைந்து, உசந்தால் (ஜட்ஜ் மாதிரியானவர்களுக்கு) அறுபது என்று ஏதோ ஒரு வயஸில் 'கம்பல்ஸரி'யாக 'ரிடயர்' செய்துதானே விடுகிறார்கள்? உத்யோகங்கள் எல்லாவற்றுக்குமே வயஸில் லோயர் லிமிட், அப்பர் லிமிட் இரண்டும் வைத்திருக்கிறார்கள்.

தினந்தினமும் ஆபீஸுக்குப் போய் அடியிலிருந்து நுனி வரை ஃபைல் பார்ப்பது, எழுதுவது, டைப் அடிப்பது, அல்லது இன்ஸ்பெக்ஷன் பண்ணுவது, அல்லது ட்ராயிங் போடுவது, டூர் போவது என்பது போலில்லாமல் ஊராட்சி, நாட்டு ஆட்சி ஆகியவற்றின் ஸபைக்காரர்கள் அவ்வப் போது மட்டும் கூடி, பேச்சு வேலையே முக்யமாய் நடத்தி மேல் மட்டங்களில் மட்டுமே ஸூபர்வைஸ் செய்கிறது போலத்தான் பணி செய்கிறார்களென்பது வாஸ்தவம். அதனால் மற்ற சிப்பந்திகளைப்போல இவர்களை தினசர்யையால் ஐம்பத்தைந்து அறுபது வயஸிலேயே ஆட்டங் கண்டு போகக்கூடியவர்களென்று வைத்து ரிடையர் செய்ய வேண்டியதில்லைதான். ஆனாலும் "டெய்லி ரூடீன்" (தினசரி அலுவல்) எப்படியிருந்தாலும், அகத்தோடு இருந்து ஓய்வெடுத்துக் கொள்பவரானாலுங்கூட, எழுபது வயஸுக்கு மேல் விருத்தாப்யக் கோளாறுகள் ஒருவருக்கு தலைதூக்குவதுதான் பொது இயல்பு என்பதைக் கவனித்தால், சட்ட ஸபை, மற்ற பொது ஸபைகளிலுள்ளவர்களுக்குக்கூட வயஸுக்கு மேல் வரம்பு வைக்க ந்யாயமுண்டுதான்.

மூதறிஞர்களின் ஆலோசனைக் குழு

நல்ல விருத்தாப்யத்திலும் புத்தி தீக்ஷ்ணம் குறையாமல் யோசனைகள் சொல்லக்கூடியவர்கள் இருக்கிறார்களென்றால், அவர்களது புத்தி தேசத்துக்கு ப்ரயோஜனப்படும்படியாக ஒரு அட்வைஸரி கவுன்ஸில் (ஆலோசனை ஸபை) அமைத்துக்

Koviloor Digital Library

கொள்ளலாம். கவுன்ஸில் என்றதால் அவர்கள் எல்லாரும் ஒரே ஸமயத்தில் ஒரு இடத்தில் கூடி ஸெஷன்ஸ் நடத்தி விவாதிக்க வேண்டுமென்பதுகூட இல்லை. இந்தப் பெரிய தேசத்தில் ஒரு மூலையிலிருந்து இன்னொன்றுக்குப் போய் இம் மாதிரிக் கூட்டங்களில் கலந்து கொள்ளக்கூட அவர்களுக்கு அசக்தமாயிருக்கலாம். சட்டஸபைக்காரர்கள் ஒவ்வொரு ஸெஷனிலும் கூடிப் பல நாள் விவாதிக்க வேண்டும் என்றிருப்பதைப் போலவும் இல்லாமல், எப்போது அந்தப் பெரியவர்களின் யோசனை தேவை என்று தோன்றுகிறதோ அப்போது ராஜாங்கமே அவர்களுக்கு எழுதிக்கேட்டோ, ஆளனுப்பியோ அவர்களுடைய ஆலோசனைகளைப் பெற்றுப் பரிசீலிக்கலாம்—கமிஷன், டெலிகேஷன் என்று போட்டுப் பலரை விசாரித்து அபிப்ராயங்கள் பெறுவதுபோல். கவர்மென்ட் கேட்டால்தான் அவர்கள் யோசனை தெரிவிக்கலாமென்றில்லாமல் அவர்களுக்காகவே எப்போது எதைப் பற்றி ஏதாவது யோசனை தெரிவிக்கலாமென்று தோன்றினாலும் அதைத் தெரிவித்துக்கொள்ள இடம் கொடுத்து, அந்த யோசனையைப் பரிசீலனை செய்யலாம்.

இப்படிப்பட்ட நல்ல வ்ருத்தர்களான பெரியவர்கள் பல கட்சிகளிலும் இருப்பார்கள்; ஒரு கட்சியிலும் சேராதவர்களாகவும் இருப்பார்கள். கட்சிகளை வைத்தே ஆட்சி முறையை நிர்ணயிப்பதாக இருக்கும் நம்முடைய குடியரசு வந்தபின்* இம்மாதிரி தேசம் முழுதும் உள்ள நல்ல அநுபவஸ்தர்களான மூதறிஞர்களை—'மூதறிஞர்' என்பது தான் இப்படிப்பட்டவர்களைக் குறிக்கும் அழகான வார்த்தை—மூதறிஞர்களைக் கொண்ட கவுன்ஸிலை நடுநிலைமையுடன், ப்ரெஜுடிஸ்கள் இல்லாமல் அமைத்து நடத்துவது எந்த அளவுக்கு ஸாத்யமென்று தெரியவில்லை.

தற்போதைக்கு அரசியல் கட்சிக் கண்ணோட்டமில்லாமல் நிதி விஷயம் நன்றாகத் தெரிந்தவர்கள்,

---

* இப்பகுதி 1950 ஜனவரி 26-ல் குடியரசு ப்ரகடனமாகு முன்பே அருளப்பட்டது.

Koviloor Digital Library

சட்ட விஷயம் நன்ருகத் தெரிந்தவர்கள், ஆகியோரை மந்த்ரி ஸபையில் வைத்துக் கொள்ள நேருவுக்கு அபிப்ராயமிருந்தாலும் போகப் போக எப்படியாகுமோ? கட்சிகளின் பெயரில் ஒரு எலெக்ஷன் நடந்துவிட்டால், அதுவும் இப்போது உத்தேசித்துள்ளபடி வயஸு வந்த அத்தனை பேருக்கும் வயஸு வருவதைத் தவிர வேறெந்த தகுதியும் வேண்டியதில்லை என்று வைத்து வோட்டுரிமை கொடுத்து பார்ட்டி அடிப்படையில் ஒரு எலெக்ஷன் நடத்திவிட்டால் அப்புறம் கட்சி வேற்றுமைகளைப் பாராட்டாமலும், எந்தக் கட்சியிலும் சேராமல் உள்ளவர்களை மதித்தும், நல்ல மூதறிஞர்களாக உள்ள எவருக்கும் ராஜாங்கத்தில் இடம் தருவது நடைமுறைக்கு வருமா என்று கொஞ்சம் யோசிக்க வேண்டியதாக இருக்கிறது.

வயஸுக்குமேல் வரம்பு பற்றி ஆரம்பித்தது வரம்பில்லாமல் எங்கெங்கேயோ போய்க் கொண்டிருக்கிருற் போலிருக்கிறது!

ஆதிக்கத்தை நிரந்தரமாக்கிக் கொள்ளாதிருக்க

உத்தரமேரூர் சாஸனப்படி மேல் வரம்பு வைத்ததில் இன்னொரு ஸாரமான அம்சமும் இருக்கிறது. ஒருத்தர் ஆரம்பகாலத்தில் ஏதோ த்யாகம் கீகம் செய்தோ, அல்லது மிக உயர்ந்ததான ஒரு திட்டத்தைப் போட்டோ, இயக்கத்தை நடத்தியோ ஜனங்களிடம் ப்ராபல்யம் பெற்றுவிட்டால் அப்புறம் ஸாமான்ய மக்களுக்கு அவர்களிடம் ஏற்பட்டுவிடுகிற பற்றினுல்—இதை பக்தி அல்லது மோஹம் என்றே சொல்லிவிடலாம்; இப்படிப்பட்ட மோஹத்தினுல்—பிற்பாடு அவர்கள் என்ன செய்தாலும் அது ஸரி என்றே 'ஆமாம் பூசாரி' போட ஆரம்பித்து விடுகிருர்கள். தலைவர்கள் தப்பாகப் போனுலும் அதைப் பார்க்காமலே இருக்கிருர்கள். விஷயம் தெரிந்தவர்கள் தப்பை எடுத்துக் காட்டிக் கண்டித்தாலும் பொதுஜனங்கள் ஆதரிக்காமல்

Koviloor Digital Library

தங்கள் தலைவர் வைத்ததே சட்டம் என்று கூத்தாடுகிறார்கள். அந்தத் தலைவர்களும் தங்களை வலுவாக ஸ்தாபித்துக் கொள்வதற்காகச் செல்வாக்குப் பெற்ற பலபேரை வளைத்துப் போட்டுக்கொண்டு 'க்ரூப்'கள் உண்டாக்கிக் கொள்கிறார்கள். இந்தத் தலைவர்கள் உச்சியில் இருக்கும்வரை தாங்கள் அநேக ஸௌகர்யங்களையும் சலுகைகளையும் பெறலாமென்பதால் 'க்ரூப்'பிலுள்ள உபதலைவர்களும் அந்தத் தலைமை தளராமலிருப்பதற்காக என்ன வேண்டுமானாலும் செய்ய முற்படுகிறார்கள். இப்படிப்பட்ட ஒரு தலைவர் அதிகார ஸ்தானத்தைப் பிடித்துவிட்டாரென்றால் அப்புறம் அவரை இறக்குவது என்பது முடியாமலே போகும். அவர்களாக விட்டால்தான் உண்டு, இல்லாவிட்டால் உயிரைவிட்டால்தான் உண்டு என்னும்படியாக எண்பது, தொண்ணூறு வயஸுவரைகூடத் தங்களது ஆதிக்ய சக்தியால் அதிகார ஸ்தானங்களைப் பிடித்து வைத்துக்கொண்டு தங்கள் மனம் போனபடி செய்த தலைவர்கள் எல்லா தேசங்களிலும் உண்டு. இப்படி நேராமல் தடுக்க உத்தரமேரூர் சாஸனம் இரண்டு விதத்தில் வழி வகுத்திருக்கிறது.

ஒன்று, வருஷா வருஷம் இம்மாதிரி ஸபை மெம்பர்களைத் தேர்ந்தெடுப்பதென்று வைத்து, ஒரு வருஷம் தேர்ந்தெடுக்கப்பட்டவர் அடுத்த மூன்று வருஷங்கள் தேர்தலுக்கு நிற்க முடியாது என்று விதி செய்திருப்பது.

ஸபையின் அநேக கார்யங்களைக் கவனிக்கும் அநேகக் கமிட்டிகளில் ஒன்றில் ஒவ்வொரு ஸபை மெம்பருக்கும் பொறுப்பு கொடுத்திருக்கும். ஸபையில் பேசி விவாதிப்பது தவிர மெம்பருக்கு பதவி அல்லது உத்யோகம் மாதிரியிருப்பது இந்தக் கமிட்டிப் பொறுப்பு. (இதைப் பற்றி வேறு சில விஷயங்கள் அப்புறம் சொல்கிறேன். இங்கே எவரொருவரும் தன்னைத் தலைவரென்று அசைக்க முடியாமல் நிலைநாட்டிக் கொள்கிற பொதுநல விரோதமான போக்கைப் பற்றி மட்டுமே சொல்ல வந்தேன்.) 'இந்தப்

Koviloor Digital Library

பதவி அல்லது அதிகார ஸ்தானத்தில் ஒருவரும் ஒரு வருஷத்துக்கு மேலே ஒட்டிக்கொண்டு வேர் விட முடியாது; ஒரு வருஷம் பதவி வஹித்தால் அப்புறம் மூன்று மடங்கு காலம் அதிலிருந்து விலகி இருக்கவேண்டும்' என்று வைக்கிறபோது ஒருவருக்கு ப்ராபல்யத்தால் ஜனங்களிடையே ஏற்படுகிற ஆகர்ஷண மோஹமும், ஆதிக்ய சக்தியால் தன்னை மேலும் மேலும் ஆழமாக நிலைநாட்டிக் கொள்கிற வாய்ப்பும் வெகுவாகக் குறைக்கப்பட்டுவிடுகின்றன.

தனி மனிதரின் தலைமை சாச்வதமாகி விடாமல் தடுப்பதற்குச் செய்த இரண்டாவது ஏற்பாடுதான், எத்தனை பெரியவராஞலும் எழுபது வயஸுக்குமேல் எவரும் ஸபை மெம்பராக இருப்பதற்கில்லை என்று வைத்தது.

"பழையன கழிதலும், புதியன புகுதலும்" என்றபடி ஒரு கட்டத்தில் முன்தலைமுறையினர் பின்தலைமுறையினருக்கு இடம் தர வழி செய்வது வயஸுக்கு மேல் லிமிட் வைத்திருப்பதுதான். கீழ் லிமிட் எதற்கென்றல் அநுபவமே இல்லாத ரொம்பவும் இளந்தலைமுறை பொது நிர்வாஹத்தில் புகுந்து அவஸரக் கோலமாய் எதையும் செய்துவிடக் கூடாதே என்பதற்காக.

கல்வித் தகுதி

வயஸு நிர்ணயம் சாஸனத்தின் ஸபை அங்கத்தினருக்கு விதித்த மூன்றுவது யோக்யதாம்சம். நாலாவது யோக்யதாம்சம் கல்வி பற்றியது. ஸபை அங்கத்தினராகத் தேர்ந்தெடுக்கப்படுபவர் நல்ல படிப்பாளியாக இருக்கவேண்டும் என்று விதி செய்திருக்கிறது. அந்தக் காலத்தில் படிப்பு என்றல் முக்யமாக சாஸ்த்ரப் படிப்புதான்.

எல்லாம் சாஸ்த்ரந்தான்—டான்ஸை பரத சாஸ்த்ரம் என்கிறேம், ஸயன்ஸை விஞ்ஞான சாஸ்த்ரம் என்கிறர்கள். ஆஞலும் பழையநாள் கல்வித்திட்டத்தில் சாஸ்த்ரம் என்றல் முதலில் ஆத்மாவைப் பற்றிய, பரமாத்மாவைப் பற்றிய வைதிகமான சாஸ்த்ரங்கள்தான்: அப்புறம் அதற்குள்ளேயே

Koviloor Digital Library

ஸூசனையாக வருகிற நன்னெறி, நல்வழிக்கோட்பாடுகளை விவரித்து விஸ்தாரமாக விதிகள் வகுத்து எழுதிய தர்ம சாஸ்த்ரம், நீதி சாஸ்த்ரம் முதலியன; அதற்கப்புறம் காவ்யம், ஜாகரஃபி, ஹிஸ்டரி, கணிதம், ரஸாயன சாஸ்த்ரம் (என்கிற கெமிஸ்ட்ரி) பௌதிக சாஸ்த்ரம் (என்கிற ஃபிஸிக்ஸ்) இத்யாதிகள்—அறுபத்துநாலு கலைகள் என்பதில் எல்லா ஸயன்ஸ், ஆர்ட்ஸ் விஷயங்களும் வந்துவிடும். அத்தனையிலும் முக்யம் வைதிக வாழ்க்கை முறையையும் ஆசார அநுஷ்டானத்தையும் சொல்லும் சாஸ்த்ரம். எத்தனை சாஸ்த்ரங்களிருந்தாலும் "சாஸ்த்ரிகள்" என்று அந்த ஒரு சாஸ்த்ரம் அறிந்தவரைத்தானே சொல்கிறோம்? இப்போது கல்வி முறைக்கு அடியோடு ஸம்பந்தமில்லாததாக, பொது ஜனங்களை "முன்னேற்றும்" கல்விக்கு முட்டுக்கட்டையாக இருப்பதென்றே விரோத பாவத்துடன் கருதப்படுவதாக, இருக்கின்ற வேத தர்ம ஸமயாசாரந்தான் அன்றைய கல்வி முறைக்கு அச்சாக, ஆணி வேராக இருந்தது. இப்படிப் பட்ட கல்வியில் தேர்ச்சி பெற்றவரே ஊர் ஸபைத் தேர்தலுக்கு அபேக்ஷகராக இருக்கமுடியும் என்று விதி செய்திருக்கிறது.

ப்ராம்மணரை மட்டும் குறிப்பதாகாது

அபேக்ஷகர் நல்ல வைதிகக் கல்வி பெற்றவராயிருக்க வேண்டும்; சாஸன வாசகப்படி "வேதத்திலும் சாஸ்திரத்திலும் நிபுணரென்னப்பட்டிருப்பார்"—ஆக இருக்கவேண்டுமென்பதைப் பார்த்தால், ப்ராம்மணருக்கு மாத்திரம் தான் அபேக்ஷா உரிமையா என்று தோன்றலாம். 'அப்படியானல் ஊர்ஸபை நிர்வாஹமே ப்ராம்மணர்களிடம்தான் போகுமென்றல்லவா ஆகிறது? எல்லா வர்க்கங்களுக்கும் ப்ரதிநிதித்வம் தரும் ஜனநாயகத்துக்கு இது எதிரானதல்லவா?' என்று கேட்கலாம்.

க்ராம மஹா ஸபை எல்லா ஜாதியாருக்கும் இடம் கொடுத்தது என்பதைப் பற்றிக் கொஞ்சங்கூட ஸந்தேஹப்

Koviloor Digital Library

படவேண்டாம். க்ராமத்தின் முப்பது வார்ட்களில் ஒவ்வொன்றுக்கும் ஒரு ப்ரதிநிதி வீதம் முப்பது பேரைத் தேர்ந்தெடுத்து அவர்களிடம்தான் ஸபை ஒப்புவிக்கப் பட்டது என்பது சாஸனத்திலிருந்து ஸ்பஷ்டமாகத் தெரிகிறது. அந்தக் காலத்தில் எல்லா ஜாதியாரும் கலந்து வஸித்ததென்பது கிடையாது. க்ராமத்தின் ஒவ்வொரு பகுதியில் மட்டும், ஒரு தெரு அல்லது சில தெருக்களில்தான் ஒவ்வொரு ஜாதியாரும் தனித்தனியாக இருந்துகொண்டிருப்பார்கள். அக்ரஹாரத்தில் மட்டுந்தான் ப்ராம்மணர்கள் இருப்பார்கள். சேணியர் தெரு, கருமார் தெரு, சாணார் தெரு என்று இப்படியே ஒவ்வொரு ஜாதியார் மாத்திரம் ஒவ்வொரு பகுதியில் வாழ்ந்ததைக் காட்டும் பெயர்கள் இன்றைக்கும் அநேக ஊர்களில் இருப்பதைப் பார்க்கிறோம். முப்பது குடும்பில் (குடும்புதான் வார்ட்) முப்பது அக்ரஹாரம் இருந்தே இருக்காது. ஒரு க்ராமத்தில் ஒரு அக்ரஹாரம்தான் இருந்திருக்கும். ரொம்ப ப்ராம்மண ஸங்கியையில் உயர்ந்த பெரிய அக்ரஹாரமென்றாலும்கூட அது நாலைந்து குடும்புகளுக்கு மேல் பரப்புக்கொண்டதாக இருந்திருக்காது. ஆகையால் ஒரு குடும்புக்கு ஒரு ப்ரதிநிதி என்ற முறைப்படி நாலைந்து ப்ராம்மணர்களுக்கு மேல் ஸபையில் மெம்பர்ஷிப் பெற்றிருப்பதற்கில்லை. மற்ற பெருவாரியான மெம்பர்கள், மற்ற ஜாதியினரைக் கொண்ட ஏனைய குடும்புகளிலிருந்தே தேர்ந்தெடுக்கப் பட்டிருப்பார்கள்— அவர்கள் அந்த வெவ்வேறு ஜாதியினராகத்தான் இருந்திருக்க முடியும்.

ஸொத்து குறித்த ஷரத்தில் 'ஒரு வேதம் வல்லானாய், நாலு பாஷ்யத்திலும் ஒரு பாஷ்யம் வக்காணித்தறிவா'னுயுள்ள ப்ராம்மணனை மட்டும் தனியாகப் பிரித்து, 'ரிலாக்ஸேஷன்' கொடுத்திருப்பதாலேயே மற்ற ஜாதியினருக்கும் எலெக்ட் ஆக உரிமை உண்டு என்று நிச்சயப் பட்டு விடுகிறதே! 'வேத சாஸ்த்ர நிபுணர்' என்பது ப்ராம்மணனைக் குறிப்பதானால், ஒரு வேதமும் ஒரு பாஷ்யமும் படிக்காத எந்த ப்ராம்மணனையுமே 'நிபுணர்' என்று

Koviloor Digital Library

சொல்ல முடியாதாகையால், இப்படிப்பட்டவனைப் பிரித்துச் சொல்ல இடமே உண்டாகாது.

ஆகையால், இங்கே வேத சாஸ்த்ரத்தில் நைபுண்யம் (நிபுணத்தன்மை) என்று சொல்வது வேதத்தை நேரே படித் தறிந்து அத்யயனம் செய்வதைக் குறிப்பதல்ல; வேத - சாஸ்த்ரக் கருத்துக்களை நன்கு அறிந்திருப்பதே இங்கு குறிப் பிடப்படுவது என்று ஊஹித்துக் கொள்ளலாம். எல்லா ஜாதியிலும் இப்படிப்பட்டவர்கள் நிறைய இருந்தார்கள். அப்பர், சேக்கிழார், நம்மாழ்வாரைவிடப் பெரிய உதாரணம் வேண்டாம்.

படிப்பாளிகளாக இல்லாமலும் மஹா புத்திமான்களாக யாராவது இருக்கலாமாயினும், இது எக்ஸெப்ஷனே தவிர (அபூர்வமான விலக்கே தவிர) ஜெனரல் ரூல் இல்லை (பொது விதி இல்லை) என்பதால்தான் கல்வித் தகுதி வைத்தார்கள். எதையும் சான்ஸுக்கு விட்டுவிடக்கூடாது, உறுதியாக நிர்தாரணம் பண்ணித்தர வேண்டுமென்பதுதான் அபிப்ராயம்.

நம்முடைய கான்ஸ்டிட்யுவென்ட் அஸெம்ப்ளிக்கே (அரசியல் நிர்ணய ஸபைக்கே) அக்ராஸனராக இருக்கும் ராஜேந்த்ர ப்ரஸாதும் அபேக்ஷகர்களுக்கு இப்படிப்பட்ட (கல்வித்) தகுதி இருக்கவேண்டுமென்று நினைத்து, அதை வெளியிட்டுச் சொன்னவர்தான்.

பேரே சட்ட ஸபை. அதாவது அதன் முக்ய வேலை அநேக சட்டங்களைப் போடுவது. இந்தச் சட்டங்களைக் குறித்த பாயின்ட்களை விசாரித்துத் தீர்ப்புச் செய்கிற ஜட்ஜ்கள், அவற்றை விவாதிக்கிற வக்கீல்கள் ஆகியோருக்கெல்லாம் கல்வியறிவு இருந்தே தீர வேண்டுமென்று விதித்திருக்கிறது. அப்படியிருக்க, சட்டத்தையே செய்கிறவர்களுக்கு அதன் இம்ப்ளிகேஷன்கள் (உட்கிடைகள்), அதனால் ஏற்படக்கூடிய ஸாதக பாதகங்கள் ஆகியவற்றை அறிவதற்கான பொதுக் கல்வி அறிவு இருக்கவேண்டும் என்று எதிர்பார்ப்பது ந்யாயந்தானே?

Koviloor Digital Library

அதோடு, ஏதோ ஓரளவுக்கு மட்டுமே, சில துறைகளில் மட்டுமே பொது ஸமூஹ வாழ்க்கையில் ராஜாங்கம் ப்ரவேசிப்பது என்றில்லாமல், அதாவது உள்நாட்டிலும் வெளி நாட்டிலிருந்தும் சண்டை சச்சரவு வராமல் ரக்ஷிப்பது, ரயில்வே—தபால் முதலான பொது ஸௌக்யங் களைச் செய்து தருவது முதலான விஷயங்களில் மட்டுமில் லாமல் ராஜாங்கமானது Welfare State என்ற பெயரில் பொது ஸமூஹ வாழ்க்கை, தனி மனித வாழ்க்கை ஆகிய வற்றின் ஸகல துறைகளிலும் ப்ரவேசித்துச் சட்டங்களைச் செய்கிறபோது, இவற்றிலெல்லாம் basic knowledge (பொதுப்படையான அறிவு) பெறக்கூடிய அளவுக்குப் படிப்பறிவு இருந்தால்தானே தேவலை? இந்த மாதிரி ராஜேந்த்ர ப்ரஸாத் ஏதாவது சொன்னால்—'ஹிண்டு கோட் பில்' விஷயமாகக்கூட விவாஹரத்து முதலான சிலவற்றை அவர் ஆக்ஷேபித்துச் சொன்னார்—உடனே நேரு, இந்தச் சீர்திருத்தமெல்லாம் பண்ணவிட்டால் தன்னுடைய அரசாங்கத்திடமே கான்ஸ்டிட்யுவென்ட் அஸெம்ப்ளிக்கு 'கான்ஃபிடன்ஸ்' (நம்பிக்கை) இல்லை என்று சொல்கிற தாகத்தான் அர்த்தமாகும் என்று சொல்லி, ராஜிநாமா பண்ணுவதுபோல பயமுறுத்தி பயமுறுத்தியே பில்கள் பாஸ் ஆகும்படிப் பண்ணுவது வழக்கமாயிருப்பதைப் பார்க்கிறோம்.

இந்தப் புதுக்கதை இருக்கட்டும்: பழைய கதையைப் பார்க்கலாம். அடுத்த யோக்யதாம்சத்துக்குப் போகலாம்.

உயிர்நிலை

உத்தரமேரூர் சாஸனத்திலுள்ள எல்லா clause-க்கும் (ஷரத்துக்களுக்கும்) உயிர்நிலை அபேக்ஷகருக்கு அர்த்த சுத்தியும் ஆத்ம சுத்தியும் இருக்கவேண்டும் என்பதுதான். இந்த சுத்தியாலும், இது தருகிற தர்மசக்தியாலும் தீரத் தாலுந்தான், மெகஸ்தனிஸின் காலத்திலிருந்து நம் தேசத் தைப் பற்றி எழுதி வைத்துவிட்டுப் போயிருக்கிற வெளி

Koviloor Digital Library

நாட்டாரெல்லாம் இந்தியநாட்டைத் தலைக்குமேல் தூக்கி வைத்துக் கொண்டு கொண்டாடியிருப்பது.

தேர்ந்தெடுக்கப்பட வேண்டிய அபேக்ஷகர்கள் அர்த்த சுத்தியோடும் ஆத்ம சுத்தியோடும் இருக்கவேண்டுமென்பதோடு, தேர்ந்தெடுக்கப்பட்டு ஸபை மெம்பர் ஆன பிற்பாடும் அவர்கள் இந்த சுத்தத்தைக் காப்பாற்றிக் கொள்ளும்படிக் கண்டிப்பு செய்து விதி வகுத்திருக்கிறார்கள். தப்பினால் மெம்பர்ஷிப் போய்விடும். மறுபடி தேர்தலில் அவர்கள் இடம்பெற முடியாது. அவர்கள் மட்டுமில்லாமல் அவர்களைச் சேர்ந்தவர்களுந்தான்! இந்த விஷயத்துக்கு அப்புறம் வருகிறேன்.

தற்போது பஹிரங்கமாகக் குற்றவாளி என்று நிரூபணமானவரைத் தவிர எவரும் அபேக்ஷகராக நின்று ஒரு பொது சபை (நகரஸபையோ, சட்ட ஸபையோ, பார்லிமெண்டோ எதுவோ ஒன்றில்) அங்கத்தினராகிவிட முடியும். புத்தி சாதுர்யத்தால் கோர்ட்டுக்கு வராமலே இப்போது நடக்கிற மறைமுகக் குற்றங்களுக்கோ எல்லையே இல்லை. பெரும்பாலான குற்றங்களை நிரூபிக்க முடியாமல் benefit of doubt (குற்றவாளிதானா என்பதில் கொஞ்சம் ஸந்தேஹமிருந்தால்கூட ஒருவனை விட்டுவிட வேண்டும் என்பதாக ஸந்தேஹத்தின் ஸாதகமான பலனை) வழக்குக்கு ஆளாகியிருப்பவனுக்குக் கொடுத்து விடுவதில், பெரிய பெரிய தப்புக்கள்கூட ஸாமர்த்யமாகப் பண்ணிவிட்டு ஸாக்ஷியம் போதவில்லை என்று தப்பிவிட முடிகிறது. பொலிடிகலாக, அன்டர் - க்ரௌண்டாகப் போய் அராஜகமாக ரயிலைக் கவிழ்ப்பது, தண்டவாளத்தைப் பிடுங்குவது முதலானவற்றைச் செய்தாலும் அவை குற்றமாக வருவதே இல்லை. ஸிவில் ஸைடிலும் அப்படியே பாலிடிக்ஸின் அடிப்படையில் ஸரியாகக் கணக்குக் காட்டாமல் வசூல் செய்வது, சலுகை காட்டி ஆதாயம் ("கையூட்டு" என்றேனே அது) பெறுவது ஆகியன குற்றமாக வராமலே வெகு கெட்டிக்காரத்தனமாகச் செய்யப்படுகின்றன.

Koviloor Digital Library

ஸர்வஜன அசுக்திக்கு ஹேது

இது—அதாவது தேர்ந்தெடுக்கப்பட வேண்டிய அபேக்ஷகரின் அர்த்த சுத்தி பற்றிய விஷயம்—ஒரு பக்கம் இருக்கட்டும். பழங்காலத்தில் எதிர்பார்த்தேயிருக்க முடியாதபடி, ஸர்வஜன அடிப்படையில் ப்ரஜைகள் அத்தனைபேரின் அர்த்த, ஆத்ம சுத்திகள் கெட்டுப் போவதற்கும் வழிசெய்து கொடுக்கும்படியாக இப்போது தேர்தல் முறையைச் செய்திருக்கிறதே என்பதை நினைத்தால்தான் மிகவும் கவலையாகவும் வேதனையாகவும் இருக்கிறது. வயஸு வந்தவர்களுக்கெல்லாம் வோட்டுரிமை என்று பண்ணியிருப்பதில் இதுவரை சுத்தியோடு இருந்துவரும் எத்தனையோ கோடி ஜனங்களை அர்த்தத்தினால் (பணத்தினால்) அசுத்தி செய்து, அதனால் அவர்களுடைய ஆத்மாவையும் அசுத்தமாக்கிவிடப் போகிறார்களே என்று பயமாயிருக்கிறது.

இதுவரை எழுத்தறிவில்லாவிட்டாலும், ஏழையாயிருந்தாலும் நம்முடைய பொது ஜனங்கள் லஞ்சம் கொடுக்கவே பயந்து வந்திருக்கிறார்கள்; அந்தப் பொது ஜனங்களுக்கும் லஞ்சம் கொடுத்து, அதை அவர்கள் வாங்கிக் கொள்வதென்பதற்கோ இதுவரை ப்ரமேயமே ஏற்பட்டதில்லை.

ஸமூஹ வாழ்வின் ஸகல அம்சங்களிலும் ஸர்க்கார் ப்ரவேசிக்கும் **Welfare State** கொள்கையைப் பின்பற்றிக் கொண்டு, 'அதை நடத்தவிருப்பவர்களுக்கு வயஸு தவிர எந்த யோக்யதாம்சமும் வேண்டாம்; இவர்களைத் தேர்ந்தெடுப்பவர்களுக்கும் அந்த ஒரு யோக்யதாம்சம் போதும்' என்று வைத்திருப்பதாலேயே பயம் பிடித்துக்கொள்கிறது.

இரண்டு விதமான பயம். ஒன்று—தாங்கள் சலுகை, சாய்கால் பெறுவதற்காக அபேக்ஷகர்கள் வெற்றிபெற்று மெம்பராகி விட்டபின் வோட்டர்கள் லஞ்சம் கொடுக்க முற்பட்டு இந்த தேசத்துக்கே களங்கமுண்டாக்கி விடுவார்

Koviloor Digital Library

களோ என்ற பயம்தான். ஆனல் இப்படி லஞ்சம் கொடுக்கக் கூடியவர்கள் பொதுஜனங்களில் அரைக்கால்வாசியோ, அதற்கும் குறைவாகவோதான் இருக்கக்கூடும். இதுவே மஹத்தான தப்பு என்ருல், இதையும்விட மஹா பெரிய தோஷம் ஏற்பட இப்போது இடம் செய்திருக்கிறது. இது இரண்டாவது பயம். என்னவென்ருல்:

ஜனத்தொகையில் அரைக்கால்வாசி போக பாக்கி முழுதும் ஏழை எளியவர்களாகவே உள்ள நம் நாட்டில் இவர்கள் அத்தனை பேருக்கும் அபேக்ஷகர்கள் காசைக் கண்ணில் காட்டி வோட் வாங்க இடமேற்படுத்தித் தந்திருப் பதைத்தான் சொல்கிறேன். இதை நினைத்தால், 'புண்ய பூமி' என்று இதுவரை போற்றப்பட்டு வந்த நம் நாட்டின் கதி என்ன ஆகுமோ என்று கதிகலங்கும்படியாக இருக் கிறது. Adult franchise என்று கொண்டு வந்திருப்பதன் விளைவாகப் பணத்தைக் காட்டி நம்முடைய ஏழைப் பொது ஜனங்களை லஞ்சம் வாங்கும்படிப் பண்ணுவதில் கட்சியோடு கட்சி போட்டி போடப் போகிறதே என்று நிரம்பவும் விசாரமாக இருக்கிறது.

இப்பேர்ப்பட்ட பணபலம் பெறவேண்டுமென்ருல் எல்லாக் கட்சிகளுமே தப்புவழியில் போனல்தான் முடியும். அதாவது "லீடர்ஷிப்" கெட்டுப் போகவேண்டி யதுதான். அதைவிடவும் பொது ஜனத்தைப் பற்றியே ரொம்பக் கவலையாக உள்ளது. காசு வாங்கிக் கொண்டு வோட் போடுவது என்பதாக ஜனங்கள் ஒரு தப்புக்கு இடம் கொடுத்துவிட்டால், அது பழகிப்போய், மேலும் மேலும் தப்புப் பண்ணுவதில் குளிர் விட்டுவிடும். பொதுவாக நல்ல குணமுடைய நம் ஜனங்கள் லஞ்சம் வாங்கிக்கொள்ளும் ஒரு தோஷத்துக்கு ஆளாகிவிட்டால், அப்புறம் எதிரெதிர் கட்சிகளிடமும் வாங்கிக்கொண்டு, ஒன்றுக்கு நாமம் போட்டு அஸத்யம் என்ற பெரிய தோஷத்துக்கும் ஆளாகி விடக்கூடும். எங்கேயோ ஒரு ஆபீஸருக்கு லஞ்சம், ப்யூனுக்கு 'டிப்' என்றில்லாமல் தேசம் முழுக்க wholesale

Koviloor Digital Library

—ஆக இப்படி அதர்மமான லஞ்சம், அஸத்யம் ஆகியவற்றைக் கொண்டு வந்துவிட்டு, இது 'புண்யபூமி' என்பதையே மாற்றிவிடுவதற்கா ஜனநாயகம் என்றுகூட துக்கமாக வருகிறது.

நான் பாலிடிக்ஸ் பேசப்படாதுதான். ஆனால் பாலிடிக்ஸ் தர்மத்திலே வந்து முட்டி மோதி, நம்முடைய ஜனங்களின் நல்ல பண்புகளையெல்லாம் அடித்துக்கொண்டு போய்விடுமோ என்ற நிலை ஏற்படும்போது, தர்ம பீடங்களாகவே மடங்கள் ஏற்படுத்தப்பட்டிருக்கிறதால், எப்படி வாயை மூடிக்கொண்டிருப்பது?

அடைத்துவைத்த ஜலம், திறந்து விட்டவுடன் ஒரே வேகமாகப் பிய்த்துக்கொண்டு கிளம்புவதுபோல், வெகு கால வெள்ளைக்கார ஆட்சிக்குப் பின் இப்போது ஸ்வதந்த்ரம் என்று கிடைத்திருக்கும்போது எல்லோரும் நிதானமில்லாமல், கட்டுப்பாடு இல்லாமல், வ்யவஸ்தையில்லாமல் கிளம்புவதற்கு ஆஸ்பதம் ஏற்பட்டிருக்கிறது. இம்மாதிரி ஸமயத்தில் அபேக்ஷகருக்கும் யோக்யதாம்சம் வேண்டாம், வோட்டுப் போடுகிறவனுக்கும் வேண்டாம் என்று பண்ணிணுல் நாம் மனஸால் கற்பனைக்கூடச் செய்து பார்க்க முடியாதபடி கட்சி ப்ரதிகட்சிகளும், லஞ்சமும், த்வேஷமும், மோசமும், பொய்யுந்தான் எலெக்ஷன் என்ற பெயரில் ஊரை இரண்டுபடுத்தப் போகிறதோ என்றே எனக்குத் தோன்றுகிறது. 'உலகத்திலேயே பெரிய ஜனநாயகம்' என்று பெருமை காட்டுவதற்காக தர்மத்திலே சிறுமை அடைந்துவிட்டால் அப்புறம் நம்முடைய ஜனநாயக ஜாஜ்வல்ய வேஷம் ப்ராணன் போன உடம்புக்கு அலங்காரம் செய்கிற மாதிரிதான்!

ஸொத்து, படிப்பு முதலான யோக்யதாம்சங்கள் இல்லாவிட்டாலுங்கூட இவற்றுக்கு மேலான ஆத்மசுத்தி உள்ள நம் ஜனங்கள் இப்போது செய்யும் ஏற்பாட்டின்கீழ் அபேக்ஷகர்களாகவும் வோட்டர்களாகவும் ஆகிறபோது அசுத்தமான அர்த்தத்தால் கெட்டுப்போய்த் தங்களுடைய

Koviloor Digital Library

ஆத்ம சுத்தத்தை இழக்கும்படி ஆகுமோ என்பதுதான் என்னுடைய பெரிய கவலை. ஸர்வஜனங்களின் அர்த்த அசுத்திக்கும் ஆத்ம அசுத்திக்குமா ஒரு ஜனநாயகம்?

சோழ சாஸனத்தின் ஐந்தாவது clause-ல் சொல்லும் அர்த்த—ஆத்ம சுத்தியானது நாட்டு நிர்வாஹத்தில் நாம் கவலைப்படும்படியான பெரிய மாசு, "பொல்யூஷன்", ஏற்படாமல் காப்பாற்றிக் கொடுக்கிறது. 'பணவிஷயத்தில் முறைமீறிப் பண்ணவே மாட்டான்' என்பதாக அர்த்த சுத்தத்தைப்பற்றி நிச்சயமாக ஊரால் மதிக்கப்படு பவனைத்தான் அபேக்ஷகனாக ஒப்புக்கொள்வார்கள். ஒருத் தனைப்பற்றி ஏதாவது கொஞ்சம் ஸந்தேஹம், கொஞ்சம் "கசமுச"ப் பேச்சு இருந்தால் அப்படிப்பட்டவன் தேர்தல் அபேக்ஷை பெறவே முடியாது.

ஆத்ம சுத்தம்

இந்தக் காலத்தில் சில பேரைப்பற்றிக் கேள்விப்படு கிறோம்—பணவிஷயத்தில் ரொம்பவும் ந்யாயமாயிருப்பவர், கணக்குகளில் ரொம்பவும் கறார் என்று. ஆனாலும் இப்படிப் பட்டவர்களுடைய ஆல்-ரௌண்ட் காரக்டரை (எல்லா அம்சங்களிலும் அவர்களுடைய நடவடிக்கைகளை)ப் பார்த் தால் அவற்றில் சிலதில் த்ருப்தி இல்லாமலும் பல பேருடை யது இருக்கிறது. ஒன்று இருந்தால் ஒன்று இல்லாமலிருக் கிறது. படிப்பு, வயஸு, கார்யத்திறமை எல்லாம் சேர்ந்து, நடத்தையிலும் எல்லா அம்சங்களிலும் சுத்தமாக இருக் கிறார்களா என்று பார்த்தால் எங்கேயாவது இடறுகிறது. நாமும் பரவாயில்லை; அஞ்சுக்கு ரெண்டு பழுதில்லாட்டா பாதகமில்லை' என்று இவர்களிடம் நாட்டு நிர்வாஹத்தை ஒப்புவிக்கிறோம். ஆனால் 'ஹ்யூமன் நேச்சர்' (மநுஷ்ய இயற்கை) போகிற போக்கில், இப்படிக் கலந்தாங்கட்டி களாக இருக்கிறவர்களுக்கு ஒரு பதவி, ஸ்தானம் என்பது கிடைத்தபிறகு, ஐந்துக்கு இரண்டு என்பது ஒன்று, அரை, கால், ஸைஃபர் என்று சரிந்துகொண்டே போகிறது. இதனால்தான், அர்த்த சுத்தத்தை மட்டும் சொல்லாமல்,

Koviloor Digital Library

ஆனுலும் அதுதான் பொது நிர்வாஹத்தில் மிகவும் முக்ய மான விஷயமாதலால், அதைப் பிரித்து முதலிடம் கொடுத்துச் சொல்லி, அதோடுகூட "ஆத்மசுத்தம்" என்ப தாக ஒருவனுடைய ஆல் - ரௌண்ட் காரக்டரும் பழுதில் லாமல் பூர்ணமாயிருக்க வேண்டுமென்று விதியில் சேர்த் திருக்கிறுர்கள்.

அந்தக் காலத்தில் ஆஸ்திக்யம், சாஸ்த்ராபிமானம், தெய்வத்திடம் பயபக்தி, அடக்கம், கட்டுப்பாடு முதலிய எல்லாமே பொதுவாக ஜன ஸமூஹத்தில் ஆழமாகப் பரவி யிருந்ததால் மக்களின் காரக்டர் - லெவல் மிகவும் உயர்வா யிருந்தது. இன்றுபோல் தப்பு வழிகளில் இழுக்கிற அநேகக் கவர்ச்சிகளும் அப்போது கிடையாது. எனவே சல்லடை போட்டுத் தேடித்தான் கண்டுபிடிக்கவேண்டுமென்றில்லா மல் அங்கேயும் ஒரு சிலர் பூர்ணமாக ஆத்ம சுத்தமுடைய வர்கள் என்னும்படியாக இருந்துகொண்டிருந்தார்கள். இப்படிப்பட்டவர்கள்தான் பொது நிர்வாஹத்துக்கு வரலாம், வரமுடியும் என்று ஐந்தாவது clause (ஷரத்து) நிர்ணயித்துவிடுகிறது.

பிற்பாடும் அசுத்தி ஏற்படாதிருக்க

ஒரு வருஷம் ஸபை மெம்பராயிருந்தவன் மூன்று வருஷத்துக்கு மறுபடி அபேக்ஷை பெறமுடியாது; ஏற் கெனவே மெம்பராயிருந்தவனின் உறவுக்காரர்களுக்குத் தேர்தலில் நிற்க தகுதி இல்லை என்று கூறுவதான சோழ சாஸனத்தின் ஆறுவது, ஏழாவது clause-களும் குறிப்பாக ஐந்தில் சொன்ன அர்த்த - ஆத்ம சுத்திகளை ரக்ஷித்துக் கொடுப்பதில் கருத்துக் கொண்டவையே. இப்போது சுத்தராகத் தெரிகிறவர்களை எலெக்ட் பண்ணிவிட்டால் மட்டும் போதாது; வெறுமே ஐடியலிஸம் பேசாமல், இந்த சுத்தர்களும் ஸந்தர்ப்ப நெரிசலில் இனிமேல் அசுத்தராகக் கூடிய ஹேதுக்கள் இருக்கின்றன என்பதைக் கவனித்துத் தான், அந்த ஹேதுக்களை இல்லாமல் செய்துவிடவேண்டு

Koviloor Digital Library

மென்றே இந்த இரண்டு ஷரத்துக்களும் போட்டிருக்கிறார்கள்.

இதில் முதலாவது, ஒரு வருஷம் மெம்பராயிருப்பவன் அப்புறம் மூன்று வருஷத்துக்கு மெம்பராக இருக்கமுடியாது என்று பண்ணிவிடுகிறது. அந்தக் காலத்தில் இந்த க்ராம மஹாஸபைகளுக்கு வருஷத்துக்கு ஒரு முறை தேர்தல் நடந்தது. இம்மாதிரி ஒரு தேர்தலில் ஜயித்தவன் அடுத்த மூன்று வருஷங்களும் தேர்ந்தெடுக்கப்பட முடியாது. ஏன்? பல 'டெர்ம்'கள் பதவி வஹித்தால் ஒருத்தனுடைய செல்வாக்கு மிதமிஞ்சிப் போகும்; தான் செய்த தப்புக்கள் வெளிப்படாமல் மூடி மறைக்க நிறைய அவகாசம் கிடைத்து விடும்; தனக்கு ஆதாயமான விதங்களில் கார்யத்தைக் கொண்டு போவது, தனக்கு வேண்டப்பட்டவர்களுக்குச் சலுகை காட்டுவது, வேண்டாதவர்களுக்கு ஏதாவது ஹிம்ஸை தந்துகொண்டேபோய் அவர்களை இருந்த இடம் தெரியாமல் செய்வது என்றெல்லாம் ஏற்பட்டுவிடும். அதனால்தான் அதிகார ஸ்தானத்தில் எவனொருவனும் ஆணிவேர் சல்லிவேர் விட்டுக்கொள்வது பற்றி நினைக்கவே இடம் கொடாமல், "ஒரு வருஷம் டெர்ம் ஆச்சா? மூணு வருஷத்துக்கு மூட்டையைக் கட்டிக்கொண்டு போய்ச்சேர்" என்று விதி செய்திருப்பது.

ஐந்து வருஷப் பதவிக்காலம்

இப்போது ஐந்து வருஷத்துக்கொரு முறை ஜெனரல் எலெக்ஷன் (பொதுத் தேர்தல்) என்று ஏற்படுத்தி இருக்கிறார்கள். ஐந்து வருஷம் என்பது ஒருத்தன் நன்றாக முளைவிட, வேர்விட அவகாசம் தருகிற 'டெர்ம்' என்றே தோன்றுகிறது. ஆனாலும் ஒரு ஊரின் நிர்வாஹமாயில்லாமல், ஒரு பெரிய மகாணத்தினுடையவும், இந்தியா தேசம் முழுவதுடையவுமே ஆட்சியைக் கவனிக்கிற ஸபைகளைக் குறித்து இந்த ஐந்து வருஷ "டெர்ம்" என்பதை கவனிக்க வேண்டும். இப்படி மாகாண, தேசிய ஸ்கேலில், அதோடு ஊர் ஸபை போல ஏதோ சில மக்களின் சில ஸௌகர்யங்

Koviloor Digital Library

களை மட்டும் குறித்ததாயில்லாமல், தேச ஜனங்கள் ஸகலருடைய ஜீவாதார விஷயங்கள் எல்லாவற்றிலுமே சட்ட திட்டங்கள் செய்யவேண்டியிருக்கும்போது, அவற்றுக்கான தீர்க்காலோசனைகள் செய்து, அவற்றின் கார்ய க்ரமம் பிடிபட்டு, பலனும் ஓரளவுக்காவது தெரியவேண்டுமென்றால் ஐந்து வருஷ 'டெர்ம்' ஸரிதான் என்றே தோன்றுகிறது.

இதற்கு ஆதரவாக இன்னொரு பாயின்ட்கூட (இருக்கிறது). ப்ரதி வருஷமும் தேர்தல் இல்லாமல், ஐந்து வருஷத்துக்கு ஒரு முறை என்பதால், வயஸு வந்தவர்களுக்கெல்லாம் வோட்டு என்பதில் சற்று முன்னே சொன்ன புரட்டுக்கள் வருஷாவருஷம் புதுப்பிக்கப்படுவதற்கில்லாமல் இந்த அதர்ம ப்ரவாஹத்தை ஐந்து வருஷத்துக்கு ஒரு முறையாகத் தள்ளிப்போட்டதாகிறது! தேர்ந்தெடுக்கப்படும் ஒரு சிலர் ஒரு வருஷத்துக்குமேல் அதிகாரத்தில் நீடிப்பதால் ஏற்படக் கூடிய தர்மக்குலைவு, ப்ரதி வருஷமும் தேர்தல் நடத்துவதால் தேர்ந்தெடுப்பவர்களான அத்தனை ஜனங்களுக்கும் ஏற்படக்கூடிய மாசினால் உண்டாகும் தார்மிகச் சீர்குலைவு—என்ற இரண்டில் பின்னதே பெரிய உத்பாதமாகத் தோன்றுகிறது. அதனால் ஐந்து வருஷம் என்பதை ஆக்ஷேபிக்கத் தோன்றவில்லை.

ஆனாலும் இப்படி ஒரு ஐந்து வருஷ 'டெர்ம்' அங்கம் வஹித்தவர் அடுத்த எலெக்ஷனில் நிற்க இடம் தரலாமா என்ற கேள்வி பிறக்கிறது. இதற்கு மேலே இதை நான் "நிரவல்" பண்ணுவதற்கில்லை. எவரொருவரும் தன்னையோ, தன்னைச் சேர்ந்தவர்களையோ அதிகாரத்தில் நிலைநாட்டிக் கொள்ள விடக்கூடாது என்றால் சட்டஸபைகளில் ஒருவரின் பதவிக் காலத்துக்கு ஏதாவது ஒரு எல்லை கட்டினால் தேவலைதான் என்பதற்கு "நிரவல்" அவசியமில்லை.

புது ரத்தம் பிடிக்க

ஒரு வருஷ 'டெர்ம்' ஆனவன் மூன்று வருஷத்துக்கு அங்கம் வஹிப்பதற்கில்லை என்று முன்னோர் செய்த வரை

Koviloor Digital Library

யறையில் நோக்கி நிற்கும் இன்னொரு நல்ல அம்சம்: அவ்வப் போது ப்ரதிநிதிகளை மாற்றி மாற்றி, நிர்வாஹத்தில் புது ரத்தம் பிடிக்கும்படிச் செய்யவேண்டும் என்ற அபிப்ராயத் துக்கு இங்கே மதிப்புத் தரப்படுகிறது. வருஷத்துக்கு ஒரு தரம் தேர்தல் என்றும், ஒரு மெம்பரின் இரண்டு டெர்ம் களுக்கிடையிலே மூன்று வருஷம் gap இருக்கவேண்டும் என்றும் வைத்ததால், இப்படி வருஷா வருஷம் முப்பதுபேர் தேர்ந்தெடுக்கப்படும் முறையின் கீழே ஒரு க்ராமத்தில் நல்ல நடத்தையும், படிப்பும், கார்ய ஸாமர்த்யமும் உள்ள அத்தனை பேருக்குமே ஸபை மெம்பராகிப் பொதுப் பணியில் நேராக ஈடுபட வாய்ப்புக் கிடைத்திருக்கும். இதனால் 'இது நம்முடைய ஸொந்த ஸபை' என்று ஊராருக்கு நல்ல பிடிமானம் ஏற்பட்டிருக்கும். 'யாரோ என்னவோ நடத்தி விட்டுப் போகிறார்கள். நாம் தலையிட்டு என்ன நடக்கப் போகிறது?' என்று பொதுஜனங்கள் ஊராட்சியில் அக்கறை யில்லாமல் விலகி நின்றிருக்கமாட்டார்கள்.

தார்மிக நிர்வாஹத்தின் முதுகெலும்பு

அபேக்ஷகராகப்பட்டவர்கள் "வாரியம் செய்தொழித்த பெருமக்களுக்கு ஆத்ம பந்துக்களல்லாதாராக" இருக்க வேண்டும் என்பது கடைசி ஷரத்து. அதாவது: ஸபை மெம்பர் ஒவ்வொருவரும் ஏதாவது ஒரு கமிட்டியில் அங்கம் வஹிப்பார் என்று சொன்னேனல்லவா? இவர்களைத்தான் வாரியம் செய்தவர் என்பது. எல்லா மெம்பருமே ஏதோ ஒரு விதத்தில் வாரியம் செய்தவர்தான். இந்த வேலையை ஒரு வருஷ "டென்யூரு"க்கு (பதவிக்காலத்துக்கு)ப் பிறகு விட்டுவிட வேண்டுமென்றும், மூன்று வருஷத்துக்கு அப்புறம்தான் மறுபடி எலெக்ட் ஆகி அந்தப் பதவி பெறமுடியுமென்றும் பார்த்தாயிற்று. இம்மாதிரி ஒரு 'டென்யூர்' முடித்தவர்தான் "வாரியம் செய்தொழித்தவர்." இவர் மட்டுந்தான் மறுபடி மூன்று வருஷம் தேர்தல் பெற முடியாதென்றில்லாமல், இவருடைய நெருங்கிய உறவின

Koviloor Digital Library

ரான "ஆத்ம பந்துக்களும்" தேர்தலில் அபேக்ஷகராயிருக்க முடியாது என்பதே ஷரத்தின் அர்த்தம்.

இந்த ஷரத்தைப் பார்க்கிறபோது, "இதென்ன? நேராக 'கான்டிடேட்'டின் (அபேக்ஷகரின்) அர்த்த - ஆத்ம சுத்தங்களைப் பார்ப்பது ஸரிதான். ஆனால் அது போதாதென்று, இது இரண்டும் இருக்கிறவனைக்கூட அவன் ஏற்கெனவே மெம்பராயிருந்தவனின் நெருங்கிய பந்துவா என்று பார்த்து, இந்தச் சுற்றிவளைத்த காரணத்துக்காக டிஸ்க்வாலிஃபை செய்வதென்றால் அதெப்படி ஸரியாகும்?" என்று தோன்றலாம். ஆனால் நன்றாக அறிவைச் செலுத்திப் பார்த்தோமானால் இந்தக் கடைசி ஷரத்தும் தர்மந்யாயமான நிர்வாஹத்துக்கு முதுகெலும்பு மாதிரியாகுமென்று புரியும்.

எப்படியென்றால், முன்னே மெம்பராக இருந்தவர்களின் நெருங்கிய பந்துக்கள் புதிதாக மெம்பரானால், அவர்கள் செய்துவிட்டுப் போன முறைகேடுகளை இவர்கள் நீடிக்கப் பார்ப்பார்கள். அவர்கள் பண்ணின தப்புக்களை இவர்கள் மூடி மழுப்பப் பார்ப்பார்கள். அல்லது அவற்றையே ஸரியானவை என நிலைநாட்டப் பார்ப்பார்கள். ஸந்தர்ப்பத்தை அநுஸரித்து, அவர்கள் முன்னே எடுத்த சில முடிவுகளை இப்போது ரிவைஸ் செய்யத் தேவை இருந்தாலும், அப்படிப் பண்ணினால் அது அவர்களிடம் தப்புக் கண்டுபிடித்துக் காட்டிக் கொடுத்தாற் போலாகும் என்று உறவுப் பாசத்தால் நினைத்து, இதற்காக ஊர் நலனை விட்டுக்கொடுப்பார்கள். மனித இயற்கையில் அநேகமாகப் பெரும்பாலார் இப்படியெல்லாம்தான் பண்ணப்பார்ப்பார்கள். இப்படி முற்காலத்திலிருந்த உறவுக்கார மெம்பர்களுக்காக தற்கால மெம்பர்கள் ஊரை விட்டுக்கொடுப்பது மட்டுமில்லாமல், பிற்காலத்தில் ஸபை மெம்பராக வரக்கூடிய தங்களுடைய ஆத்ம பந்துக்களுக்கு ஆதாயமான திட்டங்களைக் கொண்டு வருவதில் எண்ணம் செலுத்தவும் இடமுண்டு.

Koviloor Digital Library

ராஜபீட விஷயமும் ஊர்ச்சபை விஷயமும்

இதனால்தான் பாரம்பர்ய அதிகாரமென்பது ராஜாவோடு• நிற்கட்டும், ஜனங்கள் ஒரு மைய புருஷனிடம் விச்வாஸத்தில் கட்டுப்பட்டு நிற்க அது அவசியம் என்று வைத்தபோதே, சிறிய அளவில் ஊராட்சி என்று வரும் போது அங்கே உறவு முறையால் எந்தச் சலுகையும் ஏற்பட்டு விட முடியாதபடி ஒரே அடியாய் அடித்துப் போட்டு விட்டார்கள்.

உச்ச லெவலில் மானார்க்கியும் (முடியரசும்), பாரம்பர்ய வாரிசுரிமையும் இருந்தாலும் அது அநேகவிதமான மந்த்ரா லோசனை ஸபைகளுக்குக் கட்டுப்பட்டே நடந்தது. மநு தர்மாதி சாஸ்த்ர நூல்களுக்குக் கட்டுப்பட்டே மந்த்ரா லோசனை ஸபை முடிவுகள் பண்ணும். அடிப்படைச் சட்டம் ராஜா தன்னிஷ்டப்படி போடுவதல்ல. எந்த ராஜா ஆண்டாலும் தர்ம சாஸ்த்ரங்கள், அர்த்த சாஸ்த்ரம், நீதி சாஸ்த்ரம் ஆகியனதான் அடிப்படைச் சட்டம். அதன்மேல் ராஜா இடம், பொருள், ஏவலை அநுஸரித்துப் புது ரூல்கள் கொஞ்சம் போடலாம். அவ்வளவுதான். மேல்நாடுகளில் ராஜா வைத்ததே சட்டம் என்று இருந்ததால்தான், "The king can do no wrong" என்றார்கள். 'ரைட்'டோ 'ராங்'கோ அவர்களுடைய ராஜா எதைப் பண்ணினாலும் அதைச் சட்ட மாக்க முடிந்ததாலேயே அது அவர்களுக்கு 'ரைட்'டாகி விட்டது! 'ராஜா ஊரைச் சூறையாடலாம்; பிறருடைய ஸ்த்ரீகளை க்ரஹிக்கலாம்' என்றுகூட அவனே சட்டம் போட்டுக்கொண்டு விடக்கூடியபடி அவனுக்கு இதில் பூர்ண அதிகாரம் இருந்தது. அப்படி நம் தேசத்தில் இருந்ததே யில்லை. Law-making power (சட்டம் போடும் அதிகாரம்) என்பது நம் ராஜாக்களுக்கு முழுசாக, 'அப்ஸொல்யூட்'டாக கொடுக்கப் படவில்லை. அவனும் சாஸ்த்ரங்களின் சட்டத் துக்குக் கட்டுப்பட்டுத்தான் நடக்கவேண்டும். இல்லா விட்டால் அவன் "ராங்" பண்ணிவிட்டானென்று ராஜ ஸதஸின் பெரியவர்கள் முடிவு செய்து அவனை ஸிம்ஹாஸனத் திலிருந்து இறக்கியும் இருக்கிறார்கள். துன்மார்க்கத்தில்

Koviloor Digital Library

போன அஸமஞ்ஜன் மாதிரியான ராஜகுமாரர்களையும், ராஜாவான பிறகும் யதேச்சாதிகாரமாகத் தன் மனஸூப் படிப் பண்ணின வேனன் போன்றவர்களையும் மந்த்ரா லேசானை ஸபையினர் ஒழித்தே கட்டியிருக்கிறார்கள்.

ஆனால் ஊருக்கு ஊர், ஸபை அங்கத்தினர்களைப் பரீக்ஷிக்க மந்த்ராலோசனை ஸபைகள் வைத்து ஸாத்யப் படுமா? அப்பன் பிள்ளை என்ற பாரம்பர்யம், அல்லது வேறு வித உறவுமுறைகளால் ஒவ்வொரு ஊர் ஸபைகளிலும் இருக்கப்பட்ட ஏராளமான அங்கத்தினருக்குள்ளே பிணைப்பு ஏற்படுமானால் இது ஒவ்வொன்றையும் கவனித்துச் சீர்ப் படுத்திக்கொண்டிருக்க மந்த்ராலோசனை ஸபைகள் அமைத்து மாளாது. அப்புறம் இந்த மந்த்ராலோசனை ஸபை அங்கத்தினர்களுக்குள்ளேயும் இப்படி உறவுமுறைப் பிணைப்பு இருக்கிறதா, அதற்குக் கண்காணிப்பு செய்ய இன்னொரு ஸபை வேண்டுமா என்று அதுபாட்டுக்கு நீண்டு கொண்டே போகும். அதனால்தான் உச்ச லெவலில் ஹெரிடிடரி மானர்க்கி (பாரம்பர்ய முடியரசு) என்று வைத்தபோதிலும் கீழ் லெவலில், ஊராட்சியில், க்ராம ஆட்சியில் இப்படிக் கூடவே கூடாது, அப்பன் - பிள்ளை என்று மட்டுமில்லாமல் மற்ற கிட்டத்து உறவுக்காரர்கள் கூட மெம்பர்களாகத் தேர்ந்தெடுக்கப்பட இடம் தரக் கூடாது என்று விதி செய்திருக்கிறார்கள்.

நீண்டகாலம் அடிமைப்பட்டும், தரித்ரப்பட்டும் இருந்து விட்ட நம் தேசத்தில், இப்போது புதிதாக ஸ்வய அதிகாரம் வந்திருக்கிறபோது, கண்டது காணாத மாதிரிப் பிடுங்கித் தின்ன வேண்டும் என்பதில் ஏற்படக்கூடிய வேகத்தில், பழைய ராஜாக்களும் ஜமீன்தார்களும் எடுபட்டுப் போனாலும், புதுசாக சட்ட ஸபைகளில் இடம்பெறுகிறவர் களில் அவரவரும் தங்கள் தங்கள் பந்துக்களோடு "ஜமீன்தாரி"கள் ஸ்ருஷ்டித்துக் கொள்ளாமலிருக்க, இந்த மாதிரி இப்போதும் ஏதாவது ஷரத்து இருந்தால் தேவலை என்று நினைக்க இடமிருக்கிறது.

Koviloor Digital Library

அந்த நாள் ராஜா விஷயம் மாதிரி இல்லை இந்த நாள் மந்த்ரிகள் முதலானவர்களின் விஷயம். ராஜ குமாரர்களும், ராஜ குடும்பத்திலுள்ள முக்யஸ்தர்களான ராஜ பந்துக் களும் பரம்பரையாக பெரிய பொஸிஷன்களில் இருந்து வந்திருப்பவர்களாகவே இருப்பார்கள். அதற்கேற்ற கல்வி கேள்வி, அந்தஸ்து, வாழ்க்கைச் சூழ்நிலை உள்ளவர்களாக வும் இருப்பார்கள். ஆதலால் புதுசாக ராஜா இவர்களுக்கு ஏதோ பாரபக்ஷம் காட்டித் தூக்கிவிட வேண்டுமென்ப தற்குப் பெரும்பாலும் இடமே இல்லாமலிருந்திருக்கும். இக்கால மந்த்ரிகளின் புத்ரர்கள் பந்துக்கள் ஆகியோர் விஷயத்தில் இப்படிச் சொல்வதற்கில்லை. பொருளாதாரம், ஸமூஹ அந்தஸ்து முதலானவற்றில் ரொம்பவும் ஸாமான்ய மாக இருக்கப்பட்ட ஒருவர் இப்போதைய தேர்தல் முறை யினால் மந்த்ரியாகி திடீரென்று செல்வம், செல்வாக்கு ஆகியவற்றில் பெரிய உயர்வு பெறமுடியும். இப்படிப்பட்ட வர்களின் உறவினர்கள் எப்படியிருப்பார்கள்?

அதோடு 'வெல்ஃபேர் ஸ்டேட்' என்பதாகப் பொதுஜன வாழ்வின் பல துறைகளிலும் ப்ரவேசிப்பதற்குப் புதிதாக ஏற்பாடு வந்திருப்பதால் ஜனங்களிடம், 'இன்னின்ன நல்லது பண்ணுவேன்; அதற்கு ப்ரதியாக இன்னது செய் யணும்' என்று "கையூட்டு" வாங்க அதிக வாய்ப்பு ஏற்பட் டிருக்கிறது. 'இன்ன மாதிரி நீ செய்யாவிட்டால் உன் தொழிலையோ இன்னொன்றையோ கெடுப்பேன்' என்று மிரட்டித் தனக்குக் கட்டுப்பட்டிருக்குமாறு பண்ணவும் இப்போதைய புதிய ஏற்பாட்டில் அதிக இடமிருக்கிறது. எல்லாவற்றுக்கும் மேலாக, பல கட்சிகள் என்று ஏற்பட் டிருப்பதில் உண்டாகிற பரஸ்பரப் போட்டியில் தர்மத்தை விட்டாவது தன்னுடைய கட்சியை எப்படியேனும் நிலைப் படுத்திக் கொள்ளவேண்டும் என்ற எண்ணம் பலபேருக்கு ஏற்படத்தான் செய்யும். கட்சியால் தன்னையும், தன்னால் கட்சியையும் வளர்த்துக்கொள்ள வேண்டியதான நிலையில் கட்சியின் பெயரைக் கொண்டு எங்கெங்கே லாபமடைய

Koviloor Digital Library

முடியுமோ அங்கேயெல்லாம் தன்னோடு நிற்காமல் தன்னுடைய சாய்காலைக்கொண்டு புத்ரர், பந்துக்கள் ஆகியோரையும் உள்ளே நுழையவிடுவது என்று ஆனால் அப்புறம்... சொல்லணுமா? முறைகேட்டுக்கு முடிவேயில்லாமல்தான் ஆகும்! பல் வேறு கட்சிகளிடையே போட்டி என்பது மாத்திரமில்லாமல், ஒவ்வொரு கட்சியிலுமே சாய்காலுள்ள ஒவ்வொருவருக்கும் ஒரு உறவுக்கார கோஷ்டி என்பதாகப் பல—"clique", "faction" என்று கௌரவக் குறைவு த்வனிக்கும்படி சொல்கிறார்களே, அப்படிப்பட்ட பல—தோன்றி, எந்தக் கட்சிக்கும் ஐடியல், ஐடியாலஜி என்பவை போய், "யார் யாரை அமுக்கி முன்னுக்கு வரலாம்? யார் யாரை முழுங்கி ஏப்பம் விடலாம்?" என்ற உள்போட்டியே நித்யப்படி நிலவரமாகிவிடலாம்.

இதையெல்லாம் பார்க்கும்போது மெம்பர்களின் நெருங்கின உறவினர்களுக்கு இடமில்லை என்று உத்தரமேரூர் சாஸனத்தில் தீர்மானம் பண்ணியிருப்பதில் நிரம்பவும் ஸாரமிருப்பதாகத் தெரிகிறது. இப்படியெல்லாம் பார்த்துப் பார்த்து நிர்வாஹத்தில் மாசுபடியாமல் ரக்ஷித்துள்ள அவர்களுடைய தர்ம ந்யாய உணர்ச்சியைப்பற்றி மிகுந்த மதிப்பு ஏற்படுகிறது.

பதவிநீக்கமும் நிரந்தரத் தடையும்

இந்த வருஷம் அங்கம் வஹிக்கும் ஒருவன் மூன்று வருஷத்துக்கு அப்புறம் எலெக்ட் செய்யப்படுவதற்குங்கூட இன்னொரு கட்டுப்பாடு இருக்கிறது. இப்போது பதவிக் காலத்தில் முறைதப்பி நடந்த எவனும் மூன்று வருஷத்துக்கு அப்புறமும்கூட அபேக்ஷகனாக முடியாமல் அது தடுத்து debar செய்கிறது. இவனுடைய தப்பு கண்டுபிடிக்கப்பட்டவுடனேயே இவன் பதவியிலிருந்து விலக்கி வைக்கப்படுவான். அப்புறமும் எலெக்ஷனுக்கு நிரந்தரமாக debar ஆகிவிடுவான். ஏதோ ஒரு வருஷத்தில் மெம்பராயிருப்பவன் ஸரிவரக் கணக்குக் காட்டியிராவிட்டாலோ, தப்புக்

Koviloor Digital Library

கையெழுத்துப் போட்டிருந்தாலோ, வேறே குற்றம் செய்திருந்தாலோ உடனே டிஸ்மிஸ் ஆகி, அப்புறமும் எலெக்ஷனுக்கு டிஸ்க்வாலிஃபை ஆகிவிடுவான் (அபேக்ஷகனாகும் தகுதி இழந்துவிடுவான்).

தகுதி இழக்கும் உறவினர்கள்

பொது நிர்வாஹத்தில் இப்படிப்பட்ட தப்புக்கள் ஏற்படவேகூடாது என்பதில் எவ்வளவு கருத்தாயிருந்திருக்கிறார்களென்பது, தப்புச் செய்த அவனை மட்டுமின்றி, அவனுடைய கீழ்க்கண்ட உறவினர்கள் அத்தனை பேரையும் டிஸ்க்வாலிஃபை செய்திருப்பதிலிருந்து தெரிகிறது. தகப்பனார், பிள்ளை, ஸஹோதரர், மாமனார், மைத்துனர், ஸஹோதரியின் புருஷன், ஸஹோதர ஸஹோதரிகளின் பிள்ளைகள், மாப்பிள்ளை, தகப்பனாருடைய ஸஹோதரர்கள், அவர்களுடைய பிள்ளைகள், அத்தை பிள்ளை, மாமா, மாமா பிள்ளை, தாயாருடைய ஸஹோதரி பிள்ளை—என்றிப்படி, ஒரு மெம்பர் செய்த குற்றத்துக்காக அவனுடைய பந்து வர்க்கம் முழுவதையுமே ஸபை மெம்பர்ஷிப் பெறமுடியாதபடி அடியோடு ஒதுக்கிவிடுவதென்றால், அப்புறம் நிர்வாஹத்தில் தவறு எப்படி நடக்கும்? இந்த உறவுமுறைக்காரர்கள் எல்லோரையுமே "ஆத்மபந்துக்கள்" என்று சாஸனம் விளக்கியிருக்கிறது.

குற்றம் பண்ணினால் அது முதலுக்கே அபேக்ஷை பெற முடியாதபடி ஒருவனை டிஸ்க்வாலிஃபை செய்ததோடு நிற்கவில்லை; முதலில் க்வாலிஃபிகேஷன் பெற்றிருந்தாலும் பதவிக்கு வந்த பிற்பாடு குற்றம் பண்ணினால் அது அவனை பந்து வர்க்கத்தோடு சேர்த்து டிஸ்க்வாலிஃபை செய்து விட்டது—என்கிற அம்சத்தை நன்றாக கவனித்துக்கொள்ள வேண்டும்.

பஞ்சமாபாதகம்

'அர்த்த சுத்தம்', 'ஆத்ம சுத்தம்' என்று சொன்னதோடு சாஸனத்தின் இன்னொரிடத்தில் பஞ்சமாபாதகம்

Koviloor Digital Library

என்கிற ஐந்து பெருங்குற்றங்களில் எதைச் செய்திருப்பவனை யும் அவனுடைய பந்துக்களோடு சேர்த்து டிஸக்வாலிஃபை செய்திருக்கிறது. ப்ரம்மஹத்தி, ஸுராபானம் என்ற கள்குடி, ஸ்வர்ணஸ்தேயம் என்பதான பொன்னைத் திருடுவது, குரு தல்ப கமனம் என்பதாக குரு பத்னியிடம் தப்பான உறவு கொள்வது—ஆகிய இந்த நாலு பெருங் குற்றங்களும், இந்தக் குற்றங்களில் ஒன்றைச் செய்தவனோடு நெருங்கிய தொடர்புகொண்டிருப்பதான ஐந்தாவது குற்றமும் சேர்ந்து 'பஞ்ச மஹா பாதகம்' எனப்படும். 'ப்ரஹ்மஹத்தி' என்பதாக ப்ராம்மணனைக் கொல்வது மட்டுமே இங்கே சொல்லப்பட்டாலும், எந்தக் கொலையுமே ஒரு மஹாபாதகமாகத்தான் கருதப்பட்டு அதைச் செய்தவனை ஸமூஹம் ஒதுக்கிவைத்தது. அதேபோல, ஸ்வர்ணத்தைத் திருடுவது மாத்திரமில்லாமல் எல்லாவிதத் திருட்டும், குரு பத்னியிடம் மாத்திரமின்றி எந்த ஸ்த்ரீ யிடமுமே தப்பாக நடப்பதும் மஹாபாதகங்களாகக் கருதப் பட்டன. கொலை, திருட்டு, வ்யபசாரம் ஆகியவற்றிலேயே ரொம்பவும் கேவலமானவை எவை என்பதைக் காட்டத் தான், ஸத்தானவனும் தன்னைக் காப்பாற்றிக்கொள்வதில் கூட சக்தியோ மனஸோ இல்லாமலிருப்பவனுமான ஒரு ப்ராம்மணனைச் கொல்வது; லக்ஷ்மியின் ஸாந்நித்யம் உள்ளதான ஸ்வர்ணத்தைத் திருடுவது; தாயாருக்கு ஸமமான குரு பத்னியிடம் மனோவிகாரம் கொள்வது இவற்றைக் குறிப்பாகச் சொன்னது. இவற்றுக்குமேல் கொடூரமான—heinous என்கிற—குற்றமில்லை என்று அர்த்தம்.

பஞ்சமாபாதகனைப் போலவே 'ஆததாயி' என்றும் ஒன்று உண்டு.* அர்ஜுனன்கூட (கீதையின் ஆரம்பத்தில்) கௌர

---

* தீ வைப்பவன், விஷம் வைப்பவன், நிராயுதபாணியை ஆயுதத்தால் கொல்பவன், பொருளை அபஹரிப்பவன், பூமியை அபஹரிப்பவன், பிறன் மனைவியை அபஹரிப்பவன் ஆகிய அறுவரும் 'ஆததாயி' களாவர்.

Koviloor Digital Library

வர்களை 'ஆததாயி'க்கள் என்று சொல்லி மஹா க்ரூரமான அந்த ஆததாயிக்களைக் கொல்வதால்கூடத் தனக்குப் பாபமே வந்துசேரும் என்று பயப்பட்டுச் சொல்லியிருக்கிறான். ஸத்ப்ராம்மணனை மட்டுமில்லாமல் மஹா பாபியையுங்கூடக் கொலை செய்வது பாபம்தான் என்று இங்கே தெரிகிறது.

இப்படிப்பட்ட பாதகங்களைச் செய்தவர்களும், அவர்களுடைய பந்துக்கள் எல்லோரும் ஊர் ஸபை அங்கத்தினராவதற்கு அருஹதை இழந்துவிடுவார்கள்.

சாஸ்த்ரமும் சட்டமும்

அந்தக் காலத்தில் சாஸ்த்ரப்படி எந்த தோஷங்கள் 'பாபங்கள்' என்று சொல்லப்பட்டனவோ அவையேதான் ராஜாங்கத்தின் சட்டப்படி 'குற்றங்கள்' என்று தீர்மானிக்கப்பட்டன. தற்போது சாஸ்த்ரம் சொல்லும் தோஷங்கள் 'லா'வில் குற்றமாக வரவில்லை. இன்னம் சொல்லப்போனால், சாஸ்த்ரத்தில் தோஷம், பாபம் என்று எதுகளைப் பண்ணக் கூடாது என்று சொல்லியிருக்கின்றனவோ அவற்றைப் பண்ணுவதுதான் முன்னேற்றத்துக்கு அறிகுறி என்றும், சாஸ்த்ரப்படி செய்வதேதான் 'லாப்'படி குற்றம் என்றுங்கூட செய்துவருகிறார்கள். இதில் பெரிய high jump, long jump செய்துகாட்டிப் பெருமைப்படுவதற்கே ஸ்வதந்த்ரம் ஏற்பட்டபின் ஸாக்ஷாத் நம்மவர்களால் குடியரசுக்கான அரசியல் நிர்ணயச் சட்டம் "முன்னேற்ற", "முற்போக்கு" நோக்கில் செய்யப்பட்டுவருகிறது பாதிவ்ரத்யத்துக்கு (கற்பு நோன்புக்கு) ஹானியாக விவாஹரத்து; வதூ (மணப்பெண்) பரிசுத்தத்துக்கு ஹானியாக வயஸுவந்த அப்புறம்தான் கல்யாணம்; அவிபக்த குடும்ப (கூட்டுக் குடும்ப)த்துக்கு ஹானியாகப் பெண்ணுக்கு ஸொத்துரிமை; வைதிக ஆசார ஸம்ரக்ஷணத்துக்கு ஹானியாகக் கலப்பு போஜனம், கலப்பு மணம்—என்றெல்லாம் சாஸ்த்ரப்படி மஹாபாபமானவற்றை யெல்லாம் முன்னேற்றம், முற்

Koviloor Digital Library

போக்கு என்ற பெயர்களில் விசேஷமாக ஆதரித்து வ்ருத்தி செய்யத் துணிந்திருக்கிறார்கள்.

பழைய நாளில் ரிஷிகள் தந்த தர்ம சாஸ்த்ரமும், ராஜாக்களின் சட்டமுறையும் ஒன்றாகவே இருந்தன. "சட்டப்படியும், சாஸ்த்ரப்படியும்' என்று இப்போது இரண்டாகப் பிரித்து, "உம்" போட்டுச் சொல்கிறமாதிரிச் சொல்ல அப்போது அவச்யமில்லாமலிருந்தது. சாஸ்த்ரவிதியே சட்ட விதியாயிருந்தது. சாஸ்த்ரம் எதை தோஷமென்று சொல்கிறதோ அது சட்டப்படி குற்றம். ஒரு தோஷத்தைப் போக்கிக்கொள்ள சாஸ்த்ரத்தில் ப்ராயச்சித்தம் சொல்லியிருந்தால் அங்கே அப்படி ப்ராயச்சித்தம் செய்து கொண்டவனைப் பெரும்பாலும் ராஜாங்க நீதி ஸ்தலமும் குற்றவாளி அல்ல என்றே கருதிற்று. ப்ராயச்சித்தம் செய்துகொண்டதில் பாபம் போயிற்று என்பதைச் சட்டமும் ஒப்புக்கொண்டதென்றாலும், சில பாபங்களை, அதாவது குற்றங்களை, செய்தவன் அந்தப் பழக்கத்தில் மறுபடி அதே மாதிரி பண்ணிவிடக்கூடும் என்பதையும் சட்டம் கவனித்தது. சாஸ்த்ரத்திலுங்கூட ப்ராயச்சித்தமானது ஒருவன் இதற்குமுன் செய்த பாபத்தை கழுவுவதாகத்தான் சொல்லியிருக்கிறதே தவிர இனிமேல் அப்படிப் பண்ணாமல் அவனைத் தடுப்பதாகச் சொல்லவில்லை. ஆகையால், மறுபடி எந்தமாதிரிக் குற்றங்களைச் செய்யும்படிவிட்டால் ரொம்பவும் ஸமூஹ விரோதமாக, ஸமூஹத்துக்கு அபாயமாக ஆகுமோ, அப்படிப்பட்ட பாபங்களைப் பண்ணினவன் சாஸ்த்ர ரீதியாய் ப்ராயச்சித்தம் பண்ணிக்கொண்டிருந்தால்கூட ஸமூஹ நலனை முன்னிட்டு அவனைச் சட்டப்படி தண்டித்து, மறுபடி அவன் அப்படிச் செய்யாதபடி கட்டுப்படுத்தவேண்டுமென்று கருதப்பட்டது.

இந்த முறையில்தான் அந்த சோழர்கால சாஸனத்திலும், ப்ராயச்சித்தம் செய்துகொண்டால் சில குற்றங்களிலிருந்து விடுபட்டதாகக் கருதி மெம்பர்ஷிப் தரலாமென்றும்; வேறு சில குற்றங்களுக்கோ ப்ராயச்சித்தம் செய்துகொண்

Koviloor Digital Library

டாலும் மன்னித்துவிடாமல், ஆயுஸ் பூராவும் அப்படிப் பட்டவர்களை ஸபையிலிருந்து பஹிஷ்காரம் செய்யவேண்டு மென்றும் ஒரு பாகுபாடு செய்திருக்கிறது. இப்படி ப்ராயச் சித்தம் பண்ணிக்கொண்டாலும் ஸபையில் ஸ்தானத்துக்கு அருஹதைப் பெறாதவர் யார் யாரென்றால்: மாம்ஸம் சாப்பிட்ட ப்ராமணர்கள், மேலே சொன்ன மஹா பாதகங்களைப் பண்ணினவர்கள்—குறிப்பாக, வியபசார தோஷமுள்ளவர்கள், கிராம விரோதியாக இருக்கிற வர்கள்.

பொய்க் கணக்குக் காட்டினவர்களும் பொய் ஸாக்ஷி சொன்னவர்களும் அவர்களுடைய பந்துக்கள் ஸஹிதம் 'டிஸ்க்வாலிஃபை ஆகிவிடுவார்கள். எந்த விதத்தில் தப்பான பண ஆதாயம் பெற்றிருந்தாலும் இதே கதிதான். தப்பான முறையில் எப்படி ஸொத்து சேர்த்திருந்தாலும் அது லஞ்சமாகவே கருதப்பட்டது. "எப்பேர்ப்பட்ட கையூட்டும் கொண்டான்" என்று பண வ்யவஹாரத்தில் சுத்தமில்லாதவனை அந்தக் கல்வெட்டில் சொல்லியிருக் கிறது.

தகுதித் தடைகள் சில

அந்தக் காலத்தில் ரொம்பவும் நீசத்தனமான ஒரு கார்யத்தைப் பண்ணினவனைக் கரும்புள்ளி செம்புள்ளி குத்திக் கழுதைமேல் ஏற்றி ஊர்வலம் விடுவது வழக்கம். தாங்கமுடியாத அவமானத்தில் தப்பு நன்றாக மனஸில்பட்டு மறுபடி அம்மாதிரி அவன் பண்ணாமலிருப்பதற்குத்தான் இப்படிச் செய்தார்கள்.

குற்றவாளிகளையும் கௌரவமாக நடத்தவேண்டும், ஜெயிலை 'ட்ராவலர்'ஸ் பங்களா' மாதிரி ஸௌக்யமாக்கித் தரவேண்டும் என்று ஆரம்பித்தால் இந்த அன் - எம்ப்ளாய் மென்ட் யுகத்தில் எவருக்கும் அங்கேதான் போய் ஸுகவாஸம் பண்ணலாமே என்று தூண்டிவிடுகிறமாதிரி ஆகிறது! மநுஷ்யாபிமானம் என்பது தப்புப் பண்ணுபவன்

Koviloor Digital Library

நல்ல மநுஷ்யனுக முன்னேறுவதைக் கெடுப்பதற்கே தூண்டு கோலாகிவிடக்கூடாது; எதிலும் பாத்ரமறிந்து செய்ய வேண்டும் என்பதற்காகச் சொல்கிறேன்.

பழைய நாளில் கழுதைமேல் ஏறினவனுக்கும், ஃபோர்ஜரி பண்ணினவனுக்கும் ஸபையில் இடமில்லை. இதை, "கழுதையேறினரையும் கூட லேகை செய்தானையும் குடவோலை எழுதிப் புக இடம் பெருததாகவும்" என்று சாஸனத்தில் சொல்லியிருக்கிறது. "கூடலேகை" என்ருல் பொய்க் கையெழுத்து. "லேகை" என்ருல் எழுதப்படுவது. "கூடம்" என்ருல் பொய், மோசடி; fraud என்பது. கூடலேகை என்பது ஃபோர்ஜரி.

வேட்பாளர் இல்லாத,
வாக்காளர் இல்லாத தேர்தல்!

இவர்கள் "ஸபைத்தேர்தலுக்குத் தகுதி பெருதவர்கள்" என்பதைத்தான் "குடவோலை எழுதிப் புக இடம் பெருத" வர்கள் என்று சொல்லியிருக்க வேண்டுமென்று எவரும் ஊஹித்துவிடலாம். ஆனுல் தேர்தலை ஏன் "குடவோலை எழுதிப் புகுவது" என்று சொல்லியிருக்கிறது என்பது மட்டும் ஊஹிக்க முடியாததாக இருக்கிறது. "குடவோலை" என்ன, அது "எழுதிப் புகுவது" என்ன என்று புரியவில்லை.

புரியாத இதையும் இரண்டாவது சிலா சாஸனம் தெளிவாகப் புரியவைக்கிறது.

இப்போதுதான் அந்த நாள் எலெக்ஷனில் இருந்த ரொம்பப் புதுமையான (அதாவது நமக்குப் புதுமையாகத் தோன்றுவதான), முக்யமான விஷயத்தைப் பற்றிச் சொல்லப்போகிறேன். இதுவரை தேர்தல் விதிகளைப் பற்றிச் சொன்னேன். இனிமேல்தான் அந்தத் தேர்தல் எப்படி நடந்தது என்று அதன் 'ப்ரொஸீஜரை'ச் சொல்லப்போகிறேன். இதிலே நூதனமான விஷயமிருக்கிறது!

Koviloor Digital Library

அபேக்ஷகர்கள் என்பதாகச் சிலபேர் போட்டிபோட்டுக் கொண்டு தேர்தலுக்கு நின்று வோட் கேட்பதென்பதே அப்போது கிடையாது! வோட்டர்கள் என்று யாரும் போய் வோட் போட்டதும் கிடையாது! "இதென்ன இப்படிச் சொல்கிறுரே! இத்தனை நாழி முடியரசுக் காலத்திலேயே ஜனநாயகத் தேர்தல், மெம்பரின் யோக்யதாம்சம் என்றெல்லாம் நீட்டி முழக்கிவிட்டுக் கடைசியில் கான்டிடேட் (அபேக்ஷகர்) என்று யாரும் கன்டெஸ்டே பண்ணவில்லை (போட்டியிடவேயில்லை) என்கிறுரே! வோட்டிங் என்றே ஒன்று நடக்கவில்லை என்கிறுரே!" என்று தோன்றலாம். "கத்தியில்லாமல் ரத்தமில்லாமல் யுத்தம் என்கிறமாதிரி அபேக்ஷகர், வோட்டர் இல்லாத தேர்தலா?" என்று ஆச்சர்யப்படலாம்.

பாரம்பர்ய முறையிலில்லாமல் ஜனநாயக முறையில் தகுதி பெற்ற எவராலும் தேர்ந்தெடுக்கப்படும் வகையில் தேர்தல் நடந்தது வாஸ்தவம்; ஸமூஹ நலத்தில் கண்குத்திப் பாம்பாக இருந்து அபேக்ஷகர்களுக்கு ஏகப்பட்ட யோக்யதாம்சங்கள் நிர்ணயித்திருந்ததும் வாஸ்தவம். ஆனாலும் "நான் நிற்கிறேன்" என்று அபேக்ஷாப் பத்திரம் தாக்கல் செய்து எவரொருத்தரும் அபேக்ஷகராகப் போட்டியிடுவதும், ப்ரசாரம் பண்ணுவதும் கிடையாது. அபேக்ஷகர் என்ற ஒருவர் வோட் கேட்டதும் கிடையாது. அதே மாதிரி வோட்டர் என்ற ஒருவர் வோட் போட்டதும் கிடையாது.

பின்னே எப்படித் தேர்தல் நடந்ததென்றுல், சொல்கிறேன். சாஸனத்திலேயே உள்ளதைத்தான் சொல்கிறேன்.

அபேக்ஷகர் யார்?

மநு-மாந்தாதாவின் காலத்திலிருந்து வந்திருக்கிற தர்ம சாஸ்த்ரத்தை அநுஸரித்த யோக்யதைகளையே மநுநீதிச் சோழனின் பரம்பரையினரும் ஊர் நிர்வாஹ அங்கத்தினர்களுக்கு உரியனவாக வைத்துவிட்டார்கள். இவற்றைத்தான்

Koviloor Digital Library

மேலே அயிட்டம் அயிட்டமாகப் பார்த்தோம். இந்தத் தகுதிகள் எல்லாம் உள்ள எவனுனாலும் அவன் நிர்வாஹத்துக்கு வந்தால் ஸரியாகத்தான் நடப்பான். ஒரு க்ராமத்திலுள்ள ஜனங்களிடம், "நான் இப்படியாகப்பட்ட யோக்யதாம்சங்கள் உள்ளவன்" என்று ஒரு தர்மிஷ்டன் சொல்லிக்கொண்டு 'கன்டெஸ்ட்' பண்ணுவிட்டாலும் (தேர்தலில் போட்டியிடாவிட்டாலும்) அவர்களுக்கே தங்களுக்கு மத்தியில் இப்பேர்ப்பட்டவர்கள் யார் யார் விசேஷமாக இருக்கிறார்களென்று தெரியுமல்லவா? "இன்னார் நல்ல யோக்யதை உள்ளவர்; யோக்யர்; படிப்பாளி; குணத்திலும் நல்லவர்; புத்திசாலித்தனம் உள்ளவர்; கார்ய ஸாமர்த்யமும் உள்ளவர்; இவரிடம் நிர்வாஹப் பொறுப்பு தரலாம்" என்று க்ராமத்தின் ஒவ்வோரு பகுதியிலும் ஜனங்கள் சில பேரைப் பற்றி விசேஷமாக நினைப்பார்கள் அல்லவா?

இம்மாதிரிப் பகுதிகளைத் தற்போது 'வார்ட்' என்கிறோம். அக் காலத்தில் 'குடும்பு' என்று சொல்லியிருக்கிறார்கள். தற்போது ஊர் ஸபைகளில் ஒரு வார்டுக்கு ஒரு மெம்பர் என்று தேர்ந்தெடுப்பதைப் போலவே அப்போதும் குடும்புக்கு ஒருவர் என்று தேர்ந்தெடுத்திருக்கிறார்கள். க்ராமத்தை இப்படிப்பட்ட முப்பது குடும்புகளாகப் பிரித்து முப்பது மெம்பர்கள் கொண்ட ஸபையை அமைத்திருக்கிறார்கள்.

மேலே சொன்னவாறு ஜனங்கள் ஸம்மதத்தைப் பெற்ற எவராலும் அவர்களைத் தேர்ந்தெடுக்க அப்போது வகை செய்தார்கள். இது ஜனநாயக அம்சம்தானே? ஜாதியை வைத்தோ, பாரம்பர்யமாகவோ இல்லாமல், அரசன் அல்லது ஒரு அதிகார ஸ்தானத்தின் அப்பாயின்ட்மென்ட் அல்லது நாமிநேஷன் என்றும் இல்லாமல் ஊர் ஸபை மெம்பர்கள் தேர்ந்தெடுக்கப்பட்டார்களென்றால் அது ஜனநாயக தத்வத்தைச் சேர்ந்ததுதான்.

எப்படித் தேர்ந்தெடுத்தார்கள் என்ற 'வைடலா'ன விஷயத்தை இப்போது பார்த்துவிடலாம். 'ராஜாங்க

Koviloor Digital Library

நியமனமும் இல்லை; ஜனங்களில் அனைவருமோ தகுதி பெற்ற சில பேரோ வோட் போட்டுத் தேர்ந்தெடுக்கும் முறையும் இல்லை' என்று மட்டும் சொல்லி ரொம்ப நேரம் உங்களைக் காக்க வைத்துவிட்டேன்.

அப்படியானால் அது என்ன முறை?

மேலே சொன்னபடி ஒவ்வொரு குடும்பிலும் ஜனங்கள் மதிப்பு வைத்திருக்கிற பெரிய மனிதர்கள் யாரென்பது எல்லோருக்கும் தெரிந்துதானே இருக்கும்? இவர்கள் சாஸனத்தில் சொன்னபடி எல்லா யோக்யதாம்சங்களும் பெற்றிருக்கிறார்களா, அதில் டிஸ்க்வாலிஃபை பண்ணுவதாக உள்ள எந்த அம்சமும் இல்லாதவர்களாக இருக்கிறார்களா என்று பரிசீலித்துப் பார்த்து, இந்தத் தகுதிகள் பெற்றிருக்கிற எல்லாரையும் அபேக்ஷகர்கள் என்று வைத்துவிடுவார்கள். இப்படிப்பட்ட அபேக்ஷகர்களுக்குள்தான் ஒவ்வொரு குடும்புக்கும் ஒரு ப்ரதிநிதியைத் தேர்ந்தெடுக்கச் செய்தார்கள்.

ஸெலக்ஷன், எலக்ஷன் பொறுப்பாளர்கள்

"வைத்தார்கள்", "செய்தார்கள்" என்றால், அப்படிப் பண்ணியது யார்? 'க்ராம மஹாஸபை எப்போதும் நடந்து கொண்டுதானே இருக்கும்? அதுதான் இப்படி யோக்யதை பெற்ற அபேக்ஷகர்களையெல்லாம் பொறுக்கி யெடுத்துத் தேர்தல் நடத்தியிருக்கும். அதாவது நடப்பு ஸபை அடுத்த ஸபைத் தேர்தலுக்கு அபேக்ஷகர்களை ஸெலக்ட் செய்திருக்கும்' என்று நினைக்கலாம். ஆனால் உண்மையில் இப்படி நடக்கவில்லை. நடப்பு ஸபை அடுத்த ஸபைக்கான தேர்தலை நடத்துவது என்பதிலேயே பல ஊழல்கள் நடக்க இடமுண்டு. அக்காலத் தேர்தல் விதிப்படி நடப்பு மெம்பர்கள் அடுத்த ஸபைக்கு மெம்பராக முடியாது, அவர்களுடைய பந்துக்களும் மெம்பராக முடியாது என்பது வாஸ்தவந்தானென்றாலும் தங்களுக்கு வேண்டப்பட்ட ஸ்நேஹிதர்கள், பவ்யப்பட்ட

Koviloor Digital Library

வர்கள் ஆகியோரை அடுத்த ஸபையில் அங்கத்தினராகக் கொண்டுவந்து ஸ்வய லாபம் பெறக்கூடுமல்லவா? இதையும் தடுக்கவேண்டுமென்பதில் நம் முன்னோர் முன்னெச்சரிக்கையாக இருந்திருக்கிறார்கள். அதனால் அடுத்த தேர்தலில் இப்போதுள்ள ஸபையினரின் ஸம்பந்தம் இல்லாதபடி ஒரு ஏற்பாடு செய்திருக்கிறார்கள்.

தற்போது நம் குடியரசில் நடத்தவிருக்கும் முறையில் ஒரு ஸந்தேஹம் வரலாம்—அதாவது ஒரு தேர்தல் நடக்கும்போது அதிகாரத்திலுள்ள ராஜாங்கத்தினர் அந்தத் தேர்தலை நடத்துவதிலேயே, மற்ற கட்சிகளுக்கு இல்லாமல் தங்களுக்கு மட்டும் இருக்கிற அதிகார பலம் முதலான 'அட்வான்டேஜ்'களைக் கொண்டு தங்களுக்கு ஸாதகமாக ஏதேனும் பண்ணிக்கொண்டுவிட முடியுமோ என்று தோன்ற இடமிருக்கிறது. கட்சி ஆட்சி என்று ஏற்பட்டு, ஏதோ ஒரு கட்சியின் நிர்வாஹத்தில் அடுத்த தேர்தல் நடக்கிறதென்றால், கொஞ்சம் ஸந்தேஹாஸ்பதமாக ஏதாவது தோன்ற இடமுண்டுதானே?*

இதற்கு இடமே இல்லாதபடி, நடப்பு ஸபை மெம்பராயிருந்து, 'வாரியம்' என்ற பல கமிட்டிகளில் ஏதாவதொன்றில் பதவி வஹிப்பவர்களான இந்த முப்பது பேருமே பதவி விலகிவிடவேண்டும்; அதற்கப்புறம் "தர்ம க்ருத்ய ஸபைகள்" எனப்படுவனவற்றின் பொறுப்பின் கீழேயே, மத்யஸ்தர்களைக் கொண்டு தேர்தல் நடத்தவேண்டும் என்று சாஸனம் விதிக்கிறது.

இந்த தர்ம க்ருதய ஸபைகள் என்பவை என்னவென்றால்—க்ராம மஹாஸபை தவிர, அதன் முப்பது

---

* தேர்தலுக்குச் சில மாதம் முன்பே ஆளும் கட்சி பதவியிலிருந்து விலகி, ஆலோசனைக் குழுவைக் கொண்டு ராஷ்ட்ரபதியே ஆட்சி நடத்தி, அதன் கீழ் தேர்தல் நடந்தால்தான் தூயமையாயிருக்கும் என்ற ஒரு கருத்து குடியரசு பிறந்து பல்லாண்டுகளுக்குப் பின்னர் எழுந்தது. ஆனால் ஸ்ரீசரணர்களோ குடியரசு பிறப்பதற்கு ஓராண்டு முன்பே இத்திசையில் நம் சிந்தனையைச் செலுத்தும் முறையில் கருத்து தெரிவித்திருக்கிறார்கள்.

Koviloor Digital Library

குடும்புப் பிரிவினை தவிர, அவரவரை ஸ்வதர்மப்படி கர்மா செய்விக்கிற பன்னிரண்டு நாட்டாண்மைகளின் கீழ் க்ராமத்தை பன்னிரண்டு சேரிகளாகப் பிரித்திருந்தது. சேரி என்றால் என்னவோ, ஏதோ என்று நினைக்கவேண்டாம். அக்ரஹாரமும் ஒரு சேரிதான். இவற்றுக்கான பன்னிரண்டு நாட்டாண்மைகள்தான் தர்ம க்ருத்ய ஸபைகள் என்று ஊஹம் செய்து சொல்கிறார்கள். இவை ஒன்றுசேர்ந்தே தேர்தல் நடத்தியது. "பன்னிரண்டு சேரியிலும் தர்ம்ம கிருத்தியங் கடைகாணும் வாரியரே மத்தியஸ்தரைக் கொண்டு குறிகூட்டிக் குடுப்பாராகவும்" என்று சாஸனத்தில் இருக்கிறது.

க்ராம மஹாஸபையினர் எல்லாரும் ஒரு வருஷ டேர்ம் முடிந்ததும் வெளியேறிவிடுவார்கள். அப்புறம் மத்யஸ்தர்கள் உதவியோடு அவசியமான காரியங்களுக்காக 'இன்டரிம் அட்மினிஸ்ட்ரேஷன்' (இடைக்கால நிர்வாஹம்) தர்ம க்ருத்ய ஸபைக்காரர்களாலேயே நடத்தப்படும். அடுத்த ஸபைக்கான அபேக்ஷகர்களின் ஸெலக்ஷன், அப்புறம் அதற்கான எலெக்ஷன் ஆகியன இவர்கள் பொறுப்பிலேயே நடக்கும்.

ஒரே ஒரு ஊர் வ்யவஹாரம்தானாதலால் இந்த 'இன்டரீம் பீரியட்' ஒருசில நாட்களாகத்தான் இருக்கும். அதற்குள் ஸெலக்ஷன், எலெக்ஷன் எல்லாம் நடந்துவிடும்.

ஊர் ஸபை என்ற ஒரே body-ன் (அமைப்பின்) கீழ் ஒன்றாகக்கூடிப் பணி செய்த முப்பது பேர் அடுத்த வருஷ ஸபைக்கான அபேக்ஷகர்களை ஸெலக்ட் செய்தால், இவர்கள் தங்களுக்குள் கலந்துகொண்டு தங்களுக்கு ஆதாயம் கிடைக்குமாறும், இப்போது தாங்கள் செய்த தப்பு தண்டாக்கள் அடுத்த ஸபையிலே வெளிவராதவாறும் ஸெலக்ஷனைப் பண்ணிவிடலாம். தனித்தனியாய் வெவ்வேறு ஜாதிகளுக்கென்று அமைந்து, ஒவ்வொன்றும் ஸ்வயேச்சையாய் கார்யம் செய்துகொண்டிருக்கும் பன்னிரண்டு தர்ம

Koviloor Digital Library

க்ருத்ய ஸபைகளைச் சேர்ந்தவர்களைக் கொண்டு ஸெலக்ஷன் செய்யும்போது அவர்கள் தங்களுக்குள் தகிடுதத்தம் எதுவும் பண்ணுவதற்கில்லை. ஒவ்வொரு ஜாதிக்கும் தன்னைப் பற்றியிருந்த தன்மான உணர்ச்சியினால், 'நாம் ஏதாவது முறை பிசகிப் பண்ணினால் மற்ற ஜாதிகளின் நாட்டாண்மைகள் நம்மைப் பற்றி என்ன நினைக்கும்?' என்ற எண்ணம் இந்த நாட்டாண்மை ஒவ்வொன்றுக்கும் இருக்கும். ஆதலால் அவை ஸந்தேஹாஸ்பதமான எந்த யோசனையும் தெரிவிக்கவே முன் வராது.

இதிலே இருக்கும் இன்னொரு ஜனநாயக அம்சம், ஏதோ ஒரு ஜாதியாரின் ஸெலக்ஷனுயில்லாமல் ஸகல ஜாதிகளுக்கும் 'தர்ம க்ருத்யம்' காணும் பன்னிரண்டு சேரிகளையும் கொண்டு ஸெலக்ட் பண்ண வைத்ததாகும்.

அந்த நாட்டாண்மைகளும்கூடத் தாங்களாகவே எல்லாம் செய்வது என்றில்லாமல் மத்யஸ்தர்களைக் கொண்டு பண்ணியது கவனிக்கவேண்டிய அம்சம். இதற்கெல்லாம் மேல் ராஜாங்க அதிகாரிகள் கண்காணிப்புச் செய்திருக்கிறார்களென்பது வேளானையும் பட்டனையும் பற்றி முதலில் சொன்னதிலிருந்து தெரியும். இத்தனை தினுஸுகளில் தேர்தல் தூய்மையை உறுதிப்படுத்தித் தந்திருக்கிறார்கள்!

இப்போது பெரும்பாலும் எவரோ ஒருத்தர் அபேக்ஷகராக நிற்க ஆசைப்பட்டுவிட்டு, அப்புறம் பேருக்கு யாரையோ விட்டு 'நாமினேட்' பண்ணச் சொல்வது, 'ஸெகண்ட்' பண்ணச் சொல்வது என்கிறது போலில்லாமல், எவரொருத்தரும் தானாக அபேக்ஷிக்காமலே க்ராமத்தின் தர்மஸபைகளுடைய நிர்வாஹிகள் ஜனங்களின் அபிப்ராயத்தை அநுஸரித்து அபேக்ஷகர்களை ஸெலக்ட் செய்தார்கள்.

இப்போதுங்கூட மற்ற வேலைகளுக்கு அபேக்ஷகரே மனுப் போடுவது போலில்லாமல் எலெக்ஷனில் மட்டும் அபேக்ஷகர் பேரை வேறே ஒருத்தர் பிரேரணை பண்ண வேண்டும், அதை இன்னொருத்தர் ஆமோதிக்க வேண்டுமென்று இருப்பது,

Koviloor Digital Library

பொதுப்பணிக்கு வருபவன் தானே முந்திரிக்கொட்டை மாதிரி தன்னை ப்ரகடனம் பண்ணிக்கொள்வது அத்தனை அழகல்ல, மற்றவர்கள் அவனை நிற்க வைப்பதுதான் கௌரவம் என்ற எண்ணத்தில்தான். பூர்வத்தில் நிஜமாகவே இப்படி நடந்த ஏற்பாடுதான் இப்போது ஒப்புக்காகவாவது இப்படியொரு நடைமுறை ஏற்பட்டிருப்பதற்குக் காரணமாக இருக்கவேண்டும்.

தேர்தல் நடந்த விதம்

முப்பது குடும்புகளில் ஒவ்வொன்றிலும் ஜனங்களின் பொதுவான மதிப்பீட்டின்படி தகுதிபெற்ற அபேக்ஷகர்களை தர்ம க்ருத்ய ஸபையார் மத்யஸ்தர்களைக் கொண்டு பொறுக்கி எடுத்தபின் அவர்களில் ஒவ்வொருத்தர் பேரையும் ஒரு தனி ஓலையில் எழுதிக்கொள்வார்கள். ஒவ்வொரு குடும்பிலும் பொறுக்கி எடுக்கப்பட்ட அத்தனை அபேக்ஷகர்களின் பேர்களைக் கொண்ட தனித்தனி ஓலைகளும் ஒரு கட்டாகக் கட்டப்படும். அதாவது ஒரு குடும்பின் அபேக்ஷகர்கள் எல்லாருக்குமாகச் சேர்த்து ஒரு கட்டு ஓலை. இப்படி முப்பது கட்டுகள் கட்டி வந்துசேர்ந்த பின் க்ராமத்து மஹா ஸபை கூட்டப்படும். அப்புறம்தான் "குடவோலை எழுதிப் புகுவது" என்பதான தேர்தல் நடக்கும்.

அபேக்ஷகர்கள் என்று பல கட்சிகளின் பேரிலும், ஸ்வயேச்சையாகவும் பலபேர் நின்று, ஒருத்தருக்கொருத்தர் பலத்த போட்டி போட்டுக்கொண்டு, ப்ரசாரம் பண்ணிக்கொண்டு (ப்ரசாரம் என்று வரும்போது அதிலே நிஜமேதான் இருக்கமுடியும் என்று எதிர்பார்க்க முடியாது; எத்தனையோ இல்லாதது பொல்லாததுகளை ஜோடிக்கும்படியாகவும் இருக்கும்—இப்படி ப்ரசாரம் பண்ணி ஊரை இரண்டு படுத்திக்கொண்டு) வாய்ச்சண்டை, அது வலுத்து கைச்சண்டை, இவற்றைவிட ஹானிகரமான லஞ்ச ஊழல்

Koviloor Digital Library

என்றெல்லாம் ஏற்படாமல், பொதுவாகப் பொதுஜன மதிப்பைப் பெற்ற எவரும் எலெக்ட் ஆக வசதியாக அமைந்தது இந்தக் "குடவோலை" முறை.

"ஓலை" என்ன என்று பார்த்தோம்—அதுதான் அபேக்ஷகரின் பேர் எழுதிய அந்தக்காலச் சீட்டு; அபேக்ஷா பத்திரம் மாதிரி என்று தெரிகிறது. அதுவேதான் வோட்டுச் சீட்டு மாதிரியும் என்பது இனிமேலே அந்தக் "குடம்" என்னவென்று நாம் பார்க்கிறபோது தெரியவரும்.

குடம் என்னவென்று பார்ப்போம்.

தேர்தலுக்காக ஊர் ஸபை கூட்டப்படுமென்று சொன்னேனல்லவா? எங்கே கூடுமென்றால் ஈச்வர ஸாக்ஷியாக, பகவானுக்கு பயந்து, தேவாலயங்களின் வெளிமண்டபத்தில் தான்கூடும். அங்கே எல்லோரும் பார்க்க பப்ளிக்காகத் தேர்தல் நடக்கும். குழந்தையிலிருந்து கிழவர்வரை எல்லோரும் அதற்கு வருவார்கள். "ஸபால விருத்தம்" என்று இதை சாஸனத்தில் சொல்லியிருக்கிறது. இதுவும் நிச்சயமாக ஒரு ஜனநாயக அம்சம்தானே? ஊர் நிர்வாஹத்தில் ஊரார் எல்லாருக்கும் "நம்முடையது" என்ற ஸொந்த உணர்ச்சி, ஈடுபாடு உண்டாகவும், இது வழி செய்தது.

ஸபை கூட்டப்படும் இடத்துக்குக் குடும்புக்கு ஒரு கட்டு வீதமான அந்த முப்பது ஓலைக்கட்டுக்களும் கொண்டுவரப்படும். அங்கே மேடை மத்தியிலே குடும்புக்கு ஒரு குடம் வீதம் முப்பது குடம் வைத்திருக்கும். இங்கேதான் "குடவோலை"யின் "குடம்" வருகிறது. இதுதான் வோட்டுப் பெட்டி மாதிரி.

அக்காலத்தில் கோவிலில் பூஜை செய்யும் அர்ச்சகர்கள் ஸகல விதத்திலும் ரொம்ப யோக்யதை வாய்ந்தவர்களாக இருந்தார்கள். இவர்களை "நம்பிமார்" என்று சொல்லியிருக்கிறது. ஊர் ஜனங்கள், ஊர்ப்பெரியவர்கள் எல்லாரும் கூடிய மண்டபத்தில் இந்த நம்பிமார்களுக்கு முக்யமான இடம் கொடுத்து மேடையில் உட்கார்த்திவைத்திருக்கும்.

Koviloor Digital Library

ஜன ப்ரதிநிதிகளை எலெக்ட் செய்யுமிடத்துக்கு ஈசன் ப்ரதி நிதிகளான நம்பிமார் எல்லோரும் தவருமல் வந்து மேற் பார்வையிடவேண்டும். அதாவது அரசியல், ஸமூஹம் முதலான எல்லாவற்றின் கார்யங்களையும் ஈச்வரனுக்குப் பொதுவாக நடத்தினர்.

ரொம்பவும் நேர்மையும் கண்டிப்பும் உள்ளவர்களாக க்ராமத்தில் பெயர் எடுத்தவர்களை மத்யஸ்தர்களாக வைத்துத் தேர்தல் நடக்கும்.

ஒன்றிலிருந்து முப்பதுவரை வரிசையாக ஒவ்வொரு குடும்புக்குமான அங்கத்தினருக்குத் தேர்தல் நடக்கும். முதலில் முதல் குடும்பின் அபேக்ஷகர்களின் பேர்களைக் கொண்ட ஓலைக்கட்டை அப்படியே கட்டுப்பிரிக்காமல் நம்பி மார்களுக்குள் வயஸிலே பெரியவர் அந்தக் குடும்புக்கான குடத்துக்குள் போடுவார். இதுதான் அன்று நடந்த "வோட்டிங்". அதாவது ஜனங்கள் ஒவ்வொருவரும் யாரோ ஒரு நபருக்கு வோட் போடவில்லை. ஆனல் ஜனஸம்மதமான பலருடைய பேரும் கொண்ட கட்டை ரொம்பவும் ஸீனிய ரான அர்ச்சகர் நன்ருகத் தூக்கிக்காட்டிக் குடத்திலே போடுவார் ஸகல ஜனங்களும் பார்க்கப் போடுவார். "மேல் நோக்கி எல்லா ஜனங்களும் காணுமாற்ருல்" என்று சொல்லியிருக்கிறது. இதனல் நிஸ்ஸந்தேஹமான நீதி, ஜனநாயகக் கொள்கை இரண்டும் காப்பாற்றப் படுகிறது.

அப்புறம் அங்கே "ஸபால விருத்தம்" என்றபடி கூடி யிருக்கும் கபடமற்ற குழந்தைகளில் ஒரு சின்னக் குழந்தை யைக் கூப்பிட்டு, மேடைக்கு வரச்செய்து, குடத்துக்குள்ளே கையைவிட்டு ஓலைக்கட்டிலிருந்து ஏதாவதொரு ஓலையை எடுத்து மத்யஸ்தரிடம் கொடுக்கும்படிச் சொல்வார். குழந்தை அப்படியே பண்ணும். இதுதான் 'தேர்தல்' என்ற முக்ய கார்யம். குழந்தை எடுத்துக்கொடுத்த ஓலை யிலுள்ள பேருக்குடையவன் தேர்ந்தெடுக்கப்பட்டுவிடுவான்.

Koviloor Digital Library

அரசியல், ஸமூஹம் எதுவும் தெரியாத, அதனாலேயே இவற்றில் என்னென்ன கபடம் பண்ணலாம், தந்த்ரம் பண்ணலாம் என்றும் தெரியாத குழந்தைதான் மஹாஸபை ப்ரதிநிதியைத் தேர்ந்தெடுத்தது! எந்தத் தரப்பிலும் சேராத அந்தக் குழந்தையின்மூலம் ஆண்டவனின் சித்தமே வெளியாகி, அவனாலேயே ஒருவன் ஸபை மெம்பராக நியமனம் பெறுகிறான் என்ற உசந்த எண்ணத்தில் இப்படிச் செய்தார்கள்.

ஈச்வர ஸம்மதமான தேர்வு

'திருவுள்ளச்சீட்டு' என்று ஒரு வார்த்தை அடிபடுகிறதே, அது சீட்டுப் போட்டு எடுக்கிற விஷயம் பகவத் ப்ரீதியாக, ஈச்வர ஸங்கல்பப்படி அமைந்தது என்ற அர்த்தத்தில்தான் ஏற்பட்டிருக்கிறது. இங்கே சொல்லும் தேர்தலோ கோவிலி லேயே கோவில் பூஜகரே பங்கு கொண்டு நடப்பதோடு, கபடு சூது மோசடிகள் தெரியாததில் தெய்வத்துக்கு ஸமானமான குழந்தையைக் கொண்டு சீட்டு எடுப்பதாக இருக்கிறது. இந்த 'ப்ரஸைடிங் ஆபீஸர்' கொஞ்சங்கூட நடுநிலைமை தப்பிப் பண்ணுவதற்கு இல்லை! ஸரியாகச் சொல்லப்போனால் ஆண்டவனேதான் இங்கே 'ப்ரஸைடிங் ஆபீஸர்'. பால் குடிக்கிற குழந்தைகளின் வாய்வழியாக ஈச்வர சக்தியே வருகிறது என்ற அர்த்தத்தில் பைபிளில் (வாசகம்) வருகிறது. இங்கே குழந்தையின் கைவழியாக அவனுடைய திருவுள்ளம் வெளிவருவதாக நினைத்துத் தேர்தல் ஏற்பட்டிருக்கிறது.

தற்காலத்தில் "மக்கள் தீர்ப்பு மஹேசன் தீர்ப்பு" என்று சொல்கிறார்களென்றால், அந்தக்காலத்தில் ஆலய மண்டபத்தில் ஸமஸ்த ஜனங்களையும் கூட்டி இப்படித் தேர்தல் நடத்தி இதுவே மஹேசன் தந்த தீர்ப்பு என்று வைத்துக்கொண்டு, அந்த மஹேசன் தீர்ப்பே மக்கள் தீர்ப்பு என்று ஸந்தோஷப் பட்டிருக்கிறார்கள்.

Koviloor Digital Library

ஒளிவு மறைவுக்கு இடமில்லை

குழந்தை தற்செயலாக—அதாவது தற்செயல் என்று நமக்குத் தோன்றுகிற தெய்வச் செயலாக—குடத்திலிருந்து எடுக்கிற ஓலையை மத்யஸ்தரிடம் கொடுக்கும். அதை அவர் விரிக்கப்பட்ட விரல்களுடன் கூடின கையால் வாங்கி அதிலுள்ள பேரை வாசிப்பார். "அக் குடுத்த வோலை மத்தியஸ்தன் வாங்கும்போது அஞ்சு விரலும் அகல வைத்து உள்ளங்கையிலே ஏற்றுக்கொள்வானாகவும், அவ்வேற்று வாங்கின வோலை வாசிப்பானாகவும்" என்று நிஸ்ஸந்தேஹமான ந்யாய வழியை சாஸனம் உறுதிப்படுத்தித் தருகிறது. அவர் ஏற்கெனவே ஒரு ஓலையை ஒளித்துக்கொண்டு, 'ட்ரிக்'காக அதை இப்போது கையில் 'ஸ்லிப்' பண்ணிக்கொள்ளாமலிருக்கவே இப்படியெல்லாம் ஜாக்ரதை செய்திருக்கிறது!

இம்மாதிரி மத்யஸ்தர் 'எலெக்ட்' ஆகிறவரின் பேரைப் படித்தவுடன், 'அவர் ஓலையில் உள்ள பேரைத்தான் படிக்கிறார்: தாமாக ஏதோ ஒருத்தர் பேரை அதிலிருப்பது போலப் படித்துவிடவில்லை' என்பதை ஸந்தேஹமற உறுதி செய்யும் பொருட்டு அங்கே இருக்கும் நம்பிமார்கள் எல்லோரும் அந்த ஓலையை ஒவ்வொருவராக வாங்கிப் பார்த்து அந்தப் பேரை ப்ரகடனம் செய்வார்கள். அப்புறம் அது அஃபீஷியலாக எழுத்தில் பதிப்பிக்கப்பட்டு, அன்னார் ஸபையின் அங்கத்தினராகிவிடுவார். இதுதான் சோழர் கால க்ராம ஸபை அங்கத்தினரின் தேர்வு முறை.

எந்தத் தனிமனிதர்கள், அல்லது கட்சியின் ஆதரவும் சாய்காலும் இல்லாமல் ஊருக்குப் பொதுவாக, ஈசனுக்குப் பொதுவாக நல்லவர்கள், யோக்யர்கள் தேர்ந்தெடுக்கப்பட்ட முறை.

தனிமனிதக் கவர்ச்சி அம்சமே இல்லை

முடியரசு போய்க் குடியரசு வரும்போதே மனிதரைப் பார்க்காமல் கொள்கைகளைப் பார்ப்பதாகப் பெரிசாகப்

Koviloor Digital Library

பறை சாற்றப்படுகிறது. ஜாதி, ஸ்தானம் முதலிய எதையும் பார்க்காமல் ஐடியாலஜியின் பேரிலேயே ஸமூஹ கார்யங்கள் நடப்பது இப்போதுதான் என்று பெருமை பேசிக்கொள்கிறார்கள். ஆனால் வாஸ்தவத்திலோ இப்போதுதான் தர்மம், நீதி, நேர்மையான நிர்வாஹம், திறமையான ஸமூஹ அமைப்பு என்பதான உண்மைகளைப் பார்க்காமல், தனி மநுஷ்யர்களையும் கட்சிகளையுமே பார்த்து, "காந்தி சொன்னாரா, அதுதான் வேதம். அதற்குக் கொஞ்சம் வேறேயாக அவருக்கு நேற்றுவரை நெருக்கமாக இருந்த ராஜகோபாலாச்சாரி அபிப்ராயப் பட்டால்கூட இவர் தேச விரோதமானவர் என்று அர்த்தம்"; இல்லாவிட்டால் வேறு ஒரு அம்பேத்கரோ, டாங்கேயோ ஏதோ சொல்லிவிட்டால் அதுதான் ஸத்யம் என்கிற ரீதியில் ஜனங்கள் கொள்கைகளை விட்டு (தனி) மநுஷ்யர்களையே பிடித்துக்கொண்டு நிற்பது ஜாஸ்தியாகி வருகிறது. முதலில் தனி மநுஷ்யரிடம் மோஹம் மாதிரியான பிடிமானம். அதற்கு அப்புறம் ஏதோ ஒரு பார்ட்டி - வ்யூ (கட்சிக் கண்ணோட்டம்)—இது இரண்டுக்கும் மிஞ்சி உண்மைகளை மனஸ் திறந்து உள்ளபடி பார்ப்பது என்பதே அபூர்வமாகி வருகிறது.

எப்படிப்பட்ட தனி மநுஷ்யர்களின் பின்னே ஜனங்கள் போகிறார்களென்று பார்த்தால் யாருக்குக் கவர்ச்சிச் சக்தி இருக்கிறதோ, அவருக்குப் பின்னேதான். ஒருவருக்கு நல்ல அரசியல் ஞானம் இருக்கலாம், தேச நலனுக்கான கொள்கைகளை வகுத்து அவற்றைத் திறம்பட நடத்திவைக்கிற சக்தி இருக்கலாம், நேர்மையான நடத்தை இருக்கலாம்; இதெல்லாம் அவரிடம் இருந்தாலும் இவற்றில் எதுவுமே இல்லாத இன்னொருவருக்கு நன்றாக ஜோடித்து மேடையிலே பேச முடிகிறது, வசீகரமான பெர்ஸனாலிடியிருக்கிறது என்றால் இவற்றின் கவர்ச்சியிலேயே இவர் விஷயம் தெரிந்த அந்த இன்னொருவரைவிட ஜனங்களின் பெரிய ஆதரவைப் பெற்று விடுகிறார். இந்த துர்தசையில்தான் இப்போது தேசமிருப்பதாகத் தெரிகிறது. ஸமூஹத்தின் எல்லா நிலைகளில் உள்ள

Koviloor Digital Library

வர்களுமே இப்படிப்பட்ட கவர்ச்சியில் மயங்கத்தான் செய்கிறார்களென்றாலும், இதிலேயும் விஷயம் தெரியாத பாமர ஜனங்களைத்தான் விசேஷமாக வளைத்துவிட முடிகிறது. இதை நினைக்கும்போது, கவர்ச்சியம்சத்தை உத்தேசித்தேதான் வோட்டர்களுக்கு வேறு தகுதியே வைக்காமல் வயஸு வந்தோருக்கெல்லாம் வாக்குரிமை என்று செய்வதோ என்று கூடத் தோன்ற ஆரம்பித்துவிடுகிறது

சோழர் காலத்தில் உச்சியில் முடியரசு இருந்தபோதோ, கீழே தேர்தலில் பெர்ஸனாலிடி என்பதே இல்லை, கட்சி என்பதும் இல்லவே இல்லை. தர்மம், தகுதி என்பனவற்றின் மேலான அடிப்படையிலேயே முழுக்க முழுக்கத் தேர்தல் நடந்திருக்கிறது. கான்டிடேட் என்பவன் பெர்ஸனலாக யார், அவன் என்ன பார்ட்டி என்ற பேச்சுக்கே இடமில்லை. அவன் தர்மிஷ்டன், தகுதி வாய்ந்தவன் என்பது தான் கவனத்துக்கு வந்திருக்கிறது. இப்படிப்பட்டவர்கள் தான் தங்களுடைய ஸொந்தக் கவர்ச்சியினால் இல்லாமல், யோக்யதாம்சங்களுக்காக மாத்திரம் தேர்ந்தெடுக்கப்பட்டார்கள்.

அப்புறம் ஒரு வருஷம் அவருக்குப் பதவிக் காலம். மறு வருஷம் மறுபடியும் இதே மாதிரித் தேர்தல். ஆனால் இதே நபர் அந்தத் தேர்தலிலோ அதற்கப்புறம் இரண்டு வருஷங்களில் நடக்கும் தேர்தலிலோ எலெக்ட் ஆகமுடியாது. முன்னேயே சொன்ன விஷயம்.

பெரும்பான்மை அடிப்படை இல்லை

இந்தத் தேர்தலில் காணும் அநேக முக்யமான அம்சங்களில் இன்னொன்று: ஒரு குடும்பிலே ஒருவருக்கு எத்தனை வோட்டுக்கள் என்று எண்ணி மெஜாரிட்டி பேஸிஸில் (பெரும்பான்மை அடிப்படையில்) ஒருத்தர் ஜயித்ததாக நிர்ணயம் பண்ணுவதாகும். ஒருத்தன் மெஜாரிட்டி அடிப்

Koviloor Digital Library

படையில் ஜயிக்கிறான் என்றால், உடனே அவனுக்கும் அவனை ஆதரிப்பவர்களுக்கும் தங்களுடைய எதிராளிகளான மைனாரிட்டி யார் யார் என்பதிலேயே புத்தி போக இடமேற் படுகிறது. தொடர்ந்து, அவர்களை எப்படியெல்லாம் ஹிம்ஸிக்கலாம், 'விக்டிமைஸ்' பண்ணலாம் என்பதில் கவனம் போகலாம். மைனாரிட்டியின் பரம ந்யாயமான கோரிக்கைகளைக்கூட மெஜாரிட்டி பலத்தினால் திரஸ்காரம் பண்ணி விடுவது என்று இக்காலத்தில் ஏற்பட்டிருக்கிற மாதிரி கூடாது என்று நம் சோழகாலப் பூர்விகர்கள் எண்ணியிருக்கிறார்கள்.

முதலில் ஒரு அபேக்ஷகர் எலெக்ட் ஆவதில் வோட்டர்களை வைத்து மெஜாரிட்டி - மைனாரிடி, அப்புறம் இதில் ஜயித்த அபேக்ஷகர்கள் எல்லாரையும் சேர்த்து ஸபை அமைத்து அரசாங்க அதிகாரத்தைக் கொடுப்பதிலும் கட்சிகளை வைத்து மெஜாரிட்டி - மைனாரிடி என்ற அடிப்படைகளில் முடிவு செய்யும்போது ஜன ஸமூஹத்தையே இந்த அடிப்படையில் இரண்டாகப் பிளந்துவிட்டது போலக்கூட ஆகிறது. அதாவது இரண்டு பிரிவுக்காரர்களும் ஏதோ ஒவ்வொரு விதமான கோட்பாடுகளுக்கும், திட்டத்துக்குமே தங்கள் புத்தியைக் குறுக்கிக்கொண்டு, அந்த closed mind - ஓடு இன்னொரு தரப்பை, அது எதிர்த்தரப்பு, எதிரித்தரப்பு என்றே வைத்துப் பார்க்க ஆரம்பிக்கிறார்கள். மைனாரிட்டியின் தர்ம ந்யாயக் கோரிக்கைகளையும் மெஜாரிட்டியினரான அரசாங்கத்தினர் ஆக்ஷேபிக்கிறார்கள். இவர்களும் அவர்களுடைய ஆட்சியில் என்ன நல்லது நடந்திருந்தாலும் அதை ஒப்புக்கொள்ள மறுத்து, எப்போது பார்த்தாலும் குற்றம் கண்டுபிடிப்பதும் குறை சொல்வதாகவுமே இருக்கிறார்கள். அதனால்தான் அந்தச் சோழர்காலத்தில் யோக்யதாம்சங்களைத் திட்டவட்டமாக, தீர்மானமாக வைத்துவிட்டபின், அப்படிப்பட்டவன் மெஜாரிட்டி பெற்றானா, மைனாரிட்டி பெற்றானா என்ற வீண் சண்டைகள் கிளம்ப இடமில்லாமல் குடவோலை முறையில் தேர்ந்தெடுக்கப் பண்ணினார்கள்.

Koviloor Digital Library

அப்புறம் எலெக்ட் ஆகிற எவனாவது தப்பாக நடந்தாலும் அவனுடைய அதிக்ரமம் ஆழ ஊன்ற முடியாதபடி பதவிக் காலம் ஒரே வருஷம்தான் என்று வைத்தார்கள். இந்த ஒரு வருஷத்துக்குள்ளேயுங்கூட, ஒரு மெம்பர் குற்றம் பண்ணியதாகத் தெரிந்தால் உடனே அவனுக்குப் பதவி நீக்கந்தான். "வாரியஞ் செய்யா நின்றாரை அபராதங் கண்டபோது அவனை யொழித்துவதாகவும்" என்று கல்வெட்டு சொல்கிறது.

"சந்திர ஸூரியர் உள்ளவரை"

தங்கள் ஊர் நிர்வாஹத்தில் தப்பானவர்களின் ஆதிக்யம் போய் நல்லவர்கள் வளருவதற்காக, மேற்படி சாஸனம் உருவான வருஷத்திலிருந்து சந்த்ர ஸூர்யர்கள் உள்ள அளவும் இம்மாதிரி குடவோலை அமைப்போம் என்று சாஸனம் முடிகிறது. "இப் பரிசே இவ்வாண்டு முதல் சந்திராதித்தவத்தென்று நங்கிராமத்துக்கு அப்பியுதயமாக ('அப்யுதயம்' என்றால் க்ஷேமாபிவ்ருத்தி) துஷ்டர் கெட்டு விசிஷ்டர் வர்த்திப்பதாக (அதாவது உயர் மக்கள் வளருவதற்காக) வியவஸ்தை செய்தோம்—உத்தரமேரூர் சதுர்வேதி மங்கலத்து சபையோம்" என்று முடிகிறது.

துரத்ருஷ்டவசமாக இம்மாதிரி குடவோலைத் தேர்தல் முறை அவர்கள் ஆசைப்பட்ட மாதிரி சாச்வதமாக நீடிக்காமல் போய்விட்டது.

'சபையோம்' என்றால் 'ஸபையோரான நாங்கள்' என்று அர்த்தம்—அதாவது மேற்படி சாஸன விதிகளை ஃப்ரேம் செய்தவர்கள் முடிவில் கையெழுத்துப் போடுவதுபோல் தங்களைத் தெரிவித்துக் கொண்டிருக்கிறார்கள்.

நிர்வாஹப் பிரிவுகள்

ஊர்ஸபை நிர்வாஹம் பல இலாகாக்களாக—'வாரியம்' என்ற கமிட்டி அல்லது போர்ட்களாக—பிரிக்கப்பட்

Koviloor Digital Library

டிருந்தன. தேர்ந்தெடுக்கப்பட்ட முப்பது அங்கத்தினர்கள் இந்த வாரியங்களில் பொறுப்பாளர்களாகப் போடப்பட்ட னர். ஒவ்வொரு அங்கத்தினருக்கும் ஒரு வாரியத்தில் ஸ்தானமிருக்கும். அதாவது இந்த வாரியங்களின் மொத்த ஸ்தானங்களும் ஸரியாக முப்பதே. இதில் பன்னிரண்டு ஸ்தானங்கள் எல்லாக் காரியங்களையும் மேற்பார்த்து நிர்வஹித்த ஜெனரல் அட்மினிஸ்ட்ரேஷனுன 'ஸம்வத்ஸர வாரிய'த்துக்குப் போயிற்று. 'தோட்ட வாரியம்' என்பதாக நிலபுலன், தோப்பு துரவுகளை கவனிப்பதற்குப் பன்னிரண்டு ஸ்தானம். 'ஏரி வாரியம்' என்பதாக ஊரின் நீர்ப்பாச னத்தை கவனிக்கும் கமிட்டியில் ஆறு ஸ்தானங்கள்.

முப்பது மெம்பர்களில் வயஸு, அநுபவம், படிப்பு எல்லாவற்றிலும் முதிர்ச்சி கண்ட பன்னிரண்டு பேர் ஸத்வத்ஸர வாரியத்தில் ஸ்தானம் கொடுக்கப்படுவார்கள். உடம்பால் ஓடி ஆடக்கூடிய மத்யம வயஸினர் மற்ற இரண்டு வாரியங்களில் இடம்பெறுவார்கள்.

இதுதவிர பொன்வாரியம், பஞ்சவார வாரியம் என்று தலைக்கு ஆறு மெம்பர்களைக் கொண்ட இரண்டு கமிட்டிகள் இருந்திருக்கின்றன. இவற்றுக்கான மெம்பர்களும் முன்னே சொன்னதுபோலவே முப்பது குடும்புகளுக்கும் குடவோலைத் தேர்தல் நடத்தித்தான் எலெக்ட் செய்யப்பட்டார்கள். முதலில் முப்பது பேரை எலெக்ட் செய்தபின் அந்த முப்பதி லிருந்து இந்த இரண்டு வாரியங்களுக்குமான பன்னிரண்டு பேர் ஸெலக்ட் செய்யப்பட்டனர்.

முற்கால ஏற்பாட்டில் பண்ணைக்காரன் தன் பங்கில் ஐந்தில் ஒரு பங்கை ராஜாங்கத்துக்கு வரியாய்க் கொடுக்க வேண்டும். பணமாக இல்லாமல் தான்யமாகத்தான். அதனுல் land revenue-வுக்கு பஞ்சவாரம் என்று பெயர்.

தோட்டவாரியம் என்பது விளைச்சல், விதை ஸப்ளை முதலான விஷயங்களை—அதாவது நேரே தான்ய உற்பத் திக்கு ஸம்பந்தப்பட்ட விஷயங்களை—கவனித்துக்கொள்ள,

Koviloor Digital Library

அதன் பஞ்சவார வசூல் குறித்தவற்றைப் பஞ்சவார வாரியம் கவனித்துக் கொண்டது. நில வரி, வியாபார வரி, சுங்கம் முதலானவற்றின் வசூல் ராஜாங்க அதிகாரிகளின் பொறுப்பி லிருந்தாலும், அது விஷயமாக ஜனங்களின் அபிப்ராயம், குற்றங்குறைகளை எடுத்துச் சொல்லவும், இது போன்ற மற்ற ஸமாசாரங்களை கவனிக்கவுமே க்ராம மஹாஸபையும் பஞ்சவார, பொன் வாரியம் வைத்திருந்தது இதெல்லாம் நம்முடைய ஊஹத்தில் தெரிவது. சாஸனத்தில் உடைத்துச் சொல்லியதல்ல.

புதுக்கதையும் பழங்கதையும்

இந்தப் பழைய கதையெல்லாம் இப்போது எதற்கு என்றால் புதுக்கதைக்குப் பழைய கதையே புத்துயிர் தந்து சீர்ப்படுத்த முடியும் என்பதால்தான். பழைய கதைகளான ராமாயணமும் பாரதமும் மற்ற புராணங்களுந்தானே அதற்கப்புறம் வந்திருக்கிற எத்தனையோ தலைமுறைகளின் கதைகளை நல்லவழியில் கொண்டுபோயிருக்கின்றன? இக்கால நாவல்கள், ஸினிமாக்கள் பலவற்றுக்குக்கூட அவைதானே மூலமாயிருக்கின்றன?

ஜனநாயகம், ஜனநாயகம் என்று மேல்நாடுகளில் முழங்குவது நம் நாட்டிலும் ஏற்பட்டுவருகிறது. க்ராம பஞ்சாயத்து போர்டு முதல் டில்லி பார்லிமென்ட் வரையில் பொதுஜன வோட்டில் எலெக்ட் ஆகும் நபர்களைக் கொண்டு உருவாக்கி, க்ராம கார்யம், ஜில்லா கார்யம், மாகாணக் கார்யம், பாரத தேசம் பூராவுக்குமான கார்யம் ஆகியவற்றை நடத்த ஏற்பாடாகிவருகிறது. பொது ஜனங்களுக்கு நற்குணங்கள் அதிகரிக்கவோ, அவர்கள் தர்ம மார்க்கமான புண்ய மார்க்கத்தில் போய் ஈசனருளை அடையவோ இது உதவுகிறதா, நிஜமாகவே தேச க்ஷேமத்துக்கும் ஸமூஹ நலனுக்கும் உதவுகிறதா, அல்லது ஜனங்களைக் கெடுத்து சிலருடைய நலனை மட்டும் பேணுவதற்கு ஸஹாயம் செய்கிறதா என்பதைத்தான் கவனிக்க வேண்டுமே தவிர,

Koviloor Digital Library

இது ரொம்ப மாடர்ன் ஆனது, இதிலே ஈக்வாலிடி (ஸமத்வம்) இருக்கிறது என்ற காரணங்களுக்காக மாத்திரம் இம் முறையை ஏற்பது ஸரியல்ல. பின்னே சொன்னவை (அதாவது நவீனக் கொள்கை என்பதும் ஸமத்வம் என்பதும்) தேசத்தின் அல்லது க்ராமத்தின் தூய்மையான, தார்மிகமான நிர்வாஹம் என்ற முக்ய நோக்கத்துக்கு நேர் தொடர்பில்லாத புறக் காரணங்கள்தான். இவற்றைப் பெரிசுப்படுத்தி முதலிடம் தருவதனுல் முக்ய ப்ரயோஜனத்துக்கு ஹானி உண்டாகுமெனில் அது கொஞ்சமும் புத்திசாலித்தனமாகாது.

கவலைக்குரிய அம்சங்கள்

புதிய முறையில், நமக்குத் தெரியவரும் அநேக அம்சங்கள் கவலை உண்டாக்குவனவாகவே உள்ளன. மக்களால் மக்களைக்கொண்டு மக்களுக்காக அமைக்கப்பட்ட மக்கள் ஸர்க்கார்—of the people, by the people, for the people என்றெல்லாம் என்னென்னவோ சொல்கிறுர்களே—அதெல்லாம் விஷயம் தெரியாத மக்களால், விஷயம் தெரியாத (ஆனல் ஸ்வய நலன் தெரிந்த) மக்களைக் கொண்டு, அவர்களைச் சேர்ந்த சில மக்களுக்காகவே அமைத்த ஸர்க்கார் என்பதாக முடிந்துவிடுமோ என்றுகூட பயப்படும்படி இருக்கிறது.

புதிதாக ஸ்வதந்த்ரம் வந்துள்ளபோதுதான் கட்டுப்பாடு ரொம்பவும் அவச்யம். அந்த ஸமயம் பார்த்து இப்படிக் கட்டவிழ்த்து விடுகிறுர்களே, என்னென்ன விபரீதம் வருமோ என்றிருக்கிறது. வ்யாதி குணமான பிற்பாடு ஒய்வு எடுத்துக்கொண்டு கொஞ்சம் கொஞ்சமாகப் புது ரத்தம் பிடித்துத் தேறவேண்டிய (convalescence) பீரியடில்தான் ரொம்பவும் ஜாக்ரதையாயும், கடும் பத்தியமாயும் இருக்க வேண்டும். அப்படி, பிரிட்டிஷ் ஆட்சி என்ற வ்யாதி போய் ஸ்வதந்த்ர சக்தியில் ஆரோக்யம் பெறுவதற்கு முற்பட்டதான நடுக்கட்டத்தில், இருக்கிறேம். இப்போது கொஞ்சம்

Koviloor Digital Library

ஏறுமாருக மக்களின் புத்தியோ மக்கள் ப்ரதிநிதிகளின் புத்தியோ போக இடங்கொடுத்தாலும், எழுத்தளவில் கிடைத்த ஸ்வதந்த்ரம் வாஸ்தவமாக நம்மை வளர்க்கிற ஜீவசக்தியுள்ள ஸ்வதந்த்ரமாக ஆகாமல் போய்விடும். இப்போதோ "கொஞ்சம் ஏறுமாறு" என்ன, "ரொம்பத் தாறுமாருகவே" போகக் கூடுமோ என்று பயப்படும்படியாக, வயஸு வந்த எவராஞலும் வயஸு வந்த எவருக்காஞலும் நிர்வாஹத்தில் பொறுப்புத் தந்து அதிகார ஸ்தானத்தில் உட்கார்த்தி வைத்து விடலாம், படிப்பு - ஸொத்து - அநுபவம் - நடத்தை முதலான எந்தத் தகுதிக்கும் அவச்யமில்லை என்று பண்ணிவருகிருர்கள்.

இதில் ப்ரத்யக்ஷமாகத் தெரிகிற ஒரு தீமை: இப் புது ஜனநாயகத் தேர்தல்கள் ஏற்படுவதற்கு முன், நாட்டில் சில உத்யோகஸ்தர்களிடம் மாத்திரம் லஞ்சம் வாங்கும் பழக்கமும், பொய் வாக்குறுதி கொடுத்து ஏமாற்றும் வழக்கமும் இருந்தன. வோட்டும் எலெக்ஷனும் ஆரம்பித்த பிற்பாடோ, லஞ்சமென்பதையே கேள்விப்பட்டிராத பட்டிக்காட்டில்கூட ஸர்வ ஜனங்களும் லஞ்சம் வாங்குவதற்கு இடம் ஏற்படுத்திக் கொடுத்திருக்கிறது. விஷயம் தெரிந்த படிப்பாளிகளை ஏமாற்றுவதைவிடப் படிப்பறியா பாமர ஜனங்களை ஏமாற்றுவது ஸுலபம். அவர்களிடம்தான் காசாகவே துணிந்து லஞ்சம் கொடுக்கவும் அதிக இடமுண்டு. ஆனதால் அபேக்ஷகர்களும் அரசியல் கட்சிகளும் செய்யும் ஏமாற்றும் பொய்யும் அதிகமாகும். இது ஒரு பக்கம் இருக்க, அந்தப் பொது ஜனங்களுமே அபேக்ஷகர்களிடமிருந்தும் அரசியல் கட்சிகளிடமிருந்தும் பலவிதமான ஆதாயங்களைப் பெறுவதற்காக ஏமாற்றுவதற்கும் பொய் சொல்வதற்கும் ஊக்கம் பெற்றுவிடுகிருர்கள். இப்படிப்பட்ட ஜனநாயகத்தால் நமக்கு க்ஷேமமா, க்ஷாமமா?

"எந்தத் தகுதியும் வைக்காததால் இதுவே நிஜமாக ஸர்வ ஜனங்களையும் (தேர்தலில்) நிறுத்திவைக்க உதவும் உண்மையான ஜனநாயக முறை" என்கிருர்கள். ஆனல்

Koviloor Digital Library

இதில் இப்படி ஏகத்தாருகப் பணம் செலவழிக்கும்படிப் பண்ணியிருப்பதால், நடைமுறையில் பணம் கொழுத்தவர்களேத்தான் அதிகம் நிறுத்தி வைப்பதாக ஆகுமென்று தோன்றுகிறது. ஒவ்வொரு ஊரிலும், ஒவ்வொரு கட்சியிலும் த்யாகம், திறமை, தூய்மை நிறைந்தவர்கள் இருந்தாலுங்கூட, அவர்களே விட்டுவிட்டு, பணபலம் படைத்தவனேத்தான் நிறுத்துவது என்று ஆனல் அப்புறம் ஜனநாயக தத்வம், நல்ல நிர்வாஹம் இரண்டுமே என்ன ஆவது?

இப்படி வாரி விட்டுச் செலவழித்தவன் அப்புறம் எலெக்ட் ஆனபின், அதை ஈடுகட்டிக்கொள்வதற்கும், மறுபடி எலெக்ஷன் வரும்போது அதில் இதே மாதிரி செலவு செய்வதற்கும் "வழி" பண்ணிக்கொள்ளப் பார்ப்பதும் இயற்கைதானே?...விஸ்தாரம் பண்ணிக்கொண்டு போகவே வேதனேயாயிருக்கிறது. வாஸ்தவத்தில் வரப்போவது ஜன நாயகமா, "தனநாயக"மா என்று பயமாயிருக்கிறது.

இதெல்லாம் போகட்டும். எலெக்ஷனுக்கு அப்புறம் ஏற்படும் ராஜாங்கம் நிஜமாகவே மக்களேக் கொண்டு மக்களால் ஆன ஜனநாயக அமைப்புத்தானு? பல அபேக்ஷகர்களின் போட்டியிலே வோட்டுகள் சிதறிப்போவதால் மொத்தத்தில் இருபத்தைந்து முப்பது சதவிகிதமே வோட்டுப் பெற்றவருங்கூட மெம்பராகத் தேர்வு பெற்று விடலாம். அதேபோல் மொத்தம் ஒரு ஸபையின் மெம்பர்ஷிப் ஐநூறு என்ருல், பல கட்சிகளில் அந்த ஐநூறு ஸ்தானங்கள் பங்கீடாவதில் பாதிக்கு ரொம்பக் குறைவாக நூற்றைம்பது, இருநூறு ஸீட்டுக்களே பெற்ற கட்சியுங்கூட "இருப்பதற்குள் பெரிய கட்சி" என்ற முறையில் ஸர்க்கார் அமைக்கக்கூடிய சான்ஸ் இருக்கிறது. ஸர்க்கார் அமைக்கும் கட்சிக்கு ஐநூறு ஸீட்டில் இருநூறு ஸீட்தான், சராசரியில் ஒவ்வொரு ஸீட்டிலும் மொத்த வோட்டில் அது பெற்றது நாற்பது சதவிகிதம்தான் என்று வைத்துக் கொண்டால் நாற்பது கோடி பேர் உள்ள நம் தேசத்தில ஏதோ பத்து கோடி பேரின் ஆதரவை மட்டுமே பெற்றுலும்

Koviloor Digital Library

போதும், அத்தனை ஜனங்களாலும் தேர்ந்தெடுக்கப்பட்ட ஸர்க்காரைப்போல் அது தன்னைக் காட்டிக் கொண்டுவிட முடியுமென்று தெரிகிறது. அதாவது நான் ஸரியாகக் கணக்குப் போட்டுச் சொல்லாவிட்டாலும் ஜனத்தொகையில் வோட்டுப் போடாமலே இருப்பவர்கள் போக, போட்டவர்களிலும் அரைவாசிக்கு ரொம்பக் குறைவான ஆதரவை மட்டுமே பெற்ற கட்சிகூட அதிகாரத்தைப் பெற்றுவிடமுடியும்.[1] தேசம் அல்லது மாகாணம் முழுதையும் எடுத்துக்கொண்டால் அவற்றிலே ஒவ்வொரு கட்சிக்கும் உள்ள ஆதரவுக்கும், மத்ய - மாகாண சட்ட ஸபைகளில் அந்த கட்சி ஒவ்வொன்றும் ஜயிக்கிற ஸீட்டுக்கும் "ப்ரபோர்ஷன்" (விகிதாசாரம்) ஒத்துப்போகாமலே இருப்பதற்கு இடமிருக்கிறது. இது எப்படி ஜனநாயகம்?

இந்த அம்சத்தைக் கவனித்துத்தான் ஒரு வோட்டர் தன் ஆதரவைப் பெற்ற ஒரே ஒரு அபேக்ஷகருக்கு மட்டும் வோட் போடுவது என்றில்லாமல், ரொம்பவும் ஆதரவு பெற்றவரின் பெயரில் ஆரம்பித்து மற்றவர்கள் பேரையும் தன் preference - படி வரிசை க்ரமமாகக் குறிப்பிடலாமென்றும், அதில் முதல் preference -க்கு இத்தனை மார்க் அடுத்ததுகளுக்கு இத்தனையித்தனை என்றும் வைத்துத் தேர்ந்தெடுக்கிற ஒரு முறையும் இருக்கிறது[2]. இதை Proportional Representation—"விகிதாசார ப்ரதிநிதித்வம்"—என்கிறார்கள். ஆனால் இது 'கௌன்ஸில்'கள் (மேல் ஸபைகள்) மாதிரி சின்ன அளவில்தான் முடியும்; ஊர் ஸபை, மாகாண - மத்ய சட்டஸபைகளின் ஜெனரல் எலெக்ஷனில் முடியாது என்று சொல்கிறார்கள். நடைமுறைக்கு ச்ரமமானது என்கிறார்கள். அவர்கள் சொல்வது வாஸ்தவமாயும் இருக்கலாம்.

---

1. ஸ்ரீசரணர்கள் தரும் அளவுகளின்படி சரியாகக் கணக்கிட்டால் கால் பங்குக்கும் குறைவான 4/25 மொத்த வாக்குகளைப் பெற்ற கட்சியும் அரசாங்கம் அமைக்க முடியும்.

2. Single transferable vote முறை.

Koviloor Digital Library

ஸர்வ ஜனங்களும் கலந்துகொள்ளச் செய்யும் தேர்தல் என்ற ஒரு காரணத்தால் மட்டும் ஒரு நாட்டில் உண்மையான ஜனநாயகம் ஏற்பட்டுவிட்டது என்று சொல்லிவிட முடியாது என்பதற்காகத்தான் இந்த வீதாசாரக் கணக்கெல்லாம் சொல்கிறேன். உண்மை ஜனநாயகமாக இன்றி, போலி ஜனநாயகம் பகட்டுச் செய்துகொண்டு உண்மை போலத் தோன்றவும் இதிலே இடமிருக்கிறது என்று காட்ட வந்தேன்.

பக்குவம் செய்தபின் பொறுப்புத் தருக!

எந்தக் கக்ஷியின் கையில் அதிகப் பணம் இருக்கிறதோ, பொய்யையோ மெய்யையோ பெரிசுபடுத்தி ப்ரசாரம் செய்து ஜனங்களின் மனஸை வசியப்படுத்தும் ப்ரபலப் பத்திரிகைகள் இருக்கின்றனவோ, 'பேச்சாளர்'கள் என்கப் பட்டவர்கள் இருக்கிறார்களோ, எந்தக் கக்ஷியிடம் குழந்தைப் பிராயத்திலேயே மனஸில் கல்வி என்ற அம்ருதத்துக்குப் பதில் அரசியல் விஷத்தை ஏற்றிவிடுகிற வித்யா சாலைகளில் அதிக ஆதிக்யம் இருக்கிறதோ, அதுவே க்ரமமற்ற வழிகளால் தன்னைப் பெரிய கக்ஷியாக மாற்றிக் கொள்ள நிறைய இடம் இருக்கும்போது ஜனநாயகம் என்பது வெறும் போலியாகவே ஆகிவிடவும் கூடும். அந்த ஸ்திதிக்குத்தான் நாம் போகிறோமோ, அந்த ஸ்திதிக்குத் தான் நம்மவரே நம்மைக் கொண்டுவந்து விட்டுக்கொண்டிருக்கிறார்களோ என்று தோன்றுகிறது.

நல்ல எண்ணத்தில்தான் இப்படிச் செய்ய முனைந்திருக்கிறார்கள் என்றே வைத்துக் கொள்வோம். ஆனால் நல்ல எண்ணம் என்பது யுக்தமான நடைமுறைக்கு ஒத்துவராது என்றால் அதனால் என்ன ப்ரயோஜனம்? நல்ல எண்ணம் கொண்டவர்களானாலும், அவர்களுக்காகவே தாங்கள் செய்வதன் விளைவுகள் புரியாமல் போனாலும், இப்போது பல அறிவாளிகள்—அரசியல் நிர்ணய ஸபை அக்ராஸனரும் கூட—நடைமுறையில் இது இப்படியிப்படியான தவறான

Koviloor Digital Library

விளைவுகளை ஏற்படுத்தக்கூடும் என்று எடுத்துக்காட்டிய பிறகும் காதில் போட்டுக்கொள்ள மாட்டோமென்றால் என்ன பண்ணுவது?

ஒரு வ்யாதிக்காரனை நன்றாகத் தேற்றிவிட்டு அப்புறந் தான் அவனிடம் வீட்டுப் பொறுப்பைத் தரலாம். ஒரு குழந்தையை அறிவு, மனஸ், தேஹபலம் எல்லாவற்றிலும் நன்றாக வளர்த்து அப்புறந்தான் அதனிடம் பொறுப்புத் தரலாம். ப்ரியம் இருக்கிறது என்பதற்காக ஒரு நோயாளி யிடமோ, குழந்தையிடமோ வீட்டுப் பொறுப்புக்களைக் கொடுப்பார்களா? சாப்பாட்டு விஷயங்கூட இப்படித்தான். நோயாளியிடம் ப்ரியம், குழந்தையிடம் ப்ரியம் என்பதற் காக அடை, தோசை, பக்ஷணம் என்று திணிப்பார்களா? நம்முடைய பொதுஜனங்களில் பெருவாரியானவர்கள் அரசியல் ஞானத்தில் குழந்தைகளின் ஸ்தானத்திலிருப்பவர் கள். வெள்ளைக்கார ஆட்சி அறிவு ரீதியில் அவர்களை பலஹீனர்களாக, நோயாளிகள் மாதிரி ஆக்கி வைத்திருக் கிறது. இந்த ஸ்திதியில் அவர்களுக்கு தேச நிர்வாஹத்தில் பொறுப்புத் தருவோம். ஜனநாயக விருந்தை வாயாலும் மூக்காலும் திணிப்போம் என்றால் என்ன பண்ணுவது? முதலில் அவர்களை அறிவு ரீதியில் ஆரோக்யசாலிகளாகவும், குழந்தைத்தனம் விலகி பக்வ ஸ்திதி பெற்றவர்களாகவும் உருவாக்க வேண்டியதே ஸ்வதந்த்ர இந்தியாவின் தலைவர் களுடைய பணி, கடமை. சில ஆண்டுகளில் இம்மாதிரி நம் மக்களின் அறிவுநிலையை மேம்படுத்திய பின்னர்தான் இப்போது வகுக்கப்படுவது போன்ற ஸர்வ ஜன வோட் டெடுப்பு முறையைப் பற்றிச் சிந்தனை செய்யலாம் என்றே தோன்றுகிறது.

ஆனால் ஒரே பிடிவாதமாக இருப்பவர்களிடம் இதை யெல்லாம் சொல்லி எப்படி எடுபடச் செய்வது என்று புரிய வில்லை. அவர்கள் போகிற போக்கைப் பார்த்தால் இப்போது நாம் இருக்கிற ஸ்திதியிலிருந்து மீளப்போகி றோமா என்று இருக்கிறது. மீள்வதா, இன்னம் மோசமாக

Koviloor Digital Library

மாட்டிக்கொண்டு, லஞ்சமும் பொய்யும் கட்சிப் பிரதி கட்சிகளும் வளர்ந்து தேசம் வீணுகப் போகிறதா என்று பயப்படும்படி ஸூசனைகள் காணப்படுகின்றன. ஒருபக்கம் ஜாதி மதமில்லாத ஸமதர்ம ஸமுதாயம் என்று சொன்னாலும், நடைமுறையில் போகிறபோக்கைப் பார்த்தால் ஜாதிக் கக்ஷி, ஊர்க் கக்ஷி, தெருக் கக்ஷி, ஒவ்வொரு கக்ஷிக்குள்ளேயும் உள் கக்ஷிகள் என்றெல்லாம் ஏற்பட்டு, பணத்தாலும் மோச ப்ரசாரத்தாலும் ஜனங்கள் கக்ஷிக்குக் கக்ஷி மாறுவதாகவும், அப்புறம் கக்ஷிக்காரர்களே ஒன்றிலிருந்து இன்னொன்றுக்குத் தாவுவதாகவும்*—இப்படியெல்லாம் எந்த லக்ஷ்யமும் இல்லாமல் ஸ்வய நலனுக்காகவே அநேகம் பண்ணுவதற்கு இப்போது விதை விதைத்தாச்சோ என்றே தோன்றுகிறது.

"ஸ்தல ஸ்தாபனத் தேர்தல்களில் மட்டும் கட்சி அடிப்படை கூடாது. ஏதோ ஒரு ஊருக்கான ஸௌகர்யங்களை கவனித்துப் பண்ணித் தருவதில் கட்சி அரசியலுக்கு இடமில்லாததால் இதைக் கட்சி ஸம்பந்தமில்லாமலே செய்ய வேண்டும்" என்று சொல்லி, அப்படியே செய்கிற மாதிரி வெளியிலே காட்டினாலும், இதிலும் பார்ட்டி - பாலிடிக்ஸ் நன்ருகப் புரையோடித்தானிருக்கிறது என்கிருர்கள். "நகர ஸபை, க்ராமப் பஞ்சாயத்து என்ன? வீட்டுக்குள்ளேயே கட்சிகள் வந்துவிட்டது" என்று ஒருத்தர் வ்யஸனத்தையே வேடிக்கை மாதிரிச் சொல்லியிருக்கிருர். தேசிய, மாகாண அடிப்படைகளில் கட்சி அரசியலைப் பெரிசாக தூபம் போட்டுக் கிளப்பிவிட்டு, அப்புறம் அந்தப் புகை உள்ளூர் நிர்வாஹத்தில் வராது என்ருல் எப்படி முடியும்?

பழைய தேர்தல் தரும் தேறுதல்

இந்த ஸமயத்தில் பழைய நாளில் பல யோக்ய தாம்சங்களை—முக்யமாக தார்மிகமான போக்கை, அர்த்த சுத்தத்தை, மனத் தூய்மையை வைத்து நடந்த தேர்தலைப்

---

* அரசியல்வாதிகளின் கட்சி மாறலைப்பற்றி ஸ்ரீசரணர்கள் கூறியது சுமார் நாற்பது ஆண்டுகளுக்கு முன்னுல் என்பது ஆச்சர்யமூட்டுகிறது!

Koviloor Digital Library

பற்றி நினைப்பதே கொஞ்சம் தேறுதலாக இருக்கிறது. குறிப்பாக, கட்சிகள் பலதினுஸில் பணம் பண்ணி அந்த பலத்தில் அபேக்ஷகரை நிறுத்தி வைப்பது, அவர் கட்சியிடம் வாங்கிக் கொண்ட பணத்திலேயே ஏப்பம் விடுவது; அல்லது எப்படியும் ஜயித்தாக வேண்டும் என்பதில் அதற்குமேல் தானும் ஸொந்தச் செலவு ஏகத்தாருகச் செய்வது (கட்சிக்கே பணம் கொடுத்துத் தங்களை நிறுத்தச்செய்பவர்களும் இருப்பார்கள்), பணத்தை ஸரியான வழியிலும் தப்பு வழியிலும் செலவழித்து வோட்டுப் பிடிப்பது, அப்புறம் தான் செலவழித்ததற்கு வட்டியும் முதலுமாகத் தன்னுடைய பதவிக் காலத்துக்குள் ஸம்பாதிப்பது, இப்படி தான் கெட்டது போதாதென்று ஜனங்களையும் ஊரையும் லஞ்சத்தால் கெடுப்பது, ஊருக்கு ஊர் எப்போது பார்த்தாலும் கட்சி அரசியலில் சக்தி விரயமாவது—என்கிற அதர்மப் பட்டாளத்தில் எதுவும் இல்லாத ஒரு முறை அப்போது அநுஸரிக்கப்பட்டது என்பதை அறிய ஆறுதலாக இருக்கிறது. கட்சி, பெர்ஸனாலிடி என்ற வாடைகளே இல்லாமல், இந்தக் குறுகிய எல்லைகளுக்கு அப்பாற்பட்ட தர்மம், நீதி, திறமை, தூய்மை என்கிற பெரிய தத்வங்களை மையமாகக் கொண்டே ஒரு தேர்தல்முறை நம்மிடம் இருந்திருக்கிறது என்று நினைக்கவே பெருமையாயிருக்கிறது.

பெர்ஸனாலிடி என்று வந்துவிட்டால் அப்புறம் அவனவனுக்கும் விருப்பு - வெறுப்பு என்று வரத்தான் செய்யும். காரணம் தெரிந்ததும், காரணம் தெரியாததுமாக அநேக ஸ்வய அபிமானங்கள், த்வேஷங்கள், bias-கள் ஏற்படத்தான் செய்யும். சிலா சாஸனத் தேர்தல் முறையில் இந்த பெர்ஸனாலிடிக்கே இடமில்லாதது ரொம்பவும் விசேஷம். அபேக்ஷகன் என்று அக்ஷதை போட்டுக்கொண்டு நிற்கிறவனும் இல்லை. அதே போல வோட்டுப் போடுகிறவன் என்றும் எவனும் இல்லை. இப்படியிருக்கும் போதுதான் கொஞ்சங்கூட நடுநிலைமை தவறாத நியாய வழியில் ஒரு தேர்தல் முடிவு அமைய முடியும். அவனை இவன் வால்

Koviloor Digital Library

பிடிப்பது, இவனுக்கு அவன் 'இதைச் செய்கிறேன், அதைச் செய்கிறேன்' என்று ஆசை காட்டி, பணத்தைக் காட்டி வோட் பிடிப்பது ஆகியவற்றுக்கு இடமே இல்லையல்லவா?

குறையும், குறைக்கு ஸமாதானமும்

இந்த ஏற்பாட்டிலே ஒரு குறை தோன்றலாம். எல்லா அபேக்ஷகரும் ஜன ஆதரவு பெற்றவர்கள்தான் என்றாலும் இப்படிப்பட்ட பல அபேக்ஷகர்களில் மற்றவர்களைவிட அதிக ஆதரவு பெற்றவனே எலெக்ட் ஆகவேண்டுமென்று இல்லாமல் அவனைவிடக் குறைச்சல் ஆதரவு பெற்றவன் எலெக்ட் ஆகவும் இடம் இருந்திருக்கிறதே என்ற குறை தோன்றலாம். குழந்தை ஓலையை யெடுப்பதில் இப்படி நடக்க இடமுண்டுதான். ஆனால் தற்போதுங்கூட மெஜாரிட்டி வோட்டர்களின் ஆதரவைப் பெறாமல், முப்பது முப்பத்தைந்து பெர்ஸென்ட் வோட் வாங்கினவன் தேர்தல் பெற இடமிருக்கத்தானே செய்கிறது? எதிலுமே இப்படி ஏதாவது 'வீக் பாயின்ட்' இராமல் போகாது. ஆனால் இப்போது எலெக்ட் ஆகிறவர்களில் மெஜாரிட்டி பெற்றே ஜயித்தவர்கூட உத்தமராகத்தான் இருக்கவேண்டும் என்பதற்குத் தேர்தல் விதிகளில் எந்த உத்தரவாதமும் இல்லாமலிருக்க, அப்போதோ ஓலைகளில் பெயர் போடப்பட்ட எல்லோரும் உத்தமர்களாகத்தான் இருக்கவேண்டும் என்று தீர்மானமாக விதியிருந்ததை கவனிக்கவேண்டும். எனவே பாபுலாரிடியில் கொஞ்சம் முன்னே பின்னே இருந்தாலும், எந்த அபேக்ஷகருமே நிர்வாஹத் திறமையும் தூய்மையும் உள்ள உத்தமமான நபர்தான் என்பதால் இந்த அம்சம் ஒரு பெரிய குறையாக நினைக்கப்படுவதற்கில்லை.

மத்யஸ்தர்களையும் நம்பிமார்களையும் கொண்டு ஒரு குடும்பின் யோக்யதாம்சம் பெற்ற அபேக்ஷகர்களுக்குள் யார் பாபுலாரிடியில் முதல்வர் என்று அறிந்து, அப்படிப்பட்டவரைத் தேர்ந்தெடுப்பதற்கு தாராளமாக வசதி இருந்தும், வேண்டுமென்றேதான் அப்படிச் செய்ய

Koviloor Digital Library

வில்லையோ என்றுகூடத் தோன்றுகிறது. இந்த முறையில் விளைவான மெஜாரிட்டி - மைனரிடி மனோபேதமும் த்வேஷமும் ஏற்பட இடம் கொடாமல், எல்லோருக்கும் பொதுவாக ஏகோபித்த உணர்ச்சியோடு கார்யங்கள் நடக்கவேண்டுமென்ற உசந்த அபிப்ராயத்தில்தான் ஜன ஆதரவின் ஏற்ற இறக்கங்களை கணிக்காமல் குழந்தையை விட்டு "வோட்டெடுப்பு" நடத்தியிருப்பார்களோ என்று தோன்றுகிறது.

நவீன கணித சாஸ்த்ரத்திலும் திட்டவட்டமாக இல்லாமல் ஒரு உத்தேசத்தில் செய்வதே ஸரியானதாகவும் அமைந்துவிடுவதாக ஒன்று சொல்கிறார்கள். இதை Probability test—ஹேஷ்ய பரீக்ஷை என்கிறார்கள். பகவானின் உத்தேசந்தான் குழந்தை மூலம் வருகிறது என்று மனஸார நம்பி ஒரு தேர்தலை நடத்துகிறபோது, அதில் தேர்ந்தெடுக்கப்பட்டவர்தான் அதிகமான பஹுஜன ஆதரவு பெற்றவராயிருப்பார் என்ற probability (ஸாத்யக்கூறு) பலமாகவே இருப்பதாகக் கொள்ளலாம்.

எத்தனை நல்ல ஏற்பாடானாலும் எதிலேயும் ஏதாவது குறை இல்லாமலிருக்காது. இதெல்லாமே முடிவிலே மாயா ப்ரபஞ்ச ஸமாசாரங்கள் தானே? அதனாலே, எங்கேயாவது கொஞ்சம் அபூர்ணமாக, மூளியாக, 'ஒன்று இருந்தால் இன்னொன்று இல்லை' என்னும்படியாகத்தான் இந்த லோக நடப்பு எதுவுமே இருக்கும். அப்படி இந்த (உத்தரமேரூர்) தேர்தல் முறையிலும் சில இருக்கலாம்.

உதாரணமாக, எழுபது எண்பது (வயஸு)க்கு மேலே போயும் நல்ல கூரறிவோடு ஆலோசனை சொல்லக் கூடிய சிலரை நாம் தற்போது பார்க்கிறோமே, இப்படிப்பட்டவர்களை ஏஜ் - லிமிட் விதியினால் ஒதுக்கி வைப்பது ஸரியா என்று கேட்கலாம்.

இதே மாதிரி ஒரு மெம்பரின் ஆத்ம பந்துக்களுக்கு இடமில்லை என்பதைப் பார்க்கும்போது, "நிரம்ப யோக்யதாம்சங்களோடு மோதிலால் நேரு(வும்) ஜவாஹர்லால்

Koviloor Digital Library

நேரு(வும்) இருந்திருக்கிறார்களே! அப்பா - பிள்ளை என்ற ஒரே காரணத்துக்காக இவர்கள் ஒரே ஸமயத்திலோ அடுத்தடுத்தோ ஸபையில் அங்கம் வஹிக்கப் படாது என்று பண்ணலாமா?" என்று தோன்றலாம். இப்படியே விட்டல் பாய் படேல், வல்லபபாய் படேல் (என்ற ஸஹோதரர்கள்) இருந்திருக்கிறார்கள். இப்போது "முதலியார் ப்ரதர்ஸ்" (ஏ. ராமஸ்வாமி முதலியாரும், ஏ. லக்ஷ்மண ஸ்வாமி முதலியாரும்) இருக்கிறார்கள். இவர்களெல்லாம் உறவு முறையைக் கொண்டு, தேச நலனுக்கு மாறாக ஸ்வய நலமாக எதுவும் பண்ணிக்கொள்வார்கள் என்று நினைப்பது ஸரியில்லைதான்.

ஆனாலும் உள்ளூர் ஸபைக்கும், மத்ய - மாகாண சட்ட ஸபைகளுக்கும் உள்ள வித்யாஸத்தையும் நாம் மறப்பதற்கில்லை. உள்ளூரில் மெம்பர்கள் எல்லாரும் நன்றாகத் தெரிந்தவர்களாயிருப்பதாலும், அது 'ஸ்மால் - ஸ்கேல்' (சிறிய அளவு) நிர்வாஹமானதாலும் எல்லாரையும் ஸரிகட்டி. அவர்கள் வாயையும கட்டி, அநேக தப்பு தண்டாக்களை மூடி மறைத்துவிட முடியும். பெரிய பரப்பளவைப் பொருத்ததாகவும், குற்றம் கண்டு பிடிப்பதற்கே கண்குத்திப் பாம்பாகக் காத்துக்கொண்டிருக்கும் அநேக எதிர்க்கட்சிக்காரர்களைக் கொண்டதாகவும் உள்ள சட்ட ஸபைகளில் இத்தனை ஸுலபமாகத் தப்புப் பண்ணிவிட்டு அதை ஸமாளித்து விடமுடியும் என்று சொல்லமுடியாது. அதனாலேதான் உள்ளூர் நிர்வாஹத்துக்கு விதிகள் பண்ணும்போது கொஞ்சம் over-careful ஆகவே (மிகையான உஷாரோடேயே) பண்ணியிருக்கிறார்கள் என்று புரிந்துகொண்டு, அதைப் பாராட்டத்தான் வேண்டும். "சில நல்லதுகள் நடக்க முடியாமல் போனாலும் போகட்டும்; ஆனால் ஒரு தப்புகூட நடப்பதற்கு இடம் தந்துவிடப்படாது" என்பதாக நிர்வாஹத் தூய்மையில் அப்படியொரு விசேஷ ஈடுபாடு காட்டி, அதற்காக நல்லது சிலதை த்யாகமும் பண்ணினார்கள் என்பதுதான் நாம் கவனிக்க வேண்டியது.

Koviloor Digital Library

குடும்ப உறவு தேச க்ஷேமத்துக்கு மாறாகவும் ஒருத்தரைச் செய்யத் தூண்டக்கூடும் என்பது நூறில், ஆயிரத்தில் ஒருத்தரைத் தவிர மற்றவர்களுக்குப் பொருந்தக்கூடியதே. இதைக் கவனித்தால் மேற்சொன்ன ஷரத்து நேர்மையான ஆட்சிக்கு முதுகெலும்பு போல தெரிகிறது. ஆனாலும் விதிவிலக்கான பெரிய யோக்யசாலிகளும் இருக்கிறார்களே என்றும் தெரிகிறது.

ஒன்று வேண்டுமானால் யோசித்துப் பார்க்கலாம். எழுபதைத் தாண்டியவர்களைக் கொண்டு அட்வைஸரி கௌன்ஸில் அமைக்கலாமென்றாற்போல, மொத்த நிர்வாஹத்துக்குமே இன்னொன்று அமைக்கலாம். நேராக மந்த்ரி பதவி, அதிகாரிகள் மேல் கட்டுப்பாடு, தன் துறை ஸம்பந்தப்பட்ட ஜனங்களுடன் நேர் தொடர்பு—என்று இல்லாமல், ஆனாலும் ராஜாங்கம் ரொம்பவும் மதிப்புத் தந்து கவனித்து, அமல் நடத்துகிற அளவுக்குச் சக்தியுள்ள ஆலோசனைகள் தரும் ஒரு சக்தி வாய்ந்த கௌன்ஸில் அமைக்கலாம். தேர்ந்தெடுக்கப்படுபவர்களில் அப்பா—பிள்ளை, அண்ணா—தம்பி, அகமுடையான்—பெண்டாட்டி என்று உறவுக்காரர்கள் இருந்தால் இவர்களில் ஒருத்தர் மட்டுமே நேராக அதிகார அதாரிடி ஸ்தானத்துக்கு வரலாமென்றும், மற்றவர் ஆலோசனை கௌன்ஸிலில் இடம் பெறலாமென்றும் ஏற்பாடு பண்ணலாம்.

ஏதோ, இப்போது என் மனஸிலே தோன்றுவதைச் சொன்னேன். நல்ல அரசியல் அறிவு உள்ளவர்கள் ஆர அமர யோசித்து முடிவு காணவேண்டிய விஷயம்.

சோழர்காலத்தில், உறவுப் பாசம் ஊர்நலனை பாதிக்க விடப்படாது என்பதை கவனித்ததே நமக்கு முக்யம்.

இப்படி அவர்களுடைய உசந்த உத்தேசத்தை வைத்து விதிகளைப் பார்த்தால் குறைகள் தெரியாது. அவற்றை நாம் இப்போது அப்படியே adopt பண்ணி (எடுத்துக்கொண்டு) நடத்தத்தான் வேண்டும் என்று சொல்லவில்லை. ஆனாலும்

Koviloor Digital Library

அவற்றிலிருக்கிற அடிப்படை உண்மைகளை நாம் நிச்சயம் கவனித்து, அவற்றை ஸமய ஸந்தர்பங்களைப் பொருத்தும், தேச - கால வர்த்தமானங்களை ஒட்டியும் எப்படிக் கொஞ்சம் மாற்றி adapt பண்ணிக் கொள்ளலாமோ அப்படிப் பண்ணி ஞலே நாட்டுக்கு நல்லது என்று காட்டத்தான் இத்தனை சொல்வதும்.

அப்படியே எங்கேயாவது ஏதாவது கொஞ்சம் குறை இருந்தாலும் மொத்தத்தில் உத்தரமேரூர் சாஸனத்தை நினைக்கிறபோது, அந்தத் தேர்தல் முறையால் தேசத்துக்கு எத்தனை லஞ்சமும் பொய்யும் கக்ஷிவாதமும் கக்ஷிப் பத்திரிகைகளின் ஸாஹஸங்களும்--முடிவிலே ஏமாற்றமும் ஹிம்ஸையும்—மிச்சம் என்பதை எண்ணி த்ருப்தியே ஏற்படுகிறது.

ராமராஜ்யம்

ராமராஜ்யம் ஏற்படவேண்டுமென்று சொல்லிக்கொண்டிருந்தவரின் வார்ஸுகள் இப்போது ஜனநாயகம் ஸ்ருஷ்டி செய்துகொண்டிருக்கிறார்கள். ராமர் புதுசாக ராஜநீதி எதுவும் செய்து ராஜ்ய பாரம் நடத்தவில்லை. தன் அபிப்ராயம், தன் கார்யம் என்று ஸொந்தமாக எதுவும் இல்லாமல் முழுக்க முழுக்க சாஸ்த்ரத்தைப் பார்த்து, பூர்விகர்களின் வழியைப் பார்த்து அந்தப்படியே பண்ணினவர் ஒருவருண்டு என்றால் அது ராமசந்த்ர மூர்த்திதான் மநு மாந்தாதா காலம் முதலாக தசரத சக்ரவர்த்திவரை எந்த தர்மசாஸ்த்ர ஆட்சி முறை நடந்ததோ அதையேதான் ராமரும் பின்பற்றி, நடத்திக்காட்டினார்.

தசரதர் அவருக்குப் பட்டாபிஷேகம் செய்ய உத்தேசித்த போது தன் குமாரன் ஸர்வஜன அபிமானத்தையும் பரிபூர்ணமாகப் பெற்றவன், ஸகல யோக்யதாம்சங்களையும் ஸம்பூர்த்தியாகப் பெற்றவன் என்று தெரிந்திருந்த போதிலும், ஸபை கூட்டி ஜனங்களின் பல தரப்புக்களைச் சேர்ந்த எல்லா ப்ரதி நிதிகளின் அபிப்ராயத்தையும் கேட்டார் என்று சொல்லியிருக்கிறது. அதிலே வைதிக தர்மத்துக்கு வேறாக இருந்த

Koviloor Digital Library

ம்லேச்சர்களுடைய ப்ரதிநிதிகளேக்கூட வரவழைத்து ஆலோசனே கேட்டாரென்று இருக்கிறது. அதுதான் நிஜமான ஜனநாயகம். அதாவது அபிப்ராயங்களேக் கேட்பதில் அவர் இவர் என்ற பேதமில்லாமல், யோக்யதாம்சம் பார்க்காமல் எல்லாருடைய ப்ரதிநிதிகளேயும் கலந்து கொள்ளத்தான் வேண்டும். இங்கேயும்கூட referendum என்பதாக அத்தனே ஜனங்களேயும் அபிப்ராயம் கேட்பது என்றில்லாமல் அவர்களுடைய பல ப்ரதிநிதிகளேத்தான் கேட்டிருக்கிருரென்பது கவனத்துக்கு உரியது. ஏராளமான பாமர ஜனங்களே நேராக ராஜீய விஷயங்களில் கொண்டு வருவதில் அநேக தப்பு தண்டாக்கள், ஏமாற்று மோசடிகள் நடந்துவிடலாம் என்பதை அலக்ஷ்யம் செய்வதற்கில்லே.

இப்படி ஸகல ஜன ப்ரதிநிதிகளிடமும் அபிப்ராயம் கேட்ட பின், தசரதர், ராமர் முதலான அரசர்கள் எப்படி முடிவு எடுத்தார்கள் என்று பார்க்கவேண்டும். Policy-making (கொள்கை வகுப்பது). அநேக திட்டங்களேப் போடுவது என்பதாக முடிவுகள் செய்யும்போது அங்கே ஜன நாயக ஸமத்வத்துக்கு இடம் தரவில்லே. ஞான, சீல, வயோ வ்ருத்தர் என்று சொன்னேனே அப்படிப்பட்ட அநேக யோக்யதாம்சங்களேப் பெற்ற பரம தர்மிஷ்டர்களான மந்த்ரிகளேயே மூலஸ்தம்பமாகக் கொண்டுதான் தசரதரும், அவருக்கு முன்னுலிருந்த ரகுவம்ச ராஜாக்களும், பின்னுல் வந்த ரகுராமனும் முடிவுகள் எடுத்திருக்கிருர்கள்.

பலவகை ஜனங்களின் பலவித அபிப்ராயங்களேயும், அவர்களில் யார் வாயையும் அடைக்காமல் உள்ளது உள்ளபடி கேட்டுத் தெரிந்துகொள்ளத்தான் வேண்டும். பொது ஜன அபிப்ராயத்தை ராமர் எப்படி வெகு முக்யமான விஷயமாகக் கேட்டறிந்து வரச் செய்தார், அதற்காக எப்படித் தன்னுடைய ப்ரிய பத்னியையே த்யாகம் செய்தாரென்பது நமக்குத் தெரிந்ததுதானே? இப்போதுள்ள ஜனநாயகவாதிகளில் யாராவது அப்படி ஜன அபிப்ராயத்துக்கு மதிப்புத்

Koviloor Digital Library

தருவார்களா என்று தெரியவில்லை. இதிலிருந்து அக்காலத்தில் ஜனங்களுக்கு ராஜா - ராணியைப்பற்றிக்கூட எவ்வளவு ஸ்வதந்த்ரமாக வாய்விட்டு அபிப்ராயம் சொல்ல உரிமை இருந்திருக்கிறது என்பதும் தெரிகிறது. அதுதான் உண்மை ஜனநாயகம்.

ஒரு நாய்கூட ராமரிடம் ந்யாயம் கேட்க நேராகத் தானே வழக்குக் கொடுத்திருப்பதாக உத்தர காண்டத்தில் வருகிறது. மநு தர்மப்படி பரிபாலனம் செய்த மநுநீதிச் சோழன் திருவாரூரிலிருந்து கொண்டு ஆட்சி நடத்திய போது ஒரு மாடு ஆராய்ச்சி மணியை இழுத்துத் தன் கஷ்டத்தை விண்ணப்பித்துக் கொண்டது என்று கேட்டிருக்கிறோம். இப்படித் தங்கள் மனஸிலிருப்பதை எவரும் ராஜாங்கத்தின் உச்சஸ்தானத்துக்குத் தெரிவிக்க இடம் தருவதுதான் ஜனநாயகம்.

ஆனால் இந்த அபிப்ராய ஸ்வதந்த்ரத்துக்கும், அதைச் சொல்லிக்கொள்ளும் ஸ்வதந்த்ரத்துக்கும் அதிகமாக ஜனங்களுக்கு உரிமை கொடுப்பது தேசநலமல்ல; ஆனபடியால் நிஜமான ஜனநாயகமும் அல்ல. ஜனங்களுக்கு வித்யாஸம் பார்க்காமல் நல்லது செய்வதற்குத்தான் ஜனநாயகம், ஜன ஸமூஹம் முழுதும் சேர்ந்தே அமைந்த தேசத்துக்கு நன்மை செய்வதுதான் ஜனநாயகம் என்றால், அவர்கள் அபிப்ராயத்தை அறிவதோடு நிற்காமல், அந்த அபிப்ராயங்களின் மேல் முடிவு எடுக்கிற தகாத பாரத்தையும் விஷயம் தெரியாத அவர்கள் மேலோ அல்லது அவர்களால் தேர்ந்தெடுக்கப்படும் விஷயம் தெரியாத ப்ரதிநிதிகளின் மேலோ போடுவது ஜனநாயகமே ஆகாது. இதனால்தான் ஸகல ஜனங்களின் அபிப்ராயங்களையும் ஒளிவு மறைவில்லாமல் தெரிந்து கொண்டபின், முடிவு எடுப்பது என்பதற்கு நிரம்பத் தகுதி வாய்ந்தவர்களை மட்டுமே ராமராஜ்யத்துக்கு, தர்ம ராஜ்யத்துக்கு அடிகோலியவர்கள் துணை கொண்டார்கள்.

முடிவெடுக்கும் நிர்வாஹிகள் உள்பட எவருக்கும் தகுதியே நிர்ணயிக்காமல் அரசியல் நிர்ணயச் சட்டம் என்று

Koviloor Digital Library

ஒன்றைச் செய்து அதில் ஒவ்வொரு விதியாக கான்ஸ்டிட்யுவென்ட் அஸெம்ப்ளியில் பாஸ் செய்துகொண்டிருக்கிற இப்போது நான் செய்யக்கூடியது பழைய முறையை எடுத்துக்காட்டுவதுதான். 'ராமாயணமா? அந்த த்ரேதா யுகத்து ஸமாசாரம் இப்போது ஸரிப்படாது' என்று ஒதுக்கி விட்டுப் போகாமலிருக்கத்தான், 'இது த்ரேதா யுக ஸமாசாரம் மட்டுமில்லை. ஆயிரம் வருஷம் முந்திகூட சரித்ர ஆசிரியர்களெல்லாம் பாராட்டும்படி சிறந்த அரசியலறிவுடன் ஆட்சி நடத்திய சோழர் காலத்திலும் அந்த மாதிரியே ஜனநாயக தத்வம், திறமையான தூய்மையான நிர்வாஹம் என்ற இரண்டையும் எந்த அளவில், எந்த விதத்தில் இணைக்கலாமோ அப்படிச் செய்திருக்கிறார்கள்' என்று காட்ட ஆசைப்பட்டேன். வெள்ளைக்காரர்கள் தங்களுடைய எழுதப்படாத சட்ட சாஸனத்தை (unwritten constitution-ஐ)ப் பற்றிப் பெருமைப்படுகிறார்களென்றால், இந்தத் தமிழ் தேசத்தில் பிறந்த நமக்கோ ஆயிரம் வருஷத்துக்கு முன்பே உருவான எழுதப்பட்ட சட்ட சாஸனம் (written constitution) இருக்கிறது; நன்றாகக் கல்லிலேயே பொறிக்கப்பட்ட சிலா சாஸனமாக இருக்கிறது என்று அதை விடப் பெருமையாகக் காட்டமுடியும் என்பதற்காகக் கதை சொன்னேன்.

அது பழம் பெருமையாக மட்டும் நின்றுவிடாமல், ஆயிர வருஷத்துக்கு முந்திய சாஸனமே இன்றைய சாஸன கர்த்தர்களுக்கும் வழிகாட்டியாவதற்கு ஸ்ரீ ராமசந்த்ர மூர்த்தி க்ருபை செய்வாராக!

Koviloor Digital Library

அத்வைதம்

Koviloor Digital Library

Koviloor Digital Library

போர் தீர்ந்து அமைதி காண

தேவாஸுரர் யார்?

"ஒரு காலத்தில் தேவர்களும் அஸுரர்களும் ஒருத்தரோடொருத்தர் சண்டை போட்டுக்கொண்டார்கள்" என்று சாந்தோக்ய உபநிஷத்தில் ஒரு கதை வருகிறது.* இதற்கு நம்முடைய ஆசார்யாள் பாஷ்யம் பண்ணும்போது, "இங்கே தேவர்கள் என்று சொல்லியிருப்பது கர்மாநுஷ்டானத்தால் பரிசுத்தி செய்யப்பட்ட இந்த்ரிய வ்ருத்திகளை (புலன்களின் ஓட்டங்களை)த்தான். அப்படியே அஸுரர்கள் என்பது வெறும் விஷய போகங்களுடன் (சிற்றின்பங்களுடன்) ஸம்பந்தப்பட்ட இந்த்ரிய வ்ருத்திகளைத்தான்" என்று சொல்கிறார். அப்புறம் இன்னும் ஸ்பஷ்டமாகவே, "இங்கே கூறப்படும் தேவாஸுர யுத்தம் அநாதிகாலமாக ஸமஸ்த ப்ராணிகளில் ஒரு ஜீவன் விடாமல் எல்லாருக்குள்ளேயும் நடந்துகொண்டிருக்கிற போராட்டம்தான் (ஸர்வ ப்ராணிஷு ப்ரதிதேஹம் தேவாஸுர ஸங்க்ராமோ (அ)நாதிகால ப்ரவ்ருத்த:)" என்கிறார். அதாவது ஜீவனுடைய இந்த்ரியங்களை வெளி விஷயங்களில் இழுத்துக் கொண்டு போகிற போக்குகளே அஸுரர்கள் என்றும்

---

* முதல் அத்யாயம், இரண்டாம் கண்டம்.

Koviloor Digital Library

அவற்றை உள்முகப்படுத்தும் போக்குகள் தேவர்கள் என்றும், ஒவ்வொரு ஜீவனுக்குள்ளும் இந்த இரண்டுக்கு மிடையே உண்டாகும் போராட்டம்தான் இங்கே உபநிஷத் சொல்கிற தேவாஸுரப் போர் என்றும் ஆசார்யாள் எடுத்துக் காட்டியிருக்கிறுர்.

இப்படிச் சொன்னதால் அவர் இந்தக் காலத்தில், 'புராணம் எதுவும் நிஜமாய் நடக்கவில்லை. அவையெல்லாம் உருவகக் கதைகள்தான், symbolical தான், allegorical stories தான்' என்று சொல்லும் கோஷ்டியைச் சேர்ந்தவ ரென்று நினைத்துவிடக் கூடாது. உபநிஷத்துக்களிலேயே இன்னும் பல இடங்களில் தேவாஸுரர்களைப் பற்றி வருகிறது. உதாரணமாக, கேநோபநிஷத்தில்* பரமாத்மா தேவர்களுக்காக ஜயித்துக் கொடுத்ததாக வருகிறது. அங்கேயெல்லாம் ஆசார்யாள் தேவர்களை வெறும் உருவக மாகச் சொல்லவில்லை. ப்ரஹ்மஸூத்ரத்தில் "தேவதாதி கரணம்" என்பதற்கு பாஷ்யம் பண்ணும்போது, 'பூலோகத் தில் நாம் இருக்கிற மாதிரி தேவலோகத்தில் தேவர்கள் இருக்கிறுர்கள். இந்த்ரிய ஸுகவாஸிகளான அவர்களுக்கும் அபஜயம், அதனுல் கஷ்டம், அஸூயை முதலியன இருக் கின்றன. ஆனபடியால் அவர்களும் நம்மில் சிலர் மாதிரி வைராக்யமடைந்து அதன்பின் ப்ரம்ம விசாரம் செய்து ஞானத்தினுல் அத்வைத முக்திபெற இடமுண்டு' என்று ஸித்தாந்தம் செய்திருக்கிறுர்.

ஆனுல் வேத, உபநிஷத்துக்களில் சில இடத்தில் ஒரு தத்வத்தைச் சொல்லவும் தேவர், அஸுரர் என்று உருவக மாகக் கதை கட்டுவது உண்டு. இதை 'அர்த்தவாதம்' என்பார்கள். அதாவது கதைக்காகக் கதை அல்ல. தத்வார்த்தத்தைச் சொல்லவே கதை உபாயமாக்கிக் கொள்ளப்படுகிறது. மேலே சொன்ன சாந்தோக்ய கதை இந்த வகையைச் சேர்ந்ததுதான் என்பது பகவத்பாதாள்

---

* மூன்றும் கண்டம்

Koviloor Digital Library

அபிப்ராயம். இங்கே 'தேவர்' என்பது இந்திரிய ஸுக வாஸிகளான ஒரு ஜீவ இனத்தைக் குறிக்காமல், இந்த்ரிய ஸுகத்தை விட்டு நித்ய ஸுகத்துக்கு ஜீவனைத் திருப்பிவிடும் நல்ல சக்திகளைக் குறிக்கிறது; personify செய்கிறது. கீதையிலே "தைவாஸுர ஸம்பத் விபாக யோகம்" என்று ஒரு அத்யாயம் இருக்கிறது. அதிலே பகவான், க்ருஷ்ண பரமாத்மா, தெய்விக குணங்கள் என்னென்ன, ஆஸுர குணங்கள் என்னென்னவென்று ஜாபிதா போட்ட மாதிரிக் கோ(ர்)வையாகக் கொடுத்திருக்கிறார். பயமற்ற குணம், சுத்தமான ஸாத்விக எண்ணம் என்று ஆரம்பித்து தானம், தபஸ், நேர்மை, அஹிம்ஸை, ஸத்யம், த்யாகம், சாந்தம், பிறத்தியாரிடம் கொஞ்சமும் க்ரோதம் பொறுமை த்ரோஹ சிந்தனை இல்லாமல் அவர்கள் என்ன தப்புப் பண்ணினாலும் க்ஷமித்துக் கொண்டு ஸர்வ பூதங்களிடமும் தயையோடு இருப்பது—என்றிப்படியானவற்றை யெல்லாம் தைவீ ஸம்பத் என்கிறார். தைவீ ஸம்பத் என்றால் தெய்விகமான குணச் செல்வம். இந்த குணங்களைத்தான் சில சமயங்களில் தேவகணம் என்று சொல்லி அஸுர கணங்களோடு சண்டை போடுவதாக "allegory" (ரூபகம், அதாவது உருவகம்) செய்வது. அஸுர கணம் என்பது இதே மாதிரி எந்த ஆஸுர குணங்களுக்கு ரூபகமாயிருக்கின்றன என்பதையும் சொல்கிறார். 'டம்பம், கர்வம், க்ரோதம், சுடுசொல், அஞ்ஞானம் ஆகியவை அஸுரத் தன்மையுள்ளவை. சாஸ்த்ரங்களில் "இப்படிப் பண்ணு" "இப்படிப் பண்ணாதே" என்று சொன்ன ப்ரவ்ருத்தி, நிவ்ருத்திகளுக்கு நேர்மாறாகப் பண்ணுவது; அநாசாரமாக, அஸத்யமாக, ம்ருக ப்ராயமாக இருப்பது'—என்றிப்படி ஆஸுர குணங்களுக்கு ஜாபிதா கொடுத்துக்கொண்டு போகிறார். ஸம்ஸாரக் கட்டிலிருந்து விடுவித்து மோக்ஷத்துக்குச் சேர்க்க உதவுகிற எல்லாம் தைவீ ஸம்பத் என்றும், இன்னும் கெட்டியாகக் கட்டிப் போடுவதெல்லாம் ஆஸுரி ஸம்பத் என்றும் தெளிவாக விளக்கிவிட்டு, "அப்பா அர்ஜுனா! 'இதிலே நாம் எதுவோ? எதிலே போய்

Koviloor Digital Library

விழுவோமோ?' என்று கவலைப்படாதேயப்பா! தைவீ ஸம்பத்துக்குப் பாத்ரனாகத்தான் நீ பிறந்திருக்கிறாய்'' என்று ரொம்பக் கருணையோடு தைர்யம் சொல்கிறார். இதிலிருந்து ஒரு ஜீவனை ஆச்ரயித்திருப்பவைதான் தேவாஸுர சக்திகளென்று தெரிகிறது.

நமக்கே இந்த தேவாஸுர யுத்தம்—அதாவது நமக்குள்ளே நடக்கிற போராட்டம்—நன்றாகத் தெரியத்தான் செய்கிறது. ஒரு பக்கம் யாரோ, "நல்ல கார்யம் பண்ணு, காமியாய்த் திரியாதே, கோவிச்சுக்காதே, அஸூயைப் படாதே, கோவிலுக்குப் போ, த்யானம் பண்ணு, தொண்டு பண்ணு'' என்று சொல்லுகிறமாதிரி இருக்கிறது. இன்னொரு பக்கம் இதற்கெல்லாம் நேர் வித்யாஸமாக யாரோ நம்மைத் தூண்டுகிறது போல இருக்கிறது. துரத்ருஷ்டவசமாகப் பின்னாலே சொன்னவர் தூண்டிவிடுகிற வழியில்தான் நாம் முக்காலே மூணு வீசம் போகிறோம். அப்புறம் அழுகிறோம். அவமானப்படுகிறோம். பச்சாத்தாபப்படுகிறோம். அந்தமாதிரி ஸமயங்களில் முதலில் சொன்ன குரலின்படி துளி நடக்கப் பார்க்கிறோம். மறுபடி இரண்டாவது குரல் பெரிசாகக் கேட்கிறது. சறுக்கி விழுகிறோம். மறுபடி அப்போதைக்கு ஒரு ஸத் ஸங்கல்பம் பண்ணிக் கொண்டு சறுக்கு மரத்தில் ஏறப் பார்க்கிறோம். ஒரே வழவழப்பான சறுக்கு மரத்தில், ஏறுகிறவனும் எண்ணெயைப் பூசிக் கொண்டு ஏறப்பார்க்கிற மாதிரிதான் நம் சுப யத்னம் இருக்கிறது. ஆனால் எங்கேயோ துளி அது இல்லாமலில்லை. "யத்னம்'' என்று செயல் முயற்சியாக அது வராதபோதுகூட "இப்படி யத்னம் பண்ணு, இதற்கு வேறேயான வழியில் நீ போறது ஸரியில்லை" என்று உள்ளே யாரோ சொல்வது மட்டும் நடக்கிறது. மாறி மாறி நம்மைத் தப்புக்களிலே தூண்டி விடுகிற சக்தியும் இதுவுமாகக் குஸ்தி போட்டுக் கொண்டிருக்கின்றன. அதாவது கெட்ட வ்ருத்திகளுக்கும் நல்ல வ்ருத்திகளுக்கும் நம் மனஸில் நித்யம் சண்டை நடக்கிறது.

Koviloor Digital Library

வ்ருத்தி (vritti) என்றால் போக்கு, ஓட்டம். 'சித்த வ்ருத்தி' என்றால் நம் எண்ணங்களின் ஓட்டம். ஒவ்வொரு தினுஸான ஓட்டமும் ஒரு வ்ருத்தி. இப்படி க்ஷணத்துக்கு நூறு வ்ருத்தி நம் சித்தத்தில்! அதில் தொண்ணூறு கெட்ட வ்ருத்தி, பத்து நல்லதாக இருக்கலாம். நல்ல வ்ருத்தி தான் தேவர்கள். கெட்ட வ்ருத்திகள் அஸுரர்கள்.

அஸுரப்போக்கு தோன்றுவது ஏன்?

தொண்ணூற்றென்பது பெர்ஸென்ட் ஜயிப்பது அஸுரர் கள்தான். ஒரு பெர்ஸென்ட் தேவர்கள் ஜயிக்கிறபோது பரம ஆனந்தமாயிருக்கிறது; ஏதோ ஒரு நிறைவு தெரிகிறது; ஹ்ருதயம் அப்போதுதான் ப்ரஸன்னமாக (தெளிவாக) இருக்கிறது. மறுபடி இருட்டு வந்து மூடுகிறது. அஸுரர்கள் ஜயிக்கட்டும் என்று தோன்றுகிறது. அவர்களும் ஜயத்துக்கு மேல் ஜயம் பெற்றுக்கொண்டே போகிறார்கள். கொஞ்சம் யோசித்துப் பார்த்தால், இத்தனை ஜயத்திலும் உள்மனஸு நிறையவே இல்லை, தெளியவே இல்லை, மேலும் கலங்கிக் குழம்பி கும்பியாகத்தான் போயிருக்கிறது என்று தெரிகிறது. துக்கம் துக்கமாக வருகிறது. "இப்படி புத்தி பாழாப்போச்சே" என்று அழுகிறோம். "இனிமேலே இப்படிப் பண்ணுவதில்லை" என்று தீர்மானம் செய்து கொள்கிறோம். தீர்மானம் ரொம்ப பலமாக இருக்கிற ஸமயத்தில் மட்டும் அடுத்த தடவை அந்த மாதிரி உணர்ச்சிகள் ஏற்பட்டால் அதன் வேகத்தை மட்டுப் படுத்தித் தட்டிவிடுகிறோம். ஆனாலும் இப்படி ஒரு தடவை, இரண்டு தடவை தட்டிவிட் டாலும் அப்புறம் நமக்கே தெரியாமல் அந்த வேகம்—அது காமமோ, க்ரோதமோ, பொறாமையோ, பொருளாசையோ எதுவோ ஒன்று--அது நம்மை அடித்துக்கொண்டு போகவிட்டு விடுகிறோம். இப்படி ஆஸுர சக்திகளின் ஆவேசத்தில் செய் கிற எல்லாம் பாபங்களாக நம்முடைய கர்மாக் கணக்குப் புஸ்தகத்தில் ஏறிவிடுகின்றன.

Koviloor Digital Library

"யாரோ நம்முடைய பிடரியைப் பிடித்துத் தள்ளுகிற மாதிரி நாம் இப்படிப் பாபத்தைப் பண்ணுகிறேமே! இது எதனுல்?" என்று இதைப்பற்றித்தான் அர்ஜுனன் (கீதையில்) பகவானைக் கேட்கிறுன் (அத்யாயம் 3, ச்லோகம் 36):

அத கேந ப்ரயுக்தோ (அ)யம் பாபம் சரதி பூருஷ: |
அநிச்சந்நபி வார்ஷ்ணேய பலாதிவ நியோஜித: ||

வ்ருஷ்ணி என்பவர் க்ருஷ்ணரின் மூதாதையரில் ஒருவர். வ்ருஷ்ணியின் குலத்தோன்றலானதால் அவரை "வார்ஷ்ணேய" என்று கூப்பிட்டு அர்ஜுனன் கேட்கிறுன். குந்தி பிள்ளை என்பதால் இவனை அவர், "கௌந்தேய", "கௌந்தேய" என்று கூப்பிட்டு உபதேசம் பண்ணுகிற மாதிரி இவன் அவரை, "வார்ஷ்ணேய" என்று கூப்பிட்டுக் கேள்வி கேட்கிறுன்.

பயத்துக்கு இடம் தரும் த்வைதம்

இதற்குமுன் அவர் அவனிடம், "ஒவ்வொருத்தனும், அவன் ஞானவானுயிருந்தாலுங்கூட, தன் இயற்கைப்படி தான் நடப்பான். ப்ரக்ருதி என்கிற இயற்கையிலேதான் ஜீவன் தோன்றியிருக்க, ப்ரக்ருதி வேகத்தை ஒருத்தன் நிக்ரஹம் பண்ணுவதென்பது (அடக்குவது) எப்படி முடியும்? அதனுல் அவரவர் இயற்கையை அநுஸரித்துப்போயே நாசூக்காக, க்ராஜுவலாக (ஒவ்வொரு படியாக) அதை சீர்திருத்தி உயர்த்துவதற்காக அவரவர் இயற்கைக்கும் ஏற்றபடி பல தொழில்களையும், அதற்குரிய வாழ்முறைகளையும் வர்ண விபாகம் செய்து 'ஸ்வதர்மம்' என்று கொடுத்திருக்கிறது. இதிலே ஒருத்தனின் ஸ்வதர்மம் இன்னெருத்தனுடையதைவிட ச்ரேஷ்டமாகத் தோன்றலாம். ஆனுலும் அது நன்ருயிருக்கிறதே என்று இவன் தன்னுடைய ஸ்வதர்மத்தைவிட்டு அதற்குப் போனுல் இவனுடைய ப்ரக்ருதி அதிலே இவன் ஒழுங்காகச் செயலாற்ற விடாது. விளைவாக அந்தத் தொழிலும் அந்த வாழ்முறையும் கெட்டு, இவன் தன்

Koviloor Digital Library

ஸ்வதர்மப்படி செய்திருக்க வேண்டிய தொழிலின் பலனும் ஸமூஹத்துக்கு நஷ்டமாகி ஒரே குழறுபடியாகிவிடும். ஆனதினுலே, தனக்காக ஏற்பட்ட தர்மம் அவ்வளவு சிறந்த தாகத் தோன்ருவிட்டாலுங்கூட, சிறந்ததான இன்னென்றுக்குப் போவதைவிட இதையே அநுஷ்டானம் பண்ணுவது தான் ச்ரேயஸ்'' என்றெல்லாம் சொல்லி, முடிவாக ஒன்று ரொம்ப அழுத்தமாகச் சொன்னுர். க்ஷத்ரிய தர்மத்தை விட்டுவிட்டு, "யுத்தம் வேண்டாம்; இந்த ஜீவஹிம்ஸையை விடப் பிச்சை வாங்கிச் சாப்பிடுவதே மேல்'' என்று ப்ராம்மண ஸந்நியாஸியின் தர்மத்துக்குப் போக நினைத்த அர்ஜுனனுக்கு நன்ருக உறைக்கிற மாதிரி, "ஸ்வதர்மத்தைப்பண்ணிச் செத்தாலும் அதுவே ச்ரேயஸ். பிறனுடைய தர்மத்தில் போவது பெரிய பயத்தில் கொண்டுவிடும்'' என்று முடித்தார்.

பயம் என்ருல் என்ன? 'நமக்கு என்ன ஆயிடுமோ? ஏதாயிடுமோ?' என்று நிம்மதியில்லாமல் தவிப்பதுதான் பயம். 'நம்மை எதுவும் என்னவும் பண்ணமுடியாது; அசைக்க முடியாது', என்று ஸ்திரமாக ஒரு ஸ்தானத்தில் நம்மை அமர்த்திக் கொள்கிறவரையில் பயம் இருந்து கொண்டே இருக்கும். அப்படி ஜீவனை ஆட்டமில்லாத நிம்மதியான ஒரு ஸ்தானத்தில் சாச்வதமாக இருக்கச் செய்வதுதான் மோக்ஷநிலை என்பது. நமக்கு அந்நியமாக எதுவோ ஒன்று இருக்கிறவரைக்கும், 'அது நம்மை என்ன பண்ணிவிடுமோ? நாம் நிம்மதியின் ஸௌக்கியத்திலேயே ஸ்திரமாக இருக்கமுடியாதபடி அதனிடமிருந்து என்ன கெடுதல் வருமோ?' என்ற எண்ணம், அதாவது பயம், இருந்துகொண்டேதான் இருக்கும்.

'நாம் ஒன்று; நமக்கு இரண்டாவதாக இன்னொரு அந்நிய வஸ்து, அநேக அந்நிய வஸ்துக்கள், உள்ளன' என்ற வேறுபாட்டுக்குத்தான் "த்வைதம்'' என்று பெயர். 'த்வி' (dvi) என்ருல் இரண்டு. 'Two' என்பது அதிலிருந்து வந்ததுதான். உச்சரிப்பு 'டூ' என்று இருப்பதால், இந்த

Koviloor Digital Library

ஸம்பந்தம் பளிச்சென்று புரியாமலிருக்கலாம்; ஸ்பெல்லிங்கைப் பார்த்தால் புரிந்துவிடும். T-W-O என்பது D-V-I ஸம்பந்தமுடையதாகத் தெரிகிறதல்லவா?

த்வைதமிருந்தால் அப்போது ஒன்றுக்குத் தன்னைவிட வேறாக உள்ள இன்னொன்றால் பயம் ஏற்பட இடமுண்டு. எப்போது த்வைதம் போய், தனக்கு வேறாக எதுவுமே இல்லை என்று தெரிந்து கொள்கிறோமோ, வேறில்லாத தானாகிய ஆத்மாவில் ஆணி அடித்தாற்போல் நம்மை ஸ்திரமாக அமர்த்திக் கொள்கிறோமோ, அப்போதுதான் பயம் போகும். இப்படி த்வைதமில்லாமல் ஆவதுதான் அத்வைதம்.

வேதம் சொல்கிற மோக்ஷம் அந்த அத்வைத அநுபவந்தான் என்று நம்முடைய ஆசார்யாள் ப்ரஹ்ம ஸூத்ரம், உபநிஷத்துக்கள், கீதை ஆகியவற்றுக்குப் பாஷ்யம் செய்து நிலைநாட்டியிருக்கிறார். அத்வைதம்தான் மோக்ஷம். அது பயமில்லாத அபயநிலை.

அத்வைதமே அபயம்

இந்த விஷயத்தை உபநிஷத்துக்களில் சொல்லியிருக்கிறது. ஒன்றேயான ஸத்யவஸ்துவில்—மெய்ப்பொருள், ஆத்மா, ப்ரஹ்மம் என்றெல்லாம் சொல்வது அதைத்தான்; அந்த ஸத்ய வஸ்துவில்—எப்போது ஒருவன் அதற்கு அந்நியமாக இன்னொன்றை பேதம் செய்து பார்க்கிறானோ அப்போதே அவனுக்குப் பயம் ஏற்பட்டுவிடுகிறது என்று தைத்திரீய (உபநிஷ)த்தில் சொல்லியிருக்கிறது[1]. ப்ருஹதாரண்யகத்திலும் ஒரு இடத்தில்[2] ப்ரஜாபதியானவர், "எனக்கு அந்நியமாக எதுவும் இல்லாதபோது எனக்கு எதைக் குறித்து பயம் ஏற்படும்?" என்று கேட்டதாகச்

---

1. தைத்திரீய உபநிஷத்தின் ஆனந்தவல்லி எனும் பகுதியில் ஏழாவது மந்த்ரம்.

2. முதல் அத்யாயம், நாலாம் ப்ராஹ்மணம், இரண்டாவது மந்த்ரம்.

Koviloor Digital Library

சொல்லிவிட்டு, "இன்னொன்று இருந்தால்தான் த்வித்தீயமான அதனிடமிருந்து பயம் உண்டாகிறது" என்று முடித்திருக்கிறது.

இப்படிச் சொன்னதால் அத்வைதமாகப் போய்விட்டால் பயமே இல்லை என்று ஆகிவிடுகிறது. இப்படி ஒன்றிலிருந்து inference-ஆக (அநுமானமாக) அந்த முடிவை draw பண்ணிக்கொள்ளும்படி நம்மை விடுவதோடு நிற்காமல், டைரக்டாகவே அத்வைதம்தான் அபயநிலை என்றும் உபநிஷத்துக்கள் பல இடங்களில் உபதேசிக்கின்றன. தைத்திரீயத்திலேயே சற்று முன்னடி சொன்னதற்கு இரண்டு மூன்று மந்திரம் முந்தி,* மனோ வாக்குகளால் எட்ட முடியாததான அத்வைதமான ப்ரஹ்மாநந்த நிலையைச் சொல்லிவிட்டு, அதை அடைந்தவன் ஒருபோதும் பயப்பட மாட்டான் என்று நேரடியாகக் கூறியிருக்கிறது. அப்புறம், 'ஆனந்தவல்லி' என்ற அந்தப் பகுதியை முடிக்கிற இடத்தில் மறுபடியும், மனோவாக்குகளால் எட்டமுடியாத ப்ரஹ்மா நந்த அத்வைத நிலையை அடைந்தவன் ஒரு இடத்திலும் பயப்படமாட்டானென்று சொல்லியிருக்கிறது. முதலில், காலத்தில் ஒருபோதும் ("கதாசன") பயப்படமாட்டான் என்றும், அப்புறம், ஒரு இடத்திலும் ("குதச்சன") பயப்பட மாட்டான் என்றும் சொன்னதால், இப்போது ஸயன்ஸில் ஸகல தத்வங்களையும் அடக்கிக்கொண்டு விடும் இரண்டு ஆதார வஸ்துக்கள் என்று சொல்லும் Time, Space இரண்டையும் சொன்னதாகிவிடுகிறது. இதே போல ப்ருஹதாரண்யகத்திலும் (நான்காம் அத்யாயத்தின் நான்காம் பிரிவான) சாரீரக ப்ராஹ்மணம் எனும் ஸெக்ஷனின் கடைசி மந்த்ரங்களில் ஆத்ம ஞானியை வர்ணித்துவிட்டு முடிவாக, ப்ரஹ்மமேயான ஆத்மா அஜரமானது (மூப்பில்லாதது), அமரமானது, அம்ருதமானது என்று அடுக்கு மொழியில் சொல்லி, இவற்றோடு அது அபயமானது என்றும் கூறியிருக்கிறது. மறுபடியும் தனியாக எடுத்து, "ஆமாம்,

* ஆனந்தவல்லி நான்காம் மந்த்ரம்.

Koviloor Digital Library

ப்ரஹ்மம் என்றால் அபயம்தான். தன் ஆத்மாவை ப்ரஹ்மமாகத் தெரிந்துகொண்டவன் பயமேயில்லாதவனாகிறான்'" என்று முத்தாய்ப்பு வைத்திருக்கிறது.

அபயம் - மோக்ஷம்; பயம் - ஸம்ஸாரம்

மோக்ஷ ஸ்தானம் அபயம் என்பதால் பயம் என்பது எந்த ஸ்தானத்தைக் குறிக்கும் என்று கண்டுபிடித்து விடலாம். பயமும் அபயமும் ஒன்றுக்கொன்று 'ஆப்போஸிட்'. அதனால், பயத்தின் ஸ்தானம் மோக்ஷத்துக்கு 'ஆப்போஸிட்'டாக இருக்கவேண்டும். மோக்ஷம் என்றால் 'விடுபட்ட நிலை'. அதற்கு ஆப்போஸிட் 'கட்டுபட்ட நிலை'. இதை 'பந்தம்' என்பார்கள். பந்த - மோக்ஷம் என்று சொல்வது வழக்கம். லோக வாழ்க்கையான ஸம்ஸாரம் தான் பந்தம். ஸம்ஸார பந்தம் என்று சேர்த்தே சொல்கிறோமல்லவா? அதனால் பயம் என்பது ஸம்ஸாரத்தைக் குறித்துத்தான். இந்தத் தடவை ஜன்மா வந்துவிட்டது. இந்த ஜன்மா முடிந்து சரீரம் போய்விட்ட பிறகாவது இன்னொரு ஜன்மா, மறுபடியும் சரீரம் என்று வராமலிருக்க வேண்டும். அதாவது மறுபடி ஸம்ஸார பந்தத்தில் சிக்கிக் கொள்ளாமல் விடுபட்டு மோக்ஷ ஸ்தானம் சேரவேண்டும். செத்தபின் "புனரபி ஜனனம்" வந்துவிடுமோ என்பதுதான் பெரிய பயத்துக்குரிய விஷயம். "பெரிய பயம்" என்று நான் சொன்னதையே பகவான் "மஹத் பயம்" என்று ஒரு இடத்தில் சொல்லியிருக்கிறார்*. கர்மயோகம் என்பதாகப் பலனில் ஆசையில்லாமல் சாஸ்த்ரம் விதித்த கர்மாக்களை வழுவறப் பண்ணவேண்டும் என்று உபதேசிக்க வந்த பகவான் இந்த நிஷ்காம்ய கர்ம யோகத்தைக் கொஞ்சம் பின்பற்ற ஆரம்பித்தாலும் போதும், அது பெரிய பயத்திலிருந்து ("மஹதோ பயாத்") காப்பாற்றிவிடும் என்கிறார்:

ஸ்வல்பமப்யஸ்ய தர்மஸ்ய த்ராயதே மஹதோ பயாத்

---

* கீதை 2. 40.

Koviloor Digital Library

காம்ய கர்மமாக ஸ்வய ஆசையின்மீதே பண்ணும் கர்மாதான் ஜீவனை ஸம்ஸாரத்தில் கட்டிப்போடுவது. நிஷ்காம்ய கர்மமோ இந்தக் கட்டை அவிழ்த்துக்கொள்ள உதவி பண்ணுவது. ஆகையினால் மஹா பயத்திலிருந்து அது காப்பாற்றும் என்று பகவான் சொல்லும் இடத்தில் 'மஹா பயம்' என்பது ஸம்ஸார பயம்தானென்று ஆசார்யாள் பாஷ்யம் பண்ணியிருக்கிறார்.

நரக பயம்

கட்டவிழ்த்து விட்டால் மோக்ஷம். கட்டிலேயே இருக்கப் பண்ணுவது என்றால் மறுபடி ஜன்மா எடுத்து ஸம்ஸாரத்தில் உழலும்படிச் செய்வது. செத்த அப்புறம் இப்படி இன்னொரு உடம்பிலே போட்டுக் கட்டிவிடுவானோ என்ற பயம். இதிலேயே கிளை விடுவதாக இன்னொரு பயம், செத்ததற்கு அப்புறம் நரகத்திலே போய் மஹா கஷ்டப்பட வேண்டியிருக்குமோ என்பது. கர்மா மூட்டை ஸாதாரணத் தப்புகள் உள்ளதாயிருந்தால் இந்த பூலோகத்தில் மறு ஜன்மா எடுப்பதோடு போகும். இதுவே பெரிய கஷ்டந்தான், ஸம்ஸார பந்தந்தான். ஆனதால் பயத்துக்குக் காரணமாகிறது. ஆனால் ஸாதாரணத் தப்போடு போகாமல் மஹா பாபங்களைச் செய்து நாம் மூட்டை கட்டிக்கொண்டிருந்தாலோ, செத்தவிட்டு, மறுபடி இந்த லோகத்திலேயே இன்னொரு உடம்பு எடுப்பதற்கு முந்தி, இதைவிட ரொம்ப ரொம்பக் கஷ்டம் தருவதான நரக லோகத்துப் போய் சொல்ல முடியாத சித்ரவதைகள் படவேண்டும். மநுஷ உடம்பால் தாங்கமுடியாத சித்ரவதைகளைத் தாங்கி அவதிப் படுவதற்காகவே யாதனா சரீரம் என்ற ஒன்றை எடுத்துக் கொண்டு நரகத்திலே போய் படாதபாடு படவேண்டும்.

ஆகையால் மோக்ஷத்துக்கு 'ஆப்போஸிட்' ஸம்ஸாரம் என்றால், அதிலும் ரொம்ப 'ஆப்போஸிட்'டாக இருப்பது நரகம். ஆகையினால் பூர்வசாஸ்த்ரங்களில், "பயங்கரமானது", "கஷ்டமானது" என்று வருகிற இடங்களில்

Koviloor Digital Library

நரகத்திலே தள்ளுவதையே இவை குறிப்பதாக ஆசார்யாள் பாஷ்யம் பண்ணுவதுண்டு.

மனமே பந்த காரணம்

ஏக ஸத்யமாக ஆகாமல் த்வைதமாக இருக்கிறவரையில் இன்னொன்றால் பயம் ஏற்படுகிறது என்று பார்த்தோம்.

ஏக ஸத்யமாக ஆவதுதான் மோக்ஷம்—பரிபூர்ணமாக விடுபட்ட நிலை. வீடு, விடுதலை என்பது.

"எதிலிருந்து விடுதலை, ஸ்வாமிகளே?"

ஸம்ஸாரத்திலிருந்து.

"இந்த ஸம்ஸாரத்தில் எதனால் கட்டுப்பட்டோம்?"

கர்மாவினால்! இது தெரியவில்லையா அப்பா?

"எதனால் கர்மா பண்ணினோம்?"

ஆசைகளைப் பூர்த்தி பண்ணிக் கொள்வதற்காகத்தான்.

"ஆசை எதனால் உண்டாயிற்று?"

மனஸ் என்று ஒன்று இருப்பதால். மனஸ்தான் இந்த்ரியங்களின் வழியாகத் தன் ஆசைப் பூர்த்திக்கான அநுபவங்களை அநேக கார்யங்களின் மூலம் பெறுகிறது. ஸினிமா பார்ப்பது, வம்பு பேசுவது, கண்ட வஸ்துக்களைத் தின்னுவது என்று அநேக கார்யங்கள்.

"அப்படியானால் ஸம்ஸாரத்திலிருந்து விடுதலை என்றால் மனஸிலிருந்தே விடுபட வேண்டும் என்றுதானே ஆகும்?"

ஆமாம், அப்படித்தான்

மனமற்ற ஆத்மாவின் ஆனந்தம்

"ஆனால் மனஸ் போய்விட்டால் நமக்கு ஒன்றுமே தெரியாதே! அது போனால் நாமே போய்விட்ட மாதிரி தானே? அப்புறம் மோக்ஷ ஆனந்தம் என்று ஒன்றை யார் அநுபவிப்பது? இல்லாவிட்டால், மோக்ஷம் என்பது தூக்கம்,

Koviloor Digital Library

மூர்ச்சை மாதிரி எதுவும் தெரியாமல் ஜடம் மாதிரி ஆகி விடுவதுதானு?''

இல்லை, இல்லை. அதுவே நிஜமான ஆனந்தம்; சாச்வதமான, மாறாத ஆனந்தம். ப்ரஹ்மாநந்தம், ஆத்மானந்தம் என்றே சொல்லப்படும் பேரின்பம். ப்ரக்ருதத்தில் (நடைமுறையில்) கூட, நாம் ரொம்பவும் இன்பமான ஒரு அநுபவம் பெற்ருல், "ப்ரஹ்மாநந்தமாயிருந்தது" என்றுதானே சொல்கிருேம்? ப்ரஹ்மம் இப்படிப்பட்டதா, இப்படிப் பட்டதா என்று தபஸ் பண்ணிப் பண்ணிப் பார்த்து, ஒவ்வொரு நிலையில் ஒவ்வொன்றை ப்ரஹ்மம் என்று நினைத்த ப்ருகு முடிந்த முடிவான நிலையில் ஆனந்தம்தான் ப்ரஹ்மம் என்று தெரிந்து கொண்டார் என்று தைத்திரீயம் சொல்கிறது. அதனுல் இந்த விஷயத்தைச் சொல்லும் ஸெக்ஷனுக்கே "ஆனந்தவல்லி" என்று பெயர்.

"எல்லாம் ஸரி, அநுபவிப்பதற்கு மனஸ் என்று ஒன்று இல்லாவிட்டால் ஆனந்தம் எப்படித் தெரியும், ஸ்வாமிகளே?''

இங்கேதானப்பா த்வைத—அத்வைத ஸமாசாரம் வருகிறது. மனஸுக்கு இன்னொன்றைத்தான் தெரியும். தன்னைத் தெரியாது. மஹா ஸாமர்த்யத்தோடு எதெதையோ தெரிந்துகொள்கிற அது தன்னையே தெரிந்து கொள்ள முடியாத மஹா அசடாக இருக்கிறது! நீயே ஆலோசித்துப் பாரப்பா, புரியும். மனஸினுல் அதற்குப் புறம்பான விஷயங்களைத்தான் நினைக்கவும், புரிந்து கொள்ளவும், அநுபவிக்கவும் முடிகிறது. நீ எத்தனையோ நினைக்கிருய், எழுதுகிருய், தெரிந்துகொள்கிருய், எக்ஸ்பீரியன்ஸ் பண்ணுகிருய், ஆனுல் இதை எல்லாம் செய்யும் உன் மனஸ் என்னவென்று உனக்குப் புலப்படுகிறதோ? அதை நிறுத்திவைத்து இன்னவென்று தன்னைத்தானே பார்த்து அறிந்துகொள்ளும்படிப் பண்ணமுடிகிறதோ? இந்த நிமிஷம் நல்லதாய்த் தெரிகிற மனஸ் அடுத்த நிமிஷம் மஹா கெட்டதாய் விடுகிறது. இந்த ஸெகன்ட் ஸந்தோஷமாயிருக்கும் மனஸ் அடுத்த ஸெகன்ட் துக்கம் கொண்டாடு

Koviloor Digital Library

கிறது. இந்த க்ஷணம் ஏதோ கொஞ்சம் சாந்தமாயிருக்கிற மாதிரித் தோன்றுகிற இந்த மனஸு அடுத்த க்ஷணம் அப்படியிருக்குமா என்று தெரியவில்லை. இந்த மனஸ் என்பது என்ன? புரியவே இல்லை. 'இதனுல்தான் ஜீவனுக்கு எல்லா அநுபவமும் ஏற்படுகின்றன. இது வேலை செய்யாமல் தூங்கிப்போனுல், அல்லது மூர்ச்சை போட்டு விழுந்துவிட்டால் எந்த அநுபவமுமேயில்லை' என்பதால் இதுவேதான் நாம் என்று தோன்றுகிறது. அப்படித் தான் நினைத்து நீ கேள்வி கேட்டாய்.

"ஆமாம் அப்படித்தான் நினைத்தேன். அப்படி இல்லை என்று நீங்கள் இன்னமும் காட்டவில்லை."

மனம் அற்ற நிலையிலும் "நாம்"

ஸரி; தூக்கத்தின்போது, மூர்ச்சையின்போது உனக்கு எந்த அநுபவமும் இல்லை என்பது ஸரி. நாமிருக்கிறும் என்பது உனக்குத் தெரியத்தான் இல்லை. ஆனுல் நீ அப்போது நிஜமாகவே இல்லாமல் போய்விட்டாயா, என்ன? அப்படியானுல், தூக்கத்துக்கு அப்புறம் எப்படி முழித்துக் கொண்டாய்? தூக்கம் கலைந்து எழுந்த அப்புறம் அப்படி ஜடமாகக் கிடந்ததற்கும் சேர்த்து வைத்து எப்படிக் காரியம் செய்ய ஆரம்பித்தாய்? மூர்ச்சையைப் பற்றியும் இப்படியே யோசித்துப்பார். தூக்கத்துக்கும், மூர்ச்சை போடுவதற்கும் முந்தி நீயாக இருந்த ஆஸாமியேதான் தூக்கம் கலைந்த பிற்பாடும், மூர்ச்சை தெளிந்த பிற்பாடும் நீயாக இருப்பது என்பதும் தெரிகிறதோல்லியோ? அப்போது உனக்கிருந்த அபிப்ராயங்கள், அநுபவங்கள் உறவுமுறைகள் எல்லாம் இப்போதும் தொடர்ந்து வருகின்றன அல்லவா? அந்த உடம்பேதானே இப்போதும் உன் உடம்பாயிருக்கிறது? இதெல்லாவற்றுக்கும் மேலாகத் தூங்குகிறபோதும், மூர்ச்சை போட்டுக் கிடந்தபோதும் உன் உயிர் இருக்கத்தானே செய்தது? ரத்த ஓட்டம், தேஹத்தில் உஷ்ணம், ச்வாஸம் எல்லாம் இருக்கத்தானே செய்தன? அதனுல் மனஸ் இல்லாதபோது நீ இருக்கத்தான்

Koviloor Digital Library

இருந்தாய். அதாவது "நான் நான்" என்று மனஸ் உள்ள போதுதான் நாம் இருப்பதை நம்மால் தெரிந்து சொல்லிக் கொள்ள முடிகிறதென்றாலும், மனஸ் இல்லாத போதும்கூட நாம் இருந்து கொண்டுதானிருக்கிறோம்.

நிஜ "நாம்"

மனஸை வைத்துத்தான் ஸகல எண்ணமும், உணர்ச்சியும்; இவை இல்லாதபோது ஜீவன் ஜடத்துக்கு ஸமானம் தான் என்பதால் மனஸைத்தான் 'நாம்' என்று நினைக்கத் தோன்றுகிறது. ஆனால் இது இல்லாமலும் நம்மை ஜடமாகவோ, கிடமாகவோ எதுவோ ஒன்றாக உயிரோடு இருக்கப் பண்ணுவதாக இன்னொன்று இருக்கிறது என்னும் போது அதுதான் நம்முடைய நிஜமான 'நாம்' என்று ஆகிறது. எப்படியென்றால், மனஸ் இல்லாதபோதும் அது இருக்கிறது; ஆனால் அது இல்லாமல் போனால் மனஸும் இல்லாமல் போய்விடுகிறது. சரீரத்தை விட்டு உயிர்த் தத்வம் போய்விட்ட பிறகு அந்த சரீரத்துக்கு உணர்ச்சியும் போய்த்தானே விடுகிறது? பிணத்துக்கு மனஸ் உண்டா? ஸரி, சரீரத்தை விட்டுப்போன உயிர்த் தத்வம் இந்த சரீரத்தில் இல்லாமல் போனாலும், தானே அடியோடு இல்லாமல் போய்விடுகிறதா என்றால் இல்லை. அதுதான் உயிராயிற்றே, அப்படியிருக்க அதுவே எப்படிச் சாகமுடியும்? இதே மாதிரி, சரீரம் சாவதோடு மனஸும் செத்து விடுவதில்லை. கர்மாக்களை அநுபவிப்பதற்காக ஜீவன் இன்னொரு பிறப்பு எடுக்கும்போது, புதுப்பிறவியில் அது மறுபடியும் வேலையை ஆரம்பித்துவிடுகிறது. புதுப்பிறவி உண்டாகிறது என்னும் போதே உயிர்த்தத்வம் மறுபடி ஒரு உடம்பில் வேலை செய்ய ஆரம்பித்து விடுகிறது என்று ஏற்பட்டு விடுகிறது. ஒரு உடம்பை விட்டுப்போன உயிர் இன்னொரு உடம்பை எடுத்துக் கொள்கிறது. மனஸும் இப்படிப் பண்ணுகிறது. அந்த மனஸையும் இந்த உயிர் தத்வந்தான் தன்னோடு சேர்த்து எடுத்துக்கொண்டு போய் இன்னொரு உடம்பிலிருந்து வேலை செய்ய வைக்கிறது.

Koviloor Digital Library

மனஸ் வேலை செய்யாத நித்ரை, மூர்ச்சை முதலான ஸமயங்களிலும் உயிர் இருக்கிறது; ஆனால் உயிர் இல்லாத சரீரத்தில் மனஸ் வேலை செய்ய முடியவே இல்லை; அப்போது உடம்பும் அழுகி, கெட்டு, வீணாய்விடுகிறது என்பதிலிருந்து உயிரை ஒட்டிக்கொண்டுதான் மனஸ் வாழ முடியும், உடம்பும் வாழமுடியும், தனியாக அவற்றால் ஜீவிக்க முடியாது என்று தெரிகிறது. உடம்பை நாசம் பண்ணிவிட்டு உயிர் இன்னோர் உடம்பில் பிரவேசித்த பிற்பாடு, ஆனால் பிற்பாடுதான், மனஸ் அந்தப் புதிய உடம்பிலே வேலை தொடங்குகிறது என்பதிலிருந்தும் உயிர்தான் மனஸூம் தனக்கு அடிப்படையாகப் பற்றி வாழும் தத்வமென்பது 'கன்ஃபர்ம்' ஆகிறது.

மனக் கலப்பில்லாத உயிர் உணர்வு

அந்த உயிர் மனஸின் கலப்பு இல்லாமல், மனஸின் எண்ணங்கள், இந்த எண்ணங்களின் விளைவாக ஏற்படும் கர்மா ஆகியவற்றின் பந்தம் இல்லாமல் தனியாக இருப்பதை உணர்வதுதான் அத்வைத மோக்ஷம். அது ஜட ஸ்திதி அல்லவே அல்ல. 'ஜீவன்' என்பதே 'உயிர்' என்பதாயிருக்க, அந்த உயிர் தத்வம், எப்படி ஜீவனில்லாத ஜடமாக இருக்க முடியும்?

"பின்னே மனஸின் கலப்பு இல்லாமல் அது மாத்ரம் இருந்த ஸ்திதிகளான நித்ரையிலும், மூர்ச்சையிலும் கொஞ்சங்கூட உணர்ச்சியே இல்லாமல் ஜடம் மாதிரித் தானே கிடந்தோம்?"

உணர்ச்சி இல்லாமல் ஜடம் மாதிரிக் கிடந்ததென்பது வாஸ்தவம் அப்பா. ஆனால் இப்படி இருந்தது மனஸ்தான்; உயிர் இல்லை. மனஸின் கலப்பில்லாத ஸ்திதி என்று நீயே சொன்னபடி, மனஸ் அப்போது உயிரைவிட்டுப் பிரிந்திருந்தது. அதனால், உயிரின் ஜீவசக்தி மனஸில் இல்லாமலிருந்தது. இக் காரணத்தாலேயே மனஸ்தான் ஜடமா

Koviloor Digital Library

யிற்று. உயிர் அப்போதும் ஜீவசக்தியோடு இருக்கத்தான் செய்திருக்கிறது. அதனால்தான் ஹ்ருதயம், ச்வாஸ கோசம் முதலானவற்றை அது வேலை செய்ய வைத்திருக்கிறது. இப்போது பகவான் செய்கிற பெரிய மாயையிலே நம் எல்லோருக்கும் மனஸின் உணர்ச்சியையே புரிந்துகொள்ள முடிகிறது; மனஸால் எதை உணரமுடியுமோ அதையே நமதாக க்ரஹித்துக் கொள்ள முடிகிறது. அதனால்தான் மனஸ் நின்றுபோனபின் உயிர் எப்படி இருக்கிறது என்பதைப் புரிந்துகொள்ள முடியவில்லை. நமக்கு எது புரிவிக்கும் கருவியாயிருக்கிறதோ, அது வேலை செய்யாமல் நின்று போனவிட்டு எதை எப்படிப் புரிந்துகொள்வது? நாம் கண்ணை மூடிக்கொண்டவுடன் லோகம் தெரியாமல் போகிறாற்போல, நம் மனஸ் வேலை நிறுத்தியவுடன் நம்மால் எந்த அநுபவமும் பெற முடியவில்லை. அதனால் ஜடமாய்விட்டதாக நினைக்கிறோம். ஆனால் நாம் கண்ணை மூடிக்கொண்டவுடன் நிஜமாகவே லோகம் இல்லாமல் போய்விட்டதா என்ன? கடிகாரம் நின்று போய்விட்டால் நமக்கு 'டைம்' தெரியவில்லை; அதனால் காலமே நின்று போனதாகுமா என்ன?

மனஸ் போனபின் உள்ள உயிர்தத்வத்துக்கும் உணர்ச்சி இருக்கிறது. அதுதான் ஸத்யமான, சாச்வதான உணர்வே; "பேர் உணர்வு" என்று அதைத்தான் சொல்கிறார்கள். சைதன்யம், ஞானம் என்பது அதைத்தான். அதற்கு ஞானம் இருக்கிறது என்பதுகூட ஸரியில்லை. அதுவே ஞானம், சைதன்யம், சித் ஸ்வரூபம், சின்மாத்ரம் என்றும் சொல்வார்கள். இங்கிலீஷிலும் அழகாகச் சொல்கிறார்கள் : மனஸ் அநேக விஷயங்களை உணருவதை, 'அது conscious—ஆக இருக்கிறது' என்று சின்ன 'c' போட்டுச் சொல்கிறார்கள்; ஜீவனுடைய ஜீவனான நிஜ தத்வம் தானே உணர்வாக இருப்பதை காபிடல் C போட்டு Consciousness என்கிறார்கள்.

மனஸில்லாதபோதும், அதற்கும் மேலான நம்முடைய உயிர் தத்வமாயிருப்பதுதான் நிஜத்தில் நாமாக இருக்க

Koviloor Digital Library

வேண்டும். அதை அண்டியே தனக்கு ஜீவகலையைப் பெறுகிற மனஸ் நிஜ நாமாக இருக்கமுடியாது. (உடம்பும் இப்படியே நிஜநாமாக இருக்க முடியாது.) மனஸ் இல்லாமல் நாம் இருக்கிற நிலை உண்டு, ஆனால் உயிர் இல்லாமல் இருக்கவே முடியாது என்பதாலேயே உயிர்தான் நாம் என்றாகிறது. ஏனென்றால், மனஸ் நாமென்றால், தூக்கத்தில் அது இல்லாத தால் நாமே இல்லை என்று ஆகிவிட வேண்டுமே! அப்படி ஆகவில்லையே!

ஆத்ம உணர்வும், மனோ வாழ்க்கையும்

இப்படியாக வேறே ஒரு நிஜ நான் இருக்கிறது. அது எப்படி ஞானமயமாய், ஆனந்தப் பேருணர்வாயிருக்கிறது என்று நமக்குத் தெரியாதபடி மாயையானது மனஸின் திரையைப் போட்டு, மனஸின் அநுபவங்களை மட்டுமே ஜீவன் தனதாக நினைத்து, பெற்று, அநுபவிக்கும்படியாக வைத்திருக்கிறது.

நிஜ நாமாக இருந்து அதன் உணர்வை அறியவேண்டும், அதுவாகவே ஆகவேண்டும் என்று நாம் ஸதா ஸர்வகால மும் விரும்பி, தவித்து, பாடுபட்டு ஸாதனை, ஆத்ம விசாரம் பண்ணிக்கொண்டு, மாயைத் திரையைப் போட்டிருக்கும் பகவானிடம் அதை விலக்கும்படி ப்ரார்த்தனை செய்து கொண்டேயிருந்தால் நிஜமாகவே மனஸ் உருகிக் கரைந்து போய்விடும்; எது நம்முடைய நிஜஸ்வரூபமோ அந்த ஆத்மா ப்ரகாசிக்க ஆரம்பித்துவிடும். தூக்கத்தையும் மூர்ச்சையை யும் போலில்லாமல், 'மனஸ் போனதால் அறிய முடிய வில்லை, உணர முடியவில்லை' என்று இல்லாமல் அப்போது தான் இதற்கு மேம்பட்டதாகத் தன்னைத்தானே அறியும் அறிவாகவும், தன்னைத்தானே உணரும் ஆனந்த ஸ்வாநுபூதி யாகவும் இருக்கலாம். தன்னை உணர்ந்து அறிவதே அங்கே ஆனந்தம்; தானே ஆனந்தம்!

இப்போது நாம் எதோடு நம்மையே ஐடின்டிஃபை பண்ணிக்கொண்டிருக்கிறோமோ (அதுவேதான் நாமாக்கும்

Koviloor Digital Library

என்று நினைத்துக்கொண்டிருக்கிறோமோ) அந்தமனஸுக்குத் தன்னைத் தெரியவே தெரியாது, பிறவற்றைத்தான் தெரிந்து கொள்ளமுடியும் என்பதற்குக் 'கான்வர்ஸா'க (எதிர்வெட்டாக), நம்முடைய நிஜ ஸ்வரூபமான ஆத்மாவாக உள்ள போது தன்னை மட்டுந்தான் தெரியும்; பிற வஸ்து எதுவுமே தெரியாது.

தெரியாதது மட்டுமில்லை; ஆத்மாவுக்கு வேறான பிற வஸ்து என்று ஒன்று இல்லவே இல்லை என்பது ஞானவிசாரம் செய்தால் தெரியும். ஆத்மாநுபவ நிலையில் வேறொரு வஸ்து தெரியவில்லை என்றால், அது ஒருவன் கண்ணை மூடிக்கொள்ளும்போது லோகம் வெளியில் இருந்து கொண்டிருந்தாலும் அவனுக்கு மட்டும் தெரியாமற் போவதுபோல மட்டுமில்லை. ஸத்யமாகவே ஆத்மாவுக்கு வேறாக எதுவும் இல்லை. அதிலிருந்தே மாயையால் ஜீவமனஸ், அதற்கு செயற்களமாயுள்ள ஜகத் முதலியவை கற்பிக்கப்பட்டிருக்கின்றன.*

கற்பிக்கப்பட்டவை என்பதால் அவை அடிப்படையில் தாமே ஸத்யமானவை அல்ல என்றாகிவிடுகிறது. நம்மிடமிருந்து ஒரு மாயத்தோற்றம் உண்டானால் அந்தத் தோற்றம் நாமில்லைதானே? அதாவது நம்மையே வேறே யாரோ என்று எண்ணிக் கொள்ளும்படியாக நம்மிடம் ஒரு வேஷம் கற்பிக்கப்பட்டால் அந்த வேஷம் நிஜமான நாமல்ல அல்லவா? ஆனாலும் நாம் இல்லாமல் அந்த வேஷம் உண்டாக முடியாது. அதைக் கல்பிக்க ஒரு அடிப்படை இருந்தால்தான் இதன் மேல் அதை ஏற்றிக்காட்டமுடியும். ஆசார்யாள் இதை "அத்யாஸம்" என்று சொல்வார். Super-imposition என்கிறார்கள். Substratum என்கிற அடிப்படை "அதிஷ்டானம்." அதன்மேலே அத்யாஸமாக இன்னொன்று ஏற்றிக்காட்டப்படுகிறது. வேஷம் போட ஒரு ஆஸாமி இல்லாவிட்டால் வேஷமேயில்லை என்கிறதுபோல அதிஷ்டான ஆத்மா இல்லாமல் அதன்மேல் அத்யாஸமாக

---

* இவ்விஷயம் இவ்வுரையின் பிற்பிரிவுகள் சிலவற்றில் விவரிக்கப்பெறும்.

Koviloor Digital Library

ஆரோபணம் செய்யப்படுகிற (ஏற்றுவிக்கப்படுகிற, தோற்று விக்கப்படுகிற) மாய மனஸும், மாயமான ஜகத்தும் இல்லை. ஆனால் ஆத்மா அவற்றில் இல்லவே இல்லை. வேஷத்துக்குள் நிஜ ஆஸாமி கொஞ்சமாவது இருக்கிறானா? வேஷத்தைக் கலைத்தபின் அந்தக் கதாபாத்ரத்துக்கு இருந்த பேர், அதன் கதை எதுவுமே துளிக்கூட இவனுடையதாக இல்லாமல் போய்த்தானே விடுகின்றன? அப்போதும் இவன்பாட்டுக்குக் கொஞ்சங்கூட பாதிக்கப்படாமல்தான் இருந்தபடியேதானே இருக்கிறான்? வேஷத்திலேயே நிஜ ஆஸாமி கொஞ்சமாவது இருந்தால், வேஷம் போன பிற்பாடு அந்தக் கொஞ்சம் போய் இவன் மூளியாகி இருக்கவேண்டுமே! அப்படிக் காணோமே!

இதே மாதிரிதான் ஆத்மாவில் மாயா கல்பிதமாக, அதாவது வேஷமாக ஏற்பட்ட ஜீவ ஜகத்துகள் ஆத்மா இன்றி இருக்கவேமுடியாது என்றாலும் ஆத்மா இவற்றிலே இல்லை. இதைத்தான் பகவான்,

மத்-ஸ்தாநி ஸர்வ பூதாநி ந ச(அ)ஹம் தேஷு
(அ)வஸ்தித :

அதாவது, "ஸர்வ பூதங்களும் என்னிடமே இருப்பு உடையன; ஆனால் நான் அவற்றில் இல்லை" என்கிறார்.*

"நான் அவற்றில் இல்லை" என்றால் ஆத்மா ஜீவ ஜகத்துக் களில் இல்லை என்று அர்த்தம். 'ஆத்மா ஜீவனில் இல்லை என்றால் என்ன அர்த்தம்?' என்றால், ஜீவனின் நிஜ ஸ்வரூப மான ஆத்மா மாயா கல்பிதத்தால் அந்த ஆத்மாவை அறியாத தனியான ஜீவத்வம் என்பதோடு, இன்டிவி ஜுவாலிடியோடு இருக்கும் ஸ்திதி நிஜம் இல்லை என்று அர்த்தம். கல்பனை என்றாலே நிஜமில்லை என்றுதானே அர்த்தம்? ஸரி, இந்த ஜீவத்வம் (இன்டிவிஜுவாலிடி) என்பதை (ஆத்மாவை அறியாத) நாம் என்னவாக நினைத்து

---

* கீதை 9.4. "தெய்வத்தின் குரல்" முதற்பகுதியில் "கண்ணன் சொன்னான், கம்பனும் சொன்னான்" என்ற உரையும் பார்க்க.

Koviloor Digital Library

"ஐடின்டிஃபை' செய்துகொண்டிருக்கிறோம்? மனஸாகத் தான். இப்போது என்னவோ நாம் தோண்டித் துருவிப் பார்த்து மனஸுக்கு மேலே உயிர் தத்வமாக ஒன்று இருக்கிறது என்று கண்டுபிடித்தாலும், இது நம்முடைய வாழ்க்கை நடைமுறையில் உண்மையாக நிலைக்கவில்லை. நாம் என்பது நம் மனஸ்தான் என்ற எண்ணத்திலேயேதான் நம்முடைய வாழ்க்கை நடக்கிறது.

வாழ்க்கை என்று எதைச் சொல்கிறோம்? சாப்பிடுவது, கல்யாணம் பண்ணிக்கொள்வது, குழந்தை குட்டி பெறுவது, படிப்பது, ஸம்பாதிப்பது, ஊர் ஊராய் ஒடுவது, பாட்டு கேட்பது, ஸினிமா பார்ப்பது, நாவல் படிப்பது என்று இப்படி அநேக கார்யங்களைப் பண்ணுவதைத்தான் வாழ்க்கை என்றும் ஜீவனம் என்றும் சொல்கிறோம். இந்தக் கார்யங்களில் நம்மைச் செலுத்துவதாக அநேக எண்ணங்கள் இருக்கின்றன. இந்த எண்ணங்களை யெல்லாம் பிறப்பிப்பது மனஸ். கார்யங்களில் நம் இந்த்ரியங்களை ஏவுவதும் அதுதான். ஆகையால் தனி ஜீவன் என்கிறவனின் ஸாரமாகத் தோன்றுகிற ஜீவனம் என்பதே மனஸை ஸென்டராக வைத்து நடத்தப்படுவதுதான். எண்ணத்தினாலும் கார்யத்தினாலும் உருவாகிற ஜீவனம் என்பது எண்ணமும் கார்யமுமில்லாத ஆத்மாவைக் குறித்ததாக இருக்க முடியாதுதானே? ஆக, என்ன முடிவுக்கு வருகிறோமென்றால், ஃபிலாஸஃபி முடிவில் நாம் எந்த முடிவுக்கு வந்தாலும் ஸரி, லோகத்திலே ஜீவனம், ஜீவத்வம் என்றால் அவை மனஸை வைத்துத்தான்! ஆகையால் "நான் ஜீவ ஜகத்தில் இல்லை" என்று பகவான் அடித்துச் சொல்கிறபடி ஆத்மா ஜீவ பாவத்தில் இல்லை என்றால், அது மனஸிலே இல்லை என்றே அர்த்தம்.

ஆத்மாவுக்கு த்விதீயமான மனம்

ஆத்மா மனஸிலே இல்லை என்றால் ஆத்மா வேறே, மனஸ் வேறே. ஆத்மாவுக்கு வேறாக மனஸ் இருக்க

Koviloor Digital Library

வேண்டும். ஆத்மாவுக்கு அந்நியமாக, இரண்டாவதாக, த்விதியமாக இருப்பதே மனஸ் என்றுகிறது.

"ஆத்மாவுக்கு அந்நியமாக இன்னொன்றுதான் கிடையாது என்கிறீர்களே! இது எப்படி அப்படி இருக்கமுடியும்?"

இந்தக் கேள்விக்குப் பதில் சொல்லியாயிற்று, அப்பா! மறுபடி சொல்கிறேன். நிஜ ஆஸாமி ஒருத்தன், அவன் கல்பனையாகப் போட்டுக்கொள்கிற வேஷம் ஒன்று. இப்போது ஆஸாமியும் வேஷமும் ஒன்றேயா, வேறுவேரு என்றால் ஒன்றும்தான், வேறு வேறும்தான். விசித்ரமாக, இப்படி முரணான இரண்டாகவும் இருக்கிறது! எவனோ ஒரு ராமஸ்வாமி ராஜபார்ட் போட்டுக்கொள்கிறுனென்றால், அவன்தான் அந்த ராஜாவேஷம். அவனில்லாமல் வேஷம் இல்லை. அவனையன்றி வேருக வேஷ ராஜா தனித்து இருக்க முடியாது. இதுதான் அத்வைதம். அப்படியானல் ராமஸ்வாமிதான் ராஜாவா என்றால் அப்படி இல்லை. அந்த ராஜாவின் ராஜ்யம் இவனுக்கு ஸொந்தமா? இல்லை. அவனுடைய பத்னி, புத்ரர்கள் இவனுக்கு ஸொந்தமா? இல்லை. ராஜா என்னவெல்லாமா கஷ்டப்பட்டானே, ஸுகப் பட்டானே! வேட்டையாடினுன்; சூதாடினுன்; தோற்றுப் போனுன்; அப்புறம் யுத்தத்தில் ஜயித்தான்; ஒரு ஸமயம் துக்கத்தில் தலைமயிரைப் பிய்த்துக்கொண்டான்; இன்னொரு ஸமயத்தில் ஆனந்தத்தில் ராகமாலிகை பாடினுன்—இந்த அநுபவம் எதுவாவது நிஜ ராமஸ்வாமியுடையவை ஆகுமோ? இதிலே ராஜாவுக்கு ஏற்பட்ட லாப நஷ்டம் ஏதாவது ராமஸ்வாமிக்கு உண்டானதாகுமா? வேஷத்தைக் கலைத்தபோது ராமஸ்வாமி கொஞ்சமாவது குறைந்து போகாமல் பழைய ராமஸ்வாமியாக அப்படியேதானே இருந்தான்? அப்போது, நிஜ ஆஸாமிக்கு வேஷம் முற்றிலும் வேறான—த்விதியமான—விஷயமாகத்தானே ஆகிறது? இப்படித்தான் ஆத்மாவுக்கு மனஸு வேறுவதும்.

இன்னொரு உபமானம் சொல்கிறேன்—அத்வைத சாஸ்த்ரங்களில் அடிக்கடிச் சொல்வது. அந்தி மயக்கத்தில் ஒரு

Koviloor Digital Library

கயிறு பாம்பாகத் தெரிகிறது. மாயா மயக்கத்தில் ஆத்மாவானது தனி ஜீவனாகத் தெரிகிறது—அதாவது ஜீவன் "நான்" என்று ஐடின்டிஃபை செய்துகொள்ளும் மனஸாகத் தெரிகிறது. கயிறு என்ற ஒன்று இல்லாவிட்டால் பாம்பு என்ற தோற்றம் உண்டாகியிருக்க முடியாது. கயிற்றிலே ஸூப்பர் - இம்போஸ் பண்ணித்தான் பாம்பு கல்பிக்கப் பட்டிருக்கிறது. அது இன்றி இது இல்லை என்கிறபோது அத்வைதம். ஆனால் கயிறு பாம்பா என்றால் இல்லைதானே? பாடபுத் தோற்றத்துக்கும் கயிற்றுக்கும் கயிற்றின் நிலையிலிருந்து பார்த்தால் கொஞ்சமாவது ஸம்பந்தமுண்டா? பாம்பு என்று நினைத்து உளறி அடித்துக்கொண்டோமே, இப்படி பயமுறுத்தியதில் கயிற்றுக்கு ஏதாவது பங்கு உண்டா? தன்னிலே ஒரு பாம்புத் தோற்றம் ஏற்பட்டிருக்கிறது என்பதால் அதற்கு அந்த பாம்பின் எடை கூடிற்றா? அப்புறம் வெளிச்சத்தில் பார்த்தபோது பாம்பு இல்லை, கயிறுதான் என்று தெரிந்ததே! (மாயை மயக்கைப் போக்கும் ஞான ப்ரகாசத்தில் பார்க்கும்போது மனஸ் மறைந்து ஆத்மா மட்டும் தெரிகிற ஸ்திதிதான் இது.) தன்னிடமிருந்து பாம்புத் தோற்றம் எடுபடுகிறது என்பதால் கயிற்றின் எடை ஏதாவது குறைந்ததா? இப்படியெல்லாம் ஆலோசிக்கும் போது பாம்பிலே கயிற்றின் ஸமாசாரம் கொஞ்சம்கூட இல்லை, அது வேறே இது வேறே என்றுதானே நிற்கிறது?

இப்படித்தான் ஆத்மாவுக்கு வேறேயாக மனஸ் இருப்பது.

ஆகையால் சற்றுமுன் நான் மனஸானது தன்னைத் தவிர இன்னொன்றைத்தான் காட்டிக்கொடுக்கும் என்று சொன்னதோடு விஷயம் நிற்கவில்லை. 'இன்னொன்று இருந்தால் அப்போது பயத்துக்கு இடமேற்பட்டுவிடும்; மனஸானது இப்படி பயத்தை உண்டாக்கும் ஹேது உள்ளதான த்வைதத்தை உண்டாக்குவது' என்று முதலில் சொன்னேன். அப்படிச் சொன்னது ஸரிதான். அதற்குக் கூடுதலாக இப்போது சொல்வது: இப்படி மனஸ் தன்னைத் தவிர

Koviloor Digital Library

இன்னென்றை மட்டுமே காட்டிக் கொடுப்பது மட்டுமில்லை; அதுவே ஆத்மாவின் நிஜமான தானுக இல்லாமல்—ஆத்மா என்கிற நிஜமான தானுக இல்லாமல்—அதற்கு இன்னென்ருக, த்விதீயமாக இருப்பதுதான். கல்பிதம், வேஷம், அத்யாஸம், அத்யாரோபம் என்று எப்படிச் சொன்னுலும் சொல்லிவிட்டுப் போங்கள்; மனஸை ஸென்டராக வைத்து அதுவே நிஜம் என்று கார்யம் பண்ணும்வரையில் மனஸ் என்ற என்று ஆத்மாவுக்கு வேருக இருந்துகொண்டு இருக்கிறது என்றே வைத்துக்கொள்ள வேண்டியதாகிறது.

இன்னென்று இருந்தால் பயம் வந்துவிடும். மனஸுக்கு எப்போதும் இன்னென்றைத்தான் தெரியுமாதலால் நமக்குத் தெரிந்த த்வைத ப்ரபஞ்சம் நித்ய பயமானதுதான். இப்போது ஏதோ ஸந்தோஷமாக அரட்டையிலேயே வேதாந்த அரட்டையாக அடித்துக்கொண்டிருக்கிருேம். அடுத்த க்ஷணமே பூமி கொஞ்சம் ஆடினுல், பூகம்பமென்று வந்தால்? அது வருவது இருக்கட்டும். இப்போது நான் இப்படிச் சொன்னவுடனேயே பயம் கவ்விக்கொள்கிறது. இதுதான் மனஸினுடைய த்விதீய லோகத்தின் தன்மை.

இன்னென்றையே தெரிவிக்கும் இந்த மனஸ் என்பதே ஆத்மாவுக்கு இன்னென்ருக இருப்பதுதான் மற்ற எல்லா விதமான பயங்களுக்கும் காரணமான, மூலமான பயம். ஆத்மாவிலிருந்து மனஸ் புறப்படவிடுவதுதான் முதல் த்வைதம், முதல் பயம். அப்புறம், மனஸினுல் உண்டாகும் அநேக இரட்டைகள், அநேக விதமான பயங்கள், த்வைத லோகமாகிற ஸம்ஸார பயம், நரகபயம் எல்லாம்.

ஆத்மாநுபவமே அபய மோக்ஷம்

ஆகையால் மனஸ் போவதுதான் நிஜமான மோக்ஷம். மனஸிலிருந்து விடுபட்டு ஆத்மா தானுக இருப்பதுதான் அபயமான அத்வைத ஆனந்த மோக்ஷ ஸ்தானம். ஜீவத்வம் என்பதை நாம் மனஸினுடையதாகவே கருதினுலும், இந்த

Koviloor Digital Library

வேஷ ஜீவத்வம் என்ற "அத்யோரோபித"க் கல்பனைக்கு ஆதாரமான "அதிஷ்டான" ஸத்யமாகிய ஆத்மா தான் ஜீவனுடைய உண்மை நிலையான பூர்ண வஸ்து. அதை ஸாக்ஷாத்காரம் செய்வது—அதாவது அந்த ஆத்மாவை அறிந்து அதிலேயே நிலைப்பதென்பது—ஜடமான ஸ்திதியாயில்லாமல் பேருயிராய், பேரறிவாய், பேருணர்வாய், பேரானந்தமாய் இருப்பதாகவே இருக்கும். மனஸ் இன்னொன்றை அறிந்தும் உணர்ந்தும் ஸுக துக்கங்களை அநுபவிப்பது போலன்றி, ஆத்மா தன்னைத் தன்னாலேயே உணர்ந்தறியும் அந்நிலை நித்ய ஸுகமாகவே இருக்கும். இன்னொன்றிலிருந்து அவ்வப்போது ஸுகம் வந்தாலும், ஸுகம் வருகிற மாதிரியே, அந்த ஸுகத்தைவிட மிக அதிகமாக துக்கமும் வருகிறது. ஆத்மாவிலே இப்படி இருக்காது. பயத்தை, துக்கத்தைக் கொடுக்கக்கூடியதான இன்னொன்று இல்லாததால், ஆத்மாவினுடைய கட்டற்ற நிலையின் தன்னியல்பான ஸுகம் துக்கங்களால் துண்டித்துத் துண்டித்துப் போகாமல் சாச்வதமானதாக இருக்கும்.

பயம் இல்லாமல் ஆகவேண்டுமானால் அதற்கு வழி பய ஹேதுவான இன்னொன்று இல்லாத ஆத்மாவாக ஆவதுதான். அது மோக்ஷம் என்ற விடுபட்டநிலை. மனஸை வைத்துக்கொண்டு ஜீவனாக இருப்பது கட்டுப்பட்ட நிலை. கட்டு என்பது நேராக மனஸின் எண்ணங்களால் ஏற்படுவதோடு மட்டுமில்லாமல், அவற்றைப் பூர்த்தி செய்து கொள்வதற்காக சரீர இந்த்ரியாதிகளைக் கொண்டு செய்யும் கார்யங்களாகவும் இருக்கின்றன. இந்தக் கர்ம பந்தத்தை தர்ம கர்மங்களாலேயே தளர்த்திக் கொள்ளவேண்டும்.

கர்மத்தை தளர்த்தும் தர்மம்

ஒரு விறகுக் கட்டு இருந்து, அதைச் சுற்றிப் போட்ட கயிற்றுக்கட்டு முடிச்சு அவிழ்க்க முடியாமல் ஆனால் என்ன செய்வார்கள் தெரியுமா? கட்டு தளர்வதற்கு முதலில்

Koviloor Digital Library

கட்டிய கயிற்றைவிட இறுக்கமாக அதை இன்னொரு கட்டுப் போட்ட மாதிரி சுற்றி நெருக்கிப் பிடித்துக் கொள்வார்கள். 'கட்டுப் போட்ட மாதிரி' தானே ஒழிய, முடிச்சுப் போட்டுக் கட்டியே விடமாட்டார்கள். இந்த இறுக்கத்தில் முதலில் முடிச்சுப் போட்டுக் கட்டின கட்டு லூஸாகிவிடும். அதை எடுத்துப் போட்டுவிடலாம். அப்புறம், கட்டினமாதிரி, ஆனால் கட்டியே விடாமல் சுற்றியிருக்கிற இன்னொரு கயிற்றையும் எடுத்துவிட்டால் விறகுகள் கட்டற்று விடுபட்டுவிடும். இதே மாதிரி மனஸின் க்ருத்ரிமத்தில் பல தினுஸான கார்யங்களால் மணி முடிச்சாகக் கட்டுப்போட்டுக்கொண்டு ஸம்ஸார பந்தத்தில் கிடக்கிற நாமும் அதிலிருந்து விடுபட, "சாஸ்த்ர கர்மா" என்று கட்டு மாதிரி உள்ளதைப் போட்டுக்கொள்ள வேண்டும். கன்னாபின்னா கட்டாக இல்லாமல் சாஸ்த்ர மூலமாக ரிஷிகள் ஒவ்வொருவருக்கும் ஸ்வதர்ம ரூபமாக அநேக கார்யங்களைக் கொடுத்திருக்கிறார்கள். ரிஷிகளின் மூலமாக ஈச்வரனே போட்ட ரூல்கள் இவை. நம் ஸ்வந்த ஆசையின்மேலே கன்னாபின்னா என்று காரியங்கள் பண்ணிப் பண்ணி முடிச்சாகப் போட்டுக் கொண்டிருக்கிற கட்டு தளர்வதற்கு இந்த ஸ்வதர்ம கர்மக் கட்டுதான் உதவி புரிவது. இது அசல் கட்டு அல்ல. கட்டு மாதிரி நெரிக்கும். ஆனாலும் இதிலே நெரிபடுவது நம்முடைய தப்பான ஆசைகள்தான். நம்மை நல்லதில் விடுவிப்பதற்கே இந்த நெரிப்பு. இதைப் புரிந்துகொண்டால் சாஸ்த்ர கர்மாக்களை ரூல்கள் கொஞ்சங்கூடத் தப்பாமல் ஸந்தோஷமாகச் செய்து கொண்டே போகலாம்.

இஷ்டமாயிருக்கிறது என்று கண்டதைத் தின்னுகிறோம். வ்யாதி வருகிறதென்றால் அப்போது ஒட்ட ஒட்டக் கிடந்து கசப்பு மருந்து சாப்பிடத்தானே வேண்டும்? இது கஷ்டமாயிருந்தாலுங்கூட, உடம்பு ஸரியாகணும் என்பதால் நாமே டாக்டரிடம் போய் இந்தக் கஷ்டத்தைக் கேட்டு வாங்கிக் கொள்ளத்தானே செய்கிறோம்?

Koviloor Digital Library

ப்ரேயஸ், ச்ரேயஸ்

இஷ்டத்தைத் தருவது ஒன்ருகவும், நல்லதைச் செய்வது வேறென்ருயும் இருக்கின்றன. (முறையே) ப்ரேயஸ், ச்ரேயஸ் என்று இவற்றை உபநிஷத்தில் சொல்லியிருக்கிறது.* இஷ்டமாக இருப்பது எதுவோ அதுவே நமக்கு ப்ரியமாக இருக்கிறது. அதைத்தான் 'ப்ரேயஸ்' என்பது. இந்த வார்த்தை நடைமுறையில் அதிகம் இல்லை. 'ச்ரேயஸ்' என்ற வார்த்தை அடிக்கடி கேள்விப்படுகிருேம். "உசந்த நன்மைகள் உண்டாகவேண்டும்" என்று ஆசீர்வாதம் செய்யும்போது "எல்லா ச்ரேயஸும் உண்டாகட்டும்" என்கிருேம். எது உண்மையில் ஒரு உயிருக்கு நல்லதைத் தருவதோ அதுவே ச்ரேயஸ். 'ப்ரியம்' என்பதிலிருந்து 'ப்ரேயஸ்'. 'ச்ரியம்' என்பதிலிருந்து 'ச்ரேயஸ்'. "ஸ்ரீ" என்பதிலிருந்தே "ச்ரியம்" ஸ்ரீ என்ருல் லக்ஷ்மி, செல்வத்தின் தேவதை, மங்கள தேவதை என்பது எல்லாருக்கும் தெரியும். ஆத்மாவுக்கு நல்லது செய்கிறவைதான் நிஜமான செல்வமும், மங்களமும், நித்ய ஸ்ரீயும்.

(இப்போது 'ஸ்ரீ' வேண்டாம், 'திரு'தான் வேண்டும் என்கிருர்கள். தப்பான பாஷாபிமானத்திஞலே அப்படிச் சொல்கிருர்கள். சில சப்தங்களுக்கே நல்லது செய்யும் சக்தி உண்டு; அதாவது 'ச்ரேயஸ்' உண்டு. ராம நாமாவை "ஜகத் ப்ரதம மங்களம்" என்று காளிதாஸன் கொண்டாடுகிருன். ரா-ம என்கிற சப்தம் அவ்வளவு ச்ரேயஸ்கரமானது. 'ராம ஜபம் பண்ணமாட்டேன். "ராம"வைத் தமிழ்ப் படுத்தி "இன்பமானவன்", "இன்பமானவன்" என்று தான் ஜபம் பண்ணுவேன்' என்ருல் மந்த்ர சப்த சக்தி இதிலே வருமா? "சிவ" சப்தமும் அப்படித்தான். அதற்கும் மங்களம் என்றே அர்த்தம். அந்த சப்தமே மங்களத்தை உண்டாக்கக் கூடியது. அஹங்காரம் பிடித்த தக்ஷன் சிவ சப்தத்தை த்வேஷித்தான். "நீ மங்களமான சிவனை த்வேஷிச்-

---

* கடோபநிஷத் 2 : 2

Koviloor Digital Library

கிருயென்ருல் 'சிவ இதரன்' ஆகிருய்; சிவனுக்கு இதரமான அசிவமாக, அதாவது அமங்களமாக ஆகிருய்" என்று அவனுடைய பெண்ணுக அவதாரம் பண்ணின அம்பாள் சொன்னுளென்று பாகவதத்தில் வருகிறது*. இப்போது இங்கே மங்களமான "ஸ்ரீ" சில பேருக்குப் பிடிக்காததாக இருக்கிறது! இது இருக்கட்டும்.)

ச்ரேயஸை விட்டு ப்ரேயஸைப் பிடித்துக்கொள்கிருேம். இஷ்டம் என்று ஒன்றில் போய் விழுகிருேம். அப்புறம் அதனுல் கஷ்டம் என்று தெரிகிறது. அந்த நிலையில் இஷ்டப் பட முடியாத ஒன்றுதான்—கசப்பு மருந்து, லங்கனம் (பட்டினி) போன்ற ஒன்றுதான்—கஷ்டத்தைப் போக்கி நல்லதைச் செய்ய முடியும் என்று தெரிகிறது. இஷ்டப்பட முடியாத அந்த ஒன்றை ஏற்பது இப்போது கஷ்டமாயிருக்கலாம். ஆனுலும் இது சாச்வதக் கஷ்டமாக நின்றுவிடாது. இஷ்டப்படித் தின்னுவது என்பதை சாச்வதமாகப் பண்ணிக்கொண்டே போக நாம் தயார். டயேரியா, டிஸெண்ட்ரி வந்திருக்காவிட்டால் அப்படித்தான் பண்ணிக்கொண்டே போயிருப்போம். ஆனுல் இஷ்டம் இப்போது இந்தக் கஷ்டத்தில் கொண்டுவிட்டுவிட்டது. இப்போது மருந்து சாப்பிடுவதும், லங்கனமிருப்பதும் இஷ்டப்பட்டுச் செய்யக்கூடியவையல்லதான். அவை கஷ்டமாகத்தான் இருக்கின்றன. இருந்தாலும் மருந்தும், லங்கனமும் சாச்வதமாய் நிலைத்துவிடுகிறவை அல்லவே! அதனுல் மருந்து சாப்பிடுகிருேம், பட்டினி கிடக்கிருேம், பத்யமாகச் சாப்பிடுகிருேம். உடம்பு ஸரியாகப்போகிறது. அப்புறம், முன் மாதிரியே மறுபடி இஷ்டப்படி தின்ருல் உடம்புக்கு வரத்தான் வரும் என்று ஜாக்ரதையாய் இருக்கிருேம். கண்டபடி தின்னுமல் கட்டுப்படுத்திக் கொள்கிருேம். நாம் இப்படிச் செய்கிருேமோ இல்லையோ புத்திசாலிகளாக இருந்தால் இப்படித்தான் செய்யவேண்டும்.

---

* ஸ்ரீமத் பாகவதம் 4: 4: 14

Koviloor Digital Library

கர்ம நோய்க்கு தர்ம மருந்து

இஷ்டப்படி மனஸை ஓடவிட்டு, அதன் விளைவாகக் கண்டபடி கார்யம் செய்து நன்றாகக் கர்ம பந்தத்தில் கட்டுண்டு கிடக்கிறபோது, கட்டைத் தளர்த்துவதற்காகவே முதலில் அதிகம் நெரிக்கின்ற தர்ம சாஸ்த்ர கர்மக் கட்டை போட்டுக் கொள்ளவேண்டும். அதிலே போட்டிருக்கிற ரூல்கள் மனஸுக்கு இஷ்டமானதாக இருக்கத்தான் இருக்காது. போட்டு நெரிக்கிற மாதிரிதான் இருக்கும். ஆனாலும் இது சாச்வதக்கட்டு இல்லை. கட்டு மாதிரி நெருக்கிப் பிடித்துக் கொண்டிருப்பதுதானே யொழிய முடிச்சாய் விழுந்த கட்டு இல்லை. பக்வமாகிக் கர்ம பந்தம் முழுக்கப் போகிறபோது, சாஸ்த்ர ரூல் பார்த்துப் பண்ணவேண்டுமென்கிற கட்டுப்பாடும் இல்லாமல் போய்விடுகிறது. ஆத்ம ஞானிக்கு எந்தக் கட்டுப்பாடும் இல்லை; எந்த ரூலும் இல்லை. வர்ணம், ஆச்ரமம் என்பவற்றை வைத்து உண்டான ஸகல சாஸ்த்ர ரூல்களும் போய்விட்டவன் அவன். இவற்றைக் கடந்துவிட்டதால் அவனுக்கு "அதிவர்ணாச்ரமி" என்றே பெயர்.

ஆனால் சற்று முன்னால் சொன்ன வ்யாதி—மருந்து உபமானம் இந்த விஷயத்தில் முழுக்க அப்படியே பொருந்தி விடுகிறதென்று சொல்லமுடியாது. கொஞ்சம் வித்யாஸம் இருக்கத்தான் செய்கிறது. கொஞ்ச நாள் அல்லது இரண்டு மூன்று வேளை மருந்து சாப்பிட்டால் ஜீர்ணக் கோளாறு (வயிற்றுப் போக்கும் ரத்தக் கடுப்பும்) ஸரியாகிப் போய் விடுகிறாற்போல அவ்வளவு சீக்ரத்தில் கர்மா என்ற வ்யாதி தீர்கிறதில்லை. தேஹவாகு என்பதால் சில பேருக்கு எப்போதுமே வயிற்றிலே ஆஸிட் அதிகம் சுரக்கிறது. அப்போது மருந்தும் நிறுத்தாமல் சாப்பிட்டுக்கொண்டே இருக்க வேண்டியிருக்கிறது. ப்ரஷர், டயாபடீஸ், ஹார்ட் என்று பல பேர் நித்யமும் மருந்து சாப்பிட்டுக் கொண்டே இருக்கிறார்கள். நிறையத் தப்புக்களில் மனஸ் போய் ஸம்பாதித்துக்கொண்ட கர்மா வ்யாதியையும் நீண்ட காலம் ஸ்வதர்ம மருந்து சாப்பிட்டுத்தான் ஸ்வஸ்தம் செய்து

Koviloor Digital Library

கொள்ள முடிகிறது. உங்களுக்கு உத்ஸாஹம் தருவதற்காக நான் பொய்க்காக, "சாஸ்த்ரங்களைப் பார்த்து அதன் எல்லா நூல்களின் படியும் நடக்கவேண்டியது கொஞ்ச காலத்துக்குத் தான்; கொஞ்ச காலமானவுடனேயே அந்தக் கட்டுப்பாடும் போய்விடும்" என்று சொல்லிவிடக்கூடாது. அதனாலேயே இதைச் சொல்கிறேன். பஹுகாலம் சாஸ்த்ரப்படி ஸ்வதர்மாசரணை பண்ணத்தான் வேண்டியிருக்கும்.

ஆனால் இதில் உத்ஸாஹம் ஊட்டுவதாக ஒரு அம்சமும் இருக்கிறது. அதை உங்களுக்குச் சொல்ல நான் மறந்து விடவும் கூடாது. கசப்பு மருந்து இஷ்டப்பட்டுச் சாப்பிடக் கூடிய ஒன்றாக ஒருபோதுமே ஆவதில்லை. சாப்பிட்டுத்தான் ஆகவேண்டும் என்பதால் ஸஹித்துக்கொண்டு சாப்பிட வேண்டியதாகவே—சாப்பிட்டுத் தொலைக்க வேண்டிய தாகவே—அது எப்போதும் இருக்கும். பழகிப்போனாலுங் கூட முதலில் இருந்த வெறுப்பு, ஒக்காளிப்பு வேண்டுமானால் இல்லாமல் போகுமே தவிர, கசப்பு மருந்தைப் "பிடித்து"ச் சாப்பிடுவது என்பது ஒருநாளும் இல்லை. சாஸ்த்ர நூல்கள் இப்படி இல்லை. கொஞ்சகாலம் அவற்றைப் பின்பற்றிச் செய் தோமானால் அப்புறம் அவற்றிலேயே ஒரு பிடிப்பு, ஒரு பிடித்தம் ஏற்பட்டுவிடும். விதியே" என்று அந்த விதிகளை அநுஷ்டிக்காமல், "ஸரியான ஒன்றைச்செய்கிறோம்" என்ற ஸந்துஷ்டி நமக்கே ஏற்பட்டு, ப்ரியத்தோடு அப்படிப் பண்ண ஆரம்பிப்போம். பரம அநாசாரமாக க்ளப், குடி, ரேஸ் என்று இஷ்டப்படிப் போனவர்கள் அப்புறம் ஆசாரமாக மாறுகிறபோது எத்தனை இஷ்டத்தோடு ஸ்நானம், மடி, உபவாஸம் என்று அநுஷ்டிக்கிறார்கள் என்பதை அங்கங்கே இன்றைக்கும் பார்த்துக் கொண்டுதான் இருக்கிறோம். ரொம்பவும் அநாசாரமாக இருந்தவர்கள்தான் அதை விட்ட பிற்பாடு, மற்றவர்களைவிடவும் ரொம்ப நியமமாக நடக்க ஆரம்பிக்கிறார்கள். ஏதோ ஒரு 'கம்பல்ஷனி'ல், நெரிப்பில் இப்படிச் செய்யாமல் ஸ்வேச்சையோடு ஸந்தோஷமாக இப்படி விரும்பிச் செய்கிறார்கள். சாஸ்த்ர நூல்களுக்கு

Koviloor Digital Library

உள்ள பெருமை இது. அது கசப்பு மருந்து இல்லை. கூஷ்மாண்ட லேஹ்யம், யுனானி மருந்துகள் மாதிரி தித்திப்பாக இருப்பது. பித்த சரீரமுள்ளவர்களுக்கும், விஷக்கடிபட்டவர்களுக்கும் அந்த தோஷங்களினால் நல்ல ருசியுள்ள பதார்த்தங்களும் கசக்கிறாற்போல, நம்முடைய மனஸின் தோஷத்தினாலேயேதான் தர்ம சாஸ்த்ர மருந்து கசக்கிறது. இதற்கு இன்னொரு கோடியில் நல்ல பாம்பின் விஷம் ஏறினவனுக்குச் சீயக்காய் தித்திக்கும் என்று சொல்வார்கள். இப்படியே விஷயஸுக விஷத்தில் ஈடுபட்டவனுக்கு, வாஸ்தவத்தில் விஷமான துஷ்கர்மாவே மதுரமாக இருக்கிறது. எப்படிப்பட்டவனானாலும் "திருந்தணும்" என்ற நிஜமான கவலை இருந்தால் சாஸ்த்ர மருந்து பிடிக்க ஆரம்பித்துவிடும். இரண்டு அர்த்தத்திலும் "பிடிக்க" ஆரம்பித்துவிடும். அதாவது அது பலன் தரவும் ஆரம்பிக்கும்; மனஸுக்குப் பிடித்ததாகவும் ஆகிவிடும். ட்ரீட்மென்ட் பஹுகாலம் நடக்கவேண்டியதே என்றாலும், தித்திப்பு மருந்தாக இருப்பதால், அதை இஷ்டப்பட்டுச் சாப்பிடுவது என்று ஏற்படுவதால், சலித்துக்கொள்ளாமல் அத்தனை காலமும் "ட்ரீட்மென்ட்" எடுத்துக்கொள்ளலாம்.

தார்மிக கர்மா நேரான மோக்ஷ உபாயமல்ல

ஆனாலும், இன்னொன்றை இங்கேயே சொல்லிவிடணும். ஸ்வதர்ம கர்மா மட்டும் ஆத்மாவை மனஸின் கட்டிலிருந்து விடுவித்து விடாது. அதாவது நிஷ்காம்ய கர்ம யோகம் என்பதே நேராக மோக்ஷத்தை அளித்துவிடாது.

மனஸே அற்றுப்போன நிலை அல்லவா மோக்ஷம்? அப்போது எண்ணம் என்பது இல்லை. எண்ணமே இல்லாத போது கார்யம் நிச்சயமாக இல்லை. எனவே கார்யரூபமான ஒரு யோகம் அதை அடைவிப்பதற்கில்லை.

மனத்தின் நிறைவுக்கும் தர்ம கர்மா போதாது

மநுஷ்யனுக்கு முதல் கட்டு கார்யம். அடுத்த கட்டு எண்ணம். கார்யக்கட்டைத் தளர்த்தவேதான் கர்ம

Koviloor Digital Library

யோகம் பெரும்பாலும் ப்ரயோஜனப்படுகிறது. பயனில் பற்றில்லாமல் செய்வது என்ற மனோபாவத்துடனேயே இந்த யோகம் அநுஷ்டிக்கப்படுவதால், இந்த யோகத்துக்கு ஆதாரமே அந்த மனோபாவமாக இருப்பதால் அந்த அளவுக்கு மனஸை, அதாவது எண்ணத்தைப் பரிசுத்தி செய்கிறது. ஆனால் இப்படி பரிசுத்தி செய்வது அழுக்கைத் துடைக்கிறதோடு ஸரி; அலங்காரம் பண்ணி அழகுபடுத்துவதாகாது. வீட்டைத் துடைத்து கோமயம் தெளித்துவிட்டால் (இந்த நாளில் 'டெட்டால்' போடுவார்கள்!) போதுமா? அதிலே மணை, விரிப்பு — sofa என்றே வைத்துக் கொள்ளுங்கள்—போடவேண்டும். ஊதுவர்த்தி ஏற்றி வைக்கவேண்டும். கோலம் போடவேண்டும். இதே மாதிரி மனஸை அழுக்குப் போக வெறுமே துடைத்துவிட்டால் போதாது. அதை நல்ல எண்ணங்களால் நிரப்பி அழகு செய்ய வேண்டும். இப்படி அழகுபடுத்தக் கர்மாவால் ஆகாது.

கடைசியில் மனஸே போனால்தான் ஆத்மாநுபவம் ஏற்படும் என்பதால் இப்போதே மனஸை வெறுமனே பரிசுத்தி பண்ணி வெறிச்சென்று விட்டுவிட்டால் போதும் என்று நினைத்துவிடக்கூடாது. கெட்ட கர்மாவை நல்ல ஸ்வதர்ம கர்மாவால் போக்கிக் கொள்ளவேண்டுமென்பது போலவே, இதுவரை ஜன்மாந்தரமாக எவ்வளவோ கெட்டவற்றை எண்ணிவிட்டோமே, அவற்றை நல்ல எண்ணத்தால்தானே போக்கிக்கொள்ள வேண்டும்? ஸயன்ஸ் சட்டப்படியே ஆக்ஷனுக்கு ஸமமாய் ரியாக்ஷன் இருந்தாக னுமே! (செயலுக்கு ஸமமாக எதிர்ச்செயல் பண்ணியாக வேண்டுமே!) இல்லாவிட்டால் விளைவு தீராதே! இம்மாதிரி கெட்ட எண்ணங்களைப் போக்குவதற்கான நல்ல எண்ணங்களை உண்டாக்குவதற்கு கர்மா (கர்மயோகம்) போதாது. இப்போது அது மனஸை வெறிச்சென்று பண்ணுவதோடு விட்டுவிட்டால், பிஞ்சையே பழுக்க வைக்கப் பார்த்து அது வெம்பிப்போகும்படிச் செய்வது போலத்தான் ஆகும். பிஞ்சைக் காயாக, பழமாக மதுரமான எண்ண ரஸத்தால் முதிரவைத்து அப்புறம்தான் உதிர விடவேண்டும்.

Koviloor Digital Library

கர்மயோகம் என்று சாஸ்த்ரம் அமைத்துத் தந்துள்ள ஸ்வதர்மாநுஷ்டானமானது ஒரு ஜீவமனஸ் இந்த்ரியங்களைக் கொண்டு தன்னுடைய இஷ்டபூர்த்திக்காக செய்து கொண்டவற்றின் விளைவுகளைத் தேய்த்து அழிப்பதற்கு மட்டுமே முக்யமாக உதவும். இஷ்டப்பட்ட அந்த மனஸையே நிறைவு பண்ண அது போதாது. மனஸின் தப்பான எண்ணங்களைத் திருத்த, அதாவது மனஸ் தப்பாக எண்ணுவதைத் திருத்த, சாஸ்த்ர கர்மா டைரக்டராக உபகாரம் பண்ணாது; பண்ண அதனால் இயலாது. அதன் நேச்சரே அப்படி. கர்மா கர்மாவோடுதான் ஸம்பந்தப்பட முடியும். கார்ய ரூபத்தில் இஷ்டப்படி செய்ததை, சாஸ்த்ரத்தின் ரூல்படி கார்யரூபமாகச் செய்வது ஸரிப்படுத்த இயலும். மனஸில் நினைப்பையும் நினைக்கிற மனஸையும் கார்யம் எப்படி ஸரி செய்யமுடியும்?

அன்பு, பக்தி

துஷ்கார்யத்தை ஸத்கார்யத்தால் ஸரி செய்கிறாற் போல, கெட்ட நினைப்பை நல்ல நினைப்பால்தான் ஸரிசெய்ய முடியும். இங்கேதான் அன்பு வருகிறது. நல்ல எண்ணங்களிலெல்லாம் தலைசிறந்தது அன்புதான். அந்த அன்பை ஸமஸ்த ஜீவராசிகளிடமும் செலுத்தவேண்டும். அத்தனை ஜீவராசிக்கும் மூலாதாரமான பரமாத்மாவிடம் செலுத்தி பக்தி செய்யவேண்டும். மூலத்திடம் அன்பு (பக்தி) செய்யாமல் அதிலிருந்து வந்தவற்றிடம் மட்டும் செய்யப் பார்த்தால் அது ஸரியாய் வராது. அதனால் ஈச்வரபக்தி அத்யாவச்யம். மனஸ் ஜீவனுக்குப் போடுகிற தப்பான எண்ணக்கட்டை எடுத்துப் போடுவதற்கு இதுதான் வழி செய்யும்.

அதாவது மனஸ், தான் பின்னே நின்றுகொண்டு, சரீரத்தை முன்னேவிட்டுச் செய்விக்கிற கர்ம பந்தம் மட்டுமே ஸத்கர்மாவினால் போகும். மனஸின் நேர் பந்தமான எண்ணத்தின் பந்தம் பக்தியினால்தான் போகும். பக்தியும் எண்ணம்தான், மனஸை வைத்துக்கொண்டு அதனால் பண்ணுவதுதானென்றாலும், எப்படி சாஸ்த்ர

Koviloor Digital Library

கர்மா பழைய கர்மக்கட்டை அவிழ்க்கிற கட்டாயிருந்ததோ, அப்படியே இதுவும் எண்ணத்தின் விஷயத்தில் செய்யும். பக்தி செலுத்திக்கொண்டே போனால் அது முற்றிப் பூர்ணமாகும்போது, 'மனஸ் என்று தனியாக ஒன்றை வைத்துக்கொண்டு இவன் வேறாக பக்தன் என்று இருக்க வேண்டாம்' என்று பகவானே நினைப்பார்—இவனை மனஸிலிருந்தே அவிழ்த்து விடுதலை பண்ணித் தன்னுடைய ஆத்ம ஸ்வரூபத்தில் ஒன்றாக்கிக் கொண்டுவிடுவார்.

பிடிபடாமல் திமிறிக்கொண்டு நாலாபக்கமும் ஓடுவதையே இயற்கையாகக் கொண்ட மனஸை அதன் நேர்டிபார்ட்மென்டான எண்ணத்தில் ஒரு எல்லைக்குள் கட்டுப்படுத்தி அன்பு முதலான ஸத்சிந்தனைகளில் மாத்திரம் போகப்பண்ணுவது ஸுலபமான கார்யமல்ல. அதனால்தான் முதலில் கர்ம மார்க்கத்துக்கே சாஸ்த்ரங்களில் ப்ராதான்யம் தரப்பட்டிருக்கிறது.

சாஸ்த்ர கர்மாவுக்குப் பின்னணியான ஸத்சிந்தனை

இப்படிச் சொன்னால் கர்மா என்பது கார்யத்தோடேயே ஒரேயடியாய் முடிந்துவிடுகிறது என்று அர்த்தமில்லை. மனஸின்மீதும் அதன் பாதிப்பு—கெட்டதான பாதிப்பு, நல்லதான பாதிப்பு இரண்டும் இருக்கத்தான் செய்கின்றன. ஏனென்றால் மனஸினதாகிய எண்ணங்கள் கலக்காமல் ஜடமான மெஷின் மாதிரி நாம் கார்யம் பண்ணுவதில்லை. கார்யம் 'ப்ராமினன்'டாக முன்னுக்குத் தெரிந்தாலும், அந்தக் கார்யத்துக்குப் பின்னே ஒரு எண்ணமுண்டு. பொதுவாகச் சொன்னால் நாம் மனஸ் போனபடி கார்யம் பண்ணுவதெல்லாம் லோக இன்பங்களிலுள்ள ஆசை எண்ணத்தின் மேலேதான். 'இப்படிப் பண்ணிப் பண்ணி அழுக்கேறிப் போன நம்மை சுத்தி செய்துகொண்டு ஞான விசாராதிகள் செய்வதற்குரிய பாத்ரமாக ஆக்கிக்கொள்ள வேண்டும்' என்ற எண்ணமும், 'ஸமூஹத்துக்கான பலதரப்பட்ட கார்யங்களில் குழப்பமேற்படாமல் அவை ஒழுங்

Koviloor Digital Library

காகப் பிரிவினை செய்யப்பட்டு க்ரமப்படி ஆற்றப்படவேண்டும்; இதனால் லோககேக்ஷமம் உண்டாக வேண்டும்' என்ற அன்பெண்ணமும் ஒன்றுகலந்தே சாஸ்த்ரம் விதித்த ஸ்வதர்ம கர்மாக்களுக்குப் பின்னே அடிப்படையாக இருக்கின்றன.

ஸத்கர்மாவில் சித்தச் சிதறல் குறைவது

அதோடுகூட எந்தக் கார்யத்திலும், இப்படிப் பொதுவானதாக இல்லாமல், அதைக் குறித்தே ஏற்பட்ட அநேக எண்ணங்கள் கலந்திருக்கின்றன. பூஜை என்ற கார்யம் செய்கிறானென்றால், 'இப்போது துளஸி அர்ச்சனை பண்ணணும்', 'இப்போதுபில்வார்ச்சனை பண்ணணும்', 'தீபத்தைத் தூண்டிவிடவேண்டும்', 'பூஜா பாத்ரங்களில் இடறிக் கொள்ளாமல் ப்ரதக்ஷிணம் பண்ணணும்' என்றிப்படி அநேக எண்ணங்கள் தோன்றி, அதன்படியே கார்யம் செய்கிறான். 'பக்தி' என்ற பொதுவான, முக்யமான எண்ணத்தோடு இப்படிப் பல எண்ணங்கள் உள்ளன. இப்படியே ஒவ்வொரு கார்யத்திலும்.

இதிலே கவனிக்கவேண்டிய விஷயம் என்னவென்றால், கர்மா இப்படிச் சில எண்ணங்களோடு சேர்ந்ததாக இருப்பதால் இதற்கு ஸம்பந்தமில்லாத வேறு எண்ணங்களில் அப்போது மனஸால் போகமுடிவதில்லை. தனியாக மனஸை விட்டால் அது ஸம்பந்தா ஸம்பந்தமில்லாமல் எல்லாப் பக்கமும் சிதறி ஓடிக்கொண்டிருப்பது போலில்லாமல், கார்யம் செய்கிறபோது அந்தக் கார்யம் ஸம்பந்தப்பட்ட சில எண்ணங்களில் மட்டும்தான் மனஸ் செல்லுகிறது. இந்த அளவுக்குக் கார்யத்தினாலேயே மனஸுக்கும் ஒரு கட்டுப்பாடு வருகிறது. பூர்ணக் கட்டுப்பாடாயில்லாவிட்டாலும், ஏதோ ஒரு வழியில் மட்டுமே மனஸ் போவது என்ற அளவுக்குக் கட்டுப்பாடு ஏற்படுகிறது.

வேலை எதுவும் செய்யாமல் வெறுமனே உட்கார்ந்து கொண்டோ படுத்துக்கொண்டோ இருக்கும்போது எதை

Koviloor Digital Library

யாவது ஒன்றையே நினைப்பது, அல்லது அதைக் குறித்த சிலவற்றை மட்டும் நினைப்பது என்றால் முடிவதில்லை. தொடர்பில்லாத ஸமாசாரங்களிலெல்லாம் மனஸ் பிய்த்துக் கொண்டு கிளம்புகிறது. ஆனால் ஒரு வேலையில் ஈடுபட்டு விட்டால் அது ஸம்பந்தப்பட்ட எண்ணங்களுடன் மட்டும் மனஸ் நி ்றுவிடுகிறது. 'ஈச்வர த்யானம் செய்யலாம்' என்று கார்யமில்லாமல் உட்கார்கிறபோது, போகப்படாத எண்ணத்திலெல்லாம் மனஸ் பாய்கிறது. இப்படிப் பலபேர் வந்து சொல்லிக்கொண்டு அழுகிறார்கள். அதுவே, ஈச்வரனைப் பூஜை பண்ணுகிறேன் என்று ஆரம்பித்து, அதற்கான கார்யங்களைச் செய்துகொண்டு போகும்போது, அப்போதும் பல எண்ணங்கள் உண்டானாலும், ஸம்பந்தமே யில்லாத எண்ணங்கள்கூடக் கொஞ்சம் வந்தாலும், வகை தொகையே இல்லாமல் சித்த வ்ருத்தி சிதறுவது என்று இல்லாமல், அதற்கு ஓரளவில் கட்டுப்பாடு ஏற்படுகிறது.

பூஜைதான் என்றில்லை; ஒருத்தன் சீட்டாடுகிறானென்றால்கூட அப்போது அதைக் குறித்த எண்ணங்களில் தான் அவனுடைய மனஸ் கான்ஸென்ட்ரேட் ஆகிறது. ரொம்பவும் சபல சித்தமுள்ள ஒரு குழந்தை கிட்டிப்புள் விளையாடும்போது அதனுடைய சித்தம் அதிலேயேதான் இருக்கிறது. "பக்ஷணம் தருகிறேன் வா" என்று தாயார்க்காரி கூப்பிட்டால்கூட, "வேண்டாம் போ" என்று சொல்லிவிட்டு, நாக்கைத் துருத்திக்கொண்டு விளையாட்டிலேயே மும்முரமாகப் போகிறது.

சாஸ்த்ர கர்மா என்று மஹான்கள் வகுத்துக் கொடுத்திருப்பவை இரண்டு விதத்தில் நல்லது பண்ணுகின்றன. மற்ற காரியங்கள் அவசியமற்றதிலோ, தப்பானதிலோகூட மனஸை நிறுத்துகின்றனவென்றால், சாஸ்த்ர கர்மாக்கள் எண்ணங்களில் நல்லவையானவற்றிலேயே மனஸ் போகும்படிச் செய்கின்றன. இது ஒன்று. கெட்டவையான எல்லாவற்றிலிருந்தும் அவை மனஸைத் திருப்பிவிடுகின்றன. இது இரண்டாவது நன்மை.

Koviloor Digital Library

காரியத்திலேயே கண் என்கிறபோது மனஸ் இரண்டாம் பக்ஷமாகிறது. ஆனாலும் மனஸுக்கும் இப்படிக் காரியத்தினால் நன்மை உண்டாகிறது. நம்மளவிலே நமக்கு என்ன தெரிகிறதென்றால், ஒரு ஸத்காரியத்திலே நாம் ஈடுபட்டிருக்கிறபோது அது எந்த அளவுக்கு நம்மை ஸத்சிந்தனையில் செலுத்தினாலும் ஸரி, அல்லது செலுத்தாமலே போனாலும் ஸரி, நிச்சயமாக நம்மைக் கெட்ட நினைப்பு நினைக்க வொட்டாமலும், அதைவிட ஸர்வ நிச்சயமாக, கெட்ட கார்யம் செய்ய வொட்டாமலும் தடுத்துப் பெரிய உபகாரம் பண்ணுகின்றன.

கார்யமும் த்யானமும்

கோயில் ப்ராகாரத்தைத் தேய்த்து அலம்பி விடுகிற கார்யத்தைச் செய்வதாக வைத்துக்கொள்வோம். 'ஸாக்ஷாத் ஸர்வேச்வரன், ஸர்வ வ்யாபி, அவனுடைய ஸர்வ வ்யாபகத்தைப் புரிந்துகொள்ள முடியாத அசடுகளான நமக்காக ஒரு அர்ச்சையில் (விக்ரஹத்தில்) குடிகொண்டிருக்கிற இடம் இது. இதில் அழுக்கு சேராமல் காப்பாற்றினால் நம் ஹ்ருதயத்திலும் அழுக்கு சேராது; இதில் ஊர்வாசிகள் எல்லாரும் சேர்ந்து செய்தால் ஸமூஹத்திலும் த்வேஷம், பேதம் முதலான அழுக்குகள் சேராது' என்ற எண்ணத்தோடு நல்ல பக்தியோடு, நன்றியோடு தேய்த்து அலம்பினால் விசேஷம். ஆனால் தேய்த்து அலம்புகிற கார்யம் இருப்பதாலேயே இப்படிப்பட்ட ஸத்சிந்தனையில் அப்படியே அமிழ்ந்து போக முடியாது. சிந்தனையின் பூர்ணமான ஐகாக்ரியத்துக்கு (ஒருமுனைப்பாட்டுக்கு) கார்யம் தடைதான். இதை ஒத்துக்கொண்டுதான் ஆகவேண்டும். ஓரளவுக்கு, ஒரு பெரும் அளவுக்கு வேண்டுமானாலும், சிந்தனையை வகை தொகைப் படுத்தத்தான் கார்யம் ஸஹாயம் செய்யுமே தவிர பூர்ணமாக ஒரு எண்ணத்திலேயே ஒருமுகப்பட அது விடாது. சிந்தனையோடு கார்யம் என்று ஒன்று சேர்கிறபோதேதான் இருமுகப்பட ஆரம்பித்து விட்டதே!

Koviloor Digital Library

"ஸரி, அப்படியானால், மேலே சொன்னமாதிரி நன்றி, பக்திகளோடு ஸத்சிந்தனையை ஐகாக்ரியப் படுத்துவதற்காகக் கார்யம்தான் செய்தாகவேண்டுமா என்ன? இதுகளை ஒருமுக மாக்கிக்கொள்ள வசதியாக, வேலையில்லாமல் த்யானம் செய்ய உட்கார்கிறேனே!" என்றால்,

உட்கார்ந்து பார்.

விளக்குமாற்றைப் போட்டுவிட்டு உட்கார்ந்தாயா?

"உட்கார்ந்தேன்."

ஸரி, கொஞ்ச நாழி அப்படியே த்யானம் பண்ணு.

....

(அற்புத நாடகமாக இரு பாத்ரங்களைத் தாமே தாங்கி நடிக்கும் ஸ்ரீசரணர்கள் சிறிதுபோது மௌனமாக இருக்கிறார்கள்.)

என்ன, த்யானம் பண்ணுகிறாயா? நான் கேள்வி கேட்டு உன் த்யானத்தைக் கலைத்துவிட்டேனா?

"இல்லை ஸ்வாமிகளே, இல்லை. நீங்கள் கலைக்கவும் இல்லை; ஒண்ணும் இல்லை. அதுவே கலைந்து போய்விட்டது. கலைந்து போய்விட்டது என்று சொல்வதுகூடப் பிசகு. முதலுக்கே எண்ணங்கள் ஒருமுகப்பட்டுச் சேரவில்லை; ஆகையினால் கலைவதற்கு என்ன இருக்கிறது? உட்கார்ந்தவுடன் ஏதோ ஒரு க்ஷணம், இரண்டு க்ஷணம் ஸத்சிந்தனையில் மனஸ் சாந்தமாயிருந்தது. பகவானைக் கவிந்துகொண்டு நின்றது. உடனேயே, 'இதனால் பக்தி, த்யானம்தான் கர்மாவைவிட உசத்தி என்றாகிறது. இதுதான் ஸுபீரியர், கர்மா இன்ஃபீரியர்' என்ற எண்ணம் வந்தது. அப்புறம், ஒளிக்காமல் சொல்கிறேன்: எண்ணம் மேலே மேலே சிதறிப்போய் 'அத்வைதம் சொல்ல வேண்டிய பெரியவா ஏன் எப்போ பார்த்தாலும் கர்மா—ன்னு கட்டிண்டு அழச் சொல்றார்?' என்கிற வரைக்கும் ஓட ஆரம்பித்துவிட்டது. ஆதி ஆசார்யாள், க்ருஷ்ண பரமாத்மா முதலானவர்களும் இப்படித்தான் சொன்னாரென்று எடுத்துக்காட்டுகிறாரே என்று நினைப்பு

Koviloor Digital Library

போயிற்று. லக்ஷ்யத்துக்கும் நடைமுறைக்கும் இத்தனை வேறுபாடாக இருக்குமா என்று தோன்றிற்று. அதன் தொடர்ச்சியாக, காந்தீயம்தான் லக்ஷ்யம் என்று சொல்லிக் கொண்டே நடைமுறையில் ஏகப்பட்ட ஃபாக்டரிகளைத் திறந்து வைத்துக்கொண்டும், ராணுவச் செலவை அதிகரித்துக்கொண்டும் போவதைப்பற்றித் 'தாட்' வந்தது. அப்புறம் ஏக பாலிடிக்ஸ், எலெக்ஷனில் யாருக்கு வோட் போடலாம் என்கிற வரைக்கும் எங்கெங்கேயோ நினைப்பு ஓடி, பிடிக்காத கட்சியின் லீடர் நாசமாகப் போகணுமென்று சபிக்கிற அளவுக்கு ஆகிவிட்டது. 'ஐயையோ, ப்ராகாரம் அலம்பிவிடணும் என்று வந்துவிட்டு, அது ப்ரயோஜனமில்லை என்றல்லவா த்யானம் என்று உட்கார்ந்தோம்? இப்போது நம் மனஸிலேயே இத்தனை அழுக்கு சேரவிட்டிருக்கிறோமே! தேய்த்து அலம்புகிற கார்யமே இதற்கு எத்தனையோ ச்ரேஷ்டம். அது ஸத்சிந்தனையில் மனஸை ஒருமுகப் படுத்தாவிட்டாலும், மனஸ் கன்னாபின்னா என்று ஓடாமல் நிச்சயமாகக் கட்டுப்படுத்துகிறதல்லவா? போதும், போதும் த்யானம். வேலைக்கு எழுந்திருக்கலாம். ஆனால் பெரியவாகிட்டே ஜம்பமாக த்யானம் செய்கிறேனென்று சொல்லி உட்கார்ந்துவிட்டு இப்போது எழுந்திருக்கிறதென்றாலும் என்னமோ போல இருக்கே!' என்று எப்போது நினைத்தேனோ அப்போதுதான் நீங்களும் குரல் கொடுத்தீர்கள்! ஆலய சுத்தி செய்ய வந்த விசேஷத்தால் தான் மனஸில் வைத்துக்கொள்ளாமல் இதைச் சொல்கிறேன் போலிருக்கிறது!"

ப்ராகாரத்தை சுத்தம் செய்வதென்றால் தண்ணீர் இழுப்பது, அதற்கான பாத்ரங்கள் ஸம்பாதனம் செய்வது, கட்டைத் துடைப்பத்தை இறுக்கிக் கட்டி வைத்துக் கொள்வது, பிசுக்குபட்ட இடங்களில் ஒரு தரத்துக்கு இரண்டுதரமாக அழுத்தித் தேய்ப்பது, த்வாரம் அடைத்துக் கொண்டிருக்கிற இடத்தில் குத்திவிடுவது என்று எத்தனையோ கார்யம், உபகார்யம் வரத்தான் செய்யும்.

Koviloor Digital Library

குத்திவிடும் குச்சியே சில ஸமயத்தில் அடைத்துக்கொண்டு விடுகிறாற்போல, இந்தக் கார்யங்களே ஸத்சிந்தனையைக் கொஞ்சம் அடைக்கத்தான் செய்யும், ஆனாலும் அதற்கான பக்வம் வரும் வரையில்—அந்தப் பக்வமும் ஸத்கர்மாக்களாலேயேதான் வரும், அப்படி வரும்வரையில்—த்யானம் என்று உட்காருவதைவிட ஸத்கர்மாவில் ஈடுபடுவதுதான் சிந்தனையை ஓரளவுக்காவது நல்லதில் செலுத்துவதற்கும், இதைவிட ரொம்பப் பெரிய அளவுக்குக் கெட்டதிலிருந்து திருப்பிவிடுவதற்கும் உபகாரம் செய்வது. 'பாஸிடிவ்'-ஆக அது செய்வதைவிட, 'நெகடிவ்'-ஆகச் செய்யும் உபகாரம் பெரிசு.

அதற்காக ஆரம்ப நிலையிலுங்கூட த்யானம் வேண்டவே வேண்டாம் என்று அர்த்தமில்லை. உத்தமமான விஷயத்திலே மனஸைக் கொஞ்சமாவது நிறுத்தப் பார்க்காமல் ஓயாமல் கார்யம் பண்ணிக்கொண்டே இருப்பதற்கு நாம் மனஸ் உள்ள மநுஷ்யனாகப் பிறந்தேயிருக்க வேண்டாம்; மெஷினாக நம்மை ஏதாவது ஃபாக்டரியில் பண்ணிப் போட்டிருக்கலாம். என்றைக்கோ ஒரு நாள் த்யானத்தில் பக்வம் வரவேண்டுமென்றால் அதற்கு ஆரம்ப முயற்சி பண்ணாமல் எப்படி முடியும்? இனிமேலே பக்வம் வரவேண்டுமென்பதாலேயே இப்போதுள்ள அபக்வ மனஸோடுதான் ஆரம்பித்தாக வேண்டுமென்றாகிறது.

சோனியாயிருக்கிறவன் யோகாஸனம் போட்டால் பலசாலியாகலாம். யோகாஸனம் போடுவதற்கே சோனிக்குக் கஷ்டமாகத்தான் இருக்கும். அதற்காக ப்ரயத்னத்தை விட்டுவிடுவதா? அஞ்சு நிமிஷமாவது பண்ண ஆரம்பித்து, அப்புறம் பத்து நிமிஷம், கால்மணி, அரைமணி என்று பண்ணிக்கொண்டு போய் எத்தனையோ சோனிகள் ஆரோக்யசாலிகளானதைப் பார்க்கிறோம். அப்படித்தான் இதுவும். ஆத்மா என்ற நினைப்பும் அத்வைதத்திலே ப்ரயாஸையும் உங்களுக்கெல்லாம் இன்றிலிருந்தே கொஞ்சம் கொஞ்சமாவது இருக்கவேண்டுமென்று சொல்லத்தான் உபந்யாஸம் செய்கிறேன். இது கொஞ்சம் இருக்கும்போதே

Koviloor Digital Library

இதற்கான சித்த சுத்தியைப் பெற நிறைய ஸத்கர்மா செய்யச் சொல்கிறேன். முடிந்த முடிவிலே நினைப்பும், அதாவது த்யானமும் போய் ஞான அநுபவமே நிற்கும்.

கர்மயோகமும் பற்றின்மையும்

இம்மாதிரி சித்த சுத்திக்கு உதவி செய்வதால்தான் ஸ்வய லாபம், பற்று இல்லாமல் கார்யம் பண்ணுவதற்கு 'யோகம்' என்று பெரிய பெயர் கொடுத்து, 'கர்ம யோகம், என்பது. மனஸின் இஷ்டப்படி போய்ச் செய்கிறதெல்லாம் ஜன்ம ஜன்மாவாக நம்மைப் பழிவாங்குவதற்கென்று சேர்ந்து விடுகிறது. ஏதாவது கஷ்டம் ஏற்பட்டால், பிடிக்காதது ஒன்று நேரிட்டால் "கர்மா" என்று தலையில் அடித்துக்கொள்வது இதைக் குறிப்பிட்டுத்தான். மனஸை சுத்தப்படுத்தி ஆத்மாவிடம் கரைவதற்கு முதல்படி போட்டுக் கொடுப்பது எதுவென்றால் அதுவும் கர்மாதான். "Path of Karma" என்று இப்போது நிறையப் பேர் லெக்சர் செய்கிறதும், இங்க்லாண்டிலும் அமெரிக்காவிலுமுள்ள பப்ளிஷர்களை கொண்டு புஸ்தகம் போடுவதும் இதைக் குறித்துத்தான். கர்ம மார்க்கம், பக்தி மார்க்கம், ஞான மார்க்கம் என்ற மூன்று மோக்ஷ ஸாதனங்களில் ஒன்றாக (நேர் ஸாதனமா, உபஸாதனமா என்ற விவாதம் இங்கே வேண்டாம்) இருப்பது இந்த Path of Action. இது நம் இஷ்டப்படி, மனம் போனபடி கார்யம் செய்கிறதல்ல. இஷ்டமோ, இஷ்டமில்லையோ, சாஸ்த்ரம் சொல்லிவிட்டது என்பதால் செய்தேயாக வேண்டிய கர்மாக்களை இங்கே செய்கிறோம். மனஸின் பற்று, பாசங்களுக்கு இங்கே இடமில்லை. இது ஸொந்த லாபம், ஜயம் கிடைக்குமா என்று பலனைப் பார்த்துச் செய்கிற கார்யமில்லை. "Disinterested Action" என்கிறார்கள். "Uninterested" இல்லை—அப்படிச்சொன்னால் அக்கறையில்லாமல் கார்யம் பண்ணுவது என்று அர்த்தமாகிவிடும். "Distinterested" என்றால் "ஸ்வய உணர்ச்சிகளாலே, தன்னுடைய ஸொந்த விருப்பு வெறுப்புக்களாலே பாதிக்கப் படாமல்" என்று

Koviloor Digital Library

அர்த்தம். "தன்னுடைய ஸொந்த லாபா லாபங்களைக் கருதாமல்" என்று அர்த்தம். "நிஷ்காம்யம்" என்பது இதைத்தான்.

இதிலேயும் ஒரு விருப்பு இருக்கத்தான் செய்கிறது! "ஆத்ம காமம்" என்று உபநிஷத்தே சொல்லுகிறபடி தன் நிஜ ஸ்வரூபமான ஆத்மாவை அடைய வேண்டுமென்ற விருப்பம்[1]. உடனேயே அந்த நிலையை "அகாமம்" என்றும் உபநிபஷத் சொல்கிறது. அதாவது ஆத்மாவில் ஐக்யப்பட வேண்டுமென்ற ஆசை ஆசையேயில்லாத அகாம நிலை என்கிறது; மனஸ் தன் லாபத்துக்காக ஆசைப்படுவதுதான் தப்பு. ஏனென்றால் இது பெறக்கூடிய லாபமெல்லாம் இந்த்ரியச் சிற்றின்பங்கள் தான். இங்கேயோ ஆத்மாவாவ தற்கு அது ஆசைப்படும்போது தன் லாபத்துக்காக இல்லாமல், தான் அப்படியே நஷ்டப்பட்டுப் போவதற்கு ஆசைப் படுகிறது; தான் கர்ப்பூரம் எரிந்து போகிறாற்போலச் சுவடேயில்லாமல் அழிந்துபோய், ஆத்மாவை மாத்திரம் ப்ரகாசிக்க விடவேண்டுமென்று விரும்புகிறது. இந்த விருப்பம் தப்பில்லைதான். இது இருந்தால்தான் நாம் ஸம்ஸார வாழ்க்கையை விட்டு ஸத்ய தத்வத்தின் பக்கமே திரும்புவோம்.

ஸொந்த லாபத்தைக் கருதாத இதில்தான் மஹா பெரிய லாபமிருக்கிறது. "யம் லப்த்வா ச(அ)பரம் லாபம் மந்யதே ந(அ)திகம் தத:", அதாவது, "எதை அடைந்தபின் அதைவிடப் பெரிய லாபமாக வேறெதையும் மதிக்க முடியாதோ அப்படிப்பட்ட லாபம்" என்று பகவான் சொல் கிற[2] ஆத்ம லாபந்தான். முன்னே சொன்னாற்போல் மனஸை அறவே நஷ்டப்படுத்திக்கொண்டு பெறுகிற லாப மாக இது இருப்பதால் இது போற்றுதற்குரியதே. மற்ற லாப எண்ணத்தோடு இதைச் சேர்த்துவிடக் கூடாது.

மனஸுக்கு இஷ்டமாக, ஸந்தோஷமாக இருக்கிறது என்பதற்காக இல்லாமல், மனஸை சுத்திசெய்து ஆத்மாவில்

---

1. ப்ருஹதாரண்யகம் 4.3.21
2. கீதை 6.22

Koviloor Digital Library

சேர்ப்பிப்பதற்கு உதவுகிறது என்றே சாஸ்த்ரீய விதிமுறைகளின்படி கார்யங்களைச் செய்வதுதான் கர்ம மார்க்கம், அல்லது கர்ம யோகம் என்று சொல்லப்படுவது. 'கர்மா' என்று தலையில் அடித்துக்கொள்கிறதன் 'எஃபெக்ட்'டைத் தணித்து அது போடுகிற பந்தத்தைத் தள்ர்த்திவிடுவதே கர்மயோகம் சொல்லும் ஸ்வதர்ம கர்மாநுஷ்டானம்; அதாவது அவனவனும் தனக்கு சாஸ்த்ரம் விதித்திருக்கிற கடமைகளைக் கொஞ்சங்கூட வழுவாமல் பின்பற்றுவது.

கர்மா செய்வது எப்படி மனஸையும் நல்லதாகவோ கெட்டதாகவோ பாதிக்கிறது என்று பார்த்தோம். கர்ம பந்தம் என்று சொல்வதிலும் இப்படியே நம்முடைய மனஸின் ஜன்மாந்தர எண்ணங்கள், போக்குகள், அநுபவ நெடிகள் (இவற்றை 'வாஸனை' என்றே சொல்லியிருக்கும்) எல்லாம் கலந்துதானிருக்கின்றன. நாம் செய்யும் நல்ல, கெட்ட கார்யங்களுக்கான பலன்கள் ஸ்டோராகின்றன. இப்படிச் சேர்ந்த கர்மாவை அநுபவிக்கவே ஜன்மாக்கள் ஏற்படுகின்றன என்று சொல்லும்போது, இப்படிச் சேரும் கர்மா என்பது கையை, காலை ஆட்டிச்செய்வது மட்டுமில்லை. எந்தெந்த மனோபாவத்துடன் இவற்றைச் செய்தோமோ அதுவும்தான் ஸ்டோராகிறது. நம்முடைய நல்ல, கெட்ட குணங்கள், எண்ணங்கள் ஒவ்வொன்றுக்குமான பலனை நாம் ஜன்மாக்கள் எடுத்து அநுபவிக்கத்தான் வேண்டும். இந்த ஜன்மாவில் சில வஸ்துக்களில் வைக்கும் தீவ்ரமான ஆசை, வேறு சிலவற்றில் வைக்கும் தீவ்ரமான த்வேஷம் எல்லாமும் ஸ்டோராகின்றன. அடுத்த ஜன்மாவில் இவை மறுபடி நம்மைப் பிடித்துக்கொள்கின்றன. வாஸனை, பூர்வ வாஸனை ஜன்மாந்தர வாஸனை என்றெல்லாம் சொல்வது இதுதான். பெருங்காயம், பூண்டு முதலானவற்றின் நெடி லேசில் போகாததுபோல இவை உடம்பு போனபிற்பாடும் ஸூக்ஷ்ம சரீரத்தைப் பிடித்துக்கொண்டு, அப்புறம் மறுபடி ஸ்தூலமாகப் பிறக்கும்போது மனஸுக்குள்ளிருந்து தன்

Koviloor Digital Library

நெடியை வீசவிடுவதால் வாஸனை என்று பெயர். விஷய வாஸனை என்றும் சொல்வார்கள். இந்த்ரிய நுகர்ச்சிகளுக்கு விஷயமாக இருப்பவற்றுக்குத்தான் குறிப்பாக 'விஷயம்' என்று பெயர். புலன்களின் பல தினுஸான இன்பங்களைச் சுற்றியேதான் மனஸ் படர்ந்து, அதற்கான காரியங்களில் ஜீவனை ஏவுவதால் விஷய வாஸனைதான் கர்மா மூட்டையைப் பெரிசாக்குவது. ஏதோ ஒரு புலனின் இன்பத்தை அடையவேண்டும் என்ற பலனை எதிர் பார்க்காமல், நிஷ்காம்ய கர்மம் செய்யும்போது, அதாவது கர்மத்தையே யோகமாகச் செய்யும்போது, மூட்டை குறைகிறது. மூட்டை என்பதற்கு பதில் கட்டு என்று சொன்னால், அதன் இறுக்கம் தளர்கிறது. நிஜமான கர்ம யோகத்தில் தன்னுடைய புலனின்பப் பலனை மட்டுமின்றி, உத்தம நோக்கத்தில் உதித்த லோகக்ஷேமம் என்ற பலனைக்கூடக் கருதக்கூடாது.

இதைக் கொஞ்சம் புரியவைக்கப் பார்க்கிறேன்: ஆத்மாவைக் கடைத்தேற்றிக் கொள்ளும்போதே லோக க்ஷேமத்தையும் உத்தேசித்ததாகத்தான் சாஸ்த்ரங்கள் தார்மிக கர்மாக்களை வகுத்துக் கொடுத்திருக்கின்றன. இதைப்பற்றி ஸந்தேஹமேயில்லை. தனக்காகப் பண்ணுவது போய் உலகுக்காகப் பண்ணுவது என்று இவன் ஆரம்பித்தால்தான் உலகங்கள், உயிர்கள் எல்லாவற்றுக்கும் மூலமான, தாயும் தந்தையுமாக உள்ள ஈச்வரனின் அருள் இவனுக்குக் கிட்டி விடுபடும் வழிக்கு இவன் போகமுடியும். ஆனாலும் ஒருவன் இப்படி ஸ்வதர்மாநுஷ்டானம் பண்ணும் போது, 'நான் இப்படிப் பண்ணினதால் உலகத்துக்கு இந்த நல்லது ஏற்பட்டதா?' என்று பலனைப் பார்த்துக் கணக்குப் போட்டுக் கொண்டே இருக்கப்படாது. லோக க்ஷேமத்துக்கென்றே சாஸ்த்ர கர்மாக்களைப் பண்ணினாலும், எந்த நன்மையான பலனை உத்தேசித்து அந்தக் கர்மாவை சாஸ்த்ரம் கொடுத்திருக்கிறதோ அது ஈடேறாமலும் போகலாம். உத்தம லக்ஷ்யங்களுக்காகப் பல பேர் உயிர் தியாகம் பண்ணியுங்கூட அவை நிறைவேறாமல் போவதையும் நாம்

Koviloor Digital Library

அவ்வப்போது பார்க்கிறோம். அதனால் சாஸ்த்ரம் லோகக்ஷேம பலனை உத்தேசித்துக் கர்மாவைச் சொன்னாலும் நாம் அந்த உத்தேசத்தையே எப்போது பார்த்தாலும் நினைத்துக் கணக்குப் போடாமல் செய்தால்தான், இம்மாதிரியான ஸந்தர்பங்களில், "நல்லதைச் செய்து என்ன கண்டோம்? இது கலி. கெட்டதற்கே காலம். நல்லது இந்த லோகத்தில் எடுபடப் போவதில்லை. நாம் பாட்டுச் சும்மாக் கிடப்போம்" என்கிற ஆயாஸம், மனக்கசப்பு, தோல்வி மனப்பான்மை முதலானவை ஏற்படாமலிருக்கும். ஆகையினால் இந்தப் பலனைக்கூட எதிர்பார்க்காமல் வெற்றியோ, தோல்வியோ நாம் பாட்டுக்கு, "சாஸ்த்ரம் சொல்லிற்றா? செய்வோம்" என்று, அதன்படி செய்துகொண்டே போக வேண்டும்.

ஸத்கர்மா பலிக்காததேன்?

"அப்படியானால் சாஸ்த்ரம் பொய்யா? லோகக்ஷேமத்துக்காக என்று அது விதித்த ஸ்வதர்ம கர்மாக்களால் எப்படி அந்தப் பயன் ஏற்படாமல் போகலாம்?" என்று கேட்கலாம்.

அப்படி அர்த்தமில்லை. தனி மநுஷ்யன் பண்ணுகிற தப்புக்களுக்கு அவன் அநுபவித்துக் கஷ்டப்படத்தான் வேண்டும் என்று இருக்கிறமாதிரியே ஸமூஹம் பூராவும் தப்பு வழியில் போகிறபோது அதுவும் க்ஷேமத்தை அடையாமல் கஷ்டத்தைத்தான் அடையவேண்டுமென்று ஒவ்வொரு 'பீரியட்'களில் ஏற்படுவதாக வைத்துக்கொள்ளலாம். அம்மாதிரி ஸமயங்களில் நாம் அதன் நல்லதற்காகப் பண்ணுவது பலிக்காத மாதிரி ஆகிறது. 'மாதிரி' தான்! பலிக்கவேயில்லை என்று சொல்லமுடியாது. க்ஷேமாபிவ்ருத்தி நம் கண்ணுக்கு முன்னே தெரியாதபோதுகூட ஜனஸமூஹத்தின் கூட்டுப் பாபம் நாம் செய்கிற ஸத்கர்மாக்களால் குறையத்தான் செய்யும். ஸொந்த வாழ்க்கை போலவே ஜனஸமூஹத்தின் வாழ்க்கையிலும், ஏற்கெனவே பண்ணினதற்கு அநுபவித்தாகணும்; அதைப் புதிசாகப் பண்ணுவதால் ஒன்று குறைத்

Koviloor Digital Library

துக்கொள்ளலாம், அல்லது பெருக்கிக்கொள்ளலாம் என்று இருக்கிறது என்பதைப் புரிந்து கொண்டால் 'சாஸ்த்ரம் பொய்யா? ஏன் பலன் கிடைக்கவில்லை?' என்ற கேள்வி வராது.

நாம் செய்த பழைய பாபம் என்ன, ஜன ஸமூஹம் முழுதும் சேர்ந்து பண்ணின பூர்வ பாபம் என்ன, தற்போது நாம் சாஸ்த்ரப்படி பண்ணும் ஸத்கார்யங்களுக்குப் புண்ய 'வால்யூ' என்ன, இது பழைய மூட்டையின் பாரத்தை எவ்வளவு குறைக்கிறது என்பதெல்லாம் எதுவும் தெரியாத படியே ஈச்வரன் நம்மை வைத்திருக்கிறான். ஆனபடியால், பலன் என்று எதையோ எதிர்பார்த்துக்கொண்டு, அது கிடைக்கவில்லையே என்பதில் ஆதங்கப்படாமல் நாம் பாட்டுக்கு, "இந்தக் கணக்கெல்லாம் ரஹஸ்யமாகப் பார்த்து எவன் தீர்த்துக் கொண்டிருக்கிறானோ, அவன் தீர்க்கிறபோது தீர்க்கட்டும். நாம் ஒன்றும் கேள்வி கேட்காமல், ஒன்றையும் எதிர்பார்க்காமல் நமக்கான கார்யத்தைச் செய்துகொண்டு போவோம்" என்று செய்துகொண்டேயிருக்கவேண்டும். இப்படிப் பலனை முக்யமாக நினைத்துச் செய்யாமலிருக்கும் போதுதான் முழுக்க சாஸ்த்ரம் சொல்லும் தர்ம வழியிலேயே போகமுடியும். பலனைப் பார்க்க ஆரம்பித்துவிட்டோமானால், 'இப்படி தர்மமாகப் போய் பலன் அடைய முடியவில்லையா? ஸரி, அப்படியானால் வேறு குறுக்கு வழி, தப்புவழி, அதர்ம வழியிலே போய்தான் அடையப் பார்ப்போமே' என்று தோன்றும். தர்ம வழியிலேயே செல்வதற்கு நிஷ்காம்ய கர்மம் எனும் **disinterested action**தான் உதவும்.

பய வாய்ப்புக் குறைதல்

கட்டவிழ்த்துவிடுவதில் இதுவே ஆரம்பம். (சற்றுமுன்) சொன்னமாதிரி, இது மனஸை ஓரளவுக்கு நல்லதில் போகப் பண்ணி, பெரிய அளவுக்குக் கெட்டதில் போகாமல் தடுக்கிறது. இதிலே நன்றாகப் பழகிப் பழகிச் சித்த சுத்தி ஏற்பட, ஏற்பட கார்யமில்லாமல் தனியாக மனஸை மட்டும் வைத்துக்

Koviloor Digital Library

கொண்டு த்யானம் என்று செய்ய ஆரம்பிக்கும்பொது அது சிதறி ஓடாமல் கட்டுப்பட்டு நிற்க ஆரம்பிக்கிறது. இப்படிக் கட்டுப்பட்டு அது ஈச்வரனிடம் எவ்வளவுக்கெவ்வளவு நிற்கிறதோ அவ்வளவுக்கவ்வளவு ஸம்ஸாரக் கட்டு அவிழ ஆரம்பிக்கிறது. அப்புறம்தான் மனஸ் என்பதாக ஆத்மாவைக் குறுக்கிக் கட்டுப்படுத்தும் கட்டே ஈச்வரானுக்ரஹத்தினல் அவிழ்ந்து, கர்மா செய்வதற்கு ஒரு தனி ஜீவன் என்பதே இல்லாமலாகி, எனவே ஸம்ஸாரக் கட்டை அடியோடு அறுத்துக்கொண்டு அத்விதீயமான ஆத்மாவாக ஜீவன் தன்னை அறிந்து அதிலேயே நிலைப்பதான முக்தி கிட்டுகிறது.

பயத்துக்குக் காரணமான த்வைதம் போவது அப்போதுதான். கர்மா செய்யும்போதும், த்யானம் செய்யும்போதும் த்வைதம் தவிர்க்கவே முடியாதது. ஆனாலும் மனம் போனபடி நினைப்பதிலும், மனம் போனபடி கார்யம் செய்வதிலும் த்வைதம் நம்மை பயமுறுத்திய மாதிரி, ஈச்வரனையோ பரமாத்ம தத்வத்தையோ நினைப்பதான த்யானத்திலும், தர்மமான கர்ம மார்க்கத்திலும் பயமுறுத்துவதில்லை. நாம் ஈச்வரனை நினைக்கிறோம், அல்லது ஈச்வரன் என்று ஒரு ரூபமாக இல்லாமல் பரமாத்ம தத்வம் என்று அவனுடைய ஸாரத்தை நினைக்கிறோமென்றால் அப்போது அந்த ஈச்வரன் அல்லது தத்வம் நினைப்பவனுக்கு வேறான த்விதீய வஸ்துவாகத்தான் இருக்கிறான், இருக்கிறது. ஆனாலும் மற்ற நினைப்புகளுக்கு லக்ஷ்யமாகும் இந்த்ரிய விஷயங்களைப் போலவோ, உலக வஸ்துக்களைப் போலவோ ஈச்வரன் அல்லது ஈச்வர தத்வம் நம்மைக் குழியில் தள்ளிவிடக்கூடுமென்ற பயத்துக்கு இடமேயில்லை.

ஆனாலும் மனஸ் இந்த உத்தம நினைப்பிலே ஒருமுகமாக ஆகி, அற்றே போய்விடுகிறவரை வேறே ஒருவிதத்தில் ஓரளவுக்கு பயம் இருக்கும்தான். ஈச்வரனுமே வெளியிலே வேறு வஸ்துவாயிருக்கிறவரையில், 'என்ன மாயம்

Koviloor Digital Library

செய்வானே? மஹா பெரிய பக்தர்களுக்கும் பிடிபடாமல் அவ்வப்போது ஒடிப்போய் மறைந்துகொண்டு கதறக்கதற விட்டு வேடிக்கை பார்த்தவனுயிற்றே! ஏதோ இப்போது கொஞ்சம் மனஸுக்குப் பிடிபட்ட மாதிரி இருந்தாலும் எப்போது நழுவி ஓடுவானோ? இந்தப் பாழும் மனஸும் என்னென்ன குப்பைத் தொட்டிகளுக்கு ஓடுமா?' என்கிற பயம் இருக்கத்தான் செய்யும். எந்தவிதமான பயமானுலும் பயம் பயம்தானே? ஆதலினுல், மனஸ் உள்ள த்வைத நிலையில் எத்தனை உச்சிக்குப் போனுலும் அது பரிபூர்ண அபய நிலையாய் இருக்க முடியாது. ஆனுலும் மனஸை இஷ்டப்படி விடும்போது அது ரொம்பவும் பயத்துக்கு ஹேதுவாக இருக்கிறுற்போல இல்லாமல், பக்தி மார்க்கத்தில் போகும்போது பயம் என்பதற்கு ரொம்பவும் குறைவாகவே இடம் ஏற்படுகிறது.

தர்ம கர்மாவும் இப்படித்தான். கட்டை அவிழ்க்க வேண்டிய அதுவே கட்டைப் போட்டுவிடப் போகிறதே என்றுகூட சில ஸமயங்களில் பயப்பட வேண்டியதாகிறது. கர்மா என்று வரும்போது, அது எத்தனை ஸத்கர்மாவாக இருந்தாலுங்கூட, எத்தனை வெளி வஸ்துக்களை, மநுஷ்யர்களை எதிர்பார்க்க வேண்டியிருக்கிறது? அவற்றை, அவர்களை deal பண்ணுவதில் கோபம், எரிச்சல், ஏமாற்றம் (ஏமாறுவது, ஏமாற்றுவது இரண்டும்தான்)—எத்தனையோ ஏற்பட இடமிருக்கிறது. அப்போது, கட்டு தளருமா என்று இருக்கிறது. ஆனுலும் பலனை எதிர்பார்ப்பதில்லை என்பதில் மட்டும் தீவ்ரமாயிருந்து விட்டால், "நாம் ஸின்ஸியராக நம்மால் முடிந்த மட்டும் ப்ரயாஸை பண்ணுகிறேம். அப்படியும் இந்த வெளி வஸ்துக்கள் ஸரியாயில்லையா? ஏதோ சொத்தை சொள்ளைதான் கிடைக்கிறதா? மநுஷ்யர்கள் ஸாதகமாக இல்லாமல் குந்தகம் பண்ணுகிறுர்களா? எல்லாம் அப்படியே இருந்துவிட்டுப் போகட்டும். இருப்பதைக் கொண்டு நம்மால் என்ன பண்ணமுடியுமோ பண்ணலாம்" என்பதாகக் கோபம் முதலான தப்புணர்ச்சிகளுக்கு இடம் கொடுக்காமலிருக்கலாம்.

Koviloor Digital Library

எத்தனை சொன்னாலும், த்வைதத்தைச் சேர்ந்ததேயான கர்மாவிலும் பக்தியிலும் பரிபூர்ண அபயநிலை கைகூடாது. ஆனாலும் க்ஷணத்துக்கு க்ஷணம் பயத்துக்கு இடம் கொடுப்பதாக இருக்கிற ஸம்ஸாரத்திலிருந்து அபய பதமான அத்வைதத்துக்குப் போகவேண்டுமென்றால் அதற்குக் கர்மாவும் பக்தியும்தான் ஆரம்ப ஸாதனங்கள். "எப்போதும் பயம்" என்கிற நம்முடைய நிகழ்கால நிலை, இவற்றிலே "எப்போதாவது பயம்" என்று ஆகிறது. அப்புறம் "ஒரு போதும் பயமில்லை" என்கிற நிலை.

அந்த நிலை வர ஆரம்பத்தில் உதவி செய்வது ஸ்வதர்ம கர்மாநுஷ்டானந்தான். அதனால்தான், கீதையிலே பகவான், "ஸ்வதர்மத்தைப் பண்ணி அதிலேயே செத்தாலும் அதுவே ச்ரேயஸ். (ச்ரேயஸ், ப்ரேயஸ் என்று இரண்டு சொன்னேனே, நினைவிருக்கிறதோல்லியோ?) பிறன் தர்மத்தை எடுத்துக் கொண்டாயோ அது பயத்தைத்தான் கொண்டுவிடும்" என்பதாக "பயம்" என்ற வார்த்தையைப் போட்டார். பயம் என்றால் ஸம்ஸார பயம்தான்.

ஸ்வதர்மே நிதநம் ச்ரேய: பரதர்மோ பயாவஹ:

என்றார். 'நிதனம்' என்றால் சாவு. தன் தர்மத்தையே பண்ணிக் கொண்டு செத்தாலும் அதுவே ச்ரேயஸ்.

செத்தாலும் ஸ்வதர்மம்

ஏனென்றால் சாவு சரீரத்துக்குத்தானே? சரீரத்துக்குள் இருக்கும் உயிருக்கு முடிவே இல்லாமல் அது கர்மா உள்ள வரை வேறு சரீரங்களில் புகுந்து புது ஜன்மாக்கள் எடுத்துத் தான் ஆகவேண்டும். அப்படியானால் உயிருக்கு முடிவே இல்லாமல் இந்த ஸம்ஸார அவஸ்தைதானா என்றால்; அதற்கு முடிவு இல்லைதான்; ஆனால் நிறைவு என்று ஒன்று உண்டு. ஸம்ஸாரத்தில் அதற்கு நிச்சயமாக நிறைவில்லை; குறைதான். நிறைவு அது ஸம்ஸாரத்தை விட்டு தன் நிஜமான ஸ்திதியில் இருந்து கொண்டிருப்பதுதான். அந்த நிஜ ஸ்திதியை அது

Koviloor Digital Library

அடையப் பண்ணுவதற்கு ஆரம்பம் இந்த லோக வாழ்க்கையிலேயே ஸ்வதர்மாவை அநுஷ்டிப்பதுதான். செத்துப் போன பிற்பாடு சேருகிற கர்மா மூட்டையைக் குறைப்பது ஸ்வதர்மமே ஆதலால், அதைப் பண்ணிக்கொண்டே செத்துப் போவதில் சரீரத்துக்கு முடிவைக் கண்டாலும் உயிரின் நிறைவை நோக்கிப் போவதில் முன்னேற்றம் கண்டு விடுவோம். அதனால்தான் செத்தாலும் ச்ரேயஸ் என்றது.

நேர்ப் பயன் உலக நலனுக்கு

ஒரு ஜீவன் என்று ஏற்பட்டுவிட்டால் க்ஷணநேரம்கூட எதையாவது பண்ணாமலிருக்க முடியவில்லை. அதனால்தான் பண்ணாத நிலைக்குக் கொண்டுபோய்விடும்படியாகச் சிலவற்றைப் பண்ணும்படியாக "ஸ்வதர்மம்" என்று வகுத்து ஏற்படுத்திக் கொடுத்தார்கள். ஜீவன் இப்படி நிஷ்காம்யமாக ஸ்வதர்மப்படி கார்யங்களைப் பண்ணினால் அதிலே (இவனுக்கு ஜீவத்வத்தைத் தரும்) மனஸுக்கு லாபமில்லை. நிஷ்காம்யம் என்னும்போதே—அதாவது ஆசையில்லாமல் பண்ணுகிறானென்னும்போதே—இந்த அர்த்தம் ஏற்பட்டு விடுகிறது. ஏனென்றால் ஆசைப்படுவதுதான் மனஸின் முதல்வேலை, முக்யமான வேலை. அதன் ஆசைகளுக்காகத் தான் அத்தனை கார்யமும். ஆகையால் ஆசையில்லாமல் செய்கிறானென்றால் மனஸுக்கு லாபமில்லை என்றாகி விடுகிறது. அப்படியானால், கார்யமென்று பண்ணினால் அதில் ஏதோ ஒரு லாபமான பலன் இருந்தால்தானே தேவலை? இவனுடைய ஆசையைக் கட்டுப்படுத்தி மனஸை அடக்கவே கார்யத்தை சாஸ்த்ரம் கொடுக்கிறதென்றாலும், அந்தக் கார்யத்துக்கு ஒரு பலனுமில்லை என்று இருக்கவிடலாமா? இப்படி சாஸ்த்ரம் விடவில்லை. 'கார்யத்தினால் நேராக இவனுக்கு ஒரு லாபமில்லாமல் போனாலும் கார்யமற்ற ஸ்திதிக்குப் போவதற்கு இது உதவுகிறது என்ற மறைமுக லாபம் இருக்கட்டும். ஆனால், அதற்காக யாருக்கும் எந்தப் பயனும் நேராக விளைவிக்காத கார்யங்களை

Koviloor Digital Library

இவன் பண்ணும்படி விடவேண்டாம். இவன் கார்யம் பண்ணுவதால் இவனுக்கு 'இன்டைரக்டா'க சித்தி சுத்தி என்பதோடு அந்தக் கார்யம் முடிந்து, நேராக அந்தக் கார்யத்துக்கென்று எந்தப் பலனும் ஏற்படாமல் போவது என்றால் ஸரியாயில்லையே! நேராகவும் பயனை விளைவிக்கும் கார்யங்களாகவே இவனுக்குக் கொடுப்பதுதான் முறை. அந்த நேர் பலனுக்கு இவன் beneficiary யாக (பயனாளியாக) இருக்கக்கூடாது. இருந்தால் அதை எப்படியாவது பெற்றாக வேண்டுமென்ற ஆசை உண்டாகித் தப்பு வழியிலும் போக ஆரம்பிப்பான். ஆனதால், இவன் செய்யும் கார்யத்தின் நேர் பலனுக்கு இவன் பாத்திரனாவது என்று இல்லாமல், ஜன ஸமூஹம் முழுதும் beneficiary-யாக இருக்கட்டும். இவன் செய்யும் சாஸ்த்ர கர்மாவின் பலனாக லோகம் க்ஷேம மடைவதாக இருக்கட்டும்—என்ற அபிப்ராயத்தில்தான் ஸ்வதர்மங்கள் வகுக்கப்பட்டிருக்கின்றன.

ஒரு உதாரணம் சொன்னால் புரியும். எல்லா வஸதியும் படைத்த ஒருவர் இருக்கிறார். அவருக்கு நல்ல தேஹா ரோக்யமிருப்பதற்காக 'எக்ஸெர்ஸைஸ்' செய்யவேண்டி யிருக்கிறது. இதைச் செய்வதில் இரண்டு விதங்கள் இருக் கின்றன. ஒன்று, அவர் தேஹாப்யாஸம் என்று சொல்லப் படும் எக்ஸெர்ஸைஸ்கள் பண்ணலாம்—தண்டால் எடுக்க லாம், ஸர்வாங்காஸனம் போடலாம். அல்லது ஸகல அவயவங்களுக்கும் நன்றாக வேலை கொடுக்கும் விதத்தில் ஓடி ஆடி, வெட்டி, கொத்தி ஏதாவது பண்ணலாம். இப்படி இரண்டாவது விதத்தில் அவர் ஓடி ஆடிப் பண்ணுகிறாரென் றால், அப்போது மற்றவர்களுக்கு ப்ரயோஜனமாகப் பழத் தோட்டம் போடுவது, அதற்காக வெட்டுவது கொத்துவது, ஜலம் இழுத்துவந்து கொட்டுவது என்று பண்ணுவதே ச்லாக்யமாகும். இவருக்குப் பண வஸதி, ஆள் வஸதி எல்லா வஸதியும் இருக்கிறது; அதனால் இவரே உழைத்துத் தோட்டம் போட்டுப் பயிர் பண்ணவேண்டுமென்றில்லை. இவருக்குப் பழமும் வேண்டுமென்றில்லை. இருந்தபோதிலும்

Koviloor Digital Library

இவருக்கு மட்டும் ப்ரயோஜனப்படும்படி தண்டால் போடு வதைவிட, அல்லது எங்கேயோ நிர்மாநுஷ்யமான காட்டிலே மேட்டிலே போய் எதையோ வெட்டி, கொத்தி, முறித்துக் கொண்டிருப்பதைவிட, நாலு ஜனங்களுக்கு உதவும்படியான பரோபகாரமாகத் தோட்டப் பணி செய்வதுதானே ச்லாக்யம்? பழம் என்ற பலன் இவருக்கு வேண்டாம். ஆனால் தேஹாரோக்யம் வேண்டும். அதற்காக இவர் செய்வதே பழம் வேண்டிய வேறு யாருக்கோ உதவி பண்ணுகிறது.

இந்தமாதிரிதான் கர்மாவைக் கழித்துக்கொண்டு பரமாத்மாவிடம் சேர விரும்புகிறவர்களுக்கு சாஸ்த்ர கர்மா உள்பட எதனுல் ஏற்படுகிற பலனும் வேண்டியதில்லை. ஆனாலும், பரமாத்மாவிடம் சேருவதற்குண்டான பக்வத் தைப் பெறுவதற்காக மனஸை நாலா திசையிலும் ஓடாமல் சுத்தி செய்வதற்கு, ஆரம்ப தசையில் ஏதாவது கார்யத்தில் ஈடுபட்டால்தான் முடியுமென்றிருக்கிறது. ஸ்வய ஆசைகளின்மேல் செய்கிற கார்யமானுல் அந்தக் கார்யத்தில் தோஷங்கள் வந்து சேர்ந்துவிடுகின்றன. ஆனதால் ஸ்வய லாபம் கருதாத கார்யமாக அது இருக்கவேண்டும். அதற்காக எங்கேயோ காட்டிலே மேட்டிலே வெட்டிக்கொத்துகிற மாதிரியான தண்ட கார்யமாக இருக்கவிடலாமா? அது புத்திசாலித்தனமாகத் தோன்றவில்லையே! இந்த ஜீவனுக்கு —உதாரணம் காட்டிய வஸதியுள்ள மனிதருக்கு ஆரோக்யத் துக்காக எக்ஸெர்ஸைஸ் செய்யவேண்டியிருந்ததேயன்றி, தோட்டம் போட்டுப் பழம் பயிர் பண்ண வேண்டிய தேவை இல்லாதிருந்த மாதிரி—சித்த சுத்திக்காகத்தான் கர்மா பண்ண வேண்டியிருக்கிறதே தவிர, கர்மாவினுலேயே நேராக உண்டாகிற ஒரு பலனைப் பெறவேண்டுமென்றில்லை. ஆனாலும் அவர் எப்படி தனக்கான எக்ஸெர்ஸைஸாகவே லோகோபகாரமாகவும் தோட்டம் போட்டாரோ, அதே மாதிரி இவன் தன் சித்த சுத்திக்காகச் செய்யும் கர்மாவே லோகோபகாரமாகவும் இருக்கவேண்டும் என்று அபிப்ராயப்

Koviloor Digital Library

பட்டு சாஸ்த்ரங்கள் ஒவ்வொருவனுக்கும் ஸ்வதர்மா என்று ஒவ்வொரு விதமான கர்மாவை வகுத்துக் கொடுத்திருக்கிறது.

பழம் வேண்டுமென்றுள்ளவர்கள் மாதிரி இந்த லோகத்திலேயே அநேக நல்லதுகளைப் பெறவேண்டிய அடிநிலை மநுஷ்யர்கள் எப்போதும் இருந்து கொண்டு தானிருப்பார்கள். பகவானுடைய லீலையில் லோக நாடகம் என்று ஒன்று நடந்து கொண்டேயிருப்பதாகத்தான் இருக்கும்.

உலக நாடகமும் ப்ரளயங்களும்

எல்லாரும் மோக்ஷத்துக்கு முயற்சி பண்ணி, ஸம்ஸாரத்தைக் கழித்துக்கொண்டு லோக வாழ்க்கை என்ற ஒன்றே இல்லாமல் போவதென்பது ஸாத்யமில்லை. பலவித எண்ணமுள்ள ஜனங்களைப் படைத்து ஆடவிட்டு, ஓடவிட்டு, பரஸ்பரம் மோதிக்கொள்ளவிட்டு இதிலே விசித்ர விசித்ரமாகப் பல ரஸங்கள் ஏற்படும்படியாக லோக நாடகத்தை ஈச்வரன் நடத்திவருகிறான். இப்படி நாடகம் பார்த்து ரஸிப்பதற்குத் தான் அவன் லோக லீலை செய்வதே. எல்லாரும் ஞானிகளாகி பரம பக்தர்களாகி அவன் விட்ட வழி என்று இருந்தால், ப்ரேம ரஸம் என்ற ஒன்றையே பெருக்கிக் கொண்டிருந்தால், அல்லது அதுவும் இல்லாத பரம சாந்தியில் முழுகிவிட்டால் ஈச்வரனுக்கு எப்படி ட்ராமாவின் ரஸபேதங்கள் கிடைக்கும்?

அதே ஸமயம் அவன் கருணை வள்ளலும்தான். அதனால் வேடிக்கையெல்லாம் பார்த்தாலும் அநேக யுகங்கள், கல்ப காலம் ஆகிறபோது, "ஐயோ பாவம்! இப்படி ஆட்டமாக ஆடிவிட்டதுகளே!" என்று பரம கருணையோடு தானே அவர்களை எல்லாம் தன்னிடம் ஒடுக்கிக்கொண்டு விடுகிறான்; அவர்களாக ஸாதனை பண்ணி ஒடுங்குவதில்லை; ஈச்வரனே ஒடுக்கிக் கொண்டுவிடுகிறான்.

உலகமேயில்லாத மஹா ப்ரளயம் என்பது அதுதான்,

Koviloor Digital Library

நித்ய ப்ரளயம் என்பதாக தினம் தூக்கத்தில் ஈச்வர னிடம் லயித்திருப்பது; செத்தபின் ஸ்வர்க்க—நரக—புனர் ஜன்மாதிகளுக்குமுன் கொஞ்சகாலம் அவனிடம் லயித்தி ருப்பது; சுமார் எழுபது சதுர்யுக காலம் கொண்ட ஒவ்வொரு மன்வந்தரத்துக்குப் பிறகும் சிறிது காலம் ஸ்ருஷ்டி முழுக்க ஈச்வரனிடம் லயித்திருப்பதான ஒரு "ப்ரளயம்"; இப்படிப் பதிநாலு மன்வந்தரங்கள் அடங்கிய ப்ரம்மாவின் ஒரு பகல் வேளையான ஆயிரம் சதுர்யுகங்கள்* முடிந்தபின் அதே மாதிரி ஆயிரம் சதுர்யுகங்கள் கொண்ட அவருடைய ராத்ரி வேளை பூராவும் ஸ்ருஷ்டித் தொழிலில்லாததால் ஜீவர் களெல்லாம் ஈச்வரனிடம் லயித்திருப்பதான "நைமித்திக ப்ரளயம்"; (மேலே சொன்னதுபோல) இரண்டாயிரம் யுகங்களை ஒரு தினமாகக் கொண்ட பிரம்மா இம்மாதிரி நூறு வயஸு வாழ்ந்துவிட்டு பரமாத்மாவோடு ஐக்யமான பின், இதேமாதிரி நூறு ப்ரம்ம வருஷத்துக்கப்புறம் அடுத்த ப்ரம்மாவைக் கொண்டு அடுத்த ஸ்ருஷ்டியைப் பரமாத்மா ஆரம்பிக்கும்வரையில் ஒரு ப்ரளயம் ("ப்ராக்ருதிக ப்ரளயம்"), முடிவேயில்லாத "ஆத்யந்திக ப்ரளயம்" என்று பலவிதமான ப்ரளயங்களைப் புராணங்கள் சொல்கின்றன.

இப்படி எத்தனை யுகயுகம் அவனிடம் லயித்திருந்தாலும், அதுவும் அவனோடேயே நிரந்தரமாக, சாச்வதமாகச் சேர்ந்து அவனை அறிந்து ஐக்யப்பட்ட அத்வைத மோக்ஷ மில்லை. ப்ரளயத்தில் லயித்த ஜீவர்கள் அத்தனை யுகயுகங் களுக்கு அப்புறம் மறுபடி ஸ்ருஷ்டி ஏற்படும்போது லயம் நீங்கி அவனுக்கு வெளியிலே வந்து மறுபடி பிறக்கத்தான் வேண்டும். அவனுக்கு ட்ராமா பார்த்துத்தான் ஆகணும். லயத்தில் அவனை அறியும் அநுபவமும் இல்லை.

ஐக்யம் என்று அப்படியே அவனேயான அறிவாகி ஏகமாக ஆகிவிடுவதுதான் சாச்வத விடுதலை. லயம் என்பது

---

* கல்ப காலம் என்பது ப்ரம்மனின் ஒரு பகலான ஆயிரம் சதுர்யுகங்கள் தான்.

Koviloor Digital Library

ஐக்யமில்லை. ஒரு வஸ்து இன்னொன்றிலே ஒன்றாக இழைந்திருக்கும் நிலைதான் லயமே தவிர, அதுவாகவே ஆகிவிடுவதல்ல. அதனால்தான் ப்ரளயத்தில் லயித்தவர்களை அவன் மறுபடி ஸம்ஸாரத்தில் அவிழ்த்துவிட முடிகிறது. நித்ய ப்ரளயமான தூக்கமே எடுத்துக்காட்டு.

சாஸ்த்ரங்கள், இம்மாதிரி ஜீவஸமூஹம் முழுதும் தன் முயற்சியும் ஸாதனையும் இல்லாமல் அவனுடைய க்ருபையாலேயே அவனிடம் லயித்திருப்பதையும் மறுபடி அடுத்த ஸ்ருஷ்டியில் உத்பவிப்பதையும்தான் சொல்கின்றனவே ஒழிய, லோகம் பூராவும் ஞானம் பெற்று அறிவான, ஆனந்தமான மோக்ஷம் அடைவதாகச் சொல்லவில்லை.

அதாவது, 'லோகம் என்று ஒன்று இருந்தால் அதிலே மோக்ஷாதிகாரிகளாக ஆகாத பலபேர் இருந்துகொண்டு தானிருப்பார்கள்; விசேஷமாக பக்தி, ஞானங்கள் இல்லாதவர்களாகவே பலர் இருந்துகொண்டிருப்பார்கள்; இப்படிப் பட்டவர்களுக்கும் தன்னிடம் ஒடுங்கியிருப்பதான சாந்த நிலையைத் தரவேண்டுமென்று ஈச்வரன் நினைக்கும்போது லோகமே இல்லாமல் பண்ணித்தான் ப்ரளயத்தில் எல்லாவற்றையும் தனக்குள் இழுத்துக்கொள்வான்; லோகம் என்று ஒன்று இருந்து அதில் பக்தி ரஸம், ஞானத்தின் சாந்தி என்ற இரண்டு மட்டுமே இருப்பதாக விடமாட்டான்' என்றே சாஸ்த்ரங்களிலிருந்து ஏற்படுகின்றன.

ஞானத்தின் உண்மையான சாந்திநிலைக்கு லோகம் இருந்தும் ஒன்றுதான், இல்லாவிட்டாலும் ஒன்றுதான். ப்ரேம ரஸத்துக்கும், அது ஒன்றே பெருகுவதற்கென்று வைகுண்ட, கைலாஸாதி லோகங்கள் இருக்கின்றன. ஆகையால் நவரஸ நாடகமாகத்தான் இந்த ஜீவலோகம் இருக்க வேண்டும்.

உலக வாழ்வின் உயர் நலன்களுக்காக

மஹா ப்ரளயம் என்று அவனே எப்போது எல்லாவற்றையும் உள்ளே இழுத்துக் கொள்கிறானோ அப்போதுதான்

Koviloor Digital Library

நாடகம் முடியுமே தவிர, நாடக பாத்ரமாயுள்ள இந்த கோடி கோடி ஜனங்களும் தாங்களாக ஸாதனை பண்ணி முக்தி மார்க்கத்தில் முழுக்கப்போவது என்பது நடக்காது. ஓரளவு பக்தி மார்க்கத்தில் போவார்கள்; அதையும் விடக் குறைவாக அத்வைதமான முக்தியைத் தரும் ஞானத்தில் போவார்கள்.

ஆனாலும் இப்படி ஏதோ ஓரளவுக்காவது அவர்களைப் போகப்பண்ணத்தான் வேண்டும், அதுவே ஸம்ஸார தாபத்துக்கு எவ்வளவோ ஆறுதல். "ஓரளவு" என்பதுதான் அளவு கொஞ்சம் கொஞ்சமாய் ஜாஸ்தியாகி எத்தனையோ ஜன்மாவுக்கு அப்புறமாவது பூர்ண ஈடுபாடாக ஆக வேண்டும்.

அப்படி அவர்களைப் போகப் பண்ணுவதற்கு, முக்திக்கு முயல்பவர்கள் சித்த சுத்திக்காகச் செய்ய வேண்டிய தங்களுடைய கர்மாக்களை 'யுடிலைஸ்' செய்துகொள்ளலாம். கார்யமில்லாத பக்தி முதலில் ஸாத்யமல்லை, கார்யத்தோடு சேர்ந்த பக்திதான் ஸாத்யம் என்று பார்த்தோமல்லவா? அம்மாதிரி இவர்களை ஒரு ஸத்ஸங்கமாகச் சேர்ப்பது, கூட்டமாக ஆலய வழிபாடு பண்ணவைப்பது, பஜனை செய்ய வைப்பது, இவர்களுக்கு ஸதுபதேசங்களை எடுத்துச் சொல்வது —என்று அநேக கார்யங்களைச் செய்ய இவர்களைவிட ஒருபடி மேலே போனவர்கள் தேவைப்படுகிறார்கள். ஸம்ஸார வாழ்க்கை நன்றாக அமைவதற்காகவே ஈச்வரனை பக்தி செய்வது என்ற அளவோடு நின்றுவிடுகிற இவர்களைவிட ஸம்ஸாரத்திலிருந்து விடுபட விரும்பி, அதற்கான சித்தசுத்தி பெறவே கர்மாவில் ஈடுபட வேண்டியிருப்பவர்கள் ஒருபடி மேலே போனவர்கள் அல்லவா? அதனால் அவர்கள் இவர்களை பக்தியில் ஈடுபடுத்துவதற்காக மேலே சொன்ன கார்யங்களைப் பண்ணலாம். இது அவர்களுடைய ஸ்வயசித்த சுத்திக்கு உதவுவதோடு எல்லாருக்கும் பக்தியைப் பரப்புவதான லோகோபகாரத்தையும் பண்ணுவதாகிறது.

Koviloor Digital Library

உலக வாழ்விலேயே ஒழுங்கு ஏற்பட

நடந்து கொண்டேயிருக்கவேண்டிய லோக நாடகத்தில் எல்லாரும் பழுத்த பக்திமான்களாவார்களா என்றால் அப்படி ஆகாது. அப்படிப் பழுத்து பக்தியிலிருந்து முக்திக்குப் போக விரும்புபவர்களாக அபூர்வமாகச் சிலர்தான் இருப்பார்கள். மீதி பேர் இன்னம் எவ்வளவோ ஆட்டம் ஆடித்தான் கொஞ்சம் கொஞ்சமாக மேலே போவதாக இருக்கும். ஆனதால் பக்தியைப் பரப்புவதோடு, இந்த லோக வாழ்க்கை நடக்கும்போதே அதிலே ஒழுங்கு இருக்கும்படியாகவும், அது ஒரே அதர்ம ப்ரவாஹத்தில் அடித்துக் கொண்டுபோகாமல் தர்மத்தின் வழியில் போய் இந்த ஒழுங்கைப் பெறும்படியாகவும், அப்புறம் லோகத்திலிருந்து லோகத்தின் காரண வஸ்துவில் சித்தத்தைத் திருப்பும்படியாகவும் செய்யவேண்டும்.

நடைமுறையில் உள்ள லோக வாழ்க்கையையே தாறுமாறாகப் போகாமல் ஸத்யம், நேர்மை, அன்பு, தானம், தொண்டு முதலியவற்றால் சீர் பண்ணித் தரவேண்டியதுதான் முதல் தேவை. இப்படிச் செய்வதுதான் தர்மம் என்பது. தர்மம் என்பதற்கு எத்தனையோ அர்த்தமிருந்தாலும், மதம் என்ற அர்த்தத்தைக்கூட அது கொடுக்குமென்றாலும், பொதுவாக தர்மமென்றால் லோக வாழ்க்கையை ஸர்வ ஜனங்களின் பரஸ்பர ஸஹாயமும் மன இசைவும் கொண்ட ஒன்றாக ஆக்கி, இந்த வாழ்க்கையையே அன்பாகவும் ஸத்ய சீலமுள்ளதாகவும் ஆத்யாத்மிகத்தின் பக்கம் திருப்பிவிடுவதாகவும் ஒழுங்கு நெறிப்படுத்திக் கொடுப்பதுதான். கர்மாக்களில் பின்னிப் பின்னியே இந்த தர்மத்தை நடத்தவேண்டியதாகிறது. அதனால்தான் கர்மாவுக்கு ப்ராதான்யம் கொடுக்கும் பூர்வ மீமாம்ஸா சாஸ்த்ரம்* "அதாதோ தர்ம ஜிஜ்ஞாஸா"—அதாவது, "தர்மத்தைக் குறித்து விசாரணை செய்வோமாக" என்று ஆரம்பிக்கிறது.

---

* ஜைமினியின் "பூர்வ மீமாம்ஸா ஸூத்ர"த் தொடக்கம்.

Koviloor Digital Library

தர்மத்திலே தேறி சாஸ்த்ர கர்மாவால் பூர்வ கர்மாவைத் தீர்த்துக்கொண்டு, நிஷ்காம்ய கர்மாவினால் இப்போது செய்வதும் இனி பலன் தராதபடி செய்துகொண்டு, நல்ல சித்தசுத்தி பெறும்போது லோகம், தர்மம், சித்தம் எல்லா வற்றையுமே விட்டுவிட்டு ஆத்மாவைச் சேர்வதில் ஆர்வ முண்டாகிறது. அப்போது நமக்கு உதவுகிற உத்தரமீமாம் ஸையாகிற ஞான சாஸ்த்ரமான ப்ரஹ்மஸூத்ரம், "அதாதோ ப்ரஹ்ம ஜிஜ்ஞாஸா—ப்ரஹ்மத்தைப் பற்றி விசாரிப்போமாக" என்று ஆரம்பிக்கிறது. லோக வாழ்க்கை யின் ஒழுங்கு தர்மத்திலும் கர்மத்திலுமே இருக்கிறது என்று காட்டவந்தேன்.

யாகம் பண்ணி அதன்மூலம் திவ்ய சக்திகளின் அநுக் ரஹம் உலகத்துக்கு கிட்டுமாறு செய்து நல்ல மழை, விளைச்சல் முதலியவற்றால் ஜனஸமூஹம் ஸந்தோஷப்படும் படிச்செய்வது; திவ்ய சக்திகளால் ஜனஸமூஹத்தின் சித்தத் திலும் நல்ல தன்மைகளை ஏற்படுத்துவது; யுத்தம் செய்து ஜனங்களை சத்ருக்களிடமிருந்து ரக்ஷிப்பது; ஜனங்கள் பயன் பெறுமாறு நாலு சீமைகளில் உற்பத்தியாகும் பண்டங்களை ஒரு இடத்தில் சேர்த்து வியாபாரம் செய்வது; உழுவது, உடம்பால் ஸமூஹத்துக்குத் தேவைப்படும் இதர ஊழியங் களைச் செய்வது—என்றிப்படிப் பல கார்யங்களைச் செய்து தான் லோக வாழ்க்கை நன்றாக இருக்குமாறு செய்யமுடியும். இந்தக் கார்யங்கள் யாவும் குழறுபடி இல்லாமல் நடந்து ஸமூஹ வாழ்வு ஒட்டுமொத்தமாகச் சீருடன் இருக்கும்படிப் பண்ணவேண்டும். இதையெல்லாம் கருத்தில் கொண்டே வர்ணங்கள், ஆச்ரமங்கள், இது ஒவ்வொன்றுக்கும் ஒவ்வொரு விதமான ட்யூடிகள், அந்த ட்யூடிகளுக்கு அநுகூல மான ஆஹாரங்கள், ஆசாரங்கள் என்றெல்லாம் சாஸ்த்ரங் கள் அழகாக வரையறை செய்து அமைத்துக் கொடுக் கின்றன. இவ்வாறு ஒவ்வொருவருக்கும் விதிக்கப்பட்டிருப்ப தற்குத்தான் ஸ்வதர்மம் என்று பெயர்.

சுருக்கமாகச் சொன்னால்: ஸகல ஜனஸமூஹமும் கொஞ்சம் கொஞ்சமாகவேனும் பாரமார்த்திகமாகப்

Koviloor Digital Library

போகும்படிப் பண்ணவேண்டும். ரொம்பவும் 'ஸ்லோ'வாகத் தான் இது நடக்க முடியும். ஈச்வரனுடைய லோக நாடகம் பாட்டுக்கு நடந்து கொண்டேயிருக்குமாதலால் ஏதோ கொஞ்சம்பேர்தான் தலைமுறைக்குத் தலைமுறை அதிலிருந்து தப்புவது என்பது நடக்கும். ஆனாலும் மற்றவர்களையும் ஒரே இந்த்ரியவெறியில்காரியம் செய்பவர்களாக விட்டு ஏகமாகப் பாப மூட்டையை, கர்ம மூட்டையைச் சேர்த்துக்கொண்டு ஸம்ஸாரத்தில் ஆழப் புதைந்து போகவிடாமல், ஏதோ கொஞ்சமாவது நன்னெறிப்படுத்தி உயர்த்த வேண்டும். இதற்கு ஆரம்பம்—'ஸம்ஸாரத்தைவிட்டு வெளியிலே வா' என்று அவர்களை இழுப்பதில்லை. இழுத்தாலும் அவர்கள் இருக்கும் ஸ்திதியில் வெளியில் வரமுடியாது. இழுத்து அவர்களுடைய கையைப் பிய்ப்பதாகத்தான் ஏற்படும். அல்லது இழுக்கிறவனும் அவனோடு புதைந்து போவதாக ஆகும். 'ப்ரக்ருதியை, அதன் வேகங்களை ஒருத்தன் நிக்ரஹம் செய்வதென்பது லேசில் ஸாத்யமில்லை' என்று பகவானே சொன்னதாகச் சொன்னேனல்லவா? அதனால், இதில் இருந்து கொண்டே, இதையே ஒரு ஒழுங்குக்குக் கொண்டு வருவது தான் முதலில் செய்யவேண்டியது. அப்புறந்தான் இதை விட்டுப் போவதற்கான பக்வம் வருவது. இப்படி லோக வாழ்க்கையைத் தாறுமாறாய்ப் போகாமல் ஒழுங்கு முறையில் கொண்டுவருவதுதான் தர்மம்.

இப்போது சேரி மாதிரி ஒரு இடத்தில் இருக்கிறோம். பங்களாவுக்குப் போய் வாஸம் பண்ண ஆசை! ஆசை இருந்தாலும் அதற்குரிய யோக்யதை, வருமானம் முதலியவை இப்போது இல்லையே! முயற்சி பண்ணி அவற்றை ஸம்பாதித்துக் கொள்ளவேண்டும். அப்படிச் செய்யும் வரையில், (நாம் தற்போது) இருக்கும் சேரியை ஒரே அசுத்தமாக, சாணியும் சகதியுமாக வைத்திருக்காமல் சுத்தப்படுத்தி வைத்துக் கொண்டால்தானே ஸரியாயிருக்கும்? அப்புறம் எப்போதோ இதைவிட்டுப் போகவேண்டுமென்பதால் அப்படிப் போவதற்கான யோக்யதை வருகிற மட்டும் இது எப்படி வேண்டு

Koviloor Digital Library

மாஞல் இருக்கட்டுமென்று விட்டுவைத்தால், அசுத்தத்திலே நமக்கு வ்யாதி வக்கைகள் ஏற்பட்டு, அதை விட்டுக் கிளம்புவதற்கான யோக்யதையே கிடைக்காமல் திண்டாடுவதாகத் தானே ஆகும்? முதலில் நாம் இருக்கிற இடத்தை சுத்தம் செய்துகொள்ளவேண்டும். இப்படி லோக வாழ்க்கையை ஸரிசெய்து தருவதுதான் தர்மம்; தர்மத்தை ஒட்டி ஏற்பட்ட ஸ்வதர்ம கர்மாக்கள்.

பொதுஜனங்கள் இவற்றைப் பண்ணுவதற்கு வழிகாட்டியாக இருக்கவேண்டியவர்கள் யார் என்ருல், இதை விட்டுக் கிளம்பவேண்டுமென்பதில் அவர்களைவிட ஆர்வமாக இருப்பவர்கள்தான். இன்னெரு விஷயம் இங்கே சொல்லவேண்டும். அதாவது, இதர ஜனங்களுக்கு மிகச் சிறந்த ஐடியலாக ஸ்வதர்மாநுஷ்டானம் செய்பவர்கள் யாரென்ருல், அது இந்த லோகவாழ்க்கையை விட்டுப் பாரமார்த்திகத்திலேயே நன்ருக ஊன்றிவிட்ட ஞானிகள்தான். இதென்ன இப்படிச் சொல்கிறேனே என்று புரியாமல் இருக்கலாம். ஞானிகள் ஈச்வரனின் கருவியாகவே ஆகிவிடுவதால், அவன் அவர்களையே ஐடியல் மநுஷ்யர்களாக வாழ்ந்து காட்டப் பண்ணுகிருன். அவர்கள் மாதிரி அத்தனை உத்தமமான உதாரண புருஷர்களாக இல்லாவிட்டாலும், பாரமார்த்திகத்துக்காக ப்ரயாஸைப்படும் எல்லோருமே அந்த ப்ரயாஸைகூட இல்லாத மற்றவர்களுக்கு வழிகாட்டியாகத் தங்கள் ஸ்வதர்ம கர்மாநுஷ்டானத்தைச் செவ்வனே செய்ய வேண்டும்.

இவர்களைப் பொறுத்தமட்டும் அந்தக் கர்மங்களின் பலனில் இவர்களுக்குக் கருத்தில்லை என்ருலும், கர்மா செய்வது என்பதிலேயே இவர்களுக்குக் கருத்தில்லை என்ருலும், இவர்களுடைய கருத்தெல்லாம் கர்மாவும் சிந்தனையும் போன ஆத்மாவில் சேர்வதில்தானென்ருலும், அதற்கு யோக்யதை பெறுவதற்காகவே இவர்களும் கர்ம யோகம் செய்யவேண்டி ஏற்படுகிறது. அப்போது அந்தக்

Koviloor Digital Library

கர்மாவின் நேர் பலன் லோகக்ஷேமத்தை விளைவிப்பதாக இருக்குமாறு பெரியவர்கள் அமைத்துக் கொடுத்திருக்கிறார்கள்.

கர்மாநுஷ்டானத்தால் நல்ல சித்தசுத்தி, பக்தியால் நல்ல சித்த ஐகாக்ரியம் ஏற்பட்டபின், தானே கர்மா நின்று விடும். அப்படி அதுவே நிற்கும் நிலையில் ஸந்நியாஸம் வாங்கிக் கொள்ளவேண்டும். தானாக நிறுத்தப்படாது. கர்மயோகம் தான் பண்ணணும்.

பரதர்மம் ஏன் கூடாது?

இதிலே, 'பாரம்பர்யமாக இன்னின்ன பண்ணிக் கொண்டு போ' என்று இருப்பதை மாற்றி, இந்த (பரம்பரை)த் தொழிலைவிட இன்னொன்று உத்தமமாயிருக்கிறதென்று நினைத்து அதற்குப் போகாதே என்று பகவான் சொல்கிறார். ஸ்வதர்மமே பண்ணு, பிறன் தர்மத்துக்குப் போகாதே என்று அவர் இதைத்தான் சொல்கிறார். ஸ்வதர்மத்திலே இருந்தால்தான், இறந்தாலுங்கூடத்தான், அதுவே ச்ரேயஸ்; பரதர்மம் பயத்தை—அதாவது ஸம்ஸாரத்தை—உண்டுபண்ணும் என்கிறார்.

ஏன் இதைவிட நல்லது என்று இன்னொன்றுக்குப் போகப் படாது என்றால்; பிறப்புப்படி தனக்கு வாய்த்த கர்மத்தை விட்டு இன்னொன்றை இவன் தேர்ந்தெடுக்கிறான் என்னும் போதே இவனுக்கு என்று ஸொந்த அபிப்ராயம், ஸ்வயேச்சைப்படி செய்வது என்பவை ஏற்படுகின்றன என்று அர்த்தம். இப்படிச் சொன்னால் தனி மனஸின் ஆசை வந்துவிட்டதாகத் தானே ஆகிறது? வாய்த்ததைச் செய்வது என்று தன்னிச்சை இல்லாமல் செய்வது போய், இவனாக ஒன்றை விரும்பித் தேர்ந்தெடுக்கிறானென்றால், choice வந்துவிட்டது, option வந்துவிட்டது என்றால், கூடவே கூடாது என்று ஒழித்துக் கட்ட வேண்டியதான ஆசைக்கு இடம் கொடுக்கிறானென்று தான் அர்த்தம். கர்மாவைத் தேர்ந்தெடுப்பதிலேயே

Koviloor Digital Library

இஷ்டம், ஆசை என்பது வந்துவிட்டபோது அது காம்ய கர்மமாகிவிடுகிறது. அப்புறம் அதன் பலனை த்யாகம் செய்வதால் மட்டும் அதை நிஷ்காம்ய கர்மமாக்கிக் கொண்டுவிட முடியாது. எப்போது நம்முடையதைவிட நல்லது என்று ஒன்றை விரும்பித் தேர்ந்தெடுத்தானோ அப்போது அதன் பலனில் ஒரு ஸந்துஷ்டியை மனஸ் தேடிப் பெறத்தான் செய்யும். கர்மாவால் மனஸானது தன்னையறியாமலே சுத்தியாவது என்பது தவிர வேறு எந்த ஸந்துஷ்டியைத் தேடி அறிந்து பெறுவதும் அதை அசுத்தி செய்வதுதான்.

பிறன் தர்மத்துக்குப் போகப்படாது என்பதற்கு ஸாதகனை வைத்துக் காட்டுகிற காரணம் இது. லோகத்தை, ஜன ஸமூஹத்தை வைத்தும் ஒரு காரணம் உண்டு. நல்ல அழுத்தமான காரணம். லோக க்ஷேமத்துக்காகப் பலவிதமான கார்யங்கள் செய்யவேண்டியிருக்கிறது. புத்தியால் பாடம் புகட்டுவதிலிருந்து உடம்பால் உழைத்துக் கொட்டுவது வரை அநேகம் செய்யவேண்டியிருக்கிறது. சுத்தமான நெய்யை மங்களமான மந்த்ரங்களைச் சொல்லிக் கொண்டு ரொம்பவும் பவித்ரமாக ஜ்வலித்துக் கொண்டிருக்கும் அக்னியில் ஆஹுதி செய்வதிலிருந்து, "பிடி! விடாதே! வெட்டு! குத்து!" என்று கத்தியை வைத்துக்கொண்டு சத்ருவோடு யுத்தம் செய்வது, அல்லது திருடனைப் பிடித்து ரத்தக் காயப்படுத்துவதுவரை பலவிதமான தொழில்கள் செய்யவேண்டியிருக்கிறது. இப்படியிருக்கும்போது, இந்த எல்லாத் தொழில்களும் சீராக நடப்பதற்காகத்தான் பாரம்பர்யமாக கர்மாக்களைக் கொடுத்து வெவ்வேறு ஸ்வதர்மங்களை வைத்திருக்கிறது. இந்தக் கார்யங்களைப் பார்க்கும்போது ஒன்று உசத்தி, ஒன்று தாழ்த்தி என்று தோன்றினாலும், ஸமூஹ நலனை விளைவிப்பது என்ற பலனைப் பார்த்தோமானால் எல்லாமே ஸமம்தான். உசத்தியுமில்லை தாழ்த்தியுமில்லை என்று தெரியும். எந்த ஜாதிக்காரனின் தொழில் நின்று போனாலும் ஜன ஸமூஹத்தின் நல்வாழ்வு பாதிக்கப்படத்தான் செய்யும். அது ஸரிவர நடப்

Koviloor Digital Library

பதற்கு, தாழ்த்தியாகத் தோன்றுகிற கார்யங்களும் நடந்தே தீரவேண்டும். ஒட்டன் ஸ்ட்ரைக் செய்தால் ஊரே நாறிப் போகிறது; காலராவும் வைசூரியும் பரவுகின்றன. இதுகளி லிருந்து ஸமூஹத்தைக் காத்து ரக்ஷிக்கும் கார்யத்தை அவன் செய்கிறுனென்னும்போது அவனுடைய அந்த ஸ்வதர்மம் எப்படித் தாழ்ந்ததாக இருக்கமுடியும்? அதனுல் வாய்த்த தைச் செய்வது என்றில்லாமல் உசத்தி தாழ்த்தி கல்பிப்பதே பிசகு.

இப்படி ஸொந்த choice-ன்படி (தாமாகத் தேர்ந் தெடுத்து) தொழில்களைச் செய்வது என்ருல், எல்லாத் தொழிலிலும் இப்போது பாரம்பர்ய முறையினுல் அததற்குத் தேவைப்படும் விகிதாசாரப்படி ஜனங்கள் 'டிஸ்ட்ரிப்யூட்' (பங்கீடு) ஆகியுள்ளது போல இருக்காது. ஏதோ ஒரு தொழிலுக்கு ஜாஸ்திப் பேர் போவார்கள். இன்னென்றை யாரும் சீந்தாமல் விடுவார்கள். அல்லது எதற்கும் உபயோக மற்றவர்களை அதில் போடுவோம். அந்தக் கார்யங்கள் நன்ருய் நடக்காமல் ஸமூஹம் பாதிக்கப்படும். பாரம்பர்ய மாக வரும் குணம், குடும்பச் சூழ்நிலை முதலியவை ஸ்வதர்ம அநுஷ்டானத்துக்குப் 'பெர்ஃபெக்ஷன்' தருவதுபோல அப்போது இருக்காது. புதிதாக ஜனங்கள் இஷ்டப்படி எடுத்துக்கொண்ட தொழில்கள் பெர்ஃபெக்டாக நடக்காமல் போகலாம். அதோடு தொழில்களில் ஜனங்கள் பங்கீடாகும் ப்ரபோர்ஷன் ஏறுமாருக ஆகி, போட்டி, பொருமை, ஏமாற்றம் எல்லாம் ஏற்படும். மொத்தத்தில் ஸமூஹ நலனுக்காகக் கார்யங்கள் எப்படி நடக்க வேண்டுமோ அப்படி நடக்காமல் லோக க்ஷேமமே பாதிக்கப்படும்.

இப்படியாகத் தன் ஸொந்த இஷ்டம் என்று ஒன்றின் மேல் ஸ்வதர்மத்தை விடுகிற தோஷம், அப்படி விட்டதால் லோக க்ஷேமம் பாதிக்கப்படுவதற்கு இடமேற்படுத்துகிற தோஷம் என்ற இரண்டு பெரிய தப்புக்கள் பரதர்மத்துக்குப் போகிறவனைச் சேர்கின்றன இப்படி தோஷத்தைச் சேர்த்துக் கொண்டபின் இவன் எப்படி சுத்தியாகி ஸம்ஸார

Koviloor Digital Library

நிவ்ருத்தி பெறுவது? அதிலேயே (ஸம்ஸாரத்திலேயே) மேலும் ஆழமாகப் புதைய வேண்டியதாகத்தான் ஆகும். அதனால்தான் (க்ருஷ்ண பரமாத்மா) "பரதர்மம் பயத்தைத் தருவது" என்றார்.

இதற்கப்புறம்தான் தேவாஸுர யுத்தம் என்று ஆரம் பித்தேனே, அந்த ஸமாசாரம் வருகிறது.

பகவான் இப்படி, "செத்தாலும் ஸ்வதர்மத்தைப் பண்ணு; அதுதான் ச்ரேயஸ், அதாவது ஸம்ஸார நிவ்ருத் திக்கு ஸஹாயம் செய்வது. பரதர்மம் ஸம்ஸார பயத்தை ஜாஸ்தியாக்குவதே" என்று சொன்னவுடன் அர்ஜுனன் யோசித்துப் பார்த்தான்.

பாபத்தில் தள்ளும் சக்தி எது?

"ஆனால் இப்படி, 'நமக்கென்று ஒரு இஷ்டமும் வேண்டாம். எந்தக் குலத்தில் பிறந்தோமோ அதற்கான வர்ண தர்மத்தை, எந்தெந்த வயஸுக் கட்டத்தில் என்னென்ன செய்யவேண்டுமோ அந்த ஆச்ரம தர்மத்தை நாம் பாட்டுக்குக் கேள்வி கேட்காமல் பண்ணிக்கொண்டு போவோம்' என்று இருக்கவொட்டாமல் எதுவோ ஒன்று மென்னியைப் பிடித்துத் தள்ளுகிறாற்போல இருக்கிறதே! இப்படி ஸரியான வழியாகப் போகவிடாமல் வேறு வழியில் போகவைத்து மநுஷ்யனைப் பாபத்தில் பிடித்துத் தள்ளு கிறதே! இவனுடைய அறிவுக்குப் புரிந்து, அறிவு அங்கீகாரம் கொடுத்து இப்படிப் பண்ணுவதாயில்லாமல், வேறு ஏதோ ஒரு சக்தி பலாத்காரம் செய்தல்லவா இவனை இப்படித் தள்ளுவதாகத் தெரிகிறது? அது என்ன?" என்று அவனுக்கு யோசனை வருகிறது. இது வேண்டாம், இன்னொன்று வேண்டும் என்று இவன் நினைக்கும்படியாக இவனை பலவந்தப் படுத்தி வேண்டாததை வேண்டப்பண்ணிப் பாபத்துக்கு ஆளாக்கும் force எதுவோ இருப்பது அவனுக்குத் தெரிகிறது; அது என்னவென்று மட்டும் தெரியவில்லை. 'எதுவோ'

Koviloor Digital Library

என்று விவரம் புரியாததாகத் தெரிகிறதே தவிர, 'இன்னது' என்று அந்த ஃபோர்ஸைத் திட்டவட்டமாகத் தெரிந்து கொள்ள முடியவில்லை.

அது என்னவென்று தெரிவிக்கும்படியாக பகவானிடம் கேட்கிறன் :

அத கேந ப்ரயுக்தோயம் பாபம் சரதி பூருஷ: |
அநிச்சந்நபி வார்ஷ்ணேய பலாதிவ நியோஜித:||

"வார்ஷ்ணேய" என்று வ்ருஷ்ணி குலத்தோன்றலான பகவானைக் கூப்பிட்டான் என்று சொன்னேன். மேலே (இந்த ச்லோகத்துக்கு) அர்த்தம் சொல்லத்தான் நினைத்தேன். ஆனல் இதற்கு முன்னுடி கீதையில் என்ன இருக்கிறது, எந்த context-ல் அர்ஜுனன் இப்படி கேட்டான் என்று சுருக்கமாகச் சொல்ல நினைத்து ஆரம்பித்தது வளர்ந்துகொண்டே போய்விட்டது! அப்புறம் டெவலப் பண்ணலாம் என்று நான் நினைத்திருந்த சரக்கில் அநேகம் இப்போதே வந்துவிட்டது. ஆகக்கூடி, ஸம்பந்தமில்லாத விஷயமில்லை.

"அத"—ஆனுலும். அதாவது நீ சொல்கிறபடி, மனஸின் இஷ்டம் என்று ஒன்று இல்லாமல் பட்ட கட்டை மாதிரி ஆக்கிக்கொண்டு சாஸ்த்ரப்படி வாய்த்த ஸ்வதர்மாவை பண்ணலாமென்று ஒரு ஜீவன் நினைத்தாலுைலும்,

"அயம் பூருஷ:"—இந்த ஜீவனுனவன். 'புருஷன்' என்பதே 'பூருஷன்' என்றும் நீளும். 'விழி', 'நிழல்' முதலான வார்த்தைகள் 'வீழி', 'நீழல்' என்று நீள்கிற மாதிரி.

ஆனுலும் இந்த ஜீவனுனவன்—

"அநிச்சந்நபி"—புத்தி பூர்வமாக அப்படி ஆசைப்படா விட்டாலும்; நன்ருக ஆலோசித்துப் பார்த்து, வேண்டும் வேண்டாம் என்று ஒன்றை விட்டு ஒன்றை எடுத்துக் கொள்ளாவிட்டாலும்; 'இன்வாலன்டரி'யாகவே;

"கேந"—யாரால்,

Koviloor Digital Library

"ப்ரயுக்த:"—நன்ருக ஏவப்பட்டு,

பிடரியைப் பிடித்துத் தள்ளுகிருற்போல யாரோ இவனை வேண்டும் வேண்டாம் என்கிறவற்றில் தள்ளுவது தெரிகிறது. அது யார் என்று தெரியவில்லை.

['கேந'—யாரால்,

"ப்ரயுக்த:"—வன்மையாய் ஏவப்பட்டு,]

"பலாத்"—பலாத்காரமாக,

"நியோஜித இவ"—உந்தித் தள்ளினுற்போல; 'யுஜ்'—'யோஜ்' என்பது வேர்ச் சொல். இன்னென்ருேடு சேர்ப்பது, பிணைத்துப் பூட்டுவதுதான் 'யுஜ்'. 'யுஜ்' என்பதன் அடியாக 'யுக்தம்' என்று சொல்கிருேம். 'யோஜ்' என்பதன் அடியாகவே 'யோகம்' என்கிருேம். சித்தம் சிதறவிடாமல் சேர்த்துப் பூட்டிப் பிணைப்பதால் அது யோகம். மாட்டைப் பூட்டிப் பிணைக்கிற ஏர்க்காலை 'yoke' என்று சொல்வது இந்த தாதுவிலிருந்துதான். 'யோஜ்' என்பதிலிருந்து 'யோஜித'. பூட்டிப் பிணைப்பது ஏதோ ஒன்றிலே செலுத்துவதற்காகத்தான். மாட்டை ஏர்க்காலில் பிணைப்பது அதை வயலில் செலுத்தத்தான். சித்தத்தைச் சேர்த்துப் பிடிப்பது அதைப் பரமாத்ம தத்வத்தில் செலுத்தத்தான். அதனுல் 'சேர்ப்பதான' யோகத்திலேயே 'செலுத்துவதான' சக்தியும், propelling force-ம் தொக்கி நிற்கிறது. "யோஜித"-என்பது செலுத்தப்படுகிற நிலையைத் தெரிவிக்கிறது. ஒரு வார்த்தைக்கு முன்னுல் 'நி' என்று போட்டால் அது இரண்டு மூன்று தினுஸான புது அர்த்தத்தைக் கொடுக்கும். அவற்றில் ஒன்று, அர்த்தத்துக்கு ஜாஸ்தி அழுத்தம் கொடுப்பதாகும். பாதம் (paatam)-விழுவது; நிபாதம் (nlpaatam) -நன்ருக விழுவது. தர்சனம் - தெரிவது; நிதர்சனம் - நன்ருகத் தெரிவது. 'யோஜித'வுக்கு 'நி' சேர்த்து 'நியோஜித' என்ருல் 'நன்ருகச் செலுத்தப்பட்டு', 'உந்தித் தள்ளுவது மாதிரி செலுத்தப்பட்டு'-என்று அர்த்தம்.

Koviloor Digital Library

ஒரு ஜீவனானவன் யாரால் பலாத்காரமாகச் செலுத்தப் பட்டு—

"பாபம் சரதி?"—பாபத்தில் போகிறான்? பாபத்தில் புகுகிறான்? அதாவது, பாபம் பண்ணுகிறான்?

"தானே மனஸாரத் தெரிந்து இஷ்டப்பட்டுச் செய்யாமல், வேறு யாரோ பலவந்தமாகப் பிடித்துத் தள்ளின மாதிரி மநுஷ்யர்கள் பாபத்தில் போய் விழுகிறார்களே இப்படிப் பிடித்துத் தள்ளும் அந்த ஆசாமி யார்?" பகவானை அர்ஜுனன் கேட்கிறான்.

ஸம்ஸாரம் என்பது த்வைதம், அதனால் பயம் என்று சொன்னோம். பயத்தைத் தருவது எதுவோ அது பாபம். ஆகையால் பரதர்மத்தில் போவது பகவான் சொன்னபடி "பயாவஹ:" என்றால் அது பாபத்தை உண்டாக்குவதாகவே இருக்கும். இதனால்தான் அர்ஜுனன் பாபத்தைக் குறிப்பிடு கிறான்.

ஸ்வதர்மத்தைவிட்டுப் பரதர்மம் மேற்கொள்வது பாபம். இது மட்டுமில்லை. இன்னம் அநேக பாபங்கள். நரக லோகங்களின் வர்ணனையைப் பார்த்தால் தெரியும், 'எத்தனை ஆயிரம் பாபங்கள் இருக்கின்றன? அது ஒவ்வொன்றுக்கும் என்ன தண்டனை?' என்று. இந்தப் பாபங்கள் எல்லாவற்றையும் குறித்துத்தான் அர்ஜுனன் கேட்கிறான். மநுஷ்யர்கள் அநேக பாபங்களைப் பண்ணிவிடுகிறார்கள். எல்லாமே யோசித்து, திட்டம் போட்டு, அவர்கள் பண்ணினார்கள் என்று இல்லை. தங்களையும் மீறிப் பண்ணிவிடுகிற மாதிரிதான் இருக்கிறது. "அநிச்சன்" என்று இதைத்தான் அர்ஜுனன் சொன்னது. இப்படி இவனைப் பண்ணவைப்பது யார் என்று கேட்கிறான்.

இங்கே அர்ஜுனன் ஜீவர்கள் பாபம் பண்ணுவதற்கு எந்த சக்தி காரணம் என்றுதான் கேட்கிறான். பாபத்திலிருந்து ஜீவன் விடுபட வழி என்ன என்று கேட்கவில்லை. அப்படிக் கேட்டிருந்தால், 'எத்தனை சறுக்கி விழுந்தாலும்

Koviloor Digital Library

அத்தனை பாபத்துக்கு இடையிலேயும் விடாமல் ஸ்வதர்மத்தையே பின்பற்றிக்கொண்டு போனால் அதுவே பாபத்தில் இழுத்துவிடும் அஸுர வ்ருத்திகளிலிருந்து கொஞ்சங் கொஞ்சமாக ஜீவனை விடுவிக்கும்' என்று சொல்லியிருப்பார். ஏற்கெனவே இதை அவர் அவனுக்குச் சொல்லி ஆயிற்று. ஸ்வதர்மப்படி நிஷ்காம்ய கர்மயோகம் செய்வதைக் குறித்து, "இந்த தர்மத்தை ஸ்வல்பம் அநுஷ்டிக்க ஆரம்பித்துவிட்டாயானாலும் மஹா பயமான ஸம்ஸாரத்திலிருந்து ரக்ஷித்துவிடும்" என்று ஏற்கெனவே சொல்லி விட்டார்.

பயம், பாபம், பந்தம், ஸம்ஸாரம் என்ற எல்லாம் ஒரே விஷயத்தைச் சொல்கிறவைதான். ஆகையால் பயத்திலிருந்து ரக்ஷிப்பது என்றால் பாபத்திலிருந்து மீட்பது என்றே அர்த்தம்.

இப்போது அர்ஜுனன் பாப மோசனத்துக்கு வழி கேட்கவில்லை. ஏற்கெனவே அவர் சொல்லிவிட்டார் என்பதால் இருக்கலாம். பின்னே என்ன கேட்கிறானென்றால், "தேவ—அஸுர குணங்களின் சண்டையில் அஸுரர்களான பாப வ்ருத்திகளை உண்டாக்கி, அவற்றில் ஜீவனைத் தூண்டிவிடுகிற சக்தி என்ன? ஒரு மநுஷ்யனை பாபத்திலே கட்டாயப்படுத்திப் புகுத்துகிற ஆஸாமி யார்?" என்றே கேட்கிறான்.

காம—க்ரோதம்

"அதுவா, இரண்டு சக்திகள் காரணம்" என்று பகவான் பதில் சொல்கிறார். அவை என்னென்ன என்று பேரைச் சொல்கிறார்.

காம ஏஷ க்ரோத ஏஷ ரஜோகுண ஸமுத்பவ:|
மஹாசனோ மஹா பாப்மா வித்த்யேந - மிஹ வைரிணம்||

"ஏஷ"—இது; எது காரணம் என்று கேட்டாயே, அது என்னவென்றால்,

Koviloor Digital Library

"காம:"—காமம். அதாவது ஆசைதான் மனிதனைப் பாபத்தில் தள்ளுவதான எல்லா கெட்ட வ்ருத்திகளையும் தூண்டிவிடும் மூல காரணம்.

அது மட்டும்தானா? இன்னொன்றும் இருக்கிறது.

"ஏஷ: க்ரோத:"—அந்த இன்னொன்று என்னவென்றால் "க்ரோதம்"; அதாவது கோபம்.

இந்த இரண்டும்,

"ரஜோகுண ஸமுத்பவ" மானவை - அதாவது மநுஷ மனஸு சாந்தமாகி ஸாத்விகமாகவுமில்லாமல், ஓய்ந்து மந்தித்துப் போய்த் தாமஸமாகவுமில்லாமல், வேகப்பட்டுக் கொண்டு கொந்தளிப்பிலே இருக்கிற ஒரு நிலை உண்டே, அந்த நிலைக்கு ஆதாரமாயுள்ள குணமான ராஜஸத்தில் உண்டானவை; "ரஜோகுண ஸமுத்பவ:"

"உண்டானவை" என்று நான் சொன்னாலும் பகவான் ஒருமையில் "உண்டானது" என்றுதான் சொல்கிறார்— "ஸமுத்பவ:" என்பது ஒருமைதான். காமம் ஒரு காரணம், இன்னொன்று க்ரோதம் என்பதாக இரண்டைச் சொல்லி விட்டு, "அவை ரஜோகுணத்தில் உண்டானவை" என்காமல், "அது ரஜோகுணத்தில் உண்டானது" என்று சொன்னால் இது சொற்குற்றம்தானே என்றால், குற்றம் பகவான் மேலில்லை. என் குற்றம்தான். காமம் தவிர இன்னொன்று க்ரோதம் என்று நான்தான் சொன்னேன். பகவான் அப்படிச் சொல்லவில்லை.

"எது ஜீவனைப் பாபத்திலே பிடித்துத் தள்ளுகிறது!" என்று அர்ஜுனன் கேட்டதற்கு, "எதுவா? அதுதான் காமம், அதுதான் க்ரோதம், அது ரஜோகுணத்தில் உண்டானது: காம ஏஷ க்ரோத ஏஷ ரஜோகுண ஸமுத்பவ:" என்றே சொல்கிறார். அதாவது காமமாக இருக்கிற அதுவேதான் க்ரோதமாகவும் இருக்கிறது என்று அர்த்தம் பண்ணிக் கொள்ளும்படிச் சொல்லியிருக்கிறார். காமத்துக்கு

Koviloor Digital Library

இன்னொன்று க்ரோதம் என்று காட்ட இங்கே வார்த்தை இல்லை. "காமமும் க்ரோதமுமாகிய ஒரு கெட்ட சக்தி" என்று வைத்துக் கொள்ளலாம். ஆனாலும் காம-க்ரோதம், அதாவது விருப்பு - வெறுப்பு என்று இரட்டையாக நாம் எப்போதும் சொல்வதாலேயே அந்தப் பழக்கத்தில் நான் தான் ஒன்று, இன்னொன்று என்று சொல்லிவிட்டேன்.

அப்படியானால் காமமும் க்ரோதமும் ஒன்று என்ன? காமம் ஆசைப்படுகிற உணர்ச்சி; விருப்புணர்ச்சி. க்ரோதம் என்பதோ த்வேஷ உணர்ச்சியில் உண்டாவது. நேர்மாறான விருப்பும் வெறுப்பும் எப்படி ஒன்று? ஸ்வதர்மம் வேண்டாம் என்று விடுவது வெறுப்பிலே. பரதர்மம் வேண்டும் என்று எடுத்துக்கொள்வது விருப்பத்திலே. இந்த இரண்டும் எப்படி ஒன்று?

ஒன்றுதான். யோசித்துப் பார்த்தால் புரியும். காமமே நிறைவேறாதபோது க்ரோதம் என்ற ரூபத்தை எடுத்துக் கொள்கிறது என்று புரியும். நமக்கு ஒன்றிலே ஆசை இருந்து அது கிடைக்காவிட்டால்தான் கோபம் உண்டாகிறது. நமக்கு ஒருத்தரிடம் வெறுப்பு ஏற்படுகிறதென்றால் அது நமக்கு எது விருப்பமோ அதற்கு மாறாக அவர் நடக்கிறார் என்பதால்தான். நம் விருப்பப் பூர்த்திக்குத் தடை ஏற்பட்டால் அதுவே வெறுப்பாகிறது. நம் ஆசையின் நிறைவேற்றத்துக்கு எதுவோ குறுக்கே வந்தால் அதனிடம் கோபம் உண்டாகிறது. பரதர்மத்திலே ஏற்படுகிற ஆசை அல்லது விருப்பத்துக்குத் தடையாக இருக்கிறது என்பதால்தான் ஸ்வதர்மம் வேண்டாம் என்று அதை வெறுத்து விட்டுவிடத் தோன்றுகிறது. ஒவ்வோர் ஆசைக்கும் இப்படியே. ஆசையாலேயே த்வேஷம் ஏற்படுகிறது. பந்தை எறிகிறோம்—இதுவே நம் ஆசையின் ஓட்டம் என்று வைத்துக் கொள்ளுங்கள். அப்போது குறுக்கே தடையாக சுவர் மாதிரி எதுவோ வருகிறது. உடனே பந்து நம்மிடமே திரும்புகிறதல்லவா? அப்படித் திரும்பும் வேகம்தான் க்ரோதம்.

Koviloor Digital Library

ஆசார்ய பாஷ்யம் இப்படித்தான் காமம் க்ரோதம் என்ற இரண்டையும் ஒன்ருகவே சொல்கிறது. "காமமே தான் ப்ரதிஹதமாகிறபோது க்ரோதமாகப் பரிணமிக் கிறது" என்று ஆசார்யாள் சொல்கிருர். "ப்ரதிஹதம்" என்ருல் ஒன்றிலே போய் மோதிக்கொண்டு திரும்புவது என்று அர்த்தம்.

ஆனுல் நடைமுறையில் விருப்பு, வெறுப்பு என்கிறவை எதிரெதிர் உணர்ச்சிகளாகத் தெரிவதால் இரண்டாகச் சொல்ருேம்.

பகவானே இன்னேரிடத்தில் (2—62) சொல்லியிருக் கிருர்:

காமாத் க்ரோதோ (அ) பிஜாயதே !

(ஆசையிலிருந்து கோபம் பிறக்கிறது.)

மேலே அர்ஜுனன் கேள்விக்கு பதில் சொன்னபோது காம - க்ரோதம் என்று இரண்டு மாதிரி சொல்லி, இரண்டு இல்லை என்றும் தெரிவிக்கிற விதத்தில் அப்புறம் ஒருமையில் சொன்னுரென்று பார்த்தோம்.

இன்னேரிடத்தில் (16—21) ஒன்றில்லை, இரண்டில்லை, மூன்று விஷயங்களைச் சொல்கிருர். பாபத்தில் தூண்டுவது காம - க்ரோதம் என்று மேலே சொன்னுரோல்லியோ? அந்தப் பாபத்திஞல் நமக்கு ஸம்பவிப்பது என்ன? ஸம்ஸாரம். ஸம்ஸாரத்திலும் ரொம்ப கோரமான அநுபவம் நரகவாஸம். நரகத்தைப் பற்றித்தான் மூன்று விஷயங்களைச் சொல்கிற இடத்தில் குறிப்பிடுகிருர்:

த்ரிவிதம் நரகஸ்யேதம் த்வாரம் நாசந - மாத்மந : !

"ஆத்ம நாசம் என்ற நரகத்துக்கு வழி திறந்துவிடுகிற வாசல்கள் மூன்று விதமானவை,"

என்னென்ன?

Koviloor Digital Library

காம : க்ரோதஸ் - ததா லோப :

"காமம், க்ரோதம், லோபம் என்கிறவை."

"லோபம்" என்றால் என்ன? காமத்திலேயே ஒரு அம்சம்தான் அது. புருஷனுக்கு ஸ்த்ரீயிடம், ஸ்த்ரீக்குப் புருஷனிடம் உண்டாகும் ஆசையிலிருந்து, பீச்சுக்குப் போக வேண்டும், அங்கே சுண்டல் வாங்கிச் சாப்பிடவேண்டும் என்றிருக்கிற ஆசை வரை லோகத்தில் எத்தனை ஆயிரம் தினுஸு ஆசையிருக்குமோ அத்தனையும் காமம்தான். மஹா பெரியவர்களுக்குத் தன்னைத்தானே தெரிந்துகொண்டு தானாக இருக்கவேண்டும் என்ற உசந்த நாட்டமிருக்கிறதே, இதைக்கூட உபநிஷதத்தில் 'ஆத்ம காமம்' என்றுதான் சொல்லியிருக்கிறது என்றேனே! இத்தனை விதமான ஆசைகளுக்குள்ளே பொருளில், ஸொத்தில் இருக்கிற ஆசைக்கு மாத்திரம் லோபம் என்று பெயர். தன் பொருளை விடவே மனஸில்லாமல் இறுகப் பிடித்துக் கொண்டிருப்பவனை லோபி என்கிறோம்.

ஆக லோபமும் காமத்தின் ஒரு 'பார்ட்'டாகவே இருந்தும் பகவானே இங்கே, "த்ரிவிதம் - மூன்று தினுஸு; ஒன்று—காமம், இரண்டு—க்ரோதம், மூன்று—லோபம்" என்கிறார்.

தீயவை அனைத்தும் ஆசையிலிருந்தே

ஷட்ரிபுக்கள் என்று ஆறு உட் பகைவர்களைச் சொல்வதில் காமம், க்ரோதம், லோபம் முதல் மூன்று. மோஹம், மதம், மாத்ஸர்யம் என்பவை பாக்கி மூன்று. யோசித்துப் பார்த்தால் இதுகளும் காமத்திலே, ஆசையிலே பிறந்தவை தான். மோஹம் என்பது என்ன? ஒன்றிடம் ஆசையினாலே அப்படியே அறிவிழந்து மயங்கிக் கிடப்பதுதான். மதம் என்பதும் தம் ஆசைப்படியெல்லாம் இருக்கலாமென்ற திமிர்தான்; அல்லது நம் ஆசைப்படி நடந்துவிட்டது என்ற திருப்தியில் உண்டாகும் கொழுப்புத்தான். மாத்ஸர்யம்

Koviloor Digital Library

என்பதாக இன்னொருத்தனிடம் பொறாமைப்படுவது எதனால்? நம்மிடம் இல்லாத எதுவோ ஒன்று அவனிடம் இருக்கிறது; பணமோ, புத்தியோ, செல்வாக்கோ எதுவோ ஒன்று அது நம்மிடம் இல்லையே என்பதால்தான் மாத்ஸர்யம். அதாவது அது நமக்கு வேண்டும் என்ற ஆசைதான் மாத்ஸர்யத்தை உண்டாக்குகிறது. இவ்வாறாக, உட்பகைவர் என்கிற ஆறு அஸுரர்களுக்கும் காமம்தான் மூலம் என்றாயிற்று.

ஆகையால் ஸதா ஸர்வ காலமும் நம்மைப் பிய்த்துப் பிடுங்கிக்கொண்டிருக்கிற தேவாஸுர யுத்தம் நிற்கவேண்டுமானால் மூல விரோதியாக இருக்கப்பட்ட காமம் என்கிற அஸுரனை இல்லாமல் பண்ணிவிடவேண்டும். ஜீவன் சாந்த நிலை அடைய ஒரே வழி ஆசா நாசம்தான்.

"காமம் என்ற பெருந்தீனிக்காரனை பாபியை உன்னுடைய பரம விரோதி என்று புரிந்துகொண்டு சண்டை போடு: மஹாசனோ மஹா பாப்மா வித்த்யேநமிஹ வைரிணம்."

காமத்தை அது இது என்று அஃறிணையாகச் சொல்லாமல் அவன், பெருந்தீனிக்காரன் என்று personify செய்து சொல்கிறார். பரமாத்ம தத்வமே அவராக வந்திருக்கிறது. ஜீவனைத் தூக்கி விடுவதற்காகத் தத்வப்பொருள் க்ருஷ்ண பரமாத்மாவாக கண், காது, மூக்கோடு personify ஆகி வந்திருக்கிறது. அப்படிப்பட்ட தாம், ஜீவனைக் குழியிலே தள்ளும் தீய சக்தியையும் ஒரு ஆளாகத்தான் சொல்ல வேண்டுமென்று, இப்படிச் சொல்கிறார். இவர் தேவ சக்தி; அது அஸுர சக்தி.

'மஹாசனன், மஹாபாப்மா' என்று காமத்தை, அல்லது காமனை (அவனிலேயே க்ரோதனும் அடக்கம். அப்படிப்பட்ட காமனை)ச் சொல்கிறார்.

"மஹாசந :"—பெருந்தீனிக்காரன். "அசநம்" என்றால் சாப்பாடு. "அசனன்" என்றால் சாப்பிடுகிறவன். அக்னிக்கு

Koviloor Digital Library

"ஹுதாசனன்" என்று பெயர். ஆஹுதியைச் சாப்பிடுபவனு தலால் இப்படிப் பேர். "மஹா அசனன்"—நிறையச் சாப்பிடுகிறவன். "கொண்டா, கொண்டா!" என்று வாங்கிச் சாப்பிடும் குண்டோதரன். விஷயாநுபோகங்களை இப்படித் தான் இந்த்ரியங்கள் மூலம் வாங்கி வாங்கித் தின்று கொண்டே இருக்கிறுன் காமன்.

இவன் "மஹா பாப்மா". "பாப்மா" என்றுல் பாபம் தான். உபநிஷத்தில் ஆத்மா பாபமற்றது என்று சொல்லு மிடத்தில் "அபஹத பாப்மா" என்று இருக்கிறது.* காமத் தைக் காமன் என்கிற மாதிரி அவனையே பாபி, பாபாத்மா என்ற அர்த்தத்தில் "பாப்மா" என்கிறுர். ஸாதாரண பாபி இல்லை; "மஹா பாப்மா", அதாவது, பெரும்பாவி. ஜீவர் களைப் பாபத்தில் புகுத்துவது யார் என்று அர்ஜுனன் கேட்டானே, அது இவன்தான். அதனுல் இவன் மஹாபாபத்தின் வடிவமாகவே இருக்கவேண்டும்.

"இவனையே ஸம்ஸாரத்தில் பெரிய சத்ருவாக நீ அறிய வேண்டும்" என்கிறுர் பகவான். "வித்த்யேநம் இஹ வைரிணம்."

"இஹ"—'இஹ பர' என்பதில் 'இஹ' மான ஸம்ஸாரத் தில்,

"ஏநம்"—இவனையே; காமத்தையே,

"வைரிணம்"—சத்ருவாக; அதாவது தேவாஸுரப் போரில் அஸுர ராஜாவான முதல் விரோதியாக,

"வித்தி"—அறிவாயாக!

"இப்போது கௌரவ ஸேனையோடு நீ போட வேண்டிய யுத்தம் லோகத்துக்காக. உனக்காக நீ போட்டுக்கொள்ள வேண்டியது துரியோதனன் ஸ்தானத்தில் ஆசையஸுரன் தலைமை வஹிக்கிற துர்வ்ருத்தி ஸேனையோடுதான்" என்கிறுர் பகவான்.

---

* சாந்தோக்யம் 8, 1.5, 8.41

Koviloor Digital Library

ஸரி, ஆசையால்தான் அத்தனை கஷ்டமும் என்று தெரிந்துவிட்டது. ஆசை என்பது மனஸுக்கு ரொம்பவும் ஸௌக்யத்தைத் தருகிற மாதிரித் தோன்றினாலும், ஸௌக்யத்தை அடையவே நாம் நமக்கு ஏற்படுகிற ஆசைகளை நிறைவேற்றிக்கொள்ள முயல்கிறோமாயினும், கஷ்ட பரம்பரை அத்தனைக்கும் அதுதான் காரணம் என்று தெரிகிறது. ஆசார்யாள் தம்முடைய பாஷ்யத்தில், இதன் நிமித்தமாகத்தான் ப்ராணிகளுக்கு ஸர்வ அனர்த்த ப்ராப்தியும் என்கிறார். நிறைவேறாவிட்டால் கோபம்; அநுதாபம், தயை முதலான குணங்களை அழித்துக்கொண்டு ஒரு தானமா, தர்மமா, உபகாரமா பண்ணாமல் நம்மிடம் உள்ளதைப் பேராசையோடு பிடித்துக்கொண்டிருக்கிற லோபம்; இப்படி பிடித்துக் கொண்டிருக்கிற வஸ்துவிலேயே புத்தியை இழப்பதான மோஹம்; ஆசை நிறைவேறிவிட்டாலோ அந்தத் திமிரிலே மதம்; இன்னொருத்தனிடம் இருப்பதில் நமக்குள்ள ஆசையால் அவனிடம் உண்டாகும் மாத்ஸர்யம்—என்றிப்படி பாபத்துக்குமேல் பாபமாக நம்மை அஸுரர்கள் நரகத்துக்கு இழுப்பதெல்லாம் ஆசையை மூலமாக வைத்துத் தானே?

ஆசை என்பது எப்படிப் பார்த்தாலும் பொல்லாததாக இருக்கிறது—நிறைவேறினாலும் மதத்தை உண்டாக்குகிறது; ஆசை தன்னுடைய நிறைவேற்றத்தால் கிட்டிய பொருளிடம் மோஹத்தையும், அதைக் கொஞ்சங்கூட மற்றவர்களுக்கு ப்ரயோஜனப்படுத்தக் கூடாது என்ற லோப குணத்தையும் ஏற்படுத்துகிறது. நிறைவேறாவிட்டாலோ க்ரோதம், மாத்ஸர்யம் இவற்றை ஏற்படுத்துகிறது.

இது தெரிந்துவிட்டது. அதாவது அத்தனை கஷ்டமும் காமம் ஒன்றால்தான், எல்லாக் கஷ்டத்துக்கும் மூலமான அஸுரன் இதுதான் என்று தெரிந்துவிட்டது. ஸௌக்யத்துக்காக ஆசைப்பட்டுப் பரம அஸௌக்யத்தில், கஷ்டத்தில் போய் மாட்டிக் கொள்கிறோம்.

Koviloor Digital Library

ஸந்தோஷத்தினாலேயே கஷ்டம்

ஸௌக்யம் என்று போய்க் கஷ்டத்தில் விழுகிறோம். ஸந்தோஷம் தருவது என்று நினைத்து ஆசையை வளர்த்துக் கொண்டு அதனாலேயே துக்கத்தை அடைகிறோம். இங்கேயும் ஆசை நிறைவேறாவிட்டால்தான் துக்கம் என்றில்லை. ஆசையின் நிறைவேற்றத்தாலேயும் துக்கம்தான். எப்படியென்றால் ஆசை நிறைவேற்றத்தால் எதைப் பெற்றோமோ அது கையை விட்டுப் போய்விடப் போகிறதே என்று துக்கம். அதோடு பயம். இந்த பயம் நிஜமாயும் ஆகிவிடுகிறது. நமக்குக் கிட்டிய ஆசை வஸ்து நம்மை விட்டுப் போய் விடுகிறது. ப்ரியமானவர் செத்துப்போகிறார்; பணத்தைத் திருடன் கொண்டுபோகிறான், அல்லது பாங்கு முழுகிப் போகிறது, அல்லது நமக்குத் திருட்டுப் போனதாக நேரே தெரியாவிட்டாலும் பண வீக்கத்தில் அதன் மதிப்புக் குறைந்து, 'ஐயோ! வீடு வாங்கலாம், கல்யாணம் பண்ணலாமென்று வயிற்றைக் கட்டி வாயைக்கட்டி மீத்தினோம்; இப்போது பார்த்தால் இந்த ஸேவிங்ஸ் க்ரவுண்ட் வாங்கக் கூடப்போதவில்லையே, வரதக்ஷிணைக்குக்கூடப் போதவில்லையே!' என்று துக்கிக்கும்படி ஏற்படுகிறது.

ஸந்தோஷம் தரும் என்றுதான் ஒன்றுக்கு ஆசைப்படுகிறோமென்றாலும் அதை அடைவதற்கே வேறு எத்தனையோ கஷ்டப்பட வேண்டியதாகிறது. ஸினிமா பார்த்து ஸந்தோஷப்பட வேண்டுமானால் எத்தனையோ நாழி 'க்யூ'வில் கால் வலிக்க நிற்கவேண்டியிருக்கிறது. அப்புறம் ஒரே புழுக்கத்தில் கண்ணை எரியவைக்கிற வெளிச்சத்தோடு, காதைத் துளைக்கிற சப்தத்தோடு ஓடுகிற ஸினிமாவைப் பார்க்க வேண்டியிருக்கிறது. அதனால் தலைவலியும் கண்ணெரிச்சலும் உண்டாகின்றன. கிரிக்கெட் பார்த்து ஸந்தோஷப்படவேண்டுமானால் முதல்நாள் ராத்ரியே அங்கே போய்ப் பனியில் படுத்துக்கொண்டு, பட்டினி கிட்டினி பார்க்காமல் அவதிப்பட்டுக் கொண்டுதான் இடம் பிடிக்க வேண்டியிருக்கிறது என்கிறார்கள். இப்படித்தான் எதற்கு

Koviloor Digital Library

ஆசைப்பட்டாலும் அது கிடைப்பதற்குக் கூலியாகக் கஷ்டம் ஏதாவது படும்படியே இருக்கிறது. நல்லதற்கு ஆசைப் பட்டாலுங்கூடத்தான். ஸ்ரீரங்கத்தில் வைகுண்ட ஏகாதசி, சிதம்பரத்தில் ஆர்த்ரா தரிசனம் பார்க்கணும் என்று நல்ல தாக ஆசைப்பட்டாலும் எத்தனையோ இடி மொத்துப் பட்டுக் கொண்டு, பனியிலே குளிரிலே ராவெல்லாம் விரைத்துக்யூவில் கால் கடுத்துக் கஷ்டப்படத்தான் வேண்டி யிருக்கிறது. பூஜை பார்க்க வேண்டும், தீர்த்தம் வாங்கிக் கொள்ள வேண்டும் என்கிற ஆசையில் (நல்ல ஆசைதான், அதில்) நீங்கள் (இந்த மடத்துக்கு) வந்தால் நான் மத்யானம் இரண்டு மணி, மூன்று மணிவரை உங்களைப் பட்டினி போட்டுக் கஷ்டப்படுத்துகிறேன்! நல்ல லக்ஷ்யத் துக்கு ஆசைப்பட்டு யோகம், ஸாதனை என்று எது செய்வ தானாலும் அதிலே எத்தனையோ கஷ்டம். பத்மாஸனம் போட்டுக் கொள்வதென்றால் காலை முறித்து விடுகிறமாதிரி வலிக்கிறது! பூஜை என்றால் இந்தப் புஷ்பம் பத்ரம் இந்த ஸ்வாமிக்கு, இன்னொரு புஷ்பம் பத்ரம் இன்னொரு ஸ்வாமிக்கு, இதற்கு இந்த நைவேத்யம், அதற்கு அந்த நைவேத்யம் என்றெல்லாம் வைத்து கஷ்டப்படுத்தியிருக் கிறது. இன்னம் பஹு கஷ்டமாக உபவாஸம் இருப்பது, அங்க ப்ரதக்ஷிணம் பண்ணுவது, செடில் குத்திக்கொள்வது என்றெல்லாம் வேறு! 'அப்படியானால் ஸாதனை வேண்டாமா, உத்ஸவங்கள் பார்ப்பதும் க்ஷேத்ராடனம் பண்ணுவதும் கூடாதா, பூஜை பண்ண வேண்டியதில்லையா?' என்றால், இந்த விஷயத்துக்கு—அதாவது நல்லதாக ஆசைப் பட்டு அதற்காகக் கஷ்டப்படுவது என்ற ஸமாசாரத்துக்கு— அப்புறம் வருகிறேன். இங்கே சொல்ல வந்தது எப்படிப் பட்ட ஆசையாயிருந்தாலும், "ஆசை வர வர ஆய்வரும் துன்பம்" என்பதுதான்.

ஆனந்தமும் த்ருப்தியும்

எந்த ஆசையும் உண்டாவதற்குக் காரணம் என்ன? நாம் ஸந்தோஷத்தைத் தேடுவதுதான். ஸந்தோஷம்

Koviloor Digital Library

என்பதை விட ஆனந்தம் என்பதுதான் ஸரியான வார்த்தை. ஏனென்றால் நாம் 'ஸந்தோஷம்' என்பதுதான் ஆனந்தம், இன்பம், happiness (happiness-கு மேலே bliss, அதற்கு மேலே joy) என்று நினைத்துக்கொண்டிருந்தாலும் அப்படியில்லை. "ஸந்தோஷம்" என்பது "திருப்தி" என்றே பொருள்படுவது. தோஷம் (tosham) என்றால் த்ருப்தி. நல்ல ஆழ்ந்த த்ருப்தி ஸந்தோஷம். ஆனந்தப்படுவதும், த்ருப்தி கொள்வதும் நெருக்கமாகத் தொடர்பு கொண்டவைதான் என்றாலும் இரண்டும் ஒன்று என்று சொல்லமுடியாது. அதற்கப்புறம் அத்ருப்திப்பட எதுவுமே உண்டாக முடியாது என்று நிறைந்த நிறைவாக, முடிந்த முடிவாக த்ருப்திப் படும் ஆத்மானந்தம் ஒன்றில்தான் இரண்டும் ஒன்றே ஆகி விடுகின்றன. மற்ற விஷயங்களில் ஆனந்தத்துக்கும் த்ருப்திக்கும் கொஞ்சம் வித்யாஸமிருப்பதாகத்தான் பார்க் கிறோம். மந்த மாருதம் வீசினால் ஆனந்தமாயிருக்கிறது என்போமே ஒழிய, த்ருப்தியாயிருக்கிறது என்று சொல்ல மாட்டோமல்லவா? எதிர்பார்க்கிற ஆசைப் பூர்த்திக்கு மட்டுமே 'த்ருப்தி' என்பது பொருந்துகிறது. எதிர்பாராமல் கிடைப்பதை 'த்ருப்தி' என்காமல் 'ஆனந்தம்' என்று மட்டுமே சொல்கிறோம்.

ஆசையும் இன்பதுன்பங்களும்

ஆனந்தம் தருகிறது என்பதற்காகத்தான் ஒன்றில் ஆசை வைக்கிறோமென்று சொல்லவந்தேன். ஆனால் அந்த ஆசை ஒன்று, ஆனந்தத்தையே தராமல் துக்கத்தைக் கொடுக்கிறது; அல்லது கொஞ்சம் ஆனந்தத்தையும் நிறைய துக்கத்தையும் கொடுக்கிறது; இல்லாவிட்டால் ஸமமாகக் கொடுக்கிறது. இப்படியெல்லாமின்றி நாம் விசேஷமாக ஆசைப்படாமல் தானாகவே ஒரு ஆனந்தம் வருகிறது, அது துக்கக் கலப்பே இல்லாத ஆனந்தமாயிருக்கிறது என்றாலும் அந்த ஆனந்தம் சாச்வதமாயிருக்க மாட்டேனென்கிறது. கொஞ்ச காலத்துக்கு அப்புறம் அது எங்கேயோ ஓடிப்போய்

Koviloor Digital Library

மறுபடி நம்முடைய அழுகைகள் நம்மைப் பிடித்துக்கொண்டு துக்கப்படுத்துகின்றன. இந்த ஆனந்தம் நமக்குத் தெரியாமலே இருந்திருந்தால்கூட நாம் பாட்டுக்கு இருந்திருப்போம். நடுவாந்தரத்தில் அது வந்து அப்புறம் ஓடிவிட்டதாலேயே, மறுபடி அந்தமாதிரி வருமா, வருமா என்று ஏக்கமுண்டாகிறது.

பணத்தால் ஆனந்தம் வரும் என்று ஆசைப்பட்டு ரேஸுக்குப் போகிறுன். இருப்பதையும் கோட்டை விட்டு விட்டு 'ஹோ'வென்று அழுகிறுன். இது ஆனந்தமே தராமல் துக்கம் மட்டும் தருகிற ஆசை. கண்ணுல், காதால் ஆனந்தம் வரும் என்று ஆசைப்பட்டு ஸினிமாவுக்கு, (ஸங்கீத) ஸபாவுக்குப்போகிறுன். ஸினிமா கொஞ்சம்கூட நன்ருயில்லை, ஒரே பேயும் கொலையுமாக வந்து குலைநடுங்குகிறது. 'ஆனந்தம் என்று வந்து விலை கொடுத்து இதை வாங்கிக்கொண்டோமே; பொழுதும் பணமும் வேஸ்ட் ஆச்சே' என்று எரிச்சலும் துக்கமும் வருகின்றன. வித்வானுக்குத் தொண்டைக் கட்டு; ஒரே அபஸ்வரம் என்ருல், ஆனந்தத்துக்காக ஸபாவுக்குப் போனவனுக்கு எப்படி இருக்கும்? வெங்காய ஸாம்பாரோடு தோசை தின்னலாமென்று நாக்காலும், மூக்காலும் (நாக்கு ருசியைப் போலவே மூக்கு 'கமகமா' வினுலுந்தான் தீனி, ஆசை) ஆனந்தம் அடைய ஆசைப்பட்டுக் கொண்டு க்ளப்புக்கு (ஹோட்டலுக்கு)ப் போகிறான். அங்கே ஆறிப்போனதாய், ஊசிப் போனதாய், சுட்ட எண்ணெயில் பண்ணினதை (ஸர்வர்) கொண்டு வந்து வைக்கிறுன். வாயில் வைக்க வழங்கவில்லை. வந்து விட்டோமே, ஆர்டர் பண்ணி விட்டோமே என்று முழுங்கிவைக்கிறுன். கஷ்டம் அதோடு போகவில்லை. தலையைச் சுற்றுகிறது. வாந்தி பண்ணுகிறது. ஸ்பர்ச உணர்ச்சியால் சரீரத்துக்கு ஆனந்தம் ஏற்படும் என்று ஆசைப்பட்டுக்கொண்டு ஜிலு ஜிலு என்று 'ஷவர்பாத்'தில் போய் நிற்கிறுன். அது ஒரே சில்லிப்பாகக் கொட்டி விரைக்க வைக்கிறது. ஜலதோஷமும் மண்டையிடியும் வருகின்றன.

Koviloor Digital Library

இதெல்லாம் ஆனந்தம் என்று தேடிப்போய் ஆனந்தக் கலப்பே இல்லாமல் துக்கத்தை மட்டும் பெற்றுக்கொள்வதற்கு த்ருஷ்டாந்தம். சப்த, ஸ்பர்ச, ரூப, ரஸ, கந்தம் என்று பஞ்சேந்த்ரியங்களால் ஆசைப்படுகிறவற்றுக்கு த்ருஷ்டாந்தம் கொடுத்தேன். கச்சேரியில் சப்தம், ஸினிமாவில் சப்தம், ரூபம் இரண்டும். ரஸமும் கந்தமும் ஹோட்டலில். ஸ்பர்சம் 'ஷவர் பாத்'.

ஐம்புலனாலும் அழிவடையும் மானுடன்

"விவேக சூடாமணி" என்று ஒரு உத்தமமான ஞான நூல். நம்முடைய ஆசார்யாள் பண்ணினது. அதிலே ஒரு ச்லோகத்தில் இந்தப் பஞ்சேந்த்ரிய ஸமாசாரம் வருகிறது. ஒவ்வொரு ப்ராணி, இந்த ஐந்து இந்த்ரியங்களில் ஒவ்வொன்றினால் மட்டும் ஆசை வாய்ப்பட்டு நாசத்தை அடைவதைச் சொல்லி, மநுஷ்ய ப்ராணி மட்டும் ஐந்து இந்த்ரியங்களில் ஒவ்வொன்றாலுமே, அதாவது ஐந்தாலுமே மோஹிக்கப்பட்டு அழிவதைச் சொல்லி எச்சரிக்கிறார், துக்கப்படுகிறார்.

மான் சப்தத்தினால் நாசமடைவது. வேடன் கொம்பு ஊதுவான். அதைக் கேட்கிற ஆசையால் மான் மயங்கி நிற்கும்போதே பாணம் போட்டு அடித்துவிடுவான்.

யானை ஸ்பர்சத்தால் நாசத்தைத் தேடிக் கொள்கிறது. 'கெட்டா' (khedda) என்று மைஸூர்க் காடுகளில் பண்ணுகிறார்கள்—யானையே கொள்ளும்படியான பெரிய பள்ளம் தோண்டி, மேலே அது பள்ளம் என்று தெரியாதபடி செத்தை செடி கொடிகளைப் பரப்பி வைத்திருப்பார்கள். பிடிக்க வேண்டிய ஆண் யானை பள்ளத்துக்கு ஒரு திக்கில் இருக்கிறது என்றால், அதற்கு எதிர் திக்கில் பள்ளத்துக்கு அந்தண்டை ஏற்கெனவே பிடித்துப் பழக்கப் படுத்திய ஒரு பெண் யானையைக் கட்டி வைத்திருப்பார்கள். அதை ஸ்பர்சித்து ரமிக்கவேண்டும் என்று ஆண் யானைக்கு ஆசை உண்டாகும். அந்த மோஹத்தில் அது குறுக்கே இருக்கிற பள்ளத்தைப் பள்ளமென்றே தெரிந்துகொள்ளா

Koviloor Digital Library

மல், செத்தை செடி கொடியின் மேலாக ஓடும். அவற்றால் இதன் 'வெய்ட்'டைத் தாங்கமுடியுமா? அப்படியே ஒடிந்து அதுகள் விழ, யானையும் பள்ளத்தில் தொபுகடீர் என்று விழுந்துவிடும்; பிடித்து விடுவார்கள்.

ரூபத்தால் நாசமடையும் ஐந்து விட்டில் பூச்சி—தீபத்தின் பளீர் ரூபத்தில் ஆசைப்பட்டுத் தானே வந்து அதில் விழுந்து மடிகிறது? 'ரஸம்' என்பதாக வாய்க்கு ஆசை காட்டும் ஆஹாரத்தால் மீன் உயிரை விடுகிறது—தூண்டிலில் உள்ள புழுவைத் தின்ன ஆசைப்பட்டுச் சாகிறது. வண்டு கந்தத்தினால் மரணத்தைத் தேடிக் கொள்கிறது. பெரிசு பெரிசாகச் சம்பகப் பூக்கள் உண்டு. அதன் வாஸனையில் நமக்கே மூக்கில் ரத்தம் கொட்ட ஆரம்பித்துவிடும்—அத்தனை தீக்ஷ்ணமான ஸுகந்தம்! இப்படிப் பட்ட புஷ்பங்களுக்குள்ளே போய் வண்டு உட்கார்ந்து கொண்டு அப்படியே தன் மதி இழந்து சொக்கிப்போய் விடும். அப்போது புஷ்பத்தின் இதழ் ஒவ்வொன்றாக மூடிக் கொண்டு, மலர்ந்திருந்த புஷ்பம் நன்றாகக் கூம்பிவிடும். அதற்குள் மாட்டிக்கொண்ட வண்டுக்கு அதோடு ஆயுஸ் தீர்ந்துபோகும். இப்படி "பஞ்ச" இந்த்ரியங்களில் ஒவ்வொன்றால் ஒவ்வொரு ப்ராணி "பஞ்சத்வம்" (மரணம்) அடைகிறது என்று ஆசார்யாள் சிலேடை செய்கிறார். மநுஷ்யன் ஐந்தாலுமே அழிகிறானே என்று பரிதாபப் படுகிறார்:

> சப்தாதி: பஞ்சபிரேவ பஞ்ச பஞ்சத்வம் - ஆபு:
> ஸ்வகுணேந பத்தா: |
> குரங்க - மாதங்க - பதங்க - மீந - ப்ருங்கா
> நர: பஞ்சபிரஞ்சித: கிம் ||

'குரங்க' என்றால் மான்; குரங்கில்லை. 'மாதங்கம்' என்றால் யானை. 'பதங்கம்' விட்டில். மீனம்தான் மீன். ப்ருங்கம் என்றால் வண்டு.

"நர:"—மநுஷ்யனானவன்; "பஞ்சபி:"—ஐ ந் தா லு ம் (ஐ ம் பு ல னா லு ம்); "அஞ்சித:"—கவரப்பட்டிருக்கிறான்.

Koviloor Digital Library

"பஞ்சபி: அஞ்சித:" என்பது ஸந்தியில் "பஞ்சபிரஞ்சித:" என்றுயிருக்கிறது. "கிம்" என்று முடித்திருக்கிறார். "கிம்" என்றால் "என்ன". 'ஐயோ, இப்படி மநுஷ்ய ஜீவனானது பஞ்சேந்த்ரியத்தாலும் கவர்ந்திழுக்கப்படுகிறதே, என்ன பண்ணலாம்?' என்று பரம கருணையோடு, "கிம்" போட்டிருக்கிறார்.

ஆசை, ஆனந்தம் என்று போய் அடியோடு ஏமாந்து நாசமடைவதைப்பற்றிச் சொல்லிக்கொண்டிருந்தேன்.

சாச்வத இன்பம் ஆசையால் விளையாது

ஆனால் எப்போதும் இந்த மாதிரி அடியோடு கெடுதலாகத்தான் நடக்கிறது என்று 'பெஸ்ஸிமிஸ்டிக்காக'ச் சொல்லக்கூடாது. இப்படியும் அநேக ஸமயங்களில் நடக்கிறதென்றே காட்டவந்தேன். கொஞ்சமாவது ஆனந்தம், அதோடு துக்கம் கலந்து வருவது என்பதாகத்தான் பெரும்பாலும் பார்க்கிறோம். புத்தியையும் கெடுத்து, உடம்பையும் கெடுத்து, குடும்ப வாழ்க்கையையும் கெடுப்பதான மது பானத்தில் ஒருத்தன் போனாலும்கூட, குடிக்கிற அந்த ஒரு நிமிஷம் அவனுக்கு ஒரு ஆனந்தம் இருக்கக்கூடும். ஹோட்டலில் போடுவதில் எப்போதுமே சுட்ட எண்ணெயும், ஊசலும்தான் என்றில்லாமல் வாய்க்கு ருசியாகவும், அதாவது நாக்குக்கு நிஜமாகவே ஆனந்தமளிப்பதாகவும் போடலாம்; அப்போதும்கூட அதற்கான bill, இந்த அநாசாரத் தீனியால் ஏற்படும் ஆத்மஹானி ஆகியவற்றைப் பார்த்தால் ஆனந்தப்படுவதைவிட துக்கப்பட வேண்டியதே ஜாஸ்தி என்று தெரியும். வித்வானுக்கு எப்பவும் தொண்டை கட்டுவதில்லை. சாரீரம் வசதியாயிருந்து, mood-ம் நன்றாயிருந்து அவர் பாடினால், "கொடுத்த காசு வீணில்லை" என்று தோன்றுகிறது. இங்கே ஆனந்தமும் துக்கமும் ஸமம். கைக் காசு போட்டு டிக்கட் வாங்கியது துக்கம்தான்; இப்போது அப்படித் தெரியாவிட்டாலும் வித்வான் நன்றாகப் பாடியிராவிட்டால் அப்போது தெரிந்திருக்கும்.

Koviloor Digital Library

"இன்னும் எத்தனை வேண்டுமானாலும் கொடுக்கலாம்" என்று நினைக்கும்படியாக வித்வான் பாடியிருந்தால் அப்போது துக்கத்தைவிட ஆனந்தம் ஜாஸ்தி. Free Pass (இலவசச் சீட்டு) கிடைத்து ஸபாவுக்குப் போய், வித்வானும் வெளுத்து வாங்கிவிட்டால் அப்போது (செலவு என்பதால் ஏற்படும்) துக்கமே இல்லாத ஆனந்தம்!

வாஸ்தவம். ஆனால் இந்த ஆனந்தமும் சாச்வதமாய் நின்றதா? Dull-ஆக depressed-ஆக, இந்த அழுமூஞ்சி ஸம்ஸாரத்தை நினைத்துக் கொண்டிருக்காமல் ஸபாவுக்குப் போகலாமென்று நினைத்தான். "ஓஸி" டிக்கெட்டும் கிடைத்தது. கச்சேரியும் நன்றாயிருந்தது. ஆனந்தமாகக் கேட்டான். ஆனால் வீட்டுக்குத் திரும்பி வந்தபோது அந்த ஆனந்தம் அப்படியே இருந்ததா? "கச்சேரி விமரிசையை அகத்திலே கொஞ்சம் 'அளந்து' உத்ஸாஹப்படுத்திக் கொள்ளலாம்" என்று இவன் நினைத்துக்கொண்டு வந்தான். ஆனால் ஊர் சுற்றிவிட்டு நாழி கழித்துச் சாப்பிட வந்திருக்கிறானே, போட (பரிமாற) வேண்டுமே என்று அகமுடையாள் உர்ரென்று இருக்கிறாள்! இவனுடைய ஆனந்தம் போய் dull அடித்து, மறுபடி depressed ஆகிவிடுகிறது. படுக்கப் போய், காற்றில்லை, கொசு பிடுங்குகிறது என்றால் இப்போது அந்தக் கச்சேரி ஆனந்தத்தில் லவலேசமாவது ஆற்றிக் கொடுக்க வருகிறதோ?

இப்படியே ரேஸுக்குப் போகிறவர்களில் ஜயிக்கிறவர்களும் இருக்கிறார்கள். ஆனாலும் அந்தப் பணம் கொண்டு வந்த ஆனந்தம் சாச்வதமாயிருக்கிறதா? அதனாலேயே எத்தனையோ தொல்லை, ஸங்கடம் வருகிறது. பணமும் ஸொத்தும்தான் மநுஷ்யன் பல விதக் கெடுதல்களில் போய்க் கஷ்டத்தை உண்டாக்கிக் கொள்வதற்குக் காரணமாயிருக்கிறது. இந்த லோகத்தில் கஷ்டமே படாமல், ஸுகஜீவனம் செய்தே செத்துப்போகிற பணக்காரர்களும் இருக்கிறார்கள்; ஆனால் அவர்களும் பணத்துக்காக அல்லது பணத்தினால் செய்த அநேகக் கெடுதல்களுக்காக—

Koviloor Digital Library

தொழிலபிவிருத்திக்காக லஞ்சம் கொடுத்தது, யாசகனை அடித்து விரட்டியது இப்படி ஏதாவது கெடுதலுக்காக— பரலோகத்தில் பதில் சொல்லத்தான் வேண்டியிருக்கும்; அதாவது கஷ்டப்பட வேண்டித்தானிருக்கும். கொஞ்சமோ நஞ்சமோ கஷ்டத்தை உண்டாக்காமல் பொருளாசை ஒருத்தனை விடுவதென்பது நடக்காத கார்யம்.

கஷ்டமே தராமல், துக்கமே கொடுக்காமல் ஆனந்தத்தைத் தரும் ஆசாபூர்த்தியும் (ஆசையின் நிறைவேற்றமும்) அப்போதைக்கு மட்டும் தாற்காலிகமாகத்தான் அந்த ஆனந்தத்தைத் தருமேயன்றி, சாச்வத ஆனந்தம் தருவதில்லை. 'ஷவர்' ரொம்பவும் ஹிதமாகவே கொட்டினாலுங் கூட அதிலேயே சாச்வதமாக நிற்க முடியாது. உசந்தால் அரை மணிக்கு மேல் தாங்காது. வித்வான் எத்தனை நன்றாகப் பாடினாலும் அவர் ஐந்து மணி, ஆறு மணி பாடிக் கொண்டே போனால் 'போர்' அடித்துவிடுகிறது! வீட்டுக்குப் போக பஸ் கிடைக்குமா என்று விசாரம் ஏற்படுகிறது!

பாதாம்கீர் நன்றாயிருக்கிறது என்றாலும் எத்தனை டம்ளர் சாப்பிடுவது? இரண்டு மூன்று டம்ளர் சாப்பிட்டால் வயிறு முட்டிப்போகிறது. அதற்கு மேலே உபசரித்தால், "அய்யோ, தயவு செஞ்சு விட்டுடப்பா" என்று கெஞ்சுகிறோம். இந்த இரண்டு மூன்று டம்ளராவது நல்லது பண்ணுகிறதா? இல்லை. ஒன்றோடு நிறுத்திக்கொண்டிருந்தால் உடம்புக்குப் புஷ்டியைத் தந்திருக்கும். ஆசையின் மேலே மேலும் இரண்டு டம்ளர் சாப்பிட்டதில் வயிற்றுப் போக்கு, வாயில் எடுப்பு உண்டாகிறது. ஆனந்தம் ஸம்பாதித்துக் கொண்டது நன்றாயிருக்கிறதல்லவா?

ஆசை வஸ்துவை அளவோடு நிறுத்திக்கொள்ள முடிவதில்லை. அதற்கு மேல் வேண்டியிருக்கிறது. அதற்காக, "அதையே சாச்வதமாய் அநுபவி; நாள் பூரா பாட்டுக்கேளு; அண்டா பாதாம் கீர் சாப்பிடு" என்றாலும் முடிவதில்லை. புஸ்தகப் புழு என்று நாளெல்லாம் படிப்பவர்களுக்குக்கூட

Koviloor Digital Library

ஒரு இடத்தில் அலுப்புத் தட்டி புஸ்தகத்தைத் தூக்கிப் போட்டுவிட்டு, கொஞ்சம் 'வாக்' பண்ணிவிட்டு வரலாம் என்று புறப்படுகிறுர்கள். அலுப்பாவது சாச்வதமாகத் தட்டிவிட்டதா, அப்படியாவது இந்தப் பாட்டு ஆசை, சாப்பாட்டு ஆசை, படிக்கிற ஆசை, அல்லது வேறு எத்தனேயோ ஆசைகளில் ஒன்று அடியோடு தீர்ந்ததா என்றுல் அதுவும் இல்லே; இன்றைக்கு வேண்டாம் என்று விட்ட ஆசை நாளேக்கு ரொம்பவும் வேண்டியதாக அரித் தெடுக்க ஆரம்பிக்கிறது.

கால—தேசாதிகளின் பாதிப்பு

இன்ெெருரு விசித்ரம்—ஆனந்தத்தைத் தருவது என்ப தால் ஒன்றிலே ஆசை ஏற்படுவதாகப் பார்த்தோம். ஆனுல் இந்த போக்ய வஸ்து அதன் அநுபோகத்தில் ஏதோ ஒரு அளவில் அலுத்துப்போவது மட்டுமில்லாமல், கால தேச ஸந்தர்பாதிகளாலும் ஒவ்வொரு ஸமயத்தில் வேண்டாத தாகி விடுகிறது. இப்போது ஆனந்தம் தருகிற ஒன்று எப்போதும் ஆனந்தம் தருவதில்லே. எத்தனே ருசியான ஆஹாரமானுலும், நமக்கு ரொம்பவும் பிடித்தமான உணவு பதார்த்தமானுலும் கொஞ்சம் ஜ்வரம் வந்துவிட்டால் வைக்க வழங்குகிறதா? வேண்டும், வேண்டும் என்று எந்தப் பதார்த்தத்தைத் தேடிப்போய்ச் சாப்பிடுவோமோ அதையே இப்போது வேண்டவே வேண்டாம் என்கிறேம். தேடித் தேடிப் போய் எது எதுகளேப் பார்ப்போமோ அவற்றையே கண்வலி வந்தால் பார்க்காமல் கண்ணே மூடிக் கொள்கிறேம். உசந்த காஷ்மீர் சால்வைதான். 'எத்தனே ஹிதமாய் இருக்கிறது?' என்று மார்கழி மாஸம் எடுத்தும் போர்த்திக் கொண்டோம். சித்திரை பிறக்கிறது. அதே சால்வைதான். அது ஹிதம் தருகிறதா? மேலே பட்டாலே 'நெருப்பாட்டம்' இருக்கிறது. முதல் கார்யமாகப் பெட்டி யிலே போட்டு மூடுகிறேம்.

வேடிக்கையாக ஒன்று சொல்வார்கள். பிரிட்டிஷ் துரைத்தனத்தார் காலத்தில் கிஸ்தி நோட்டீஸ்கள் வருமாம்.

Koviloor Digital Library

நிலச் சொந்தக்காரனுக்கு, 'இப்படித் தீட்டி விட்டானே!' என்று கோபம் கோபமாக வருவாம். இந்தக் காலத்தில் "ஒரு தினுஸில்" உத்யோகஸ்தர்களை (உத்யோகஸ்தர்களை விட அரசியல்வாதிகளை) "ஸரி கட்டி" வரி, கிரி எதுவானாலும் ஸாதகமாக மாற்றிக் கொள்வதாகச் சொல்கிறார்கள். அந்தக் காலத்தில் இந்த "தினுஸு" அவ்வளவாக நடைமுறையில் இல்லை. அடியோடு இல்லாமலில்லை. ஆனால் இப்போது தாண்டவம் பண்ணுகிற அளவுக்கு அப்போது இல்லை. இப்போது மாதிரி எடுத்ததற்கெல்லாம் 'ரிட்'டும் அப்போது போடமுடியாது. ஆனதால் அந்த நிலச்சுவான்கள் மூக்கால் அழுதுகொண்டே கிஸ்தியைக் கட்டிவிடுவார்களாம். மனஸிலே மட்டும், "வரி போட்ட ஆபீஸரை எப்படியாவது பழி வாங்கவேண்டும்" என்று கங்கணம் கட்டிக்கொள் வார்களாம்.

தநுர்மாஸ பஜனை முடிந்து ராதா கல்யாணம் நடக்கும். நிலக்காரர்கள் அதற்கு அந்த உத்யோகஸ்தரை மரியாதை பண்ணிக் கூப்பிடுவார்கள். அவரும் வருவார். ராதா கல்யாண முஹூர்த்தம் முடிந்து நன்றாக போஜனமும் பண்ணி வைத்து, சந்தன தாம்பூலம் கொடுத்து உத்யோகஸ் தரை ரொம்பவும் மரியாதையுடன் அனுப்பிவைக்கிற கட்டம் வரும்.

"நன்னா சந்தனம் பூசிக்கோங்கோ, பூசிக்கோங்கோ" என்று அவரிடம் கேட்டுக்கொள்வார்கள்.

நல்ல குளிர் மாஸம். அவர் எவ்வளவு பூசிக் கொள்வார்? ஏதோ கையில், கழுத்தில் கொஞ்சம் தடவிக் கொள்வார்.

வரி கட்டிவிட்டு, மனஸுக்குள் க்ஷாத்ரமாயிருப்பவர்கள் பழிவாங்குவதற்கு இதிலேதான் "ஆயுத"த்தை ஒளித்து வைத்துக் கொண்டிருப்பார்கள்! வெளியிலே மரியாதை குறையாமல் ரொம்பவும் அன்பு ஸ்வாதீனமாக, "யார்டா அங்கே? ஸார் ஷர்ட்டைக் கழட்டுடா, ராதா க்ருஷ்ண ப்ரஸாதமா உடம்பெல்லாம் சந்தனம் தடவலாம்" என்று

Koviloor Digital Library

சொல்லி, அப்படியே அவர் உடம்பெல்லாம் பேலா சந்தனத்தையும் கொட்டிச் சொத சொதவென்று தேய்த்து விடுவார்களாம். பக்கத்துக்கு ஒருத்தராகக் கூப்பிட்டு நிறுத்திப் பெரிய பெரிய விசிறிகளை அவர்களிடம் கொடுத்து, "ஸாருக்கு நன்னு விசுறுங்கோடா" என்பார்களாம்.

இந்த பலவந்த உபசாரத்தில் அதிகாரி உடம்பெல்லாம் வெட வெட என்று நடுங்கிக்கொண்டு தவியாய்த் தவித்து ஊரை விட்டே மாற்றல் கேட்டுக்கொண்டு ஓடிப்போய் விடுவாராம்! ஆயுதமாக ஹிம்ஸித்த இந்த சந்தனமும் விசிறியும் சித்திரை வைகாசியில் "சைத்யோபசாரம்" என்பதாக எத்தனை ஆனந்தம் தந்திருக்கின்றன?

ஆசையை விழுங்கும் இன்னோர் ஆசை

ஒரு ஆசையை இன்னொரு ஆசை முழுங்கி, ஆனந்தத்தைப் பறிப்பதையும் பார்க்கிறோம். ரொம்பவும் பிடித்த பாடகரின் கச்சேரி. ஃப்ரீ பாஸும் கிடைக்கிறது. ஆனால் யாரோ நெருங்கின பந்துவுக்கு அன்று ஆபரேஷன், அல்லது "என்னவோ"வே நேர்ந்துவிட்டது, என்றால் கச்சேரிக்குப் போகத் தோன்றுகிறதா? இப்போது பாட்டு ஆசையும், ஆனந்தமும் என்ன ஆயின? ஒரு ஆசையை இன்னொரு ஆசை முழுங்கிவிடுகிறது. பாட்டு ஆசையைவிட பந்துத்வ ஆசை பெரிசாயிருக்கிறது.

சாக்லேட்டை நீட்டினால் கையிலிருக்கிற சொப்பை ஒரு குழந்தை போட்டுவிட்டு இதற்கு ஓடிவருகிற மாதிரிதான் பெரியவர்கள் என்று சொல்லிக்கொள்கிற நாமும் இருக்கிறோம்!

ஏதோ கொஞ்சம் ஸ்வாமி ஆசையும் நடுப்பற (நடுவில்) வந்து கோவிலுக்குப் போகிறான். புறப்பாட்டுக்கு நாழியாகும் என்பதால் காத்துக் கொண்டிருக்கிறான். அன்றோடு ஸினிமா கடைசி 'ஷோ' என்று காதில் விழுகிறது. உடனே "புறப்பாட்டை" விட்டுவிட்டு இவனே ஸினிமா கொட்டாய்க்குப்

Koviloor Digital Library

புறப்படுகிறான். அல்லது மாற்றியும் சொல்லலாம். ஸினிமாவுக்குக் கிளம்புகிறான்; அன்றைக்கு ஸ்வாமி புறப்பாடு என்று கேள்விப்படுகிறான்; உடனே, ஸினிமா கிடக்கட்டும் என்று கோவிலுக்கு நடையை மாற்றிக் கொள்கிறான். எதுவோ ஒன்று. மொத்தத்தில் ஒரு ஆசையும் நிரந்தரமாக இல்லை, இன்னொரு ஆசை தன்னை முழுங்க விட்டுவிடுகிறது; ஒரேயடியாயும் ஜீர்ணமாகி விடுவதில்லை; மறுபடி பழைய பலத்தோடேயே திரும்பி வந்து நம்மைப் பிடித்துக்கொள்கிறது.

ரொம்ப கஷ்டம் வருகிற காலத்தில் ஸினிமாவை விட்டு விட்டு நவக்ரஹம் சுற்றுவது, பிள்ளையாருக்குக் குட்டிக் கொள்வது என்றிப்படி ஆசை; புராண ப்ரவசனம் கேட்கப் போகலாமே என்று தோன்றுகிறது. ஸௌக்யம் வந்தால் குஷி பிறந்து, அந்த ஆசைகள் போய் ஸினிமா, இல்லாவிட்டால் வேறே ஏதோ கேளிக்கையில் ஆசை பிறக்கிறது.

தன் உடம்பிலேயே ஆசை வித்யாஸம்

நம்முடைய சரீரத்திலேயே ஒரு அங்கத்தைவிட இன்னொரு அங்கத்திடம் ஆசை ஜாஸ்தியாயிருக்கிறது. ஸாதாரணமாக மற்ற எல்லா வெளி வஸ்துக்களையும்விட நமக்கு நம்முடைய சரீரத்தில்தான் அதீத ப்ரியம். 'நாம்' என்பதே நம்முடைய சரீரம் என்றுதானே ஞானிகளைத் தவிர மற்ற எல்லோரும் நினைக்கிறோம்? "நான் சிவப்பாக இருக்கிறேன்; அல்லது கறுப்பாக இருக்கிறேன். நான் குட்டையாயிருக்கிறேன்; அல்லது நெட்டையாயிருக்கிறேன்" என்றெல்லாம் சொல்லும்போது உடம்பையே "நானாக" நினைப்பதுதானே தெரிகிறது? நமக்கு ரொம்ப ப்ரியமானவர்கள் கவனக் குறைவால் நம் கால்விரலில் ஒன்றைக் கொஞ்சம் மிதித்து விட்டால்கூட அவர்களிடமுள்ள ப்ரியம் போய்க் கோபம் கொள்கிறோம். ஏனென்றால் உடம்பிடம் அத்தனை ஆசை! இந்த்ரிய ஆனந்தங்களையெல்லாம் அதுதான் தருகிறது என்பதனால் இப்படியொரு ஆசை. ஸோப்,

Koviloor Digital Library

ஸெண்ட், ஸில்க் எல்லாம் போட்டு உடம்பை ஆசை ஆசையாய் அலங்காரம் பண்ணிக்கொள்கிறோம்.

விரலிலே புண், நன்றாய் சீழ் வைத்துவிட்டது, அதனால் ஜ்வரம் ஜன்னி வந்தது என்றால், "எங்கே கை முழுவதுமே புரை ஓடி அழுகிவிடுமோ?" என்ற பயத்தில், நவரத்ன மோதிரம், வைர மோதிரம் போட்டு அலங்காரம் பண்ணிக் கொண்ட அந்த விரலை "ஆம்ப்யுடேட்" செய்யச் சொல்கிறோம். நம்முடைய உடம்பிலேயே ஒரு அங்கத்தைவிட இன்னொன்றிடம் ஆசை ஜாஸ்தி என்பதைக் காட்ட வந்தேன். இன்னொருத்தர் நம் கால் விரலைக் கொஞ்சம் மிதித்தால் அத்தனை கோபம் வருகிறதே, ஆனால் நமக்கு சர்க்கரை வியாதி வருகிறது, அதனால் காலில் ஏதோ புண் ஆறாமல் புரை ஓடிவிட்டது என்றால், விரல் மட்டும் இல்லை, "காலையே வெட்டினாலும் பரவாயில்லை. உயிரைக் காப்பாற்றுங்கள்" என்று டாக்டரிடம் சொல்கிறோம். "ஹார்ட்"டுக்கு மருந்து சாப்பிட்டால் வயிற்றுக்கு இன்னின்ன போடக்கூடாது, fat சேர்க்கவே கூடாது என்று diet வைக்கிறார்கள். 'அப்படியே பண்ணுகிறேன்' என்று நோயாளி செய்கிறபோது இவனுடைய சரீரத்திலேயே இவனுக்கு வயிற்றைவிட ஹ்ருதயத்திடம் ப்ரியம் ஜாஸ்தி என்றுதானே அர்த்தம்? T. B.-க்கு ஏதோ ஒரு ஊசி குத்தினால், காது அடைத்துப் போகும் என்று சொன்னால், "காது போனால் போகட்டும், லங்ஸைக் காப்பாற்றிக் கொடுங்கள்" என்கிறான்.

ஆசைவேகம் ஒன்றிலிருந்து ஒன்றுக்குத் தாவுவதாவும் இருக்கிறது.

ஒரு மனிதருக்குப் பணத்திலே ரொம்பவும் ஆசை. தன்னுடைய ஏகபுத்ரனிடமும் அதே மாதிரி ஆசை. எதனிடம் ஜாஸ்தி ஆசை என்று அவருக்கே தெரியாது. பிள்ளைக்குப் 'போலியோ'வோ எதுவோ ஒரு வ்யாதி வந்தது. அதற்காக ஊர் ஊராக, தேசம் தேசமாகப் போய் வைத்யம் பார்த்தார். அத்தனை ஸொத்தும் கரைந்து போயிற்று. பார்த்துப்

Koviloor Digital Library

பார்த்துச் சேர்த்த ஸொத்தைவிடப் பிள்ளைதான் முக்ய மென்று தெரிந்தது. அதாவது பண ஆசையை விடப் பிள்ளை ஆசைதான் பெரிசு என்று தெரிந்தது.

"ஈஷணா த்ரயம்"—"மூவாசை" என்பார்கள் வித்தேஷணா, புத்ரேஷணா, தாரேஷணா என்று மூன்று ஈஷணைகள். 'ஈஷணை'யிலிருந்துதான் ஈஷிக்கொள்வது என்ற வார்த்தை வந்திருக்கிறது. அதாவது சமைத்த பதார்த்தம் 'பத்து' (பற்று) என்று பாத்திரத்தில் ஒரே கெட்டியாய் ஒட்டிக் கொள்வதுபோல ஏற்படும் ஆசைதான் ஈஷணை. இரண்டும் பற்றுதான். பற்றிக்கொள்வது ஆசை. வித்தேஷணா என்றால் பணத்தாசை; புத்ரேஷணா—பிள்ளைப் பாசம்; தாரேஷணா—பெண்டாட்டி மோஹம். பிள்ளையின் இளம் பிள்ளை வாதத்துக்காக இந்த மனிதர் ஆஸ்திபாஸ்தியைக் கரைத்ததில் இவருக்கு வித்தேஷணையை விடப் புத்ரேஷணை பலமானதென்று தெரிகிறது.

அப்புறம் அந்தப் பிள்ளைக்கு உடம்பு ஸ்வஸ்தமாயிற்று. ஆனால் பெண்டாட்டி "போய்" விட்டாள். இரண்டாம் கல்யாணம் பண்ணிக்கொண்டார்.

கொஞ்ச காலம் கழித்து என்ன ஆயிற்றென்றால் இளையாள் வார்த்தையைக் கேட்டுக்கொண்டு, ஆதியில் அத்தனை அருமையாகக் காப்பாற்றிய பிள்ளையை அடித்து விரட்டிவிட்டார். மறுபடியும் ஒரு ஆசையை இன்னொன்று முழுங்கிவிட்டது. புத்ரேஷணையைவிட தாரேஷணை பெரிசாகிவிட்டது.

அப்புறம் அவருக்கு வயிற்றிலே என்னமோ உபாதி வந்தது. நிரம்ப சிகித்ஸை கொடுத்து ஸரிப் பண்ணி, "ஆனாலும் இனிமேல் ரொம்பவும் கொஞ்சமாக, ஆனாலும் புஷ்டியுள்ளதாக பாதாம் ஹல்வா, பால்கோவா மாதிரிதான் சாப்பிடவேண்டும்" என்று டாக்டர்கள் சொல்லிவிட்டார்கள். இப்போது என்ன பண்ணினார் என்றால், ஏற்கெனவே ஸொத்தும் ரொம்பக் கரைந்துவிட்டதால், விலை உயர்ந்த

Koviloor Digital Library

இந்த ஆஹாராதிகளை அந்த ப்ரிய பத்னியின் கண்ணில்கூடக் காட்டாமல், தான் மட்டும் மூடிமூடிச் சாப்பிட ஆரம்பித்தார். அதனால் தாரேஷணையையும்விடத் தன்னிடமே உள்ள ஆசைதான் பெரிசு என்று ஆயிற்று.

அப்படித் "தானாக" நினைத்ததிலும் பல அம்சங்கள் ஒன்றைவிட ஒன்று அதிக ஆசைக்குரியதாக உள்ளன என்பது இதற்கு அப்புறம் தெரிந்தது. அந்த மநுஷ்யருக்கு ஹார்ட் அட்டாக் வந்தது. அப்போது fat-பண்டங்களான ஹல்வாவும் கோவாவும் சாப்பிடப்படாது என்று பத்தியம் வைத்துவிட்டார்கள். இவரும் உடனே அவற்றை விட்டுவிட்டார். 'தான்' என்று நினைத்த உடம்பிலேயே ஹ்ருதயத்திடமுள்ள ஆசையால் வயிற்று ஆசை போய்விட்டது!

இப்படி நம் உடம்பிலேயே ஒரு அங்கத்தைவிட இன்னொர் அங்கத்திடம் அதிக ப்ரியம் இருக்கிறது. கார்யங்களைச் செய்யும் கை கால் முதலான அங்கங்களைவிட ரஸாநுபவத்தை, சுவை உணர்ச்சியைத் தரும் நாக்கு, காது, மூக்கு, கண் முதலியவற்றிடம் அதிக ஆசை எனலாம். நான் சொன்ன ஆஸாமிக்கு ('அவர் யார்? அட்ரஸ் சொல்லுங்கள்' என்று கேட்டுவிடக்கூடாது!) கண்ணில் கோளாறு வந்தது. அப்போது அதற்கு மருந்து கொடுத்தால், உடம்பு பூரா ஒரே நரம்பு மண்டலமாதலால் காலில் வலி வந்து நடமாடக் கஷ்டம் ஏற்படும் என்றார்கள். "பரவாயில்லை" என்று சொல்லிக் கண்ணை குணப்படுத்திக்கொண்டு, காலுக்குக் கஷ்டத்தைத் தெரிந்தே வரவழைத்துக் கொண்டார். கர்மேந்த்ரியத்தைவிட ஞானேந்த்ரியம் அதிக ஆசைக்குரியதாயிருக்கிறதென்பதற்கு த்ருஷ்டாந்தம்.

இன்னொரு ஸமயத்தில், அந்தக் கண்ணே மங்கிப் போனாலும் பரவாயில்லை என்று உயிருக்கு ஆபத்து என்னும் போது ஏதோ ஊசிப் போட்டுக் கொண்டார்.

எல்லா இந்த்ரியங்களையும்விட உயிர் பெரிசாயிருக்கிறது. இதனால்தான், ஒரு உணர்ச்சியுமில்லாமல் 'கோமா'

Koviloor Digital Library

வீலேயே எட்டு மாஸம், பத்து மாஸம் தன்னை வைத்திருக்க முடியுமென்றாலும் அதற்குப் பணம் கட்டி வைத்யம் பார்த்துக்கொள்கிறேனென்கிறான்! மயக்க நிலையிலேயும்கூட இருக்கிற அந்த உயிர் இன்னதென்றே இவனுக்குத் தெரியாத நிலையிலேயும் இப்படி உயிராசை என்று ஒன்று இருக்கிறது!

மனம் ஆத்மாவுக்கும் புலனுக்கும் இடைப்பட்டது

உயிருக்கு முன்பாகவும் கர்மேந்த்ரிய ஞானேந்த்ரியங்களுக்குப் பின்பாகவும் வருகிற ஒன்றைச் சொல்லவேண்டும். ஜீவனுக்கு ரொம்பவும் முக்யமான ஒன்று. அதுதான் மனஸ். இந்த்ரியங்களால் பெறும் அநுபோகங்களையெல்லாம் உணர்வது மனஸ்தான். ஆனால் இந்த்ரிய உபகரணங்கள் இல்லாமலேயும் அது தானாக அநுபவங்களைப் பெறும். பல தினுஸாக எண்ணி எண்ணிக் கல்பனைகள் செய்வதிலேயே ஸந்தோஷம், பயம், துக்கம் எல்லாம் படுவது பின்னே சொன்னவகையைச் சேர்ந்ததுதான். ஒரு கல்யாணமென்றால் ஸந்தோஷப்படுவது, ஒரு சாவு என்றால் துக்கப்படுவது, ஆவி சேஷ்டை என்று கேள்விப்பட்டால் பயப்படுவது, பக்கத்து வீட்டுக்காரனுக்கு லாட்டரி விழுந்தால் பொறாமைப்படுவது என்றிப்படிப் பல உணர்ச்சிகள் (மற்ற இந்த்ரியங்களின் மூலமாக இன்றி) மனஸுக்கே டைரக்டாக உண்டாகிறவைதான். உயிரைப் பற்றி ஒரு மநுஷ்யனுக்குத் தெரியாததுபோல மனஸைப்பற்றித் தெரியாமலில்லை. கர்மேந்த்ரிய ஆனந்தத்தைவிட ஞானேந்த்ரிய ஆனந்தத்தைப் பெரிசாக நினைக்கிற மநுஷ்யன், அந்த எல்லா இந்த்ரியங்களின் ஆனந்தத்தையும் விட மனஸின் தனித்த ஆனந்தத்தையே பெரிசாக நினைக்கிறான். குடி, கஞ்சா, drug என்று போகிறானே அது எதற்கு? போதையிலே கண் தெரியாமல், காது கேட்காமல், வாயும் குளறிப்போய்—அதாவது ஞானேந்த்ரியங்கள் எல்லாவற்றையும் ஹானி செய்துகொண்டு; தள்ளாடித் தள்ளாடி நடந்தபடி—அதாவது கர்மேந்த்ரியத்தையும் ஹானி செய்துகொண்டு—ஏதோ ஒரு சாக்கடையில் போய்ப்

Koviloor Digital Library

புரளுகிறுனே; தன்னையே 'படேர்' 'படேர்' என்று அடித்துக் கொள்கிறுனே எதனுல்? எதற்காக? தனக்கு ரொம்பவும் ப்ரியமான சரீரத்தை இத்தனை கஷ்டப்படுத்திக் கொள்வது, அந்த போதை நிலையில் மனஸிலே இவனுக்கு ஏதோ ஒரு ஆனந்தம் தெரிகிறதே, அதற்காகத்தான். கர்மேந்த்ரிய, ஞானேந்த்ரியங்களை மட்டுமின்றி அறிவுக்கே இந்த்ரியமான மூளையையும் அந்த நிலையில் பறிகொடுத்து விட்டு இவன் தேடிப் போகிற எதுவோ ஒன்று மனஸின் ஆனந்தந்தான். கவலைகளை மறக்கணும், மனஸ் ஸந்தோஷமாய் இருக்கணும் என்றுதான் மற்ற இந்த்ரியம், மூளை இவற்றிலுள்ள அதீதப் பற்றையும் விட்டு, ஊரவமானத்தையும் வாங்கிக் கொள்ளத் தயாராக போதை வஸ்துவில் போய் விழுகிறுன்.

ஸரி, பழைய கேள்வியை மறுபடி கேட்கிறேன்: அந்த ஆனந்தம் அப்படியே சாச்வதமாகத் தங்கி நின்றதா? எத்தனை மொந்தை போட்டாலும் எப்போதோ ஒரு போது போதை தெளியத்தான் செய்கிறது; ஆனந்தம் மாயமாகப் போய்விடுகிறது. வயிறுகெட்டு, குடும்பம் கெட்டு, இப்படிக் கெடுத்த பாபமெல்லாம் இவன் மேல் மூட்டையாக விழுகிறது. ஆனந்தத்துக்காக இவன் செய்த காரியமே இந்தப் பாப மூட்டையின் வழியாக இவனுக்கு மஹா கஷ்டத்தையும், துயரத்தையும் கொடுக்கிறது. "பாபம் சரதி பூருஷ:" தான்!

மனத்தின் இன்பமும் நிலைத்ததல்ல

மநுஷ்யனுக்குத் தன்னிலேயே மற்ற அங்கங்களை விட அதிப்ரியமானதாயிருக்கிற இந்த மனஸினுல் பெறும் ஆனந்தங்கூட ஒரு அளவுக்குப் பிறகு அலுத்துதான் போகிறது. படித்த நாவல் மனஸுக்கு ரொம்பப் பிடித்திருந்தது. அதனுல் படுத்த பின்னேயும் தூக்கம் வராமல் நினைவு அதையே சுற்றிச் சுற்றி வருகிறது. இப்படியே வித்வான் பாடின தோடி, இல்லாவிட்டால் யாரோ ஸ்வாமிகள் பண்ணின பூஜை, என்று இவன் ஆழ்ந்து அநுபவித்து

Koviloor Digital Library

மகிழ்ந்த எதுவோ ஒன்று ராவெல்லாமும் மனஸில் சுற்றிச் சுற்றி வருகிறது. மனஸ் ஆனந்தித்ததுதான். இதற்காக ஒரு செலவுமில்லை; கையை காலை ஆட்டி வேலை செய்யும் ச்ரமம் இல்லை; வேறே எந்த விதமான கஷ்டமுமில்லை. ஆனால் அதே நினைவு ராத்ரி பன்னிரண்டு (மணி), ஒன்று என்று நீடித்துக் கொண்டிருந்தால்? அது பிடிக்கவா பிடிக்கிறது? "தூக்கம் வராமல் உபத்ரவப் படுத்துகிறதே!" என்று எரிச்சலாக வருகிறது.

மனஸைத்தான் "நிஜ நாம்" என்று நினைத்துக் கொண்டு அதற்காக மற்ற எல்லாவற்றையும் விட்டுவிடத் தயாராக இருக்கிறோம். ஆனால் இப்படிப்பட்ட மனஸின் ஆனந்தமும் ஒரு ஸ்டேஜில் பிடிக்காமல், வெறுமனே செத்துப் போன மாதிரி, ஒன்றும் தெரியாமல் தூங்குவதில் ஆசை உண்டா கிறது! தூக்கத்திலே உடம்புக்கோ, மனஸுக்கோ, புத்திக்கோ ஏதாவது கொஞ்சமாவது ஆனந்தம் இருக் கிறதோ? இல்லை இப்படியிருந்தும் அதிலே ஆசை. நாலு நாள் தூக்கம் இல்லாவிட்டால், உடம்பு, மனஸ், புத்தி எல்லாமே பலஹீனப்பட்டுப் போகிறது. ராஜபோகமாக ஜீவிக்கிறவன், சந்த்ரிகை தாவள்யமாய்க் கொட்டும் ஸலவைக் கல் நிலா மாடத்தில் பட்டு மெத்தையில் சயனித்துக் கொண்டிருக்கிறான். தென்றல் ஜிலு ஜிலு வென்று வீசுகிறது. ப்ரிய பத்னி பக்கத்திலேயே ஸுநாத மாக வீணாகானம் செய்து கொண்டிருக்கிறாள். அத்தர் வாஸனை மணக்கிறது. ஆனாலும் ஒரு ஸ்டேஜுக்கு அப்புறம் இத்தனை ஸுகமும் தெரிய வேண்டாம் என்று மறந்து தூங்குவதற்கு ஆசைப்படுகிறான்.

மற்ற ஆசைகளும், ஆனந்தங்களும் அநுபவிக்கும் போதே ஒரு ஸ்டேஜுக்கு அப்புறம் அலுத்துப் போகிறாற் போல் தூக்கம் மட்டும் தூங்குகிறவனுக்கு அலுத்துப்போவது என்றில்லை. அவன்தான் உணர்ச்சியே இல்லாமல் தூங்கு கிறானே, எப்படி அலுப்பு தெரியும்? ஆனால் முழித்துக் கொண்டபின் மறுபடி கொட்டாவி வந்தால், 'இது

Koviloor Digital Library

என்ன சனியன்! மறுபடி தூக்கம் வருகிறது? தலையிலே தண்ணியைக் கொட்டிக் கொண்டாவது அதை அடித்து விரட்டுவோம்' என்று நினைக்கிறான். அதாவது தூக்க ஆசை - ஆனந்தமும் அலுத்துத்தான் போகிறது.

அலுத்துப் போனாலும் அற்றுப் போவதில்லை

ஒவ்வொரு ஆசையும் ஒவ்வொரு ஸமயத்தில் அலுத்துப் போகிறது. ஆனாலும் எந்த ஆசையுமே ஒரு வழியாக அற்றுப்போயும் விடாமல் கொஞ்ச நேரத்துக்கு அப்புறம் 'விட்டேனா பார்' என்று மறுபடி படையெடுக்கிறது. ஆசையைப் பூர்த்தி பண்ணும் வஸ்துவின் அநுபோகம் ஜீவனுக்குத் திரும்பத் திரும்ப வேண்டியிருக்கிறது. அதற்கு அவன் அடிமையாகிவிடுகிறான், addict - ஆகிவிடுகிறான். அடிமையாய் விட்டால் அப்புறம் துக்கப்பட வேண்டியது தான்.

'ஷவர்பாத்' தான் தனக்கு 'ஹாபிட்' என்றால் எல்லா இடத்திலும் 'ஷவர்' கிடைக்குமா? ஸங்கீதத்தில் ராஸிக்யம் இருக்கிறவனுக்கு எப்போதும் உசந்த ஸங்கீதமாகக் கிடைக்க முடியுமா? கவிதையிலே ரொம்ப ரஸிப்பு, இலக்கியத்திலே ஈடுபாடு இருக்கிறவனுக்கு உசந்த விஷயமாக எப்போதோ தான் கிடைக்கிறது. காமா சோமா, கன்னா பின்னா ஆகியவைதான் நிறையக் கிடைக்கின்றன. இவனுக்கோ பிடிக்காமலிருக்க முடிவதில்லை. அப்படி ஹாபிட் ஆகிவிட்டது. ஆனால் படிக்க எடுக்கிற புஸ்தகம் எதுவும் த்ருப்தி தரமாட்டேன் என்றது. அதற்காகப் படிக்காமல் இருந்தாலும் dull-ஆக, depressed-ஆக இருக்கிறது. ஆசை உண்டாக்குகிற ஹாபிட் என்கிற பழக்க தோஷத்தினால் இப்படியெல்லாம் துன்பம். ரேஸ் கோர்ஸ், கள்ளுக்கடை, சீட்டாட்டம், காஃபி க்ளப்தான் என்றில்லை; எதிலே ஆசை வைத்தாலும் அது ஒரே இழுப்பாக இழுத்து, அதிலே ரொம்ப ஆனந்தத்தைத் தந்த அநுபோகத்துக்காக மறுபடி மறுபடி தாஹப்பட வைத்து ஒருத்தனை வரட்டி எடுத்து

Koviloor Digital Library

விடுகிறது. இவன் எதிர்பார்ப்பது—உசந்த ஸங்கீதம் பிடித்தவனுக்கு உசந்த ஸங்கீதம், க்ராம்யக் கூச்சல் பிடித்தவனுக்கு அப்படிப்பட்ட கூச்சல், உசந்த லிட்ரேசர் பிடித்தவனுக்கு ரஸமான இலக்கியம், ஆபாஸக் கூத்துப் பிடித்தவனுக்கு அந்த ஆபாஸம், இட்லி ஸாம்பார் ப்ரியனுக்கு அந்த போஜ்யம்—இப்படி ஒவ்வொருத்தனும் எதிர்பார்ப்பது அவன் ஆசைப்படும் தரத்துக்கு எப்போதும் கிடைப்பதில்லை. அப்படிப்பட்ட ஸமயங்களில் ஏமாற்றமும் துக்கமுமே ஏற்படுகிறது. அந்த ஆசை இல்லாதிருந்தால் இந்தத் துக்கமும் இல்லை.

குறிப்பாக ஒன்றிலே ரொம்ப ஆசை வைத்து ஓஹோ என்று ஸந்தோஷிப்பதாலேயே, அது கிடைக்காத போதெல்லாம் ஒரேயடியாகக் குறைப்பட்டுக்கொண்டு துக்கம் கொண்டாடுவதாக ஆகிறது. அதே ரகத்தைச் சேர்ந்த வேறு நல்ல விஷயங்களைக்கூட உள்ளபடி அநுபவித்து ரஸிக்க முடிவதில்லை இவனுக்கு எதுவோ ஒரு ராகம், எதுவோ ஒரு கீர்த்தனம் favourite (அலாதியாய்ப் பிடித்தது) என்றால், ஒரு வித்வான் வேறே எத்தனை ராகம், எத்தனை கீர்த்தனம் தேவகானமாகப் பாடி, ஸபை பூராவும் கொண்டாடினாலும், இவன் மட்டும் தனக்குப் பிடித்ததைப் பாடவில்லையே என்று மூக்கால் அழுகிறான்! இப்படியே இவனுக்கு ஒருத்தர் favourite வித்வானென்றால், வேறே எத்தனை வித்வான்கள் நன்றாகப் பாடினாலும், தனக்குப் பிடித்தவர் பாடவில்லையே என்றே குறைப்படுகிறான்.

ஸ்வாமி, ஸ்வாமியார்கள் விஷயத்தில்கூட இப்படி உண்டு. ஏதோ ஒரு க்ஷேத்ர மூர்த்தியிடந்தான் ஒருத்தனுக்கு ரொம்பப் பிடித்தமென்றால், வேறே எந்தக் கோவிலுக்குப் போனாலும், அங்கே எத்தனை பேர் பக்தி பரவசமாக தர்சனம் பண்ணிக் கொண்டிருந்தாலும், இவன் மட்டும், "அந்த மாதிரி ஆகுமா?" என்றுதான் குறையோடு நினைத்துக் கொள்கிறான். யாரோ ஒரு ஸ்வாமியாரைப் பெரியவர் என்று பிடித்துவிட்டால், அப்புறம் வேறே எந்த மஹானைப் பார்த்

Koviloor Digital Library

தாலும், "உம், அவர் மாதிரி ஆகாது" என்றுதான் முனகிக் கொள்கிறன்!

அப்புறம் நமக்குப் பிடித்த ஸ்வாமிக்கே எத்தனை நன்ருய் அலங்காரம் பண்ணியிருந்தாலும், பிக்ஷாடன அலங்காரம் மாதிரி ஆகுமா என்று குறைப்படுவது; நமக்குப் பிடித்த ஸ்வாமிகளே கீதை உபந்நியாஸம் எவ்வளவு உயர்வாகப் பண்ணினுலும், "விவேக சூடாமணி" பண்ணப்படாதோ என்று குறைப்படுவது—என்றெல்லாமும் ஒன்றில் ஆசை, ஸந்தோஷம் என்பதாலேயே அநேக வேறு ஸந்தோஷங் களைப் பறிகொடுப்பதாக ஆகிறது!

அதற்காக, நமக்குப் பிடித்ததை நிரந்தரமாகப் பிடித்து வைத்துக்கொள்ள முடிகிறதா? இல்லை. அது எப்போதாவது தான் கிடைத்தால் கிடைக்கிறது. அப்படிக் கிடைக்காத போது ஒன்றும் பிடிக்க மாட்டேனென்கிறது. சொல்லத் தெரியாத வேதனையாக இருக்கிறது. சில ஸமயத்தில் கோப மாகக்கூட வருகிறது.

கஞ்சா, இந்த நாளில் 'drug' என்று பேர் தந்திருக்கும் போதை வஸ்துக்களில் ஆசை வைத்து ஹாபிட் ஆக்கிக் கொள்ளும்போது, ஆசைப் பூர்த்தியால் தேஹம் கெட்டு புத்தி வைகல்யம் (தடுமாற்றம்) ஏற்படுகிறதென்ருல், ஹாபிட்டை இவன் விடப்பார்த்தாலோ, முடியாமல், அது அவனைப் படாத பாடுபடுத்தி ப்ராணஹத்திகூடப் பண்ணிக் கொள்ளச் செய்கிறது என்கிருர்கள்.

அதாவது ஆசையால் கெடுதல் என்று தெரிந்தால்கூட அதை விட்டு விடுவது ச்ரமமாயிருக்கிறது.

நாம் பெரிசாக ஆசைப்பட்டுத் தேடிப் போகாமல் அதுவாகவே வந்து கலப்பில்லாத ஆனந்தம் தருவதாகவும் சில வஸ்துக்கள் இருக்கின்றன. கொஞ்சம் விச்ராந்தியா யிருக்கலாமென்று பீச்சில் போய் உட்காருகிருேம்; அல்லது மொட்டைமாடியில் போய் உட்காருகிருேம். நமக்கு அன்று பூர்ணிமை என்று தெரியாது. ஆனுல் தலையைத் தூக்கிப்

Koviloor Digital Library

பார்த்தால் பூர்ண சந்த்ரன் வெண்ணெய்க்கட்டி மாதிரி அழகாகத் தெரிகிறது; குளுகுளு என்று சந்த்ரிகையைக் கொட்டுகிறது. நாம் ஆசைப்படாமலே ஆனந்தம் கிடைக்கிறது. இந்த ஆனந்தத்துக்காக நாம் எந்தக் கஷ்டமும் படவில்லை. இதற்கு அப்புறமும் இந்த அநுபவத்தால் ஒரு கெடுதலும் வரப்போவதில்லை. எல்லாம் ஸரிதான். ஆனாலும் இந்த ஆனந்தமும் எத்தனை நாழி சாச்வதம்? அது உள்ளளவும்கூட அதாவது ராத்ரி பூரா நம்மால் அதைப் பார்த்துக் கொண்டிருக்க முடிகிறதா? உசந்தால் ஒரு மணி பார்க்கிறோம். அப்புறம் அந்த ஆனந்தம் நிற்கிறதா? ஆனாலும் இன்றைக்குப் பார்த்ததில் 'ஹாபிட்' மாதிரிக் கொஞ்சம் ஏற்பட்டுவிட்டது. நாளைக்கும் சந்த்ரனைப் பார்க்கிறோம். ஆனால் அது இன்று மாதிரி இல்லை. கொஞ்சம் மூளியாகத்தானிருக்கிறது. இன்று பூர்ணமாகப் பார்த்து விட்டதாலேயே நாளைக்கு மூளியாகப் பார்க்கும்போது என்னவோபோல் இருக்கிறது. 'எப்போ பூர்ணிமை வரும்? எப்போ வரும்?' என்று இன்னும் ஒரு மாஸத்துக்கு அப்புறம் அதேநாள் வருகிற வரைக்கும் ஒரு ஆசை அடித்துக் கொண்டேயிருக்கிறது. அதாவது முதலில் பூர்ணிமைக்காக ஆசைப்படாவிட்டாலும், அதைப் பார்த்து ஆனந்தப்பட்ட பின் ஆனந்தமே ஆசையை உண்டாக்கிவிடுகிறது. இப்படி எதிர்பாராமல் தானாகவே ரொம்ப ஆனந்தமாக வருகிறவையும், பிற்பாடு அது வராதா, வராதா என்று எதிர்பார்க்க வைக்கிற ஆசையை ஏற்படுத்திவிடுகிறது. எந்த ஆனந்தமானாலும் அது நிரந்தரமாய் இருப்பதில்லை யாதலால், அந்த ஆனந்தத்துக்குக் காரணமான வஸ்து ஏதோ ஒரு ஸமயத்தில் மட்டுமே நமக்குக் கிட்டுவதாய் இருந்துகொண்டு மற்ற ஸமயங்களிலெல்லாம் அதற்காக நம்மை தவிக்கப் பண்ணிக் கொண்டிருக்கிறது.

நல்லதில்லாததுகளைப் போலவே நல்லதின் விஷயத்திலும் இப்படியே இருக்கிறது. ஈச்வர தர்சனம் க்ஷணகாலம் கிடைத்து அவன் மறைந்துபோய் விட்டானானால் அப்புறம்

Koviloor Digital Library

அந்த தர்சன ஆசை பக்தனைப் பைத்தியமாக, வெறியாக் ஆக்கிவிடுகிறது. அதை ஒரு உத்தமமான விரஹ தாபமாகச் சொல்கிறார்கள். அந்த பாவத்திலேதான் மாணிக்கவாசகர், ஸ்ரீ க்ருஷ்ண சைதன்யர் எல்லாம் கதறு கதறு என்று கதறி மூர்ச்சைபோட்டு விழுந்திருக்கிறார்கள். சென்ற நூற்றாண்டில் இப்படியே (ராமக்ருஷ்ண) பரமஹம்ஸரைவச் சொல்கிறார்கள்.

அத்வைதம் தவிர அனைத்திலும் துக்கம்

ஸ்ருஷ்டியிலே ஈச்வரன் சாச்வத ஆனந்தம் தருவதாக எதொன்றையுமே படைக்கவில்லை. அவனே தர்சனம் தந்தால்கூட அது ஸர்வ கால ஆனந்தமாக இருப்பதில்லை. நாமதேவரைப் போல, ஸுந்தரமூர்த்தி ஸ்வாமிகளைப் போல தினந்தினம் அவனைப் பார்த்துக் கொட்டமடித்தவர்களைகூட அவ்வப்போது விட்டுப் பிரிந்து அழ அழவுந்தான் வைத்திருக்கிறான். க்ருஷ்ணனுக்கு ராதை உயிர் என்கிறார்கள். அவளையும் விரஹத்தில் அப்படியே தேஹமே சிதறிப் போய் விடுகிறாற்போலத் துடிக்கத்தான் விட்டிருக்கிறான். ஆசைப் பட்டால் அழுதுதான் ஆகணும் என்றே இப்படியெல்லாம் வைத்திருக்கிறான். அவனை வெளியிலே வேறாக வைத்து ஆனந்தப்படுகிறவரை அதுவும் சாச்வத ஸுகமில்லை, அத்வைதம் தவிர எல்லாம் துக்கம்தான் என்று காட்டவே இப்படிப் பண்ணுகிறான் போலிருக்கிறது.

இலக்கியம், ஸங்கீதம், சிற்பம் முதலானதுகளில் மனஸைக் கொடுத்தவர்கள் (அதாவது நிரம்ப ஆசை வைத்தவர்கள்) உசந்ததாக அவற்றில் ஒன்றைப் பார்த்து விட்டால் அதுமாதிரி பார்ப்போமோ பார்ப்போமோ என்று ஸதாவும் ஒரு தவிப்பாகத் தேடிக்கொண்டே இருப்பார்கள். தவிப்பது, தேடித்தேடி அலைகிறது என்றால் அது அசாந்தி தான், துக்கம்தான்.

கெட்ட அநுபோகங்களும் இதே மாதிரி ஒருதரம் ருசி கண்டுவிட்டவர்களுக்கு ஆசை வெறியைத் தூண்டிவிடு

Koviloor Digital Library

கிறது. அப்புறம் அவர்களே கொஞ்சம் அறிவு தெளிந்த நிலையில், 'ஐயோ, இத்தனை கீழ்த்தரமாக இருந்து விட்டோமே' என்று தனக்குள்ளேயே குன்றிப் போய் மிகவும் துக்கப்படும்படி இருக்கிறது.

பிறரை வருத்தியும்

இதிலே இன்னொரு பெரிய தப்பு என்ன என்றால் நாம் எதுவோ ஒன்றில் ஆசைப்பட்டுவிட்டால், அதன் அநுபோகத்தில் நமக்குக் கிடைக்கும் ஸ்வய த்ருப்திக்காகப் பிறத்தியார் என்ன கஷ்டப்பட்டாலும் பரவாயில்லை என்ற எண்ணம் வந்துவிடுகிறது. நமக்கு வாய்க்கு ருசியாக ஒன்று வேண்டுமென்பதற்காக வயஸான தாயார் கல்லுரலைக் கட்டிக் கொண்டு மன்றாடினாலும் பரவாயில்லை என்று தோன்றுகிறது. இப்படி எத்தனையோ கஷ்டங்களுக்கு, கொடுமைகளுக்குப் பிறரை ஆட்படுத்தி நம் ஆசையைப் பூர்த்தி செய்து கொள்ள நினைக்கிறோம். இதெல்லாம் நம் பாபக்கணக்கில் ஏறி வருங்காலத்தில் நம்மை வட்டிபோட்டுத் தீட்டிவிடும்.

இந்த விஷயத்தை ஆலோசித்துப் பார்க்கும்போது பிறர் கஷ்டப்பட்டாவது நாம் த்ருப்திப்பட நினைக்கிறோம் என்பது நமக்கே தெரியாத விதத்தில், ரொம்பவும் நல்ல உத்தேசங்களில்கூட எத்தனை சூதாக (இதைத்தான் மாயை என்பது) வேலை செய்கிறது என்று தெரிகிறது. பொது ஜன ஸேவை, பரோபகாரம் என்று செய்கிறோமே, தாத்பர்யம் என்ன? நம்மைக் கஷ்டப்படுத்திக் கொண்டாவது பிறருக்கு மகிழ்ச்சி உண்டாக்கவேண்டும் என்பதுதான். ஆனால் இந்த ஸேவையாலும் பிறத்தியாருக்கு த்ருப்தியைத் தருவதை விட நமக்கே த்ருப்தி உண்டாக்கிக் கொள்கிறதுதான் உள்ளூர, நம்மை அறியாமலே, நமக்கு முக்யமாய்விடுகிறது. எப்போது பார்த்தாலும் நாம் விரும்புவது போன்ற பரோபகாரப் பணி நமக்குக் கிடைக்கும் என்று சொல்ல முடியாதல்லவா? அப்படி சரீரத்தாலோ, த்ரவ்யத்தாலோ உபகாரம் பண்ண முடியாமலிருக்கிற நாளில் தொண்டில்

Koviloor Digital Library

ரொம்பவும் ஈடுபட்டவர்களுக்கு, 'ஐயோ, இன்றைக்கு தண்டத்துக்கு ஒரு தொண்டும் இல்லாமலிருக்கிறோமே' என்று வருத்தமாய் இருக்கிறது. அந்த மாதிரி ஸமயத்தில் எவனோ ஒருத்தன், 'தரித்ரத்தில் திண்டாடறேன்; அஞ்சு, பத்து உதவி பண்ணுங்கோ' என்று வந்தால் பரோபகாரிக்கு ஸந்தோஷமாயிருக்கிறது; 'யாரோ கீழே விழுந்துவிட்டார்கள்; first-aid (முதலுதவி) தரவேண்டும், ஆஸ்பத்திரிக்குத் தூக்கிக்கொண்டு போகவேண்டும்' என்று ஸேவைக்கு டிமான்ட் வந்தால் உடனே ஸந்தோஷம் உண்டாகிறது.

அதாவது ஒரு பரோபகாரி விண்டு பார்த்துக் கொண்டால், அவனுடைய உள்மனஸுக்கே அது ஸம்மதமாகத்தான் இருக்காது என்றாலும்கூட, அவனுக்கு ஸேவை செய்வதில் உள்ள ஆசையினால், அவனையும் அறியாமலே அந்த ஆசைப் பூர்த்தியை முன்னிட்டு வேறு எவனோ ஒருத்தன் தரித்திரத்திலோ ஆபத்திலோ கஷ்டப்பட்டாக வேண்டியிருக்கிறது. அதாவது தான் இன்னொருத்தன் கஷ்டத்தைத் தீர்க்கவேண்டும் என்ற ஆசைப் பூர்த்தியை முன்னிட்டு எவனாவது கஷ்டப்படவேண்டும் என்று எதிர்பார்க்கிறான்! "எதிர்பார்க்கிறான்" என்றால் மனஸ் அறிந்து இல்லை. "எனக்குத் தொண்டு வாய்ப்பு கிடைப்பதற்காக யாராவது கஷ்டப்படவேண்டும்" என்று மனஸறிந்து ஒரு உபகாரி நினைக்கமாட்டான். ஆனாலும் மனஸுக்குள்ளே சூதாக இப்படியும் ஒரு எண்ணம் பதுங்கிக்கொண்டு இருக்கிறாற் போலத்தான் இருக்கிறது.

வெள்ள நிவாரணம் என்று பெரிதாக ஒரு பணி செய்து முடித்துத் திரும்பும்போது, "நாளைக்கு இப்படி ஓடி ஆடி நூறு ஜனங்களுக்குச் செய்வதற்கில்லையே" என்று ஒரு தாபம் பிறந்தால், அப்போது தனக்கு ஸேவா பாக்யம், அதிலே கிடைக்கும் ஆசைப்பூர்த்தி, ஆத்ம த்ருப்தி போய்விட்டதே என்ற அபிப்ராயம் துளியாவது இருக்கத்தான் செய்கிறது. ஸேவை மாதிரி உத்தம விஷயமாக இல்லாமல் கெடுதலானவற்றில் ஆசை உள்ளபோது இந்த அபிப்ராயமே

Koviloor Digital Library

நன்ருக பலமாக வெளிப்பட்டு, பிறரை மனஸறிந்து கஷ்டப் படுத்தியாவது ஸ்வய ஆசையைப் பூர்த்திப்பண்ணிக் கொள்ளவைக்கிறது.

எதுவோ ஒன்றில் நாம் ஆசை வைத்துவிட்டால் அது நம் கையை விட்டுப் போகிறபோது, நமக்கு அந்த ஒன்றில் ஏற்படும் மனத்ருப்தியையே நினைத்து பிறத்தியார் கஷ்டப் பட்டாவது நமக்கு அது மறுபடி கிட்டவைக்க வேண்டு மென்று நினைத்துவிடுகிருேம்.

இப்படி அநேகத் தப்பு எண்ணங்களை ஆசை உண்டாக்கு கிறது.

இதுவரை ஆசைப்படுகிறவர் ஆளாகிற கஷ்டம், துக்கங் களையே பற்றி நிறையச் சொன்னேனே, ஆசைப்படுகிறவர் களால் மற்றவர்களுக்கு ஏற்படும் கஷ்ட துக்கங்களைப் பார்க்கும்போது இது ரொம்ப அல்பமாகி விடுகிறது. ஆசை யினுல் எத்தனை கொலைகள்! ஸாம்ராஜ்யத்தை விஸ்தரிக்க வேண்டும் என்று ராஜாக்கள், ராஜா மாதிரியான ஹிட்லர், முஸோலினி போன்றவர்கள் ஆசைப்பட்டால் எத்தனை லக்ஷம் உயிர்கள் சாகவேண்டியிருக்கிறது? நடக்கிற அத்தனை கொலையும், கொள்ளையும், ஸ்த்ரீகளை பலாத்காரப்படுத்து வதும், மற்ற மோசடிகளும் ஆசையினுல்தானே?

தன்னுடைய ஆசையினுல் மற்றவருக்கு இழைக்கும் இந்தத் துன்பங்கள் ஒருவனைச் சும்மா விடுவதில்லை. அவை எல்லாம் அவனுடைய பாபக் கணக்கில் ஏறி ஒட்டிக்கு இரட்டியாக அவனை நரக லோகத்திலும் மறு ஜன்மாக்களி லும் பழி வாங்கத்தான் செய்யும்.

உயர் பண்புகளுக்கு ஊறு செய்யும் ஆசை

இப்படிப் பாப ரூபமெடுத்துப் பழி வாங்குவதில் முக்ய மானது பொய். ஆசைதான் இப்படிப்பல பொய்களை அடுக்க வைக்கிறது. பொய்க்கும் வித்து ஆசைதான்.

மநு முதலான மஹா பெரியவர்கள் ஸகல மக்களுக்கும் அஹிம்ஸை, ஸத்யம், திருடாமை, தூய்மை, புலனடக்கம்

Koviloor Digital Library

என்ற ஐந்து உயர்ந்த பண்புகள் இருக்கவேண்டுமென்று சொல்லியிருக்கிறார்கள். இந்த ஐந்தையும் நாசம் பண்ணுவதாக ஆசை என்பது இருக்கிறது.

ஹிம்ஸை ஏன் செய்கிறோம்? மாம்ஸத்தில் உள்ள ஆசையினால். இன்னொருத்தனிடமுள்ள ஒரு பொருளில் நமக்கு ஏற்படும் ஆசையால் அவனை ஹிம்ஸித்தாவது அதைப் பெறப் பார்க்கிறோம்.

ஸத்யத்தை ஏன் விடுகிறோம்? ஆசை வைத்த எதையோ ஸத்யமான முறையில் போய் அடைய முடியாது என்பதால் தான் இப்படிச் செய்கிறோம். நம்மைக் காப்பாற்றிக்கொள்ள வேண்டும்; நம்முடைய ஸொத்து, நம்முடைய அந்தஸ்து, மானம் போன்ற எதுவோ ஒன்றைக் காப்பாற்றிக்கொள்ள வேண்டும் என்ற ஆசைக்காகத்தான் பேசுகிற பொய்யெல்லாம்; பண்ணுகிற மோசடியெல்லாம்.

பொருளிடத்திலுள்ள ஆசையால்தான் திருடுவது என்பதை விளக்கவேண்டிய அவச்யமில்லை.

ஆசார சுத்தியைவிட்டு விடுவது, 'மனஸ் போனபடி ஸௌகர்யங்களை அநுபவிக்கவேண்டும்' என்ற ஆசையினால் தான்.

புலனடக்கம் போவது ஆசையால்தான் என்பதைச் சொல்லவே வேண்டாம்.

அதாவது மநு சொன்ன ஐந்து பெரிய தர்மங்களையும் மீறப் பண்ணுவது ஆசைதான்.

அறுபகைக்கு மூலம், ஐந்து தர்மங்களையும் நிர்மூலம் செய்வதற்கும் காரணம்—என்றிப்படி ஸகல தோஷங்களுக்கும் பிறப்பிடமாக இருப்பது ஆசைதான்.

அகண்ட ஆனந்தம் மனத்துக்கு இல்லை

ஆக, ஆரம்பித்த இடத்துக்கே திரும்ப வருகிறோம்—நமக்குள்ளே தினந்தினமும் நடக்கிற தேவாஸுர யுத்தத்

Koviloor Digital Library

திலே நல்ல வ்ருத்திகளான தேவசக்திகளை ஹதாஹதம் பண்ணும் கெட்ட வ்ருத்தி என்னும் அஸுர சக்திகளுக்கெல்லாம் உற்பத்தி ஸ்தானமாக இருப்பது ஆசைதான்.

உயர்ந்த ஸந்தோஷத்தைத் தருவதாக நமக்குத் தோன்றுகிற நல்ல ஆசைகள்கூட உண்மையில் துன்பம் தருபவைதான். ஏனென்றால் எப்பேர்ப்பட்ட ஆசையாயிருந்தாலும் அது ஒரு வித அரிப்புத்தான். மனஸில் அத்ருப்தியிருந்து அதனால் ஏற்படுகிற அரிப்புத்தான் ஆசை, ஆசை என்பது. மனஸுக்கு எடுக்கிற தாஹம்தான் ஆசை. ஆசையிருக்கிறதென்றால் மனஸ் என்று ஒன்று இருக்கிறது என்றே அர்த்தம். மனஸ் என்பது இருந்துவிட்டால் உபத்ரவம்தான். மனஸ் ஆத்மாவுக்கு த்விதீயமான வஸ்து; அதனால் பயஹேதுவானது என்று பார்த்தோமே! இந்த மனஸ் என்கிற வஸ்துதான் அகண்டானந்தமான பரமாத்மா சிறுத்துக் குறுகிப்போய் ஜீவாத்மா என்று வேஷம் போட்டுக்கொள்ளும்போது இப்படி அதைச் சின்னதாகக் குறுக்க வைத்துக் கட்டுவது. தனி ஜீவன்கள், individual-கள் என்று தங்களை அவர்கள் தெரிந்துகொள்வதே தனித்தனி மனஸ்களைக் கொண்டுதான். ஆனதால் மனஸ் என்பது பரமாத்மாவுக்கு வேறேயாகத் தான் எப்போதும் இருக்கமுடியும். ரொம்ப உயர்ந்த நிலையில் கூட அது பரமாத்மாவைத் தொட்டுக் கவிந்து கொண்டோ, அல்லது பரமாத்மாவின் சக்தி, கருணை முதலானவற்றை ஓரளவுக்குத் தனக்குள்ளும் நிரம்பிக்கொண்டோதான் இருக்க முடியுமே தவிர, அப்படியே அவனுடைய அகண்டாகார ஸ்வரூபத்தோடு ஒன்றாகி, அவனுடைய அகண்டாநந்தத்தைத் தானும் அநுபவிக்க முடியாது. இந்த மனஸைப் பூராவும் அவனிடமே கரைத்து இல்லையென்றாக்கிக் கொண்டால்தான் சாச்வதமான அகண்ட ஆனந்தம் கிடைக்கும்.

வைகுண்டத்திலே, கைலாஸத்திலே பேரானந்தம் அநுபவிப்பதாகச் சொல்வதும்கூட மனஸை வைத்துக் கொண்டு பெறும் அநுபவம்தான். த்வைத விசிஷ்டாத்வைத ஸித்தாந்திகள் இது துக்கக் கலப்பேயில்லாத சாச்வத

Koviloor Digital Library

ஆனந்தம் என்று சொல்கிருர்கள். ஆனுலும்கூட அங்கே அவர்கள் முக்தர்களாகச் சொல்பவர்கள் பரமாத்மாவுக்கு வேறேயாக இருந்துகொண்டு, வேறுபட்ட மனஸால்தான் அவரை அநுபவிக்கிருர்களாதலால், நிறைந்த நிறைவு நிலையிலேயே நிரந்தரமாக இல்லாமல் குறைவுகளுக்கும், துக்கங்களுக்கும் எப்போதாவது ஒரு ஸமயத்திலாவாது ஆளாகத்தான் செய்கிருர்களென்றே புராணங்களிலிருந்து தெரிகிறது. ஸாக்ஷாத் அம்பாள், மஹாலக்ஷ்மியிலிருந்து நாரதர், ஸநகாதிகள், ப்ருங்கி மஹர்ஷி மாதிரியான மஹா மஹா பெரியவர்களும்கூடத் தனியான ஒரு மனஸோடு பரமாத்மாவுக்கு வேறே மாதிரி பாவத்தில் இருக்கும்போது துக்கத்துக்கும் கோபத்துக்கும் ஆளாவது, சாபத்துக்கு ஆளாவது, பரமாத்மாவைப் பிரிந்து ரொம்பவும் துக்கிப்பது, பூலோகத்தில் பிறந்து பச்சாதாபப்பட்டு மிகவும் உக்ரமாகத் தபஸ் செய்து தங்களையே வருத்திக்கொள்வது என்றெல்லாம் அவஸ்தைப்படத்தான் வேண்டியிருக்கிறது என்று புராணக் கதைகளிலிருந்து தெரிகிறது. அதனுலேதான், மற்றப் பற்றுக்கள் (ஆசைகள்) விடுவதற்காகப் பரமாத்மா ஒருவனிடம் மாத்திரம் பற்று (ஆசை) வையுங்கள் என்று,

பற்றுக பற்றற்ருன் பற்றினை—அப்பற்றைப்
பற்றுக பற்று விடற்கு

என்று திருவள்ளுவர் சொன்னதற்கு மேலேயும் போய்:

ஆசை அறுமின்கள் ஆசை அறுமின்கள்
ஈசனேடாயினும் ஆசை அறுமின்கள்

என்று திருமூலர் சொன்னுர்.

யுத்தம் தீர ஆசையை அழிக்க!

நமக்கு ஸந்தோஷம் தருவதாகத் தோன்றினுலும் உண்மையில் கஷ்டம் விளைவிப்பதுதான் என்பதாகச் சில ஆசைகளைப்பற்றி மாத்திரம் நமக்கே தெரிகிறது. உதாரண

Koviloor Digital Library

மாக, அரிக்கிறபோது சொறிந்துகொண்டால் ஹிதமாயிருக்கிறதென்று அப்படிப் பண்ணிஞல் அப்புறம் புண் ஜாஸ்தியாவது நமக்கு நன்ருகத் தெரிகிறது. அதனுல் சொறிந்து கொள்ளாமல் கட்டுப்படுத்திக் கொள்ளப் பார்க்கிருேம். எல்லா ஆசையுமே அரிப்புத்தான். ஆசை என்பதே அரிப்புத்தான். அதன் பூர்த்திக்காகப் பண்ணுவதெல்லாமே சொறிந்து கொடுத்துப் புண்ணை 'ஸெப்டிக்' ஆக்குவதுதான்.

இதனுல் என்ன ஏற்படுகிறதென்ருல் ஆசையை அழித்தால்தான் உள்ளே நடக்கும் தேவாஸுர யுத்தம் தீரும்; நமக்கு சாந்தி கிடைக்கும்.

எப்படி அழிப்பது?

நூறு, ஆயிரம், லக்ஷமாக இத்தனை ஆசைகள் இருக்கின்றனவே! ஒன்றை அடக்கிஞல் இன்னென்று தலைதூக்குகிறதே! அந்த இன்னென்றை அடக்கப்போஞல் முதல் ஆசையே 'நான் செத்தேனு பார்!' என்று 'ஸொரூபம்' காட்டுகிறதே!

மரணத்தால் ஆசை அழியுமா?

"ஸரி, இந்த உடம்பு இருப்பதால்தானே ஆசை ஏற்படுகிறது? ஆசையால் துன்பப்படுவது - துன்பப்படுத்துவது, ஆசையால் பயப்படுவது - பயமுறுத்துவது, ஆசையால் அவமானத்துக்கு ஆளாவது - அவமானத்துக்கு ஆளாக்குவது எல்லாம் உடம்பு உள்ளவரைதானே? செத்துப்போனவர்களுக்கு துன்பம் உண்டா, பயம் உண்டா, அவமானமுண்டா?" என்று நினைத்து மரணத்துக்கு வேண்டிக்கொள்ளலாமா? குளம் குட்டையில் விழலாமா? சாண் கயிற்றைத் தேடலாமா?

ஊஹூம். இது ஸொல்யூஷன் (தீர்வு) இல்லை.

செத்துப் போனவர்களுக்கு ஆசையும் அதனுல் ஏற்படும் பயம், அழுகை, அவமானம் முதலானதும் இல்லை என்று

Koviloor Digital Library

முடிவு பண்ணினது தப்பு. செத்துப்போனவர்கள் ஒரேயடியாகப் போய்விடவில்லை. உயிரோடிருந்தபோது பலவிதமான ஆசைகளுக்கு உட்பட்டு அவர்கள் பண்ணிய பாபங்களை உடம்பு போன பின்னும் நரகாதி லோகங்களில் அநுபவித்துவிட்டு பாக்கியை அநுபவிக்க இந்த லோகத்துக்கே அவர்கள் வந்துகொண்டுதானிருக்கிறார்கள்.

அதாவது அந்த உடம்புதான் போச்சு. வேறே உடம்பு வந்துவிட்டது. அது மநுஷ உடம்பாகவே இருந்து மறுபடி பழையபடியே ஆசைகள் பட்டு அவஸ்தைகளைத் தேடிக் கொள்ளலாம். அல்லது ஒரு மாட்டின் உடம்பாகி ஏர்க் காலில் அவதிப்படலாம். குதிரையின் உடம்பாகி வண்டி பாரத்தை இழுத்துக்கொண்டு ஓடலாம். ஆக, உடம்பு, அதனால் வருகிற துன்பம் இரண்டையும் சாவினால் போக்கிக் கொண்டுவிட முடியாது.

அதிலும் தற்கொலையால் சாவு தேடிக்கொள்வது என்னும்போது, ப்ராண ஹத்தி என்று இதுவே பெரிய பாபமாகச் சேர்ந்து, இதற்காக வேறு மஹா கஷ்டமான தண்டனைகள் அநுபவிக்க வேண்டிவரும். தற்காலத்தில் சிலர் பெரிய தப்புக் கார்யம் பண்ணிப், "பிடிபட்டு விடுவோம்" என்கிற ஸ்திதி உண்டானாலோ, அல்லது ஸஹிக்க முடியாத பெரிய துக்கம் எதுவாவது ஏற்பட்டாலோ ரிவால்வரை எடுத்துத் தங்களையே சுட்டுக் கொண்டு விடுகிறார்கள். ஆனால் ஸம்ஸாரத்தால் உண்டாகும் தீமைகளையும் துக்கங்களையும் போக்கிக்கொள்ள இது ஒரு வழியாகுமா என்றால், ஆகாது. ஸ்தூல சரீரத்தை அழித்துக் கொண்டாலும், அப்புறம் ஸூக்ஷ்மமாக ஏதோ ஒரு மாதிரியான மற்றொரு சரீரம் இருந்துகொண்டிருக்கும். நாம் பண்ணின கார்யம், எண்ணின எண்ணம் எல்லாவற்றுக்கும் காரணமாகவும், அவற்றை அநுபவித்த ஒன்றாகவும், சாவுவரை அநுபவித்தும் தீர்க்காமல் இன்னம் பாக்கி நிற்கும் அநுபவத்தை அடைய வேண்டியதாகவும், எண்ணின எண்ணங்களுடைய போக்குகள் மறுபடியும் அப்படியே எண்ண வைக்கிற விதத்தில் வேர்

Koviloor Digital Library

கொண்டு ஆஸ்பதமாகப் பற்றிக் கொண்டிருப்பதாகவும் 'அந்தஃகரணம்' என்பதன் ரூபமாக அந்த மற்றொரு சரீரம் இருந்துகொண்டிருக்கும். தற்கொலையால் ஸ்தூல சரீரத்தைப் போக்கிக்கொண்ட பிற்பாடும் அந்த சரீரத்தோடு சுற்றிக் கொண்டு இருக்கவேண்டும்.

நாமாக ஸூயிஸைட் பண்ணிப் போக்கிக் கொள்ளாமல் தானாக உயிர் போனால், ஜீவனின் ஸூக்ஷ்ம சரீரம் நரகம் அல்லது ஸ்வர்க்கத்தில் கர்மபலனை ஓரளவுக்கு அநுபவித்து விட்டு, பாக்கியை அநுபவிக்க பூலோகத்திலேயே 'எண்பத்து நாலுலக்ஷம் யோனிபேதம்' என்னும் உயிரினங்களில் எதுவோ ஒன்றாகப் பிறக்கிறது. ஸூயிஸைட் பண்ணிக் கொண்டவனின் ஆவியோ நரகத்திலுள்ளதைவிடக் கஷ்டமான அவஸ்தைகளை ஆத்மஹத்திப் பாபத்துக்காக இந்த லோகத்திலேயே அலையாய் அலைந்து அநுபவிக்கவேண்டும். நரகம் அல்லது ஸ்வர்க்கம், அப்புறம் மறுபடி பூமி என்பதற்கு முந்தி, "பேயாய் அலைவது" என்றே சொல்கிறோமே, அப்படி ஒரே தவிப்புடன் அலையவேண்டும். அந்த ரூபத்தில் பசி தாஹம் முதலானவற்றைப் பூர்த்தி பண்ணிக்கொள்ள முடியாமல் எவராவது ஒருத்தருடைய உடம்பைப் பிடித்து ஆட்டி வைத்துக்கொண்டு, இந்தப் பாபத்தையும் சேர்த்துக் கொள்ளவேண்டும். வேப்பிலையால் வீறு வீறு என்று அடி வாங்கவேண்டும். இதோடு நிற்காது. மறுபடி ஜன்மா வரும். எந்தத் தப்பு வெளிவந்துவிடுமோ என்று பயந்து தற்கொலை செய்துகொண்டானோ, அல்லது எந்தத் தோல்வியைத் தாங்கமுடியாமல் சுட்டுக்கொண்டானோ, அல்லது எந்த வ்யாதிக் கஷ்டம் தாங்காமல் விஷத்தைச் சாப்பிட்டானோ அந்தத் தப்பு மாதிரியே ஒன்று அடுத்த ஜன்மாவில் அம்பலமாகி மானம் போகத்தான் போகும்; அல்லது அதே போன்ற தோல்வி அப்போது ஏற்படத்தான் செய்யும்; அதே மாதிரி வ்யாதி உபாதைப்படுத்தத்தான் செய்யும். அதனால் தற்கொலை மூலம் எதிலிருந்து ஒருத்தன் தப்புவதற்கு நினைக்கிறானோ அதனிடமிருந்து தப்புவதென்பது இல்லவே இல்லை.

Koviloor Digital Library

இதோடுகூடக் குட்டி போட்டுக்கொண்டு தற்கொலைக்குத் தண்டனையாக ஆவி ரூபத்தில் அநேக அவஸ்தைகள்!

இதனாலெல்லாந்தான் ஆத்மஹத்தி பெரிய பாபமென்று தர்ம சாஸ்த்ரங்கள் முடிவு செய்திருக்கின்றன. இக்காலச் சட்டப்படியும்கூட அது குற்றம் என்று வைத்திருக்கிறார்கள்.

படவேண்டிய கஷ்டங்களோடுகூட வேப்பிலை அடியும் வாங்குவதுதான் மிச்சம்.

பிறவித் தண்டனை

ஒரு விதத்தில் பார்த்தால், இயற்கை மரணத்துக்கு அப்புறம் புனர்ஜன்மா ஏற்பட்டு மறு உடம்பு வருவதுங்கூட அடி வாங்குவதற்குத்தான். ஸாத்விக தண்டனை அதிகமாகி விட்ட இக்காலச் சட்டமுறை அமலுக்கு வருவதற்கு முன்பெல்லாம் குற்றவாளிகளுக்கு இத்தனை கசையடி என்று தண்டனை விதிப்பார்கள். கட்டிவைத்து அடிப்பார்கள். பெரிய குற்றங்களுக்குத் தரும் அத்தனை கசையடியையும் குற்றவாளியால் ஒரே ஸமயத்திலே தாங்கிக்கொள்ள முடியாது. நடுவிலே மூர்ச்சை போட்டுவிடும். அல்லது உயிரே போய்விடும். 'இப்படி ஆவதற்கு விடக்கூடாது. ஒவ்வொரு கசையடியையும் அவன் அநுபவித்துக் கஷ்டப்பட வேண்டும். அப்போதுதான் தண்டனை பெற்றதாகும்' என்ற அபிப்ராயம் அப்போது நியாய பரிபாலனமாக நினைக்கப்பட்டது. அதனால் என்ன பண்ணுவார்களென்றால், பக்கத்தில் ஒரு வைத்யரை வைத்துக்கொண்டே அடிக்க ஆரம்பிப்பார்கள். அவர் குற்றவாளியை அவ்வப்போது பரீக்ஷித்துக்கொண்டேயிருப்பார். ஏதோ ஒரு கட்டத்தில் அதற்குமேல் ஸ்மரணையோடு வலியை அநுபவிக்க முடியாதென்றோ, ப்ராணன் போய்விடுமென்றோ அவருக்குத் தெரிந்தால், உடனே, 'இதோடு இன்றைக்குப் போதும். நாளைக்கு, அப்புறமும் மீந்தால் அதன்பின் வரும் நாட்களில், பாக்கி அடி கொடுக்கலாம்' என்று சொல்வார். அப்படியே நிறுத்திவிடுவார்கள். அப்புறம் குற்றவாளிக்கு ஆஹாரம்

Koviloor Digital Library

போடுவார்கள். நல்ல ஆஹாரமாகவே போடுவார்கள். அப்போதுதானே அடிவாங்க சக்தி இருக்கும்? அப்புறம் நன்ருகத் தூங்கவும் பண்ணுவார்கள். இந்த உபசாரமெல் லாம் மறுபடி தண்டனே தருவதற்காகவேதான்! மறுநாள் மறுபடி 'பூசை' ஆரம்பித்துவிடுவார்கள்.

அந்த மாதிரிதான் நாம் பண்ணின பாபங்களே அநுபவிக்க உடம்பைக் கொடுத்து, கஷ்டங்கள் என்கிற கசையடிகளே பகவான் கொடுக்கிருர். இந்த உடம்பு அதற்கு மேலே தாங்காது என்று அவர் நினேக்கிற கட்டத்தில் சாவை அனுப்பிவைக்கிருர். அப்போதைக்குத் தூங்கப் பண்ணி விடுகிருர். கொஞ்ச நாழி அவரிடம் லயிப்பு! அப் புறம் அதே உயிரைப் பிறப்பிக்கிருர். குழந்தையாய்ப் பிறந்து பால்யதசை முடிகிறவரை அதற்குக் கஷ்டம் அதிகம் தெரிவதில்லே. வ்யாதி வக்கை அதைப்பிடுங்கி எடுத் தாலும், அப்பா அம்மா அடித்தாலும் அப்போதைக்கு ஏதோ 'வ்ராச்சு' 'வ்ராச்சு' என்று கத்தித் தீர்க்கிறதே தவிர, துக்கச் சுமை என்று ஒன்றைத் தோளிலே போட்டுக் கொண்டு நீடித்துத் துன்பப்பட்டுக் கொண்டிருப்பதில்லே.

வயஸு வந்தபின் நாம் படுகிற கஷ்டத்தில் கால்வாசி தான் நாம் நடைமுறையில் ப்ரத்யக்ஷமாக அநுபவிப்பதாக இருக்கும்; பாக்கி முக்கால்வாசி அந்தக் கஷ்டத்தையே பற்றி நினேத்து நாம் தோளில் தோய்த்துப் போட்டுக் கொள்வதுதான். துக்கம் கால்வாசி என்ருல் துக்கம் கொண்டாடுவது முக்கால்வாசி! ஏற்பட்டுவிட்ட துக்கத்தை நினேத்துப் பார்ப்பது, இது போதாதென்று இதிலிருந்து இன்னும் என்னென்ன உண்டாகுமோ என்று இனிமேல் ஏற்படக்கூடிய துக்கங்களேக் கல்பித்துக் கொண்டேயிருப்பது ஆகியவற்றின் பாரம் நமக்கு ஜாஸ்தி. குழந்தைக்கு இந்த மனச்சுமை இல்லே. எதையும் ஆழப் போட்டுக்கொண்டு நாம் உழப்பிக்கொள்கிறமாதிரி இல்லாமல் அது க்ஷணத்தில் மறந்துவிட்டு லேசாகிவிடும். நம்மாதிரி அதற்கு வாழ்க்கை ப்ரச்னேகளும் இல்லே. பொதுவாகக் குழந்தை ப்ராய

Koviloor Digital Library

மானது விளையாட்டு, சீராட்டல் என்று ஸந்தோஷமாகவே போகிறது. குற்றவாளிக்கு ஆஹாரம் போட்டுப் போஷிப்புப் பண்ணி, மறுபடி தண்டனை வாங்குவதற்குத் திராணி உண்டாக்கிய மாதிரி நமக்கு பால்யத்தை வைத்திருக்கிறுர் பகவான். அப்புறம் மறுபடி கஷ்டக் கசையடி ஆரம்பித்து விடுகிறது.

வேப்பம்பழத் தித்திப்பு

யாராயிருந்தாலும் ஒரே கெட்டதாகப் பண்ணுமல் எங்கேயோ கொஞ்சம் நல்லதும் பண்ணுவதால் நடுநடுவிலே கொஞ்சம் கொஞ்சம் இன்பமானது நடக்கிறது. இந்த ஸந்தோஷம் கசையடிக்கு ஆயின்ட்மென்ட் போடுகிறது. எங்கேயாவது யாருக்காவது புண்யசாலிகளுக்குக் கசையடியில்லாமல் சந்தனப்பூச்சாகவே நடக்கிறது. அது ரொம்பவும் அபூர்வம். நூற்றுக்குத் தொண்ணூறு நாம் பாபம் செய்தவர்களேயானதால் ஸந்தோஷம் ஒரு மடங்கு என்றுல் கஷ்டம் பத்து மடங்கு என்றே வருகிறது. ரொம்ப உசந்தாலும் வாழ்க்கையில் நாம் அநுபவிக்கிற ஆனந்தம் வேப்பம்பழத் தித்திப்புத்தான். வேப்பங்காயைவிட வேப்பம்பழத்துக்குத் தித்திப்பு உண்டு என்பது வாஸ்தவந்தான். ஆனுல் அது மாம்பழத்தின் தித்திப்பாக முடியுமா? ரொம்பக் கசப்பிலேயே கொஞ்சம் தித்திப்புமாக, அநேக கஷ்டங்களுக்கு மத்தியிலே அல்ப ஆனந்தம் நமக்குக் கிடைக்கிறது. இவ்வளவுக்குத்தான் நமக்குத் தகுதி. அல்லது இப்போதே நம் தகுதியை மீறி பகவான் கொஞ்சம் தயை தாக்ஷிண்யம் காட்டுவதால்தான் இவ்வளவு கஷ்டத்தோடாவது நிற்கிறது என்று சொல்லலாம்.

ஆசைதான் இதற்கெல்லாம் காரணம் என்றுல், அந்த ஆசை உடம்பை அழிப்பதாலும் போகாது என்றுல் என்ன தான் பண்ணுவது? எப்படித்தான் தப்பித்துக் கொள்வது?

Koviloor Digital Library

விடாமுயற்சி வேண்டும்

ஆசை அடங்கமாட்டேனென்றாலும் திரும்பத் திரும்ப அடக்கப் பார்த்துக் கொண்டேதானிருக்கவேண்டும். வைராக்யம் என்பதான ஆசையின்மையை, பற்றின்மையை ஸம்பாதித்துக்கொள்ள விடாமுயற்சி பண்ணிக்கொண்டே இருக்கவேண்டும்.

ஏனென்றால் ஆசை என்ற இந்த ஒரே ஒரு சத்ருவை எப்படியோ ஒரு தினுஸில் எப்பாடு பட்டாவது நாம் ஒழித்துக் கட்டிவிட்டால் போதும்—அப்புறம் நாம் ராஜா தான். ராஜா என்றால் இந்த உலகத்து ராஜா இல்லை. அவனுக்கு உள்ள ஆசையும் தொல்லையும் நமக்கு வேண்டவே வேண்டாம். நான் சொல்வது ஆசை, தொல்லை கிட்டேயே வராத சாச்வத சாந்தத்தை உடைய ராஜா.

பல நூறாயிரம் கெட்ட வ்ருத்திகளை ஒவ்வொன்றாய் அடக்கப் பார்த்து ப்ரயோஜனமில்லை. அது முடியாத காரியம். ஆகையால் அவை கிளைகள் என்றால் அவற்றுக்கு வேராக உள்ள ஆசை என்ற ஒன்றை வெட்டிவிட்டால் போதும். ஆனால் வெளியே நீண்டிருக்கும் கிளையை வெட்டுவதைவிட உள்ளே புதைந்துள்ள வேரைத் தோண்டி அழிப்பது ரொம்பவும் கஷ்டம்தான். இருந்தாலும் இதைச் செய்யாவிட்டால் வெட்டிய கிளைகள் மறுபடி மறுபடி முளைத்துக் கொண்டுதானிருக்கு மென்பதால் எப்படியாவது இதை ஸாதிக்கத்தான் வேண்டும்.

கறையான் புற்று வைக்கிறது. அதை உடைக்கிறோம். அடுத்த வாரம் பார்த்தால் அது மறுபடி முளைத்திருக்கிறது. மறுபடி தட்டிவிடுகிறோம். அதற்கப்புறம் சில நாள் போனால் புற்று மறுபடியும் கிளம்பித்தானிருக்கிறது. இதற்கு முடிவு எப்படி? தாய்ப்பூச்சி இருக்கிறவரைக்கும் அது கொஞ்சங்கூட அலுக்காமல் சலிக்காமல் இப்படிப் புற்று வைத்துக் கொண்டேதான் இருக்கும். அது எங்கே எந்த சந்து பொந்தில் மூங்கிலுக்குள் ஒளிந்துகொண்டிருக்கிறதோ

Koviloor Digital Library

அங்கே தேடித் தோண்டி அதை எடுத்து 'ஸம்ஹாரம்' பண்ணினால்தான் அப்புறம் புற்று புறப்படாம லிருக்கும். இப்படியே ஸகல கஷ்டத்துக்கும், ஸகல துர்வ்ருத்திகளுக்கும் தாய்ப்பூச்சியாயுள்ள ஆசையை அழிக்காமல், அந்தக் கஷ்டம் ஒவ்வொன்றையும் நிவ்ருத்தி செய்துகொள்ளவும், ஒவ்வொரு துர்வ்ருத்தியாகப் போக்கிக் கொள்ளவும் பாடுபட்டால் அவ்வளவும் நிஷ்பல னாகத்தான் ஆகும். Cause-ஐ (காரணத்தை) அழிக்காமல் விடும்வரை effects-ஐ (விளைவுகளை) நிரந்தரமாக அழிப்பது என்பது நடக்காத கார்யம்.

பகவான் காம - க்ரோதம் என்று சொல்லி, க்ரோதத்தையும் காமத்திலேயே அடக்கி ஒருமையாகப் பேசும்போது இப்படித்தான் உபதேசம் செய்திருக்கிறார்.

காம ஏஷ க்ரோத ஏஷ ரஜோகுண-ஸமுத்பவ: |

இதற்கு அர்த்தம் சொல்லிவிட்டேன். தொடர்ந்து,

மஹாசநோ மஹாபாப்மா வித்த்யேநம் இஹ
வைரிணம் |

என்று சொன்னதற்கும் கொஞ்சம் அர்த்தம் சொன்னேன்.

இந்தக் காமமானது பெருந்தீனி கேட்பது: "மஹாசந:", ஒரு தரம் தீனி போட்டுவிட்டால், அதாவது ஒரு ஆசையை ஒரு தரம் பூர்த்தி பண்ணிக்கொண்டு விட்டால், அதோடு அதன் பசி தீர்ந்து விடுவதில்லை. சாப்பாட்டு விஷயத்தில் எப்படி ஒரு வேளை போஜனம் செய்தால் சாச்வதமாய் நம் வயிறு நிரம்புவதென்றில்லாமல் தினந் தினம் மூன்றுவேளை நாலு வேளை சாப்பிடவேண்டியிருக்கிறதோ, அப்படியேதான் ஆசைப் பசியும் எத்தனை தடவை தீர்த்துக் கொண்டாலும் தீராமல் மறுபடி எழும்புகிறது. அப்பறம் "மஹாபாப்மா"—மஹாபாவி என்று ஆசையை (பகவான்) திட்டுகிறார். நம்முடைய அத்தனை பாப பட்டாளத்துக்கும், அதாவது கெட்ட வ்ருத்திகளான அஸுரப் படைக்கும் இதுதானே உற்பத்தி ஸ்தானம்?

Koviloor Digital Library

ஆதலால் "மஹாபாப்மா". வித்த்யேநம் இஹ வைரிணம்— வித்தி ஏநம் இஹ வைரிணம். பொழிப்புரையாய் சொன்னால், "இஹ ஏநம் வைரிணம் வித்தி". "இஹ"—இந்த உலகத்திலே, ஸம்ஸாரத்திலே; "ஏநம்"—இதை, இந்தக் காமத்தை; "வைரிணம்"—விரோதியாக; "வித்தி"—அறிந்து கொள். "இந்த லோக வாழ்க்கையில் காமம்தான் பெரிய சத்ரு என்று தெரிந்து கொள்ளடா அப்பா!" என்கிறார்.

ஆசையின் செயலும் "அதிஷ்டான"மும்

அப்புறம் சொல்லிக்கொண்டு போகிறார், அதன் க்ரூர ரூபம், கார்யம் முதலானதுகளை. "அக்னியை எப்படிப் புகை மறைக்கிறதோ, கண்ணாடியை எப்படி தூசி மறைக்கிறதோ, வயிற்றில் உள்ள சிசுவை எப்படி கர்ப்பப்பை மறைக்கிறதோ அப்படி காமம் ஞானத்தைச் சுற்றிச் சூழ்ந்துகொண்டு மறைக்கிறது," என்று சொல்லிவிட்டு மறுபடி, "ஆமாண்டா அர்ஜுனா! ஞானிக்குப் பரம சத்ரு இதுதான். பூர்த்தியே பண்ண முடியாமல் கொழுந்துவிட்டுக்கொண்டிருக்கும் ஆசைத் தீதான் மநுஷ்யனின் அறிவை அப்படியே சூழ்ந்து கொண்டிருக்கிறது" என்கிறார்.

முதலில் அறிவுத் தீயை மறைக்கும் புகையாய் ஆசை இருக்கிறது என்றார். அப்புறம், இதுவே அக்னிபோல ஒருத்தனைத் தபிக்கச் செய்வதை நினைத்து, 'அறிவை எரிக்கிற நெருப்புப்போல ஆசை பிடித்துக்கொண்டிருக்கிறது' என்கிறார்.

இன்னமும் சொல்கிறார்:

எந்த வஸ்துவானாலும் அது தொழில் பண்ணவேண்டுமானால் ஏதோ ஒரு இடத்தில் ஊன்றி நிலைப்பட்டு நின்று அங்கேயிருந்துதான் கைவரிசையைக் காட்டவேண்டும். இப்படி நிற்கும் ஸ்தானத்துக்கு "அதிஷ்டானம்" என்று பெயர்.

"அதிஷ்டானம்" என்றவுடன் ஸந்நியாஸிகளின் ஸமாதிகளுக்கு அப்படிப் பேர் சொல்வது நினைவு வரலாம். எதனால் இந்தப் பேர் என்ற கேள்வி எழலாம்.

Koviloor Digital Library

சரீரத்தைவிட்டு ஸித்தியான பெரியவர்களுடைய அநுக்ரஹ சக்தியில் ஒரு கலை ப்ராணவியோகமான பிறகும் அவர்களுடைய சரீரத்திலே இருந்து கொண்டிருக்கும். அந்தப் பெரியவருடைய தேஹத்தைப் புதைத்துவைக்கிற இடத்தில் இந்த அநுக்ரஹ கலையானது ஊன்றி நின்று பக்தர்களுக்குப் பாயும்படியாக ஸ்தானம் ஏற்படுத்தித் தரப்படுகிறது. அதனால்தான் ஸமாதியை "அதிஷ்டானம்" என்பது.

வழக்கத்தில் எப்படியிருக்கிறதென்றால், சில இடங்களில் ஸமாதியின் மேலே துளஸி வைக்கிறார்கள்; சில இடங்களில் ஸமாதிக்கு மேல் சிவலிங்கம் ப்ரதிஷ்டை செய்கிறார்கள். துளஸி வைக்கப்பட்ட ஸமாதியை ப்ருந்தாவனம் என்றும் லிங்கம் வைக்கப்பட்ட ஸமாதியை அதிஷ்டானம் என்றும் சொல்வதாக வழக்கு ஏற்பட்டிருக்கிறது. நம் மடத்து ஆசார்யர்களிலேயே கலவையில் ஸித்தியான இரண்டு பெரியவர்களுக்கு அங்கே துளஸி வைத்த ப்ருந்தாவனம் அமைந்திருக்கிறது, இளையாற்றங்குடியில் ஸித்தியான வருக்கு அங்கே சிவலிங்க ப்ரதிஷ்டையோடு அதிஷ்டானம் அமைந்திருக்கிறது.

ஆசை தன்னை ஊன்ற வைத்துக்கொண்டிருக்கிற அதிஷ்டானம் என்ன என்று பகவான் சொல்கிறார். ஒன்றில்லை; மூன்று அதிஷ்டானங்கள். ஜீவனை 'உண்டு-இல்லை' என்று வதைப்பதற்காக அவனுடைய இந்திரியம், மனஸ், புத்தி மூன்றையுமே ஆசை ஆக்ரமித்துக்கொண்டு தனக்கு அதிஷ்டானமாக்கிக் கொண்டிருக்கிறது; அவனை மோஹத்திலே தள்ளி ஞானத்தை மறைக்கிறது என்கிறார்.

"அர்ஜுனா! உன்னை நன்றாக அடக்கிக் கட்டுப்படுத்திக் கொண்டு இந்த ஆசைப் பாவியை ("பாப்மா" என்றே மறுபடி சொல்கிறார்) வெல்லு, கொல்லு" என்கிறார்.

நன்றாக வர்ணித்துச் சொல்லிவிட்டால் போதுமா? கொல்ல முடியவில்லையே! எதைப் பண்ணவே படாது என்று

Koviloor Digital Library

நினைத்து அதில் ஆசையை அடக்குகிறோமோ அதுவேதானே திமிறிக்கொண்டு கிளம்புகிறது?

அர்ஜுனனின் குறை

ஆசையை அடக்குவது என்பதும் மனஸை அடக்குவது என்பதும் ஒன்றுதான். ஏனென்றால் ஆசைகள் முளைக்கிற ஆதார ஸ்தானம் மனஸ்தான். அதை அடக்கவே முடியாமல் அது பலவந்தமாய் ஜீவனை இழுத்துக்கொண்டு போகிறதே என்று அர்ஜுனன் அழுகிறான்.*

சஞ்சலம் ஹி மந: க்ருஷ்ண ப்ரமாதி பலவத் த்ருடம் |
தஸ்யாஹம் நிக்ரஹம் மந்யே வாயோரிவ ஸுதுஷ்கரம் ||

"க்ருஷ்ணா! இந்த மனஸ் சஞ்சல மயமாயிருக்கிறதே; ஜீவனைப் போட்டுக் கலக்குகிறதே! ("மாதி" என்றால் கலக்குவது; கடைவது. 'அம்ருத மதனம்' என்பதில் வரும் 'மத' (matha) பாற்கடலைக் கடைந்ததைத்தானே குறிப்பிடுகிறது? 'ப்ரமாதி': ரொம்பவும் கலக்குவது. ஜீவனைப் போட்டுக் கடைந்து கலக்குகிறது மனஸின் எண்ணங்கள்.) இது ரொம்ப பலமாகவும் உறுதியாகவும் கலக்குகிறது. எப்படிக் காற்றைப் பிடித்து நிறுத்திவைக்க முடியாதோ, அப்படியேதான் இந்த மனஸையும் பிடித்து அடக்கி வைக்கமுடியாது என்றே எனக்குத் தோன்றுகிறது" என்கிறான் அர்ஜுனன்.

"தஸ்ய"— இந்த மனஸினுடைய; "நிக்ரஹம்"— அடக்கல்; "வாயோரிவ"—காற்றைப் போல, அதாவது காற்றை அடக்கிவைப்பது போல; "ஸுதுஷ்கரம்"—ஸாதிக்க முடியாத கார்யம் என்று; "மந்யே"—நினைக்கிறேன்.

கண்ணன் சொல்லும் உபாயம்

அழுகிற அர்ஜுனனிடம், "நீ சொல்கிறாற் போல மனோ நிக்ரஹம் கஷ்டமானதுதான். ஆனாலும் இது

---

* இனிவரும் கீதைப் பகுதிகள் அதன் ஆறும் அத்யாயத்தில் உள்ளவை.

Koviloor Digital Library

ஸாதிக்கவே முடியாதது இல்லையப்பா" என்று பகவான் உத்ஸாஹப்படுத்திச் சொல்கிறார். அவன் சொன்னதை ஒப்புக்கொள்கிறாற்போலவே 'ஸிம்பதெடிக்'க்காக ஆரம்பித்து அப்புறம் அவன் முடியாதது என்று கைவிடப் பார்க்கிற ஸாதனையை முடியும்படிப் பண்ண வழி சொல்லித் தருகிறார்; 'ஹோப்' கொடுத்துச் சொல்கிறார்.

அஸம்சயம் மஹாபாஹோ மநோ துர்நிக்ரஹம் சலம் |

"சலம்" என்றால் சஞ்சலம்தான். சஞ்சலித்துக் கொண்டேயிருக்கும் மனஸை அடக்க முடியாதுதான். "துர் நிக்ரஹம்"—நிக்ரஹம் செய்வதற்கு முடியாது. "அஸம்சயம்"—இதிலே ஸந்தேஹமில்லை. "அர்ஜுநா! (அர்ஜுனனை 'மஹாபாஹு' என்கிறார். மஹா வீரனாதலால் அவனுடைய தோள் வலியைக் குறிக்க 'மஹாபாஹு' என்று கூப்பிடுகிறார். வெளி யுத்தத்தில் போலவே உள் யுத்தத்திலும் அவன் மஹா வீரன் ஆகணும் என்று தாத்பர்யம்.) ஸந்தேஹமில்லாமல் நீ சொன்ன மாதிரிதான் மனஸ் சஞ்சலித்துக்கொண்டேயிருக்கிறது. அதை நிக்ரஹம் பண்ணுவது லேசில்லைதான்" என்று, அவன் சொன்னதற்கு ஆமாம் போட்டுவிட்டு, அதற்குப் பரிஹாரமும் சொல்கிறார்.

ரொம்பவும் முக்யமான விஷயத்தைச் சொல்கிறார்: "அப்யாஸம், வைராக்யம் என்ற இரண்டில் தீவிரமாயிருந்தாயானால் மனோ நிக்ரஹம் பண்ணி விடலாம்" என்கிறார்.

"எத்தனை திமிறினாலும், உன்னை திசை தப்பி எத்தனை தரம் இழுத்துக்கொண்டு போனாலும் ஸரி, அதற்காக மனஸைக் கட்டுப்படுத்த ப்ரயாஸை எடுக்காமல் விட்டு விடாதே. வெளியிலே ஓடுகிற அதை ஒவ்வொரு தரமும் மறுபடி உன் வழிக்கு இழுத்துக்கொண்டு வரப் பார். இப்படி விடா முயற்சியுடன் எதிர்த்துப் போராடிக்கொண்டேயிருந்தால், அது ஒருநாள் அடங்கிப் பணிந்துபோக ஆரம்பித்து விடும். எதிடமும் ஆசைவைக்கப்படாது என்ற வைராக்ய சிந்தை, எத்தனை வழுக்கிவிட்டாலும் ஊன்றி நிற்க அப்யாஸம் செய்துகொண்டே இருப்பது—ஆகிய இந்த

Koviloor Digital Library

இரண்டால் முடிவிலே ஒருநாள் ஜயித்துவிடலாம்"—இப்படி பகவான் ஆறுதலாக பதில் சொல்கிறுர்.

யதோ யதோ நிச்சரதி மநச் சஞ்சலம் அஸ்திரம் |
ததஸ்ததோ நியம்யைதத் ஆத்மந்யேவ வசம் நயேத்||

"யதோ யதோ"—எது எதை, அதாவது எந்தெந்த ஆசையை, முன்னிட்டு; "ச ஞ் ச ல ம்"—சஞ்சலித்துக் கொண்டேயிருப்பதும்; "அஸ்திரம்"—எதிலும் நிலைப்பட்டு நிற்காததுமான; "மந:"—மனஸானது; "நிச்சரதி"—வெளியில் ஓடிக்கொண்டேயிருக்கிறதோ; "ததஸ்தத:"—அந்த ஒவ்வொரு ஆசையிலிருந்தும்; "ஏதத்"—இந்த மனஸை; "நியம்ய"—இழுத்து அடக்கி; "ஆத்மநி ஏவ" ("அத்மந்யேவ")—ஆத்மாவிலேயே; "வசம் நயேத்"—வசப்படுத்தி வைக்கவேண்டும். எத்தனை தரம் என்னென்ன ஆசைகளை முன்னிட்டு மனஸ் வெளியில் திரும்பத் திரும்ப ஓடினாலும் ஸரி, ஒவ்வொரு தரமும் அந்த ஆசை ஒவ்வொன்றிலிருந்தும் மனஸைத் திருப்பிக் கட்டுப்படுத்தி ஆத்மாவிலேயே அடங்கியிருக்கச் செய்யவேண்டும்.

ஆத்மா: மாறுபாடு அற்றது

ஆத்மா என்கிற ஜீவனுடைய நிஜ ஸ்வரூபத்தில் விஷயத்தைக் கொண்டுவந்துவிட்டார்!

தனி ஜீவன் என்று குறுகி நிற்கிறபோது மனஸ்தான் ஜீவன் என்று தோன்றுகிறது. தனக்கென்று தனித்தனியாக இன்னின்ன லக்ஷணம் இருக்கிறது, அதாவது தான் சிவப்பு, தனக்கு இன்ன பெயர், இன்ன ஊர், இன்னார் அப்பா—அம்மா, இன்ன படிப்பு, இன்ன வேலை, இன்னின்ன குணம் (ஒருத்தன் முன்கோபியாயிருக்கிறுன்; இன்னொருத்தன் சாந்த ஸ்வபாவியாயிருக்கிறுன். ஒருத்தன் குஷியாயிருக்கிறுன்; இன்னொருத்தன் அழுமூஞ்சியாயிருக்கிறுன். ஒருத்தன் கெட்டிக்காரனுயிருக்கிறுன்; இன்னொருத்தன் அசடாக இருக்கிறுன், இப்படித் தனி ஆள் என்ற நிலையில் ஒவ்வொரு

Koviloor Digital Library

வனுக்கும் குறிப்பிட்ட குணங்கள் இருக்கின்றனவே, அதிலே தனக்கு இன்னின்ன குணம்) என்பதாகக் கட்டுப்படுத்திக் காட்டும் லக்ஷணங்கள் எல்லாம் ஜீவனானவன் தன்னை மனஸோடு identify பண்ணிக்கொள்வதனால் ஏற்பட்டவை தான். அதாவது ஜீவன் தன்னுடைய மனஸின் எண்ணங்களால் தன்னை எப்படித் தெரிந்து கொள்கிறானோ அதுவே தன்னுடைய நிஜ ஸ்வரூபம் என்று நினைக்கிறான்.

அவனே தூங்குகிறான், அல்லது க்ளோரோஃபார்ம் கொடுத்து மயக்கத்திலிருக்கிறான், அல்லது யோக நிஷ்டையில் அப்படியே ஸமாதியில் ஆழ்ந்து கிடக்கிறானென்றால் அப்போதெல்லாம் மனஸ் வேலை செய்யவில்லை. அவனுக்கு எந்தவிதமான எண்ணமும் இல்லை. தன்னைக் குறித்து தனித்தாக எந்த லக்ஷணமும் இருப்பதாக அவனுக்கு அப்போது தெரிவதேயில்லை. இந்த நிலைகளில் ஸகல ஜீவர்களும் ஸமம்தான்—அரசன் ஆண்டி இரண்டு பேரும் ஒன்று தான். தூங்குகிற அல்லது மூர்ச்சித்திருக்கிற அல்லது ஸமாதி நிலையிலுள்ள ராஜாவுக்குத் தன் ராஜரீக மஹிமை எதுவும் தெரியாது. அப்போது ஆண்டிக்கும் தன் தரித்ரத் திண்டாட்டம் தெரிவதில்லை. பலிஷ்டனான ஒரு வஸ்தாத், ரொம்பவும் துர்பலனான ஒரு நோஞ்சான்; A-யிலிருந்து Z-வரை டிகிரிகள் போட்டுக்கொள்ளும் மஹா மேதாவி, சுட்டுப் போட்டாலும் படிப்பு ஏறாத நிரக்ஷரகுக்ஷி—இப்படி எவரானாலும் தங்கள் தனி குணம், லக்ஷணம் எதுவும் இல்லாமல், அனைவரும் ஒரே ஸ்திதியில் இருப்பதாக இந்த மனஸற்ற நிலை இருக்கிறது. மனஸின் வேலையில்லாமல் தூங்குகிறவனுக்குத் தன் பேர், ஊர், தனக்கு ப்ரியமானவர்கள், விரோதமானவர்கள் ஏதாவது தெரியுமா? தான் ஆணா பெண்ணா, கிழமா குழந்தையா என்பதெல்லாம் கூடத் தெரிவதில்லை. மனஸ் வேலை செய்யும்போது தனித்தனி லக்ஷணங்களோடு ஒருத்தருக்கொருத்தர் நூறாயிரம் வித்யாஸத்தோடு இருக்கிற அத்தனை கோடானு கோடிப் பேர்களும் அது வேலை செய்யாத ஸமயத்தில் ஒரு வித்யாஸம்கூட இல்லாமல் ஒன்றாகவே

Koviloor Digital Library

இருக்கிறார்கள்—ஆ ன ா லு ம் இருக்கிறார்கள்; லக்ஷணங்கள் என்ற கட்டுப்பாடுகள் இல்லாத நிஜமான "நானாக" இருக்கிறார்கள்.

இதுதான் முக்யமான விஷயம். தூக்கம், மூர்ச்சை, ஸமாதி ஆகிய நிலைகளில் ஒருத்தன் செத்துப் போய்விடவில்லை. உயிரோடுதான் இருக்கிறான். அப்போதும் இவனுக்குள்ளே ஒன்று இருந்து கொண்டிருக்கிறதே, அதுதான் ஆத்மா.

அதற்கு சாவே கிடையாது. அதற்கு மாறுதலும் கிடையாது. மாறுதல் என்பதும் ஒரு தினுஸில் சாவுதான்—யோசித்துப் பார்த்தால் புரியும். "சாவு" என்பது "இல்லாமல் போவதுதானே?" "பொய்யாய்ப் போவது" தானே? பூ காயாய் மாறுகிறது, காய் பழமாய் மாறுகிறது, புழு குளவியாய் மாறுகிறது என்றெல்லாம் சொல்லும்போது அந்தப் பூ, காய், புழு எல்லாம் இல்லாமல் போய்தான் அவற்றின் இடத்தில் காயும், பழமும், குளவியும் வந்திருக்கின்றன. அதாவது வளர்ச்சி என்று சொல்கிற மாறுதலுக்குள்ளே ஒரு அழிவு அல்லது சாவு இருக்கிறது; ஒரு ரூபம் அழிந்துதான் இன்னொன்றாக வளர்ந்து உருவாகிறது.

நம் உடம்பு மாறுகிறது. குழந்தையாயிருந்த உடம்பு வேறே; நடுத்தர வயஸுக்காரனின் உடம்பு வேறே. எத்தனையோ விதத்தில் மாறி, வளர்ந்து குழந்தையின் உடம்பு மத்யம பிராயத்தினனின் உடம்பாகிறது. அதற்கப்புறம் ஜரை (மூப்பு) வருகிறது. இதுவரை வளர்ச்சியால் மாறிய உடம்பு இனிமேல் தேய்வினால் மாற ஆரம்பிக்கிறது. தோல் மாறிச் சுருங்குகிறது. தலைமயிர் மாறி நரைக்கிறது. நமக்கு அப்படித் தெரியாவிட்டாலும், ப்ரதிக்ஷணமும் உடம்பு மாறிக்கொண்டேதானிருக்கிறது என்று டாக்டர்களும், ஃபிஸியாலஜிக்காரர்களும் சொல்கிறார்கள். அதாவது உடம்பை "நான்" என்று நினைக்கிறோமாயினும் அது க்ஷணத்துக்கு க்ஷணம் மாறிக்கொண்டு, அதாவது செத்துப் போய்க் கொண்டிருக்கிறது! அப்படியானால் போன க்ஷணம்

Koviloor Digital Library

செத்துப்போய்விட்ட உடம்பை இந்த க்ஷணமும் "நான்" என்று நினைத்துக் கொண்டிருக்கிறோமே, இது எப்படி? போன க்ஷணம் என்ன? நாற்பது, ஐம்பது வருஷம் முந்தி நடக்கக்கூடத் தெரியாமல் இருந்த குழந்தையுடம்பிலிருந்து இன்றைக்கு இருக்கிற உடம்புவரை மாறிமாறி—அதாவது செத்துச் செத்து—உண்டான அத்தனை உடம்புகளையும் ஒரே "நானு" டையதாக நினைக்கிறோமே, இது எப்படி?

இப்படியேதான் மனஸை எடுத்துக்கொண்டாலும், அது ஓயாமல் சஞ்சரித்துக்கொண்டேயிருப்பதைத்தான் இத்தனை நாழி சொன்னேன். அதாவது ஓயாமல் மாறிக் கொண்டு, செத்துக்கொண்டு இருக்கிறது. போன ஸெகன்ட் அதற்குத் துக்கம்; இந்த ஸெகன்ட் ஸந்தோஷம்; அடுத்த ஸெகன்ட் கோபம். மனஸின் வளர்ச்சியும் அறிவின் வளர்ச்சியும் குழந்தைப் பிராயத்திலிருந்து எத்தனை வித்யாஸமாக மாறி இருக்கிறது? அப்புறம் ரொம்ப வ்ருத்தாப்யத்தில் இவையே தேய்ந்து ஓய்ந்தும் போய்விடுகின்றன. அதாவது மாறுதல் என்கிற அழிவின் ஓட்டம் நிற்பதே இல்லை. மாறுபாட்டை 'விகாரம்' என்பார்கள். விகாரம் என்றால் கோரம், குரூபம் என்று தமிழில் அர்த்தம் பண்ணிக் கொள்கிறோம். காரணம், மாறுபடுகிறபோது அப்படி மாறுபாடு காண்கிற வஸ்துவின் ரூபம் நசித்துப் போவது தான்! ஒரு வஸ்து நாசமாகிக் கிடந்தால் அது பார்ப்பதற்கு ரொம்பவும் விகாரம்தானே? ஆனாலும் இங்கே நான் சொன்ன எக்ஸாம்பிள்களிலெல்லாம் ஒரு வஸ்து நசிப்பதோடு முடியவில்லை; இன்னொன்றாக அது பரிணமிக்கவும் செய்கிறது. பூ நசித்ததோடு முடியாமல் காயாகிறது. காய் நசித்ததோடு முடியாமல் பழமாக ஆகிறது. புழு நசித்ததோடு முடியாமல் குளவியாகிறது. உயிர்தத்வம், உயிர்தத்வம் என்னும் எதுவோ ஒன்று பூக்கும் அடிப்படையிலிருந்துகொண்டு அந்த ரூபத்தை அழியப்பண்ணியே காயாக்கி, அந்தக் காய்க்கும் அடிப்படையாயிருந்து கொண்டு அதைப் பழமாக்குகிறது. உயிரோடு மரத்திலே அந்தப் பூ ஒரு அங்கமாய் ஒட்டிக்கொண்டிருப்பதால் இப்படி

Koviloor Digital Library

நடக்கிறது. அதுவே மரத்திலிருந்து ஒரு பூவை நாம் பறித்து விட்டால் அது வாடிச் செத்துப் போவதோடேயே முடிந்து போகிறது. அப்போது பூ காயாவதில்லை. புழுவின் ஆதாரமாக உள்ள உயிர் தத்வம் அந்தப் புழு ரூபத்தைக் கொன்ற பின்னும் அதே உயிராதாரமாக அதனிடத்தில் புதிதாக உண்டாக்கிய குளவியிடம் இருக்கிறது. புழுவை நாம் நசுக்கிப் போட்டால், அல்லது ஒரு குருவி எடுத்துத் தின்று விட்டால் அது குளவியாகாமல் ஒரேயடியாய் அழிவடைகிறது.

இப்படியே நம் உடம்பும் மனஸும் அழிந்து அழிந்து புதுப்புது ரூபம் எடுத்துக்கொண்டேயிருக்கும்போது அத்தனைக்கும் அடிப்படையாக இருக்கிற உயிர்த் தத்வம் தான் ஆத்மா. உயிர்த் தத்வம் என்றால் மூச்சு இல்லை. மூச்சு போன பின்னும் ஆத்மா அழிவதில்லை. மூச்சைக் கொண்டு உடம்பு வாழும்படியாகச் செய்யும் உயிருக்குயிரான தத்வமே ஆத்மா. அதுதான் "நிஜ" நாம். போன நிமிஷம் இருந்து, இந்த நிமிஷம் இல்லாமலாகிவிட்ட உடம்போ, மனஸோ எப்படி நிஜ நாமாக இருக்க முடியும்? அதுதான் க்ஷணத்துக் க்ஷணம் பொய்யாகி விடுகிறதே! இம் மாதிரி மாறுதல்கள் இல்லாமல், அதாவது நிர்விகாரமாக, எப்போதும் ஒரே போலவே இருந்துகொண்டிருக்கும் ஆத்மாதான் நிஜ "நான்." உடம்பும் மனஸும் பல தினுஸாய் மாறினாலும், அத்தனை நிலைகளிலும் "நான்" என்று இருக்கிற பாவம் மட்டும் கொஞ்சங்கூட மாறாமலே தானே இருக்கிறது? அதனால் அந்த நிலைகளை ஒதுக்கித் தள்ளிவிட்டு இந்த "நான்" என்ற அடிப்படையான ஆத்மாவை மட்டும் பிரித்துப் பார்த்தால் இதுதான் நமது நிஜ ஸ்வரூபம் என்று ஆகிவிடுகிறது.

உடம்பைப் பற்றிய ப்ரக்ஞை இல்லாமல், மனஸின் ஓட்டமும் இல்லாமல் ஆழ்ந்து தூங்கும்போது, மூர்ச்சை போட்டுக் கிடக்கும்போது, ஸமாதி நிஷ்டை கூடியிருக்கும் போது அப்படித்தான் ஆத்மா மாத்திரம் இருக்கிறது.

Koviloor Digital Library

அது மாறுபடாத வஸ்து. குழந்தையாயிருந்தபோது இருந்த "நான்" என்ற நினைப்புக்கும் இப்போதுள்ள "நான்" என்ற நினைப்புக்கும் கொஞ்சமாவது வித்யாஸமிருக்கிறதா? இல்லையே! விஷயம் தெரியாதபோது, விஷயம் தெரிந்த பிற்பாடு; வ்யாதியுள்ளபோது, ஆரோக்யமாயிருக்கிற போது; தரித்ரப்பட்டபோது, பணம் வந்ததற்குப் பிற்பாடு —இப்படி சரீரம், மனஸ் இவை பலவிதங்களில் கஷ்ட ஸுகங்கள் படுகிறபோதும் அந்த இரண்டின் நிலைகள் பல தினுஸாக மாறிக்கொண்டே இருந்தாலும், அத்தனையிலும் "நான்" என்ற பாவம் மாத்திரம் முழுக்க ஒரே விதமாகத் தான் இருக்கிறது. மாறிவிட்டவற்றை, இனியும் மாறிக் கொண்டே இருக்கப் போகிறவற்றை "நான்" என்று சொல்வதற்கில்லை. அத்தனை நிலைக்கும் ஆதாரமாயிருந்து கொண்டு, "ஸூத்ரே மணிகணா இவ" என்று பகவான் (கீதை. 7-7) சொன்னபடி, பல மணிகளையும் ஒரே ஜபமாலை யாகக் கோத்துக் கொடுக்கிற சரடு மாதிரி, அத்தனை மாறுபட்ட நிலைகளை அதுவும் தனியே சிதறிப்போய் நசித்து விடாமல், தொடர்புப்படுத்தி ஒரு வாழ்க்கையாகக் காட்டிக் கொடுக்கிற ஆத்மா தான் நிஜத்தில் நாம்.

"நிஜ" ஆத்மாவும் பொய்வேஷ மனஸும்

"நிஜம்" என்பதை "உண்மையானது" என்று நாம் அர்த்தம் பண்ணிக் கொள்கிறோம். "நிஜம்" என்பதற்கு நிஜமான அர்த்தம், "தனக்கே உரிய ஸ்வபாவம்" ."தன் உண்மை இயல்பு" என்பதாகும். இரண்டு அர்த்தத்திலும் ஆத்மாதான் நிஜ நாம். அதை அறியாத நாம் மனஸின் பொய் வேஷத்தில் நம் ஸ்வபாவத்தைத் தெரிந்துகொள்ளா மலிருப்பவர்கள்தான். மனஸை நாமாகவே நினைத்துவிடுகிற அளவுக்கு அது பெரிய வேஷம் போட்டு ஏமாற்றிவிடுகிறது.

ஒரு வேஷமில்லை; மாறிக்கொண்டே இருக்கிற பல வேஷங்கள்! பழநியில் (தண்டாயுதபாணிக்கு) கிடுகிடு வென்று ஒரு அபிஷேகத்துக்கு மேல் இன்னொரு அபிஷேக

Koviloor Digital Library

மாகப் பண்ணித் திரைபோட்டு அலங்காரம் பண்ணித் திறந்து காட்டுவார்கள். ஒரு அலங்காரத்திலே ஆண்டிப் பண்டாரமாக நிற்பார்; கொஞ்ச நேரத்தில் இன்னொரு அபிஷேக, அலங்காரமாகித் திரையை விலக்கும்போது பார்த்தால் ராஜாவாகக் காட்சி கொடுப்பார்; அதற்கப் புறம் இன்னொரு அலங்காரத்தில் வேடரூபத்தில் தர்சனம் தருவார். அதே மாதிரிதான் நம் வேஷமும் மாறிக் கொண்டே இருக்கிறது. பிறந்ததிலிருந்து (கருவாய் உருவானதிலிருந்து, இன்னும் பின்னே போனால் எத்தனையோ ஜன்மத்துக்கு முன்னாலிருந்து) நம் உடம்பும் மனஸும் மாறிக்கொண்டே இருக்கிறதென்றால், ஒவ்வொரு மாற்றமும் ஒரு வேஷந்தானே? இருந்தாலும், ஒரு துணியும் போட்டுக்கொள்ளாமல், மல மூத்ரங்களை அடித்துக் கொண்டு, செருப்பு, துடைப்பக்கட்டை எதுவானாலும் 'ஹாவு ஹாவு' என்று கடித்துக்கொண்டு "ஹா, ஹூ" என்று விளையாடிக் கொண்டிருந்த அந்தக் குழந்தையேதான் இன்றைக்கு எத்தனையோ நாசூக்கு நாகரிகம் பார்க்கிற நாம் என்பதாக ஒரு "நான் - எண்ணம்" அன்றிலிருந்து இன்று வரை அறாத, மாறாத தொடரிழையாக இருந்து கொண்டேயிருக்கிறது. இந்த எண்ணத்துக்கு அடியில் நமக்கு உயிராதாரமாக இருப்பதுதான் ஆத்மா. அன்றைக் குக் குழந்தை வேஷத்திலிருந்தவனும் இன்றைக்கு இப்போது நாமுள்ள இந்த வேஷத்திலிருப்பவனும் ஒரே ஆஸாமி என்று நமக்கும் தெரிந்து, மற்றவர்களுக்கும் தெரிவது அத்தனை வேஷத்துக்கும் ஆதாரமாக மாறாமலுள்ள அந்த ஆத்மா வினால்தான்.

ஸினிமா, ட்ராமாவிலே பல வேஷங்களில் ஒரு நடிகன் வருகிறான். ஒன்றில் அவன் ராமனாக வரலாம். இன்னொன் றில் ராவணனாக வரலாம். ஒன்றில் பணக்காரனாகவும் இன்னொன்றில் தரித்ரனாகவும் வரலாம். இப்படி வேஷம் மாறுகிறதென்றாலும் வேஷம் போட்டுக் கொண்ட ஆஸாமி ஒருத்தன்தான். அப்படியே நம்முடைய வாழ்க்கை நாடகத்

Koviloor Digital Library

தில் நாம் போட்டுக்கொள்ளும் பல வேஷங்களில் ஒரு வேஷ மாக இல்லாமல், இத்தனை வேஷமும் போட்டுக்கொள்கிற அந்த ஒரு நிஜ ஆஸாமியாக இருப்பது ஆத்மாதான். வேஷங்கள் பல இருக்கின்றன என்பதாலேயே, வேஷமா யில்லாத ஒரு நிஜ ஆஸாமியும் இருப்பதால்தான் இந்த வேஷங்கள் அவனுக்கு ஏற்பட முடிகிறது என்று ஆகிவிடு கிறது.

வேஷத்தைக் கலைத்துவிட்டு, அந்த ட்ரெஸ், மேக்-ஆப் எல்லாவற்றையும் எடுத்துவிட்டு ஆஸாமி தன் வீட்டில் இருக்கிறாற்போல், ஆத்மாவானது மனஸ், உடம்பு முதலிய உடுப்பும் ஹரிதாரமும் இல்லாமல் ஸுஷுப்தியிலும் (தூக்கத் திலும்) நிஷ்டையிலும் இருக்கிறது. அப்போது உடம்போடு, மனஸோடு பட்டுக்கொள்ளாமல், தனியாயிருப்பதனால் ஒரே சாந்தமாய் இருக்கிறது. ஒரு கார்யமும் எண்ணமுமில்லா மல், இவற்றால் ஏற்படும் இழுபறிப் போராட்டம், அதாவது தேவாஸுர யுத்தம் இல்லாமல் ஜீவன் இருப்பது அப்போது தான். ஆசையும், அதனால் ஏற்படும் அவஸ்தையுமில்லாமல் ஜீவன் இருப்பது மனஸின் ஆட்டமில்லாமல் ஆத்மா மட்டும் இருந்து கொண்டிருக்கும் நிலையிலேதான். ப்ரசாந்த நிலை என்கிற உசந்த அமைதி நிலை அதுதான்.

ஆத்மாவினாலேயே மனத்தின் இயக்கம்

ஆனால் விசித்ரம் என்னவென்றால், சாந்தமயமான இந்த ஆத்மா இல்லாமல், சாந்தியே தெரியாத மனஸுக்கு வேலை செய்கிற சக்தி இல்லை. மனஸின் வேலை என்பது என்ன? எதையாவது நினைப்பது, ஆசைப்படுவது. நினைப்பும் ஆசையும் இல்லாததாக ஆத்மா இருந்தாலும் அந்த உயிர்த் தத்வம் இல்லாமல் மனஸ் நினைக்க முடியாது. மனஸின் நினைப்புக் களை (குறிப்பாக ஆசைகளை) ஒட்டித்தான் சரீரம் வேலை செய்வது. உடம்பைப் பலவிதமாய் வேலை வாங்குவது மனஸ்தான். ஆனால் அந்த மனஸும் வேலை செய்வது ஆத்மாவின் சக்தியால்தான். ஆனால் ஆத்மாவோ தனியாய் உள்ளபோது "சக்தி" என்பதற்கு இடமே கொடுக்காததாக,

Koviloor Digital Library

ஒரே சாந்த மயமாகத்தான் இருக்கிறது "ஆத்மசக்தி" என்று தற்காலத்தில் பத்திரிகைகளிலும் ப்ரஸங்கங்களிலும் ரொம்ப அடிபடுகிற வார்த்தைகூட யோசித்துப் பார்த்தால் ஸரியான தில்லைதான். இன்னொன்றை (நல்லதாகவோ, கெட்டதாகவோ) பாதிப்பதாக ஒன்று உள்ளபோதுதான் அதன் "சக்தி" பற்றிய பிரஸ்தாவமே வரமுடியும். எதனோடும் ஸம்பந்தப்படாமல் தான் பாட்டுக்கு சாந்தமயமாய் இருக்கிற ஆத்மாவில் "சக்தி"க்கு இடமில்லை.

"ஸம்பந்தப்படவில்லை என்கிறீர்கள். நீங்களே தானே கொஞ்சம் முன்னாடி மனஸ், உடம்பு எதுவானாலும் அவை வேலை செய்ய ஆத்மாதான் ஆதாரம் என்றீர்கள்?" என்று கேட்கலாம்.

மாயை

வாஸ்தவம். ஆத்மா இல்லாமல் எந்த இயக்கமும் இல்லை. ஆனாலும் ஆத்மா எதனோடும் நேராக ஸம்பந்தப்படவில்லை. இதைத்தான் மாயை என்பது. எத்தனை யோசித்தாலும் இது புரிபடாது. எதிலும் ஸம்பந்தப்படாவிட்டாலும் ஸம்பந்தப் பட்டாற்போல மாயா விலாஸத்தால் ஆத்மா இருந்து கொண்டுதான் இத்தனை கூத்தையும் நடத்துகிறது!

இதை ஏதோ கொஞ்சம் புரியவைப்பதற்காக ஒரிரு த்ருஷ்டாந்தம் சொல்வார்கள். அதாவது, ஸூர்யன் இருப்பதால்தான் இத்தனை செடி கொடிகளும், வ்ருக்ஷங்களும் வளர்ந்துகொண்டும், புஷ்பித்துக்கொண்டும், பழுத்துக் கொண்டும் இருப்பது. ஸூர்யன் இல்லாவிட்டால் இது எதுவுமே நடக்காது. அதற்காக, ஸூர்யனேதான் திட்டம் போட்டு இவற்றை எல்லாம் உண்டாக்கி நடத்துவதாகச் சொல்ல முடியுமா?

வெளிச்சம் இல்லாமல் ஒரே இருட்டாயிருந்தால் எந்தக் கார்யமும் செய்ய முடிவதில்லை. விளக்கு ஏற்றி வைக்கிறோம். அதன் வெளிச்சத்தில் ஒருத்தன் புராணம் படிக்கிறான், இன்னொருத்தன் ஏதோ மனஸைக் கெடுக்கும் நாவல் படிக்கிறான். வெளிச்சத்தின் துணையினால் பலபேர் பலவிதமான

Koviloor Digital Library

நல்லதும் கெட்டதுமான கார்யங்களைச் செய்கிறார்கள். அதனால் இத்தனைக்கும் விளக்குதான் ஜவாப்தாரி என்று சொல்வதா? ஆனாலும் அந்த தீபம் இல்லாவிட்டால் இந்தக் கார்யம் எதுவும் நடக்கமுடியாது. இப்படித்தான் ஆத்மாவின் நேர் தூண்டுதல் அல்லது கர்த்ருத்வம் இல்லாமலே அதன் ஸாந்நித்ய விசேஷத்தால் மட்டும் மனஸ் வேலை செய்வதும், சரீரத்தை வேலை வாங்குவதும் என்று உபமானம் சொல்கிறார்கள்.

இருக்கும் நிலையும், செய்யும் நிலையும்

மனஸானது நினைப்பு என்ற வேலையில்லாமலும், சரீரம் ஓடியாடிச் செய்யும் வேலையில்லாமலும் தூங்குகிறபோது அல்லது ஸமாதி நிலையிலிருக்கும்போது ஜீவன் அந்த ஆத்மாகவே இருக்கிறான் என்று சொன்னேன்.

அது இருக்கிற நிலை. மனஸும் உடம்பும் வந்துவிட்டதோ, உடனே அந்த "இருக்கிற" நிலை போய், "செய்கிற" நிலை வந்துவிடுகிறது. இவை இல்லாதபோது ஆத்மா ஏதாவது செய்ததா? இல்லை. எதுவுமே செய்யவில்லை. வெறுமனே இருந்துகொண்டு மட்டும் இருக்கிறது. இதைத்தான் "கேவல ஸ்திதி" என்பது. "கேவலம்" என்றால் மட்டமானது என்று அர்த்தமில்லை. எதனாலோ இப்படி (அர்த்தம்) வந்து விட்டது. அந்த வார்த்தைக்கு ஸரியான அர்த்தம், இன்னொன்றின் கலப்பில்லாமல், தன்னந்தனியாக ஸ்வச்சமாக இருப்பது என்பதே இப்படி "கேவல"மாக ஆத்மாவைப் பிரித்து அதிலே நிலைத்திருக்கும் அநுபவம்தான் "கைவல்யம்." கைவல்ய பதவி, கைவல்ய மோக்ஷம் என்று கேள்விப்பட்டிருப்பீர்கள். அப்படியென்றால், மனஸின் பந்தமும் அதனால் ஏற்படும் ஸம்ஸார பந்தமும் இல்லாமல் விடுபட்டுத் "தான்" மட்டும் கலப்பற்று நிற்கிற சாச்வதாநுபவம் என்று அர்த்தம்.

மோக்ஷம் என்பதை ஒவ்வொரு ஸித்தாந்தம் ஒவ்வொரு பெயரில் சொல்லியிருக்கும். அத்வைதிகள்

Koviloor Digital Library

அதை ஆத்ம ஸாக்ஷாத்காரம் அல்லது ப்ரஹ்ம ஸாக்ஷாத்காரம் என்கிறோம். சைவர்களும், வைஷ்ணவர்களும் சிவ ஸாயுஜ்யம், விஷ்ணு ஸாயுஜ்யம் என்பார்கள். புத்தர் ஒரு தீபம் அணைந்து போய்விட்டாற்போல ஸகலமும் அழிந்து போய்விட்ட "நிர்வாணம்" என்கிறார். ந்யாய - வைசேஷிக ஸித்தாந்திகள் துக்கம் என்பதே இல்லாததான "அபவர்க்கம்" என்பார்கள். ஜைன மதத்திலும், யோக சாஸ்த்ரத்திலும் "கேவல ஸ்திதி", "கைவல்யம்" என்றே மோக்ஷத்தைச் சொல்லியிருக்கிறது.

இப்படி வெறுமனே "இருந்துகொண்டு மட்டும் இருக்கிற நிலை"போய், மனஸ் முளைத்து "செய்கிற நிலை" ஏற்பட்டு விட்டால் உடனே அனர்த்த பரம்பரை அத்தனையும் புற்றீசல் மாதிரிப் புறப்பட்டு விடுகின்றன.

ஆசைப் பசியின் விளைவுகள்

மனஸ் வந்துவிட்டால் உடனே அதற்கு ஆசைகள் என்ற ஆயிரக்கணக்கான பசிகள் ஏற்பட்டு, அதைத் தீர்த்துக் கொள்வதில் கோபம், லோபம், பொய், பொறாமை, அழுகை, பயம் எல்லாமும் பட்டாளமாக வந்துவிடுகின்றன. அப்படியாவது ஆசை தீர்ந்ததா என்றால் அதுதான் இல்லை. விடாமல் ஒன்று மாற்றி ஒன்று என்று ஆசைப் பூர்த்திக்கான கார்யங்கள் நம்மைப் பிடித்துக்கொண்டு பேய் மாதிரி ஆட்டி வைக்கின்றன. ஆனந்தம் வேண்டும் என்பதற்காகத்தான் நாம் செய்கிற இத்தனை கார்யங்களும் என்றாலும், இந்தக் கார்யங்களினால் அதிகபக்ஷமாக அடையக்கூடிய ஸந்தோஷங்களுங்கூடத் தாத்காலிகமாக இருந்து மறைந்துதான் போகின்றன. எதுவுமே கலப்படமில்லாத ஸந்தோஷமாக இல்லாமல் கையோடேயே ஒரு துக்கத்தையும் அழைத்துக் கொண்டு வருகிறது.

"பக்ஷணம் சாப்பிட்டால் ஸந்தோஷமாயிருக்கிறது; வயிற்றுவலியும் வருகிறது" என்பது வயிற்றுப் பசி விஷயத்தில் மட்டும்தான் என்று இல்லை; கண்ணின் பசி, காதின்

Koviloor Digital Library

பசி, சரீரப்பசி, எண்ணத்தின் பசி, பணப்பசி எல்லாவற்றி லும் இதேதான் நடக்கிறது. குழந்தை விளையாடிப் பார்த்தால் ஸந்தோஷமாயிருக்கிறது; அதற்கு ஒரு ஜ்வரம் வந்து விட்டால் இந்த ஸந்தோஷத்தைப்போல் நாலு மடங்கு கவலை ஏற்படுகிறது. நிறையப் பணம் வந்தால் ஸந்தோஷமாயிருக்கிறது; அதே ஸமயத்தில், 'திருட்டுப் போயிடப் போறதே! டாக்ஸை உசத்திவிடப் போருனே! எவனுவது 'டொனேஷன்' கேட்டுண்டு வந்துடப் போருனே" என்றெல்லாம் பல தினுஸான கவலையும் பயமும் உண்டாகிறது. உத்யோகம் பண்ணுவது, குழந்தை குட்டி பெற்றுக்கொள்வது, பணம் சேர்ப்பது, க்ளப்புக்குப் போவது, ஸினிமாவுக்குப் போவது என்றிப்படி—இன்னும் என்னென்ன செய்கிறோமோ அவை எல்லாமும்—ஸந்தோ ஷம் வேண்டும், ஆனந்தம் வேண்டும் என்பதற்காகவே ஆனுலும், ஒவ்வொன்ருலும் உண்டாகிற ஸந்தோஷத்தோடு கூட அதை விடவும் ஜாஸ்தியாக துக்கம், விசாரம், பயம், ஆத்திரம், அவமானம், பொருமை, அஹங்காரம் எல்லா மும் உண்டாகின்றன. அப்படியாவது இந்த ஆனந்தங்களில் எதாவது ஒன்றையாவது சாச்வதமாகப் பிடித்துவைத்துக் கொள்ளமுடிகிறதா என்ருல் அதுவும் இல்லை.

ஏதோ ஒன்றின் மேல் ஆசை உண்டானவுடன் அதை எப்படி அடைவது என்ற கவலை பிறக்கிறது. இன்னொருத்தன் அதை அடைய முயற்சி செய்கிருனென்ருல், போட்டி போடுகிருனே என்று கோபம் வருகிறது. அதை அவன் அடைந்துவிட்டால் பொருமை; நாம் அடைந்து விட்டால் திமிர் - அவனை அவமானப்படுத்தத் தோன்றுவது - இப்படி யாக, ஆசையின் நிகர விளைவாக, ஏதோ ஒரு தோஷத்தை ஸம்பாதித்துக் கொள்கிறோம். ஆசைப்பட்ட வஸ்துவை அடைந்தபின் அல்ப ஸந்தோஷம். அப்புறம் அது தேய்ந்து மறைந்து போய் இன்னொரு வஸ்துவுக்காக இதே மாதிரிப் பறப்பும் தோஷங்களை ஸம்பாதித்துக்கொள்வதும்.

ஆசை வைத்த எதையோ ஒன்றை அடைவதற்காகவே க்ஷணநேரம் சும்மாயில்லாமல் கார்யம் செய்கிறோம். தூக்கத்

Koviloor Digital Library

திலிருந்து முழித்துக்கொண்டு மனஸ் புறப்பட்டதோ இல்லையோ இந்தக் கார்யப் பிசாசு பிடித்துக்கொண்டு சாந்தம் என்ன, நிம்மதி என்ன, நிறைவு என்ன என்றே தெரியாதபடி ஆட்டிவைக்க ஆரம்பிக்கிறது. நடு நடுவிலே ஏதோ கொஞ்சம் ஆசை ஈடேறி, பிறக்கிற நிம்மதியும் த்ருப்தியும் போன சுவடு தெரியாமல் அத்ருப்தி ப்ரவாஹத்தில் எங்கேயோ அடித்துக்கொண்டு போய்விடுகிறது.

கொள்ளுவதும் தள்ளுவதும்

ஒன்றைக் கொள்ளுவதற்காகச் செய்யும் முயற்சியில் கஷ்டம்; அதை நமக்கென்று (வைத்துக்) கொண்டிருப்பதிலேயே எத்தனையோ கஷ்டம்; அது கைவிட்டுப்போனாலும் கஷ்டம். கொள்ளுகிறதால் ஏற்படும் இந்தக் கஷ்டங்களோடேயே கைகோத்துக் கொண்டு, தள்ளுவதால் எற்படும் அநேக கஷ்டங்களும் சேருகின்றன. எந்தக் கார்யமானாலும் ஒன்றைக் கொள்ளுவது (ஸம்பாதிப்பது), இன்னொன்றைத் தள்ளுவது (விலக்குவது) இரண்டும் சேர்ந்து சேர்ந்தே வரும். இல்லாததைக் கொண்டு வரவேண்டும்; வேண்டாமென்பதைத் தள்ளவேண்டும். உடம்பு நன்றாயிருக்கச் சாப்பிடவும் வேண்டும். விஸர்ஜனம் பண்ணவும் வேண்டும் என்றிருக்கிறமாதிரிதான். போக்கிரி வேலைக்காரனைத் தள்ளவேண்டும்; நல்ல வேலைக்காரனைக் கொண்டுவரவேண்டும். சத்ருக்களைப் போக்க வேண்டும்; மித்ரர்களை அடையவேண்டும். பணத்தைக் கொண்டுவர வேண்டுமென்றால், அந்த முயற்சிக்கு இடையூறாக வருகிற எல்லாவற்றையும் தள்ளவேண்டும். எல்லா ஆசைக்கும் இப்படியே.

இப்படிக் கொள்ளுவது, தள்ளுவது இரண்டாலும் உபத்ரவம். (உட்)கொண்ட ஆஹாரம் ஜெரிக்காமல் உபத்ரவப்படுத்துகிறது; அல்லது மறுபடி அதே மாதிரி வேண்டும் என்ற அரிப்பை ஏற்படுத்துகிறது. விஸர்ஜனம் ஆகாவிட்டால் வியாதி உண்டாக்குகிறது; அல்லது ஒரே

Koviloor Digital Library

யடியாகப் "போய்", கால் கை ஓய்ந்து படுக்கும்படிப் பண்ணுகிறது. தள்ளின வேலைக்காரன் நம் கையை காலை உடைத்துப்போட வேண்டும் என்று கருவிக்கொண்டு போகிறான். அவனிடம் பயப்படுகிறோம். "கொண்ட" வேலைக்காரன் இன்க்ரிமென்ட் கேட்கிறான்; ஸ்ட்ரைக் செய்வேனென்று பயமுறுத்துகிறான். ஒரு காலத்தில் கொண்டவனையே இன்னொரு காலத்தில் தள்ளவேண்டியதாகிறது. முதல் நாள் "கொண்ட" ஆஹாரத்தைத்தானே மறுநாள் விஸர்ஜனமாகத் தள்ளுகிறோம்?

சத்ருவிடம் பயப்படுவது போதாதென்று மித்ரர் ரொம்பவும் உறவு கொண்டாடிக்கொண்டு வந்து விடப் போகிறாரே என்று அதைவிட பயப்பட வேண்டியிருக்கிறது. (நம்மைப் பற்றி அவர்களுக்கும் இதே மாதிரி இருக்கலாம்!) ஆக, கொண்டதையே தள்ளும்படி ஏற்படுகிறது.

இப்படிப் பார்த்துக்கொண்டே போனால் கார்யம் செய்வதே பைத்தியக்காரத்தனம் என்று தோன்றுகிறது.

கார்யமே இல்லாமல் வெறும் ஆத்மா மட்டும் இருக்கும்போது எத்தனை நன்றாயிருக்கிறது? நமக்கு ஸமாதி நிஷ்டை பற்றித் தெரியாவிட்டாலும் நித்ரை பற்றித் தெரியும். அந்த நித்ரை எத்தனை ஆனந்தமாயிருந்தது? ஒரு கார்யமும் இல்லாமல், மனஸும் இல்லாமல் எத்தனை நிம்மதியாயிருந்தது? ஒரு ராஜாகூட, ஸகல போக்யங்களிலும் அலுத்துப்போய் தன் ராஜரிகப் பெருமை எதுவுமில்லாத நித்ரையில் விழவேண்டுமென்று தினமும் நினைக்கத்தானே செய்கிறான்? அது எதனால் என்றால் ஆத்மாவாக இருக்கும்போது கொள்ளுவது, தள்ளுவது என்ற இரண்டும் இல்லாததால்தான். ஆத்மாதான் நிஜ நாம் என்று பார்த்தோம். நம்மை நாமே கொள்ளுவது என்பது எப்படி ஸாத்யம்? இனிமேல்தான் நாம் நம்மைக் கொள்ளவேண்டுமென்றால் இப்போது நாம் யாராகவோவா இருக்கிறோம்? நாம் எப்படி நாமாக இல்லாமலிருக்கமுடியும்? நாம் எப்படி

Koviloor Digital Library

யாரோவாக இருக்கமுடியும்?—இந்த இரண்டுமே ஸாத்ய மில்லை. அதே மாதிரி நம்மையே நாம் எப்படித் தள்ளிக் கொள்ளமுடியும்? முடியுமானால் தள்ளுவது யார்? தள்ளிய பின் மிஞ்சக்கூடியது யார்? நம்மைத் தவிர நம்மிடம் எதுவும் இருக்கவே முடியாததாலால், ஆத்மாவைத் தள்ளவோ, தள்ளியபின் மிஞ்சி நிற்கவோ எவரும் இருக்கமுடியாது. நம்மை நாமே தள்ள முடியாது; கொண்டுவரவும் முடியாது. நாம் நாமாக இருந்துகொண்டே இருக்கிறோமாதலால், புதிதாகக் கொண்டு வர முடியாது.

அம்பாளை இப்படிப்பட்ட ஆத்ம ஸ்வரூபமாக வைத்துத் தான் (லலிதா) ஸஹஸ்ரநாமத்தில் அவளுக்கு **ஹேயோபா தேய வர்ஜிதா** என்று ஒரு பெயர் சொல்லியிருக்கிறது. "ஹேயம்" என்றால் தள்ளப்படுவது. "உபாதேயம்" என்றால் கொள்ளப்படுவது, தள்ளவும் முடியாதவளாக, கொள்ளவும் முடியாதவளாக இருப்பவள் "ஹேயோபாதேய வர்ஜிதா." நம்மைத் தவிர வேறாக இருப்பவற்றைத்தான் கொள்ளவும், தள்ளவும் ஓயாமல் கார்யம் செய்து வீணாகிறோம். நாமாகவே இருப்பதற்குக் கார்யம் வேண்டாம். நாமாகவே இருக்கும் போது கார்யத்தின் தொல்லையே இல்லை.

அதனால்தான் தூக்கத்திலே அத்தனை ஸௌக்யம், சாந்தி. ஆசையின் பிடுங்கல், மனஸின் அரிப்பு இல்லாமல், தேவாஸுர யுத்தம் என்றேனே, அது இல்லாமல் நாம் நிம்மதியாயிருப்பது தூக்கத்தில்தான். நமக்குத் தகுதி இல்லாவிட்டாலும் பகவான் பரம கருணையால் தினமும் ஏழெட்டு மணி இந்த சாந்த நிலையை அநுக்ரஹம் பண்ணு கிறார். ஒருகால், பிறரிடம் கருணையால் நாம் அவர்களுக்கு இந்த ஏழெட்டு மணியாவது உபத்ரவம் பண்ணாதிருக்கவே நம்மைத் தூங்கப் பண்ணுவதாகவும் இருக்கலாம்!

தூக்கமல்ல வழி

அப்படியானால், தேவாஸுர யுத்தமில்லாமல், மனஸ் இல்லாமல், அதிலிருந்து முளைக்கும் ஆசை இல்லாமல் நாம்

Koviloor Digital Library

சாந்தமாக இருக்க வழி தூங்கிக் கொண்டேயிருப்பதுதானு? நிறையத் தூக்க மாத்திரை வாங்கி வைத்துக்கொண்டு, முழித்துக்கொள்ளும் போதெல்லாம் போட்டுக்கொண்டு மறுபடி தூங்கிவிடலாமா?

அது ஸரியில்லை.

நல்ல தூக்கத்திலே மனஸின் க்ருத்ரிமம் இல்லை, ஆத்மா மட்டும் இருக்கிறது என்றாலும், "ஆத்மாநுபவம்" என்கிற ஆனந்தமான சாந்தமான நிலையாக நாம் அதைத் தெரிந்து கொண்டு தூக்கத்தின்போது அநுபவிக்கிறோமா என்ன? இல்லை. முழித்துக்கொண்ட பிற்பாடு "ஸுகமாகத் தூங்கினேன்; நிம்மதியாயிருந்தது" என்று சொல்லத் தெரிகிறதே ஒழிய, தூங்கும்போது அந்த ஸுகமோ, நிம்மதியோ நமக்குத் தெரியவில்லை. ஏதோ மரக்கட்டை மாதிரி கிடக்கிறோம். இப்படி வெறும் ஜட நிலைக்கு நம்மைத் தாழ்த்திக் கொள்வது நம்மையே நாம் அவமரியாதை பண்ணிக்கொள்வதுதான். வேறு யாராவது நம்மை "ஜடமே!" என்று கூப்பிட்டால் அவமானம், கோபம் படுகிறோமே, நம்மை நாமே அப்படிப் பண்ணிக்கொள்ள லாமா? ஸ்ருஷ்டி என்ற பெரிய விஷயத்தையே ஏளனப் படுத்துவதாக ஒரு மநுஷ்யன் தன்னை எப்போது பார்த்தா லும் தூங்கிக் கொண்டிருக்கும் ஜட ஸ்திதிக்குத் தாழ்த்திக் கொள்ளக்கூடாது.

ஜட நிலைமைக்கு அப்புறம் ஓரறிவிலிருந்து ஆறறிவு என்று ஸ்ருஷ்டி க்ரமம் உயர்ந்துகொண்டே போவதில் மநுஷ்யன் உச்சாணியில் இருக்கிறான். இந்த ஆறறிவால் இவனுக்கு ஏகப்பட்ட உபத்ரவங்கள், ஹிம்ஸைகள் ஏற்படுவது வாஸ்தவந்தான். ஆனால் அதற்காகப் பேடி மாதிரி, ஒருவன் தன்னை நபும்ஸகனுக்கிக் கொள்கிற மாதிரி, இதுகள் எல்லா வற்றையும் சக்தியிழக்கப் பண்ணி ஜடமாக்குவது கொஞ்சங் கூட அழகில்லை. ஆறறிவுகளால் ஹிம்ஸை, உபத்ரவம் வந்தாலும் எத்தனையோ நல்லதும் பண்ண முடிகிறதோ இல்லையோ? உசந்த தத்வ விசாரணை, ஸங்கீதம், சில்பம்,

Koviloor Digital Library

பொது ஜன ஸேவை, அன்பு, த்யாகம் இப்படி எத்தனையோ நல்லவற்றிலும் கர்மேந்த்ரிய ஞானேந்த்ரியங்களையும் மனஸையும் செலுத்த முடிகிறதோல்லியோ? இப்படிச் செய்ய முயலவேண்டும். அப்புறம், ஆறறிவுக்கு மேலே ஒரே அறிவாக ஆக, ஞான விசாரம் செய்யவேண்டும்; ஆறறிவுக்குக் கீழே ஜடநிலைக்குப் போகப்படாது.

வைராக்யமும் அப்யாஸமும்

பகவான் சொன்னாற்போல வைராக்யத்தாலும், அப்யாஸத்தாலும் அஸுர சக்திகளைத் திரும்பத் திரும்ப அடக்கி, தேவ சக்திகளைச் சக்திகரமாகச் செயலாற்ற வைப்பதே இதற்கெல்லாம் ஆரம்பம்.

ஒன்றைக் கொள்வது, ஒன்றைத் தள்ளுவது என்பதால் ஏற்படும் விருப்பு வெறுப்புகளில் பிடித்தபிடியாயில்லாமல் விலகியிருக்கப் பழகுவதுதான் வைராக்யம். நம் மனஸுக்குப் பிடித்தது பிடிக்காதது என்று பார்க்காமல், இவற்றில் வைராக்யத்தைக் கொள்ள முயற்சி பண்ணிக்கொண்டே, தர்மரக்ஷணைக்காகவும் நம்முடைய ஜீவன் பக்குவப்படுவதற்காகவும் நாம் என்ன பண்ணவேண்டும் என்று சாஸ்த்ரங்களில் சொல்லியிருக்கிறதோ அவற்றின் பொருட்டே இந்த்ரியங்களையும் மனஸையும் ஈடுபடுத்திக் கார்யங்கள் பண்ண வேண்டும். இதிலும் கொள்ளுவது—தள்ளுவது, லாபம்—நஷ்டம், ஜயம்—அபஜயம், மானம்—அவமானம் எல்லாம் வரத்தான் வரும். இவற்றையும் ஸமசித்தத்தோடு எடுத்துக் கொள்ளத்தான் வைராக்யம் தேவை. இதைப் பெறுவதற்கு முயன்று கொண்டே போகவேண்டும்.

இந்த விடாமுயற்சி, அல்லது பயிற்சிதான் "அப்யாஸம்" என்று பகவான் சொன்னது. தேஹாப்யாஸம் என்கிறோம். எத்தனை நாள், ஒவ்வொரு நாளும் எத்தனை தரம், தண்டால், பஸ்கி போடவேண்டியிருக்கிறது? அந்தந்த யோகாஸனத்துக்கு உரியபடி கையை காலை நீட்டி மடக்குவதற்கு எத்தனை நாள் முயற்சியும், பயிற்சியும் பண்ணிக்கொண்டேயிருக்க

Koviloor Digital Library

வேண்டியிருக்கிறது? அப்படிப் பண்ணிக்கொண்டே போனால் கடைசியில் ஒரு நாள் ஸரியாக வந்து விடுகிறதோல்லியோ? அப்படித்தான் அஸுரப்போக்கிலே ஓடும் மனஸை விடா முயற்சியாலும் விடாத பயிற்சியாலும் திரும்பத் திரும்ப இழுத்து தேவ சக்திகளான நல்ல விஷயங்களில் செலுத்த வேண்டும்.

இப்படி ஜட நிலைக்கு மேற்பட்ட ஆறறிவை முதலில் அதன் மிருகத்தன்மையிலிருந்து மநுஷத் தன்மைக்கும் அப்புறம் தேவத் தன்மைக்கும் உசத்திக் கொண்டே போய், அப்புறம் இவற்றுக்கும் உயர்வான ஏக அறிவான ஆத்மாவிலே கரைத்துவிடவேண்டும். முடிவில் ஆறறிவைப் போக்கடித்துக் கொள்ளத்தான் வேண்டும். ஏனென்றால் அதனால் சாச்வத ஸௌக்யம் இல்லை. ஆனால் இப்படிப் போக்கடித்துக் கொள்வது ஆறறிவுக்குக் கீழ்ப்பட்ட ஜட நிலையில் ஆத்மாவின் ஸுகாநுபவம் நமக்கே தெரியாமல் தூங்குவதாக இருக்கக்கூடாது; இவற்றுக்கு மேற்பட்டதாய், இவற்றுக்கு ஆதாரமாய், எது இல்லாமல் இவை இயங்க முடியாதோ அதுவாக உள்ள ஆத்மாவை நன்றாக உணர்ந்து அறிகிற சாந்த ஸமாதி நிஷ்டையாயிருக்க வேண்டும்.

உழைத்து உழைத்தும் யோசித்து யோசித்தும் களைத்துப் போகிற உடம்புக்கும் மனஸுக்கும் ஓய்வு தருவதற்காக எவ்வளவு தூங்க வேண்டுமோ அவ்வளவே தூங்கணும். அதை சாந்த ஸமாதி என்று நினைத்துவிடக் கூடாது.

ஆனந்த ஞான சாந்தம்

ஆத்மாவின் சாந்தம் சூன்யமாகச் சாவிலும் தூக்கத்திலும் இருக்கிற மாதிரியான சாந்தம் அல்ல. புத்தர் சொன்ன நிர்வாணம் சூன்யத்தின் சாந்தம்தான். ஆனால் நம்முடைய சங்கர பகவத் பாதர்கள் உபநிஷத்துக்களின் ஆதாரத்திலிருந்து காட்டியது என்னவென்றால் ஸமாதி நிலையில் அடைகிற ஆத்ம சாந்தமென்பது ஆனந்த மயமானது, ஞான மயமானது என்பதே. அது பூர்ணாநுபவம். சூன்யாநுபவ

Koviloor Digital Library

மில்லை. செத்த பின்னும் அழியாத உயிர்த் தத்வமாயுள்ள ஆத்மா ஞானமயமாயும், ஆனந்த மயமாயும் இல்லாமல் வேறெப்படி இருக்கமுடியும்?

ஆத்மா ஞானமயம் என்பது எப்படி என்றால்: உயிருள்ள தாக ஒன்றைச் சொல்வதே அது வெறும் ஜடமாயில்லாமல் அறிவும் உணர்ச்சியும் பெற்றிருப்பதைக் கொண்டுதான் அல்லவா? எனவே உயிருக்குமுயிராயுள்ள ஆத்மா என்பது அறிவும் உணர்ச்சியும் ஒன்றுகிவிட்ட சைதன்யமயமாயிருப் பதுதானென்பது நிச்சயமாகிறது. இதைத்தான் ஞானம் என்பதும்.

ஆத்மா எதனோடும் நேராக ஸம்பந்தப்படாமலிருப்பது என்றும் முன்னேயே சொன்னேன். ஆனபடியால் அது அறி வதற்கும், உணர்வதற்கும் வெளி வஸ்து எதுவுமில்லை. எனவே அது எதை அறியும், உணரும் என்றால் தன்னையே தான் அறிந்து கொள்வதாயும் உணர்ந்து கொள்வதாயுமிருக் கும். வேறு மனஸோ, இந்த்ரியமோ கிட்டே போய் அறிந்துகொள்ள முடியாத ஆத்மாவை அந்த ஆத்மா மட்டும்தான் தெரிந்துகொண்டிருக்கிறது. ஸமாதியில் மனஸ் 'டப்' பென்று நின்றுவிட்டவுடன் இப்படித் தன்னைத் தானே தெரிந்து கொள்ளும் ஆத்மாநுபவம் உண்டாகிறது. தூக்கத்தில் ஆத்மாநுபவம் தெரிவதில்லை.

"ஆத்மா ஆனந்த மயம் என்பது எப்படி?" என்றால், "வேறெப்படி அது இருக்க முடியும்?" என்று திருப்பிக் கேட்கத் தோன்றுகிறது. கட்டுப்பாடே இல்லாமல் பரம ஸ்வதந்திரமாய் உள்ள ஒன்று ஆனந்தமாயில்லாமல் வேறு எப்படி இருக்க முடியும்? ஆசைகளைக் கொண்டு மனஸ் போடும் கட்டு, இந்த்ரியக் கட்டு, மற்ற மநுஷ்யர்கள் - இடம் - பொருள் - ஏவல் இவற்றின் கட்டு, கர்மபந்தம், ஸம்ஸாரபந்தம் ஆகியவற்றால்தான் நாம் துன்பப்படுவது— இந்த எதுவும் ஆத்மாவுக்கு இல்லை. அதே ஸமயத்தில் அது அறிவோ உணர்ச்சியோ இல்லாததாயுமில்லாமல் சைதன்ய மயமாய், சிக்கனமாய் இருக்கிறது. எனவே தனது கட்டுப்

Koviloor Digital Library

பாடற்ற நிலையை அது உணர்ந்து அறியவும் செய்யும். இப்படிப்பட்ட பரம ஸ்வாதந்த்ரிய அநுபவமானது பேரானந்தமாகத்தானே இருக்கும்? கட்டுக்குள்ளேயே நமக்கு அவ்வப்போது தாற்காலிகமாக ஆனந்தம் வருகிற தென்றால், கட்டுப்பாடே இல்லாமல் சாச்வதமாயுள்ள ஆத்மாவின் இன்பமே பேரானந்தம். நமக்கு இன்னொருத்தரிடமிருந்து உண்டாகிற துக்கம், பயம், கோபம் எதுவும் தன்னையன்றி வேறெதையும் அறியாத ஆத்மாவுக்கு இல்லாததாலும் அதற்கு மாறாத ஸதாநந்தமாக, நித்யப் பேரின்பமாக இருக்கிறது.

நமக்கு மேலே அடக்க யாராவது இருக்கிறார்கள். எல்லாவற்றுக்கும் மேலே இயற்கை என்கிற சக்தியின் ஆதிக்கத்தில்தான் எல்லாரும் மாட்டிக் கொண்டிருக்கிறோம். நம்மை ஆபீஸர் அடக்குகிறார்; அவரையும் அவர் பெண்டாட்டி அடக்குகிறாள்! எல்லாரையும், எல்லாவற்றையும், இயற்கையையுங்கூட அடக்கி ஆள்கிறவனாக ஈச்வரன் இருக்கிறானே, அவனுங்கூட இப்படி த்வைதமாக ஈச்வரனென்றும் பக்தன் என்றும் இருக்கும்போது, பக்த "பராதீனன்" என்பதாக பக்தர்களின் ஆதிக்கத்தின்கீழே இருக்கிறான்! த்வைதம் இருந்துவிட்டால் ஸ்வாதீனம் கிடையாது. பராதீனம்தான். ஸ்வாதீனம் நம்மில் யாருக்கும் இல்லை. அது இருந்தாலொழிய பூர்ணானந்தம் ஏது? தன்னை அடக்க எந்த மேல் சக்தியும் இல்லாமல் இருக்கும் அத்வைத ஆத்மாவுக்கே அகண்டாநந்தம் என்பது இருக்கிறது. அந்த ஆனந்த ஸமுத்ரத்தில் ஒரு துளி, இரண்டு துளிதான் மாயையானது அந்த ஆத்மாவின் ஆதாரத்தில் ஜீவாத்மாவின் வாழ்க்கையை நடத்தி வைக்கும்போது, அதாவது இந்த மாயா நாடகத்தைப் போடும்போது, ஜீவனுடைய இந்த்ரியங்களால் வெளிப்பொருட்களின் அநுபோகத்தின் மூலம் பெறப்படுவது.

உண்மையில் வெளி வஸ்துவில் ஆனந்தமில்லை. உள்ளே உள்ள ஆத்ம ஜ்யோதிஸை மாயையானது ஜீவனின் அந்தக்கரணத்தில் ப்ரதிபலித்து இந்த்ரியங்கள் வாயிலாக

Koviloor Digital Library

அநுபோகத்தைக் கொடுக்கும்போது அந்த ப்ரதிபலிப்பின் ரச்மிகள் (கிரணங்கள்) தான் வெளி வஸ்துவிலிருந்து வரும் ஆனந்தம் போல மாறித் தெரிகிறது!

ஆத்மாநந்த கிரணமே வெளியின்பம்

தக்ஷிணாமூர்த்தி ஸ்தோத்ரத்தில் ஒரு ச்லோகத்தில்* இவ்விஷயத்தை நம் ஆசார்யாள் சொல்கிறார். நிறைய சின்னச் சின்ன த்வாரமுள்ள ஒரு கடத்துக்குள் ஒரு தீபமிருக்கிறாற்போல் உடம்புக்குள் ஆத்மா அறிவு ஜ்யோதிஸாக, ஆனந்த ஜ்யோதிஸாக இருக்கிறது. அதை மாயை ப்ரதிபலித்து கண், காது, மூக்கு முதலிய இந்த்ரிய த்வாரங்களின் வழியாக சின்னச் சின்ன ஞான, ஆனந்த ரச்மிகளாக வெளியே அனுப்புகிறது. இந்த ரச்மிகள் எந்தப் பொருள்களின்மேல் படுகின்றனவோ அப்பொருள்களும் கொஞ்சம் ப்ரகாசம் பெறுகின்றன. இந்த்ரிய ரச்மிகள் இந்த ப்ரகாசத்தைக் கொடுப்பது தாங்களே என்பதையும், தங்களுக்கும் முடிவாக ப்ரகாசம் தருவது ஆத்மாவே என்பதையும் அறியாமல், அந்த வெளிப்பொருள்களிலேயே இந்த ப்ரகாசம் இயற்கையாக இருப்பதாகவும் தாங்கள் அவற்றைத் தொட்டு அவற்றிடமிருந்து அதைப் பெறுவதாகவும் நினைத்து ஸந்தோஷிக்கின்றன. ஆத்மாவின் அறிவு, ஆனந்தம் ஆகியவற்றின் லவலேசத்தையே வெளிப்பொருள்களைப்பற்றித் தங்களுக்கு ஏற்படும் அறிவாகவும், வெளிப் பொருள்கள் தங்களுக்குத் தரும் ஆனந்தமாகவும் அசட்டு ஜீவன் எண்ணுகிறான்.

ஒரு பந்தல் போட்டிருக்கிறது. ஸூர்ய வெளிச்சம் கீற்று ஓட்டை வழியாக உள்ளே வருகிறது. இதை ஒரு குழந்தை பார்த்தால் அந்த இடத்தில் பந்தலேதான் ஒளியை ஸ்ருஷ்டித்து அனுப்பியிருக்கிறதென்று நினைக்கும். ஸூர்யனைப் பந்தல் மறைப்பது, அதன் இடுக்கு வழியாய்

---

* "நாநா சித்ர கடோதர ஸ்தித" எனத் தொடங்கும் நான்காவது ச்லோகம்.

Koviloor Digital Library

ஸூர்ய வெளிச்சம் வருவது எல்லாம் குழந்தைக்குத் தெரியாது. நாமும் அப்படித்தான் இருக்கிறோம். ஆத்ம ஜ்யோதிஸை மறைக்கிற நம் சரீரத்தில் அதன் லவலேசத்தைப் பாயவிடுவதாக இந்த்ரியாநுபவங்கள் இருக்கின்றன. நாமோ இந்த்ரியங்களுக்கு விஷயமாகும் வஸ்துகளிலிருந்தே அநுபவம் வருவதாக மயங்குகிறோம்! ஜ்யோதிஸை மறைக்கிற பந்தலிலிருந்தே வெளிச்சத்தை உண்டாக்கிக்கொள்ள முயற்சி செய்தால் எப்படியிருக்கும்? அப்படித்தான் நாம் தேஹத்தைக் கொண்டு நித்யானந்தத்தைப் பெற நினைப்பது. பந்தலைப் பிரித்துவிட்டால் எல்லாம் வெளிச்சமாய் விடுவது போல் தேஹ ப்ரக்ஞை போனால் ஆத்மாவுக்கே உரியதான பூர்ணானந்த ஸ்வரூபமாகி விடலாம்.

வெளிப்பொருள் அதுவாகவே ஆனந்தத்தைத் தர வில்லை என்பதைக் கொஞ்சம் ஆலோசித்தாலும் புரிந்து கொண்டு விடலாம். காஷ்மீர் சால்வை அதுவே ஆனந்தம் தருவது என்றால் எக்காலத்திலும் ஒருத்தனுக்கு ஹிதமாகத் தானே இருக்கவேண்டும்? ஆனால் அது எத்தனை விலை உயர்ந்ததாயிருந்தாலும், எத்தனை மழமழப்பாயிருந்தாலும் நல்ல கோடை காலத்தில் மேலே பட்டாலே தாங்காமல் தூக்கி எறிகிறோமே! அதனால் ஆனந்தம் அதிலேயே இல்லை என்று புரியத்தானே செய்கிறது? ரொம்பவும் அழகான ஒரு ராகத்தை நல்ல சாரீரமும் ஞானமும் உள்ள பாடகர் ஆலாபனை செய்கிறாரென்பதால் அது எப்போதும் ஆனந்தமளிப்பதாக உள்ளதா என்றால்—நமக்கு ரொம்பப் பிரியமானவர் "போய்" விட்டார் என்று சேதி வருகிறது; அப்போது ரேடியோவிலே அந்த ராகத்தை அந்த வித்வான் தேவகானமாகப் பாடுகிறாரென்றால் ஆனந்தமா தருகிறது? கேட்கப் பிடிக்காமல் நிறுத்தித்தானே விடுகிறோம்? ஜ்வரக்காரனுக்கு நல்ல பக்ஷணமோ, ஐஸ்க்ரீமோ ஆனந்தம் தருமா? சொல்லிக்கொண்டே போகலாம்—ஆனந்தம் வெளிவஸ்துவில் இல்லை என்று காட்டுவதற்கு. ஜீவனுடைய மனஸ் கலப்பதில்தான் ஆனந்தம்

Koviloor Digital Library

உண்டாகிறது. இவன் மனஸ் எதிலும் கலக்காமல் தூங்கிக் கொண்டிருக்கும்போது எந்த வஸ்துவாவது ஆனந்தம் தருகிறதா? இந்த மனஸின் ஆனந்தமோ நிலையாய் இருப்ப தேயில்லை. இதற்கு எத்தனை ஆனந்தமோ அதைப்போல ஆயிரம் மடங்கு அழுகை என்றுதான் இத்தனைநாழி பார்த்தோம். இடுக்குவழியாக துளித்துளி வெளிச்சத்தை உள்ளே விட்டு, பாக்கி முழுக்க இருட்டையே தருகிற பந்தல் மாதிரி, துளித்துளி ஆனந்தத்தோடு ஏராளமான துக்கத்தையே மனஸ் தருகிறது. இதன் க்ருத்ரிமம் இல்லாமல் இதற்கு ஆதாரமான ஆத்மாவுக்குப் போனுல்தான் சாச்வத ஆனந்தமென்பது.

ஜீவன் தானே நித்ய ஆனந்த ஸ்வரூபனுன ஆத்மாவாக இருந்துகொண்டு, தாற்காலிக ஆனந்தங்களுக்காக வெளியே அலையாக அலைகிருன். இதைத் தன் வயிற்றுக்குள்ளிருந்தே வாஸனை எழும்புகிறது என்று தெரிந்துகொள்ளாத ஒரு கஸ்தூரி மான் வாஸனை உண்டாகுமிடத்தைத் தேடித்தேடித் திரிவதற்கு உபமித்து அத்வைத சாஸ்த்ரங்களில் சொல்லியிருக்கிறது.

மனஸ் அடிபட்டுப்போன ஸமாதியில் சைதன்ய மயமான இந்த ஆத்மானந்தம் நன்ருக அறியப்பட்டதாகும். சாந்தமான அந்த ஆனந்தம் எப்படியிருக்கும் என்று நமக்குத் தெரியாது.

மனத்துக்குப் புரியாத சாந்தாநந்தம்

ஆத்மா தெரியாமல் மனஸ் மட்டுமே தெரிவதான நம் நிலையில் ஆனந்தம் என்பது சக்தி நிறைந்த உணர்ச்சி என்றும், சாந்தம் என்பது உணர்ச்சி அடங்கிப்போன நிலை என்றும் தோன்றுகிறது. எனவே உணர்வு என்பதே ஒரு சக்தியாயுள்ளதால் ஆத்மாவின் சாந்தத்தில் எப்படி ஆனந்தத்தை உணரமுடியும் என்று தோன்றலாம். ஆனுல் நம் மனஸுக்குப் புரிவதாகவும், நம் மனஸுக்கு ஒத்த விதத்திலும் ஆத்மாவின் சாந்தமும், ஆத்மாவின் ஆனந்தமும் இருக்க வேண்டும் என்று எப்படி எதிர்பார்க்கலாம்?

Koviloor Digital Library

ஆத்மாதான் மனஸுக்கு அப்பாற்பட்ட மனோதீத வஸ்து வாயிற்றே! அதன் அறிவு, உணர்வு, ஆனந்தம், சாந்தம் எல்லாம் எப்படியிருக்கும் என்று அதற்குத்தான் தெரிய முடியுமே தவிர மனஸுக்கு எப்படித் தெரியமுடியும்? நம் உடம்பிலேயே கண்ணுக்கு ஆனந்தமான ஒரு காட்சியைக் காது புரிந்துகொண்டு ஸந்தோஷிக்க முடிகிறதா? காதுக்கு ஆனந்தமான கானத்தைக் கண்ணால் ரஸிக்க முடிகிறதா? இப்படி யோசித்துக்கொண்டு போனால் நம் ஸகல இந்த்ரியங்களுக்குமே புரியாத ஒரு ஆனந்தமும் இருக்கலாம் என்று தெரியும். ஆனந்தமாயுள்ளபோதே அது சாந்தமாயு மிருக்கலாம்.

சாந்தம் என்பது என்ன? சலனமில்லாமல் தனக் குள்ளேயே அடங்கியிருப்பதுதான். மனஸின் ஆனந்தம் இன்னொன்றின் அநுபோகத்திலேயே விளைவதால், அந்த இன்னொன்றை நோக்கி மனஸ் சலிப்பதாலேயே அநுபோகம் ஏற்படுவதால், அப்போது 'சாந்தம்' என்பதாகத் தனக் குள்ளேயே அடங்கியிருக்கும் நிலை ஏற்பட முடியாமலிருக் கிறது. ஆத்மாவுக்கோ 'இன்னொன்று' என்று வெளியே எதுவுமே தெரியாமல் தன்னிலேயே அது ஆனந்திப்பதால், அப்போது தனக்குள்ளேயே அடங்கியிருப்பதன் சாந்தமும் கிடைக்கிறது.

மனஸுக்கு அதீத சக்திகள் உண்டாகும்போது, அது அமாநுஷ்ய ஆற்றல்களைப் பெறும்போது, மநுஷ்ய சக்திக்கு மேற்பட்ட கந்தர்வர்கள், பித்ருக்கள், தேவர்கள் ஆகியவர் களுக்குப் படிப்படியாக ஒருத்தரைவிட இன்னொருத் தருக்குப் பலமடங்கு ஆனந்தம் ஸித்திக்க முடியும் என்று தெரிகிறது. இப்படி வரிசையாக ஒன்றுக்குமேல் ஒன்றான ஆனந்தங்களைத் தைத்திரீய (உபநிஷ)த்தில் "ஆனந்தவல்லீ" என்றே பெயருள்ள அத்யாயத்தில் சொல்லியிருக்கிறது. அந்த ஆனந்தங்கள் என்ன என்று மநுஷ்யனுக்குப் புரியாது. காபி சாப்பிடுவதிலும், கச்சேரி கேட்பதிலும் மநுஷ்யனுக்கு என்ன ஆனந்தம் என்று ஒரு மாட்டுக்குப் புரியுமா? அப்படித்

Koviloor Digital Library

த்தான் இதுவும். இப்படிப்பட்ட பல ஆனந்தங்களின் முடிந்த முடிவான உச்சஸ்தானம்தான் ஆத்மானந்தம்.

(பரா)சக்தியின் ஆனந்தமும் சாந்த ஆத்மாவிலேயே

லலிதா ஸஹஸ்ரநாமத்திலே அம்பாளுக்கு ஒரு பெயர்—

ஸ்வாத்மாநந்த-லவீ-பூத ப்ரஹ்மாத்யாநந்த ஸந்ததி :

என்று இருக்கிறது. ப்ரஹ்மாதி தேவதைகளுடைய அத்தனை ஆனந்த வரிசைகளையும் தன்னுடைய ஆத்மாநந்தத்தில் லவலேசமாக்கி விடுபவள் என்று அர்த்தம்.

நம்முடைய ஆனந்தம் ரொம்பக் குறைவாக இருப்ப தற்குக் காரணம் நமக்கு மேலே எண்ணிமுடியாத தேவ-அஸுர சக்திகளுக்கு ஆதிக்யம் இருந்து, நாம் அவற்றுக்குக் கட்டுப்பட்டு ஆடவேண்டியிருப்பதுதான். நம்மைவிட சக்தி அதிகமான தேவதைகளில் பல இனங்கள். அவற்றில் ஒன்றைவிட ஒன்றுக்கு சக்தி அதிகம். ஒன்றுக்கு எந்த அளவுக்குச் சக்தி அதிகமோ அந்த அளவுக்கு அது அதற்குக் கீழ்ப்பட்ட சக்திகளின் ஆதிக்கக் கட்டுப்பாட்டுக்கு ஆளாகாமல் இருக்கிறது. இந்த 'ப்ரபோர்ஷ'னின் படியே ஒவ்வொரு இனத்துக்கும் ஆனந்தம் ஜாஸ்தியாக இருக்கும். தேவ இனங்களின் முடிவிலே ப்ரஹ்மா இருக்கிறார். அதனால் அவருக்கு "ஃப்ரீ"யாக இருப்பதன் ஆனந்தம் ரொம்பவும் அதிகம். அவருடைய ஆனந்தமும்கூட கட்டுப்பாடே அடியோடு இல்லாத ஆனந்தமில்லை. அவரும் தகப்பனார் மஹாவிஷ்ணுவுக்குக் கட்டுப்பட்டவர். பராசக்திக்கு, அவளைத் தவிர எல்லாருமே கட்டுப்பட்டவர்களாதலால் இவரும் கட்டுப்பட்டவர்தான். அதனால்தான் அடியோடு கட்டுப்பாடு இல்லாமல், தன்னை அடக்கி வைக்க யாருமே இல்லாமலிருக்கிற அம்பாளின் ஆனந்தமானது ப்ரஹ்மாதிகளின் ஆனந்தத்தையும் லவலேசமாக்கி விடுகிறதென்று சொல்லியிருக்கிறது.

சக்தி ஜாஸ்தியாக ஆக ஆனந்தம் ஜாஸ்தி என்பதால் அந்த சக்தியினாலேயே ஆனந்தம் உண்டாகிறது என்று

Koviloor Digital Library

அர்த்தமில்லை. சக்திக்கும் ஆனந்தத்துக்கும் நேர் ஸம்பந்தமில்லை. ஒருத்தருக்குத் தம்மைவிடக் குறைந்த சக்தியுள்ளவர்மீது தம்முடைய சக்தியினால் ஆதிக்கம் செலுத்த முடிகிறது, அவரைக் கட்டுப்படுத்த முடிகிறது என்பதிலே ஏற்படும் ஆனந்தம் தப்பான அஹங்காரத்தில் ஏற்படுவது; அதை முறையான ஆனந்தம் என்று சொல்லமுடியாது. பின்னே, சக்தி ஜாஸ்தியானால் ஆனந்தம் எப்படி ஜாஸ்தி ஆகிறது என்றால், அப்போது நம்மைவிடவும் அதிக சக்தியோடு இருந்துகொண்டு நம்மைக் கட்டுப்படுத்துபவர்கள் குறைச்சலாகிக்கொண்டு வருகிறார்கள். ஆகையால், நாம் இன்னொருத்தரை ஆளமுடிகிறது என்பதைவிட, நமக்கு மற்றவர்களுடைய ஆளுகையின் கட்டுப்பாடு குறைந்து, நம்முடைய ஸ்வதந்திரத்தின் எல்லை ஜாஸ்தியாகிறது என்பதாலேயே ஆனந்தம் ஏற்படுகிறது. ஒரு குமாஸ்தா ஆபீஸராகிறாரென்றால், அவர் நல்லவராயிருந்தால், தாம் பிறத்தியார்மீது 'தாட் பூட்' செய்ய முடியுமென்ற ஆனந்தம் அவருக்கு ஏற்படுவதில்லை. ஆனாலும் தமக்கு இப்போது ஆபீஸரின் கட்டுப்பாடு இல்லை, ஸ்வதந்த்ரமாகச் சில கார்யம் செய்யலாம், முடிவுகள் எடுக்கலாம் என்பதில் ஆனந்தம் உண்டாகத்தான் செய்யும்.

ஆபீஸர் மாதிரியான பெரிய பொஸிஷனில் சில பேர் இருக்கிறார்கள். ஆனால் இவர்களுக்கு குமாஸ்தாக்கள் கட்டுப்பட்டிருப்பதைவிட அதிகமாக இவர்கள் இவர்களுக்கும் மேலதிகாரிகளிடமோ, அல்லது எம்.எல்.ஏ போன்றவர்களிடமோ கட்டுப்பட்டு நடக்கவேண்டுமென்று இருக்கும்போது, 'நம்மைவிட அந்த குமாஸ்தா எவ்வளவோ தேவலை; அவனுக்கு இருக்கிற 'ஃப்ரீடம்' நமக்கு இல்லை' என்று வருத்தப்படுகிறார்கள். ஆகையால் சக்தியைவிட ஃப்ரீடம்தான் ஆனந்தம் தருவது என்று தெரிகிறது.

பெரிய கம்பெனிகளில் மானேஜராகக் கொடி கட்டிப் பறந்த சிலபேர் ராஜிநாமா பண்ணிவிட்டு, அதோடு 'கம்பேர்' பண்ணிப் பார்க்கும்போது ரொம்பச் சின்னதாக

Koviloor Digital Library

ஸொந்தத்தில் கம்பெனி ஆரம்பிக்கிறார்கள். "ஏன் இப்படி வருமானம், வசதி எல்லாவற்றையும் குறைத்துக்கொண்டு ஸொந்த பிஸினெஸ் ஆரம்பித்திருக்கிறீர்கள்?" என்று கேட்டால், "அதுவா? அங்கே என்னதான் பெரிய பொறுப்புகள், பெரிய வருமானம் முதலானது இருந்தாலும் மேலே உள்ள டைரக்டர்களுக்கு ரொம்பவும் 'obey' பண்ணிக் கொண்டிருக்கவேண்டியிருந்தது. அவர்கள் 'கன்ட்ரோல்' தாங்காமல்தான், பாக்கி ஸமாசாரங்களில் நஷ்டமேற்பட்டாலும் ஃப்ரீயாக இருக்கணுமென்று சொந்த பிஸினெஸ் ஆரம்பித்தது" என்கிறார்கள்.

ஆகையினால் ஸ்வாதந்த்ரியத்தால்தான் ஸந்தோஷமே தவிர சக்தியினால் இல்லை. சக்தி அதிகமாகும்போது ஸந்தோஷம் அதிகமானாலும்கூட அது அப்போது தங்கள் மீது கட்டுப்பாடு குறைவதால் ஏற்படுவதுதான்.

அதனால்தான் இங்கே பராசக்தியின் பரமானந்தத்தைச் சொல்லும்போதுகூட அவளுடைய மஹாசக்தியால் ஆனந்தம் உண்டாகிறது என்கிற அபிப்ராயத்தைக் கொடுக்காமல், "ஸ்வாத்மாநந்த" என்று சொல்லியிருக்கிறது. அதாவது அவளுக்குத் தன்னுடைய சக்தியைக் குறித்து ஆனந்தம் ஏற்படாமல், கட்டுப்பாடே இல்லாமல் பரம ஸ்வாதந்த்ரியத்தோடு இருக்கும் ஆத்மாவை அநுபவித்துக்கொண்டிருப்பதிலேயே இப்படி மஹாதானந்தம் ஏற்படுகிறதென்று காட்டியிருக்கிறது.

ஆத்மாவுக்கும் சக்திக்கும் ஸம்பந்தமில்லை. சக்தி என்பது வெளியிலே காட்டி, இன்னொன்றை நல்லதாகவோ கெட்டதாகவோ பாதிப்பதிலேயே உள்ள விஷயம். ஆத்மாவுக்கு வெளி என்று ஒன்று இல்லை. அது எதையும் எந்த விதத்திலும் பாதிப்பதுமில்லை. சக்தி த்வைதத்தைக் குறித்தது. ஆத்மா அத்வைதம். ஸாக்ஷாத் பராசக்திக்கும் கூட, சக்தியினாலில்லாமல், சாந்தமாக ஆத்மாவை அநுபவிப்பதாலேயே உத்க்ருஷ்டமான (மிகவும் உயர்ந்ததான) ஆனந்தம் ஏற்படுகிறது.

Koviloor Digital Library

சக்தி ஒரே குணமயம், கார்யமயம். ஆத்மா நிர்குண நிஷ்க்ரியம். அதைத்தான் சிவம் என்பது. 'ஆத்மாநந்தம்' என்கிருற்போல 'சிவாநந்தம்' என்றுதான் வார்த்தை உண்டே தவிர 'சக்தியாநந்தம்' என்று இல்லை. பராசக்திக்கும் ஆனந்தம் ஆத்மாவில்தான், சிவத்தில்தான். அவள் தக்ஷிணுமூர்த்தியாக இருந்துகொண்டு பிறருக்கும் ஞானமாகிய இந்த சிவாநந்தத்தைத் தருவதாக ஸஹஸ்ர நாமத்தில் வருகிறது.

தக்ஷிணுமூர்த்தி ரூபிணீ
ஸநகாதி ஸமாராத்யா
சிவஞான ப்ரதாயிநீ

அந்த மஹா பெரியவளான பராசக்திக்குக் கிடைக்கும் ஆத்மானந்தம் நமக்கும் அநுபூதி நிலையில் பரிபூர்ணமாக உரியதேயாகும். 'ஆத்மா' என்னும்போது அதில் மஹா சக்தியான அம்பாளின் ஆத்மா, அல்ப சக்தர்களான நம்முடைய ஆத்மா, நம்மை விடவும் அல்ப சக்தி படைத்ததான கொசுவின் ஆத்மா என்று வித்யாஸமில்லை. இருப்பது ஒரே ஆத்மாதான். அது சக்தியிலே அம்பாளிடம் பூர்ணமாகவும், மற்றவர்களிடம் அந்த சக்தியின் கோடாநுகோடியில் ஒரு பங்காகவும் வேஷம் போட்டுக் கொண்டிருந்தாலும், வேஷமில்லாத அடிப்படையிலே எல்லாரிடமும் ஒன்ருகவே தான் இருக்கிறது. அதனுல், ஒரு 'ப்ரம்மாவேகூட த்வைத நிலையிலிருக்கும்போது பெறக்கூடிய ஆனந்தத்தை விடவும் கோடிகோடி மடங்கு பெரிதான ஆனந்தத்தை நாம் அத்வைதமாக ஆத்மாநுஸந்தானம் பண்ணும்போது அநுபவிக்கலாம்.

அந்த ஆனந்தம் எப்படிப்பட்டதென்று இப்போது நமக்குப் புரியாது. இத்தனை செயல்களுக்கும் உணர்ச்சிகளுக்கும் மூலமான அம்பாளும்கூட செயலில்லாத, வெளி உணர்ச்சியில்லாத அந்த ஆத்மானந்தத்தில்தான் முழுகியிருக்கிருளென்ருல் அது நமக்குப் புரியாது. பூர்ண அமைதியிலேயே பூரித்த ஆனந்தமாயும் இருக்கிற நிலை அது

Koviloor Digital Library

பூர்ண அமைதியே அதைத் தெரிந்துகொண்டு அநுபவிக்கும் பூரித்த உணர்வு நிலையாகவும் அப்போது இருக்கிறது.

நித்ரை நிலை

தெரியாத ஆனந்தம் ஆனந்தமே இல்லை. இங்கே உசந்த கவிதைப் புஸ்தகம் இருக்கிறது; ஆனால் நமக்குக் கண் தெரியவில்லை என்றால் என்ன ப்ரயோஜனம்? ஆத்மா மட்டுமே இருப்பதன் ஆனந்தத்தை அநுபவ பூர்வமாகத் தெரிந்துகொள்ள முடியாத நித்ரை இப்படிப்பட்டதுதான். அதைத் "தெரிந்த ஆனந்த"மாக உணர்வதே ஸமாதி நிலை. எத்தனையோ ஸாதனை செய்தே அதைப் பெற முடியும். தெரியாத ஆனந்தத்தில் துக்கமும் தெரியாமலிருப்பதாக உள்ள நிம்மதியைத்தான் போனால் போகிறதென்று பகவான் எல்லாருக்கும் நித்ரையில் தந்திருக்கிறான். தன் சாந்த ஸௌக்யத்தை ஜீவன் தெரிந்துகொண்டு ஆத்மாவாக ப்ரகாசித்துக் கொண்டிருப்பதான ஸமாதி நிலையை எல்லாருக்கும் தரவில்லை. அவன் க்ருபையை நம்பி, அதற்கான ஸாதனையைச் செய்தவர்களுக்கே தருவான்.

சற்று முன்னாடி ஒரு உபமானம் சொன்னேன். குடத்துக்குள்ளே இருக்கிற தீபத்தின் ஒளி அதன் ஓட்டைகள் வழியாக வெளியே துளித்துளி தெரிகிறமாதிரிதான் ஆத்மானந்தத்தில் துளித்துளி, இந்த்ரிய விஷய அநுபவங்களில் உண்டாகிறதென்று சொன்னேன். இது ஜாக்ரத் ஸ்திதியில் (விழிப்பு நிலையில்) நாம் விஷயங்களை அநுபவிக்கும்போது. ஸுஷுப்தியில் (தூக்கத்தில்) எப்படியிருக்கிறதென்றால் உபமானத்தை இன்னம் கொஞ்சம் விஸ்தாரம் பண்ண வேண்டும். குடம் என்பதற்குப் பதில் கூடை என்று வைத்துக் கொள்ளுங்கள். ஸாதாரணமாக பல த்வாரங்களுள்ள குடம் இருப்பதில்லை; குடத்துக்குள்ளே தீபத்தை வைக்க ப்ரமேயமும் அதிகம் ஏற்படுவதில்லை. ஆனால் காற்றடிக்கும்போது தீபத்தின் மேலே ஒரு கூடையைப் போட்டுக் கவிழ்த்து விடுவதுண்டு. அப்போது கூடையின்

Koviloor Digital Library

இடுக்குகள் வழியாய் தீபத்தின் ரச்மிகள் கொஞ்சங் கொஞ்சம் வெளியில் வரும். ஜாக்ரத்தில் இப்படி இருக்கிறதென்று வைத்துக்கொண்டால் ஸுஷுப்தியில் எப்படியிருப்பதாகச் சொல்வது? கூடையின் விளிம்பைப் பிரம்புகளை ஒரு மாதிரி முறுக்கிப் பண்ணியிருக்கும். அதனால் அதைப் போட்டுக் கவிழ்க்கிறபோது விளிம்பு பூமியிலே முழுக்கப் பதியாமல் அங்கங்கே கொஞ்சம் தொட்டும் தொடாமலுமாகத் தானிருக்கும். இதனால் பெரிய காற்றாக அடிக்கிறபோது, கூடைக்குக் கீழாகக் காற்று போய் தீபம் அணைந்துவிடப் போகிறதேயென்று, ஒரு கம்பளியையும் எடுத்துக் கூடை மேல் போட்டுவிட்டால் எப்படியிருக்கும்? அதன் 'நெசவிலே நம் கண்ணுக்குத் தெரியாத அதி ஸூக்ஷ்மமான இடுக்குகள் இருக்குமாதலால், இப்போதும் தீபம் எரிவதற்கான அளவு காற்று உள்ளே போகத்தான் செய்யும். ஆனாலும் நம் பார்வையிலோ, கூடையின் இடுக்குகளை கம்பளி மறைத்து விடுவதால் முன்னே தெரிந்த தீப ரச்மிகள் இப்போது அடியோடு தெரியாது. தூக்கத்தில் இப்படித்தான், உள்ளே ஆத்ம ஜ்யோதிஸ் ஸ்வஸ்தமாக இருந்துகொண்டிருக்கும் போதிலும், அதன் ஒளி விழிப்பு நிலையில் ஏதோ துளித்துளி விஷயாநுபவத்தில் தெரிகிற மாதிரிகூட இல்லாமல் எல்லாம் ஒரே இருட்டாகிவிடுகிறது. விழிப்பு நிலையின் பிக்கல் பிடுங்கல் தூக்கத்திலில்லைதான் என்றாலும், அதே ஸமயத்தில் விழிப்பிலே ஏதோ ஒரு நிழலாட்டமாகவாவது ஆத்மானந்தத்தில் துளி தெரிவதுங்கூடத் தூக்கத்திலே அடியோடு தெரியாமல் ஆத்மாநுபவத்தைக் குறித்தமட்டில் ஒரே இருட்டில் இருக்கிறோம். ஒரேயடியாக ஜ்யோதிஸிலேயே இருக்கிற, ஜ்யோதிஸாகவே இருக்கிற ஸமாதி நிலைக்கும் இதற்கும் எத்தனை வித்யாஸம்?

நம் முயற்சி இல்லாமல், தூக்கம் என்பது தானாக நம்மைக் கவ்விக் கொள்கிறது. "தூக்கம் கண்ணைச் சுற்றிக் கொண்டு வருகிறது" என்னும்போது அது நம்மை மீறிய சக்தி என்று தெரிகிறது. எனவே அதை நமக்கென்று கெட்டியாய்ப் பிடித்து வைத்துக்கொள்வதும் நம் கையில்

Koviloor Digital Library

இல்லை. "என்னவோ பாதி ராத்ரி முழிப்புக் கொடுத்து விட்டது. அப்புறம் என்ன பண்ணியும் தூக்கம் வரலை. உடம்பை என்னவோ பண்றது" என்கிறோம். அதாவது தூக்கம் என்பது எதுவோ ஒரு வெளி இயற்கைச் சக்தியாக நம்மை இஷ்டப்படி ஆட்டிவைப்பதுதான். தூக்க மாத்திரை சாப்பிட்டு நாமே அதை வரவழைத்துக் கொள்வதாகத் தோன்றும்போதுகூட இதுதான் உண்மை நிலை.

கனவு நிலை

தூக்கம் என்பதை நாமாக மாத்திரை, இல்லாவிட்டால் ஏதோ ஒரு தைல ஸ்நானத்தால் வரவழைத்துக்கொண்டு விடலாம். ஆனால் அந்தத் தூக்கம் நிஜமாகவே ஆழ்ந்த தூக்கமாக இருக்கும்படியாக நம்மால் பண்ணிக்கொள்ள முடியாது. நல்ல ஆழ்ந்த தூக்கத்தில்தான் மனஸ் அடங்கியிருப்பது. ஆனால் எப்போதும் அப்படியில்லாமல் அரைத் தூக்கம், கால் தூக்கம், வீசம் தூக்கம், முக்கால் தூக்கம் என்னும்படியாகப் பல நிலைகளில் நாம் நித்ரையில் இழுத்துப் போகப்படுகிறோம். அப்போதெல்லாம் மனஸ் முணுக் முணுக்கென்றோ, அதைவிடச் சற்று அதிகப் பிரகாசமாகவோ வேலை செய்துகொண்டுதான் இருக்கும். இந்த நிலைகளில்தான் மனஸானது ஸ்வப்னங்களை உண்டாக்குகிறது. ஜாக்ரத்தில் (விழிப்பு நிலையில்) நாம் புத்தி பூர்வமாகச் செயற்பட்டதால் ஓரளவு அமுக்கிவைத்திருந்த ரொம்பவும் பயமூட்டுவதான, காமவிகாரம் மிகுந்ததான, அழவைப்பதான, அல்லது பேத்தல் என்று புத்தி ஒதுக்கி வைத்துவிட்டதான தாறுமாறான விஷயங்களை எல்லாம் இப்போது நம்முடைய அந்த புத்திக் கட்டுப்பாடு இல்லாமல் மனஸ் தன்னிஷ்டப்படி வெளியே விட்டு ஸ்வப்னங்களைப் படைக்கிறது. அதனால் ரொம்ப பயங்கரமாய் ஏதாவது ஸ்வப்னம் கண்டு "ஊழ் ஊழ்" என்று ஊளையிட்டுக்கொண்டு எழுந்திருக்கிறோம். இல்லாவிட்டால் குய்யோ முறையோ என்று அழுகிறோம். 'பைத்தியம் மாதிரி இப்படி கன்னு

Koviloor Digital Library

பின்னு என்று ஸம்பந்தமில்லாததை எல்லாம் அஸம்பாவிதமாகச் சேர்த்துக் கனுக் கண்டிருக்கிறோமே!' என்று நினைக்கும்படியாக அநேக ஸ்வப்னங்கள் வருகின்றன. ரொம்பவும் மனஸை பக்தி, யோகம் என்று ஈடுபடுத்திப் பரிசுத்திக்காக, ப்ரம்மசர்யத்துக்காக ப்ரயத்னம் பண்ணிக் கொண்டிருக்கும் ஸாதகர்கள், "எங்களுக்கு இப்படித் தகாததால் ஸ்வப்னம் வந்துவிட்டதே" என்று எங்கள் மாதிரி இருக்கப்பட்டவர்களிடம் அழுது, பரிஹாரம் கேட்கிறார்கள்.

இதனாலெல்லாம், நம் ஸாதனையால் இயற்கைக்கும் மேலே உள்ள ஈச்வரனின் ப்ரஸாதமாகப் பெறப்பட்டு, நம்மால் உறுதிப்படுத்தி வைத்துக்கொள்ளக்கூடிய ஸமாதி நிஷ்டையாக இல்லாமல், தன்னிஷ்டப்படி நம்மைத் தன்னுடைய பல லெவல்களில் அடித்துக்கொண்டு போகிற தூக்கத்தால் தேவாஸுர யுத்தத்துக்கு முடிவுகாண நினைப்பது வழியேயில்லை என்று தெரிகிறது. தூக்கத்திலும் ஸ்வப்ன ரூபத்தில் அஸுர கணங்கள் எப்போது வேண்டுமானால் படை எடுக்கக்கூடும். எப்போதாவது வேண்டுமானால் அம்பாள் தர்சனம், ஆலய தர்சனம் மாதிரி நல்ல ஸ்வப்னம் வரலாம். அதுவே அஸம்பாவிதமாக மாறியும்விடலாம். மனஸின் உழப்பறிசல், உள்ளே அடக்கிவைத்த ஆசையின் இழுபறி எல்லாம் தூக்கத்திலும் பிய்த்துக்கொண்டு கிளம்ப வழியிருப்பதால் தூங்கிக்கொண்டேயிருந்துவிட்டால் சாந்தி என்பது இல்லை. தூக்க மருந்துக்கும் ஸ்வப்னாவஸ்தை ஏற்படாமல் தடுப்பதற்கு சக்தியில்லாததால் அதைக் கொண்டும் பூரண சாந்தமான நித்ரை பெறமுடியாது. அப்படியே சாந்தமாக ஆழ்ந்து தூங்கினாலும் அது ஜடத்தனந் தானே யன்றிப் பேரானந்தமில்லை என்று முன்னேயே சொன்னேன்.

ஓயாமல் வெளியிலே ஓடிக்கொண்டிருக்கும் மனஸை உள்ளே இழுத்து, 'உள்ளுக்குள்ளே உனக்கு அடி ஆதாரமாக ஒரு கார்யமுமில்லாமலிருக்கும் ஆத்மாவை நினை' என்று

Koviloor Digital Library

பழக்கிக்கொண்டேயிருந்தால்தான், அது அப்படியே நினைத்து நினைத்து, களைத்து விழுந்தபோது, ஸாக்ஷாத் அந்த ஆத்மா மட்டுமே பிரகாசித்துக்கொண்டு விளங்கும். சாச்வத சாந்த ஸௌக்கியத்தை அநுபவிக்கலாம். வேறே வழி கிடையாது.

யதோ யதோ நிச்சரதி மனச்-சஞ்சல-மஸ்திரம் |
ததஸ்ததோ நியம்யைதத் ஆத்மந்யேவ வசம் நயேத் ||

என்கிறார் பகவான். "ஸ்திரமாக ஒன்றில் நிற்காமல் சஞ்சரித்துக்கொண்டே இருக்கும் மனஸானது எதெதைப் பற்றி வெளியிலே ஓடினாலும், அது ஒவ்வொன்றிலிருந்தும் இந்த மனஸை இழுத்து அடக்கி ஆத்மாவிடமே வசப்படுத்தி வைக்கவேண்டும்" என்கிறார்.

மனம் ஆத்மாவிடம் வசப்படுவது எப்படி?

'ஆத்மா மனஸுக்கு அப்பாற்பட்டது; மனஸோடு ஸம்பந்தப்படாமல் வெறுமே தானாக இருந்துகொண்டிருப்பது' என்று சொல்லிவிட்டு, 'மனஸை இழுத்து அடக்கி ஆத்மாவிடம் வசப்படுத்து' என்றும் சொன்னால் என்ன அர்த்தம்? மனோதீதமான, நிஷ்க்ரியமான (கார்யம் செய்யாததான) ஆத்மா மனஸை எப்படித் தன் வசத்தில் வைத்துக் கொள்ளும்?

ஸரி, மனஸுக்கு ஆத்மா அப்பாற்பட்டதுதான், அதற்குக் கார்யமும் இல்லைதான். ஆனாலும் நம்மால் புரிந்து கொள்ளவே முடியாத மாயையால் இதே ஆத்மாதான் மனஸுக்கும் ஆதாரமாய் நிற்கிறது; அது இல்லாவிட்டால் மனஸால் ஒரு கார்யமும் பண்ண முடியாது என்றும் பார்த்தோமல்லவா? இப்படி மாயையால் ஆத்மாதான் மனஸ் என்று ஒன்றை அவிழ்த்துவிட்டு, அது வெளியிலே ஓடிக் கொண்டிருப்பதற்கும் சக்தி தருகிறது என்றால், அவிழ்த்து விட்டதைத் தனக்குள்ளேயே எப்படியோ இழுத்துக் கரைத்துக்கொண்டுவிடும் என்பதையும் ஏற்க வேண்டியதுதானே?

Koviloor Digital Library

மாயை என்பது என்ன? அதுதான் ஈச்வர சக்தி. அம்பாள் என்று அதைத்தான் சொல்வது. உயிரும், அறிவும், உணர்வுமாக உள்ள ஆத்ம சைதன்யத்தை மாயைதான் ஸூர்ய வெளிச்சத்தை ஒரு கண்ணாடி ப்ரதிபிம்பிக்கிறது போலப் பண்ணி இந்தச் சின்ன ப்ரதிபலிப்பின் ப்ரகாசத்திலே ஜீவனின் அந்தஃகரணம்* உயிர், உணர்ச்சி, அறிவு எல்லாவற்றையும் பெறும்படியாகச் செய்வது. அல்லது இன்னொரு தினுஸாகவும் சொல்வார்கள். எங்கேயும் நிறைந்திருக்கும்படியான ஆகாசத்தில் (வெட்டவெளியில், space-ல்) ஒரு குடம் இருக்கிறதென்றால் அந்தக் குடத்துக்குள்ளேயும் அந்த வெட்டவெளி இருக்கத்தான் இருக்கிறது. எங்கும் பரவியுள்ளதை மஹாகாசம் என்றும், குடத்துக்குள் இருப்பதை கடாகாசம் என்றும் சொல்வார்கள். இம்மாதிரியே மஹாகாசம் போலுள்ள அகண்ட ஆத்ம சைதன்யத்தை மாயை என்பது கடாகாசம் போலக் கண்டமாக்கி ஜீவ சைதன்யமாகப் பண்ணுகிறது. இப்படிப் பண்ணும் மாயா சக்தி இதை நீக்கவும் கூடும்தானே? தான் குறுக்கே வந்து ப்ரதிபலிக்காமல் விலகி ஜீவன் அப்படியே ஆத்ம சைதன்ய ஜ்யோதிஸ்ஸாக இருக்கும்படி அது விடக்கூடும்தானே? கட ரூபத்துக்குள்ளே அகண்டத்தைக் கண்டமாக்கிய அது அந்த ரூபத்தை அழிவித்து ஜீவனை ஆத்மாகாசமாகவே ஆக்கவும் கூடும்தானே?

"மனஸை அடக்கி ஆத்மாகிட்டே வசப்படுத்து" என்றவுடன் ஆத்மாவிலே மனஸ் எப்படி ஸம்பந்தப்படும் என்று கேட்கிறவர்கள், இன்னொன்றும் யோசித்துப் பார்க்கணும். 'மனஸை அடக்கு', 'மனஸை இழு' என்றெல்லாம் சொல்வது மட்டும் எப்படி ஸாத்யம் என்று யோசித்துப் பார்க்கணும். அஞ்ஞான தசையிலுள்ள ஜீவனுக்குத்தான் இந்த உபதேச

---

* எண்ணங்களுக்கு ஆதாரமான சித்தம், உணர்ச்சிகளை அநுபவிக்கும் மனஸ், இவற்றின் தன்மைகளை ஆராயும் புத்தி, இதற்கெல்லாம் அடிப்படையான 'நான்' எனும் தனி ஜீவ பாவமான அஹங்காரம் என்ற நான்கும் அந்தஃகரணத்தில் அடங்கும்.

Koviloor Digital Library

மெல்லாம். ஞானமடைந்து விட்டவனுக்கு உபதேசம் எதற்கு? அஞ்ஞான தசையில் உள்ள ஜீவத்தன்மைக்கே மனஸ்தான் காரணம். மனஸுக்கு மேற்பட்டதாக அஞ்ஞான ஜீவனிடம் எதுவும் கிடையாது. அப்படியிருக்கும்போது, "மனஸை இழு, அடக்கு" என்றால் எதைக்கொண்டு ஜீவன் இதைப் பண்ணமுடியும்? அவனிடம் உள்ள ஸர்வமுமே மனஸ்தான் என்றிருக்க, அதை வேறு எதனால் அவன் உள்ளே இழுக்கவோ அடக்கவோ முடியும்? மனஸ்தான் அவனுக்காக எல்லாம் பண்ணுவதும். அவனையே ஆட்டிப் படைத்து எல்லாம் செய்யப் பண்ணுவதும். அப்படியிருக்க அதை அடக்குவது, இழுப்பது என்பதாக என்னென்னவோ பண்ணுவது என்றால் எப்படி எது பண்ணும்? மனஸே தன்னை இழுத்துக்கொள்ளுமா, அடக்கிக்கொள்ளுமா? அடங்காமல் ஓடுவது தானே அதன் இயற்கையே?

ஈச்வர க்ருபையால்

இங்கெல்லாம்தான் மஹாசக்தனான ஈச்வரன் என்பவனின் க்ருபை வருகிறது. மாயையால் இந்த ஜீவனை யும் லோகத்தையும் தோற்றுவித்தவன் அவன்தான். அந்த மாயா ஸ்ருஷ்டிகளில் ஒன்றேயான மனஸ், தான் ஒன்றிலே இழுபடணும், அடங்கணும் என்று ஆசைப்படவேண்டு மானால் முடியுமே தவிர, தன்னைத்தானே அப்படிப் பண்ணிக் கொள்ளமுடியாது. அதன் ஸ்வபாவமே சஞ்சலம் என்றி ருக்க, அது எப்படித் தானே அடங்கமுடியும்? "சஞ்சலம் ஹி மந: க்ருஷ்ண"—என்று அர்ஜுனன் சொன்னபோது, "ஆமாம். ஸம்சயமே இல்லாமல் அது (சஞ்)சலமானதாக வும், அடக்க முடியாததாகவும்தான் இருக்கிறது" என்று பகவானும் ஒப்புக்கொள்கிறாரே: "அஸம்சயம் மஹா பாஹோ மநோ துர்நிக்ரஹம் சலம்". ஆகையால் உடனேயே அவர் அப்யாஸத்தாலும், வைராக்யத்தாலும் நாளா வட்டத்தில் அதை அடக்கலாம் என்று சொன்னபோதிலும், இந்த அப்யாஸத்தைப் பண்ணும்படியாவும் அந்த மனஸ் ஜீவனை விட்டால்தானே முடியும்? சஞ்சல ஸ்வபாவமுள்ள

Koviloor Digital Library

அது அப்படி விடுமா? அதே மாதிரி வைராக்யத்தை இவன் பழக்கிக் கொள்வதற்கும் ஆசாமயமான அது அநுமதிக்குமா? இதற்கெல்லாம் ஒரே பதில்தான் ஈச்வர க்ருபை. "ஐயோ, பாவம்! இந்த சஞ்சல மனஸைக் கொண்டும் ஜீவன் இப்படிப்பட்ட ஸாதனையில் இறங்கியிருக்கிறுனே!" என்று ஈச்வரன்தான் இரங்கி இவனுடைய மனஸை அடங்கப் பண்ணி, உள்ளே இழுபட வைத்து, அப்யாஸ வைராக்யங்களில் ஜீவன் தீவ்ரமாகும்படி அருள் செய்வது.

ஜீவன் மாதிரியில்லாமல் ஈச்வரன் மனஸுக்கு மேற்பட்ட சக்தி. அதனுலே அவனுடைய க்ருபையில்தான் மனஸ் அடங்க முடியும். அது தன்னைத்தானே அடக்கிக் கொள்ள வில்லை. ஈச்வரன்தான் மாயைக் கலப்பற்ற தன்னுடைய ஆத்ம ஸ்வரூபத்திலே ஜீவமனஸை வசப்படுத்தி வைக்கிறுன். ப்ரயாஸை, ப்ரயத்னம்தான் ஜீவன் செய்யக் கூடியது. அதற்கு மேலே மாயா நாடகத்தைப் பண்ணினவன்தான் ஸித்தியை அருள வேண்டியவன். ஆனபடியால், ஓயாமல் வேலை பண்ணிக்கொண்டேயுள்ள மனஸ் எப்படி வேலையே பண்ணுததும், தனக்கு அப்பாற்பட்டதாயுமிருக்கிற ஆத்மாவிலே கரைந்து போக முடியும் என்று தர்க்க ரீதியில் கேட்பதில் அர்த்தமில்லை. அதைத்தானே மாயை இதுவாக்கியிருக்கிறது? இதே மாதிரி, திரும்ப இது அதுவாக ஆகவும் இடம் கொடுத்து, தான் விலகிப்போய் விடுகிறது.

மனஸால் ஆத்மாவைப் பிடிக்க முடியாது. ஆனுல் நமக்குத் தெரிந்தது, நம்மை ஸதா ஸர்வ காலமும் இறுக்கிப் பிடித்துக் கொண்டிருப்பது, இந்த மனஸ்தான். அதனுல் இதை வைத்துக்கொண்டுதான் நாம் ப்ரயாஸை, ப்ரயத்னம், ஸாதனை செய்தாக வேண்டும். மனஸினுல் முடியக் கூடியது, உபத்ரவம் பிடித்த தன்னை எப்படியாவது தொலைத்துத் தலை முழுகிவிட்டு உபத்ரவமே இல்லாத ஆத்மாவாக ஆகிவிட வேண்டுமென்று நினைப்பதுதான். தன்னுல் முடிந்த இந்த நினைப்பை அது விடாமல் வைராக்யத்தோடு அப்யஸித்துக்

Koviloor Digital Library

கொண்டேயிருக்கவேண்டும். அப்புறம்—க்ருபை என்று ஒன்று இருக்கிறதோல்லியோ? அது பாக்கி வேலையைப் பார்த்துக்கொண்டுவிடும். மனஸை இல்லாமல் பண்ணி ஆத்ம ஸாக்ஷாத்காரத்தை அது அநுக்ரஹம் செய்துவிடும். இதைத்தான் பகவான்,

"தத் ப்ரஸாதாத் பராம் சாந்திம் ஸ்தாநம்
ப்ராப்ஸ்யஸி சாச்வதம்
(கீதை 18. 62)

—ஈச்வர க்ருபையால் உயர்ந்த, சாச்வதமான, சாந்த நிலையை அடைவாய்" என்று சொன்னார்.

தர்க்கத்துக்கு அப்பாற்பட்டது

மாயையால் என்ன முடியும், முடியாது, க்ருபையால் என்ன முடியும், முடியாது என்று நாம் எப்படி நிர்ணயிப்பது? நம்முடைய தர்க்கமும் அந்த மாயையின் ஸ்ருஷ்டியாகவே இருக்கும்போது, இதற்குப் புரிகிற முறையில்தான் அது நடக்கவேண்டும் என்றால் அர்த்தமில்லை. கார்யமில்லாத சாந்த ஆத்மா ஸதா ஸர்வ காலமும் எதையாவது பண்ணிக்கொண்டிருக்கும் அசட்டு நாமாக ஆகியிருப்பது ப்ரத்யக்ஷமாகத் தெரிகிறது. இது தர்க்கப்படி ஸரியில்லை என்று சொல்லி என்ன ப்ரயோஜனம்? நிதர்சனமாகத் தெரிகிறதே! அதனால், இதற்குக் காரணமான ஈச்வர சக்தி இதையே திருப்பி வைத்து அசட்டு நாம் சமர்த்து ஆத்மா ஆகவும் செய்யும் என்று ஒப்புக்கொள்ளவேண்டியதுதான்.

ப்ரத்யக்ஷச் சான்றுகள்

மனஸ் விலகி ஆத்ம ஸாக்ஷாத்காரம் ஸித்திப்பதை புத்தியாலும் புஸ்தகத்தாலும் நிரூபிக்க முடியாது. அதற்கு நிரூபணம் ப்ரத்யக்ஷமாக இப்படி மனஸ் அடிபட்டுப்போய் ஆத்மானந்தத்தில் ஆழ்ந்திருக்கும் மஹான்கள்தான்.

Koviloor Digital Library

(ஸதாசிவ) ப்ரம்மேந்த்ராள் அப்படியிருந்தார். கையை வெட்டினுல்கூடத் தெரியாமல் அவர் பாட்டுக்கு இருந்தார். கொடுமுடியிலே அவர் நிஷ்டைகூடிக் காவேரிக்கரையில் உட்கார்ந்தார். வெள்ளம் புரண்டுவந்து அவரை அடித்துக் கொண்டுபோய் அப்புறம் அவர் மேலேயே மண்மேடிட்டு விட்டது. பஹு நாள் கழித்து யாரோ அதைக் கொத்தின போது உள்ளேயிருந்த அவருடைய கையிலே அடிபட்டு, ரத்தம் பீய்ச்சி அடித்தது. "அடாடா, உள்ளே யாரோ ஆஸாமி இருக்காப்பல இருக்கே!" என்று அவர்கள் இழுத்துப் போட்டார்கள். அவர் பாட்டுக்கு ஆனந்தமாகச் சிரித்துக்கொண்டு எழுந்திருந்து கால் போன போக்கில் போனுர் என்கிருர்கள்.

'அது முன்னூறு வருஷத்துக்கு முந்திய கதை. ஒருவேளை கதை கட்டினதாகவும் இருக்கலாம். எப்படி நம்புவது?' என்று கேட்கலாம். ஸமீப காலத்தில் நம்மகத்துப் பெரியவர்களே நேரில் பார்த்தவர்களாகவும் இப்படிப்பட்ட மஹான்கள் இல்லாமல் போகவில்லை.

கும்பகோணத்தில் இருந்த மௌன ஸ்வாமிகளை நேரில் பார்த்தவர்கள் ஆச்சர்யமாகச் சொல்கிருர்கள். நேரம், காலம் தெரியாமல் அவர் பாட்டுக்கு அப்படியே நிஷ்டையில் இருப்பாராம். கண்திறந்த நிலையில் ஸமாதியில் போனுராஞல், எத்தனை மணி, எத்தனை நாள் அவர் ஸமாதி ஸ்திதியிலிருந்தாலும் திறந்த கண் கொட்டவே கொட்டாமல் நிலைகுத்திட்டபடி இருக்குமாம். விரலை முழிக்குள்ளே விட்டால் கூட, இமை மூடாமல் இருக்குமாம். வாயிலே சிறிது ஆஹாரத்தைப் பக்தர்கள் திணிப்பார்கள். அது ஏதோ கொஞ்சம் உள்ளே போனுல் உண்டு. இல்லாவிட்டால் அது வாயில் அப்படியே அப்பிக்கொண்டு, எறும்பெல்லாம் போட்டுப் பிடுங்கி உதடு வீங்கித் தொங்கும். அதுவும் தெரியாமல் அவர் நிஷ்டையில் இருப்பார். முகத்திலே ஆத்ம ஜ்யோதிஸின் ப்ரகாசம் வீசிக்கொண்டிருக்கும்.

Koviloor Digital Library

தூக்கத்திலும் மனஸ் இல்லைதானென்றாலும் அப்போது ஆத்ம ஞானமுமில்லாததால் ப்ரகாசத்துக்குப் பதில் வழக்கமாயுள்ள சோபைகூட இல்லாமல், "சொல்லக் கூடாதது" மாதிரிக் கிடக்கிறோம்! ஆத்மாநந்தத்தின் ப்ரதி பலிப்பாக ஸமாதியிலுள்ள மஹான்களுடைய முகத்திலோ ப்ரகாசமான மந்தஹாஸம் தவழ்ந்து கொண்டிருக்கும்.

இரண்டு மூன்று நாள் ஆஹாரப் பற்றும் பசையும் ஒட்டிக் கொண்டிருந்தும் மௌன ஸ்வாமி நிஷ்டை கலையாமலே இருந்தால் மற்றவர்கள் அதை எடுத்துப்போட்டு, வாயை சுத்தி பண்ணி, வேறு ஆஹாரத்தை வைத்துப் பார்ப்பார்களாம்.

வேறு யோகி ச்ரேஷ்டர்களைப் பற்றியும் இப்படியெல் லாம் சொல்கிறார்கள். சர்க்கரையை அவர்கள் நாக்கில் வைத்து அழுத்தினால்கூடத் துளி எச்சில் சுரக்காமல், எத்தனை நாழியானாலும் கரையாமல் அது அப்படியே இருக்குமாம். நம்முடைய இஹலோக ஆசைகளுக்கும் ஆனந்தங்களுக்கும் மரத்துப்போய், போக்ய வஸ்துக்களின் ருசி இழுப்புக்குக் கொஞ்சங்கூட ஆளாகாமல், இதற்கெல்லாம் அப்பாற்பட்ட பேரானந்தத்தை ருசித்துக் கொண்டு ஜீவன் அதிலேயே ஒன்றாகித் திளைத்திருக்க முடியும் என்பதற்கு இதெல்லாம் அத்தாட்சி.

இதேபோலக் காசியில் பாஸ்கரானந்தர் என்பவரை தினந்தினம் நேரில் பார்த்த பல பேரும் ஸாக்ஷி சொல் கிறார்கள்.

நமக்கே நன்றாகத் தெரியும், ரமண ஸ்வாமிகளை. புழுவும் பூச்சியும் போட்டுத் தொடை, ப்ருஷ்டபாகங்களைக் குடைந்தாலும் தெரியாமல் ஆத்மாராமனாக உட்கார்ந் திருக்கிறார்.

இப்படிப்பட்டவர்களின் அநுபவத்துக்குப் பெரிய சான்று இவர்களுடைய ஸந்நிதி விசேஷம்தான். இன்றைக்கு*

---

* உரையின் இப்பகுதி ஸ்ரீ ரமண மஹர்ஷிகள் நம்மிடை ஸ்தூலமாக இருந்த காலத்தில் அருளப்பட்டது.

Koviloor Digital Library

நம் தேசத்தின் பல பாகத்திலிருந்தும் வெளிதேசங்களி லிருந்துங்கூடப் பலபேர் ரமணாச்ரமத்துக்கு வருகிறார்கள். "எத்தனையோ மனச்சஞ்சலங்களோடு போராடிக்கொண்டு போனோம். அவர் முன்னாடி போய் உட்கார்ந்ததும் அத்தனை சஞ்சலமும் எங்கே போச்சு என்று தெரியாமல் மறைந்து ஒரே சாந்தமாய் விட்டது" என்று சொல்கிறார்கள். இதிலே சிலபேர் அப்புறம் நல்ல ஸாதகராகிறார்கள். அப்படி ஆகாமல் ஸம்ஸார வாழ்க்கைக்கே திரும்புபவர்கள்கூட, ஆச்ரமத்தில் மட்டும் தங்கள் மனஸ் ஸம்ஸாரத்தில் ஒட்டாமல் கொஞ்ச நாழியாவது ஒரு அலாதியான அமைதியை அநுபவித்தது என்று சொல்கிறார்கள். இத்தனைக் கும் அவர் என் மாதிரி லெக்சர் அடிப்பதில்லை. ஏதாவது கேட்டால் மட்டும் சொல்கிறார். ஆனாலும் அவர் எதுவும் பண்ணாமல் சும்மாயிருப்பதே மற்றவர்களுக்கு ஒரு சாந்தியை அளிக்கிறது என்கிறார்கள். தூங்குகிறவனைப் பார்த்தால் இப்படி ஆகிறதோ? 'டல்' தானே அடிக்கிறது?

ஜீவனுள்ளதாக ஒரு அநுக்ரஹ சக்தி ஞானிகளிட மிருந்து மற்றவர்களுக்குப் பாய்வதாலேயே, இவர் களெல்லாரும் சூன்யமான ஒரு சாந்தத்தில் இருப்பவர் களில்லை, பூர்ணானந்தமான சாந்தத்திலே இருப்பவர்கள் என்று நிரூபணமாகிறது. அநுக்ரஹசக்தியாலே அந்த மாதிரி உயர்ந்த நிலை மற்றவர்களுக்கும் தாத்காலிகமாகவாவது கிடைக்கிறது என்றும் 'ப்ரூவ்' ஆகிறது. இதையே விஸ்தாரம் செய்து பார்த்தால், ஈச்வர க்ருபையால் ஜீவனுக்கு சாச்வத மாகவே மனஸ் விலகி ஆத்மாநுபவம் உண்டாக முடியும் என்பதை ஒப்புக்கொள்ள முடிகிறது.

குழந்தைபோல ஒரு வஸ்திரமில்லாமல் அன்று சுக ப்ரஹ்மமும், ஸமீபகாலத்தில் ஸதாசிவ ப்ரஹ்மமும் ஆனந்த மாக காடு மலை நதி என்று ஸஞ்சாரம் பண்ணிக்கொண்டிருந் தார்களென்று படிக்கிறோம்.

ஆத்மாநுபவிகள் அடித்த சிலையாக நிர்விகல்ப ஸமாதி நிஷ்டையிலிருக்கும்போதுகூட அவர்கள் உள்ளே ஆனந்த

Koviloor Digital Library

மயமாயிருப்பது அவர்களுடைய வெளித்தோற்றத்திலிருந்தே தெரியும்.

ஜீவன் முக்தர்கள்

இந்த நிஷ்டை கலைந்த பிறகும்கூட அவர்களின் உள்ளுக்குள்ளே அநுபவம் மாறுது. "நிஷ்டை கலைந்தது" என்பது நம் பார்வையில்தான். நிஷ்டை கலைந்து அவர்கள் வெளி உணர்வோடிருப்பதாக நாம் நினைக்கும்போதுகூட அவர்கள் ஆத்மாவிலேயேதான் ஐக்யமாயிருப்பார்கள். மனஸின் பந்தமும் ஸம்ஸார பந்தமும் கர்மபந்தமும் துளிக்கூட இல்லாமல் இங்கேயே மோக்ஷம் அடைந்துவிட்ட ஜீவன் முக்தர்கள் என்று அவர்களைத்தான் சொல்வது. தூங்கிக்கொண்டே ஒரு குழந்தை தாய்ப்பால் சாப்பிடுகிறதல்லவா? இப்படி அவர்கள் உள்ளே ஸமாதி நிஷ்டையிலிருந்து கொண்டேதான் நமக்கு பஹிர் முகப்பட்டதுபோல (புறவுணர்வடைந்தது போலத்) தோன்றி வெளிலோகத்தில் ஸஞ்சாரம் செய்வது, ஸல்லாபம் செய்வது எல்லாமும். இந்த வெளி நாடகத்தில் அவர்கள் கோபப்படுகிறாற்போல, துக்கப்படுகிறாற்போல இருக்கும் ஸமயங்களிலும்கூட அவர்கள் வாஸ்தவத்தில் ஸதாநந்தமான ஆத்மாவிலேயே ஒன்றுபட்டிருப்பவர்கள்தான்.

அந்த உள்ளநுபவத்தை சூன்யம் என்றும் பாழ் என்றும் நம் பார்வையிலிருந்து அந்த அநுபவிகளும்கூட சில ஸமயங்களில் சொல்வதுண்டு. உண்மையில் அது ஆனந்த பூரிதமான நிலையே!

ஆத்மாவிடமிருந்தே ஆனந்தம்

ஆத்மாநுபவம் என்பது ஒன்றுமில்லாத ஒரு 'வெறிச்சு' நிலையாக இல்லாமல் ஆனந்த பூர்ணமாயிருக்கும் என்பதற்கு நான் proof-கள் கொடுக்கப் பார்ப்பது எனக்கே சிரிப்பு வருகிறது. ஆனந்தம், ஆனந்தம் என்று நாம் சொல்வதே

Koviloor Digital Library

ஆத்மாவின் ஸ்வரூப லக்ஷணந்தான். முன்னே நான் காட்டின த்ருஷ்டாந்தத்திலே, ஒரு கடத்துக்குள் இருக்கிற தீபத்தின் ப்ரகாசத்தைத் துளித்துளி அதிலுள்ள சின்ன த்வாரங்களின் மூலம் கிரணமாகப் பெற்று, இந்தக் கிரண ஸ்பர்சத்திலேயே லவலேசம் ஒளி பெற்ற வஸ்துக்கள், "அந்த தீபத்துக்கு ப்ரகாசம் இருக்கா, இல்லியா?" என்று கேட்டால் எப்படி இருக்கும்? அப்படித்தான் புலன்களால் ஏதோ கொஞ்சம் எப்போதோ ஆனந்தம் காண்கிற நாம் ஆத்மாவுக்குக் கேவல ஸ்திதியில் ஆனந்தம் உண்டா என்று கேட்பதும்.

நாய் என்ன பண்ணுமென்றால், அது ஒரு காய்ந்துபோன எலும்புத் துண்டைப் பார்த்தால் அதிலே என்றைக்கோ ஒட்டிக்கொண்டிருந்த மாம்ஸ வாடை இருப்பதை முன்னிட்டு அதைப் போட்டுக் கடிக்க ஆரம்பிக்கும். நாய் ஆஹாரம் பண்ணுவதற்கு அந்த எலும்பிலிருந்து ஒரு ஸத்தும் வராது; ஆனால் அது நாயின் வாயில் குத்தி இந்த நாயின் ரத்தமே வெளிவர ஆரம்பிக்கும். அறிவில்லாமல் அந்த நாய் எலும்பிலிருந்தே ரத்தம் வருவதாக நினைத்து ஸந்தோஷப்பட்டுக்கொண்டு, அதை மேலும் மேலும் கடித்துத் தன் வாயை மேலும் மேலும் வ்ரணமாக்கிக் கொண்டு, அதிலிருந்து வடிகிற தன் ரத்தத்தையே குடித்து ஆனந்தப்படும். இப்படித்தான் வெளி வஸ்துக்களின் அநுபோகத்தில் நாம் பெறும் ஆனந்தமென்பது அந்த வெளி வஸ்துக்கள் தருவதல்ல. நாயின் வாய் ரத்தம் போல நம் இந்த்ரியங்களிலேயே உள்ள ஆனந்தம்தான் அது. அந்த ரத்தமும் எங்கேயிருந்து வந்தது? நாயுடைய உயிரிலிருந்து தான். இம்மாதிரி இந்த்ரிய இன்பம் என்பதும் ஆத்மா விலிருந்தே வருவதுதான். வெறுமே ஆத்மாவாக மட்டும் இருந்துகொண்டு அந்தப் பூர்ணானந்தத்தில் நிறைந்திருக் காமல், இந்த்ரியத்தினால் அதிலே துளி பாகம் ஆபாஸப்பட்டு ("ஆபாஸப்பட்டு" என்றால் "ப்ரதிபலிக்கப்பட்டு" என்று அர்த்தம். "அறுவறுப்பான ரூபமடைந்து" என்று

Koviloor Digital Library

அர்த்தமில்லை. இப்படி ஆபாஸப்பட்டு) வெளிப்படுவதையே நாம் ஆனந்தம் என்று நினைக்கிறோம்; அதுமட்டுமில்லாமல், இந்த ஆனந்தமும் இந்த்ரியங்களின் அநுபோகத்துக்கான விஷயங்களிலிருந்து (object-களிலிருந்து) வருவதாக வேறு நினைக்கிறோம்! ஆனந்தம் "தன்னது" தான், subjective-தான்; வெளி வஸ்துவிலிருந்து வரும் objective ஸமாசாரம் அல்ல. நிஜமான "தானும்" ஆத்மாதானேயன்றி அந்த ஃகரணமோ, இந்த்ரியங்களோ அல்ல.

"உடைய" அல்ல; உடையவரே!

இதைப் ப்ரக்ருதத்தில் (நடைமுறையில்) நம்முடைய பேச்சு வழக்கிலிருந்தே தெரிந்துகொள்ளலாம். என்னுடைய என்று ஒன்றைச் சொன்னால் அப்போது அந்த ஒன்று "நான்" அல்ல என்று ஆகும். "இது என்(னுடைய) தண்டம், இது என் கமண்டலம்" என்று சொன்னால் இந்த தண்டமே நானில்லை (நான் "தண்டமாக" இருந்தாலும் அது வேறு அர்த்தத்தில்! இந்த மூங்கில் கழி நானில்லைதானே?), இந்தக் கமண்டலமே நானில்லை என்றும், இந்தத் தண்ட கமண்டலங்களைத் தன்னுடையதாகக் கொண்ட வேறே ஒரு ஆஸாமி இருக்கிறானென்றும் நன்றாகத் தெரிகிறதல்லவா? "உடைய" போடுகிற "உடையவர்" வேறு, அவ"ருடைய"னவாகிய உடைமைகள் வேறுதான். "என்னுடைய வீடு", "என்னுடைய பிள்ளை", "என்னுடைய பாங்க் டிபாஸிட்" என்றெல்லாம் சொல்லும்போது அதுகளே நீங்கள் அல்ல. அவை உங்கள் "உடையவை"—அதாவது அவை உடைமை, நீங்கள் உடைமையாளர். இதை இங்கிலீஷில் Possessive case என்கிறார்கள். Possessionதானே உடைமை?

இப்போது உடம்பு (அதாவது இந்த்ரியங்கள்) நானில்லை, மனஸ் புத்தி சித்த அஹங்காரம் முதலானவை சேர்ந்த அந்தஃகரணமும் நானில்லை என்பது எப்படி என்று காட்டுகிறேன். "என்னுடைய கை, என்னுடைய கால், என்னுடைய உடம்பு" என்றெல்லாம் அநேக ஸந்தர்பங்

Koviloor Digital Library

களில் சொல்கிறீர்களோ இல்லியோ? "என்னுடைய கண் பார்வை குறைந்து கொண்டே வருகிறது", "என்னுடைய காது ஆபரேஷனுக்கு அப்புறம் நன்ருய்க் கேட்கிறது" என்றெல்லாம் இந்த்ரியங்களுக்கும் "உடைய" போடுகிருேமல்லவா? "என்னுடைய மனஸ் உனக்குத் தெரியாது", "என்(னுடைய) புத்தியை 'ஜோட்'டால் அடிச்சுக்கணும்" என்றெல்லாம் அந்தஃகரணத்தைக் குறித்தும் "உடைய" போட்டுச் சொல்கிருேம். அப்படியானுல் இந்த "உடைமை" களுக்கெல்லாம் ஸொந்தக்காரனுக ஒரு "உடையவர்" இருக்கத்தானே வேண்டும்? அந்த உடைமையாளன்தான் "நான்"! "என்னுடைய நான்" என்று வார்த்தை வருமா? வரவே வராது. உடைமையாக இல்லாமல் உடைமையாளனுகவே இருக்கிற அசல்தான் ஆத்மா.

"என்னுடைய ஆத்மா" என்று நாம் பேச்சிலே எப்போதாவது சொன்னுல் அது தப்பு. இதே போல இன்னொருத்தருடைய ஆத்மா என்று சொன்னுலும் தப்பு. 'ஆத்மா' என்ருல் என்னவென்று தெரியாததால் நாம் பண்ணும் தப்பு. ஸாதாரணமாக ஆத்மாவைப்பற்றி எப்போது சொல்கிருேம்? யாராவது ரொம்பவும் கஷ்டப் பட்டால், "பாவம், அந்த ஆத்மா படாதபாடு படுகிறது" என்கிருேம். ஓயாமல் சஞ்சலப்பட்டுக்கொண்டே இருப்ப வரை, "நிம்மதியில்லாத ஆத்மா" என்கிருேம். "கால மானுர்" என்று பேப்பரில் போடும்போது, "அன்னுருடைய ஆத்மா சாந்தி அடையட்டும்" என்று போடுகிருர்கள். இந்த எல்லா இடத்திலுமே "ஆத்மா" என்ற பத ப்ரயோகம் ஸரியில்லே. ஆத்மா பாடும் படாது, நிம்மதி இல்லாமலும் இருக்காது, அது புதிசாக சாந்தி என்று ஒன்றை அடைய வேண்டியதுமில்லே. இங்கேயெல்லாம் மாயா ஸம்பந்தத் தால் ஜீவபாவம் பெற்று அந்தஃகரணத்தினுல் செயல் புரிவ தான ஆத்மாபாஸத்தைத்தான், ஆத்ம சைதன்ய மஹா ஜ்யோதிஸ்ஸின் ஒரு சின்னப் பொறியான ஜீவத்வத்தைத் தான், ஆத்மா என்று தவருகச் சொல்கிருேம். Ego என்று

Koviloor Digital Library

சொல்கிறார்கள். சித்தம், புத்தி, மனஸ், கர்மேந்த்ரியங்கள், ஞானேந்த்ரியங்கள் இவற்றால் கட்டுப்படுத்தப்பட்ட ஒரு ஜீவனுக்கு, இவையே "தான்" என்பதாக ஒரு உணர்வு இருக்கிறது. இதற்குப் பேர் "அஹங்காரம்". சித்தம், புத்தி, மனஸ் என்ற மூன்றோடு இந்த அஹங்காரத்தையும் சேர்த்தே அந்தஃகரணம் என்பது. அகண்டமானது ஆத்மா. அதன் கண்டமான ஆபாஸமே ஜீவபாவம் அடைந்து தன்னையே "நான்" என்று நினைப்பதுதான் அஹங்காரம்; ego என்பது, இந்த egoவைத்தான் நாம் பெரும்பாலும் ஆத்மா என்று தப்பாகச் சொல்லிவிடுகிறோம். ஸமுத்ரத்திலே ஒரு சொம்பை அமுக்கி, அந்த சொம்புக்குள் இருக்கிற நாலு ஆழாக்கு ஜலத்தை ஸமுத்ரம் என்கிறது போலத்தான், நாம் தனி ஜீவ அஹங்காரத்தை ஆத்மா என்பதும். சொம்பு ஜலம் ஸமுத்ரத்துடையது என்பது போல இதுவும் ஆத்மாவுடையதுதான். இதுவும் "நானி"ல் வராமல், "என்னுடைய" என்பதில்தான் வரமுடியும். ஆத்மாவுடைய ஆபாஸத்தில் வந்ததுதானே இது?

ஆனால் ஆத்மாவோ "தன்னுடையது" என்று எதைப் பற்றியும் எண்ணுவதில்லை. அதற்குத் "தான்" ஒன்றைத் தான் தெரியுமே தவிர, தனக்கு வெளி வஸ்துவாக, "தன்னுடைய" என்று சொல்லிக்கொள்ளும்படியாக ஏதொன்றும் இருப்பதாகத் தெரியாது. அதனிடமிருந்தே ஜீவனின் ஸர்வஸ்வமும் வந்திருந்தாலும் அது இவற்றோடு ஸம்பந்தப்படுவதில்லை.

ஆசையும் ஆத்மாவைக் குறித்ததே

நாம் அறிந்த ஆனந்தமெல்லாம் சின்ன ஜீவ நானான அஹங்காரம் என்ற ego-வுடையதே. இது ஆசைப் பூர்த்தியாலேயே ஆனந்தமடைவது. ஆத்மாவோ ஆசையே இல்லாதது. அன்யமான இன்னொன்றைக் குறித்துத்தானே ஆசை ஏற்படமுடியும்? ஆத்மாவுக்கு அன்ய வஸ்து எதுவும் தெரியாதே! ஆனாலும், எப்படி சின்ன ஜீவ நானின்

Koviloor Digital Library

சைதன்யமும் ஆத்ம சைதன்யத்திலிருந்து வந்ததுதானே? அப்படியே இந்த ஆசையும்கூட ஆத்மாவிடம் இதற்குள்ள ஆசையிலிருந்துதான் வந்தது. இப்படிச் சொன்னால் ஆச்சர்யமாக இருக்கும். தனியொன்றாக மாத்திரமே இருப்பது ஆத்மா. அதாவது ஆத்மா அத்வைத வஸ்து. இது எப்படி த்வைத ரீதியில் மட்டுமே வைக்கக்கூடிய ஆசை என்பதற்கு ஆஸ்பதமாயிருக்க முடியும் என்று ஆச்சரியமா யிருக்கலாம். ஆத்மாவைக் கொஞ்சம்கூட அறிந்து கொள்ளாத ஜீவ மனஸ் அதனிடம் எப்படி ஆசை வைக்க முடியும் என்றும் கேட்கலாம்.

ஆனாலும் உபநிஷத்திலே இப்படித்தான் சொல்லியிருக் கிறது. யாஜ்ஞவல்க்ய மஹர்ஷி தம்முடைய பத்னி மைத்ரேயிக்கு உபதேசம் பண்ணுமிடத்தில்* இவ்விஷயம் சொல்கிறார். "ஆசை" என்ற வார்த்தையைச் சொல்லாமல் "ப்ரியம்" என்று சொல்கிறார். இரண்டும் ஒன்றுக்கொன்று ரொம்ப நெருங்கிய ஸம்பந்தமுள்ளவைதான்; ஒன்றேகூட என்று சொல்லிவிடலாம். நாம் ஆசைப்படுகிற வஸ்துக்களிட மெல்லாம் நமக்கு ப்ரியம் இருக்கிறது. நமக்கு அப்ரியமான வற்றிடம் ஆசையில்லை. அவர் (யாஜ்ஞவல்க்யர்) என்ன சொல்கிறாரென்றால், "பெண்டாட்டிக்கு அகமுடையானிடம் ப்ரியம் இருக்கிறதென்றால் அவனை முன்னிட்டே அவள் ப்ரியம் வைக்கிறாள் என்று அர்த்தமில்லை. ஆத்மாவை (தன்னை) முன்னிட்டே அவனிடம் இவள் ப்ரியம் வைக்கிறாள். இப்படியேதான் அவன் இவளிடம் ஆசை வைப்பதும். புத்ரபாசம் என்ற ப்ரியம் அந்தப் பிள்ளைகளையே முன்னிட்டு அல்ல, ஆத்மாவை முன்னிட்டுத்தான். வித்தம் (பொருள்) ப்ரியமாயிருப்பதும் இதே காரணத்துக்காகத்தான்" என்று சொல்லிக்கொண்டு போகிறார். நான் முன்னே சொன்னது நினைவிருக்கலாம் : பொருளாசை கொண்ட ஒருவர் பிள்ளைக் காகப் பொருளை விட்டார், செலவிட்டார்; அப்புறம்

* ப்ருஹதாரண்யகம் 2.4 5,

Koviloor Digital Library

பிள்ளையை இரண்டாம் பெண்டாட்டிக்காக விட்டார்; தமக்கு உடம்பு ஸரியில்லாதபோது அவளையும் விட்டு தாம் மட்டும் போஷாக்குப் பண்ணிக் கொண்டார்; அப்புறம் அந்த உடம்பிலேயும் ஞானேந்த்ரியத்துக்காகக் கர்மேந்த்ரியத்தை விட்டார் (அதுகளை வெட்டி ஆபரேஷன் பண்ண ஸம்மதித்தார்) என்று சொன்னேன். இதற்கு மேலே, மனஸின் ஆனந்தத்துக்காக எல்லா இந்திரியத்தையுமே விட்டு விட்டுக் குடித்துவிட்டுக் கொம்மாளம் போட்டார்; மனஸையும் விட்டு விட்டு அவருக்கே இன்னதென்று இனம் தெரியாத உயிரின் ஆனந்தத்துக்காக (உயிர் ஆனந்தப் படுமா, படாதா என்றுகூட அவருக்குத் தெரியாது. அது என்ன என்றும் தெரியாது. ஆனாலும் அது இருந்தால் போதும் என்பதற்காகவே) எத்தனை வருஷமானாலும் மனஸின் வியாபாரம் இல்லாமல், அதாவது மனஸையும் விட்டுவிட்டு, 'கோமா' வில் தன்னை வைத்திருக்கச் சொன்னார் —என்று குட்ஸில் வாகன்களைக் கோத்துக்கொண்டு போவது போல நீளமாகச் சொல்லிக்கொண்டு போனேன். ஆழ்ந்து உள்ளே போனால் இந்த ஆசைக்கெல்லாம் ஆஸ்பதமாகும் உயிர்மூலம்தான் ஆத்மா என்பது புரியும். அதனிடம் நமக்கு (அதாவது சைதன்யாபாஸ ஜீவனுக்கு) ப்ரியம், ஆசை இருப்பதும் இதிலிருந்து தெரியும்.

பணத்திடம் ஆசை பணத்துக்காகவே இருந்தால் அந்தப் பணத்தைப் பிள்ளைக்காகச் செலவழிக்கத் தோன்றாது. பிள்ளையாசையும் அவனுக்காகவே இருந்தால் இளையாளுக்காக அவனைத் திரஸ்கரிக்கத் தோன்றாது. இப்படியே இளையாள் ஆசையும் அவள் பொருட்டே இல்லை என்று தெரிகிறது. ஒன்றைவிட ஒன்று அதிக ஆசையாக முதலில் பணம், அப்புறம் பிள்ளை, பெண்டாட்டி, தன் கர்மேந்த்ரிய ஞானேந்த்ரியங்கள் என்று போய் உயிர்மூலமாயுள்ள தன்னுடைய நிஜத் "தானி"டம்தான் முடிந்த முடிவான ஆசை என்று தெரிகிறது. முடிவு என்றாலும் ஆரம்ப ஆசையிலிருந்து எல்லாமே அதை வைத்துத்தான். சின்ன

Koviloor Digital Library

"நாஞ"ன தன்னுடைய ஸொந்த மனஸின் த்ருப்திக்காகத் தான் பணம், பிள்ளை, பெண்டாட்டி, சரீரம் முதலியவற்றில் ஆசை. இவை ஒவ்வொன்றிடமும் மனஸ் ஒரே மாதிரி த்ருப்திப்படாமல் ஒன்றைவிட இன்னொன்றிடம் அதிக த்ருப்தி காண்பதால்தான் ஒவ்வொன்ருக ஆசையை விட்டுக் கொண்டே போயிற்று. உடம்புக்கு அப்புறம் மனஸ் தன்னிடமே ஆசைப்பட்டது; அதற்காக உடம்பையும் விடத் தயாராயிற்று. ஆனல் முடிவிலே மனஸ் தன்னையும் விலக்கிக்கொண்டு உயிரை மாத்திரம் இருக்கவிடும்போது, அதற்கே ஸரியாக விளங்காவிட்டாலும் அது ஆத்மாவிடம் கொண்டுள்ள ப்ரியத்தால்தான் இப்படிச் செய்கிறது என்று தெரிகிறது.

இப்படி இனம் தெரியாமல் இருக்கிற ப்ரியத்தை இனம் புரிவதாக ஆக்கிக்கொண்டால் இப்போதே மனஸை ஆத்மாவிலே ஒடுக்கி இல்லாமற் பண்ணிக்கொண்டு ஆத்மா வாக மட்டும் இருப்பதற்கு எண்ணம் வந்துவிடும். "ததஸ்ததோ நியம்யைதத் ஆத்மந்யேவ வசம் நயேத்" என்று பகவான் உபதேசம் பண்ணியபடி செய்து பார்க்கத் தோன்றும்.

அஸுரப் படை அழிவு ஆத்ம ஜயமே

அவர் சொன்ன அந்த ஆத்மா வெறுமே இருப்பது என்றேன். அப்புறம் 'வெறுமே' என்ருல் 'வெறிச்சென்று சூன்யமாய்' என்று இல்லை; அது சைதன்யமாய், ஆனந்த மாய் இருப்பது என்றேன். இருப்பதுதான் ஸத்; ஜடமா யிராமல் உயிராய், அறிவாய், உணர்வாயுள்ள சைதன்யமே சித்; அந்த உணர்வு வெளியிலே ஒன்றை அநுபவிப்பதால் ஏற்படுவதாக இல்லாமல் தனது ஸ்வபாவத்திலேயே இருப்ப தாக அநுபவிப்பதுதான் ஆனந்தம். ஸத்—சித்—ஆனந்தம் என்றே இதனல் ஆத்மாவைச் சொல்கிருர்கள். இது வெளியிலுள்ள ஒன்றை அறிவதாகவும், அதைக் குறித்து ஆனந்திப்பதாகவும் இல்லாமல் தன்னறிவாக (ஸ்வபோத மாக), தன்னுணர்வாக (ஸ்வாநுபூதியாக) இருப்பதால்

Koviloor Digital Library

தான் "வெறுமே" என்று சொல்லநேர்ந்தது. தனக்கு அந்நியமாய் இன்னென்றில்லாத "வெறுமே"; கேவல நிலையின் "வெறுமே".

அந்த நிலைக்குப் போய் மனஸ் இல்லாமல், உடம்பு இல்லாமல் (அதாவது உடம்பை நான் என்று நினைக்காமல்) ஆனல்தான் காமக்ரோதாதி அஸுரப்படை அழிந்து ஆத்ம ஜயம் பெறமுடியும்.

சாவினல் இப்போதுள்ள உடம்பை இல்லாமல் ஆக்கிக் கொள்ள முடியுமே தவிர உடம்பே இல்லாமல் ஆக்கிக் கொள்ளமுடியாது. செத்தாலும் மறு ஜன்மாவில் மறுபடி ஒரு உடம்பு, நரகத்தில் யாதனு சரீரம், ஸூயிஸைடில் பேயுடம்பு என்று உடம்புகள் ஏற்படத்தான் செய்யும். அதனல், "உடம்பு நானில்லை" என்ற ஞானம்தான் ஸொல் யூஷனே தவிர, சாவு அல்ல.

தொல்லையின் மூல காரணம்

அத்தனை உபத்ரவத்துக்கும் மூலம் காமக்ரோதம்தான் என்று (கீதையின்) இந்த இடத்தில் பகவான் சொன்ன போதிலும், "இந்த காமக்ரோதமுங்கூட effect-தான் (வேறே ஒன்றிலிருந்து விளைந்ததுதான்). இதற்கும் cause-(மூலகாரணம்) உண்டு. அது மனஸ்தான். மனேநாசம் பண்ணி ஆத்ம ஜயமடைவதுதான் லக்ஷ்யம்" என்று வேறு இடங்களில் அவர் தெளிவு செய்திருக்கிறார்.

நமக்குத் தெரியக்கூடிய அளவில் ஆசைதான் அனர்த்தத் துக்கு மூலகாரணம். நாம் இருக்கிற நிலையில் ப்ரயத்னப்படக் கூடியது ஆசையை அடக்குவதற்குத்தான். நமக்கு ஒரு கஷ்டம் வருகிறதென்றல் அதற்கு நேர் காரணமாக நமக்குக் காட்டக் கூடியது ஆசைதான். "ஆசைப்பட்டாயோல் லியோ? படு அவஸ்தை!" என்கிறேமே, அப்படி! அதனல், நமக்குக் கிட்டினதாகக் காட்டக் கூடிய proximate cause-ஆக ஆசை இருப்பதால், அதைக் காரணம் என்றர்.

Koviloor Digital Library

ஆனால் இது மூல காரணமில்லை. மறுபடி மறுபடி புற்று வைக்கிற மூலமான கரையான் பூச்சி ஆசைதான் என்று சொன்னது முழுக்க ஸரியில்லை; முழுக்கத் தப்புமில்லை. ஆசைக்குக் காரணம் மனஸ். அதற்கும் காரணமான மாயை தான் த்வைத ப்ரபஞ்சத்துக்கே மூலகாரணம். அதுதான் தாய்ப்பூச்சி. தாயாகச் சொல்வதும் அந்த மஹா மாயை யைத்தான்! அது இருக்கட்டும். ஆனால் ஜீவனாக இருப்பவ னின் பந்தநிலையை மனஸின் மூலமாகவே மாயை உண்டாக்கு வதால் மனோநாசமே ஜீவன் முயலவேண்டியது.

ஆசைக்கு நேர் காரணம் மனஸிலும் குறிப்பாக ரஜோ குணம் என்ற தன்மையாகும். ரஜோகுண ஸமுத்பவ:— "ரஜோ குணத்தில் பிறந்தது ஆசை" என்றே பகவான் சொல்கிறாராதலால் ரஜோ குணந்தான் ஆசைக்கு நேர் காரணவஸ்து என்று தெரிகிறது.

ஸத்வ—ரஜோ—தமோ குணங்கள் என்கிற மூன்றில், ஸமநிலையில் ப்ரஸன்னமாயிருக்கும் (தெளிந்திருக்கும்) ஸத்வமாயில்லாமல், எதிலும் ஈடுபடாமல் மந்தித்துச் சோம்பிக்கொண்டு கிடக்கும் தமஸாகவுமில்லாமல், துருதுரு வென்று ஏதாவது பண்ணிக்கொண்டிருக்கத் தூண்டுகிற வேகமாகிய ரஜஸில் மனஸ் நிறைந்திருக்கும் போதுதான் ஆசை உண்டாகிறது. இப்படிச் சொன்னதால் மனஸை ஆச்ரயித்துத்தான் ரஜோ குணம் (எந்தக் குணமுமே) இருக் கிறது என்று தெரிகிறது. ஆகையால் ரஜோகுணமும் அனர்த்தத்தின் மூல காரணமில்லை, மனஸ்தான் காரணம் என்று தெரிகிறது. கடைசியில் முக் குணங்கள், மனஸ் எல்லாமே மாயையின் வேலைதான். அதுதான் மூல காரண மென்று முடிகிறது.

ஆனாலும் மாயை என்ற அந்த மஹாசக்தியை நாம் ஒன்றும் பண்ண முடியாது. அதை அடக்க நம்மால் ஆகாது. நம்மால் முடியக்கூடியது நம்மிடமுள்ள மனஸை அடக்குவது தான். மழை ஒரே சாரலாய் அடிக்கிறது என்றால் அந்த மழையை நிறுத்த நம்மால் ஆகுமா? நம்மகத்து ஜன்னல்

Koviloor Digital Library

கதவைத்தான் சாத்திக்கொள்ள முடியும். அந்தச் சாரலே நாம் கதவை இழுத்துச் சாத்த வொட்டாமலும் செய்யும். ஆனால் கஷ்டப்பட்டால் சாத்திவிடலாம்.

ஆக, நம்மைப் பொறுத்தமட்டில் அனர்த்த பரம்பரை யின் காரணம் மனஸ்தான். ஆசை அதிலிருந்தே தோன்று கிறது. மனஸின் தாஹம், அரிப்புதான் ஆசை என்று முன்னேயே சொல்லியாயிற்று.

இங்கே முதலில் அர்ஜுனனிடம் கெட்ட தூண்டுதல் களுக்கு proximate cause-ஆக (உடனடிக் காரணமாக) ஆசையைச் சொன்னாலும், உடனேயே அந்த ஆசைக்கு ஆதாரம் மனஸ் என்று மேலே கொண்டு போகிறார்.

கீதையின் உபதேச ஆரம்பத்திலேயே அனர்த்த பரம்பரைக்கு ஆதிமூலத்திலிருந்து முடிவுவரை ஒரு லிஸ்ட் கொடுத்திருக்கிறார். அங்கே, "நினைப்பதால் மநுஷ்யனுக்கு விஷயங்களில் (போக்ய வஸ்துக்களில்) தொடர்பு ஏற்படு கிறது; அந்தத் தொடர்பினால் ஆசை பிறக்கிறது ("ஸங்காத் ஸஞ்ஜாயதே காம:"); ஆசையிலிருந்து க்ரோதம் பிறக் கிறது; க்ரோதத்திலிருந்து மோஹம்; மோஹத்திலிருந்து புத்தியின் கலக்கம்; புத்திக் கலக்கத்திலிருந்து புத்தியின் அழிவே ஏற்படுகிறது; அப்புறம் ஆஸாமியே வீணாய், பாழாய்ப் போய்விடுகிறான்" என்கிறார்*. காமம் ஆதி காரணமில்லை. நினைப்பு என்பது விஷயங்களில் தொடர்பு கொள்வதால்தான் காமம் உண்டாகிறது. நினைப்புக்கு ஸ்தானம் மனஸ் மனஸிலிருந்துதான் எண்ணங்கள் உண்டா கின்றன.

மனஸைக் கொண்டே மாயை தனி ஜீவத்வத்தை ஏற்படுத்துவதால் இரண்டையும் சேர்த்து 'மனமாயை' என்று பெரியவர்கள் சொல்லியிருக்கிறார்கள். அதுதான் மூல காரணம். அது போனால்தான் காமக்ரோதாதி இழுப்புக்

* கீதை 2, 62-63.

Koviloor Digital Library

களிலிருந்து விடுபட்டு சாந்தியும், சாச்வத ஸுகமும் பெற முடியும்.

நான் முதலில் ஆரம்பித்த இடத்தில் (கீதையின் மூன்றும் அத்யாயத்தில் காமக்ரோதம் பற்றிய பகுதியில்) பகவான் காமக்ரோதம்தான் பாபத்தில் ஜீவனை ஏவுகிறது என்று சொன்னதைத் தொடர்ந்தே, இந்த ஆசைத் தீக்கு இந்த்ரியம், மனஸ், புத்தி ஆகியவை அதிஷ்டானம் என்று சொல்கிறபோது இந்த மூன்றினுல் மாயை ஆத்மா விலே உண்டாக்குகிற தனி ஜீவத்வ பாவம்தான் எல்லா அனர்த்தத்துக்கும் மூலகாரணம் என்று தெளிவு செய்துவிடு கிருர். இந்த மூன்றையுமே சேர்த்துத்தான் பொதுவிலே மனமாயை என்பது. இந்த்ரிய த்வாரா (புலன்கள் வழியே) கட்டுப்படாமல் ஓடுவது மனஸ்தான். இந்த்ரியங்களின் ஆசைப்பசிகளுக்கும் ஆட்டங்களுக்கும் மனஸ்தான் காரணம். இப்படி ஓடாமல் மனஸைக் கட்டுப்படுத்துவது புத்தி. ஆக அடங்காத மனஸ் இந்த்ரியமாகவும், அடக்குகிற மனஸ் புத்தியாகவும் இருக்கிறதென்று சொல்லிவிடலாம்.

இந்த்ரியத்துக்கும் உயர்வுண்டு

இந்த மூன்றைப் பற்றியும், இதில் ஒன்றைவிட ஒன்று உயர்ந்தது என்று மேலே சொல்லிக்கொண்டு போகிருர் :

இந்த்ரியாணி பராண்யாஹு: இந்த்ரியேப்ய : பரம் மந :
மநஸஸ்து பரா புத்தி : யோ புத்தே : பரதஸ்து ஸ : ||
(கீதை 3. 42)

இந்த்ரியங்கள் உயர்வுடையவை என்று ஆரம்பிக்கிருர். "பராணி" என்ருல் உயர்வு பொருந்தியவை. நம்மை அதல பாதாளத்துக்கு இழுத்துவிடும் இந்த்ரியங்களையா உயர்ந் தவை என்கிருரென்ருல், ஆமாம், அப்படித்தான் சொல் கிருர். தான் சொன்னது மட்டுமில்லை. இப்படித்தான் பெரியவர்கள் சொல்கிருர்களென்று வேறு சொல்கிருர். "ஆஹு:" என்ருல் "சொல்கிருர்கள்". "இந்த்ரியாணி

Koviloor Digital Library

பராணி ஆஹு:"—"இந்த்ரியங்கள் உயர்வு பொருந்தியவை என்று சொல்கிறார்கள்." யார் சொல்கிறார்களென்றால், விஷயம் தெரிந்த பெரியவர்கள் சொல்கிறார்கள். "விஷயம் தெரிந்த பெரியவர்கள்" என்று பகவான் வெளிப்படச் சொல்லாவிட்டாலும், இவர் ஒரு அபிப்ராயத்தை ஒப்புக் கொண்டு மேற்கோள் காட்டுகிறாரென்றால் அதைச் சொன்னவர்கள் விஷயக்ஞர்களான பெரியவர்களாகத்தான் இருக்க வேண்டும்.

நம்மைக் கீழே இழுத்துவிடும் இந்த்ரியங்களை ஏன் உசந்தவையாய் சொல்கிறாரென்றால் அதுதான் க்ருஷ்ண பரமாத்மாவின் வழக்கம். எதிலுமே நல்லது பொல்லாதது கலந்துதான் இருக்கும். விஷம்கூட மருந்தாக ப்ரயோஜனப் படுவதுண்டு. அந்த மாதிரி எதிலேயும் இருக்கிற நல்லதை பகவான் ச்லாகிக்க வேண்டிய இடத்தில், ச்லாகிக்கக்கூடிய அளவில் ச்லாகித்துப் பேசுவதே அவர் வழக்கம். 'கெட்டது பண்ண ரொம்ப இடம் கொடுப்பதாக, ஆனாலும் தனக்குள்ளே துளிப்போல நல்லதும் உள்ளதாக ஒன்று இருக்கிறது; அதை ஒருத்தன் அடியோடு விட்டால்தான் நல்லது' என்று உள்ளபோதுகூட, இப்போது அவன் இருக்கிற அபக்வ ஸ்திதியில் அப்படி அடியோடு விட அவனால் முடியுமா என்று பகவான் பார்ப்பார். அவர் "ஆஹு:" என்று குறிப்பிடுகிற பெரியவர்களான நமது தர்ம சாஸ்த்ரக்காரர்களும் பார்ப்பார்கள். அப்படி அடியோடு விட்டுவிட அவனுக்கு உறுதி போதாது என்பதால், அவனைக் கொஞ்சம் கொஞ்சமாக விடப் பண்ணுவதற்கு வசதியாக வழி போட்டுத் தருவார்கள். அதிலே உள்ள நல்லதைக் காட்டி, இப்படி அதைக் கொண்டு பண்ண முடிந்த நல்லதுகளில் அவனைச் செலுத்துவார்கள்—அதாவது அடியோடு விடாமல், கெட்டது பண்ண இடமிருப்பவற்றை மட்டும் விடப் பண்ணுவார்கள். இப்படியே போனால்தான் அப்புறம் அடியோடு ஒன்றைவிடுகிற பக்வம் ஏற்படும்.

பணத்துக்காக பகவானை ப்ரார்த்தனை பண்ணுவது தப்புதான். கஷ்டம் போகணும், வ்யாதி தீரணும் என்று

Koviloor Digital Library

ப்ரார்த்தனை பண்ணுவதுகூட அவிவேகம்தான். பகவானுக்காகவே பகவான் என்ற ப்ரேமையோடு செய்கிற பக்திதான் நிஜமான பக்தி. ஆனால் பகவானே (கீதையில் இன்னோரிடத்தில்)*இப்படிப் பணத்துக்ககாவும், கஷ்ட நிவ்ருத்திக்காகவும் ப்ரார்த்திக்கிறவர்களைக்கூட உயர்ந்தவர்கள் ("உதாரா:") என்கிறார். ஏன் அப்படிச் சொல்கிறாரென்றால், ப்ரார்த்தனை செய்வது, எதுவோ ஒன்றுக்காக பகவான் என்று ஒருத்தனை நினைப்பது, நம்மால் முடியாத ஒன்றைச் செய்கிற மஹா சக்தன் அவன் என்பதால் அவனிடம் வேண்டிக் கொள்வது (இதிலேயே நம் வேண்டுதலை நிறைவேற்றி வைக்கும் அருள் மனஸ் அவனுக்கு உண்டு என்ற நம்பிக்கையும் இருக்கிறது)—இப்படி அநேக நல்ல விஷயங்கள் பணத்துக்காகவும், கஷ்ட நிவ்ருத்திக்காகவும் ப்ரார்த்திப்பதில்கூட இருக்கத்தானே செய்கின்றன? அதனால்தான் இப்படி ப்ரார்த்திப்பவர்களையும் உசந்தவர்களாகச் சொன்னார். "ஏதோ ஒரு தினுஸில் என்னிடம் வந்துவிட்டால் போதும். அப்புறம் ஸரியான தினுஸில் வரும்படியான பக்வத்தை அவனுக்குக் கொஞ்சம் கொஞ்சமாகத் தந்துவிடலாம்" என்று நினைத்துத்தான் அப்படிச் சொன்னார்.

அன்போடு அவரை நினைக்கணுமென்பதுகூட இல்லை. கம்ஸன் மாதிரி பயத்தோடு, சிசுபாலன் மாதிரி க்ரோதத்தோடு நினைத்தால்கூட ஸரி, அவர்களும் நினைத்தார்களோ இல்லையோ, அதனால் அவர்களுக்கும் உயர்கதி கொடுப்பது என்று எதிலும் நல்லதைப் பார்த்தவர் அவர். அநேகக் கெட்டதில் துளி நல்லது இருந்தாலும் நல்லதை 'என்கரேஜ்' பண்ணிக்கொண்டே போய் அப்புறம் நல்லது கெட்டது இரண்டையும் விட்டுவிடும்படிப் பண்ணுவார். இதுதான் நம் வேத தர்மத்தின் வழி.

இங்கே நல்லது கெட்டது இரண்டையும் முடிவிலே தள்ளுவது பற்றிக் குறிப்பிட்டேன். நல்லதை ஏன்

---

* அத்யாயம் 7; ச்லோகம் 18.

Koviloor Digital Library

தள்ளணும் என்ற கேள்வி எழலாம். அதற்கு அப்புறம் வருகிறேன். அத்வைதம் என்பதன் தாத்பர்யமே இப்படி இரண்டையும் தள்ளுவதில்தான் இருக்கிறது.

பணத்தால் தான தர்மமும் பண்ணலாமோல்லியோ? ஒருத்தனுக்கு வ்யாதி அல்லது வேறே கஷ்டம் தீர்ந்தால்தானே அவன் பகவானை நிச்சிந்தையாய் த்யானிக்க முடியும், ஸமூஹத்துக்குத் தொண்டுபண்ண முடியும்? ஆனபடியால் இதுகளையும் வேண்டுகிறவர்களுக்குக் கொடுத்து, அவர்களை உதாரர்கள் லிஸ்டில் சேர்த்துக் கொள்வார். முடிவிலே தானமோ, தர்மமோ, வ்யாதியோ, கஷ்டமோ எதுவுமே ஒருத்தனுக்கு ஒரு பொருட்டாக இருக்கப்படாதுதான். இதெல்லாமே மாயா ப்ரபஞ்ச ஸமாசாரம் என்று அவன் தள்ளவேண்டியதுதான். ஆனால் ஆரம்ப தசையில் இதை ஒருத்தனுக்குச் சொன்னால் ஸரிப்படாது. அவன் தானம் வேண்டாம் என்பதைத் தவறாகப் புரிந்துகொண்டு தயா தாக்ஷிண்யமில்லாத க்ரூர சித்தனாக ஆவதற்கு விடக்கூடாது. 'வ்யாதி நமக்கில்லை' என்ற வைராக்யத்தைப் பெறுமலே அதை குணப்படுத்திக் கொள்ளாமல் விட்டானானால் அப்புறம் அவன் இரண்டு மடங்கு அழக்கூடும். கஷ்ட - ஸுகத்தை ஸமமாகப் பார்க்க அப்யஸிப்பதற்கு முந்தியே, 'கஷ்டம் வந்தால் வரட்டும், அதற்காக ப்ரார்த்திப்பதில்லை' என்று வைத்துக்கொண்டானானால் அப்புறம் அந்தக் கஷ்டத்தை இன்னம் பெரிசாக வளர விட்டுவிட்டு, அதிலிருந்து விடுபட்டு detached-ஆக நிற்கத் தெரியாமல் ரொம்பவும் அவஸ்தைப்பட நேரிடும்.

நம்முடைய சாஸ்த்ரங்களைக் கொடுத்த பெரியவர்களும், எல்லா சாஸ்த்ரங்களையும் கடைந்தெடுத்து (கீதையாகக்) கொடுத்திருக்கிற பகவானும், இப்படிப் பல காரணங்களை உத்தேசித்து, குறிப்பாக ஒரு சாதாரண மநுஷ்யன் இருக்கப்பட்ட மனநிலையை கவனத்தில் கொண்டு, அப்படிப் பட்டவர்களைக் கவருகிற விஷயங்களில் அங்கங்கே ஏதோ நல்லது இருந்தாலும் அந்த அளவுக்கு அதிலே அவன்

Koviloor Digital Library

ப்ரவ்ருத்திப்பதற்கு (ஈடுபடுவதற்கு) அநுமதித்து, வழிப் படுத்தித் தந்திருக்கிறார்கள்.

இம்மாதிரிதான் இந்த்ரியங்களை 'பராணி'—'உசந்தவை' என்று சொன்னது. எத்தனையோ அழகான, தெய்விகமான, பரிசுத்த ஆனந்தமான அநுபோகங்களையும் இந்த்ரிய த்வாரா பெறமுடிகிறதோல்லியோ? அம்பாள் ஸந்நிதியில் நெய்தீபம் போட்டால் அந்த தாஸனையின் வழியாகவே இந்த மூக்கு ஸாந்நித்யத்தையும் நமக்குள்ளே அனுப்புகிறதல்லவா? அவளுக்குக் கண்குளிர அலங்காரம் செய்து தர்சனம் செய்யும்போது இந்த நேத்ர இந்த்ரியம் மூலம் தெய்விகத் தைப் பானம் பண்ணுகிறோமல்லவா? த்யாகையர்வாள் க்ருதி, தாயுமானவர் பாடல் யாராவது மனஸ் உருகி ஸுஸ்வரமாகப் பாடிக் கேட்டால் அப்போது ச்ரோத்ரேந் த்ரியத்தின் வழியாக ஈச்வர சிந்தனை நமக்குள்ளே பாய வில்லையா? இப்படி, இந்த்ரியங்கள் பொதுவாகக் கெட்ட திலேயே போவதாயிருந்தாலும், முடிவிலே அவை தள்ள வேண்டியவையாயிருந்தாலும், அப்படித் தள்ள முடியாத ஆரம்ப காலத்தில் அவற்றாலும் செய்யக் கூடிய நல்லது களைச் செய்யப் பழகவேண்டும். பூஜை பண்ணுவது, க்ஷேத்ராடனம்—ஆலய தர்சனம் பண்ணுவது, நாம ஸங்கீர்த்தனம் பண்ணுவது, கோயில் கட்டுவது, குளம் வெட்டுவது, ஏதேனும் ஸமூஹப்பணி செய்வது என்றிப்படி யானவற்றில் கை, கால், கண், மூக்கு, நாக்கு முதலான வற்றை ஈடுபடுத்தவேண்டும். இப்படிப்பட்ட நல்லவற்றைச் செய்யத் திறன் பெற்றிருப்பதால் இந்த்ரியங்கள் உசந்தவை தான்.

ஒவ்வொரு இந்த்ரியத்தையும் எடுத்துக்கொண்டு அது பராசக்தி பண்ணின ஒரு மிஷின்—ஆனால் ஜடமான மிஷினாக இல்லாமல் ஜீவனுள்ள மிஷினாக இருப்பது— என்று பார்த்தால் அது ரொம்பவும் உசந்ததாகத்தான் தெரியும். இத்தனூண்டு ஒரு கண்—இது ஒரு பெரிய மலைத்

Koviloor Digital Library

தொடரையே பார்க்கிறது; தினுஸு தினுஸான வர்ண பேதங்களைப் புரிந்துகொள்கிறது. அப்படியே காது ஆயிரம் வகைப்பட்ட சப்த பேதங்களை, இது இன்னருடையது, இது இந்த ம்ருக - பக்ஷியுடையது, இன்ன வாத்யத்துடையது என்றெல்லாம் தெரிந்துகொள்கிறது. இதே மாதிரிதான் நாக்கு நாலாயிரம் ருசி பேதங்களைத் தெரிந்து கொள்கிறது. இப்படியே வாஸனை நாற்றம் என்று ஒவ்வொரு பண்டத்துக்கும் ஒன்ருக எத்தனையோ, மூக்குக்கு விஷயமாகின்றன. ஸ்பர்ச உணர்ச்சியை எடுத்துக் கொண்டால் அது எல்லாவற்றையும்விடப் பெரிய ஆச்சர்யம்! எழுபதடி எண்பதடி ஆழக்கிணறு. அதிலே பத்து இருபதடி ஆழமுள்ள ஜலத்துக்கு அடியிலே ஏதோ ஒரு பொருள் எப்போதோ விழுந்தது அப்படியே கிடக்கிறது. அதை நாம் கண்ணுல் பார்க்க முடியவில்லை. கையால் ஸ்பர்சிக்க முடியவே முடியாது. ஆனுலும் இத்தனை தூரத்துக்கு வெளியிலிருந்து ஒரு நீளமான கோலை விட்டு அதைத் தொட்டுவிட்டால்கூடப் போதும்—ஒரு மாதிரி அதன் 'ஷேப்' என்ன, அது கெட்டியாயிருப்பதா, மெத்தென்றிருப்பதா என்றெல்லாம் புரிந்துகொண்டுவிட முடிகிறது. அதனுல் இந்தத் திறமைகளைப் பெற்ற இந்த்ரியங்களை உசந்தவை என்று சொல்வதில் தப்பில்லை அல்லவா?

கடைசியில் பெரிய விநோதம் என்னவென்ருல் இப்படிக் கலர்கள், சப்தங்கள், வாஸனைகள் இத்யாதிகளை வாஸ்தவத்தில் தெரிந்துகொண்டவை இந்தக் கண், காது, மூக்கு அல்ல. இவற்றின் மூலம் மூளைதான் தெரிந்துகொள்கிறது. நுண்ணியதாக அந்த மூளை கொடுக்கும் கனெக்ஷன்களில் தான் சைதன்ய கரண்ட் ஓடி இந்த்ரியங்களுக்கு இந்த சக்திகளைக் கொடுத்திருக்கிறது. இது அத்தனைக்கும் ஆதாரம் மனஸ். அதனுல்தான் இந்த்ரியங்கள் உசந்தவை என்று சொன்னதற்கப்புறம் அவற்றைவிட மனஸ் உசந்தது என்கிருர்: "இந்த்ரியேப்ய பரம் மந:" மனஸின் கருவிகளே இந்த்ரியங்களானபடியால் இவற்றைவிட அது உசந்தது.

Koviloor Digital Library

அப்புறம் அந்த மனஸையும்விட உசந்தது புத்தி: "மனஸஸ்து பரா புத்தி:" மனஸில் உணர்ச்சிகள் அவை பாட்டுக்குக் கிளம்பிவிடுகின்றன; இது நல்லதா, கெட்டதா என்று பார்ப்பதில்லை. மனஸில் நல்லது, கெட்டது எல்லாமே ஒருபோலத் தோன்றிவிடுகின்றன. இவற்றிலே எது நல்லது எது கெட்டது என்று பார்த்து, கெட்டதைத் தள்ளி நல்லதை எடுத்துக் கொள்ளும்படிச் செய்வதுதான் "புத்தி". மனஸிலே நிச்சயமில்லாமல் பல தோன்றும்போது, அதிலே இதைத்தான் எடுத்துக் கொள்ளவேண்டுமென்று நிச்சயப் படுத்தி உறுதி செய்து தருவது "புத்தி" தான். எது நன்றாயிருக்கிறது என்று அதைத் தேடி ஓடுவதே மனஸின் வேலை. ஆனால் நன்றாயிருப்பது நல்லதாயும் இருக்கும் என்று சொல்ல முடியாது. நல்லது எது என்று தீர்மானம்பண்ணி அதில் மனஸைப் போகச் செய்வது புத்தியின் கார்யம். மனஸ் இந்த நிமிஷம் ஒன்று நல்லதென்று நினைக்கும்; அடுத்த நிமிஷம் இது நல்லதில்லை என்று இன்னொன்றுக்குப் போகும். ஸம்சயித்துக் கொண்டும் சஞ்சலித்துக் கொண்டுமே இருக்கும். புத்தி இப்படி இல்லை. "இது நல்லது, இது கெட்டது" என்று அது உறுதியாக நிர்ணயித்துவிடும்.

மனஸ், புத்தி என்கிறவற்றுக்குப் பல இடங்களில், அந்த இடத்தைப் பொறுத்து, பல விதமாக அர்த்தம் கொடுக்கும்போது இங்கே இப்படித்தான் அர்த்தம் செய்துகொள்ள வேண்டும். அந்தஃகரணம் என்பதில் மனஸ், புத்தி, சித்தம், அஹங்காரம் என்று நான்கு இருப்பதாகப் பாகுபாடு செய்யும்போது ஆசார்யாள் இப்படித்தான் விளக்கம் கொடுத்திருக்கிறார். ஆனால் பொதுவாக மனஸ் என்பதே அந்தஃகரணம் என்ற அர்த்தத்தில்தான் உபயோகிக்கப்படுகிறது. பெரும்பாலும் நானும் அப்படித்தான் சொல்லிக் கொண்டு போயிருக்கிறேன். அதாவது மனஸிலேயே lower, higher என்று (தாழ்ந்ததாகவும் உயர்ந்ததாகவும் இரண்டு பகுதிகள்) இருப்பதாகவும் இவற்றில் lower-தான் நல்லது கெட்டதுகளில் நிச்சயமில்லாமல் வெறுமே உணர்ச்

Koviloor Digital Library

சிக்கு நன்ருயிருப்பதில் ஓடுவதாக இருப்பது என்றும், நல்லதை நிர்ணயித்து "ஜட்ஜ்" பண்ணிக்கொடுக்கும் higher mind அல்லது மேலான மனஸ்தான் புத்தி என்றும் சொல்ல லாம்.

நல்லது, கெட்டதில் நல்லதை நிச்சயப்படுத்தித் தருவதே புத்தி என்று நாம் நடைமுறையில் வைத்துக் கொள்ளவில்லை. கெட்டதற்கு ஸாமர்த்யமாகத் திட்டம் போடுவதைக்கூட புத்தியின் கார்யமாகவே நினைக்கிருேம். கெட்டதோ, நல்லதோ மனஸ் மாதிரி ஒன்றைப்பற்றி வெறும் உணர்ச்சி வேகத்தில் தாறுமாருக நாலாபக்கமும் ஓடிக்கொண்டிராமல், அதைப்பற்றிய ஒரு நிச்சயமான அபிப்ராயத்தோடு தீர்மானம் பண்ணித் திட்டம் போட்டுத் தருவதைப் புத்தியாக நினைக்கிருேம். ஆக, எப்படிப் பார்த் தாலும், மனஸ்—நிச்சயமில்லாதது; புத்தி—நிச்சயமுள்ளது.

முடிவிலே நல்லதுமில்லை, கெட்டதுமில்லை. இரண்டும் மாயைதான். ஆத்மா தன்னுடைய நிஜஸ்திதியில் அந்தஃகரண ஸம்பந்தமில்லாமல், மனஸின் சஞ்சல ஓட்டமில்லாமல், சஞ்சலத்தைப்போக்கி ஸ்திரப்படுத்தித் தரும் புத்தியின் கார்யமுமில்லாமல் இருக்கிறபோது எப்படியிருக்கிறது? அதாவது ஒரு ஞானியின் ஸமாதி நிலையில் எப்படியிருக்கிறது? அது நமக்குத் தெரியாது. ஆனுல் நமக்கும் ஒருவிதத்தில் அது மாதிரியான தூக்க நிலை யைப் பற்றித் தெரியும். ஸ்வப்னம் என்பதான அந்தஃகரண ஓட்டம்கூட இல்லாத ஆழ்ந்த தூக்க நிலையைச் சொல்கிறேன். அங்கே நல்லது என்று ஏதாவது தெரிந்ததோ, கெட்டது என்று ஏதாவது இருந்ததோ? இந்த இரண்டுமே ஆத்மா வுக்கு ஸம்பந்தமில்லாதவைதான். மாயையால் அந்தஃ கரணம் கல்பித்துக் கொள்கிறவைதான். ஆக, நல்லது கெட்டதை நிர்ணயம் பண்ணித் தருகிற உசந்த கார்யத் தைச் செய்யும் புத்தியும்கூட முடிவான உச்சநிலை அல்ல.

காமம் அதிஷ்டானமாக ஊன்றி நிற்கும் மூன்று ஆதாரங் களில் புத்தியும் ஒன்று என்று பகவானே சொல்லியிருப்பதை

Koviloor Digital Library

முன்னே பார்த்தோமே! காமத்துக்கு அதிஷ்டானமாகவுள்ள அது எப்படி முடிவான நிலையாக இருக்கமுடியும்? நல்லது பொல்லாததுகளை எடுத்துக்காட்டுகிற புத்தியும் நல்லதோடு நின்றுதான் விடும். அதாவது அதற்கு நல்லதிலே காமம் என்று வைத்துக்கொள்ளலாம். அதற்கு மேலே போய் ஆத்மாவைக் காட்டிக்கொடுக்க அது ப்ரயோஜனப்படாது, தானுகத் தனித்து இருக்கிற ஆத்மாவை அதற்கு வேருன ஜீவன் மாதிரி ஆக்கிவைக்கிற மாயையின் ஸ்ருஷ்டிதான் நல்லது என்பதும், அதை நிச்சயப்படுத்தித் தருகிற புத்தியுங்கூட. மாயைக்கு மேலே போனால்தான் ஆத்மா லபிக்கும் என்னும்போது புத்தியையும் விட்டுவிட்டு அதற்கு மேலே போய்த்தானே ஆகவேண்டும்? ஆனபடியால் புத்தி முடிந்த முடிவில்லை என்று ஆகிவிடுகிறதல்லவா?

"ஸத்"தான ஆத்மா

புத்திக்கும் ஆதாரமான ஆத்மாதான் உச்சி, உசந்த வற்றிலெல்லாம் உசந்தது. அதைத்தான் "தத்ஸத்" என்பதில் "தத்" என்பது.

எது "ஸத்"? என்றைக்கும் மாறுதல் என்பதே இல்லாமல் உள்ளபடி இருப்பதுதான்.

உள்ளபடி இருப்பதுதான் உண்மை. அந்த உண்மை, ஸத்யம், (அல்லது ஸத் என்றாலே போதும்) அது ஆத்மா தான்.

"தத்" என்றால் "அது". ஆண் பெண் என்று அவனாகவோ, அவளாகவோ இல்லாமல் "அது"வாக இருப்பது ஆத்மா.

அந்த "அதை"யேதான் ஈச்வரன் என்று சொல்லும் போது "அவன்" என்கிறோம்—ஆண்பாலில் சொல்கிறோம். ரொம்பவும் அம்பாள் பக்தர்களாக இருப்பவர்கள் வேண்டுமானால் "அவள் ஸங்கல்பம் எப்படியோ, அப்படி" என்று சொல்லலாமே தவிர, பொதுவில் "அவன்" என்பதுதான் வழக்கம். "அவன் அன்றி ஓர் அணுவும் அசையாது"

Koviloor Digital Library

என்றே வசனம். ஆழ்வாரும் (நம்மாழ்வாரும் திருவாய் மொழியை) ஆரம்பிக்கும்போதே, "உயர்வற உயர்நல முடையவன் எவன் அவன்'' என்றுதான் சொல்கிறார். இங்கிலீஷிலும் காபிடல் H போட்டு He என்று புருஷனைச் சொல்வது பரமாத்மாவைத்தான். ஸம்ஸ்க்ருதத்தில் "ஸ:'' என்றால் 'அவன்'. பரமாத்மாவை 'ஸ:' என்றே குறிப்பிடு வார்கள். 'ஸோஹம்' 'ஸோஹம்' என்பதாகப் பரமாத்மா வும் ஜீவாத்மாவும் ஒன்றே என்று அத்வைத உபாஸனை செய்வதுண்டு. 'ஸ: அஹம்' என்பதுதான் 'ஸோஹம்' என்றாவது. 'அஹம்' என்றால் 'நான்'—அதாவது உபாஸ கனான ஜீவாத்மா. 'ஸ:' என்று இங்கே 'அவ'னைக் குறிப் பிடப்படுவதுதான் பரமாத்மா. 'தத்' என்று அஃறிணையில் சொல்கிற அந்த ஸத்ய வஸ்துவை ஆண்பாலாக 'ஸ:' என்றும் குறிப்பிடுவதுண்டு என்பதற்காகச் சொன்னேன். "புருஷ ஸூக்தம்'' என்கிறோமே அங்கே 'புருஷன்' என்று ஆணைச் சொல்வது பரமாத்ம வஸ்துவைத்தான். ஸாங்க்ய சாஸ்த்ரத்தில் ஆத்மா என்பதையே 'புருஷன்' என்றுதான் சொல்லியிருக்கிறது. மாயையை ப்ரக்ருதி என்று அதில் சொல்வார்கள். எதிலும் பட்டுக்கொள்ளாத ஆத்மா புருஷன். அந்த ஆத்மாவிலிருந்தே இந்த ஜகத், ஜீவன், ஜீவனுடைய இந்த்ரியாதிகள் எல்லாவற்றையும் கொண்டு வரும் சக்தியான மாயை அல்லது ப்ரக்ருதி என்பது பெண்பால். (புருஷன், ப்ரக்ருதி என்ற) இந்த இரண்டை யுமேதான் சிவம், சக்தி என்று ஆண் பெண்ணாகச் சொல்வதும்.

க்ருஷ்ண பரமாத்மா புத்திக்கும் மேலான ஆத்மாவை "ஸ:'' என்றே "அவ''னைச் சொல்கிறார்; "புத்தே: பரதஸ்து ஸ:'' —புத்திக்கும் உசந்தவனாயிருப்பவன் ஆத்மா என்கிறார்.

படிப்படியாய் ஆத்ம நிலைக்கு

ஆத்மாவைத் தவிர எல்லாம் மாயை. அதாவது பொய். ஆனாலும் அப்படி நம்மால் நினைக்கமுடியவில்லை. ஏனென்றால்

Koviloor Digital Library

இத்தனை பொய்யிலும் எங்கேயோ துளித் துளி ஆத்ம சைதன்ய ப்ரதிபலிப்பு இருக்கிறது என்று சொன்னேனே, அதனால். நிஜ "மெய்"யான ஆத்மாவின் சாயையால் இந்த்ரியப் பொய், மனஸ் என்கிற பொய், புத்தி என்கிற பொய் இவற்றிலும் நமக்கு மெய்ம்மை தெரிகிறது. இப்படி மாயா சக்தி செய்கிறது. அதனால்தான் அதை அப்பட்டப் பொய்யான "அத்யந்த அஸத்" அல்ல, ப்ரதிபலிப்பு என்ற அளவிலே கொஞ்சம் மெய்ம்மை உடைய "ப்ராதிபாஸிக ஸத்யம்" என்று அத்வைத சாஸ்த்ரத்தில் சொல்லியிருக்கிறது*.

அந்த மாயா சக்தியின் வீச்சிலே நம்மை இப்போதே நல்லது கெட்டது இல்லாத நிலைக்கு உயர்த்திக்கொள்வது முடியாத கார்யமாக இருக்கிறது. அதனால் நல்லது, கெட்டது இரண்டுக்கும் அது அப்பாற்பட்டதாக இருந்த போதிலும் நல்லவற்றின் மூலமாகவே நாம் கொஞ்சம் கொஞ்சமாக அதை நோக்கிப் போக வேண்டியவர்களாக இருக்கிறோம். அதெப்படி என்றால் இதற்குத்தான் உதாரணம் சொல்கிறார்கள் : ஒரு முள்ளை இன்னொரு முள்ளாலே குத்தி எடுத்துவிட்டு, இரண்டு முள்ளுகளையுமே தூக்கிப் போட்டு விடுகிற மாதிரி நல்லதால் கெட்டதைத் தோண்டி எடுத்து விட்டு, அப்புறம் இரண்டையும் தூக்கிப் போட்டுவிட்டு ஆத்ம ஸ்வரூபமாயிருக்க வேண்டுமென்று சொல்கிறார்கள். இப்போது அநேகக் கெட்டதுகளில் நாம் மாட்டிக்கொண்டிருக்கிறோம் என்று நன்றாகத் தெரிகிறது. ஆசை, கோபம், துக்கம், பயம் என்று பலவற்றில் மாட்டிக்கொண்டிருப்பது தெரிகிறது. 'எதிலும் ஸம்பந்தப்படாத ஆத்மா எப்படி இப்படி மாட்டிக்கொண்டது? மாட்டிக்கொண்டாற் போன்ற ஒரு ப்ரமையில், அதாவது மாயையில் மாட்டிக்கொண்டது?' என்று கேட்டு ப்ரயோஜனமில்லை. இதைப் பற்றி அத்வைத சாஸ்த்ரத்தில் என்னென்னவோ சொல்லிவிட்டு முடிவாக

---

* முதற்பகுதியில் "மாயை" என்ற உரையும் இரண்டாம் பகுதியில் "உலகம் எப்படிப் பொய்?" என்ற உரையும் பார்க்க,

Koviloor Digital Library

மாயையின் தன்மையைப் பற்றி எதுவுமே சொல்வதற்கில்லை —அது "அநிர்வசநீயம்" என்று முடித்திருக்கிறது. எப்படி மாட்டிக்கொண்டோம் என்று ஆராய்ச்சி பண்ணி ப்ரயோஜனமில்லை. மாட்டிக்கொண்டதிலிருந்து எப்படி விடுபடுவது என்பதற்கே வழி தேடியாகவேண்டும். பாம்பு காலைச் சுற்றிக்கொண்டிருக்கிறதென்றால் எப்படிச் சுற்றிக் கொண்டது என்பதைக் கண்டுபிடிக்கவா பாடுபடுவோம்? அதை எப்படி உதறிக்கொண்டு விடுபடுவது என்பதில்தானே குறியாயிருப்போம்? அப்படித்தான், மாயையில் மாட்டிக் கொண்டு அவதிப்படுகிற நாம் அதிலிருந்து விடுபடுவதற்குத் தான் வழி தேடவேண்டும். இப்படி வழி தேடி விடுதலை கண்ட பெரியவர்கள் நமக்கும் அந்த வழியைச் சொல்லித் தந்திருக்கிறார்கள். 'துளித்துளி மெய்யின் கலப்புள்ள இந்த்ரிய, மனோ, புத்திப் பொய்களிலிருந்து துளிக்கூடப் பொய்க் கலப்பே இல்லாத மெய்க்குப் போகவேண்டும். இவற்றிலேயே ஒன்றைவிட ஒன்று உசந்ததாயிருப்பதால், அதாவது ஒன்றைவிட ஒன்றில் அதிகமாக ஆத்மஜ்யோதிஸின் ப்ரதிபலிப்பு இருப்பதால், அதாவது மெய்யின் 'ப்ரபோர்ஷன்' (விகிதா சாரம்) ஒன்றைவிட ஒன்றில் கூடுதலாகப் போவதால், கொஞ்சம் கொஞ்சமாக இந்த்ரியாநுபவத்திலிருந்து மனஸின் அநுபவங்களுக்கு ஏறு; அப்புறம் புத்தியின் அநுபவத்துக்கு ஏறு; முடிவாக ஆத்மாவுக்கு வந்துவிடுவாய்" என்று சொல்லியிருக்கிறார்கள். இதெல்லாம் எதுவும் ஆத்மா இல்லை. ஆனாலும் ஆத்மாவுக்குக் கொண்டு விடும்" என்கிறார்கள்.

இங்கே (திருப்பதியில்) ஒவ்வொரு மலையாக ஏழுமலைகள் ஏறிப் பெருமாளிடம் வந்திருக்கிறோம்*. அப்படி இந்த்ரியம், மனஸ், புத்தி இவற்றைத் தாண்டி ஆத்மாவை அடையவேண்டும். மலைகள் பெருமாளா என்றால் இல்லைதான். ஏழாவது மலையின் கடைசிப்படி இருக்கிறதே, அது

* திருப்பதியில் முகாமிட்டிருக்கையில் சில பக்தர்களோடு உரையாடும்போது அருளியது இப்பகுதி.

Koviloor Digital Library

கூடப் பெருமாளா என்றால் இல்லைதான். அதையும் தாண்டிப் போனால்தான் "அப்பாலுக்கு அப்பால்" என்கிறபடி பெருமாள் இருக்கிறார். அப்படித்தான் இந்த்ரியம், மனஸ், புத்தி ஆகியவை ஆத்மா இல்லை. புத்தியின் உச்சஸ்தானம் கூட ஆத்மா இல்லை. ஆனாலும் அதுவரைக்கும் ஏறிப் போனால்தான் அப்புறம் ஆத்மதர்சனம் கிடைக்கும். கீழத் திருப்பதியிலேயே இருந்துகொண்டு பெருமாள் தர்சனம் வேண்டுமென்கிற மாதிரிதான், நாம் இப்போது உள்ள நிலையில் இருந்துகொண்டே ஆத்ம ஸாக்ஷாத்காரம் கிடைக்க வேண்டுமென்று சொல்வது. ஒவ்வொரு மலையாக ஏறிப் போகிறதுபோல கர்மா, உபாஸனை, த்யானம், விசாரம் என்று இந்த்ரியங்கள், மனஸ், புத்தி இவற்றால் பண்ணிக் கொண்டு போனால்தான் இவையும் பொய்யாய்ப் போகிற ஆத்ம ஸாக்ஷாத்காரம் முடிவில் கிடைக்கும். முழங்கால் முறிச்சானிலிருந்து அத்தனை படி ஏறிப்போன பிற்பாடு முடிவில் நாம் ஒன்றுமே பண்ணவில்லை. வெறுமனே நின்று விடுகிறோம். பெருமாள் தாமாகவே தர்சனம் தந்து கொண்டு நிற்கிறார். அப்படித்தான் நமக்கு ஜீவ பாவத்தைத் தருகிற சரீரம், மனஸ், புத்தி எல்லாம் கடைசியில் ஒன்றும் செய்யாமல் ஸமாதி என்று செயலிழந்து நிற்கிறது. ஆத்மா அதுவாகவே ப்ரகாசிக்கிறது.

(திருப்பதி) மலை ஏறும்போது அதற்கென்று உள்ள வழியில்தான் போகவேண்டும். இப்படி ஆத்ம தர்சனத்துக்கு வழியாயிருப்பதைத்தான் "நல்லது" என்று சொல்வது. வழி தப்பினால் காட்டிலே, புதரிலே போய் மாட்டிக்கொள்ள நேரும். அந்தக் காடும் புதரும்கூடத் திருப்பதி மலைதான்.

('திருப்பதி மலை' என்று சொல்வது ஸரியில்லை; 'திருமலை' என்றே சொல்லவேண்டும். பதி என்றால் ஊர் என்று ஒரு அர்த்தம். சம்பாபதி என்று காவிரிப்பூம்பட்டினத்துக்கு ஒரு பேர் கேள்விப்பட்டிருக்கலாம். திருப்பதி என்பது பெருமாளின் ஊர். அந்த ஊர் எந்த மலையில் இருக்கிறதோ அது திருமலை.)

Koviloor Digital Library

திருமலையிலேயே ஏதோ ஒரு முறையான வழியாகப் போனால்தான் பெருமாளிடம் போய்ச் சேரலாம், தப்பினால் காட்டிலே மாட்டிக்கொள்வோம். காடும் திருமலைதானே என்று கேட்டு ப்ரயோஜனமில்லை. நல்லதைப் போலவே கெட்டதும் ஆத்மாவிலிருந்தே வந்ததுதான்—"விலிருந்தே" ஒழிய ஆத்மா"வே" அல்ல! இரண்டும் ஒரே மாதிரி மாயை தான். இருந்தாலும் திருமலையில் காட்டிலே போவார்களா? இப்படித்தான் ஆத்மாவை அடைவதற்கு சாஸ்த்ரம் சொல்லும் நல்ல வழியை விட்டுக் கெட்ட வழியில் போவது. நல்லதைச் செய்ய உதவும் அதே மனோ இந்த்ரியங்கள்தான் இந்தக் கெட்டவற்றுக்கும் காரணம். ஆனாலும் இவற்றிலே போகக்கூடாது. கெட்டது, நல்லது இரண்டும் ஒரே மனமாயையினால்தான் என்றாலும், ஒரே திருமலையைச் சேர்ந்த ப்ரதேசத்திலேயே ஸரியான வழியை விட்டுத் தப்பு வழியில் போகப்படாது என்பது போல, நல்லது-கெட்டது என்று இரண்டாக இருப்பவற்றில் கெட்டதில் போகாமல் நல்லதில்தான் போகவேண்டும். அப்படிப் போவதற்குத்தான் பலவிதமான கர்மாக்கள், பக்தி வழிபாடுகள், யோகம் முதலியவை.

இவற்றிலேயும் குறுக்கே சில கெட்டவை வரத்தான் செய்யும். மலை ஏறுகிறபோது குறுக்கே குரங்குகள் வரும், திருடர்கள் வரலாம், காலை கையை வலிக்கலாம். இப்படி எத்தனையோ இடையூறுகள் ஸாதனையிலும் வரும். வந்தாலும் த்ருடமான உறுதியோடு எல்லாவற்றையும் ஜயித்து மேலே போகவேண்டும். அப்புறம் ஸந்நிதானத்திலே நாம் போய் வெறுமனே நின்றுவிட்டாலே அங்கே எப்போதும் இருந்துகொண்டிருக்கிற பெருமாளின் தர்சனம் கிடைக்கிறாற்போல, ஸாதனை எல்லாம் நின்றுபோய், கெட்டது நல்லது எல்லாம் போய், ஆத்மா ஸ்வச்சமாய் அநுபவத்துக்கு வரும். ஏழுமலை ஏறி என்னென்னவோ பாடு நாம் பட்டோமானாலும் முடிவிலே தர்சனம் செய்யும் பெருமாளை நாமா பண்ணினோம்! அப்படித்தான் ஸாதனாந்தத்தில்

Koviloor Digital Library

(ஸாதனை முடிவில்) பெறுகிற ஆத்மாவையும் நாம் பண்ண வில்லை. எப்போதும் இருந்துகொண்டிருக்கிற ஆத்மாவைத் தான் நாம் இப்போது புதுசாக அடைகிறோம்.

இவ்வளவு சொன்னதில் இப்போது முடிவாவது என்ன வென்றால், கஷ்டங்களுக்குக் காரணம் காமக்ரோதம்—அல்லது க்ரோதத்துக்கும் காரணமாயுள்ள காமம்; அதனால் காமத்தை அடக்கவேண்டும்; ஆனால் இந்தக் காமமும் மூல காரணமில்லை; அது மனஸிலே உண்டாகி இந்த்ரிய வ்யாபாரங்களால் நிறைவடைவதாக உள்ளது; ஆகையினால் மனோ - இந்த்ரியங்களை அடக்கவேண்டும்; அடக்குவதென்றால் ஒரேயடியாக முடியாதாதலால் முதலில் இவற்றாலான நல்லது கெட்டதுகளில் கெட்டதுகளை நல்லவற்றால் அடக்க வேண்டும். கெட்டதற்கு 'ஆப்போஸிட்' (எதிரானது) நல்லது—இருட்டுக்கு வெளிச்சம் மாதிரி. இருட்டை அடக்கு வது என்றால் என்ன செய்யவேண்டும்? வெளிச்சத்தைத் தானே கொண்டு வரவேண்டும்? அப்படியே கெட்டதை அடக்குவதற்காக நல்லவற்றை மனோ, இந்த்ரியங்களால் பண்ண வேண்டும்; புத்தியைக் கொண்டு இப்படிப் பண்ண வேண்டும்! இதிலே நன்றாக முன்னேறியபின், நல்ல பக்வம் பெற்றபின் ஈச்வர ப்ரஸாதத்தினால் அந்த புத்தியும் ஆத்மா விலே அடங்கி, நல்லது கெட்டது இரண்டிலும் ஸம்பந்தப் படாமலிருப்பதான—"நல்லார்க்கும் பொல்லார்க்கும் நடு நின்ற நடு" என்பதாக இரண்டிலும் பட்டுக்கொள்ளாமல் 'ந்யூட்ரலா'க இருக்கின்ற—ஆத்ம ஸ்வரூபமாகவே ஆகிவிடு வோம். இப்படித்தான் பகவான் (கீதையின் இவ்விடத்தில் அர்ஜுனனின் கேள்விக்குப் பதிலை) முடிக்கிறார் :

ஏவம் புத்தே : பரம் புத்த்வா ஸம்ஸ்தப்யாத்மாந-
மாத்மநா |
ஜஹி சத்ரும் மஹாபாஹோ காமரூபம் துராஸதம் ||
(3-43)

Koviloor Digital Library

"ஆத்மாவை ஆத்மாவினுல் அடக்குவது"

மனஸை புத்தியினுல் அடக்குவது என்பதற்கு இங்கே பகவான் 'ஸம்ஸ்தப்யாத்மாந - மா த் ம நா'—பிரித்துச் சொன்னுல், 'ஸம்ஸ்தப்ய ஆத்மாநம் ஆத்மநா'—என்ற வார்த்தைகளைப் போட்டிருக்கிருர். இதற்கு நேர் அர்த்தம் என்னவென்ருல் 'ஆத்மாவினுல் ஆத்மாவை நன்ருக அடக்கி' என்பதேயாகும். 'ஸம்ஸ்தப்ய' என்பதில் 'ஸ்தப்ய' என்ருல் அசைவில்லாமல் நின்று போகும்படிப் பண்ணுவது. இதனுல் தான் அசையாமல் நிற்கிற தூணுக்கு 'ஸ்தம்பம்' என்று பேர். 'ஸம்ஸ்தப்ய' என்ருல் இப்படி நன்ருக ஒன்றை அசைய முடியாமல் நிறுத்திவிடுவது. ஆத்மாவை ஆத்மாவிலேயே இப்படி நிறுத்தி அடக்கிப் போடவேண்டும் என்று (கீதையின் வாசகம்) இருக்கிறது. ஆத்மாவுக்குக் கார்யமே கிடையாது; அதை அடக்குவதற்குமில்லை. பரிபூர்ணமாக விடுபட்ட அதை அடக்கவேண்டிய அவச்யம் ஏது?

பின்னே ஏன் இப்படிச் சொல்லியிருக்கிறதென்ருல், நான் ஏற்கெனவே சொன்னுற்போல, நாம் தற்போதுள்ள நிலையில் மனஸைத்தானே நம்முடைய நிஜமான ஸ்வரூபமாகிய ஆத்மாவாக நினைத்துக் கொண்டிருக்கிறோம்? இந்த மனஸிலேயே கீழான lower மனஸ்தான் சாஞ்சல்யத்தோடு (சஞ்சலத் தன்மையோடு) கட்டுப்பாடில்லாமல் ஓடுவது என்றும், மேலான higher மனஸ் நிச்சயத்தோடு அதற்கு நல்லதை உறுதிப் படுத்திக் கொடுக்கும் புத்தி என்றும் சொன்னேன். 'ஆத்மாவினுல் ஆத்மாவை அசையாமல் நிறுத்தி அடக்கவேண்டும்' என்று பகவான் சொல்லும்போது அடக்கப்படவேண்டிய ஆத்மா (அதாவது "ஆத்மாவை"— "ஆத்மாநம்") என்று அவர் குறிப்பிடுவது lower மனஸைத் தான்; அதை அடக்குகிற ஆத்மா (அதாவது "ஆத்மாவினுல்" —"ஆத்மநா") என்று அவர் சொல்வது higher மனஸான புத்தியே ஆகும். இப்படி அடக்குகிற "ஆத்மநா" என்பதற்கு ஆசார்யாள் "ஸம்ஸ்க்ருதேன மநஸா" என்று பாஷ்யம் செய்திருக்கிருர். "பரிசுத்தப் படுத்தப்பட்ட மனத்தினுல்"

Koviloor Digital Library

என்று பொருள். அதுதான் புத்தி. சுத்தப்படுத்தப் பெருத நிலையில் மனஸ் கெட்டவற்றிலும் ஒடுகிறது கெட்டவை தான் அசுத்தி. நல்லதே பரிசுத்தி. நல்லது தெரிந்த புத்தியால் மனஸை அடக்கி நிறுத்தவேண்டும்.

ஆனல் அப்புறம் புத்தியும் அடங்கவேண்டுமே! அதுவும் போனல்தானே ஆத்மா ப்ரகாசிக்கும்? புத்தி தன்னைத்தானே அடக்கிக்கொள்ளுமா? இல்லை. சற்று முன்னடி, 'மனஸ் தன்னையே எப்படி அடக்கிக்கொள்ளும்? அடங்கணும் அடங்கணும் என்று தவிக்கமட்டுந்தான் முடியும். அந்தத் தவிப்புக்கு இரங்கி ஈச்வரன்தான் அடக்கி, ஆத்மாவில் கரைக்கிருன்' என்று சொன்னதைத்தான் இப்போது திருப்பிச் சொல்ல வேண்டியிருக்கிறது. அப்போது, 'மனஸுக்கு மேலே புத்தி; அந்த புத்தியால் மனஸை அடக்கவேண்டும்' என்று சொல்லவில்லை. காரணம், மனஸோடு புத்தியையும் சேர்த்து தன்னுடைய அங்கங்களில் ஒன்ருகக் கொண்ட அந்தஃகரணத்தையேதான் அந்த இடத்தில் 'மனஸ்' என்று குறிப்பிட்டேன்.

ஈச்வர க்ருபையைக் குறிப்பிடாததேன்?

ஈச்வர க்ருபையால்தான் புத்தி அடங்கி நின்று ஸத்ய தத்வம் ப்ரகாசிக்கிறது என்று இந்த இடத்தில் பகவான் சொல்லவில்லை. ஈச்வரனிடம் சரணகதி செய்தால் அவன் அநுக்ரஹத்தால் லக்ஷ்யத்தில் சேர்ந்துவிடலாம் என்று வேறு இடங்களில் அவர் சொன்னலும் இங்கே அப்படிச் சொல்லவில்லை. ஸகுணமான ஈச்வரனைக் கொண்டுவராமல் ஞானமாகவே சொல்லிக்கொண்டு போவதால் இப்படி என்று வைத்துக்கொள்ளலாம்.

"நாம் ஈச்வர க்ருபையைப் பற்றிச் சொன்னல் என்ன, சொல்லாவிட்டால் என்ன? அது எப்படியும் தான் பண்ண வேண்டியதைப் பண்ணிவிட்டுப் போகிறது. அதுவுமில்லாமல் ஈச்வரன் க்ருபை பண்ணுவதில் ஜீவன் செய்யவேண்டியது

Koviloor Digital Library

என்ன இருக்கிறது? இவன் செய்யவேண்டியதும், செய்யக் கூடியதும் அந்தஃகரணத்தை அடக்கி ஒடுக்க முயற்சி பண்ணுவதும், அதற்காகத் தாபப்படுவதும்தான். இதற்காக இவன் ஈச்வரனைக் கூப்பிடணும் என்று இல்லை. 'ஈச்வரன்' என்ற பேரைச் சொல்லி இவன் கூப்பிடாவிட்டாலும் இவனுக்குள்ளே அவர் உட்கார்ந்துகொண்டுதானே இருக்கிறார்? அதனால் இவனுடைய ஸாதனையை—ஸத்யத்தை அறிவதில் இவனுக்குள்ள ஆர்வத்தை—மெச்சி, அவர் புரிய வேண்டிய க்ருபையை அவரே புரிந்துவிட்டுப் போகிறார். "நீதான் கதி" என்று சரணாகதி செய்து ஈச்வர க்ருபையைப் பெறலாமென்பது வாஸ்தவம்தான். ஆனால் அதுதான் வழி என்று இல்லை. ஆத்ம விசாரம் பண்ணிப் பண்ணி, தன் ஆசை அபிலாஷைகளை, மனஸையே ஒருத்தன் ஞான மார்க்கத்தில் அழித்துத் தேய்த்துக்கொள்வதும், அவனுடைய அஹங்காரத்தை அழித்துக் கொள்வதுதானே? சரணாகதி என்று பக்தி மார்க்கத்தில் சொல்வதும் இப்படி அஹங்காரத்தை அழித்துக்கொண்டு கிடப்பதுதானே? இன்னம் சொல்லப்போனால், "அஹம்" என்று சொல்கிற தனி ஜீவத்தன்மையை அடியோடு இழந்துவிடுகிற அத்வைத (ஞான) மார்க்கந்தான், சரணாகதி செய்தபோதிலும் பக்தி பண்ணுவதற்காகவும் ஈச்வரனுக்குக் கைங்கர்யம் செய்வதற்காகவும் தன்னுடைய தனித்தன்மையைக் கொஞ்சம் பிடித்து வைத்துக் கொள்கிற பக்தி-ப்ரபத்தி (த்வைத) மார்க்கங்களை விடவும் பூர்ண அஹங்கார நாசத்துக்கு ஆனது. இதற்கு ஆர்வத்தோடு முயல்கிறவருக்கு ஈச்வரன் அநுக்ரஹம் செய்யாமலிருப்பாரா?

"வார்த்தையையோ, கார்யத்தையோ பார்க்காமல் ஹ்ருதய பாவத்தையே பார்க்கும் பரமாத்மா, இவன்(ஞான மார்க்க ஸாதகன்) அவனுக்கு ஈச்வரன் என்று பெயர் கொடுத்துக் கூப்பிட்டு, 'சரணாகதி செய்கிறேன்' என்று சொல்லாவிட்டாலும் இவன் ஹ்ருதய பூர்வமாக முயற்சி பண்ணுவதால் க்ருபை செய்துவிடுகிறார்"—என்றிப்படி

Koviloor Digital Library

நினைத்து இங்கே ஞானமார்க்கத்தைச் சொல்லும்போது ஈச்வர க்ருபையைச் சொல்லாமல் விட்டிருப்பார்.

ஜீவன் ஆத்மாவுக்கு வேருக இருப்பதன் உச்சநிலைக்கு மேலே தானுகப் போகமுடியாது. ஏனென்ருல் வேருயிருப்பதனுலேயேதான் ஜீவபாவத்தில் 'தான்' என்று நினைக்கிற அந்தஃகரணம் முளைக்கிறது. அதிலேதான் மனஸும் புத்தியும் அங்கங்கள். அதனுல் மனஸோ, புத்தியோ, அந்தஃகரணமோ, 'இப்படி நாம் ஆத்மாவுக்கு வேருக இருக்கப் படாது' என்று ஆசைதான்பட்டு, அதே நினைப்பாகத் தவிக்க முடியுமே தவிர, வேற்றுமை போன நிலையை வாஸ்தவத்தில் அடையமுடியாது. ஸூர்யனை இருட்டு எப்படிப் பார்க்க முடியும்? வெளிச்சத்துக்கு வந்தவுடன்தான் இருட்டே அழிந்துபோய்விடுமே! இங்கே இருட்டு தானுகத் தன்னை அழித்துக்கொள்ளவுமில்லை. அப்படி, ஆத்ம ஜ்யோதிஸில் மாயா இருட்டு மனஸ் அழிகிறது. மனேபுத்திகள் எட்டக் கூடிய பரம உச்சஸ்தானத்துக்கு மேலே ஒரு ஈச்வரன் இருந்து தூக்கிவிட்டால்தான் அந்த உச்சிக்கு எட்டாத ஒன்றுக்கு ஜீவன் போகமுடியும் என்பதில் ஸந்தேஹமில்லை.

அலசி அலசிப் பார்த்துப் புரிந்துகொள்ளவேண்டிய விஷயம்.

அந்தஃகரணம் என்பது அடையக்கூடிய எத்தனை உச்சமான நிலையிலுங்கூட ஆத்மாவைத் தொடமுடியாது. இது நசித்தால்தான் ஆத்ம ஸாக்ஷாத்காரமே ஸாத்யமாகும். தன்னைத்தானே அது எப்படி நசிப்பித்துக்கொள்ள முடியும்? ஒருவன் ஸூயிஸைட் செய்துகொள்கிருனென்ருல் அப்போது அவனுக்கு வேறேயாக ரிவால்வர், ஒரு முழம் கயிறு என்று எதுவோ ஒன்று இருக்கிறது. கிணற்றில் விழுகிருனென்ருல் ஜலம் என்று ஒன்று மூச்சை அடைக்கிறது தானே மூக்கை, வாயைப் பொத்திக்கொண்டோ, அல்லது மூச்சைவிடாமல், அடைத்துக்கொண்டோ சாகிருனென்ருல்கூட அப்போது

Koviloor Digital Library

சாகிற உடம்புக்கு வேறாக 'சாகவேண்டும்' என்ற பிடிவாத ஸங்கல்பம் என்று ஒன்று இருக்கிறது. உடம்புக்கு வேறாக நிறுத்துமாறு மூச்சு என்று ஒன்று இருக்கிறது. ஆனால் ஜீவன் ஜீவனென்று உள்ளவரையில் அவனுடைய அந்தஃகரணத்துக்கு வேறாக எதுவும் இல்லையே! அவனுடைய ஸர்வமும் அதுவாகவே இருக்க, அதனாலேயே அதை எப்படி ஸூஇஸைட் செய்துகொள்ள முடியும்? ஆனாலும் மனஸ் (அந்தஃகரணம்) நசித்து ஸமாதி நிலையிலே ஆத்மாவை அநுபவிப்பவர்கள் இருக்கிறார்களே! இது எப்படி நடக்கிறது?

ஈசவரன் : த்வைத - அத்வைதப் பாலம்

இதற்குப் பதில் ஈச்வரன்தான், ஈச்வர க்ருபைதான். ஜீவத்வம் ஒரே த்வைதம். ஆத்மா ஒரே அத்வைதம். அதனால் ஜீவத்வத்துக்குக் காரணமான மனஸையும், ஜீவபாவம் அற்ற ஆத்மாவையும் ஸம்பந்தப்படுத்தமுடியாமல், "இது எப்படி ஸாத்யம்? அதெப்படி ஸாத்யம்?" என்று கேள்விகள் கேட்கிறோம். இங்கேதான் ஈச்வரன் வருகிறான்.

ஈச்வரன் எப்படியிருக்கிறான்? த்வைதத்துக்கும் அத்வைதத்துக்கும் ஒரு பாலம் மாதிரி அவன் இருக்கிறான். ஒன்றையொன்று தொட்டுக்கொள்ள முடியாத த்வைத - அத்வைத இக்கரை - அக்கரைகளை ஸம்பந்தப்படுத்தி வைக்கும் பாலமாக அவன் இருக்கிறான். உள்ளுக்குள்ளே அத்வைதமாக ஆத்ம ஸ்வரூபமாக இருக்கிறான். வெளியிலே த்வைதமாக இத்தனை ப்ரபஞ்ச நாடகக் கூத்தும் அடிக்கிறான். நம் மனஸை அவன் ஏவிவிட்ட மாயை கட்டிப்போட்டு ஒரு சின்னக் கட்டுக்குள் வைத்திருக்கிறது. அவன் இம்மாதிரி மனஸினால் கட்டுப்பட்டவன் அல்ல. 'ஆத்மாவானது மாயையோடு சேர்ந்துதான் ஈச்வரன், ஜீவன் இருவருமே உண்டாயிருந்தாலும், ஜீவன்தான் மனஸிடம் மாட்டிக்கொண்டு முழிப்பவன்; ஈச்வரன் அப்படி மனஸினால் பந்தப்படுத்தப்பட்டவன் அல்ல' என்று அத்வைத சாஸ்த்ரத்தில் நிறையச் சொல்லியிருக்கிறது. லோக வ்யாபாரமெல்லாம்

Koviloor Digital Library

திட்டம்போட்டுச் செய்யும் மஹா மனஸ், Cosmic Mind என்று ஈச்வரனையே சொல்லலாம்; ஆனால் அவனுக்குக் கட்டுப்படுத்துகிற உபாதியாக மனஸ் என்பது இல்லை என்பதைப் புரிந்துகொள்ளவேண்டும். அவன் என்னவும் பண்ணுவான். நம் புத்திக்குப் புரியாததெல்லாம் அவனுக்கு ஸாத்யம். 'ஜீவ மனஸோ, புத்தியோ அந்தஃகரணமோ எப்படி இதைப் பண்ணமுடியும், அதைப் பண்ணமுடியும்?' என்று கேள்வி கேட்பது போல, 'ஈச்வரன் எப்படி இன்னது பண்ணமுடியும்?' என்று கேட்க முடியாது. மனஸினால் கட்டுப்படாதவனாதலால், எதுவும் செய்ய அவனால் முடியும்.

ஜீவன் தன் அந்தஃகரணத்தைக் கொண்டு என்ன ப்ரயத்னம் பண்ணமுடியுமோ, அவ்வளவும் பண்ணினபின் அது அழிந்து நாசமடைவதற்கும், அதற்கு எட்டாததை (ஆத்மாவை) ஜீவன் எட்டுவதற்கும் அவன்தான் வழி செய்கிறான். ஜீவபாவத்தின் உச்சிக்கு ஒருத்தன் போய், அங்கேயிருந்தும் ஆத்மாவைத் தொடமுடியவில்லை என்று கண்டுகொண்டு ஆத்மாநுபவத்துக்குத் தவிக்கும்போது, ஜீவபாவத்தை அழித்து, இந்த்ரிய—மனோ—புத்திகளை இல்லாமல் பண்ணி, தன்னுடைய உள் ஸ்வரூபமான ஆத்மாவிலே ஐக்யப்படுத்திக்கொள்கிறான்.

அத்வைத சாஸ்த்ரமும் ஈச்வராநுக்ரஹமும்

அத்வைத சாஸ்த்ரங்களில் இவ்வளவு plain-ஆக ஈச்வராநுக்ரஹத்தால்தான் ஞானம் என்று சொன்னதாகத் தெரியவில்லையே என்று கேட்கலாம். அத்வைத சாஸ்த்ரம் சொல்கிற ஞானம் என்பது அறிவால் அறிவதைக் குறிக்காது. ஆத்மா தன்னையே அநுபவத்தால் அறிந்து கொள்ளும் அத்வைதமான ஸாக்ஷாத்கார நிலைக்கேதான் ஞானம் என்று பெயர். ஆகையால் ஞானம் பெறுவது என்றால் மோக்ஷத்தை அடைவது என்றே அர்த்தம். ஈச்வராநுக்ரஹத்தால்தான் இது ஸித்திக்கிறது என்று அத்வைத சாஸ்த்ரத்தில் வலியுறுத்தி வெளிப்படையாகச் சொல்லியிருக்கக் காணோமே என்று கேட்கலாம். பகவானும்

Koviloor Digital Library

(அத்வைத) ஞானவழியில் இங்கே பேசுவதால்தான் ஈச்வர க்ருபையைச் சொல்லவில்லை என்றால், ஏன் அந்த வழியில் இதைச் சொல்லக்கூடாது என்று கேட்கலாம்.

(விடையாக) ஒரு காரணம் (தோன்றுகிறது). அதாவது: அத்வைத லக்ஷ்யம் த்வைத ஞானத்தை (அல்லது ஸரியாய்ச் சொல்ல வேண்டுமானால், த்வைத அஞ்ஞானத்தை) அறவே போக்கடிப்பதுதான். அத்வைத ஸாதனையின் கடைசி கட்டமாக மனஸை அடக்கி அழிக்கிற ப்ரயத்னத்தின்போது ஈச்வரனைப் பற்றிச் சொன்னால் என்ன ஆகும்? த்வைதத்தைக் கொண்டு விட்டதாகத்தான் ஆகும். ஜீவனுக்கு வேறாக இருப்பவன்தான் ஈச்வரன். 'அவன் இவனுக்கு க்ருபை செய்கிறான்' என்பதாலேயே அவனும் இவனும் வேறுவேறுதான் என்றாகிறது. அதோடுகூட, அவனும் (ஈச்வரனும்) உள்ளுக்குள்ளே பரம அத்வைத ஸ்வரூபியானாலும், தன் க்ருபைக்குப் பாத்ரனாக ஒருத்தன் இருக்கிறான் என்று நினைத்து அப்படி க்ருபை செய்கிறான் என்றால், நினைப்பும் செய்கையும் உள்ள த்வைத பாவத்தையே காட்டுகிறானென்று ஆகிறது. இப்படி த்வைதத்துக்கு நிறைய இடம் கொடுக்கக்கூடிய ஒன்றை அத்வைத ஸாதனையின் மிக உயர்ந்த லெவலில் சொல்லி ஸாதகனை த்வைத பரமாகத் திருப்பக்கூடிய ஹேதுவுக்கு இடம் தரவேண்டாமென்றே அத்வைத சாஸ்த்ரங்களில் ஈச்வர க்ருபையாலேயே ஸித்தி என்று வெளிப்படச் சொல்லவில்லை என்று வைத்துக்கொள்ளலாம். 'நாம் சொல்லாததாலும், ஸாதகன் இதைத் தெரிந்து கொள்ளாததாலும் அந்த க்ருபாமூர்த்தி தன்னுடைய க்ருபையை நிறுத்தி வைத்துக்கொள்ளப் போவதில்லை. ஆனால் நாம் ஈச்வரனைப் பற்றிச் சொல்வதால், எத்தனையோ ப்ரயாஸைப்பட்டு அத்வைதத்துக்குத் தன்னைப் பக்வப்படுத்திக்கொண்டுள்ள இந்த ஜீவன் மறுபடி த்வைதமாக ஈச்வர பக்தி என்று போக நேரலாம். த்வைதமாக அவனிடம் பக்தி பண்ணுவதைவிட அத்வைதமாக அவனிலேயே ஐக்யமாவதுதான் லக்ஷ்யம்.

Koviloor Digital Library

அந்த ஈச்வரனே அதைத்தான் விரும்புவான். அதனுல் சொல்லவேண்டாம்' என்று (அத்வைத க்ரந்த கர்த்தர்கள்) விட்டுவிட்டதாக வைத்துக்கொள்ளலாம்.

"ஐயையோ! ஈச்வர பக்தியை விட்டுவிட்டு ஒரு ஞானமா? அப்படியானுல் அது மோக்ஷமேயில்லை; மோஹந்தான் அதிலே கொண்டு போய் அவன் என்னைத் தள்ளுகிருனே!" என்று ஒரு பெரியவர் அலறிக்கொண்டு செய்ததாக ஒரு ச்லோகமே இருக்கிறது.* அவர் மாதிரி ஆகாமல், ஈச்வர பக்தியை மட்டும் விட்டு, ஈச்வரனை விடாமல் அவனுடைய உள் ஸ்வரூபமான அரூபத்தைப் பிடித்துக் கொண்டு அதிலே கரையவிட வேண்டுமென்றுதான், த்வைதமாக இருக்கிற வெளி ஸ்வரூபத்தை உச்ச லெவலிலே சொல்லவேண்டாமென்று (அத்வைத க்ரந்த கர்த்தர்கள்) விட்டிருக்கவேண்டும்.

முதலிலே த்வைத மயமான கர்மாநுஷ்டானத்தையும், த்வைதமாகவே ஈச்வரனை உபாஸிப்பதையும் அத்வைத சாஸ்த்ரத்தில் நன்ருக விதித்துத்தான் இருக்கிறது. அது மனஸை ஒருமுகப் படுத்துவதற்காகப் பயில்விக்கிற லெவலில். அங்கே த்வைதம் இருக்கலாம், இருக்க வேண்டியதே. இல்லாவிட்டால் (ஸாதகனுக்கு) ஒன்றும் புரியாமல் நாலாதிசையும் மனஸ் ஓடும்; அல்லது எங்கேயோ வெறிச்சென்று விட்டாற்போல சூன்யமாக இருக்கும். ஆனுலும், அப்புறம் அவன் ச்ரவண, மனனங்கள் செய்து,

---

* இங்கு குறிப்பிடப்படும் ச்லோகம்:

பஸ்மோத்தூளன பத்ரமஸ்து பவதே ருத்ராக்ஷமாலே சுபே
ஹா ஸோபாந பரம்பரே கிரிஸுதா காந்தாலயாலங்க்ருதே |
அத்யாராதந தோஷிதேந விபுநா யுஷ்மத் ஸபர்யா-ஸுகா
லோகோச்சேதிநி மோக்ஷ-நாமநி மஹாமோஹே
நிலீயாமஹே ||

முதற் பகுதியில் "முக்திக்கு முந்தைய நிலையில் பக்தி" என்ற உரையில் விரிவு காண்க.

Koviloor Digital Library

த்யானத்தில் தீவ்ரமான நிதித்யாஸனத்துக்குப் போய்விடும் போது த்வைதத்தைச் சொல்லி, ஆத்மாவில் ஒருமுகப்பட ஆரம்பித்திருக்கிற சித்தத்தைக் கலையும்படிப் பண்ணக் கூடாதல்லவா?

ப்ரஹ்மம்-ஆத்மா-ஈச்வரன்

ஸத்ய தத்வத்தை மறைத்து த்வைதக் காட்சிகளையும் அநுபவங்களையும் உண்டாக்கும் சக்தியைத்தான் மாயை என்பது. அந்த ஸத்யமான ஆத்ம தத்வத்துக்கு அந்ய வஸ்துவே கிடையாதாதலால் இந்தக் காட்சிகள், அநுபவங்கள் ஆகியவையும் அதனுடைய வேஷங்கள்தான். ஸத்ய தத்வத்தை மறைப்பதை ஆவரணம் என்றும், அந்த ஒன்றையே பல வேஷங்களில் காண்பிப்பதை விக்ஷேபம் என்றும் சொல்வார்கள். மாயைக்கு ஆவரண - விக்ஷேப சக்திகள் இருக்கின்றன என்று சொல்வார்கள். இப்படி மாயையால் வேஷங்கள் போடுபவன்தான் ஈச்வரன். அதாவது ப்ரஹ்மமே மாயையோடு கூடி ஈச்வரனாகி த்வைதங்கள் நிறைந்த ஜகத்தைத் தன்னிலேயே தோற்று வித்துக் கூத்தடிக்கிறது.

அதென்ன ப்ரஹ்மம் என்றால் அது ஆத்மாதான். சின்ன ஜீவனுக்கு மூலம் என்ன என்று பார்க்கும்போது ஆத்மா என்று சொல்கிறோம். பெரிய ஜகத்துக்கு மூலம் என்ன என்று பார்க்கும்போது ப்ரஹ்மம் என்கிறோம். ஜீவ மூலமும் ஜகத் மூலமும் ஒன்றுதான். ஒன்றிலிருந்தேதான் ஜீவ - ஜகத்துக்கள் தோன்றியிருப்பது. ஜீவ மூலமான ஆத்மாவுக்கு அந்யமாக எதுவுமில்லை என்று சொன்னபின் ப்ரஹ்மம் மட்டும் அதற்கு வேறாக இருக்கமுடியுமா? ஆத்மாவும் ப்ரஹ்மமும் ஒன்றேதான். ஆனாலும் அந்த ஒரே ஸத்ய வஸ்துவை ஜீவனை மட்டும் குறித்ததாகச் சொல்லும்போது ஆத்மா என்றும், எத்தனையோ லக்ஷக்கணக்கான ஜீவராசிகளும் கோடாநு கோடி வஸ்துக்கள் கொண்டதான ஜட ப்ரபஞ்சமும் அடங்கிய ஜகத்தைக் குறித்ததாகச் சொல்லும் போது ப்ரஹ்மம் என்றும் சொல்வதாயிருக்கிறது.

Koviloor Digital Library

ஜீவன் ஈச்வரனிடமிருந்தே

ஆத்மா மாயையோடு கூடி ஈச்வரனுயிருக்கிறது. ஆத்மாவே மாயையால் ஜீவதசையை அடைந்திருக்கிறது என்பதில் அத்வைதிகளுக்கு ஒரே அபிப்ராயம்தான். ஜீவர்களுக்கு மேலே இருந்துகொண்டு ஈச்வரன் ஜகத்தை ஆட்டிப் படைப்பதையும் எல்லா அத்வைதிகளும் ஒப்புக்கொள்வார்கள். ஆனுல் ஜீவன் ஈச்வரனிலிருந்துதான் தோன்றினுன்; ஜீவத்தோற்றத்தை ஈச்வரன்தான் ஏற்படுத்துகிறுன் என்று அவர்களில் எல்லோரும் தீர்மானமாக சொல்வதில்லை. அதாவது ப்ரஹ்மம் முதலில் மாயையோடு கூடி ஈச்வரனுகி, அப்புறம் அந்த ஈச்வரன் ஜீவனை உண்டாக்குகிறுன் என்று சொல்லாமல், 'ஆத்மாவே மாயையால் ஜீவனுயிருக்கிறது; ஈச்வரனுமாயிருக்கிறது' என்று மட்டும் சொல்லிவிட்டுவிடுவதும் உண்டு.

ஆனுல் பகவான் கீதையில் புருஷோத்தம யோகத்தில் ஸ்பஷ்டமாகவே இப்படிச் சொல்லியிருக்கிறுர். புருஷோத்தமன் என்று தன்னையேதான் காட்டிச் சொல்கிறுர். புருஷோத்தமன் யாரென்றுல் அவன்தான் ஈச்வரன், பரமாத்மா எனப்படுபவன்; அதாவது த்ரிலோகத்துக்குள்ளும் புகுந்து அதைத் தாங்கிக் கொண்டிருப்பவன் என்று சொல்லியிருக்கிறுர்*. ஆசார்ய பாஷ்யத்தில் இங்கே நிர்குண ப்ரஹ்மத்தைச் சொல்லாமல் புருஷோத்தமன்தான் நாராயணன் என்று பெயர் பெற்றவன் என்றே ஸகுணமாகச் சொல்லியிருக்கிறது. இப்படிப்பட்ட ஈச்வரனுக இருந்து கொண்டு பகவான் என்ன சொல்கிறுரென்றுல் :

மமைவாம்சோ ஜீவ லோகே ஜீவ பூத : ஸநாதந : |
மந : ஷஷ்டாநீந்த்ரியாணி ப்ரக்ருதிஸ்தாநி கர்ஷதி ||
(15.7)

"நித்யனுன என்னுடைய அம்சமே ஜீவ லோகத்தில் ஜீவனுகத் தோன்றி, ப்ரக்ருதியிலே இருப்பு கொண்ட

---

* கீதை 15.17

Koviloor Digital Library

மனஸையும் பஞ்சேந்த்ரியங்களையும் தனதாக இழுத்து வைத்துக் கொண்டிருக்கிறது'' என்கிறார்.

(இங்கே ஐந்து இந்த்ரியங்களோடு மனஸையும் ஒரு இந்த்ரியமாகவே சேர்த்து ஆறு இந்த்ரியங்கள்—'ஷஷ்டானி இந்த்ரியாணி'—என்கிறார். இப்படிச் சொல்லும் வழக்கமும் உண்டு. ஆசார்யாள்கூட "ஷட்பதீ'' என்ற ஸ்தோத்ரத்தில் இந்த அபிப்ராயத்தை வெளியிட்டுக் கொஞ்சம் வார்த்தை விளையாட்டு பண்ணியிருக்கிறார்.*)

ஆகக்கூடி ஈச்வரனேதான் தன்னுடைய லவலேச அம்சத்தினால் ஜீவனாகி இருக்கிறான். ஜீவன் அவனிடமிருந்து தான் வந்திருக்கிறான். ப்ரக்ருதி என்கிறது மாயைதான். மாயையைத் தனக்கு விஷயமாகக் கொண்ட மனஸானது இந்த ஈச்வராம்சத்தினால் இழுத்து வைத்துக்கொள்ளப்படு கிறது என்றால் என்ன அர்த்தம்? வேறு என்ன அர்த்தம்?— அந்த ஈச்வரனேதான் இப்படி ஒரு மனஸை ஜீவனுக்குக் கொடுத்து அது மாயையிலே ப்ரவ்ருத்திக்க வேண்டுமென்று வைத்திருக்கிறானென்றே அர்த்தம்.

விடுவிப்பு ஈசனாலேயே

இதனாலேயே, இதிலிருந்து விடுவிக்கக் கூடியவனும் அவன்தான் என்று தெரிகிறது. இவன்தான் இழுத்துச் சேர்த்து வைத்தவன் என்றால், பிடுங்கிப் போடக்கூடியவனும் இவன்தானே?

மாய ப்ரக்ருதியில் ஒரு மநுஷ்யன் எப்படிப்பட்ட தன்மைகள் கொண்ட ஜீவனாக ஆக்கப்படுகிறானோ அதை அந்த ஜீவனுடைய ப்ரக்ருதி என்றே சொல்வார்கள். ப்ரக்ருதி என்றால் இங்கே இயற்கை என்று அர்த்தம் கொடுக்கிறது. வெளி உலகத்தில் இயற்கை, இயற்கையன்னை என்பதெல் லாமும் ப்ரக்ருதிதான். எல்லாம் மாயை செய்த ஸ்ருஷ்டி தானே?

---

* இப் பகுதியிலேயே "வண்டு ஸ்தோத்ரம்'' என்ற உரையின் கடைசிப் பிரிவுகள் பார்க்க.

Koviloor Digital Library

மாயையை அடக்குவது ஈசனே

இங்கே இன்னொன்றுகூட சொல்லத் தோன்றுகிறது: ப்ரக்ருதியில் ஜீவனை ப்ரவ்ருத்திக்க விட்டவன் எவனோ அந்த ஈச்வரனின் க்ருபையிருந்தால்தான் அதிலிருந்து 'ரிலீஸ்' ஆகி மோக்ஷமடையலாம் என்பது ஸம்பந்தமான விஷயம்தான்.

ஆரம்பத்திலேயே சொன்னேன், "ஞானவானுகயிருந்தால்கூட ப்ரக்ருதியை எப்படி நிக்ரஹம் பண்ண முடியும்? என்று பகவானே கேட்டார் என்று. ஆனல் ப்ரக்ருதி என்கிற மாயை அடங்கினல்தான் மோக்ஷம். ப்ருக்ருதி என்ற மாயை உற்பத்தி செய்த சரக்குதான் மனஸ். மனஸ் அடங்கினபின் ஜீவன் மோக்ஷம் பெறுகிறுன் என்று இத்தனை நேரம் சொன்னேனே தவிர மாயை அடங்குவதைப் பற்றிச் சொல்லவில்லை. அத்வைத சாஸ்த்ரங்களிலும் மனஸை அடக்கச் சொல்லித்தான் ஸாதகனுக்கு உபதேசமேயொழிய "மாயையை அடக்கு" என்று சொல்வதில்லை.

ஏன்? ஏனென்றுல் அது இவனுக்கு மேற்பட்ட மஹாசக்தி. இவனையே உண்டாக்கிய சக்தி அது. ஆகையால் இவன் அதை அடக்கமுடியாது. அதன் வசப்படாமல் தன் மனஸை இழுக்க ப்ரயத்னப்படுவதுதான் இவனுல் முடிந்தது. இந்த ப்ரயத்னத்தையும் ஸபலமாக்குவது (பலிதமாக்கித் தருவது) ஈச்வர க்ருபைதான். ஜீவனுடைய மனஸ் அடங்கின பின் மாயாசக்தி மறுபடி மனஸை முளைக்கப் பண்ணுமலிருக்க வேண்டுமே! மனஸேயில்லாமலிருந்த ஆத்மாவில்தானே முதலில் மாயையை இருப்பாகக் கொண்ட மனஸை ஈச்வரன் இழுத்து வைத்து ஜீவபாவம் உண்டாயிற்று? இப்போதும் ஜீவன் மனஸை அற்றுப்போகப் பண்ணி ஆத்மாவாகிறபோது அப்படி இவன் மறுபடி மாயா ஸம்ஸாரத்தில் விழும்படியாக அந்த ஈச்வரன் பண்ணலாமோ, இல்லையோ? அப்படி நடக்காமல் பலபேர் அத்வைத ஸாக்ஷாத்காரம் பெற்றிருக்கிறுர்களென்பதால், ஈச்வரனேதான் மாயா சக்தியை அடக்கி, ஜீவனுக்கு ஆத்ம ஸித்தி லபிக்கச் செய்கிறு னென்று தெரிகிறது.

Koviloor Digital Library

அபூர்வமாகவே இருந்தாலும், இப்படி அபூர்வமாகவும் பலபேர் மநோ நிக்ரஹம் செய்து ஞானியாகி, அப்புறம் ஸதா ஆத்ம ஸ்வரூபத்திலேயே நிலைத்திருக்கிறார்களென்றால், ஈச்வரன்தான் அப்படிப் பரம க்ருபையினால் இவர்களை நிலைத் திருக்கும்படியாக விட்டிருக்கிறானென்று அர்த்தம். ஞானியாலேயும் அடக்க முடியாது என்று அவனே சொன்ன ப்ரக்ருதியை அவனொருத்தன்தான் அடக்க முடியும். அப்படி அவன் அடக்குகிற பரம க்ருபையால்தான் எவருக்குமே மோக்ஷஸித்தி என்பது ஸாத்யமாகிறது.

ஜீவன் ஈச்வரனிலிருந்து தோன்றினவனா என்ற விஷயத்தில் இருந்தோம். கீதையில் அப்படித்தான் இருக்கிறது என்று காட்டினேன்.

ஜீவ - ஈச்வர வித்யாஸம்

ஜீவனானவன் மாயையின் ஆவரண சக்தி, விக்ஷேப சக்தி இரண்டுக்கும் ஆளானவன். ஆத்மா இன்னதென்று இவன் தெரிந்துகொள்ள முடியாதபடி ஆவரண சக்தி மறைக்கிறது. த்வைத ப்ரபஞ்ச வ்யாபாரத்திலேயே இவனுடைய மனஸுக்கும் இந்த்ரியங்களுக்கும் விஷயம் இருப்பதால் விக்ஷேப சக்தியும் இவனை நன்றாக ஆட்கொண்டிருக்கிறது.

ஈச்வரன் விஷயம் இப்படியில்லை. அவன் எப்படியிருக்கிறான்? மாயையோடு கூடின ஆத்மா அல்லது ப்ரஹ்மம்தான் ஈச்வரன். மாயை ஸம்பந்தப்படாத நிலையைத்தான் ஆத்மா அல்லது ப்ரஹ்மம் என்றே குறிப்பாகச் சொல்வது; ஸம்பந்தப்பட்ட நிலையில் அது தன்னைக் காட்டிக்கொண்டவுடனே அதை ஈச்வரன் என்று சொல்ல ஆரம்பித்துவிடுகிறோம். எதனோடும் ஸம்பந்தப்படாத ஆத்மாவை எப்படி மாயையோடு ஸம்பந்தப்பட்டதாகச் சொல்லலாமென்றால், இதுவும் அதன் மாயைதான்!

ஈச்வரன் மாயா ஸம்பந்தமுள்ளவனானாலும் ஜீவனுக்கும் அவனுக்கும் ரொம்ப வித்யாஸமுண்டு. ஜீவன் மாயைக்குக்

Koviloor Digital Library

கீழ்ப்பட்ட சக்தி: ரொம்பவும் கீழ்ப்பட்ட சக்தி. அதன் ஆதிக்கத்தில் இருப்பவன். இவனுடைய ஜீவத்வத்தை உண்டாக்கியிருப்பதே மாயைதான். ஆத்மாவை, ப்ரஹ்மத்தை ஈச்வரன் என்று வேறுபோல் ஆக்கியிருப்பதும் மாயைதானென்ருலும், இது அவனே செய்துகொண்ட விளையாட்டுதான். மாயையை அவன் அடக்குவான். மாயை அவனுக்கு அதீனமானது. அவன்மேல் அது ஆதிக்கம் செலுத்தவே முடியாது. ப்ரஹ்மத்தினிடத்தில், அதைக் கொண்டே மாயா சக்தியால் ஜகத் தோற்றத்தை அவன் கல்பித்து அதன் வ்யாபாரத்தை நடத்துகிருனென்ற அளவில் அவனை மாயையின் விக்ஷேப சக்திக்குப் பாத்ரனுக மட்டும் அத்வைத சாஸ்த்ரங்கள் சொல்லும்; ஆனாலும் ப்ரஹ்மத்தை அவனிடமிருந்து மாயையாலும் மறைக்க முடியாததால் அதன் ஆவரண சக்திக்கு அவன் கொஞ்சமும் ஆளாவதில்லை என்று அவற்றில் சொல்லியிருக்கிறது. ப்ரஹ்மத்தை அவனிடமிருந்து மறைக்க முடியாது என்பதற்கு அர்த்தம், அவன் எப்போதும் உள்ளுக்குள்ளே ப்ரஹ்மமாகவே இருக்கிருன் என்பதாகும் வெளியிலே இத்தனைக் கூத்து இருந்தாலும் அவனது ஆத்ம ஞான நிலை கொஞ்சங்கூட பாதிக்கப்படுவதில்லை.

த்வைதத்திலிருந்து அத்வைதத்துக்கு

இப்படி அவன் த்வைத - அத்வைதங்கள் இரண்டிலும் இருப்பதால்தான், மனஸிடம் ஸம்பந்தமே படமுடியாமல் ஒரே அத்வைதமாக உள்ள ஆத்மாவுக்கும், ஆத்மாவிடம் ஸம்பந்தப்படவே முடியாமல் ஒரே த்வைதமாக உள்ள ஜீவ மனஸுக்கும் பாலமாக இருக்க முடிகிறது. தன் விஷயத்தில் ஆத்மாவை மாயை மறைக்க முடியாமல் வைத்துக் கொண்டு, அதே ஸமயம் மாய ப்ரபஞ்சத்தையும் ஆண்டு கொண்டிருக்கிற அவன் ப்ரபஞ்சத்திலுள்ள ஜீவனிடமும் ஸம்பந்தம் வைத்துக்கொண்டு, மறைவில்லாத வெட்ட வெளியான ஆத்மாவையும் அநுபவித்துக் கொண்டிருக்

Koviloor Digital Library

கிருன். இப்படி இரண்டிலும் ஸம்பந்தப்பட்டிருப்பதால் அவன்தான் அந்த வெட்டவெளிக்குக் கொண்டு சேர்க்கக் கூடிய பாலமாக இருக்கிருன். அவன் இப்படி இரண்டுமாக இருப்பது நமக்குப் புரியாது. புரியாத புதிராகவேதான் கொஞ்சங் கொஞ்சமாக த்வைத மனஸையும் அத்வைத ஆத்மாவிலே கரைத்து ஜீவனை அதுவாகவே ஆக்கிவிடுகிருன்.

இதைக் கொஞ்சம் புரியவைப்பதற்கு ஒரு த்ருஷ்டாந்தம் வேண்டுமானுல் சொல்லிப் பார்க்கலாமென்று தோன்று கிறது. ஒரு இரும்புக் குண்டு இருக்கிறது. அதை வாயு விலே கரைப்பது என்ருல் எப்படி முடியும்? அதுவாகக் கரைய முடியாது. பெரிசாக furnace-ல் (ஊது உலையில்) இரண்டாயிரம், மூவாயிரம் டிகிரிக்கு நெருப்பை உண்டாக்கு கிருர்கள். அந்த நெருப்பும் வாயுதான். என்னவோ ஒரு gas என்கிருர்கள்.* அந்த (எரி)வாயுதான் இப்படி நெருப் பாக எரிவது. வாயு என்ருலும் கண்ணுக்குத் தெரியாம லில்லை. பெரிய ஜ்வாலையாக, கண்ணையே பறிக்கிற மாதிரித் தெரிகிறது. இப்படிப்பட்ட ஜ்வாலையில் காய்ச்சினுல், அத்தனை கெட்டியாக இருந்த இரும்புக் குண்டும் இளகி த்ரவமாகி, அப்புறம் அந்த த்ரவமும் வாயு வாகி மறைந்து போய்விடுகிறது.

இப்படித்தான் மாயையில் போட்டு நன்கு கிட்டித்த அந்தஃகரணம் குண்டு மாதிரி கிண்டாக ஆத்மாகாசத்தில்—'ஆத்மா என்ற வாயுவெளியில்' என்று வைத்துக் கொள் வோம்; அதில்—கரைய முடியாமல் தனக்குத் தனியான ஜீவபாவத்தைக் கற்பித்துக்கொண்டு கிடக்கிறது. வாயுவாக இருந்துகொண்டிருந்தாலும் ஜ்யோதிஸ் என்ற ரூபத்தோடு கூட இரும்பைத் தொட்டு, அதற்குள்ளே தன் சக்தியைச் செலுத்தி உருக்குகிற ஜ்வாலை மாதிரி ஈச்வரன் இருக்கிருன். ஆத்மாவைப்போல இல்லாமல் இவன் ஜீவனேடு ஸம்பந்தப் பட முடியும். அவனுடைய மனஸை உருக்கி இளக்க முடியும்.

---

* ஸ்ரீ சரணர்கள் குறிப்பிடுவது ஆக்ஸி - அஸிடிலின் காஸாக இருக்கலாம்.

Koviloor Digital Library

அப்புறம் வாயு மாதிரிப் பரவிப் பறக்கவைக்க முடியும். ரூபமற்ற வாயு போன்ற தன்னுடைய ஆத்ம ஸ்வரூபத்திலேயே இந்த மனஸும் இரண்டறச் சேர்ந்து மறையும் படியாகவும் பண்ணமுடியும்.

இடை நிலைகள்

கெட்டியான த்ருட பதார்த்தமான இரும்பு த்ரவமாக இளகி உருகி, வாயுவாக ரூபத்தை இழப்பதற்கிடையே த்ருடமுமில்லாமல் வாயுவுமில்லாமல் எத்தனையோ நிலைகள் உண்டு. இப்படியே நம்முடைய த்வைத புத்திக்கு வராததாகவும், ஆனால் அத்வைத ஸ்திதியிலும் சேராததாகவும் ஜீவனுக்கு எத்தனையோ (இடை) நிலைகளை ஈச்வரன் கொடுக்கிறான். இவற்றைப்பற்றி நாம் "எப்படி முடியும்?" என்று கேள்வி கேட்டுக்கொண்டேயிருக்க வேண்டியதுதான். 'ஆன்ஸர்' அந்த நிலைகளுக்கு நாமே போனால்தான் தெரியும்! ஆனால் அப்படித் தெரிந்துகொண்டதை நாம் மற்றவர்களுக்குச் சொல்ல முடியாது! ஏனென்றால் தெரிந்து கொண்டது இந்த லோகத்தின் த்வைதத்துக்கு மேலே போய்க்கொண்டிருக்கிறபோது. அதைத் தெரிவிக்க வேண்டியதோ இந்த த்வைத லோகத்தின் நிலைக்கு வந்தபோது! அந்த அநுபவ நிலைகளுக்கு போனால்தான் அது தெரியும். அறிவால், வார்த்தையால் விளக்கி வைக்க முடியாது. தித்திப்பு முதலான ருசிகளையோ, சிவப்பு முதலான கலர்களையோ வார்த்தையில் புத்தியால் கொண்டுவர முடியுமா? ஏதோ கோடி காட்டலாம். அவ்வளவுதான் த்வைதத்துக்கு மேற்பட்டவை அநுபவபூர்வமாகத் தெரிந்தபின், மற்ற ஜீவர்களுள்ள த்வைத லோகத்துக்கு வருவோமா என்பதே ஸந்தேஹம். ஆனால் எத்தனையோ ஞானிகளை அவன் லோகத்திலே வைத்து உபதேசம், அநுக்ரஹம் பண்ணும்படியும் செய்திருக்கிறானே! அவர்களும் இதை ஏன் சொல்லவில்லை என்றால், ஊட்டியில் அநுபவித்த குளிரை மெட்றாஸில் 110 டிகிரி வெயில் அடிக்கும்போது சொல்லுங்

Koviloor Digital Library

கள் என்ருல் எப்படி முடியும்? அந்த மாதிரி உச்சமான அநுபவ நிலேயில் கண்டதை கீழான இன்னென்றில் கொண்டு வரமுடிவதில்லே.

த்ரவமாக இளகுகிறது, உருகுகிறது, அப்புறம் வாயுவாகப் பறக்கிறது, பரவுகிறது என்ருல் கெட்டியாய் இருந்தது மேலும் மேலும் ம்ருதுவாக, லேசாக ஆகிக் கொண்டே போகிறது என்று அர்த்தம். அப்புறம் ரொம்ப லேசான போது ரூபமே இல்லாமல் மறைந்துபோய்விடுகிறது. கெட்டியாக "நான்" கொண்டாடிக் கொள்ளும் அஹம்பாவ மனஸ் இப்படித்தான் நிறைய ஸாதனே பண்ணி ஈச்வர க்ருபையைப் பெற்றபின் மேலும் மேலும் ம்ருதுவாகவும் லேசாகவும் ஆகிறது. கெட்டி நிலேயில் சைதன்ய ரச்மி ஏதோ துளிதான் ஜீவ மனஸில் ப்ரதிபலிக்கிறது. அது குழைந்து ம்ருதுவாகி இளகினுல், த்ரவ பதார்த்தத்துக்குள் ஸூர்ய பிம்பம் நன்ருக ப்ரதிபிம்பிப்பது போல் சைதன்ய ஒளி நன்ருக உள்ளே புகுந்து நிரப்புகிறது. ஆனுல் பிம்பம் வேறே, ப்ரதிபிம்பம் வேறேதான். த்ரவமும் அதற்கப்புறம் ரொம்ப லேசாகி வாயுவாகிறபோதுதான் ஒளி மண்டலத்தில் ரூபமே தெரியாமல் ஒன்ருகிவிடுகிறது. இதுமாதிரி பக்தி லயம், யோக லயம் முதலான இடைநிலேகளில் ஈச்வர குணங்கள், சக்தி இவற்றிலே ஜீவன் நன்ருக ஊறி, அப்புறம் ஞான ப்ராப்தியில் நிர்குணமாய் சாந்தமாய் இருக்கிற அவனுடைய ஆத்ம ஸ்வரூபத்தில் வித்யாஸமில்லாமல் ஒன்ருகி விடுகிருன். (ஆத்ம 'ஸ்வரூபம்' என்ருலும் அது 'அரூபம்' தான்!)

த்வைதத்துக்கும் அத்வைதத்துக்கும் நடுவே பாலத்தில் போகிறபோது ஜீவமனஸின் கெட்டிரூபம் கொஞ்சம் கொஞ்சமாக லேசானதாக மாறிக்கொண்டே வருகிறது.

த்ருட வஸ்து மாதிரி இல்லாமல் த்ரவ வஸ்து பரவும் தன்மையுள்ளதாக இருக்கிறது. வாயு பதார்த்தங்களோ த்ரவங்களே விடவும் வேகமாகத் தொலே தூரங்களுக்கும் பரவிவிடுகின்றன. இரும்பு குண்டு த்ரவமாகவும், வாயுவாக

Koviloor Digital Library

வும் ஆகிறபோது அந்த குண்டுதாளு இது என்று ஆச்சர்யப் படும்படியாக ரூபம் மாறுகிறது; அரூபமாகத் தேய்கிறது. இம்மாதிரி ஜீவ மனஸ் உருகி உருகிப் பரவப் பரவ, அதாவது கெட்டிப்பட்டுக் குறுகியிருந்த தன் தன்மை போய் மேலும் மேலும் விஸ்தாரமாகிறபோது, அந்தப் பழைய மனஸ்தாளு இது என்னும்படியாக மாறிக்கொண்டே போகிறது. த்வைதத்தில் ஒரேயடியாகக் கட்டுப்பட்டிருந்தது போய் அத்வைதத்தை நோக்கி விஸ்தரிப்புப் பெற்றுப் பரவுகிறது. இதனுல்தான் ஸாதாரணமாக ஜீவமனஸுக்கு ஏற்பட முடியாத அதீந்த்ரிய சக்திகள் அதற்கு உண்டாகின்றன; அதீந்த்ரிய அநுபவங்கள் அதற்கு ஏற்படுகின்றன. எங்கேயோ நடப்பது தெரிகிறது, எவர் மனஸிலோ இருப்பது தெரிகிறது, எந்தக் காலத்திலோ நடந்ததும் நடக்கப் போவதும் தெரிகிறது. இதற்கு என்ன அர்த்தம்? ஒரே த்வைதத்திலிருந்த நிலைமை மாறி த்வைத - அத்வைதமான ஈச்வரனில் கொஞ்சங் காலமாக ஊறி அவனுடைய தன்மைகளை இது எடுத்துக்கொள்கிறது என்று அர்த்தம். அவன் ஒன்றிலே குறுகி இராமல் எல்லா இடத்திலும், எல்லார் உள்ளத்திலும், எல்லாக் காலத்திலும் இருக்கிற ஸர்வ வ்யாபி அல்லவா? அத்தனையிலும் இருக்கிற ஒருவன் என்பதால் அத்வைதம். 'அத்தனையிலும்' என்று பலவற்றைக் குறிப்பிடும்படி இருப்பதால் த்வைதம். "ஏகமேவ அத்விதீயம்"* என்று ஒன்றேயான அத்வைதப் பொருளாயில்லாமல், பலவற்றினுள்ளே இருக்கிற ஒன்ருன தத்வம் இது. ஜீவன் முழு த்வைதத்திலிருந்து, இப்படி இரண்டுமாயுள்ள ஈச்வரனில் தோய்ந்து, கெட்டி மனஸ் மாறி, விஸ்தாரமாகி மேலும் மேலும் அத்வைதத்தை நோக்கி உயர்ந்த அநுபவ நிலைகளைப் பெறுகிருன். அப்புறம்தான் வாயுவில் இரண்டறக் கரைக்க முடியாமலிருந்த இரும்புக் குண்டைக் கடைசியில் வாயுவாகவே ஆக்கிவிடுவதுபோல ஈச்வரன் தன்

---

*சாந்தோக்யோபநிஷத் 6, 2, 1, 2

Koviloor Digital Library

உள்நிலையான பரிபூர்ண அத்வைத ஸ்திதியில் ஜீவனை அபேதமாகக் கரைத்துக் கொண்டுவிடுவது.

ஒரே த்வைதமாக இப்போது நாமிருக்கிற நிலையும், ஒரே அத்வைதமாக ப்ரஹ்மம் இருக்கிற நிலையும் ஸந்தித்துக் கொள்ளவே முடியாது என்று நமக்குத் தோன்றினாலும், நடுவே த்வைதம் நீர்த்து நீர்த்து அத்வைதம் இறுகிவருகிற உபாஸனா நிலைகளும் ஒரு கட்டத்துக்கு அப்புறம் வருகின்றன. 'அத்வைதமாக ஆவதற்கு முற்பட்ட எல்லாமே உபாஸிக்கிறவன், உபாஸனா லக்ஷ்யம் என்ற த்வைதமுள்ளதுதான்; அவையெல்லாம் உபாஸனை என்பதோடு ஸரி; ஞானமாகாது - அத்வைதந்தான் ஞானம்' என்று சொல்லும் ஆசார்யாளே இந்த உபாஸனைகளிலும் ஒன்றுக்குமேல் ஒன்றாக அத்வைதத்துக்குத் தூக்கி விடுகிறவைகள் இருக்கின்றன என்று சொல்லியிருக்கிறார். அநேகவிதமான உபாஸனைகளைச் சொல்லும் சாந்தோக்யோபநிஷத்துக்கு "ஸம்பந்தபாஷ்யம்" என்பதாகச் செய்துள்ள உபோத்காதத்தில் (முன்னுரையில்), "இந்த உபநிஷத்தில் 'அப்யுதயம்' என்பதாக லௌகிகமான உயர்ந்த பலன்களைத் தரும் கர்ம ஸம்பந்தமான உபாஸனைகள், கைவல்ய மோக்ஷத்துக்குக் கிட்டே சேர்ப்பதான பலன்களைத் தரும் உபாஸனைகள் ("கைவல்ய ஸந்நிக்ருஷ்டபலாநி"), அத்வைதத்திலிருந்து துளி மட்டுமே மாறுபட்டு ப்ரஹ்மத்தைக் குறித்ததான உபாஸனைகள் ("அத்வைதாத் ஈஷத்விக்ருத ப்ரஹ்ம விஷயாநி") என்று பலவிதமானவற்றைச் சொல்லியிருக்கிறது" என்று ஆசார்யாள் சொல்லியிருக்கிறார். இது விஷயத்தை நன்றாகத் தெளிவுபடுத்துகிறது. அதாவது, அத்வைத ஞானமாக இல்லாமல் உபாஸனையாயிருப்பதிலேயே அதற்குக் கொண்டு விடுபவையாகப் பல இருக்கின்றன என்கிறார்.

ஆனாலும் "நிதித்யாஸனம் என்பதாகத் தீவிர ஆத்ம விசாரம் பண்ணும்போது ஈச்வரன் ஜீவ மனஸை எடுத்துக் கொண்டு மாற்றி ஆத்மாவில் சேர்க்கிறான்" என்று ஸ்பஷ்டமாக அத்வைத நூல்களில் சொல்லத்தானில்லை. ஆத்ம

Koviloor Digital Library

விசாரம் பண்ணிக்கொண்டே போனால் தானாக ஒரு கட்டத்திலே அந்த விசாரமும் நின்றுபோய் ஸ்வயம் ப்ரகாசமான ஆத்மா தானாகவே பளிச்சிட்டுவிடும் என்கிற ரீதியில்தான் சொல்லியிருக்கிறது. ஜீவனும் ப்ரஹ்மமும் அபேதம் என்பதைச் சொல்வதான உபநிஷத் மஹா வாக்யங்களை குருமுகமாக உபதேசம் பெற்று அதையே சிந்தனை பண்ணிப் பண்ணி நன்றாக உறுதிப் படுத்திக்கொண்டு, உறுதிப் படுத்திக்கொண்டதை உள்ளுக்குள்ளே நன்றாக இறக்கிவிடுகின்ற த்யானமாக நிதித்யாஸனம் செய்து கொண்டே போனால், 'டாண்' என்று ஒருநாள் ப்ரஹ்ம ஞானம் பிறந்துவிடும் என்று சொல்லியிருக்கிறது.

அதிகாரிகளையொட்டி உபதேச மாறுபாடு

இந்த நாளில் எல்லாருக்கும் எல்லாவற்றையும் சொல்கிறது போல அப்போது பண்ண மாட்டார்கள். பாத்ர மறிந்து, யோக்யதை பார்த்து, அதிகாரம் உள்ளவருக்கே சொல்வார்கள். ஸரியாகப் புரிந்து கொள்ள முடியாதவர்கள், புரிந்துகொண்டாலும் அதை முறையாகப் பாடுபட்டு அநுஷ்டானத்துக்குக் கொண்டுவர முடியாதவர்கள், தப்பாகப் புரிந்து கொண்டதை அநுஷ்டானம் செய்து விபரீதத்தை உண்டாக்கிக் கொள்ளக் கூடியவர்கள்—என்றிப்படியெல்லாம் இருக்கக்கூடிய சராசரி ஜன ஸமூஹம் முழுதற்கும் ஒரு பெரிய தத்வத்தை—நிரம்பவும் அப்யாஸ, வைராக்ய ஸாதனை தேவைப்படும் ஸித்தாந்தத்தை—சொல்ல மாட்டார்கள். 'ப்ரின்டிங் ப்ரெஸ்' வராததால் ரொம்பக் குறைச்சலாகவே ப்ரதி எடுக்கக் கூடியதாகச் சுவடிகளில் அவர்கள் சாஸ்த்ரமாக எழுதிவைத்தது யார்? யோக்யதையுள்ள பாத்ரர்களாக இருந்தார்களோ, அதாவது 'அதிகாரி'களென்று கருதப்பட்டவர்களாயிருந்தார்களோ அவர்களுக்குத்தான் ப்ரயோஜனப்பட்டன. யார் வேண்டுமானாலும் வாங்கி ஒரு பொழுது போக்குக்காக, அல்லது க்யூரியாஸிடிக்காகப் படிக்கிற விதத்தில் பெரிய விஷயங்கள் புஸ்தகங்களில் இறைபடவில்லை.

Koviloor Digital Library

நானேகூட கூட்டத்தில் பேசும்போது ஜனங்களுக்கு எட்டாத தத்வங்களை இப்போதே எல்லாரும் அப்யஸிக்க வேண்டுமென்கிறாற்போல வற்புறுத்திச் சொல்லிகொண்டு போனால் அது தப்புத்தான். ஸதா ஸர்வ காலமும் மாயையிலேயே உழன்று கொண்டிருக்கிற ஸர்வ ஜனங்களும் இந்த மாயைக்கு அப்பாற்பட்டதாக ஆத்மா என்று ஒன்று இருப்பதை தினமும் கொஞ்சம் நினைத்துக் கொள்ளத்தான் வேண்டும். எல்லாரும் அப்படிச் செய்யவேண்டுமென்பதற்குத்தான் அத்வைதத்தைப் பற்றி உபந்யஸிப்பது. அந்தப் பரம தத்வம் ஒருத்தருக்குக்கூட நஷ்டப்பட்டுப் போகாமல் அதை எல்லாருக்கும் தெரிவிக்கவேண்டிய கடமை ஆசார்யாளுடைய மடத்திலிருக்கிற எங்களுக்கு இருக்கிறது. ஆனாலும் தினமும் கொஞ்சம் அத்வைத நினைப்பு இருக்கணுமென்றுதான் சராசரி ஜனங்களுக்குச் சொல்லணுமே தவிர, இப்போதே எல்லாரும் எல்லாவற்றையும் விட்டுவிட்டு ஆத்ம விசாரத்தில் உட்காருங்கள் என்று சொல்லக்கூடாது. அது ஸாத்யமில்லாததைச் சொல்வதே யாகும். அதிகாரிகளாயில்லாதவர்கள் அப்படிச் செய்யப் பார்த்தால் அநேகத் கஷ்டங்கள், கெடுதல்கள் ஏற்படும். ஆகையால் த்வைதமான கர்மா, பக்திகளையே பொதுமக்களுக்கு அதிகம் சொல்லி, அதில் அவர்கள் நன்றாக இறங்கி அப்யஸிக்கிற அளவுக்கு வற்புறுத்திச் சொல்லி, அத்வைத லக்ஷ்யத்தை நினைவூட்டுவதோடு நிறுத்திக் கொள்ள வேண்டும்.

"கார்யத்திலேயே பற்று வைக்கக் கூடியவர்களாயிருக்கிற பாமர ஜனங்களுக்கு கார்யமில்லாத வேதாந்த ஸத்யங்களைச்சொல்லி புத்தியைக் குழப்பப்படாது" என்றே கீதையில் பகவான் கட்டளை போட்டிருக்கிறார்.*

த்வைதத்துக்கே அதிகாரிகளாகத் தற்போது இருக்கிறவர்களைக் கொஞ்சம் கொஞ்சமாகப் பக்வப்படுத்திதான் அத்வைதத்தை ஸாதனையாக அப்யஸிப்பதற்கான விஷயங்

* 3. 26 மூன்றாம் பகுதியில் "ஆசாரம்" என்ற உரையில் "தலைவர் கடமை: கீதை உபதேசம்" எனும் உட்பிரிவு பார்க்க.

Koviloor Digital Library

களைச் சொல்லவேண்டும். த்வைதமாகவே முதலில் நிறைய ஆரம்பித்து, கொஞ்சம் கொஞ்சமாகக் குறைத்துக் கொண்டே போய் அப்புறம் அத்வைதத்தை நிறையச் சொல்லவேண்டும்.

த்வைத-அத்வைத அதிகாரிகளைப் பொறுத்தே உபதேசம் வித்யாஸமாயிருக்கவேண்டும். இதில் முக்யமாக, இப்போது நாம் எடுத்துக்கொண்டுள்ள விஷயத்தில், கவனிக்க வேண்டியது என்னவென்றால், 'த்வைத அதிகாரிகளுக்கு ஆரம்பத்திலிருந்தே அத்வைத் லக்ஷ்யம் என்ற ஒன்றைத் துளி சொல்லவேண்டும், அப்புறம் பக்வப்படுத்திக் கொண்டே போய் அத்வைதத்துக்கு அதிகாரியாக்க வேண்டும்' என்பதால் இவர்களுக்கு முழுக்கவும் த்வைத உபதேசத்தோடேயே முடித்துவிடக் கூடாது என்றுகிறது. ஆனால் இவர்கள் அத்வைதத்துக்கு அதிகாரிகளாவதற்குப் பக்வப்பட்ட பிற்பாடோ இவர்களுக்கு த்வைதத்தைப் பற்றிக் கொஞ்சங்கூடச் சொல்லக்கூடாது. அங்கே இங்கே கூட த்வைதத்தில் இவர்களுடைய சித்தம் போகவிடாமல் முழுக்க முழுக்க அத்வைதமாகவே சொல்லிக் கொண்டு போய் அதிலேயேதான் இவர்களை ஆணி அடித்தாற்போல நிறுத்தவேண்டும்.

த்வைதிகள்தான் த்வைதத்துக்கு மேலே அவர்கள் போகவேண்டியதான நிலைகளைப்பற்றிக் கொஞ்சம் கொஞ்சமாகத் தெரிந்து கொள்ள வேண்டுமே தவிர, அத்வைத ஸாதகர்கள் அவர்கள் விட்டு விட்டு வந்த த்வைத ஸமாசாரங்களை மறுபடி நினைத்துக்கொள்ள வேண்டியதில்லை. அவற்றை மறக்கத்தான் வேண்டும். அதனாலேதான் அப்படிப்பட்டவர்களுக்கான சாஸ்த்ரங்கள் ஈச்வரன், ஈச்வர க்ருபை உள்பட த்வைதமான, த்வைதாத்வைதமான எதையும் விஸ்தரிப்பதில்லை.

நம்முடைய தேசத்தில் தத்வங்கள் அறிவு மட்டத்தோடு நிற்காமல், அவற்றின் அநுபவத்தைப் பெறுவதற்கான அநுஷ்டானங்களையும் விஸ்தாரமாகக் கொண்ட ஸம்ப்ர

Koviloor Digital Library

தாயங்களாக இருக்கின்றன. இவற்றை அநுஷ்டிக்கக்கூடிய அதிகாரிகளா என்று பார்க்காமல் லெக்சர் பண்ணினால் அது ஸரியேயில்லை. அத்வைத ஸித்தாந்தத்தைப் போல மஹாபாவிகளே கடினமான நீண்ட ஸாதனைக்கப்புறம்தான் அநுபவத்துக்குக் கொண்டுவரக் கூடியதான தத்வ சாஸ்த்ரத்தை ஜனநாயக ரீதியில் ப்ரசாரம் செய்வது யுக்தமில்லை.*

அத்வைத சாஸ்த்ரங்கள் கர்மாநுஷ்டானம், உபாஸனை ஆகியவற்றில் நன்றாக முன்னேறி, அவற்றையும் விட்டுவிட்டு ஸந்நியாஸம் வாங்கிக்கொண்டு மஹாவக்ய உபதேசம் பெற்று ஆத்ம விசாரம் செய்ய ஆஸ்தை உடையவர்களைக் கருதியே முக்யமாக எழுதப்பட்டவை. முன்னே சொன்னாற் போல, இவர்களை இவர்கள் புத்திபூர்வமாக ஸாதனை செய்யும் வரையில் அத்வைதத்திலேயே ஆணி அடித்தாற் போல நிலைநிறுத்த வேண்டுமென்ற அபிப்ராயத்தில்தான் த்வைதமான ஈச்வர க்ருபையைப் பற்றிப் பளிச்சென்று சொல்லாமல் விட்டது. நிதித்யாஸனத்தில் மேலே மேலே உயர்ந்தநிலைகள் கிட்டி மனோ நாசத்திலேயே முடிந்து ஆத்ம ஸாக்ஷாத்காரம் ஏற்படுகின்றதென்று சொன்னாலும் இப்படி

---

* இவ்வுரையின் பெரும்பாலான பகுதிகள் பொது உபந்யாஸங்களில் கூறப் படாதவை; ஒரு சில ஸாதகர்கள் அல்லது பண்டிதர்களுக்கிடையில் ஸ்ரீ சரணர்கள் அருளியவையும், ஓரிரு ஸாதகர்களின் கேள்விகளுக்குத் தந்த பதிலுமே இதில் முக்யமான பங்காக அமைந்துள்ளது. இவற்றை இங்கு தொகுத்தளித்துப் பலருக்கும் தெரிவிப்பதற்கு ஒரு ஸமாதானம் பிற்பாடு இவ்வுரையிலேயே வருவதாகத் தொகுப்பாசிரியர் கருதியே இவ்விதம் செய்துள்ளார். அதாவது, அத்வைத ஸாதனையில் கணிசமாக முன்னேறியவர்களுக்கு மாத்ரமில்லாமல், பொதுவாக ஆன்மிய நாட்டம் கொண்ட எல்லோருக்கும் கண்ணன் கீதோபதேசம் செய்தபோது, அத்வைத சாஸ்த்ரத்தில் வெளிப்படச் சொல்லாத பல கருத்துக்களையும் வெளியிட்டிருக்கிறாரென்று ஸ்ரீ சரணர்கள் எடுத்துக் காட்டியிருக்கிறார்கள். அதேபோல ஒரு குறிப்பிட்ட மார்க்கத்தில் அதிகம் செல்லாவிடினும் பொதுவான ஆன்மிய நாட்டமுள்ளவர்களே இந் நூலைப்படிப்பவர்களில் அதிகம் இருப்பதால் த்வைத - அத்வைத மார்க்கங்களை இணைக்கும் விஷயமாக ஸ்ரீ சரணர்கள் திருவாய் மலர்ந்தவற்றைச் சேர்த்திருக்கிறது. கர்மா, பக்திகளை நிறையக் கூறியே இவற்றையும் கூறியிருக்கிறாரென்பது கவனத்துக்குரியது.

Koviloor Digital Library

மேலும் மேலும் உயர் நிலைகளை அடைவிப்பது ஈச்வர க்ருபை தான் என்று சொல்லி, இவனுக்கு வேறான ஒரு ஈச்வரனை அந்த இடத்தில் வலியுறுத்துவதில்லை.

ஈச்வரன் மஹா மாயாவி! அவனன்றி அணுவும் அசையாது என்கிறார்கள். ஆனாலும் அவன் நம் மனஸிலே புகுந்து கொண்டுதான் நம்மை நினைக்கப் பண்ணுகிறான் என்பது கொஞ்சம்கூடப் புரியாத நிலையிலேயே நம்மை வைத்திருக்கிறான். நம் நினைப்பு கன்னாபின்னா என்று இருப்பதைப் பார்க்கும்போது, 'இது நிச்சயமாக அவன் நினைப்பதாயிருக்க முடியாது; இப்படிப்பட்ட நினைப்புக்கள் அவனுக்கு ப்ரீதியாக இருக்காது' என்று தோன்றுகிறது. நல்ல நினைப்புக்களைத் தூண்டிவிடும்படி அவனிடமே ப்ரார்த்திக்கிறோம். காயத்ரிக்கே அதுதான் அர்த்தம் ஆனதால், எல்லாம் ஈசன் செயலே என்று சொன்னாலும், அவன் 'நம் செயல்' என்று நாம் ஏதோ செய்து பார்த்து, முட்டி, மோதிக்கொண்டு, அதனாலேயே அறிவு பெறுகிறோமா என்று பரீக்ஷிக்கிற விதத்தில்தான் நமக்குத் தனி மனஸைக் கொடுத்து வேடிக்கை பார்த்துக்கொண்டிருப்பதாகத் தெரிகிறது. எல்லாம் அவன் திட்டம், எல்லாம் அவன் செயல் என்றால் அப்புறம் நாம் நம்மைத் திருத்திக் கடைத்தேற்றிக் கொள்வதற்காக ஸாதனை என்று ஒன்று செய்யவேண்டியதே இல்லையே!

நம் தனி மனஸ் தன்னிஷ்டமாக ஒன்றில் போவதற்கு அவன் எவ்வளவு தூரம் இடம் கொடுப்பான்? எப்போது கொஞ்சமும் இடம் கொடுக்காமல் தானே பூராவும் எடுத்துக் கொள்வான்?—(என்று) யாரும் சொல்ல முடியாது. ஆகையினால், ஆத்ம விசாரத்தில் நாம் ப்ரவேசித்து அவனால் கொஞ்சம் கொஞ்சமாக உயர்த்தப்படுகிற மனஸையும்கூட அவன் பூர்ணமாக எடுத்துக் கொள்வதற்கு முன் விளையாட்டுப் பார்க்கக் கூடும். அதாவது அப்போதுகூட ஜீவமனஸ் ஸ்வதந்த்ரமாக நினைத்து முடிவுபண்ண ஈச்வரன் அநுமதிக்கக் கூடும் இம்மாதிரியான உச்ச கட்டத்திலே ஜீவனானவன், 'த்வைதமான ஈச்வர க்ருபை இத்தனை நன்றாயிருக்கிறதே!

Koviloor Digital Library

அதனால் இதைச் செய்கிற ஈச்வரனிடம் த்வைதமாய் பக்தி பண்ணிக்கொண்டே அதோடு நின்றுவிட்டாலென்ன?' என்று நினைக்கலாமல்லவா? அப்போது இதே ஈச்வரனின் அரூபமான, நிர்குணமான ஸார ஸத்யத்தில் ஜீவன் ஒன்றுவது எப்படி? "ஒரு ஜீவன் தானாக இஷ்டப்பட்டுக் கேட்கிறதைக் கொடுப்போம்" என்று ஈச்வரன் கடைசி மட்டும் விளையாட்டுப் பண்ணுவானாகில், இவனுக்கு அத்வைத ஸித்தி எப்படிக் கிடைக்கும்?

ஈசன் செய்வதற்கு சாஸ்த்ரம் எதற்கு?

ஈச்வரனே தன் க்ருபை என்று காட்டிக் கொள்ளாமல் இவனை ஸாக்ஷாத்காரத்தில் சேர்த்தாலும் சேர்க்கலாம். இம் மாதிரி ஸித்தி அடைந்தவர்கள் பிற்பாடு சாஸ்த்ரம் செய்தால் அதில் ஈச்வர க்ருபையைச் சொல்வதற்கு இடமில்லை. அல்லது அவன் தன்னையும், தன் க்ருபா விலாஸத்தையும் ஸாதகனுக்கு நன்றாகத் தெரிவித்தாலுங்கூட, அப்போது இவர்கள், 'அவன் நம்மைக் கொஞ்சம் கொஞ்சமாக ஆட்கொண்டு மேலே அழைத்துக்கொண்டு போகிறான். அவன் இப்படிப் பண்ணப் பண்ண அந்த அளவுக்கு நாம் புத்தி பூர்வமாக ஸாதனை பண்ணுவதும் போய்விடுகிறது; நம்மை மீறிய சக்தியே மேலே நம்மை ஏதோ பண்ணுவிக்கிறது' என்றும் தெரிந்துகொண்டு விடுவார்கள்.

புத்தி பூர்வமாக ஸாதனை பண்ணுவதற்குத்தான் சாஸ்த்ரத்தில் வழி சொல்லிக்கொடுக்க முடியும். புத்தியை ஈச்வரன் கொஞ்சம் கொஞ்சமாய் எடுத்துக்கொண்டு இவனைக் கருவி மாத்ரமாகக் கொண்டு பண்ணுவிக்க ஆரம்பித்தபின் சாஸ்த்ரம் எப்படி வழி சொல்லித்தர முடியும்? ஸாதகன் பண்ண வேண்டியதற்குத்தான் சாஸ்தரமே தவிர, ஈச்வரன் பண்ண வேண்டியதற்கு இல்லை. அதனாலேதான், "ஜீவன் புத்தி பூர்வமாக நிதித்யாஸனம் பண்ணும்வரை பண்ணட்டும். அப்புறம் அவனை ஈச்வரன் எடுத்துக்கொண்டு, தானே பண்ணவேண்டியதைப் பண்ண விட்டுவிடுவோம். அங்கே போய் நாம் ஒன்றும் ஒரு

Koviloor Digital Library

கோட்பாட்டையும் சொல்லிக்கொண்டு, ஜீவமனஸ் அதிலே போகும்படி இடம் பண்ணித்தர வேண்டாம். ஈச்வரனால் 'ஒவர்பவர்' செய்யப்படக்கூடியவனுக்கு நாம் எதுவும் சொல்லவேண்டாம். 'நிதித்யாஸனம் பண்ணிக்கொண்டே போ; ஸித்தி தானே வந்துவிடும்' என்று சொல்லி, விட்டு விட்டால் போதும்'' என்று நினைத்து (அத்வைத) சாஸ்த்ரங்களைக் கொடுத்திருக்கிறார்கள். மாயைத் திரையை ஈச்வர க்ருபை கிழிக்கிறது என்று வ்யக்தமாகச் சொல்லாமல், நிதித்யாஸனத்தின் தீவ்ரத்திலேயே அது கிழிந்துவிடுகிறது என்கிற மாதிரிச் சொல்லி, முடித்துவிட்டிருக்கிறார்கள்.

கீதையில் வெளிப்படக் கூறிய உண்மை

ஆனாலும் பகவான் இந்த (ஈச்வர க்ருபையால் அத்வைத லக்ஷ்யம் ஸித்திக்கிறது என்ற) விஷயத்தை நன்றாக வெளிப்படவே (கீதையில்) பல இடங்களில் சொல்லியிருக்கிறார். அவரும் பாத்ரம் பார்க்காமல் உபதேசம் பண்ணவில்லை தான். "தபஸ் இல்லாதவனுக்கும், பக்தி இல்லாதவனுக்கும், பணிவிடை செய்யாதவனுக்கும் இந்த கீதா சாஸ்த்ரத்தை சொல்லப்படாது'' என்று அவரே அதை முடிக்குமிடத்தில் சொல்லியிருக்கிறார். ஆனால் அவர் சொன்ன கீதை, மற்ற அத்வைத சாஸ்த்ரங்களைப் போல அத்வைத ஸாதனைக்கான 'அட்வான்ஸ்ட் ஸ்டேஜு'க்குப் போனவர்களுக்கு மட்டுமில்லை. பகவத்கீதை பதினெட்டு அத்யாயம் இருப்பதில் முதல் ஆறை கர்ம ஷட்கம் என்றும், நடு ஆறை பக்தி ஷட்கம் என்றும் சொல்லி, கடைசி ஆறைத்தான் ஞான ஷட்கம் என்று சொல்வது. இப்படிச் சொன்னதால் இந்த ஒவ்வொரு மார்க்கத்தை மட்டும்தான் ஒவ்வொரு ஆறு அத்யாயத்திலும் சொல்லியிருப்பதாக அர்த்தமில்லை. புத்திக்குப் பரமாக ஆத்மா என்று ஞானமார்க்கப்படி அவர் சொல்வதுகூட கர்ம ஷட்கத்திலுள்ள (மூன்றும்) அத்யாயத்தில்தான். ஆனாலும் மேலெழுந்தவாரியாக இப்படி க்ளாஸிஃபை செய்யும்படியாகவே கீதை இருக்கிறது.

Koviloor Digital Library

அத்வைதத்துக்கே என்று ஏற்பட்ட க்ரந்தங்களில் கர்மாவைப் பற்றியும் உபாஸனை (பக்தி)யைப் பற்றியும் இவ்வளவு சொல்லாமல் ரொம்பவும் குறைவாகவே இருக்கும். ஆரம்ப ஸ்டேஜில் அவை அவச்யமானவை என்று சொல்வதற்கு அதிகமாக அவற்றை விஸ்தாரம் செய்து சொல்லியிருக்காது. இப்படியாக, பாத்ரம் பார்த்துத்தான் சொன்னாரென்றாலுங்கூட, பகவான் நேராக ஆத்ம விசாரத்தில் ப்ரவேசிக்கும் கட்டத்தில் இருக்கிறவர்களுக்கு மட்டும் தான் உபதேசிப்பது என்றில்லாமல், கர்மா, பக்தி, ஞானம் ஆகியவற்றில் எதுவொன்றாலும் ஆத்மிக வாழ்க்கையின் முதல்படி ஏற விரும்புகிறவர்களிலிருந்து ஆரம்பித்து எல்லோரையுமே உத்தேசித்து கீதோபதேசம் செய்திருக்கிறார். அதனால் இதிலே த்வைதமாக பக்தி பண்ணுவதைப் பற்றியும் நிறைய வருகிறது. அத்வைதத்தைப் பற்றியும் அப்படியே வருகிறது. இப்படி இரண்டைப் பற்றியுமே பகவான் நிறையச் சொல்லிவிட்டதால், "இது என்ன த்வைதத்தையும் (பக்தியையும்) சொல்கிறார்? அத்வைதத்தையும் (ஞானத்தையும்) சொல்கிறார்? த்வைதத்துக்கு ஆப்போஸிட் அல்லவா அத்வைதம்?" என்ற கேள்வி எழக்கூடும். அப்படி எழும்பாமலிருக்கத்தான் இரண்டையும் 'லிங்க்' பண்ணியும் அநேக விஷயங்கள் சொல்கிறார். அதிலே அத்வைதத்துக்கு என்றே ஏற்பட்ட சாஸ்த்ரங்களில் அதிகம் சொல்லப்படாததான 'ஈச்வரன் ஜீவனை த்வைதத்திலிருந்து அத்வைதத்துக்குத் தூக்கி விடுகிறான்' என்ற விஷயத்தையும் அவர் சொல்ல நேர்கிறது. ஸாதகனின் ஸாதனையால் மாயை கிழிபடவில்லை: ஈச்வர க்ருபைதான் கிழிக்கிறது என்பது போன்ற விஷயங்களைத் தெளிவாக வெளியிட்டுச் சொல்கிறார்.

அர்ஜுனன் ஸந்நியாஸம் வாங்கிக்கொண்டு பூர்ண அத்வைதமாகப் போகக்கூடிய "ஸாங்க்ய" (ஞான) ஸாதகன் இல்லை; அதாவது உத்தமாதிகாரி (உத்தம அதிகாரி) இல்லை; ஸ்வதர்ம கர்மாவைப் பலனிலே கருத்தை வைக்காமல் ஈச்வர ஆராதனமாகப் பண்ணிச் சித்த சுத்தி பெறக்கூடிய

Koviloor Digital Library

"யோக" ஸாதகன்தான்; அதாவது மத்யமாதிகாரி (மத்யம அதிகாரி) தான்—என்று ஆசார்யாள் (பாஷ்யத்தில்) ஸ்தாபித்திருக்கிறார். மத்யமம் என்பது நடு. அது உத்தமத்துக்கும் அதமத்துக்கும் 'லிங்க்' - ஆக (இணைப்பாக) முடியும். அதனாலேயே அவனுக்கு உபதேசிக்கும்போது த்வைத - அத்வைத 'லிங்க்' - ஆன ஈச்வரனை, அவனுடைய க்ருபையை, பகவான் உத்தமோத்தம ஸ்திதியைச் சொல்லும்போதும் குறிப்பிட்டிருக்கிறார்.

ஒரு இடத்தில்* "ஸத்வ - ரஜோ - தமோ குணவடிவாயுள்ள மாயை என்னுடைய சக்தியாகும். அதனாலே அது தெய்வ சக்தி பெற்றது. மநுஷன் எப்படித் தன் பலத்தால் அதை தாண்ட முடியும்? என்னிடம் ப்ரபத்தி (சரணாகதி) பண்ணினால்தான் என் அருளால் தாண்ட முடியும்" என்கிறார்.

ஸர்வபாவத்தாலும் ஈச்வரனிடம் சரணாகதி பண்ணினால் அவனுடைய அநுக்ரஹத்தால் சாச்வத சாந்த பதமான அத்வைத மோக்ஷம் ஸித்திக்கும் என்று இன்னோரிடத்தில் சொல்கிறார் (18 - 62).

த்வைதமாகத் தன்னை ஒரு மாதிரி பாவித்து பக்தி பண்ணினாலும் கொஞ்சம் கொஞ்சமாகத் தன் தத்வ ஸ்வரூபத்தைப் புரிந்துகொண்டு (புரிவிப்பதும் அவர் க்ருபைதான்!), அந்த தத்வத்துக்குள்ளேயே போய் அத்வைதமாக இருந்துவிடலாம் என்றும் உபதேசம் செய்கிறார் (18.55).

ஆதிசங்கரரும் கூறும் ஈசனது ஞானக் கொடை

நம்முடைய ஆசார்யாளும் ஈச்வர க்ருபையாலேயே முடிவான ஞானம் உண்டாவதை அங்கங்கே சொல்லாமல் போகவில்லை.

"ஸௌந்தர்ய லஹரி", "சிவாநந்த லஹரி" முதலான அவருடைய பக்தி ஸ்தோத்ரங்களில் அவர் மாயையைப் போக்கி மோக்ஷத்தைப் பரமாத்மாவே அருள்வதாகச்

---

* கீதை 7-14.

Koviloor Digital Library

சொல்வது மட்டுமில்லை; தமது ஞான க்ரந்தங்களிலும் அங்கங்கே இப்படிச் சொல்லாமல் விட்டுவிடவில்லை. பக்தி ஸ்தோத்ரத்தில் இப்படிச் சொன்னதில் விசேஷமில்லை. ஞான மார்க்க ஸாதகர்களுக்கு த்வைதமான ஈச்வராநுக்ரஹத்தைப் பற்றிச் சொல்ல வேண்டாமென்று விட்டு விட்டதாகச் சொன்னது போலவே இதற்கும் காரணம் சொல்லிவிடலாம். "பக்தி வழியிலே போகிறவர்களுக்கு ஞான விசாரமான நிதித்யாஸனத்தினுல்தான் லக்ஷ்யஸித்தி என்று சொல்லவேண்டாம். பக்தி பண்ணிக்கொண்டே போனுல், அதனுல் ஒருமுகப்படப் பழகிவிட்ட மனஸ் அப்புறம் தானுகத் தன் ஆதாரத்தைத் தேடிக்கொண்டு ஞானமாகப் போக ஆரம்பித்து, முடிவிலே, ஸித்தி வரும். தானுக நடப்பது நடந்தே தீரும். அதை நாம் இப்போது பிடித்தே சொல்லவேண்டாம். ஈச்வர பக்திக்கு மேலே ஞானம், அத்வைதம் என்று எதற்கோ போகவேண்டுமா என்று பக்தி மார்க்கத்தில் போகிறவருக்குத் தோன்றிவிடலாம். அல்லது 'மோக்ஷத்துக்கு அதுதான் நேர்வழி என்றுல், இந்த பக்தி எதற்கு?' என்று பக்தி பண்ணுவதை விட்டுவிடத் தோன்றலாம். ஆனுலும் ஞான விசாரம் என்றுல் அதற்கு வேண்டிய சித்த ஐகாக்ரியம் இவர்களுக்கு இல்லையே; அதை உண்டாக்கத்தானே முதலில் பக்தியைச் சொல்லியிருப்பது? இப்படிப் பல தினுஸாக ஆலோசித்துத்தான் இப்போது இவர்கள் உள்ள நிலையில் ஒரு குழப்பத்தை உண்டாக்காமல் இவர்கள் மனஸுக்கு ஏற்கும்படியாக ஈச்வராநுக்ரஹத்தாலேயே ஞானம், மோக்ஷம், அத்வைதம் எல்லாம் ஸித்திப்பதாக சொல்லிவிடலாம்" என்று நினைத்து இம்மாதிரிச் சொன்னதாக அர்த்தம் செய்துகொள்ள இடமுண்டு. ஆகையால் தம்முடைய பக்தி ஸ்தோத்ரங்களிலில்லாமல் ஞான நூல்களான பாஷ்ய க்ரந்தங்கள், ப்ரகரண க்ரந்தங்கள்* ஆகியவற்றில் ஆசார்யாள் இவ்விஷயமாகச் சொல்லி

---

* தமக்கு முன்னமே இருந்த ப்ரஹ்ம ஸூத்ரம், உபநிஷத், கீதை முதலியவற்றுக்கு ஆசார்யர்கள் அளித்த விரிவுரைகளுக்கு பாஷ்யம்

Koviloor Digital Library

யிருந்தால்தான் இதற்கு "வால்யூ" அதிகம். இதை அவர் அத்வைத நூல்களில் விரிவாகவோ அழுத்தமாகவோ சொல்ல முடியாது என்பதற்குக் காரணம் பார்த்தோம். ஆனாலுங்கூட இந்த உண்மையை அடியோடு சொல்லாமல் விட்டுவிடக் கூடாது என்பதுபோல, சில இடங்களிலாவது அவர் சொல்லிவிட்டும்தான் போயிருக்கிறார்.*

"ஈச்வரனையே ஸர்வபாவத்தினாலும் நீ சரணடை; அவன் அநுக்ரஹத்தால் சாச்வதமான பரம சாந்த பதம் அடைவாய்" என்கிற (கீதா வாசகம்) மாதிரியான இடங்களுக்கு பாஷ்யம் பண்ணும்போது ஆசார்யாள் இவ் விஷயத்தைச் சொல்லியிருந்தால்கூட அது பெரிசில்லை. மூல க்ரந்தத்தில் ஈச்வராநுக்ரஹத்தைப் பற்றிக் குறிப்பாக இல்லாத இடங்களிலும்கூட சில ஸமயங்களில் ஆசார்யாள் தம்முடைய பாஷ்யங்களில் அதைப் புகுத்தி அதனுடைய பெருமையைச் சொல்லியிருப்பதுதான் பெரிசு. உதாரணமாக, ஸர்வ பாவத்தினாலும் சரணாகதி செய்வதைப் பற்றிச் சொல்வதற்கு முந்தி, அந்த (பதினெட்டாம்) அத்யாயத்திலேயே பகவான், "ஒருத்தன் தனக்கென்று ஏற்பட்ட கர்மத்தை விடவே படாது. ஸ்வகர்ம, ஸ்வதர்மங்களையே ஈச்வர ப்ரீதியாக, ஈச்வர ஆராதனையாகப் பண்ணவேண்டும். அப்படிச் செய்தால் அவனுக்கு ஸித்தி கிடைக்கிறது. அதாவது (ஆசார்ய

என்றும், அவரே ஸொந்தமாக இயற்றியருளிய ஞான நூல்களான 'விவேக சூடாமணி', 'உபதேச ஸாஹஸ்ரீ,' 'அபரோக்ஷாநுபூதி, முதலியவற்றுக்கு ப்ரகரண க்ரந்தங்கள் என்றும் பெயர்.

* இவ்வுரையின் பல பகுதிகளைத் தெரிவித்தவர், தற்போது மறைந்துவிட்ட ஆஞ்ஜநேய ஸ்வாமிகள் என்னும் ஸ்ரீ அனந்தானந்தேந்த்ர ஸரஸ்வதி ஸ்வாமிகள். ஈச்வர க்ருபையால் ஞானம் கிடைக்கிறது என்ற ப்ரஸ்தாவம் பகவத்பாதர்களின் நூல்களில் எங்கெல்லாம் வருகிறது என்று ஒரு ஸமயம் ஸ்ரீசரணர்கள் தேடிப் பார்த்துச் சேகரித்ததாகக் கூறி இவற்றில் தமக்குக் குறிப்பாக நினைவு வரும் சிலவற்றையும் தெரிவித்தார். அவற்றில், நாம் எதிர்பார்க்க முடியாத சில இடங்களில்கூட ஈசனருளாலேயே ஸம்ஸார பந்தம் விலகுவதாக பகவத்பாதர்கள் கூறியிருப்பதில் ஓரிரண்டை மட்டும் இங்கே கொடுக்கிறோம்.

Koviloor Digital Library

பாஷ்யப்படி) ஞான நிஷ்டைக்கான யோக்யதை கிடைக்கிறது. அப்புறம் அவன் எப்படி ஞானத்தின் உச்சமான நிஷ்டையான ப்ரஹ்மத்தையே சேர்கிறானோ அதைச் சொல்கிறேன் கேள்" என்கிறார்.[1] ஈச்வரார்ப்பணமாகத் தன் கர்மாவைச் செய்பவன் ஞான விசாரத்துக்குப் பக்வமடைவதாகவும், அப்புறம் அவன் பண்ணவேண்டியது இன்னவென்றுந்தான் இந்த இடத்தில் பகவான் சொல்கிறார். ஈச்வரன்தான் இந்தப் பக்வத்தை அநுக்ரஹிப்பதாக இந்த இடத்தில் அவர் சொல்லவில்லை. ஆனாலும் ஆசார்யாள், "ஸ்வகர்மாவினால் ஈச்வரனை ஆராதனை பண்ணி, அவனுடைய அநுக்ரஹத்தினால் பிறந்த ஞான நிஷ்டா யோக்யதை எனும் ஸித்தியை அடைந்து," என்று இங்கே[2] ஈச்வர க்ருபையைக் கொண்டுவருகிறார்! "தத்ப்ரஸாதஜாம்" என்பதாக, மூலத்தில் இந்த இடத்தில் சொல்லாத ஈச்வர ப்ரஸாதத்தை ஆசார்யாள் தம்முடைய பாஷ்யத்திலே குறிப்பிட்டு, ஸ்வகர்மாநுஷ்டானம் அதுவாகவே ஞான விசாரத்துக்கான தகுதியைத் தருவதில்லை என்றும், அதற்குப் பலனாக ஈச்வரன் அநுக்ரஹித்தே அந்தத் தகுதி உண்டாகிறது என்றும் தெளிவுபடுத்துகிறார். மூலத்தில் சொல்லாத இடத்திலும் அவர் பாஷ்யத்தில் சேர்த்திருப்பதற்குத் தனியான விசேஷம் உண்டு.

ஈச்வரன்தான் கர்மாவுக்குப் பலன் தருபவன், கர்மா தானாகவே பலனைத் தருவதில்லை என்பதுதான் அத்வைதிகள் கொள்கை, 'கர்மாவே பலனைத் தருகிறது; ஈச்வரன் என்று ஒருத்தனைக் கொண்டுவரவேண்டாம்' என்று அபிப்ராயம் கொண்ட பூர்வ மீமாம்ஸகர்களை அத்வைதிகள் நன்றாகக் கண்டித்து, ஸகலத்துக்கும் பலதாதா லோக வ்யாபாரத்தையெல்லாம் நடத்தும் ஈச்வரன்தான் என்று கூறியிருக்கிறார்கள். ஆனாலும் மாயைக்கு உட்பட்ட கர்ம லோகத்திலே தான் அவனைப் பலதாதாவாகச் சொல்லியிருக்கிறார்களே

1. கீதை அத். 18, ச்லோ. 46, 50.
2. கீதை. அத். 18, ச்லோ. 50.

Koviloor Digital Library

தவிர மாயையிலிருந்து விடுபடும் ஞான ஸாதனையிலும் அதன் ஒவ்வொரு ஸ்டேஜிலும் பலன் தருகிறவன் ஈச்வரன் தான் என்று அவர்கள் குறிப்பிட்டுக் காட்டுவதில்லை. 'கர்ம யோகத்தினால் சித்த சுத்தி ஏற்படுகிறது; சித்தம் சுத்தமான பின் ஞான விசாரம் பண்ண ஜீவன் பக்வமாகிறான்' என்று சொல்வார்களே தவிர, 'கர்மயோகத்துக்குப் பலனாக ஈச்வரன் சித்த சுத்தி அநுக்ரஹித்து ஞான நிஷ்டைக்கு ஒரு ஜீவனைப் பக்வப்படுத்துகிறான்' என்று சொல்வதில்லை. ஆனால் இங்கே ஆசார்யாள் இவ்விஷயத்தை ஸ்பஷ்டமாகவே தெரிவிக்கிறார்.

கர்மத்திலிருந்து ஞானத்துக்குப் போக ஈச்வர க்ருபை வேண்டுமென்பதைக் கர்மா எல்லாம் போய் ஸந்நியாஸம் வாங்கிக் கொள்வதையே முக்யமாக விவரிக்கும் (கீதையின்) கடைசி அத்யாயத்தில் ஆசார்யாள் சொன்னார். இதற்கு முதல் படி இரண்டாம் அத்யாயத்தில் ஆரம்பிக்கிறது. அங்கே முதலில் ரொம்பவும் ஞானவேதாந்த தத்வங்களைச் சொல்லிவிட்டு, "இதுவரை ஸாங்க்யம் சொன்னேன். இனிமேலே யோகம் சொல்கிறேன்" என்று, கர்ம யோகத்தைப் பற்றி பகவான் ஆரம்பிக்கிறார்.* ஸாதாரணமாக ஸாங்க்யம் என்றால் கபிலர் சொன்ன ஸாங்க்ய சாஸ்த்ரமென்றும், யோகம் என்றால் பதஞ்ஜலி சொன்ன ராஜயோகமென்றும் நினைப்போம். இங்கே பகவானோ ஞான மார்க்கத்தையே ஸாங்க்யமென்றும், கர்ம மார்க்கத்தை யோகமென்றும் பெயர் கொடுத்துச் சொல்கிறார். இப்படி ஸ்வகர்மாநுஷ்டானத்தைப் பற்றில்லாமல் செய்யும் யோகத்தைப் பற்றிப் பேச ஆரம்பிக்கும் போதே, "இது கர்மா செய்கிற யோகமானாலும் இதுவேதான் கர்ம பந்தத்தை அறுக்கிறது" என்கிறார். ஆசையின் மேலே, பலனை உத்தேசித்து கர்மா பண்ணினால் அது ஸம்ஸார பந்தத்தை உண்டுபண்ணுகிறது. ஆசையை விட்டு, பலனை உத்தேசிக்காமல், லோக க்ஷேமத்துக்காகவும்,

---

* கீதை அத். 2, ச்லோ. 39.

Koviloor Digital Library

சித்த சுத்திக்காகவும் சாஸ்த்ரீய கர்மாவைச் செய்தால் அது பந்தத்தை அறுக்கிறது. "இம்மாதிரி அறு அப்பா" என்று தான் அந்த ச்லோகத்தில் பகவான் சொல்லியிருக்கிறுர். "கர்ம பந்தம் ப்ரஹாஸ்யஸி"—"கர்மக் கட்டை அறுத்துப் போடுவாய்" என்கிறுர்.

இங்கேயும் அவர் சொல்லாவிட்டாலும் தாம் சொல்லாமலிருக்கக் கூடாது என்று ஆசார்யாள் நினைத்துத் தம்முடைய பாஷ்யத்தில், "ஈச்வராநுக்ரஹத்தைக் காரணமாகக் கொண்டு ஞானத்தை அடைந்து தர்ம அதர்மங்கள் எனப்படுகிற கட்டான கர்மாக்கட்டை அறுப்பாய்" என்று விளக்கியிருக்கிறுர். அதாவது கர்ம யோகம் அதுவாகவே பலன் தராமல் ஈச்வரன்தான் பலதாதாவாக இருப்பதை நிச்சயப்படுத்துகிறுர். இங்கே இன்னெரு முக்யமான விஷயம் "ஈச்வர ப்ரஸாத நிமித்த" என்பதாக ஈச்வராநுக்ரஹம் என்ற காரணத்தைச் சொல்வதோடு மட்டும் ஆசார்யாள் நிறுத்தவில்லை. ஸ்வதர்ம கர்மாவைப் பண்ணினவனின் கர்மாக்கட்டை (அதாவது பூர்வ வினைத்தளையை) ஈச்வரன் வெட்டிவிடுவது எப்படியென்ருல், ஜீவனுக்கு ஞான ப்ராப்தி உண்டாக்குவதாலேயே இப்படி அவன் செய்கிறுனென்று தெளிவு செய்கிறுர். "ஈச்வர ப்ரஸாத நிமித்த ஞான ப்ராப்தே:" என்று பாஷ்யத்தில் இருக்கிறது. கர்மா போவதைவிட ஞானம் வருவது முக்யம். ஞானத்தை அடைவதற்கு வழியாகவே ஒருவன் கர்மாவைப் போக்கிக் கொள்வதற்கு ஈச்வரன் அநுக்ரஹிக்கிறுன் என்ற அபிப்ராயத்தை ஆசார்யாள் நிஸ்ஸந்தேஹமாக வெளியிட்டிருக்கிறுர்.

இப்படியாக கீதையில் கர்ம யோகத்துக்கு விதை விதைக்கிற ஆரம்பத்திலிருந்து அது தாஞகவே பட்டுப்போய் நிஷ்கர்மத்திலே கொண்டுவிடுகிற முடிவுவரை ஈச்வர க்ருபையே இந்த யோகத்தால் கர்ம நாசத்தைப் பண்ணி ஜீவனை ஞானத்தில் சேர்க்கிறது என்று ஆசார்யாள் காட்டி

---

* பதினெட்டாம் அத்யாயத்தின் ஐம்பதாவது ச்லோகத்தின் பாஷ்யத்தில்.

Koviloor Digital Library

யிருக்கிறார். அப்படி முடிக்கிற இடத்திலே* "புத்தியால் எப்படி ஆத்மாவைப் பிடிக்க முடியும்?" என்று கேட்கிறவர்களுக்கு பதிலாக, "குரு ப்ரஸாதத்தை அடைந்து, தன்னிலேயே ப்ரஸாதம் பெறுகிறவர்களுக்கு இது எப்படி என்று தெரியும்" என்கிறார். "லப்த குர்வாத்ம ப்ரஸாதாநாம்" என்கிறார். "குரு ப்ரஸாதம்" என்கிற இடத்தில் ப்ரஸாதம் என்றால் 'அநுக்ரஹம்' என்று அர்த்தம். "ஆத்ம ப்ரஸாதம்" என்கிற இடத்தில் ப்ரஸாதம் என்றால் 'தெளிந்த நிலை' என்று அர்த்தம். குருவின் அநுக்ரஹத்தால் அந்தஃகரணம் தெளிவு பெற்றவர்களுக்கு ஆத்மாவைப் பிடிக்க முடியும் என்பது தாத்பர்யம். த்வைதமாய் இருந்த அந்தஃகரணம் (புத்தியும் அதில் சேர்ந்ததுதான்) அத்வைதமாய் மாறிக்கொண்டே போய் அத்வைத ஆத்மாவில் ஐக்யப்படுவதாக முன்னே சொன்னதற்கு ஆதரவாக இப்படிச் சொல்லியிருக்கிறார். இங்கேயும் ஜீவனின் அந்தஃகரணத் தெளிவை மாத்திரம் சொல்லாமல், அவனுக்கு வேறு மாதிரியுள்ள குருவின் அநுக்ரஹ சக்தியையும் சொல்லியிருக்கிறார். மூலத்தில் இதைப்பற்றிக் குறிப்பே இல்லாவிட்டாலும், அநுக்ரஹத்தின் விசேஷத்தைச் சொல்லியே ஆகவேண்டுமென்பதால் தம்முடைய பாஷ்யத்தில் சொல்லியிருக்கிறார்.

குரு என்பவர் ஈச்வரனுக்கு ப்ரதிநிதிதான். எல்லா குருக்களுக்கும் மூலகுரு ஈச்வரன்தான். "ஸ பூர்வேஷாமபி குரு:"* —ஈச்வரனே எல்லா குருக்களுக்கும் முந்தைய முதல் குரு. ஈச்வரனேதான் குருவாக வந்து ஜீவனை நல்ல வழியில் கொண்டுபோகிறான் என்பதே நம் மதத்தின் கொள்கை. ஆனபடியால் இங்கே சொன்ன குரு ப்ரஸாதம் என்பது ஈச்வர ப்ரஸாதம்தான்; ஈசன் க்ருபைதான்.

இதிலிருந்து இன்னொரு முக்யமான விஷயமும் ஏற்படுகிறது. அத்வைத சாஸ்த்ரங்கள் முழுவதுமே ஞான மார்க்கத்தில் போவதற்கு ஒரளவு பக்வப்பட்டவருக்குத் தான். அதனால்தான் அவற்றில், கர்மாநுஷ்டானமும் பக்தி

---

* யோக ஸூத்ரம் : 1. 26

Koviloor Digital Library

யுபாஸனையுமே ஆரம்ப நிலைகள் என்று சொல்லியிருந்தாலுங்கூட இவற்றைக் குறித்த விதிமுறைகளை விவரிக்காமல் தத்வ சோதனத்துக்கே முக்யம் கொடுத்து விளக்கியிருப்பது. அத்வைதமாகவே வாதத்தைக் கொண்டுபோக வேண்டுமென்றுதான் கடைசி கட்டத்தில் கிட்டுகிற ஈச்வராநுக்ரஹத்தை அவற்றில் சொல்வதில்லை என்று பார்த்தோம். இப்படி ஆசார்யாள் செய்துள்ள அத்வைத க்ரந்தங்களிலும் கீதை, உபநிஷத், ப்ரஹ்ம ஸூத்ரம் ஆகியவற்றுக்குச் செய்துள்ள பாஷ்யங்களைவிட, அவரே செய்துள்ள ப்ரகரண க்ரந்தங்களான 'விவேக சூடாமணி', 'உபதேச ஸாஹஸ்ரீ', 'அபரோக்ஷாநுபூதி' முதலிய நூல்கள் 'அத்வைதந்தான் நம்முடைய லக்ஷ்யம்' என்று வைத்துக் கொண்டிருப்பவர்களையே உத்தேசித்தவையாகும். இதே மாதிரிதான் ஆசார்யாளுக்குப் பிந்தி வந்திருப்பவர்கள் செய்துள்ள நூல்களும் அத்வைதத்தில் ஓரளவு 'advanced student'-களுக்கே உத்தேசிக்கப்பட்டவை எனலாம். ஆகையினாலே இவற்றில் த்வைதமான ஈச்வராநுக்ரஹ ஸமாசாரம் ஸ்பஷ்டமாகச் சொல்லப்படுவதில்லை. ஆனாலுங்கூட இதைத்தான் 'முக்யமான விஷயம்' என்று சொன்னேன்—இந்தப் புஸ்தகங்கள் எல்லாவற்றிலுங்கூட எடுத்தவுடன் மங்கள ச்லோகமாக ஈச்வரனுக்கோ குருவுக்கோ வந்தனம் சொல்லியிருக்கும். அவருடைய அநுக்ரஹத்தாலேயே ஞானம் உண்டாவதாகவும் அதில் ஸ்தோத்திரித்திருக்கும்.

'விவேக சூடாமணி' போன்ற அநேக அத்வைத க்ரந்தங்களில் சிஷ்யன் குருவுக்கு அப்படியே சரணாகதி செய்து அவர்தான் கதி என்று கிடப்பதாக ஆரம்பித்திருக்கும். கடைசியில் அவருடைய அநுக்ரஹத்தாலேயே தனக்கு மிகவும் உயர்ந்ததான அத்வைதாநுபவம் ஏற்பட்டதாக ரொம்பவும் நன்றியுடன் நமஸ்காரம் தெரிவித்திருக்கும். இவை எல்லாம் ஈச்வராநுக்ரஹத்தால் ஞான ப்ராப்தி என்பதை அத்வைதம் ஒப்புக்கொள்வதற்கு ப்ரூஃப்தான்.

Koviloor Digital Library

குரு என்ற த்வைதம் இடறுவதில்லை

'ஈச்வரன்' என்று கண்ணிலே தெரியாத ஒரு தத்வத்தைச் சொன்னால் அது அத்வைதமாகப் போக ஆசைப்படுகிறவனுக்கு அவ்வளவாக அவச்யமில்லாத ஒரு த்வைதமாகத் தோன்றுகிறது. ஆனாலும் ப்ரத்யக்ஷத்தில் இவனுக்கும் ஒரு அநுபவியின் உபதேசமும் அநுக்ரஹமும் தேவைப்படுகிறது. ஆனபடியால் இப்படி உபகாரம் பண்ணுபவராக குரு என்று ஒருவரை இவனுடைய கண்ணுக்கு முன்னால் மநுஷ்ய ரூபத்தில் காட்டுகிறபோது அதன் த்வைதம் இவனுக்கு இடறுவதில்லை; அது அத்வைதத்துக்கு ஸஹாயமான த்வைதமாகவே தெரிகிறது.

த்ருஷ்டாந்தம் காட்டினால் புரியும்: ரமண ரிஷியிடம் வருகிறவர்கள், முக்யமாக வெள்ளைக்காரர்கள், ரொம்பவும் அத்வைத ஃபிலாஸஃபியிலேயே போகத்தான் ஆசைப்படுகிறார்கள். ஈச்வரனைக் கொண்டுவருவது அவர்களுடைய Self-enquiry-க்கு (ஆத்ம விசாரத்துக்கு) ஒட்டாமல்தான் இருக்கும். ஆனாலும் அவர்களும்கூட அவரை 'குரு, "மாஸ்டர்" என்று சொல்லி மரியாதை செய்து, அவருடைய அநுக்ரஹத்தால் தங்களுக்கு அநுபவம் வந்ததாகத் தெரிவிக்கிறார்கள். இத்தனைக்கும் அவர் தம்மை குரு என்றும், தம்மிடம் வருபவர்களை சிஷ்யர்கள் என்றும் சொல்லிக் கொள்வதேயில்லை! இதைவிடவும் அதிசயமாக, "குருவே வேண்டியதில்லை. வரையறுத்து இதுதான் ஸித்தாந்தம் என்று எதையும் வைக்கப்படாது" என்று அபிப்ராயப்படுகிற (ஜே.) க்ருஷ்ணமூர்த்தி போன்ற ஒருவரிடம் போகிறவர்கள் கூட அவரை ஒருவிதத்தில் குரு மாதிரியாகவே மரியாதையுடன் நினைத்து, அவருடைய சக்தியினால் தங்களுக்குத் தெளிவு உண்டாவதைச் சொல்கிறார்கள்.

அதனால் ஈச்வராநுக்ரஹம் என்று சொல்லிக் கொஞ்சம் அழுத்தமாகவே த்வைத பாவத்தைக் கொண்டுவிடாவிட்டாலும் அதையே குரு ப்ரஸாதம் என்பதாக அத்வைதிகளும் சிறப்பித்துச் சொல்லித்தான் இருக்கிறார்கள்.

Koviloor Digital Library

'குர்வஷ்டகம்' முதலான அநேக நூல்களில் நம்முடைய ஆசார்யாள் இவ் விஷயத்தை ரொம்பவும் பக்தியோடும் நன்றியோடும் ஸ்பஷ்டமாகவும் அழுத்தமாகவும் வெளியிட்டிருக்கிறார்.

மாயாசக்தியே ஞானமும் அளிப்பது

ஈச்வரன் ஞான ஸ்வரூபி, அவனே ஞானம் தருபவன் என்கிற விஷயத்தைச் 'சொல்லாமல் சொல்லும்' ஸூக்ஷ்மமான முறையில் ஆசார்யாள் கேநோபநிஷத் பாஷ்யத்தில் வெளியிட்டிருப்பதாகத் தோன்றுகிறது. 'யார் எது செய்தாலும் அது தன்னுடைய ஸொந்த சக்தியைக் கொண்டு அல்ல; ப்ரஹ்மத்தின் சக்தியைக் கொண்டுதான் எவரும் எதையும் செய்யமுடிவது' என்று அம்பாள் இந்த்ரனுக்கு உபதேசித்ததாக அந்த உபநிஷத்திலே இருக்கிறது. மூலத்திலே அம்பாளை 'ரொம்ப சோபையுள்ளவள், உமா என்றும் ஹைமவதி என்றும் பெயருள்ளவள்' என்றுதான் சொல்லியிருக்கிறது. ஆனால் ஆசார்யாளோ இதற்குப் பதம் பதமாகச் செய்த பாஷ்யம், வாக்யம் வாக்யமாகச் செய்த பாஷ்யம் ஆகிய இரண்டிலும் அம்பாளைத் திரும்பத் திரும்ப "வித்யா" என்று சொல்கிறார். "வித்யா" என்றால் ஞானம் என்றே அர்த்தம். ஞானம் என்றால் அத்வைதத்தில் ப்ரஹ்ம ஞானம்தான்—அதாவது ஜீவன் தன்னுடைய ஆத்மாவே ப்ரஹ்மம் என்று உணர்வதான அத்வைத ஞானம்தான். உபநிஷத்தில் பலவிதமான உபாஸனைகளையும் வித்யா என்றே சொன்னாலும் அவற்றிலெல்லாம் அந்த உபாஸனையை ஸம்பந்தப்படுத்தி அதற்கு "இன்ன வித்யா" என்று அடைமொழி கொடுத்துப் பெயர் சொல்லியிருக்கும். இப்படியில்லாமல் வெறுமே வித்யா என்று மட்டும் சொன்னால் அது ப்ரஹ்ம வித்யாதான், அதாவது ஆத்ம ஞானம்தான். "சோபையுள்ளவற்றிலெல்லாம் பரம சோபையானது வித்யையே" என்று அம்பாளை வித்யாவாகச் சொல்கிற ஆசார்யாள் பாஷ்யம் பண்ணியிருப்பதால் அவர்

Koviloor Digital Library

அவளை ப்ரஹ்ம வித்யா ஸ்வரூபிணியாகவே சொல்கிறார் என்று நிச்சயப்படுகிறது.

அவித்யா என்றால் அஞ்ஞானம். மாயையை ஆசார்யாள் அவித்யா என்றே சொல்வார். (அப்புறம் மாயைக்கும் அவித்யைக்கும் கொஞ்சம் வித்யாஸம் காட்டியும் ஒரு அபிப்ராயம் அத்வைதிகளுக்கிடையே எழுந்தது. அவர்கள் மாயை என்பது ஒன்றை இன்னொன்றாகக் காட்டும் 'மாஜிக்' மாதிரியான சக்தி என்றும், அவித்யா என்பது ஸத்யத்தைத் தெரிந்துகொள்ளாத அஞ்ஞான நிலை என்றும் ஒரு பாகுபாடு செய்கிறார்கள். ப்ரஹ்மம் மாயையோடு சேர்ந்துள்ளபோது ஈச்வரனாகிறது என்றும், அவித்யையினால் கட்டுப்படும்போது ஜீவனாகிறது என்றும் அவர்கள் சொல்கிறார்கள். அது இருக்கட்டும்.) மாயா சக்தியோடு சேர்ந்து ப்ரஹ்மம் ஈச்வரனாயிருக்கிற போதும் அந்த ஈச்வரன் ஞான ஸ்வரூபியாகவே இருப்பதாக அத்வைதிகள் சொல்வதில் இன்னம் மேலேபோய் ஆசார்யாள் இங்கே அம்பாளை வித்யா என்றே சொல்கிறார். அம்பாளை ராஜராஜேச்வரியாக ஆராதனை செய்யும் உபாஸனைக்கே ஸ்ரீ வித்யை என்று பெயர் இருக்கிறது. அந்த ஆராதனையையும் ஆசார்யாள் யந்த்ர ப்ரதிஷ்டை, 'ஸௌந்தர்ய லஹரி' ஸ்தோத்ரம் முதலியவற்றால் போஷித்திருக்கிறார். மாயையாகவே இருக்கிற அவளை மாயா நிவ்ருத்தியையே மோக்ஷமாகச் சொன்ன ஆசார்யாள் ஞானாம்பிகையான வித்யாவாகச் சொல்வதால் மாயையால் லோகத்தை நடத்தும் சக்திதான் அதிலிருந்து விடுவிக்கவும் செய்கிறது என்று அவர் காட்டுவது தெரிகிறது.

கர்ம பந்தம் ஈசனால்; ஞான ஸித்தியும் அவனாலேயே!

ப்ரஹ்ம ஸூத்ர பாஷ்யத்தை எடுத்துக்கொண்டாலும் இப்படியே மூலக்ரந்தத்தில் ஈச்வராநுக்ரஹத்தைச் சொல்லாத இடத்திலும்கூட ஆசார்ய பாஷ்யத்தில் அதை ஞானத்துக்குக் காரணமாகச் சொல்லும் த்ருஷ்டாந்தங்கள்

Koviloor Digital Library

இருக்கின்றன. ஸூத்ர மூலத்திலேயே ஒரு இடத்தில். "ஜீவாத்ம - பரமாத்ம அபேத ஞானம் ஜீவனிடம் மறைந்து கிடக்கிறது. பரமேச்வரனை த்யானிப்பதால் மறைந்துள்ள ஞானம் வெளிப்பட்டுவிடும். ஏனென்றால் அவனிடமிருந்தே தான் ஜீவனுக்கு பந்தம் (கட்டு), மோக்ஷம் (விடுதலை) இரண்டும்" என்று இருக்கிறது[1]. இம்மாதிரியான இடங்களில் ஆசார்யாள் ஈச்வரானுக்ரஹத்தால் அத்வைத ஸித்தி ஏற்படுவதைச் சொன்னால் அதில் விசேஷமில்லை. இந்த ப்ரஹ்ம ஸூத்ரத்திலேயே இன்னோரிடத்தில்[2], ஜீவன் கர்த்தாவா, இவன் கார்யம் செய்கிற கர்த்தா என்றால், கார்யமில்லாத ஸமாதி இவனுக்கு எப்படி ஏற்படும் என்கிற விஷயங்களை ஆராய்ந்து, 'அவன் கர்த்தாவுந்தான்; கார்யமில்லாமல் ஆத்மாவாக இருப்பவனுந்தான்' என்று முடிவு தெரிவித்திருக்கிறது. 'அதெப்படி இரண்டும் முடியும்?' என்று கேட்டால், 'தச்சன் மாதிரி' என்று பதில் சொல்லியிருக்கிறது. தச்சு வேலை செய்கிறபோது ரம்பம், இழைப்புளி முதலான கருவிகளைக்கொண்டு வேலை செய்கிற தச்சனே, அந்தக் கருவிகளைப் போட்டுவிட்டு வீட்டில் வந்து 'ரெஸ்ட்' எடுத்துக் கொள்ளும்போது வேலையில்லாமல் இருக்கிறானேல்லியோ? இப்படியே இந்த்ரியக் கருவிகளைக் கொண்டு கர்த்தாவாயுள்ள ஜீவன் ஸமாதியில் அவற்றை விட்டு விட்டு அகர்த்தாவாக இருக்கிற ஆத்மாவில் 'ரெஸ்ட்' பண்ணிக்கொண்டிருக்கிறான் என்று சொல்லிவிட்டு, இப்படி ஜீவனுக்கு ஒரு கர்த்ருத்வம் ஏற்பட்டது பரமேச்வரனிடமிருந்தேயாகும் என்று கூறியிருக்கிறது. ஈச்வரனால் கர்த்ருத்வம், அதாவது கார்யமும் அதன் பந்தமும் ஜீவனுக்கு ஏற்படுவதைப் பற்றித்தான் இங்கே சொல்லியிருக்கிறது. இந்த பந்தத்திலிருந்து விடுவிக்கிற ஞானத்தைப் பற்றியோ, அதை அடைவிப்பதில் ஈச்வரனின் பங்கைப் பற்றியோ ஒன்றும் மூல நூலில் இந்த இடத்தில்

---

1. ப்ரஹ்ம ஸூத்ரம் 3.2-5

2. 2-ம் அத்யாயம் 3-ம் பாதத்தில்; குறிப்பாக 40.41 ஸூத்ரங்களில்.

Koviloor Digital Library

இல்லை. ஆனாலும் ஆசார்யாள் இங்கே பாஷ்யம் செய்யும் போது, கார்யம் செய்து அநுபோகங்களைப் பெறும் கர்த்ருத்வ, போக்த்ருத்வத்தினால் ஜீவனுக்கு ஸம்ஸார வாழ்வு ஏற்படுவது ஈச்வராக்ஞையினாலேயே என்று சொல்வதோடு நிறுத்தாமல், இதே ஜீவன் உத்தம ஞானத்தினால் மோக்ஷ ஸித்திக்கு அருகதை பெறுவதற்கும் அதே ஈச்வரனின் அநுக்ரஹம்தான் காரணம் என்கிறார். "ஈச்வராத் தத் அநுஜ்ஞயா கர்த்ருத்வ போக்த்ருத்வ லக்ஷணஸ்ய ஸம்ஸார ஸித்தி:" என்பதோடேயே நிறுத்தியிருக்கலாம். மூலத்தில் அதற்கு மேலே விளக்க இல்லை. ஆனாலும் ஆசார்யாள் ஸம்ஸார பந்தத்துக்கு ஈச்வரன் காரணம் என்று மட்டும் குற்றம் சொல்கிறதுபோல முடித்து விடக்கூடாது; இதிலிருந்து நிவ்ருத்திக்கும் அவன் அநுக்ரஹம்தான் காரணம் என்று கையோடேயே சொல்லி விடத்தான் வேண்டுமென்று நினைத்து, "தத் அநுக்ரஹ ஹேதுகேநைவ ச விஜ்ஞாநேந மோக்ஷ ஸித்திர் பவதும் அர்ஹதி" என்று சேர்த்திருக்கிறார். அதாவது "ஈச்வரனுடைய அநுக்ரஹம் என்ற காரணத்தைக் கொண்டே உயர்ந்த ஞானத்தின் மூலம் மோக்ஷ ஸித்தி அடையவும் ஜீவன் தகுதி பெறுகிறான்" என்று தெளிவாகச் சொல்லியிருக்கிறார்.

ஆனாலும் இதை அத்வைத ஸாதகர்களுக்கே ஏற்பட்ட சாஸ்த்ரங்களில் சொல்லித்தானாக வேண்டுமென்றில்லை; சொல்லாமல் விடுவதற்கு நிரம்ப நியாயமிருக்கிறது என்று பார்த்தோம். அதனால்தான் ஈச்வர க்ருபா விசேஷத்தால் மோக்ஷம் ஸித்திப்பதை நன்றாக வெளியிட்டுச் சொல்லும் கீதையிலேயேகூட, மிகவும் ஞான மார்க்கமாக உபதேசித்துக்கொண்டு போகும்போது பகவானே இதைச் சொல்லாமல் விடுவதும் உண்டு. அப்படித்தான், இந்த்ரியத்திலிருந்து மனஸ், புத்தி, ஆத்மா என்று ஒன்றைவிட ஒன்று உயர்த்திச் சொல்லி, "புத்திக்கும் பரதத்வத்தை அறிந்து, மனஸை அடக்கி, ஆசை என்ற எதிரியை அழி" என்பதாக, ஜீவன் தானாகவே எல்லாவற்றையும் ஸாதித்துக் கொண்டு

Koviloor Digital Library

விடுவதைப் போலச் சொல்லி (அந்த மூன்றும் அத்யா யத்தை) முடித்துவிடுகிறார்.

ஈச்வரனைப் பற்றி ஸூசனை

இங்கேயுங்கூட ஸூசகமாக அவர் ஈச்வரனைச் சொல்வது போலவும் ஒரு விஷயம் இருக்கிறது. எனக்கே இப்போது பேசிக்கொண்டு போகிறபோதுதான் அது தெரிகிறது. 'புத்திக்கும் உயர்ந்தது ஆத்மா' என்கிற இடத்தில் ஆத்மாவை 'அது' என்று சொல்லாமல் 'அவன்' என்று "ஸ:" போட்டுத்தானே சொல்கிறார்? 'அவன்' என்றதாலேயே அவர் ஈச்வரனைச் சொல்வதாக வைத்துக் கொண்டு விடலாம். அப்படி வைத்துக்கொண்டால், அடுத்த ச்லோகத்தில், "ஈச்வரனை அறிந்து, மனஸை அடக்கி ஆசையை அழி" என்று சொல்வதாக ஆகும். "ஈச்வரனை அறிந்து மனஸை அடக்குவது" என்றால் ஈச்வரனையே மனஸை அடக்குபவனாக அறிந்து, அவனது அநுக்ரஹத்தால் அப்படிச் செய்துகொள்வது என்பதைச் சொல்வதாகவே அர்த்தம் ஏற்படும். இல்லாவிட்டால், இந்த்ரியம், மனஸ், புத்தி என்று ஜீவனின் தன்மைகளைப் பற்றியே பேசும் போது, புத்திக்கப்புறம் ஆத்மாவைச் சொல்லாமல் ஈச்வரன் என்று சொல்லி மனஸ் அடங்குவதாக முடிப்பதில் அர்த்தமில்லை. ஆத்மாவை அறியும்போது மனஸ் அடங்கி அழிந்துவிட வேண்டியதே என்று பார்த்தோம். ஆனால் ஈச்வரனை அறிய மனஸ் இருக்க வேண்டும். த்வைத ஈச்வரனை த்வைத மனஸ்தான் அறிகிறது. ஆனபடியால் ஈச்வரனை அறிந்து மனஸ் அடங்குவது என்று கீதையில் சொல்லியிருப்பதாக வைத்துக் கொண்டோமானால், அப்படிச் சொல்லியிருப்பதற்கு, அவனை அறிந்தவனுக்கு ஈச்வரனே மனோ நிக்ரஹத்தை அநுக்ரஹிக்கிறான் என்றுதான் அர்த்தமாகும்.*

---

* "ஸ:" —"அவன்" என்பதற்கு ஆசார்ய பாஷ்யமும் ப்ரஹ்மம் என்றோ ஆத்மா என்றோ இல்லாமல் ஈச்வரனைக் குறிப்பதான பரமாத்மா என்றே இருக்கிறது. "புத்தியின் உள்கரு உள்பட, காணும் யாவற்றிலும் உள்ளூர உறையும் புத்தியின் ஸாக்ஷியான பரமாத்மா" என்று ஆசார்யபாஷ்யம் கூறுகிறது.

Koviloor Digital Library

ஆத்ம ஞானமே ஆசா நாசம்

ஆக, விஷயம் என்னவென்றால், ஈச்வராநுக்ரஹ ஸமாசாரம் எப்படிப் போனாலும், ஜீவன் செய்யவேண்டியது வைராக்ய அப்யாஸங்களால் மனஸை அடக்க முயலுவதே. இவ்வாறு அடக்கி நிறுத்தியபோதுதான் காமத்தை ஒருவன் அழிக்க முடியும். பலாத்காரமாக ஜீவனைப் பாபங்களில் செலுத்தி நரகத்தில் தள்ளும் சக்தி என்றும், பெருந்தீனி கேட்கிற மஹாபாபி என்றும் பகவான் முன்னே திட்டிய காமத்தை அழிப்பதற்கு இப்படி இந்த்ரிய-மனோ-புத்திகளை அடக்கி நிறுத்துவதுதான் வழி என்று சொல்லி முடிக்கிறார். அதாவது ஜீவனுடைய தனி ஜீவத்வமே போய் அவன் அத்வைத ஆத்மாவானால்தான் ஆசை போகும்.

ஆசை போவது மட்டுமில்லை, ஜீவபாவமே போய்விடுகிறது என்பதால் அத்வைதமான மோக்ஷாநுபவமே கிடைத்துவிடுகிறது.

பாபத்தில் பிடித்துத் தள்ளும் சக்தி என்னவென்று அர்ஜுனன் கேட்டதற்கு, "ஆசை" என்று பதில் சொல்லி அதை அடக்க வழி சொன்ன பகவான் இதன் மூலமாக மோக்ஷத்துக்கே வழி திறந்துவிடுகிறார். பின்னால் ஒரு இடத்தில் இதை ஸ்பஷ்டமாகவே தெரிவிக்கிறார். காமக்ரோதத்திலிருந்து விடுபட்டால் ப்ரஹ்ம நிர்வாணம் என்ற ஆத்ம ஸாக்ஷாத்கார மோக்ஷமே கிடைத்துவிடுகிறது என்று அங்கே தெளிவாகச் சொல்கிறார்.

காமக்ரோத வியுக்தாநாம் யதீநாம் யத சேதஸாம் |
அபிதோ ப்ரஹ்ம நிர்வாணம் வர்ததே விதித்தாத்மநாம்||*

"காமக்ரோதத்திலிருந்து விடுபட்டு, சித்தத்தை அடக்கி, ஆத்மாவை அறிந்து கொண்ட துறவிகளுக்கு ப்ரஹ்ம

* கீதை.5.26

Koviloor Digital Library

நிர்வாணம் இரண்டிலும் கிடைக்கிறது" என்கிறுர். "அபிதோ" என்ருல் "இரண்டிலும்".

"அதென்ன இரண்டிலும்?"

இகத்திலேயே மோக்ஷம்

அதுவா? அதுதான் "இரண்டு இல்லை" என்று சொல்லும் அத்வைதிகளுக்கு ஒன்ருகப் போய்விடும் இரண்டு! இஹம்—பரம் என்பதான இரண்டு. மற்றவர்களுக்கு மோக்ஷமென்பது பரலோகம்தான். உடம்பை விட்டுவிட்டு இஹ லோகத்தை விட்டுப் போனுல்தான் அவர்களுடைய வைகுண்ட—கைலாஸாதி மோக்ஷங்கள். அத்வைதிக்கு அப்படியில்லை. இஹ லோகத்தில், உடம்பிலே உயிரோடு இருக்கிறபோதே அவன் இந்த லோகம் ஒரு மாயா விளையாட்டுத்தான் என்றும், உடம்பு என்பது "தான்" இல்லவே இல்லை என்றும் தெரிந்துகொண்டு விடுகிறுன். வெளியிலே மற்றவர் கண்ணிலே இஹ லோகத்தில் அவன் வளைய வந்துகொண்டிருக்கிறுற் போலிருந்தாலும் அவன் ஆத்மாவிலேயே நிலைத்தவனுக அதிலேயே ரமித்தவனுக இருப்பான். அப்புறம் உடம்பு நசிக்கிறபோது நசிக்கும். இவனுக்கு அது ஒன்றும் பொருட்டாக இருக்காது. இவன் ஆத்மாவாகவே இருக்கிறபடி இருந்துகொண்டிருப்பான். "உடம்பால்தான் கஷ்டம். உடம்பைப் போக்கிக்கொண்டுவிட்டால் கஷ்டம் போய் விடுமா?" என்று முன்னே கேட்டு, உடம்பு போய் ப்ரயோஜனமில்லை, கர்மா போகவேண்டும். அதற்கு "உடம்பு நான்" என்பது போகவேண்டும் என்றெல்லாம் பதில் பார்த்தோம். அத்வைத அநுபூதிமானுனவன் உடம்பிலிருக்கும்போதே அம்ருதமான (சாவில்லாததான) ஆத்மாவை அநுபவித்துக் கொண்டு மோக்ஷானந்தத்தில் இருக்கிறுன். தான் உடம்பிலிருப்பதாக அவனுக்கு எண்ணம் இராது. இப்படி, நம் பார்வையில் உலக வாழ்க்கையிலிருப்பவனுகத் தெரியும் போதே அத்வைத முக்தி நிலையிலுள்ளவனைத்தான் ஜீவன் முக்தன், ஜீவன் முக்தன் என்பது.

Koviloor Digital Library

இப்படி இஹம்-பரம் இரண்டில், இஹத்திலுள்ளபோது கூட ஒருத்தன் ப்ரஹ்ம நிர்வாண நிலை அடைய முடியும் என்பதற்கு பகவான் வாக்கு அங்கீகார முத்ரை குத்தியிருக்கிறது. வேதத்திலேயே புருஷ ஸூக்தாதிகளிலும் உபநிஷத்துக்களிலும், சாவுக்களமான இஹத்திலேயே அம்ருத தத்வமாகிறவர்களைப் பற்றி வருகிறது. இப்படி, வேறே ஒரு லோகத்துக்குப்போகாமல் இங்கேயே அமரமான ஆனந்தத்தில், அதாவது மோக்ஷத்தில் சேர்வதென்பது அத்வைதம் ஒன்றுக்குத்தான் பொருந்தும்.

ஆசாநாசம் அந்த அத்வைத மோக்ஷம் வரை கொண்டு விடுவதை பகவான் சொல்கிறார்.

புத்தருக்கு முற்பட்ட கருத்து

"ஆசையால்தான் துக்கம். அது போய்விட்டால் நிர்வாணம்" என்று புத்தர்தான் முதலில் கண்டுபிடித்துச் சொன்ன மாதிரிக் கொண்டாடிச் சொல்கிறார்கள். கீதையில் பகவான் நன்றாக அற்றுபடி செய்த ஸமாசாரம்தான் இது. "ப்ரஹ்ம நிர்வாணம்" என்று பகவான் சொன்னதில், பூர்ணத்வத்தைக் காட்டும் "ப்ரஹ்ம" சப்தத்தை நீக்கிவிட்டு, சூன்யம் மாத்திரம் த்வனிக்கும் "நிர்வாணம்" என்பதை புத்தர் எடுத்து வைத்துக்கொண்டிருக்கிறார். யுகாந்தரங்களாக வந்துள்ள நம்முடைய ஆத்மிக கலாசாரமே புத்தருக்குக் கொஞ்சம் முந்தி பிந்திதான் ஒரு ஒழுங்கு ரூபம் பெற்றது என்று திரித்துக் காட்டுவதிலேயே த்ருப்திப்பட்ட வெள்ளைக்கார சரித்ராசிரியர்களும், அவர்களுக்கு வார்ஸாக இருப்பதில் பெருமைப்படும் நம்மவர்களான ஆராய்ச்சியாளர்களுங் கூட புத்தருக்கு அப்புறம் கீதை வந்ததாகச் சொல்லவில்லை.

கீதைக்கும் ரொம்ப முந்தைய உபநிஷத்துக்களிலேயே இவ்விஷயம் சொல்லியிருக்கிறது.

Koviloor Digital Library

ஜீவ தசையில் மநுஷ்யர்கள் அநுபவிக்கக்கூடிய அதிகப்படி ஆனந்தம், அதைவிட உயர்ந்ததான இரண்டு தினுஸு கந்தர்வர்களின் ஆனந்தம், அதையும்விட உயர்ந்த பித்ருக்களின் ஆனந்தம், அதற்கும் மேலான மூன்று தினுஸு தேவர்களின் ஆனந்தம், இதைவிடவும் மேம்பட்ட இந்த்ரனின் ஆனந்தம், இந்த்ர ஆனந்தத்துக்கும் உசத்தியான ப்ருஹஸ்பதியின் ஆனந்தம், அப்புறம் அதற்கும் மேலான ப்ரஜாதியின் ஆனந்தம், ப்ரஜாபதியின் ஆனந்தத்தைவிட உசந்த ப்ரம்மாவின் ஆனந்தம் என்று ஒன்றுக்கு மேல் ஒன்று மேம்பட்டதான ஆனந்தங்களை ஒரு ஸாதகன் அநுபவித்துக் கொண்டே போவது பற்றி தைத்திரீய உபநிஷத்தின் ஆனந்த வல்லியில் சொல்லியிருக்கிறது. முன்னேயே இதைப் பற்றிக் கொஞ்சம் சொன்னேன். த்வைதத்திலிருந்து அத்வைதத்துக்குப் போகும்போது நடுவேயுள்ள அநேக நிலைகளில் இந்த ஆனந்தங்கள் ஏற்படுவதாக வைத்துக் கொள்ளலாம். இந்த இடத்தில் இப்படி ஒன்றுக்கு மேல் ஒன்றாக ஆனந்தத்தைப் பெறும் ஸாதகனின் லக்ஷணத்தைத் திரும்பத் திரும்பச் சொல்லியிருக்கிறது. அவன் "ச்ரோத்ரிய"னாகவும், "அகாமஹத"னாகவும் இருக்கவேண்டுமென்று லக்ஷணம் கொடுத்திருக்கிறது. உயர்குடிப் பிறப்பு, நல்ல ஸம்ஸ்காரங்களைப் பெறுவது, உத்தமமான வித்யா ஞானம் எல்லாம் சேர்ந்திருப்பவன்தான் "ச்ரோத்ரியன்". இப்படி இருந்தால் மட்டும் போதாது, "அகாமஹத"னாகவும் அவன் இருக்க வேண்டுமென்று சொல்லியிருக்கிறது. "காமஹதன்" என்றால் ஆசையால் வதைக்கப்படுபவன். முதலில் 'அ' சேர்த்து "அகாமஹதன்" என்று சொன்னால் ஆசையால் வதைக்கப்படாதவன் என்று அர்த்தம். அதாவது ஆசை நீங்கியவனுக்குத்தான் ஒன்றுக்கு மேல் ஒன்றான ஆனந்தங்கள் லபித்து, முடிவில் ப்ரஹ்மானந்தம் ஸித்திக்கும் என்பது திரும்ப திரும்ப எடுத்துச் சொல்லப்பட்டிருக்கிறது. இல்லாவிட்டால் இவன் ஒவ்வொரு ஆனந்தத்தையும் விட்டுவிட்டு மேலே மேலேயுள்ள ஆனந்தங்களுக்கு ஏறி, முடிவான ஆத்மானந்தம் வரை போகவே மாட்டான்.

Koviloor Digital Library

உபநிஷத்துக்களில் ஆத்மஞானிகளை "வீதராகர்"கள் என்று வர்ணித்திருக்கிறது. "ஆசை அழிபட்டவர்கள்" என்று அர்த்தம். "கர்மத்தினாலோ, ப்ரஜைகளாலோ, தனத்தாலோ அமர தத்வத்தைப் பெறமுடியாது; த்யாகத்தினாலே பலர் அதைப் பெற்றிருக்கிறார்கள்"* என்பது போல உபநிஷத்துக்களில் அநேக இடங்களில் ஆசா நாசமே ஆத்ம விடுதலைக்கு வழியாய் சொல்லப்பட்டிருக்கிறது.

ரிஷிகள் சொன்னதைத்தான் க்ருஷ்ணர் திரட்டி எடுத்து ஸாரத்தைச் சொன்னார். 'அந்த இடையன் உபநிஷத் பசுக்களிலிருந்து கீதைப் பாலைக் கறந்தான்; அர்ஜுனன் என்ற கன்றை முன்னிட்டுக் கொண்டு ஸத்புத்தி உள்ள எல்லாருக்காகவும் இப்படிப் பால் கறந்தான்'' என்று (கீதையில்) மங்கள ச்லோகம்!

ஆசையை அடக்கித் தன்னுள்ளே அடங்கும்படி கீதையில் உபதேசித்திருக்கிறார்.

மனம் நின்றபின்

ஆசை லேசில் கட்டுப்படாததுதான். "காமரூபம் துராஸதம்" என்கிறார்—"துராஸதம்" என்றால் கட்டுப்படாதது. "ஆனாலும் நீ மஹாபாஹு" என்று அர்ஜுனனைப் பார்த்துத் தட்டிக்கொடுப்பதுபோல சொல்கிறார். "மஹாபாஹு" என்றால் "பெருந்தோளன்". கௌரவ - பாண்டவ யுத்தத்தையே allegorical-ஆக கெட்டதற்கும் நல்லதற்கும் நடந்த யுத்தமாகச் சொன்னால்—அதாவது ஆரம்பத்தில் சொன்ன தேவாஸுர யுத்தமாக வைத்துக்கொண்டால்—பெருந்தோள் என்பது குறிப்பிடும் தோள்வலி (புஜபலம்) ஸாதகனின் ஸங்கல்ப பலத்தையே காட்டுவது. எத்தனை வழுக்கிவிட்டாலும், விடாமல் வழுக்கு மரத்தில் ஏறித்தான் தீர்வது என்று உறுதிப்படுத்திக்கொண்டு, வெளியிலே மறுபடி, மறுபடிச் சிதறி ஓடுகிற மனஸை மனந்தளராமல் இழுத்து

---

* மஹாநாராயணோபநிஷத் 12. 3. 4.

Koviloor Digital Library

இழுத்துப் பிடித்து நிறுத்துகிற அப்யாஸத்தில் உறுதியா யிருப்பதுதான் இங்கே புஜபலம்.

மனஸ் நின்றுபோய் விட்டால் அப்புறம் ஆத்மா மட்டுமே ப்ரகாசிக்க ஆரம்பித்துவிடும். மனஸினுல் தானே இந்த ப்ரபஞ்ச அநுபவம் அத்தனையும் நமக்கு வருகின்றன? இந்த அநுபவங்கள் அத்தனையும் மனமடங்கினுல் அற்றுப் போய்விடும். இந்த அநுபவங்களினுல்தானே நமக்கு லோக வாழ்க்கையில் உள்ள எல்லாக் கஷ்டமும், பயமும் உண்டாவது? அவை எல்லாம் போய்விடும். இது அத்தனை யிலும் நம்மை ஏவிவிட்ட ஆசைப் பிசாசு மனஸில் தோன்று வதேயாதலால், மனஸ் நின்று போனவுடன் அந்தப் பிசாசும் அடங்கிவிடும். அப்புறம் பரம சாந்தம்தான். தேஹ, இந்த்ரிய, மநோ, புத்திகளின் கட்டுக்கள், கர்மாவின் கட்டுக்கள், உறவு ஸொத்து முதலான கட்டுக்கள், ஸம்ஸார பந்தம் எல்லாம் அறுந்து விடுபட்டுவிட்ட ஸ்வதந்த்ர ஆனந்தம். இதுதான் ஸமாதி நிலையின் அநுபவம்.

மெய்யறிவு ஆத்ம ஞானமே

இந்த ஆனந்தம் இருக்கிறதென்றுல் அதை அநுபவிக்கிற ஆஸாமியும் ஒருத்தன் இருந்தாக வேண்டும். ஆனுல் அவன் ஆனந்தத்துக்கு வேருக இருந்துகொண்டு அதை அநுபவிப் பவன் என்றுல், அப்போது த்வைதம் வந்துவிடும். த்வைதம் வந்துவிட்டால் பயந்தான். அப்புறம் ஆனந்தம் எப்படி இருக்க முடியும்? ஆனபடியால் அந்த ஆஸாமி தானே ஆனந்த ஸ்வரூபியாய் இருக்கவேண்டும்.

அந்த ஆஸாமியைத்தான் ஆத்மா, ஆத்மா என்று சொல்வது. ஆத்மா என்றுல் "தான்".

தான் என்று இதுவரைக்கும் மனஸை நினைத்துக் கொண்டிருந்துவிட்டோம். இதன் அநுபவங்களையே நமது ஸொந்த அநுபவமாக நினைத்தோம். இதுகளைப் பெறுவதில் தான் குளிக்கப் போய்ச் சேற்றைப் பூசிக்கொள்கிறுற்போல்,

Koviloor Digital Library

ஆனந்தத்துக்குப் பதில் துக்க பரம்பரையை ஸம்பாதித்துக் கொண்டோம்.

இதிலே பெரிய துக்கம் நிஜத்தைத் தெரிந்துகொள்ளாமல் பொய்யையே நிஜமாக நினைத்ததுதான்.

மனஸை "தான்" என்று, அதாவது அதுதான் நம் நிஜமான ஸ்வரூபமென்று நினைத்தது தப்பு அல்லவா? பொய் யல்லவா? அந்த மனஸ் அற்றுப்போய் விடுவது என்றும் ஒரு நிலை இருக்கிறதே! தூக்கத்தில், க்ளோரோஃபாரத்தில், ஸமாதி நிலையில் மனஸ் அற்றுத்தானே போய்விடுகிறது? அப்போதும் நாம், அதாவது, "தான்" என்னும் ஆத்மா இருக்கிறதே! ஆகையால் மனஸை நாமாக நினைத்தது தப்பு, அது பொய் என்று நிச்சயமாகத் தெரிகிறது. ஆத்மாவை அறிவது—அதாவது ஆத்ம ஞானம்—தான் மெய்யை அறிவது. நாம் இதுவரை "நாமாக" நினைத்த மனஸ் பொய்யென்று தெரிந்தபின், நிஜ "நாமா"ன ஆத்மாவைத் தெரிந்துகொள்ள வேண்டியதுதானே நாம் செய்யவேண்டியது?

ஏதேதோ தெரிந்து கொள்கிறோம்—ஹிஸ்டரி, ஜாகரஃபி, அடாமிக் ஸயன்ஸ், எலெக்ட்ரானிக்ஸ் என்று என்னென்னவோ தெரிந்துகொள்கிறோம். பலவிதயான உண்மைகளைத் தெரிந்துகொள்வதுதான் மநுஷ்யனாகப் பிறந்ததற்குப் பயன். இப்படி அநேக கலைகள், விஞ்ஞானங்கள் தெரிந்துகொள்கிறோம். நமக்கு இன்பத்தைத் தரும் உபகரணங்களை உண்டாக்கிக் கொள்வதற்காகவும் இப்படி அறிவினால் "ஸர்ச்" (தேடுவது), "ரிஸர்ச்" (ஆராய்ச்சி செய்வது) எல்லாம் செய்கிறோம். ஆனால் கடைசியில் பார்த்தால், இவற்றால் நம்மை மஹா புத்திசாலிகளாக நினைத்துக்கொண்டிருக்கிற நமக்கு ரொம்பவும் அவமானமாக, நம் அத்தனை புத்திசாலித்தனத்தையும் அசடாக்குவதாக ஒன்று தெரிகிறது. அதாவது உண்மை உண்மை என்று நினைத்து நாம் தேடிப்போன எல்லாவற்றையும் எந்த மனஸினால் தேடினோமோ, எந்த மனஸின் திருப்திக்காகத் தேடி

Koviloor Digital Library

ஞேமோ, எந்த மனஸினுல் உண்மைகள் என்று அவற்றைத் தெரிந்துகொண்டோமோ அந்த மனஸே உண்மையில்லே, அது உண்மையான "நாம்" இல்லே என்று தெரிகிறது. (மனஸ் என்பதை இங்கே புத்தியையும் உள்ளடக்கியதான அந்தஃகரணம் என்ற அர்த்தத்திலேயே சொல்லிக்கொண்டு போகிறேன்.) நம்முடைய ப்ரமாதமான ஸர்ச், ரிஸர்ச்கள் நம்முடைய ஸந்தோஷத்துக்கான உபகரணங்களேப் பெருக்கிக் கொள்வதிலே முடிகிறது என்பதும் இப்போது அசட்டுத்தனமாகிறது. ஏனென்ருல் இங்கே நாம் சொல்கிற ஸந்தோஷமும் மனஸின் ஸந்தோஷம்தானே? நிஜமாக நாமாக இல்லாத ஒன்றின் ஸந்தோஷத்துக்கான உபகரணங் களே உண்டாக்கிக் கொள்வதற்காகவே நாம் இத்தனே பாடு படுகிருேம் என்ருல் அது கொஞ்சங்கூட புத்திசாலித்தன மாகாதுதானே? நிஜ ஆஸாமியைத் தெரிந்துகொள்ளாமல், அவனுக்குச் செய்யவேண்டியதைச் செய்யாமல், வேஷம் போட்டுக்கொண்டிருக்கிறவனே நிஜ ஆஸாமியாக நினேத்துக்கொண்டு அவனுடைய அநுபோகங்களுக்காக நாம் ஸதா ஸர்வதா எதையாவது பண்ணிக்கொண்டு உபத்ரவப்படுகிருேமென்ருல் இது ரொம்பவும் துக்கப்பட வேண்டிய விஷயம்தானே? பொய்யைப் போஷிக்கவா இந்தப் பாடு? இப்படி ஏமாந்தல்லவா போயிருக்கிருேம்? இனிமேலாவது மெய்யறிவு பெறவேண்டாமா?

இதைத்தான் நான், "ஆத்மாவை எதற்காகத் தெரிந்து கொள்ளவேண்டும்?" என்று கேட்ட ஒருத்தருக்குப் பதிலாகச் சொன்னேன். நம்முடைய லோக த்ருஷ்டியிலே பார்த்தால் அவரை 'அத்ருஷ்டசாலி' என்று சொல்லவேண்டும். ஸுகஜீவி. எந்தப் பிக்கல் பிடுங்கலும் அவருக்கு இல்லே. அதனுல், "நீங்கள் என்னவோ அத்வைதம், ஆத்ம சாந்தி என்று உபந்யாஸம் பண்ணுகிறீர்கள். 'அவற்றைப் பெற்ருல் தான் ஸுகமுண்டு; இல்லாவிட்டால் ப்ரபஞ்சத்தின் துக்கத் துக்குத்தான் ஆளாகவேண்டும்' என்கிறீர்கள். எனக் கென்னவோ ப்ரபஞ்சம் அப்படியொன்றும் துக்கமாகத்

Koviloor Digital Library

தெரியவில்லை. ஜீவனம் ஸௌக்யமாகத்தான் போய்க் கொண்டிருக்கிறது. அப்படியிருக்கும்போது, இப்படியே இருந்துவிட்டுப் போகட்டும் என்று இந்த வாழ்க்கையிலேயே இருந்துவிட்டாலென்ன? எதற்காக வாயைக் கட்டுகிறேன், மனஸைக் கட்டுகிறேன் என்றெல்லாம் வேண்டாத ச்ரமங்களை இழுத்துவிட்டுக்கொள்ளச் சொல்கிறீர்கள்?" என்று கேட்டார். இதையே ஒரு மாதிரி மறைமுகமாகக் கேட்டார்.

அப்போது நான் அவரிடம், "நீங்கள் எவரையோ உபசாரம் பண்ணிப் போஷித்து வைத்துக்கொண்டிருக்கிறதாக வைத்துக்கொள்வோம். அவரால் உங்களுக்கு ஏதோ ஸந்தோஷங்கள் கிடைக்கிறதென்பதற்காக இப்படிப் பண்ணுகிறீர்கள். ஆனால் அப்புறம் தெரிகிறது, அவரை நீங்கள் யாரென்று நினைத்து உபசாரம் பண்ணினீர்களோ அவரில்லை இந்த மநுஷ்யர், அவர் மாதிரி வேஷம் போட்ட போலி ஆஸாமி என்று. அவர் தருகிற ஸந்தோஷமும் நீங்கள் நினைக்கிறமாதிரி நீடித்து நிற்கப் போகிறதில்லை என்றும் தெரிகிறது. அப்போது எத்தனை துக்கமாக இருக்கும்? அந்த மாதிரிதான் நம்முடைய நிஜ ஸ்வரூபமென்று மாயாவேஷ மனஸை நினைத்து அதைப் போஷிப்பதும், அது தருகிற ஸௌக்யத்தை ஆத்மானந்தமென்று நினைப்பதும்" என்று சொன்னேன்.

மன வாழ்க்கையின் குறைபாடு

ஸந்தோஷமாக இருப்பதாகச் சொல்வது மனஸின் அநுபவங்களை வைத்துத்தான். ஆனால் ஸந்தோஷாநுபவம் பெறுகிற இந்த மனஸ்தான் நாமா என்பதைத் தெரிந்துகொள்ளவேண்டாமா? எதெதையோ தெரிந்து கொள்வதிலும் எதெதையோ ஆராய்ச்சி பண்ணி உண்மைகளைக் கண்டுபிடிப்பதிலும்தான் மநுஷ்ய ஜீவனின் பெருமையே இருக்கிறது என்று சொல்லிக்கொள்கிறோம். அணுவிலிருந்து galaxy வரையிலும் எல்லாவற்றையும் ஆராய்ந்து அவற்றின் உண்மைகளை தினந்தினமும் தெரிந்து

Koviloor Digital Library

கொண்டு கர்வப்படுகிறோம். இப்படித் தெரிந்து கொள்கிற நாம் வாஸ்தவத்தில் யார் என்று ஆராய்ச்சி பண்ணித் தெரிந்து கொள்ளவேண்டாமா? தன்னுடைய ஸத்யமான ஸ்திதியையே தெரிந்துகொள்ளாமல் மற்றவற்றைத் தெரிந்துகொண்டு, "ஸயன்ஸால் ஸத்யங்களைத் தெரிந்து கொள்கிறோமாக்கும்!" என்று மார்தட்டிக் கொள்வது பரிஹாஸத்துக்கு இடமானதல்லவா? ஸத்ய ஸத்யமானதைத் தெரிந்துகொள்ள வேண்டும், அறிகின்ற அறிவை அறிய வேண்டும் என்றால் ஆத்ம சாஸ்த்ரத்தை அப்யஸிக்க வேண்டும்.

ஆத்மாசாஸ்த்ரங்களை இப்போதே தீவ்ரமாக அப்யஸிப்பதற்கில்லாத பெரும்பாலாருங்கூட, மெய்யான ஆத்மாவை அடியோடு மறந்து பொய்யான மனஸுக்காகவே ஸதாவும் பாடுபட்டுக் கொண்டிருப்பதாக இருக்கப்படாது. அப்படியிருந்தால் நாம் ஏமாளி என்று ஆகிவிடும். அதனால்தான், எப்படிப்பட்டவராயிருந்தாலும், தினம் ஒரு அஞ்சு நிமிஷம் பத்து நிமிஷமாவது, 'நம்முடைய கார்யம், எண்ணம் லோகம் முதலான ஸகலமும் பொய்யாகப் போய்விடும் ஒரு பெரிய சாந்த பதம் ஆத்மா ஆத்மா என்று இருக்கிறது' என்பதாக நினைப்பூட்டிக்கொண்டு, அந்த அஞ்சு பத்து நிமிஷம் சாந்தமாக உட்கார்ந்திருக்கவேண்டும் என்பது.

மனஸைக் கொண்டு அநுபவங்களைப் பெறுகிற லோக வாழ்க்கை ஒருத்தருக்கு இன்றுவரை ஸௌக்யமாக ஸந்தோஷமாக இருந்துவருகிறது என்பதற்காக அதுவே போதும் என்று இருந்து விடுவதற்கில்லை. நாளைக்கே இந்த ஸந்தோஷம் போய்விடலாம். ஏதாவது வ்யாதி வக்கை வரலாம். ஸொத்து திருட்டுப் போகலாம். ப்ரியமானவர்கள் செத்துப் போகலாம். மனஸுக்கு ஆசை, வெறி, கோபம், பயம், துக்கம் முதலானவை ஏற்படுமாறு எந்த நிமிஷத்தில் வேண்டுமானாலும் ஏதாவது நடந்துவிடலாம்.

Koviloor Digital Library

போகவேண்டியது தேஹமல்ல; மனமே

இதனால் இப்படியெல்லாமில்லாமல், சாச்வதமாய் ஸௌக்யத்துடன் சாந்தத்துடன் இருக்க வேண்டுமானால் அதற்கு மன மாயை விலகி ஆத்ம ஸத்யத்தில் நிலைத்து நின்றால்தான் முடியும். அந்த நிஜ நானை அடைந்தபோது தான் 'தேஹம் நான்' என்ற பாவம் போகும். அப்போது தேஹத்துக்கு வ்யாதி வக்கை வந்தாலும் பாதிப்பு இருக்காது.

'தேஹத்தால்தானே பல தினுஸான கஷ்டங்கள்? தேஹத்தைப் போக்கிக்கொண்டு விடலாம்' என்று 'ஸூயிஸைட்' பண்ணிக் கொள்கிறவர்களை முன்னே குறிப்பிட்டேன். இந்த தேஹம் போனாலும் உயிர் வெவ்வேறு உடம்புகளை, பேயுடம்பு, அப்புறம் ஏதோ ஒரு ஜன்மமாக ஸ்தூல உடம்பு என்று எடுத்துக்கொண்டேதான் போகும்; அந்த உடம்புகளாலும் கஷ்டத்தை விலைக்கு வாங்கிக் கொள்ளும் என்று சொன்னேன். ஆகையால் கஷ்டம் போக சாவு ஸொல்யூஷன் இல்லை என்றேன். ஸொல்யூஷன் என்ன வென்றால் உடம்பு போவதில்லை; உடம்பில் 'நான்' என்றிருக்கிற அபிமானம்தான் போகவேண்டும்; உடம்பை "நானாக" நினைக்கிற அஞ்ஞானம்தான் போகவேண்டும் என்றேன். அது மட்டும் போதாது. மனஸை "நான்" என்று நினைப்பதும் போகவேண்டும். தேஹத்தை "நான்" என்று நினைப்பதுபோய், அப்படி நினைக்கிற மனஸ்தான் "நான்" என்று நினைத்தால் அதுவும் பொய்யை மெய்யாக எடுத்துக் கொண்டுவிடுவதுதான். "நான்" என்ற நினைப்பே போக வேண்டும். நினைப்பு இருந்தால் நினைக்கிற மனஸ், நினைக்கப் படும் "நான்" என்று இரண்டு இருப்பதாக அர்த்தம். இரண்டு இருப்பது பயஹேது. அதனால் நினைப்பு போய், நினைக்கிற மனஸ் போய், நானாக மட்டுமே இருக்கவேண்டும். அதுதான் ஆத்ம ஸாக்ஷாத்காரம். அதுதான் நம் நிஜ நிலை.

Koviloor Digital Library

பிறவி, முக்தி குறித்த கொள்கைகள்

அந்த நிஜமான "நானி"லே ஜீவ பாவம், தனி மனஸ், உடம்பு முதலியன எப்படி வந்தன என்று கேள்வி கேட்கலாம். மாயாசக்தியைக் கொண்டுதான் ஆத்மா (அதாவது, நிஜமான 'நாம்') இப்படி ஜீவனாக ஒரு மனஸோடு, உடம்போடு தோன்றுகிறது என்று பதில் சொன்னால், எதற்காக ஆத்மா இப்படி மாயையோடு சேரவேண்டுமென்று கேள்வி பிறக்கிறது. இதற்கு 'கன்வின்ஸிங்'காக ஒன்றும் பதில் சொல்லத் தெரியவில்லை. 'ஆனந்த பூர்ணமாக, தான் மட்டுமாக இருந்த ப்ரஹ்மம் எதற்காக மாயை பண்ணி இப்படி அபூர்ணமாகவேண்டும்?' என்று கேட்டால், 'என்னவோ நமக்குப் புரியாத லீலை' என்றுதான் பதில் சொல்ல வேண்டியிருக்கிறது. அதற்கு மேலே சொல்லத் தெரியவில்லை. பூர்ணமான தானே அபூர்ணமாகக் குறைந்து, நிறைந்த தன்னைத் தேடிப் பிடிப்பதற்காகக் கண்ணாமூச்சி ஆடிக்கொள்கிற விளையாட்டு இது. எதற்காக ப்ரஹ்மம் இப்படி விளையாடணும் என்று கேட்டால் பதில் தெரியவில்லை.

"காரணம் இல்லாததுதானே விளையாட்டு? ஸரி, தப்பு, தர்க்கம் எல்லாம் வராததுதானே விளையாட்டு? 'ஏதோ விளையாட்டுக்குச் சொன்னேன்', 'இதைப் பெரிசா நினைக்காம விளையாட்டுன்னு விட்டுடு' என்றெல்லாம் இந்த அர்த்தத்தில்தானே சொல்கிறோம்? இப்படி ப்ரஹ்மத்தில் காரணமில்லாமல் விளையாட்டு, லீலை தோன்றுகிறது என்றால், 'அதற்கு என்ன காரணம்?' என்று கேட்பதில் அர்த்தமே இல்லையே!" என்று ஒரே போடாகப் போட்டு நம்மைப் பேசவிடாமல் பண்ணிவிடுகிறார்கள்.

இந்த ஜன்மாவில் ஏற்பட்டிருக்கிற இந்த உடம்பு பூர்வஜன்ம கர்மாவினால் வந்தது என்று பதில் சொல்லி விடலாம். போன ஜன்மா, அதற்கும் முந்தின ஜன்மா, இன்னும் இப்படியே பூர்வஜன்மங்கள் என்று போனால்

Koviloor Digital Library

ஆதியிலே எப்படி உடம்பு வந்தது என்றால், அப்போது கர்மாவினால் வந்திருக்க முடியாது. அப்படியிருந்தால், இம்மாதிரி கர்மா செய்வதற்கு அதற்கும் முந்தி ஒரு பூர்வ ஜன்மமும், உடம்பும் இருந்திருக்கவேண்டும். இப்படி இருந்தால், அது ஆதிஜன்மாவே இல்லை.

ஜன்மா உள்ளது ஜீவன். ஜன்மாவே இல்லாத நிலையிலேயே இருந்திருந்தால் ஒரே ஆத்மாதான் இருந்திருக்கும். ஆத்மாவுக்கு ஜன்மா கிடையாது. ஆனாலும் அது ஜன்மா எடுக்கும் ஜீவனாக ஆகியிருக்கிறது.

ஒன்றுக்கொன்று முரண் மாதிரி, ப்ரஹ்ம ஸூத்ரத்தின் ஆரம்பத்தில், 'ப்ரஹ்மத்திடமிருந்துதான் ஜன்மம் ஏற்படுகிறது' என்றும்[1], பிற்பாடு 'ஜன்மா என்கிறது சரீரத்தால் ஏற்பட்ட பாவனைதானே தவிர நிஜமில்லை; ஆத்மா ஸ்ருஷ்டிக்கப்படாமல் நித்யமாயிருப்பது' என்றும்[2] இருக்கிறது. பல ஜீவாத்மாக்கள் இருப்பதாகச் சொல்கிற த்வைதிகள் இந்த முரண்பாட்டை 'ஸால்வ்' செய்துகொள்ள முடியாது. அவர்கள், 'ஆத்மா ஸ்ருஷ்டியற்ற நித்யப் பொருள்' என்பது ஜீவாத்மாவைக் குறிப்பதாகக் கொண்டால், அதற்கு ப்ரஹ்மத்திடமிருந்து ஜன்மா ஏற்படுவதை ஒப்புக்கொள்ள முடியாது. நித்யமான, ஸ்ருஷ்டியில்லாத ஒன்றுக்கு இன்னொன்றிடமிருந்து எப்படி ஜன்மா ஏற்படமுடியும்? அத்வைதத்தில், லோக வ்யவஹாரத்துக்காகத்தான் 'ஜீவாத்மா' என்று ஒன்றைச் சொல்கிறோமே தவிர, வாஸ்தவத்தில் ஜீவாத்மா பரமாத்மா என்று இரண்டு ஆத்மாக்களோ, இப்படி அநேகம் ஜீவாத்மாக்களோ இருப்பதாகக் கொள்வதில்லை. நம் கொள்கை, இருப்பது ஒரே ஆத்மா என்பதுதான். அதையேதான் ப்ரஹ்மம் என்பதும். அது ஸ்ருஷ்டியற்ற நித்யவஸ்து என்று ப்ரஹ்மஸூத்ரம் சொல்வதை நாம் அப்படியே ஒப்புக்கொள்கிறோம். இந்த

---

1. 1-1-2
2. 2-3-16,17

Koviloor Digital Library

ஒரே ஆத்மாவில் பல ஜீவர்களுடையவும் ஜகத்தினுடையவும் தோற்றம் ஏற்பட்டிருக்கிறது. இப்படி ஜீவத்தோற்றம் அதிலிருந்து ஏற்பட்டுள்ளதால் ப்ரஹ்மமாகிய ஆத்மாவிடமிருந்தே ஜன்மம் என்று சொல்லியிருப்பதையும் நாம் ஏற்க முடிகிறது. "எதற்காக, எப்போது, ஏன் இப்படி ஏற்பட்டு அப்புறம் கர்மாவினுல் ஜன்மாந்த்ரங்கள் நடக்கவேண்டும்?" என்றுல்தான் புரியமாட்டேன்கிறது.

இந்தப் புதிர்களை யோசித்தால் தலை சுற்றுகிறது. ஆதியிலே ஜன்மா எடுக்க ஜீவன் என்று ஒன்று எங்கே இருந்தது, அது எப்படி உண்டாயிற்று என்று கேட்டால், ஜீவன், எப்படி உண்டாயிற்று என்று கேட்காதே. அது உண்டாவதேயில்லை. பரமாத்மா என்கிற அநாதி தத்வமே தான் அது' என்கிருர்கள். இன்னொரு விதமாகச் சொல்லும் போது மாயையானது ஆத்மாவிலே ஜீவன் என்ற பாவத்தைத் தோற்றுவித்திருக்கிறது என்கிருர்கள். "அப்படியானுல் இந்த மாயை எப்போது தோன்றிற்று?" என்று கேட்டால் "'எப்போது' என்று மாயையைப்பற்றிக் கேட்பதே தப்பு. 'எப்போது' என்பது காலத்தைக் குறிப்பது. மாயையால்தான் காலம் என்ற ஒன்றே காலாதீதமான ஆத்மாவில் ஏற்பட்டிருக்கிறது. காலமே மாயையால் உண்டாகியுள்ளபோது, மாயை எந்தக் காலத்தில் தோன்றினது என்று கேட்டால் என்ன அர்த்தம்?" என்று வாயை அடைத்து விடுகிருர்கள்.

ஆறுதலாகவும் ஒன்று அவர்கள் சொல்வதில் தெரிகிறது. ஜீவன்தான் அநாதியோ, மாயைதான் அநாதியோ அது எப்படியானுலும் இந்த இரண்டுமே அநாதியாக வேண்டுமானுல் இருக்க முடியுமே தவிர அனந்தம் இல்லை என்று தெரிகிறது. அதாவது முடிவில்லாதது இல்லை. முடிவுள்ளதுதான் என்று தெரிகிறது. ஆதி, அந்தம் என்று இரண்டு. ஆதி தோற்றம், அந்தம் முடிவு. ஆதியந்தமில்லாமல் அநாதியாய், அனந்தமாயிருப்பது பரமாத்மா மட்டுந்தான். மாயைக்கு அந்தம் உண்டு.

Koviloor Digital Library

ஞானம் வந்தவுடன் அது இருந்த இடம் தெரியாமல் அழிந்துவிடும். அப்போது ஜீவாத்மாவும் பரமாத்மாவில் அந்தம் அடைந்து அதுவே ஆகிவிடும். அப்புறம் ஜன்மா இல்லை, உடம்பு இல்லை; கஷ்டங்கள், த்வைதத்தால் ஏற்படும் ஆசை, பயம் முதலான எதுவும் இல்லை.

ஜீவாத்மா என்று தனியாய் ஒன்று அநாதியாயிருப்பது போலவே அனந்தமாகவும் இருக்கிறது என்பது த்வைதிகள் கட்சி. சாச்வதமாக ஜீவாத்மா என்ற ஒன்றாகவே ஈச்வர ஸந்நிதானத்தில் ஆனந்தமாயிருப்பதுதான் மோக்ஷமான முடிவு நிலை; ஜனன-மரணம், மறுபடி சரீரம், ஸம்ஸாரம் என்பதற்கெல்லாம் அதுவே முடிவு என்கிறார்கள். அப்படி யிருக்கும்போது அந்த ஈச்வரனே தங்களுக்குள்ளே அந்தர் யாமியாக இருப்பதை ஜீவாத்மாக்கள் தெரிந்துகொண்டு அதனால் ஜீவனுக்குள்ள பிடுங்கல் இல்லாமல் ஈச்வரனின் ஞான, ஆனந்தங்களைத் தாங்களும் அநுபவித்துக் கொண் டிருப்பார்கள் என்று த்வைதத்திலேயே ஒரு 'மாடிஃபி கேஷன்' செய்து விசிஷ்டாத்வைதம் என்று சொல்கிறார்கள். அந்தர்யாமி என்பதோடு நிற்காமல் இதற்கு மேலே இன்னம் கொஞ்சம் அத்வைதமாகவும் சிலர்* அபிப்ராயப் படுகிறார்கள். (இவர்கள்) என்ன சொல்கிறார்களென்றால், ஸூர்ய வெளிச்சத்தில் நக்ஷத்திரங்கள் இருக்கிறாற்போல, மோக்ஷத்திலே ஈச்வர ஸந்நிதானத்தில் ஜீவாத்மாக்கள் இருக்கிறார்கள் என்கிறார்கள். ஸூர்ய வெளிச்சத்தில் நக்ஷத்ரம் இருப்பது கொஞ்சமாவது தெரிகிறதோ? இல்லை யல்லவா? அப்படியானால் நக்ஷத்ரங்கள் அப்போது அழிந்தா போய்விட்டன? அப்படியும் இல்லை. இதே மாதிரிதான் பரமாத்ம தத்வத்திலே ஜீவாத்ம தத்வம் தன்னுடைய தனித்தன்மை அப்படியே மங்கி அதன் ப்ரகாசத்திலேயே முழுகிக் கிடக்கிறது என்கிறார்கள். 'முக்தியிலும் மும்முதல் உண்டு' என்பதாக மோக்ஷ நிலையிலும் பசு (ஜீவாத்மா), பதி

---

* சைவ ஸித்தாந்தங்களில் சிலவற்றைப் பின்பற்றுவோர்.

Koviloor Digital Library

(பரமாத்மா), பாசம் (ஜகத்) இருக்கிறது என்பவர்களே அத்வைத slant (சார்பு) கொடுத்தும் இப்படிச் சொல்கிறார்கள். மோக்ஷத்திலே பரமாத்மாவோடு ஸம்பந்தம் எப்படி இருந்தாலும் ஸரி, இதைப்பற்றி ஸித்தாந்தங்கள் ஒன்றுக்கொன்று எத்தனை மாறுபட்டாலும் ஸரி, அந்த ஸ்திதியை அடைந்த பிற்பாடு மறுபடி ஸம்ஸாரமில்லை. ஜன்மா இல்லை என்பதை எல்லாரும் ஒரே மாதிரி சொல்கிறார்கள்.

இதைக் கொண்டே நாம் ஆறுதல் அடைவோம், த்ருப்திப்படுவோம்.

தேவை விடுதலைக்கு முயற்சியே!

ஸ்வதந்த்ர ஆத்மாவுக்கு எப்படி ஸம்ஸார பந்தம் ஏற்பட்டது என்று எந்த ஸித்தாந்தத்திலும் த்ருப்திகரமாகச் சொல்லவில்லை என்பதை நினைத்து வருத்தப்பட வேண்டாம். ஸம்ஸாரத்துக்குக் காரணம் மாயை என்று சொல்லும் அத்வைதத்தில் அந்த மாயையின் ஆளுகைக்கு எப்படி ஆத்மா ஆட்பட்டது என்று சொல்லாததைப் பற்றியும் நாம் வருத்தப்பட்டு யோசித்துக் குழம்பவேண்டியதில்லை.

ஏனென்றால், தெரிந்து ஒரு பொறியிலோ வலையிலோ விழுவதென்பதில்லை. அப்படித்தான் மாயா ஜால வலையில் எப்படியோ விழுந்துவிட்டோம். 'ஜாலம்' என்றாலே வலை என்று அர்த்தம். 'மாஜிக்' என்றும் ஒரு அர்த்தம்—இதை வைத்துத்தான் 'மாஜிக்'கை ஜாலவித்தை என்கிறோம். மாஜிக் பொய்தான். ஆனாலும் நிஜம் மாதிரித் தெரிகிறது. அதனால்தான் 'மாஜிக் ஷோ' நடத்தி நாம் போய்ப் பார்க்கிறோம்—காசைக் கொடுத்துப் பார்த்து ஸந்தோஷப்படுகிறோம்!

ஆத்மா மாயையிலே கட்டுப்பட்டதாக நினைப்பதே மாயா மாஜிக்தான்! 'அது நிஜமல்ல, ஆத்மா கட்டுப்படவே முடியாது' என்று எத்தனை சொன்னாலும், ப்ரத்யக்ஷமாக

Koviloor Digital Library

இத்தனை அவஸ்தைப்படுகிறோமே! கொஞ்ச நேரம் பார்க்கிற மாஜிக் ஸந்தோஷம் தருகிறதென்றால், பல வாழ்க்கைகளாக அநுபவித்துவரும் இந்த மாஜிக் துக்கமே தருகிறது. அதனால், விடுபட யத்னம் ஆரம்பிப்பதொன்றுதான் நாம் செய்யவேண்டியது. பொறியில் விழுந்தால், எப்படி விழுந்தோமென்று ஆராய்ச்சி செய்துகொண்டிருப்போம்? எவ்வளவு சீக்ரம் தப்புவோம், எந்த விதத்தில் தப்புவோம் என்றுதானே முயற்சி செய்வோம்? அப்படி, மற்ற ஆராய்ச்சிகள் பண்ணி, 'எப்படி உடம்பு வந்தது? ஜன்மா வந்தது? ஸம்ஸாரம் வந்தது? மாயா பந்தம் வந்தது?' என்று மண்டையைக் குடைந்துகொள்ளாமல், இவற்றிலிருந்து விடுபடவே முயற்சி தொடங்கவேண்டும். இந்தக் கேள்விக்கெல்லாம் 'ஆன்ஸர்' கண்டே பிடித்து விடுகிறோமென்றாலும் அதனால் என்ன ப்ரயோஜனம்?

முடிவுள்ளதே ஸம்ஸாரம்: ஏகோபித்த கருத்து

எல்லா ஸித்தாந்திகளுமே ஜீவனுக்கு அந்தம் இருக்கிறதோ இல்லையோ, ஸம்ஸாரத்துக்கு அந்தம் இருக்கிறது என்கிறார்கள். நமக்கு வேண்டியது இதுதான், எல்லாக் கஷ்டங்களுக்கும் காரணமான ஸம்ஸாரம் போனால் போதும் என்றிருக்கிறது. அப்புறமும் ஒன்றும் தெரியாத ஜடமாய் ஆகிவிடாமலிருந்தால் தேவலை என்று இருக்கிறது. ஒரு கட்சி பரமாத்மாவாக ஆகி ஜடத்துக்கு நேர் மறுகோடியான சைதன்ய ஸ்வரூபமாக ஆவதைச் சொல்கிறது. இன்னொன்று அந்தப் பரமாத்மாவின் ப்ரேமையை அநுபவிக்கும் ஆனந்தத்தில் இருப்பதைச் சொல்வதால் இதுவும் ஜட ஸ்திதி இல்லை, நன்றாக சைதன்ய விலாஸமுள்ள நிலை என்று தெரிகிறது. இப்படியேதான் மூன்றும் கட்சி சொல்கிறபடி சைதன்ய ப்ரகாசத்தில் முழுகிக் கிடப்பதும்.

முடிவு எதுவானாலும், ஆரம்பம் ஸம்ஸார பந்தத்தைக் கழித்துக்கொள்வதற்கானதை பண்ணத் தொடங்குவது— இதிலே எல்லா ஸித்தாந்திகளும் ஒத்துப் போகிறார்கள்,

Koviloor Digital Library

ஸத்கர்மா பண்ணிப் பாபகர்மாவினுல் ஏற்பட்ட ஸம்ஸார பந்தத்தைப் போக்கிக்கொள்வதும், கர்மாவைத் தூண்டிய பாப சிந்தனையை ஈச்வர பக்தி பண்ணிப் போக்கிக் கொள் வதும்தான் ஆரம்பம்.

அத்வைத ஸாதனைக்கும் இதுதான் ஆரம்பம்.

த்வைத நிலைகளை ஒப்புக்கொள்ளும் அத்வைதம்

இதைப்பற்றிக் குழப்பமே வேண்டாம். "நாம் அத்வைதி கள் அல்லவா? அந்த ஸம்ப்ரதாயத்தில் வந்திருப்பவர் களல்லவா? அல்லது அதுதான் ஸத்யமான தத்வம் என்ற நம்பிக்கை உடையவர்களல்லவா? அந்த அநுபவம் ஸித்திக்க வேண்டுமென்று ஆசைப்படுகிறவர்களல்லவா? நாம் போய் ஒரே த்வைத மயமான கார்யத்திலும் (சாஸ்த்ரீய கர்மா நுஷ்டானங்களிலும்), பக்தி உபாஸனையிலும் ஈடுபடுவதா வது?" என்று கொஞ்சங்கூடக் குழம்பவே வேண்டாம். அத்வைத ப்ரதிஷ்டாபனுசார்யாளான பகவத்பாதாளே இப்படிப் பண்ணும்படிதான் ஆக்ஞை செய்திருக்கிறுர். இத்தனை காலம் த்வைதத்திலிருந்துகொண்டு தப்புப் பண்ணி விட்டு இப்போது திடீரென்று அத்வைதம் வரவேண்டு மென்றுல் எப்படி வரும்? த்வைதத்தால் பண்ணின தப்பை த்வைதத்திலுலேயே ஸரி பண்ணிக்கொண்டால், அப்புறம் தான் அத்வைதமாக ஸாதனை செய்யமுடியும். ஆனபடி யால் ஆசார்யாள் இப்படிப்பட்ட நிலையிலிருக்கிற நமக்காக த்வைதத்தை இந்த மட்டத்தில் நன்றுக ஒப்புக்கொண்டு, நம்மையும் இதை ரிஸர்வேஷன் இல்லாமல் தைர்யமாக ஒப்புக்கொண்டு, அப்புறம் பக்வப்படப் பட இதைவிட தீரத்தோடு இதனுடன் போராடி ஜயித்து அத்வைதத்துக் குப் போகும்படியாகச் சொல்கிறுர்.

மற்ற ஸித்தாந்திகள் அத்வைதத்தை அறவே ஒப்புக் கொள்ளாததுபோல அத்வைதிகள் மற்ற ஸித்தாந்தங்களை ஒப்புக்கொள்ளாமல் மறுப்பதில்லை. அத்வைத நிலையை அடைவதற்கு முன்னே த்வைதத்தின் பல நிலைகளும் இருக்

Koviloor Digital Library

கவே செய்கின்றன என்பதை ஆசார்யாள் நன்ருக ஒப்புக் கொண்டிருக்கிருர்.

"ந ச த்வைதஸ்ய அந்ருதத்வ புத்தி: ப்ரதமமேவ கஸ்ய சித் ஸ்யாத்-அதாவது, "ஆரம்பத்திலிருந்தே த்வைத ப்ரபஞ் சம் பொய்யானது என்ற அறிவு யாருக்கும் இருப்பதற் கில்லை" என்று ப்ருஹதாரண்யகத்தில் பரம அத்வைதமாக "அதுவும் பூர்ணம், இதுவும் பூர்ணம்" என்று வரும் மந்த் ரத்துக்கு பாஷ்யம் செய்யுமிடத்திலேயே ஆசார்யாள் சொல்லியிருக்கிருர்.*

ப்ரஹ்மத்திலிருந்து ஜகத்தின் தோற்றம் எப்படி என்பதைப் பற்றிப் பல கொள்கைகளை ப்ரஹ்ம ஸூத்ரத்தில் இரண்டாம் அத்யாய முதல் பாகத்தில் ஆராய்ந்திருக்கிறது. ப்ரஹ்மம்தான் ஜகத்காரணம் என்ருலும் வேறே வஸ்துக் களை வைத்துக்கொண்டு அது ஜகத்தைச் செய்ததா, தானே ஜகத்தாகப் பரிணமித்ததா, அல்லது வெறுமே இப்படி ஜகத் மாதிரி தோன்ற மட்டும் செய்கிறதா என்று பல அபிப்ராயங் கள் இருக்கின்றன. வேறு வஸ்துக்களைக் கொண்டு செய்த தென்ருல் அவை எங்கேயிருந்து வந்தன? எங்கிருந்தோ வந்தனவென்ருல் அப்போது ப்ரஹ்மம்தான் ஜகத்காரணம் என்பதே தப்பாகிவிடுகிறது. ப்ரஹ்மத்தைத் தவிர வேறு ஆதார வஸ்து இருந்துவிட்டால் ப்ரஹ்மமென்பது ப்ரஹ்மமே இல்லை! ப்ரஹ்மம் ஜகத்தாகப் பரிணமித்தது, அதாவது பால் தயிராகிற மாதிரி மாறிற்று என்ருலும் ஸரியில்லை. விகாரம் (மாறுதல்) இல்லாமல் ஸ்வரூபத் திலேயே இருப்பதுதான் ப்ரஹ்ம லக்ஷணம். இது இன்னொன் ருக மாறிற்று என்ருல் ஸரியில்லை. அதோடுகூட, ஜகத்தாக இதுவே மாறிவிட்டதென்ருல் அப்புறம் ப்ரஹ்மம் என்று தனியாக இருக்க முடியாது. ஜகத் தோன்றின பிறகு ப்ரஹ்மம் இல்லை என்று ஆகிவிடும். அதனுல், இந்த அபிப் ராயங்கள் எதுவும் ஸரியில்லை. ப்ரஹ்மம் வெறுமே ஜகத்

---

* ப்ருஹதாரண்யகோபநிஷத்—5-1-1

Koviloor Digital Library

மாதிரித் தோன்ற மட்டுந்தான் செய்கிறது; நிஜமாக ஸ்ருஷ்டி என்று ஏதோ வெளி சரக்கை வைத்துக்கொண்டு பண்ணவுமில்லை; அல்லது தானே உருமாற்றம் கொள்ளவு மில்லை'' என்று ஆசார்யாள் ஸ்தாபித்திருக்கிறுர். பரிணமம் என்று வேருக ஆவது வேறு, ஆசார்யாள் சொன்னதுபோல வேருகத் தோன்றுவது வேறு, இதற்கு 'விவர்த்தம்' என்று பெயர். பரிணமம் என்ருல் வாஸ்தவமாகவே ரூபம் மாறு வது. புழு வண்டாகிறது பரிணமம். அப்புறம் அந்தப் புழு உண்டா? இல்லை. ஆனல் அதே புழு ஏதோ பிய்ந்துபோன ரப்பர் துணுக்கு மாதிரித் தெரிகிறதென்ருல் அப்போது வாஸ்தவத்தில் அதற்கு ஏதாவது மாறுதல் ஏற்பட்டதா என்ன? அது புழுவாகவேதான் இருந்துகொண்டு இருக் கிறது; அதே ஸமயம் ரப்பர் பிச்சாளம் மாதிரித் தெரி கிறது. இப்படி ப்ரஹ்மம் நிர்விகாரமாகவே, தன் நிஜ ஸ்வரூபத்தில் எந்தவிதச் சலனமும் இல்லாமலேதான் இருக் கிறது. அப்படியிருக்கும்போதே அதில் மாயையானது ஜகத் தோற்றத்தைக் கல்பிக்கிறது என்று ஆசார்யாள் எடுத்துச் சொல்லியிருக்கிறுர். ரஜ்ஜு-ஸர்ப்ப ந்யாஸம், அதாவது கயிறு பாம்பாகத் தெரிகிற மாதிரி என்று அத்வைத புஸ்தகங்களில் அடிக்கடி வரும்.

அத்வைதத்தின் அடிப்படையான இந்த கொள்கையை ''ப்ரஹ்ம ஸூத்''ரத்தின் அந்த பாகத்தில் ''ததநந்யத்வ—மாரம்பண—சப்தாதிப்ய'' என்ற (பதிநாலாம்) ஸூத்ரத்தில் நிலைநாட்டி விளக்கிக்கொண்டு போகிறபோதே நம்முடைய ஆசார்யாள் இதற்கு மாற்று அபிப்ராயமுள்ளவர்களையும் மதிக்கிறமாதிரி அத்வைதத்துக்கு முந்தைய நிலையில் த்வைதக் கருத்துக்களை ஒப்புக்கொள்ள வேண்டியதுதான் என்கிறுர். ரொம்பவும் ஸ்பஷ்டமாக, ''ஸ்வப்ன தசையில் உள்ளவரை அந்த ஸ்வப்ன வ்யவஹாரங்கள் ஸத்யமாகவே இருந்து, முழித்துக்கொண்ட பிறகே பொய்யெனத் தெரிவது போல, பரமாத்மாவே ஜீவாத்மா என்ற ஞான விழிப்பு ஏற்படு வதற்கு முந்தி த்வைதமான எல்லா ஸம்ஸார வ்யவஹாரங்

Koviloor Digital Library

களுக்கும் ஸத்யத்தன்மை பொருந்துவதாகவே கொள்ள வேண்டும்'': ''ஸர்வ வ்யவஹாராணமேவ ப்ராக் ப்ரஹ்மாத்மதா விஜ்ஞாநாத் ஸத்யத்வோபபத்தே : ஸ்வப்ந வ்யவஹாரஸ்ய ப்ராக் ப்ரபோதநாத்'' என்று சொல்லியிருக்கிறார்.

இப்படி உள்ளதை உள்ளபடி ஒப்புக்கொண்டு, ஆசார்யாளே விதித்துள்ளபடிப் புஷ்கலமாக (பூர்ணமாக) கர்மாநுஷ்டானம், பக்தி உபாஸனை பண்ணி, அப்புறந்தான் மனஸ் போகப் பண்ணிக்கொள்வதற்கான ஞான விசாரத்துக்கும் போகவேண்டும். அப்போதுதான் உள்ளது உள்ளபடி எப்போதுமே இருக்கும் ஒன்றே ஒன்றான தத்வத்தை அடைய முடியும். ''அத்வைதத்தை ஒப்புக்கொள்பவர்களாச்சே! த்வைதமாகப் பண்ணலாமா? 'அத்வைதம் என்று நீட்டி முழக்கிவிட்டுக் கடைசியில் பார்த்தால் இவர்களும் நாம் பண்ணும் கர்மா - பக்திகளைத்தானே பண்ணுகிறார்கள்!' என்று த்வைதிகள் பரிஹாஸம் செய்பவர்களே!'' என்றெல்லாம் யோசிக்க வேண்டியதில்லை. ஸத்யம்தான் வேண்டும் என்றால் எல்லாவற்றுக்கும் துணிந்துதான் ஆகவேண்டும். ஒரேயடியாகப் பணிவதற்கும் துணிய வேண்டும்! கொள்கையபிமானம் உள்பட எல்லா மானாபிமானமும் போகணும். இதுதான் ஆசார்யாள் வழி.

வறட்டு ஸித்தாந்தப் பிடிமானம் போகணும். 'முரட்டுப் பிடிவாதம்' என்கிறோமே, அது தன் வாதத்தையே முரட்டுத்தனமாகப் பிடித்துக் கொண்டிருப்பதுதான். இப்படி, ஸித்தாந்த வாதத்தையே வாயளவில் பிடித்துக்கொண்டு, வாழ்க்கை அநுஷ்டானத்தால் அந்த ஸித்தாந்த ஸாரத்தைத் தெரிந்துகொள்வதற்கு அடிநிலையிருந்து முயற்சி பண்ண பயப்பட்டால் உருப்பட முடியாது.

ஆசார்யாள் அவதாரத்தை முடித்துக்கொண்டு விதேஹ முக்தி அடைய இருந்த ஸமயத்தில் பக்தர்கள் அவரிடம் வந்து, ''தங்களுடைய ஏராளமான உபதேசங்களின் ஸாரத்தை வடித்துச் சுருக்கமாகக் கொடுத்து அநுக்ரஹம் பண்ணுங்கள்'' என்று கேட்டுக் கொண்டார்கள், அப்போது

Koviloor Digital Library

அவர் ஸாதாரணமாக நம் மாதிரியாக உள்ள ஜீவன் அடிமட்டத்திலிருந்து எப்படி ஆரம்பித்துப் படிப்படியாக அத்யாத்ம ஸாதனேக்குப் போகவேண்டுமென்பதை ஐந்து ச்லோகங்களில் உபதேசித்தார். ('உபதேச பஞ்சகம்' என்றும் 'ஸோபாந பஞ்சகம்' என்று கூறப்படும்) அதிலே, "வேதத்தைத் தினமும் ஓதி, அதில் சொன்ன கர்மாக்களையெல்லாம் நன்ருக அநுஷ்டியுங்கள்" என்று முதல் வரியிலேயே உபதேசித்திருக்கிருர். ஸொந்த ப்ரீதிக்காக இல்லாமல் ஈச்வர ப்ரீதிக்காக இப்படிக் கர்மா பண்ணுங்கள் என்கிருர். அப்புறம், "பகவதோ பக்திர் த்ருடாதீயதாம்", அதாவது, "பகவானை த்ருடமான பக்தியோடு உபாஸியுங்கள்" என்கிருர்.

நாம் நிஜமான ஆசார்ய சிஷ்யர்களானல் அவர் தம்முடைய ஜீவயாத்ரையை முடித்துக்கொள்ளும்போது முடிவாக அநுக்ரஹித்த உபதேசப்படிதான் நடக்க வேண்டும். அதாவது கர்மா, பக்திகள் பண்ணி, 'நம் சித்தம் சுத்தியாயிற்று, அதற்குச் சிதருமல் ஒன்றிலேயே நிற்கிற ஆற்றல் ஏற்பட்டுவிட்டது' என்று நமக்கு நிச்சயமான உறுதி ஏற்பட்ட போதுதான் கர்மாவையும் பக்தியையும் நிறுத்தி விட்டு அத்வைத விசாரத்தில் தீவ்ரமாக ஈடுபடலாம். ஆரம்பத்திலிருந்தே அத்வைத லக்ஷ்யம் மறக்கப்படாதுதான். தினமும் கொஞ்சநேரம், 'இது அத்தனையும் மாயைதான், த்வைதந்தான்; ஆத்மா ஒன்றுதான் ஸத்யம்; அது எந்தக் கார்யமுமில்லாமல் பரம சாந்தமாக இருப்பதுதான்' என்று நினைத்து, 'நாம் அப்படித்தானிருக்கிரேம்' என்று பாவனையாகவாவது சற்று நேரம் இருக்கத்தான் வேண்டும். ஆனல் அந்த பாவனை வாஸ்தவமாகவேண்டுமென்ருல் அதற்குக் கர்மா, பக்திகள் பண்ணினல்தான் முடியும். பாவனை வலுக்க வலுக்க இவை தாமே விட்டுப்போகும். முதலிலேயே விடப்படாது. த்வைதத்தைக் கொண்டே அத்வைதத்துக்குப் போகவேண்டும். சரீரத்தால் செய்யும் கர்மாநுஷ்டானத்தைக் கொண்டே கர்ம நாசத்துக்கு வழி

Koviloor Digital Library

தேடவேண்டும். மனஸைக் கொண்டு செய்யும் பக்தியா லேயே மனோ நாசத்துக்குப் பக்வப்படுத்திக் கொள்ள வேண்டும்.

மற்ற ஸித்தாந்திகள் அத்வைதத்தை ஒப்புக்கொள்வ தில்லை; ஆனால் அத்வைதிகள் அவர்கள் சொல்கிற த்வைதத் தையும் அத்வைதத்துக்கு ஏற்றிவிடும் படிகளாக ஒப்புக் கொள்கிறோமென்பதில் ஆச்சர்யமில்லை. வீட்டில் கீழே 'க்ரௌண்ட் ஃப்ளோரி'ல் இருப்பவர்களுக்கு மேலே மாடியிருப்பது தெரியாமலிருக்கலாம். ஆனால் மாடியிலே இருக்கிறவருக்குக் கீழே ஒரு தளம் இருப்பது தெரியாம லிருக்க முடியாது. "இந்த வீட்டுக்கு மாடி இருக்கா என்ன?" என்று கீழே இருப்பவர்கள் கேட்கலாம். ஆனால் மாடியில் இருப்பவர், "இதற்குக் கீழே ஒரு ஃப்ளோர் இருக்கா?" என்று ஸந்தேஹப்பட்டு கேட்கமாட்டார்! இங்கேயிருந்து (கும்பகோணத்திலிருந்து) சிதம்பரத்துக்குப் போய், அங்கேயே இறங்கிவிடுபவருக்கு மெட்ராஸ் இருப்பது தெரியாது. ஆனால் மெட்ராஸ் போகிறவர் சிதம்பரம் வழியாய்த்தான் போகவேண்டும். மலை உச்சிக்குப் போகிறவர் கீழேயிருந்துதான் போகவேண்டும்; அதனாலே கீழே உள்ள மலை ப்ரதேசங்களையும் அவர் "இருக்கு" என்று ஒப்புக்கொள்வார். கொஞ்ச தூரம் மட்டும்போய் அங்கேயே நின்றுவிடுகிறவர்களுக்கு உச்சி தெரியாது. அவர்கள் பார்வையில் அந்த உச்சி மறைந்திருந்தால், "இதற்கு (அவர் கள் வந்திருக்கும் இடத்துக்கு) மேலே உச்சி இல்லை" என்று கூட நினைத்துவிடலாம்! இந்த மாதிரி உபமானங்கள்கூடச் சொல்லவேண்டியதில்லை. என்னவோ சொன்னேன். மற்ற ஸித்தாந்தங்களையும் அரவணைத்துத் தழுவிக்கொண்டு போவதே அத்வைதமாதலால் இப்படியெல்லாம் சொல்வது கூட அதன் 'ஸ்பிரிட்'டுக்கு ஏற்காததுதான்.

ஸத்ய, ஸந்தோஷங்கள் அத்வைதத்திலேயே

செய்யவேண்டியது, கர்மாவும் பக்தியும். ஆனாலும் ஆத்ம சிந்தனையும் ஆரம்பத்திலிருந்து ஒரு இழை

Koviloor Digital Library

அறுபடாமல் இருந்துகொண்டு இருக்கவேண்டும். அத்வைத மஹா தத்வத்தின் நினைவு மறக்க விடக்கூடாது. 'அதற்காகத் தான் (அத்வைத அடைவுக்காகத்தான்) கர்மாவும், பக்தியும். கர்மாவுக்காகவே கர்மா இல்லை, பக்திக்காகவே பக்தி இல்லை. End (லக்ஷ்யம்) அத்வைதந்தான்; means (உபாயம்) தான் த்வைதமாய் செய்யும் இது எல்லாம்' என்ற ப்ரக்ஞை இருக்கவேண்டும். மாறுமலிருக்கிற ஸத்யநிலை அத்வைதமா யிருப்பதுதான். பாக்கியெல்லாம் மாறுதல்தான். மாறுகிற தென்றால் ஸத்யமான ஒரே ஸ்திதியில் நிலைப்பட்டு இல்லை என்றே அர்த்தம். அதனால் த்வைதம் எத்தனை நன்றாயிருந் தாலும், அதிலே எத்தனை நல்லது இருந்தாலும் ஸத்யத்தைத் தெரிந்துகொண்டு அந்த ஸத்யமாகவே இருக்கவேண்டு மென்றால் இதைவிட்டு அத்வைத ஞானத்துக்குத்தான் போக வேண்டும். ஸத்யமான நிலையில் நாமில்லை என்றால் அஸத்ய மாக இருக்கிறோமென்றுதானே அர்த்தம்? அப்படியிருக்க லாமா?

இப்படியாக ஸத்யமாக இருப்பதோடு, நிஜமான ஸந்தோஷமாக இருப்பதும் அத்வைதத்தில்தான். "எதற்காக அத்வைதம்?" என்று கேட்ட ஸுக ஜீவிக்குச் சொன்ன பதில் இதுதான். புண்ய கர்ம வசாத் இன்றுவரை ஸுக ஜீவனம் கிடைத்தாலும், மனஸுக்கேயான இந்த ஸுகம் எந்த நிமிஷமும் ஓடிப்போய் விடலாம். மனஸானது உடம்பு, உடைமை இவற்றிலேயே பற்றுக் கொண்டதாயிருப்பதால் நாளைக்கே கைகால் உடைந்தால், அல்லது தேள் கொட்டி னால், பாங்கில் போட்டிருந்ததை ஃபோர்ஜரி பண்ணி எவனோ அடித்துக்கொண்டு போய்விட்டால், அல்லது தெற்கத்திக்காரன் நம்முடைய ப்ரியமான பந்துமித்ரர்களில் எவரையோ பிடித்துக்கொண்டு போய்விட்டால் அப்போது மனஸிலே ஸுகம் போய் அது நம்மை ஒரேயடியாய் தலையில் கை வைத்துக்கொண்டு உட்காரும்படி செய்துவிடும். அல்லது இப்படி வெளியேயிருந்து எதுவோ மனஸை பாதிக்க வராமல், அதுவே தாறுமாறாக எதையாவது நினைத்துவிட்டு

Koviloor Digital Library

அப்புறம், "இப்படி நினைச்சோமே, நினைச்சோமே" என்று கஷ்டப் படும்படியாகவோ, வெட்கப் படும்படியாகவோ நடக்கலாம்; எந்த நிமிஷம் வேண்டுமானாலும் நடக்கலாம்.

அதனால் முடிந்த முடிவாக, எப்போதாவது, எப்படியாவது அதற்கான யோக்யதையை ஸம்பாதித்துக் கொண்டு, மனஸைக் குறித்த த்வைத ஸுகாநுபவம் எல்லாவற்றையும் விட்டுவிட்டு, ஆத்மாவைக் குறித்ததாக மாத்ரமில்லாமல் ஆத்மாவாகவே இருக்கிற அத்வைத ஸௌக்யத்தில் சேர்வதில் கருத்து வைக்கவேண்டும்.

ஆத்மாவை அடைந்த போதுதான் நிஜமான 'தான்' தெரியுமாதலால், அதற்கப்புறம் உடம்பில் அபிமானம் போய், அதற்கு ஏற்படும் தொந்தரவுகள் நம்மை பாதிக்காதபடி செய்துகொள்ளலாம். அப்போது ஸொத்தையோ மநுஷ்யர்களையோ தன்னுடையவையாக நினைக்கிற மயக்கம் போகும். அதனால் அப்போது திருட்டுப்போவது, பந்து மித்ரர்களின் தேஹவியோகம் ஆகியவையும் கஷ்டத்தைக் கொடுக்காது. ஆசை, கோபம், பயம், துக்கம் என்று இன்னொரு வஸ்துவைக் குறித்து எழுகிற ஸகலமும் அதள பாதாளத்துக்கு அமுங்கிப்போய் ஆனந்...தமாயிருக்கலாம்.

ஆசையின் அனர்த்தங்களில் பயமும் ஒன்று

நம்முடைய நிஜஸ்வரூபமான ஆத்மாவுக்கு இன்னொன்றாக, அதற்கு வேறான இரண்டாவது வஸ்துவாக எதுவுமே இல்லை என்பதுதான் அத்வைதம். தூக்கத்திலோ, மயக்கத்திலோ நமக்கு வேறாக உலகம் இருந்ததா, உறவுக்காரர்கள் இருந்தார்களா, விரோதிகள்தான் இருந்தார்களா, உடைமை எதுவாவது இருந்ததா? எதுவும் இல்லை தானே? இவை உள்ளவரைதான் இவற்றைக் குறித்து ஆசை, அந்த ஆசைக்கு இடையூறு ஏற்படுகிறபோது கோபம், அது நிறைவேறாதபோது துக்கம், அதை நமக்குக்

Koviloor Digital Library

கிட்டாமல் பண்ணக்கூடியவர்களிடம் பயம், அதைப் பெற்றவர்களிடம் பொறுமை என்றெல்லாம் ஏற்படுகின்றன.

"பயத்தையும் ஆசையில் உண்டாவதாகச் சொன்னது எப்படி? பேய் பிசாசு என்றால் பயப்படுகிறோம், புயல் மழை என்றால் பயப்படுகிறோம், முரடனிடம் பயப்படுகிறோம், மேலதிகாரியிடம் பயப்படுகிறோம் என்றால் இது மாதிரியான பயங்களுக்கு ஆசையா காரணம்?"

ஆமாம், ஆசைதான் காரணம். உடம்பிலே "நான்" என்ற ஆசை—அதற்கு ஹானி வந்துவிடப்போகிறதே என்று புயலுக்குப் பயப்படுகிறோம். சித்தத்திலே "நான்" என்ற ஆசை—அதனால் அதைப் பிடித்து ஆட்டுமே என்று பேய் பிசாசிடம் பயம். உடம்பை அடித்துப் போடுவானோ, அல்லது பொய்யான "நானி"ன் உடைமைகளைக் கொள்ளையடிப்பானோ என்று உடல்—உடைமையாதிகளிடம் உள்ள ஆசையிலேயே முரடனிடம் பயம். மனஸுக்கு 'மானம்' என்று ஒரு பெரிய மமகாரம் இருக்கிறது; அதிலே உள்ள ஆசையால், மானம் போகிற மாதிரி மேலதிகாரி கேள்வி கேட்பாரோ, ஸஸ்பென்ட் பண்ணுவாரோ என்று அவரிடம் பயம். ஆக நாம் நம்முடையது என்று தப்பாக நினைத்து ஆசைப்படும் எதுவோ ஒன்றுக்கு ஹானி வந்துவிடப் போகிறதே என்பதிலேயே பயம் என்பது ஏற்படுகிறது. முன்னே க்ரோதம், லோபம், மோஹம், மதம், மாத்ஸர்யம் எல்லாவற்றுக்கும் காமம் (ஆசை)தான் மூலம் என்றேன். துக்கம், பயம் இவற்றுக்கும் அதுவேதான் காரணம் என்று இப்போது தெரிகிறது. ஆசைப்பட்டது கிடைக்காவிட்டால், அல்லது கிடைத்தும் அப்புறம் அதை இழந்துவிட்டால் துக்கம்.

மனஸில் ஆசை எழுவது எதைக் குறித்து? அதற்கு இன்னொன்றாக இருக்கிற ஏதோ ஒன்றிடம்தான். அந்த ஆசைக்குக் குறுக்காக எதுவோ ஏற்பட்டு க்ரோதமோ, சோகமோ, பயமோ உண்டாவதும் இன்னொன்றால்தான்.

Koviloor Digital Library

பலவற்றைக் குறிக்கும் த்வைதம்

இன்னொன்று இல்லாமல் ஒன்று மட்டுமாயிருப்பது அத்வைதம். ஒன்று மட்டுமில்லாமல் இன்னும் பல இருப்பது த்வைதம். ஸரியாக வார்த்தைக்கு அர்த்தம் சொன்னால் "த்வைதம்" என்றால் "இரண்டு" "இருமை" என்றுதான் அர்த்தம். "பல" என்று அர்த்தமில்லை. 'பரமாத்மா என்று ஒன்று, ஜீவாத்மா என்று அதற்கு வேறாக இன்னொன்று. இப்படி இரண்டு இருப்பதுதான் ஸத்யம்' என்பதே த்வைத ஸித்தாந்தம். இங்கே முழுக்க ஜீவாத்மாவைப் பற்றியே தான் பார்த்துக்கொண்டிருக்கிறோம். அவனைப் பொறுத்த மட்டில், தேஹ - இந்த்ரிய - அந்தஃகரணங்களே ஜீவாத்மா என்று நினைக்கிறவரையில் அவனுக்கு வேறாக அவனுடைய அநுபவத்துக்கு வருபவையாக அநேக வெளி வஸ்துக்கள் இருக்கின்றன. இவனொன்று, வெளியிலே இன்னொன்று என்றில்லை. இவனொன்று, வெளியிலே பல. இப்படி இவனுக்கு வேறாக உள்ள எல்லாவற்றையுமே 'த்வைத ப்ரபஞ்சம்' என்று சொல்லிவிடுவது வழக்கம். அதிலே இரண்டுக்கு மேற்பட்ட பல பொருட்கள், அநேக சேதனு சேதனங்கள் இருந்தாலும், 'ஜீவாத்மா' என்று ஒருத்தன். 'அவனுக்கு இரண்டாவதாக இந்த இத்தனையும்' என்று வைத்து, த்வைத ப்ரபஞ்சம் என்று சொல்வதாக வழக்கம் ஏற்பட்டிருக்கிறது.

மனஸ் தனிப்பட்டு இராது

தேஹேந்த்ரிய அந்தஃகரணமே ஜீவாத்மா, அதாவது பொதுவாகச் சொல்கிறபடி, மனஸ்தான் மநுஷ்யன் என்று நினைக்கிறவரையில் இந்த த்வைதத்துக்குத் தப்பவேமுடியாது 'மனஸ்' என்பதை வைத்துத்தான் 'மநுஷ்யன்' என்ற வார்த்தையே உண்டாயிருப்பது. 'மன்' என்றால் 'நினைப் பது'. ஜீவஜந்துக்களில் மிக உயர்வான சிந்தனாசக்தி படைத்தவனாக இருப்பதாலேயே இவனுக்கு மநுஷ்யன் என்று பெயர். ஆனாலும் இதுவரை நாம் பார்த்ததிலிருந்து இந்தச் சிந்தனாசக்தியினால்தான் அத்தனை கஷ்டமும்,

Koviloor Digital Library

ஜன்மமும், கர்மமும், ஸம்ஸாரமும் என்று தெரிந்தது. அதோடு இந்தச் சிந்தனு சக்திக்கும் அடியிலே அதற்கும் ஆதாரமாக, ஆனுல் அதனுல் எட்டிப்பிடிக்க முடியாததாக, எண்ணமே எழும்பாத ஆத்மா என்று ஒன்று இருப்பதாகவும் அதுதான் ஜீவனுக்கு நிஜமான ஸ்வரூபமென்றும் தெரிந்தது.

மனஸ் இன்னொன்றின் ஸஹாயத்தை வேண்டாமல் அதுவாகவே சிந்திக்கிற சக்தி பெற்றிருக்கிறது என்பதை மட்டும் பார்க்கும்போது அதுவும் ஆத்மா மாதிரி அத்வைத ப்ரபஞ்சத்தின் 'டச்' இல்லாமல் ஏன் இருக்கப்படாது என்று தோன்றலாம். வெளியிலிருந்து வருகிறவற்றுல்தானே உபத்ரவமெல்லாம்? வெளியிலிருக்கிற ஒன்றை நம்முடைய தாக்கிக் கொள்வதற்குத்தான் நாயாய், பேயாய் திரிந்து ப்ரயாஸைப்பட வேண்டியிருக்கிறது. அப்புறமும் அந்த வெளி ஸமாசாரம் தங்கி நிற்குமா என்று கவலை. அது தானே அழியலாம், அல்லது வேறு யாராவது அதை அபஹரித்துவிடலாம். இதையெல்லாம் நினைத்தே கோபம், அழுகை, பயம் எல்லாம் உண்டாகின்றன. வெளி ஸம்பந்தமில்லாமல் மனஸ்பாட்டுக்குச் சிந்தனை பண்ணிக் கொண்டிருந்தால் இந்தக் கஷ்டமெல்லாம் இராதல்லவா? மனஸுக்கே டைரக்டாக சிந்தனு சக்தி இருப்பதால், அது அனர்த்த ஹேதுவான வேறு எதையும் சாராமல் தான் மாத்திரமாக இருந்துகொண்டு, தன் காரியத்தைப் பண்ணிக்கொண்டு போகட்டுமே என்றுல்—

இங்கேதான் மாயையின் திரிசமன் எல்லாம் இருக்கிறது. அதாவது—

மனஸுக்குத் தான் மாத்திரமாகத் தனித்து இருக்கவே தெரியாது. எப்போது அது தன்னிலேயே நிற்கிறதோ அப்போது தானே இல்லாமல் ஓடிப்போய்விடும். ஆத்மா மட்டுந்தான் அதற்கப்புறம் ப்ரகாசிக்கும். பரமேச்வர மாயை இப்படித்தான் அதை ரொம்பவும் விசித்ரமாகப் பண்ணியிருக்கிறது.

Koviloor Digital Library

மனஸ் அதுவேதான் சிந்திக்கிறது என்றாலும், எப்போதும் அது இன்னொன்றைக் குறித்தேதான் இப்படிச் சிந்தனைகளைச் செய்யக்கூடியதாக இருக்கிறது! வேறொன்றையும் குறிக்காமல் சிந்திப்பது என்பது மனஸுக்குத் தெரியாத கார்யம். மாயா நாடகத்தில் இது அதனால் முடியாத கார்யம். மனஸிலேதான் பலவிதமான எண்ணங்கள் உண்டாகின்றன. ஆனால் யோசித்துப் பார்த்தால் உங்களுக்கே தெரியும்—அது ஒவ்வொன்றும் வேறே எதையோ பற்றியதாகவேதான் இருக்கும். அதற்கு அன்யமான விஷயங்களைப் பற்றியே அதில் எண்ணங்கள் உண்டாகின்றன.

மனஸ் think பண்ணுவது (நினைப்பது) மட்டுமில்லாமல் feel பண்ணவும் (உணரவும்) செய்கிறது. இப்படி அது feel பண்ணுகின்ற, அதாவது அநுபவிக்கின்ற எல்லாமும் அதற்கு அன்யமான வஸ்துக்கள்தான். கோபம், ஸந்தோஷம், பயம், துக்கம் என்று பல உணர்ச்சிகள் மனஸிலேதான் எழுகின்றன என்றாலும் அவை வெளியிலிருந்து பெறும் அநுபவங்களைக் குறித்தே எழுகின்றன. கரண்டியால் சாதம், ஸ்பூனால் ஊறுகாய், உத்தரிணியால் ஆபோசன தீர்த்தம் என்று நாம் எடுத்துப் போட்டுக்கொள்கிறாற்போல, மனஸானது கண், காது, மூக்கு, நாக்கு, த்வக்கு (சர்மம்) முதலியவற்றால் வெளி விஷயங்களை எடுத்துப் போட்டுக் கொண்டு சாப்பிடுகிறது. அநுபோகம் செய்வது மனஸ் தானென்றாலும், அதற்குக் கருவியாக மனஸுக்கு இந்த்ரியங்கள் வேண்டியிருக்கிறது. அப்புறம் அந்த இந்த்ரியங்களுக்கும் வேறாகக் கண் பார்க்கிற காட்சி, காது கேட்கிற பாட்டு, மூக்கு மோந்து பார்க்கிற ஸென்ட், நாக்கு சப்புக் கொட்டுகிற ஊறுகாய், த்வக்கு புரள்கிற மெத்தை என்றிப்படிப் பல அந்நியமான வஸ்துக்கள் தேவைப்படுகின்றன.

இந்த்ரியங்களை ஏவாமல் மனஸாக எதையோ நினைத்து அநுபவித்துக் கொண்டிருக்கிறது என்னும்போதுகூட அது

Koviloor Digital Library

எதையோதான் நினைக்க வேண்டியிருக்கிறதே தவிரத் தன்னையே நினைத்து அதை அனுபவித்து நிறைவுபெற முடியவில்லை. மனஸ் கதை கல்பிக்கிறது, கவிதை புனைகிறது என்றாலும் அது வேறே பாத்ரங்கள், இயற்கைக் காட்சிகள், ரஸங்கள் ஆகியவற்றைக் குறித்தனவாகத்தானிருக்கின்றன. வேடிக்கை என்னவென்றால் ஸுகமும் துக்கமுமான லக்ஷோபலக்ஷம் இந்த்ரியானுபவங்களிலும் அந்த ஸுக துக்காதிகளை உண்மையாக அனுபவிப்பது மனஸுதானென்றாலும், இதில் ஒன்றைக்கூட அது தன்னிடமிருந்தே பெறமுடியாமல் வெளி வஸ்துக்களைக் குறித்தனவாகத்தான் பெறமுடிகிறது.

தனியாகத் தன்னை இன்னவென்று பார்த்துக்கொள்ள முயற்சி பண்ணினால் மனஸுக்குத் "தான்" என்றே ஒன்று இல்லை என்றுதான் தெரியும். தன்னுடைய ஸம்பந்தமுடையதாக, தனக்கு ஸந்தோஷம், தனக்குத் துக்கம், தனக்குப் பிடித்தது, தனக்குப் பிடிக்காதது, தனக்குத் தோன்றுகிற எண்ணம், தனக்குக் கிடைக்கிற அநுபவம் என்றெல்லாம் அநேகமிருப்பது மட்டுமே தெரிகிறது. அதனாலேயே இது எதுவும் அதன் தானான நிஜ ஸ்வரூபமில்லை என்று தெரிகிறது. இவை மனஸுடன் ஸம்பந்தமுடையவை, ஸம்பந்தமுடையவை மட்டுமே என்பதாலேயே இவையே மனஸில்லை என்றாகிவிடுகிறது. ராமன் என்ற ஒருத்தனின் ஸம்பந்தம் கொண்டவைகளாக ராமனுக்கு வீடு இருக்கிறது, ராமனுக்கு நிலம் இருக்கிறது, ராமனுக்குப் பத்னி புத்ரர் இருக்கிறார்கள், ராமனுக்கு புத்தி இருக்கிறது, ராமனுக்குப் பதவி இருக்கிறது என்றால் அந்த வீடு, நிலம், பத்னி, புத்ரர், புத்தி, பதவி எல்லாம் வேறு, அவன் வேறுதானே? இவையெல்லாம் இல்லாமலும் ராமன் என்று ஒருத்தன் இருக்க முடிகிறதுபோல, மனஸ் எதன் ஸம்பந்தமுமில்லாமல் இருக்க முடிகிறதா என்று பார்த்தால் அப்படி முடியவேயில்லை. மனஸ் என்றால் அது எதையாவது நினைக்காமல், அநுபவிக்காமல் இருக்க முடிவதேயில்லை. இந்த நினைப்பும், அநுபவ

Koviloor Digital Library

மும் அயன் வஸ்துக்களைக் குறித்ததாக அல்லாமல் இருக்க முடிவதும் இல்லை. அதாவது மனஸ் என்று வத்துவிட்டால் அது த்வைதத்தில்தான் ப்ரவ்ருத்திக்கும் (ஈடுபடும்).

தனித்து நிற்பது ஆத்மாவே

தனியாகத் தானுக அதைப் பிரித்துப் பார்க்கவே முடியாது. ஆகையால் மனஸை ஒருமுகப்படுத்தி தன்னிலேயே நிறுத்துவது என்பது வாஸ்தவத்தில், தனி ஸ்வரூபமே இல்லாத மனஸில் நிறுத்துவதாக இல்லாமல், எந்த வெளி ஸம்பந்தமும் இல்லாமல், இந்த மனஸின் ஸம்பந்தமும்கூட இல்லாமல் தன்னில் தானேயாய் நிறைந்திருக்கும் நிஜ நாமான ஆத்மாவில் நிற்பதுதான். மனேதீதமான ஆத்மாவை மனஸால் அநுபவிக்க முடியாது. ஆத்மாவை ஆத்மாவாலேயேதான், ஆத்மா ஒன்ருல் மட்டுமேதான், அநுபவிக்க முடியும். மனஸின் ஸ்வபாவமும் ஆத்மாவின் ஸ்வபாவமும் ஒன்றுக்கொன்று முழுக்க ஆப்போஸிட்டாக இருக்கிறது. மனஸுக்குத் தன்னைத் தெரியாது; தனக்கு வேருன வஸ்துக்கள்தான் அதற்குத் தெரியும். ஆத்மா தன்னை மட்டுமே தெரிந்துகொண்டிருப்பது வேறு வஸ்துக்களே அதற்குத் தெரியாது. மனஸ் த்வைதம்; ஆத்மா அத்வைதம்.

ஆனுலும் ஆத்மா இல்லாமல் மனஸ் இல்லை. ஆத்மாவே ஒருத்தனின் நிஜ ஸ்வரூபமான "தான்" என்ருல், அந்தத் "தானை" ஆச்ரயிக்காமல் ஜீவனிடம் எதுவாவது இருக்க முடியுமா என்ன? தானே இல்லாத ஒருத்தனிடம் மனஸ் என்று ஒன்று எப்படியிருக்க முடியும்? ஆத்மாதான் மாயையால் மனஸாகியிருக்கிறது. அதாவது மனஸையே 'தான்' என்று நினைக்கிற ஜீவனுக ஆகியிருக்கிறது என்று அத்வைத சாஸ்த்ரம் சொல்கிறது. இப்படி அநேக ஜீவர்களாகவும் ஒரே ஆத்மாதான் ஆகியிருக்கிறது என்று சொல்கிறது.

Koviloor Digital Library

மின்ஸார உபமானம்

இங்கே அத்யாத்ம சாஸ்த்ரத்துக்கு ஸயன்ஸ் உபகாரம் செய்து உபமானம் கொடுக்கிறது! அடிக்கடி சொல்லும் உபமானம்தான். அதாவது: ஒரே எலெக்ட்ரிஸிடி வேறே வேறே பல்புகளில் நூறு 'வாட்', அறுபது 'வாட்' என்றும், பச்சை, சிவப்பு முதலான பல நிறங்களிலும்; டேப் ரிகார்டரில் சப்தமாகவும்: ஏர் - கண்டிஷனரில் ஜில்லிப்பாக வும்; ஹீட்டரில் சூடாகவும்—இப்படிப் பல தினுஸாக வெளிப் படுகிறது. எலெக்ட்ரிஸிடி இல்லாமல் இந்த எதுவும் வேலே செய்வதில்லே. ஆனாலும் இதை வைத்து எலெக்ட்ரிஸிடி இத்தனேவாட், அது இன்ன நிறம், அது இன்ன பாட்டுப் பாடு வது, அது இத்தனை சூடாக அல்லது குளிர்ச்சியாக இருப்பது என்று முடிவு பண்ணலாமா? இந்த எதுவுமாக இல்லாமல், இந்த எல்லாவற்றையும் இப்படியிப்படி ஆக்கிக் கொண்டு ஒரே மின்ஸார சக்தி பல ரூபங்களில் பல கார்யங் களே ஆக்குவிப்பது போல்தான் ஒரே ஆத்மா பலவிதமான ஜீவ ஜந்துக்களில் பலவிதமான மனப்போக்கு, சக்தி முதலிய வற்றை ஏற்படுத்திப் பலவிதமான கார்யங்களேயும் செய்துகொண்டிருக்கிறது. ஆனல் இந்த மனேபாவங்கள், சக்தி ஸாமர்த்யங்கள், கார்யங்கள் எதுவாவது அதற்குரிய லக்ஷணங்களா என்றுல் அதுதான் இல்லே. இவற்றை அதன் லக்ஷணமாகச் சொல்வது பச்சை பல்பைப் பார்த்துவிட்டு எலெக்ட்ரிஸிடி பச்சை நிறமானது என்று சொல்கிறமாதிரி தான்! டேப்ரிகார்டர் கேட்டுவிட்டு எலெக்ட்ரிஸிடிக்கு அஞ்சு கட்டை ச்ருதி என்கிற மாதிரிதான்!

பல எலெக்ட்ரிஸிடிகள் இல்லே. ஒரே எலெக்ட்ரிஸிடி தான். அத்வைதம்! அதுவே அநேக வஸ்துக்களில் அநேக கார்யங்களேச் செய்து த்வைதங்களுக்குக் காரணமாகிறது. இப்படி ஒரே ஆத்மாதான் மாயாசக்தியால் ஸகல ஜீவ - ஜட ஸமூஹவ்யாபாரங்களுக்கும், அதாவது ப்ரபஞ்ச நாடகம் முழுவதற்கும் காரணமாயிருக்கிறது.

Koviloor Digital Library

பரமாத்ம - ஜீவாத்மாக்கள்

ஒரே ஆத்மாதான் இப்படி மாயையால் எல்லாவற்றை யும் இருக்கிற மாதிரி காட்டுவது என்றால் அப்போது ஜீவாத்மா, பரமாத்மா என்று வேறு வேறாக இரண்டும் இருக்க முடியாது என்றாகிவிடுகிறது. மற்ற எல்லா மாயத் தோற்றம் மாதிரியேதான் ஜீவன் என்கிறவனும் ஆத்மாவிலே தோன்றிய ஒன்று. பல ஜீவர்கள் இருந்தாலும், ஒவ்வொரு வருக்கும் ஆத்மா என்று தனியாக ஒன்று இல்லாமல், ஏக ஆத்மாவேதான் எல்லாருக்கும் நிஜ ஸ்வரூபமாயிருக்கிறது.

தனி ஜீவன் என்று எடுத்துக் கொள்ளும்போது அவனுக்குத் தலையிலுள்ள மயிரிலிருந்து ஆரம்பித்து கால் நகம்வரை ஒவ்வொன்றும் ஒரு விதமான பல அவயவங்கள், ஒவ்வொன்றும் ஒவ்வொரு விதமான கார்யத்தைச் செய்யும் பலவான கர்மேந்த்ரிய ஞானேந்த்ரியங்கள், சதை - கொழுப்பு - எலும்பு - ரத்தம் முதலான ஸப்த தாதுக்கள், லங்ஸ் - ஹார்ட் - குடல் முதலானவை, சித்தம் - புத்தி - மனஸ் - அஹங்காரம் என்று எத்தனையோ இருந்தாலும் இது அத்தனைக்குமாக ஒரே உயிர்தானே இருக்கிறது? அந்த உயிர் போய்விட்டால் இந்த அத்தனையும் போய்விடு கின்றன. நான் மேலே சொன்னவற்றில் சித்தம் - புத்தி - மனஸ் - அஹங்காரம் ஆகியவை உயிர் போனவுடன் ஒரு உடம்பை விட்டு மட்டும் போகின்றன; இன்னொர் உடம்பை அடைகின்றன. மற்றவை, அதாவது தேஹமாகப் பல கார்யங்களைச் செய்த அத்தனை அவயவங்களும் உயிர் போன பிறகு அழிந்தே போய்விடுகின்றன. எனவே இத்தனை த்வைதங்களுக்கும் மூலமானது அந்த ஏகமான உயிர் என்று தெரிகிறது.

இப்படியேதான் அநேகமான உயிர்களாகத் தெரியும் அத்தனை ஜீவர்களுக்கும் மூலம் ஒரே ஆத்மாதான். ஜீவாத்மா, ஜீவாத்மா என்று பல ஆத்மாக்கள் இல்லை. ஆத்மா ஒன்றுதான். பரமாத்மா என்பதும் அதுதான்.

Koviloor Digital Library

பரமாத்மா: ஜகத் காரணன், அந்தர்யாமி

ஆனாலும் நெடுங்காலமாக நடைமுறையில் பரமாத்மா, ஜீவாத்மா என்று இரண்டு வழங்கிவருகிறது. நடைமுறை லோக நாடகத்தை வைத்து இப்படிப்பட்ட பாகுபாடு ஏற்பட்டிருக்கிறது.

லோகத்திலே என்ன பார்க்கிறோம்? ஜட லோகங்களும் ப்ரக்ருதியும் பலவிதமாகத் தொழில்படுகிறது. ஸூர்யனைச் சுற்றி க்ரஹங்கள் வருகின்றன. உலகத்தைச் சுற்றிச் சந்த்ரன் வருகிறது. இதனால் பகல் இரவு, அயனங்கள், பருவக் காற்றுகள் முதலியன உண்டாகின்றன. ஸூர்ய சக்தியில் பயிர் பச்சை வளர்கின்றன. இப்படிப் பல சேர்ந்து மநுஷ்ய ஜீவர்களின் வாழ்க்கைக்கு ஏற்றதாக உலகத்தை ஆக்கித் தருகின்றன. மநுஷ்யர்களிலும் மற்ற ஜீவ ஜந்துக்களிலும் ஸ்த்ரீ புருஷர்கள் சேர்ந்து இன வ்ருத்தி செய்துகொள்கிறார்கள். இன்னம் புத்தி, பலம் முதலியவற்றால் என்னென்னவோ செய்கிறார்கள். ஒவ்வொருத்தர் ஒவ்வொரு விதமான புத்தி, பலங்களைப் பெற்றிருக்கிறார்கள். பூர்வ கர்மா என்று அவரவர் பண்ணியது அவர்களை ஜன்ம ஜன்மாவாகப் பிடித்துக் கொண்டு பலனை அநுபவிக்கும்படிப் பண்ணுகிறது. இப்படி எத்தனையோ ஸமாசாரங்கள் ஒரு ஆர்டரில் ஒன்று சேர்ந்திருப்பதில்தான் நடைமுறை லோக வாழ்க்கை என்பது ஏற்பட்டிருப்பது தெரிகிறது. அதனால் இதை எல்லாம் படைத்து, இன்னின்ன மாதிரி நடத்தி வைத்துக் கொண்டிருக்கிற ஒருத்தன் இருக்கவேண்டும் என்று தெரிகிறது. அவனைத்தான் பரமாத்மா என்பது. 'பரம்' என்றால் உயர்ந்த, ச்ரேஷ்டமான என்று அர்த்தம். ஸகல ஜகத் காரணனாகவும், அதன் கார்யங்களுக்கு அந்தர்யாமியான கர்த்தனாகவும் உள்ள பேருயிராக அவன் இருப்பதால் ,பரமாத்மா' என்று சொல்கிறார்கள்.

அத்வைத சாஸ்த்ரங்களை அநுஸரித்துப் பேசிக்கொண்டு போகிறபோது, ஜீவனின் சரீரம், இந்த்ரியம், அப்புறம் மனஸ்

Koviloor Digital Library

சித்தம் முதலிய அடங்கிய அந்தஃகரணம், அதற்கும் அப்புறம் மநோ இந்த்ரிய சேஷ்டையில்லாத வெற்றுவெளி யான ஆத்மா என்று சொல்லிக்கொண்டு போய்விடும்படி ஆகிறது. பல ஜீவர்களும் ஒரே மாதிரியான அநுபவங்களைப் பெறும்படியான ஜகத் ஒன்று இருக்கிறதே! அதன் தோற்றம் எப்படி என்பதைச் சொல்ல இங்கே இடமேற்படவில்லை. இதிலே அத்வைதிகளுக்கிடையிலேயே தத்வங்களை ரொம்ப வும் வித்யாஸப்படுத்திக்கொண்டு போகும்போது வித்யாஸ மான அபிப்ராயங்கள் இருக்கின்றன. (எனவே அத்வைதி களின்) பொதுக் கருத்தை 'ஸிம்ப்ளிஃபை' பண்ணிச் சொல் கிறேன் :

மனஸ் இருப்பதால்தான் ஜீவனுக்கு ஜகத்தின் அநுபவம் ஏற்படுகிறது. ஜன்மாக்கள், உபத்ரவங்கள் எல்லாம் இதிலிருந்தே ஏற்படுகின்றனவாதலால் மனஸை இல்லாமல் பண்ணிக்கொண்டு ஆத்மாவாய் இருந்துடணும் என்று சொன்னேன். ஒரு தனி ஜீவனுக்கு ஜகத்தின் அநுபவம் மனஸினால் ஏற்படுகிறது. அதனால் மனஸை அடக்கி அந்த அநுபவத்தைப் போக்கிக்கொண்டு ஆத்மாநுபவம் அடைய வேண்டும் என்பது ஸரி. ஆனால் இவன் தனி மனஸை அடக்கினவுடன் ஜகதநுபவம் இவனுக்குப் போகிறதே ஒழிய, அந்த ஜகத்தே இல்லாமல் போய்விடுகிறதா என்ன? மற்ற ஜீவர்கள் அவர்களுடைய மனஸ்களால் அதை அநுபவிக்கத் தானே செய்கிறார்கள்? ஜகத்தின் அழிவு இவன் மனஸினால் ஏற்படவில்லை என்பது போலவே, ஜகத்தின் தோற்றமும் இவனுடைய தனி மனஸின் கல்பனையில்லை என்பது ஸ்பஷ்டமாகிறது. இவனுடைய மனோ கல்பனையே ஜகத் என்றால், மற்ற ஜீவர்களுக்கும், ஸகல ஜீவர்களுக்கும் ஜகத் என்பது ஒரே மாதிரியாக, **objective reality** என்ற பொது வான வெளி உண்மை மாதிரியான ஒன்றாக இருக்காது. க்ரஹ நக்ஷத்ராதிகளின் ஸஞ்சாரத்திலிருந்து அணுவுக் குள்ளே எலெக்ட்ரான்-ப்ரோடான் ஸஞ்சாரம் வரையிலாக நடக்கிற எத்தனையோ விசித்ரங்களையெல்லாம் விசித்ரம் என்றாலும், ஒவ்வொன்றும் இஷ்டப்படி நடக்காமல் அநேக

Koviloor Digital Library

விதிகளின் படியே இவை நடப்பதைக் கவனித்தோமானுல் இவ்வளவையும் ஏதோ ஒரு தனி ஜீவ மனஸ் பண்ணினதாகச் சொல்வதற்கில்லே.

இந்த மனஸினுல்தான் ஒரு ஜீவன் கர்மாக் கட்டில் மாட்டிக்கொண்டு அவஸ்தைப்படுகிருன் என்பதை கவனித்தோமானுல் போதும்! எல்லாம் மனே கல்பனே என்ருல் எங்கேயாவது ஒரு ஜீவன் தானே தனக்கு இப்படி அவஸ்தையைக் கல்பித்துக் கொள்வானு? எல்லாம் மனே கல்பிதமாயிருந்து, (இப்போது நமக்கு நன்ருகத் தெரிகிறபடி) பாபங்களேப் பண்ணுவதிலேயே மனஸுக்கு அதிகமான ப்ரவ்ருத்தியும் இருக்கிறதென்ருல், அப்போது அந்த மனஸே இந்தப் பாபங்களுக்காக அநேக தண்டனேகளே அநுபவிக்க வேண்டுமென்று தன்னேயே கஷ்டப்படுத்திக் கொள்ளுமா என்ன?

இதெல்லாவற்றுக்கும் மேலாக, ஒரு ஜீவனுக்கு அந்யமாக அநேக ஜீவர்கள் அவனுக்குத் தெரிகிருர்களே, அவர்களேயெல்லாம் இவன் மனஸா படைத்தது? அப்படிப் படைத்திருந்தால் அதில் யார் எப்படிப்பட்டவர் என்று இவனுக்குத் தெரியவேண்டுமே! ஆனுல் நடைமுறையில் கொஞ்சங்கூட அப்படிக் காணுேமே! எத்தனே பழகினுலும் ஒருத்தர் எப்படிப்பட்டவர் என்று தீர்மானம் செய்து கொள்ள முடியாமலிருக்கிறதே! யோக்யர் என்று நினேத்து பலரிடம் ஏமாந்து போகிருேம். தப்பானவர் என்று நாம் நினேத்த ஒருவர் யோக்யர் என்று அப்புறம் தெரிந்து கொள்கிருேம்.

இன்னென்று: உங்கள் மனஸின் கல்பனேதான் மற்றவர் என்று நீங்கள் நினேத்தால், அவர்களில் ஒவ்வொருவரும் அவனுடைய மனே ஸ்ருஷ்டிதான் நீங்கள் என்று நினேக்கலாம்! எல்லா ஜீவர்களும் ஏதோ ஒரு ஜீவனின் மனே கல்பனே என்ருல், இந்த ஒரு ஜீவன் தன்னுடைய மனஸை அழித்து ஆத்மாவாகி முக்தி அடைந்தவுடன், மற்ற அத்தனே பேருமே இல்லாமல் அல்லவா போய்விடவேண்டும்?

Koviloor Digital Library

ஆனால் நடைமுறையிலோ எத்தனையோ மஹான்கள் மனோநாசம் செய்து அத்வைத முக்தி அடைந்திருக்கிறார்களென்றாலும், ஜீவ ப்ரபஞ்சமும் ஜட ப்ரபஞ்சமும் இருந்து கொண்டுதானே இருக்கின்றன?* இப்படி ஆலோசித்துக் கொண்டு போனால் மற்ற ஜீவ ஜகத்துக்களால் ஒருவன் பெறுகிற அநுபவத்துக்குத்தான் அவனுடைய மனஸ் காரணமே தவிர, அந்த ஜீவ-ஜகத்துகளுக்கே அது காரணமில்லை என்று தெரியும். ஆனாலும் இவற்றுக்கெல்லாம் ஒரு காரண வஸ்து இருந்தாலொழிய இவை தோன்றியிருக்க முடியாது. இத்தனை சன்ன பின்னலிலும் அநேக விதிகளைத் துளிக்கூட வழுவாமல் அநுஸரிப்பதாகவும் ஜகத் வ்யாபாரம் இருக்க முடியாது.

ஈச்வரன் அல்லது ஸகுண ப்ரஹ்மம்

அந்தக் காரண வஸ்து என்ன? அதுதான் மாயாசக்தி. ப்ரஹ்மத்தை இப்படிப் பலவான ஜீவர்களாகவும் ஜகத்தாகவும் காட்டிக்கொண்டிருக்கும் சக்தி.

தனக்கு அந்யமாக எதுவுமே இல்லாத, இருக்கமுடியாத வஸ்துவே ப்ரஹ்மமாதலால், இந்த மாயா சக்தியும் அதற்கு வேறாக இருக்க முடியாதுதான். அப்படியிருந்துவிட்டால் ப்ரஹ்மமே எல்லாவற்றுக்கும் மூலாதாரம் என்பது பொய்யாகிவிடும்! இதிலிருந்து தெரிவது என்னவென்றால், ப்ரஹ்மமே தான் மட்டுமாக எந்தத் தொடர்பும் இல்லாமலிருப்பதோடுகூட, தன்னுடைய மாயாசக்தி என்பதான ஒன்றிடம் தொடர்பு கொண்டாற்போலவும் ஒரு நிலை இருக்கிறது. தான் மட்டுமாகத் தனித்திருப்பதே நிர்குண ப்ரஹ்மம் என்பது. மாயையோடு கூடியிருக்கும்போது அதுவே ஸகுண ப்ரஹ்மம் எனப்படுகிறது. குணம் என்றால் ப்ரத்யேக லக்ஷணம். தனித்தன்மை என்பது. எந்த குணமும் இல்லாதது நிர்குணம். குணங்களுள்ளது ஸகுணம். ஈச்வரன்

---

* இவ்விஷயம் இவ்வுரையில் மீண்டும் எடுத்துக்கொள்ளப்படும்,

Koviloor Digital Library

என்பது ஜகத் வ்யாபாரம் செய்கிற ஸகுண ப்ரஹ்மத்தைத் தான்.

ஒரே ஆத்மாவையே, ஜகத்தில் படைக்கப்பட்டு ஆட்டி வைக்கப்படுபவனாக இருக்கும்போது ஜீவாத்மா என்றும்; அப்படிப் படைத்து ஆட்டிவைக்கிற ஸகுண ப்ரஹ்மமான ஈச்வரனாக இருக்கும்போது பரமாத்மா என்றும் சொல்கிறோம்.

ஈச்வரனாக மாயா சக்தியுடன் கூடியுள்ளபோது (நிர்குண) ப்ரஹ்மம் ஜகத்தைக் கல்பிக்கிறது என்றால் அப்போது இந்த ஈச்வரனை மஹா மனஸ் என்று சொல்லலாம். அல்பமான ஜீவ மனஸ் இருக்கிறாற்போல, கார்யங்களை நடத்தி வைக்கிறாற்போல, ஈச்வரனான பரமாத்மாவின் சிந்தனையிலேயே ஜகத் உண்டாகிறது, ஜகத் வ்யாபாரத்தை அவனே நடத்துகிறானென்றால் 'மஹாமனஸ்' என்று சொல்லலாம்தானே? எல்லா ஜீவ மனஸ்களுக்கும் மூலமான மஹா மனஸ் பரமாத்மா என்று சொல்லலாம். Cosmic Mind என்கிறார்களே, அது!

இந்த மனஸுக்கும் நம்முடைய ஜீவமனஸுக்கும் உள்ள பெரிய வித்யாஸம் நம்முடைய மனஸுக்கு ஆத்மாவைத் தெரிய முடியாது. மனஸ் அழிந்தால்தான் ஆத்மா விளங்கும். ஆனால் ஈச்வரனோ மஹாமனஸாயிருந்து கொண்டே ஆத்மஞான ரூபியாகவும் இருப்பவன். முன்னேயே பார்த்த ஸமாசாரம்.

வேதாந்த "ஈச்வரன்" சிவனல்ல

ஈச்வரன் என்றவுடன் சிவன் என்று அர்த்தம் பண்ணிக் கொண்டு விடக்கூடாது. பொதுவிலே ஈச்வர சப்தம் சிவனுக்குத்தான் உரியதாக இருக்கிறது. ஈச்வரன் கோவில், பெருமாள் கோவில் என்றே சிவ விஷ்ணு ஆலயங்களை வித்யாஸப்படுத்திச் சொல்வதாயிருக்கிறது. வைஷ்ணவர்கள் மஹாவிஷ்ணுவை 'ஈச்வரன்' என்று சொல்லாமல் 'பகவான்', 'பெருமாள்' என்று சொல்கிறார்கள். ('பகவான்'

Koviloor Digital Library

என்பதன் அடியாகப் பிறந்த) பாகவதன் என்ருல் விஷ்ணு பக்தன் என்றே அர்த்தம் ஏற்பட்டிருக்கிறது. ஆனுல் பழைய வேதாந்த சாஸ்த்ரத்தில்-ராமாநுஜரின் விசிஷ்டாத்வைத வேதாந்தம் உள்படத்தான் சொல்கிறேன்—இப்படி இல்லை. ராமாநுஜ மதம் உள்பட எந்த வேதாந்த சாஸ்த்ரமானுலும் அதில் ஜீவ ஜட ஸமூஹப் ப்ரபஞ்சத்தையெல்லாம் ஆக்கி அளித்து அழிக்கிற பரமாத்ம சக்தி எதுவோ அதை Cosmic Mind என்றேனே, அதை, "ஈச்வரன்" என்ற பெயரால்தான் குறிப்பிடுவார்கள். மஹா விஷ்ணுதான் இந்த மஹா சக்தி என்று ஸித்தாந்தம் பண்ணினவர்களும் அவனை "ஈச்வரன்" என்றே குறிப்பிட்டார்கள்.

பிற்பாடு வைஷ்ணவர்கள் "ஈச்வரன்" என்று பெயர் வைத்துக்கொள்வதை நிறுத்திவிட்டாலும், ஸ்ரீ வைஷ்ணவ தர்சனத்தின் (ஸித்தாந்தத்தின்) முதல் ப்ரவர்த்தகர் (ஆசார்யர்) என்று கருதப்படும் நாதமுனிகள் என்பவரின் தகப்பனுர் பெயரே ஈச்வர பட்டர் என்பதுதான். ராமாநுஜருக்கும் முந்தி அந்த ஸித்தாந்தத்தில் இரண்டு பூர்வாசார்யர்களைச் சொல்வார்கள். ஆளவந்தார் என்பவர் ஒருவர். அவருக்கும் முந்தி இருந்தவர் நாதமுனிகள். நாதமுனிகளின் பேரர்தான் ஆளவந்தார். நாதமுனிகளின் தகப்பனுருடைய பெயர் ஈச்வர பட்டர் என்பது. எந்த ஒரு தெய்வத்தையும் குறிப்பிடாமல் பொதுவில், 'கடவுள்', 'ஆண்டவன்' என்கிருற்போல, ஜீவலோகத்தை ஆட்டி வைத்துக்கொண்டிருக்கும் சக்தியையே 'ஈச்வரன்' என்பது.

ஈச்வர உபாஸனை

ஆகவே ஜீவனின் இந்த்ரியம், மனஸ் ஆகியவற்றுக்கு அப்பால் ஆத்மா என்றே அத்வைத நூல்களில் பெரும்பாலும் சொல்லிக்கொண்டு போனுலும், ஜீவ மனஸுக்கு மேலேயும், (ஜகத் என்பது அடிபட்டுப்போய் எந்தக் கார்யமும் நினைப்பும் இல்லாமலிருக்கிற) ஆத்மாவுக்குக் கீழேயும் ஜகத் காரணமான, ஜகத் வ்யாபாரத்தை

Koviloor Digital Library

நடத்துவதான ஒரு பரமாத்ம சக்தி இருக்கிறது. ஜீவனுக்குக் கர்மாப்படி ஜன்மாக்களைத் தந்து ஆட்டிவைத்துக் கொண்டிருப்பது அந்தப் பரமாத்ம சக்தியே. மனஸானது அந்தப் பரமாத்மாவான மஹா மனஸை உபாஸனை பண்ணினபின் தான் ஐகாக்ரியம் அடைந்து (ஒருமுகப்பட்டு), அப்புறம் அதற்கும் ஆதாரமாயிருக்கும் ஆத்மாவிலே போய்க் கரையமுடியும். இப்படித்தான் ஆசார்யாள் பாதை போட்டுக் கொடுத்திருக்கிறார்.

மனஸ் சுத்தமாவதற்காக சாஸ்த்ரப்படியான கர்மாவைப் பண்ணவேண்டும்; பலவற்றிலே சிதறிக் கொண்டிருக்கிற மனஸ் ஒருமுகப்படுவதற்காகத் தன்னைப் பண்ணின மனஸான ஈச்வரனை உபாஸிக்கவேணடும்; இப்படிச் சுத்தப்படுத்தி ஒருமுகப்படுத்திய பிறகுதான் அது தன் ஸ்வரூபத்தையே ஆத்மாவில் இழப்பதற்குரிய பக்வத்தை அடையும்; அப்போதுதான் ஞான மார்க்கத்தில் ஆத்ம விசாரம் செய்யவேண்டும் என்று ஆசார்யாள் வைத்திருக்கிறார்.

சின்ன மனஸ் அந்தப் பெரிய மனஸை நினைத்து, அதனிடம் பணிவோடு பக்தி பண்ணிக்கொண்டு நின்றால் அந்தப் பெரிய மனஸ் இதற்கு அநுக்ரஹம் செய்ய நினைக்கிறது. "இதை மாயையிலிருந்து விடுவிக்கலாம்" என்று அருளோடு நினைத்து, சின்ன மனஸினனான ஜவனுக்கு அத்வைதத்திலே ஆசையை, பிடிப்பை ஏற்படுத்தி இவனை ஆத்ம மார்க்கத்தில் போகப் பண்ணுகிறது. ஈச்வரன் என்கிற அந்த **Cosmic Mind**-ன் அநுக்ரஹத்தால்தான் ஒரு ஜீவனுக்கு அத்வைதத்தில் ருசியே ஏற்படுகிறது என்று அத்வைத சாஸ்த்ரத்தில் சொல்லியிருக்கிறது.

ஈச்வராநுக்ரஹாதேவ பும்ஸாம் அத்வைத வாஸநா*

---

* தத்தாத்ரேயரின் "அவதூத கீதை" முதல் ச்லோகம்,

Koviloor Digital Library

ஆனபடியால் ஜீவாத்மாவின் ஸார பூதமான அடிப் படை உண்மை நிலை என்ன என்று பார்த்துக்கொண்டே போகிறபோது சரீர இந்த்ரியங்கள், அப்புறம் மனஸ், அப்புறம் அடி ஆதாரமாக ஆத்மா என்று சொல்லி விட்டாலும், ஜீவ மனஸுக்கு அப்புறம் அநேக ஜீவர்களை யும் ஜகத்துக்களையும் கல்பிப்பதான ஈச்வரன் என்ற இன்னொரு பெரிய மனஸ் வருகிறது.

ஸத்ய ஆராய்ச்சி—ஜீவ கோணத்திலும், ஜகத் கோணத்திலும்

ஆனால் இதை விட்டுவிட்டாற்போல, இந்த்ரியம்—அதற்கு ஆதாரமான மனஸ் (ஜீவனை ஒரு தனி ஆஸாமி போலக் குறுக்கிக் காட்டுவதே இதுதான்)—அந்த மனஸுக்கு ஆதாரமான ஆத்மா என்று சொல்லிக்கொண்டு போவதற்குக் காரணம், ஜீவனுடைய நிலையிலிருந்து அவனு டைய உள் ஆதாரத்தைப் பார்த்துக்கொண்டு போவது தான். சரீரம்தான் முதலில் தெரிகிறது. இது ஜீவனுடைய தனிப்பட்ட சரீரம்தான். அப்புறம் அதற்குள்ளே அதை ஆட்டிவைக்கும் இந்த்ரிய ருசிகள் தெரிகின்றன. இந்த இந்த்ரிய ருசிகளும் ஒரு தனி ஜீவனுக்கு உரியவைதான். அப்புறம் இதற்கும் உள்ளேயிருந்து இந்த ருசிகளை உண்டாக்கி ஆட்டிவைப்பதான மனஸ் என்பது தெரிகிறது. இதுவும் தனிப்பட்ட ஜீவனைச் சேர்ந்ததுதான்; Individual mind-தான். கடைசியிலே அடையப்போகிற ஆத்மாதான் ஜீவனுடைய ஸார பூதமான ஆதார ஸத்யம். அதனாலே, அதை, ந்யாயமாகப் பார்த்தால், தனி ஜீவனுடையது என்று சொல்லவே கூடாது என்றாலும்—தனி ஜீவத்வம் அடிபட்டுப் போனால்தான் அந்த ஆத்மாவின் அநுபவமே உண்டாகும் என்னும்போது அதை இவனுடையது என்று சொல்வது ந்யாயமில்லை என்றாலும்—அதுதான் தன்னுடைய உண்மைநிலை என்று ஒரு 'உடைய' போட்டு ஜீவன் நினைப்ப தால், எதற்குமே அது உடைமையாயிருக்க முடியாதாயினும் அதையும் நம்முடைய பாவனையைக் கொண்டு தனி ஜீவனைச்

Koviloor Digital Library

சேர்ந்த விஷயமாகவே வைக்க இடமேற்படுகிறது. இப்படியாக ஒரு 'இன்டிவிஜுவல்' (தனிப்பட்ட) ஜீவனின் ஸொந்தமான உள்தத்வம் என்று அவனை மையப்படுத்தி உள்ளே உள்ளே போய்ப் பார்க்கிறபோது இந்த்ரியங்களைக் கொண்ட சரீரம்—இந்த்ரியங்களை ஆளும் மனஸ் (மனஸை அங்கமாகக் கொண்ட அந்தஃகரணம்)—அதற்கும் ஆதாரமான ஆத்மா என்றே போய் முடிந்துவிடுகிறது. இவனொருத்தனையே ஆராய்ந்துகொண்டு போனதால், இவனை மட்டுமில்லாமல் மற்ற ஜீவ ப்ரபஞ்சத்தையும், ஜட ப்ரபஞ்சத்தையும் கல்பித்த ஈச்வரனை இங்கே மனஸுக்கும் ஆத்மாவுக்கும் நடுவே கொண்டுவராமலே சொல்லிக்கொண்டு போகும்படியாக ஆகிறது.

ஆனால் ஸத்ய தத்வத்தை ஜீவனுடைய நிலையிலிருந்து, ஜீவனுடைய point of view-விலிருந்து பார்க்காமல், ஜீவ ஜட ப்ரபஞ்சமான ஜகத்தின் கோணத்திலிருந்து ஆராய்ந்து கொண்டு போனால் அப்போது ஈச்வர தத்வம் வந்துவிடும்.

ஜகத்துக்கு ஆதார ஸத்யம் என்பதாக எந்த மூலவஸ்து ஆராயப்படுகிறதோ அதற்குத்தான் "ப்ரஹ்மம்" என்று பெயர். "ப்ருஹ்" என்றால் "பெரிதானது". பெரியதிலெல்லாம் இதுவே பெரியது என்பதால் "ப்ரஹ்மம்" என்று பெயர். ஸகல ஜீவ—ஜட லோகங்களுக்கும், அதாவது சேதனமான கோடானு கோடிவித ஜீவ ஜந்துக்களுக்கும், எத்தனை விஸ்தாரம் என்று கணக்குப் பண்ணுவதற்கே தலை சுற்றுகிற மாதிரி கோடி கோடி கோடி மைல்கள் பரவியிருக்கிற கோடாநுகோடி நக்ஷத்ராதிகளுக்கும் எது காரணமோ அதுதானே பெரிசில் எல்லாம் பெரிசு? அதனால் "ப்ரஹ்மம்" என்று பெயர். இப்படி அதுவே ஸர்வகாரணம், ஸர்வாதாரம், ஸகலத்துக்கும் மூலம் என்றால் அப்போது ஜீவனுக்கும் அதுவேதானே ஆதாரமான மூலவஸ்துவாக இருக்கவேண்டும்? இப்படி ஜீவனுக்கு ஆதாரமாயிருப்பதைத் தானே அவனுடைய நிஜ ஸ்வரூபமான ஆத்மா என்பதாகச் சொன்னோம்? அதனாலே ஆத்மாவேதான் ப்ரஹ்மம் என்று

Koviloor Digital Library

ஆகிவிடுகிறது. ஜீவனுடைய 'பாயின்ட்'டிலிருந்து அவனுக்கு அடிப்படையான ஸத்யம் எது என்று பார்த்துக்கொண்டே போய் நாம் முடிவாக அடைந்த ஆத்மா எதுவோ அதையே தான் ஜகத்தின் 'பாயின்ட்டி'லிருந்து அதற்கு எது அடிப் படை என்று பார்த்துக்கொண்டு போகும்போது 'ப்ரஹ்மம்' என்கிறோம் என்று தெரிகிறது.

ஆத்மாவே ப்ரஹ்மம் என்று சொல்வதைவிட ப்ரஹ்மமே ஆத்மா என்பதுதான் பொருத்தமானது. ஆத்மாவும் ப்ரஹ்மமும் ஒன்றேதான் என்றாலும்கூட, ஒரு ஜீவனைக் குறித்ததாகவே நினைக்கப்படும் ஆத்மாவை ஸர்வ ஜீவ - ஜட காரண வஸ்துவான ப்ரஹ்மம் என்பதைவிட, "ப்ரஹ்மமேதான் ஆத்மா: அதாவது, ஸகல ப்ரபஞ்சங்களா கவும் எது தோன்றுகிறதோ, அதுவேதானப்பா நீயாகவும், நானாகவும், அவனாகவும் இப்படி நாநா ஜீவர்களாகத் தோன்றுவது" என்று சொல்வதுதான் பொருத்தம். அது தான் அழகு. ஜீவனாகத் தன்னை நினைத்துக்கொண்டிருப்பவன் ப்ரஹ்மமேதான். இவனுடைய ஆத்மாதான் ஸர்வாத்மா. ஸர்வ ஆத்மா என்றால் பல ஆத்மா இல்லை. ஆத்மா ஒன்று தான். ஸர்வத்துக்கும் அந்த ஒன்றே ஆத்மா. ஸர்வ ஜீவ ஜகத்துக்களாகவும் அந்த ஒன்றே மாயா சக்தியாலே வேஷம் போட்டுக்கொண்டு தோன்றுகிறது. இப்படிச் சொல்கிற போதுதான், அதாவது ஜீவனின் 'பாயின்ட்'டில் ஆதாரமென்ன என்று பார்க்காமல், ஜகத்தின் 'பாயின்ட்' டிலிருந்து ஆதாரத்தை ஆராய்ச்சி பண்ணும்போதுதான், ஆத்மாவுக்கு அடுத்தாற்போல், அது மாயையாலே போட்டுக்கொண்டுள்ள ஈச்வர ரூபமான Cosmic Mind வந்துவிடும். அப்புறம்தான் அது சின்ன மனஸ்களான நம் மனஸ்களை உண்டுபண்ணி, நமக்குத் தனி அஹங்காரத்தைக் கொடுத்து ஜீவர்களாக ஆக்குவது. இந்த ஈச்வரனேதான் இந்த்ரிய மூலமாக ஜீவ மனஸ் பலவித அநுபோகங்களை எதிலிருந்து பெறுகிறதோ அந்த ஜகத்தையும் தோற்று விப்பது.

இன்னொரு தினுஸாகச் சொல்கிறேன்,

Koviloor Digital Library

ஜீவ ஆத்மா, ஈச்வர ஆத்மா

ஜீவனுக்கு ஆதாரம் என்ன என்று பார்த்தால் அவனுடைய மனஸ், அப்புறம் ஆத்மா என்று போகிற மாதிரி, ஜகத்துக்கு ஆதாரம் என்னவென்று பார்த்தால் இதையெல்லாம் பண்ணி, ஒன்றோடொன்று பின்னி வைத்து ஆட்டிக்கொண்டிருக்கிற ஈச்வரன் என்று தெரிகிறது. அப்புறம் ஆலோசித்தால் அவனுக்கும் ஆதார அடிப்படையாக ஒன்றும் பண்ணாமல் தானாக இருந்துகொண்டிருக்கிற ஒரு ஆதார ஸத்யம் இருப்பதாகத் தெரியவரும். ஜகத்தைப் பண்ணுகிறவன் ஈச்வரன் என்னும்போதே, அவன் அதைப் பண்ணாமல் தானாக இருக்கிற நிலை என்ன என்பதாக அவனுடைய நிஜ ஸ்வரூபத்துக்கு ஒரு basis-ஐத் தேடவேண்டியதாகத்தானே இருக்கிறது? ஜீவ மனஸுக்கு இதே மாதிரி ஆதாரத்தைத் தேடிக்கொண்டு போனபோதுதான், "ஸதாவும் எதையாவது பண்ணிக் கொண்டேயுள்ள இந்த மனஸுக்கு ஆதாரமாக எதையும் பண்ணாமல் வெறுமே இருந்துகொண்டு மட்டும் உள்ள ஆத்மா இருக்கிறது; அதன் இருப்பு தூக்கம், மூர்ச்சை முதலியவற்றால் 'நெகடிவ்' ஆகவும், ஸமாதியநுபவத்தால் 'பாஸிடிவ்' ஆகவும் தெரிகிறது" என்று தெரிந்து கொண்டோம். அந்த ஆதாரத்தினால்தான் மனஸ் வேலை பண்ணுவதே, அது இல்லாமற் போனால் மனஸே இல்லை என்று தெரிந்துகொண்டோம். இந்தத் தனி ஜீவ மனஸுக்குச் சொன்னது ஈச்வரன் என்ற Cosmic Mind-க்கும் பொருந்தத்தான் வேண்டும். ஈச்வரனுக்கும் ஆதார ஸத்யமாக எதுவும் பண்ணாமல் இருந்து கொண்டு மட்டும் இருப்பதான ஒன்று இருந்துதான் ஆக வேண்டும். ஜீவனுக்கு ஒரு ஆத்மா உள்ள மாதிரி, ஈச்வரனுக்கும் ஒரு ஆத்மா இருக்கவேண்டும். அதுதான் பரமாத்மா எனப்படுவது.

'இத்தனை நாம ரூபங்களும் குணங்களும் கார்யங்களும் கொண்ட ஜகத்துக்கு ஆதாரமான ஈச்வரன் தன்னில்

Koviloor Digital Library

தானுக ஆதார ஸத்ய நிலையில் இருக்கும்போது அவனுடைய நிஜ ஸ்வரூபமாக, அதாவது ஆத்மாவாக இருப்பது எப்படியிருக்கும்?' என்று ஆலோசித்தோமானுல், அது எந்த நாமமும், ரூபமும், குணமும், கார்யமும் இல்லாததாகத் தானிருக்குமென்று தெரியும்.* "அதெப்படி?" என்ருல், அதற்கென்று தனியாக ஒரு குணம், ரூபம், கர்மம், நாமம் இருந்துவிட்டால் அது இதற்கு வித்யாஸமான மற்ற குண கர்மங்கள் நாம ரூபங்கள் ஆகியவற்றை எப்படி உண்டாக்க முடியும்? பல கலர்கள் பிறக்கிற மூலம் எது என்ற த்ருஷ்டாந்தத்தை வைத்து இதைப் புரிந்துகொள்ளலாம். ஊதாவில் ஆரம்பித்து சிவப்புவரையில் V-I-B-G-Y-O-R என்று ஏழு கலர்கள் சொல்கிருர்கள். இந்த ஏழும் எதிலிருந்து உண்டாயின என்ருல், எந்த வர்ணமுமேயில்லாத வெளிச்சத்திலிருந்து—colourless light-லிருந்து—வந்தது என்கிருர்கள். இதை விஞ்ஞான பூர்வமாகவே colour spectrum என்று நமக்கு ரூபித்துக் காட்டுகிருர்கள். கலரேயில்லாத ஸூர்ய வெளிச்சத்திலிருந்தே மேக மண்டலத்தில் ஒளிச் சிதறல் (refraction) ஏற்பட்டு ஏழு கலரும் உள்ள அழகான வானவில் தோன்றுவதைப் பார்க்கிருேம். கலரில்லாத வைரத்தின் பட்டைகளில் வெறும் வெளிச்சம் பட்டு ஏழு வர்ணங்களையும் வாரிக் கொட்டும் விநோதத்தைப் பார்க்கிருேம். இதிலிருந்து, பல வர்ணங்களையும் உற்பத்தி செய்யக்கூடியது ஏழு வர்ணமுமே இல்லாததாக இருக்க வேண்டுமென்று தெரிகிறது. இப்படித்தான் நாநா பேதங்கள் கொண்ட குண கர்ம நாம ரூபங்களைக் கொண்ட ப்ரபஞ்சத்துக்கு ஆதாரனுக உள்ளவனின் அடிப்படையான நிஜ ஸ்வரூபம் எந்த குணமும் இல்லாததாக, எந்த கர்மாவும் செய்யாததாக, எந்த நாமமும் தரிக்காததாக, எந்த ரூபமும் கொள்ளாததாக இருக்கவேண்டும். அதுதான்

* இவ்விஷயமாக இதே பகுதியிலுள்ள "வண்டு ஸ்தோத்ர"த்தின் உட்பிரிவுகளான "நிர்குணமும் குணநிலயமும்", "க்ருஷ்ண பக்தர்களான அத்வைதிகள்" என்பவற்றிலும் பார்க்க.

Koviloor Digital Library

அத்வைதிகள் சொல்லும் நிர்குண, நிஷ்க்ரிய, நாம ரூப ரஹித ப்ரஹ்மம்.

ஜீவனின் நிஜ ஸ்வரூபமான ஆத்மா இப்படிப்பட்டதே என்று பார்த்தோம். இதிலிருந்து இன்னம் ஆலோசித்துக் கொண்டு போனல், ஈச்வரனின் நிஜஸ்வரூபமான ஆத்மா ஜீவனின் ஆத்மா மாதிரியான இன்னென்ருக இருக்க முடியாதென்றும், இதுவும் அதுவும் ஒன்ருகவேதான் இருக்க வேண்டும் என்றும் தெரியும்.

எப்படி?

ஜீவனின் ஆத்மா என்று வைத்துக்கொண்டாலும் ஸரி, அல்லது ஈச்வரனின் ஆத்மா என்று வைத்துக்கொண்டாலும் ஸரி. எதுவானுலும் அது குணம், கார்யம், ஊர், பேர், உருவம், உடைமை எதுவுமே இல்லாதது என்று பார்த்தோம். அது இப்படி இப்படி இல்லாதது ("நேதி" என்று இதை வேதாந்தத்தில் சொல்வார்கள்), எதுவாக வுமே இல்லாதது என்று முடிவுக்கு வரும்போது அதை ஒரு ஸைஃபர் என்றுதான் கருதவேண்டியிருந்தது. ஸைஃபர் என்பது இல்லாத வஸ்து. எனவே அதிலே இரண்டு ஸைஃபர், மூன்று ஸைஃபர் என்று இருக்க முடியாது. 'நம்பர்களாக இருக்கிறவற்றில்தான் ஒன்று, இரண்டு, மூன்று என்று வித்யாஸமாகப் பல இருக்கமுடியும். இல்லாத ஸைபராகப் பல இருக்க முடியாது. ஆகையினுலே, ஜீவனுக்கு ஆத்மாவாயிருக்கிற ஒரு ஸைஃபர், ஈச்வரனுக்கு ஆத்மாவாக உள்ள இன்னெரு ஸைஃபர் என்று இருக்க முடியாது. இரண்டும் ஒன்றுதான் என்று ஆகிவிடுகிறது.

ஜீவ - ஜகத்தின் கோணத்திலிருந்து பார்க்கும்போது இவற்றைக் குறித்த எதுவாகவும் அது இல்லை என்பதால் இப்படி ஸைஃபராக்கினது. ஆனுல் அது வாஸ்தவத்தில் எப்படி ஸைஃபராக இருக்கமுடியும்? ஸர்வமும் அதிலிருந்து தான், அது இல்லாமல் எதுவுமே இல்லை, அதுதான் ஆதாரம், நிஜஸ்வரூபம் என்று சொல்லிவிட்டு அது ஸைஃபர்

Koviloor Digital Library

என்றால் எப்படி? ஆகையினால் நம்மை ஸென்டராக வைக்காமல், அதையே ஸென்டராக வைத்துப் பார்த்தால் அது ஸைஃபர் இல்லை; அதுவே பூர்ணம் என்று தெரியும். ஏழு கலரில் எதுவாகவும் இல்லை என்பதால் அவற்றுக்கு ஆதாரமாக 'லைட்' என்றே ஒன்று இல்லை என்றால் அது கொஞ்சங் கூட ஸரியில்லையே! கலர்களாக அது இல்லையே தவிர ஒளி என்ற ஒன்றாக இருக்கத்தானே செய்கிறது? அப்படியே ஜீவனின் ஆத்மா என்பது அவனுடைய இந்த்ரியாதிகள், மனஸ், கார்யங்கள், குணங்கள் முதலியன இல்லாததாயிருந்தாலும் அதுதான் ஸத்யம் என்ற இருப்பாகவே இருப்பது. 'அது இல்லாமல் இது எதுவும் இல்லை. இதெல்லாம் அதன் துளிச் சாயைதான். மேகத்திலோ, 'ப்ரிஸ'த்திலோ ஒளி சிதறி வர்ணமுண்டாகிற மாதிரி மாயையிலே ஆத்ம ஒளி சிதறித்தான் ஜீவனுடையதான அந்தஃகரணம் உண்டாகி, இந்த்ரியாதிகள்வரை விரிவடைந்திருக்கிறது' என்பதால் அதுபூர்ணவஸ்துவாகவே இருக்கவேண்டுமென்று ஏற்படுகிறது. அது பூர்ணம்தான் என்பதற்கு proof மஹான்களின் ப்ரத்யக்ஷ அநுபவத்தில் இருக்கிறது? ஆத்மாவிலே நிலைத்த அவர்கள்தான் கொஞ்சங்கூட எந்தவிதமான குறைவும், குறையும் இல்லாமல், நிறைந்த நிறைவோடு இருக்கிறார்கள். அந்த நிறைவுக்கு அதிகமாக எதையும் கூட்டமுடியாது. இப்படிக் கூட்டுவதற்கில்லாமல் நிறைவாக இருப்பதுதானே பூர்ணத்வம்? இப்படியே, இதைவிட, ஸ்பஷ்டமாக, தெரிவது—ஸகல ஜகத்தையும் உண்டாக்கி, ஸகல ஜீவர்களையும் ஆட்டிப் படைக்கும் ஈச்வரனுக்கும் ஆதார ஸத்யமாயுள்ள அவனுடைய ஆத்மா நிச்சயமாகப் பூர்ணமாகத்தானிருக்க வேண்டுமென்பது. ஜீவன் என்று தனியாக உள்ளவரையில் அந்தஃகரணம்தான் ஜீவனை இப்படித் தனியாக ஆக்கியிருக்கிற மாதிரியே, ஈச்வரன் என்று ஒருவனை ஆக்கியிருப்பதும் மாயையே. மாயையோடு சேர்ந்த பிரம்மமே ஈச்வரன். அப்புறம் அவனிடமிருந்து ஜீவ—ஜகத்துகள். அப்படியானால் ஈச்வரனின் ஆத்மா எப்படியிருக்கவேண்டும்? எல்லான் ஜீவர்களி தனித்தன்மை

Koviloor Digital Library

கொண்ட அந்தஃகரணங்களுக்கும் காரணமாய் இருக்கின்ற மாயையிலேயே நேராக எதன் ஒளி சிதறி ஜீவ ஸமூஹம் முழுதையும் பண்ணியிருக்கிறதோ, அதோடு ஜடமான ப்ரபஞ்சத்தையும் பண்ணியிருக்கிறதோ அது பூர்ண வஸ்து வாகத்தானிருக்கவேண்டும். "ஸர்வ பரிபூர்ண அகண்ட தத்வம்" என்று தாயுமானவர் சொல்கிறதாகத்தான் அது இருக்கவேண்டும் என்பதில் கொஞ்சங்கூட ஸந்தேஹமில்லை.

ஜீவனின் ஆத்மா பரிபூர்ணமானது; ஈச்வரனின் ஆத்மா வும் பரிபூர்ணமானது என்றால் அது ஒரு பூர்ணம், இது இன்னொரு பூர்ணம் என்று இருக்க முடியாது. எப்படி இரண்டு ஸைஃபர் இருக்க முடியாதோ, அப்படியே இரண்டு பூர்ணமும் இருக்கமுடியாது. ஸைஃபர் ஒன்றுதான். Infinity என்கிற அனந்தமும் ஒன்றுதான். "இரண்டும் ஒன்று" என்று சொல்லும் போதுகூட நம்பர் கொடுத்து விடுகிறோம். ஆகவே ஒன்று என்பதுகூடத் தப்பு. இதனால் தான் ஆசார்யாள் இரண்டு இல்லை என்று பொருள்படும்படி யாக "அத்வைதம்" என்று பேர் வைத்தாரே தவிர, ஒன்று என்று அர்த்தம் கொடுக்கும்படி "ஏகம்" என்று வைக்க வில்லை. ஆகக்கூடி, இரண்டு பூர்ணம் நிச்சயமாய் இருக்க முடியாது. பூர்ணம் என்றாலே அதற்குள் அடங்காததாக எதுவுமில்லை, அதைத் தவிர எதுவுமில்லை என்றுதான் அர்த்தம். அப்படியிருக்க ஒரு பூர்ணத்துக்கு அதிகமாக இன்னொன்று எப்படியிருக்க முடியும்? ஒரு பூர்ணத்துக்குள் இன்னொன்று அடங்கினால் அதன் அங்கமாகிவிட்ட இது எப்படிப் பூர்ணம் என்ற பெயருக்கு உரியதாக முடியும்?

ஆக, ஜீவனின் ஆத்மாவும் ஈச்வரனின் ஆத்மாவும் நம்முடைய மாயா லோகப் பார்வையில் தெரிகிறபடி ஸைஃபராயிருந்தாலும் ஸரி, அல்லது வாஸ்தவமாய் அவை உள்ளபடி பூர்ணமாயிருந்தாலும் ஸரி, எப்படியானாலும் அவை இரண்டும் ஒன்றேதான்; வேறு வேறு இல்லை என்று தீர்மானமாகிறது. "இவை", "இரண்டும்" என்று பிரித்துப் பன்மையில் சொல்வதே தப்பு. ஒரே ஆத்மா, அல்லது

Koviloor Digital Library

ஸத்யம், அல்லது ப்ரஹ்மம்தான் ஈச்வரனுகவும் ஆகியிருக்கிறது, ஜீவனுகவும் ஆகிவிடுகிறது. இருந்தாலும் வ்யவஹாரத்தில் ஈச்வரன், ஜீவன் என்கிறவை ஆத்மாவுக்கு வேறு மாதிரி தெரிகிறது. இதனால்தான் 'ஜீவாத்மா', 'பரமாத்மா' என்ற வார்த்தைகள் ஏற்பட்டது.

KOVILOOR MADALAYAM
KOVILOOR - 630 307
(NEAR) KARAIKUDI
(PHONE: -436846)

த்வைத - விசிஷ்டாத்வைதங்களில்
ஜீவாத்ம - பரமாத்மாக்கள்

த்வைதமாகவே நினைக்கப் பழக்கப்பட்டுவிட்ட நம்மில் எவருக்கும் தோன்றக் கூடியது ஸர்வசக்தனும், ஸர்வஜ்ஞனுமான பரமாத்மா வேறேதான்; அல்ப சக்தனும், கிஞ்சித் ஜ்ஞனுமான (சிற்றறிவினனுமான) ஜீவாத்மா அவனுக்கு வேறேதான் என்ற எண்ணமே. இவர்களை முறையே பேருயிர், சிற்றுயிர் என்றும் சொல்வதுண்டு. இப்படி ஒருவருக்கொருவர் மலைக்கும் மடுவுக்குமாக வித்யாஸமாயுள்ள இரண்டு பேர் நிச்சயமாக இரு வேறு ஆஸாமிகளாகத் தானிருக்கவேண்டுமென்று தோன்றும். இதுதான் மத்வாசார்யார் ப்ரசாரம் செய்த த்வைதம். பரமாத்மாவும் ஜீவாத்மாவும் இரு வேறு வ்யக்திகள் என்ற அபிப்ராயத்தைக் கொண்டதால் 'த்வைதம்' எனப்படுகிறது.

ஒரு குயவன் தனக்கு முற்றிலும் வேருகப் பானை என்று ஒன்றைப் பண்ணிப் போடுகிற மாதிரி பரமாத்மா ஜீவாத்மாவை அடியோடு வேறு வஸ்துவாகப் பண்ணிவிடவில்லை என்றும், உடம்பை உயிர் இயக்குகிற மாதிரி ஜீவனின் உயிரை அதற்கும் உயிராக ('உயிர்க்குயிராக' என்கிறேமே, அப்படி) இயக்கும் அந்தர்யாமியாக அவன் இருக்கிறுனென்றும் ராமாநுஜர் ஸித்தாந்தம் செய்தார். இதைத்தான் விசிஷ்டாத்வைதம் என்பது. அவரும் இந்த ஜீவாத்மாவானது பரமாத்மாவை த்வைதமாகப் பிரிந்திருந்து பக்திதான் பண்ணிக்கொண்டிருக்க முடியுமே தவிர, அந்தப் பரமாத்ம தத்வத்திலேயே ஜீவன் பிறிதற அத்வைதமாக ஒன்றிவிட

Koviloor Digital Library

முடியாது என்றுதான் மோக்ஷ நிலையை த்வைதமாக define செய்திருக்கிறார்.

ஸரி, இங்கேயெல்லாம் ஜீவாத்மா என்று சொல்வதிலே ஆத்மா என்பது என்ன? ஜீவனின் நிஜமான உள் உண்மைத் தத்வம் எதுவோ அதுதான். இது மனஸ் இல்லை, அந்தஃ கரணம் இல்லை என்பதை த்வைதிகள் உள்பட எல்லா ஸித்தாந்திகளும் ஒப்புக்கொள்கிறார்கள். எதிலும் பட்டுக் கொள்ளாத 'ஸாக்ஷி' என்று ஒன்றைச் சொல்கிறார்கள். ஆனாலும் பட்டுக்கொள்ளாத ஸாக்ஷியின் ஸ்வாநுபவத்தைப் பற்றி ஒன்றும் சொல்லாமல், த்வைதமான ஈச்வராநுபவத் தைத்தான் மோக்ஷமென்பதான ஜீவாத்மாவின் ஸ்வதந்த்ர ஸ்வபாவ அநுபவ நிலையாகச் சொல்லி முடித்துவிடுகிறார்கள்.

ஜீவனின் நிஜ ஸ்வரூபமும் ஈச்வர ஸ்வரூபமும் சாச்வத மாக வேறேதான் என்கிற த்வைதிகள் விஷயத்தில் ஜீவாத்மா பரமாத்மா என்ற இரண்டு தினுஸு ஆத்மாக்களை சொல்வதற்கு அதிக விளக்கம் அவச்யமில்லை. மோக்ஷத்தில் ஆத்மாவின் நிஜ ஸ்வரூபத்திலிருக்கும்போதும் அவர்களு டைய ஜீவன் அல்ப சக்தன் என்றே முடிந்துபோகிறான். இல்லாவிட்டால் இவன் எதற்காக மோக்ஷத்தில் ஈச்வரனுக்கு ஸேவை செய்துகொண்டிருக்க வேண்டும்? ஈச்வரனும் மஹாசக்தன் என்பதோடு முடிந்துபோகிறான். அந்த சக்திக்கு ஆதாரமாகவும், ஆனாலும் சக்தியைக் காட்டுவது என்ற த்வைத கார்யமில்லாததால் செயலற்ற ஒரே சாந்த மாகவும் உள்ள ஸத்யம்தான் அவனுடைய நிஜ ஸ்வரூபம் என்கிறவரைக்கும் அவர்கள் போவதில்லை. இப்படி அநேக அல்ப சக்தர்கள், அவர்களை ஆள்பவனான ஒரே ஒரு மஹா சக்தன் என்று இரண்டு இருக்கும்போது இவர்களை ஜீவாத் மாக்கள் என்றும், இவர்களைவிட மிக உயர்வான ஈச்வரனைப் பரமாத்மா என்றும் சொல்வது பொருத்தந்தானே? ஸகல ஆதார, ஸகல காரண, நித்ய, சுத்த, முக்த, ஸச்சிதானந்த ப்ரஹ்மம் என்பதே அவர்களுக்கு ஈச்வரன்தான். அவனும் ஜீவர்களும் என்றைக்கும் வேறு வேறாக இருக்கவேண்டியவர்

Koviloor Digital Library

களே என்பது அவர்கள் ஸித்தாந்தமாயுள்ளபோது, ஜீவனை ஜீவாத்மா என்ருல், 'பரம பதம்' என்றும் 'பரம் தாமம்' என்றும் சொல்லும் அவர்களுடைய மோக்ஷ லோகத்தில் இருக்கிற ஈச்வரனைப் பரமாத்மா என்றுதானே சொல்ல வேண்டும்?

ஒரே ஆத்மா என்று பரமார்த்த ஸத்ய நிலையில் சொல்லும் அத்வைதிகள், வ்யவஹாரத்தின் பார்வையில் அது ஒரு பக்கம் ஜீவனுக அந்தஃகரணத்தால் கட்டுப்பட்டிருப்பதையும், இன்னொரு பக்கம் இந்த ஜீவனுக்கு மிக மிக உயர்ந்த, பரமான, அகண்ட சக்தியோடு மாயையால் ஈச்வரனுக இருப்பதையும் கருத்தில் கொண்டு ஜீவாத்மா, பரமாத்மா என்று பேதம் கல்பித்தாற்போலப் பேசுகிருர்கள். த்வைதிகளோ இது வ்யவஹாரத்தை வைத்து வெறுமே கல்பித்த பேதம்தான் என்று நினைக்காமல், "இதுவேதான் ஸத்யம். கீழ்ப்பட்ட ஜீவாத்மாவாக ஒன்றும், மேம்பட்ட பரமாத்மாவாக இன்னென்றும் சாச்வதமான பேதத்துடனேயே உள்ளன" என்று சொல்கிருர்கள்.

ஜீவாத்மா, பரமாத்மா என்ற வார்த்தைகளைப் பற்றி இன்னம் கொஞ்சம் ஆலோசனை (ஆலாபனை!) பண்ணிப் பார்க்கலாம் :

த்வைதிகள் (விசிஷ்டாத்வைதிகளையும் த்வைதிகளில் சேர்த்தே சொல்கிறேன்) ஜீவனின் ஆத்மாவை அத்வைதிகள் சொல்லும் நிஷ்க்ரிய, நிர்குண வஸ்துவாகச் சொல்வதில்லை— அதாவது கார்யமும் குணமும் இல்லாத பொருளாகச் சொல்வதில்லை. ஆனுலும் அவர்களும்கூட இந்த்ரிய வ்யாபாரங்களில் போய் லோக விஷயானுபோகங்களில் ஈடுபடுவதாகவே ஜீவனுக்குத் தற்போதுள்ள தன்மை அவனது நிஜமான தன்மை அல்ல என்றும், ப்ரக்ருதி சேஷ்டிதங்களிலிருந்து (இயற்கையின் சேஷ்டைகளிலிருந்து) விடுபட்டு ப்ரக்ருதிக்கு அப்பாற்பட்ட ஈச்வரனை அன்போடு நினைத்து அவனுக்கு ஆராதனை பண்ணிக்கொண்டிருப்பது

Koviloor Digital Library

தான் ஜீவனின் நிஜ ஸ்வரூபமான ஆத்மாவின் ஸ்வபாவம் என்றும் சொல்கிறார்கள். அந்த நிலை இப்போது ஜீவனுக்குத் தெரியத்தானே இல்லை? அதனால் தற்போது தப்பாக உள்ள ஜீவனுக்கு இவன் ஸரியான நிலையில் இருக்கவேண்டிய ஆத்மாவைத்தெரிவிப்பதற்காக இரண்டையும் வேறுபடுத்தி, ஜீவன் வேறு ஆத்மா வேறு என்கிற மாதிரியாக "ஜீவாத்மா" என்று பெயர் கொடுத்தார்கள்.

அத்வைதிகள் (பரமார்த்த நிலையில் ஜீவாத்ம பரமாத்ம பேதங்களை ஒப்புக்கொள்ளாமல் ஒரே ஆத்மாவைத்தான் சொல்பவர்களாயினும்) வ்யவஹார உலகத்தை ஒப்புக் கொள்ளும் கீழ் நிலையில் 'ஜீவாத்மா' என்ற 'கான்ஸெப்டை' ஏற்றுக்கொள்கிறார்கள். ஆத்மா என்ற நிஜத் 'தானாக' ஜீவன் தன்னைத் தெரிந்துகொள்ளாத வ்யவஹாரத்திலும் அவன் எதையோ ஒன்றைத் 'தானாக' நினைத்துக்கொண்டுதானே இருக்கிறான்? அதை ஜீவாத்மா என்று சொல்லிவிட்டுப் போவோமென்று ஒப்புக்கொண்டிருக்கிறார்கள்.

தொடர்புகொண்ட இரண்டு வஸ்துக்கள்

ஜ்வனும் ஆத்மாவும் ஒன்று என்றால், ஜீவ பாவத்தில் இருப்பதும் ஆத்மாவாக இருந்துகொண்டிருக்கும் நிலையும் ஒன்று என்றால், அப்போது ஜீவன் என்றோ ஆத்மா என்றோ ஒன்றை மட்டும் சொன்னால் போதும். இரண்டையும் சேர்த்து ஜீவாத்மா என்று சொல்லவேண்டியதில்லை. வேடிக்கையாகத் தோன்றலாம், சேர்த்துச் சொன்னதாலேயே இரண்டையும் பிரித்துக் காட்டினதாக ஆகிறது! 'பால் பாயஸம்' என்று சொல்கிறோம். பாலே பாயஸமில்லை. அதிலே பாலுக்கு வேறாக என்னமோ, சர்க்கரை கிக்கரை சேர்த்து, அதன் இயற்கையான தன்மையை (நிஜ ஸ்வரூபத்தை) வேறே மாதிரி மாற்றி, அதன் இயற்கை ருசியைக் கூட்டிப் பாயஸம் என்று இன்னொன்றைப் பண்ணியிருக்கிறது. அதனால் 'பால் பாயஸம்' என்று சொல்கிறோம்.

Koviloor Digital Library

பாலும், சர்க்கரையும் போல வேருக இன்றி, பாலும் milk-ம் ஒன்றேதான். பாலுக்கே 'க்ஷீரம்' என்றும் பெயர் இருக்கிறது. இப்படி ஒரே வஸ்துவை இரண்டு வார்த்தைகள் குறிக்கும்போது இரண்டையும் சேர்த்துப் பால்-மில்க், பால்-க்ஷீரம் என்று சொல்வதுண்டா?

'ஜீவாத்மா' (என்ற வார்த்தை) ஸமாசாரமும் இதிலிருந்து புரிகிறது. ஜீவனும் ஆத்மாவும் ஒரேயடியாக ஸம்பந்தமே இல்லாதவையாயிருந்தாலும் 'ஜீவாத்மா' என்று சேர்த்துச் சொல்ல முடியாது. பாலோடு ஸம்பந்தப் படுகிறவற்றைத்தான் பால் பாயஸம், பால் போளி, பால் சாதம் என்று சொல்ல முடிகிறதே தவிர அதோடு ஸம்பந்தப் பட முடியாத ரஸம், மோர் முதலியவற்ருேடு சேர்த்துப் பால் ரஸம், பால் மோர் என்று சொல்ல இடமிருக்கிறதா? ஒன்ருகவேயும் ஆகிவிடாமல், ஒரேயடியாக ஸம்பந்தமே இல்லாமல் வேறு வேருயும் இருந்துவிடாமல், ஒன்ருேடொன்று ஸம்பந்தப்பட்டுக்கொண்டு மட்டுமிருக்கும்போது தான் இரண்டின் பேரையும் சேர்த்து ஒரு வார்த்தை உண்டாவது.

ஜீவனுக்கு தப்பான ஜீவத்வத்தோடு இருக்கும் ஸ்திதி, நிஜஸ்வரூபத்தை அறிந்து ஆத்மாவாயிருக்கும் ஸ்திதி என்று இரண்டு இருப்பதாலும், ஆனுலும் அந்த இரண்டில் ஸரியானது எதுவோ அதுவேதான் தப்பாகவும் ஆகி இருக்கிறது என்ற ஸம்பந்தமும் அதே ஸமயத்தில் இருப்பதாலும் 'ஜீவாத்மா' என்று இரண்டையும் சேர்த்துச் சொல்கிருேம்.

"ஈச்வராத்மா"வுக்குப் பதில் ஏன் "பரமாத்மா"?

ஸரி, 'ஜீவாத்மா' என்பதுபோல, 'ஈச்வராத்மா' என்று சொல்லாமல் ஏன் 'பரமாத்மா' என்று சொல்லவேண்டும்?

ஈச்வராத்மா என்று ஏன் சொல்லவில்லையென்ருல் ஈச்வரன் ஆத்மாவை அறிந்துகொள்ளாத நிலை என்று ஒன்று கிடையாது. ஈச்வரனும் ஆத்மாவும் இரண்டாகப்

Koviloor Digital Library

பிரிந்து ஸம்பந்தப் படுபவர்களல்லவாதலால் 'ஈச்வர plus ஆத்மா = ஈச்வராத்மா' என்று plus போட்டு வார்த்தை கொடுக்க முடியவில்லை. அவன் எப்போதும் ஆத்ம ஞான முள்ளவன். அவன் நிஷ்க்ரிய, நிர்குணனாக இல்லாமல் மாயையினால் கார்யம் செய்கின்ற, ஸகுண (குணங்களுள்ள) ஈச்வரனாயிருக்கிறானென்று அத்வைத சாஸ்த்ரங்களில் சொல்லியிருப்பதைப் பார்த்து, அப்படியானால் மாயா ஸம்பந்தத்தால் தன் நிஜ ஸ்வரூபத்தை அவன் மறந்து போய் வேறே மாதிரிதான் இருக்கிறானுக்குமென்று அர்த்தம் பண்ணிக்கொண்டுவிடக் கூடாது. ஜீவன் ஆத்ம ஸ்வரூபத்தை மறந்து போனாற்போல், ஈச்வரன் மறந்து போயிருப்பதாக அவை சொல்லவே சொல்லாது.

அதனால், ஈச்வராத்மா என்காமல், ஜீவாத்மாவுக்கு உயர்ந்தது என்று மட்டும் "பரம்" போட்டுக் காட்டிப் "பரமாத்மா" என்பது.*

அத்வைதக் கொள்கைகளில் சில

ஆதார ஸத்யம் எப்படி ஈச்வரன் மாதிரித் தோன்று கிறது, எப்படி ஜீவன் மாதிரித் தோன்றுகிறது என்பதில் அத்வைதிகளுக்குள்ளேயே இரண்டு மூன்று 'தியரி'கள் இருக்கின்றன. பிம்ப ப்ரதிபிம்ப வாதம், அவச்சேத வாதம், ஆபாஸ வாதம் என்று இவற்றுக்குப் பேர். அந்த வித்யா ஸங்கள், கட்சி ப்ரதி கட்சிகளை அதிகம் சொல்லப்போனே னானால் உங்களுக்குக் கண்ணைக் கட்டிக் காட்டில் விட்ட மாதிரி இருக்கும். இப்போது மாயை நம் கண்ணைக் கட்டி இந்த ஸம்ஸாரக் காட்டில் விட்டிருப்பதை ஏதோ கொஞ்ச மாவது தளர்த்திவிடப் பார்க்கலாமென்று உபந்நியாஸம் செய்ய ஆரம்பித்துவிட்டு, நானே நேர்மாறாகப் பண்ணி விடக்கூடாது. அதனால் ரொம்பவும் சிக்கலான 'தியரி' களில் ஆழமாகப் போகாமல் மேலெழுந்தவாரியாகச் சொல்லிக்கொண்டு போகிறேன்.

---

* இவ்விஷயம் சில பக்கங்களுக்கு அப்பால் மீண்டும் விளக்கப்படுகிறது.

Koviloor Digital Library

தியரிகளுக்குப் போனல், "ஜீவ மனஸ், 'காஸ்மிக்' மனஸ் என்று இரண்டு இல்லை" என்றுகூட ஒரு கட்சி சொல்லும். "அப்படியானல் 'காஸ்மாஸை' (ஜகத்தை) ஜீவ மனஸா பண்ணிற்று?" என்று கேட்டால், "ஆமாம், அப்படித்தான்! உன் பார்வையில்தான் ஜகத் இருக்கிறது. அதற்குத் தனியாக இருப்பு இல்லை" என்பதாக த்ருஷ்டி - ஸ்ருஷ்டிவாதம் என்று ஒன்றைச் சொல்வார்கள். இதை "ஏக ஜீவவாதம்" என்றும் சொல்வதுண்டு. ஒரு ஜீவனுடைய த்ருஷ்டி என்கிற பார்வையில்தான் (அதாவது ஒரு ஜீவனுடைய மனஸின் வெளிப்பாட்டில்தான்) ஜகத் ஸ்ருஷ்டியே இருக்கிறது என்பார்கள். ஜகத்தின் இன்னெரு பெயரைக் கொண்டே இந்த வாதத்திலும் நியாயமிருப்பதைச் சொல்வார்கள். ஜகத்துக்கு 'லோகம்' என்று பெயர் இருக்கிறது. 'லோக்' என்னும் தாதுவுக்குப் 'பார்ப்பது' என்று அர்த்தம். Look என்பது இதிலிருந்து வந்ததுதான். 'லோகனம்' என்றல் பார்ப்பது. இப்படி நம்மால் பார்க்கப்படுவதால் மட்டுமே இருப்பு உள்ளதாக எது இருக்கிறதோ அதுதான் 'லோகம்'. Locality, locus என்றெல்லாம் இடம் ஸம்பந்தமானவற்றைச் சொல்வதும் 'லோக்' தாதுவை வைத்துத்தான். தமிழிலும் பார்க்கப்படுவதாலேயே இருப்பு உள்ளது என்பதைக் குறிப்பதாகப் "பார்" என்றே உலகத்துக்குப் பேர் இருக்கிறது. பரத்தை மறைத்தது பார் முதற் பூதம் என்று பரம அத்வைதத்தைத் (திருமூலர்) சொல்கிறபோது 'பார்' என்றே ஜகத்தைச் சொல்லியிருக்கிறது.

"நீ பார்ப்பதால் உனக்கு லோகம் தெரிகிறது. பார்க்காவிட்டால், அதாவது மனஸை வெளியிலிருந்து உள்ளே திருப்பிவிட்டால் உனக்கு லோகம் மறைந்து போகிறது. இதை வைத்தே லோகம், location, பார் முதலான பேர்கள் ஜகத்துக்கு வந்திருக்கலாம். இதற்குத் தப்பர்த்தம் பண்ணி ஜீவன் பார்ப்பதால்தான் ஜகத்துக்கே இருப்பு இருக்கிறது. ஜீவன் பார்க்காவிட்டால் அதுவும் இல்லை என்று சொல்வது என்ன நியாயம்? 'பூனை கண்ணை மூடிண்டா உலகம் அஸ்த

Koviloor Digital Library

மிச்சுப் போயிடுமா?' என்று பழமொழியே இருக்கிறதே!" என்று கேட்கலாம்.

த்ருஷ்டி - ஸ்ருஷ்டி வாதம் சொன்னவர்களும் மஹா பெரியவர்கள்தான். அவர்கள் இருந்த ஒரு உசந்த நிலை யிலிருந்துகொண்டு அவர்கள் எப்படிப் பார்த்தார்களோ அதையே சொன்னார்களென்று வைத்துக்கொள்ள வேண்டுமேயொழிய அதை நம் கோணத்திலிருந்து 'க்ரிடிஸைஸ்' பண்ணுவது ஸரியல்ல. ஜீவ மனஸை ஈச்வரன் என்கிற Cosmic Mind மாயைக்கு அந்தண்டை (அப்பால்) சேர்க்கும்போது ஒரு கட்டத்தில் அந்த Cosmic Mind-லேயே ஜீவமனஸ்அப்படியே கலந்து அதுவாகவே ஆனாற் போன்ற பாவம் வரும். அதாவது எதுவும் செய்யாத நிர்குண ஆத்மாவுக்குப் போவதற்கு முந்தி, அதற்குப் போகும்படிப் பண்ணுகிறானே, எல்லாவற்றையும் செய்கிற ஸகுண ஈச்வரன், அவனோடு ஐக்யமாகிவிட்டது போன்ற ஒரு ஸ்திதி வரும். அப்போது அந்தப் பெரிய மனஸின் ஸ்ருஷ்டி, தன்னுடைய கல்பனை மாதிரியே தோன்றும். ஆனால் வாஸ்தவத்தில் ஜீவன் ஈச்வரன் ஆவதில்லைதான்

ஜீவன் ஈசனாக முடியாது

எல்லாம் ஒன்று என்று அத்வைதம் சொன்ன ஆசார்யாளே நிர்குண நிலையிலே ப்ரஹ்மமும் ஜீவனும் ஒன்று என்றுதான் சொன்னாரே தவிர ஸகுணத்தில் ஜீவனும் ஈச்வரனும் ஒன்று என்று சொல்லவேயில்லை. Cosmic Mind-ல் இவன் நன்றாகத் தோய்ந்திருக்கும்போது அந்த Mind-ஆன ஈச்வரனின் அதிசய சக்திகள் பல இவனுக்கும் வருமென்பது வாஸ்தவம்தான்; ஆனாலும் ஜகத் முழுதை யும் நிர்வஹிக்கும் சக்தி என்பதாக ஈச்வரனுக்கு உள்ள ஐச்வர்யம் இவனுக்கு வராது என்று சொல்லியிருக்கிறார்.

"ப்ரஹ்ம ஸூத்ர"த்தில் கடைசி அத்யாயத்தின் கடைசி பாதத்தில் முக்தனைப் பற்றி—அதாவது சிற்றின்பங்களே தெரிந்த மனஸாகிற கட்டை அறுத்து விடுபட்டு நித்யமான

Koviloor Digital Library

பேரின்பத்தை அடைந்தவனைப் பற்றி—சொல்லும்போது இவ்விஷயம் வருகிறது. இந்த மனஸ் போய் நிர்குண ப்ரஹ்மத்தில் கரைவதற்கு முந்தி, ஸகுண ஈச்வரனிடம் ஸாயுஜ்யம் எனும்படியான சேர்க்கையைப் பெறுகிற கட்டத்தில் அவனுக்கு எல்லா ஐச்வர்யமும், அதாவது ஈச்வரனுடைய ஸகல சக்திகளும் வந்துவிடுமா என்ற கேள்வி வருகிறது. அதற்குப் பதிலாக "ப்ரஹ்ம ஸூத்ர"த்தைச் செய்த பாதராயணர் (வ்யாஸர்), "மற்ற சக்தி எல்லாம் வரும்; ஆனால் ஜகத் ஸ்ருஷ்டி - ஸ்திதி - ஸம்ஹாராதி சக்திகள் ஜீவனுக்கு வரவே வராது" என்று தீர்மானம் பண்ணிச் சொல்லியிருக்கிறார்*. இதற்கு பாஷ்யம் பண்ணும்போது தான் நம்முடைய ஆசார்யாள், "ஏனிப்படி எல்லாம் ஒரே ப்ரஹ்மமாயிருக்க, ஜீவனும் ஞான மார்க்கத்தில் போய் ப்ரஹ்மமாகவே ஆகிவிட முடிகிறதென்கிறபோது ஈச்வரனாக மட்டும் ஆக முடியாது?" என்ற கேள்விக்கு பதில் சொல்கிறார்.

செயலில்லாத நிலையில்தான் இரண்டு ஒன்றாக முடியுமே தவிர, செயல் இருக்கும்போது அப்படி ஆக முடியாது. ஏனென்றால் இரண்டு வஸ்துக்கள் ஒரே கார்யத்தைப் பண்ண முடியாது. நான் பேசுகிறேன், ஊர் சுற்றுகிறேன், உங்களை எல்லாம் ஏமாற்றுகிறேன் என்றால் இதுகளைப் பண்ணுபவனாக நான் ஒருத்தன்தான் இருக்க முடியுமே தவிர இன்னொருத்தனும் இதையே ஐக்யமாகிப் பண்ணுவது என்பது முடியாது. கார்யம் த்வைதம். இன்னொன்றை வைத்துத்தான் கார்யமென்று ஏற்படுகிறது. இன்னொன்று இல்லாமல் அத்வைதமாகத் தன்னில் தானாய் உள்ளபோது மட்டும்தான் கார்யமில்லை. கார்யமுள்ள த்வைதத்தில் எப்படி இரண்டு ஏகமாகப் போவதான ஐக்யம் ஏற்பட முடியும்? நிஷ்க்ரியமான (கார்யமில்லாத) ப்ரஹ்மம் ஜகத் கர்த்தாவாகி இருக்கிற நிலைக்குத் தான் ஈச்வரன் என்று பெயராதலால் அவன் த்வைதமாகத் தான் இருந்தாக வேண்டும் ஜீவனுக்குள்ளே அவனுடைய

---

* ப்ரஹ்ம ஸூத்ரம்; 4-4-17

Koviloor Digital Library

நிஜ ஸ்வரூபமாகக் கார்யமில்லாமலிருக்கிற அத்வைத ஆத்மா இந்தக் கார்யமுள்ள ஈச்வரனோடு ஐக்யமாகிறது என்ற பேச்சுக்கே இடமில்லை. ஆத்மா அப்படியேதான் இருந்துகொண்டிருப்பது. அதை ஜீவனாகக் காட்டுகிற மாயா விலாஸத்தை ஈச்வரன் விலக்கிவிட்டால் ஜீவன் அதுவாகவே ஆகிவிடுகிறான் என்பதோடு ஸரி. அதை ஈச்வரன் ஸகுண ரூபத்திலுள்ள தானாக ஐக்யம் பண்ணிக் கொள்வதற்கு இடமில்லை. அது நடக்கமுடியாத ஸமாசாரம். ஈச்வரன் என்ற த்வைத நிலையிலுள்ள வஸ்துவைப் பிடிப் பதும் அநுபவிப்பதும் த்வைத நிலையிலுள்ள ஜீவனுடைய மனஸ்தான். இந்த்ரியத்தில் இழுபட்டு சிற்றின்பத்தில் மாட்டிக்கொள்ளாத பரிசுத்த மனஸாகத்தான் இருக்கட்டும், வேறு எதுவாகத்தான் இருக்கட்டும், அது த்வைத நிலையி லுள்ள ஈச்வரன் என்ற இன்னொன்றை அநுபவிக்கிறது என்பதாலேயே தானும் த்வைத நிலையில் குணங்களோடும் கார்யங்களோடும் இருப்பதாகத்தான் இருந்தாக வேண்டும்.

இந்த லெவலில் மட்டும் நின்று பார்க்கிறபோது த்வைத - விசிஷ்டாத்வைதிகளின் ஸித்தாந்தப்படி அவர்கள் எதை மோக்ஷம் என்று சொல்லுகிறார்களோ அந்த மோக்ஷத்திலும் ஒன்றாய்ப் போய்விடுவதென்பது இல்லை என்பதை ஒப்புக் கொள்ளத்தான் வேண்டும். அவர்கள் ஜீவனின் அடி ஆழமான கார்யமற்ற ஆத்மா வரைக்கும் போகாதவர்கள். ஈச்வரனிடம் ப்ரேம பக்தி பண்ணுவது, தாஸ்யம் (பகவத் ஸேவை) பண்ணுவது இவைதான் ஒரு ஜீவனுக்கு மோக்ஷம் என்கிற சாச்வத ஆனந்தத்தைக் கொடுக்கக் கூடியவை என்ற கருத்துடையவர்கள் அவர்கள். இவர்களுடைய ஈச்வர னுக்கும் நிர்குணம் என்பது நிஜ ஸ்வரூபமில்லை என்கிறார்கள். ஸகுணம்தான் அவர்களுடைய முடிந்த முடிவு. அத்வைதி களான நாம்தான் ஒரே ஆத்மாவிலேயே ஜீவாத்மா, பரமாத்மா என்ற இரண்டைச் சொல்கிற மாதிரி, ஒரே ப்ரஹ்மத்தையே ஜகத் கார்யமற்ற நிஷ்ப்ரபஞ்ச "நிர்குண ப்ரஹ்மம்" என்றும், ஜகத் வ்யாபாரம் செய்யும்

Koviloor Digital Library

ஸப்ரபஞ்ச "ஸகுண ப்ரஹ்மம்" என்றும் ஜீவனுடைய நிலையிலிருந்து வித்யாஸம் கல்பித்து இரண்டு மாதிரிச் சொல்கிறோம். அவர்களுக்கு ப்ரஹ்மம் என்றாலே ஸகுண ப்ரஹ்ம ஈச்வரன்தான். நிர்குணம் கிடையாது. அவர்களுடைய அடிப்படை அபிப்ராயப்படிப் பார்த்தால் அப்படித்தான் முடிவு பண்ணவேண்டியதாகும். ஜீவாத்மாவுக்கு சாச்வதமான மோக்ஷ நிலை தாஸ்யம் தானென்றால், அப்போது ஈச்வரனும் அந்த பக்திப் பணியை சாச்வதமாக ஏற்றுக் கொள்கிறவனாக, ஏற்றுக்கொண்டு க்ருபையை வர்ஷிக்கிறவனாகவே இருந்தாகவேண்டும். ஒன்றை ஏற்றுக்கொள்வது, க்ருபை புரிவது என்பதெல்லாம் கார்யத்தைச் சேர்ந்தவையே; த்வைதத்தைச் சேர்ந்தவையே. எனவே இதை சாச்வதமாகச் செய்யவேண்டியவன் ஈச்வரன் என்பதால் அவன் எப்போதும் ஜீவனை ஐக்யம் செய்துகொள்ளாதவனாக வெளியிலேதான் விட்டு வைத்திருக்கவேண்டும். அதாவது அவர்கள் சொல்கிற மோக்ஷப்படி பேதமாகவே வைத்திருக்க வேண்டும். தன்னை தாஸ்யம் பெறும் மஹாசக்தனாகவும் அவர்களை தாஸ்யம் செய்யும் அல்பசக்தர்களாகவும்தான் வைத்திருக்கவேண்டும். இவனுக்கும் கார்யம் போகவில்லை, அவர்களுக்கும் கார்யம் போகவில்லை என்றால் இப்படி வேறாகத்தான் இருக்கமுடியும்; ஐக்யமாக முடியாது. கார்யமில்லாமல் தூங்குகிறபோது ஒரு சக்ரவர்த்தியும் ஒரு ஆண்டிப் பரதேசியும் ஒரேவிதமான சாந்தானுபவத்திலிருக்க முடியும். கார்யம் வந்து அவன் சக்ரவர்த்தியாயுள்ளபோது ஆண்டிப் பரதேசி அவன்மாதிரி இருப்பது எப்படி முடியும்?

"ஸரி, ஈச்வரனோடு ஐக்யமாகி அவனேயாக ஜீவன் ஆக முடியாது என்றாலும் பரம கருணையால் அந்த ஈச்வரன், தானும் ஈச்வரனாக இருந்துகொண்டு ஜீவனுக்கும் தன் ஐச்வர்ய சக்தி முழுவதையும் கொடுக்கலாமே!" என்று கேட்டால், அப்படி மட்டும் அவன் செய்யவேமாட்டான். ஏனென்றால் அப்படிப் பண்ணினால் இவனொருவனிடம் அவன் பரம கருணை காட்டுவதே ஜகத் முழுதற்கும் அவன் மஹா

Koviloor Digital Library

கஷ்டத்தைக் கொடுப்பதாக ஆகிவிடலாம். எப்படியென்ருல்; அவன் ஜகத் நிர்வாஹத்திலே இப்படியிப்படி இது இது இந்த இந்த ஸமயத்தில் ஸ்ருஷ்டி ஆகவேண்டும், ஸம்ஹாரம் ஆகவேண்டுமென்றெல்லாம் ஸங்கல்பித்து நடத்திக் கொண்டிருக்கிருன். ஒரே ஆஸாமியின் ஸங்கல்பமாக இது நடப்பதால்தான் ஜகத் வ்யாபாரம் சீராக, ஆர்டரோடு இருக்கிறது. ஜீவனுக்கும் பூரா ஈச்வர சக்தி ஏற்பட்டது என்று வைத்துக் கொள்ளுங்கள். அப்போது ஒரிஜனல் ஈச்வரன் ஸ்ருஷ்டி செய்ய ஸங்கல்பிக்கும்போது இவன் ஸம்ஹாரம் பண்ண ஸங்கல்பிக்கலாம்; அவன் ஒன்றை ஸம்ஹாரம் செய்கிறபோது இவன் அதை ஸ்ருஷ்டி செய்ய ஆரம்பிக்கலாம். இப்படி ஒரே தாறுமாருகப் போய், லோகம் பூராவும் Chaos என்கிறபடி ஒரே குழப்பமாய்விடும். இந்தக் காரணத்தைக் காட்டித்தான் ஆசார்யாள் ப்ரஹ்மஸூத்ர பாஷ்யத்திலே எந்த ஜீவனும் ப்ரஹ்மமாகிருனேதவிர ஈச்வரனுவதில்லை என்கிருர்.

ஈச்வரனுகவே, ஆகாமல், ஆனுல் அவனுடைய ஜகத் வ்யாபார 'ஆபீஸ்' தவிர பாக்கி சக்திகளை ஜீவன் பெற முடியும். அதீதமான ப்ரேம பக்தியின் பரவசத்தில் அவனே ஆகிவிட்டது போன்ற பாவம்கூட ஏற்படலாம். பாவம் தானே தவிர இது நிஜம் இல்லை. பரவச பாவத்தில் உள்ளபோது மட்டும் அவனுடைய சக்தி முழுதையுமே தாங்கள் பெற்றதாக இவர்கள் அநுபவிப்பார்கள். இது ஈச்வராவேசம். அப்புறம் அது போய்விடும். இந்த ஸ்திதியில் இருக்கிறபோதுதான் அநேக மஹான்கள் இந்த லோகம், ஸமுத்ரங்கள், மலைகள், நக்ஷத்ரங்கள் எல்லாங்கூடத் தங்கள் ஸ்ருஷ்டிதான் என்பதுபோலப் பாடி வைத்திருக்கிருர்கள். அந்தப் பரவச நிலையின்போது நிஜமாகவே அவர்களுக்கும் ஈச்வரனைப் போலவே ஸகல விஷயமும் தெரிந்திருக்கும்; ஸகல ஜீவர்களுக்கு உள்ளும் புறமும் இருப்பதெல்லாம் அவர்களுக்குத் தெரிந்துவிடும். அதனுல், "உன் ஸ்ருஷ்டியானுல் இந்த ஜீவர்களுடைய ஸமாசாரத்தையெல்

Koviloor Digital Library

லாம் சொல்லேன்'' என்று அவர்களிடம் கேட்டால் நம் மாதிரி முழிக்க மாட்டார்கள். ஸர்வஜ்ஞதை கூடிய அவர்களுடைய அந்த நிலையில் எல்லாம் சொல்லிவிடுவார்கள். த்ரிகால ஞானிகளாக வந்தது, வரப்போகிறது எல்லாவற்றையும் சொல்லுவார்கள். இம்மாதிரி நிலையிலேயே த்ருஷ்டி-ஸ்ருஷ்டி ஸித்தாந்தமும், இந்த ஒருவன் முக்தனுல் அத்தனை பேரும் முக்தி அடைவதாகச் சொல்கிற 'ஸர்வமுக்தி'க் கொள்கையும் ஏற்பட்டதாகக் கொள்ள வேண்டும். ஆனுலும் இந்த ஆவேசம் சாச்வதமல்ல. ஜீவன் நிஜமாக ஈச்வரனுவதில்லை.

த்வைத ஜீவனுக்கு ஈசன் தொடர்புண்டு

ஈச்வரன் த்வைத நிலையில் கார்யம் பண்ணும் ஸகுண வஸ்துவாகவே இருந்தபோதிலும், ஜீவனைப்போல் த்வைதத்தை மட்டும் தெரிந்துகொண்டு அத்வைதமான நிஜ ஸ்வரூபத்தை அறியாதவனுக இருக்கவில்லை. 'வெளியில் த்வைதமாயிருந்துகொண்டு ஈச்வரன் என்ற பெயரில் தெரியும் தானே உள்ளே அத்வைத ஆத்மாவாக, நிர்குண ப்ரஹ்மமாக இருக்கிறேம்' என்ற ஞானம் அவனுக்கு எப்போதும் உண்டு. தான் வெளியில் ஈச்வரன்; உள்ளே ப்ரஹ்மம் என்று எப்போதும் அவனுக்குத் தெரியும். தன்னிடம், அதாவது வெளியிலே தெரிகிற தன்னுடைய ஈச்வர ஸ்வரூபத்திடம் பக்தியோடு வருபவனைத் தனக்கு உள்ளே அனுப்பி வைத்து ப்ரஹ்மத்திலேயே ஐக்யம் பெறும்படியாகப் பண்ணவும் அவனுல் முடியும்.

அர்ஜுனனிடம் பகவான் இதைத்தான் பிற்பாடு கீதையிலேயே முடிவுக்குப் போகிற ஸமயத்தில் சொன்னுர். "பக்தியோடு என்கிட்டே வந்தாயானுல் அப்புறம் என் உள் ரூபம் என்ன என்று தெரிந்துகொள்ள ஆரம்பிப்பாய். அப்புறம் உள்ளேயே போய்விடுவாய்'' என்றுர்.*

---

* 18. 55. இவ்விஷயம் இதே உரையில் சிறிது தள்ளியும் விவரிக்கப்படுகிறது.

Koviloor Digital Library

ஜீவனால் நினைக்காமலிருக்க முடியாதென்றும் நினைக்கிற மனஸாலேயே அவனுக்கு ஜீவத்வ identity என்றும் திரும்பத் திரும்பச் சொல்லியாயிற்று. நினைப்புக்கு அதீத மான 'ஆத்மாவை நினை' என்றால் ஜீவனால் முடியாது. இந்த இடத்திலேதான் 'ஈச்வரனை நினை' என்பது. ஜகத் வ்யாபார கார்யம் பண்ணும் த்வைத நிலையிலுள்ள ஈச்வரனை ஜீவனின் த்வைத மனஸால் நினைக்க முடியும். ஆத்மாவுடன் தொடர்புகொள்ளமுடியாத ஜீவன் ஈச்வரனோடு தொடர்பு கொள்ள முடியும்.

ஜகத் வ்யாபாரம் என்கின்ற மஹா பெரிய விளையாட்டையும், அதை விளையாடும் மஹா பெரிய சக்தியையும் பூர்ணமாகப் புரிந்துகொள்வதும், அறிந்துகொள்வதும் ஜீவனால் முடியாத கார்யம்தான். அதனால் பரவாயில்லை. ஈச்வரன் ஜீவனிடம் கேட்பது தன்னிடம் அன்பைத்தான்; தன்னைப் பற்றிய அறிவை அவனிடம் எதிர்பார்க்கவில்லை. ஆனபடியால், "உன் அன்பிலே நீ என்னை எந்த ரூபத்தில் பாவித்தாலும் நான் உனக்கு அன்போடு அநுக்ரஹம் பண்ணுகிறேன்" என்கிறார். நம் மனஸால் எவ்வளவுதான் பிடிக்க முடியுமோ அந்த அளவுக்கு அவனுடைய அகண்ட சக்தியைப் பிடித்தாலும் போதும், அருள் செய்கிறேன் என்கிறார். என்ன அருள் என்றால் அவர் வாஸ்தவத்தில் எப்படியிருக்கிறாரோ அதை நாம் அறிந்துகொள்ளும்படிச் செய்யும் அருள்தான். ஞான ப்ரஸாதம்தான் ஈசனுடைய பேரருள்.

அந்த வாஸ்தவ ரூபமென்பது அகண்ட சக்தனாக இருப்பதுகூட இல்லை; அந்த சக்திக்கும் ஆதாரமான அகண்டமான ஸத்யமாக இருப்பதுதானென்று காட்டி அப்படிப் பட்ட ப்ரஹ்மத்தின் ஸாக்ஷாத்காரத்தை தருகிறார். அகிலாண்ட சக்தியின் ஆதார ஸத்யமாகச் சொல்லப்படும் போது "ப்ரஹ்மம்" என்பதேதான் ஜீவனின் நிஜ ஸ்வரூப மாகச் சொல்லப்படும்போது "ஆத்மா" எனப்படுகிறது என் பதை முன்னேயே பார்த்தோம். அதனால் ஜகத்கர்த்தனை

Koviloor Digital Library

ஈச்வரனின் வாஸ்தவ ஸ்வரூபமான ப்ரஹ்மத்தை ஸாக்ஷாத் கரிப்பதென்பது ஜீவனானவன் தன்னுடைய நிஜஸ்வரூபமான ஆத்மாவை ஸாக்ஷாத்கரிப்பதே என்றாகிறது. பரமாத்மா, ஜீவாத்மா என்று இரண்டு இல்லை என்று அப்போது ஆகிவிடும்.

ஆனாலும் ஜீவனுக்கு ஜீவதசையில் ஆத்மாவைத் தெரிய வில்லை. இதே ஆத்மாவே ஜகத் வ்யாபாரம் செய்யும் ஈச்வரனாயுள்ளபோது அந்த ஈச்வரன் தன்னை ஆத்மா என்று எப்போதும் அறிந்தவனாக இருக்கிறான். ஜீவமனஸும் த்வைதத்தின் பாற்பட்டது; ஈச்வரனும் த்வைத ப்ரபஞ்ச வ்யாபாரத்திலிருப்பவனே என்றாலும் இப்படி ஒரு பெரிய வித்யாஸமிருக்கிறது. ஜீவனுக்கு ஆத்ம ஞானமில்லை. அந்த ஞானம் வந்தவுடனேயே இவனுடைய ஜீவத்வம் போய் விடுகிறது. ஈச்வரனுக்கோ பரிபூர்ண ஆத்ம ஞானம் ஸதாவும் இருக்கிறது. அது இருப்பதால் த்வைதமான அவனுடைய ஈச்வரத்வம் பாதிக்கப்படுவதில்லை. இப்படி ஒரு பெரிய 'டிஃபரென்ஸ்'.

ஈசன்-ஜீவன்: அவித்யை-அந்தஃகரணம்

இதைத்தான் அத்வைத சாஸ்த்ரத்தில் சொல்கிறபோது ஜீவத்வம், ஈச்வரத்வம் இரண்டுமே ஸத்ய ஸ்வரூபமில்லை யானாலும், ஒரே ஸத்யம் மாயா ஸம்பந்தத்தினால்தான் ஈச்வரன், ஜீவன் என்ற இரண்டாகவும் ஆகியிருக்கிறது என்றாலும் இரண்டுக்கும் ஒரு வித்யாஸம் காட்டி define செய்திருக்கிறது (லக்ஷணம் கொடுத்திருக்கிறது). அதாவது ப்ரஹ்மம் அவித்யையோடு சேர்ந்திருக்கிறபோது ஈச்வரனாகத் தெரிகிறதென்றும், அந்தஃகரணத்தோடு சேர்ந் திருக்கும்போது ஜீவனாகத் தெரிகிறதென்றும் சொல்லியிருக் கிறது. அவித்யை என்பதுதான் மாயை. அந்தஃகரணம் என்பதே நாம் பொதுவில் 'மனஸ்' என்பது. அதன் அங்கங் கள் மாதிரியான சித்தம், புத்தி, அஹங்காரம் ஆகிய வற்றோடுகூட இருப்பது. (இந்த விஷயம் முன்னேயே பார்த்தோம்.) அதாவது சின்னச் சின்ன மனஸ்களில்

Koviloor Digital Library

கட்டுப்பட்டுக் குறுகிக்கிடப்பவன் ஜீவன். இப்படி ஆத்மாவை குறுக்கினமாதிரி காட்டும் மாயாசக்தியே ஈச்வரன். இருக்கிற ஒரே ஸத்ய வஸ்துவான ஆத்மாவை மறைத்து, அதாவது இல்லாத மாதிரி ஆக்கி, முடிவிலே ஸத்யத்வமே இல்லாத பல ஜீவர்களை இருக்கிற மாதிரிக் காட்டும் சக்தி யாதலால் அதற்கு மாயை என்று பேர். அதையேதான் அஞ்ஞானம் என்பது. அஞ்ஞானத்துக்கே இன்னொரு பேர்தான் அவித்யா. (இவற்றுக்குள்ளேயும் ஒன்றுக் கொன்று கொஞ்சம் வித்யாஸம் இருப்பதாக ஒரு அபிப்ராய மிருந்தாலும் இங்கே நான் பொதுக் கருத்தைச் சொல்கிறேன்.) ஸத்யத்தை அறிவதே ஞானம் அல்லது வித்யா. 'வித்' என்றாலும் ஞானம் என்பது போலவே அறிவதுதான். மெய்யறிவே வித்யா. ஸத்ய ஞானமா யில்லாமல், இருப்பதை இல்லாததாகவும், இல்லாததை இருப்பதாகவும் தப்பாக அறியப் பண்ணுவதால் மாயைக்கு அவித்யா என்று பேர். ஆனாலும் இப்படி மாயா சக்தியுடன் சேர்ந்திருக்கிற நிலையிலுள்ள ஈச்வரன் அவனைப் பொறுத்த மட்டில் அஞ்ஞானியாக இல்லை. "ஈசாந: ஸர்வ வித்யாநாம்" என்பதாக அவனை வித்யைகளுக்கெல்லாமும் ஈச்வரனாகச் சொல்லியிருக்கிறது. நம்மை மாயையால் அஞ்ஞானியாக்கினாலும் அவன் அப்படியில்லை. மாயையை அவன் வைத்துக் கொண்டிருக்கிறானாயினும், தானே அதில் கட்டுப்படாமல் வைத்துக்கொண்டிருக்கிறான். நம்மை மட்டும் அந்த மாயா சக்தியினால் கண்டம் கண்டமாகக் குறுக்குகிற அந்தஃகரணத்தோடு சேர்த்துக் கட்டிப் போட்டிருக்கிறான். இதனால் நாம் ஒன்று, இப்படிக் கட்டுப்பட்டு ஜீவர்களாக மாத்திரம் இருக்கிறோம்; அல்லது, அவன் கட்டவிழ்த்து விட்டுத் தனக்கு உள்ளே அனுப்பும்போது அஞ்ஞானம் போய் ஆத்மாவாய் மாத்திரம் இருக்கிறோம். அவனோ த்வைத மாயையிலே கட்டுப்பட்ட மாதிரி ஈச்வரனாக ஜகத் வ்யாபாரம் செய்யும்போதே ஆத்மஞானியாகவுமிருக் கிறான். அவனை 'லிமிட்' பண்ணுகிற மாதிரி இருப்பது மாயை என்கிற அவித்யைதான். ஜீவனை லிமிட் பண்ணு

Koviloor Digital Library

வதோ அந்த மாயையிலிருந்து விளைந்த அந்தஃகரணம். இது ஒவ்வொருத்தருக்கும் ஒரு தினுஸாக, "தனி மனஸ்" என்பதாக, ஆகி அவர்களை ரொம்பவும் சின்னதாகக் குறுக்கி விடுகிறது. மாயை என்பது ஜெனரல். இத்தனை அந்தஃகரணத்துக்கும் பொதுவானது அது. ஸத்ய ஸ்வரூபத்தை அத்தனை ஜீவர்களுக்கும் மறைக்கும் பொதுவான சக்தியாயிருப்பது மாயை. இப்படி மெய்யறிவை மறைப்பதால் இதை 'அவித்யை' என்றும், இதைக் கொண்டு ஜகத் வ்யாபாரத்தை நடத்தும் ஈச்வரனே அவனைப் பொறுத்தமட்டில் இதனால் தன்னுடைய மெய்யறிவை இழக்காமலே இருக்கிறான்.

இதைத்தான் த்ருஷ்டாந்தம் காட்டிப் புரியவைக்கும் போது, "பாம்பின் வாய்க்குள்ளேயே விஷப்பல் இருந்தாலும் விஷத்தால் அது பாதிக்கப்படுவதில்லை. அதனிடம் கடிபடுபவர்களை மட்டுமே விஷம் தாக்குகிறது. அதே மாதிரி, 'மாயி'யான, மாயாவியான ஈச்வரனை அவனுடைய மாயை பாதிக்காமல், அவன் அதை யாரைக் குறித்து ப்ரயோகிக்கிறானோ அந்த ஜீவ லோகத்தை மட்டும் பாதிக்கிறது" என்று சொல்கிறார்கள். மாஜிக் பண்ணுகிறவன், தான் மாயா ஸ்ருஷ்டியாகப் பண்ணும் காட்சிகளை மற்றவர்கள் நிஜமென்று நம்பும்படியாக ஏமாற்றுச் செய்கிறானே தவிர, தானே அவற்றை நிஜமாக நினைத்து ஏமாற மாட்டானல்லவா? இப்படித்தான் மாயா ஜகத் ஸ்ருஷ்டிக்காரனான ஈச்வரனும் என்கிறார்கள்.

"உபாதி"கள் என்பதான லிமிட் பண்ணும் கண்டிஷன்கள் எதனாலும் பாதிக்கப்படாத ஐச்வர்யத்தை உடையவனுக்குத்தான் "ஈச்வரன்" என்று பேர் என்றே ஆசார்யாள் (விஷ்ணு) ஸஹஸ்ர நாம பாஷ்யத்தில் "ஈச்வர" நாமாவுக்கு பாஷ்யம் பண்ணும்போது விளக்கியிருக்கிறார். "ஐச்வர்யம்" என்றால் ஈச்வரனுடைய உடைமை, அவனுடைய தன்மை என்று அர்த்தம். ஆட்சி செய்கிற சக்தி உள்ளவன்தான் ஈச்வரன். "ஈச்" என்ற தாதுவுக்கு ரூல் பண்ணுவது, கவர்ன்

Koviloor Digital Library

பண்ணுவது, கமான்ட் பண்ணுவது என்று அர்த்தம். இப்படி மற்றவற்றை அடக்கி ஆள்பவன் மாயை தன்னையே அடக்கி ஆளவிட்டுவிடுபவனாக இருப்பானா? மாயையோடு கூடியிருந் தாலும் அந்த மாயையையும் ஈச்வரன் அடக்கி ஆள்கிறான். ஆகையால் அது தன்னிடம் அதன் ஸாமர்த்யத்தைக் காட்டி ஒரு தப்பு 'நானை'த் தோன்றும்படிச் செய்ய விட்டுவிட மாட்டான்.

"ஜீவன் ஆத்மாவைத் தெரிந்துகொள்ளாமல் ஜீவ பாவம் வேறாகவும் ஆத்ம ஸ்திதி வேறாகவும் இருக்கிறது; அதே ஸமயம் அவை ஸம்பந்தமே இல்லாதவையும் அல்ல. ஆகையால்தான் 'ஜீவாத்மா' என்ற வார்த்தை ஏற்பட்டது" என்று பார்த்தோம். ஆனால் ஈச்வரன் எப்போதும் ஆத்மாவை அறிந்தவனாக ஞான ஸ்திதியிலேயே இருப்பதால் ஈச்வர பாவம், ஆத்மா என்பவை ஸம்பந்தம் மட்டுமுடைய வேறு வேறான இரண்டு அல்ல என்று தெரிகிறது. ஈச்வரனேதான் ஆத்மாவும்; இரண்டை யும் பிரித்து ஸம்பந்தப்படுத்தப்படாது. அதனாலேயே 'ஈச்வராத்மா' என்று சொல்வதில்லை; 'பரமாத்மா' என்றே சொல்கிறோம் என்றும் பார்த்தோம்.

"அப்போது 'பரமாத்மா' என்று ஏன் சொல்லவேண்டும்? வெறுமனே ஆத்மா என்றால் போதாதா?" என்றால், போதாதுதான். ஆத்மா என்று மாத்திரம் சொன்னால் ஜீவர் களான நம்முடைய நினைப்பில் அப்போது ஜகத்தும் ஜகத் வ்யாபாரமான ஈச்வரனின் கார்யமும் வராமல் போய்விடும். ஈச்வரனும் அற்றுப்போன நிர்குண தத்வத்தையே ஆத்மா என்று நினைப்போம். அதனால் 'பரம' என்று அடைமொழி போட்டது.

"பரம" அல்லது "பர" என்று ஏன் ஆத்மாவுக்கு முன்னே போட்டதென்றால், ஜீவனைவிடப் பரம ச்ரேஷ்டமான ஸ்தானத்தில் ஈச்வரன் இருப்பதால் அப்படிப் போட்டிருக் கிறது. ஆத்மாவாக மாத்திரம் அவன் இல்லை என்பதால் அவனை ஆத்மா என்று மட்டும் சொல்லமுடியாது. அவனு

Koviloor Digital Library

டைய நிலையிலிருந்துகொண்டு ஈச்வரனைப் பார்க்கும் போது அவனுக்கு ஆத்மா வேறாக இல்லாததால் ஈச்வராத்மா என்றும் சொல்லமுடியாது. ஆனால் நம்முடைய நிலையிலிருந்து பார்க்கும்போது, ஏக ஆத்மாவே நம்மாதிரி அஞ்ஞானியாகவும், அல்ப சக்தனாகவும் இல்லாமல் நம்மை விட மிக உயர்வான, உத்தமமான ஸர்வஜ்ஞனாகவும், ஸர்வ சக்தனாகவும் ஈச்வர வேஷம் போட்டுக்கொண்டிருக்கும் போது அப்படியிருப்பவனை அவனுடைய அந்த உயர்வு தோன்றும்படியாகப் பரமாத்மா என்று சொல்லவேண்டிய தாகிறது.

இது அத்வைதிகளின் நோக்கிலே சொன்னது. ஒரே ப்ரஹ்மம், ஒரே ஆத்மா என்பவர்கள் ஏன் பரமாத்மா, ஜீவாத்மா என்று இரண்டு சொல்லவேண்டும் என்பதற்கு இவ்வளவு சொல்லவேண்டியதாயிற்று. உச்சி அத்வைதத்தில் இல்லாமற் போகும் அநேக இரட்டைகளை வ்யவஹார நோக்கில் (empirical existence என்கிறார்களே அந்த நடைமுறை லோகத்தின் கோணத்திலிருந்து) அத்வைதம் ஒப்புக்கொள்கிறபோது சொல்கிற ஒரு இரட்டைதான் இப்படிப் பரமாத்மா, ஜீவாத்மா என்பதும்.

த்வைத 'மோக்ஷ'மும் ப்ரக்ருதி (மாயை)யும்

எந்த ஸித்தாந்தப்படியும் மோக்ஷம் என்பது கர்மாவின் கதியிலிருந்தும், இந்த்ரிய மனோ இழுப்புக்களிலிருந்தும் விடுபட்டு ஸம்ஸார சக்ரத்திலிருந்து தப்பி சாச்வத ஸுகத்தை அநுபவித்துக்கொண்டிருப்பதுதான். இப்படிப் பட்ட சாச்வத ஆனந்த நிலையான மோக்ஷம் என்பது இந்த லோகத்தை விட்டு, புனர்ஜன்மா இல்லாமல் பரமாத்மாவின் ஸ்தானத்துக்குப் போய் அவரோடேயே என்றென்றைக்கும் இருந்துகொண்டிருப்பதுதான் என்று மற்ற ஸித்தாந்திகள் சொல்கிறார்கள். அவர்கள் கொள்கைப்படி, பரமாத்மா என்பதாகத் தனக்கு வேறாக உள்ள ஒருத்தனோடு இருப்பது, பக்தி பண்ணுவது, அவனுக்கு தாஸ்யம் (பணிவிடை) செய்வதென்பதெல்லாம் மோக்ஷ நிலையில் தன்னுடையு

Koviloor Digital Library

நிஜமான உள் ஸ்வரூபமான ஆத்மாவாக இருக்கிறபோதும் ஜீவனுக்கு இருக்கிறது. அதாவது பக்தி முதலான எண்ணங் களும் உணர்ச்சிகளும், தாஸ்யம் புரிவது முதலான செயல் களும் ஜீவாத்மாவுக்கு எப்போதும் இருப்பதாக இந்தக் கொள்கையிலிருந்து ஏற்படுகிறது.

இப்படி நினைக்க மனஸும், கார்யம் செய்ய தேஹமும், செய்கிற இடமாக ஒரு லோகமும் (வைகுண்டமோ, கைலாஸமோ எதுவோ ஒரு லோகம்) இருந்தாலும், 'இவை எல்லாமே அப்ராக்ருதம், அதாவது ப்ரக்ருதி (மாயை)யின் ஸம்பந்தமில்லாதவை. அதனால் அங்கே நம்முடைய ப்ராக்ருதமான லோகத்தில் மாயா வசப்பட்ட மனஸாலும் தேஹத்தாலும் நாம் உபத்ரவம் வரவழைத்துக் கொள்கிறது போல இருக்காது. எல்லாமே நல்லதாயிருக்கும்' என்கிறார் கள்.

நல்லதாயிருக்கும் என்றாலும் அது ஆத்மாவாயிருப்பதற் கில்லை என்றுதான் நாம் பார்க்கிறோம். தூக்கத்தில், மூர்ச்சையில், ஸமாதியில் கெட்டதோடு நல்லதும் இல்லா மலே ஆத்மா இருப்பது தெரிகிறது. 'நல்லது' என்பதும், இருக்கிற ஆத்மாவின் ஜீவாபாஸத்தினால் அறியப்படுகிற இன்னொன்றாகத்தான் இருக்கமுடியும். அதாவது, ஜீவாத்மா வால் அறிந்து அநுபவிக்கப்பட வேண்டிய அநேக த்வைத வஸ்துக்களில் ஒன்றாகத்தான் நல்லது என்பதும் இருக்கும். இன்னொன்றை ஜீவாத்மா அறிந்தநுபவிக்கும் நிலையில் இருந்தால் அப்போது தன்னை அறிந்தநுபவித்துக்கொள்ள முடியாது. இரண்டு விஷயங்களை எப்படி ஒரே ஸமயத்தில் அறியவும் அநுபவிக்கவும் முடியும்? நம்முடைய மனஸ் ஒருமைப்பட்டு, புத்தி 'ஸ்டெடி'யாக இல்லாதபோது பல நினைப்பு, பலவற்றை மேல்வாரியாக அறிவது, ஆழமாயில் லாமல் பல அநுபவங்களை அடுத்தடுத்துப் பெறுவது – என் றெல்லாம் உள்ளது. மனஸ் ஒன்றிலேயே குறியாகக் குவிந்து விட்டால் அந்த ஒன்றுதான் நினைப்புக்கும் அறிவுக்கும்

Koviloor Digital Library

அநுபவத்துக்கும் வரும். அக்கம்பக்கத்தில் என்ன நடந்தா லும் தெரியாமல் இப்படி ஒன்றிலேயே ஈடுபட்டிருப்பதுதான் அதைக் குறித்த பூர்ணமான, நிஜமான அறிவும் அநுபவமும் ஆகும். அதாவது ஒரே ஸமயத்தில் ஒன்றுக்கு மேற்பட்ட வஸ்துக்களை அறிந்தநுபவிக்க முடியாது. எனவே அப்ரா க்ருதமே ஆனாலும், வைகுண்ட கைலாஸாதிகளில் ஜீவாத்மா என்பது தனக்கு இன்னொன்றான நல்லதை, இன்னொன்றான ஈச்வரனை அறிந்து அநுபவித்துக் கொண்டிருக்கிறவரையில் தன்னை அறிந்து அநுபவித்துக் கொள்ளவில்லை என்றே அர்த்தம். தன்னையே தெரிந்துகொள்ளாத இப்படிப்பட்ட நிலையாகவா ஜீவனின் ஸத்ய நிலை இருக்கும்? அவனுடைய ஸத்ய நிலையில் அவனைச் சேர்க்காமலிருக்கும் ஒரு ஸ்தானம் மோக்ஷமாக இருக்கமுடியுமா? ஆத்ம ஞானம், ஆத்மா நுபவம் (இரண்டும் ஒன்றேதான்) இல்லாத ஒரு ஸ்திதியை ஜீவனின் நிஜ ஸ்திதி என்றோ, மோக்ஷமென்றோ ஒப்புக்கொள் வதற்கில்லை. இப்படி அத்வைதிகள் சொல்கிறார்கள்.

கார்யம் நினைப்பு என்பவை, இவை இல்லாத ஆத்மாவில் அதற்கு அந்யமாக ஏற்பட்டவையான க்ருத்யங்கள்தான். 'க்ருதம்' என்றால் 'செய்யப்பட்டது', 'செய்யப்பட்டது' என்றால் இயற்கையாய் இல்லாததுதானே? இந்த 'க்ருத'த்தை வைத்தே ப்ரக்ருதி என்ற பெயர் ஏற்பட்டிருக்கிறது. "ப்ர" என்பது அப்புறம் வருகிற "க்ருதி" என்ற வார்த்தைக்கு அழுத்தம் கொடுத்து உறுதிப்படுத்துவதே. 'இயற்கை' என்று 'ப்ரக்ருதி'யைச் சொன்னாலும், ஸ்வபாவமாக உள்ள குண மற்ற, செயலற்ற ஆத்ம ஸ்திதியில் குணங்களையும் செயல்களை யும் உண்டாக்குவதால் செயற்கைதான் ப்ரக்ருதி. எத்தனை உத்தமமான கார்யம் ஆனாலும், அதாவது பகவானையே த்யானித்து பக்தி பண்ணுவதான, அவனுக்கே தாஸ்யம் பண்ணுவதான, பரம உத்தமமான கார்யமானாலும்— அதுவும் ஆத்மாவின் ஸ்வபாவ ஸ்திதிக்கு அந்யமாக ஏற்பட்டதுதான். அது ப்ரக்ருதிக்கு மேற்பட்ட அப்ரா க்ருதம் என்று சொல்வதில் ஸாரமில்லை. பகவான் (கீதையின்

Koviloor Digital Library

ஏழாம் அத்யாயத்தில்),கீழ்ப்பட்ட அப்ரா ப்ரக்ருதிக்கு மேற்பட்டதாக பரா ப்ரக்ருதி என்று ஒன்றைச் சொல்கிற மாதிரி வேண்டுமானுல், விஷய ஸுகத்தில் இழுத்துவிடும் கீழ்ப்பட்ட ப்ரக்ருதியாயில்லாமல், பகவானிடமே இழுத்து சேர்ப்பிக்கும் ப்ரக்ருதியாக மோக்ஷத்தில் இருக்கிறது என்று த்வைதிகள் சொல்லிவிட்டுப் போகலாம். பகவானே இப்படித்தான் உசந்த ப்ரக்ருதி என்று ஒன்றைச் சொல்லி அப்புறம் குணமும் கார்யமுமில்லாத ப்ரஹ்ம நிலையைச் சொல்லியிருக்கிருரே தவிர, குணங்களோடேயே கார்யங்களோடேயே இருக்கும்போதிலும் ப்ரக்ருதி ஸம்பந்தமில்லாமல் அப்ராக்ருதம் என்று ஒன்று இருப்பதாகச் சொல்லவில்லை,

ஏதோ ஒரு லோகத்துக்குப் போய் வஸிப்பது என்று வந்துவிட்டால் அது ப்ரக்ருதி ஸம்பந்தமானதுதான், அதாவது மாயா ஸம்பந்தமானதுதான். மாயை உள்ளவரை மோக்ஷம் எப்படி ஸாத்யம்? ''இது நல்லதே செய்கிற மாயையாதலால் நாங்கள் இதிலேயே இருந்துகொண்டு இருக்கிருேம். இதையே மோக்ஷமாக வைத்துக்கொள்கிருேம்'' என்று வேண்டுமானுல் சொல்லிவிட்டுப் போகட்டும். ''இதுதான் மோக்ஷம்'' என்று எப்படிச் சொல்லலாம்? அத்வைதிகள் சொல்கிறபடி ஜீவனும் ப்ரஹ்மமும் அபேதமாகப் போய் விடுகிற ஒரு மோக்ஷம் கிடையாது என்று எப்படிச் சொல்லலாம்?

தமக்கு த்வைதந்தான் பிடித்திருந்த போதிலும் அதுவே முடிவான மோக்ஷம் என்று ஸாதிக்காதவர்களாகவும் சில பெரியவர்கள் இருந்திருக்கிருர்கள். அத்வைதந்தான் மோக்ஷம்; ஆனுல் ஈச்வரபக்தி இல்லாத அந்த மோக்ஷம் எங்களுக்கு வேண்டாமென்று அவர்கள் சொல்வார்கள். திருவாரூரில் இருந்த பரம சாம்பவர்களான 'திருக்கூட்டத்தார்' இப்படித்தான் இருந்தார்கள் என்று சேக்கிழார் சொல்கிருர் :

Koviloor Digital Library

கூடும் அன்பினில் கும்பிட லேஅன்றி
வீடும் வேண்டா விறலின் விளங்கினார்

என்கிறார். அதாவது, 'ப்ரேமையில் ஈச்வரனோடு கலந்து அவனை பக்தி பண்ணிக்கொண்டேயிருக்க வேண்டும்; இதை விட்டு விட்டு 'வீடு' என்கிற மோக்ஷத்துக்குப் போக வேண்டாம்' என்று அந்த சிவனடியார்கள் நினைத்தார்களாம். இப்படிச் சொன்னதாலேயே கைலாஸம் மாதிரியான ஒரு லோகத்தில் போய் த்வைதமாக ப்ரேம பக்தி பண்ணிக்கொண்டிருப்பதை அவர்கள் (சேக்கிழாரும் கூடத் தான்) வீடாக (மோக்ஷமாக) நினைக்கவில்லை என்று தெரிகிறது.

இந்தப் பாட்டின் முதல் இரண்டு வரிகளிலிருந்து இன்னொரு ஸ்வாரஸ்யமான ஸமாசாரமும் தெரிகிறது. அத்வைத மோக்ஷம் வேண்டாமென்று இவர்கள் சொல்பவர்களாயிருந்தாலும், அவர்கள் அத்வைதமான ஸமரஸபாவத்திலேயே லோகத்தில் எல்லாவற்றையும் ஒன்றாகப் பார்த்திருக்கிறார்கள்! ஜீவ-ப்ரஹ்ம ஐக்யம் தவிர மற்றவற்றில் அத்வைதிகளாக இருந்திருக்கிறார்கள். மண்ணாங்கட்டியும் தங்கமும் அவர்களுக்கு ஒன்றாக இருந்திருக்கிறது:

ஓடும் செம்பொனும் ஒக்கவே நோக்குவார்.

ஆக்கல், அழித்தல் என்ற வித்யாஸமே தெரியாத லக்ஷ்மீகரமான மனோபாவத்தில் அவர்கள் இருந்தார்களாம்:

கேடும் ஆக்கமும் கெட்ட திருவினார்.

அழிவு, கேடு அவர்களைத் தொடாது. உசந்த ஸம்பத்துள்ள வாழ்வு, ஆக்கமும் அவர்களைத் தொடாது. ஸமபாவம் என்ற பரமமங்கள வஸ்து நிறைந்த "திருவினார்". மங்களந்தான் லக்ஷ்மி, அதுவே திரு.

த்வைத ருசிக்குத் துன்பம் தவிர்க்கவொண்ணாதது

அப்படியாவது த்வைதிகள் மோக்ஷமாகச் சொல்லும் வைகுண்ட கைலாஸாதி லோகத்திலே அவர்கள் சொல்கிறபடி சாச்வதமாக நல்லதாகவே இருக்கிறதா என்று பார்த்

Koviloor Digital Library

தால் அப்படியும் காணும். ஸாக்ஷாத் மஹாலக்ஷ்மீ, கருடாழ்வார், ஆதிசேஷன், நாரதர் மாதிரியானவர்கள்கூட ஏதாவது ஸந்தர்பத்தில் கோபம், துக்கம், போட்டி போன்ற உணர்ச்சிகளுக்கு ஆளாவதாகப் புராணங்களிலிருந்து தெரிகிறது. இவர்கள் சாபத்தைக்கூட வாங்கிக் கட்டிக்கொள்வதைப் பார்க்கிறோம். ஏன், பகவானுக்குமே இப்படி ஏற்படுகிறது! முதலிலேயே சொன்னேன், பகவானுக்கு யாரைவிட அதிக ப்ரியம் கிடையாது என்கிறார்களோ, அந்த ராதையைக்கூட விரஹம் என்று கதறக்கதற அடிக்கிறானென்று.

இரண்டு வஸ்து இருந்தால் இப்படி ஸுகமும் துக்கமும் மாறி மாறி வராமல் இருக்க முடியாது. எதிரெதிர் ஜோடிகள்—pairs of opposites என்பது—இல்லாவிட்டால் த்வைதம் ருசிக்கவே ருசிக்காது. எப்போதும் பார்த்தாலும் ஸந்தோஷமாகவே இருந்துகொண்டிருந்தார்கள் என்று ஒரு கதை எழுதினால்கூட அலுப்புத் தட்டிவிடும். கஷ்டம் வரணும், துஷ்டன் வரணும், கதாநாயகியைத் தூக்கிக் கொண்டுபோகணும்; கதாநாயகனுக்குப் பட்டாபிஷேக ஸமயத்தில் எவளாவது ஒருத்தி எதையாவது கிளப்பிவிட்டு அதை நிறுத்தணும்; ஸபாமத்தியிலே சத்ருக்களிடம் மஹத்தான மானபங்கப் பட்டுக்கொண்டு நிராதரவாகக் கதாநாயகி கதறணும்; அடிச்சுக்கணும், புடைச்சுக்கணும்—இப்படி நடந்தால்தான் கதைகூட ருசிக்கிறது.

த்வைதத்திலே ஸந்தோஷ அநுபவம் வேறொன்றைக் குறித்தே ஏற்படுவதால் அது சாச்வதமாகத் திகட்டாமலிருக்க முடியாது. ஆகையால் நடுப்பற நடுப்பற அது மறைந்து போய் மறுபடி வந்தால்தான் அலுப்புத்தட்டாமல் ஸந்தோஷாநுபவம் பெற முடியும். நஷ்டமான ஒன்றை மறுபடி பெறும்போதுதான் அநுபவானந்தம் த்வைதத்தில் ஜாஸ்தியாகும். அதற்காகத்தான் பகவான் தனக்குப் பரமப்ரியமானவர்களும் அவ்வப்போது தன்னை விட்டுப் பிரியுமாறு பண்ணுவது. த்வந்தங்கள், pairs of opposites த்வைதத்தில் இருந்தே ஆகணும். அப்போதுதான் அதற்கு ருசி.

Koviloor Digital Library

ராத்ரி—பகல்; ஐஸ்லாண்டு—ஸஹாரா; புலி—மான்குட்டி; தாழம்பூ—கத்தாழை; ஜனனம்—மரணம்; கல்யாணம்—இன்னொன்று; சர்க்கரைப் பொங்கல்— அது திகட்டாமலிருப்பதற்கே நடு நடுவே மிளகாய்த் தொக்கு; முடிவாக நல்லது—கெட்டது; இன்பம்—துன்பம்.

இம்மாதிரி நடுவிலே நடுவிலே துன்பம் வருகிறது என்றால் அது சாச்வதமான இன்பமில்லை. சாச்வத இன்பமில்லாவிட்டால் அது மோக்ஷமுமில்லை. திகட்டாமல் அப்படியே சாச்வத இன்பமாக இருக்க முடிவது அத்வைதமான ஆத்மாவை ஸாக்ஷாத்கரிக்கும்போதுதான்

—என்றிப்படி அத்வைதிகள் சொல்கிறோம்.

வைகுண்டம், கைலாஸம் என்பதாக ஒரு லோகத்துக்குப் போவது, அங்கே ரூபத்தோடு இருக்கும் சிவனோடு, விஷ்ணுவோடு வஸிப்பது என்றில்லாமல், ரொம்பவும் தத்வ ரீதியிலே போய் உசந்த த்யானத்திலே லயித்திருப்பதைச் சொல்லும் காஷ்மீரி சைவம் மாதிரியான ஸம்ப்ரதாயங்களும் இருக்கின்றன. ஆனால் அவற்றிலுங்கூட ஐக்யம் ஆவது என்றில்லாமல் த்யானம் பண்ணுவது, லயம் பெறுவது என்று உள்ளவரை த்யான லக்ஷ்யத்திலிருந்து லயம் சிதறி விலகுவதற்கும் இடமிருக்கத்தான் செய்கிறது. ரூபமுள்ள சிவன் இல்லை, அரூப சிவம் என்றாலும், அதுவாகவே ஆகாமல், அதோடு இழைகிற த்யான லயிப்புதான் என்றால், ஒரு நூலோடு இழைத்துவிட்ட இன்னொரு நூலை எதிர்த்திசையில் முறுக்கிப் பிரித்துவிடுகிறாற்போல, இங்கேயும் பிரிவு ஏற்படத்தான் செய்யும். அதாவது த்யான ஸுகமும் சாச்வதமில்லை. அத்வைதமொன்றுதான் நித்ய ஸுகம்.

பரிசுத்தி செய்துகொள்ளும் பணி

அது லக்ஷ்யமான உச்ச ஸ்தானத்தில், கர்மா எல்லாம் போய் மனஸ் பரிசுத்தியாகி ஒருமுகப்பட்டு நின்ற பிற்பாடுதான் அந்த ஸ்தானத்துக்குப் போகமுடியும். அப்படிப் போகிற மட்டும் நன்றாக த்வைத ஸாதனைகளைத்தான்

Koviloor Digital Library

பண்ணவேண்டும்—ஆனாலும் அத்வைத நினைப்பை ஒரு அடியிழையாக அறாமல் வைத்துக்கொண்டே.

பரிசுத்தி செய்வதற்காக ஸ்வதர்மப்படி அவரவருக்கு வாய்த்த கார்யங்களை வேத சாஸ்த்ரம் விதித்தபடி பண்ண வேண்டும். காம க்ரோதாதி அழுக்குப் போவதற்காக மனஸை பகவானிடம் ப்ரேமையில் நினைத்துக்கொண்டு பக்தியில் உருகவேண்டும். சும்மாவுக்காக இப்போது நாம் இருக்கிற ஸ்திதியிலேயே, "நான் எதுவும் பற்றாத ஆத்மா" என்று கதை பண்ணிக்கொண்டிருப்பதில் ப்ரயோஜனமில்லை. அதிலே (ஆத்மாவிலே) தான், என்ன மாயையோ, இத்தனை அழுக்கை ஜன்ம ஜன்மமாக ஏற்றிக் கொண்டிருக்கிறோமே! முணுக்கென்றால் எத்தனை கோபம், பயம் எல்லாம் வந்து விடுகிறது? எத்தனை ஆசைகள் இழு இழு என்று இழுக்கின்றன?

பாஷை ஆராய்ச்சி: அதிலும் பரமாத்ம - ஜீவாத்மா!

ஒரு செப்புச் சொம்பு இருக்கிறது...

'சொம்பு' என்பது 'செம்பு' என்பதன் திரிபு. செப்பு என்பதும் செம்புதான். தமிழ் பாஷையில் 'ம்பு' என்பது 'ப்பு' என்று ஆகிறதிலே ஒரு வேடிக்கை—இதில் ஒரு பொது விதியே இருக்கிறது. பெரிசாக, மூலமாக ஒன்று இருக்கிற போது அதன் பெயரில் 'ம்பு' வரும். அதிலிருந்தே சின்னதாக இன்னொன்று வரும்போது, அல்லது சின்னதாக ஒன்றைச் செய்கிறபோது அதன் பெயரில் 'ம்பு' என்பது 'ப்பு' என்று மாறிவிடும். தாய்ச் சரக்கு "ம்பு"; அதிலிருந்து வந்த குழந்தைச் சரக்குகள் "ப்பு" என்று சொல்லலாம். இரும்பு என்பது மூலப் பொருள்—அது (உ)லோஹத்துக்குப் பேர். ஆனால் அந்த இரும்பைக்கொண்டு ரயில்வே லைன் போட்டால் இருப்புப்பாதை" என்கிறோம். இதே மாதிரி, இலுப்பச் சட்டி என்பது இருப்புச் சட்டிதான். "வரம்பு" என்பது பொதுப்படையான எல்லை. இதையே குறுக்கி ஒரு வயலுக்கு எல்லை கட்டும்போது "வரப்பு" என்கிறோம்.

Koviloor Digital Library

கரும்பு பொதுப்பேர். அதைச் சின்னதாக particularise பண்ணும்போது (குறிப்பிட்ட ஒன்ருக ஆக்கும்போது) கருப்பஞ்சாறு, கருப்பட்டி என்றெல்லாம் ஆகிறது. புலவர்களாக இருக்கப்பட்டவர்கள் மன்மதன் கையிலிருக்கிற தநுஸைக் "கருப்பு"வில் என்றுதான் சொல்வார்கள். 'கம்பு' என்பது கழிக்குப் பொதுப்பேர். இதையே ஒரு மரத்தோடு சேர்த்து அதன் பாகமாகச் சொல்லும்போது "கப்பும் கிளையுமாக" என்கிறோம். "திரும்புவது" பொதுக்கார்யம்; திருப்பம், திருப்பு முனை என்று அதை 'பர்ட்டிகுல'ராகப் பண்ணுகிறோம்.

வினைச் சொல்லில் "ம்பு" என்றிருப்பது பெயர்ச் சொல்லில் "ப்பு" என்ருகிறதும் உண்டு. விரும்பு—வினைச் சொல்; விருப்பு—பெயர்ச்சொல். திரும்பு—திருப்பம் என்பதைக்கூட இப்படிச் சொல்லலாம்.

"ம்பு", "ப்பு" இரண்டையும் சில ஸமயம் ஒரே அர்த்தத்தில் சொல்வதையும் பார்க்கிறோம். ஸம்ஸ்க்ருதத்திலேயே ஜலத்துக்கு 'அம்பு', 'அப்பு' என்ற இரண்டு பேர்களும் இருக்கின்றன. 'தூசி தும்பு', 'தூசி துப்பு' என்று இரண்டு தினுஸாகவும் சொல்கிறோம்.

பொதுவாகச் சொன்னல், பொதுவாயிருப்பது "ம்பு", அதிலே குறிப்பாக ஒன்ருக ஆக்கினது "ப்பு".

சொம்பு, சொப்பு-வுக்கு வருகிறேன். முன்னளில் குழந்தைகள் சமையல் விளையாட்டு விளையாடுவதற்குச் செம்பினல் ஆன பாத்ரங்கள்தான் சின்னச் சின்னதாகப் பண்ணிக் கொடுத்தார்கள். அதனுல் அவற்றுக்குச் "செப்பு" என்று பெயர். செப்புப் பாத்திரம் என்பதாக எத்தனையோ இருந்தாலும், குறிப்பாகக் குழந்தைகளுடைய விளையாட்டு ஸாமான்களுக்கே 'செப்பு' என்று பேர் வந்துவிட்டது. 'சொப்பு' என்பது அதைத்தான். இப்படி செம்பினல் ஆன ரொம்பவும் சின்ன வஸ்துவுக்குச் 'செப்பு' என்று பேர் ஏற்பட்டபின், அதே லோஹத்தினலான பெரிய பாத்திரங்

Koviloor Digital Library

களில் அதிகம் உபயோகிக்கப்படுவதான தீர்த்த பாத்திரத்துக்குச் 'செம்பு' (சொம்பு) என்று பேர் வைக்கும்படி ஆயிற்று. தாய்ச் சரக்கின் பேரில் "ம்பு" வரும்; அதில் உண்டாகும் குழந்தைச் சரக்கின் பேரில் அது "ப்பு" என்றாகி விடுமென்றேனல்லவா? குழந்தை வைத்துக் கொண்டிருப்பது "சொப்பு" என்பதால், தாயார் வைத்துக்கொண்டிருப்பது "சொம்பு" ஆகிவிடுகிறது! வாஸ்தவத்தில் அதுவும் செப்புப் பாத்திரம்தான்,

ஆத்ம தத்வத்திலிருந்து இப்படி பாஷை ஆராய்ச்சிக்கு வந்துவிட்டோமே என்று பார்த்தால் இதிலும் வேதாந்த ஸமாசாரம் வருவதாக ஸமாதானம் பண்ணிக்கொள்ளலாம். எப்படியென்றால், "ம்பு" என்பது மூலமான பரமாத்மா மாதிரி; 'ப்பு' அதிலிருந்து வந்த ஜீவாத்மா மாதிரி என்று வைத்துக்கொள்ளலாம்!

பாத்திரம் தேய்ப்பதுபோல

பாஷை, பேச்சு, மனஸ் எல்லாம் அடிபட்டுப் போகும் ஸமாசாரம் பேசிக்கொண்டிருந்தோம். அதில் உபமானத்துக்குச் செப்புச் சொம்பைக் கொண்டுவந்தேன். அது எத்தனையோ நாளாகக் கும்பியிலே புதைந்து அழுக்கு காய்ந்து கனமாய்ப் பிடித்துக்கொண்டிருக்கிறதாக வைத்துக் கொள்வோம். அத்தனை அழுக்குக்கும் உள்ளே சொம்பு இருப்பது வாஸ்தவம் ஆனால் அதனால் என்ன ப்ரயோஜனம்? அதை எத்தனை நாள், எத்தனை புளி போட்டு, உரிமட்டை, மண் இதனாலெல்லாம் தேய்க்க வேண்டியிருக்கிறது? களிம்பு லேசிலே விடுகிறதா? அதிலே பிடித்திருக்கிற பச்சை எல்லாம் போய் அது பளிச்சென்று ஆவதற்குத்தான் இத்தனை தேய்ப்பதாக நாம் சொல்கிறோம். ஆனால் வாஸ்தவத்தில் தேய்ப்பதெல்லாம் களிம்பு போவதற்கு மட்டுந்தான். அழுக்கு எல்லாம் போன பிறபாடு பாத்ரம் தானே பளிச்சென்று இருந்துவிடுகிறது! நாம் ஆக்கவில்லை. பாத்ரத்தை நாம் புதுசாகப் பண்ணவில்லை; அதனுடைய பரிசுத்

Koviloor Digital Library

த்தையும் நாம் பண்ணவில்லை. தடிப்பாக அதை மூடியிருந்த அசுத்தத்தையே எடுத்தோம். அவ்வளவுதான்.

இந்த செப்புப் பாத்ரம் மாதிரிதான் ஆத்மா இருக்கிறது. அது தெரியாதபடி அதன்மேலே ஏக அழுக்கை அப்பிக் கொண்டிருக்கிறோம். நம் மனஸினாலே நினைக்கிற எண்ணங்கள், வாயாலே சொல்கிற வார்த்தைகள், உடம்பாலே செய்கிற காரியங்கள் இவற்றால் எல்லாம் கும்பி மண்ணைக் கொண்டுவந்து கனமாகப் படியவிட்டிருக்கிறோம். அப்படியிருக்கும்போது உள்ளுக்குள்ளே ஆத்மா இருக்கிறது என்றாலும் அதைத் தெரிந்துகொள்வதற்குப் பரிசுத்தி பண்ணத்தானே வேண்டும்? முதலில் மனோ, வாக், காயங்களால் பண்ணின கெட்டவை எல்லாம் போக அதே மனோ, வாக், காயங்களாலேயே அநேக நல்லதைப் பண்ணித் தேய்த்துத் தேய்த்து அலம்ப வேண்டும். கும்பி மண் போக வேறே மண், மட்டை, புளி போட்டுத் தேய்க்கிற மாதிரி. முடிந்த முடிவிலே பார்த்தால் இந்த மண், மட்டை, புளி எல்லாமும் அசுத்தம்தான். (ஸத்வ குண வ்ருத்திக்குப் புளி ஆகாது. ஸாதுக்கள், ஸந்நியாஸிகள் புளியைத் தள்ளித்தான் ஆஹாரம் பண்ணவேண்டும்.) ஆனாலும் ஆரம்பத்திலே இவைதான் அசுத்தத்தைப் போக்குகிறவை. கடைசியில் சுத்த ஜலத்தைவிட்டுப் பாத்ரத்தை அலம்புகிறபோது, கொஞ்சங்கூட மட்டை, மண், புளிக்கோது இல்லாமல் அலம்புகிறோம். எதனால் அசுத்தத்தைப் போக்கினோமோ அதையும் அசுத்தமென்று சுத்த ஜலத்தைக் கொட்டி அகற்றுகிறோம். இதே மாதிரி கடைசியில் மனோ-வாக்-காயம் எல்லாவற்றையுமே ஆத்மாவை அசுத்தி செய்பவைதான் என்று ஞான விசார தீர்த்தத்தின் தாரையில் அலம்பி அப்புறப்படுத்திவிடத்தான் வேண்டும். அதற்காக, முதலிலேயே அழுக்குக் கப்பி களிம்பு பிடித்திருக்கிற பாத்ரத்தில் வெறும் சுத்த ஜலம் விட்டு அலம்பினால் போதுமா? இப்படித்தான் ஆரம்பத்திலேயே ஆத்ம விசாரம் மட்டும் போதும் என்று பண்ணுவது. ஆரம்பத்தில் மனஸிலே ப்ரேமை,

Koviloor Digital Library

பக்தி முதலிய நல்ல எண்ணங்களோடு, கட்டுப்பாடு, விநயம் முதலான குணங்களோடு, சரீரத்தாலும் வாக்காலும் சாஸ்த்ரம் சொல்கிற சடங்குக் கர்மாக்கள், பரோபகாரம் முதலான ஸத்கர்மாக்கள் பண்ணி, ஜன்மாந்தரமாகத் தடிப்பேற்றி விட்ட கெட்டவற்றையெல்லாம் தேய்த்து அப்புறப்படுத்தவேண்டும். அப்புறம்தான் இந்த நல்ல ஸமாசாரங்களிலும்கூட ஆத்மாநுபவத்தின் சாச்வதமான சாந்தமும் ஆனந்தமும் இல்லை என்பதனால் இவற்றையும் ஞான தீர்த்தத்திலே அலம்பி அகற்றவேண்டும். த்யானம் பண்ணுவது என்பதாக ஒன்று செய்வதும்கூட ஆத்மாவாக இருப்பதற்கு அந்யமானதுதான். அதையும் நிறுத்திவிட்டு வெறுமே ஆத்மாவாக இருப்பதே முடிவு. ஆனால் அது கடைசியில்தான். அந்தக் கடைசி கட்டம் எப்படி நடக்கிறது என்பதை புத்தியாலோ வார்த்தையாலோ விளக்கி வைக்க முடியாது. ஏனென்றால் புத்தி, மனஸ், வாக்கு எல்லாவற்றுக்கும் மேலான ஒரு நிலை அது.

இப்போது அடிக்கடி கேள்விப்படுகிற உபநிஷத் "கொடேஷன்" அப்படித்தான் சொல்கிறது.* இவற்றுக்கு அகப்படாத நிலையை இவற்றால் எப்படி விளக்குவது? அங்கே போன அப்புறம் மனஸும், வாக்கும், சரீர ப்ரக்ஞையுமே போய்விடுவதால் இவற்றாலே பண்ணும்

---

* "எதை எட்டமுடியாமல் வாக்கானது மனத்தோடு திரும்பிவிடுகிறதோ" என்று ஆத்மாநுபவம் தைத்திரீய உபநிஷதத்தில் குறிப்பிடப்படுகிறது. அவ்வுபநிஷத்தின் ஆனந்தவல்லி எனும் பகுதியில் இரண்டு இடங்களில் இச் சொற்றொடர் காணப்படினும், இதைத் தொடர்ந்து ஸ்ரீசரணர்கள் புண்ய-பாபம், கர்த்ருத்வம் முதலியவற்றைப் பற்றிச் சொல்வது இரண்டில் பின்னதாக உள்ள இடத்துக்கே பொருந்தும்.

ஸ்ரீசரணர்கள் வேத மந்த்ர மூலவாசகங்களைப் பெரும்பாலும் தம்முடைய பொது உபந்யாஸங்களில் கூறுவதில்லை. தனிப்பட்டவர்களோடு உரையாடுகையில் அவர் இவற்றை ஸரளமாக எடுத்தாளுவதுண்டெனினும், மிகுந்த மரியாதையுடன் போற்றிக் காக்கவேண்டிய இம்மந்த்ர வாசகங்களை அச்சிலே அதிகம் கொடுப்பது அவருக்கு உவப்பாக இராமலிருக்கலாமென்ற நினைப்பினாலேயே நம்முடைய தொகுப்புக்கள் உருவாக்கப்பட்டுள்ளன.

Koviloor Digital Library

பாபம் மட்டுமில்லாமல் புண்யமுங்கூட இல்லாமற் போய் விடுகிறது. மனஸுக்கும் வாக்குக்கும் எட்டாததைப் பிடித்து விட்டவன் அப்புறம், "நான் ஏன் இன்னின்ன புண்யம் பண்ணவில்லே? நான் ஏன் இந்தந்த பாபத்தைப் பண்ணினேன்?" என்றெல்லாம் கேட்டுக்கொண்டிருப்ப தில்லே என்று அந்த உபநிஷத்திலே சொல்லியிருக்கிறது. செயலேப் புரிந்து அதற்கான பலனே அநுபவிக்கிற கர்த்தா வாக ஆத்மா இல்லே, அப்படி இல்லாத அதுவே "தான்" என்று இவனுக்குத் தெரியுமாதலால் இப்படியிருக்கிறுன். ஆனுல் "தானே"த் தெரிந்துகொள்ளாத நாம் அவன் மாதிரி சும்மாயிருக்க முடியுமா?

தேய்த்து சுத்தம் செய்கிற மண், புளி முதலான ஸாமான்களே சுத்த ஜலத்திஞல் அலம்பி அப்புறப்படுத்திய பிறகு, இந்த சுத்த ஜலமும்கூடச் செப்புச் சொம்பில் ஒட்டிக் கொண்டிருக்க விடுவதில்லே. அந்த ஜலம் இருந்தால்கூடக் களிம்பு பிடிக்கத்தான் செய்யும். அதனுல் ஜலத்தையும் ஒட்டத் துடைத்து விட்டே வைக்கிறேம். அப்படித்தான் ஆத்ம ஞான ஸித்தியை ஒருத்தன் பெற்றுவிட்ட பின் த்யான மும் ஆத்மவிசாரமும்கூடப் போய்விடுகின்றன.

நன்ருகத் தேய்த்து, ஈரம் போக ஒட்டத் துடைத்து வைத்தால்கூட, நாள்பட்டால் காற்றிலே கரைந்திருக்கிற வஸ்துக்கள் பட்டுப்பட்டே சொம்பில் பச்சை ஏறி விடும். அதனுல் அடிக்கடித் தேய்த்து வைத்துக்கொண்டே தானிருக்க வேண்டும். ஆத்ம நிஷ்டை விஷயமும் இப்படித் தான். எத்தனேயோ ஸம்ஸ்காராதிகளால் சுத்திபண்ணின பின்பு ஆத்ம அநுபவம் வருவதும் ஆரம்பத்தில் மின்னல் வெட்டுகிற மாதிரி இருந்துவிட்டு மறைந்து தான் போய் விடும். "மின்னலுக்கும் மின்னல்: கண் கொட்டுகிற மாதிரி இருந்து போய்விடுவது" என்று கேநோபநிஷத்தில் சொல்லி யிருக்கிறது. உள்ளே நித்ய நிரந்தர மின்னலாக அது இருப் பதை நாராயண ஸூக்தத்தில் விரிவாக வர்ணித்திருந் தாலும் அநுபவத்திலே பார்த்தோமாஞல் அது

Koviloor Digital Library

எத்தனையோ ஸாதனைகளுக்குப் பிறகும் மின்வெட்டு மாதிரி வெட்டிவிட்டுப்போவதாகத்தான் நீண்டகாலம் இருக்கிறது. அப்படி உள்ளவரை, அந்த ஆத்மாநுபவ மின்னல் மறைந்த பிற்பாடு, ஒருதரம் தேய்த்துப் பளிச்சென்று வைத்த சொம்பை மறுபடி தேய்க்கிறது போல அநுஷ்டானங்களையும் மற்ற ஸத்கர்ம ஸாதனைகளையும் தொடரத்தான் வேண்டும். இப்படிச் செய்துகொண்டே போய், முண்டக (உபநிஷ)த்திலே சொல்லியிருக்கிறாற் போலக் கர்மா எல்லாம் நாசமாகி, ஹ்ருதயத்தில் வாஸனை முடிச்சு அவ்வளவும் தெறித்துவிழுந்த பிற்பாடுதான் ஆத்ம ஸித்தி சாச்வதமாகிறது. அப்போது சொம்பு செம்பாக இல்லாமல் தங்கமாக ஆகிவிடுகிறது. அப்புறம் களிம்பு பிடிக்காது. தங்கம்கூட காலக்ரமத்தில் பளபளப்பு குறைந்து மெருகு போடவேண்டியதாகிறது. ஆத்மா அதற்கும் மேலே! என்றைக்கும் ஜ்வலிப்பு குறையாத ஸூர்யன் மாதிரி!

'ரவை ஸல்லா' உவமை

திருப்பதியில் "ரவை ஸல்லாக் கட்டளை" என்று பழைய கால ராஜாக்கள் ஒன்று வைத்திருந்தார்கள். தற்காலத்தில் அத்தனை அசுத்தத்துக்கும் கோயில்தான் இடம் என்று ஆக்கியிருக்கிறோம்! ப்ராகாரத்தின் பக்கம் போவதென்றாலே மூக்கைப் பிடித்துக்கொள்ள வேண்டியிருக்கிறதென்று சொல்கிறார்கள். நான் வருகிறேன், மந்த்ரி, கமிஷனர் வருகிறாரென்றால் அப்போது நடப்பது வேறே. மற்ற நாளில் எப்படியிருக்கிறதென்று பக்தர்கள் துக்கப்பட்டுக்கொண்டு என்னிடம் சொல்கிறார்கள். ப்ராகாரத்துக்கு வெளியிலே மட்டுமில்லை; ஸந்நிதிகளிலேயே கொஞ்சங்கூட சுத்தமில்லை, ஸ்வாமி மேலே சார்த்துகிற வஸ்த்ரமே பிடித்துணிக்கும் கேவலமாக அழுக்கேறியிருக்கிறது என்று துக்கப்பட்டுக் கொண்டு சொல்கிறார்கள்.

இதே தேசத்தில் நம் முன்னோர்கள் மனஸுக்குப் பரிசுத்தி தரவேண்டிய ஆலயம், புறத்திலும் பரம சுத்தியா

Koviloor Digital Library

யிருக்க வேண்டுமென்பதில் கண்ணும் கருத்துமாயிருந்து அப்படியே நடத்திக் கொடுத்திருக்கிறுர்கள்.

அப்போது திருப்பதியில் ரவை ஸல்லா கட்டளை நடந்து வந்தது. ரவை ஸல்லா என்ருல் 'டாக்கா மஸ்லின்' மாதிரி நல்ல வெள்ளை வெளேரென்றும், ரொம்ப மெல்லிசாகவும் இருக்கிற துணி. மேலே போட்டுக்கொண்டால் போட்டுக் கொண்டிருக்கிறேமோ என்றே தெரியாது; உடம்பெல்லாம் தெரியும். நல்ல நைஸாக, மெல்லிசாக நெசவு பண்ணி யிருந்ததால் உடம்போ, தரையோ எதிலே போட்டாலும் நன்ருகப் படிந்துவிடும். துளி ஈரக்கசிவு (உடம்பிலோ தரையிலோ) இருந்தால்கூட அப்படியே ஒட்டிக்கொண்டு விடும். இப்படி அதன் texture இருந்ததால் எதிலே அது கொஞ்சம் பட்டுவிட்டாலும் அந்த அழுக்கு இதில் ஒட்டிக் கொண்டு விடும். அதோடு மல்லிகைப் பூ மாதிரி வெள்ளை வெளேர் என்று வேறே இருந்ததால் அழுக்கு லவலேசம் இருந்தால்கூட அதைத் தூக்கிக் காட்டிவிடும்.

திருப்பதியில் பெருமாள் ஸந்நிதானத்தில் கீழே கொஞ்சங்கூட அழுக்கில்லாமல் பரம சுத்தமாக வைத்துக் கொள்ளவேண்டும் என்று ரொம்பவும் கவனமாக இருந் தார்கள். அபிஷேகமான இடமென்ருல் அபிஷேக வஸ்துக் கள் தரையில் படிந்து அழுக்கு ஆகத்தானே செய்யும்? அதோடு தீபத்தின் எண்ணெய் சொட்டுவது முதலான வற்ருல் பிசுக்காகி, அர்ச்சகர்கள் அதிலேயே நடக்கிற போது சொத சொத என்ருகித் தரை அழுக்காகத்தானே ஆகும்? அப்படிப்பட்ட மூலஸ்தானத் தரையை நன்ருகத் தேய்த்துத் தேய்த்து அலம்பிவிட்டு, துணிகளைப் போட்டுப் போட்டுத் துடைப்பார்கள். முதலில் அப்படித் துடைக்கிற துணிகளே கொஞ்சம் அழுக்காகத்தான் இருக்கும்.

நம் வீடுகளில்கூட அப்படித்தான்—துடைக்கிற துணி யைப் "பழசு", "சுருணை" என்று சொல்வோம். அது அழுக்காகத்தான் இருக்கும். நாம் சுத்தமாயிருக்கும் போது அது மேலே பட்டாலே பிடிக்காது—அப்படியிருக்

Koviloor Digital Library

கும்! ஒரே அழுக்காய் உள்ள இடத்தை நல்ல துணியால் துடைத்தால் நல்ல துணியும் அழுக்காகி வீணாய்விடும் என்பதால் அதற்கென்றே ஒரு அழுக்குத் துணி வைத்துக் கொண்டிருப்போம். நாம் காலை வைத்து நடக்கும் தரை போன்றவற்றை இப்படி அழுக்குத் துணியால் துடைப் பதோடு நிறுத்திக்கொண்டாலும், நாம் உட்காருகிற மணைப் பலகை முதலானவற்றைத் தேய்த்து அலம்புகிற போது இப்படி ரொம்ப அழுக்காயிருக்கும் துணியால் துடைக்காமல், கொஞ்சம் சுத்தமாயுள்ள துணியால்தான் துடைப்போம். ஸ்வாமி விக்ரஹத்துக்கு அபிஷேகம் செய்து துடைப்பதென்றால் நிச்சயமாகச் சுருணையால் செய்ய மாட்டோம். முதலில் ஓரளவு சுத்த வஸ்த்ரத்தால் துடைத்துவிட்டு, அப்புறம் நன்றாகக் காய்ந்த இன்னொரு சுத்த வஸ்த்ரத்தாலும் துடைப்போம்.

திருப்பதியில் விக்ரஹத்தை மட்டுமில்லாமல் ஸந்நிதித் தரையையே எவ்வளவு சுத்தமாக வைத்துக்கொண்டிருந் தார்கள் என்றால், பெருமாள் ஸந்நிதானத்தில் முதலில் தடிமனான பழைய வஸ்திரங்களில் ஆரம்பித்து, அதைவிட மேலும் மேலும் சுத்தமான மெலிசான துணிகளால் துடைத்துக்கொண்டே போவார்கள். கடைசியில் ரவை ஸல்லாவைப் போட்டுத் துடைப்பார்கள். துளியூண்டு அழுக்கோ பிசுக்கோ இருந்தால்கூட அந்த வஸ்த்ரம் காட்டிக் கொடுத்துவிடும். இன்னொரு ரவை ஸல்லா, அப்புறம் ஒன்று என்று அந்த வஸ்த்ரத்திலும் கொஞ்சம்கூட அழுக்குப் படியாதவரை துடைத்துக்கொண்டே போக வேண்டும் என்று ராஜாக்கள் கட்டளை வைத்திருந்தார்கள். அதில் துளிக்கூட அழுக்குப் படியாமலிருக்கிறதா என்று பரீக்ஷித்துப் பார்ப்பதற்கென்றே ஒரு மணியக்காரன் போட் டிருந்தார்கள். அவ்வளவு சுத்தமாக, மூலவர் பிம்பத்தை வைத்துக்கொள்கிற மாதிரியே அவர் இருக்கிற கர்ப்ப க்ருஹத்தை வைத்துக்கொண்டிருந்தார்கள்.

முதலிலேயே ரவை ஸல்லாவைப் போட்டுத் துடைத் தால் அதுவே கிழிந்துபோய்விடும். ஜலத்தை எல்லாம்

Koviloor Digital Library

பெரும்பாலும் தடிமனான சுருணைகளால் துடைத்துவிட்டு, குப்பை கோதுகளையும் அவற்றால் முக்காலே மூணுவாசி துடைத்துவிட்டுத்தான் ரவை ஸல்லாவுக்குப் போக வேண்டும்.

அத்வைதமான ஆத்ம தத்வத்தை நினைத்து த்யான விசாரம் பண்ணிக்கொண்டிருப்பது வெள்ளை வெளேரென்று மெல்லிசு ரவை ஸல்லா போட்டு மனஸைத் துடைத்து விடுகிற மாதிரி! தற்போது ஒரே மலினமாகவும், ஆசைப் பசை இசுக்குப் பிசுக்கு என்று ஒட்டிக்கொண்டும், கோபம் லோபம் முதலியவற்றால் கரடு முரடான கல்தரை மாதிரியும் உள்ள நம்முடைய மனஸிலே அந்த த்யான ஸல்லாவைப் போட்டுத் துடைத்தால் இதுவும் சுத்தமாகாது; அதுவும் கிழிந்துபோய்விடும். தடிமனான சுருணையில்தான் ஆரம்பிக்கவேண்டும். அதனால்தான் இந்த்ரியங்களை வைத்துக்கொண்டு அவற்றைக் கொண்டே பெறுவதான க்ருஹஸ்தாச்ரம அநுபோகங்களில் ஆரம்பித்திருக்கிறது. ஆனாலும் பழைய அழுக்கை இந்தச் சுருணையும் துடைத்தெடுக்கிற மாதிரி, பழைய கர்மாவைப் போக்கிக் கொள்ளை ரீதியிலே சாஸ்த்ர விதிகளின்படி இதிலும் கட்டுப்பாடுகளை ஏற்படுத்திக் கொடுத்திருக்கிறது. மதஸம்பந்தமான அநேக சடங்குகளான கர்மாக்களையும் கொடுத்திருக்கிறது. இப்படி அநேக கர்மாக்களைப் பண்ணிப்பண்ணி ஜன்மாந்தர அழுக்குகளைத் துடைத்துக் கொண்ட பின்தான் த்யான விசாரத்துக்குப் போகமுடியும். ஆரம்பத்திலேயே அப்படிப் பண்ணுவது நம்மையே ஏமாற்றிக்கொள்வதாகத்தான் ஆகும்.

ஆனாலும் ஆரம்பத்தில் கெட்டிச் சுருணையைப் போட்டுத் துடைக்கும்போதே, அப்படித் துடைக்கிறவன், "கடைசியிலே மணியக்காரன் ரவை ஸல்லாப் பரீக்ஷை நடத்துவான். அதில் ஜயிக்க வேண்டும்" என்பதை மறக்காமல், அந்த நினைவுடனேயேதான் அழுந்த அழுந்தத் துடைப்பான். அதுபோல, கர்ம அழுக்குக் கழிவதற்காகவே சாஸ்த்ரங்கள் வர்ணம், ஆச்ரமம் என்று வகுத்து ஒவ்வொரு ஸ்டேஜில்

Koviloor Digital Library

என்னென்ன செய்யவேண்டுமென்று சொல்கிறதோ அவற்றையெல்லாம் நாம் மனோ வாக் காயங்களைக் கொண்டு பண்ணிக்கொண்டிருக்கும்போதும், 'இதற்கெல்லாம் முடிவு மனோதீதமான, வாக்குக்கு அப்பாற்பட்டதான, கார்ய ப்ரபஞ்சத்துக்கு அப்பாற்பட்ட ஆத்ம ஸாக்ஷாத்தாரம்தான்; அதை ஞானவிசாரத்தால் அடையும் நிலைக்குக் கொண்டு விடுவதற்குத்தான் இப்போது, நாம் செய்யும்படியான எல்லாமும்' என்கின்ற ஒரு நினைப்பை வைத்துக் கொண்டே இருக்கவேண்டும்.

ஒரு பாத்ரத்தை அலம்பும்போது கடைசியிலே சுத்த ஜலத்தை மட்டும் விட்டு, முதலிலே சுத்திக்குப் பிரயோஜனமான புளி, மண் முதலானவற்றின் கோது, தூள் முதலியவை இல்லாமல் அப்புறப்படுத்துகிறோமென்பதோடு, முதலிலே மண்ணையும் புளியையும் போட்டுத் தேய்க்கிறபோதுகூட அவற்றோடு சுத்த ஜலத்தைக் கொஞ்சம் சேர்த்துக் கெட்டியாகக் கரைத்துக்கொண்டுதானே தேய்க்கிறோம்? அந்த மாதிரி ஆரம்பக் காலத்தில் மனோ இந்த்ரியாதிகளால் கர்மாக்களைச் செய்கிற காலத்திலுங்கூட ஆத்ம சிந்தனைத் தீர்த்தத்தைக் கொஞ்சம் இவற்றில் தெளித்துக் கொள்ளத்தான் வேண்டும். ஆரம்பத்திலிருந்தே அநேக கர்மாக்களுக்கிடையிலும் த்யானத்துக்கென்று, ஆத்ம விசாரத்துக்கென்று கொஞ்ச காலம் ஒதுக்கத்தான் வேண்டும்.

எது ஒன்றையோ நாம் தேய்த்து சுத்தம் செய்கிறோம் என்றாலும், இத்தனை கஷ்டப்பட்டு நாம் தேய்த்து அலம்பி கடைசியிலே சுத்தமாக ஆகிற அந்த ஒன்று—சொம்போ, தரையோ, விக்ரஹமோ எதுவோ ஒன்று—இருக்கிறதே அந்த ஒன்றை நாம் புதிதாகப் பண்ணவில்லை. அதை நாம் எதுவாகவோ மாற்றிவிடவும் இல்லை. அது இருக்கிறபடிதான் இருக்கிறது. அதன் மேலே சேர்ந்த, ஆனால் அதோடு சேரக்கூடாததான வஸ்துக்களை நாம் போக்கினோமென்பதுதான் நாம் பண்ணினதெல்லாம். இப்படித்தான் ஸ்வயம் ஸித்தமாக எப்போதும் இருந்துகொண்டிருக்கிற ஆத்மா

Koviloor Digital Library

அதன் ஸ்வபாவமான ஸ்திதியில் ப்ரகாசிக்கும்படிச் செய்வதற்கேதான் செய்கிற ஸாதனையெல்லாம். அதன்மேல் படிந்து அதை மறைத்துக்கொண்டிருக்கிற மாயா ஸ்ருஷ்டியான மனஸைப் போக்குவதற்குத்தான் அநேக கார்யங்களைச் செய்யவேண்டியதாயிருக்கிறது. மனஸ் என்கிறபோது அந்தஃகரணம், வாக், காயம் எல்லாவற்றையுந்தான் அதில் சேர்த்துவிடுகிறேன். அதே மாதிரி, கார்யம் என்னும்போது மனஸின் கார்யமான எண்ணங்களையும் சேர்த்துத்தான் சொல்கிறேன்.

நல்லதில் கெட்டது கலக்காமலிருக்க

தப்புக் கார்யம், தப்பு எண்ணமான காம க்ரோதம் ஆகியன போவதற்கே சாஸ்த்ர ரீதியான ஸத் கார்யங்களை வர்ணாச்ரமப்படி செய்வது, அன்பு பரோபகாரம் பக்தி பணிவு முதலான நல்ல எண்ணங்களை வளர்த்துக் கொள்வது இவை எல்லாம். தப்புக் காரியங்கள், அஸத் வ்ருத்திகள் என்பவையே ஆரம்பத்தில் சொன்ன தேவாஸுர யுத்தத்தில் அஸுர கணங்கள். நல்ல கார்யங்கள், ஸத் வ்ருத்திகள் தேவ கணங்கள். இந்தச் சண்டையில் தேவர்களுக்குமே கொஞ்சம் கொஞ்சம் அஸுர குணங்கள் ஏற்படுவதுண்டு! அஸுரர்களின்மீது க்ரோதம் ஏற்படுவது, அவர்களை இவர்கள் சில ஸமயங்களில் வஞ்சனையாக ஏமாற்றிக்கூட ஜயிப்பது, அம்ருதம் லக்ஷ்மி போன்ற உத்தம வஸ்துக்களைப் பெறுவதில் அஸுரர்களுக்குப் போட்டியாக தேவர்களுக்கும் ஆசை (காமம்) உண்டாவது—என்றிப்படி நல்லதிலேயே கெட்டவையும் கலப்பதைப் புராணங்களில் பார்க்கிறோம். பரமார்த்த ஸத்யம் என்பது நல்லது என்பதற்குங்கூட அப்பாற்பட்டது என்று காட்டவே இப்படியிருக்கிறதென்று சொல்லலாம்.

தேவர்களுக்கு ஏற்படும் அஸுரத்தனங்களில் ரொம்பவும் துஷ்டத்தனமான ஒன்றை உபநிஷத்திலேயே சொல்லியிருக்கிறது. அஸுரர்களை ஜயித்து முடித்தபின், தேவர்கள், 'நமக்குப் பரமாத்மா கொடுத்திருக்கிற சக்தியைக்

Koviloor Digital Library

கொண்டும், அவனுடைய க்ருபையாலும்தான் நாம் ஜயித்தோம்' என்று உணராமல், 'நம் சக்தி கொண்டே ஜயித்து விட்டோமாக்கும்' என்று கர்வப்பட்டார்களாம். இப்படி ஒரு உபநிஷத்தில்* கதை சொல்லியிருக்கிறது. இது போல நாம் பண்ணும் ஸத்கர்மா, உபாஸனை முதலியவற்றிலுமேகூட கொஞ்சம் தப்புகளுக்கும் இடம் கொடுத்துப் போகக்கூடும்தான். முடிவிலே நாம் ஸாதிக்கும் ஸாதனைக்கும் அவனருளே காரணம் என்பதை மறந்து, "நாமாக்கும் ஸாதித்தோம்" என்று தற்பெருமை ஏற்படலாம். அதற்காகத்தான் இவை எல்லாம் வராமல் முடிந்தமட்டும் பாதுகாத்துக் கொள்வதற்காக ஆரம்பத்திலிருந்தே கெட்டதோடு நல்லதற்கும் அப்பாற்பட்டதான அத்வைத நிலையின் நினைப்பு வேண்டும் என்பது. 'நாம் பண்ணுகிற இந்த எதுவுமே நிஜமான நமக்காக இல்லை; ஏதோ ஒரு வேஷத்தில் மாட்டிக்கொண்டு விட்டோம்; அது ராஜ பார்ட்டாகத்தான் இருக்கட்டும்; இல்லாவிட்டால் ஆண்டிப் பரதேசியாகத்தான் இருக்கட்டும்; ராஜ வேஷமானாலும் அந்த கிரீடம், குண்டலம், பீதாம்பரம் எல்லாவற்றையும் அவிழ்த்துப் போடத்தான் வேண்டும்; ஆண்டி வேஷமானாலும் பொய்த் தாடி, ஜடாபாரம் எல்லாவற்றையும் எடுத்துப் போடத் தான்வேண்டும்' என்று ஒரு நினைப்பைக் கொஞ்சம் கொஞ்சம் வைத்துக்கொண்டேயிருக்கவேண்டும். அப்போது இந்தப் பொய் வேஷத்துக்குள்ளேயே நாம் நல்லவன் வேஷம் போடும்போது கெட்டவை வந்து சேர்ந்துவிடாமல் காப்பாற்றிக் கொள்ளலாம். இதெல்லாமே நிலைத்து நிற்கக் கூடாதவைதான் என்ற நினைப்பு ஏற்படும்போது நல்ல நாடக பாத்ரமாக, அதாவது தேவர்கள் மாதிரி வேஷம் போடும்போதுகூட, அதையே ஸ்திரமாகக் காப்பாற்றிக் கொள்வதற்காக எதுவும் செய்யாமலிருப்போம். தாங்கள் தேவர்களாக இருக்கிற நிலையிலேயே ஸ்திரமாக இருக்க வேண்டும் என்ற அபிமானப் பிடிப்பினால்தான் புராணங்

* கேனோபநிஷத்

Koviloor Digital Library

களில் வரும் தேவர்களும் அவ்வப்போது தப்பில் போனது. எல்லாமே பொய் வேஷம், நிஜ நாம் இல்லை என்று நாம் அறிந்தால் தேவர்களுக்கு உண்டான அஹம்பாவ கர்வம் நமக்கு உண்டாவதற்கு இடம் இல்லை.

"அஹம்பாவம்" என்றால் ஒரு அர்த்தம் "நான் என்பது என்ன என்று உணர்வது". 'அது இப்போது நமக்குத் தெரியவேயில்லை. தெரியவிடாமல் நம்முடைய கர்மா அழுக்காகப் படிந்திருக்கிறது. அதைத் துடைக்கவே இத்தனை பாடும் படுகிறோம்' என்ற எண்ணத்தை அன்றன்றும் கொஞ்சம் வளர்த்துக்கொண்டு விட்டால், அப்புறம் அஹம்பாவமும் கர்வமும் எப்படி உண்டாகும்? மனஸினால் உண்டாகும் அஹம்பாவம் போகச் செய்கிற ஸாதனையிலேயே அஹம்பாவப்படாமலிருக்க ஆத்ம சிந்தனை அவசியம். ஆனால் அது ஆரம்பப் படிகளில் அதிகம் ஸாத்ய மில்லாததால் அஹம்பாவம் போவதற்கும், ஸத்குணம் வளர்வதற்கும், ஸத் கர்மா பண்ணுவதற்கும் ஆதாரமாக அப்போது இருக்கிற பெரிய துணை ஈச்வர பக்தியே. மனஸைக் கண்டபடி அலையவிடாமல், ஜீவனுக்குக் கர்ம மார்க்கமானது அநேக ஸத் கார்யங்களைக் கொடுத்து சுத்தி பண்ணினாலும் அது (அந்த மனஸ்) அன்பிலே வளர்வதற்கு ஈச்வர பக்தி தான் ஆதாரமாக இருக்கிறது.

அன்பின் பல பெயர்கள்

பக்தி என்பது ஈசனிடம் வைக்கும் அன்புதான்.

அன்புக்கே அது யாரைக் குறித்து வைக்கப்படுகிறது என்பதைப் பொறுத்து வேறுவேறு பேர்கள் உண்டு. ஸம வயஸினரிடம் வைக்கும் அன்புக்கு ஸ்நேஹிதம், நட்பு என்று பேர். பெரியவர்களிடம் வைக்கிற அன்பு—மரியாதை. குழந்தையிடம் வைக்கும் அன்பு—வாத்ஸல்யம். கதாநாயகன்—நாயகி அன்பு கொள்வது ச்ருங்காரம். நம் மாதிரி ஸாதாரணப்பட்டவர்கள் நம்மைவிட தீனர்களிட மும் கஷ்டப்படுகிறவர்களிடமும் வைக்கும் அன்புக்குப் பரிவு

Koviloor Digital Library

என்று பெயர். அதுவே நம்மைவிட மஹா பெரியவர்கள் நம்மிடம் வைக்கும்போது அருள், க்ருபை என்றெல்லாம் பேர் எடுக்கிறது. வெறுமே பரிவாக ஒரு ஆறுதல் தருவதாக மட்டுமின்றி தீன நிலையை, கஷ்ட ஸ்திதியைப் போக்கடிக்கும் சக்தியே மஹான்களின் அருளுக்கு இருக்கிறது. அதன் உச்சி தான் ஈச்வரன் நம்மிடம் வைக்கும் பரிவான அன்பு. பரம கருணை, அநுக்ரஹம் என்று அதற்குப் பேர் சொல்கிறோம். அந்த ஈச்வரனிடம் நாம் வைக்கிற உசந்த அன்புதான் பக்தி என்பது.

பக்தி-அன்பின் லக்ஷணம்

அன்பு என்றால் என்ன?

நம் மனஸ் இன்னொரு மனஸில் அப்படியே கலந்து விடுவது.

முடிவுநிலை என்ன? ஆத்மாவிலே மனஸ் கரைந்துவிட வேண்டும். அப்படி ஆத்மாவிலே மனஸ் கரைவதற்கும், இன்னொரு மனஸிலே அன்பாலே கலப்பதற்கும் என்ன ஸம்பந்தம்?

கரைவதற்கு முந்திய ஸ்டேஜ் கலப்பது. சர்க்கரையை முதலில் பாலில் போட்டுக் கலக்கவேண்டும். அப்புறம்தான் கரையும். இரண்டு வஸ்துக்கள் ஒன்றுக்கொன்று அந்யமாக இருக்கும்போது இரண்டும் ஒன்றோடொன்று கலக்கின்றன. அப்புறம் ஒன்றிலே மற்றது கரைய ஆரம்பித்து முடிவாகக் கரைந்து முடிந்தபின், இரண்டு இல்லை; ஒன்றுதான் இருக்கிறது. இதை 'ஐக்யம்' ஆகிவிடுவது என்பார்கள். 'ஏகம்' என்ற ஒன்றின் தன்மையை அடைவதே 'ஐக்யம்.' பாலில் சர்க்கரையைக் கலக்கும்போது பாலும் சர்க்கரையும் வேறேயாகத்தான் இருக்கும். 'கலப்பு' என்பது இரு வேறு வஸ்துக்கள் உள்ளபோதுதான் ஏற்படமுடியும். அது ஏகமான, அத்வைதமான கரைப்பில்தான் முடிந்தாக வேண்டும் என்றில்லை. த்வைதக் கலப்பு அப்படியே நின்றுவிடலாம். அக்ஷதையையும் எள்ளையும் வாத்யார் கலந்து வைக்கிறார்.

Koviloor Digital Library

அவை ஒன்றில் இன்னொன்று கரைந்து ஐக்யமாகி விடுவ தில்லை.

ஆத்மா வேறு ஒன்றின் கலப்பே இல்லாமல் ஸ்வச்சமான ஏகமாக, தன்னில் தானாக, தனியாக இருப்பது என்று பார்த்தோம். அதனால் அதிலே கொண்டுபோய் மனஸைக் கலப்பது என்றால் முடியாத கார்யம். மனஸ்தான் ஆத்மா வின் கிட்டேயே போகமுடியாதே! இதை எப்படி அதில் போய்க் கலக்கும்படிச் செய்வது? இந்த இடத்தில்தான் இரண்டாக இருந்து கலக்கக் கூடியதாக அந்த ஆத்மாவையே ஈச்வரன் என்று வைத்து பக்தி பண்ண வேண்டியிருப்பது. பரமாத்மா, ஜீவாத்மா என்று த்வைதமாகப் பிரித்துச் சொல்வது இங்கேதான். ஜீவாத்மா சின்ன மனஸ்; பரமாத்மா மஹா மனஸ் என்று பார்த்தோம். சின்ன மனஸ் எந்தத் தொடர்புமில்லாத ஆத்மாவோடு கலக்க முடியாது. ஆனால் அதைப் படைத்த மஹா மனஸோடு கலக்க முடியும். இதை அதுதான் படைத்தது என்பதாலேயே, தாயாரிடம் குழந்தை அன்போடு கலக்கிற மாதிரி கலக்க முடியும். அந்தப் பரமாத்மாவும் தாயார் மாதிரி அன்போடு ஜீவாத்மாவுடன் கலந்து அநுக்ரஹம் செய்வார், அல்லது செய்யும். ஜீவாத்மா பக்தனாகிப் பரமாத்மா என்ற ஈச்வரனிடம் அன்பில் கலக்கிறான். இரண்டாகக் கலந்தபின் இரண்டறக் கலந்து கரைகிற நிலையை ஈச்வரனே அநுக்ரஹிக்கிறான். அப்புறம் த்வைதமான ஜீவாத்ம - பரமாத்ம பேதம் இல்லாமல் ஒரே ஆத்மா என்றாகிவிடுகிறது.

பக்தியால் அத்வைத முக்தி

கீதையில் பகவான் இப்படி ஸ்பஷ்டமாகச் சொல்லியிருக்கிறார்:

பக்த்யா மாம் அபிஜாநாதி யாவாந் யச்சாஸ்மி தத்த்வத : |
ததோ மாம் தத்த்வதோ ஜ்ஞாத்வா விசதே தத் அநந்தரம்||*

* அத்.8 ச்லோ. 55

Koviloor Digital Library

"பக்தியினாலேயே நான் எப்படிப்பட்டவன், யார் என்று ஒருத்தன் உண்மை நிலையைத் தெரிந்து கொண்டு, அதற்கப்புறம் அந்த உண்மை அறிவினால் எனக்குள்ளே புகுந்து விடுகிறான்" என்கிறார். "அநந்தரம் விசதே" என்கிறார். "விசதே" என்றால் "புகுகிறான்". "அநந்தரம்" என்றால் "அந்தரமில்லாமல்" என்று அர்த்தம். "அந்தரம்" என்றால் இடைவெளி. "அந்தரத்தில் தொங்குவது" என்று சொல்கிறோம் அல்லவா? "அநந்தரம் விசதே" என்றால் பரமாத்மாவுக்கும் ஜீவாத்மாவுக்கும் இடைவெளியே இல்லாமல் இவன் அவனிலேயே ஒன்றிவிடுமாறு உள்ளே ப்ரவேசிக்கிறான் என்று அர்த்தம்.

பக்தியிலேயே ஒருத்தன் ஈச்வரனின் நிஜ ஸ்வரூபமான ஆத்மாவுக்குள்ளே போய்விடவில்லை. பக்தியினாலே, அதாவது அதை வழியாகக் கொண்டு, அந்த நிலைக்குப் போகிறான். பக்தி நிலையில் வேறேயாக இருப்பதோடு, த்வைத மோக்ஷத்தோடு லக்ஷ்யம் ஸித்திக்கவில்லை. அதற்கப்புறம்—"ததோ" என்றால் "அதற்கு அப்புறம்" என்று அர்த்தம்—அத்வைதமாய் அவனுக்குள்ளேயே போய்விடும் முடிவான மோக்ஷம் ஸித்திக்கிறது.

இதற்கு ஆசார்யாள் பாஷ்யம் பண்ணும்போது "யாவாந்"—"பகவான் எப்படிப் பட்டவன்" என்று பக்தன் தெரிந்துகொள்கிறான் என்பதற்கு அர்த்தம் சொல்லும் போது, பக்தியிலே ஒருத்தன் முதலில் பரமாத்மாவை ஜகத்காரணனாகவும், ஜகத்தை நடத்துபவனாகவும்தான் த்வைதமாகத் தெரிந்துகொள்கிறான் என்கிறார். "உபாதி க்ருத விஸ்தர பேத"னாக அவனைத் தெரிந்து கொள்வதாகச் சொல்கிறார். அதாவது பலவித குண, கர்ம உபாதிகளால் குறுக்கப்பட்ட நானாவித ப்ரபஞ்சமாகவும் அவன் விரிந்து பல விதமாக பேதப்பட்டிருப்பதையே முதலில் தெரிந்துகொள்கிறான். அப்புறம் இத்தனை பேதத்துக்கும் ஒரே பேதமற்ற, இரண்டற்ற அறிவுதான் காரணமாயிருக்க வேண்டுமென்று, "அத்வைதம், சைதன்ய மாத்ர ஏக ரஸ"மாகத் தெரிந்து

Koviloor Digital Library

கொள்வதாகச் சொல்கிறார். இப்படிச் சொன்னதால் ஜீவமனஸ் மஹா மனஸிடம் பேத பாவத்துடன் போய் பேதமாகவே பார்த்தாலும், அந்த மஹா மனஸான ஈச்வரன் இதன் பேத உணர்ச்சியைப் போக்குகிறான் என்று த்வனிக்கிறது.

"த்வனி"யாக மட்டும் இங்கே இருப்பதை அடுத்த ச்லோகத்தில் பகவான் ஸ்பஷ்டமாகத் தெரிவிக்கிறார்— "மத் ப்ரஸாதாத் அவாப்நோதி சாச்வதம் பதம் அவ்யயம்": "என்னுடைய அநுக்ரஹத்தால் ஒருவன் சாச்வதமான, மாறுதலில்லாத நிலைமை அடைகிறான்" என்கிறார். அந்த நிலைதான் அத்வைத மோக்ஷம். ஸகுண ப்ரஹ்மத்திடம் ஒருத்தன் பக்தியுடன் போய் த்வைதமாக அன்பு செய்து கொண்டிருந்தால், அதன் அநுக்ரஹத்தால் அவன் நிர்குண ப்ரஹ்மத்தில் ஐக்யம் பெற்று விடுகிறானென்று பெறப்படுகிறது. அது (ஸகுண ப்ரஹ்மமான ஈச்வரன்)தானே இவனை வேறுபடுத்திக் காட்டிய காரண வஸ்து? அதனால் அதுவே அந்த வேறுபாட்டை அழித்து ஒன்றாகவும் ஆக்கிவிடுகிறது.

இங்கே தன்னையே பரமாத்மாவாக வெளியிட்டுப் பேசிக் கொண்ட பகவான், நாலைந்து ச்லோகம் தள்ளி*, ஸர்வ பூதங்களின் ஹ்ருதயத்திலும் இருந்துகொண்டு பொம்மலாட்டக்காரன் மாதிரி அவற்றை மாயையால் ஆட்டிக் கொண்டிருக்கிற பரமாத்ம சக்தியை "ஈச்வரன்" என்று சொல்லிவிட்டு, அடுத்த ச்லோகத்தில் அந்த ஈச்வரனின் அநுக்ரஹத்தால், சாச்வதமான பரம சாந்தி நிலை ஸித்திக்கும் என்கிறார். அந்த நிலைதான் மோக்ஷம். மோக்ஷம் ஒன்றுதான் சாச்வத சாந்த நிலை. "மனோ இந்த்ரியங்களால் ஏற்படுகிற எல்லா பாவங்களையும் திரட்டி ஈச்வரனிடம் சரணாகதி செய்துவிடு. அதாவது சின்ன மனஸை அப்படியே மஹா மனஸின் முன்னாலே போட்டு அர்ப்பணம் செய்துவிடு. அவனுடைய அநுக்ரஹ ப்ரஸாதமாக சாச்வத சாந்தமான மோக்ஷத்தை அடைந்துவிடுவாய்" என்கிறார்.

---

* அத். 18, ச்லோ 61.

Koviloor Digital Library

தமேவ சரணம் கச்ச ஸர்வ பாவேந பாரத |
தத் ப்ரஸாதாத் பராம் சாந்திம் ஸ்தாநம் ப்ராப்ஸ்யஸி
சாச்வதம் ||*

ஜீவ மனஸ் கர்ம மார்க்கத்தால் சுத்தியாகி, தனக்குக் காரணமான மஹாமனஸிடம் பக்தி மார்க்கத்தில் போய் ப்ரேமை பண்ணி, அநுக்ரஹத்தால் ஞான மார்க்கத்தில் ப்ரவேசித்து, அதற்கும் மூலமான ஆத்மாவின் ஸாக்ஷாத் காரம் பெறுகிறது என்று ஏற்படுகிறது. "பெறுகிறது" என்றாலும் அங்கே மனஸ் என்று ஒன்று பெற்றுக்கொள்கிற வஸ்துவாகவும், ஆத்மா என்ற ஒன்று பெறப்படும் வஸ்துவாகவும் இல்லை. ஆத்ம அகண்டத்தைத் துண்டித்துக் கண்டமான ஜீவனைக் குறுக்கிய மனஸ் போயே போய் விடுகிறது; அப்புறம் அகண்டம் தானாக இருப்பதை உணர முடிகிறது. துண்டத்தையே நாம் என்று நினைப்பது போக வேண்டும். அதாவது மனஸ் தன்னையே இழப்பதற்கு கொஞ்சம் கொஞ்சமாகச் சொல்லிக்கொடுக்கவேண்டும்.

பக்தி - அன்பின் அவசியம்

துண்டாகப் பிரிந்து 'தான் தான்' என்று இருந்த மனஸ் இன்னொன்றில் கலக்க வேண்டுமென்று நினைக்கிறபோதுதான் தன்னுடைய தனி அஹங்காரத்தை—individuality என்பதை இழக்க ஆரம்பிக்கிறது. இப்படி மனஸ் கலப்பது தானே அன்பு? எந்த ப்ராணியிடம் அன்பு வைத்தாலும் அப்போது மனஸ் தன்னுடைய சின்ன தனித்தன்மையையே போஷித்துக்கொண்டு, தன்னையே மையமாக வைத்துக் கொண்டு கார்யம் செய்வது என்பதை ஓரளவுக்கு விட்டு விட்டு, அன்புக்கு உரியதாகிற ப்ராணிக்காக ஒன்றைச் செய்ய ஆரம்பிக்கிறது.

இதனால் மனஸுக்கு ஸ்வந்தமாக எந்தவித லாபமும் இருக்கப்படாது என்பது முக்யம். ஸ்வந்த லாபம் வந்து

---

* அத். 18, ச்லோ. 62.

Koviloor Digital Library

விட்டால் அது தன்னையே போஷித்துக் கெட்டிப்படுத்திக் கொள்கிறதென்றுதான் அர்த்தம். இம்மாதிரி இன்னொருவரிடம் வைக்கிற ப்ரியம் அன்பே இல்லை. அது ஆசை அல்லது காமம்.

நம் மனஸ் ஏதோ ஒரு ஸந்தோஷ லாபத்தை அடைந்து அந்த அநுபோகத்தில் இன்னும் கொழுத்துப் போவதற்கு உதவும் எல்லா ப்ரியங்களும் காமத்தைச் சேர்ந்தவையே தவிர அன்பைச் சேர்ந்தவையல்ல.

மனஸின் கொழுப்பை இளக்கி, அது பிற்பாடு அப்படியே கரைந்து போய்விடுவதற்கு வஸதியாக அதை எது ம்ருது வாக்கித் தருகிறதோ அதுதான் அன்பு.

ஒன்று இல்லாமல் போவதற்கு முன்னுடி கொஞ்சம் கொஞ்சமாக லேசாகிப், பரவிக்கொண்டே போகவேண்டும். அதாவது தன் ஸ்வரூபத்தை விசாலமாக்கிக் கொண்டே போகவேண்டும். அப்புறம்தான் அகண்டத்தில் அரூபமாக அப்படியே கரைந்து மறைந்து போவது. முன்பு இரும்புக் குண்டு த்ருஷ்டாந்தம் சொன்னேன். இன்னொரு த்ருஷ்டாந்தம் ஜலம். அது ஆவியாகி, லேசாகிப் பரவிக்கொண்டே போனுல்தான் இல்லாமல் போகிறது. அப்படித்தான் மனஸ் லேசாகிப் பரவுவதற்கு அன்பு என்று பேர். காமத்திலே (ஆசையிலே) என்ன ஆகிறதென்றுல் லேசான ஆவியாகிப் பரவுவதற்குப் பதில் கனமாகிக் கெட்டிப்பட்டு ஐஸ் கட்டி மாதிரி ஆகிவிடுகிறது. ஐஸாவது உருகுகிற ஸ்வபாவமுள்ளதாக இருக்கிறது. ஆசை வாய்ப்பட்ட மனஸோ உருகாத ஐஸாக ஆகிவிடுகிறது! "கல்கூட உருகினுலும் உருகும், இது உருக மாட்டேனென்கிறதே" என்று பெரியவர்கள்* பாடி வைத்துவிட்டுப் போயிருப்பது இதைத்தான்.

கரைவதற்குரிய ம்ருதுத்தன்மையை, லேசாகிப் பரவும் தன்மையை மனஸுக்குத் தரும் இந்த அன்பு அன்பு என்பதை

---

* தாயுமானவர்: "கல்லேனும் ஐய, ஒரு காலத்தில் உருகும்; என் கல் நெஞ்சம் உருகவிலையே!"

Koviloor Digital Library

மற்ற ப்ராணிகளிடம் செலுத்துவதைவிட ஈச்வரனிடம் செலுத்துவதுதான் விசேஷம். அதுதான் ரொம்ப அவச்யம். ஏனென்றால் மற்ற ஜீவ ஜந்துக்களோடு அன்பினால் பழகும் போது அது ஆசையாகிவிடக்கூடிய ஆபத்து இருக்கிறது. நம் மாதிரியானவர்களிடம் பழகும்போது எந்த விதத்தி லாவது அவர்களிடமிருந்து ஸ்வய லாபமாக ஒரு ஸந்துஷ் டியைப் பெறவேண்டுமென்று மனஸுக்குத் தோன்ற ஆரம்பித்துவிடுகிறது. அவர்களுக்காக நாம் த்யாகங்கள் கூடப் பண்ணலாம்; ஆனால் இதில்கூட இந்த த்யாகத்தை அவர்கள் 'ரெகக்னைஸ்' பண்ணவேண்டும் என்ற ஆசை உண்டாகிவிடுகிறது. அப்படிப் பண்ணுமற்போனால் நன்றி யில்லாதவர்கள் என்று வருத்தம், எரிச்சல் வருகிறது. இதெல்லாம் மனஸின் கொழுப்பை வளர்த்துக் கொள்கிறவைதான். இன்னொரு கஷ்டம்: நாம் பழகுகிற வர்களை நாம் உயர்த்துவதற்குப் பதில், அல்லது அவர்கள் நம்மை உயர்த்துவதற்குப் பதில், அவர்களை நாமோ, நம்மை அவர்களோ தாழ்த்துவதாகவும் ஆகிவிடலாம். மூன்றாவதாக ஒரு கஷ்டம்: நம் மனஸ் தனக்காக மட்டும் செய்துகொள்வது என்ற சின்ன எல்லையைத் தாண்டி இன்னொருத்தரிடம் போனபின், மேலும் மேலும் அதன் எல்லை விஸ்தாரமாகி உயிர்க்குலம் முழுதையும் தழுவுவது என்று ஆகாமல், அவரோடேயே நின்று போகலாம். 'தனக்காக மட்டும்' என்பது 'அவருக்காக மட்டும்' என்று அதே மாதிரி இன்னொரு சின்ன எல்லைக்குள் கட்டுப்பட்டு கெட்டிப்பட்டுப் போவதோடேயே முடியலாம். அப்போது ஒருத்தரிடம் அன்பினால் அவருக்கு நல்லது செய்யவேண்டும் என்று நினைப்பது முற்றிப்போய் அதற்காகவே இன்னொருத் தருக்குத் தீங்கு பண்ணவும் துணிந்துவிடுகிறோம்! தகுதி போதாத ஒருவரை அன்பினால் உத்யோகத்துக்கு ரெகமன்ட் செய்கிறபோது, தகுதியுள்ள இன்னொருத்தருக்கு அந்த வேலை கிடைக்காமல் குந்தகம் உண்டாக்கி விடுகிறோம்! மற்ற ப்ராணிகளிடம் அன்பு வைப்பது என்பதில் இப்படி அநேக தோஷங்கள் சேர்ந்துவிட இடமேற்படுகிறது.

Koviloor Digital Library

ஈச்வரனிடம் அன்பு வைக்கிறபோதுதான் நம் மனஸ் கரைந்து போவதற்கு வழியாக எப்படிக் கனிந்து, லேசாக, ம்ருதுவாக, விசாலமாக ஆக வேண்டுமோ அப்படி ஆக முடிகிறது. இதுதான் அவனுடைய அநுக்ரஹ விசேஷம்! "மத் ப்ரஸாதாத்", "தத் ப்ரஸாதாத்" என்றெல்லாம் பகவான் சொல்லும் அருட் ப்ரஸாதமானது அவனிடம் அன்பு வைத்த ஒரு மனஸை அடியோடு லேசாக்கி அவனுடைய நிர்குண ஸ்வரூபத்தில் தன்னையே இழந்துகொள்ளுமாறு செய்துவிடுகிறது. மனஸ் இழக்கப்படுவதோடு சூன்யமாய் முடியாமல் ஜீவனை நிர்குண ப்ரஹ்மமான பூர்ணமாக இருக்கப் பண்ணுவதே அருட் ப்ரஸாதத்தின் விசேஷம்.

அநுபூதி பெற்றோர் விஷயம்

தான் அந்த நிலையைக் கொடுத்து, ஜீவன் வாங்கிக்கொள்கிறானென்று ஈச்வரன் வெளிப்படக் காட்டவேண்டுமென்பதில்லை. இப்படிக் காட்டாமலே, ஜீவன் முதிர்ச்சி அடைந்த பிறகு, கனிந்த அந்த ஜீவனுடைய மனஸ் ஆத்ம விசாரத்திலேயே தோய்ந்திருக்கும்படியாகப் பண்ணி, முடிவிலே பளீர் என்று ஆத்மா ப்ரகாசித்து, மின்னலானது அதைப் பார்க்கிற கண்ணைப் பறிக்கிறாற்போல் மனஸை அப்படியே பறித்து, தான் மட்டுமாக விளங்குவதாக காட்டினாலும் காட்டுவான்.

அத்வைதாநுபவம் பெற்ற அநேக மஹான்கள் இப்படித்தான் ஞான விசாரம் பண்ணுவது, ஜீவ-ப்ரஹ்ம அபேதத்தைச் சொல்லும் மஹா வாக்யங்கள் காட்டுகிற பரம உத்தம நிலைகளையே ஸதாவும் அநுஸந்தானம் பண்ணிக் கொண்டிருப்பது என்றிருந்து அதிலிருந்தே அப்படியே மனோதீதமான ப்ரஹ்மாநுபவத்தைப் பெற்றிருக்கிறார்கள். ஈச்வரன் ஜகத்திலேதான் ஒளிந்து விளையாடுகிறானென்றில்லாமல் முக்தி தருவதிலும் தன்னை ஒளித்துக்கொள்கிறான்!

"தன்னை ஒளித்துக்கொள்கிறான்" என்றால், நாம் ஈச்வரனாக எதை நினைக்கிறோமோ அந்த ஸகுணத்தைத்தான்! அது

Koviloor Digital Library

அவனுடைய நிஜ 'நான்' இல்லை என்றும், அதற்கும் அடியில் அவன் நிர்குண ஆத்மாவாக இருக்கிறுனென்றும் பார்த்தோமல்லவா? ஆனபடியால் ஆத்மாநுபவம் ஒரு ஜீவனைக் கவிந்து கொண்டே வந்து அப்படியே தனக்குள் அடக்கி. ஐக்யப்படுத்திக் கொண்டுவிடுகிறது என்னும்போது ஈச்வரன் ஒளிந்து கொள்கிறுனென்பதுகூட ஸரியில்லை; தன்னுடைய நிஜ ஸ்வரூபத்தில் அந்த ஜீவனை அவன் இறுக்கி இருக்கிப் புதைத்துக் கொள்கிறுனென்றுதான் அர்த்தம்.

பல தடவை சொன்னதுபோல த்வைத பாவம் ஞான மார்க்கத்திலே வேண்டாமென்பதால்தான் நம்முடைய பார்வையில் ஈச்வர ப்ரஸாதத்தை மறைத்துப் பண்ணுவது.

ஜீவனுடைய ஜீவவேஷத்தைக் கலைக்கிறதுபோலவே, தன்னுடைய ஈச்வர வேஷத்தையும் கலைத்தே ஸூக்ஷ்மமாக அநுக்ரஹித்து அத்விதீயமான ப்ரஹ்மத்தில் இரண்டையும் ஒன்ருக்கி விடுகிருன்.

இதனுல்தான் அநுபூதிமான்களாக இருக்கப்பட்டவர்களில் தங்களுக்கு ஞானஸித்தி எப்படி ஏற்பட்டது என்று சொல்லியிருக்கிறவர்களில் அநேகம் பேர், "இப்படி இப்படி ஞானமார்க்கத்திலேயே ஸாதனை பண்ணிஞேம். திடீரென்று ஒரு நாள் மனஸ் அப்படியே நின்றுபோய், ஸ்வ-ஸ்வரூபாநுபூதி ஏற்பட்டுவிட்டது" என்கிற ரீதியில் சொல்கிறுர்கள்.

நீங்கள் என்னிடம், "நீங்களானுல் 'ஈச்வரன்தான் ஞான மார்க்கத்திலே ஒருத்தனைக் கொண்டுவிட்டு, அப்புறம் ஸித்தி தருகிறான்' என்கிறீர்கள். ஆனுல் ஸ்வயமாக அத்வைதாநுபூதி பெற்று அதைச் சொல்லியிருப்பவர்களான இன்னுர், இன்னுரெல்லாம் இப்படிச் சொல்லவில்லையே" என்று கேட்டீர்களானுல் அதற்கு இதுதான் பதில். ஈச்வரன், 'நான்தான் ஈச்வரன்' என்று ஸகுணத்தில் காட்டிக்கொண்டு 'இந்தா ஞானம்' என்று எதையோ பொட்டலம் கட்டிக் கொண்டு வந்து கொடுப்பதில்லை. தன் ஸகுண ரூபத்தை மறைத்து ஸூக்ஷ்மமாகவே இந்த அநுக்ரஹத்தைச் செய்வதாகவே அவன் அநேகம் மஹான்களிடம் செய்திருக்கிருன்.

Koviloor Digital Library

இன்னம் சில பேருக்கு நன்ருக ஞானேபதேச குருவாகவே வந்து நின்றுகொண்டு அவர்களை ஞானத்திலே அழைத்துக்கொண்டு போயிருக்கிருன். ஒரே பக்தியாக அவனை ஆராதித்துக் கொண்டிருப்பவர்களுக்கு அவன் தான் பண்ணுகிருனென்று நன்ருகத் தெரியும்படியாகவே திடீரென்று அத்வைதாநுபூதியை வாரிக் கொடுத்திருக்கிருன்.

அருணகிரிநாதருடைய கந்தரநுபூதியில் இம்மாதிரி விஷயங்கள் ஸ்பஷ்டமாகத் தெரிவிக்கப்பட்டிருக்கின்றன:

"அந்தத் திருடன் 'சும்மா இரு' என்ருன். உடனே அத்தனை வெளிவஸ்துவும் மறைந்தே போய்விட்டது! அம்மாடி! இதென்ன, ஆச்சர்யம்?

" 'சும்மா யிரு சொல் அற' என்றலுமே
அம்மா! பொருள் ஒன்றும் அறிந்திலனே!"

என்று ஒரு இடத்தில் சொல்கிருர். வள்ளியைத் திருடிக் கொண்டு போன திருடன் இவருடைய ஜீவ பாவத்தையும் 'அபேஸ்' பண்ணி த்வைதமான ஸகலத்தையும் பறித்து அத்வைதாநுபூதி தந்ததைத்தான் இப்படிச் சொல்கிருர். இதைவிட, நல்ல ஸ்பஷ்டமாகவே இன்னொரு இடத்தில்,

"யான் ஆகிய என்னை விழுங்கி, வெறும்
தானுய் நிலை நின்றது தற்பரமே"

என்றும் சொல்லியிருக்கிருர்.

மாணிக்கவாசகர் ஈச்வரனே தன்னையும் அவனுடைய நிர்குண சிவ ஸ்வரூபமாக்கிக் கொண்டானென்பதை

"சிவமாக்கி எனையாண்ட"

என்கிருர். "சிவனுக்கி" இல்லை; "சிவமாக்கி"! சிவன் என்பவன் ஸகுண ஈச்வரன். சிவம், நிர்குண ப்ரஹ்மம். ஈச்வரனுக யாரும் ஆக முடியாது; ப்ரஹ்மமாகத்தான் ஆக முடியுமென்று பார்த்தோமே!

Koviloor Digital Library

திருவாசகத்தில் இன்னொரு இடத்தில் (மாணிக்க வாசகர்) பரமேச்வரனைக் கூப்பிட்டு எதிரே நிறுத்தி வைத்துக்கொண்டு, "நம்ப ரெண்டு பேர்லே யார் கெட்டிக்காரா? நம்ம பரஸ்பரம் ஒருத்தரை இன்னொருத்தருக்கு விக்ரயம் பண்ணிக்கிறதா பேரம் பேசிண்டு அப்படியே பண்ணினதிலே யார் 'கெட்டிக்காரா-ன்னு தெரியறது? ஒண்ணுமில்லாத அல்பமான என்னை நீ எடுத்துண்டு முடிவேயில்லாத ஆனந்த ஸ்வரூபமான உன்னை எனக்குக் கொடுத்துட்டியே! யார் கெட்டிக்காரா சொல்லு" என்கிறார்[1]. ஈச்வரனே அவருக்கு அகண்டாநுபூதி தந்ததைத்தான் வேடிக்கையாகச் சொல்கிறார். அருணகிரிநாதர் திருடன் என்றார். மாணிக்க வாசகர் அசடு, ஏமாந்த சோணகிரி என்கிறார்!

நம்மாழ்வாரும் இப்படியே பரமாத்மா ஜீவாத்மாவான அப்புறம், அந்த ஜீவாத்மாவுக்குத் தன்னையே கொடுத்து தானாகவே ஆக்கிக் கொள்கிறது என்கிறார் :

"யானே நீயாகி என்னை யளித்தானே!"

என்கிறார். 'திருவாய்மொழி'யை முடிகிறபோது ஒரே அத்வைதமாகச் சொல்லிக்கொண்டு போகிறதில், 'கொதிக்கக் கொதிக்கக் காய்ச்சிய இரும்பிலே ஒரு சொட்டு ஜலம் விழுந்தால் அது 'சுர்ர்' ரென்று அதை இழுத்துக் கொள்கிற மாதிரி என்னை நீ உனக்குள்ளே உறிஞ்சிக்கொண்டு விட்டாயே' என்கிறார்[2].

(காமாக்ஷியைக் குறித்து 'பஞ்சசதீ' செய்த) மூகரும் இதேமாதிரிச் சொல்லியிருக்கிறார். குருசரணத்தில் சரணாகதி செய்தவர்களுக்கு அம்பாளே கருணையோடு ஸகுண

---

1. தந்தது (உ)ன் றன்னைக் கொண்டதென் றன்னை,
   சங்கரா, ஆர்கொலோ சதுரர்?
   அந்தமொன் றில்லா ஆனந்தம் பெற்றேன்
   யாதுநீ பெற்றதொன் றென்பால்?

2. தீர இரும்புண்ட நீரதுபோல என்னுருயிரை
   ஆரப்பருக எனக் காராவமு தானாயே

Koviloor Digital Library

உபாஸனையை மட்டுமில்லாமல் நிர்குண உபாஸனையையும் படிவரிசை போட்டுக் கொடுத்து மோக்ஷம் என்கிற உப்பரிகை யில் ஏறி நிற்கச் செய்கிறுள் என்கிறுர்:

ஸத்க்ருத-தேசிக-சரணு; ஸபீஜ-நீர்பீஜ-யோக-
நிச்ரேண்யா |
அபவர்க-ஸௌத-வலபீம் ஆரோஹந்த்-யம்ப கே(அ)பி
தவ க்ருபயா ||

அவளுடைய கடாக்ஷம் பெற்றுவிட்டால், என்ன ஆச்சர்யம், அப்படிப் பெற்றவர்களுக்கு வீடும் காடும் ஒண்ணு, சத்ருவும் மித்ரரும் ஒண்ணு, ஓட்டாஞ்சல்லியும் யுவதியுடைய உதடும் ஒண்ணு என்கிற ஸர்வஸம அத்வைத ஸித்தி ஏற்பட்டுவிடுகிறது என்று இன்னேரிடத்தில் சொல் கிறுர்:

சிவ சிவ பச்யந்தி ஸமம் ஸ்ரீகாமாக்ஷீ கடாக்ஷிதா:
புருஷா: |
விபிநம் பவநம் அமித்ரம் மித்ரம் லோஷ்டம் ச யுவதி
பிம்போஷ்டம் ||

சேக்கிழாரும்கூட ஏறக்குறைய இதேமாதிரி ஸம பாவம் வாய்ந்த சிவனடியார்களைப் பற்றிச் சொன்னதை பார்த் தோம். ஆனல் அவர்கள் அத்வைத மோக்ஷம் வேண்டாம் என்று பக்தி பண்ணிக் கொண்டிருப்பதிலேயே நிறைவு காண் பவர்கள் என்று பார்த்தோம்*.

அத்வைதமே மோக்ஷம் என்று ஸித்தாந்தம் செய்த அப்பைய தீக்ஷிதர் பரமேச்வரனை ஸ்தோத்ரம் பண்ணும் போது, "ஏதோ ரெண்டு எருக்கம்பூ, தும்பைப் பூவைப் பறிச்சு உன் மேலே போட்டுட்டா போறும்; அதுக்குப் பலனு மோக்ஷ ஸாம்ராஜ்யம் கிடைச்சுடறது" என்பதாக பக்தி பண்ணிப் பரம ஸுலபத்தில் ஈச்வர ப்ரஸாதத்தால் முக்தி அடைந்துவிட முடியுமென்கிறுர்.

---

* இவ்வுரையில் முற்பிரிவுகளில் ஒன்றுன "த்வைத 'மோக்ஷ'மும் ப்ரக்ருதி (மாயை)யும்" பார்க்க.

Koviloor Digital Library

ஸ்ரீராமசந்த்ர மூர்த்தியே அத்வைதாநுபூதியை அளித்து விடுவதாக ஸமர்த்த ராமதாஸ் ஸ்வாமிகள் சொல்கிறார்.

இப்படி அத்வைதிகளில் ஒவ்வொரு இஷ்ட தேவதையை வைத்துக்கொண்டிருந்தவர்கள் அந்த தேவதை அத்வைத ஞான ஸித்தியை அருள்வதாகச் சொல்லியிருக்கிறார்கள்.

அத்தனை தேவதைகளையும் ஒரே அத்வைத த்ருஷ்டியோடு ஸ்தோத்ரம் செய்த ஆசார்யாள், ஒவ்வொரு தேவதையும் இப்படி அநுக்ரஹிப்பதைப் பற்றித் தாம் அந்த தேவதையைக் குறித்துச் செய்துள்ள ஸ்தோத்ரத்தில் எங்கேயாவது ஒரு இடத்தில் சொல்லாமல் விட்டிருக்கமாட்டார்.

“ஸரி, பக்தி உபாஸனையும் வைத்துக்கொண்டிருந்த அத்வைதிகளைப் பற்றிச் சொன்னீர்கள். யாரானாலும் பக்தி பண்ணி, கர்மாவும்கூடப் பண்ணித்தான், ஞான மார்க்கத்துக்குப் போய் அத்வைத விசாரம் பண்ண முடியுமென்றும் நிறையச் சொன்னீர்கள். ஆனால் அநேக ஞானிகளின் வாழ்க்கையைப் பார்த்தால் அவர்கள் கர்மாநுஷ்டானமோ, பக்தி வழிபாடோ ஒருபோதும் பண்ணாமல் ஆரம்பத்திலிருந்தே ஞான ஸாதனைகள்தான் பண்ணியிருப்பதாகத் தெரிகிறது. இன்னம் சில பேர் ஸாதாரணமாக எல்லாரையும் போல லௌகிகத்திலேயே இருந்து கொண்டிருக்கும் போது திடீரென்று அவர்களுக்கு அத்வைதத்திலே பிடிப்பு உண்டாகி நேராக ஞானவழிக்கே போயிருக்கிறார்களென்றும் தெரிகிறது. இதற்கு என்ன சொல்வது?'' என்று கேட்கலாம்.

இதெல்லாம் “விட்ட குறை தொட்ட குறை” என்பதைச் சேர்ந்தது. அதாவது ஜன்மாந்தரத்தில் விட்ட இடத்தில் இந்த ஜன்மத்தின் அநுபவங்கள் ஆரம்பிக்கின்றன. அவர்கள் முன் பிறவிகளிலேயே கர்மா, பக்தி நிறையப் பண்ணி சித்த சுத்தியும் ஐகாக்ரியமும் பெற்றிருப்பார்கள். இப்படிப் பட்டவர்களில் சிலருக்குங்கூட அப்போதிருந்த கொஞ்சம் கொஞ்சம் லௌகிக ஆசைகள் எல்லாம் ஒன்றிரண்டுதான்,

Koviloor Digital Library

இந்த ஜன்மாவில் ஒரு குறிப்பிட்ட வயஸு வரை அதற்குப் பலனாக அவர்கள் லௌகிகாநுபவங்களைப் பெற்றுத் தீர்க்கும்படியாக இருந்திருக்கும். அப்புறம் கெட்ட வாஸனை தீர்ந்தவுடன் மேகம் விலகி ஸூர்யன் ப்ரகாசிக்கிறாற்போல, சட்டென்று ஞான ப்ரகாசம் ஏற்பட்டிருக்கும்.

நிறைய ஆத்மிகமாக முன்னேறியுங்கூட எல்லாக் கர்மாவையும் தீர்த்துக்கொள்ளாமல் கொஞ்சம் பாக்கியிருக்கும்போதே செத்துப் போய்விடுபவர்கள் உண்டு. அப்படிப்பட்டவர்களை பகவான் (கீதையின் ஆறும் அத்யாயத்தில்) 'யோக ப்ரஷ்டர்'கள் என்கிறார். அவர்கள் அடுத்த ஜன்மாவில், விட்ட இடத்திலிருந்து ஆரம்பித்து மறுபடி ஸித்திக்காக ஸாதனை செய்கிறார்கள் என்கிறார்.

இம்மாதிரிப் பிறப்பவர்களில்தான் கர்மா, பக்தி செய்ய வேண்டிய அவச்யமில்லாமல் (அவற்றைப் பூர்வத்திலேயே பண்ணிவிட்டால் இப்போது அவச்யமில்லாமல்) நேரே ஞானத்துக்குப் போகக் கூடியவர்களாக, அல்லது நேராக ஞானத்தின் ஆவேசத்துக்கு திடீரென்று ஆளாகக் கூடியவர்களாகச் சிலர் இருந்திருக்கிறார்கள்.

நமக்கான வழி

நம் மாதிரியான பெருவாரி ஸாதாரண ஜனங்களுக்கு நிஷ்காம்ய கர்மாவும், பக்தியும்தான் ஞான மார்க்கத்துக்கான யோக்யதையை ஸம்பாதித்துத் தருபவை. ஆனால் இப்படி ஸத்கர்மா செய்யும்போதும், பக்தி உபாஸனை செய்யும்போதுங்கூட இவற்றிலே கிடைக்கும் த்ருப்திக்காக மாத்திரம் இவற்றைச் செய்வதென்றில்லாமல், நித்ய ஸௌக்யமான, சாச்வத சாந்த பதமான, ஸத்யங்களுக்கெல்லாம் மேலான ஒரே ஸத்யமாக உள்ள அத்வைத லக்ஷ்யத்துக்குப் போகவே இவை படிகள் என்ற நினைப்பை விடாமல் செய்யவேண்டும்.

Koviloor Digital Library

லோக வாஸனைகளில் நன்றாகத் தடிப்பேற்றிக்கொண்டு ஒழுங்கு கெட்டுப்போன நாம் முதலில் லோக கார்யங்களை ஒழுங்காகச் செய்து அந்தத் தடிப்பைத் தேய்த்துத் தேய்த்துக் கரைத்துவிட்டு அப்புறந்தான் லோகத்தைவிட்ட ஆத்மாவுக்குப் போகவேண்டும். அதாவது முதலில் தர்ம மார்க்கத்தில் போய், அப்புறம்தான் ப்ரஹ்மத்துக்கு முயலவேண்டும். தர்மம் என்பது ஸத்கர்மம் வழியாகவே ஆற்றப்படுவது. அதனால்தான் இன்னாருக்கு இன்ன கர்மம் என்று பக்வம் பார்த்து, அதிகார பேதம் பார்த்துப் பிரித்துக்கொடுத்திருக்கும்போது அப்படிப்பட்ட கர்மத்தையே அவரவருக்கும் ஸ்வகர்மம் என்று சொல்லாமல் ஸ்வதர்மம் என்று சொல்லியிருப்பது.

வ்யாதி போன பிற்பாடுதான் விருந்து சாப்பிடமுடியும். ஆத்மானந்தமாகிய அம்ருத போஜனம் பண்ணணுமென்றால் முதலில் கர்ம வ்யாதியையும் மனோ வ்யாதியையும் போக்கிக் கொள்ளவேண்டும். (மனோ வ்யாதி என்றால் மனஸுக்கு ஏற்படும் க்லேசம், ப்ரமை போன்ற வ்யாதியைச் சொல்லவில்லை. மனஸே ஒரு வ்யாதியாக ஆத்மாவிலே தோன்றியிருப்பதைத்தான் சொல்கிறேன்.)

மனஸின் உயர்ந்த பண்புகளோடு கலந்து சரீரத்தின் வேலைகளை அதிகமாகக் கொண்டிருக்கும் தர்ம கர்மாக்கள் மூலமும், சரீரத்தின் வேலைகள் குறைவாகவும் மனஸின் உத்தம குணங்களே அதிகமாக இருக்கும் பக்தி உபாஸனையினாலும் கர்ம வ்யாதி, மனோ வ்யாதிகளைப் போக்கிக் கொள்ளவேண்டும். ஆரம்பத்தில் சரீர ப்ரஜ்ஞை மிகவும் அதிகமாதலால் கர்மாவுக்கு முக்யத்வம். அப்புறம் பக்திக்கு முக்யத்வம். அப்புறம்தான் ஆத்ம விசாரமே முக்யமாகிற நிலைக்குப் போவது.

பிற மார்க்கத் தொடர்பு; எதையும் கண்டிக்கலாகாது

ஆனாலும் ஆரம்பத்தில் கர்மம் முக்யம் என்றாலும் மற்றவையும் 'ஸப்ஸிடயரி'யாக (துணையம்சமாக) இருக்க

Koviloor Digital Library

வேண்டும். இவற்றிலே பக்திக்கு அதிகமாக இடம் கொடுக்க வேண்டும். ஆத்மாவைப் பற்றிய ஸ்மரணை, அத்வைதத்தைக் குறித்த சிந்தனை, ஞான நூல்கள் படிப்பது ஆகியனவும் கொஞ்சம் இருக்கவேண்டும்.

அப்புறம் பக்தி அதிகமாக இருக்கும்போது கர்மாவைப் பற்றி விசேஷமாக கவனம் செலுத்தி, இழுத்துப்போட்டுக் கொண்டு செய்யவேண்டியதில்லை. கர்மா முக்யமாயிருந்த முதல் ஸ்டேஜில் நாமாக மனஸறிந்து, வலிந்துங்கூட, பக்தி வழிபாடும் பண்ணவேண்டுமென்பதுபோல இப்போது பக்தி முக்யமாய்விட்டபோது கர்மா பண்ணத்தான் வேண்டுமென்றில்லை. சாஸ்த்ரீயமான முக்ய கர்மாவைப் பண்ணினால் போதும். சரீர ப்ரஜ்ஞையிலிருந்து அதைவிட ஸூக்ஷ்மமான நம்முடைய மனஸைக் குறித்தே நேராக ப்ரஜ்ஞை ஏற்பட்ட கட்டத்தில், இதைவிட ஸ்தூலமான கர்மாநுஷ்டானத்தில் புத்திபூர்வமாக வலிந்து ஈடுபட வேண்டியதில்லை. அதுவாக வாய்த்த கர்மங்களை, தவிர்க்க முடியாத கர்மங்களை மட்டும் நன்றாகப் பண்ணினால் போதும்.

ஆனாலும் இப்போதுங்கூட "கர்மாவை விட்டு விட்டேனாக்கும்" என்று ப்ரகடனப்படுத்திக் காட்டக்கூடாது. அப்படிக் காட்டி, கர்மா அவச்யமாயிருக்கிற முதல் ஸ்டேஜ்-மநுஷ்யர்களுக்கு மனக்குழப்பம் ஏற்படும்படிப் பண்ணிவிடக் கூடாது. கர்மா, பக்தி எல்லாம் போன ஞானியுங்கூட இப்படிப் பண்ணிவிடப்படாது என்று பகவான் (கீதை மூன்றும் அத்யாயத்தில்) தீர்மானமாகக் கூறியிருப்பதை மறக்கவே கூடாது.

பக்திக்கும் அப்புறம் ஞானத்திலே போனபிறகு கர்மா, பக்தி இரண்டுமே அவச்யமில்லை. ஆனாலும் இவை யாருக்குமே அவச்யமில்லை என்கிற மாதிரியாக இவற்றை ஞான மார்க்கத்தில் போகிறவனுங்கூடப் பொதுப்படையாகக் கண்டித்துத் தள்ளக்கூடாது. அவனுக்கு பகவானின் உபதேசம், "நீ இவற்றை விட்டுக்கோ; ஆனால் உன் மாதிரி பக்வப்படாத வாளும் விட்டுவிட்டு இரண்டுங்கெட்டானாகத் திண்டாடும்

Koviloor Digital Library

படியாகப் பண்ணிவிடாதே! உன்னால் 'ரன்னிங் ரேஸ்' ஓட முடிகிறது என்பதால் குழந்தைகளுக்கும் நடை வண்டி வேண்டாம், கால் ஊனமானவனுக்குக் கக்க தண்டம் வேண்டாம் என்று நினைக்கும்படிப் பண்ணிவிடாதே!" என்பதே.

(ஞான) ஸாதனையில் மேலே போகப் போக, ஜீவனுடைய இஷ்ட-அநிஷ்டங்கள் (விருப்பு-வெறுப்புக்கள்) போய், ஈச்வர சக்தியே அவனை நடத்திக்கொண்டு போகிற போது, கர்மாவையும், பூஜை முதலான உபாஸனை களையும் விட்டுவிட்டே ஒருத்தன் ஸந்நியாஸி ஆனாலும் ஆகலாம். அல்லது ராஜ்யபாரம் பண்ணிக்கொண்டே ஞானியாய் இருந்த ஜனகரைப் போல, கர்மா எல்லாம் பண்ணிக் கொண்டும் இருக்கலாம். அல்லது அத்வைதிகளா யிருந்த அநேகம் பெரியவர்களைப்போல் நிரம்ப ஈச்வர பக்தி பண்ணிக் கொண்டும் இருக்கலாம்.

தன்னியல்பான ஸாதனை முதிர்வு

"எப்போது கர்மாவிலிருந்து பக்திக்கு முக்யத்வத்தை மாற்றவேண்டும்? எப்போது பக்தியிலிருந்து ஞான விசாரத் துக்குப் போகவேண்டும்? எதுவரை மணி அடித்துப் பூஜை? எப்போது த்யானம்? எதற்கப்புறம் த்யானத்தையும் விடுவது?" என்றெல்லாம் கேள்விகள் கேட்டுக் கொண்டிருக்க வேண்டியதில்லை நிறையக் கர்மா, அதோடு அதற்கடுத்தபடி யாக பக்தியுபாஸனை, கொஞ்சம் ஆத்மார்த்தமான சிந்தனை என்று பிள்ளையார்சுழி போட்டு இப்போது ஆரம்பித்து விட்டால் போதும். இப்படிப் பண்ணிக் கொண்டு போகிற போதே கர்மவாஸனை தேயத் தேய, மனஸின் பரிசுத்தி அதிகமாக ஆக, எந்த விதமான ஸாதனைகளையும் அப்யாஸங் களையும் விடவேண்டுமோ அவற்றில் பிடிப்பு தானாகவே கொஞ்சங் கொஞ்சமாக விட்டுப்போய், எந்த விதமான ஸாதனுப்யாஸங்கள் கூடவேண்டுமோ அவற்றிலே தன்னால் ஒரு அபிருசி ஏற்பட்டு அவற்றிலே இயற்கையாக நாம் ஈடு பட்டுப் பின்பற்ற ஆரம்பித்துவிடுவோம்.

Koviloor Digital Library

முடிந்த முடிவான அநுபவத்துக்கு முற்பட்ட நிலையில், அதாவது, ஞான மார்க்கத்தில் ப்ரவேசித்த பிறகு, ஜீவ—ப்ரஹ்ம அபேதம் பற்றி ச்ருதி வாக்யங்களை ச்ரவணம் செய்வது, அதையே மனஸிலே உருட்டிக்கொண்டு மனனமும், த்யானமும் செய்வது என்பவற்றை எப்போது நிறுத்தி ஆத்ம தர்சனம் பெறுவது என்கிற கேள்விக்கு ஆசார்யாள் சொல்கிற பதில்[1] அடிநிலையில் கர்மா நுஷ்டானம் ஆரம்பிப்பதிலிருந்தே பொருந்தும். என்ன சொல்கிறாரென்றால், "நெல்லு குத்துவதை எப்போது நிறுத்த வேண்டுமென்றால் என்ன பதில் சொல்வது? எப்போது உமி நன்றாக உதிர்ந்து நெல்லிலிருந்து அரிசி வெளிவருகிறதோ அதுவரை குத்தத்தான் வேண்டும். அந்த மாதிரி, ஆத்ம ஸாக்ஷாத்காரம் ஏற்படும்வரை ச்ரவணாதிகளைப் பண்ணிக் கொண்டேதான் இருக்கவேண்டும்" என்கிறார். எந்த அநுஷ்டானத்தையுமே "எப்போது நிறுத்துவது" என்று கேட்காமல் அதற்கு மேலான நிலை வரும்வரை தொடரவேண்டும்.

தர்ம மருந்து

நாம் முதலில் செய்யவேண்டியது கர்ம வ்யாதியைப் போக்கிக் கொள்வது. வ்யாதி எப்படிப் போகும்? வைத்யரிடம் போய், மருந்து வாங்கிச் சாப்பிட்டால் போகும். ஏற்கெனவே வந்துவிட்ட கர்ம வ்யாதி தீரவும், மறுபடி அது வராமலிருக்கவும் மருந்து சொல்லும் வைத்யர் யார்? மநுதான் அந்த வைத்யர். மநு என்றால் மநு முதலான யார் யார் தர்ம சாஸ்த்ரங்களைக் கொடுத்திருக்கிறார்களோ அவர்கள் எல்லோரும்[2]. இதிலிருந்தே அவர்கள் கொடுக்கிற மருந்து என்ன என்று ஊஹித்துவிடலாம். நம்முடைய கர்மாக்களை நிர்ணயம் செய்து கொடுக்கும் தர்ம சாஸ்த்ரங்களே

---

1. ப்ரஹ்ம ஸூத்ரம் 4-1.1 பாஷ்யக் கருத்தைத் தழுவி ஸ்ரீ சரணர் பேசுகிறார்.

2. இரண்டாம் பகுதியில் "தர்ம சாஸ்திரம்" என்ற உரையின் முதல் இரு உட்பிரிவுகள் பார்க்க.

Koviloor Digital Library

தான் மருந்து. இது நான் ஏதோ அழகாக உபமானம் கட்டிச் சொல்வதில்லை. வேதத்திலேயே, "மநு எதைச் சொன்னாரோ அதுதான் பேஷஜம்" என்று "தைத்திரீய ஸம்ஹிதை"யில் சொல்லியிருக்கிறது, 'பேஷஜம்' என்றால் 'மருந்து'. ("ஸ்ரீருத்ரம்", "விஷ்ணு ஸஹஸ்ரநாமம்" தெரிந்தவர்களானால், அர்த்தம் தெரியாவிட்டாலும், 'பேஷஜம்' என்ற வார்த்தையாவது தெரிந்திருக்கும்.)

மருந்து கொடுத்தால் பத்யமும் வைப்பார்கள். இதிதைச் சாப்பிடப் படாது, சாப்பிட்டாலும் இவ்வளவு தான் சாப்பிடலாம் என்று கட்டுப்பாடு செய்வார்கள். அதே போல தர்ம சாஸ்த்ரங்களில் இன்னின்ன பண்ணக்கூடாது, இன்னின்ன அநுபோகங்கள் இவ்வளவுதான் வைத்துக் கொள்ளலாம் என்றெல்லாம் விதிகள், நிஷேதங்கள் இருக்கின்றன.

எப்படியும் என்றைக்கோ ஒரு நாள் அழிந்துபோகப் போகிற சரீர அபிவ்ருத்தியை முன்னிட்டே வைத்யர் தரும் கசப்பு மருந்து, உறைப்புக் கஷாயம் எல்லாம் சாப்பிட்டு, அவர் சொல்கிற பத்யங்களை ஏற்று நடத்தும் நாம் ஆத்மாபிவ்ருத்திக்காக மருந்து சொல்லும் மஹா பெரியவர்களான தர்ம சாஸ்த்ரகாரர்களின் மருந்து, பத்யங்களை அதைவிட நம்பிக்கையுடனும் பக்தியுடனும் ஏற்றுக்கொள்ளவேண்டும்.

முன்னேயே சொன்னேன்: போகப் போக தர்ம கர்மாநுஷ்டானமென்பதே மனஸுக்குப் பிடித்த கூஷ்மாண்ட லேஹ்யம் மாதிரி, யுனானி மருந்து மாதிரித் தித்திக்க ஆரம்பித்துவிடுமென்று.

தவறான குற்றச்சாட்டு

அதர்மம் மாதிரியே தர்மமும் மாயை என்கின்ற அத்வைதத்தால் இந்த லோக வாழ்க்கையில் இருப்பவர்கள் அதர்மமாகப் போவதற்கு இடம் கொடுத்துவிடுகிறது என்று யாராவது சொன்னால் அது அத்வைத சாஸ்த்ரங்களைக் கொஞ்சங்கூடப் புரிந்துகொள்ளாமல் பேத்துவதுதான்.

Koviloor Digital Library

அப்படியேதான், 'ஜீவாத்ம - பரமாத்ம பேதமில்லை என்று சொல்லிக்கொண்டு அத்வைதிகள் ஈச்வரோபாஸனையைவிடச் சொல்வதால் பக்திக்கு ஹானி ஏற்பட்டுப் பெருவாரியான ஜனங்களுக்குப் பிடிப்பு இல்லாமல் கஷ்டப்படும்படி ஆகிறது' என்று க்ரிடிஸைஸ் பண்ணுவதும் விஷயம் தெரியாமல் செய்கிற குற்றச்சாட்டுதான்.

ஞான மார்க்கத்துக்கு அதிகாரிகளாகப் பக்வப்பட்டவர்களுக்கென்று பரம அத்வைதமாக எழுதப்பட்டுள்ள சாஸ்த்ர நூல்களில் இப்படிப்பட்டவர்களை முன்னிட்டு, அவர்கள் கொஞ்சங்கூட சித்தம் சிதறாமல் அத்வைதத்திலேயே ஒருமுகப்பட வேண்டுமென்பதற்காக கர்மா - பக்திகளின் த்வைதம் அடியோடு எடுபட்டுப் போகும் அடிப்படையிலேயே வழி போட்டுக்கொடுத்திருப்பது வாஸ்தவம். ஆனால் பரம அத்வைதிகளும் ஸகல ஜனங்களையும் முன்னிட்டுப் புஸ்தகம் எழுதும்போதோ, கார்யம் செய்யும்போதோ அவர்கள் புஷ்கலமாக ஸ்வதர்ம கர்மாநுஷ்டானமும், ஸகுண உபாஸனையும் பண்ணுவதில்தான் ஆரம்பிக்கவேண்டுமென்று தீர்மானமாகக் காட்டியிருக்கிறார்கள்.

ஆசார்ய பாஷ்யங்களில் திரும்பத் திரும்ப உத்தமாதிகாரிகளுக்கே ஸ்வச்சமான ஞான மார்க்கம் மட்டுமென்றும், மத்யம- அதம அதிகாரிகள் ஒருகாலும் கர்மாநுஷ்டானத்தையும், ஈச்வரோபாஸனையையும் விடாமல் பின்பற்றத்தான் வேண்டுமென்றுமே சொல்லியிருக்கிறது.

அத்வைதிகளான மதுஸூதன ஸரஸ்வதிகள், அப்பைய தீக்ஷிதர் முதலானவர்கள் ஏராளமான பக்தி நூல்களை உபகரித்திருக்கிறார்களென்றால், கோவிந்த தீக்ஷிதரைப் போன்றவர்கள் நிறைய யஜ்ஞ கர்மாநுஷ்டானங்களும், ஸமூஹ நலனுக்காக அநேகப் பரோபகாரப் பணிகளும் செய்திருக்கிறார்களென்றால் எதனால்? கர்மா, பக்திகளை ஸாதாரண தசையிலுள்ள ஜனங்களெல்லாம் அநுஷ்டானம் செய்ய வேண்டுமென்று வழிகாட்டிக் கொடுப்பதற்குத்தான்!

Koviloor Digital Library

அத்வைதம் என்றுலே கரித்துக் கொட்டிக் கண்டிக்கிற த்வைதிகளின் பலவிதமான ஸித்தாந்தங்களுக்குங்கூட ஒவ்வொரு நிலையில் நியாயமுண்டு என்று மனஸார நினைத்து, அந்த நிலைக்கே பக்வப்பட்ட ஜனங்களை அவற்றிலேயே நிலை நிறுத்த வேண்டுமென்ற உயர்ந்த 'ஸிம்பதி'யோடு (அநுதாபத்தோடு) அந்த ஸித்தாந்தங்களை எடுத்துச் சொல்லும் புஸ்தகங்களையும் எழுதிய அத்வைப் பெரியார்கள் உண்டு.

ஸாங்க்யம், பூர்வ மீமாம்ஸை, ந்யாய (தர்க்க) சாஸ்த்ரம் முதலானவை அத்வைதத்துக்கு வித்யாஸமானவை. யோக சாஸ்த்ரம்கூட அத்வைதத்துக்கு அப்படியே ஒத்துப் போகாதுதான். ஆனாலும் அத்வைத சாஸ்த்ரகர்த்தர்களில் முக்ய ஸ்தானம் வஹிக்கும் ஒருவரான வாசஸ்பதி மிச்ரா மற்ற இந்த எல்லா சாஸ்த்ரங்களை விளக்கியும் புஸ்தகங்கள் எழுதியிருக்கிறார்.

வித்யாரண்யாள் (அத்வைத) ஆசார்ய பீடத்திலேயே இருந்தவர். அவர் "ஸர்வ தர்சன ஸங்க்ரஹம்" என்று ஒரு நூல் எழுதியிருக்கிறார். அதிலே லோகாயதம் என்கிற நாஸ்திகம் உள்பட, எல்லா ஸித்தாந்தங்களின் கருத்துக்களும் கொடுக்கப்பட்டிருக்கின்றன. அதை எல்லா விதமான ஸம்ப்ரதாயங்களுக்கும் digest என்று சொல்லலாம்.

இதையெல்லாம்விட வேடிக்கை—விசேஷம் என்றும் சொல்லலாம்—இப்போது மத்வரின் த்வைத ஸித்தாந்தம், ராமாநுஜரின் விசிஷ்டாத்வைதம், ஸ்ரீ கண்டாசார்யாரின் சைவ ஸித்தாந்தம் முதலியவற்றை அறிய விரும்பும் ஸம்ஸ்க்ருத ஞானமுள்ளவர்கள் அவற்றுக்காகப் படிக்கும் திட்டவட்டமான நூல்கள் எவை என்றால் அத்வைதியான அப்பைய தீக்ஷிதர் அவை ஒவ்வொன்றையும் அநுஸரித்து ப்ரஹ்ம ஸூத்ரத்துக்கு எழுதியுள்ள பாஷ்ய நூல்கள்தான்!

த்வைதத்துக்கு இவ்வளவு இடம் தந்து "அகாமடேட்" பண்ணும் அத்வைதிகள் ஒருபோதும் கர்மாநுஷ்டானம்,

Koviloor Digital Library

பக்தி ஆகியவை கலகலத்துப் போகும்படிப் பண்ணி, லோகப்ராயமான பெருவாரி ஜனங்கள் தர்மத்தில் பிடிப்பு விடும்படியாகவோ, அன்பு முதலான குணப்ரவ்ருத்தியில் அக்கறை காட்டாதபடியோ செய்யவே இல்லை.

ஆசார்யாள் செய்துள்ள பக்தி ஸ்தோத்ரங்கள் எத்தனை? அவர் க்ஷேத்ராடனம் செய்து பண்ணியுள்ள ஆலய புனருத்தாரணம், யந்த்ர ப்ரதிஷ்டை முதலானவற்றுக்குக் கணக்கு உண்டா? இன்றைக்கும் அவர் பேரில் நடக்கிற மடங்களில் வைதிக கர்மாநுஷ்டான, வேத அத்யயனாதிகளுக்கும், ஸகல ஜனங்களும் சாஸ்த்ர வழிப்படி தர்மாசரணை பண்ணவும், பூஜை, ஆலய கும்பாபிஷேகம் முதலியன நடக்கவுந்தானே விசேஷமாக ஊக்கம் கொடுத்தும், உபதேசம் செய்தும் வருகிறோம்?

லக்ஷ்யம் மறக்கப்படாது என்று இப்போது ஏதோ அத்வைத உபந்நியாஸம் பண்ணுகிறேனே தவிர, நீங்கள் தனியாக என்னிடம் வந்தால், வந்து மாட்டிக் கொண்டால், "ஸந்த்யாவந்தனம் பண்ணுங்கள், ஒளபாஸனம் பண்ணுங்கள், அம்பாள் ஸந்நிதியில் நெய் தீபம் போடுங்கள், ப்ராகாரத்தில் முள்ளைப் பிடுங்குங்கள், குளம் வெட்டுங்கள், ஆஸ்பத்திரிகளில் ப்ரஸாதம் விநியோகியுங்கள், பிடி அரிசித் திட்டத்தை ஏற்று நடத்துங்கள்" என்றெல்லாம் சொல்லித் தானே கஷ்டப்படுத்துகிறேன்? இப்படியெல்லாம் த்வைதமாகக் கஷ்டப்படுத்தியே, ஏற்கெனவே ஸம்பாதித்துக் கொண்டுள்ள த்வைதக் கஷ்டத்தைப் போக்குவதற்கு ஆரம்பிக்க வேண்டும் என்று ஆசார்யாள் உத்தரவு போட்டு விட்டுப் போயிருப்பதால்தான் இந்த மாதிரி (செய்கிறேன்).

தர்ம- அதர்மங்களும் அத்வைதியும்

விஷயம் தெரியாதவர்கள்தான், 'எல்லாம் மாயை என்பது தர்மம்கூடப் பொய்தான் என்ற அபிப்ராயத்தைக் கொடுத்து, ஜனங்களை எப்படி வேண்டுமானாலும் நடக்கலாம் என்று நினைக்கச் செய்துவிடும்' என்கிறார்கள். பொது ஜனங்

Koviloor Digital Library

களுக்கு மாயைக் கொள்கையை 'டெமாக்ரடைஸ்' பண்ணுவதற்கு ஆசார்யாளுடைய 'ஸாங்க்ஷன்' கிடையவே கிடையாது. ஆசார்யாள் மட்டுமில்லை, அத்வைத அநுபவிகளாக வந்த எந்த மஹானுமே தர்மத்தை விட்டு விட்டு ஜனங்கள் எப்படி வேண்டுமானாலும் பண்ணலாம் என்று நினைக்கும்படியாக மாயைக் கொள்கையை அவர்களிடம் சொன்னதுமில்லை, சொல்லச் சொன்னதுமில்லை.

மாயைதான் என்றாலும் அது நிஜமாகவே விலகும்போது தான் தர்மாதர்ம பேதம், நல்லது - கெட்டது என்ற வித்யாஸம், புண்ய - பாப பேதம் அற்றுப்போகுமே தவிர, மாயையிலிருந்து விடுபடாத நிலையில் இந்த பேதம் இருக்கவே செய்கிறது என்றுதான் அவர்கள் வற்புறுத்தியிருக்கிறார்கள். 'நல்லதைச் செய்; புண்யம் செய்; தர்மாநுஷ்டானம் பண்ணு' என்றே வற்புறுத்தியிருக்கிறார்கள்.

ஹடயோகத்தில் நல்ல ஸித்தி அடைந்து உடம்பை வஜ்ரம் மாதிரி ஆக்கிக்கொண்டால் அப்போது கண்ணாடியை ஆணியைத் தின்றுகூட, 'ஆஸிட்'டைக் குடித்துக்கூட ஜீர்ணம் செய்துகொள்ளலாம். அதற்காக ஒரு நோஞ்சானையோ, நார்மலான தேஹாரோக்யமுள்ளவனையோ ஆணியைத் தின்னச் சொல்வதுண்டா? மனஸ் இப்போதுள்ள ஜீவஸ்திதியிலிருந்து மேலேபோய் ஆத்மாவிலேயே வஜ்ரம் மாதிரி ஊன்றி நிற்கிறபோது என்ன அதர்மமானாலும், பாபமானாலும் ஜெரித்துப் போய்விடும். ஆனால் அது லோக ஜனங்களுக்கானது அல்ல. அப்படி அத்வைத சாஸ்த்ரத்தில் இல்லவே இல்லை. இவனை தர்ம மருந்து சாப்பிட வேண்டிய நோயாளியாகத்தான் அது வைத்திருக்கிறதே யொழிய, ஆணியைத் தின்கிற ஹடயோகியாக அல்ல.

ஞானியும் வினைப் பயனும்

ஞானி அதர்மம் - தர்மம் இரண்டுக்கும் மேலே போனவன். பாபம், கெட்டது எல்லாமே அதர்மம்தான். தர்மம என்பதில் புண்யம், நல்லது என்கிற எல்லாமுமே

Koviloor Digital Library

அடங்கிவிடும். இவை எல்லாவற்றுக்கும் மேலே போனவன் ஞானி. ஆத்மாவாகவே இருந்துகொண்டிருக்கும் நிலைக்குக் கீழ்ப்பட்ட த்வைதத்திலேதான் இருட்டு - வெளிச்சம், இன்பம் - துன்பம் என்று த்வந்த்வங்கள் இருக்கிறாற் போலவே நல்லது - கெட்டது, புண்யம் - பாபம், தர்மம் - அதர்மம் என்ற இரட்டைகளும் இருக்கின்றன. மாயா ஸ்ருஷ்டியில் வருகிறவையேயான இவை எதுவுமே ஆத்மாவை பாதிக்காது; அதாவது ஆத்மாவை அறிந்த ஞானியை பாதிக்காது.

இப்படிச் சொன்னதால் அவன் புத்தி பூர்வமாக உத்தேசித்து அதர்மமான பாபம் பண்ணி ஒருத்தருக்கு ஒரு கெடுதலை விளைவிக்கலாமென்றோ, அப்படி அவன் விளைவிப்பா னென்றோ அர்த்தம் இல்லை. ஞானிக்கு புத்தி, பூர்வம் உத்தேசம் என்பதெல்லாம் ஏது? "புத்தே: பரதஸ்து ஸ:" என்று புத்திக்கும் மேலாக உள்ள ஆத்மாவில் தன்னை ஸ்தம்பம் மாதிரி நிலைநாட்டிக் கொண்டவன் அவனென்று பகவான் சொல்லியிருக்கிறாரே! ஆகையால் அவன் நம்மைப் போல் புத்தி பூர்வமாக ஏதொன்றும் உத்தேசித்துச் செய்யவே மாட்டான். ஸங்கல்பம் இருக்கும்போதுதான் உத்தேசம் எழும்பும். மனஸ் அற்றுப்போன ஞானி ஸங்கல்ப -விகல்ப ரஹிதனல்லவா? 'நிர்விகல்பம்' என்பதே அவன் இருக்கும் நிலை.

பழைய கர்மாவில் இந்த ஜன்ம அநுபோகத்துக்கு என்று ஒதுக்கப்பட்டதாக ப்ராப்ரதம் என்று இருப்பதில் இன்னம் அநுபவிக்க வேண்டியுள்ள பாக்கியைத் தீர்க்கவே அவனுக்கு சரீரம் இருக்கிறது. "ஸஞ்சிதம்" என்பதாக மூட்டை கட்டிய ஜன்மாந்தர கர்மாக்களிலே இனிமேலே ஜன்மங்களைக் கொடுக்கக் கூடியதாயுள்ள எதையும் விட்டு வைக்காமல் அதை ஞானாக்னியால் எரித்துவிட்டவன் அவன். இந்த ஜன்மத்திலே பண்ணின கர்மா "ஆகாமி" என்ற பெயரில் ஒன்றுசேர்ந்து மறுபடி ஜன்மம் தராதபடியும் அவன் ஞானத் தீயிலே பஸ்மம் பண்ணிவிட்டவன்.

Koviloor Digital Library

ஆனாலும் இந்த ஜன்மாவுக்கென்று ஏற்பட்டு, பலன் கொடுக்கத் தொடங்கிவிட்ட ப்ராப்ரதத்தை மட்டும் அவனால் எரிக்க முடியாது. வில்லிலிருந்து விடப்பட்டுவிட்ட அம்பு மாதிரி அது. அதை நிறுத்த முடியாது. வில்லில் பூட்டி எய்யாமல் ஏற்கெனவே அம்பறாத்தூணியில் இருந்துகொண்டிருக்கிற அம்புகளை அப்படியே தோளிலிருந்து எடுத்துப் போட்டுவிடலாம். புதிசாக 'ஆர்டர்' கொடுத்த அம்புகளை வாங்கிக்கொள்ளாமலும் இருக்கலாம். இப்படித்தான் ஸஞ்சித, ஆகாமிகளை ஞானி போக்கிக்கொள்வது. ஆனால் நாணை இழுத்து ப்ரயோகம் பண்ணிவிட்ட அம்பை எப்படி நிறுத்துவது? அப்படித்தான், பலன் தர ஆரம்பித்துவிட்ட ப்ராப்ரதத்தை நிறுத்த முடியாததால் அதை அநுபவிப்பதற்காகவே இன்னமும் அவனுக்கு சரீரம் இருக்கிறது. ஏற்கெனவே புத்தி பூர்வமாக ஸங்கல்பித்துச் செய்ததன் விளைவுகள் மட்டும் இப்போது நேருமே தவிர, புதிதாக அவன் எதையும் நினைத்து, உத்தேசித்துப் பண்ணுவதில்லை.

ப்ராப்ரத விளைவுகளும்கூட நம் பார்வையில் ஏற்படுவதாகத் தெரியுமே தவிர அவன் அதனால் பாதிக்கப்படமாட்டான். உதாரணமாக, பூர்வ ஜன்ம கர்மாவுக்காக அவனுக்கும் ஏதாவது கொடூரமான ரோகம் உண்டாகக் கூடும். அல்லது அவன் வெறும் 'ஹம்பக்' என்று ஊரில் கதை கட்டிவிட்டு அவதூறு ஏற்படலாம். ஆனாலும் இந்த ரோகத்தையோ, அவதூற்றையோ அவன் கொஞ்சங்கூடப் பொருட்படுத்தமாட்டான், "படுத்தமாட்டான்" என்று 'டெலிபிரேட்'டாக அவன் செய்வதுபோலச் சொல்வது கூட ஸரியில்லை. வ்யாதி, அபவாதம் முதலானவை ஒரு பொருளாக அவனுக்கு முதலுக்கே தெரியாது.

வ்யாதி, அபவாதம் ஆகியவற்றுக்குப் பதில் பூர்வ ஸுக்ருதம் காரணமாக ஒரு ஞானிக்கு ஸான்டோ மாதிரியான ஆரோக்யம், ஒரே கீர்த்தி, சக்ரவர்த்திக்குச் செய்கிறது போல சிஷ்யர்கள் ஸிம்ஹாஸனம் போட்டு பீதாம்பரம் போர்த்தி உட்கார்த்தி வைப்பது என்றும்

Koviloor Digital Library

ஆனால் இவையும் அவனைப் பொறுத்தமட்டில் பொருளாகத் தெரியாது.

ஞானி எதுவுமே ஸங்கல்பித்து 'டெலிபிரேட்'டாகச் செய்வதில்லை என்று சொல்லவந்தேன். ப்ராரப்த வசாத் என்ன நடக்கணுமோ அது நடந்துவிட்டுப் போகட்டும் என்று உடம்பை ஒப்புவித்துவிட்டு, உள்ளே ஆத்மாவிலேயே ரமித்துக்கொண்டிருப்பவன் அவன்.

ஞானியின் ப்ராரப்தம் பற்றி வித்யாஸமான இன்னொரு அபிப்ராயமும் உண்டு.

"ஞாநாக்நி: ஸர்வ கர்மாணி பஸ்மஸாத் குருதே" என்று பகவான்* சொல்கிறபடி ஞானத் தீ ஸர்வ கர்மங்களையும் பஸ்மமாக்கிவிடும் என்பதில் ப்ராரப்த கர்மமும்தான் அடக்கம்; ஞானோதயத்தில் பரிபூர்ண மநோ நாச, கர்ம நாசம்தானே யொழிய, ப்ராரப்தம் என்று ஒன்றை மட்டும் விட்டு வைத்திருப்பதற்கில்லை என்று அபிப்ராயப்படுகிறவர்கள் உண்டு. "தீபத்தை ஏற்றி வைத்தால் இருட்டு ஓடிப் போய் விடுகிறாற்போல ஞானோதயத்தின் ப்ரகாசத்தில் மாயையின் இருட்டு ஓடியே போய்விடுகிறது என்பதில் ஸந்தேஹமில்லை. அந்த மாயையின் ஒரு அங்கம், அல்லது ஸ்ருஷ்டிதானே கர்மாவும் கர்ம பலனும்? இப்படியிருக்கும் போது, மாயையே போகிறது, ஆனால் கர்மாவிலே மட்டும் ப்ராரப்தம், ஸஞ்சிதம், ஆகாமி என்று இருக்கிற மூன்று தினுஸுகளில் இரண்டு மாத்திரம்போய், இன்னொன்று இருக்கிறது' என்றால் அர்த்தமாகவில்லையே!" என்று இவர்கள் கேட்கிறார்கள்.

"போட்ட பாணத்தைக்கூட அது லக்ஷ்யத்தை அடிக்காமல் மந்த்ர சக்தியால் திரும்ப வாங்கிக்கொள்ள முடிகிறதே! மந்த்ர சக்திக்கெல்லாம் மேற்பட்ட ஆத்ம ஞானத்தால் ப்ராரப்த பாணத்தைத் திரும்ப வாங்கிக் கொள்ள முடியாதா?" என்று கேட்கலாம்.

---

* கீதை 4-37

Koviloor Digital Library

ஆசார்யாள் கீதா பாஷ்யத்திலே "ஸர்வ கர்மங்கள்" என்று சொல்லியிருப்பது பலன் கொடுக்க ஆரம்பித்துவிட்ட தான ப்ராரப்தம் தவிர ஏனைய ஸர்வ கர்மங்களையும் குறிப்பதே என்று பாஷ்யம் செய்திருக்கிறுர். ஆனுல் அவரே "விவேக சூடாமணி"யில் பத்துப் பதினைந்து ச்லோகங்களில் *இந்த விஷயத்தை விசாரித்து விமர்சிக்கும்போது வேறு விதமாக முடிவு சொல்கிறுர். அங்கே, கொஞ்சமாவது தேஹத்திலே ஆத்ம புத்தி ஒட்டிக்கொண்டிருக்கிற வரையில் தான்" ப்ராரப்தம் உண்டு என்றும், அடியோடு தேஹாத்ம புத்தி நசித்துப்போனுல் அப்புறம் ப்ராரப்தமும் இல்லை என்றும் தீர்ப்புக் கொடுத்திருக்கிறுர். "அப்படிப்பட்ட ஞானிக்கு ஜன்மா, கர்மா எல்லாமே ஸ்வப்னமாகிவிடுகிறது. அவன் ஞானத்திலே விழிப்புப் பெற்றவன். இப்படிப்பட்டவனுக்கு ப்ராரப்தம் உண்டு என்பது, ஸ்வப்னத்தில் ஒருத்தன் ஸம்பாதித்ததில் ஒரு பங்கு மாத்திரம் அவன் முழித்துக் கொண்ட பிற்பாடு அவனுக்குச் சேர்கிறது என்கிற மாதிரி தான் என்று பரிஹாஸமாகக் காட்டியிருக்கிறுர். "ஞானி எப்படி த்வைத ப்ரபஞ்சத்தில் இருக்கமுடியும் என்றுபுரியாத அஞ்ஞானிகளுக்கு ஏதாவது ஸமாதானம் காட்டவேண்டுமென்றே அவனுக்கும் ப்ராப்தமுண்டு என்று சொல்வது" என்று சொல்லி முடிக்கிறுர்.

எல்லா மார்க்கக்காரர்களும் படிக்கும் கீதையில் ஸராசரி மநுஷ்யனின் லெவலில் த்ருப்தியாக ஏதேனும் ஸமாதானம் சொல்ல வேண்டுமென்பதால் ஞானி விஷயத்தில் ப்ராரப்தத்தை ஒப்புக் கொண்டாரென்றும் ஞானத்திலே விசேஷப் பற்றுள்ளவர்களுக்கேயான 'விவேக சூடாமணி'யில் உள்ளதை உள்ளபடிச் சொன்னுரென்றும் வைத்துக் கொள்ளலாம். அப்படிப் பற்றுள்ளவர்கள் அவர்களாகவே ஞான விசாரத்தால், "ஞானிக்கு ஏன் சரீர யாத்ரை இருக்கவேண்டும்? அது ப்ராரப்தமில்லை என்றுல்

---

* 445-லிருந்து 463 முடிய உள்ள ச்லோகங்கள்.

Koviloor Digital Library

வேறு என்ன காரணத்துக்காக?" என்று தெரிந்து கொள்ளட்டுமென்று விட்டுவிட்டாரென்று சொல்லலாம்.

ஆனால் நான் இப்போது எல்லா ஜனங்களுக்கும் இதைச் சொல்லிவிட்டேனே! உங்களையெல்லாம் "நீங்களே ஞானி யாகித் தெரிந்து கொள்ளுங்கள்" என்று சொன்னால் தப்பாகிவிடுமே! "நிறையக் கர்மா, பக்தி பண்ணி அப்பு றமே ஞான விசாரத்துக்குப் போங்கள் என்றல்லவா பல்லவி பாடிக் கொண்டிருக்கிறேன்?"

ஸரி, உங்களுக்கு இன்னொரு விதத்தில் ஸமாதானம் சொல்கிறேன்—ஞானிக்கும் ஞானம் வந்தபின் (அதாவது அத்வைத ஸித்தி ஏற்பட்டுவிட்டபின்) ஏன் சரீரம் இருந்து கொண்டு இந்த லோகத்தில்—நம் பார்வையிலாவது— வாழ்க்கை என்று ஒன்று நடக்க வேண்டுமென்பதற்கு ஒரு விதமாக ஸமாதானம் சொல்லிப் பார்க்கிறேன்.

ஞானம் வந்துவிட்டால் அப்புறம் லோகத்தில் என்ன கஷ்ட ஸுகம், லாப-நஷ்டம் வந்தாலும் அதொன்றுமே கொஞ்சங்கூட ஒட்டாமல் ஆத்மானந்தத்தில் இருக்கலா மென்பதுதானே சாஸ்த்ரம்? இது நிஜந்தானா என்று தெரிய வேண்டுமானால் அப்போது ஞானமடைந்தவன் இந்த லோகத்தில் இருந்துகொண்டு இப்படிக் காட்டினால்தானே நிரூபணமாகும்? அதற்காகத்தான் ஞானியையும் ஈச்வரன் லோகத்தில் இருக்க வைத்திருக்கிறான் என்கலாம். நம்மைத் தலைதெறிக்கப் பண்ணும் எத்தனை புகழ் வந்தாலும், நம்மைத் தலைதூக்க வொட்டாமல் பண்ணும் எத்தனை இகழ் வந்தாலும்; நாம் தோளைத் தட்டிக் காட்டும்படியான எத்தனை ஆரோக்யமிருந்தாலும், அல்லது நாம் பயந்து இடிந்துபோய் விழும்படியான எத்தனை கோரமான வ்யாதி வந்தாலும் இன்னும் பல தினுஸான இன்ப - துன்பங்களில் எது நேர்ந்தாலும் எல்லாவற்றையும் ஸமமாக, சாந்தியுடன் நிச்சலனமாக ஏற்றுக்கொள்வதே ஆத்ம நிலை என்பது 'ப்ரூவ்' ஆக வேண்டுமானால் அதற்கு 'ப்ரூஃப்' ஆக ஞானிகள் லோகத்தில் இருந்து காட்டினால்தானே முடியும்?

Koviloor Digital Library

'அத்வைத மோக்ஷம் இஹத்திலேயே பெறக்கூடியது-அதற்கு இஹ பர வித்யாஸமில்லை' என்றபின், அதை நம் பார்வையில் இஹமென்று தெரிகிற லோகத்திலேயே இருந்து கொண்டு ஒரு ஞானி அநுபவித்துக் காட்டினால்தானே ஸரியாயிருக்கும்? ஞானம் வந்தவுடன் ஒருவனுடைய சரீரம் அற்றுப்போய் விட்டதென்றால், இஹத்திலே ஞானத்தோடு இருக்கமுடியாது—அதாவது ஞானத்துக்கு இஹம் என்கிற ஒரு வித்யாஸம் தெரிகிறது—என்றல்லவா ஆகிவிடும்?

இன்னொரு காரணமும் சொல்லலாம். ஜனங்களுக்கெல்லாம் நல்லது செய்வதற்காகவே, அவர்களுக்கு உத்தமமான வாழ்க்கைப் பண்புகளை உதாரண புருஷர்களாக வாழ்ந்து காட்டுவதற்காகவே ஈச்வரன்தான் ஞானிகளை லோகத்திலே கருவி மாத்ரமாக வைத்து, அவர்கள் மூலம் தன்னுடைய இந்த ஸங்கல்பத்தை நிறைவேற்றிக் கொள்கிறானென்று சொல்லலாம்.

"வஸந்தகாலம் எப்படி ஒரு ஸொந்த உத்தேசமுமில்லாமல் லோகத்தில் பசுமையையும் செழிப்பையும் ஏற்படுத்திக் கொண்டு போகிறதோ அப்படி ஞானியும் லோகத்தில் ஹிதத்தைத் தன் உத்தேசமில்லாமலே ஏற்படுத்திக்கொண்டு போகிறான்; தான் ஸம்ஸாரத்தைத் தாண்டியதோடு, பிறத்தியாரையும் ஒரு ஸ்வயநல காரணமும் இல்லாமல் தாண்டுவிக்கிறான்" என்று ஆசார்யாள் சொல்லியிருக்கிறார்.* இப்படிப் பிறரை உயர்த்துவதற்காக ஒரு ஞானி இருப்பது அவனுடைய உத்தேசத்தினால் இல்லை. ஏனென்றால் அவனுக்கு எந்தவிதமான உத்தேசமும் இல்லை. பின்னே இதுமாதிரி எப்படி நடக்கிறதென்றால், அவன்

---

* விவேக சூடாமணி—ச்லோகம் 37. சொல்லழகும் மிக்கது:

"சாந்தா மஹாந்தோ நிவஸந்தி ஸந்தோ வஸந்தவல்-லோகஹிதம் சரந்த: |
தீர்ணா: ஸ்வயம் பீம-பவார்ணவம் ஜநாந் அஹேதுநாந்யாநபி தாரயந்: ||

Koviloor Digital Library

அப்படியிருக்க வேண்டுமென்று ஈச்வரன் உத்தேசம் பண்ணுவதால்தான்!

ஸம்ஸாரத்தைத் தாண்டுவதில் முதல் அங்கமான தர்ம வாழ்க்கைக்கு ஐடியலாகக்கூட ஒரு ஞானியை ஈச்வரன் இருக்கப் பண்ணுவதுண்டு. ஜனகர் அப்படித்தானிருந்தார். ஜனங்களுக்குப் புரிபடுவதான தர்மங்களையே ஞானியும் செய்து காட்டுகிறுனென்று பகவானும் சொல்லியிருப்பதைப் பார்த்தோம்.

ஆகக்கூடி, ஞானிக்கு ஸ்வய உத்தேசம், உத்தேசிக்கும் மனஸ் எதுவும் இல்லாதபோது, அவனுக தர்மம் அதர்மம் என்று நினைத்து எதையும் பண்ணுவதுமில்லை; விடுவதுமில்லை. அவனை ஈச்வரனே கருவிமாத்ரமாகக் கார்யம் பண்ண வைக்கும்போது லோக ஹிதத்துக்காக, லோகத்தின் ஞான உயர்வுக்காக, அல்லது (லௌகிக) தர்மத்துக்கும்கூட ஒரு ஐடியலாகத்தான் இருக்கச் செய்கிருன். ஆகையால் எப்படிப் பார்த்தாலும் ஒரு ஞானி அதர்மத்தை, கெட்டதை பாபத்தைப் பண்ண இடமில்லை.

ஆனபடியால் தர்மாதர்மம். புண்ய பாபம், நல்லது கெட்டது ஞானிக்கு இல்லை என்பது ஒரு தத்வமாக இருப்பது தானே ஒழிய. இதனுல் நடைமுறையில் ஒரு ஞானி அதர்மமும், பாபமும், கெட்டதும் பண்ண இடம் கொடுத்துப் போவது என்பதே இல்லை. அவனுக்குள்ளே இந்த எதுவும் ஒட்டாது என்பதால் அவன் இவற்றில் தப்பாக இருக்கிற வற்றின்படி வெளியிலே நடக்கிருனென்று அர்த்தம் ஆகவே ஆகாது.

எனவே, 'அத்வைத ஸித்தாந்தமானது அதர்மம் முதலானவற்றுக்கு handle கொடுத்துவிடும். அதர்மத்தை easy-யாக எடுத்துக்கொள்ளப் பண்ணிவிடும்' என்று குற்றம் சொல்வது, நிஜமான ஸாதகர்களுக்கான புஸ்தகங்களை அப்படியில்லாதவர்கள் படித்துத் தப்பர்த்தம் செய்து கொள்வதன் விளைவுதான்.

Koviloor Digital Library

தர்மஸங்கடமான சில ஸந்தர்பங்கள் ஏற்படுவதுண்டு. அப்போது பொதுவிலே ஒரு தர்மத்தை, நல்லதை நிலைக்கப் பண்ணுவதற்காகவே ஒருத்தர் அதர்மமாக ஒன்று செய்ய நேரிடும். அம்மாதிரி ஸந்தர்பங்களில்தான் அப்படிப்பட்ட அதர்மங்கள் ஒரு ஞானியைத் தாக்காது என்பதால் அவனைக் கொண்டு அதைச் செய்து பொது க்ஷேமத்தை உண்டாக்குவதுமுண்டு. மஹாபாரத யுத்தத்தில் மஹா ஞானியான க்ருஷ்ண பரமாத்மா இப்படித்தான் பல செய்து, ஜெரித்துக் கொண்டார். எப்போதாவது இம்மாதிரி நடப்பதை வைத்து, இது ஞானிகளுக்கு மட்டுமில்லாமல் அத்வைதத்தில் கொஞ்சம் விச்வாஸமுள்ளவர்களுக்கும் ஜெனரல் ரூலாகிவிடும் என்று குறை சொல்வது ந்யாயமே இல்லை.

முதலிலே அதர்மத்தைப் போக்கிக்கொண்டு, அப்புறம், ரொம்ம்ம்...பவும் அப்புறந்தான் தர்மத்தையும் விடும்படி அத்வைத சாஸ்த்ரங்களில் சொல்லியிருக்கிறது.

"ஸர்வ தர்மாந் பரித்யஜ்ய..."—"எல்லா தர்மங்களையும் விட்டு என்னை சரண் அடை" என்று பகவான் எப்போது சொன்னார்? கீதையின் கடைசீக் கடைசியிலேதான். ஆரம்பத்திலெல்லாம் என்ன சொன்னார்? இன்னொரு கோடியில் ஆரம்பித்துத்தான் சொன்னார். "எல்லாவற்றையும் விட்டுவிட்டு ஸந்நியாஸியாகப் போகிறேன்" என்ற அர்ஜுனனை "பேடிப் பயல் மாதிரி" என்று நன்றாகத் திட்டி, "தர்மத்தைப் பண்ணு, ஸ்வதர்மத்தைப் பண்ணு" என்றுதான் மறுபடி மறுபடி வற்புறுத்திச் சொன்னார். அப்புறம்தான் கொஞ்சம் கொஞ்சமாக ஒரு விஷயம் பாக்கியில்லாமல் கர்மா—பக்தி—ஞானங்களில் எல்லா உபதேசமும் கொடுத்து, தன்னுடைய விச்வரூப தர்சனத்தையும் கொடுத்து அவனுடைய மனஸை ரொம்ப உயர்த்தி "எலிவேட்" பண்ணி, அந்த நிலையிலே "தர்மத்தையெல்லாம் விடு, என்னிடமே சரணாகதி என்று விழு" என்றார்.

Koviloor Digital Library

இப்படித்தான் அத்வைத சாஸ்த்ரங்களில் உத்தம அதிகாரியாக ஒருத்தனை ஆக்கியபின்தான் தர்மத்தை விடச் சொல்வது.

அதுவுங்கூட, ஸரியாகப் புரிந்துகொண்டால் கார்யத்தில் தர்மத்தை விடும்படிச் சொல்வதில்லை; தர்மாதர்மங்களின் பலாபலனை நினைத்துக்கொண்டு அவற்றைச் செய்கிற மனோ பாவத்தைதான் விடச்சொல்வது. உத்தமாதிகாரியாவதற்கு முற்பட்ட நிலைகளிலுள்ள மனிதர்களுக்கு மநு முதலான தர்ம சாஸ்த்ர டாக்டர்களோடுகூட, ஆசார்யாள் முதலான ஆத்ம சாஸ்த்ர டாக்டர்களும் தர்ம மருந்துதான் 'ப்ரிஸ்க்ரைப்' செய்திருக்கிறார்கள்.

"ஸர்வ தர்மாந் பரித்யஜ்ய"வுக்கு பாஷ்யம் செய்யும் போது ஆசார்யாள் இதை மந்த, மத்யம அதிகாரிகள் தப்பாக நினைத்துவிடக் கூடாதே என்ற கவலையுடன், கருணையுடன் நன்றாகத் தெளிவுபடுத்தி அர்த்தம் பண்ணியிருக்கிறார். "எல்லாக் கார்யத்தையும் விட்டு விடும்படிச் சொல்வதுதான் பகவான் இங்கே உபதேசிக்க உத்தேசித்தது. ஆகையால் அவர் 'தர்மம்' என்று சொல்லியிருப்பதில் அதர்மமும் அடங்கியிருக்கிறதென்று புரிந்து கொள்ள வேண்டும்" என்கிறார்.

இப்படிச் சொல்லிவிட்டு ஆரம்ப நிலைகளிலிருக்கும் பெருவாரியானவர்கள் அதர்மத்தை விடுவதே முக்யம் என்பதை ச்ருதி ப்ரமாணத்தால் நிலைநாட்டுகிறார். ஆசார்யாள் சொன்னால் போதுமென்றாலும் வேதத்தின் 'அதாரிடி'யையே காட்டுவது அவச்யம் என்று நினைத்து கடோபநிஷத்தை மேற்கோள் காட்டுகிறார். "துர்நடத்தையை விடாதவன் ப்ரஜ்ஞானம் என்ற உத்தமமான அறிவினால் ஆத்மாவை அடைவதென்பதில்லை" என்று அதில் சொல்லியிருப்பதைக்* காட்டி, அதர்மத்தை விடும்படியாக முதலில் உபதேசிக்கிறார், இது பொதுவாக எல்லாருக்கும்.

---

* கடோபநிஷத் 1-2-24

Koviloor Digital Library

அப்புறமே உத்தமாதிகாரி அதர்மத்தோடு தர்மத்தையும்கூட விட்டுவிட வேண்டும் (அதாவது தர்ம-அதர்ம வித்யாஸ சிந்தையை விட்டுவிட வேண்டும்) என்பதற்கு மஹாபாரத சாந்தி பர்வத்தில் "த்யஜ தர்மம் அதர்மம் ச" என்று சொல்லியிருப்பதை ப்ரமாணமாகக் காட்டுகிறுர். (மஹாபாரதம் "ஐந்தாவது வேதம்" என்று உயர்த்திச் சொல்லப்பட்டாலும் அது ச்ருதி ப்ரமாணத்துக்கு அப்புறம் தான்.)

"ஸர்வ தர்மாந் பரித்யஜ்ய'ன்னு பகவான் சொல்லிட்டாரே' தேவலையே! நல்ல உபதேசமாயிருக்கே! நாம் பாட்டுக்கு தர்மங்களை விட்டுடலாம்" என்று யாரும் அர்த்தம் பண்ணிக்கொண்டு விடப்படாது. (ஸ்ரீ சரணர்கள் சிரிக்க, ஸபையும் சிரிக்க, சிறிதுநேரம் சிரிப்பிலேயே செல்கிறது.) முதலிலே அதர்மத்தை விட்டு விட்டு அப்புறம்தான் தர்மத்தை விடுகிற ஸமாசாரத்துக்குப் போகவேண்டும்.

முதலில் அதர்மத்தை விடுவது, அதோடு கர்ம மீமாம்ஸையில் 'அதாதோ தர்ம ஜிஜ்ஞாஸா' என்று சொன்னபடி தர்மங்களை அறிந்து அநுஷ்டிப்பது, அப்புறம் தர்மாதர்மங்களின் பலாபலனை நினைக்காமலிருப்பது, அதற்கும் அப்புறம் உத்தர மீமாம்ஸையில் சொன்னபடி ப்ரஹ்மத்தை அறிவதில் நாட்டம் வைத்து ப்ரஹ்ம ஜிஜ்ஞாஸையில் ஸாதனை செய்வது, கான்ஷஸாக (புத்தி பூர்வமாக) 'தர்மம் பண்ணுகிறேனுக்கும்' என்று பண்ணுமல் அவன் பாதத்தில் தன் கான்ஷன்ஸையே போட்டுவிட்டு, அதன் அங்கமாக தர்மம் பற்றிய நினைப்பையும் போட்டுவிடுவது, (இதுதான் 'எல்லா தர்மத்தையும் விட்டுவிட்டு, என்னை சரணடை' என்று பகவான் சொன்னதன் தாத்பர்யம் என்கலாம்), முடிவாக தர்மாதர்ம வித்யாஸமே தெரியாத அத்விதீயமான ஸம த்ருஷ்டியைப் பெறுவது என்று படிப்படிப்படியாக போகிற விஷயம் இது. (இதைப்) புரிந்துகொள்ளாத குறைதான், அத்வைதத்தால் தர்மத்துக்கு ஹானி வரும் என்று குறை சொல்வது.

Koviloor Digital Library

முதலில் அதர்மத்திலிருந்து தர்மத்துக்கு; அப்புறந்தான் தர்மத்திலிருந்து ப்ரஹ்மத்துக்கு. இதைப்பற்றி ஸந்தேஹமே இல்லை.

ஞானிகளைப் பார்த்து, அல்லது, "விட்டகுறையில்" எடுத்தவுடனேயே ஞானமார்க்கத்தில் பிடிப்புள்ளவர்களைப் பார்த்து, அப்படிப் பிடிப்பில்லாத மற்றவர்கள், அல்லது ஏதோ சில ஸந்தர்பங்களில் மட்டும் பிடிப்பு ஏற்பட்டு அப்புறம் நழுவி எங்கேயோ போய்விடுவதாக உள்ளவர்கள், முதலிலேயே தர்மாதர்மமில்லாத ஆத்ம விசாரம் என்று உட்கார்வது நிஷ்பலனாக ஆகும்; அல்லது விபரீத பலனாகக் கூட ஆகலாம். பிறக்கிறபோதே பறக்கிற பக்ஷிகள் இருப்பதைப் பார்த்துவிட்டு ஒரு புழுவும் அந்த மாதிரிப் பண்ண நினைத்தால் எப்படியிருக்கும்? அது புழுவாக இருந்து, அப்புறம் கூட்டுப் புழுவாக ஆகி, அதற்கும் அப்புறம்தானே கொசு, குளவி, வண்ணாத்திப் பூச்சி மாதிரியான ஒன்றாகிப் பறக்க முடியும்? ஸ்வலபத்தில் மனஸை நிறுத்த ஸ்வாபாவிகமாக, அல்லது ஜன்மாந்தர ஸம்ஸ்காரத்தினால் யோக்யதை பெற்றிருப்பவர்களைப் பார்த்து அவர்களுடைய ஸாதனா மார்க்கத்தை நாம் அனைவரும் எடுத்துக் கொள்வதற்கில்லை.

இப்போது ரொம்பவும் வேதாந்தப்பேச்சு ஜாஸ்தியாகி, கர்மா—'ரிசுவல்' எல்லாம் ரொம்பவும் 'அன்னெஸஸரி' என்று ப்ரசாரம் பண்ணுவதாக இருப்பதால் இந்த விஷயத்தை நான் கொஞ்சம் 'ஓவ'ராகவே 'ஸ்ட்ரெஸ்' பண்ணிச் சொல்ல வேண்டியதாயிருக்கிறது. இப்படிப் பேசுபவர்களில் வேதாந்தத்தைப் பற்றிய ப்ரஸங்கிகள், ப்ரொஃபஸர்கள், டாக்டர் பட்டம் வாங்கினவர்கள், சீமை ப்ரெஸ்ஸிலே புஸ்தகம் போட்டவர்கள் நிறைய ஏற்பட்டிருந்தாலும், ஞானி என்று சொல்லும்படியாக யாராவது இருக்கிறார்களா என்று தேடினால்......, தேடிக் கொண்டேயிருக்கும்படிதானிருக்கிறது. இவர்கள் பிறத்தியாருக்கும் உபதேசம் பண்ணி, ஏற்கெனவே ஒழுங்கு கெட்ட இன்றைய உலகத்திலே ஏதோ கொஞ்சம் சாஸ்த்ரம், ஸம்ப்ரதாயம்,

Koviloor Digital Library

ஆசார அநுஷ்டானத்துக்கு வரக்கூடியவர்களையும் "வேதாந்தா"வுக்கு நேரே இழுக்கிறார்களே என்ற கவலையினால்தான் சொல்கிறேன். இப்போது தார்மிகத்துக்கும் ஆத்மிகத்துக்கும் நாஸ்திகத்தினால் வந்திருக்கிற ஆபத்து போதாது என்று "வேதாந்தா"க்காரர்களிடமிருந்து வேறு ஆபத்து வந்திருக்கிறதே என்று விசாரமாயிருக்கிறது. குற்றம் சொல்வதற்காக (இதையெல்லாம்) சொல்லவில்லை. குற்றம் ஏற்படாமல் தடுக்கமுடியுமா என்று பார்ப்பதற்காகத்தான் சொல்கிறேன்[1].

தர்மம், அதோடு சேர்ந்த கர்மம், பக்தியுபாஸனை எல்லாம் சேர்ந்துதான் நம்மை த்யான நிலைக்கும், அப்புறம் ஞான நிலைக்கும் கொண்டு சேர்க்கவேண்டும்.

தர்மமும் அன்பும்

தர்மாதர்மம் கடந்தவர்களானாலும் ஞானிகள் தர்மமாகவேதான் நடந்திருக்கிறார்களே தவிர அதர்மத்தில் போனதாக நாம் பார்ப்பதில்லை. அப்படியே நல்லது -- கெட்டது இரண்டையும் அவர்கள் தங்களளவில் தாண்டியிருந்தாலும் லோகத்தின் த்ருஷ்டியில், 'இவர்களைவிட நல்லவர்களில்லை' என்னும்படியாகத்தான் பரம கருணையோடு, அநுதாபத்தோடு, தாக்ஷிண்யத்தோடு இருக்கிறார்கள். "ஸர்வ பூத ஹிதே ரதா:"—எல்லா ஜீவ ஜந்துக்களின் நலனிலும் களிப்பவர்கள் என்றும், "ஸுஹ்ருதம் ஸர்வபூதாநாம் ஜ்ஞாத்வா மாம்"—ஜீவ குலம் முழுதிடமும் நட்பு கொண்ட தன்னை அறிந்தவர்கள் என்றும் பகவான் அவர்களைச் சொல்கிறார்[2].

நல்லதிலெல்லாம் பெரிய நல்லதான அன்பிலே ஞானிகளை மிஞ்சி யாரும் இருப்பதாகத் தெரியவில்லை. "அன்பு

---

1. இவ்விஷயமாக மூன்றும் பகுதியில் "ஆசாரம்" என்ற உரையில் "நவீன வேதாந்திகள்" என்ற உட்பிரிவும் அதை அடுத்த இரு உட்பிரிவுகளும் பார்க்க.

2. கீதை 5:25: 5.29.

Koviloor Digital Library

த்வைதந்தான்—இன்னொன்றை வைத்துச் செய்வதுதான். இந்த லோகமோ மாயை. இதில் தர்மமிருந்தாலென்ன, அதர்மமிருந்தாலென்ன? இதிலிருக்கிற ஜனங்கள் தர்மம் பண்ணினாலென்ன? பண்ணாமல் கெட்டுப்போனாலென்ன? அவர்களிடம் நமக்கென்ன அன்பு, பரிதாபம் வேண்டிக்கிடக்கிறது? அவர்களுக்காக நாம் என்ன உபகாரம் செய்ய இருக்கிறது? உபகாரமும் மாயைதான்'' என்று நினைத்து ஆசார்யாள் மாதிரியானவர்கள் உலக உத்தாரணத்துக்காக எதுவும் பண்ணாமல் ஒதுங்கியிருந்து தாங்கள் பாட்டில் ஆத்மாராமர்களாக வாழ்க்கையைக் கழித்துவிட்டுப் போயிருக்கலாமோல்லியோ? அப்படியில்லாமல் அவர்கள் ஜனங்களுக்காக உடம்பைச் சக்கையாகப் பிழிந்து எத்தனை அலைச்சல் அலைந்து, எத்தனை உபதேசங்கள் வாயால் செய்தும் கையால் எழுதிவைத்தும் தொண்டு செய்திருக்கிறார்கள்?

இதிலேயே இன்னொரு புரளி அடிபட்டுப் போகிறது. அத்வைதத்தால் லோகத்தில் தர்மத்திடம் பிடிப்பு போய் விடும், பாப பயம் போய்விடும் என்பதுபோல, அத்வைதத்தின் மாயா - டாக்ட்ரினால் (கொள்கையால்) தான் இந்தியர்கள் கார்ய சக்தியில்லாத சோப்ளாங்கிகளாகி விட்டார்களென்று ஒரு புரளி உண்டு. கார்ய லோகத்தில் ஆசார்யாளைப் போன்றவர்களின் ஸாதனை இது எத்தனை தப்பான வாதமென்று நிதர்சனமாக்குகிறது*.

தர்மத்திலும் அன்பிலும் நன்றாக ஊறியே தர்மா தர்மங்களுக்கு அதீதமான, ப்ரேம - த்வேஷங்களுக்கு அதீதமான ஆத்ம ஸ்தானத்துக்குப் போக முடியும்; அப்படியே போக வேண்டுமென்பதுதான் ஸாராம்சம்.

ஒரு சக்கரத்துக்கு இரும்புப் பட்டை அடிப்பதென்றால் மாற்றி மாற்றிக் காய்ச்சியும் குளிர்ந்த ஜலத்தைக் கொட்டியும், மாற்றி மாற்றி விரிவடையவும் சுருங்கவும் பண்ணுவது

---

* இவ்விஷயமாக இப்பகுதியில் ''குருகுலம்; கடிகாஸ்தானம்'' என்ற உரையில் ''அத்வைதமும் அரசாங்கமும்'' எனும் பிரிவு பார்க்க.

Koviloor Digital Library

வழக்கம். அப்போதுதான் அது சக்கரத்தை நன்ருகக் கெட்டியாகப் பிடித்துக்கொள்ளும். இல்லாவிட்டால் 'லொட லொட' என்று விட்டுப் போய்விடும். காய்ச்சி விரிவாக்கணும்; ஜலத்தைக்கொட்டி சுருங்கவும் பண்ணணும். இந்த மாதிரிதான் ஒரு ஜீவன் ஆத்ம ஸ்தானத்தைப் போய்க் கெட்டியாகப் பிடித்துக்கொள்ள வேண்டுமென்ருல் தர்மத்தின் பல கட்டுப்பாடுகளால் அதன் கீழான குணம் குறுகும்படியாகவும் பண்ணணும்; அன்பின் விசாலத்திலே அதன் மேலான குணம் விரியும்படியும் பண்ணவேண்டும்.

கார்யமே இல்லாமல் ஆகிறதற்காகவே எத்தனையோ வகை வகையான கர்மாக்களை, சடங்குகளை, பொதுத் தொண்டுகளை நிறையப்பண்ணவேண்டும். தூக்கம் வரவில்லை என்று சொல்கிறவர்களிடம் என்ன சொல்கிருேம்? "நன்ருக ஓடியாடி, உழைத்து வேலை பண்ணு. தானே அடிச்சுப் போட்ட மாதிரி தூக்கம் வரும்" என்கிருேமல்லவா? இது சரீர 'ரெஸ்ட்'டுக்கு மட்டும் சொன்னது. ஆத்மாவில் 'ரெஸ்ட்' ஆவதற்கும் கர்மா இப்படியே உபயோகமாகிறது.

இதே விதத்தில்தான் வெளி உணர்ச்சிகள் ஒன்றுமே இல்லாமல் ஆவதற்காகவே ப்ரேமையை, அதன் முற்றிய ஸ்தானமாக பக்தி என்ற உணர்ச்சியை நன்ருக வளர்த்துக் கொண்டு அதில் ஆவேசம், பரவசம் என்கிற ஸ்திதிக்குப் போகவேண்டும். இப்படிப் பண்ணிஞல்தான் 'ஏகப் பேருணர்வு' என்கிருர்களே, அதில் கொண்டுவிடும். இப்படியில்லாமல் முதலிலேயே எல்லா உணர்ச்சியையும் போக்கிக் கொள்வது என்ருல் முடியாது. அப்படி முடிந்தாலும் அது மரத்துப்போன மாதிரி உயிரில்லாத ஒரு வறட்டு நிலையில்தான் சேர்க்குமே தவிர ஏகப் பேருணர்விலே அல்ல. பலவிதமான உணர்ச்சிகள் எழும்பிக் கொண்டேயிருக்கும்போது எல்லாவற்றையும் அடியோடு இல்லாமல் பண்ணிக் கொள்வது ஸாத்யமா? இல்லாவிட்டால் அவற்றிலேயே ரொம்பவும் உத்தமமாக இருக்கப்பட்ட ப்ரேமை என்ற ஒன்றை மட்டும் பெரிசாக வளர்த்துக்கொண்டு, அதிலே

Koviloor Digital Library

மற்ற உணர்ச்சிகள் அமுங்கிப் போகும்படி செய்வது ஸாத்யமா?

பலபேர் சேர்ந்து சளசளவென்று பேசிக்கொண்டிருக்கும்போது எல்லாரையும் ஸைலன்டாக இருக்கச் சொன்னால் அவர்களால் இருக்கமுடிகிறதா? முடிவதில்லை. ஒரு நிமிஷம், இரண்டு நிமிஷத்துக்கப்புறம் ஒருத்தர் இரண்டு பேர் ரஹஸ்யம் பேசிக்கொள்ள ஆரம்பித்து, அப்புறம் எல்லோருமே அப்படிப் பண்ணி, ஒரு பத்து நிமிஷம் போனால், ரஹஸ்யம் என்பதும் நல்ல சத்தமாகவே ஆகிவிடுகிறது. மனஸின் எல்லா உணர்ச்சிகளையும் ஒரே வீச்சில் அடக்கப் பார்ப்பதும் இப்படித்தான் முடியும். அதுவே, "ஸைலன்ஸ் ப்ளீஸ்" என்று திரும்பத் திரும்பச் சத்தம் போட்டுக் கொண்டிருக்காமல்—(சிரித்தவாறு) "ஸைலன்ஸ் ஸைலன்ஸ்" என்றே சத்தம் போட்டுக் கொண்டிருக்காமல்—"ராம ராமா", "சிவ சிவா" என்று ஏதோ ஒரு நாமாவை யாராவது ஒருத்தர் சொல்ல ஆரம்பித்தால், அதிலேயும் ராகம் தாளம் எல்லாம் சேர்த்து ரஸம் அதிகமாகும்படி பஜனையாக ஆரம்பித்தால் எல்லாரும் அதையே திருப்பிச் சொல்லி அத்தனை சத்தமும் இந்த நாம சப்தத்திலேயே அடங்கிப் போய்விடுகிறது. அரை மணி, ஒரு மணி கூட, ராத்ரியெல்லாம்கூடப் பல தினுஸாகப் பலுக்கிப் பலுக்கி, ராக தாளங்களை மாற்றி, நாமங்களையும் மாற்றி பஜனை செய்தால் எல்லாரும் மற்றப் பேச்சுப் பேசாமல் அதில் கலந்துகொள்ள முடிகிறது. இது மௌனம் இல்லைதான். ஆனால் அதற்கு 'நெக்ஸ்ட் பெஸ்ட்' (அதற்கடுத்தபடியான உத்தம நிலை) என்று சொல்லலாம். இப்படி நாமாவிலே தோய்ந்து சொக்கிப் போனால், தானே மௌனத்தில் கொண்டு விட்டுவிடும். வெறும் பேச்சு அப்படிப் பண்ணுமா?

அப்படித்தான், அநேக உணர்ச்சிகளில் அன்பு என்பது பக்தியின் பல ரஸ பேதங்களோடு வெளிப்படுகிறபோது, பல விதத்தில் வெளிப்படும்போது அதில்தான் மற்ற உணர்ச்சிகள் அமுங்கி, அப்புறம் இந்த த்வைத அன்பும்

Koviloor Digital Library

அந்த பல பாவங்களில் ஏதோ ஒன்றிலேயே நின்று, பிறகு அத்வைத அமைதியிலே சேர்க்க முடியுமே தவிர, அப்படியே நேரே மனஸின் எல்லா உணர்ச்சியையும் அடைத்து விடுவதென்றால் முடியாது.

மனம் பட்டுப்போக அன்பு தேவை

யோக சாஸ்த்ரம் என்பது எல்லா மன ஓட்டத்தையும் நிறுத்தி விடுவதற்குத்தான். ப்ரஹ்மாநந்தம், ஆத்மாநந்தம் என்பவற்றை இதன் மூலம் அடைவது பற்றி யோக சாஸ்த்ரத்தில் சொல்லியிருக்கவில்லை—ஸ்பஷ்டமாகச் சொல்லியிருக்கவில்லை. 'மனஸின் பிக்கல் பிடுங்கல் இல்லாமல் இருந்தால் போதும்—ஆனாலும் அது ஜடமான தமோ நிலையாக தூக்கத்தைப்போல இல்லாமல் புருஷன் (என்ற ஆத்மா) மனஸின் தொடர்பில்லாமல் தனித்திருக்கும் கைவல்ய ஸமாதியாயிருக்கவேண்டும்' என்று யோக மார்க்கக்காரர்கள் ஒரு தினுஸாக மோக்ஷத்தைச் சொல்கிறார்கள். புத்தருடைய சூன்யம் மாதிரி என்று சொல்வதற்கில்லையானாலும், இவர்களும் அத்வைதத்தின் ஸச்சிதாநந்தமான பூர்ண ஸ்திதியைச் சொல்லாமல், மனஸ் பட்டுப்போன பாழிலேயே இருப்பதான ஒரு உயிர்த் தத்வத்தைச் சொல்பவர்கள்தான்.

ஆனதால் எல்லா உணர்ச்சியையும் ஒரேயடியாக அடக்குவதற்கே முதலிலிருந்து ப்ரயாஸைப்பட்டு, அதன் முடிவில் மனஸ் வெறிச்சென்று முடிவதோடு நின்றால், அப்படிப்பட்ட நிலைகூட இவர்களுக்கு (யோக மார்க்கக் காரர்களுக்கு) ஸம்மதமில்லாமலிருக்க முடியாது. ஆனாலும் (யோகஸூத்ரகாரரான) பதஞ்ஜலி இதுபோல நேராக எல்லா உணர்ச்சியையும் அடக்குவது ஸாத்யமே இல்லை என்று நன்றாகத் தெரிந்து கொண்டிருக்கிறார். அதனால்தான் "ப்ரதிபக்ஷ பாவநா" என்று ஒன்றைச் சொல்லி அன்பு என்கிற உணர்ச்சியை வளர்த்துக்கொள்ளச் சொல்கிறார்.

"இப்படியிப்படிப் பண்ணாதே" என்பதாக மனஸின் ஓட்டத்தை அடக்குவதற்காகப் பல யம - நியமங்களை யோக

Koviloor Digital Library

சாஸ்த்ரத்தில் அவர் சொல்லியிருக்கிறார். அவர் சொன்னாலும் ஸாதகர்கள் அப்படி முயற்சி பண்ணினாலும் அதற்கு நேர்மாறாகக் கெட்ட சக்திகள், கெட்ட உணர்ச்சிகள் அவர்களை இழுத்துக் கொண்டேயிருப்பதையும் அவர் தெரிந்து கொண்டிருந்தார்.

அதனால்தான் முதலில் கெட்ட உணர்ச்சியைப் போக்கிக் கொள்வதற்காக நல்ல உணர்ச்சிகளை வளர்த்துக்கொண்டு, அப்புறமே உணர்ச்சியில்லாத மனோ நாசத்தை அடைய வேண்டுமென்றே அவரும் வைக்கவேண்டியதாயிற்று. உணர்ச்சிகளிலேயே இரண்டு விதமானவை இருக்கின்றன வென்றும், ஒருவிதமானது மேலும் மேலும் இந்த்ரிய ஸுகத்தில் இழுத்து விடுவதாயும், இன்னொன்று பாரமார்த்திகத்துக்குத் தூக்கி விடுவதாயும் உள்ளது என்றும் அவர் சொல்கிறார். இந்தக் கீழான உணர்ச்சிகளை க்லிஷ்ட வ்ருத்தி என்றும் சொல்கிறார். க்லிஷ்டம் என்றால் க்லேசத்தை உண்டாக்குவது. அக்லிஷ்டம் க்லேசமளிக்காமல் நல்லதைச் செய்வது. க்லிஷ்டமானவையாக எழும்பும் காமம் க்ரோதம் முதலான வ்ருத்திகளை அப்படியே அடக்கி நசிப்பிக்க முடியாது என்றும், அக்லிஷ்டமான அன்பு, ஈகை, தூய்மை முதலான வ்ருத்திகளாலேயே அவற்றைப் போகப் பண்ண முடியுமென்றும் சொல்கிறார். அப்புறம்தான் இந்த வ்ருத்திகளையும் நிறுத்தி ஸமாதி நிலை அடைவது.

அக்லிஷ்ட வ்ருத்திகள் க்லிஷ்டமானவற்றைப் போல ஜீவனை ஒரே பிடியாகப் பிடித்துக் கொள்வதில்லை என்றும், இவை நன்றாக முதிர்ச்சி பெற்றபின் கைவல்ய ஸமாதி நிலைக்கு இடம் கொடுத்துவிட்டுத் தாங்களும் போய்விடும் என்றும் சொல்கிறார். இன்னின்ன கெட்ட (க்லிஷ்ட) வ்ருத்தி ஏற்பட்டால் அதை அதற்கு ப்ரதிபக்ஷமான—அதாவது எதிர்வெட்டான—இன்னின்ன நல்ல (அக்லிஷ்ட) வ்ருத்தியால் "பாலன்ஸ்" பண்ணி, சமனம் பண்ணி அடக்க வேண்டும் என்று சொல்கிறார்.

Koviloor Digital Library

இதில் அன்பையே முக்யமாக வைத்து அதில் நாலு பிரிவுகளைச் சொல்கிறார்: மைத்ரீ, கருணா, முதிதா, உபேக்ஷா என்கிற நான்கு. ஸந்தோஷமாக இருந்து கொண்டிருப்பவர்களிடம் காட்டும் ஸ்நேஹித பாவம்—மைத்ரீ. துன்பப்படுபவர்களிடம் காட்டுவது கருணா (கருணை). உத்தம குணமுள்ளவர்களிடம் மகிழ்ச்சி பொங்கிச் செய்யும் அன்பு—முதிதா. அதம குணமுள்ளவர்களிடம், விசேஷமாக அன்பு வைக்க முடியாவிட்டாலும் கொஞ்சம்கூட த்வேஷமேயில்லாமல், அவர்களிடம் பட்டுக்கொள்ளாமல் ஒதுங்கியிருப்பது உபேக்ஷா (உபேக்ஷை).

உயர் லக்ஷ்யமில்லாவிடில் உயர்நிலை ஸித்திப்பதில்லை

அக்லிஷ்ட வ்ருத்திகள் க்லிஷ்ட வ்ருத்திகளைப்போல ஒருத்தரைத் தங்களிலேயே இழுத்துப் புதைத்துக் கொள்வதில்லை என்றும், தாங்களும் அற்றுப்போகும் உசந்த நிலைக்குக் கொண்டுபோய் விடுகின்றன என்றும் பார்த்தோம். இப்படியேதான், ஸொந்த ஆசையின்மேல் செய்யும் கார்யங்கள்தான் முடிவில்லாமல் தங்களிலேயே ஒரு ஜீவன் ஓயாமல் ப்ரவர்த்திக்கும்படியாகக் குழிபறித்துக்கொண்டு போகின்றன. பற்றில்லாமல் செய்வதான சாஸ்த்ரீய கர்மாக்கள் இப்படிச் செய்யாமல் தங்களை விட்டுவிட்டு ஞானத்துக்குப் பக்வப்பட ஜீவனுக்கு உதவி செய்கின்றன. இதேபோல, ஈச்வரனை த்வைதமாக வைத்து பக்தியில் செய்யும் ஸகுணோபாஸனையும் அதைக்கூட விட்டுவிட்டு நிர்குணத்தில் அவனாகவே ஐக்யப்படுவதற்கு அழைத்துக்கொண்டு போகிறது.

இதைக் குறித்து ஒரு உபமானம் சொல்லலாம். நம்மை விடாப்பிடியாகப் பிடித்துக்கொள்ளும் கெட்ட சக்திகளை, நம்மிடமிருந்து தங்களுக்கு ஏதாவது ஸ்வய கார்யம் ஸாதித்துக் கொள்வதற்காகக் கெட்டியாகப் பிடித்துக் கொள்ளும் துஷ்டர்களின் ஸஹவாஸத்துக்கு ஒப்பிடலாம்.

Koviloor Digital Library

அப்போது நாம் போய் உதவி கோரும் போலீஸ்காரர்களைப் போலத்தான் தர்மமான கர்மாக்கள், உத்தம குணங்கள், ஸகுண உபாஸனை முதலானவை. துஷ்டர்களின் தொல்லை நமக்கில்லாமல் செய்கிறவரையில் போலீஸ்காரர்கள் நம்முடன் ஸம்பந்தம் வைத்துக் கொண்டிருந்துவிட்டு, அவர்களைத் துரத்திய பின், அல்லது அரெஸ்ட் பண்ணியபின், தாங்களும் போய்விடுகிறார்களல்லவா? இப்படித்தான் மேலே சொன்ன நல்ல சக்திகளானவை கெட்டவற்றை அடக்கிப் போட்டபின் தாங்களும் போய்விடுகின்றன.

ஆனால் இதிலே நம்முடைய லக்ஷ்யம் என்ன, நாம் எந்த லக்ஷ்யத்துக்காகத் தாபம்கொண்டு அதிலேயே கருத்தாக இருக்கிறோம் என்பவையும் முக்கியம் என்று தெரிகிறது, நாம் மனஸார எந்த லக்ஷ்யத்துக்கு ஆசைப்பட்டு. அதிலேயே கவனம் தப்பாமலிருக்கிறோமோ அதைத்தான் ஈச்வரன் நிறைவேற்றித் தருகிறானே தவிர, அவனாக அதைவிட உயர்ந்த லக்ஷ்யத்தில் நம்மைச் சேர்ப்பதில்லை என்றே பெரும்பாலும் தோன்றுகிறது. ஏன் இப்படிச் சொல்கிறேனென்றால், நாம் ப்ரத்யக்ஷமாகப் பலர் விஷயத்தில் பார்ப்பதிலிருந்து, தர்மமான கர்மங்கள், அன்பு, பக்தியோடு கூடிய ஸகுண உபாஸனை ஆகியவை நாம் அவற்றையே லக்ஷ்யம் என்று நினைக்கிறவரையில் தம்மளவோடு மட்டும் நின்றுவிடுவதாகத் தான் தெரிகிறது. ஒருவனுக்கு அத்வைதம் லக்ஷ்யமாயில்லாவிட்டால் இவை அவனைத் தங்களுக்கு மேலேயுள்ள அந்த ஞானநிலைக்குத் தூக்கிவிடாததாகத்தான் தெரிகிறது. அதிலேயே பற்றோடு யஜ்ஞ கர்மாநுஷ்டானம் பண்ணுபவர்கள் ஜீவ்ய காலம் முழுதும், எண்பது தொண்ணூறு வயஸு ஆனாலுங்கூட வாஜபேயம், அதிராத்ரம், அப்தோர்யாமம் என்று ஏதாவது யஜ்ஞமே தான் ஒன்றுக்கப்புறம் இன்னொன்று என்று பண்ணிக்கொண்டு போகிறார்கள்; பக்தி ஞான ஸாதனைகளுக்கு வருவதில்லை. ஸோஷல் ஸர்வீஸ் செய்கிறவர்களும் காலம் முழுதும் அங்கே ஆஸ்பத்ரி கட்டலாமா, இங்கே அநாதாச்ரமம் வைக்கலாமா என்பதேதான்,

Koviloor Digital Library

காரியமாக இருக்கிறார்கள். க்ஷேத்ராடனம் பண்ணுபவர்களும் இப்படித்தான், 'இன்னம் ராஜஸ்தானில் புஷ்கருக்குப் போகவில்லையே; அஸ்ஸாமில் காமாக்யாவுக்குப் போகவில்லையே' என்று எங்கேயாவது போய்க்கொண்டே இருக்கிறார்கள். நாம ஸங்கீர்த்தனம் பண்ணுபவர்கள் அதையேதான் கடைசி மூச்சுவரை பண்ணிக்கொண்டிருப்பதைப் பார்க்கிறோம்.

ரொம்ப வயஸாகித் தளர்ந்து ஒய்ந்துபோய், இதுகள் எதுவுமே பண்ணமுடியாமல், விழுந்துவிட்டால்கூட அப்போதும், "ஐயோ, வாஜபேயம் பண்ணிலியே," "அந்த ஊரில் 'ஆர்ஃபனேஜ்' வைக்கலியே!", "ஜம்மு வைஷ்ணவி பார்க்காமலே படுக்கையில் விழுந்துட்டோமே!", "வாயால் நாலு நாமாவைக் கத்தக்கூட முடியாமல் ஆயிட்டோமே!" என்றுதான் வருத்தப்படுகிறார்களே தவிர, இனிமேலாவது இருந்த இடத்தோடு, வெளிக் காரியம், வெளி உபகரணம் எதுவுமில்லாமல் செய்யக்கூடிய ஞான விசாரத்தில் இறங்குவோம் என்று த்ருப்தியாகப் பண்ணக்கூடியவர்களைப் பார்ப்பது துர்லபமாகவே இருக்கிறது.

"ஸாதாரணமாக ஒரு ஜீவனுக்கு நிறையக் கர்ம சேஷம் இருப்பதால் அது ஒரு ஜன்மாவில் பூராவாகத் தீர்க்கப்படுவதற்கில்லை. அதனால்தான் இவர்கள் ஒரு வாழ்நாள் முழுதும் தாங்கள் எடுத்துக்கொண்ட ஏதோ ஒரு த்வைத ஸாதனையிலேயே போகவேண்டியிருப்பது; 'யோக ப்ரஷ்டர்'களின் கணக்கில் இவர்கள் அடுத்த ஜன்மத்தில், இப்போது விட்ட இடத்தில் தொடங்கி அத்வைதத்துக்கு வருவார்கள்" — என்று இதற்கு ஒரு காரணம், அல்லது ஸமாதானம் சொல்லலாம்.

இன்னொன்று, எனக்குத் தோன்றினதைத்தான் சற்று முன்சொன்னேன். அதாவது, அத்வைதம்தான் லக்ஷ்யம் என்று வைத்துக்கொள்ளாதவர் விஷயத்திலும், அல்லது

Koviloor Digital Library

அப்படி முதலில் வைத்துக்கொண்டாலும் அதற்கு ஆரம்ப கட்டத்திலுள்ள த்வைதமான ஸாதனைகளிலேயே ஒரு பிடிப்பு ஏற்பட்டு அதனால் லக்ஷ்யத்தில் கவனம் தப்பிப் போனவர் விஷயத்திலும் இந்த ஸாதனைகள் அத்வைதத்துக்கு உயர்த்திவிடாமல் தங்கள் மட்டத்தோடேயே நின்றுவிடுகின்றன போலிருக்கிறது என்று எனக்குத் தோன்றியதைச் சொன்னேன்.

த்வைத மோக்ஷத்தைச் சொன்ன பல மஹான்கள் அப்புறமும்கூட வேறு மஹான்களாக அவதரித்ததாகச் சொல்கிறார்கள். இவர்கள் எத்தனை தடவை அவதரித்தாலும் அந்த த்வைதத்தையேதான் சொல்லியிருக்கிறார்கள். ஏன்? "அத்வைதம் வேண்டாம்; த்வைதம்தான் லக்ஷ்யம்" என்று அவர்கள் இருந்ததாலேயே, "உன் இஷ்டப்படியே உனக்குக் கொடுக்கிறேனப்பா" என்று ஈச்வரனே வைத்திருக்கிறானே என்று நினைக்கத் தோன்றுகிறது.

திருடனைப் போக்கிய பிற்பாடு, அப்படிப் போக்கினார்களே என்பதால் போலீஸ்காரர்களிடமே ப்ரியம் ஏற்பட்டு அவர்களிடம் உறவு கொண்டாடினால் எப்படி? இப்படித்தான், ரொம்பவும் கெட்ட சக்திகளிலிருந்து விடுபடுவதே முதல் தேவையாக இருப்பவர்கள், முடிவாகச் சேரவேண்டிய லக்ஷ்யத்தை விட்டுவிட்டு, இடைநிலையில் கெட்டதைப் போக்கிக்கொள்வதற்காகப் பின்பற்றிய ஸாதனா மார்க்கத்திடமே பற்று வைத்து அதையே லக்ஷ்யமாக்கிக்கொள்ளும் போது ஆகிறது.

தேவாஸுரப் போரில் முதலில் அஸுரர்கள்தான் போக வேண்டும். அதை தேவ சக்திகளாலேயே ஸாதித்துக் கொள்ளவேண்டும், அப்புறம் தேவர்களையே பிடித்து வைத்துக்கொண்டால், இவர்களும் நமக்கு வேறுபட்டவர்கள்தானே? நம்முடைய ஆத்மா இல்லையே! நல்ல குணங்களைத்தானே தேவ சக்திகளென்றும், கெட்ட குணங்களை அஸுர சக்திகளென்றும் சொன்னோம்? எந்த குணமானாலும் அது நிர்குண ஆத்மாவைச் சேர்ந்ததாகாதே! குணம்

Koviloor Digital Library

மனஸின் ஸமாசாரமல்லவா? இந்த மனஸ் என்பது ஆத்மாவுக்கு வேறானது, அதனால்தான் த்வைதத்தின் அத்தனை கஷ்டமும் என்று தானே விஸ்தாரமாகப் பார்த்தோம்? ஆகையால் நல்ல குணங்களென்பதும் போனால்தான் ஆத்மாநுபவம் என்ற நித்யானந்தத்தைப் பெறமுடியும். தேவாஸுர யுத்தத்தில் அஸுரரைப் போக்க டித்துக் கொண்டால் மட்டும் போதாது. அப்புறம் தேவர் களும் ஆத்ம சாந்திக்கு அன்யமாகவே இருப்பார்கள். 'அன்யம்' என்ற வார்த்தை 'சத்ரு' என்பதைப் போலக் கடுமையாயில்லாவிட்டாலும் இரண்டுக்கும் தாத்பர்யம் ஏறக்குறைய ஒன்றேதான். ஆகையால் முடிவாக அன்ய ஆஸாமியே இருக்கப்படாது. யுத்தம் செய்யவே தெரியாத ஆத்மா மட்டுமாக இருக்க விட்டாலொழிய முடிவான விமோசனமில்லை.

ஜீவனுக்குள்ளே தேவாஸுர யுத்தம் நடக்கிறது என்று சொல்கிறபோது ஜீவன் என்கிறது யார்? ஜீவபாவமுள்ள மனஸ்தான்; ஆத்மா இல்லை. ஆத்மாவை எந்தப் போராட்ட மும் பாதிக்கமுடியாதே! யுத்தத்துக்கு ஆச்ரயமாக, அடிப்படையாக இருக்கிற ஜீவனே போனால்தான் ஆத்மாவின் ஸாக்ஷாத்காரம் ஏற்படும். யாரோ ஒரு ஆஸாமியை வைத்துத்தான் ஒரு யுத்தம் என்றால் அந்த ஆஸாமியே போய்விட்டால்தானே அப்புறம் நிச்சயமாக யுத்தம் நடக்கவே முடியாது? மனஸ் என்ற ஆஸாமியே போனால்தான் தேவாஸுர யுத்தம் தீருவது. முதலில் கெட்ட சக்திகளான காமக்ரோதாதிகளை ஜயிக்கச் சொன்னார் பகவான். அப்புறம், நன்றாக ஆகிவிட்ட மனஸை, அதாவது தேவசக்திகள் கூடியதாக உள்ள மனஸை வைத்துக்கொண்டு அப்படியே இருந்து விடும்படியாக அவர் சொல்லவில்லை. அந்த மனஸையும் அதற்குப் பரமான ஆத்ம வஸ்துவில் அடக்கி, இல்லாமல் பண்ணிவிடு என்றுதான் முடித்திருக் கிறார்.

Koviloor Digital Library

தேவசக்திகளும் பீடிப்பதுண்டு

நாமே தேவசக்திகளே, அல்லது இன்னொரு உபமானம் சொன்னபடி போலீஸ்காரர்களை விடமாட்டேன் என்று ஒட்டிக்கொள்வது ஒன்று. இன்னொன்று, அந்த சக்திகளே அவற்றை நாம் விட்டுவிட்டு மேலே ஆத்மாவுக்கு போக முடியாதபடி நம்மைத் தடுத்துப் பிடித்து வைத்துக்கொள்வதாகும். நமக்கும் அவற்றின் பிடிப்பு பிடித்து உடன்பட்டு இருந்துவிடலாம். நமக்கு அவை தரும் ஸந்தோஷம், சக்தி முதலானவற்றில் மயங்கி ஏமாந்து அவற்றின் பிடிப்பை ரஸித்து ஏற்றுக் கொண்டுவிடலாம்.

போலீஸ் டிபார்ட்மெண்டிலேயே சில பேர்—இந்தக் காலத்தில் 'கரப்ஷன்' இல்லாத இடமேயில்லை என்கிறார்கள்! அதனால் போலீஸில்கூட யாராவது சில பேர்—திருடர் உபத்ரவத்தைத் தாற்காலிகமாகப் போக்கினவிட்டு, அப்படிச் செய்ததற்காக ப்ரதி ப்ரயோஜனம் எதிர்பார்த்துக் கொண்டு, இந்த மாதிரி ப்ரயோஜனம் விடாமல் கிடைத்துக் கொண்டே இருக்கணும் என்பதற்காகத் தாங்களே கூடத் திருட்டுப் பயத்தைப் பரப்பிக்கொண்டு ஜனங்களோடு உறவு விடாமல் செய்துகொள்வதாகக் கேள்விப்படுகிறோம். இதைப் போலத்தான் தேவசக்திகளிலேயே ரொம்பவும் உத்தமமானவையாக இல்லாமல் மத்யமமாகவும் மத்யமத்தைவிடக் கீழாகவும் இருக்கிறவை ஒருத்தனைத் தங்கள் ஆளுகையிலிருந்து போய்விடாமல் இருத்திக்கொள்ளப் பார்ப்பதும் உண்டு.

மநுஷ இயற்கை என்பதில் அடங்கிய அநேக குணங்களுக்கு அஸுர, தேவ ரூபங்கள் உண்டு. வெளி இயற்கை என்பதன் forces-க்கும் (சக்திகளுக்கும்) தேவாஸுர ரூபங்கள் உண்டு. இவற்றிலே தேவத்தன்மை உடையவை என்று சொல்லக்கூடியவற்றில் சிலவும்கூட ஒரு ஜீவனை எல்லாத் தன்மைகளுக்கும் அப்பாற்பட்ட (ஆத்ம) ஸ்தானத்துக்குப் போகவிடாமல், தங்களிடமே கட்டுப்படுத்திக்கொண்டு

Koviloor Digital Library

அவன் மூலமாகத் தங்கள் இச்சைகளைப் பூர்த்தி செய்து கொள்வதுண்டு.

ஸாதகர்களுக்கு ஒரு கட்டத்தில் ஸித்தி, சித்தி என்று ஆச்சர்யமான சக்திகள் உண்டாகி அவர்கள் அதிலேயே ஒரேயடியாக ஈடுபட்டு ஆத்மாவை மறந்துபோவது இம் மாதிரியான சக்திகளின் ஆதிக்கத்தினால்தான்.

இவை எல்லாவற்றுக்கும் மேலே உள்ள ஈச்வரனிடம் நமக்கு அசையாத பிடிப்பு இருந்துவிட்டால் அப்போது இவற்றால் நம்மிடம் வாலாட்ட முடியாது. ஈச்வரன் என்று ஸகுணமாகத்தான் நினைத்துப் பிடித்துக்கொள்ள வேண்டு மென்பதில்லை. ஆத்மா என்று அந்த நம் இறுதி லக்ஷ்யமான வஸ்துவை, அதுதான் நமக்கு லக்ஷ்யம் என்று குறி தப்பாமல் கவனத்தில் வைத்துக்கொண்டிருந்தாலும் அதிலே நம்மை சேரப் பண்ணும் ஈச்வரன், இடையூறு உண்டாக்கப் பார்க்கும் அஸுரர்கள் தேவதைகள் ஆகியவர்களுடைய பிடிப்பு நமக்கு இல்லாமல் பார்த்துக்கொள்வான்; பார்த்துப் பார்த்து ரக்ஷிப்பான்.

ஈச்வர சக்தியை நிரம்பப்பெற்று, தாங்கள் பரப்ரஹ்ம வஸ்துவே என்ற ப்ரஜ்ஞான நிலையில் எப்போதும் உள்ளூர உள்ள உத்தம தேவதைகள் ஜீவனுடைய ஞான லக்ஷ்ய ஸித்திக்கு இடையூறு செய்யவே செய்யாது. இப்படிப்பட்ட ரத்ன த்ரயமாக ஈச்வரன், அம்பாள், மஹாவிஷ்ணு மூன்று பேரும் இருக்கிறார்களென்று அநேக காரணங்கள் காட்டி அப்பய்ய தீக்ஷிதர் நமக்கு உறுதிப்படுத்திக் கொடுத்திருக் கிறார். இன்னம் பிள்ளையார், ஸுப்ரஹ்மண்ய ஸ்வாமி, லக்ஷ்மி, ஸரஸ்வதி போன்றவர்களும், ராம-க்ருஷ்ணாதி அவதாரங்களும் இம்மாதிரியானவையே.

குறியைப் பொறுத்தே இறைவன் அருள்

ஆனால் இரண்டு விஷயத்தை மறக்காமல் ஞாபகத்தில் வைத்துக்கொள்ள வேண்டும்.

Koviloor Digital Library

ஒன்று—இருளன், வீரன், காட்டேரி மாதிரியான தேவதைகளைக்கூட அது ஏதோ ஒருவிதமான சக்தி படைத்த ஒரு வ்யக்திதான் என்று குறுக்கி நினைக்காமல் அது பரமாத்மாவே, ஈச்வரனே என்று நினைத்து, பரமாத்மாவின் ஒரு ரூபம் என்றே வழிபட்டால் வாஸ்தவமாகவே அவற்றுக்குள்ளேயும் உள்ள பரமாத்மா அநுக்ரஹம் செய்வான். இருளனாக, காட்டேரியாக அவை இருந்து பண்ணக்கூடிய இடைஞ்சலை அவை பண்ணமுடியாதபடி பார்த்துக்கொள்வான். உத்தமமான ஞானத்தைக் கொடுப்பான்.

இரண்டு—இப்போது சொன்னதற்கு இது மறுகோடி. ஸாக்ஷாத் ஈச்வரனை, பரமாத்மாவைக்கூட 'அவன் நமக்கு வேறாகவே இருக்கிறான்; அப்படி வேறாகவே இருந்துகொண்டிருக்கட்டும்; அந்த நிலையில் அவன் தரும் ஆனந்தமே போதும்; அத்வைதம் வேண்டாம்' என்று பிடிவாதமாக நினைத்து பக்தி பண்ணினால் ஈச்வரன் ஞானத்தைக் கொடுக்காமல் "உன் இஷ்டப்படியே த்வைதமாக இருந்துவிட்டுப் போ" என்று விட்டு விடுவதாகத்தான் பெரும்பாலான உதாரணங்களிலிருந்து தோன்றுகிறது.

இதிலே இன்னம் கொஞ்சம் பகுத்துச் சொல்ல வேண்டியிருக்கிறது. நிரம்ப பக்தியுள்ளவர்களாக, பக்தியிலேயே த்ருப்தியுள்ளவர்களாகச் சிலர் இருக்கலாம். இவர்கள் அத்வைதத்தைப் பற்றி அறியாதவர்களாகவோ, அது வேண்டுமென்று குறிப்பாகக் கவலைப்படாதவர்களாகவோ இருக்கலாம். ஆனாலும் தீர்மானமாக, "அத்வைதமா? அது நமக்கு வேண்டவே வேண்டாம்" என்று பிடிவாதத்துடன் நினைக்காதவர்களாகவும் இருக்கலாம். பக்தியே த்ருப்தியாகத்தானிருக்கிறது என்றாலும், ஞானம் என்று அத்வைதமாக ஒன்று வருமென்றால் அது வேண்டியதில்லை என்று ஒதுக்கிவிடாமல் ஏற்றுக்கொள்ளக்கூடியவர்களாக இவர்கள் இருக்கலாம். இப்படி இருந்தால்கூட ஈச்வரனே இவர்களுக்கும் தன் நிர்குண நிலையைத் தெரியப்படுத்தி, அதில் இவர்

Koviloor Digital Library

களுக்கு ஈடுபாடு ஏற்படும்படி அநுக்ரஹித்து, முடிவில் ஞான மோக்ஷம் தந்துவிடுவான்.

பகவான், "நீ என்னை எப்படி நினைக்கிறாயோ அப்படி பக்தி பண்ணு. அப்படிப் பண்ணிக்கொண்டே போனால் நான் வாஸ்தவத்தில் உள்ளே எப்படியிருக்கிறேனோ அந்த ஸ்வரூபத்தை நீ உள்ளபடி புரிந்துகொண்டு எனக்குள்ளே ப்ரவேசித்து ஐக்யப்படுமாறு பண்ணிவிடுகிறேன்" என்று சொன்னதாகச் சொன்னேன். அது அத்வைதமே லக்ஷ்ய மானாலும் நிர்குணமாக த்யானம் பண்ணத் தெரியவில்லை என்பதால் ஏதோ ஒரு ரூபத்தில் வழிபடுகிறவர்களைக் குறித்து மட்டும் பகவான் சொன்னதல்லவென்றும், இப்போது சொன்ன கோஷ்டியைப் போல், அத்வைதத்தைப் பற்றி நினைக்காமல் பக்திக்காகவேதான் பக்தி பண்ணிக் கொண் டிருந்தாலும், அதன் முதிர்ச்சியில் அத்வைத ஞானம் பிறக்கு மானால் 'அது வேண்டாம்' என்று தள்ளாதவர்களையும் குறிப்பது என்றும் கொள்ளலாம்.

திருமூலர், திருவள்ளுவர் அறிவுரை

மொத்தத்தில் விஷயம் என்னவென்றால், அத்வைதந் தான் குறி என்றோ, அல்லது அத்வைதம் வேண்டவே வேண்டாம் என்பதாக த்வைதமே குறியாகவோ ஒரு ஜீவன் எப்படி நினைக்கிறானோ அதற்கேற்கத்தான் அவர்களுக்கு அத்வைத அல்லது த்வைத ஸித்தியை ஈச்வரன் அருளுகிறான்.

"ஆசை அறுமின்கள்! ஆசை அறுமின்கள்!
ஈசனோடாயினும் ஆசை அறுமின்கள்!"

என்று திருமூலர் சொன்னதும்,

பற்றுக பற்றற்றான் பற்றினை அப்பற்றைப்
பற்றுக பற்று விடற்கு

என்று திருவள்ளுவர் சொன்னதும் ஒன்றுக்கொன்று வித் யாஸமாயிருப்பதாகத் தோன்றினாலும், இப்போது நாம்

Koviloor Digital Library

பார்த்துக்கொண்டு வந்த இரண்டு விதமானவர்களில் ஒவ்வொருத்தரை உத்தேசித்துச் சொன்னதுதான். இப்படிப் புரிந்துகொண்டால் இரண்டு உபதேசமுமே ஸரியானதுதான் என்று தெரியும்.

"ஸத்ய தத்வம் வாஸ்தவத்தில் எப்படியிருக்குமோ அப்படியே நமக்குத் தெரியட்டும். நாம் அதை ஸகுணமாக நினைத்து த்வைதமாக பக்தி பண்ணினாலும் அது நிர்குண மாக இருந்து அத்வைதமான ஞானத்தினால்தான் அடையத் தக்கதாக இருந்தால் நாம் அதை அப்படி அடையும்படி யாகவே அது பண்ணுமானால் பண்ணட்டும்" என்று நினைப் பவர்களுக்கு அல்ல திருமூலரின் உபதேசம். ஸகுணமான ஈச்வரனிடம்தான் பற்று வைப்பது என்பதாக (பக்தி எனும்) தங்களுடைய ஸாதனா மார்க்கத்திலேயே பிடிவாதமான பிடிமானம் உள்ளவர்களைப் பார்த்தே திருமூலர் உபதேசம் செய்திருக்கிறார். "இப்படிப் பண்ணாதீர்கள்! ஈச்வரனிடமே யானாலும்கூட ஸகுணமாகத்தான் அவன் நமக்கு வேண்டும் என்ற ஆசையை வளர்த்துக்கொண்டு விடாதீர்கள். 'அந்த ஈச்வரனுக்கும் இன்னொரு ஸ்வரூபம், இந்த ஈச்வர ஸ்வரூபத்தைவிடவும் ஸத்யமான ஒரு ஸ்வரூபமிருக்குமானால் அதன் அநுபவம் நமக்குக் கிடைக்கட்டும்' என்று திறந்த மனஸோடு இருங்கள்" என்பதைத்தான் 'ஈசனோடாயினும் ஆசை அறுமின்கள்" என்று அவர் சொல்லியிருக்கிறார். ஆசைப்பட்ட லக்ஷ்யத்தைத்தான் ஈச்வரன் கொடுப்பான், அதற்கு மேலே கொடுக்க மாட்டானாதலால், அவனாகிய ஸகுண ஸ்வரூபத்திலே ஆசை வைத்தால் அதற்குமேல் பெற முடியாது என்ற அபிப்ராயத்தில் சொல்கிறமாதிரி இருக் கிறது.

எல்லாவிதமான ஆசையும் போகவேண்டும்; (ஆசை யெல்லாம் போவதென்றால் மனஸ் போனால்தானே முடியும்? —இப்படி) மனஸ் அடிபட்டுப் போய் ஞானஸித்தி பெற வேண்டுமென்று லக்ஷ்யம் வைத்துக்கொண்டிருப்பவர்களைப் பார்த்து ஆசார்யாள் ஞானத்துக்கு ஸகுணோபாஸனையை

Koviloor Digital Library

உபாயமாக வைத்தார். அவர்களை உத்தேசித்தேதான், ஆசார்யாளைப் போலத் திருவள்ளுவரும் ஈச்வரனிடம் பற்று வைக்கச் சொல்கிறார். இவர் 'அட்வைஸ்' பண்ணுகிறவர்களுக்கு ஈச்வரனிடம் பற்று இருந்தாலும் அதுவே லக்ஷ்யம் என்று வைத்துக்கொண்டுவிடவில்லை. எல்லாப் பற்றும் அற்றுப்போன ஸ்திதிதான் அவர்களுடைய லக்ஷ்யம். அதே மாதிரி அப்போது அந்த ஈச்வரனும் இவர்களை த்வைதப் பற்றுடன் நிறுத்திவிடுவதில்லை. த்வைதப் பற்றோடு நின்று போகிறவர்களிடம் அவனும் அப்படி த்வைதமான பற்றுள்ளவனாகத்தான் தன்னையும் நிறுத்திக்கொள்கிறான். எப்போதும் அவர்களுடைய பக்தியை ஏற்பது, தாஸ்யத்தை ஏற்பது, கருணை செய்வது என்றால் அவனும் த்வைதப் பற்றுறவுதானே அவர்களிடம் வைத்திருப்பதாக அர்த்தம்? ஆனால் இங்கே திருவள்ளுவரோ அவனைப் "பற்றற்றான்" என்றே சொல்கிறார். கடவுள் என்றோ, பகவன் என்றோ, ஆண்டவன் என்றோ எந்த வார்த்தையாலும் ஈச்வரனைச் சொல்லாமல் "பற்றற்றான்" என்றே இங்கே அத்விதீய வஸ்துவாகப் பெயர் கொடுத்திருக்கிறார். 'நீ ஈச்வரன் என்று பற்றிக்கொள்வதன் வாஸ்தவத்தில் பற்றற்ற அத்வைத ஸ்வரூபம். அதனால் நீ லக்ஷ்யமாகக் கொண்டிருக்கிற பற்றற்ற அத்வைத ஸ்திதியில் உன்னை அவன் சேர்த்துவிடுவான். பற்று அறுக்க விரும்பியும் முடியாதவர்கள் ஞானத்துக்காக நேரே ப்ரயாஸை பண்ண வேண்டியதில்லை. அவர்களுடைய லக்ஷ்யமான பற்றற்ற பொருள்தான் பற்றும்படியான ஈச்வரனாக ஆகியிருப்பது. இப்படி 'ஆகியிருப்பதாக' இல்லாமல் உள்ளபடி இருப்பதான நிலையில் அந்த ஈச்வரன் 'பற்றற்றான்' என்பதை மறந்து போகாமல் அவனை பக்தியில் பற்றிக்கொண்டால் அவனே பற்றுவிட்ட ஞானத்துக்குத் தூக்கி விடுவான்" என்று இத்தனை அபிப்ராயத்தையும் உள்ளே அடக்கித்தான் ரத்னச் சுருக்கமாக இரண்டு வரி பண்ணிவிட்டார்.

ஆசையிலேதான் ஆரம்பித்தோம். அனர்த்த பரம்பரை அதிலிருந்துதான் என்று ஆரம்பித்து எத்தனையெத்தனையோ

Koviloor Digital Library

தினுஸாக ஆசைகளைப் பற்றிப் பார்த்தோம். ஆசையின் அந்த அஸுர பரம்பரைகளை தேவ சக்திகள் என்று சொல்லக் கூடிய உயர்ந்த நல்ல குணங்களால் ஜயித்து அடக்க வேண்டுமென்று பார்த்தோம். கடைசியில் பார்த்தால் அந்த நல்ல குணங்களான தேவ கணங்களும்கூடக் கெடுதல் பண்ணிவிட முடியும். எல்லாவற்றுக்கும் மேலே இருக்கிற ஈச்வரனிடம்கூட ஆசை என்று வைத்துவிட்டால் ஸத்ய ஸாக்ஷாத்காரம் கஷ்டம்தான் என்கிற அளவுக்குத் தெரிகிறது. நம்முடைய குறி ஆதார ஸத்யந்தான் என்று தீர்மானமாக வைத்துக் கொள்ளாவிட்டால் நம்முடைய மற்ற குறிகளை நாம் அடையப் பண்ணியே ஈச்வரன் மாயம் செய்துவிடுகிறான் என்று நினைக்கும்படியாக இருக்கிறது. இப்படிப் பலகாலம் பண்ணினாலும், அப்புறம் 'ஐயோ, பாவம்' என்று அவனே உண்மையான, குறிதப்பாத ஞான தாஹத்தைக் கொடுத்து, அப்புறம் அதைப் பூர்த்தி செய்வானென்று வைத்துக்கொள்ளலாம்.

என்றாலும் அவன் என்றைக்கோ அப்படிச் செய்கிறபடிச் செய்யட்டுமென்று இருந்துவிடாமல் நாமும் இடைநிலை ஸாதனைகளில் அல்லது ஸாதனைகளின் இடைநிலையில் பெற்ற அநுபவங்கள் சக்திகள் முதலியவற்றிலேயே ஆசை மோஹம் கொள்ளாமல், ஆசைக்கே இடம் தராததான அத்வைத லக்ஷ்யத்தை அப்போதப்போதும் நினைத்து உறுதிப்படுத்திக் கொள்வதுதான் ச்லாக்யம். அதுதான் விவேகம்.

ஆரம்பத்திலிருந்தே அத்வைத நினைப்பு

முடிவான லக்ஷ்யத்திலிருந்து 'டிஸ்ட்ராக்ட்' ஆகும் (சித்தம் விலகும்) கெடுதலுக்கு, கஷ்டத்துக்கு ஆளாகாமல் எப்படித் தப்புவது என்று கேட்டால், இதற்காகத்தான் ஆரம்பத்திலிருந்தே கொஞ்சம் கொஞ்சம் நாழியாவது தினமும் அத்வைதத்தைப் பற்றிய நினைப்பை உண்டாக்கிக் கொள்ளவேண்டுமென்பது. அந்தக் கொஞ்சம் நாழி, பத்து நிமிஷமோ, அஞ்சு நிமிஷமோ, அநுபவ பூர்வமாக

Koviloor Digital Library

வராவிட்டாலுங்கூட, வலுக்கட்டாயமாக இப்படி நினைக்கணும்: "எத்தனை நல்ல கார்யமானாலும், உத்தமமான ஸமூஹ ஸேவையானாலும், பகவானே ப்ரத்யக்ஷமாகிக் கருணையைக் கொட்டுகிறானென்றாலுங்கூட, இதெல்லாமும் ஆத்மா இல்லை; ஆத்மாநுபவம் இல்லை; சாச்வதமான ஸத்யமில்லை; நிரந்தரமான ஸௌக்யம் இல்லை. இதெல்லாமும் மாயைதான். இவற்றில் எதிலே நாம் ஊறிப்போய் விட்டாலும் ஸத்யத்தை சாச்வதமாக அநுபவித்துக்கொண்டு ஆனந்தமாயிருப்பதென்பதில்லை. இது எதுவுமே தொடாத அகண்ட சாந்தமாக ஆகாசம் மாதிரி உள்ள ஆத்மாதான் நாம்" என்று நினைக்கவேண்டும். அஞ்சு நிமிஷமோ, பத்து நிமிஷமோ—அவ்வளவு முடியாவிட்டால்கூட ஒரு நிமிஷம், அரை நிமிஷமாவது, "நாம் எதுவும் என்னவும் பண்ணாத வஸ்து; நம்மை எதுவும் என்னவும் பண்ணமுடியாது" என்று ராஜாவாக உட்கார்ந்திருக்கவேண்டும்.

'நாம் எதுவும் பண்ணாத வஸ்து' என்று நினைக்கிறபோதே மனஸிலே ஒரு மூலை எதையாவது நினைக்கப்பண்ணிக் கொண்டுதான் இருக்கும். 'நம்மை எதுவும் என்னவும் பண்ணமுடியாது' என்கிறபோதே ஒரு கொசு கடித்தால்கூட அதைத் தாங்கிக்கொள்ள முடியாமல்தான் இருக்கும். ஆனால் இப்படி நாமும் எதையாவது பண்ணிக்கொண்டு. நம்மை வெளி வஸ்துக்களும் எதுவாவது பண்ணி பாதித்துக் கொண்டும் இருந்தால்கூட, 'பண்ணுகிற, (பாதிப்புப்) பண்ணப்படுகிற நாம்' என்பது 'நிஜ நாம்' இல்லவேயில்லை, இது மாயைதான் என்று திரும்பத்திரும்ப சில நிமிஷங்கள் மனஸிலே நன்றாக ஏற்றிக்கொள்ளவேண்டும். 'மனஸினாலே ஆத்மாவைப் பற்றி நினைப்பது' என்கிற இந்த நிலையிலே மனஸ் இருக்கத்தான் செய்கிறது, நினைக்கத்தான் செய்கிறது; ஆத்மாவாக இல்லாமல் 'ஆத்மாவைப் பற்றி' என்பதாக த்வைதமாகத்தான் வேலை செய்கிறது. ஆனால் கூட இப்படி ஒரு ஆரம்பம் பண்ணினால்தான் இஞ்ச் இஞ்ச்—ஆகவாவது அத்வைதத்துக்குப் போகமுடியும். ரொம்பவும்

Koviloor Digital Library

த்வைதத்தில் ஆழ்த்துகிறவை, அத்வைதத்துக்கு அழைத்துக் கொண்டு போகிறவை என்று த்வைதத்திலேயே இரண்டு வகையானவை இருப்பதில் ஆத்ம சிந்தனை என்பது இரண்டாவது வகையாகும். சிந்தனை இல்லாமல் போனால்தான் ஆத்மா ஆகையால் ஆத்மசிந்தனை என்பதும் த்வைதம்தான்; மனஸினாலே கட்டினதுதான் என்பதிலே ஸந்தேஹமில்லை. ஆனாலும் இது ஆத்மாவுக்குக் கொண்டு போய்ச் சேர்க்க உதவுமென்பதைப் பற்றிக் கொஞ்சமும் ஸந்தேஹமில்லை.

கட்டவிழ்க்கும் கஷ்டங்கள்

இப்படி அஞ்சு பத்து நிமிஷம் இருந்துவிட்டு அப்புறம் ஒவ்வொரு பிடுங்கலாக நாம் மாட்டிக் கொள்கிறபோது அதற்காக வருத்தப்படவேண்டாம். மாயையினால் எக்கச் சக்கமாக ஏற்கெனவே போட்டுக்கொண்ட முடிச்செல்லாம் அவிழ்க்கப்படும் வரையில் பிடுங்கல் இருக்கத்தான் செய்யும் என்று ஸமாதானம் பண்ணிக்கொண்டு அத்தனை முடிச்சை யும் ஒவ்வொன்றாக அவிழ்ப்பதற்காக எத்தனை தார்மிகமான கர்மா செய்யணுமோ, எவ்வளவு பூஜை புரஸ்காரம், ஜபம், க்ஷேத்ராடனம் செய்யணுமோ அவ்வளவும் செய்து கொண்டே போவோம். இதிலேயே எத்தனையோ இடைஞ்சல், கஷ்டம் வரத்தான் வரும். சொன்னேனே, வைகுண்ட ஏகாதசி, ஆர்த்ரா தர்சனம் என்று ஸ்ரீரங்கம், சிதம்பரத்துக்குப் போனால்கூட குளிரில் விறைத்து, கூட்டத் தில் மொத்துப்பட்டு அவஸ்தைப்படத்தான் வேண்டியிருக் கிறது என்று! மலை ஏறுவது, அங்க ப்ரதக்ஷிணம், இப்படி எத்தனையோ ச்ரமம் இருக்கத்தான் இருக்கும். பொதுப்பணி என்றாலும் ஒரு வெள்ளக் காட்டிலே, சேற்றிலே, சதுப்பிலே போய் ஆஹாரம் தண்ணி வேளைக்குக் கிடைக்காமல் எத்தனையோ அவஸ்தைப் படவேண்டித்தானிருக்கும். ஆனால் இவற்றைப் பண்ணாமல், 'வெறுமே ஆத்மாவாய் உட்கார்ந் திருக்கிறேன்' என்று அஞ்சு, பத்து நிமிஷத்துக்கு மேல் 'ட்ரை' பண்ணினால், ஒன்றும் முடியாமல் ஒரே கன்னா பின்னாவில் மனஸ் பிய்த்துக்கொண்டு போகிறதே! 'ச்ரமப்

Koviloor Digital Library

படாமல் உடம்பை வைத்துக்கொள்கிறேன்' என்று சும்மா இருக்கப் பார்த்தால், சும்மா எங்கே இருக்க முடிகிறது? சரீரம் கெட்ட கெட்ட அநுபோகங்களைக் கேட்கிறது. ஆக கர்மா, பக்தி பண்ணுவிட்டால் முடிச்சுக்கள் முன்னிலும் பலமாகிக்கொண்டே போகின்றன. அதனுலே, கர்மாவிலும், பக்தியிலும் எத்தனை கஷ்டம், இடைஞ்சல்கள் இருந்தாலும் பட்டுத்தான் ஆகவேண்டுமென்று நினைத்து நிறையக் கர்மாநுஷ்டானம் செய்யவும், ஈச்வர பக்தி செய்யவும்தான் வேண்டும்.

இவற்றுக்காகக் கஷ்டப்பட்டாலும் இவை முடிவிலே கஷ்டத்தைத் தீர்க்கும் கஷ்டங்களாக இருக்கின்றன. இவை கர்மாக் கட்டை அவிழ்ப்பதற்காகப் படவேண்டியவை. வ்யாதிக் கஷ்டத்தைத் தீர்த்துக் கொள்வதற்காகவே ஊசி போட்டுக் கொள்வது, ஆபரேஷன் செய்துகொள்வது முதலான கஷ்டங்களைப் பட வேண்டியிருக்கிற மாதிரிதான் இது. 'இதைப் படமாட்டேன்' என்ருல் அப்போது சும்மா அத்வைதமாகவும் இருக்கமுடியாமல், இதற்கும் வராமலிருப்பதால் வேறெ காரியம், ஈச்வர பக்திக்குப் பதில் வேறே வஸ்துக்களிடம் பற்று வைப்பது என்றுதான் போய் அதில் இதைவிட ஜாஸ்திக் கஷ்டங்களை வரவழைத்துக் கொண்டு, கர்மா மூட்டையை மேலும் பெரிசாக்கிக் கொள்வதாகவே ஆகும்.

ஆகவே, 'அத்வைதமாயிருப்பதைத் தவிர நமக்கு வேறென்ன கடமை வெச்சிருக்கு?' என்ற எண்ணத்தை அடியிலே ஒரே ஸ்வரமாக ச்ருதி சேர்த்து வைத்துக் கொண்டாலும், மேலே பல ஸ்வரங்களில் பாடுகிருற்போல, அபஸ்வரம் தட்டாமல் கவனமாகப் பாடுகிருற்போல, பல விதமான கடமைகளையும் கவனமாக, ஸின்ஸியராக, பெர்ஃபெக்ட் - ஆகப் பண்ணிக்கொண்டேதான் போக வேண்டும். இல்லாவிட்டால் ச்ருதியோடேயே சேராத அபஸ்வரக் களஞ்சியமாக வேறெ எதுவோ செய்வதாகத் தான் இருக்குமே தவிர, சாந்தமாக மௌனமாக ஆகிவிடாது.

Koviloor Digital Library

சப்த ப்ரஹ்மம், நாத ப்ரஹ்மம் என்று அநுஸந்தானம் பண்ணிக்கொண்டு போனால் அதுவே மௌனத்தில் இழைத்து விடுகிறாற்போல, சாஸ்த்ரீய கார்யங்கள் கார்யமில்லாத நிலையிலே முடிவில் இழைத்து விடும்; ஸகுணோபாஸனை நிர்குணத்தில் இழைத்துவிடும்.

என்ன கார்யம், கடமை பண்ணினாலும் பாரத்தை அவன் தலையில் போட்டுவிட வேண்டும். பட்டுக்கொள்ளாமல், ஆனாலும், பெர்ஃபெக்டாகப்பண்ணவேண்டும். இது தான் நிஷ்காம்ய கர்மா. அவன் தலையில் போடுவது என்பது தான் பக்தி. அப்புறம் அவனுடைய தலையிலே போட எந்த பாரமும் இல்லாமல் ஜீவனுடைய கர்மச் சுமை முழுதும் தீர்ந்து போய்விடும். 'தான் எதுவும் பண்ணாதவன், தன்னை எதுவும் என்னவும் பண்ணமுடியாது' என்ற நிலைக்கு ஜீவன் வாஸ்தவமாகவே போய்விடுவான்.

சுமை தெரியாமலே கார்யம் செய்வது

அப்புறம் இவனுக்கு பாரம் தெரியாமலே ஈச்வரன் இவன் மூலமாக லோகக்ஷேமத்துக்காக அநேக கார்யங்களைச் செய்தாலும் செய்விக்கலாம். ஜனகர் ராஜ்ய "பாரம்" வஹித்ததுகூட இப்படித்தான். ஆனால் அவருக்கு அது பாரமாகவோ, தாம் அதை வஹிப்பதாகவோ எண்ணம் இருந்தே இருக்காது. 'தூக்கத்தில் பால் குடிக்கிற குழந்தை' என்று சொன்னாற்போல கார்யம் செய்வதாகத் தெரியாமலே செய்கிற உத்தம நிலை அது. இப்போது நமக்குக் கொஞ்சமும் எட்டாத நிலை. "தூங்காமல் தூங்கிச் சுகம் பெறுவதெக் காலம்?" என்று பத்ரகிரியாரைப் போன்ற பரம வைராக்ய சாலிகளே குறிப்பிடுவதான, கர்த்தா உணர்ச்சியில்லாமலே கார்யம் செய்வதான, அந்த நிலை நமக்கு ரொம்பவும் தள்ளி எக்காலத்திலோ ஏற்பட்டால்தான் உண்டு.

எல்லா ஞானிகளுமே இப்படி லோகக்ஷேம கார்யம் பண்ணும்படி ஈச்வரன் வைத்திருக்கிறானென்று இல்லை. லோகத்தின் கண்ணுக்கே தெரியாமல் எங்கேயோ மலையிலே

Koviloor Digital Library

குஹையிலே தன்னை மறந்து கண்மூடி நிர்விகல்ப ஸமாதியில் இருந்து கொண்டிருப்பவர்களாகவும் ஞானிகள் இருக்கலாம் இன்னம் சில ஞானிகள் லோகத்துக்கு ஞானோபதேசகர் களாக இருக்கும்படி இருக்கலாம். சில ஞானிகள் லோக ஜனங்களைப் போல தர்மாசரணைகள் பண்ணிக்கொண்டு உத்தமமான குணங்களைக் காட்டுபவர்களாக நடைமுறை உலக ஜனங்களுக்குங்கூட ஐடியலாகவும் கார்யம் பண்ண லாம்! அது கார்யம்தான், நடைமுறை உலகத்தைச் சேர்ந் ததுதான் என்றாலும் இந்தக் கார்யத்திலிருந்தும் உலகத் திலிருந்தும் விடுவித்து நிஷ்கர்மத்தில் நிஷ்ப்ரபஞ்சத்தில் சேர்க்க உதவுவதாகும் என்பதால்தான் இந்த ஞானிகளுக்கு ஈச்வரன் இப்படி ஒரு வேஷம் தருவது. அவர்களைப் பார்த்து அப்படியே கர்மா, பக்திகளை ஆரம்பிப்பதுதான் நமக்கு வழி.

நாம் செய்ய வேண்டியதான இந்தக் கர்மாநுஷ்டான, உபாஸனைகளிலேயே அதீதப் பிடிப்பு, அதாவது ஆசைப்பற்று ஏற்படுவதற்கு விடக்கூடாது. ஆசை வந்துவிட்டாலே அப்புறம் அனர்த்த பரம்பரைதான் என்பதால்தான் ஆரம்பத்திலிருந்தே, 'இது அத்தனையும்கூட தவிர்க்க முடியாத மாயைதானே தவிர அஸல் ஸத்யமில்லை; இவையும் இல்லாத ஆத்மாவே நம் லக்ஷ்யம்; அதை நேரே பிடிக்க முடியவில்லை என்பதால்தான் இவற்றைக் கொண்டு பிடிக்கிற இடத்துக்குப் போக முயற்சி பண்ணவேண்டியதாயிருக் கிறது' என்ற அத்வைதமான ஸ்மரணையைத் துளியாவது வைத்துக் கொள்ள வேண்டுமென்பது.

ஆத்ம தர்சனம் கிடைக்கணுமானால், அழுக்கடைந் ததும், ஆடிக்கொண்டேயிருப்பதுமான நம்முடைய சித்தம் சுத்தமாகவும், நிலையாய் நிற்பதாகவும் ஆகவேண்டும். அழுக்கு ஜலத்திலே, அலைகள் ஆடிக்கொண்டேயிருந்தால் அடியிலே இருப்பது தெரியாதல்லவா? அப்படித்தான் (இதுவும்). சித்த அழுக்குப் போக கர்மா; அதன் ஆட்டம் நிற்க பக்தி.

Koviloor Digital Library

கர்மாவில் நிறைய ஆரம்பிக்கும்போதே பக்தியை யும் கூடவே வ்ருத்திப் பண்ணிக்கொண்டு போகவேண்டும். ஸகல கர்மத்துக்கும் பலதாதாவான ஈச்வரனை நினைத்து அவன் பாதத்திலே கர்ம பலனை அர்ப்பணிப்பதாயிருந்தால் ஒழிய, நிஷ்காம்யம் என்று செய்யும் கர்மா எல்லாம் வரட்டு வரட்டு என்றே இருக்கும். அதனால் கொஞ்ச காலத்தில் அலுத்துவிடும். அவனிடம் பக்தி ப்ரேமைகளைக் கலந்து கொண்டாலே, வரட்டு மாவில் நெய்யைப் போட்டுப் பிசைந்தால் அதை நன்றாக நீட்டி நீட்டி 'இட்டுக்கொண்டே' போகிறது போல் கர்மாவை நன்றாக மணக்க மணக்க, நைஸ் பண்ணித் தொடர்ந்து செய்துகொண்டு போக முடியும். ஈச்வர பக்தியும் த்வைதமாய் நின்றுவிட்டால் போதும் என்ற ஸாதனா-அஹங்காரம், ஸாதனா-அபிமானம் ஏற்படாமல் பார்த்துக் கொள்ளவேண்டும். இதெல்லா வற்றுக்கும் ஸத்தியத்திலேயே லக்ஷ்யமிருக்கவேண்டும். அதற்கு ஆத்ம சிந்தனை தொடக்க காலத்திலிருந்தே கொஞ்சம் இருந்தால்தான் முடியும்.

முதலிலிருந்தே மூன்று மார்க்கமும்

இப்படி முதலிலிருந்தே கர்மா, பக்தி, ஞானம் மூன்றும் கலந்து வரணும்—வெவ்வேறு 'ப்ரபோர்ஷ'னில் தானென் றாலும் ஒன்றுமட்டும் என்றில்லாமல் மூன்றும் சேர்ந்து வரணும்—என்பதை கீதையில் பகவான் ஸ்பஷ்டமாக்கிக் கொடுத்திருக்கிறார். அதனால்தான் இந்த மூன்று யோகங் களையும் சொன்னார்.

"யுத்யஸ்வ!"—"உம்! போடுடா சண்டை!" என்று அர்ஜுனனை நன்றாகக் கார்யத்தில் உசுப்பிக் கிளப்பினார். "நான் ஞானியாகப் போகிறேனே! யுத்தம் எதற்கு?" என்றவனை, "அதெல்லாம் கூடாது. யுத்யஸ்வ-விகத ஜ்வர:" என்றார்.*

---

* கீதை 3.30.

Koviloor Digital Library

"விகத ஜ்வர" என்றால் என்ன? ஜ்வரமில்லாதவனாக" என்று அர்த்தம். 'அர்ஜுனனுக்கு ஜ்வரமா அடிச்சுது?" என்றால், ஆமாம், தன் மநுஷ்யாளைக் கொல்வதா என்ற பாசஜ்வரம் அடித்தது. மனஸ் அவனுக்குக் கொதியாகக் கொதித்தது. அது ஜ்வரம்தான்! இந்த பந்துத்வ ஆசையினால், தர்மத்துக்காகப் பண்ணவேண்டிய யுத்தத்தைப் பண்ணப்படாது என்று நினைத்தான். இப்படி ஆசாபாசம் மனஸிலே இருக்கும்போதே, தர்மத்துக்கும் மேற்பட்ட ஞானத்திலே தனக்கு ரொம்ப ஈடுபாடு ஏற்பட்டு விட்டாற்போல, "ராஜ்யாதிகாரத்தில் என்ன இருக்கு? நான் ஸந்நியாசியாகிப் பிச்சை வாங்கிச் சாப்பிடறேன்" என்று வேதாந்தமெல்லாம் சொன்னான்.

பாச ஆசையில் சிக்கியிருந்த இவனை ஸரி செய்ய வேண்டியதே பகவானின் கார்யமாயிருந்தது. ஆனபடியால் இவனுக்கு ஆரம்ப உபாயமான கர்ம மார்க்கத்தையே சொல்ல வேண்டியிருந்தது. அதனால்தான் அர்ஜுனன் என்கிற அந்தத் தனி மநுஷ்யனுக்கான வழி நிஷ்காம்ய கர்மா என்பதால் அதையே ரொம்பவும் சிலாகித்து, விஸ்தாரம் பண்ணி ஸ்வாமி உபதேசம் செய்தார். கீதை குறிப்பாக அர்ஜுனனை முன்னே வைத்துச் செய்த உபதேசமானதால் அவனுக்கானதை, அவன் மாதிரியானவர்களுக்கானதை அழுத்தம் கொடுத்துச் சொன்னார். இதைத் தப்பாகப் புரிந்துகொண்டுதான், அதாவது இதுதான் அத்தனை பேருக்குமே பகவான் சொன்ன முக்யமான வழி என்று தப்பர்த்தம் செய்துகொண்டுதான் இப்போது பெருந்தலைகளாக இருப்பவர்களிலிருந்து ஆரம்பித்து பல பேர்கள். "கீதையின் தாத்பர்யம் கர்மயோகம்தான், ஞானயோகம் இல்லை" என்கிறார்கள்.

ரஜோகுண ப்ரதானனான மஹாவீரன் அர்ஜுனனை மெஜாரிட்டியினரான ஸாதாரண ஜனங்களின் ரெப்ரஸென்டேடிவ்'—ஆக வைத்தே பகவான் கர்மாவை உபதேசித்தார். பெரிய ஸாதகனாக வைத்தல்ல. கர்மா பண்ணுவது,

Koviloor Digital Library

ஆனாலும் மனஸின் கொதிப்பு முதலான ஸொந்த உணர்ச்சி க்ருத்ரிமங்கள் இல்லாமல் பண்ணுவதுதான் அவனுக்கான வழி என்பதாக உபதேசித்தார்.

ஆனால் வெறும் வரட்டு கர்மாவாயில்லாமல் பக்தி சேர்ந்தால்தான் கர்மயோகத்தைச் செவ்வனே செய்து பூர்த்தி பண்ணமுடியுமென்பதால், "சண்டை போடு" என்று முதலில் சொன்னதற்கு அப்புறம் ஒரு **qualifying clause** சேர்த்து,

"மாம் அநுஸ்மர யுத்ய ச"*

என்றார். "வெறுமனே சண்டை போடாதே! என்னை நினைச்சுக்கோ—மாம் அநுஸ்மர! வெளி ஸ்மரணை யுத்தத்தில் இருந்தாலும், அதற்குத் துணையாக உள்ளே இருக்கிற அநுஸ்மரணை என்னிடம் இருக்கட்டும். அப்படி, பக்தியைத் துணை சேர்த்துண்டு சண்டை போடு! அதாவது தேவாஸுர யுத்தத்திலே அஸுர சக்திகளை எதிர்த்து ஸத்கர்ம, ஸத்குணங்களின் படையைக்கொண்டு ஸத்பக்தியின் துணையில் சண்டை போடு" என்று சொல்லியிருக்கிறார்.

கர்ம யோகத்துக்கே அதிகாரியாயுள்ள அர்ஜுனன் (அதாவது அவனால் ரெப்ரஸென்ட் பண்ணப்படும் பொதுவான ஸமூஹம்) அதிக பக்ஷமாக முயற்சி பண்ணக்கூடியது பக்தியிலே சரணாகதி செய்வதுதானே ஒழிய, ஞானத்திலே ப்ரஹ்ம நிர்வாணம் அடைவதல்ல. அதனால்தான் முடிக்கும் போது பகவான் "தர்மத்தையெல்லாம் விட்டு என்னிடம் சரணாகதி செய்" என்றது. "கர்ம மார்க்கமான ஸ்வதர்மத்தில் விசேஷமாக தூண்டிவிக்கப்படுகின்ற அவன் அதையே **goal**-ஆக நினைக்கும்படியாக முடிக்கப்படாது. அதற்காக 'ப்ரஹ்மமாக, ஆத்மாவாக இரு' என்று முடித்தாலும் அவனுக்கு எட்டாது. அதனாலே, 'இந்த ஸ்வதர்மத்தோடு எல்லாம் முடிந்து விடவில்லை. அப்புறம் நீ இதைப் பற்றிய எண்ணத்தையும் விடவேண்டும். இதையே

---

* கீதை 8.7.

Koviloor Digital Library

ஆசைப் பிடிப்போடு பிடித்துக்கொண்டு நின்றுவிடப் படாது. தர்மா தர்மங்கள் அடிபட்டுப் போன ஞானத்தில் நீயாகப் போய் நிற்க இப்போது பக்வப்படவில்லை. நீ என்ன, யாருமே தாங்களாக அதை ஸாதித்துக்கொள்ள முடியாது. நான்தான் அதை ஸாதித்துத் தர வேண்டியவன். முதலிலிருந்தே ஞான மார்க்கத்தை லக்ஷ்யமாகக் கொண்டவனுக்கு என்னைக் காட்டிக் கொள்ளாமலேகூட நான் இப்படி ஸாதித்துத் தருவதுண்டு. ஆனால் உன் விஷயம் வேறு. அதனால் உனக்குச் சொல்கிறேன்: தர்மாதர்மங்களை நினைக்காமல் நானே கதி என்று என் காலில் விழுந்து விட்டால் போதும் என்று வைத்துக்கொள். இப்போதைக்கு அதுதான் லக்ஷ்யம் என்று வைத்துக்கொள். அப்புறம் எது தான் இறுதியான, சாச்வதமான லக்ஷ்யமோ அதை நான் கவனித்துக் கொள்கிறேன்"—என்று இத்தனை அபிப்ராயங்களை அடக்கி சரணாகதியைச் சொல்லி கீதையை முடித்து விட்டார்.

இதையும் ரொம்பப் பேர் ஸரியாய் புரிந்துகொள்ளவில்லை. அர்ஜுனனின் 'நேச்சரை' உத்தேசித்து அவனுக்கு உடனடி ஸாதனா மார்க்கமாகக் கர்மாவைச் சொன்னதால் அதுதான் உத்தம ஸாதகர்கள் உள்பட எல்லாருக்குமே முடிவான வழி என்று தப்பர்த்தம் செய்து கொண்டது போலவே, சரணாகதியைச் சொல்லி கீதையை முடிப்பதால் பக்திதான் அதற்குப் பரம தாத்பர்யமே தவிர ஞானமில்லை என்று இவர்கள் சொல்கிறார்கள். அர்ஜுனன், 'ஸ்வதர்மத்தைத்தானே பகவான் இவ்வளவு விசேஷித்துச் சொல்கிறார்? அதனால் அதுவே போதுமாக்கும், அதோடேயே ஸாதனை பூர்த்தி அடைந்து விடுகிறதாக்கும்' என்று நினைத்துவிடப் படாதே என்று பகவான் பார்த்தார். அத்வைத ஞானத்தைச் சொல்லி முடித்தாலும் அவனுக்கு அது எங்கேயோ எட்டா நிலையாயிருக்குமே என்றுதான், அதற்கு முந்தைய படியான சரணாகதியைச் சொல்லி முடித்தாரென்று புரிந்து கொள்வதே கீதையின் கருத்தை ஸரியாகப் புரிந்து கொள்வதாகும்.

Koviloor Digital Library

"ஆனாலும் ஸத்ய ஸத்யமான தத்வத்தை அர்ஜுனனுக்குச் சொல்லாமலே விடப்படாது. ஸாதனையில் எந்த லெவலில் இருப்பவர்களானாலும் ஸரி, அவர்கள் ஆத்மா என்ற ஒன்றைப் பற்றி எதுவுமே தெரியாதவர்களாக இருக்க விடப்படாது. 'நாம் செய்கிற எல்லா ஸாதனையும் அடிபட்டுப் போகிற ஒரு உத்தம நிலை உண்டு. அங்கே ஸாதனை, ஸாதிக்க வேண்டியது என்பவையே இல்லாமல் ஸாத்ய வஸ்துவாக, ஸத்யப் பொருளாக, 'ஸத்'தாக இருந்து கொண்டு மட்டும் இருப்போம். 'யுத்யஸ்வ'—வுக்கு இடமேயில்லாத அங்கே சேர்ந்தால்தான் 'சாந்தி' என்பதை எல்லோரும் கொஞ்சமாவது தெரிந்துகொண்டு, கொஞ்ச நேரமாவது அப்படி சாந்தமாக, சும்மா இருக்கவேண்டும். பாவனையாகவாவது அப்படியிருக்க முயற்சி பண்ண வேண்டும்" என்றெல்லாமும் பகவான் நினைத்ததால்தான் ஞானத்தையும் நிறையச் சொல்லி, ப்ரஹ்ம நிர்வாணம் என்கிற அத்வைத மோக்ஷத்தில் சேருவது வரையில் அதை விளக்கியிருக்கிறார்.

கடைசி அத்யாயத்திலும் கார்யமற்ற ஞான ஸந்நியாஸ யோகத்தைத்தான் நிறையச் சொன்னார். 'லாஜிகலாக'ப் பார்த்தால் அதோடேயே முடித்திருக்க வேண்டுமென்று தோன்றும். முடிவான லக்ஷ்யத்தோடுதானே உபதேசத்தை முடிக்கவேண்டும்? ஆனாலும் பரம க்ருபையோடு சிஷ்யனின் லெவலை அநுதாபத்தோடு பார்த்து 'லாஜிக'லாக இல்லாமல் 'ஸைகலாஜிக'லாக முடித்திருக்கிறார். அர்ஜுனனை அதிக பக்ஷமாக அப்போது உயர்த்தக்கூடிய தத்வத்தைச் சொல்லி முடிப்பதுதான் அவனுக்கு ஆறுதலாக, உத்ஸாஹமாக, நம்பிக்கை ஊட்டுவதாக இருக்குமென்பதால் பக்தி-சரணாகதி என்று திருப்பி முடித்துவிட்டார்.

"ஸந்நியாஸம் ஏற்று ஞானியாகி அஹங்காரம், காமம், க்ரோதம் ஆகியவற்றிலிருந்து விமோசனம் பெற்று, 'என்னுடையது' என்னும் எண்ணம் அற்றுப்போய் சாந்த மயமாகி விட்டவன் ப்ரஹ்மமாக ஆவதற்கு உரியவனாகிறான். அப்

Koviloor Digital Library

புறம் அவனுக்கு ஆத்மா ப்ரஸன்னமாகி, துக்கமோ சாந்தமோ ஏற்படமுடியாமல் ஸர்வபூத ஸமத்வ பாவனை உண்டாகி ப்ரஹ்ம பூதனாகிறான்" என்று முடிந்த நிலையை முடிவான (பதினெட்டாம்) அத்யாயத்தில் சொல்லிக் கொண்டு போகிறார். பகவான் அதோடேயே உபதேசத்தைப் பூர்த்தி பண்ணியிருக்கலாம். ஆனாலும் இப்படிச் சொன்னவுடன் 'என்னடா இது? இப்படி முடித்தால் எங்கேயோ உச்சி மாடியில் ஏற்றிவிட்டு ஏணியை எடுத்து விட்டாற்போல இவன் (அர்ஜுனன்) ப்ரமித்துப் போய்விடப் போகிறானே!' என்று நினைத்திருப்பார் போலிருக்கிறது. அதனால்தான் அவனுக்கு பக்தியோடு சொல்லி முடிப்போமென்று, "அந்த ப்ரஹ்ம பூதனுக்கு என்னிடம் உயர்ந்த பக்தி ஏற்படுகிறது" என்று ஆரம்பித்து, சரணாகதியிலே முடித்தாரென்று தோன்றுகிறது. இதற்கு முந்தி அவனுக்கு விச்வரூபம் காட்டி *பயபக்தியை முதலில் உண்டுபண்ணி, அப்புறம் விஷ்ணு ரூபம் காட்டி ப்ரேம பக்தியும் உண்டாக்கியிருந்ததால், ப்ரபத்தி பண்ணுகிற நிலை வரைக்கும் அவனை உயர்த்தலாமென்று இப்படி முடித்ததாகத் தோன்றுகிறது.

ஆசார்யாள், முடிவில் ப்ரபத்தி என்று சொல்லப்படும் பராபக்தியே ஞானம்தான் என்கிறார்.

கர்மாவை அர்ஜுனனுக்கு விதித்துக் கார்யத்தில் ஏவும் போதே விச்வரூப தர்சனம் அளிக்கும் அளவுக்கு அவனை பக்தியிலும் பகவான் அழைத்துக்கொண்டு போனதால் அதற்குப் பொருத்தமாக சரணாகதியில் முடித்தார்.

கீதை போடும் அத்வைத அஸ்திவாரம்

ஞானத்தையும் விட்டுவிடாமல் நிறையக் கொட்டி உபதேசித்தார். அதனால்தான் அதை "ப்ரஸ்தான த்ரய"த்தில் (ஆதார ப்ரமாணமான மூன்று நூல்களில்) ஒன்று

* கீதை 18: 53-54

Koviloor Digital Library

என்றே வைத்து ஆசார்யாள் பெரிதாக பாஷ்யம் பண்ணி யது.

ஆரம்பத்திலிருந்தே ஆத்மாவில் ஒரு பிடிப்பு ஏற்படுத்தித் தரவேண்டுமென்றுதான் கீதையில் அர்ஜுனனுக்கு என்றே முக்யமாக ஏற்பட்ட கர்ம யோகத்தை உபதேசம் செய்வதற்கு முந்தியே பரம அத்வைதமாகவும் ஞானமாகவும் பகவான் ஆரம்பித்திருக்கிறுர்.

கீதோபதேசம் ஆரம்பிப்பது அதன் இரண்டாம் அத்யாயம் பதினேராம் ச்லோகத்தில். அதற்கு முந்தி இருப்பதெல்லாம் முகவுரை மாதிரிதான்; எந்த 'ஸெட்டிங்' கில் கீதை பிறந்தது என்று back gronud-ஐ வர்ணிப்பது தான். உபதேசம் ஆரம்பிக்கும் முதல் ச்லோகத்திலேயே பகவான், "இருக்கிறவர் செத்தவர் என்று யாரைப் பற்றியும் ஞானிகள் கவலைப்படுதில்லை" என்று சொல்லி, மேலே தொடர்ந்து, "ஏனென்ருல் யாருமே எப்போதுமே இல்லாம லிருப்பதென்பதே கிடையாது. நாசமில்லாத நித்ய வஸ்துவாய், அளவிடப்பட முடியாத அப்ரமேய வஸ்து வாயுள்ள ஆத்மாதான் எல்லாரும். அதற்கு உடம்பு என்று என்னவோ ஒன்று ஏற்பட்டிருக்கிறது. சாவதும் இந்த உடம்பு தான்" என்று பரமாத்வைதமாகவே பேசுகிறுர். இப்படி ஒரு இருபது ச்லோகத்தில் படபடவென்று ஞானமயமாகக் கொட்டித் தீர்த்த அப்புறந்தான், ஸ்வதர்ம கர்மா நுஷ்டானம் என்பதாக அர்ஜுனனுக்கு ஏற்பட்ட வழிக்கே வருகிறுர். "உன்னுடைய ஸ்வதர்மத்தை வைத்துப் பார்த் தாலும் நீ யுத்தத்திலிருந்து வாபஸ் வாங்கிக் கொள்ளக் கூடாது. க்ஷத்ரியனுகப் பிறந்தவனுக்கு தர்ம யுத்தத்தைவிட ச்ரேயஸான கார்யம் என்ன இருக்கிறது?" என்பதாக* ப்ரஹ்மத்திலிருந்து கர்மத்துக்கு வருகிறுர்.

பூர்வ—உத்தர மீமாம்ஸைகளில் ஒன்றுக்கப்புறம் மற்றது தர்மத்திலிருந்து ப்ரஹ்மத்துக்கு அழைத்துப்

---

* கீதை 2-31

Koviloor Digital Library

போவதாகச் சொன்னேன். ப்ரஹ்மத்தைப் பற்றிய சிந்தனையை ஊட்டாமலே தர்மத்தை மட்டும் பூர்வ மீமாம்ஸை சொன்னதால்தான் அதை வேதாந்தம் கண்டிக்க வேண்டியிருந்தது. அந்தத் தப்பு நடக்காமல்தான் கர்ம மார்க்கத்திலே ஸ்வதர்மாநுஷ்டானம் பண்ணுவதற்கு அர்ஜுனனை 'இனிஷியேட்' செய்வதற்கு முந்தியே ப்ரஹ்ம அஸ்திவாரத்தை பகவான் போட்டுக் கொடுத்துவிடுகிறுர்.

ஸ்வதர்ம கர்மா என்கிற யோகம்தான் அர்ஜுனனுக்கு அவர் குறிப்பாக உபதேசிக்க நினைத்தது. ஆனுலும் அதற்கு முந்தியே 'ஸாங்க்யம்' என்று அவர் சொல்வதான ஞானத்தின் கொள்கைகள் அவனுக்குத் தெரிந்திருக்க வேண்டுமென்று பகவான் நினைத்து அவற்றில் தொடங்கினுர். அவற்றைச் சொல்லி முடித்தபின்,

''ஏஷா தே(அ)பிஹிதா ஸாங்க்யே
புத்திர்-யோகே த்விமாம் ச்ருணு'' (2-39)

—''ஞான யோகத்தின் விஷயமான அறிவைச் சொல்லியாயிற்று; இப்போது கர்ம யோக விஷயமானதைக் கேள்'' என்று ஆரம்பிக்கிறுர்.

அப்புறமும் அந்த அத்யாயம் முழுக்கக் கர்மயோகத்தின் முடிவு முக்குணங்களுக்கும் மேலே போவது, எல்லா த்வந்தங்களையும் இல்லாமல் செய்துகொள்வது (அதாவது அத்வைதமாவது) என்றெல்லாம்தான் காட்டிக்கொண்டே போய் பரமஞானியான ஸ்தித ப்ரஜ்ஞனின் லக்ஷணங்களை விரிவாக எடுத்துச் சொல்வதோடு முடிக்கிறுர்.

தர்மமே தெரியாமல் உறவுப் பாசம்தான் ப்ரேம தர்மம் என்றும், தர்மத்துக்காகக்கூடப் போரிடாமலிருப்பதுதான் அஹிம்ஸா தர்மம் என்றும் குழம்பிக் கிடந்த அர்ஜுனனுக்கு, தர்மத்துக்கும் மேம்பட்ட ப்ரஹ்ம நிலைக்குப் போய்க் கொஞ்சங்கூடக் குழப்பம் கலக்கமில்லாமல், அசையாத பூர்ண ஸமுத்ரம் மாதிரி உள்ள ஸ்தித ப்ரஜ்ஞனைப் பற்றி வர்ணனை கொடுத்து முடிக்கிறுர்.

Koviloor Digital Library

இன்றிலிருந்து தொடங்குக!

நீங்கள் எல்லாரும் அர்ஜுனர்கள்தான். அவன் மாதிரி விஷாத யோகத்தில் (மனம் குழம்பி) இருப்பவர்கள்தான். அதனால் அவனைப் போலவே பகவான் சொன்ன யோகங்களில் நீங்களும் போய், கீதையின் கடைசியில்* அவன் ஸந்தோஷமாக மனம் ரொம்பி, "என் புத்தி மயக்கம் போச்சு. ஸந்தேஹம் தீர்ந்தது. உன் க்ருபையினாலே ஸரியான ப்ரஜ்ஞை உண்டாகிவிட்டது" என்று சொன்ன நிலையை அடையவேண்டுமென்று க்ருஷ்ண பரமாத்மாவிடம் ப்ரார்த்தனை செய்துகொள்கிறேன்.

இன்றிலிருந்து அஸுர வ்ருத்திகளை ஜயிப்பதற்காக தெய்விகமான வ்ருத்திகளை நன்றாகத் திரட்டிக்கொண்டு நிறையக் கர்மாநுஷ்டானம் செய்யவும், பரம எளிமையோடு பரமேச்வரனிடம் பக்தி செலுத்தவும் ஆரம்பியுங்கள். தெய்விகமானது உள்பட எந்த வ்ருத்தியும் இல்லாத, சித்தமே இல்லாத சித்ஸ்வரூப ஆத்மாதான் முடிவு என்பதை மறக்காமல் இருங்கள். இப்போது எத்தனை அழுக்குப் போர்வைகளால் அந்த ஆத்மாவை மூடி மறைத்திருந்தாலும் அதுவாகத்தான் எப்போதும், இப்போதும் கூட• நாம் இருக்கிறோம் என்ற பாவனையில் கொஞ்ச நேரம் உட்கார்ந்திருங்கள். அப்போதப்போது கார்யங்களுக்கு இடையிலே. கார்யமில்லாத மஹா பெரிய சாந்தமாய் விரிந்து விசாலமாயிருக்கிற அந்த நம்முடைய ஸத்யமான ஸ்வபாவத்தைக் கொஞ்சம் நினைத்துக்கொள்ளப் பாருங்கள். அதுதான் கார்யத்திலே நாம் ஈடுபட்டுள்ளபோது நம்முடைய மனஸினால் ஏற்படக்கூடிய ஸொந்தப் பற்றுக்களைப் போக்கி, கர்ம பாக்கி ஜாஸ்தியாகாமல் குறைப்பதற்கு உதவி செய்யும்.

அஸுரர்களை அழிக்க முயற்சி செய்யும்போதே தேவர்களும் பிற்பாடுபோகவேண்டியவர்கள் என்பதை மறக்காமல் இருங்கள். வாழ்க்கைப் போராட்டத்தை புத்திசாலித்

---

* 18-73

Koviloor Digital Library

தனமாக நடத்துங்கள். "மாம் அநுஸ்மர" என்று சொன்ன பகவானையே நினைத்துக்கொண்டு சண்டை செய்தால் அவனிடம் மட்டுமே பற்று இருக்குமே தவிர, தேவர்களிடம் பற்று ஏற்பட்டுவிடாமலிருக்கும்; அப்புறம் அவர்களையும் அவனுடைய அருள் கொண்டு போகப் பண்ணிவிடலாம். இன்னும் இதற்கும் மேலே அந்த பகவானிடமும்கூட அவனுடைய இந்த ஸகுண ஸ்வரூபத்தில் பற்று வைத்துப் பிடித்துக்கொள்ளாமல், அத்வித்தீயமான நிர்குண நிஜ ரூபத்திலே போய் ஒன்றுபட்டு விடுவதற்கு ஸாதனை செய்ய வேண்டும். அதற்கு ஒரு சின்ன அங்குரார்ப்பணமாகத்தான் இப்போதிலிருந்தே ஆத்ம த்யானம் சற்று வைத்துக் கொள்ளச் சொன்னது.

நல்லதற்கும் மேலே செல்க!

நல்லது, தர்மமானது என்கிற தேவ கணங்களை விட்டு வைத்தால் இவையும் ஆத்மாவுக்கு அந்யமான மனஸின் பாற்பட்டவையேயாகையால் இவற்றாலும் தொந்தரவு வரக்கூடும் என்ற நினைவு எப்போதும் நமக்கு இருந்து நம்மை ஜாக்ரதைப்படுத்த வேண்டும்.

World War-ல் (உலக யுத்தத்தில்) Allies (நேசநாடுகள்) என்று ப்ரிட்டன், அமெரிக்கா, ப்ரான்ஸ், அப்புறம் ரஷ்யா முதலானவை ஒருபக்கமும், ஹிட்லர் (ஜெர்மனி), முஸோலினி (இத்தாலி), ஜப்பான் ஆகியவை Axis (அச்சு நாடுகள்) என்று இன்னொரு பக்கமுமாகச் சண்டை போட்ட போது, இருப்பதற்குள் நேசநாடுகள்தான் நல்லவை, ஓரளவு தேவசக்தியோடு கூடியவை என்று தோன்றிற்று. ஹிட்லர், முஸோலினியும், ஜப்பான்காரர்களும் பண்ணினவை அஸுரத்தனமாகத் தெரிந்தன. நல்லவேளையாக நேச நாடுகள் ஜயித்தன. ஆனால் அப்புறம் என்ன ஆச்சு? அவர்களிலேயே இரண்டு பிரிவாகப் பிளந்து போயிருக்கிறார்கள். ஒருத்தரையொருத்தர் எதிர்த்துக்கொள்கிறார்கள். அஸல் யுத்தத்தைவிட மோசமாக ஸதாவும் கிலியிலும் அவ

Koviloor Digital Library

நம்பிக்கையிலும் உலகத்தைத் தவிக்கும்படியாகக் "கோல்ட் வார்" நடத்திக்கொண்டிருக்கிறார்கள்.

அவ்வளவு தூரம் போகவேண்டாம். இங்கே நம்ம ஸமாசாரத்தை எடுத்துக்கொண்டால், நம்முடைய உசந்த நாகரிகத்தைக் கெடுத்துக்கொண்டிருந்த வெள்ளைக்காரர்களை எதிர்த்து ஸ்வதந்த்ரப் போரட்டம் ஆரம்பித்து நடத்தியபோது, அந்தப் போராட்டத்தை நடத்திய தலைவர்களின் தன்மை, அவர்களுடைய கொள்கை முதலியவற்றைப் பார்க்கும்போது மொத்தத்தில் நல்லதான—அதாவது தேவர்களின் படையான—அம்சங்களே நம்முடைய தரப்பாக இருக்கிறதென்றும், வெள்ளைக்கார ஆட்சி எத்தனை நல்ல வேஷம் போட்டாலும் அஸுரக் கட்சியைப் போலத் தானென்றும் தோன்றியது. அப்புறம், அவர்களைப் போகப் பண்ணிவிட்டு, ஸ்வதந்த்ர நாடாக நாம் இருக்கும்போது என்ன பார்க்கிறோம்? ஸ்வதந்த்ரப் போராட்டத்தை ஜயித்துக்கொடுத்த, நல்லதாகத் தெரிந்த கோஷ்டியிலேயே இரண்டு, மூன்று, நாலு என்று பிரிவுகள் ஏற்பட்டு ஒருத்தரை யொருத்தர் அஸுரர்களாக வர்ணித்துக்கொண்டு, ஆயுத மில்லாவிட்டாலும் வாய்ச்சண்டை போட்டுக்கொண்டிருப்பதைத்தான் பார்க்கிறோம். இதிலே யாரைக் கூடிய மட்டும் தேவசக்திகளோடு சேர்த்துச் சொல்லலாம் என்றே ஸரியாகத் தெரியாமல் ஜனங்களுக்குள் அபிப்ராய பேதங்கள் ஏற்பட்டுப் பிரிந்து பிரிந்து நிற்கிறார்கள்.

எதற்குச் சொல்ல வந்தேனென்றால், எந்த நல்லதும் அப்படியே சாச்வதமாயிருந்துவிடாமல் அதிலும் கெடுதல்கள் வரத்தான் செய்கின்றன. ஆகையினால் நல்லது என்று ஒன்றைப் பிடித்த பிடியாக வைத்திருக்கவேண்டுமென்ற ஆசையும் இல்லாமல், ஆனாலும் இப்போது நம்மைப் பிடித்த பிடியாகப் பிடித்தாட்டுகிற கெட்டதைப் போக்கிக்கொள்ள நல்லவற்றைத்தான் நாம் பின்பற்ற வேண்டுமென்று புரிந்துகொண்டு ஸின்ஸியராகக் கர்மாநுஷ்டானம், பக்தியுபாஸனை செய்துகொண்டே போகவேண்டும். கர்ம யோகம், அப்புறம் பக்தி யோகம் என்று சொல்லி முடிவிலே புகவான் நிலை

Koviloor Digital Library

நாட்டின அந்த ஸாங்க்ய (ஞான)யோகத்தையே, அவர் கர்மயோகத்தைச் சொல்வதற்கு முன்னுலும் அஸ்திவாரம் போலப் போட்டுக்கொடுத்ததை மறக்காமல் நாம் ஆரம்பத்திலிருந்தே சிறிதேனும் ஆத்ம த்யானம் வைத்துக்கொள்ள வேண்டும். அப்போதுதான் தேவர்களுக்கிடையிலேயே அல்லது தேவர்களாலேயே சண்டை என்பதற்கும் இடமேற்படுவதற்கில்லாமல், சண்டைக்கு ஆஸ்பதமாக ஜீவபாவத்துடன் இருக்கிற ஆஸாமியே எடுபட்டுப்போய் ஆத்மா மட்டும் இருப்பதான, சண்டை யறியாத சாச்வத மான சாந்த நிலேக்கு என்றைக்காவது ஒரு நாள், இந்த ஜன்மாவில் இல்லாவிட்டாலும் எந்த ஜன்மாவிலாவது ஒரு நாள் போய்ச் சேரக் கொஞ்சங் கொஞ்சமாக வழி திறந்து விடும்.

ஆத்ம சிந்தனே அனேவர்க்கும் அவசியம்

ஞான வாசல் கதவு திறந்து உண்மையைக் காண்பது மநுஷ்ய ப்ராணி ஒன்றுக்குத்தான் உரியது என்று பெரியவர்கள் சொல்லியிருக்கிருர்கள். ப்ராணி வர்க்கங்களில் மநுஷ்யன் ஒருத்தன்தான் தன்னேயே பரப்ரஹ்மமாகத் தெரிந்துகொள்கிற ஞானத்துக்கு முயல முடியுமென்பதால் தான் "அரிது அரிது மானுடராய்ப் பிறத்தலரிது" என்று சொன்னது. இதையேதான் ஆசார்யாளும் "விவேக சூடாமணி"யில் "ஜந்தூநாம் நரஜந்ம துர்லபம்" என்ருர்.

இதனுல், மநுஷ்ய ஜன்மா எடுத்த எல்லாரும் சற்றேனும் ஆத்ம விசாரம் செய்து ஞானத்தை அடைவதற்கு ப்ரயத்னம் பண்ணவேண்டும்.

இதற்குப் பொழுது கிடைக்கவில்லே என்று சொல்வது கொஞ்சம்கூட ஸரியில்லே. "ரொம்பவும் தாற்காலிகமான ஸந்தோஷங்களே உத்தேசித்தே செய்கின்ற ஸகல கார்யங்களேயும் பண்ணப் பொழுது இருக்கிறது. எது சாச்வதமான ஆனந்தமோ, ஸௌக்யமோ அதற்கு ப்ரயத்னம் பண்ணப் பொழுது இல்லே" என்று சொன்னுல் நம்மைப்போல அசடு இல்லே என்றுதான் அர்த்தம்.

Koviloor Digital Library

மாயை, இயற்கை, nature, மனஸ் என்று தினுஸு தினுஸாக இத்தனையை வைத்து பகவான் லீலை செய்கிறது எதற்காக? இவற்றைக் கொண்டு செய்கிற கார்யங்களைக் கொண்டே இவற்றுக்கு அப்பாற்பட்ட ஸதாநந்தத்துக்கு நாம் வழி தேடிக் கொள்கிறோமோ என்று பரீக்ஷை பார்க்கிறதற்காகத்தான். ஆகையால் கர்மா கழிகிற வரையிலே இந்த லோகத்திலே நாம் கடமைகளை, கர்மாக்களை அநுஷ்டானம் பண்ணிக் கொண்டிருக்க வேண்டியதுதான். இதிலே தாம்பத்யம், சாப்பிடுகிறது, பொழுது போக்குகளை ரஸிக்கிறது எல்லாங்கூட அடக்கந் தான். வரம்பு மீறாமலிருக்கிறவரை எதுவுமே அந்தந்த வயஸுக்கட்டம், வாழ்க்கை நிலைகளில் தள்ளுபடியில்லை. எல்லாம் நாம் பக்வமாவதற்குப் படிப்படியாக உதவி செய்கிறவைதான்.

ஆனால் இதுகளோடேயே நின்று விட்டு ஆத்ம சிந்தனைக் குப் பொழுதே இல்லை என்றால்—நாம் எத்தனை பீ.ஏ., எம்.ஏ., படித்திருந்தாலும், டாக்டர் பட்டம் வாங்கியிருந்தாலும்— அசடு என்றுதான் அர்த்தம். ஸம்பாதிப்பது, படிப்பது, குடும்பவாழ்க்கை நடத்துவது முதலான எல்லாவற்றுக்கும் 'டயம்' இருக்கிறது; நிறைந்த நிறைவைத் தரமுடியாத இதற்கெல்லாம் நிறைவைத் தருகிற ஞானத்துக்கு முயற்சி பண்ண 'டயம்' இல்லை என்பது, "குப்பை செத்தையை எல்லாம் சேர்த்து மூட்டி எரிப்பதற்கு 'டயம்' இருந்தது: ஆனால் குளிர் காய 'டயம்' இல்லை" என்கிற மாதிரிதான்! "வேலை செய்யப் பொழு திருந்தது; கூலி வாங்கப் பொழுதில்லை" என்று சொல்வது போலத்தான்! மற்ற ஸகல கார்யத்துக்கும் முடிவு, லக்ஷ்யம் ஆத்மாவில் கொண்டு சேர்ப்பதுதான். அப்படிப்பட்ட ஆத்மாவைப் பற்றி பாவனையாகவாவது த்யானம் செய்வது, அஞ்சு பத்து நிமிஷமாவது இப்படி த்யானம் செய்வது என்று வைத்துக்கொள்ளாவிட்டால் நாம் செய்யும் அத்தனை கார்யமும் தங்களையே முடிவாக்கிக் கொண்டு த்வைதத்தின்

Koviloor Digital Library

அசாந்திகளேயே கொடுத்துக்கொண்டிருக்குமே யொழிய ஆத்மாவுக்கு ஏற்றிவிடாது. அந்த முக்கியமான கார்யத்தைக் கொஞ்சம் 'ட்ரை' பண்ணிப் பார்ப்பதற்கு 'டயம்' இல்லே. இல்லாவிட்டால் மனஸ் பக்வப்பட்டு வரவில்லே என்று சொல்வதெல்லாம் நொண்டி ஸால்ஜாப்புகள்தான். முயற்சி பண்ணிப் பண்ணித்தான் மனஸைப் பக்வப்படுத்த வேண்டுமே தவிர, பக்வமில்லே என்பதால் முயற்சி பண்ணுவதற்கில்லே என்பது தலேகீழ் வாதம்.

ஸங்கல்ப பலம் இல்லாததால்தான் இப்படி வாதிப்பது நம்மைப் பற்றியே நமக்குத் தன்னம்பிக்கையோ, ஈச்வரானுக்ரஹத்தில் நம்பிக்கையோ இல்லாததால்தான் சாக்குச் சொல்லத் தோன்றுகிறது.

Where there is a wiil there is a way: மனமிருந்தால் வழியுண்டு. பொய்யான மனஸைப் போக்கிக்கொண்டு மெய்யான ஆத்ம ஸ்வரூபமாவதற்கு முயற்சி பண்ண வேண்டுமென்று மனமிருந்தால் ஞான வாசல் திறக்க நிச்சயம் வழி உண்டு.

Will - ஸங்கல்ப உறுதி - ஏற்படாததற்கு என்ன காரணம்? வழி திறந்து ஞான பூமிக்குப் போகணும் என்பதன் அவச்யம் நமக்குத் தெரியாமலிருப்பதுதான். பெரிய மழையிலே, அல்லது கொளுத்துகிற வெயிலிலே நட்ட நடுத் தெருவிலே மாட்டிக் கொண்டோமானல் எந்த வீட்டிலாவது வாசல் கதவு திறந்திருக்காதா என்று எத்தனே தவிப்போடு தேடுவோம்? எங்கேயாவது உள்ளே போய் ஒதுங்கியாக வேண்டுமென்று அப்போது தீவ்ரமாக எண்ணம், அதாவது ஸங்கல்பம் இருப்பதால், மூடியுள்ள ஏதாவதொரு கதவை இடித்தாவது திறக்கப் பண்ணி வழி ஏற்படுத்திக் கொள்கிறோம். இம்மாதிரி ஆத்மாவுக்குள்ளே போய் ஸ்வஸ்தமாக ஸம்ஸார வெய்யில், அல்லது ஸம்சார ப்ரளயம் பாதிக்காமல் இடம் தேடிக்கொள்ள வேண்டுமென்ற எண்ணமில்லாததால்தான் விமோசனத்துக்கான ப்ரயாஸை பண்ணுமலே இருக்கிறோம்.

Koviloor Digital Library

இப்படியிருப்பவர்களுக்கு ஸம்ஸாரத்திலிருக்கிற கஷ்டத்தை, பொய்யை எடுத்துக்காட்டி, விடுதலைக்கான ஆர்வத்தை ஸங்கல்பத்தை ஏற்படுத்தி, அப்புறம் மார்க்கத்தையும் சொல்லிக் கொடுப்பதற்குத்தான் மடாலயங்கள் இருக்கின்றன. உங்களை இவ் விஷயமாகச் சிந்தனையைத் திருப்பச் செய்வதுதான் எங்கள் மாதிரியானவர்களின் கடமை.

ஆலோசித்து அறிய வேண்டியவை

அதனாலே, கொஞ்சம் உங்களையே ஆலோசித்துப் பார்க்கும்படி கேட்டுக்கொள்கிறேன். இப்போது வாழ்க்கையில் உங்களுக்கு நிம்மதியிருக்கிறதா? ஏதோ அப்பப்போ கொஞ்சம் ஸந்தோஷம், த்ருப்தி ஏற்பட்டாலும், ஒன்று மாற்றி ஒன்று ஏதோ இழுபறிச் சக்திகளிடம் மாட்டிக் கொண்டு சாந்தியில்லாமல் ச்ரமப்பட்டுக்கொண்டே இருக்கும்படிதானே இருக்கிறது? 'ஆஹா' என்று, 'அக்கடா' என்று, "நமக்குக் கவலையே இல்லை, பயமே வராது, துக்கமே வராது" என்றெல்லாம் சொல்லும்படியான உறுதிப் படுத்திய சாந்தியாயிருக்கிறதா? இல்லையோல்லியோ?

இல்லை என்றுதான் பதில் சொல்வீர்கள்.

ஸரி, எதனால் இத்தனை சலனம், பறப்பு? இழுபறி, ச்ரமம் எதனால்?

இதை யோசித்தீர்களானால், யாராலும் க்ஷணம்கூடச் சும்மா இருக்காமல் ஏதாவது கார்யம் செய்துகொண்டே இருக்கத் தோன்றுவதாயும், இந்தக் கார்யங்களினால்தான் சாந்தியைக் குலைக்கிற எல்லாம் வந்து சேருவதாயும் தெரியும். கார்யமேயில்லாவிட்டால்தான் சாந்தி என்பது இரண்டும் இரண்டும் நாலு என்கிற மாதிரி எவருக்கும் தெரியும்.

'எதற்காகக் கார்யம்?' என்பது அடுத்த கேள்வி. இதை யோசித்துப் பாருங்கள். பார்த்தால் பலவிதமான

Koviloor Digital Library

ஆசைகளில் எதுவோ ஒன்றின் பூர்த்தியை முன்னிட்டுத்தான் ஒவ்வொரு கார்யமும் என்று புரியும்.

கோபத்தினுலோ மோஹத்தினுலோ வேறெந்த உணர்ச்சியினுலோ செய்கிற ஸகல கார்யங்களுங்கூட, அந்த உணர்ச்சிகளுக்கெல்லாம் அடியிலே மூலமாகப் பதுங்கியிருக்கிற ஒரு ஆசையினுலேதான் என்று கொஞ்சம் தீர்க்கமாக ஆலோகித்துப் பார்த்தால் புரிந்துவிடும்.

ஸரி, கார்யத்தை நிறுத்திவிடலாமா என்று பார்த்தீர்களாஞல். அது லேசில் ஸாத்யமில்லை என்பது தெரியும். ப்ரக்ருதி (நேச்சர்) ஒருத்தனை ஏதாவது கார்யத்தில் ஏவிக்கொண்டேதானிருக்கிறது என்று தெரியும்.

அதஞலேதான், சாஸ்த்ரம் இந்த ஸ்டேஜில் என்ன சொல்கிறதென்ருல், 'கார்யம் செய்துவிட்டுப் போங்கள். ஆனுல் ஆசை வாய்ப்பட்டுச் செய்வதைக் குறைத்துக் கொள்ளுங்கள். ஸ்வந்த ஆசைக்காகச் செய்வது என்றில்லாமல் உலக நலனுக்காக கார்யங்களைப் பண்ண ஆரம்பியுங்கள்' என்கிறது. உலகத்தில் பலதரப்பட்ட கார்யங்கள் நடக்கவேண்டியிருப்பதால், அவற்றை அழகாக 'ஸ்வதர்மம்' என்று பிரித்து ஒவ்வொருவருக்கும் பாரம்பர்யமாக ஒன்றைக் கொடுத்திருக்கிறது.

அந்தப்படி பண்ண ஆரம்பியுங்கள்.

அப்புறம் தெரியும், ஸொந்த ஆசைக்கு இடம் கொடுக்காமல் இருக்கத்தான் கர்மாநுஷ்டானம் ஸஹாயம் செய்கிறதே தவிர, அந்த ஆசை எழும்பாமல் அழிந்தே போவதற்கு நேராகப் போராடி ஜயித்துத் தரவில்லை என்று. ஸ்வதர்ம கார்யங்களானவை ஸ்வய ஆசைகள் படருவதற்கு அவகாசம் தராமல் 'டைவர்ட்'தான் செய்கின்றனவே தவிர, அவற்றை அப்படியே அழித்துவிடுவதற்குப் பயன்படுவதில்லை என்று தெரியும்.

இந்த விஷயத்திலே ஸஹாயம் செய்யத்தான் சாஸ்த்ரங்கள் பக்தியைச் சொல்லியிருப்பது. ஆசை உண்டாவதற்கு

Koviloor Digital Library

உற்பத்தி ஸ்தானம் மனஸ். அதை இந்த்ரியங்களிலிருந்து ஈச்வரன்கிட்டே திருப்பினுல்தான் நேராக ஸ்வய ஆசைகளை நிறுத்தமுடியும். ஆனாலும் முதலில் ஸ்தூல தேஹத்தில்தான் ஜனங்களுக்குத் 'தான்' என்ற எண்ணம் அதிகமிருப்பதால், தேஹத்தைக் கொண்டு செய்யும் கார்யத்தைத் தூய்மைப் படுத்தித் தருவதற்கே முதலில் முக்யம் கொடுத்து, அப்புறம் தான் ஸூக்ஷ்மமான மனஸை deal பண்ணுவதற்குப் பிராதான்யம் கொடுத்திருக்கிறது. இப்படி இரண்டாவது கட்டத்திலே மனஸிலிருந்து ஆசைகளை எல்லாம் நீக்கி ஈச்வர பக்தி பண்ணிவந்தாலே ஸம்ஸார இழுபறி பெருமளவுக்குக் குறைந்து, பரிசுத்தமான ஆனந்தமும் சாந்தியும் ஒரு கணிச மான அளவுக்கு உண்டாகிவிடும்.

ஆனாலும்கூட அதற்கும் மேலே ஆலோசனை பண்ணிப் பார்த்தீர்களானால் இப்போதும்கூடப் பூர்ண அமைதியில்லை. சாச்வதமான சாந்தியில்லை என்று தெரியும். பக்தி பண்ணும் போதும் அதிலேயே எத்தனையோ தாபங்கள் இருப்பது தெரியும். ஈச்வரன் என்று ஒருத்தனைப் பக்தி பண்ணு கிறோமே, அவனை உள்ளுக்குள்ளே ஊறி அநுபவிக்கவில்லை என்று தெரியும். அவனுடைய நிஜமான தன்மை என்ன என்று பக்தியிலே தெரியவில்லை, நாம் எதை அவன் தன்மை என்று நினைத்தாலும் அப்படி மட்டும் வந்துதான் அவன் தன்னைக் காட்டிக்கொள்கிறுனென்று தெரியும். அதோடு கூட, இந்த பக்தியில் அவனுடைய உள்தன்மை என்ன வென்று தெரியாதது போலவே நம்முடைய உள்தன்மை - நிஜ ஸ்வபாவம் - என்னவென்பதும் தெரிந்துவிடவில்லை என்று தெரியும். பக்தி பண்ணும் மனஸோடு நாம் முடிந்து விடவில்லை என்பது தன்னை மறந்து பக்தி ஆவேசத்தில் கிடக்கிற ஸமயங்களில் தெரிந்தாலும், அப்போதும் மனஸுக்கு மேலான அந்த நாம் என்ன என்பது அநுபவ பூர்வமாகத் தெரியவில்லை என்றே இருக்கும்.

இதைப் பற்றி நன்ருக ஆலோசனை பண்ணும்போது, ஆசை போவது மட்டும் ஸம்ஸாரப் போராட்டம் தீர்வதற்

Koviloor Digital Library

குப் போதாது என்பது தெரியும். பக்தி பண்ணும் மனஸுக்கும் குறை, தாபம், கஷ்டம் இருப்பது தெரிவதால் மனஸும் போனால்தான் யுத்தம் நிற்கும்; சாச்வதமான சாந்தி உண்டாகும் என்று தெரியும். ஞான நூல்களை ச்ரத்தையோடு அப்போது பயின்றால், ஏகமான ஆத்மாவைப் பற்றியும், அதுவே ஈச்வரனாகவும் ஜீவனாகவும் ஆகியிருப்பதைப் பற்றியும் தெரிந்துகொள்ளலாம். தற்போது மனஸின் மேல் மட்டத்தில் தெரிந்துகொள்வது போலில்லாமல், அப்போது பரிசுத்தி பெற்றுவிட்ட அந்த மனஸின் உள்ளேயே ஆழமாகப் பதியும்படியாக வேதாந்த ஞான உண்மைகளைத் தெரிந்துகொள்ளலாம்.

இப்படியெல்லாம் புரிந்துகொண்டால்,

வெய்யிலில், வெள்ளத்தில் மாட்டிக்கொண்டால் ஒதுக்கிடம் வேண்டிக் கதவைத் தட்டுவதுபோல, strong-ஆன will-ஒடு way-யைத் தேடி ஓடி, மோக்ஷ வாசல் கதவைத் தட்டுவதில் தீவிரம் பிறக்கும்.

அது ஏற்படுவதற்காகத்தான் ஆத்ம த்யானம் சிறிது முதலிலிருந்தே செய்யச் சொல்வது.

ஆத்மாவை த்யானிக்கவும் முடியாதுதான். த்யானம் உள்பட எதற்குமே விஷயமாகாமல் தனித்து நிற்பது ஆத்மா. ஆனால் அதை நம் மனஸுக்குக் கொஞ்சம் புரிய வைப்பதுபோலக் கொஞ்சம் நினைக்க முடிகிறதோல்லியோ? "ஒரு பாதிப்பும் இல்லாமல், அலையெழாத மஹா ஸமுத்ரம் போல அகண்டமாகக் கிடக்கும் பரம சாந்தநிலை" என்கிற மாதிரி வர்ணித்துப் பார்க்கும்போதே, ஸம்ஸாரப் போராட்டத்தின் பாதிப்பு நம்மைத் தொடாமல், நாம் ஆத்ம ஆகாசமாய் ஆனந்தமாயிருப்பது போன்ற ஒரு எண்ணம் ஏற்படுகிறதோல்லியோ? வெறும் பாவனை, ப்ரமை என்று வேண்டுமானாலும் இருந்துவிட்டுப் போகட்டும்! எதுவானாலும் நமக்கு ஆறுதலைத் தந்து நம்மைச் சற்று சும்மாயிருக்கச் செய்கிற எண்ணமாக இது இருக்கிறவரையில் உசத்தி

Koviloor Digital Library

தான். இந்த்ரியத்தாலும் மனஸாலும் கெடுதல் பண்ணிக் கொண்டேயிருக்கும் நம்மைக் கெடுதல் மாத்திரமின்றி நல்லதுகூடப் பண்ணுமல் உட்கார்த்தி வைக்க வசதி செய்து தரும் இப்படிப்பட்ட எண்ணத்தில் சிறிது நேரமாவது தோய்ந்திருப்பதுதான் ஆத்ம த்யானம் என்பது. இப்படி ஏதோ ஒரு பாவனையில் ஆரம்பித்தாலே, பாவனை வலுத்து முதிர்ந்து தீவிரமாகும்போது வாஸ்தவ நிலை தன்னைத் தானே தெரியப்படுத்திக்கொள்ள ஆரம்பிக்கும்.

ஆக, ஜனங்கள் தாங்கள் ஒரு போராட்டத்திலே மாட்டிக் கொண்டிருக்கிறோம் என்று நன்றாக உணர்ந்து, போரிலே மாட்டிக்கொண்டவர்கள் அமைதி பிறக்காதா என்று எப்படி ஆர்வமாயிருப்பார்களோ அப்படி அமைதியை வேண்டினால், நிச்சயமாக ஆத்ம த்யானம் செய்யப் பொழுது கிடைக்கும். அதிலே நன்றாக மனம் வைத்தபின் வழியும் பிறக்கும்.

மாயா ஸ்வரூபிணியாக இருந்து, தானே இத்தனை நாமாகவும் ஆகிப் போராட்டத்துக்கு ஆளாகி, அதே ஸமயம் அந்தப் போராட்டத்திலிருந்து விலகியிருந்து அதைப் பார்த்து லீலா விநோதம் கொள்கிறவளாயுமுள்ள அம்பாள் தன்னுடைய ஞான ஸ்வரூபத்தைக்கொண்டு, அதற் குள்ளேயே நம் எல்லோரையும் அடக்கிக்கொண்டு, நமக்குப் போர் தீர்ந்த பெரிய அமைதியை அளிப்பதற்கு ப்ரார்த்திப் போம். இதற்கு அவள் ஸங்கல்பிக்க வேண்டும்; பெரிய மனஸ் பண்ணவேண்டும். அவளுக்கு Will-ம் Way-ம் ஒன்று தான். (ஸங்கல்பமும், அதன் நிறைவேற்றத்துக்கான வழியும் ஒன்றுதான்.) அப்படிச் சொன்னால்கூடப் போதாது. அவளுடைய Will-ஏ Way-யின் முடிவான Goal-ம்கூடத் தான்! (ஸங்கல்பமே, மார்க்க முடிவான லக்ஷ்ய ஸித்தியு மாகும்.) ஆனாலும், அவள் தன் ஸங்கல்ப மாத்ரத்தாலேயே எல்லாம் பண்ணுமல், நம்மையும் கருவி மாத்ரமாக்கி, நாமும் ஏதோ ப்ரயாஸைகள், ப்ரயத்னங்கள் செய்வதுபோலக் காட்டிக் காட்டியே பலன் தருவதாக லீலை செய்பவள்.

Koviloor Digital Library

ஆனதால், ஆத்மானந்தத்துக்கான ஸாதனை மார்க்கத்தில் நாம் ப்ரவேசிப்பதற்கும், அப்புறம் விடாமல் ப்ரயாணத்தைத் தொடர்வதற்கும் நமக்கெல்லாம் உத்ஸாஹத்தை அருளுமாறு அவளிடம் ப்ரார்த்திக்கிறேன். முடிவிலே, ஞான வாசலைத் திறந்துவிட்டு அவளுடைய ஸத்ய நிலையிலே நாம் இரண்டறக் கரைந்து, எல்லாப் போராட்டமும் தீர்ந்து சாந்தானந்தமாக ஆவதற்கு அவளையே எல்லாரும் ப்ரார்த்தனை செய்துகொள்வோம். அந்த அம்மா நமக்கு ஊட்ட வேண்டிய பால், போட வேண்டிய பிக்ஷை இதுதான்.

ஞாந வைராக்ய ஸித்த்யர்த்தம்
பிக்ஷாம் தேஹி ச பார்வதி ||*

---

* ஆதி சங்கரரின் "அன்னபூர்ணா ஸ்தோத்ரம்"

Koviloor Digital Library

பக்தி

Koviloor Digital Library

Koviloor Digital Library

"வண்டு ஸ்தோத்ரம்"

அத்வைத தத்வமும் நடப்பு நிலையும்

ஸ்ரீ ஆதிசங்கர பகவத்பாதர்கள் உலகத்திலுள்ள மேதைகள் எல்லாரும் ஆச்சர்யப்படும்படியாக அத்வைத பாஷ்யங்கள் செய்திருக்கிறார். ஏற்கெனவேயிருந்த ப்ரஹ்ம ஸூத்ரம், உபநிஷத்துக்கள், பகவத்கீதை முதலியவற்றை விளக்கி அவர் எழுதியதற்கு 'பாஷ்யம்' என்று பெயர். இது தவிர தாமே (ஒரிஜினலாக) "விவேக சூடாமணி", "உபதேச ஸாஹஸ்ரீ" முதலான பல அத்வைத க்ரந்தங்களைச் செய் திருக்கிறார். பாஷ்யத்திலிருந்து வித்யாஸம் தெரிவதற் காக, அவர் சொந்தமாகச் செய்த இது போன்ற நூல்களை 'ப்ரகரண க்ரந்தங்கள்' என்பார்கள்.

இவற்றிலெல்லாம் சொல்லப்பட்ட அத்வைத தத்வம் என்பது ரொம்பவும் பெரிய விஷயம். நாம் ஸத்யமானது என்று நினைத்துக்கொண்டிருக்கிற இந்த ஜகத் ஒரு மாயை; பரமாத்மா ஒன்றுதான் ஸத்ய வஸ்து; அதற்கு வேறாக இருக்கிற ஜீவாத்மா என்று தன்னை நினைத்துக்கொண் டிருக்கிற நாமும் வாஸ்தவத்தில் அந்த பரமாத்மா தவிர வேறே இல்லை; ஜீவனேதான் ப்ரஹ்மம்—என்பதுதான்

Koviloor Digital Library

அத்வைதம். ச்ருதி (வேத) ப்ரமாணத்தாலும், அறிவாலும், அநுபவத்தாலும் ஆசார்யாள் இந்த ஸித்தாந்தத்தை அலசி அலசி நிச்சயப்படுத்தி, பாறுங்கல் மாதிரி நிலைப்படுத்திக் கொடுத்திருக்கிறார்.

ஆனாலும் இந்தப் பரம ஸத்யமான தத்வம் நம்மிலே பெரும்பாலாருக்கு எட்டவே மாட்டேன் என்கிறது. அறிவு மூலம் இதுதான் உண்மை என்று ஆசார்யாளின் வாதங்களைப் படித்து உறுதி ஏற்பட்டாலும்கூட, அநுபவம் என்று வருகிறபோது அத்வைதம் எங்கேயோ, நாம் எங்கேயோ என்றுதான் அதற்கு ரொம்ப தூரத்தில் நிற்கிறோம். ஜீவனும் ப்ரஹ்மமும் ஒன்று என்று வெறுமே புத்தியால் தெரிந்து கொண்டு என்ன ப்ரயோஜனம்? ஒரு ஆட்டமும் இல்லாமல் அப்படியே பரம சாந்தமாக இருந்துகொண்டிருக்கிற ப்ரஹ்மமாக நம்மை நாம் எங்கே தெரிந்துகொள்ள முடிகிறது? நமக்கு ஓயாத ஓட்டம்; ஓயாத அமைதியின்மை தான். மனஸின் ஓட்டமும், ஓடிக்கொண்டே இருக்கிற இந்த ப்ரபஞ்சமும்தான் நமக்குத் தெரிந்த உண்மை. மனஸ் நின்றுவிட்டால் இந்த ஓட்டம் இல்லை. அப்போது ஜகத் மாயையாக மறைந்து போய்விடும். நாம் ப்ரஹ்மமாக இருந்து கொண்டிருப்போம். ஆனால் மனஸ் நிற்கவே மாட்டேன் என்கிறதே! அதனால் அத்வைதம் என்பது நமக்குக் கொஞ்சம்கூட அநுபவத்தில் தெரிவதில்லை.

ஆனாலும் அந்த அநுபவத்துக்குப் போவதற்கு நாம் இங்கிருந்தே ஆரம்பித்துத்தான் ஆகவேண்டும். நாம் இருக்கிற நிலையில் நமக்கு ஸத்யமாகத் தெரிகிறவைகளை வைத்துக்கொண்டே அநுஷ்டானங்களை ஆரம்பித்துப் படிப்படியாக, மேலே மேலே போய், இதெல்லாம் ஸத்யமில்லை என்று தெரிந்துகொண்டு (தெரிந்துகொண்டு என்றால் சும்மா புத்தியால் தெரிந்துகொள்வதில்லை; அநுபவத்தில் தெரிந்துகொள்ள வேண்டும்), ஒரே ஸத்யமான அத்வைத ஸித்தியை அடையவேண்டும்.

Koviloor Digital Library

நடப்பு நிலையிலிருந்து அத்வைதத்துக்கு

ஆசார்யாளுக்கு நம் அவல நிலை தெரியாததில்லை. அவர் பரம கருணாமூர்த்தி. அத்வைத பாஷ்யமும், ப்ரகரண க்ரந்தங்களும் மட்டும் நமக்கு ப்ரயோஜனப்படாது என்று ஆசார்யாளுக்குத் தெரியும். ஆனதினால், அவர் அறிவிலும் அநுபவத்திலும் எவரெஸ்டாக இருந்தாலும், அந்த உச்சி யிலிருந்து ரொம்பவும் இறங்கி நாம் இருக்கிற லெவலுக்கு வந்து நம்மைக் கைப்பிடியாக அழைத்துக்கொண்டு ஒவ்வொரு படியாக மேலே போகிறார்.

மனஸை நிற்கப் பண்ணுவதற்குப் பூர்வாங்கமாக, அதை நாலா திசையிலும் வெறி நாய் மாதிரி ஓடிக்கொண் டிருக்காமல் முதலில் கட்டுப்படுத்த வேண்டும். இதற்கு அவரவரும் ஸ்வதர்மப்படி கர்மா செய்துகொண்டே இருக்கவேண்டும். நமக்கென்று ஆசை, த்வேஷம் இல்லாமல், லோகோபகாரமாக நமக்கென்று வாய்த் திருக்கிற கர்மாவை அவரவரும் பண்ணிக்கொண்டிருப்பது சித்த சுத்தியைத் தரும் என்பதால் ஆசார்யாள் கர்மாநுஷ் டானங்களை நம் எல்லோருக்கும் விதித்திருக்கிறார். 'கர்மா' என்பது ஓரளவுக்கு மனஸை மறந்து செய்கிற கார்யம். வேலையிலேயே நம் குறி இருப்பதால் சித்தம் தறி கெட்டு ஓடிக்கொண்டிருக்கவிடாமல் பண்ணுகிறோம். இம்மாதிரி மனஸை மறந்து (ignore பண்ணி) கார்யம் பண்ணுவதோடு, அதை நல்லதிலேயே பழக்கி, முழுக்கி, ஒருமுகப்படுத்த வேண்டும். மனஸுக்கு ஐகாக்ரியம் (ஒருமுகப்படுதல்) ஏற்பட ஏற்படத்தான் அது அடங்கி, அப்படியே ஆத்மாவில் கரைந்துவிட வழி உண்டாகும். இதற்காகத்தான் அத்தனை நல்லதும் சேர்ந்ததான, ஸகல கல்யாண குண நிலயமான, ஸகுண மூர்த்தியிடம் பக்தி உபாஸனை செய்ய வேண்டும். மனஸ் அப்படியே ஆனந்தத்தில் ரொம்பி அந்த மூர்த்தி யிடம் ஒருமுகப்பட்டு நின்றுவிட்டால் அப்புறம் கண்ட கண்டபடி ஓடாது. அந்த இஷ்டமூர்த்தி ஒன்றிடமே பதிந்து நிற்கும். பிறகு அந்த மூர்த்தியின் அநுக்ரஹத்தால்,

Koviloor Digital Library

இப்படிப் பிரிந்திருந்து அதன் குணங்களை அநுபவிப்பது என்றில்லாமல், அதற்கும் மேலேபோய், அதிலேயே கரைந்து நிர்குணமான ப்ரஹ்மமாக ஆகிவிடலாம்.

ஆதிசங்கரரின் பக்தித் துதிகள்

இதற்காகத்தான் ஆசார்யாள், கர்மாநுஷ்டானம் மாதிரியே பக்தி உபாஸனையையும் நம்மெல்லோருக்கும் விதித்திருக்கிருர். விதித்தது மட்டுமில்லை—எப்படி பக்தி பண்ணுவது, எப்படி ப்ரார்த்தனை பண்ணுவது என்றே நமக்குத் தெரியவில்லை அல்லவா? இதை நமக்குச் சொல்லிக் கொடுக்கிறமாதிரி அவரே ஸகல தெய்வங்களின்மீதும் நெஞ்சை உருக்குகிற அநேக ஸ்தோத்ரங்களைச் செய்து நமக்கு அநுக்ரஹித்திருக்கிருர்.

அம்பாள் மேல் ஆசார்யாள் செய்த "ஸௌந்தர்ய லஹரி", ஈச்வரன் மேல் பண்ணின "சிவாநந்த லஹரி" இரண்டும் நூறு நூறு ச்லோகம் கொண்டது, இவ்வளவு பெரிதாக இல்லாமல் சின்னச் சின்னதாகவும் ஒரு தெய்வம் மிச்சமில்லாமல்—யார் யாருக்கு எது இஷ்ட தெய்வ மானுலும் அதை அவர்கள் மனஸ் உருகி ஸ்தோத்ரம் பண்ணி அந்த இஷ்ட மூர்த்தியின் அநுக்ரஹத்தைப் பெறுகிற மாதிரி—நிறைய ஸ்தோத்ரங்கள் பண்ணியிருக் கிருர்.

இவற்றில் சிலவாவது நம் எல்லோருக்கும் மனப்பாட மாகத் தெரிந்திருக்க வேண்டும். ரொம்பவும் உசந்த தத்வங் களையும், உள்ளத்தைத் தொடும்படியான ரஸங்களையுங் கூடப் பரம லளிதமான, ஸுலபமான வாக்கில் கொடுப்பதே ஆசார்யாளின் பெருமை. அறிஞர்களும் நன்றுக யோசித்து யோசித்தே புரிந்து கொள்ளக்கூடியதான ஸூக்ஷ்மமான கருத்துக்களைக் கொடுத்து அத்வைத பாஷ்யம் பண்ணின வரே சின்னக் குழந்தைகூட ருசித்துச் சொல்லி ப்ரயோஜனம் அடையும்படியான ஸ்தோத்ரங்களைச் சின்னதும் பெரிது மாக, ஏராளமாக அநுக்ரஹம் செய்திருக்கிருர்.

Koviloor Digital Library

ஷட்பதீ ஸ்தோத்ரம்

அதிலே ஸாக்ஷாத் ஜகத் பரிபாலகனுன மஹா விஷ்ணுவைப் பற்றி ரொம்பவும் உயர்ந்த கருத்துக்களும், மனஸை உருக்கும் பாவமும், வாய்க்கு அம்ருதமாக இருக்கிற வாக்கும் கொண்டதான 'ஷட்பதீ ஸ்தோத்ரம்' என்பது ஒன்று. சின்ன ஸ்தோத்ரம்தான். அதை நன்ருக மனஸில் வாங்கிக்கொண்டு விட்டால் நாம் ஆசார்யாளேயும் தெரிந்து கொண்டுவிடலாம்; மஹாவிஷ்ணுவையும் தெரிந்துகொண்டு விடலாம்; நம்மையும் தெரிந்துகொண்டுவிடலாம். நம்மைத் தெரிந்து கொள்கிறபடி தெரிந்து கொள்வதுதான் அத்வைதம். அந்த உச்சாணி வரைக்கும் இந்த ஷட்பதீ நம்மை அழைத்துக்கொண்டு போய்விடும்.

பதம் : செய்யுட் பகுதி

"ஷட் - பதீ" என்ருல் ஆறுகால் கொண்டது" என்று அர்த்தம். "ஷ்ட்" - ஆறு; "பதம்" - கால்.

அதென்ன, ஆறு கால் ஸ்தோத்ரம்?"

'பதம்' என்ருல் 'கால்' என்பதோடு வார்த்தை என்றும் அர்த்தம். ச்லோகத்தில் நாலில் ஒரு பகுதிக்கும் பதம், பாதம் என்று பெயர். மனித சரீரத்தில் நாலில் ஒரு பாகமாக, அதாவது கால்பகுதியாக இருப்பதே கால் என்ற அவயவம். இதே போல, கால் என்ற பொருளேத் தரும் பதம், பாதம் என்பவை ச்லோகத்திலும் நாலில் ஒரு பாகத்தைக் குறிக்கிறது..

இப்படி ஒரு ஒழுங்குப்படி நாலாகப் பிரிகின்ற "பதங்களேக் கொண்டது" ச்லோகம் என்பதாலேயே 'பொயட்ரி'க்கு "பத்யம்" என்று பெயர் ஏற்பட்டிருக்கிறது. 'பதம்' என்ருல் 'வார்த்தை' என்று மட்டும் அர்த்தம் செய்து கொள்வதானுல் 'ப்ரோஸு'ம் பதங்களாலான பத்யம்தானே? ஆனுல் அதற்கு அப்படி ('பத்யம்' என்று) பெயரில்லாமல் 'கத்யம்' என்றே பெயர் கொடுத்திருக்

Koviloor Digital Library

கிறது. 'கத்' என்ருல் பேசுவது. அதனுல் பேச்சு நடை, வசன நடை, இயல் என்று சொல்லும் ப்ரோஸை கத்யம் என்பது. இசை என்னும் கவிதைக்குத்தான் சீரான பகுதி பகுதியாகப் பிரித்த பதங்கள் இருப்பதால், அதாவது, அது நாலு கால் பகுதிகளாலேயே ஆனதாக இருப்பதால்தான், 'பதம்' என்ருல் கால் பகுதி என்ற பொருளையொட்டி அது பத்யம் எனப்படுகிறது. பாட்டும் கவிதா ரூபமானதால்தான் கல்யாணப் பாட்டு முதலானவற்றைப் 'பத்தியம்' என்று தமிழில் சொல்வது. pattiyam என்கிருர்கள். அது தப்பு. ஸரியான வடிவம் padyam என்பது. Gadyam - இயல். padyam - இசை.

நோயாளி இன்னதான் சாப்பிடலாம் என்று நிர்ணயிக்கிற 'பத்தியம்' வேறே. ப்ரஸவித்தால் 'பத்தியம்' போடுவது என்று அதைத்தான் சொல்வது. அது pathyam. Padam என்ருல் கால்; அதை வைத்துப் பொயட்ரி என்பது padyam. Patham என்ருல் வழிமுறை. அதனுல் சாப்பாட்டை ஒரு முறையிலே வழிபடுத்தி நிர்ணயிப்பது pathyam.

பதம் என்பது ச்லோகத்தின் காற்பகுதி. உதாரணம் சொல்கிறேன் : ஸாதாரணமாக எல்லோருக்கும் தெரிந்த (அல்லது தெரிந்ததாக நான் நினைத்துக் கொண்டிருக்கிற) 'சுக்லாம்பரதரம்' ச்லோகத்தை எடுத்துக்கொள்வோம். அது அநுஷ்டுப் சந்தஸில் (சந்தத்தில்) அமைந்தது. அதாவது மொத்தம் முப்பத்திரண்டு எழுத்துக்கள் இருக்கும். இது நாலு எட்டெழுத்துக்களாக—அதாவது நாலு பாதங்களாக—ப் பிரிந்திருக்கும்.

தமிழ் எழுத்திலே எழுதி எண்ணிஞல் முப்பத்திரண்டுக்கு மேல் இருக்கும். ஏன் என்ருல், 'சுக்லாம்' என்கிறபோது 'க்லாம்' என்பதே தமிழில் மூன்று எழுத்தாகிவிடும். ஆனுல் கூட்டெழுத்து இருக்கிற ஸம்ஸ்க்ருதத்தில் 'க்லாம்' ஒரே எழுத்துத்தான். அதனுல் எழுத்து ரீதியில் லபியை பார்த்துக் கணக்குப் பண்ணுமல் எத்தனை vowel soundகள் (உயிரெழுத்து ஒலிகள்) இருக்கின்றன என்று கணக்குப்

Koviloor Digital Library

பண்ணினுல்தான் ஸரியாக வரும். அப்படிக் கணக்குப் போட்டால் 'க்லாம்' என்பதில் 'ஆ' என்ற ஒரே ஓர் உயிரெழுத்தும், அதோடு க், ல், ம் என்ற மெய்யெழுத்துக் களும் சேர்வதாக ஆகும். அதாவது 'க்லாம். என்பது ஒரே அக்ஷரம் என்று ஆகும். இப்படியேதான் பின்னுடி 'விஷ்ணும்' என்கிறபோது 'ஷ்ணும்' என்று தமிழில் மூன்று எழுத்தாக எழுதினுலும், அதில் 'உ' என்ற ஒரே உயிரெழுத்துக்கு முன்னும் பின்னுமாக ஷ், ண், ம் என்ற மெய்யெழுத்துக்கள் சேர்வதாக ஏற்படுவதால், 'ஷ்ணும்' என்பது ஒரே அக்ஷரம் தான்.

உயிரும் மெய்யும் உயிர்மெய்யும்

உயிரெழுத்து, மெய்யெழுத்து என்று சொல்கிறபோது சைவ ஸித்தாந்திகள் சொல்கிற ஒரு விஷயம் நினைவுக்கு வருகிறது.

வைஷ்ணவர்கள் ஜீவாத்மாவையும் பரமாத்மாவையும் சரீர - சரீரி என்று சொல்கிறமாதிரியே (சைவ) ஸித்தாந்தி களும் சொல்வண்டு. அதாவது நம் சரீரத்துக்குள் உயிர் என்று ஒன்று இருக்கிறது; அது போய்விட்டால் இந்த சரீரம் அடியோடு ப்ரயோஜனம் இல்லாததாகிவிடுகிறது. இதே மாதிரி ஸகல ஜீவாத்மாக்களும் சேர்ந்து பரமாத்மாவுக்கு சரீரம்; அதற்குள் உயிராக இருப்பவனே பரமாத்மா. உயிருக்கு உயிராக என்பதுபோல், இத்தனை உயிர்களுக்கும் உயிராக, பேருயிராக இருப்பவனே பரமாத்மா என்பதுதான் சரீர - சரீரி தத்வம்.

நமக்குத் தெரிவது சரீரம்தான். உயிர் தெரியவில்லை. அதனுல்தான் சரீரத்துக்கே "மெய்" என்று பேர் வைத்தார் கள். ஆனுலும் நமக்குத் தெரியாமல் இருக்கிற உயிர் போய்விட்டதானுல், அப்புறம் இந்த 'மெய்' ஒன்றுக்கும் ப்ரயோஜனமில்லாத பொய்யாகி விடுகிறது. 'மெய்யும் பொய்யானபின்' என்றுகூடப் பாடுகிருர்கள். இப்படித்தான் ஜீவலோகமும் உள்ளே அந்தர்யாமியாக இருக்கிற பேருயி

Koviloor Digital Library

ரான பகவான் இல்லாவிட்டால் பொய்யாகப் போய் விடுகிறது.

'பொய்' என்று சொன்னாலும், அத்வைதத்தில் ஆசார்யாள் பரம ஸத்யமான ஒன்றை (ப்ரஹ்மத்தை)த் தவிர இன்னொன்று இருப்பதே பொய், அது வெறும் மாயத் தோற்றம்தான் என்று சொல்கிற ரீதியில் (சைவ) ஸித்தாந்திகள் சொல்லவில்லை. ஈச்வரன் உள்ளே புகுந்து இயக்குகிற இந்த ஜீவ ப்ரபஞ்சத்துக்கும் ஒரு ஸத்யத்வத்தை அவர்கள் சொல்வார்கள். இதற்குத்தான் இந்த உயிரெழுத்து, மெய்யெழுத்து, உயிர்மெய்யெழுத்தை த்ருஷ்டாந்தமாகச் சொல்வார்கள். மெய்யெழுத்து என்பது க், ங், ச், ஞ் முதலானவை. உயிரெழுத்துக்கள்தான் அ, ஆ, இ, ஈ வரிசை. இரண்டு சேர்ந்த க-கா-கி-கீ, ங-ஙா-ஙி-ஙீ, ச-சா-சி-சீ, ஞ-ஞா-ஞி-ஞீ மாதிரியானவை தான் உயிர்மெய் என்பவை. இங்கே மெய்யெழுத்து வேறே, உயிரெழுத்து வேறே என்று பிரித்திருப்பதாலேயே, 'மெய்' என்று சொல்லப்பட்டாலும் அந்த ஒலிகளுக்குத் தனியாக உயிர் இல்லை என்று ஆகிவிட்டது. சரீரத்துக்கு மெய் என்று பெயர் வைத்தாலும் உயிரில்லாவிட்டால் அது எதற்கும் உதவாத மாதிரிதான் மெய்யெழுத்தும். க், ங், ச், ஞ் முதலான ஒலிகளைத் தனிப்பட உச்சரிக்கவே முடியாது. இக், இங், இச், இஞ் என்று முதலில் சின்னதான ஒரு 'இ' சப்தம் சேர்த்தால்தான் இந்த ஒலிகளே வெளியில் வரும், அல்லது பின்னாடி அ, ஆ முதலான உயிரெழுத்துக்களைக் கூட்டி க, கா என்ற மாதிரி ஒலியை வெளிப்படுத்த முடிகிறது. உயிரெழுத்து இல்லாமல் இவை ப்ரயோஜனமில்லை. ஆனால் அதற்காக இந்த மெய்யெழுத்துக்கள் (consonants) அடியோடு இல்லை, ஒரே பொய் என்று சொல்லலாமா? உயிரெழுத்து (vowel) சேர்ந்தால் இவை க, ங, ச, ஞ என்று வேறு வேறு ரூபத்தை, ஒலியைப் பெறத் தானே செய்கின்றன? அப்போது எல்லாம் ஒரே சப்தமாக இல்லையே! அதனால் இந்த மெய்யெழுத்துக்களுக்கும், உயிரெழுத்தில்லாமலே தனித் தனியாக ஒரு ரூபம் இருக்க

Koviloor Digital Library

வேண்டும், அதனுல் ஒரு ஸத்யத்வம் இருக்க வேண்டும் என்றுதானே அர்த்தம்? எனவே மெய்யெழுத்துக்கள் தாமாகவே கொஞ்சம் மெய்மாதிரி இருப்பவைதான். இதே ரீதியில் ஜீவர்களும் வேறு வேருக இருக்கிருர்கள் என்ருல், அவர்களுக்கும் மெய்யெழுத்துக்கு இருக்கிற மாதிரி கொஞ்சம் தனியான ஸத்யத்வம் இருக்கத்தான் வேண்டும். ஒரே பொய் என்று தள்ளிவிட முடியாது. ஆனுலும் உயிர் போய்விட்டால் எல்லாரும் ஒரேமாதிரி சவமாகி விடுகிற மாதிரி, 'சீவ ப்ரமஞ்சமும் சிவம் என்ற பேருயிர் இல்லா விட்டால் சவம்தான்' — என்றிப்படி (சைவ) ஸித்தாந்திகள் சொல்வார்கள். அத்வைதமாக எல்லாம் ஒரே ஆத்மா என்று சொல்லாமல் கொஞ்சம் பிரித்து த்வைதமாக இருப்பதற்கு இப்படி த்ருஷ்டாந்தம் காட்டுகிருர்கள். ஜீவாத்மா மெய்யெழுத்து, பரமாத்மா உயிரெழுத்து மாதிரி என்கிருர்கள்.

வாஸ்தவத்தில் ஸ்ரீ சங்கர பகவத் பாதரும் லோகம்-ஜீவன் முழுப்பொய் என்று சொல்லவில்லை. ஸத்யத்திலேயே அவர் பலநிலைகளை (லெவல்களை) சொல்லியிருக்கிருர். ஆனுல் இங்கே நான் தத்வச் சண்டை போட வரவில்லை. ஆசார்யாளே இந்த வாதம், சண்டை எல்லாம் வேண்டாம், பக்திதான் வேண்டும் என்று நமக்குக் கற்றுக்கொடுக்க வந்த ஷட் பதீ ஸ்தோத்ரத்தைத்தான் சொல்ல ஆரம்பித்தேன். ஆறுகால் என்பதை விளக்க ஆரம்பித்தபோது ச்லோகத்தின் பாதங்களைப் பற்றிப் பேச்சுவந்து, அது அக்ஷரக் கணக்கில் கொண்டுபோய், ஸித்தாந்தங்களில் இழுத்துவிட்டது!

மறுபடியும் 'சுக்லாம்பரதரம்' குட்டிக்கொண்டு ஆரம்பிக்கலாம்!

இருவகைச் சந்தங்கள்

"சுக்லாம்பரதரம்" ச்லோகத்தை எடுத்துக்கொண்டு அதில் (உயிரெழுத்து ரீதியில்) எத்தனை அக்ஷரம் இருக்கிறது என்று பார்த்தால் 32 அக்ஷரம் கணக்கு வருகிறது. இது

Koviloor Digital Library

சு-க்லாம்-ப-ர-த-ரம் வி-ஷ்ணும்
ச-சி-வர்-ணம்-ச-துர்-பு-ஜம் |
ப்ர-ஸன்-ன-வ-த-னம் த்யா-யேத்
ஸர்-வ-வி-க்னோ-ப-சா-ந்த-யே ||

என்று எட்டெட்டு எழுத்து கொண்ட நாலு பாதங்களாகப் பிரிந்திருக்கிறது. 'சுக்லாம்பரதரம் விஷ்ணும்' என்பது முதல் பாதம். 'சசிவர்ணம் சதுர்புஜம்' இரண்டாம் பாதம். 'ப்ரஸன்ன வதனம் த்யாயேத்' என்பது மூன்றும் பாதம். 'ஸர்வ விக்நோபசாந்தயே' என்பது நாலாவது பாதம்.

ஸரி, அப்படியானுல் 'ஷட்-பதீ' என்கிற 'ஆறுகால் ஸ்தோத்ர'த்தில் ஒவ்வொரு ச்லோகத்திலும் இப்படி ஆறு அடிகள் இருக்கின்றவா? இல்லை. ஒவ்வொரு ச்லோகத்திலும் நாலு பாதங்கள்தான் இருக்கின்றன. ஸாதாரணமாக அப்படி இருப்பதுதான் வழக்கம்.

இந்த 'ஷட்பதீ' ஸ்தோத்ரத்திலே ஒரு ச்லோகத்தை எடுத்துக்கொண்டால் அதற்குள்ளே வருகிற பாதங்கள் 'சுக்லாம்பரதர'த்தில் இருக்கிற மாதிரி ஸமமான அக்ஷரம் கொண்டதாக இல்லை.

'சந்தஸ் சாஸ்த்ரம்' என்பதாகக் கவிதா லக்ஷணம் கூறும் ஸம்ஸ்க்ருத யாப்பிலக்கணத்திலேயே இந்த விதமான அக்ஷரக்கணக்கில் வராத சந்தங்களை ('மீட்டர்'களை)ப் பற்றியும் இருக்கிறது. மீட்டரில் இரண்டு தினுஸை அது சொல்கிறது. ஒன்றுதான் ஒரு உயிரெழுத்துக்கு ஒரு அக்ஷரம் என்ற கணக்குப்படி இருக்கும் மீட்டர். இதற்கு 'வ்ருத்தம், என்று பேர். தமிழில் 'விருத்தம் பாடுவது' என்று சொல்வது இதன் தொடர்புடையதாகத்தான் வந்திருக்கவேண்டும். இன்னென்று 'ஜாதி' எனப்படும்.

ஜாதிக்கும், வ்ருத்தத்துக்கும் என்ன வித்யாஸமென்ருல், வ்ருத்தத்தில் குறில், நெடில், கூட்டெழுத்து எல்லாவற்றுக்

Koviloor Digital Library

கும் ஒரே 'வால்யூ' தான். 'சுக்லாம்' என்பதில் 'சு' என்பது குறில்; 'க்லாம்' நெடில்; அதோடுகூட 'க்லாம்' என்பது க், ல், ம், என்ற மூன்று சப்தங்கள் கொண்ட கூட்டெழுத்தாக இருக்கிறது. இப்படியிருந்தாலும், நாம் எந்த அக்ஷரமானு லும் அதற்கு வால்யூ ஒன்று என்று வைத்து, 'சு' ஒரு அக்ஷரம், 'க்லாம்'-உம் ஒரு அக்ஷரம் என்றுதானே கணக்குப் பண்ணினோம்?

''ஜாதி''யில் ஒரு உயிரெழுத்துக்கொண்ட அக்ஷரம் ஒவ்வொன்றுக்கும் ஒரே மதிப்பு (value) கொடுப்பதில்லை. 'வால்யூ' என்றும் 'மதிப்பு' என்றும் சொல்வதற்கு 'மாத்ரா' என்று பெயர். மாத்திரை என்று தமிழில் ஆகும். metre என்பதுகூட 'மாத்ரா'விலிருந்து வந்ததுதான். குறில், நெடில் என்று இரண்டு இருக்கின்றன அல்லவா? குட்டையான அ, இ, உ முதலானவை குறில். நெட்டையான ஆ, ஈ, ஊ முதலா னவை நெடில். இவற்றை முறையே 'ஹ்ரஸ்வம்' என்றும் 'தீர்க்கம்' என்றும் சொல்வது வழக்கம். யாப்பிலக்கணத் திலே குறிலான ஹ்ரஸ்வத்தை 'லகு' என்றும், நெடிலான தீர்க்கத்தை 'குரு' என்றும் சொல்லியிருக்கிறது. (லகு என்றால் லேசானது; குரு என்றால் கனமானது.) ஜாதி எனப்படும் சந்த வகையில் லகுவான அக்ஷரத்துக்கு, அதாவது குறிலுக்கு, வால்யூ ஒன்று; குருவான நெடில் அக்ஷரத்துக்கு வால்யூ இரண்டு. இப்படிப் பொதுவாகக் குறிலுக்கு ஒரு மாத்திரை என்றாலும் சில எழுத்துக்களோடு சேர்ந்து ஒரு குறில் வரும்போது, அது இரண்டு மாத்திரை யாகிவிடும். அம், கம், சம் என்பதுபோல ஒரு குறிலுடன் 'அநுஸ்வாரம்' என்கிற 'ம்' சேரும்போது அந்தக் குறிலுக்கு இரண்டு மாத்திரை ஏற்பட்டுவிடும். 'விஸர்கம்' என்பதாக 'ஹ' சப்தத்துடன் அநேக சொற்கள் முடியும். ":" என்று இரண்டு புள்ளி போட்டு விஸர்கத்தைக் குறிப்பிடுவார்கள். "ராம:" என்பதை "ராமஹ" என்று சொல்லவேண்டும். இப்படிப்பட்ட விஸர்கம் ஒரு குறிலை அடுத்து வந்தால் அப்போதும் குறிலுக்கு இரண்டு மாத்திரை. உதாரணமாக

Koviloor Digital Library

"ராம:"வில் வரும் "ம" இரட்டை மாத்திரை பெற்றுவிடுகிறது. ஒரு குறிலை அடுத்து ஒன்றுக்கு மேற்பட்ட மெய்யெழுத்துக்களின் கூட்டு வந்தாலும் அப்போது குறில் இரண்டு மாத்திரை பெற்றுவிடும். உதாரணமாக, 'விஷ்ணு' என்ற வார்த்தையில் 'ஷ்ணு' என்பது 'ஷ், ண், உ' என்பதாக இரண்டு மெய்யெழுத்துக்களும் ஒரு உயிரெழுத்தும் சேர்ந்த சப்தம் 'வி' என்ற குறிலை அடுத்து இங்கே ஷ், ண் என்ற இரண்டு மெய்யெழுத்துக்கள் வரும். அந்தக் குறில் இரண்டு மாத்திரை பெற்று வரும்.

அக்ஷரங்களை வைத்து 'வ்ருத்தம்' என்ற மீட்டர் முறை இருக்கிறாற்போலவே மாத்திரைகளை இப்படிக் கணக்குப் பண்ணி 'ஜாதி' என்ற 'மீட்டர்' முறையும் இருக்கிறது. இப்படி 'ஜாதி'யில் பல சந்தஸ்கள் (சந்தங்கள்) இருக்கின்றன. ஒரு ச்லோகத்தைப் பாதங்கள் என்ற நான்கு பகுதிகளாக (வ்ருத்தத்தில் போலவே) இதிலும் பிரித்து, ஒவ்வொரு பாதத்துக்கும் இத்தனை மாத்திரைகள் இருக்க வேண்டுமென்று இந்த முறையில் வைத்திருக்கிறது. ஆனால் 'ஜாதி'யில் ஒரு சுலோகத்தின் எல்லாப் பாதத்துக்கும் ஸமமான மாத்திரையாயில்லாமல், ஒவ்வொரு பாதத்துக்கும் வெவ்வேறாக இத்தனையித்தனை மாத்திரை என்று வைத்திருக்கும்.

'சுக்லாம் பரதரம்' ச்லோகத்தில் 'சு'வும் ஒரு அக்ஷரம், 'க்லாமு'ம் ஒரு அக்ஷரம் என்று வ்ருத்த முறையில் கணக்குப் பண்ணினோமல்லவா? இதையே ஜாதி முறைப்படி செய்தால் இந்த இடத்தில் அந்த அக்ஷரம் ஒவ்வொன்றும் இரண்டு மாத்திரையாகிவிடும். 'சு' என்பது குறிலானதால் பொதுவாக அதற்கு ஒரு மாத்திரை தானென்றாலும், இங்கே அடுத்து 'க்லாமி'ல் க், ல் என்ற இரண்டு மெய்யெழுத்துக்கள் சேர்ந்தாற்போல் வந்துவிடுகின்றனவல்லவா? அதனால் இங்கே குறிலான 'சு'வுக்கே இரண்டு மாத்திரை. 'க்லாம்' என்பதில் 'ஆ' என்கிற நெடில் (க், ல், ம் என்பவற்றோடு) வருவதால் அதற்கும் இரண்டு மாத்திரை.

Koviloor Digital Library

பொதுவாக, ஜாதி என்பதையும் வ்ருத்தம் என்றே சொல்லிவிடுகிறார்கள். மீட்டரில் இருப்பதெல்லாம் வ்ருத்தம் என்ற அபிப்ராயத்தில் இப்படிச் சொல்வதாயிருக்கிறது. அதனால்தான் 'ஜாதி' வகையைச் சேர்ந்த 'ஆர்யா' முதலான மீட்டர்களைக்கூட 'ஆர்யா வ்ருத்தம்' என்று சொல்வதாக ஏற்பட்டிருக்கிறது.

காமாக்ஷி அம்பாளைப் பற்றிய ப்ரஸித்த ஸ்தோத்ரமான "மூக பஞ்ச சதி"யில் முதல் நூறு ச்லோகங்கள் ஆர்யா என்ற ஜாதியைச் சேர்ந்தவையே. அந்தப் பகுதிக்கு 'ஆர்யா சதகம்' என்றே பெயர். பரம உயர்வு பொருந்தியவள் என்பதால் அம்பாளுக்கே 'ஆர்யா' என்று பெயருண்டு. ஆசார்யாளுடைய அம்மாவின் பெயர் ஆர்யாம்பாள் என்பதுதான். பாடப்படும் அம்பாள், பாடல் அமைந்த மீட்டர் இரண்டுக்கும் பொருந்தும்படி 'ஆர்யா சதகம்' என்று ச்லேஷையாகத் தலைப்புக் கொடுத்திருக்கிறது.

சற்றுமுன் சொன்னாற்போல் ஜாதி சந்தஸ்களில் இன்னொரு விசேஷம், நாலு பாதங்களில் ஒவ்வொன்றும் ஒரே எண்ணிக்கையுள்ள மாத்திரைகள் கொண்டதாக இருப்பதில்லை.

வ்ருத்தம் என்று உயிரெழுத்துக்களைக் கொண்டு கணக்கு பண்ணுவதிலுங்கூட பாதத்துக்குப் பாதம் அக்ஷர வித்யாஸமுள்ளதாயும் சில மீட்டர்கள் உண்டுதான். எல்லாப் பாதமும் ஒரே அளவான அக்ஷரம் கொண்டது ஸம வ்ருத்தம். இப்படியில்லாமல் முதல் பாதத்திலும் மூன்றாம் பாதத்திலும் ஒரே அளவு அக்ஷரங்களும், அதற்கு வித்யாஸமாக இரண்டாம் பாதத்திலும் நாலாம் பாதத்திலும் ஒரே அளவான அக்ஷரங்களும் கொண்ட மீட்டர்களும் உண்டு. இவற்றை அர்த்த ஸமவ்ருத்தம் என்று சொல்வார்கள். ஒவ்வொரு பாதமுமே வேறு வேறு எண்ணிக்கையில் அக்ஷரங்கள் கொண்ட மீட்டர்கள்கூட இருக்கின்றன. இவை 'விஷம வ்ருத்தம்' எனப்படும். "அதென்ன விஷமம்?" என்றால், வி-ஸமம் என்பதே விஷமம்;

Koviloor Digital Library

'ஸம'த்துக்கு எதிரானது 'வி-ஸமம்'. எல்லாப் பாதமும் ஸமமான அக்ஷரம் கொண்டதாயில்லாமல் இருப்பதால் 'விஷம வ்ருத்தம்' என்று பெயர். யாரைப் பற்றியோ விஷமமாகப் பாடுவது என்று அர்த்தமில்லை!

விஷமம் என்ற வார்த்தை 'மிஸ்சீஃப்' என்று அர்த்தம் கொடுப்பதற்குக் காரணம்கூட, அது ஸமநிலையில் அதாவது நடு நிலையில் இருந்து கொண்டு - உள்ளதை உள்ளபடிச் சொல்லாமல் வெளியிலே ஒரு அர்த்தமும் உள்ளுக்குள்ளே திரிசமனாக இன்னொரு அர்த்தமும் கொடுக்கும்படியாகப் பேசுவது அல்லது கார்யம் செய்வதாக இருப்பதுதான். 'திரிசமன்' என்கிறபோதும் அது ஸமமாக இருப்பதைத் திரிப்பது என்று பொருள்படுவதாகவே தோன்றுகிறது.

இரண்டால் வகுத்து ஸம பாதிகளாக ஈவு கொடுக்காத ஒற்றைப்படை எண்களையெல்லாம் 'விஷமம்' என்பார்கள். ஐந்து, மூன்று ஆகியவை ஒற்றைப்படை எண்கள்தானே? ஆகையால் ஐந்து புஷ்ப பாணங்களை உடைய மன்மதனை "விஷமசரன்" என்றும், முக்கண்ணனை பரமேச்வரனை விஷம நேத்ரன்' என்றும் சொல்வதுண்டு.

இங்கிலீஷில் odd, even என்கிறபோதும் even என்பது இரட்டைப் படையை மட்டுமில்லாமல், even - minded என்பதில் ஸமநிலையான மனஸைக் குறிப்பிடுகிறது. ஒற்றைப் படையைக் குறிக்கும் odd என்பது விஷமம் (மிஸ்சீஃப்) என்று அர்த்தம் தராவிட்டாலும், அதற்குக் கிட்டே உள்ள 'விசித்ரமான', 'fanciful' என்ற அர்த்தங்களையும் தருகிறது —'ஆட் பிஹேவியர்', 'ஆட் எக்ஸ்ப்ளனேஷன்' என்று சொல்லும்போது!

வ்ருத்தங்கள் பெரும்பாலும் ஸமமாயிருப்பவைதான். அர்த்த ஸம, விஷம வ்ருத்தங்கள் அபூர்வமே. ஆனால் ஜாதிகளிலோ வரிக்குவரி (பாதத்துக்கு பாதம்) மாத்ரைகளின் எண்ணிக்கை வித்யாஸமாயிருப்பதே பொது வழக்கமாயிருக்கிறது. உதாரணமாக 'ஆர்யா'வில் முதல் பாதம், மூன்றும்

Koviloor Digital Library

பாதம் ஆகிய இரண்டில் தலைக்குப் பன்னிரண்டு மாத்ரைகள் இருக்கவேண்டும். இரண்டாம் பாதத்தில் பதினெட்டு மாத்ரை இருக்கணும். கடைசியான நாலாவதில் பதினைந்து.

நம்முடைய ஷட்பதீ ஸ்தோத்ரத்தின் ச்லோகங்கள் ஆர்யா ஜாதியில் அமைந்தவைதான்.

அதன் முதல் ச்லோகத்தை எடுத்துக்கொண்டால் முதல் பாதம் அல்லது வரி: அவிநய மபநய விஷ்ணோ."

மாத்திரைக் கணக்குப் பண்ணினால் 'அ-வி-ந-ய-ம-ப-ந-ய' என்ற எட்டும் அநுஸ்வாரம், விஸர்கம், அடுத்தாற்போல் ஒன்றுக்கு மேற்பட்ட மெய்யெழுத்து என்கப்பட்ட எதுவு மில்லாமல் சுத்தமான குறில்களாக இருக்கின்றன. அதனால் இந்த எட்டுக்கும் எட்டு மாத்திரை. அப்புறம் 'விஷ்ணோ' என்று வருவதிலுள்ள 'வி' மட்டும், அது குறிலாக உள்ள போதிலும், அதன் பின்னால் ஷ், ண் என்ற இரண்டு மெய் யெழுத்து வருவதால், நெடிலைப் போல இரண்டு மாத்திரை பெற்றுவிடுகிறது. முதலில் சொன்ன எட்டு மாத்திரை ப்ளஸ் இரண்டு. அதாவது பத்து, 'ஷ்ணோ' என்பதில் 'ஓ, என்ற நெடில் வருகிறது. அதற்கு இரண்டு மாத்திரை. மொத்தம், முதல்வரியில் பத்து ப்ளஸ் இரண்டு, அதாவது பன்னிரண்டு மாத்திரை.

இரண்டாவது வரி, "தமய மந: சமய விஷயம்ருகத் ருஷ்ணாம்".

த-ம-ய-ம (என்ற) ஒவ்வொன்றுக்கும் ஒரு மாத்திரை வீதம் மொத்தம் நாலு. அப்புறம் "ந:" என்று குறியான 'ந'க்குப் பின்னால் விஸர்கம் வருவதால் இரண்டு மாத்திரை. நாலு ப்ளஸ் இரண்டு, அதாவது ஆறு. அப்புறம், ச-ம-ய-வி-ஷ-ய-ம்ரு-க என்ற எட்டும் சுத்தமான குறில்கள். 'ம்ரு' என்பதுகூட, 'உ'காரத்தைத் தாழ்த்திச் சொல்லும் குற்றிய லுகர வர்க்கத்தைச் சேர்ந்ததால் ஸம்ஸ்கிருதத்தில் ஒற்றை மெய்யெழுத்துக் குறில்தான். அதை ம், ர், உ

Koviloor Digital Library

என்பதாக இரட்டை மெய்யெழுத்துடன் சேர்ந்த உயிரெழுத்தாகக் கொள்ளக்கூடாது. இதோடு இரண்டாம் வரியில் ஆறு ப்ளஸ் எட்டு, அதாவது பதினுன்கு மாத்திரை. அப்புறம் 'த்ருஷ்ணும்' என்பதில் வரும் 'த்ரு'வும் சற்று முன் சொன்ன 'ம்ரு' மாதிரி குற்றியலுகரமானதால் அதற்கும் ஒற்றை மாத்திரைதானென்ருலும், அதை அடுத்துவரும் 'ஷ்ணும்' என்பதில் 'ஷ், ண்' என்ற இரட்டை மெய்யெழுத்துக்கள் வருவதால் இங்கே 'த்ரு'வுக்கு இரண்டு மாத்திரை. பதினுன்கு ப்ளஸ் இரண்டு. முடிவில் வரும் '(ஷ்)ணு(ம்)' நெடிலானதால் அதற்கும் இரண்டு மாத்திரை. ஆக மொத்தம், இரண்டாம் பாதத்தில் பதினெட்டு மாத்திரை.

மூன்ருவது பாதம்: "பூத தயாம் விஸ்தாரய."

"பூ" நெடிலானதால் இரண்டு மாத்திரை. 'த-த'வுக்கு ஒவ்வொரு மாத்திரை. (யாம்)' நெடில்; இரண்டு மாத்திரை 'வி'க்குச் சேர்ந்தாற்போல் 'ஸ், த்' என்று இரண்டு மெய்யெழுத்து வருவதால் இரட்டை மாத்திரை. 'தா' நெடிலானதால் இரண்டு 'ர-ய' ஒவ்வொன்றும் ஒன்று. மொத்தம் மூன்ரும் வரியில், முதல்வரி போலவே, பன்னிரண்டு மாத்திரைகள்.

இந்த முதல் ச்லோகத்தின் கடைசி வரி: "தாரய ஸம்ஸார ஸாகரத:" "தா" இரண்டு மாத்ரை. 'ர-ய'—தலைக்கு ஒவ்வொரு மாத்திரை. 'ஸம்' என்பதில் 'ம்' என்கிற அநுஸ்வாரம் வருவதால் இரட்டை மாத்திரை. 'ஸா' இரண்டு மாத்திரை. 'ர'—ஒன்று. மறுபடியும் ஸா—இரண்டு. 'க - ர' தலைக்கு ஒவ்வொரு மாத்திரை. "த:" என்று முடிவதில் விஸர்கம் வருவதால் இரண்டு. மொத்தம் கடைசிப் பாதத்தில் பதினைந்து மாத்திரை.

"ஆர்யா" மீட்டரிலேயே "கீதி" என்றும் சற்று வித்யாஸமாக ஒன்று உண்டு. அதிலேயும் முதல், மூன்ரும் பாதங்களுக்குப் பன்னிரண்டு மாத்திரைதான். ஆனுல், இரண்டு, நான்கு ஆகிய இரு பாதங்களுக்கும் இதிலே

Koviloor Digital Library

பதினெட்டு மாத்திரைகள். இரண்டு பாதங்கள் 12 மாத்திரையும், இரண்டு பாதங்கள் 18 மாத்திரையும் கொண்ட இது அர்த்த ஸம மாத்ரா ஜாதியைச் சேர்ந்ததாகும். "மூக பஞ்சசதீ"யின் "ஆர்யா சதக" ச்லோகங்கள் இந்த ஜாதியில் அமைந்தவைதான். முதல் ச்லோகம் :

காரண பர சித்ரூபா
காஞ்சீபுர ஸீம்நி காம பீடகதா |
காசந விஹரதி கருணா
காச்மீர ஸ்தபக கோமளாங்கலதா ||

முதல் பாதம் : கா(2) ர(3) ண(4) ப(5) ர(6) சி(8) [அடுத்து 'த்ரூ'வில் இரட்டை மெய்யெழுத்து வருவதால்] த்ரூ (10 : நெடிலானதால்) பா(12)—மொத்தம் 12 மாத்திரை.

இரண்டாம் பாதம் : கா(2) ஞ்சீ(4) பு(5) ர(6) ஸீ(8) ம்நி(9) கா(11) ம(12) பீ(14) ட(15) க(16) தா(18) —மொத்தம் 18 மாத்திரை.

மூன்றாம் பாதம் : கா(2) ச(3) ந(4) வி(5) ஹ(6) ர(7) தி(8) க(9) ரு(10) ணா(12)—மொத்தம் 12 மாத்ரை.

நான்காம் பாதம் : கா(2) ச்மீ(4) ர(6) [அடுத்தாற்போல் 'ஸ், த்' என்ற இரண்டு மெய்யெழுத்து வருவதால்] ஸ்த(7) ப(8) க(9) கோ(11) ம(12) ளா(14) ங்க(15) ல(16) தா(18)—மொத்தம் பதினெட்டு மாத்திரை.

ஆறு ச்லோகத் துதி

ஜாதிச் சந்தஸ்களைக் கொண்டுதான் "ஷட்பதீ"யை ஆசார்யாள் செய்திருக்கிறார். அத்வைதி! ஆனால் அவர் காட்டாத variety (வேறுபாட்டு விசித்ரம்) இல்லை! இந்த ஸ்துதியிலுள்ள எல்லா ச்லோகங்களுமே ஆர்யா வ்ருத்தத்தில் அமைந்தவை. அவை ஒவ்வொன்றிலும் முதல்வரிக்கும்

Koviloor Digital Library

மூன்றும் வரிக்கும் 12 மாத்திரைகள்; இரண்டாம் வரிக்கு 18 மாத்திரை; நாலாம் வரிக்கு 15 மாத்திரை. பாதம் பாதமாகக் கணக்குப் பண்ணிப் பார்த்தீர்களானால் பொழுது போக்காக இருக்கும்! உயிரெழுத்துக்களைக்கொண்டு எண்ணாமல் லகு, குரு மாத்திரை பார்த்து எண்ணினால்தான் இந்த ச்லோகங்களில் விதிப்படி ஏற்பட்ட ஒரு pattern (க்ரமம்) இருப்பதாகத் தெரியும். இல்லாவிட்டால்சீர் ஸரியில்லை என்று தோன்றிவிடும். ஆனாலும் ஆசார்யாளின் வாக்விசேஷம், 'வ்ருத்த'ங்களுக்கே அதிகம் பழகி 'ஜாதி'களைப் புரிந்து கொள்ள முடியாத நமக்கும்கூட, இந்த ஷட்பதீ ச்லோகங்களை நாம் சொல்கிறபோதே அவற்றில் சீரில்லை என்கிற மாதிரி கொஞ்சம்கூடத் தோன்றாது. வார்த்தைகளும், சப்தங்களும் ஒன்றுக்கொன்று ரொம்பவும் இசைந்து, இந்த இரண்டும் அர்த்தத்தோடேயே இசைந்து செல்வதான அழகான போக்கிலேயே இந்த ஸ்தோத்ரம் அமைந்திருக்கிறது. குழந்தைகூட நினைவு வைத்துக்கொள்ளும்படியாக அவ்வளவு ஸுலபமாக இருக்கிறது.

பலச்ருதி மாதிரி இருக்கிற கடைசி ச்லோகத்தை விட்டு விட்டால் இதிலே ஆறு ச்லோகங்கள் இருக்கின்றன. (பல ச்ருதியும் மேலே சொன்ன அதே மீட்டரில் இருப்பது தான்.)

பலச்ருதி "மாதிரி" தான்; அசல் பலச்ருதி இல்லை. அசல் பலச்ருதி என்றால், 'இந்த ச்லோகத்தைச் சொல்பவருக்கு இன்னின்ன பலன்கள் உண்டாகும்' என்று உடைத்து வ்யக்தமாகச் சொல்லியிருக்க வேண்டும். இங்கே கடைசி ச்லோகத்தில் அப்படிச் சொல்லவில்லை. அதைப்பற்றிப் பிறகு சொல்கிறேன். கடைசி ச்லோகத்தைக் கடைசியில் தானே சொல்லவேண்டும்? முதல் ச்லோகத்திலிருந்து வரிசையாகச் சொல்லிக்கொண்டு போகிறேன். முதல் ச்லோகத்தை ஆரம்பிக்குமுன் இப்போது டைட்டில் ,ஷட்பதீ' என்பது என்ன என்று சொல்ல ஆரம்பித்தேன்.

Koviloor Digital Library

இதிலே ஆறு ச்லோகங்கள், பலச்ருதி நீங்கலாக உள்ளன.

அதனால் 'ஷட் - பதீ', அதாவது, 'ஆறு பதங்கள் கொண்ட நூல்' என்று ஆசார்யாள் டைட்டில் கொடுக்கிற போது, 'பதம்' என்றால் ச்லோகத்தின் ஒரு பாகம் என்று அர்த்தம் கொடுக்காமல், ஒரு முழு ச்லோகத்தையே 'பதம்' என்று குறிப்பிடுவதாகத் தெரிகிறது. 'பதம்' என்ற வார்த்தை பல அர்த்தத்தில் ப்ரயோகமாகிறது, வேதத்தில் 'பதம்', 'க்ரமம்' என்று சொல்லிக்கொண்டே போய் 'கனம்' என்பதில் முடிப்பார்கள். மந்த்ர அக்ஷரங்களைப் பல தினுஸில் மாற்றி மாற்றிக் கோத்து வாங்கிச் சொல்வது தான் 'பதம்', 'க்ரமம்', 'கனம்' எல்லாம். கனம் வரைக்கும் தேர்ச்சி பெற்றவரைத்தான் 'கனபாடி' என்பது. இங்கே 'பதம்' என்றால் வார்த்தை வார்த்தையாகப் பிரித்துச் சொல்வது.

காற்பகுதியை மட்டுமின்றி முழு ச்லோகத்தையே 'பதம்' என்று குறிப்பிடும் வழக்கமும் உண்டு. ஜயதேவரின் "கீத கோவிந்த"த்தை "அஷ்டபதி"கள் என்கிறோமே, இங்கே பதம் என்றால் ஒரு முழு செய்யுள் - stanza என்றே ஆகிறது. தமிழில்கூட ஒரு பதிகத்தையோ பாசுரத்தையோ குறிப்பிட்டு 'அதில் எத்தனை செய்யுள் இருக்கிறது?' என்று கேட்பதற்குப் பதில், 'எத்தனை அடி இருக்கிறது?' என்று கேட்கிறோம். இங்கே 'அடி' என்றால் செய்யுளின் ஒரு பாகம் என்று அர்த்தமாகாமல் முழு செய்யுள் என்றே ஆகிறது. இப்படியேதான் ஒரு கீர்த்தனம் என்று எடுத்துக்கொண்டாலும், நாலைந்து சரணம் இருந்தால் 'எத்தனை அடிகள்?' என்றே கேட்கிறோம். இதிலே இன்னொரு வேடிக்கைகூட! ச்லோகமாக இருந்தால், 'பதம்', 'பாதம்' என்கிறோம். பாட்டாக கீர்த்தனமாக இருந்தால் 'சரணம்' என்கிறோம். 'பாதம்' என்பது போலவே 'சரணம்' என்றாலும் கால்தான் 'அடி' என்பதும் காலைக் குறிப்பதுதானே?

Koviloor Digital Library

அடிமேல் அடிவைத்து முன்னே போவ 'பதேபதே, என்று சொல்வார்கள்; step by step என்று அர்த்தம். இப்படியே பக்தியில் அடிமேல் அடிவைத்து ஒவ்வொரு ச்லோகத்தின் வழியாக முன்னேற வழி சொல்கிறதாலும் இது 'ஷட் - பதீ' என்று வைத்துக்கொள்ளலாம்.

சிலேடை மர்மம்

இதிலே ஒரு ச்லேஷை (சிலேடை)யும் இருக்கிறது. 'பதம்' என்றால் 'கால், அல்லவா? 'ஷட் - பதீ என்றால் 'ஆறுகால் கொண்ட ஐந்து' என்று அர்த்தம்.

'ஆறுகால்! ஐந்தாவது? விசித்ரமாயிருக்கிறதே!' என்று தோன்றும்! மநுஷ்யன் இரண்டு கால் ப்ராணி. மிருகங்கள் நாலுகால் ப்ராணி. எட்டுக்கால் பூச்சி என்று ஒன்று இருக்கிறது. காலே இல்லாத பாம்பு. மரவட்டைக்கு எண்ணி முடியாத கால்கள். ஆறுகால் ஐந்து என்ன?

அதுதான் வண்டு. வண்டுக்கு ஆறுகால்தான் இருக்கும். ஷட் - பதம் கொண்டது அது. ஆகையால் ஷட் - பதீ என்றால் வண்டு என்று அர்த்தம். ஷட் - பதீ ஸ்தோத்ரம் என்றால் வண்டு ஸ்தோத்ரம்.

'ஆறு பதம் (ச்லோகம்) உள்ள இந்த ஸ்தோத்ரத்துக்கு ஏன் வண்டு - ஸ்தோத்ரம் என்று பேர்? இந்த ச்லேஷை என்ன?' என்று ஆசார்யாள் கடைசியான ஏழாவது ச்லோகத்தில்தான் புதிர் அவிழ்க்கிறார். ஒரு கதை சொல்கிறவர் அதிர் மர்மமாக ஒன்றை ஆரம்பத்தில் சொல்லிவிட்டு, அதை உடனேயே அவிழ்த்துவிடாமல் கடைசிவரை மூடிமூடி வைத்து, ஆர்வத்தை ஜாஸ்தியாக்கிக்கொண்டே போய்க் கடைசியில்தான் அவிழ்ப்பார். அதே மாதிரி 'ஷட் - பதீ' என்று ஸ்தோத்ரத்துக்கு டைட்டில் கொடுத்த ஆசார்யாளும் ச்லோகம் முடிகிறபோதுதான் இதற்கு ஏன் 'ஆறுகால் ஸ்தோத்ரம்', அதாவது 'வண்டுத் துதி' என்று பேர் கொடுத்தார் என்று விண்டு சொல்கிறார். காவ்யங்

Koviloor Digital Library

களிலும் பக்தி க்ரந்தங்களிலும் ஈடுபட்டவர்களுக்கு, ரஸிகர்களுக்கு, அவர் சொல்லாவிட்டாலும் ஆரம்பத்திலேயே புரிந்துவிடும்.

உங்களில் கொஞ்சம் பேருக்கு இப்போதே ஷட்பதீ (வண்டு) என்பதிலுள்ள ச்லேஷை புரிந்திருக்கலாம். புரியாதவர்களுக்கு நானும் ஆசார்யாள் மாதிரியே கடைசியில்தான் புரிய வைக்கப்போகிறேன்!

இப்போது முதல் ச்லோகத்திலிருந்து ஆரம்பிக்கலாம். இந்த முதல் ச்லோகத்தில் எவையெவற்றை வேண்டி ப்ரார்த்தனை பண்ண வேண்டும் என்று நமக்கு ஆசார்யாள் சொல்லிக் கொடுக்கிறார்.

எதற்கு வேண்டுவது?

பகவானை எதற்காக ப்ரார்த்தனை பண்ணவேண்டும் என்பதில் அபிப்ராய பேதங்கள் உண்டு.

இந்த லோக வாழ்க்கையில் நமக்கு எண்ணி முடியாத கஷ்டங்கள், ச்ரமங்கள், க்லேசங்கள், துக்கங்கள் ஏற்படுகின்றன. சரீரக் கஷ்டம், மன மஞ்சலம், பண முடை, பயம், அவமானம் இப்படியாகக் கணக்கேயில்லாமல் அவதிப்படுகிறோம். இவை தீருவதற்கு வேறு வேறு வழிகளைத் தேடுகிறோம். உடம்பு ஸரியில்லை என்றால் டாக்டரிடம் போகிறோம். பணக் கஷ்டம் என்றால் கடன் கொடுக்கக் கூடியவர்களிடம் போகிறோம். ஆவிகள் சேஷ்டை என்றால் மாந்த்ரிகரிடம் போகிறோம். பலவிதமான ப்ரச்னைகள் தீர ராஜாங்க அதிகாரிகளிடம் போகிறோம். இப்படிப் பல பேரிடம் போனாலும், இந்தக் கஷ்டங்கள் தீர பகவானையும் ப்ரார்த்தனை பண்ணிக்கொள்கிறோம். நாம் கஷ்டம் தீர யாரைத் தேடிப் போகிறோமோ அவர்கள் நமக்கு அநுகூலமாக இருப்பதற்கு பகவானை ப்ரார்த்திக்கிறோம். டாக்டர் மருந்துதான் கொடுப்பார். அது நமக்குப் பலிக்க வேண்டுமே! இதற்காக பகவானை வேண்டிக்கொள்கிறோம்.

Koviloor Digital Library

ஒருத்தர் ஸஹாயம் செய்வார் என்று அவரிடம் போகிறோம். ஆனால் போகிற வழியிலேயே நமக்கு ஒரு விபத்து வந்து விட்டால் என்ன பண்ணுவது? இதற்காக ப்ரார்த்தனை பண்ணுகிறோம்.

இந்த மாதிரியெல்லாம் ப்ரார்த்தனை பண்ணுவது தப்பு என்று சிலபேருக்கு அபிப்ராயம். 'நம் கர்மாவுக்காகத்தான் கஷ்டம் வருகிறது. பகவானேதான் இந்தக் கஷ்டங்களைக் கொடுத்து தண்டித்து, கர்மாவைத் தீர்க்கிறான். அதனால் இந்த மாதிரி லௌகிக விஷயங்களுக்கு ப்ரார்த்தனை பண்ணவே கூடாது. பகவானுக்கே நமக்கு எதை எப்போது எப்படித் தரவேண்டும் என்று தெரியும். அதனால் அவனை எதுவும் ப்ரார்த்திக்கவே கூடாது. அவனை ஸ்மரித்தால் அது ஆனந்தமாக இருக்கிறதல்லவா? இந்த ஆனந்தம் ஒன்றுக்காக மட்டுமே ஸ்மரிக்க வேண்டும். பக்தி பண்ணுவதற்குப் பலன் பக்தியில் கிடைக்கிற மன நிறைவேதான். இந்தப் பெரிய நிறைவை விட்டு விட்டு, பக்தியைச் சின்னச் சின்ன தாற்காலிக நிறைவுகளுக்கு ஒரு உபாயமாக வைத்துக் கொள்வது ரொம்பவும் தப்பு. ஆகையால், அது வேண்டும், இது வேண்டும் என்று வேண்டவே கூடாது. எதற்காவது ப்ரார்த்தனை பண்ணலாமானால் அது நம்முடைய ஆத்ம பரிசுத்தி ஒன்றுக்காகத்தான்'—என்று இப்படிச் சிலர் அபிப்ராயப்படுகிறார்கள்.

பகவானின் கருத்து

பகவானே சொல்கிற வாக்குதான் நமக்குப் பெரிய ப்ரமாணம். கீதையில் இவ்விஷயமாக ஸ்வாமி என்ன சொல்கிறார்?

கீதையில் க்ருஷ்ண பரமாத்மா இப்படிச் சொல்கிறார்:

சதுர்விதா பஜந்தே மாம்
    ஜநா: ஸுக்ருதிந: அர்ஜுந |
ஆர்த்தோ ஜிஜ்ஞாஸு: அர்த்தார்த்தீ
    ஜ்ஞாநீ ச பரதர்ஷப || (7 - 16)

Koviloor Digital Library

'என்னை நாலு தினுஸான (சதுர்விதமான) ஜனங்கள் பஜிக்கிறார்கள், அதாவது வழிபடுகிறார்கள். யார் யார் இந்த நாலு வகைக்காரர்கள்? ஒன்று ஆர்த்தன், இரண்டாவது ஜிஜ்ஞாஸு, மூன்றாவது அர்த்தார்த்தி, நாலாவது ஞானி' என்கிறார்.

முதலில் சொன்ன 'ஆர்த்தன்' என்பதற்கு 'கஷ்டப்படு கிறவன்', 'துக்கமுற்றவன்' என்று அர்த்தம். மனக் கஷ்டம், சரீரக் கஷ்டம் இவற்றுக்கு ஆளானவன் ஆர்த்தன். வ்யாதி, வலி, தாரித்ரியம் (வறுமை), மாளாத கஷ்டங்கள், ப்ரச்னை கள், மன க்லேசம் தருகிற உபத்ரவங்கள் இவை எல்லாம் ஆர்த்தியில் அடக்கம். இந்தக் கஷ்டம் தீருவதற்காக, துக்க பாரம், துயரச் சுமை தீருவதற்காக இவர்கள் பகவானை வழி படுகிறார்கள். "அப்பா, இந்த பாரத்தை இறக்கி வையப்பா" என்று ப்ரார்த்தனை பண்ணுகிறார்கள்.

பக்தர்களில் இரண்டாவது வகை (category) யார் என்றால், ஜிஜ்ஞாஸு, அதாவது ஞானம் அடைய விரும்பி ஸாதனை செய்கிற ஸாதகன். பகவான்தான் ஞான விதை போட வேண்டுமாதலால், ஞானம்பாள்தான் ஞானப்பால் கொடுப்பாளாதலால், இவன் பகவானை வழிபடுகிறான். ஆர்த்தன் மாதிரி இவன் 'ஞானம் தா', 'ஞானம் தா' என்று வேண்டி ப்ரார்த்தனை பண்ணினாலும் பண்ணுவான்; அல்லது இப்படிக் கேட்காமல், பகவானின் திவ்ய ரூபத்தையும், கல்யாண குணத்தையும் வெறுமனே த்யானம் பண்ணிக் கொண்டேயிருப்பான். அதுவே ஆனந்தமாக இருப்பதோடு இவனுடைய சித்தம் சிதறிப்போகாமல் இழுத்துக் கட்டி ஒருமுகப்படுத்தும். ஆசார்யாளும் இந்த சித்த ஐகாக்ரியத்துக் காகத்தான் உபாஸனையைச் சொன்னார். இவன் 'ஞானம் தா' என்று கேட்கவே வேண்டாம். பகவானை த்யானம் பண்ணிக்கொண்டு ஸந்தோஷமாக இருந்தாலே போதும். இவனுடைய சித்தம் ஒருமுகப்பட்டு, தானே அந்த பகவானின் நிர்குணமான, அரூபமான ஸத்ய நிலையில் இவனை இரண்டறக் கரைத்துவிடும். அப்படி, ஜீவாத்மா என்று கொஞ்சம்கூடத்

Koviloor Digital Library

தனியாகப் பிரிந்திருக்காமல் ஸத்ய வஸ்துவோடு ஐக்யமாய் இருப்பதுதான் ஞானம். அந்த நிலையிலே பூஜையும் இல்லை; த்யானமும் இல்லை. அந்த ஸ்டேஜுக்குப் போவதற்காகவே முதலில் இந்த ஜிஜ்ஞாஸு பகவானை பஜிக்கிறான்.

மூன்றாவதாக அர்த்தார்த்தி. முதலில் சொன்ன 'ஆர்த்தி'யில் வருகிற 'தி' வேறே; இங்கே 'அர்த்தார்த்தி' யில் சொல்கிற 'தி'யும் 'தா'வும் வேறே. ஸம்ஸ்க்ருதத்தில் 'க' வர்க்கம். 'ச' வர்க்கம், 'ட' வர்க்கம், 'த'வர்க்கம்' 'ப' வர்க்கம் ஆகியவற்றில் ஒவ்வொன்றிலும் நாலுவிதமான சப்தங்கள் உண்டு. 'க'வை எடுத்துக் கொண்டால் முதலில் Ka; அப்புறம் அதையே அழுத்தி Kha; மூன்றாவதாக Ga-கங்கை என்பதில் வருகிற மாதிரி; நாலாவதாக இதையும் அழுத்தி Gha. இப்படியே ச,ட,த,ப-விலும் நன்னாலு உண்டு. 'த'வில் முதல் சப்தம் Ta தான் 'ஆர்த்தி'யில் வந்தது. 'அர்த்தார்த்தி' என்பதில் வருகிற 'தா'வும் 'தி'யும் இரண்டாவது 'த'—Tha. 'அர்த்தார்த்தி' என்றால் 'பொருளை இச்சிக்கிறவன்' என்று அர்த்தம், 'அர்த்தம்' என்றால் பொருள்; அதாவது பணம் 'அர்த்தி' என்றால் அதை வேண்டுகிறவன்.

முதலில் துன்புற்றவனைச் சொன்னாரே, அதிலேயே பொருள் இல்லாமல் கஷ்டப்படுகிறவனும் அடக்கம்தான். அதனால் இங்கே பிரித்துச் சொல்லியிருக்கிற அர்த்தார்த்தி என்பவன் வறுமையால் கஷ்டப்படுகிறவன் அல்ல, வாழ்க்கை நடத்தவே முடியாமல் இவன் ச்ரமப்படவில்லை. ஆனாலும் இதுபோதாது, இன்னும் நிறைய ஸுபிக்ஷம் வேண்டும் என்று பகவானை ப்ரார்த்தனை பண்ணுகிறான். நம்மில் பல பேர் இப்படித்தான் இருக்கிறோம். காலக்ஷேபம் நடக்க நமக்கு ச்ரமமில்லைதான். இருந்தாலும் இன்னும் நிறைய ஸௌகர்யம், வீடு வேண்டும், கார் வேண்டும் என்று ஆசை இருக்கத்தான் செய்கிறது. ஸப் கலெக்டர் கலெக்டராக ப்ரமோஷன் கிடைக்கவேண்டும் என்று ப்ரார்த்தனை பண்ணுகிறார். கலெக்டர் மாகாணம் பூராவுக்கும் ஏதாவது ஓர் அதிகாரியாக வேண்டும் என்று வேண்டிக் கொள்கிறார்.

Koviloor Digital Library

'அர்த்தம்' என்றதில் பணம் மட்டுமில்லாமல் பதவி, கௌரவம், புகழ் எல்லாவற்றையுமே சேர்த்துக் கொள்ளலாம்.

நாலாவதாக ஞானியைச் சொன்னார். ஞானியும் தன்னை பஜிப்பதாக ("பஜந்தே மாம்" என்று) சொல்கிறார். சற்று முன்னாடிதான் சொன்னேன், ஞானியாகி விட்டால் அப்புறம் பகவான், பக்தன் என்ற வித்யாஸமேயில்லாமல் பரமார்த்த ஸத்யமான ஒரே ஏகத்தில் இவன் கரைந்து அங்கே பூஜை, த்யானம் எல்லாம் நின்று போய்விடுகிறது என்று. இங்கே இப்படி ஞானியும் பக்தி பண்ணுவதாக பகவானை quote பண்ணுகிறேனே (மேற்கோள் காட்டுகிறேனே) என்றால்; ஞான ஸமாதி நிலையில் பகவானுக்கு வேறாக பக்தன் இல்லை தான். ஆனால் ஞானி எப்போதுமே இப்படி லோக ப்ரக்ஞை இல்லாமல் நிர்விகல்ப ஸமாதியில் இருப்பதில்லை. அவனுக்கு வெளி உணர்வு இருக்கிற—அல்லது இருக்கிற மாதிரி வெளி உலகத்துக்குத் தோன்றுகிற—ஸமயங்களும் உண்டு. அப்படிப் பட்ட ஸமயங்களில், ஸமாதி நிலையில் எந்த நிர்குண நிராகார (குணமும் உருவமும் இல்லாத) ஸத்ய வஸ்துவோடு இரண்டறக் கலந்திருந்தானோ, அதே வஸ்து லீலா நிமித்தமாகப் பல குணங்களோடு, ரூபங்களோடு லோக நிர்வாஹம் பண்ணுகிறதை ஞானியானவன் ரஸிக்கிறான். 'வாஸுதேவஸ் ஸர்வமிதி' என்று அந்த வாஸுதேவனே கீதையில் சொன்ன மாதிரி இந்த ஞானி லோகத்தில் எதைப் பார்த்தாலும் அதைப் பரமாத்மாவாகவே பார்த்து, 'இதுவும் அதன் இன்னொரு வேஷம், இன்னொரு விதமான 'லீலை' என்று அதை ரஸிக்கிறான். ஆசார்யாள் "பஜ கோவிந்த"த்தில் 'நந்ததி நந்ததி நந்ததி ஏவ' என்று மூன்று தடவை திரும்பத் திரும்பச் சொன்னது மாதிரி எதிலும் எப்போதும் பரமாத்ம ரஸத்தையே ருசித்துக்கொண்டு ஆனந்த மயமாக இருக்கிறான். இந்த ஞானி (வெளி ப்ரக்ஞையற்ற) நிர்விகல்ப ஸமாதியில் இல்லாமல் பஹிர்முகமாக (வெளி ப்ரக்ஞையுடன்) இருக்கிறபோதுகூட அவனுக்கு வெளி - உள் எல்லாம்

Koviloor Digital Library

ஒன்றுதான். வேதத்தில் சொன்னதுபோல் உள்ளே வெளியே எல்லாம் அந்த ஒரே நாராயணன், வாஸுதேவன், பரமாத்மாதான் வ்யாபித்திருக்கிறது என்ற உள்ளுணர்வு இருந்துகொண்டே இருக்கும்.

ஞானி அடைய வேண்டியது எதுவுமே இல்லை. ஆகவே, 'அதைத் தா, இதைத் தா' என்று ப்ரார்த்திக்க வேண்டிய அவச்யம் அவனுக்கு இல்லை. ஒரு ப்ரார்த்தனையும், காரணமும் இல்லாமல், தன்னால் அன்பாகத்தான் இருக்கமுடிகிறது என்பதாலேயே பரமாத்மாவிடம் அன்பாயிருக்கிறனே, இது தான் பரம பரிசுத்தமான பக்தி. 'அஹைதுகீ பக்தி' (ஹேது அல்லது காரணம் இல்லாத பக்தி) என்று இதை ப்ரஹ்ம ஞானியான சுகாசார்யாள் பாகவதத்தில் சொல்கிறார். இவனை ஒருத்தர் கத்தியால் வெட்டினால்கூட அதிலிருந்து காப்பாற்றும்படி இவன் ப்ரார்த்தனை பண்ணமாட்டான். ஏனென்றால், தான் சரீரமில்லை, ஆத்மாதான் என்ற உள் அநுபவம் இவனை விட்டு அப்போதும்விலகியிருக்காது. அந்த நிலையிலும் ப்ரார்த்தனை பண்ணாமலே பகவானிடம் பக்தியாக அன்புமயமாக இருப்பான்.

'இப்பேர்ப்பட்ட பக்தி எங்கே? கஷ்டம் தீருவதற்காக பகவானை ப்ரார்த்திக்கிற ஆர்த்தனின் பக்தி எங்கே? அதை விட மட்டமாக, போதுமென்கிற அளவுக்கு ஸௌகர்யம் இருந்தும் இன்னும் வேண்டும் என்று கேட்கிற அர்த்தார்த்தி யின் பக்திக்கு பக்தி என்று பேர் கொடுப்பதே தப்பு மாதிரி இருக்கிறதே!' என்று தோன்றலாம்.

ஆனால் ஸாக்ஷாத் பகவான் ஞானத்தை வேண்டுகிற ஜிஜ்ஞாஸுவையும், ஞானத்தை அடைந்தே விட்ட ஞானி யையும் சொன்னாற் போலவே இந்த ஆர்த்தன், அர்த்தார்த்தி இரண்டு பேரும்கூடத் தன்னை பஜிப்பதாகத்தான் சொல் கிறார். அது மட்டுமில்லை. இந்த நாலு தினுஸானவரையும் 'ஸுக்ருதின: ஜநா:' அதாவது ஸுக்ருதம் பண்ணினவர்கள் -புண்யம் பண்ணினவர்கள் என்று ச்லாகித்துச் சொல்கிறார்.

Koviloor Digital Library

இரண்டு ச்லோகங்களுக்குப் பிறகு, மறுபடியும் இந்த நாலு வகையான பக்தர்களும் ச்ரேஷ்டமானவர்களே (உதார மானவர்களே): உதாரா: ஸர்வ ஏவைதே என்கிறுர்.

ஏன் இப்படிச் சொன்னுர்?

"ஞானியையும், ஞானத்தைத் தேடுகிறவனையும் மட்டு மில்லாமல், லௌகிக கஷ்டம் தீருவதற்காகவே ப்ரார்த்தனை பண்ணுகிறவனையும், ஓரளவு ஸௌக்யமாயிருந்தும்கூட இன்னும் ஜாஸ்தி ஸௌக்யம் வேண்டும் என்று ப்ரார்த்திக் கிறவனையும்கூட ஏன் பகவான் தன் பக்தர்கள் என்று சொல்லிக் கொண்டார்? ஏன் அவர்களை 'ஸுக்ருத்', 'உதாரர்கள்' என்றெல்லாம் ச்லாகித்தார்?" என்பது கேள்வி.

லௌகிக ப்ரார்த்தனைக்கு ஸமாதானம்

லோக வாழ்க்கையில் நமக்கு அநேக கஷ்டங்கள் வந்து கொண்டே இருக்கின்றன. இத்தனை கஷ்டங்களையும் கொஞ்சம்கூடப் பொருட்படுத்தாமல், 'பகவான் விட்ட வழி' என்று நாம் பகவானை பகவானுக்காகவே பக்தி பண்ணிக் கொண்டிருந்துவிட்டால் ரொம்ப உசத்திதான். இதற்கு அபேக்ஷணையே இல்லை. ஆனுல் நடைமுறையில், வாஸ்தவத் தில் நம்மில் யாரால் அப்படி இருக்க முடிகிறது? ஏதோ ஒரு மாயை லோகம் முழுவதையும் பிடித்து ஆட்டுகிறது. 'மஹா மாயா விச்வம் ப்ரமயஸி' என்று ஆசார்யாள்கூடச் சொன்னுர். அதிலே நாம் மாட்டிக் கொண்டிருக்கிறோம். லோகம்தான் நிஜம்; நம் தேஹம்தான் நிஜம் என்றே நாம் அத்தனைபேரும் நினைத்துக் கொண்டிருக்கிறோம், லோக வாழ்க்கை நடத்திக் கொண்டிருக்கிறோம். இதிலே ஒரு தோல்வி, மானபங்கம், வ்யாதி, வக்கை, கடன், கஸ்தி வந்தால் கஷ்டப்படத்தான் செய்கிறோம். இப்படிக் கஷ்டப்படாவிட்டால் உசத்திதான். ஸந்தேஹமேயில்லை. இன்றைக்கு இல்லாவிட்டாலும் என்றைக்கோ ஒரு நாளாவது நாம் இம்மாதிரிக் கஷ்டப் படாமல், மாயையை மாயை என்று புரிந்துகொண்டு, பட்டுக்

Koviloor Digital Library

கொள்ளாமல் இருக்கத்தான்வேண்டும். இப்போதிலிருந்தே அதற்கான ப்ரயத்னங்களைப் பண்ணிக்கொண்டே இருக்க வேண்டும். ஆனால் என்றைக்கோ அப்படி நாம் ஆவதும் ஆகாததும் ஒருபக்கம் இருக்கட்டும். இன்றைக்கு, இப்போது நமக்குக் கஷ்டம் இருந்தால் அது கஷ்டமாகத் தெரிகிறதோ, இல்லியோ? முள் குத்தினால் கால் வலிக்கிறதோ இல்லியோ? ஜ்வரம் வந்தால் "ஹா ஹா" என்று அனத்துகிறோமோ இல்லையோ? வீட்டிலே ஒரு கஷ்டம், ஆஃபீஸில் சண்டை, ஏதோ ஒரு அவமானம் என்றால் உள்ளே அது நம்மைக் கருணைக் கிழங்கு மாதிரி அரித்துப் பிடுங்கிக்கொண்டே இருக்கிறதா, இல்லையா? நம் வீட்டுக்காரர்களுக்கு நாம் செய்ய வேண்டியதை செய்யவேண்டும், பெண்ணுக்குக் கல்யாணம் பண்ணவேண்டும், பிள்ளைக்குக் காலேஜில் ஸீட் பிடிக்கவேண்டும் என்று இப்படி நம் கடமைக்காக, பொறுப்புக்காக அலைய வேண்டியிருக்கிறதோல்லியோ?

இதில், போகிற இடங்களில் கார்யம் ஜயிக்காமல் ஏமாந்தும் போகிறோமல்லவா? இந்த மாதிரி ஸமயங்களில் என்ன பண்ணுவது? எல்லாம் கர்மா என்று மனஸைத் தேற்றிக்கொண்டு, கீதையில் சொன்ன மாதிரி, நம் கடமையை மட்டும் பண்ணிக்கொண்டு, பலனை நினைக்காமல் லேசாக இருந்துவிடலாம் என்றால், அது முடியாமல், உள்ளே அரித்துப் பிடுங்கிக்கொண்டே இருக்கிறதே, இப்போது என்ன பண்ணலாம்? பகவான் என்று ஒருத்தன் இருக்கிறான், அவன்தான் ஸர்வ லோகங்களையும் நிர்வாஹம் பண்ணுகிறான், தர்மம் என்கிற சட்டத்தை (law) வைத்துக் கொண்டு அதன்படி அவன் ஆட்சி பண்ணுகிறான் என்று நாம் நம்புகிறோம். தர்ம 'லா'படிதான் அவன் 'ரூல்' பண்ணுகிறான் என்றாலும், அவன் பரம கருணாநிதி, எத்தனை அபராதங்கள் பண்ணினாலும் க்ஷமிக்கிற அருள் வள்ளல், க்ருபா ஸமுத்ரம் என்றும் மஹான்கள் பாடிவைத்துவிட்டுப் போயிருக்கிறார்களே! அதனால் லோக வாழ்க்கையில் மாட்டிக் கொண்டிருக்கிற நாம்—அவன்தானே இப்படி நம் மேலே

Koviloor Digital Library

மாயையைப் போர்த்தி மாட்டி வைத்திருக்கிறான்?—அவனிடமே இந்த லோகத்துக் கஷ்டங்கள் தீருவதற்குப் ப்ரார்த்தனை பண்ணுவதில் என்ன தப்பு? இப்படி ஓர் அபிப்ராயம்.

எது வேண்டுமானாலும் எப்படி வேண்டுமானாலும் போகட்டும் என்று தாமரை இலைத் தண்ணீர் மாதிரி இருக்கிறவர்கள் (அல்லது அந்த மாதிரி என்றைக்காவதேனும் நாமும் ஆகவேண்டும் என்று தாபப்படுகிறவர்கள்கூட) லோகத்தில் அபூர்வமாகத்தான் இருப்பார்கள். இந்த உலக வாழ்க்கையின் கஷ்ட நஷ்டங்களைப் பொருட்படுத்துகிறவர்கள், அது தீரவேண்டும் என்று தவிக்கிறவர்கள்தான் நூற்றுக்குத் தொண்ணூறு பேர் இருப்பார்கள். இவர்களுடைய கஷ்டத்தைத் தீர்த்து வைக்க பகவானுக்கு சக்தியும் உண்டு, உரிமையும் உண்டு. அதற்கான கருணையும் அவனுக்கு நிச்சயம் உண்டு. அதனால் அவனிடம் கஷ்டத்தைத் தீர்க்கச் சொல்லி ப்ரார்த்தனை பண்ணுவது ரொம்ப ஸரியானதுதான் என்று அபிப்ராயப்படுகிறவர்கள் உண்டு.

"பகவான் உனக்கு ஒரு சரீரத்தைத் தந்திருக்கிறான். குடும்பத்தைத் தந்திருக்கிறான். இவற்றை நன்றாகப் பார்த்துக் கொள்ளவேண்டிய பொறுப்பு உனக்கு இருக்கிறது; கடமை இருக்கிறது. இதற்காக டாக்டர், மேல் அதிகாரி, கடன் கொடுக்கிறவன், அவன் இவன் என்று யார் யாரிடமோ போய் நிற்கிறாயா இல்லையா? எல்லாருக்கும் மேலே இருக்கிற பகவானிடம் மட்டும் போய் நின்றால் என்ன தப்பு? வெட்கப் பட அதில் என்ன இருக்கிறது? மநுஷ்ய ரூபத்தில் உனக்கு உதவி செய்கிறவர்கள் (human agency)கூட உனக்கு ஸாதகமாக இருக்கவேண்டும் என்றால், இதை ஸாதித்துத் தரக் கூடியவன் பகவான்தானே? அதனால் மற்றவன் காலில் விழுகிறதற்கு முன்னாடி அவன் காலில் விழு. ஒருத்தன் காலிலும் விழாமலிருக்கிற பக்வம் உனக்கு வந்தால் அப்போது இந்த லௌகிக கஷ்ட நிவ்ருத்திக்காக நீ பகவான் காலிலும் விழாமல் இருக்கலாம்" என்று அவர்கள் சொல்வார்கள்.

Koviloor Digital Library

நம்மால் எதையும் ஸாதித்துக்கொள்ள முடியாது; ஈச்வர சக்திதான் எல்லாவற்றுக்கும் மேல் பெரிதானது என்று நம்பித்தானே ஓர் "ஆர்த்தன்" (அதாவது கஷ்டப்படு கிறவன்) பகவானை ப்ரார்த்திக்கிறான்? இது நல்ல மனோ பாவம்தானே? இதனால்தான் இப்படிப்பட்ட மனோபாவம் படைத்தவர்களையும் பகவான் 'ஸுக்ருதின:' 'உதாரா:' என்று ச்லாகித்துச் சொல்லியிருக்கிறார் என்று வைத்துக் கொள்ளலாம்.

எதற்கும் 'நான்', 'நான்' என்று மாரைத் தட்டிக் கொண்டிருக்கிற மநுஷ்யன் ஏதோ ஓர் இடத்தில், தான் அவன் க்ருபை இல்லாமல் எதுவும் செய்ய முடியாது என்று நம்பி, அடங்கி, பணிந்து, வேண்டிக்கொள்கிறான் என்றால் அது அந்த அளவுக்கு உயர்ந்ததுதான். லௌகிகமான தேவையின் பூர்த்திக்காகத்தான் இருக்கட்டும்,அல்லது வேறு எந்தக் காரணத்துக்காக வேண்டுமானாலும் இருக்கட்டும், நம் எல்லோரையும்விட பகவான் பெரியவன் என்ற நம்பிக்கையோடு ப்ரார்த்தனை பண்ணுவது ஸரியானதுதான் என்றே சொல்லவேண்டும். 'இந்த வாழ்க்கையிலேயே தர்மத்துக்கு விரோதமாக இல்லாதவரையில் ஜனங்களின் ந்யாயமான ஆசைகளாகக்கூட நானே இருக்கிறேன்' என்று பகவானே கீதையில் சொல்லியிருக்கிறான் (7 - 11): தர்மா விருத்தோ பூதேஷு காமோஸ்மி பரதர்ஷப. அதர்மமாக ஆசைப்படக் கூடாது. துராசை கூடாது. தர்மமான ஆசை கள் இருந்தால் அதை பகவானும் அந்த ஸ்டேஜில் ஒத்துக் கொள்வார்.

"ஸரி, அப்படியானால் போதுமான அளவுக்கு (ஸௌக்யம்) இருந்தும்கூட, அதற்கும் மேல் வேண்டும் ப்ரார்த்தித்துக் கொள்கிற 'அர்த்தார்த்தி'யின் ஸமாசாரம் என்ன? அவனை எப்படி பக்தர்களோடு சேர்க்கலாம்?" என்ற கேள்வி எழும்புகிறது.

ஜீவனம் நடத்துவதற்கு எதெது அத்யாவச்யமோ அதற்கு மேல் ஒரு துரும்புகூட வைத்துக் கொள்ளாம

Koviloor Digital Library

லிருப்பதுதான் முறை. எதெது இல்லாவிட்டால் நம்மால் ஜீவிக்கவே முடியாதோ, அவற்றோடு நம் தேவைகளை நிறுத்திக் கொள்ளவேண்டும் என்பதுதான் தர்ம சாஸ்த்ரங்களில் சொல்லியிருக்கிற 'அபரிக்ரஹம்' என்ற உயர்ந்த கொள்கை. ஆகையால், வாழ்க்கை நடத்துவதற்குப் போதுமான அர்த்தம் (பொருள்) இருந்தும் அதற்கு மேல் ஒருத்தன் (அர்த்தார்த்தி) பகவானிடம் ப்ரார்த்திக்கிறான் என்றால் அது பேராசைதான்; எனவே அது தப்புதான். ஆனால் இவனையும் ஏன் க்ருஷ்ண பரமாத்மா நாலுவித பக்தர்களில் ஒருத்தனாக ச்லாகித்துச் சொல்கிறார், என்றால், அதற்கு ஒரு தினுஸான அர்த்தம் பண்ணிக்கொள்ளலாம் என்று தோன்றுகிறது.

அதாவது லோகத்தில் பலவிதமான தர்ம கார்யங்கள், ஸமூஹப் பணிகள் நடந்தாக வேண்டியிருக்கிறது. ஒரு கோயிலைப் புனருத்தாரணம் பண்ணிக் கும்பாபிஷேகம் நடத்தவேண்டியிருக்கிறது. பள்ளிக்கூடம், ஆஸ்பத்திரி வைக்க வேண்டியிருக்கிறது, அநாதாச்ரமங்கள் வைக்க வேண்டியிருக்கிறது. வேத வித்துக்களை ரக்ஷிக்க வேண்டியிருக்கிறது. இப்படிப் பல பெரிய கார்யங்கள் நடந்தாக வேண்டியிருக்கிறது. இவற்றுக்கெல்லாம் நிறையப் பணம் தேவைப்படுகிறது. இந்தப் பணம் எங்கிருந்து வரும்? தங்கள் செலவுக்குப் போக தர்மம் செய்யக்கூடிய தனிகர்கள் இருந்தால்தானே அவர்களிடமிருந்து நல்ல கார்யங்களுக்காக த்ரவ்யம் கிடைக்கமுடியும்? இந்த மாதிரி, தனக்கென்று இல்லாமல் தன் தேவைக்கு மேற்பட்டதை லோகோபகாரமாக தர்மம் பண்ணுவதற்கே ஒரு அர்த்தார்த்தி பகவானிடம் பகவான் ப்ரார்த்தனை பண்ணினால், அப்படிப்பட்ட ப்ரார்த்தனையை பகவான் ஒப்புக்கொள்கிறார் என்று வைத்துக் கொள்ளலாம்.

வர்ணாச்ரம தர்மங்கள் யதோக்தமாக நடைமுறையில் அநுஷ்டிக்கப்பட்ட காலத்திலேயே, ப்ராமணனுக்கு அபரிக்ரஹம், ஸமுத்ரத்தைத் தாண்டிப் போகக்கூடாது என்பது

Koviloor Digital Library

போன்ற கட்டுப்பாடுகளைப் போட்ட சாஸ்த்ரம், வைச்யர்களுக்கோ, 'திரைகடல் ஓடியும் திரவியம் தேடு' என்று உபதேசம் பண்ணிற்று. என்ன காரணம்? அப்படி அவர்கள் த்ரவியம் தேடினால்தான் அநேக தர்ம கார்யங்கள் நடக்க முடியும். நடுவே அவர்கள் கொஞ்சம் அதிக ஸௌகர்யம் (லக்ஷுரி என்கிற போக்ய வாழ்க்கை) பெற்றாலும் பெற்று விட்டுப் போகட்டும்; அவர்கள் செய்கிற தானத்தினால் இந்த தோஷம் நிவ்ருத்தியாகிவிடும். கொடுக்கக் கொடுக்கத் தானாகவே 'லக்ஷுரி' பிடிக்காமல் போய்விடும். தனக்கு வசதி பண்ணிக்கொள்ளாமல் பிறருக்குக் கொடுக்க வேண்டும் என்பதிலேயே ஆஸ்தை அதிகமாகும். அப்படியே இவன் தனக்காக ஒரு பங்களா வைத்துக்கொண்டாலும், அதிலே பத்து ஏழைகளுக்கு இடம் கொடுக்கத் தோன்றும்; ஒரு கார் வைத்துக்கொண்டால் பிறத்தியார் நாலு பேருக்கு உதவியாக அதைக் கொடுக்கத் தோன்றும்.

மொத்தத்தில் ஞானியாகவும், ஞானத்தைத் தேடும் ஜிஜ்ஞாஸுவாகவும்தான் இருக்க வேண்டுமென்பதில்லை— ஆர்த்தனாகவோ, அர்த்தார்த்தியாகவோ இருந்தால்கூடப் பரவாயில்லை; ஏதாவது ஒரு விதத்தில் பகவான் என்று ஒருத்தனை நம்பி அவனிடம் போய்விட்டால் போதும், எதற்காக ப்ரார்த்தனை பண்ணினாலும் போதும், கொஞ்சம் கொஞ்சமாக இவனை ப்ரார்த்தனை மேலே அழைத்துக் கொண்டு போகும். முதலில் நிறைய செல்வம், செல்வாக்கு வேண்டும் என்று ப்ரார்த்தித்தால்கூட, காலக்ரமத்தில் தானாக இந்த மாதிரி ஆசைகள் குறையும். அப்புறம் அடுத்த ஸ்டேஜில் ஒரு கஷ்டம், ச்ரமம், வ்யாதி என்பதற்கும் ப்ரார்த்திக்காமல், நல்ல ஞான வைராக்யாதிகளுக்காகவே ப்ரார்த்தனை பண்ணத் தோன்றும். அதற்கப்புறம் இந்த ப்ரார்த்தனைகூட நின்றுபோய், பக்தியில் உள்ள ஆனந்தத்துக்காகவே பக்தியாக இருக்கிற உயர்ந்த நிலைக்குப் போய்ச் சேரலாம்.

Koviloor Digital Library

இப்படி லோகரீதியான ப்ரார்த்தனைக்கும் ந்யாயம் காட்ட, ஸமாதானம் சொல்ல இடமிருக்கிறது.

ஆசார்யாளின் 'ஸௌந்தர்ய லஹரி' முடிவில் 'ஸரஸ்வத்யா லக்ஷ்ம்யா' என்று ஒரு ச்லோகம் வருகிறது. அந்த ச்லோகத்திலிருந்து அம்பாள் படிப்பு, பணம், மன்மதாகாரமான சரீர ஸம்பத் முதலான ஐஹிகமான (இக உலகத்து) பெருமைகளைக்கூட ஆரம்பக் காலத்தில் தந்து படிப்படியாக பசு - பாச பந்தத்தைக் கத்திரித்துப் பரானந்தத்தைத் தருகிறாள் என்று தெரிகிறது. ஆகையால் ஒரு 'ஸ்டேஜ்' வரை லௌகிகமாக ப்ரார்த்தனை பண்ணினால் அது தப்பில்லை என்று ஏற்படுகிறது.

ப்ரார்த்தனை பண்ணுகிற வழக்கம் எப்படியோ ஒரு விதத்தில் ஏற்பட்டுவிட்டால் தானாகவே அது காலக்ரமத்தில் ஆத்மாபிவ்ருத்திக்காக மட்டும் ப்ரார்த்திக்கிற நிலைக்குக் கொண்டு விட்டுவிடும்.

ப்ரார்த்தனை ஈடேறாமையும் நாஸ்திகமும்

ஐஹிகமாக நாம் ப்ரார்த்தனை பண்ணுவதெல்லாம் நமக்குக் கிடைத்து விடுகிறதா என்ன? இல்லை. சில ப்ரார்த்தனை நிறைவேறுகிறது. சில நிறைவேறாமல் போகிறது. ஆனால் நிறைவேறவில்லை என்பதற்காக நாம் பகவானை விட்டுவிடுவதில்லை. பக்தியை விட்டுவிடுவதில்லை. வேறே பலனுக்காக பக்தி பண்ணினாலும், ஏதோ நாம் செய்கிற துளிதுளி பக்தியிலும் அதற்கென்றே ஒரு ஸுகம் நமக்குத் தெரிவதால், நாம் வேண்டின பலன் கிடைக்கா விட்டாலும் பக்தியை விடுவதில்லை.

என்னிடமே ரொம்பப் பேர் வருகிறார்கள், ஏதோ ஒரு கஷ்டம் தீரவேண்டும், பெண்ணுக்குக் கல்யாணம் ஆக வேண்டும். பிள்ளைக்கு வேலை கிடைக்க வேண்டும், வ்யாதி போக வேண்டும், கேஸ் ஜயிக்க வேண்டும் என்று இப்படிப் பட்ட ப்ரார்த்தனைக்காக வருகிறார்கள். எல்லாருக்கும் எல்லா ப்ரார்த்தனையும் நிறைவேறுகிறதா? இல்லை. ஆனாலும்

Koviloor Digital Library

அதற்காக அவர்களுடைய அபிமானம் போய்விடவில்லை. தொடர்ந்து வந்துகொண்டேதான் இருக்கிருர்கள். நாம் ப்ரார்த்திப்பதெல்லாம் நமக்குக் கிடைத்துத்தானுக வேண்டும் என்று எதிர்பார்க்க நமக்கு அருகதையில்லை என்று உள்ளூர நமக்கே ஏதோ ஒரு தினுஸில் தெரிந்திருக்கிறது. அதனுல் நம் ப்ரார்த்தனை நிறைவேருவிட்டாலும் பகவானை விடுவதில்லை.

ப்ரார்த்தனை நிறைவேருததற்காக நாஸ்திகர்களாகப் போகிறவர்கள் ரொம்பக் குறைச்சல்தான். அநேகமாக ஸ்வாபாவிகமாகவே (இயற்கையாகவே) தான் நாஸ்திகர்கள் அப்படியிருக்கிருர்களே தவிர, பக்தி பண்ணினதால் எதிர்பார்த்த பலன் கிடைக்கவில்லை என்கிற தாபத்தால் நாஸ்திகராவதென்பது ரொம்பவும் அபூர்வம்தான். லௌகிகமான பலனை உத்தேசித்து ஏதோ கொஞ்சம் பக்தி பண்ண ஆரம்பித்துவிட்டால்கூட ஸரி, அது ஒருபோதும் அழிந்து போய்விடுவதில்லை. வளராமல், பக்வமாகாமல் வேண்டுமானுல் போகலாம், ஆனுல் அடியோடு இல்லாமல் போய்விடுவதில்லை.

இதனுல்தான் க்ருஷ்ண பரமாத்மா, "நீ ஞானியாகவோ, ஜிஜ்ஞாஸுவாகவோ இல்லாவிட்டாலும் ஸரி; ஆர்த்தனுகவோ அர்த்தார்த்தியாகவோதான் என்னிடம் வருகிருயா? அதுவும் ஸரி, ஏதோ காரணத்துக்காக என்னை நம்பி வந்துவிட்டாய் அல்லவா? அதனுல் நீயும் பக்தன் தானப்பா" என்று பரம கருணையோடு இவர்களையும் பக்தர்களோடு சேர்த்துக்கொள்கிருர்.

ஆத்ம ச்ரேயஸுக்கான ப்ரார்த்தனை

லௌகிகத்தில் நமக்கு எந்த ப்ரார்த்தனை இருந்தாலும் இல்லாவிட்டாலும், 'நமக்கு ஒரு குறையுமில்லை; ஒன்றுக்காகவும் நாம் ப்ரார்த்திக்க வேண்டியதில்லை' என்ற நிறைந்த நிலையை நாம் நிஜமாக அடைகிறவரை ஆத்ம ச்ரேயஸுக்கானவற்றை பகவானிடம் ப்ராத்தித்துக்

Koviloor Digital Library

கொண்டிருந்தால் அப்படி ப்ரார்த்திப்பதே நமக்கு ஓரளவு தாப சாந்தியாக இருக்கும். நம் ஆத்மாபிவ்ருத்திக்கு எதெது தேவை என்று பகவானுக்கே தெரியும், நாம் கேட்காமலே அவன் கொடுப்பான் என்பதெல்லாம் வாஸ்தவமானாலும்கூட, நம் குறைகளை அவனிடம் நாமே வாய்விட்டுச் சொல்லிக்கொள்வதில் நமக்கு ஒரு ஆறுதல் கிடைக்கத்தான் செய்கிறது. இந்த ரீதியில் நாம் ஆத்ம ச்ரேயஸுக்காக என்னென்னவற்றை ப்ரார்த்திக்க வேண்டும் என்பதை ஆசார்யாள் "ஷட்பதீ" முதல் ச்லோகத்தில் சொல்கிறார்.

"ஸுப்ரஹ்மண்ய புஜங்க"த்தில் நம் ஆசார்யாள் செந்தில் நாதனுடைய பத்ரவிபூதி மஹிமையில் ஸகல வ்யாதிகளும் தீருவதைப் பற்றிச் சொல்லியிருக்கிறார். அங்கே 'ஆர்த்தி'க்காகக்கூட அவரே பக்தி பண்ணிக் காட்டுகிறார். "கனகதாரா ஸ்தவ"த்தை எடுத்துக் கொண்டால் அங்கே ஆசார்யாள் 'அர்த்தார்த்தி'யின் வேண்டுதலைக்கூட ஒப்புக்கொள்கிற மாதிரி மஹாலஷ்மியிடம் தத்யாத்... த்ரவிணாம்புதாராம் "மேகம் மழையை வர்ஷிக்கிற மாதிரி செல்வ தாரையைக் கொட்டு" என்று ப்ரார்த்திக்கிறார்.

ஆனால் இந்த "ஷட்பதீ ஸ்தோத்ர"த்தில் ஆர்த்தனாகவும், அர்த்தார்த்தியாகவும் இல்லாமல், ஞானத்தை விரும்புகிற ஸாதகனான ஜிஜ்ஞாஸு எப்படி ப்ரார்த்தனை பண்ணுவானோ அப்படியே பண்ணச் சொல்லிக் கொடுக்கிறார்.

ஞானத்துக்கும் விஷ்ணு

மஹாவிஷ்ணுதான் இந்த லோக வ்யாபாரத்தை நிர்வாஹம் பண்ணும் பரிபாலன மூர்த்தி. அதனால் அவன் தானாகவே தன் உத்யோகப்படி ஆர்த்தனுக்கும், அர்த்தார்த்திக்கும் அநுக்ரஹம் பண்ணிவிட்டுப் போகிறான். ஆனால் அவன் இதற்கு மேல் ஞான வைராக்யாதிகளை அநுக்ரஹிக்க சக்தி இல்லாதவனா என்ன? இல்லை. "நாராயணம்

Koviloor Digital Library

பத்மபுவம்" என்று ப்ரஹ்ம வித்யா ஆசார்யர்களிலேயே அத்வைதிகள் அவனைத்தான் முதலாவதாக வைத்து நமஸ்காரம் பண்ணுகிறார்கள். லோகபாலகனேதான் லோக வ்யவஹாரமெல்லாம் முடிந்து போகிற தத்வத்துக்கு முதல் ஆசார்யனாக இருக்கிறான். அதனால் அவனிடம் ஞான ப்ரார்த்தனையும் பண்ணலாம்.

'ஞானம், முக்தி சிவன்தான் தருவான். இந்த லோக வ்யவஹாரத்துக்குத்தான் விஷ்ணுவைப் பிடிக்க வேண்டும்' என்று தப்பாக நினைத்துக் கொண்டிருக்கிற ஜனங்களுக்கு இது ஒரு பாடமாக இருக்கட்டும் என்று பகவத்பாதாள் நினைத்தாரோ என்னமோ? இப்படித் தோன்றுகிற மாதிரி, ஞான உதயத்துக்குப் பூர்வாங்கமான சித்த சுத்திக்கு வேண்டிய விஷயங்களையே இந்த "ஷட்பதீ" முதல் ச்லோகத்தில் ப்ரார்த்திக்கிறார். இஹம் - பரம், போகம் - ஞானம் என்பதில் இரண்டையும் மஹாவிஷ்ணு அநுக்ரஹம் செய்வாரென்று காட்டி, குறிப்பாக இந்த ஸ்துதியில் இரண்டாவதையே அவனிடம் கேட்கச் சொல்லிக்கொடுக்கிறார்.

ஷட்பதீ மட்டுமில்லை. இன்னும் அநேக ஸ்தோத்ரங்களிலும் மஹாவிஷ்ணுவை ஆசார்யாள் ஞான தாதாவாக வைத்தே ப்ரார்த்திக்கிறார். ஞான வைராக்யங்களுக்குப் பாடின "பஜ கோவிந்த"த்தில் அவர் சொல்லியிருப்பது கோவிந்தனைத்தானே? "ஹரிமீடே" ஸ்தோத்ரமென்று அத்வைதமாகப் பண்ணியிருக்கிறார். அதிலே ஒவ்வொரு ச்லோகத்திலும் "ஸம்ஸார இருட்டை அழிக்கும் ஹரியை ஸ்தோத்திரிக்கிறேன்: தம் ஸம்ஸார த்வாந்த விநாசம் ஹரிம் ஈடே" என்று முடித்திருக்கிறார். இப்படி அநேகம்.

மனம் ஸரியாக

மனஸை ஸரியாக ஆக்கிக் கொண்டாலொழிய எவனும் ஸௌக்யமாயிருக்க முடியாதென்பதால், அப்படிப் பண்ணிக் கொள்வதற்கான ப்ரார்த்தனையோடு ஆசார்யாள் "ஷட்பதீ ஸ்தோத்ர"த்தை ஆரம்பிக்கிறார். வெளி ஸௌகர்யங்கள் எத்தனை இருந்தாலும் மனஸ் நல்ல

Koviloor Digital Library

படியாக இருந்தால்தான் ப்ரயோஜனமுண்டு. இல்லா விட்டால் துக்கம்தான், அழுகைதான், பயமும் சஞ்சலமும் தான். வெளி ஸௌகர்யங்கள் எதுவுமே இல்லாவிட்டாலும் கூட, மனஸ் மட்டும் இருக்க வேண்டியமாதிரி இருந்து விட்டதோ, அப்போது ஒரு கஷ்டமும் தெரியாது. "இன்பமே எந்நாளும் துன்பமில்லை" என்று அப்பர் ஸ்வாமிகள் சொன்ன மாதிரி ஸதானந்தமாக இருந்து கொண்டிருக்க முடியும்.

மனஸ் நல்லபடியாக இருப்பது என்றால் என்ன? எப்போதுபார்த்தாலும், 'அது வேண்டும்; இது வேண்டும்; இப்போது இருக்கிற ஸௌகர்யங்கள் போதாது, பொருள், பதவி, பேர் வேண்டும்' என்று ஓயாமல் எதற்காவது மனஸ் ஆசைப்பட்டுக்கொண்டே இருக்கிறது அதாவது எப்போதும் அத்ருப்தியிலேயே இருந்துகொண்டிருக்கிறது. வேண்டியது கிடைத்துவிட்டது என்றாலும் த்ருப்தியாக நிறைந்திருக்க அதற்குத் தெரிகிறதோ? இல்லை. இன்னம் ஏதாவது தேவையை ஸ்ருஷ்டி பண்ணிக்கொண்டு அதற்காக அலையத்தான் செய்கிறது. இப்படியில்லாமல் மனஸ் த்ருப்தியாக, நிறைந்து இருந்துவிட்டால் அப்போதுதான் ஸரியாக இருக்கிறது என்று அர்த்தம். ஆசை, அதனால் வருகிற அத்ருப்தி, த்வேஷம், போட்டி பொறாமை, துக்கம் இவை உள்ளவரை எத்தனை கோடீச்வரனானாலும், மஹா பண்டிதனானாலும் ஒருத்தனுக்கு சாந்தியும் இல்லை, ஸௌக்ய மும் இல்லை. 'சாந்தமு லேக ஸௌக்யமுலேது' என்று த்யாகையர்வாளும், 'அசாந்தஸ்ய குத: ஸுகம்'* என்று க்ருஷ்ண பரமாத்மாவும் சொன்ன மாதிரிதான்! க்ருஷ்ணர் சொன்னதை நினைத்துக் கொண்டேதான் த்யாகையர்வாள் இப்படிப் பாடியிருக்கிறார் என்று தோன்றுகிறது. மன நிறைவினால் ஏற்படும் நிம்மதியில்லாமல் நிஜமான ஸௌக்யம் என்பது இல்லவே இல்லை என்று அந்த இரண்டு பேரும் சொல்கிறார்கள்.

---

* கீதை 2-66! "சாந்தியில்லாதவனுக்கு ஸுகம் எங்ஙனம்?"

Koviloor Digital Library

வெளியிலே பார்ப்பதற்கு ஒரு குடம் அழகாக இருக்கிறது. ஆனாலும் அதற்கு அடியிலே நாலு சின்ன ஓட்டை இருந்துவிட்டால், உள்ளே அம்ருதத்தைப் பிடித்து வைத்திருந்தால்கூட எல்லாம் ஒழுகித்தானே போகும்? அந்த மாதிரிதான், வெளிப்பார்வைக்கு நாம் ரொம்ப ஸரியாக இருக்கிற மாதிரி தோன்றலாம். பணம், படிப்பு மற்ற லௌகிகமான ஸந்தோஷங்கள் நமக்கு யதேஷ்டமாக இருக்கலாம். ஆனாலும் அத்ருப்தி, கோபம், பொறாமை, அழுகை மாதிரியான நாலு பொத்தல் நமக்குள் கண்ணுக்குத் தெரியாமல் இருந்துவிட்டால் ஆனந்தம் என்கிற அம்ருதத்தை நமக்குள் பிடித்து வைத்துக் காப்பாற்றிக்கொள்ள முடியாது.

ஆகையினால்தான் ஆசார்யாள் "ஷட்பதீ ஸ்தோத்ரம்" ஆரம்பிக்கும்போதே நம் மனஸிலிருந்து கெட்ட உணர்ச்சி வேகங்கள், அசுத்தங்கள் எல்லாம் போய், அது சுத்தமாக வேண்டுமென்று எடுத்துக் காட்டியிருக்கிறார். அப்படி ஆவதற்கு பகவானிடம் ப்ரார்த்தித்துவிட்டால் போதும், அவன் க்ருபையாலே இதை ஸாதித்துக்கொள்ளலாம் என்று வழி காட்டியிருக்கிறார்.

அவிநயம் அபநய விஷ்ணோ
    தமய மந : சமய விஷய ம்ருக-த்ருஷ்ணாம் |
பூத தயாம் விஸ்தாரய
    தாரய ஸம்ஸார ஸாகரத : ||

இது "ஷட்பதி" முதல் ச்லோகம்.

முதலில் 'அவிநயம் அபநய என்று ஆரம்பிக்கிறது. விநயம் என்று வார்த்தை எல்லோருக்கும் தெரிந்திருக்கும். அதற்கு முன்னாடி 'அ' என்று சேர்த்தால் விநயத்துக்கு opposite (எதிர்மறை) என்று அர்த்தம். விநயம் என்றால் பணிவாக, அடக்கமாக, இருப்பது. அவிநயம் என்பது திமிராக, மரியாதையில்லாமல் இருப்பது, 'அபநய' என்றால் 'போக்குவாயாக' என்று அர்த்தம்.

Koviloor Digital Library

'உபநயனம்' என்று ஒரு வார்த்தை சொல்கிறோம். உப - அருகில்; நயனம் - கொண்டு விடுவது. ஒரு பையனுக்குப் பூணூல் போட்டு குருகுலவாஸம் பண்ணுவதற்காக ஆசார்யரின் "பக்கத்தில் கொண்டு விடுவது" என்று அர்த்தம். ஒன்றிடம், இன்னொன்றைக் கொண்டு சேர்ப்பது 'உபநயனம்' அதற்கு opposite (எதிர்மறை)தான் 'அபநயனம்'. அதாவது ஒன்றிடம் இருப்பதை அதிலிருந்து பிரித்துத் தள்ளிவிடுவது 'அபநயம்'. நம்மிடம் இப்போது திமிர்த்தனம், கொழுப்பு, அடங்காமை (அவிநயம்) இருக்கிறது. இதை நம்மிடமிருந்து பிரித்துத் தள்ளுமாறு (அபநயனம் செய்யுமாறு) ஸாக்ஷாத் ஸ்ரீ மஹா விஷ்ணுவிடம் ஆசார்யாள் ப்ரார்த்திக்கிறார். இதுதான் ஷட்பதீ ஸ்தோத்திரத்தின் ஆரம்பம்.

அவிநயம் அபநய விஷ்ணோ!

"விஷ்ணோ - ஹே விஷ்ணுவே!" என்று நேரே பகவானை நிறுத்தி வைத்துக் கூப்பிடுகிறமாதிரி கூப்பிட்டு ப்ரார்த்திக்கிறார். "ஜனங்களுக்கு இருக்கிற தோஷங்களைப் போக்கடி" என்று அவர் ஜனங்களைத் தம்மிடமிருந்து வேறேயாகப் பிரித்துவைத்து, அவர்களுக்காக (அவர்களுடைய behalfல்) வேண்டிக்கொள்ளவில்லை. நம்முடைய தோஷங்களெல்லாம் தம்மிடமே இருக்கிற மாதிரி பாவித்து, தம் ஈச்வரத்வத்தைக் குறைத்துக்கொண்டு, தமக்காகவே வேண்டிக்கொள்கிற மாதிரி ப்ராத்திக்கிறார். தமக்காக, உலக ஜனங்களுக்காக என்று பிரித்துக்கூடக் காட்டாமல் எல்லோருக்கும் பொதுவாக "விநயமில்லாமையைப் போக்குவாயாக" என்று ஆரம்பிக்கிறார்.

"அவிநயத்தைப் போக்கு" என்று ஆசார்யாள் ப்ராத்திக்கிறார் என்றால் "விநயத்தை உண்டாக்கு" என்றே அதற்கு அர்த்தம். இப்போது நம்மிடம் இருப்பது அவிநயம் தானே? இல்லாதது விநயம். அதனால்தான் "விநயத்தை உண்டாக்கு" என்பதாக இல்லாததைக் கொண்டுவரச் சொல்லாமல், (நம்மிடம்) இருந்துகொண்டு கெடுதல் பண்ணும் "அவிநயத்தைப் போக்கு". என்றார்.

Koviloor Digital Library

முக்யப் பண்பு விநயமே

இப்போதெல்லாம் பண்பு, நாகரிகம், கலாசாரம், கல்ச்சர் என்கிற வார்த்தைகள் நிறைய அடிபடுகின்றன. ஆனால் இதுகளைச் சொல்லும்போது விநயத்தை முக்யமான அம்சமாக நினைத்து நாம் பேசவில்லை. முன் காலத்தில் இப்படியில்லை. அப்போது கல்ச்சர், கலாசாரம் என்றாலே அதற்கு முதல் லக்ஷணமாக விநயத்தைத்தான் நினைத்தார்கள். கல்ச்சர், கலாசாரம் என்ற வார்த்தைகளுக்கும், கல்வி என்ற வார்த்தைக்கும் ரொம்பவும் ஸம்பந்தம் இருப்பதைக் 'கல்' என்பது இவை எல்லாவற்றுக்கும் பொதுவாக இருப்பதிலிருந்தே தெரிந்துகொள்ளலாம். கல்வி பெற்றவர்கள்தான் cultured ஆக, நாகரிகமுள்ளவர்களாக இருப்பார்கள். இங்கே கல்வி என்கிறபோது எழுதப் படிக்கத் தெரிவதைச் சொன்னதாக அர்த்தமில்லை. நல்ல விஷய ஞானம்தான் கல்வி. அதை 'வித்யா' என்று சொல்வார்கள் அந்த வித்யையின் வாஸ்தவமான ப்ரயோஜனம் நமக்கு விஷய ஞானம் வந்துவிட்டது என்று திமிர்பிடித்து அலையாமல், 'இன்னமும் நாம் தெரிந்துகொள்ள வேண்டியது எவ்வளவோ இருக்கிறது' என்று அடங்கி, விநயமாக இருப்பதுதான்.

ஆதிகாலத்தில் சிஷ்யனானவன் குருவிடமும், தான் கற்கிற கல்வியிடமும், பகவானிடமும், ஸகல லோகத்திடமுமே அடங்கி விநயமாக இருந்ததால்தான் ஆத்ம வித்யையை யதேஷ்டமாக ஸம்பாதித்து வந்தான். ப்ரம்மசாரியானவன் குருகுலவாஸம் செய்கிற காலத்தில் அவன் எத்தனை பெரிய மிராசுதார் வீட்டுப் பிள்ளையானாலும் வீடுவீடாகப் போய் 'பவதி பிக்ஷாம் தேஹி' என்று பிச்சை எடுத்து வரவேண்டும் என்று வைத்தார்களே, அது முக்யமாக இந்த அடக்க குணத்தை உண்டாக்கத்தான்.

அந்தக் காலத்தில் குரு, முதல் பாடமாக விநயத்தைத் தான் சொல்லிக்கொடுத்தார். வெறுமே சொல்லிக் கொடுத்

Koviloor Digital Library

தால் வருகிற பாடமா அது? வாஸ்தவமாக அவரே, மாணவர்கள் தாமாக அவருக்கு அடங்கி மரியாதை செலுத்தும்படியான ஆத்ம குணங்களோடு இருந்துவந்தார்; வாழ்ந்துகாட்டினுர். இப்போது தாம்பும் அறுதல், தோண்டியும் பொத்தல் என்கிற ஸ்திதியாக இருக்கிறது.

இப்படியே ஒரு தேசத்து ராஜாவும் ப்ரஜைகளின் மற்ற அபிவ்ருத்திகளைப் போலவே அவர்களை விநயமுள்ளவர்களாக இருக்கச் செய்வதில் விசேஷ கவனம் செலுத்தி வந்தான். சாஸ்த்ரத்தில் ராஜாவின் கடமைகளைச் சொல்கிற போது முதலில் "விநயதான"த்தைச் சொல்லிவிட்டு, அப்புறம்தான் "ரக்ஷணம்", "பரணம்" என்பதைச் சொல்லியிருக்கிறது. ஜனங்கள் எல்லோரும் அவரவருக்கான தொழிலில் ஈடுபட்டு, ஸம்பாதித்து, வாழ்க்கை வசதிகளோடு இருக்குமாறு ஸஹாயம் பண்ணி அவர்களைத் தாங்குவது "பரணம்". உள்நாட்டுக் கலகம், வெளிநாட்டு யுத்தம் முதலியவற்றிலிருந்து அவர்களைக் காப்பது "ரக்ஷணம்". தற்காலத்தில் ராஜாங்கக் கடமையாக ரக்ஷணமும் பரணமும் மட்டுமே நினைக்கப்பட்டாலும் சாஸ்த்ரப்படி இதற்கெல்லாம் முந்தி விநயதானம்தான் வருகிறது. அதாவது ஜனங்களைப் பணிவுப் பண்போடு அடங்கியிருக்கும்படிப் பண்ணவேண்டும். எப்படிப் பண்ணுவது என்ருல், முறையான கல்வியினுல், ஸத் உபதேசத்தினுல், மதாநுஷ்டானங்களினுல், தெய்வ விச்வாஸத்தினுல் பண்ணவேண்டும்.

அடக்கம், பணிவு, ம்ருதுவான நடவடிக்கை, ('ஜென்டில்மான்' என்கிறுர்களே அதில் உள்ள 'ஜென்டில்னெஸ்'), பிறத்தியாருக்கு விட்டுக் கொடுக்கிற ஸ்வபாவம், அஹங்காரமே இல்லாமலிருப்பது எல்லாம் சேர்ந்ததுதான் விநயம் என்கிற குணம். நிஜமான கல்வி இதை ஊட்டவே ஏற்பட்டது.

இதனுல்தான் மாணுக்கன், சிஷ்யன் என்பவனுக்கே "விநேயன்" என்று பேர். எவன் விநயமுள்ளவனே அவனே

Koviloor Digital Library

'விநேயன்.' சீடன் என்பதற்குப் பதில் 'விநேயன்' என்றே சொல்வார்கள்.

சங்கரரும், சிஷ்யர்களும், விநயமும்

நம் பகவத்பாதாளைப் பற்றி அவருடைய சிஷ்யரான பத்மபாதாசார்யாள் ஒரு ச்லோகம் பண்ணியிருக்கிறார். "யத் வக்த்ர மாநஸ ஸர:" (என்று ஆரம்பிக்கும்*). அதன் முழு அர்த்தம் இங்கே நான் சொல்லவில்லை. அதிலே "விநீத விநேய ப்ருங்கா:" என்று வருகிறதுதான் நம் விஷயத்துக்கு ஸம்பந்தப்பட்டது.

ஆதிசங்கர பகவத் பாதாளுடைய மனஸ் எப்படி இருக்கிறது? இதை அந்த ச்லோகத்தில் அவர் கூடவே வஸித்த பத்மபாதாசார்யாள் சொல்கிறார். கரை காணாத விசாலமாக, ஒரே தெளிவாக, ஜில்லென்று இருக்கிறதாம். மாநஸ ஸரஸ், மாநஸஸரோவர் என்றெல்லாம் சொல்கிறார்களே, ஹிமாசலத்தில் இருக்கிற பரம நிர்மலமான விஸ்தாரமான ஏரியை, அந்த மாநஸ ஸரஸாக இருக்கிறதாம் ஆசார்யாளின் மனஸ். மனஸ் நம் கண்ணுக்குத் தெரியாது. முகம்தான் தெரியும். முகம்தான் மனஸுக்குக் கண்ணாடி. Face is the index of the mind என்கிறார்கள். நாம் வேண்டுமானால் மனஸிலிருப்பதை முகத்தில் காட்டாமல் வேஷம் போடலாம். ஆசார்யாள் மாதிரியான மஹா புருஷர்களுக்கு அகத்தின் அழகு முகத்தில் தெரியும்'. ஆகையால் ஸ்ரீ சங்கர பகவத் பாதாளின் முகமும் அவர் மனஸ் மாதிரியே நிர்மலமாக, விஸ்தாரமாக மாநஸ ஸரோவரம் போலவே இருக்கிறது. ஒரு தடாகம் என்றால் அதில் தாமரைப் பூ இருக்கவேண்டுமே! ஆசார்யாளின் முக தடாகத்தில் பூக்கிற

---

* யத் வக்த்ர மாநஸ ஸர : ப்ரதிலப்த ஜந்ம
பாஷ்யாரவிந்த மகரந்த ரஸம் பிபந்தீ |
ப்ரத்யாச-முந்முக-விநீத-விநேய ப்ருங்கா :
தாந் பாஷ்ய வித்தக குரூந் ப்ரணதோஸ்மி மூர்த்நா ||

Koviloor Digital Library

தாமரைப் பூ எது? ரொம்பவும் உயர்ந்த தத்வங்களை ஓயாமல் பொழிந்து கொண்டிருப்பதும், தாபத்தோடு வருகிற ஜனங்களுக்குப் பரம கருணையோடு ஆறுதல் சொல்வதுமான அவருடைய வாய்தான் அந்தத் தாமரைப் பூ. தாமரைப் பூ என்றால் அதிலிருந்து மகரந்தம், அதாவது, தேன் பெருக வேண்டுமல்லவா? ஆசார்யாளின் வாய்த் தாமரையிலிருந்து பெருகும் தேன் எது? இது தெரியவில்லையா? ஜகத்தை உத்தாரணம் பண்ணுகிற அவருடைய பாஷ்யங்களே தாமரைப் பூவிலிருந்து மகரந்தம் பெருகுகிற மாதிரி அவருடைய வாயிலிருந்து பெருகுகிறது. முதலில் அவர் வாயாலேதான் பாஷ்யத்தை உபதேசம் செய்தார்—அவருடைய காலத்தவர்களுக்காக. அப்புறம்தான் நம் மாதிரி பிற்காலத்தவர்களுக்காக பாஷ்யங்களை எழுதி வைத்தது. 'பாஷ்' என்றாலே சொல்வதுதான்; எழுதுவதல்ல. 'ஸம்பாஷணை' என்று ஒருத்தருக்கொருத்தர் பேசிக் கொள்வதைத்தானே சொல்கிறோம்?

"யத் வக்த்ர" என்று ச்லோகம் ஆரம்பிப்பதில் "வக்த்ர" என்றால் 'முகம்' என்று அர்த்தம். முகம், மானஸ ஸரஸ். அதிலுள்ள வாயிலிருந்து வரும் பாஷ்யம், ஸரஸிலுள்ள தாமரைப் பூவிலிருந்து வரும் தேன். ஆனாலும் ச்லோகத்தில் முகமான ஸரஸ், பாஷ்யமான தாமரைத்தேன் ("பாஷ்யாரவிந்த மகரந்தம்") என்று முகத்தையும் பாஷ்யத்தையுந்தான் நேரே மானஸ ஸரஸுக்கும் தேனுக்கும் உவமித்துச் சொல்லியிருக்கிறது. வாய் ஸரஸிலுள்ள தாமரையாயிருக்கிறது என்று சொல்லியிருக்கவில்லை. வாய் என்பதற்கு அதில் வார்த்தை இல்லை. பாஷ்யத்தை அரவிந்த மகரந்தம் என்று சொல்லியிருப்பதால், இந்த மகரந்தத்தைப் பெருக்கும் அரவிந்தமாக வாய் இருப்பதாக நாமே ஊஹித்துக் கொள்ளும்படி விட்டிருக்கிறது. இதற்கு ஒரு காரணம் தோன்றுகிறது.

ஸம்ஸ்க்ருதத்திலும் தமிழிலும் ஒரு வேடிக்கை, ஸம்ஸ்க்ருதத்தில் 'வாய்' என்ற அவயவத்துக்குத் தனியாக ஒரு

Koviloor Digital Library

வார்த்தை இல்லை. 'முகம்', 'வக்த்ரம்', 'வதநம்', 'ஆநநம்', 'ஆஸ்யம்' என்கிற மாதிரி Face என்ற அர்த்தத்தில் உள்ள வார்த்தைக்கேதான் 'வாய்' என்றும் அர்த்தம். தமிழில் பார்த்தாலோ 'வாய்'க்குத்தான் வார்த்தை இருக்கிறது. 'முகம்' என்பதற்கு (Face) தமிழ் வார்த்தை இல்லை. 'முகம்' என்பது ஸம்ஸ்க்ருத வார்த்தை. அது தமிழ் தாதுவில் வந்த தல்ல. 'மூஞ்சி' என்று பேச்சு வழக்கில் என்னவோ சொல் கிறோம். ஆனால் அது இலக்கிய மொழி (literary language) இல்லை. ஸம்ஸ்க்ருதத்தில் வாய் இல்லை; தமிழில் முகம் இல்லை!

இதனால் பழங்காலத்தில் ஸம்ஸ்க்ருத கடிகாஸ்தானங் களிலும், தமிழ்ப் பள்ளிகளிலும் படிக்கிற வித்யார்த்திகள் பரஸ்பரம் கேலி பண்ணிக் கொள்வார்களாம். (இப்போது மாதிரி ஸம்ஸ்க்ருதம், தமிழ் என்று கட்சி கட்டிக்கொண்டு குஸ்தி போடாவிட்டாலும் அந்தக் காலத்திலும் அசட்டுத் தனம் கொஞ்சம் கொஞ்சம் இருந்திருக்கிறது! அல்லது ஸ்வாதீனத்தில் தமாஷாகக் கேலி செய்து கொண்டதாக இருக்கலாம்.) தமிழ் மாணவன் ஸம்ஸ்க்ருதம் படிக்கிறவனைப் பார்த்து, "வாயில்லாதவன்" என்று பரிஹாஸம் பண்ணு வானும்; அவன் இவனைத் திருப்பி, "முகமில்லாதவன்" என்று கேலி பண்ணுவானும்!

வக்த்ரம் என்றால் முகம், வாய் இரண்டும். அதனால்தான் நாம் 'மூஞ்சி' என்கிறதை 'வக்த்ரம்' என்று அந்த ச்லோகத் தில் சொன்ன பிறகு, வாயைக் குறிப்பிடுவதற்காக எந்த வார்த்தையைப் போட்டாலும் அதையும் மூஞ்சி என்றே அர்த்தம் பண்ணிக்கொள்ள இடம் ஏற்பட்டு, 'டூப்ளிகேட்' செய்த மாதிரி ஆகிவிடப் போகிறதே என்று நினைத்துப் பத்மபாதர் வாய்க்குத் தனியாய் வார்த்தை போடாமல் ஊஹித்தறியுமாறு விட்டுவிட்டார் போலிருக்கிறது.

கவிகள் முகம், கண், பாதம், கை ஆகிய எல்லாவற்றை யுமே தாமரைக்கு ஒப்பிட்டு "முகாம்போஜம்", "நயன கமலம்", "பாத பத்மம்", "கர அரவிந்தம்" என்றெல்லாம்

Koviloor Digital Library

சொல்வார்கள். தம் பெயரிலேயே ஒரு பத்மத்தை வைத்துக் கொண்டிருக்கிற பத்மபாதாசார்யாளோ இங்கே ஆசார்யாளின் முகத்தைத் தாமரை என்று சொல்லாமல் மாநஸ ஸரஸ் என்று சொல்லி, அவர் உபதேசிக்கிற பாஷ்யத்தைத் தாமரையின் தேன் என்கிருர். தாமரை என்பது வாய் என்று குறிப்பிட்டுச் சொல்லவில்லை. ஆனாலும் அப்படி த்வனிப் பொருளாய் தெரிவிக்கிருர். பாஷ்யம் என்ருல் ஃபிலாஸஃபி. அது மண்டையை உடைக்கிற பாறை மாதிரிதான் பொதுவாக இருக்கும். ஆனல் இந்த ஃபிலாஸஃபியே நம் ஆசார்யாளின் தாமரைப் பூ மாதிரி ம்ருதுவான, அழகான வாயிலிருந்து வந்திருப்பதால், ஸுலபமாகப் பருகக்கூடிய மதுரமான தேனுகப் பெருகியிருக்கிறது!

பாஷ்யங்களின் உட்பொருளான அத்வைதம்தான் தேனின் ரஸம். அந்த ரஸத்தைப் பருகுவதற்காகக் கூட்டம் கூட்டமாக சிஷ்யர்களான வண்டுகள் வந்து மொய்க்கின்றனவாம். இங்கே சிஷ்யர்களைச் சொல்லும் போதுதான் 'சிஷ்ய' என்று சொல்லாமல் 'விநேய', அதாவது 'விநயமுள்ளவன்' என்று சொல்லியிருக்கிறது.

இந்த ச்லோகத்தில் தாமரையைப் பற்றியும் வண்டைப் பற்றியும் வருகிற மாதிரியே ஆசார்யாளைப் பற்றிய இன்னொரு ச்லோகத்திலும் வருகிறது. எண்ணூறு வருஷங்களுக்கு முற்பட்ட ஒரு கல்வெட்டில் இந்த ச்லோகம் பொறித்திருக்கிறது அந்தக் கல்வெட்டு எங்கே கிடைத்தது என்று சொன்னுல் உங்களுக்கு இன்னம் ஆச்சர்யமாயிருக்கும். அது கம்போடியா தேசத்தில் கிடைத்த கல்வெட்டு!

அந்த அன்ய தேசத்தில் கிடைத்த கல்வெட்டிலே ஆசார்யாளை "பகவத் சங்கரர்" என்று சொல்லியிருக்கிறது. நம் தேசத்தில் அவரை 'பகவத் பாதர்' என்றுதான் சொல்கிறோம் என்ருல், கம்போடியாக்காரர்கள் இன்னம் ஒரு படி உயர்த்தி 'பகவான்' என்றே அவரைச் சொல்லியிருக்கிருர்கள்! அந்த ச்லோகத்திலே ஆசார்யாளின் பாதத்தைத் தாமரையாகச் சொல்லியிருக்கிறது. "அங்க்ரி பங்கஜம்"

Koviloor Digital Library

என்று சொல்லியிருக்கிறது. இந்தப் பாத தாமரையை விட்டு அசைய மாட்டோம் என்று லோகத்தில் ஒரு வித்வான்கூட பாக்கியில்லாமல் ('நிச் சேஷமாக' என்று ச்லோகத்தில் இருக்கிறது) தங்கள் தலைகளை அதிலேயே தாழ்த்திக் கிடக்கிறார்களாம். 'ஸகல வித்வத் ஜனங்களின் சிரஸ்களாகிய வண்டுக்களால் மொய்க்கப்பட்ட பத்ம பாதத்தை உடைய பகவான் சங்கரர்' என்று அந்தக் கல்வெட்டில் இருக்கிறது :

நிச்சேஷ - ஸூரி - மூர்தாலி - மாலா - லீடாங்க்ரி - பங்கஜாத் ||

முதலில் நான் சொன்ன ச்லோகம் பத்மபாதர் நம் பகவத்பாதரைப் பற்றிப் பண்ணினது. இங்கே பகவத் பாதாளின் பாதத்தையோ முகத்தையோ பத்மமாகச் சொல்லாமல் பாஷ்யத்தைப் பத்மத்தின் மகரந்தமென்று சொல்லியிருக்கிறது. வாய்த் தாமரையிலிருந்து ஊறும் அத்வைதத் தேனைப் பருகுகிறார்களாம் அவருடைய சிஷ்யர்களான வண்டுகள். இங்கே 'சிஷ்யர்கள்' என்று சொல்வதற்கு ச்லோகத்தில் 'விநீத விநேய ப்ருங்கா:' என்று வருகிறது.

'விநீத' என்றால் நல்லொழுக்கத்தில் பழக்கப்பட்டவர்கள் (well trained) என்று அர்த்தம். 'ப்ருங்கா:' என்றால் வண்டுக் கூட்டம். 'சிஷ்யன்' என்பதற்கு 'விநேயன்' என்று போட்டிருக்கிறார்.

கம்போடியாக் கல்வெட்டில் "நிச்சேஷ ஸூரி"களும், அதாவது மிச்சம் மீதியில்லாமல் அத்தனை அறிஞர்களும், வண்டுக்கூட்டமாக ஆசார்யாளின் பாதபத்மத்தில் தங்கள் தலையைக் கிடத்தி நமஸ்கரிப்பதாகச் சொல்லியிருக்கிறது. "மூர்த்தா" (moordha) என்றால் தலை. "மூர்த்தாலிமாலா" மூர்த்தாக்களாகிய "அலிமாலா". "அலிமாலா" என்றால் வண்டுக்கூட்டம். "அலி" என்றால் வண்டு.

பத்மபாதர் வாய்ப் பத்மத்தைச் சொல்லாமல் பாஷ்யத் தேனை மட்டும் சொன்னார். கம்போடியா கல்வெட்டில் பாத பத்மத்தைச் சொல்லி பாஷ்யத் தேனை சொல்லாமல்

Koviloor Digital Library

விட்டிருக்கிறது. ஆனால் நிச்சேஷ ஸூரி ஜனங்களும், அதாவது ஸகல வித்வத் ஸமூஹமும். பாதபத்மத்தில் வண்டுக்களாகத் தலைகளைக் கிடத்தியிருப்பதாகச் சொல்லி யிருப்பதால், அவர்கள் ஸாமான்ய மக்கள் ஸமூஹத்தைப் போல பக்தியினால் மட்டும் பாத வந்தனம் பண்ணுபவர் களில்லை என்றும், பாஷ்யத் தேனை ரஸித்துத்தான் ஆசார் யாளிடம் பக்தி பண்ணுகிறார்களென்றும் உள்ளர்த்தம் ஆகிறது எனலாம்: பாதத்திலிருந்து பாஷ்யம் வந்ததாகச் சொல்வது பொருந்தாதென்பதாலேயே. பாத பத்மம் என்று மாத்திரம் சொல்லி பாஷ்ய மகரந்தத்தை ஊஹித்துக் கொள்ளும்படியாய் விட்டிருக்கிறது.

அப்பய்ய தீக்ஷிதர் ஆசார்யாளின் மேல் செய்துள்ள "அதிகதபிதா பூர்வாசார்யான்" என்ற ச்லோகத்தில் அவருடைய (ஆசார்யாளுடைய) வாயான பத்மத்திலிருந்து வெளிவரும் அத்வைத ஸூக்திப் பெருக்கு நம்முடைய பிறவிப் பிணியைப் போக்குகிறது என்று சொல்லியிருக்கிறார். 'ஸூக்தி' என்பது 'ஸு உக்தி' அதாவது 'உத்தமமான வாக்கு'.

அதிகதபிதா பூர்வாசார்யாந் உபேத்ய ஸஹஸ்ரதா
ஸரிதிவ மஹீம்பாகாங் ஸம்ப்ராப்ய சௌரி பதோத்கதா ।
ஜயதி பகவத்பாத ஶ்ரீமங் முகாம்புஜ நிர்கதா
ஜநநஹரணீ ஸூக்திர் ப்ரஹ்மாத்வயைக பராயணா ॥

இங்கே வாய்த் தாமரையையும் அதிலிருந்து பெருகும் பாஷ்ய உபதேசப் பெருக்கையும் சொல்லியிருக்கிறது. ஆனாலும் இது தேன் பெருக்கு என்பதைக் குறிப்பிட்டுக் காட்ட இதிலே வார்த்தையில்லை. ஆனால், பத்மத்திலிருந்து தேனில்லாமல் வேறென்ன பெருகும்? இதை ஊஹிப்பது கொஞ்சங்கூடக் கஷ்டமில்லையே!

இப்படியாக ஒன்றிலே வாயைச் சொல்லாமல் தேன், இன்னொன்றில் வாய், தேன் இரண்டையும் சொல்லாமல் வண்டுக்கூட்டம், மூன்றாவதில் வாயைச் சொல்லி, தேனைச் சொல்லியும் சொல்லாமல் விட்டிருப்பது என்று பார்க் கிறோம். ஆனால் மூன்றிலுமே சொல்லாததை ஸுலபமாய் ஊஹிக்கும்படி விட்டிருப்பதிலேயே ரஸம் இருக்கிறது.

Koviloor Digital Library

இவற்றில் பத்மபாதர், சிஷ்யர்களை விநேயர்கள் என்பது தான் நம் (ஷட்பதீ) விஷயத்துக்கு ஸம்பந்தமானது.

நம் ஆசார்யாளிடம் ஆச்சர்யம் என்னவென்ருல் அவருடைய சிஷ்யர்கள் விநயமுள்ள விநேயர்களாக இருந்தது மட்டுமில்லை. ஜகத்குருவான அவரே எல்லோரையும்விட விநயம் உள்ளவராக இருந்தார்.

ஆசார்யாள் 'ஸௌந்தர்ய லஹரி' என்று செய்திருப்பது தெரிந்திருக்கும். பக்தி, கவித்வம், பாஷை அழகு, தத்வச் சிறப்பு, மந்த்ர சாஸ்த்ர விஷயங்கள், உவமை முதலான அணிகள் அத்தனையும் ஈடிணை இல்லாமல் சேர்ந்திருக்கிற பரம உத்க்ருஷ்டமான ஸ்தோத்ரம் அது. அதோடு கூட அதற்கே அபாரமான மந்த்ர சக்தியும் இருக்கிறது. இப்பேர்ப்பட்ட ஒரு க்ரந்தத்தைப் பண்ணினவருக்கு எவ்வளவு தற்பெருமை ஏற்பட்டாலும் அது ந்யாயம்தான். ஆனல் நம் ஆசார்யாளுக்கோ லவலேசமாவது இப்படிப் பட்ட தற்பெருமை—தாம் பெரியதாக ஒன்றை ஸாதித்து விட்டோம் என்ற அஹம்பாவம்—இருந்ததா? இல்லவே இல்லை. "ஸௌந்தர்ய லஹரி" முடிவிலே அவர் விநயமே வடிவாக மன்னிப்புக் கேட்கிற பாவனையில் அம்பாளிடம் சொல்கிருர்: "அம்மா! சப்த ஸமுத்ரமாக, வாக் ஸமுத்ரமாக இருக்கப்பட்ட உன்னைப்பற்றி ஏதோ இந்த நூறேநூறு ச்லோகம் பண்ணி உன்னை வர்ணிக்க நான் முயற்சி செய்திருக்கிறேனே! இது எப்படித் தெரியுமா இருக்கிறது? ராமேச்வரத்திலே, ஸேது தீர்த்தத்திலே பக்தர்கள் ஸமுத்ர பூஜை பண்ணுகிறபோது அந்த மஹா ஸமுத்திரத்திலிருந்தே ஒரு கை ஜலத்தை அள்ளி அதற்கே அபிஷேகம் செய்வதாக ஓர் உபசாரம் செய்கிருர்களே, அந்த மாதிரிதான் இருக்கிறது" என்கிருர். இதேபோல் பரம பவ்யமாக இன்னும் மூன்று உதாரணமும் கொடுக்கிருர்.*

* முதற் பகுதியில் "அம்பாள் இருக்க அஹம்பாவம் ஏன்?" என்ற உரை பார்க்க.

Koviloor Digital Library

இப்படிப் பரமேச்வராவதாரமாக இருந்த போதிலும் விநயமே வடிவாக இருந்த ஆசார்யாள், ஒரு சக்தியும் இல்லாமலே அடக்கமில்லாமல் திரிகிற நம்மோடு சேர்ந்து நின்றுகொண்டு, நமக்கு ப்ரார்த்திக்க சொல்லிக் கொடுப்பதற்காகவே "அவிநயம் அபநய" ("என் விநயமின்மையைப் போக்குவாயாக!") என்று 'ஷட்பதீ ச்லோக'த்தை ஆரம்பிக்கிறுர்.

அடக்கம் ஒன்று வந்துவிட்டால் போதும், பாக்கி எல்லா நல்ல குணங்களும் அதன் பின்னே தாஞக வந்துவிடும். "அடக்கம் அமரருள் உய்க்கும்" என்று திருவள்ளுவர்கூடச் சொல்லியிருக்கிறுர்.

பள்ளிப் பருவத்திலேயே விநயத்தில் பழக்கிவிட வேண்டும். ஐந்தில் வளேயாதது ஐம்பதில் வளேயாது. வயஸ் ஏறிப் பல விஷயங்களேத் தெரிந்துகொண்டு, யௌவனம், பதவி, பணம், பலம் என்று தேடிக் கொள்கிறபோது, விநயம் வருவது ரொம்ப கஷ்டம். ஆனதால் சின்ன வயஸி லேயே இதில் பழக்கிவிடவேண்டும். மாணுக்கன் என்று சொல்லப்படுகிறவனுக்கு 'விநேயன். என்றே ஆதிநாளில் பேர் வைத்திருந்தது இந்தத் தத்வத்தைத்தான் காட்டு கிறது.

ஸிக்கியர் மதத்தில்

மாணுக்களே 'சிஷ்யன்' என்றும் சொல்கிறேம். சிஷ்யன் என்முல் 'சிக்ஷை பெறுபவன்' என்று அர்த்தம். குருகுல வாஸம் செய்து குருவிடமிருந்து பாடத்தில் மட்டுமின்றி, நடத்தையிலும் பயிற்சி பெறுகிறவன்தான் சிஷ்யன். பாடம், நடத்தை இரண்டையும் சொல்லிக் கொடுப்பதுதான் சிக்ஷை. இப்போது சிக்ஷை என்முல் பாட்டு சொல்லிக் கொள்வதைத் தான் நினேக்கிறேம். 'ஸங்கீத சிக்ஷை' என்று சொல்கிறேம். அல்லது ஒரு ஜட்ஜ் தண்டனே விதித்தால், 'ஆயுட்கால சிக்ஷை, தீவாந்தர சிக்ஷை' என்ற மாதிரி சிக்ஷை விதித்த, தாகச் சொல்கிறேம். பாட்டு சொல்லிக் கொள்வதையோ தண்டனேயையோதான் 'சிக்ஷை'' என்கிறேம். சில ஸமயங்

Koviloor Digital Library

களில் "ஸங்கீத சிக்ஷை" என்பதே ஸங்கீதத்துக்குத் தருகிற தண்டனை மாதிரி ஆகிறது என்கிறார்கள்—அது வேறு விஷயம்!

ஒரு குருகுலத்தில் சிஷ்யனானவன் எப்படி ஆசிரியருக்குக் கட்டுப்பட்டு விநயமாக இருக்கிறானோ அப்படியேதான் ஒரு மதத்தைச் சேர்ந்தவன் அதன் கொள்கைகளுக்கும், அந்த மதாசார்யருக்கும் கட்டுப்பட்டு அடங்கியிருக்கவேண்டும் என்ற கருத்தில் ஸிக்கிய மதத்தை குருநானக் ஸ்தாபித்தார். அதிலே ஹிந்து மதம், இஸ்லாம் இரண்டின் அம்சங்களும் இருக்கின்றன. இஸ்லாம் மதத்தில் கட்டுப்பாடு ரொம்பவும் ஜாஸ்தி. தங்களுடைய மதக்கோட்பாடுகளுக்கும், வ்ரதாநுஷ்டானங்களுக்கும் முஸ்லீம்கள் கட்டுப்பட்டு இருக்கிற மாதிரி மற்ற மதங்களில் சொல்ல முடியாது. இப்படிப்பட்ட அடக்கக் கட்டுப்பாட்டை குருநானக், தாம் ஸ்தாபித்த ஸிக்கிய மதஸ்தர்களுக்கு முக்யமாக வைத்தார். அந்த மதஸ்தர்கள் குருகுலத்தில் மாணவர்கள் குருவுக்குக் கட்டுப்படுகிற மாதிரி மதத்தலைவருக்கு அடங்கி நடக்க வேண்டும் என்று கருதினார். அதனால்தான் அந்த மதத் தலைவருக்கு 'குரு' என்றே பெயர் வைத்தார். ('குரு கோவிந்த ஸிங்' என்கிற மாதிரிப் பெயர்களைக் கேள்விப் பட்டிருப்பீர்கள்). மதத் தலைவருக்கு 'குரு' என்று பெயர் வைத்ததற்கேற்ப அந்த மதத்தைச் சேர்ந்த மற்ற எல்லோருக்கும் 'சிஷ்ய' என்றே பெயர் வைத்தார். 'சிஷ்ய' என்பதுதான் 'ஸிக்' (Sikh) என்றாயிருக்கிறது. பஞ்சாப் பக்கங்களில் அதாவது ஸிக்கிய பதம் பரவியுள்ள இடங்களில் வேத அத்யயனம் செய்கிறபோது "ஷ" என்ற அக்ஷரத்தை "க" என்றுதான் உச்சரிப்பார்கள். உதாரணமாக "ஹவிஷா" என்று புருஷ ஸூக்தத்தில் வருவதை அவர்கள் "ஹவிகா" என்றே சொல்லுவார்கள். அதே ந்யாயத்தில் 'சிஷ்ய' விலும் 'ஷ' என்பது 'க' வாகி 'ஸிக்' என்றாகியிருக்கிறது. இது என் ஊஹம். 'சிக்ஷக' என்பது 'ஸிக்' என்றாகியிருப்பதாகவும் ஊஹிக்கலாம். குருதான் சிக்ஷகர். மற்றவர் சிஷ்யர். 'ச' வை ஷ, ஸ என்றெல்லாம் வடக்கே மாற்றிவிடுவார்கள்!

Koviloor Digital Library

கடைசி எழுத்துக்களை முழுங்கிவிடுவார்கள். ஆகையால் 'சிக்ஷக' என்பதும் 'ஸிக்' ஆகிவிட முடியும்.

விநயம் என்பது மனிதனுக்கு இருக்கவேண்டிய முதல் குணம். அதனால்தான் 'அவிநயம் அபநய' என்றார் நம் ஆசார்யாள். அவிநயம் போனால் அடக்கம் வந்துவிடும்.

இருவித அடக்கம்

இந்த அடக்கத்திலே இரண்டு தினுஸு உண்டு.

இரண்டு விதத்தில் மநுஷ்யனுக்கு அடக்கம் ஏற்பட வேண்டும். ஒன்று, இந்த்ரியங்கள் அடங்கியிருப்பது, அதாவது கண் கண்டதைப் பார்க்கக் கூடாது; மனஸை விகாரப்படுத்தும் காட்சிகளை அது பார்க்கக்கூடாது. ஆலய தர்சனம் போல நல்ல காட்சியே பெறவேண்டும். அதே மாதிரி காது அபஸ்மாரமான, நாஸ்திகமான சப்தங்களைக் கேட்கக்கூடாது. நாம கீர்த்தனம், ஸ்தோத்ரம் என்றிப் படியே கேட்கவேண்டும். வாய் சித்த சுத்திக்கு ஹானி உண்டாக்குகிற மது மாம்ஸாதிகள், வெங்காயம் மாதிரி பதார்த்தங்களைத் தின்னக் கூடாது. ஸத்வ அபிவ்ருத்திக் கான ஆஹாரம், நைவேத்யமான ப்ரஸாதம் ஆகிய வற்றையே சாப்பிடவேண்டும். வாயால் செய்கிற இன்னொரு கார்யம் பேச்சு. அது வ்ருதாவிலும் வம்பிலும் சண்டை யிலும் செலவாகக் கூடாது. பகவந் நாமாவைச் சொல் வதற்கே வாக்கு ப்ரயோஜனமாக வேண்டும். சரீரம் என் பதைக் கொண்டு கீழ்த்தரமான சிற்றின்பங்களைப் பெறாமல், அதைக் கொண்டு பரோபகாரமே பண்ணவேண்டும்; பூஜை யும் ப்ரதக்ஷிணமும் நமஸ்காரமும் பண்ணவேண்டும். இப்படி இந்த்ரியங்களைக் கெட்ட வழியில் போகவிடாமல் அடக்கி நல்லதிலேயே கொண்டுவருவது ஒருவிதமான அடக்கம். இதை 'சமம்', 'தமம்' என்று சொல்வார்கள். "தலையே நீ வணங்காய்" பாடலில் அப்பர் ஸ்வாமிகள் இப்படித்தான் ஒவ்வொரு அவயவத்தையும் பகவத்பரமாக ஆக்குகிறதைச் சொல்லியிருக்கிறார்.

Koviloor Digital Library

'சம'த்தோடு 'தமம்' என்பதைச் சேர்த்து 'சம தமாதி' என்று சொல்வதுண்டு. 'தமம்' என்பது மனஸை அடக்குவது. இரண்டு விதமான அடக்கத்தில் ஒன்று வெறுமே இந்த்ரியங்களை மட்டும் வெளியில் கெட்ட கார்யத்தில் போக விடாமல் தடுப்பது—இதுதான் சமம். அடக்கத்தில் இரண்டாவது தினுஸான தமம் என்பது மனஸையே, உள்ளே எழுகிற எண்ணத்தையே அடக்கிவிடுவது.* கார்யத்தில் கெடுதல் செய்யாமல் இந்த்ரியங்களை அடக்கிவிடலாம். ஆனாலும் மனஸானது அந்தக் கெட்டதுகளையே கல்பித்துக்கொண்டு, அதாவது மானஸிகமாக அந்தக் கெடுதல்களைச் செய்து கொண்டு அதிலே ஸந்தோஷப்பட்டால், வெளி அடக்கத்தால் ஒரு ப்ரயோஜனமும் இல்லை. உள்ளடக்கம்தான் 'தமம், என்பது.

ஆனால் இந்த உள்ளடக்கம் ஸித்திப்பது ரொம்ப ச்ரமம். முதலில் வெளி அடக்கமான 'சம'த்தைப் பழகிப் பழகி முன்னேறினால்தான், பிறகு 'தமம்' உண்டாகும். கீதையில் கூட ஓரிடத்தில் (2—59) பகவான் சொல்லியிருக்கிறார். ஆஹாரத்தை விட்டுவிட்ட ஒருத்தனுக்கு (இங்கே 'ஆஹாரம்' என்கிறபோது பகவான் வயிற்றுச் சாப்பாட்டை மட்டுமன்றி கண், காது, மூக்கு, வாய், சரீரம் ஆகியவை அநுபவிக்கிற

---

* ''ஷட்பதீ ஸ்தோத்ர''த்தில், 'மனஸை தமம் செய்வாயாக; இந்த்ரிய விஷயங்களான கானல் நீர் வேட்கையை சமம் செய்வாயாக' என்று ஸ்பஷ்டமாக வருவதைக் கருத்தில் கொண்டு ஸ்ரீசரணர்கள் 'சமம்' என்பது வெளி இந்த்ரிய அடக்கம் என்றும், 'தமம்' என்பது உள்மனத்தின் அடக்கம் என்றும் விவரித்திருக்கிறார்கள். ஆனால் ஆசார்யாளே செய்துள்ள விரிவான ஞானநூலாகிய ''விவேக சூடாமணி''யின் 22, 23, ச்லோகங்களின் இதற்கு மாறாக, மனத்தின் அடங்கிய நிலையே 'சமம்' என்றும், இந்த்ரியங்களை ஓடாமல் நிறுத்துவதே தமம் என்றும் லக்ஷணை கொடுத்திருக்கிறது தாதுப்படிப் பொருள் பார்த்தால் 'சமம்', 'தமம்' என்ற இரண்டிற்குமே அடக்குதல் என்று மட்டுமே பொருள். அதனால் இவற்றில் இதுதான் மன அடக்கம், இதுதான் புலன் அடக்கம் என்று வலியுறுத்துவதற்கில்லை. ஸந்தர்பத்தைக் கருத்தில் கொண்டு ார்த்தால் இங்கு ஸ்ரீசரணரின் விளக்கமே பொருந்துவது.

Koviloor Digital Library

எல்லா விஷய ஸுகங்களையுமே குறிப்பிடுகிறார். இப்படி ஆஹாரம் பண்ணுவதை விட்டுவிட்டவனுக்கு) அநுபோக்ய மான அந்த வஸ்துக்கள் விட்டுப்போனதோடு ஸரி. ஆனாலும் அந்த வஸ்துக்களை அநுபோகம் பண்ணுவதில் இவன் அடைந்த ருசியின் வாஸனை மட்டும் மனஸில் இருந்து கொண்டுதான் இருக்கும். அந்த ருசியும் போய், மனஸ் எப்போது பூர்ண பரிசுத்தமாக ஆகும்? பரமாத்மாவைப் பார்த்துவிட்டால் அப்புறம்தான் இவனுக்கு வெளி விஷயாநு போகத்தோடு (வெளி நுகர்ச்சியோடு) உள்ளேயும் ரஸாநு போக இச்சை தொலையும் என்கிறார்.

"அப்படியானால் மனஸிலிருந்து விஷயவாஸனை போனால் தான் பரமாத்ம தர்சனம் கிடைக்கும் என்பது ஸரியா? அல்லது இங்கே பகவான், 'பரமாத்ம தர்சனம் கிடைத்தால் தான் மனஸிலிருந்தே வாஸனைபோகும்' என்று சொல்வது ஸரியா? இது என்ன, 'கல்யாணமானால் பைத்தியம் தெளியும்; பைத்தியம் தெளிந்தால் கல்யாணமாகும்' என்கிற மாதிரி அல்லவா இருக்கிறது?"

முதலில் நமக்கு 'மனஸ் சுத்தமாக வேண்டும்' என்ற தாபம் இருக்கவேண்டும். 'மனஸிலிருந்து வாஸனைகள், பழைய ருசிகள் அடியோடு போகவேண்டும்' என்ற தாபமும், தவிப்பும் இருக்கவேண்டும். தவிப்பு இருந்தாலும் இது லேசிலே ஸித்தித்து விடாது. அதற்காக வெளியிலேயாவது இந்த்ரியங்களால் ஸுகங்களை அநுபவிக்காமல் 'சம'த்தை அப்யாஸம் பண்ண வேண்டும். அதிலே முன்னே போகப் போகத் தானாகவே கொஞ்சம் கொஞ்சமாக 'தம'மும் கைகூட ஆரம்பிக்கும்—மனஸிலிருந்தும் வாஸனை வேகம் குறைந்துபோக ஆரம்பிக்கும். குறையுமே ஒழிய அது பூர்ண மாகத் தொலைந்து போகாமல் அவ்வப்போது வழுக்கிவிட்டுக் கொண்டுதான் இருக்கும். உறியடி உத்ஸவத்தில் வழுக்கு மரத்தில் ஏறுகிறவனின் கதையாக, எத்தனை வழுக்கினாலும் நாம் விடாமுயற்சியுடன் மேலே ஏறப்பார்க்க வேண்டும். இதிலே நம் அந்தரங்க சுத்தத்தை, ச்ரத்தையைப்

Koviloor Digital Library

பார்த்துப் பரமாத்மாவே நமக்குக் கடைசியில் தர்சனம் தருவார். அந்த தர்சனம், ஒன்று, ஸகுணமாக அவனுடைய காருண்ய, லாவண்ய மூர்த்தியினுடையதாயிருக்கலாம்; அல்லது, அரூபத்தில் நிர்குணமாக அவனுடைய ஞானனந்தத்தை நம் ஆத்மாவில், ஆத்ம ஸ்வரூபமாகவே அநுபவிப்பதாக இருக்கலாம். எப்படியானலும் கொஞ்சம் அவ்வப்போது ஜாடை மாடையாக அந்த தர்சன ருசி கிடைத்துவிட்டதானல் போதும்; அப்புறம் இந்த மனஸ் ஒரு நாளும் அதை விட்டுவிட்டு, மற்ற ருசிகளில், வாஸனைகளில் ஆழ இறங்கி முழுகிப்போகாது. அதற்கப்புறம் வழுக்கல் இருக்காது.

சமம், தமம் என்பனவற்றை 'சமாதி ஷட்க ஸம்பத்' என்பதாக ஆத்ம ஸாதகனுக்கு இருக்க வேண்டிய ஆறு ஸம்பத்துக்களில் நம் ஆசார்யாள் வைத்திருக்கிருர்.

'சம'த்தோடு சேர்ந்த நிலைதான் 'சாந்தி'; 'தம'த்தோடு சேர்ந்த நிலை 'தாந்தி' எனப்படும். இப்போது 'சாந்தி' என்ற வார்த்தை நம் எல்லோர்க்கும் தெரிகிறது. 'தாந்தி' என்ற வார்த்தை அவ்வளவாகத் தெரியாது. மடத்து ஸ்வஸ்தி வசனம் தெரிந்தவர்களானல், அதிலே ஆசார்யாளைச் சொல்கிறபோது 'சாந்தி தாந்தி பூம்நாம்' என்று வருவதை கவனித்திருப்பீர்கள். "ஷட்பதீ" ஸ்தோத்ரத்தில் பகவத் பாதாள் பகவானிடம் சாந்தி, தாந்தி இரண்டையும் ப்ரார்த்திக்கிருர்.

மன அடக்கம், புலன் அடக்கம் இதுகளுக்கு முந்தி எளிமையோடு பணிவாக இருக்கிற அடக்க குணம் இருக்க வேண்டும். சமம் வேணும், தமம் வேணும் என்று பகவானிடம் வேண்டிக்கொள்ளவே அடக்க குணமான விநய மனப்பான்மை இருந்தால் தானே முடியும்? அதனல் முதலில் 'அவிநயம் அபநய' என்று ஆரம்பித்தார். அப்புறம் 'விஷ்ணே!' என்று கூப்பிட்டு பகவானைப் பக்கத்தில் நிறுத்தி வைத்துக்கொண்டு,

Koviloor Digital Library

தமய மந:
சமய விஷய ம்ருக த்ருஷ்ணும்

என்கிருர். "மனஸுக்கு 'தாந்தி', 'தமம்' வேண்டும், அதைப் பண்ணு. என் மனஸை அடக்கு. விஷய ஸுகம் என்கிற கானல் நீரைத் தேடி ஓடுகிற இந்த்ரியங்களுக்கு 'சாந்தி' வேண்டும்; அவற்றை அடக்கி, 'சம'த்தை உண்டு பண்ணு" என்கிருர்.

"தமய மன:" என்பதும், "சமய விஷய" என்பதும் இத்தனை நேரம் நான் சொன்னதிலிருந்து உங்களுக்குப் புரிந்திருக்கும். "ம்ருக த்ருஷ்ணு" என்று வருகிறதே, அது என்ன என்று சொல்கிறேன்.

கானல் நீர்

"ம்ருக த்ருஷ்ணு" என்ருல் "கானல் நீர்" என்று அர்த்தம். ஏன் அப்படி அர்த்தம்?

இதிலே 'ம்ருகம்', 'த்ருஷ்ணு' என்று இரண்டு வார்த்தைகள் இருக்கின்றன. 'ம்ருகம்' என்ருல் விலங்கு என்பது பொது அர்த்தம். அதோடுகூட ஸம்ஸக்ருதத்தில் 'ம்ருகம்' என்ருலே, விலங்கினத்தில் குறிப்பாக மான் என்ற ஒரு ப்ராணியை விசேஷமாகக் குறிக்கும்.

ஸம்ஸ்க்ருத வார்த்தைகளைத் தமிழில் வழங்குகிறபோது சிலதில் அர்த்தத்தில் வித்யாஸம் ஏற்படுகிறது. தமிழில் மிருகம் என்ருல் பொதுவான விலங்கினம் மட்டும்தான். ஆடு, மாடு, கழுதை, குதிரை, மான், புலி, சிங்கம் எல்லாமே நமக்கு மிருகம்தான். ஸம்ஸ்க்ருதத்தில் இந்த அர்த்தம் இல்லாமலில்லை. ஆனுலும் மானை மட்டும் குறிப்பாக ம்ருகம் என்று சொல்வது ஸம்ஸ்க்ருத வழக்கு. "ம்ருகபாணி", "ம்ருகதரன்" என்றெல்லாம் பரமசிவனுக்கு ஏன் பெயரிருக்கிறது என்ருல், அவர் கையிலே ஒரு மானைப் பிடித்துக் கொண்டிருப்பதால்தான். இது மாதிரி இன்னொரு வார்த்தை "பசு" என்பது: "பசு" என்ருல் தமிழில் மாடு, ஆனினம்

Koviloor Digital Library

ஒன்றைத்தான் நினைப்போம். ஆனால் ஸம்ஸ்க்ருதத்தில் "பசு" என்றால் அது ஆடு, மாடு, குதிரை, கழுதை, புலி, சிங்கம், மான் ஆகிய எல்லா விலங்கையும் குறிக்கும். அதிலே குறிப்பாக யஜ்ஞத்தில் பலியாகும் ம்ருகத்தைப் பசு என்பார்கள். ஆடுதான் பெரும்பாலும் பலியாவதால் யஜ்ஞ பசு என்றாலே ஆடு என்றுதான் அர்த்தமாகும். மாட்டுக்கும் அந்தப் பெயர் உண்டு. பாமர நிலையிலுள்ள மநுஷ்யனும்கூடப் பசுதான்! காளைமாட்டை வாஹனமாக வைத்துக் கொண்டிருப்பதோடு, ஜீவாத்மாவுக்கெல்லாம் மேலான பரமாத்மாவாகவும் இருப்பதால் ஈச்வரனைப் "பசுபதி" என்கிறோம். அவர் ம்ருகபாணி, பசுபதி இரண்டாகவும் இருக்கிறார்.

ஸம்ஸ்க்ருதத்தில் மானினத்தை மட்டும் விசேஷமாகக் குறிப்பிடும் "ம்ருக" என்ற சொல்லால் நாம் எல்லா ப்ராணிகளையும் குறிப்பிடுகிறோம் என்றால், இதற்கு மாறாக எல்லா ப்ராணிகளையும் குறிப்பிடுகிற "பசு" என்ற சொல்லால் மாடு ஒன்றை மட்டுமே குறிப்பிடுகிறோம்.

இங்கே "ம்ருக த்ருஷ்ணா" என்கிறபோது 'ம்ருகம்' என்றால் 'மான்' என்று அர்த்தம். 'த்ருஷ்ணா' என்றால் 'தாஹம்', 'நீர் வேட்கை' என்று அர்த்தம். Thirst என்ற வார்த்தையும் 'த்ருஷ்ணா'விலிருந்துதான் வந்திருக்கும் போலிருக்கிறது. "ம்ருக த்ருஷ்ணா" என்றால் "மானின் தாஹம்" என்று அர்த்தம்.

மானின் தாஹத்துக்கும் கானல் நீருக்கும் என்ன ஸம்பந்தம்?

பாலைவனங்களில் நிறைய மான் கூட்டங்கள் இருக்கும். அவற்றுக்கு வெயில் காலத்தில் "ஹா ஹா" என்று தாஹம் எடுக்கும். ஆனால் பாலைவனத்தில் ஜலம் கிடைக்குமா? கிடைக்காவிட்டால் போகிறது. அங்கே ஜலமே கிடைக்காது என்பதாவது தெரிந்துவிட்டால் மான் கூட்டம் பாலை

Koviloor Digital Library

வனத்தை விட்டு வெளியிலே உள்ள நீர் வளமுள்ள நாட்டுக்கு ஓடிவந்து உயிரைக் காப்பாற்றிக் கொள்ள முடியும். ஆனால் இதையும் செய்ய முடியாமல் ஜலமே இல்லாத பாலேவனத்தில் ஜலம் இருக்கிற மாதிரி ஒரு ஏமாற்று ஜாலம் நடக்கிறது. அதுதான் கானல்நீர் என்பது. ப்ரதிபிம்பம் (reflection), ஒளிச் சிதறல் (refraction) 'தியரி'களைக் கொண்டு ஸயன்ஸில் இதை விளக்குகிறார்கள். மொத்தத்தில் இது என்னவென்றால், பாலேவனம் மாதிரியான ஒரு விஸ்தாரமான வெளியில் ரொம்பவும் உஷ்ணம் ஏறிப்போய், காற்று ப்ரதேசம் லேசாகி விடுகிறபோது, தூரத்திலிருந்து பார்க்கிறவர்களுக்கு ஜலத்திலே ப்ரதிபிம்பம் தெரிகிறமாதிரி மண்ணிலேயே தெரிகிறது. தூரத்திலிருந்து பார்க்கிறபோது வெறும் மணற்பாங்கான பூமியே ஒரு நதி ஓடுகிற மாதிரி தெரியும். அதை நோக்கிப் போகப் போக, அதுவும் தள்ளிப் போய்க்கொண்டேயிருக்கும்.

இப்படிப்பட்ட கானல் நீரைப் பார்த்து மான்கள் வாஸ்தவமான ஜலம் என்று நினைத்து அதைத் தேடித் தேடி ஓடி கடைசியில் ஓடமுடியாமல் களைத்து, வெயிலின் உஷ்ணம் தாங்காமல், ரொம்பவும் பரிதாபமாக ஜீவனை இழக்கும். ஸம்ஸ்க்ருதத்தில் 'ம்ருக்' என்றால் 'தேடுவது' என்று அர்த்தம். ஓயாமல் எதையாவது தேடி ஓடிக்கொண்டே இருப்பதுதான் 'ம்ருகம்'. கானல் நீரைத் தேடி ஓடி மடிவது மான் என்ற ம்ருகத்தின் பரிதாபமான கார்யமாக இருக்கிறது!

லோகமெல்லாம் மாயை என்று அத்வைத சாஸ்த்ரத்தில் சொல்லியிருக்கிறது. "அதெப்படி மாயை? லோகம்தான் கண்ணுக்குத் தெரிகிறதே?" என்று கேட்டால், "கானல் நீர் கூடத்தான் கண்ணுக்குத் தெரிகிறது. அதனால் அது நிஜமாகி விடுமா? அப்படித்தான் இந்த லோகமும் ஒரு கானல் நீர்" என்று அத்வைத க்ரந்தங்களில் சொல்லியிருக்கிறது.

Koviloor Digital Library

பாலைவன உவமையின் பொருத்தம்

இந்தக் கானல் நீர் உபமானம் லோகத்தை ஒரு ஸ்வப்ன மாக உவமிப்பதைவிடப் பொருத்தம் வாய்ந்ததாகும். ஸ்வப்னம் காண்கிறவரையில் நிஜம் மாதிரியே இருக்கிறது. விழித்துக் கொண்டபின் அது அடியோடு பொய்யாகப் போய் கனவு கண்ட ஒரே ஆஸாமியின் எண்ணம்தான் கனவில் வந்த அத்தனை ஸ்ருஷ்டியும் என்று தெரிகிறது. அந்த மாதிரிதான் நாம் அஞ்ஞான தசையில் இருக்கிறமட்டும் லோகமே நிஜம் போல இருக்கிறது. ஞானம் வந்துவிட்டால், 'இப்படி ஒன்று இல்லவே இல்லை; ஒரே ஒரு பரமாத்ம ஸத்யம்தான் இப்படிப் பல வகையான உலக ஸ்ருஷ்டியாகத் தோன்றியிருக்கிறது' என்று தெரியும். இதனால் மாயையை ஸ்வப்னத்துக்கு ஒப்பிடுவதுண்டு. "ஸரி, அப்படியானால் விழித்துக்கொண்ட பிற்பாடு ஒருத்தனுக்கு ஸ்வப்னம் தெரியாத மாதிரி, ஞானிக்கு லோகமே தெரியக்கூடாது. ஆனால் பரம ஞானி களான ஆசார்யாள், சுக ப்ரம்மம் மாதிரியானவர்களும், லோகம் என்ற ஒன்று இருக்கிற மாதிரியான பாவனை கொஞ்சம் இருந்ததால்தானே, லோக உத்தாரணத்துக்காக உபதேசங்கள் பண்ணினார்கள்? லோகமே தெரியாத நிலையில் யாருக்கு யார் உபதேசம் பண்ணுவது? என்ன உபதேசம் பண்ணுவது? இவர்கள் உபதேசம் பண்ணினதால் லோகம் இவர்களுக்குத் தெரிந்தது என்றுதானே அர்த்தம்? அப்படி யானால் இவர்களுக்கு ஞானம் வரவில்லையா?" என்று கேட்கலாம். இங்கே ஸ்வப்ன உபமானத்தைவிடக் கானல் நீர் உபமானம்தான் பொருத்தமாக பதில் கொடுக்கிறது. ஒருத்தனுக்குக் கானல் நீர் நிஜமான ஜலம் இல்லை என்று தெரிந்துவிடுகிறது. ஆனால் அதற்கப்புறமும் அவன் கண்ணுக்கு ஜலம் ஓடுகிற மாதிரியான அந்தப் பொய்த் தோற்றம் நன்றாகத் தெரிந்துகொண்டுதானே இருக்கிறது? இது, கனவிலிருந்து விழித்துக்கொண்டபின் கனா அடியோடு தெரியாத மாதிரி இல்லை. கானல் நீர் நிஜமான நீர் இல்லை என்று தெரிந்த பின்னும் அது கண்ணுக்குத் தெரியத்தான் செய்கிறது. இதனால் அவன் அதை நிஜ ஜலம் என்று நினைத்து

Koviloor Digital Library

ஓடுகிறவர்களிடம், "ஓடாதீர்கள். ஜலம் மாதிரி கண்ணுக்குத்தெரிந்தாலும் அதில் ஜலம் இல்லை" என்று எடுத்துச் சொல்லித் தடுக்க முடிகிறது.

"ம்ருக த்ருஷ்ணு"—"மானின் தாஹம்"—என்ற சொற்றொடர் அந்த தாஹத்தினுல் தேடப்படும் கானல் நீருக்கே பெயராகிவிட்டது. இது இலக்கியத்தில் அலங்கார சாஸ்த்ரத்தில் சொல்லியிருக்கிற ஓர் அணி (figure of speech) யின்படி உண்டான பெயர்.

திருமூலர் பஞ்ச இந்த்ரியங்களை "பால் பசு ஐந்து" என்று சொன்னுர். இங்கே பகவத் பாதாள் இந்த்ரியங்களை மான்களாகச் சொல்கிருர். "கானல் நீரைத் தேடி ஓடி ஓடிப் போய், பாவம், கடைசியில் வெயில் தாளாமல் ப்ராணனை விடுகிற மான்கள் மாதிரி, இந்த்ரியங்கள் ஒவ்வொன்றும் ஒவ்வொரு விதமான அல்பஸுகத்தைத் தேடித் தேடி ஓடி வீணுகப் போகிறதே! இந்தக் கஷ்டம் வேண்டாமப்பா! புலன்களின் இந்த வேட்கையை அடக்குவாய்—சமய விஷய ம்ருக த்ருஷ்ணும்" என்று மஹா விஷ்ணுவிடம் ப்ரார்த்திக்கிருர்.

லோக வாழ்க்கை ஒரு பாலைவனம். இந்த்ரியங்களுக்கு ஸுகம் மாதிரி இதிலே தோன்றுகிறதெல்லாம் கானல் நீர் தான்.

ஒரு ப்ரதேசம் பாலைவனமான பின் அதிலே ஜலமே இல்லை. பொய் ஜலம்தான் கானல் நீராகத் தெரிகிறது. ஆனுல் அந்த ப்ரதேசம் பாலைவனமாவதற்கு முன் எப்படி இருந்தது என்பதற்கு ஜியாலஜியில் சொல்வதைக் கேட்டால் ஆச்சர்யமாக இருக்கும். ஆதியிலே பெரிய ஜலாசயங்களாக, நீர் நிலைகளாக, ஸமுத்ரமாக இருந்த இடங்கள்தான் பிற்பாடு பல மாறுதல்களால் பாலைவனங்களாகிவிட்டன என்று பூதத்வ சாஸ்த்ரத்தில் ஆராய்ச்சி செய்து விளக்குகிருர்கள். முக்யமாக இப்போது பாலைவனமாக இருக்கிற ப்ரதேசங்களைத் தோண்டிப் பார்க்கிறபோது, அவற்றில்

Koviloor Digital Library

ஸமுத்ரத்தில் மாத்திரமே வாழக் கூடிய திமிங்கிலங்கள். மீன்கள் முதலியவற்றின் எலும்புகள், கிளிஞ்சல் சிப்பிகள் முதலியன கிடைக்கின்றன. இதனால் ஆதிகாலத்தில் பெரிய நீர் நிலைகளாக இருந்தவைதான் இன்றைய பாலைவனங்களாகியிருக்கின்றன என்று தெரிகிறது. ஒவ்வொரு ஸமயங்களில் ஏற்பட்ட பூகம்பம் முதலான பெரிய சலனங்களால் ஸமுத்ரத்தில் சில இடங்களில் அடி பூமி முற்றிலும் மேலுக்கு வந்து வளைத்துக்கொண்டு அதற்கு நடுவே land-locked-ஆக ஸமுத்ர ஜலம் தேங்கியிருக்கிறது. அப்புறம் ஸூர்ய உஷ்ணத்தினாலும், இன்னும் வேறு தினுசான பருவ மாறுபாடுகளாலும் இந்த ஜலம் வற்றிப்போன பிற்பாடுதான், ஒரு காலத்தில் நீர்நிலையாக இருந்த இடங்களே பிறகு சொட்டு ஜலம்கூட இல்லாத பாலைவனங்களாகிவிட்டன என்கிறார்கள்.

பூலோகம் என்ற ஒன்று ஸ்ருஷ்டியாகிற போதே அதன் பூமிப்பகுதியில் தான் மநுஷ்ய இனம் ஜீவிக்க வேண்டும் என்றும் ஸங்கல்பமாகி, அதிலே மநுஷ்யனுக்குத் தேவையான தான்யம் விளையவும், நதிகள் ஓடவும் ஏற்பாடுகள் ஆகியிருக்கின்றன. இந்த ப்ரபஞ்ச நிர்மாணத்தைப் பற்றிக் கொஞ்சம் நினைத்துப் பார்த்தாலே ரொம்ப விசித்ரமாகவும், ப்ரமிப்பாகவும் இருக்கிறது. கடைசியில் இதெல்லாம் பொய், கானல் நீர், ம்ருக த்ருஷ்ணை என்றுதான் இத்தனை நாழி லெக்சர் அடித்தேன். ஆனால் ஒரு கானல் நீர்கூடக் கண்ணுக்குத் தெரிகிற வரையில் மஹாவிசித்ரமாக இருப்பதுபோல், இந்த லோக மாயையையும் பகவான் பரம விசித்ரமாகத்தான் நிர்மாணம் பண்ணியிருக்கிறான். இதில் இங்கே ஒரு மலை இருக்கிறது, அங்கே ஒரு பள்ளத்தாக்கு இருக்கிறது, இன்னோரிடத்தில் ஒரு நதி ஓடுகிறது என்றால், இவை ஒவ்வொன்றுக்கும் ஒரு ப்ரயோஜனம் இருக்கிறது, அர்த்தம் இருக்கிறது. பௌதிகமான லோகத்தில் ஆறு, மலை, ஸமவெளி என்று பல தினுஸாக வைத்து, ஜீவ சைதன்யமுள்ள ப்ராணி வர்க்கத்திலும், மநுஷ்யன், ம்ருகம், பக்ஷி, நீர் வாழ்வன, நிலம் வாழ்வன என்றெல்லாம் பல தினுஸாக வைத்து, இவற்றையெல்லாம் அதி விசித்ரமாக ஒன்றோடொன்று பொருத்தி,

Koviloor Digital Library

இயற்கை என்ற பெயரில் பரமாத்மா லீலை செய்கிறார். அந்த லீலையில் சில ஸமயங்களில் பொருத்தமில்லாமல் விபரீதமாக வும் துளித்துளி செய்துவிடுகிறார். முழுக்கப் பொருந்தி யிருந்து விட்டால் இந்த லோகம்தான் முழு நிஜம் என்று ஏற்பட்டு விடுமே! அப்படித் தோன்றக் கூடாது என்றுதான் போலிருக்கிறது, இதிலே பொருத்தமில்லாமல் விபரீதமாக வும் ஏதாவது அவ்வப்போது நடத்திக் காட்டுகிறார். அதனால் தான் ஒரு பூகம்பம் வருகிறது; ஒரு எரிமலை வெடிக்கிறது. இம்மாதிரி ஒன்றாக, ஸமுத்ரத்திலே சில பாகம் நிலப் பகுதியோடு சேர்ந்து பாலைவனமாகிறது.

ஆதியிலேயே மநுஷ்யனுக்கு இருப்பிடமாக ஸங்கல்ப மான பூமியில், அவனுடைய வாழ்வுக்கு அவச்யமான மழை, நதி, பயிர் பச்சை எல்லாம் இருக்கின்றன. ஆனால் இப்போது விபரீதமாக பூமியோடு ஸமுத்ரப்பகுதியும் வற்றிச் சேர்கிற போது, இப்படிப்பட்ட பாலைவன பூமியில் மழையும் இல்லை, பயிர் பச்சையும் இல்லை. ஆதியில் பரமாத்மா, 'இது கடல் ப்ரதேசம், அதனால் இந்த இடத்தில் ஜலத்தின் உள்ளோட்டம் (under current) வேண்டாம்' என்று வைத்து விட்ட இடம்தானே இப்போது நிலப்பகுதியோடு சேர்ந்து விட்டது, அப்படிச் சேர்ந்துவிட்டது என்பதற்காக அவர் பழைய இயற்கை விதிகளை மாற்றி விடுவதில்லை. இதனால் தான் ஒரு காலத்தில் ஜல ப்ரவாஹமாக இருந்த இடமே பிற்பாடு சொட்டு ஜலம் இல்லாத பொட்டலாகி விடுகிறது!

ஸஹாரா—ஸாகரம்

பாலைவன விஷயமாக என் 'ரிஸர்ச்' ஒன்றைச் சொல் கிறேன். இப்போது ஸஹாரா பாலைவனமாக இருப்பது ஒரு காலத்தில் ஸமுத்ரமாக இருந்த இடம் என்று ஜியாலஜிக் காரர்கள் சொல்கிறார்கள். உங்களுக்கு ராமாயணக் கதை தெரிந்திருக்கலாம். ஸகரன் என்ற ராஜாவின் பிள்ளைகள் தான் பூமியை வெட்டிக்கொண்டே போய் ஸமுத்ரத்தை உண்டாக்கினார்கள் என்று அதில் சொல்லியிருக்கிறது. ஸகர

Koviloor Digital Library

புத்ரர்கள் வெட்டியதாலேயே ஸமுத்ரத்துக்கு "ஸாகரம்" என்ற பெயர் ஏற்பட்டிருக்கிறது. ஸாகரம் என்பதுதான் மருவி 'ஸஹாரா' என்றாயிருக்கிறதென்று நினைக்கிறேன்.

இந்தியாவில் ராஜஸ்தானம் இப்படிப்பட்ட ஒரு பாலை வனமாகத்தான் இருக்கிறது. பாலைவனத்துக்கு ஸம்ஸ்க்ருதத்தில் 'மருவாடிகா' என்று பெயர். இதனால்தான் ராஜஸ்தான்காரர்களை நாம் 'மார்வாடி' என்று சொல்கிறோம்.

ஒரு காலத்தில் உயிரையும் செழிப்பையும் ஊட்டுவதான ஜலம் ஸமுத்ரமாக இருந்த இடமே இப்போது பாலைவனமாக இருக்கிறது என்கிற மாதிரி, இந்த லோக வாழ்வான பாலைவனமும் உயிருக்கு ஸாரமான பரமாத்மாவிடமிருந்து வந்ததுதான்! ஆனால் அதிலே இப்போது ஆத்மாவை வளர்க்கிற ஸாரம் இல்லை. காமம், க்ரோதம் முதலான கானல் நீரோட்டம்தான் நம்மை இழுக்கடித்து, அலையாக அலைய வைத்து, நாசம் பண்ணுகிறது. இதைத்தான் ஆசார்யாள் "விஷய ம்ருக த்ருஷ்ணா" என்றார்.

முதலில் விநயத்தை, எளிமையை வேண்டினார். பிறகு மன அடக்கத்தை ப்ரார்த்தித்தார். அப்புறம் இந்த்ரியங்கள் பலவிதமான ஆசைக் கானல் நீரை நோக்கி ஓடாமல் இருக்கும்படி அவற்றின் தாஹத்தை அடக்கச் சொல்கிறார்.

ஏன் தாந்திக்குப் பின் சாந்தி?

முதலில் வெளிப்புலனடக்கமும், அதற்குப் பிற்பாடே உள் விஷயமான மன அடக்கமும் ஸித்திக்கும் என்றாலும் இங்கே ஏன் மாறுதலாக, முதலில் மன அடக்கமான தாந்தியையும், பிறகு புலனடக்கமான சாந்தியையும் சொன்னார் என்றால், இந்தப் புலனடக்கமும் மன அடக்கம் என்ற லக்ஷ்யத்துக்கு ஸாதனம் என்று உணர்த்துவதற்காகத்தான். மன அடக்கத்துக்காக அல்லாமல், வேறு காரணங்களுக்காகவும் புலனை அடக்கலாம். கண்ணிலே கெடுதல் என்றால் ஸினிமா பார்க்காமல் அந்தப் புலனை அடக்கச் சொல்கிறார்

Koviloor Digital Library

கள்; குடலில் புண் என்றால் மது மாம்ஸாதிகளைச் சாப்பிடக் கூடாது என்கிறார்கள். இங்கெல்லாம் ஒரு புலனின் ஆசையை அடக்குவதை மன அடக்கத்துக்கு வழியாகச் சொல்லவில்லை. இப்படியில்லாமல் மனஸ் அடங்குவதற்கு வழியாகவே இந்த்ரிய ஜயம் செய்வதுதான் ஆத்மாபிவ்ருத்திக்கு வேண்டியது என்பதால், அந்த லக்ஷ்யத்தை மறக்கக்கூடாது என்றே, முதலில் லக்ஷ்யமான மன அடக்கத்தை ப்ரார்த்தித்துவிட்டு, அதற்கப்புறம் அதற்கு ஸாதனமான புலனடக்கத்தைச் சொன்ன மாதிரி தோன்று கிறது.

"என் அடங்காப்பிடாரித்தன அவிநயத்தைப் போக்கு. மனஸை அடக்கு. விஷய ஸுகமான கானல்நீரை நோக்கி ஓடுகிற என் இந்த்ரியங்களைக் கட்டிப்போடு" என்று இது வரை ஒரு பக்தன் தன்னளவில் ப்ரார்த்தித்துக் கொள்ள வேண்டியதையெல்லாம் சொன்னார் ஸ்ரீ ஆசார்யாள். ஒருத்தனுக்கு எளிமை வந்து, மனஸும் இந்த்ரியமும் வசமாகி ஆசைப் பூர்த்திக்காக அலையாக அலைவதும் முடிந்து விட்டதென்றால், அப்புறம் தன்னளவில் வேறொன்றுமே வேண்டாம்.

தனது உய்வோடு உலகமும் உய்ய

ஆனால் ஆசார்யாள் இப்படித் தன்னளவில் மோக்ஷத்துக் கான உபாயங்களை ஸாதித்துக் கொள்வதோடு ப்ரார்த்தனையை நிறுத்தவில்லை. அவர் லோகமெல்லாம் பொய், மாயை என்று ஒரு பக்கம் சொன்னவர் என்றால், இன்னொரு பக்கம் லோகம் முழுதிடமும் பரம கருணை கொண்டவர். லோகம் பொய் என்று அவர் சொன்னபோது இது மலடி மகன் மாதிரியோ முயல் கொம்பு மாதிரியோ முழுப்பொய் என்று சொல்லவில்லை. லோகம் ஒரு ஸ்வப்னம் மாதிரி என்பதையே மாயை, பொய் என்றார். ஸ்வப்னம் என்பது மலடிமகன் மாதிரியோ, முயல் கொம்பு மாதிரியோ ஒரு காலும் இல்லாத பொய் இல்லை. ஸ்வப்னம் காணுகிற வரைக்கும் அது இருக்கத்தான் செய்கிறது. ரொம்பவும்

Koviloor Digital Library

நிஜம் மாதிரியே இருக்கிறது ஆனாலும் விழித்துக்கொண்ட பின் பொய்யாகி விடுகிறது இப்படி அரை குறை உண்மையாக இருப்பதைத்தான் மாயை, மித்யை, ப்ராதிபாஸிக ஸத்யம் என்றெல்லாம் ஆசார்யாள் சொல்லியிருக்கிறார். லோகத்தையே முழு ஸத்யம் என்று நினைத்து நாம் தடுமாறிக் கொண்டிருக்கிறோம். நம்மை ஞானிகளாக விழிக்கப் பண்ணி, இந்த ஸ்வப்னத்தைக் கலைத்துக்கொள்ளும்படியாகச் செய்யவேண்டும் என்கிறதையே ஒரு ஜன்ம வ்ரதம் மாதிரி வைத்துக்கொண்டு, பரம கருணையுடன், நமக்காக ரொம்ப இளவயஸிலிருந்தே அலுக்காமல் சலிக்காமல் மூன்று தடவை இந்த தேசம் முழுவதையும் சுற்றி ஸஞ்சாரம் செய்தவர் நம் ஆசார்யாள். தாம் ஸதா காலமும் இருந்து கொண்டிருந்த பரமஞான நிலையிலேயே ஆத்மாராமனாக அவர் பாட்டுக்கு உட்கார்ந்து கொண்டிருக்கலாம். ஆனால் அவர் அப்படிச் செய்யாமல் க்ஷணம்கூடச் சும்மாயிராமல், இத்தனை பாஷ்யம் எழுதினார், ஸ்தோத்ரம் எழுதினார், ஊர் ஊராய்ப் போய் வாதம் பண்ணினார், க்ஷேத்ரம் க்ஷேத்ரமாகப் போய் மூர்த்தி ப்ரதிஷ்டை, யந்த்ர ப்ரதிஷ்டை என்றிப்படிப் பண்ணினார் என்றால் இத்தனைக்கும் காரணம் அவருடைய அளவிட முடியாத கருணைதான்.

அதனால்தான் இந்த ஷட்பதீ ஸ்தோத்ரத்தில் மஹா விஷ்ணுவிடம் ப்ரார்த்தனை பண்ணும்போதும், அவிநயம் அபநய, தமய மன; சமய விஷய ம்ருக த்ருஷ்ணாம் என்பதாக ஒரு பக்தன், தன் நிறைவுக்கான ஸகலத்தையும் வேண்டிக் கொள்வதோடு நிறுத்தாமல், இதைத் தொடர்ந்து,

பூத தயாம் விஸ்தாரய

என்கிறார்.

"உயிர்க் குலம் முழுதிடமும் என் அன்பை, அருளை, தயையை விஸ்தாரமாக ஆக்கு அப்பா!" என்று ப்ரார்த்தனை பண்ணுகிறார்.

இங்கே 'பூதம்' என்றால் 'ப்ராணி வர்க்கம்', 'உயிர்க் குலம்.'

Koviloor Digital Library

தான் உய்வதோடு, தனது அன்பினாலே உலகையும் உய்யப் பண்ணவேண்டும் என்று நினைத்துச் சொல்கிறார்.

எத்தனை ஞானம் வந்தாலும் போதாது, ஹ்ருதயத்தில் தயையை ரொப்பிக் கொண்டு ஸமஸ்த ஜீவராசிகளுக்கும் நல்லது பண்ணிக் கொண்டே இருக்கவேண்டும். 'சங்கரர்' என்றாலே 'நல்லது பண்ணுகிறவர்' என்றுதான் அர்த்தம் (root - meaning). சம்—நல்லது; கரர்—செய்கிறவர்.

பிள்ளையாரைப் பற்றி ஸகலருக்கும் தெரிகிற 'சுக்லாம் பரதரம்' ச்லோகம் மாதிரி, ஒவ்வொரு ஸ்வாமி பற்றியும் ஏராளமான ச்லோகம் இருந்தாலும் ஏதாவது ஒன்று ரொம்ப ப்ரஸித்தமாக இருக்கும். ஸ்ரீராமன் என்றால் 'ஆபதாம் அபஹர்த்தாரம்' பலருக்கும் தெரிந்திருக்கும். ஸரஸ்வதி என்றால் 'யா குந்தேந்து' அநேகமாகப் பல பேருக்குத் தெரியும். விஷ்ணுவுக்கு 'சாந்தாகாரம் புஜக சயனம்' ச்லோகம். அம்பாளுக்கு "ஸர்வ மங்கள மாங்கல்யே". இந்த மாதிரி நம் ஆசார்யாளைப் பற்றி ப்ரஸித்தமாக இருக்கிற ச்லோகம்:

> ச்ருதி ஸம்ருதி புராணானாம் ஆலயம் கருணாலயம்
> நமாமி பகவத்பாத சங்கரம் லோக சங்கரம்

இதிலே முதலில் அவர் வேதம் (ச்ருதி), சாஸ்த்ரம் (ஸ்ம்ருதி), புராணம் எல்லாவற்றுக்கும் உறைவிடமான (ஆலயமான) மஹா பெரிய அறிவாளி என்று சொல்லி விட்டு, அப்புறம் "கருணாலயம்", அவர் கருணையே குடி கொண்ட ஒரு கோயில் என்றும் சொல்லியிருக்கிறது. முடிக்கிறபோதும், அவர் சங்கரர், லோகத்துக்கெல்லாம் சம் - கரர், நல்லதைச் செய்பவர் என்றும் சொல்லியிருக் கிறது. ஸகல ஜீவர்களிடமும் கருணை, ஸர்வபூத தயை ஆசார்யாளின் குணவிசேஷம்.

ஆசார்யாள் ஞானத்திலும் ஸமுத்ரம், கருணையிலும் ஸமுத்ரம். அதனால்தான் நமக்கும் ப்ரார்த்தனை பண்ணச் சொல்லிக் கொடுக்கும்போது ஆத்மாபிவ்ருத்தியோடு நிறுத் தாமல், பூத தயையை வேண்டிக்கொள்ளச் சொல்கிறார்.

Koviloor Digital Library

இங்கே "பூத தயையை விஸ்தாரப்படுத்து" என்று மஹா விஷ்ணுவிடம் வேண்டிக் கொண்டவர், 'சிவ அபராத க்ஷமாபன ஸ்தோத்ரம்' என்பதில் பரமேச்வரனை ப்ரார்த்திக்கும் போது.

ப்ராணிநாம் நிர்தயத்வம மாபூதேவம் மம பசுபதே! ஜந்ம ஜந்மாந்தரேஷு என்கிறார்.

("பௌரோஹித்யம் என்று ஆரம்பிக்கும்) அந்த ச்லோகத்தில் 'எனக்கு இன்னின்ன நல்லதுகள் வேண்டும்' என்று சொல்லாமல், 'என்னிடம் இன்னின்ன கெட்டதுகள் சேராமலிருக்க வேண்டும்' என்று பலவற்றைச் சொல்லிக் கொண்டே போகிறார். அந்த வரிசையில்தான், "எனக்கு ப்ராணிகளிடம் நிர்தயை (தயையின்மை) ஜன்ம ஜன்மத்திலும் ஏற்படாமல் இருக்கட்டும்" என்கிறார். ஸம்ஹார மூர்த்தியான ஈச்வரனிடத்தில் தயையின்மையை நாசம் செய்யும்படி 'நெகடிவ்' ஆக வேண்டிக்கொண்டவர் இங்கே ஜகத் பரிபாலன மூர்த்தியான மஹா விஷ்ணுவிடம் 'பாஸிடிவ்' ஆக,

பூத தயாம் விஸ்தாரய

என்று ப்ரார்த்தனை பண்ணுகிறார்.

ஸரி, இன்னம் என்ன ப்ரார்த்தனை பண்ணவேண்டும்?

"அக்கரை அடைவிப்பாய்!"

தாரய ஸம்ஸார ஸாகரத:

என்று முதல் ச்லோகத்தை ஆசார்யாள் முடிக்கிறார். "ஸம்ஸார ஸாகரத்திலிருந்து கரையேற்று!" என்று அர்த்தம்.

தாரகம் என்றால் கடத்துவிப்பது, படகிலே வைத்து ஓட்டிக்கொண்டு போய் அக்கரை சேர்ப்பது என்று அர்த்தம். ப்ரணவத்தையும், ராம நாமாவையும் தாரக மந்த்ரம் என்று சொல்வது வழக்கம். "தாரக நாமா!" என்று த்யாகராஜர் கூட ராமசந்த்ர மூர்த்தியைத் தாபத்தோடு கூப்பிட்டுப்

Koviloor Digital Library

பாடியிருக்கிறார். ஸம்ஸாரக் கடலில் விழுந்து, அவஸ்தைப் பட்டுக் கொண்டிருக்கிற நம்மைப் படகிலே தூக்கிப்போட்டுக் கொண்டு பரமபதமான அக்கரையில் கொண்டு போய்ச் சேர்ப்பதுதான் தாரக மந்த்ரம்.

இந்த ச்லோகத்தில் என்னென்னவோ வேண்டிக்கொண்டாரே, அவிநயம் போகவேண்டும், மனஸ் அடங்க வேண்டும், இந்த்ரியங்களின் கானல் நீர் வேட்கை முடிய வேண்டும், ஸமஸ்த ஜீவ ராசிகளிடம் தயை பெருக வேண்டும் என்றெல்லாம் வேண்டிக்கொண்டாரே, அத்தனைக்கும் முடிந்த முடிவு என்ன என்றால், ஸம்ஸாரம் என்ற இந்த ஜனன - மரண சக்ரத்திலிருந்து தப்பி, மோக்ஷஸ்தானம் என்ற நித்ய ஸுகமான விடுதலை நிலையில் சேரவேண்டும் என்பதுதான்.

இப்போது நாம் இந்த ஸம்ஸாரத்தில் சிக்கிக்கொண்டு அவதிப்படுவது நன்றாகத் தெரிகிறது. இதிலிருந்து மீள வேண்டும். மீட்கிறவன் பகாவன்தான். அவனிடம், "அப்பா, இந்த பவக் கடலிலிருந்து அக்கரைக்குக் கடத்துவி!"

தாரய ஸம்ஸார ஸாகரத:

என்று ப்ரார்த்தனை பண்ணவேண்டும்.

அவன் இந்த ஸம்ஸாரக் கடலிலிருந்து நம்மை மீட்பானானால் அப்புறம் நாம் இப்போது இந்த லோகத்தில் படுகிற துக்கம், கஷ்டம் இராது. அந்த மட்டில் இப்போதைக்குப் போதும். உங்களுக்கு நான் அத்வைத முக்தி, த்வைத முக்தி, விசிஷ்டாத்வைத முக்தி என்ற பேதங்களையெல்லாம் இங்கே சொல்லப் போவதில்லை. எந்த ஸித்தாந்தத்தைச் சேர்ந்தவர்களானாலும் பகவத்பாதாள் இந்த ச்லோகத்தில் சொல்லியிருக்கிற மாதிரி பகவானிடம் ப்ரார்த்தனை பண்ணுவோம். ப்ரார்த்தனைக்கு பலனைத் தர வேண்டிய பலதாதாவாக இருக்கப்பட்ட பகவான் எந்த தினுஸில் நமக்கு இந்த ஸம்ஸாரத்திலிருந்து மீட்சி தர நினைக்கிறானோ, அப்படித் தருவான்,

Koviloor Digital Library

இங்கே "தாரய ஸம்ஸார ஸாகரத:" என்று சொன்ன மாதிரியே, இதைவிடக் கூட மனஸை உருக்கும்படியாக 'பஜ கோவிந்த'த்திலும் ஆசார்யாள்,

> இஹ ஸம்ஸாரே பஹு துஸ்தாரே
> க்ருபயா பாரே பாஹி முராரே

என்று முறையிட்டிருக்கிறார்.

தாரம் - கடப்பது; துஸ்தாரம் - கடக்க முடியாதது; பஹு துஸ்தாரம் - இந்த ஸம்ஸாரம் அடியோடு கடக்க முடியாததுதான். அதாவது நாமாக எத்தனை முயற்சி பண்ணினாலும் முடியாது. ஆனால் பகவானின் க்ருபை பொங்கி வந்துவிட்டால் இந்த ஸம்ஸாரம் என்ன பண்ணும்? அவனுடைய அருளால் எதைத்தான் செய்ய முடியாது? "அப்படிப்பட்ட உன் க்ருபையால் என்னை அக்கரை சேரப்பா, முராரியே!" என்று ப்ரார்த்திக்கிறார். பாரம் என்றால் கரை. இங்கே ஸம்ஸாரக் கடலின் அக்கரையில் சேர்க்கச் சொல்வதாக அர்த்தம்.

புத்தியிலும், ஞானத்திலும், வாக் சக்தியிலும் மேரு மாதிரியான நம் ஆசார்யாள், பரம பவ்யமாக அடங்கி நின்று, 'நம்மால் ஆவது எதுவுமில்லை; ஈச்வர க்ருபைதான், தயைதான் எதையும் செய்யும்' என்கிற விநயத்தோடுகூட 'க்ருபயா', 'தயயா' என்று சொல்கிற இடங்கள் 'ஸௌந்தர்ய லஹரி'யிலும் உண்டு. "தகுதி பார்க்காமல் என்னையும் உன் கடாக்ஷ தாரையால் க்ருபையோடுகூட ஸ்நானம் பண்ணுவிப்பாய் அம்மா" என்கிற இடத்தில் "ஸ்நபய க்ருபயா மாம் அபி சிவே" என்கிறார். மறுபடியும், "அம்மா, என் தலையிலும்கூட உன் பாதங்களை தயையோடு வைப்பாய்" என்கிறபோது, "சிரஸி தயயா தேஹி சரணௌ என்கிறார்."

ஷட்பதீ ஸ்தோத்ரத்தில் 'க்ருபயா' என்று போடா விட்டாலும் இந்த ஸ்துதி பூராவும் பகவானின் க்ருபையையும் மற்ற அநந்த கல்யாணகுணங்களையும் பரம மங்கள ஸ்வரூபத்தையும் நினைத்துக் கொண்டேதான் செய்திருக்

Koviloor Digital Library

கிறுர். நமக்கே அவனிடமிருந்துதான் பூத தயை வேண்டு கிறோம் என்றுல் அதன் தயாளுவாக, க்ருபாளுவாகத்தானே இருக்கவேண்டும்?

இனிய எளிய ச்லோகம்

அடுத்த ச்லோகத்தில் பகவானின் பாதத்தை வர்ணிக் கிறுர் நம் பகவத்பாதாள். "ஷட்பதீ"யின் அடுத்த பதம் பகவத் பாதம்!

திவ்யதுநீ-மகரந்தே
பரிமள பரிபோக ஸச் ஸிதாநந்தே!
ஸ்ரீபதி பதாரவிந்தே
பவ பய கேத ச்சிதே-வந்தே!!

திருப்பித் திருப்பிச் சொல்லிக் கொண்டேயிருக்கலாம் போல் மதுரமான அக்ஷரங்களோடு, லளிதமான பதச் சேர்க்கையோடு இருக்கிறது ச்லோகம். பகவானின் பாத தாமரையை வர்ணிக்கிற ச்லோகத்தில் வார்த்தை களும் புஷ்பம் போல் ம்ருதுவாக அமைந்திருக்கின்றன. 'மகரந்தே', 'ஆனந்தே', 'அரவிந்தே', 'வந்தே' என்று ஒவ்வொரு பாதமும் rhyme-ஆக முடிவதிலேயே ஒரு ஆனந்தம் சுரக்கிறது.

செய்யுளின் ஒவ்வொரு அடியின் ஆரம்பமும் rhyme ஆவது தமிழில் விசேஷமாக இருக்கிறது. இதற்குத்தான் 'எதுகை' என்று பெயர். தேவாரத்தில், திவ்ய ப்ரபந்தத்தில் எங்கே பார்த்தாலும் இப்படித்தான் ஒவ்வொரு அடியின் நாலுவரியிலும் ஆரம்ப அக்ஷரம் ஒரே தொனியில் எல்லாம் நெடிலாகவோ குறிலாகவோ ஆரம்பிக்கும்; அந்த முதல் வார்த்தையின் இரண்டாம் எழுத்து நாலு அடியிலும் ஒன்றுகவே இருக்கும்.

காத லாகிக் கசிந்துகண் ணீர்மல்கி
ஓது வார்தமை நன்னெறிக் குய்ப்பது
வேதம் நான்கினும் மெய்ப்பொரு ளாவது
நாதன் நாமம் நமச்சி வாயவே

Koviloor Digital Library

என்கிறபோது, முதலெழுத்து எல்லாம் —கா, ஓ, வே, நா என்கிற— நாலும் நெடிலாக இருக்கின்றன. இரண்டாவது எழுத்து நாலுவரியிலும் 'த' தான். இது ஞான ஸம்பந்தர் தேவாரம். இதே மாதிரி அப்பர் ஸ்வாமிகள் நமசிவாய மஹிமையைச் சொல்லி,

சொற்றுணை வேதியன் சோதி வானவன்
பொற்றுணை திருந்தடி பொருந்தக் கைதொழக்
கற்றுணைப் பூட்டியோர் கடலிற் பாய்ச்சினும்
நற்றுணை யாவது நமச்சி வாயவே

என்று பாடுகிறபோது, முதல் வரியின் முதல் எழுத்து 'சொ' என்று குறிலாக இருப்பதால் மற்ற வரிகளிலும் 'பொ', 'க', 'ந' என்று குறிலே ஆரம்பமாயிருக்கிறது. இந்த தேவாரத்தில் 'ற்று' இரண்டாவது எழுத்தாக மட்டுமில்லாமல், மூன்றுவது எழுத்தான 'ணை'யும் எல்லா வரியிலும் திரும்புகிறது.

ஒரு செய்யுளின் ஆரம்ப வார்த்தைகள் "ரைம்" ஆகிற எதுகையை ஆரம்ப ப்ராஸம் என்பார்கள். ஸாதாரணமாக ஸம்ஸ்க்ருதத்தில் இப்படி ஆரம்ப வார்த்தைகள் 'ரைம்' ஆகாமல் ஒவ்வொரு வரியின் முடிவான வார்த்தையும்தான் "ரைம்" ஆவது வழக்கம். அந்திய வார்த்தை ஒரே மாதிரி வருகிற இந்த அணியை அந்த்ய ப்ராஸம் என்பார்கள். உதாரணமாக இந்த மடத்துப் பூஜை முடிவில் ஒவ்வொரு வேளையும் சொல்கிற

ஸமரவிஜய கோடீ ஸாதகாநந்த தாடீ
ம்ருதுகுண கணபேடீ முக்ய காதம்ப வாடீ
முனிநுத பரிபாடீ மோஹிதாஜாண்ட கோடீ
பரமசிவ வதூடீ பாதுமாம் காமகோடீ

என்கிற ச்லோகதித்ல் பளிச்சென்று தெரிகிற மாதிரி ஒவ்வொரு அடியின் முடிவும் 'ரைம்' ஆகிற அந்த்ய ப்ராஸம் வருகிறது. இது ஜகன்மாதாவான காமாக்ஷியைப் பற்றி மூகர் பண்ணின "பஞ்ச சதீ" யில் வருகிற ச்லோகம்.

Koviloor Digital Library

தத்வ ரீதியிலும், அநுபவரீதியிலும், கவித்வ ரீதியிலும் உயர்ந்ததான ஸ்துதிகளில் இம்மாதிரிச் சொல்லணிகளும் சேர்ந்து அவற்றின் அழகையும் சிறப்பையும் உயர்த்துவ துண்டு. ஷட்பதீ ஸ்தோத்ரத்திலும் இப்படிப்பட்ட சொல் ஜாலங்கள் (word-play) நிறைய உண்டு.

இடையின, மெல்லின எழுத்துக்களில் ஒரே மாதிரி யானவை திரும்பத் திரும்ப வந்தால் சொல்வதற்கே மதுரமாக இருக்கும். 'அவிநயம் அபநய; தமய மந: சமய' என்கிறபோது ந,ய,ம என்ற அக்ஷரங்கள் திரும்பத் திரும்ப வருகின்றன. சொல்ல அழகாக இருக்கிறது. ஒரே போன்ற சப்தங்களுள்ள வார்த்தைகள் அடுக்காக வருகின்றன. 'விஸ்தாரய—தாரய' என்றும் போட்டிருக்கிறுர். இதை 'யமகம்' என்றும் 'மடக்கு' என்றும் சொல்வார்கள்.

உச்சரிப்பதற்கு அழகாக இருப்பதோடு இப்படிப்பட்ட சொல்லணிகளைக் கையாள்வதால் அவை மனஸில் நன்ருகப் பதிந்து ச்லோகங்களை நினைவு வைத்துக்கொண்டு மனப்பாடம் பண்ணுவதும் ஸுலபமாகிறது.

இரண்டாவது ச்லோகம், சற்று முன் சொன்னேனே, அதில் 'மகரந்தே, ஆனந்தே, அரவிந்தே, வந்தே' என்று அந்த்ய ப்ராஸம் வைத்துக் கவித்வ ரீதியில் ச்லோகத்தை அலங்காரம் பண்ணியிருக்கிற ஆசார்யாள், அதனுலேயே நாம் ஸுலபமாக நெட்டுருப் போடுகிற மாதிரியும் அநுக்ரஹம் பண்ணியிருக்கிறுர்.

திருமகளும் தாமரையும்

பகவான் விஷ்ணுவின் பாதங்களைத் தாமரைப் பூவுக்கு ஒப்பிடுகிறுர் நம் பகவத்பாதர்கள்.

ஸ்ரீபதி பதாரவிந்தே

'பத அரவிந்தம்' என்ருல் திருவடித் தாமரை. ஸ்ரீ என்ருல் மஹாலக்ஷ்மி. ஸ்ரீபதி—லக்ஷ்மீ நாராயணன். ஸ்ரீபதிக்குத் தாமரைப் பாதமிருப்பது மிகவும் பொருத்தம் ஏனென்ருல் லக்ஷ்மிக்கு தாமரைப்பூ ஸம்பந்தம் ரொம்பவும் ஜாஸ்தி.

Koviloor Digital Library

பத்மப்ரியே பத்மினி பத்ம ஹஸ்தே
பத்மாலயே பத்ம தளாயதாக்ஷி

என்று அவளை ஸ்தோத்ரம் செய்வார்கள். அவளுக்கு தாமரைப் பூவிடம் ப்ரியம் அதிகம். ஆகையால் "பத்ம ப்ரியே"! பத்மினி என்றால் தாமரைக்கொடி. மஹாலக்ஷ்மி இப்படித்தான் ஸௌகுமார்யத்தால் துவண்ட கொடியாக இருக்கிறாள். பெண்களில் உத்தமமான லக்ஷணம் உடையவர்களை 'பத்மினி ஜாதி' என்பதே வழக்கம். 'பத்மினி' என்றால் பத்மங்களை உடையவள் என்றும் அர்த்தம் செய்துகொள்ளலாம்.

லக்ஷ்மி நித்யவாஸம் செய்வதாக ஐந்து இடங்கள் உள்ளன. தாமரைப் பூவின் மத்தி, யானையின் மஸ்தகம் (தலை), பசுவின் பின்புறம், வில்வ இலையின் பின்பக்கம், ஸுமங்கலிகளின் ஸீமந்தம் (வகிடு) என்பவை இந்த ஐந்து. இப்படி ஐந்து இருந்தாலும் எல்லாருக்கும் தெரிந்தது அவள் தாமரைப்பூவில் உட்கார்ந்திருக்கிறாளென்பதுதான். படங்களில் அப்படியே போட்டிருக்கிறது. சில்பங்களும் அப்படித்தான் இருக்கின்றன. அதனால்தான் "பத்மாலயே!" என்றது.

அவளுடைய நான்கு கைகளில் இரண்டில் இரண்டு தாமரைப்பூவை வைத்துக்கொண்டிருக்கிறாள். ஆகையால் "பத்மஹஸ்தே!" அவளுடைய கண்கள் விரிந்த தாமரை இதழ்போல இருக்கின்றனவாதலால் "பத்மதளாயதாக்ஷி". அவளுடைய முகமும் தாமரை போன்றது. இந்த ச்லோகத்தில் அதைச் சொல்லாவிட்டாலும் (லக்ஷ்மி) அஷ்டோத்தரத்தில் "பத்ம முகி" என்று இருக்கிறது.

பத்ம ஸம்பந்தமாகவே அதிலும் அநேகம் பெயர்களைச் சொல்லியிருக்கிறது. தாமரைப் பூவாலேயே மாலை போட்டு கொண்டிருக்கிறாளாம். "பத்ம மாலாதரா". அவளுடைய திவ்ய தேஹம் தாமரை போன்ற வாஸனை வீசுகிறதாம்.

Koviloor Digital Library

"பத்ம கந்திநி". இவள் "பத்மப்ரியா"வாகத் தாமரையிடம் ப்ரியம் வைத்துள்ளதுபோல இவளிடம் ப்ரியம் வைத்திருப்பது யாரென்று பார்த்தால் அது நாபியிலேயே ஒரு தாமரையை மலர்த்திக்கொண்டிருக்கிறவனுக இருக்கிறது—"பத்மநாப ப்ரியா" என்று அஷ்டோத்தரம் சொல்கிறது.

'பத்மாவதி', 'கமலா', 'அம்புஜா' 'பங்கஜா' என்றெல்லாம் தாமரையை வைத்தே லக்ஷ்மிக்குப் பெயர்கள் இருக்கின்றன.

இதற்கேற்ருற்போல் அவளுடைய பதி, ஸ்ரீபதியின் பதம் தாமரையாக இருக்கிறது. ஸ்ரீபதி பதாரவிந்தே. அரவிந்தாஸனேயான லக்ஷ்மி க்ஷீராப்தியில், சேஷ பர்யங்கத்தில் பகவானின் பாதாரவிந்தத்தைத்தான் பிடித்துக் கொண்டிருக்கிருள். அவளேயும் இந்த ச்லோகத்தில் சொல்லாமல் சொல்லி தம்பதி ஸமேதராக தர்சனம் பண்ணி வைக்கிருர்.

கங்கை சுரக்கும் திருவடி

தாமரை என்ருல் அதிலிருந்து தேன் சுரக்க வேண்டும். பகவானின் பாத தாமரையிலிருந்து எந்த தேன் சுரக்கிறது?

திவ்யதுநீ மகரந்தே

'மகரந்தம்' என்ருல் தேன். 'துநீ' என்ருல் நதி. 'திவ்ய துநீ' என்ருல் தேவ லோகத்து நதி. கங்கைதான் ஆகாசத்திலும் பூமியிலும் பாதாளத்திலும் மூன்று பெயர்களில்* பாய்கிற நதி. மஹாபலி சக்ரவர்த்தியின் யாகத்தில் பகவான் குட்டை ப்ரம்மசாரியாக வந்து அப்புறம் விச்வாகாரமாக த்ரிவிக்ரமாவதாரம் செய்து ஒரே காலால் தேவலோகம் முழுதையும் அளந்தார் அல்லவா? அப்போது அந்தப் பெரிய பாதம் தேவலோகத்தை எட்டியபோது ப்ரம்மா ஓடோடி வந்து அந்த திவ்ய சரணத்துக்கு அபிஷேகம் பண்ணினுர்.

---

* ஆகாயத்தில் மந்தாகினி என்ற பெயர், பூமியில் பாகிரதி, பாதாளத்தில் போகவதி.

Koviloor Digital Library

அப்படிப் பண்ணிய ஜலமே மந்தாகினி என்ற பெயரில் ஆகாச கங்கையாகிவிட்டது. அதுதான் 'திவ்ய துநீ'.

பகவானின் மஹா பெரிய பாத பத்மத்திலிருந்து அபிஷேக ஜலம் கங்கையாகப் பாய்வதைப் பார்க்கிறபோது வெளியிலிருந்து ப்ரம்மா அதில் ஜலத்தைக் கொண்டுவந்து வார்த்து. அந்த ஜலம் வழிகிற மாதிரி இல்லை. பெரிய தாமரைப்பூ மாதிரி இருக்கிறதே இந்தப் பாதம், இந்தத் தாமரையேதான் அந்த கங்கையான தேனைத் தன்னிலிருந்தே பொழிய விடுவதுபோல் இருக்கிறது—திவ்ய துநீ மகரந்தே.

பகவானின் பாத தாமரை ஸுகந்தம் வீசுகிறது. நாமெல்லாம் ஸெண்ட் போட்டுக்கொண்டால்தான் வாஸனை பகவான் ஸ்வாபாவிகமாகவே (இயற்கையாகவே) திவ்ய வாஸனை வீசுகிற தேஹம் கொண்டவன். 'ஸுகந்திம்', 'கந்த த்வாராம்' என்றெல்லாம் வேதத்திலேயே தெய்வ மூர்த்திகளைச் சொல்லியிருக்கிறது.

ஸம்ஸாரம் நீக்கி ஸதாநந்தம் அருளும் அடி

பரிமள பரிபோக ஸச்சிதாநந்தே என்று ஆசார்யாள் சொல்கிறார். பரிமளம் என்றால் ஸுகந்தம். பரிமளரங்கநாதர் என்றே சொல்வதுண்டு.

'பரிபோகம்'—ஸுகித்து ஸுகித்து அநுபவிக்கக் கூடியது. எத்தனை ருசித்தாலும் திகட்டாத ஆனந்தம் தருவது. எப்படிப்பட்ட ஆனந்தம்? ஸாதாரண விருந்து, நிலாச் சாப்பாடு சாப்பிடுகிற ஆனந்தமா? இல்லை. (தைத்திரீய) உபநிஷத்தில் ஆனந்தத்துக்கு மேல் ஆனந்தம் என்று ஒவ்வொரு தினுஸான ஆனந்தத்தையும் அடுக்கிக் கொண்டே போய் அதன் உச்சியாகச் சொல்லியிருக்கிற ப்ரம்மானந்தத்தையே தருவது பகவானின் பாதம்.

ப்ரம்மத்தை ஸத்-சித்-ஆனந்தம் என்பார்கள். அது தான் அழியாத உண்மைப் பொருளான ஸத். அதுவே

Koviloor Digital Library

அறியப்படுவதாகவும் அறிகிறவனுகவும்கூட இருக்கிற அறிவு: சித். அந்த நிலையில் தனக்கு வேருக எதுவுமே இல்லாமலிருப்பதுதான் சாச்வத ஆனந்தம்: ஸச்சிதானந்தம். இந்த ஸச்சிதானந்தத்தையே தேனுகப் பொழிந்து கொண்டும், ஸுகந்தமாக மணம் வீசிக்கொண்டும் இருப்பது ஸ்ரீ பதியின் பாதாரவிந்தம் :

திவ்யதுநீ மகரந்தே
பரிமள பரிபோக ஸச்சிதானந்தே
ஸ்ரீபதி பதாரவிந்தே

அது ஸச்சிதானந்தத்தைக் கொடுக்க வேண்டும் என்ருல் அதற்கு முன்னுல் இந்த ஸம்ஸார பயத்தைக் கெடுக்க வேண்டும்.

பவ பய கேத - ச்சிதே வந்தே

முதல் ச்லோகத்தில் தாரய ஸம்ஸார ஸாகரத: என்று வேண்டிக்கொண்டார் அல்லவா? அதில் வந்த ஸம்ஸாரமே இதில் 'பவ பய' என்பதில் வரும் பவம்.

'ஸம்ஸாரம்' என்பதை 'பவம்', 'பவம்' என்றும் சொல்வார்கள். 'பவவினை' 'பவஸாகரம்' என்றெல்லாம் பாட்டுக்களில் வரும். பவம் என்ருல் உண்டாவது. சரவணத்தில் உண்டானவன் சரவணபவன். உத்பவம் என்கிருேமே, அது 'பவ'த்தின் அடியாகப் பிறந்த வார்த்தைதான். ஸம்ஸாரம் என்ருல் நிலையில்லாமல் ஓடிக் கொண்டேயிருப்பது. அது 'பவ'மானது. அதாவது அது "உண்டான வஸ்து". உண்டானது என்பதாலேயே இது அநாதியாக, ஸ்வயம்புவாக இருப்பதல்ல என்றும், இன்னென்றிலிருந்து பிறந்ததே என்றும் தெரிந்துவிடுகிறது. இதற்கு ஆதியும், பிறப்பும் இருப்பதாலேயே அந்தமும், அழிவும் இருந்துதான் ஆகவேண்டும். இது எதனிடமிருந்து உண்டாயிற்ருே அந்த பரமாத்ம தத்வமே ஆதியந்தமற்ற நித்யவஸ்து.

பவன் என்று பரமேச்வரனுக்கும் பெயருண்டு. பவன், சர்வன், ருத்ரன், பசுபதி, உக்ரன் மஹாதேவன், பீமன்,

Koviloor Digital Library

ஈசானன் என்ற எட்டுப் பெயர்களும் பரமசிவனுக்கு ரொம்பவும் விசேஷமானவை. பவனின் பத்னிதான் 'பவானி'; சர்வனின் பத்னி 'சர்வாணி'; ருத்ர பத்னி ருத்ராணி; இப்படியே ஈசானன்—ஈசானி. எல்லாவற்றையும் உண்டாக்குவதால் அவன் 'பவன்'. அழிப்பதால் 'சர்வன்'. ஆக்குகிறவனேதான் அழிப்பவனும்! "பவ" என்ற வார்த்தையை வைத்து மூகர் ("பஞ்ச சதீ"யில்) வேடிக்கையாகச் சொல்வார்: "அம்மா! உன்னுடைய பாதம் பவனுக்கு (சிவனுக்கு) ரொம்பவும் ஆனந்தத்தை உண்டாக்கிக் கொண்டே இன்னொரு பக்கத்தில் பவத்தை (ஸம்ஸாரத்தை) அழிக்கிறதே" என்று சொல்வார்.*

அம்பாள் பாதத்தை மூகர் சொன்னார். அவளுடைய புருஷ ஸ்வரூபமேயான மஹாவிஷ்ணுவின் பாதத்தைச் சொல்லும்போது ஆசார்யாள், "ஸம்ஸார பயம் என்ற துன்பத்தை வெட்டி எரிகிறது பகவானின் பாதம்" என்கிறார்.

பவபய கேத ச்சிதே

ஸம்ஸாரமானது பயத்தை மட்டுமில்லாமல் வேதனை, துக்கம், ஆயாஸம் எல்லாமும் தருகிறது. இவற்றைத்தான் 'கேதம்' என்று சொல்லியிருக்கிறது. ஸம்ஸார பயத்தையும், துக்கத்தையும் சிதைத்து அழிக்கும் திருவடிகளை நமஸ்காரம் பண்ணுகிறேன் என்கிறார்.

பவபய கேத - ச்சிதே வந்தே

பக்தி - த்வைதம் கூறும் அத்வைத ஆசார்யர்

அடுத்த ச்லோகத்தில்—அதாவது 'ஷட் பதீ' யின் மூன்றாவது ச்லோகத்தில்—ஒரு பெரிய தத்வத்தைச் சொல்கிறார் ஸ்ரீ ஆசார்யாள்.

ஸத்யபி பேதாபகமே
நாத தவாஹம் ந மாமகீநஸ்த்வம்

---

* பாதாரவிந்த சதகம், 88-வது ச்லோகம்.

Koviloor Digital Library

ஸாமுத்ரோ ஹி தரங்க:
க்வசந ஸமுத்ரோ ந தாரங்க:

'பேத அபகமே' என்பது சேர்ந்து வரும்போது 'பேதாபகமே' என்ருகிறது. 'அபகமம்' என்ருல் 'போய்விடுவது', 'நீங்குவது' என்று அர்த்தம். கமம், கமனம் என்ருல் வருவது, சேர்வது. இதற்கு எதிர்ச் சொல் அபகமம். 'பேத அபகமே' என்ருல் 'பேதம் நீங்கிவிட்ட நிலேயிலே' என்று அர்த்தம்.

என்ன பேதம்? இப்போது பரமாத்மா என்று ஒன்று இருக்கிறது, அதற்கு வேருக ஜீவாத்மா என்று இன்னென்று இருக்கிறது என்றுதானே நாம் நினைத்துக்கொண்டிருக்கிருேம்? இப்படி பரமாத்மாவும் ஜீவாத்மாவும் வேறு வேறு என்று, அதாவது அவை பேதமானவை என்று நினைத்துக் கொண்டிருப்பதால்தான் ஸம்ஸார நாடகமே நடக்கிறது. இரண்டும் வேறு இல்லை, ஒன்றுதான், கொஞ்சம்கூட பேதமே இல்லை என்று சொல்வதுதான் அத்வைதம். ஆசார்யாள் நிலேநாட்டின ஸித்தாந்தம் அதுதான். 'ஜீவ ப்ரஹ்ம அபேத யோகம்' என்றே அதைச் சொல்வார்கள்.

இந்த பேதம் போன நிலேயைத்தான் 'பேதாபகமே' என்ருர், அதுதான் ஸத்யமான, எக்காலும் மாருத ஆனந்த மான, மோக்ஷம் எனப்படுகிற நிலே. இதுதான் பரம ஸத்யம் என்ருலும் கூட,......

ஸத்யபி

'அபி' என்ருல் 'என்ருலும் கூட'. இப்படியொரு clause போட்டுவிட்டால், இதற்கு மாருக, வித்யாஸமாக இன்னேர் அபிப்ராயம் வரப்போகிறது என்று அர்த்தம். "பகவானே! நீயும் நானும் வேருக இருக்கிற பேதம் போய்விட்டாலுங் கூட..." என்று ஆரம்பிக்கிருர்.

'அத்வைத ப்ரதிஷ்டாபன ஆசார்ய' என்றே ஸ்தோத்ரம் செய்யப்படுகிற பகவத்பாதாள் அபேத அத்வைதத்துக்குத் துளிக்கூட மாருக, வித்யாஸமாக இன்னென்றைச் சொல்லுக்

Koviloor Digital Library

கூடாதே, இங்கே என்ன இப்படி 'இருந்தாலுங்கூட' என்று 'அபி' போடுகிறுர் என்று பார்த்தால்:

இங்கே அவர் பக்தராகப் பேசுகிறுர். ஞானியாக அத்வைதத்தைச் சொன்னுர். ஞான மார்க்கத்தில் போகக் கூடியவர்களுக்கு எப்படிச் சொல்ல வேண்டுமோ அப்படித் தமது பாஷ்யங்களிலும், மற்ற ஞான க்ரந்தங்களிலும் சொன்னுர். தீர்மானமாக, 'ஜீவாத்மா பரமாத்மா என்று இரண்டில்லை. ப்ரஹ்மம் ஒன்றுதான் ஸத்யம். ஜீவனும் அந்த ப்ரஹ்மம்தான். இந்த லோகமெல்லாம் வெறும் மாயைதான்' என்று திரும்பத் திரும்பச் சொன்னுர்.

ஆனுல் இப்படி அவர் சொன்னுர் என்பதாலேயே, சொல்கிறவர், அதைக் கேட்க வேண்டியவர்கள் என்றெல் லாம் ஏதோ பேதமிருக்கிற மாதிரி இருக்கிறது. எல்லாம் ப்ரஹ்மம், லோகம், மாயை என்று விட்டால் யாருக்கு யார், என்னத்தை உபதேசிப்பது?

சங்கர பகவத் பாதர்களுக்குத் தெரியாதது எதுவுமே இல்லை. கார்யமில்லாமல் எல்லாம் தானுக அடங்கிப்போன நிலையில் அத்வைதம் ஸித்திக்கிறது; அங்கே ஜீவ ப்ரஹ்ம பேதமே இல்லை. 'பேத அபகமம்' ஏற்படுகிறது. ஆனுல், அந்த ப்ரஹ்மமேதான் மாயா சக்தியால் தன்னை இத்தனை ஜீவ ஜந்துக்களைப் போலவும், ஜகத்தைப் போலவும் காட்டி, இந்தக் கார்ய ப்ரபஞ்சத்தை ஏற்படுத்தியிருக்கிறது. கார்ய ப்ரபஞ்சம் இறுதியான ஸத்யம் இல்லை. அதற்கு ஆதாரம் கார்யமில்லாத ப்ரஹ்மம்தான். அந்த ப்ரஹ்மத்தோடு ஒன்றிவிடுவதுதான் நிரந்தர ஸத்யமான நிலை. எல்லாம் ஸரிதான். ஆனுல் நிரந்தர ஸத்யமாக இல்லாவிட்டாலும், தாற்காலிகமாக இந்த லோகத்தை நாம் நிஜம் என்று நினைக்கிறவரையில் அதுவும் ரொம்ப நிஜம் மாதிரித்தானே இருந்துகொண்டிருக்கிறது? பரம ஸத்யத்திலே கரைந்து ஒரு ஞானி நிர்விகல்ப ஸமாதியில் ப்ரஹ்மமாக இருந்தாலும் கூட, அந்த ப்ரஹ்மமே இந்தக் கார்ய ப்ரபஞ்சத்தை நடத்து வதற்காக எடுத்துக்கொண்டிருக்கிற ஈச்வர நிலையிலே வந்து

Koviloor Digital Library

அந்த ஞானியையும், "அப்பா, உனக்கு ஸாரத்தில் எல்லாம் ஒன்ருகத் தெரிந்தாலும், வ்யவஹாரத்தில் வேறுவேறு மாதிரி இருப்பதையும் நீ கொஞ்சம் கவனிக்கிற மாதிரி கவனித்து இந்த லோகத்துக்கு நல்லது பண்ணு, இதற்கு உபதேசம் பண்ணு" என்று ஞானியையும், தன்னலமே இல்லாத பரோபகார கர்மாவில் தள்ளிக்கொண்டுதானே இருக்கிறது? இந்த நிலேயில் இருந்துகொண்டுதானே அத்வைத ஸ்வரூபமான ஆசார்யாளும், உபதேசத்தைக் கேட்பதற்காகத் தமக்கு அந்யமாக இன்னொருத்தர் இருப்பது போலத் தோன்றும் வ்யவஹார தசையை ஒப்புக்கொண்ட மாதிரி நிறைய எழுதியும், பேசியும், வாதம் செய்தும், தேசமெல்லாம் சுற்றியும் உபதேசம் பண்ணினுர்? அந்த நிலேயில் ஸகல கார்யத்துக்கும் ஆதார சக்தியாக இருக்கப் பட்ட ஈச்வரனே பக்தி பண்ணினுர். கார்யமில்லாத ப்ரஹ் மத்தோடு ஸாக்ஷாத் ப்ரஹ்மமாகவே அத்வைதமாக இருக் கிறவர், கார்யம் என்று வந்தபோது, ஈச்வரன் என்ற மஹா சக்தியின் லவலேசம்தான் தாம் என்று அடங்கியிருந்து காட்டினுர். கார்யமற்ற நிலேயில் ஜீவனேத் தானுகவே ஆக்கிக் கொள்கிறவன் கார்ய லோகத்தில் தான் மட்டுமே ஸர்வ சக்தனுக இருந்துகொண்டு அந்த சக்தியில் துளித் துளிதான் ஜீவர்கள் மூலம் வெளிப்படுத்துகிருன். இப்படித் தான் ஆசார்யாள் அபிப்ராயப்பட்டிருக்கிருர்.

அதனுல்தான் ப்ரஹ்மத்தோடு ப்ரஹ்மமாக இருந் தவரே, கார்யம் என்று வருகிறபோது (உள்ளூர பகவத் பாதாளுக்குத் தாம் கார்யமில்லாத வஸ்து என்ற அநுபவம் ஸதா இருந்து கொண்டிருந்தாலும் இப்படி ஒரு வேஷம் போட்டு நடிக்கிறபோது) ஈச்வரனிடம் ரொம்பவும் அடங்கி, பரம விநயமாக இருந்து காண்பித்தார். இந்த angle-லிருந்து (கோணத்திலிருந்து) தான் 'ஷட்பதீ'யில் மூன்ருவது ச்லோகத்தைப் பண்ணியிருக்கிருர்.

ஜீவன் - ப்ரஹ்மம் என்ற பேதம் அடிபட்டுப்போன உயர்ந்த ஞான அநுபவ நிலேயிலே, இருப்பதெல்லாம் ஒரே

Koviloor Digital Library

'ஸத்' வஸ்துதான் என்றாலும் லோக தசையில் இருக்கிற வரை ஞானநுபவம் வருகிறவரை, ஆள்கிறவனை மஹா சக்தனுக ஈச்வரன் என்று ஒருவனும், அவனுக்கு வேறு மாதிரி ஆளப்படுகிறவர்களான அல்ப சக்தர்களான அநேக ஜீவர்களும் தோன்றத்தான் செய்கிருர்கள். இதே ஸ்திதியில் 'நானும் ஈச்வரனும் ஒன்று' என்று இந்த அல்ப சக்தன் அந்த ஸர்வ சக்தனோடு அபேதம் கொண்டாடிக் கொண்டால் தப்பு.

'அப்படியானுல் அத்வைதம் தப்பா?' என்ருல் அப்படியுமில்லை.

இதென்ன குழப்பமாயிருக்கிறதே என்று பார்த்தால் ஆசார்யாள் ரொம்ப அழகாகத் தெளிவுபடுத்தி பதில் சொல்கிருர். ஸமுத்ரமும் அலைகளும் ஒன்ரு, வேறு வேரு? மேலே பார்த்தால் வேறேதான். உள்ளே போனுல் ஒன்றுதான். உள்ளுக்குள்ளே அலையே இல்லை. அந்த மாதிரி உள்முகமாகப் போய்விட்டால் ஜீவாத்மாக்கள் என்ற பல அலைகளே இல்லாமல் ஒன்றேயான பரமாத்ம ஸாகர அடிமட்டம் மட்டும்தான் அத்வைதமாக இருக்கிறது. அந்த ஸமுத்ரமேதான் மேல் மட்டத்தில் பல அலைகளாகத் தெரிகிறது. ஏக ஸமுத்ரத்தில் காற்றினுல் அநேக அலைகள் உண்டாகிற மாதிரி, மாயையால் வெளிமுகப்படுகிறபோது, ஒரே பரமாத்மாவில் பற்பல ஜீவாத்மாக்கள் உண்டான மாதிரி இருக்கிறது.

இந்த ஸ்திதியில் ஒவ்வொரு அலையும், 'நானே பூர்ண ஸமுத்ரம்' என்று சொன்னுல் தப்புதானே? அலைகளான தாங்கள் அனைவரும் ஒரே ஸமுத்ரத்தைச் சேர்ந்த அதன் சிறுசிறு அம்சங்கள் என்பதுதானே ஸரி?

அதுபோல, அத்வைதாநுபூதியில் இருப்பது ஒன்றே என்ருலும்-ஸத்யபி பேதாபகமே-விவகார தசையில் ஜீவர்களான நாங்கள் எல்லோரும், எப்படி ஸமுத்ரமில்லாமல் அலைகள் இல்லையோ அப்படி உன்னையன்றி இருப்பு என்பதேயில்லாமல் முழுக்க முழுக்க உன்னைச் சேர்ந்தவர்களே!"

Koviloor Digital Library

நாத தவாஹம் ந மாமகீனஸ்-த்வம்.

நாத - எங்களை ஆள்கிற ப்ரபுவே!

தவாஹம் - தவ, அஹம்; அஹம் - நான்; தவ - உன்னுடையவன். நான் உன் உடைமை.

'ந மாமகீந : த்வம்' என்றால் த்வம் - நீ, மாமகீந:- என்னுடையவன்; ந - அல்ல. நீ என்னுடைமை அல்ல.

ப்ரபுவே! நான் உன் உடைமை. நீ உடைமையாளன். நீ என்னைச் சார்ந்து, என் உடைமையாக இருப்பவனில்லை. அலையில்லாமல் சாந்தமாக ஸமுத்ரம் இருக்கலாம். உள்ளே எப்போதும் அது அப்படியிருப்பதுதான். அதுபோல் ஜீவர்களும் ப்ரபஞ்சமும் இல்லாமல் நீ இருக்கலாம். ஆனால் ஸமுத்ரமில்லாமல் அலை இருக்கமுடியாது. அது போல், நீ இல்லாமல் நான் இல்லவே இல்லை. ஸமாதி நிலையில் நான் நீ பேதமில்லாத ஏகத்தை நான் அநுபவிக்கிறேன் என்பதால் வ்யவஹார தசையில் நம்மை இரண்டாகப் பார்க்கிறபோது, நீதான் என் உடைமை, நீதான் என்னைச் சார்ந்திருப்பவன் என்று நினைத்தால் அது எப்பேர்ப்பட்ட அஸம்பாவிதம் தெரியுமா? ஸமுத்ரம்தான் அலையைச் சேர்ந்தது; அலை ஸமுத்ரத்தைச் சேர்ந்ததில்லை என்று நினைக்கிறமாதிரிதான்.

ஸாமுத்ரோ ஹி தரங்க: க்வசந ஸமுத்ரோ ந தாரங்க:

தரங்கம் என்றால் அலை. (ஜலதரங்கம் என்கிறோம்.) அலைதான் ஸமுத்ரத்தின் உடைமை. ஸமுத்ரம் அலையின் உடைமை இல்லை - ஒருகாலும் இல்லை. 'க்வசந' - ஒருகாலும். தப்பித் தவறிக்கூட, பரமாத்மா ஜீவாத்மாவைச் சார்ந்திருப்பதாக நினைத்துவிடப்படாது என்பதற்காக, "ஒருகாலும் இப்படியில்லை" என்று அழுத்தமாக "க்வசந" போட்டுக் காட்டியிருக்கிறார். அத்வைதத்தை வ்யவஹார உலகத்திலே தப்பாகப் போட்டுக் குழப்பிக் கொள்ளக் கூடாது என்ற அக்கறையால், கவலையால் இப்படி அழுத்திச்

Koviloor Digital Library

சொல்லியிருக்கிருர். "எல்லாம் உன் உடைமையே!" என்று தாயுமானவர் பாடினுர். உடைமைக்கு "ஸ்வம்" என்று பெயர். எல்லாவற்றுக்கும்—ஸ்வம் அனைத்துக்கும்— உடைமையாளன்தான் "ஸ்வாமி." அதனுல்தான் "உடையவர்" என்று வைஷ்ணவர்கள் சொல்கிருர்கள். மற்றவர்கள்கூட முன்காலத்தில் கபாலீச்வர ஸ்வாமி. நாகேச்வர ஸ்வாமி என்பது போன்ற பெயர்களை "கபாலீச்சுரமுடையார்", "திருநாகேச்சுரமுடையார்" என்பதுபோல 'உடையார்' சப்தத்தால்தான் குறிப்பிட்டிருக்கிருர்கள்.

முடிவான அநுபவம் என்று வருகிறபோது, ஆசார்யாள் சைவ வைஷ்ணவ ஸித்தாந்தங்களுக்கு மாருக ஜீவனும் ப்ரஹ்மமும் ஒன்றே என்று ஸித்தாந்தம் செய்தபோதிலும், யதார்த்த நிலையை, வ்யவஹார தசையைக் கருத்தில் கொண்டு, இந்த ச்லோகத்தைப் பண்ணும்போது, நடைமுறை வாழ்க்கையில், தானே ஈச்வரன் என்று தப்பாக எவனும் நினைத்துவிடாமல், அவனது லவலேச அம்சமே தான் என்று அடங்கிப் பணிந்து இருக்கவேண்டும் என்று உபதேசிக்கிருர். சைவ - வைஷ்ணவ பக்திமான்களுக்குக் கொஞ்சமும் பின்வாங்காமல் அவர்களைப் போலவே நைச்யமாக, எளிமையாக பகவானை ப்ரார்த்தனை பண்ணுகிருர். "ஷட்பதீ" ஆரம்பத்தில் அவர் வேண்டிய விநயத்துக்கு அவரே விக்ரஹமாக இருந்துகொண்டு ப்ரார்த்தனை பண்ணுகிருர்.

ஆசார்யாள் எப்படிக் கொள்கைப் பிடிவாதமேயில்லாமலிருந்தார் என்று இங்கே தெரிகிறது. அவரது ஸித்தாந்தம், லக்ஷ்யம் என்னவென்ருல் அத்வைதம். ஆனுல் அந்த ஸித்தியின் அந்தத்துக்கு, லக்ஷ்ய நிலைக்கு போகாமல், ஈச்வரன் - ஜீவன் என்று த்வைதமாக இருக்கும் போது, ஜீவனைப் பார்த்து, 'அடா, அப்பா! அத்வைதத்தை இங்கே கொண்டுவந்துவிடாதே!" என்று அவரே தடுக்கிருர். த்வைதிகளைவிட ஸ்ட்ராங்காக அத்வைதத்தை அந்தண்டை கொண்டுபோகச் சொல்கிருர்!

Koviloor Digital Library

பரமாத்மாவாகவே இருப்பதிலே ஒரு ஆனந்த மென்றால், அவனை பக்தி பண்ணிக்கொண்டிருப்பதிலும் ஒரு ஆனந்தம் இருக்கிறது. பக்தி பண்ணும்போது, 'அவனே நாதன்; நம்மை உடைமையாகக் கொண்டவன்; அவனிடம் துரும்பாகப் பணிந்து கிடக்க வேண்டியவர்களே நாம்' என்று புரிந்துகொண்டால்தான் அந்த ஆனந்தம் கிடைக்கும். ஆகையினால்தான் ராமாநுஜருக்கும் மத்வ க்கும் கொஞ்சங்கூடப் பின்னே தங்காமல் அத்வைத பரமாசார்யாளும், "நீ மஹா ஸமுத்ரமென்றால் நான் அதிலே ஒரு சின்ன அலைதான். நீயன்றி நானில்லை. நான் உன் ஸொத்துதான்" என்று ஒரே பணிவாகச் சொல்கிறார்.

ஸத்யபி பேதாபகமே
நாத தவாஹம் ந மாமகீநஸ் - த்வம் ।
ஸாமுத்ரோ ஹி தரங்க:
க்வசந ஸமுத்ரோ ந தாரங்க:

அதிசய அந்தாதி

ஷட்பதீ ஸ்தோத்ரத்தில் ஒவ்வொரு ச்லோகத்திலும் ஒரு தினுஸான அழகு ரொம்பிக் கிடக்கிறது. நாலாவது ச்லோகத்தில் ஆசார்யாள் வார்த்தைகளைப் பின்னியிருக்கிற அழகு ஈடிணையில்லாமல் இருக்கிறது.

ஸாதாரணமாக, 'அந்தாதி' என்று ஒரு கவிதை வகையைக் கொண்டாடிச் சொல்கிறோம். 'ஸரஸ்வதி அந்தாதி', 'சடகோபர் அந்தாதி' என்றெல்லாம் கம்பர் பண்ணியிருக்கிறார். 'திருவாய் மொழி' எனப்படும் நம்மாழ்வாரின் ப்ரபந்தங்களில் பாசுரங்கள் முழுக்க முழுக்க அந்தாதி க்ரமத்தில்தான் இருக்கும். 'நாலாயிர திவ்ய ப்ரபந்த'த்தில் முதல் மூன்று ஆழ்வார்களும் சேர்ந்து பகவத் தர்சனம் பெற்றவுடன் ஒருத்தருக்குப் பின் ஒருத்தராக அந்தாதிதான் பாடியிருக்கிறார்கள். தற்காலத்தில் 'அபிராமி அந்தாதி' ப்ரஸித்தமாகிக்கொண்டு வருகிறது.

Koviloor Digital Library

'அந்த', 'ஆதி' என்ற இரண்டு வார்த்தைகளும் சேர்ந்து 'அந்தாதி' என்ருகிறது. 'அந்தம்' என்ருல் முடிவு; 'ஆதி' என்ருல் ஆரம்பம். ஆரம்பமும் முடிவும் இல்லாத பரமாத்மாவை 'ஆத்யந்த ரஹிதன்' என்று சொல்வது வழக்கம். 'ஆதியும் அந்தமும் இல்லா அரும்பெரும் சோதியை' என்று மாணிக்கவாசகர் 'திருவெம்பாவை'யை ஆரம்பிக்கிருர்.

'அந்தாதி' என்று ஒரு கவிதை வகைக்கு ஏன் பெயர் வந்தது என்ருல் இதில் ஒரு செய்யுளின் அந்தமான (முடிகிற) வார்த்தையே அடுத்த செய்யுளின் ஆதி (ஆரம்ப) வார்த்தையாக வரும்.

உதாரணமாக, பெருமாளேப் பாட வந்த பொய்கை யாழ்வார் 'முதல் திருவந்தாதி'யில் தக்ஷிணுமூர்த்தி ஸ்வருபத்தை ஸ்தோத்ரம் செய்யும்போது,

ஆலமரநீழல் அறம் நால்வர்க்(கு) அன்(று) உரைத்த
ஆலம் அமர் கண்டத்(து) அரன்

என்று ஒரு செய்யுளில் 'அரன்' என்பதை 'அந்த'மான வார்த்தையாக முடிக்கிருர். இதற்கடுத்த செய்யுளில் ஹரி - ஹர அபேதத்தைச் சொல்கிறபோது, 'அரன்' என்ற இதே வார்த்தையை 'ஆதி' வார்த்தையாக வைத்து ஆரம்பிக்கிருர் :

அரன் - நாரணன் நாமம் ஆன்விடை - புள் ஊர்தி

என்றிப்படிச் சொல்லிக்கொண்டே போகிருர்.

இப்படி அந்தாதியாக ஒரு ஸ்தோத்ரத்தில் செய்யுள்களே மாலேமாதிரி கோத்துக்கொண்டே போவதில் ஒரு பெரிய ஸௌகர்யம், நாம் மேலே மேலே ஒவ்வொரு செய்யுளே நினேவு வைத்துக்கொண்டு மனப்பாடம் பண்ண ஸுலபமாகிறது. "இந்தச் செய்யுள் 'அரன்' என்று முடிகிறதா? ஸரி, அப்படியாளுல் அடுத்த செய்யுள் 'அரன்' என்றுதான் ஆரம்பிக்கும்" என்று நினேவு வைத்துக்கொள்ள முடிகிறது.

Koviloor Digital Library

ஒரு செய்யுளின் அல்லது ச்லோகத்தின் முடிவை, அடுத்ததன் ஆரம்பமாக வைத்து அந்தாதி பாடுவதற்கு நிரம்பப் பாண்டித்யம் இருக்கவேண்டும். நம் ஆசார்யாளோ இதைவிடப் பல மடங்கு கஷ்டமான ஒரு ஸாதனையை 'ஷட்பதீ'யின் நாலாவது ச்லோகத்தில் அநாயாஸமாகப் பண்ணியிருக்கிறார். ஒரு ச்லோகத்துக்கும் இன்னொரு ச்லோகத்துக்கும் அந்த - ஆதித் தொடர்பு இருப்பதைவிட எத்தனையோ மடங்கு கடினமானதாக, ஒரே ச்லோகத்துக் குள்ளேயே ஒரு வார்த்தைக்கும் அடுத்த வார்த்தைக்கும் அந்த - ஆதித் தொடர்பு இருக்கிற விதத்தில் இங்கே பதங்களைக் கோத்துக்கொண்டு போயிருக்கிறார். அந்த ச்லோகத்தைச் சொல்கிறேன்.

> உத்-த்ருத நக - நகபிதநுஜ - தநுஜகுலாமித்ர - மித்ர சசி த்ருஷ்டே
> த்ருஷ்டே பவதி

—இதுவரை பதத்துக்குப் பதம் அந்தாதி க்ரமத்தில் வந்திருக்கிறது. ஆரம்பத்தில் 'உத் - த்ருத நக'. இதில் முடிகிற 'நக' வையே அடுத்த பதத்துக்கு ஆரம்பமாக வைத்து 'நகபிதநுஜ இதன் அந்த்யமான 'தநுஜ'வை ஆரம்பமாக வைத்து, இதற்கடுத்த பதமான 'தநுஜ குலாமித்ர'. இந்த ரீதியில் ரொம்பவும் ஆச்சர்யமாக ச்லோகம் போகிறது. ஒரு phrase (சொற்றொடர்)முடிவில் வரும் வார்த்தை அடுத்த phrase-ன் ஆரம்பமாகிறது. ஒரு phrase முடித்துவிடும் வார்த்தையைப் பிடித்துக்கொண்டு அடுத்த phrase ஆரம்பிக்கிறது. இதை "முக்த பத க்ரஸ்தம்'' என்பார்கள். "முக்த"—விட்ட; "க்ரஸ்த"—பிடித்துக்கொண்ட.

முதல்வரி முடித்துவிட்ட "த்ருஷ்டே"வைப் பிடித்துக் கொண்டு இரண்டாவது வரியை 'த்ருஷ்டே பவதி' என்று ஆரம்பித்து, அப்புறம் இந்த 'பவதி' என்ற அக்ஷரங்களையே பல தினுசில் திருப்பி,

> த்ருஷ்டே பவதி ப்ரபவதி ந பவதி கிம் பவதிரஸ்கார :||

Koviloor Digital Library

என்று முடிக்கிறார். முழு ச்லோகத்தையும் சேர்த்துச் சொன்னால்—ஒரு தைலதாரை பிசிர் இல்லாமல், முறிவு படாமல் விழுகிற மாதிரி வார்த்தைக்குப் பின் வார்த்தை யாகத் தானாகச் சேர்ந்துகொண்டே போகும்.

உத்-த்ருத நக-நகபிதநுஜ தநுஜ குலாமித்ர மித்ர சசி
த்ருஷ்டே|
த்ருஷ்டே பவதி ப்ரபவதி ந பவதி கிம் பவதிரஸ்கார: ||

ச்லோகத்தின் உச்சாரண அழகு கெட்டுப்போகக் கூடா தென்று இங்கே சீர் பிரிக்காமல், ஸந்தி பிரிக்காமல் சொன்னேன். பிரித்துச் சொன்னால் 'நகபிதநுஜ' என்பது 'நகபித் அநுஜ' என்றாகும்; 'பவதிரஸ்கார:' என்பது 'பவ-திரஸ்கார:' என்று இரண்டு வார்த்தைகளாகப் பிரியும்.

வார்த்தைகளை அழகாகக் கோத்துவிட்டால் போதுமா? இந்த நாளில்கூட ரொம்பவும் அடுக்குச் சொல் அலங்காரம் வந்துவிட்டது என்கிறார்கள். சொல் அடுக்கு அழகாக இருந்தால் மட்டும் ப்ரயோஜனம் இல்லை. அதன் அர்த்தமும் அழகாக, ஆழமானதாக இருக்கவேண்டும். இந்த ச்லோகத் தில் சொல்லழகோடு பொருளழகும் சேர்ந்திருக்கிறது.

கருத்திலும் தொடர்ச்சி காட்டும் ச்லோகம்

உத்-த்ருத நக

'நகம்' (nagam) என்றால் மலை. 'கம்' (gam) என்றால் நடப்பது, அசைவது, சலிப்பது. அசையாமல் சலிக்காமல் இருப்பதால்தான் மலைக்கு 'அசலம்', 'அகம்', 'நகம்' என்றெல்லாம் பெயர் ஏற்பட்டிருக்கிறது. பர்வதராஜ குமாரியாக இருக்கப்பட்ட அம்பாளை 'கிரிஜா' (கிரி என்றாலும் மலைதானே?) என்கிற மாதிரியே, 'அகஜா', 'நகஜா' என்றெல்லாமும் சொல்வதுண்டு. பிள்ளையாரின் மேல் எல்லோரும் சொல்கிற ஸ்தோத்ரம் ஒன்றுகூட 'அகஜாநந பத்மார்க்கம் கஜாநநம்' என்று ஆரம்பிக்கிறது. இவர் கஜ ஆநநர் அதாவது ஆனை முகர். 'கஜாநநத்'துக்கு

Koviloor Digital Library

(சொல்லிலக்கணப்படி) **opposite** 'அகஜாநநம்'. ஆனால் வார்த்தையின் அர்த்தப்படி பார்த்தாலோ, இந்த கஜாநநர், அகஜாவான பார்வதியின் ஆநந (முக) பத்மத்தை மலர்விக்கும் அர்க்க (ஸூர்ய)னாக இருக்கிறார்!

அகஜாநந பத்மார்க்கம் கஜாநநம்

அகம், நகம் இரண்டுக்கும் ஒரே அர்த்தம். மலை என்று பொருள். 'உத்-த்ருத நக' என்றால் 'மலையைத் தூக்கியவனே, மலையைத் தாங்கியவனே' என்று அர்த்தம். 'கிரிதர கோபாலன்' என்று மீராபாய் எப்போது பார்த்தாலும் பாடிக்கொண்டிருந்தது இந்த அவஸரத்தைத்தான்.

பகவான் இரண்டு ஸந்தர்ப்பங்களில் மலையைத் தூக்கியிருக்கிறான். அம்ருதம் எடுப்பதற்காக க்ஷீரஸாகரத்தில் மந்தர மலையை மத்தாகப் போட்டு வாஸுகிப் பாம்பை நாணாகச் சுற்றிக் கடைந்தபோது, மஹா விஷ்ணுவேதான் அந்த மலை ஸமுத்ரத்தில் ஆடாதபடி அதை அடியிலிருந்து ஆமை ரூபத்தில் தாங்கிக் கொண்டிருந்தார். அப்புறம், க்ருஷ்ணனாக அவதாரம் பண்ணினபோது, இந்த்ரனின் கோபத்தினால் பெரிய மழை உத்பாதம் ஏற்பட்டபோது, கோவர்தனகிரியைக் குடையாகத் தூக்கி கோகுலம் முழுவதையும் மழையிலிருந்து காப்பாற்றினார். அவர்தான் கிரிதர கோபாலன். நம்முடைய கர்ம பாரம் ஒரு மலை மாதிரி. இதை பகவான்தான் சுண்டு விரல் நுனியிலே பாலக்ருஷ்ணன் கோவர்தன கிரியைத் தாங்கின மாதிரி தாங்க வல்லவன்: "உத்-த்ருத நக".

"நகபிதநுஜ-": 'நகபித்', 'அநுஜ' என்ற இரண்டு வார்த்தைகள் சேர்ந்து 'நகபிதநுஜ' என்றாகிறது. 'நகபித்' என்றால் 'மலைகளைப் பிளந்தவன்' என்று அர்த்தம். பூர்வத்தில் மலைகளுக்கு இருந்த இறக்கைகளை தேவேந்திரன் வஜ்ராயுதத்தால் வெட்டினான் என்று கதை. இந்த தேவேந்த்ரனுக்கு 'அநுஜன்' என்றால் 'உடன் பிறந்தவன்' என்று அர்த்தம். 'உடன் பிறந்தவன்' என்றால் மட்டும் போதாது. 'பின்னால்

Koviloor Digital Library

பிறந்தவன்', அதாவது தம்பிதான் அநுஜன். முன்னால் பிறந்த அண்ணா, பின்னால் பிறந்த தம்பி இரண்டுபேருமே "உடன் பிறந்தவர்"தான். இவர்களில், முன்னால் பிறந்த அண்ணாவைப் "பூர்வஜன்" என்றும், பின்னால் பிறந்த தம்பியை "அநுஜன்" என்றும் சொல்லவேண்டும்.

தேவேந்த்ரனுக்குத் தம்பியாகப் பிறந்தவர் பகவான்.

ராமாநுஜன் என்றால் ராம அநுஜன். அதாவது ராமனுக்குத் தம்பியான லக்ஷ்மண ஸ்வாமி. லக்ஷ்மணன் ஆதி சேஷ அவதாரம். சேஷாவதாரமாகவே வைஷ்ணவர்கள் சொல்கிற ராமாநுஜாசாரியாருக்கு லக்ஷ்மணன் என்றே பூர்வாச்ரமத்தில் பெயர்.

விஷ்ணு எப்போது இந்த்ரனுக்குத் தம்பியாகப் பிறந்தார்? வாமனாவதாரத்தின்போதுதான். இந்த்ராதி தேவர்கள் யாவரும் கச்யப மஹர்ஷிக்கும் அதிதி என்கிற அவருடைய பத்னிக்கும் பிறந்தவர்கள். மஹாபலியை அடக்குவதற்காக பகவான் வாமனராக அவதாரம் செய்த போது, அதிதி - கச்யப தம்பதிக்குத்தான் பிள்ளையாகப் பிறந்தார். இதனால், இந்த்ரனுக்கு அநுஜனாகிவிட்டார். 'உபேந்த்ரன்' என்றுகூட இதனால் அவருக்கு ஒரு பெயர் உண்டு.

க்ருஷ்ணாவதார காலத்தில் இந்த்ரனின் கர்வத்தை அடக்கி அவனை அடிபணிய வைப்பதற்காகத்தான் கோவர்தன கிரியைத் தூக்கி 'உத்-த்ருத நக'ராக ஆனார். பூர்வத்தில் வாமனாவதாரத்தில் அதே இந்த்ரனுக்கு ஸஹோதரனாக - 'நகபிதநுஜ'னாக - இருந்திருக்கிறார்! அப்போது மஹாபலியை அடக்கி இந்த்ரனுக்கு தேவலோக ஆதிபத்யத்தை மீட்டுக் கொடுத்தார். பகவானுக்குத் தனியாக ஒரு மனுஷ்யர்மீது ப்ரியம், அப்ரியம் என்பதில்லை. ஒருவர் அடக்கத்துடன் தர்ம வழியிலே வர நினைத்தால் ப்ரியமாயிருப்பார்; அவரே அஹங்கரித்துக்கொண்டு அதர்ம மாகப் போனால் தண்டிப்பார். ஒருத்தர் செய்யும் நல்லது - கெட்டதுகளை வைத்தே அவரது ப்ரியாப்ரியங்கள். ஒரே

Koviloor Digital Library

ஆஸாமியின் விஷயமாக இப்படி அவர் மாறுபட்டுச் செய்ததை ஒரே ச்லோகத்தில் அடுத்தடுத்து ஆசார்யாள் கோத்துக்கொடுத்திருக்கிறார்: "உத்-த்ருதநக, நகபிதநுஜ".

"தநுஜ - குலாமித்ர": 'தநுஜர்' என்றால் அஸுரர்கள். "தநு" என்பவளின் பிள்ளைகள்தான் தநுஜர்கள். தேவர்களுக்குப் பிதாவான அதே கச்யபரின் பத்னிதான் தநுவும். தேவர்கள், அஸுரர்கள் அனைவருக்கும் அவரே பிதா. மாதாக்கள் வேறு வேறு. அதிதியின் பிள்ளைகளான தேவர்களை ஆதித்யர் என்கிறார்கள். 'திதி' என்றும் கச்யபருக்கு ஒரு பெண்டாட்டி உண்டு. அவளுடைய பிள்ளைகள் தைத்யர்கள். இவர்களும் அஸுரர்கள்தான். தநுவின் பிள்ளைகளை தநுஜர் என்பது போலவே தானவர் என்றும் சொல்வதுண்டு.

'நகபிதநுஜ' என்கிறபோது வந்த 'தநுஜ' என்பது இரண்டு வார்த்தைகளின் ஸந்தியில் ஏற்பட்டது. அதை 'நகபித் அநுஜ' என்று பிரித்தால்தான் அர்த்தமாகும். 'நகபி', 'தநுஜ' என்று பிரித்தால் தப்பு. பின்னாடி 'தநுஜ குலாமித்ர' என்று வருவதற்கு அந்தாதி க்ரமத்தில் படி போடுவதற்கே, ஸ்ரீ ஆசார்யாள் 'நகபிதநுஜ' என்பதில் இரண்டு வார்த்தைகளின் ஸந்தியில் ஒரு 'தநுஜ'வை முடிச்சுப் போட்டிருக்கிறார்!

அநேக ச்லோகங்களில் இப்படி வேடிக்கையாக வரும். 'அகஜாநந பத்மார்க்கம்' ச்லோகத்தில்கூட 'அநேக - தந்தம் பக்தாநாம் ஏக தந்தம் உபாஸ்மஹே' என்று வருகிறது. 'இதென்ன வேடிக்கை? ஒருத்தரையே ஏக தந்தர், அநேக தந்தர் என்றால்—அதாவது, ஒரு தந்தம் உள்ளவர், பல தந்தம் உள்ளவர் என்றால்—எப்படி ஸரியாகும், என்று தோன்றுகிறது. 'அநேக - தந்தம்' என்பது 'அநேகதம்' என்ற வார்த்தையாகவும், அதை அடுத்து வரும் 'தம்' என்ற வார்த்தையாகவும் பிரியும். அநேக - தம் - தம் என்பது 'அநேக தந்தம்' என்றாகும். 'பக்தாநாம் அநேகதம்' என்றால்

Koviloor Digital Library

பிள்ளையார் அவருடைய பக்தர்களுக்கு அநேக விதமான நலன்களை அருள்கிறார் என்று அர்த்தம். 'தம் உபாஸ்மஹே' என்றால் 'அவரை உபாஸிக்கிறேன்' என்று அர்த்தம். அவருக்கு ஒரே ஒரு தந்தம்தான் உண்டு ஒற்றைக் கொம்பர். ஏக தந்தர். இந்த 'ஏக தந்தம்' என்பதே வார்த்தை விளையாட்டில் இன்னொரு தரம் வந்தால் கவிதைக்கு அழகு செய்கிறது என்பதற்காக 'அநேக தந்தம் (அநேகதம் தம்) பக்தாநாம் ஏகதந்தம் உபாஸ்மஹே' என்று ச்லோகத்தில் வைத்திருக்கிறது. Prose orderபடி இருந்தால் "பக்தாநாம் அநேகதம் ஏகதந்தம் தம் உபாஸ்மஹே" (பக்தர்களுக்குப் பலவற்றை, அநேக நலன்களை, தரும் ஒற்றைக் கொம்பரான அவரை உபாஸனை செய்கிறேன்) என்று இருக்கவேண்டும். எந்த பாஷையானால், 'பொயட்ரி'யில் வார்த்தைகளை முன் பின்னாக வைக்கலாம் என்ற விதிப்படி இங்கே மாற்றியிருக்கிறது.

'தநுஜ குலாமித்ர' என்றால் தநுஜ குலமான அஸுரர்களுக்குப் பகைவர் (அமித்ர) என்று அர்த்தம்.

இந்த்ரனுக்குத் தம்பியாகக் காச்யப - அதிதி தம்பதிக்கு பகவான் அவதரித்தபோது, தநுஜர்களும் அவருக்கு பித்ரு பக்ஷத்தில் (அப்பாவை வைத்துப் பார்த்தால்) அண்ணாமார் கள்தான்; தநுஜர்கள் அவருடைய மாற்றாந்தாயின் பிள்ளை கள். ஆனால் உறவுமுறை பார்க்காமல் தர்மாதர்மங்களையே பகவான் பார்ப்பவராதலால் அவர்களுக்கு அமித்ரராக (பகைவராக) இருந்தார்.

ஒரு ஸமயத்தில் நல்லவனாகவும் ஒரு ஸமயத்தில் அப்படியில்லாமலும் இருக்கிற இந்த்ரனிடம் அவர் அன்போடு தம்பியாக இருந்து மஹாபலியிடமிருந்து அவனுடைய ராஜ்யத்தை க்ரஹித்து அவனுக்கு அதைத் திரும்பக் கொடுத்துமிருக்கிறார்; தண்டிப்பவராக கோவர் தனத்தைத் தூக்கிப் பிடித்து, அவர் சக்கையாய் மழை பெய்து அப்புறம் தானே சக்தியெல்லாம் இழந்து சக்கை மாதிரி வந்து காலில் விழும்படியும் பண்ணினார். எல்லா

Koviloor Digital Library

ஸமயங்களிலுமே கெட்டவர்களாக இருக்கிற தநுஜர்களும் ஸஹோதரர் முறையாக வேண்டியவர்களானாலும், அவர்களுக்கு 'அமித்ரர்' என்றே சொல்லும்படியாக எப்போதும் இருக்கிறார்.

ஒரு வார்த்தையின் முடிவை அடுத்த வார்த்தையின் ஆரம்பமாக கோத்துக் கொண்டு போவதுபோலவே பகவானின் நிக்ரஹாநுக்ரஹங்கள் (தண்டிப்பதும் அருள்வதும்) எப்படி இருக்கின்றன என்ற 'ஐடியா'வையும் ச்லோகத்தில் 'டெவலப்' பண்ணிக் கோத்துக் கொடுத்தாற் போல இருக்கிறது!

"மித்ர சசி த்ருஷ்டே": மித்ர என்றால் நண்பர் என்று எல்லாருக்கும் தெரிந்திருக்கும். 'பந்து மித்ரர்'கள் என்று சொல்கிறோம். 'மித்ர'னுக்கு opposite 'அமித்ரன்,. இங்கே, 'மித்ர சசித்ருஷ்டே' என்னும்போது 'மித்ர' என்றால் 'ஸூர்யன்' என்று அர்த்தம். ஒரே வார்த்தையை வெவ்வேறு அர்த்தத்தில் ப்ரயோகிக்கிற அலங்காரத்தை இங்கே ஆசார்யாள் கையாண்டிருக்கிறார்.

வேதம் நெடுகிலும் ஸூர்யனை மித்ரன், மித்ரன் என்று சொல்லியிருக்கிறது. அந்தக் காலத்தில் வைதிகமான ஸூர்யோபாஸனை லோகம் பூராவிலுமே பரவியிருந்தது. தேசாந்தரங்களிலும் (அந்நிய நாடுகளிலும்) இந்த "மித்ர" என்ற பேர் அப்படியே வழக்கில் இருந்திருக்கிறது. கிறிஸ்து பிறப்பதற்கு ஆயிரத்து முன்னூறு வருஷங்களுக்கு முன்பு எகிப்து (Egypt) தேசத்தில் இரண்டு ராஜாக்கள் செய்து கொண்ட உடன்படிக்கை (Treaty of Rameses II With the Hittites) கூட 'மித்ரா வருண' ஸாக்ஷியாகச் செய்து கொண்டதாக இருக்கிறது!

"மித்ர - சசி - த்ருஷ்டே" என்கிற இடத்தில் 'மித்ர' என்றால் ஸூர்யன். 'சசி' என்றால் சந்த்ரன் என்று உங்களுக்குத் தெரிந்திருக்கும். வெள்ளை வெளேர் என்று இருக்கிற சந்த்ரனுக்குள்ளே நிழல் மாதிரி ஒன்று கறுப்பாய்த் தெரிகிற

Koviloor Digital Library

தல்லவா? உற்றுப் பார்த்தால் இது ஒரு முயல் மாதிரி தோன்றும். முயலை ஸம்ஸ்க்ருதத்தில் 'சசம்' என்பார்கள். 'முயலைத் தன்னிடத்தில் கொண்டது' என்பதால் சந்த்ரனுக்கு சசாங்கன் என்றும், சசி என்றும் பெயர்.

மித்ரனையும் சசியையும், அதாவது சந்த்ர ஸூர்யர்களை இரண்டு கண்களாகக் கொண்டவனைத்தான் 'மித்ர சசி த்ருஷ்டே' என்று சொல்கிறார். பகவானின் விச்வ ரூபத்தில், விராட் ஸ்வரூபத்தில், அவனுக்கு ஸூர்யன் வலது கண், சந்த்ரன் இடது கண்.

இந்த்ரனுக்கு அநுஜன், தநுஜர்களுக்கு அமித்ரன் என்றெல்லாம் வாமனாவதாரத்தை நினைவூட்டியதன் தொடர்ச்சியாக வாமன ப்ரஹ்மசாரி த்ரிவிக்ரமனாக விச்வரூபம் எடுத்து சந்த்ர - ஸூர்யர்களைக் கண்களாகக் காட்டியதையும் இப்போது ஞாபகப்படுத்துவதுபோல இருக்கிறது.

விஷ்ணு ஸஹஸ்ர நாமத்தின் பூர்வ பாகத்தில் சொல்கிற "பூ: பாதௌ" என்ற ச்லோகத்தில் 'சந்த்ர ஸூர்யௌ ச நேத்ரே" என்று வருகிறது. இதுவேதான் "மித்ர சசி த்ருஷ்டே".

தர்சனத்தால் ஸம்ஸார நீக்கம்

"த்ருஷ்டே பவதி ப்ரபவதி ந - பவதி கிம் பவதிரஸ்கார:" என்பதாக "பவதி" என்கிற சப்தத்தை நாலு முறை அடுத்தடுத்து வெவ்வேறு அர்த்தங்களில் திருப்பி இந்த ச்லோகத்தைப் பூர்த்தி பண்ணியிருக்கிறார். மஹா கவிகளின் புலமையெல்லாம் தோற்றுப்போகிற மாதிரி வாக் ஸாமர்த்யத்தை ஆசார்யாள் காட்டியிருக்கிறார்.

'த்ருஷ்டே பவதி' என்னும்போது 'பவதி' என்றால் 'தங்களிடத்தில்' என்று அர்த்தம். ஒருத்தரிடம் மரியாதையாகத் 'தாங்கள்' என்று சொல்லவேண்டுமானால், 'பவான்' என்று குறிப்பிடவேண்டும். இதற்குப் பெண்பால் "பவதி"

Koviloor Digital Library

"பவதி பிக்ஷாம் தேஹி" என்கிறபோது, "பவதி" என்றால் ஒரு வீட்டுக்காரியை "அம்மணி!" என்று மரியாதையாகக் கூப்பிடுவதாக அர்த்தம். "பவதி" என்பதே வினைச் சொல்லாக (verb) வரும்போது 'உண்டாகிறது' என்று அர்த்தம். ஆண்பாலில் வருகிற 'பவத்' என்பது ஏழாம் வேற்றுமை உருபோடு சேரும்போதும் 'பவதி' என்று ஆகும். அப்போது "தங்களிடத்தில்" என்று அர்த்தம் உண்டாகும். இங்கே அப்படித்தான் 'த்ருஷ்டே பவதி' என்பதில் "பவதி"க்கு அர்த்தம்.

"த்ருஷ்டே பவதி" என்றால், தங்களிடத்தில் (எங்கள்) த்ருஷ்டி ஏற்பட்டு விட்டால்'. அதாவது 'எங்களுக்கு உன் தர்சனம் கிடைத்துவிட்டால்' என்று அர்த்தம். அவன் எப்படிப்பட்டவன்? எல்லாருக்கும் ப்ரபுவாக, அகிலாண்ட நாயகனாக இருக்கிறவன். 'ப்ரபவதி பவதி த்ருஷ்டே' என்றால் 'ப்ரபுவான உன்னிடம் (எங்கள்) பார்வை உண்டாகுமானால்' என்று அர்த்தம். பகவத் தர்சனம் கிடைத்துவிட்டால்...அப்புறம் என்ன ஆகிறது?

"ந பவதி கிம் பவ திரஸ்கார:"

'பவதிரஸ்கார:' என்பதை 'பவதி, ரஸ்கார:' வன்று பிரித்தால் தப்பு. 'சுக்கு—மிளகு—திப்பிலி' என்பதை 'சுக்குமி—ளகுதி—பிலி' என்று பிரித்தான் என்று கதை சொல்வார்களே, அப்படி ஆகிவிடும். 'அநேகதம் தம்' என்பதை 'அநேக தந்தம்' என்று பிரிக்கிற மாதிரியான தப்புத்தான் இது. 'பவ திரஸ்கார:' என்பதுதான் ஸரியான பிரிவினை. திரஸ்காரம் என்றால் மறைப்பது. மாந்த்ரிகத்தில் மறைக்கிற வித்தையை 'திரஸ்கரிணி' என்பார்கள். பவம் என்றால் ஸம்ஸாரம். முன்பே இந்த 'ஷட்பதீ'யில் 'பவ பய கேதச்சிதே' என்கிற இடத்தில் 'பவம்' என்ற வார்த்தை வந்திருக்கிறது. ஸம்ஸார பந்தத்தை மறைப்பது, அதாவது ஸம்ஸார வாழ்க்கை மறையும்படிச் செய்வது, அல்லது ஸம்ஸாரத்தைப் போக்கிக்கொள்வதுதான் 'பவ திரஸ்காரம்'.

Koviloor Digital Library

'ந பவதி கிம்' என்கிற இடத்தில் 'பவதி' என்பது வினைச் சொல். இங்கே 'பவதி' என்றால், 'உண்டாகிறது' என்று அர்த்தம். 'ந பவதி கிம்' என்றால் 'உண்டாகிறதில்லையா என்ன?' என்று அர்த்தம். எது உண்டாகிறதில்லையா? ஸம்ஸாரத்தின் மறைவுதான். 'உன் தர்சனம் கிடைத்து விட்டால் அப்புறம் ஸம்ஸார நீக்கம் உண்டாகாமலும் இருக்குமா என்ன?' என்று கேள்வி ரூபத்தில் கேட்கிறார். 'உன் தர்சனம் கிடைத்தபின் ஸம்ஸாரம் விலகுகிறது' என்று affirmative (நேர்) ஸ்டேட்மெண்டாகச் சொல்வதைவிட, இப்படிக் கேள்வி ரூபத்தில், 'ஸம்ஸார நீக்கம் ஏற்படாதா என்ன? ஏற்படாமலும் போகுமா என்ன?' என்று சொல்வது, சொல்லவந்த விஷயத்துக்கு மேலும் அழுத்தம் கொடுக் கிறது.

கீதையில் (2.59), பரமாத்மாவை தர்சித்துவிட்டால் அதோடு உள் மனஸில் தேங்கியிருக்கும் வாஸனை ருசி எல்லாம் போய்விடும் என்று சொல்லியிருக்கிறது. அதோடு ஸம்ஸாரமும் போய்விடவேண்டியதுதான். அந்த இடத்தில் "பரம் த்ருஷ்ட்வா" என்று பகவான் சொல்லியிருக்கிறது போலவே ஸக ஆசார்யாள் "த்ருஷ்டே பவதி" என்கிறார். பகவத் தர்சனம் அத்வைத ஸாக்ஷாத்காரத்துக்குத்தான் அழைத்துக்கொண்டு போகட்டும்; அல்லது த்வைதமாக அவனை தர்சிப்பதாகவேதான் இருக்கட்டும்—எப்படியிருந் தாலும் அதற்கப்புறம் இந்த பூலோகத்தில் ஜனன மரணச் சுழலில் மாட்டிக்கொள்வதில்லை. "இப்படி ஏற்படாமல் கூடப் போகமுடியுமா என்ன—ந பவதி கிம் பவ திரஸ்கார:?" என்று கேட்கிறார்.

திருமாலுக்கு ஈச்வர சப்தம்

அடுத்த ச்லோகம், ஷட்பதீயில் ஐந்தாவது ச்லோகம்:

மத்ஸ்யாதிபி - ரவதாரை :

அவதாரவதாவதா ஸதா வஸுதாம் |
பரமேச்வர பரிபால்யோ
பவதா பவதாப பீதோஹம் ||

Koviloor Digital Library

இங்கேயும் கடைசியில் பவதா என்று இரண்டு தடவை திருப்புகிறார். முதலில் 'பவதா'வைத் தனி வார்த்தையாக எடுத்துக்கொள்ளவேண்டும் 'தங்களால்' என்று அர்த்தம். அடுத்து வருவது 'பவ தாப பீதோஹம் (பீத: அஹம்)' என்று பிரியும். 'ஸம்ஸார தாபத்தினுல் பீதி அடைந்துள்ள நான்' என்று இதற்குப் பொருள்.

'பரமேச்வர பரிபால்யே பவதா பவதாப பீதோஹம்' என்பதற்கு 'ஸம்ஸார தாபத்தினுல் பீதி (பயம்) அடைந்துள்ள நான் பரமேச்வரனுன தங்களால் பரிபாலிக்கப்பட வேண்டியவனுக இருக்கிறேன்' என்று அர்த்தம்.

பொதுவாக நாம் ஈச்வர சப்தம், பரமேச்வர சப்தம் முதலானவை சிவபெருமானைக் குறிப்பிடுவதாகவே வைத்துக் கொண்டிருக்கிறோம். ஆசார்யாளோ எல்லாவற்றிலும் அத்வைதி, அபேத உணர்ச்சியே கொண்டவர். சிவ-விஷ்ணு அபேதமும் இவற்றில் ஒன்று. 'ப்ரச்நோத்தர ரத்ந மாலிகா' என்கிற க்ரந்தத்தில் ஆசார்யாள் கேள்வி-பதில் ரூபத்தில் உபதேசித்துக்கொண்டேபோகிறபோது, 'பகவான் யார்? (கச்ச பகவான?)' என்று ஒரு கேள்வி கேட்டுவிட்டு, அதற்கு பதிலாக, "சங்கரனுகவும் நாராயணனுகவும் இருக்கப்பட்ட ஒரே ஆத்மாவான மஹேச்வரன்தான் (மஹேச : சங்கர நாராயணுத்ம ஏக:)" என்கிறார். துளிக்கூட ஹரி-ஹர பேதம் பாராட்டாதவர் அவர். சங்கரனைப் போலவே நாராயணனும் அவருக்கு மஹேச்வரன்தான், பரமேச்வரன்தான். அதனுல், மஹாவிஷ்ணுவையே "பரமேச்வர!" என்று கூப்பிட்டு, "நான் உன்னுல் ரக்ஷிக்கப் படவேண்டியவன்" (பரிபால்ய: அஹம்) என்று ப்ரார்த்திக்கிறார்.

இது ச்லோகத்தின் பிந்திய அடி. முந்திய அடியில் 'வதா வதா' என்று என்னவோ திருப்பித் திருப்பிச் சொல்கிறாரே. அதற்கு என்ன அர்த்தம்?

Koviloor Digital Library

அவதாரங்கள்

"மத்ஸ்யாதிபிரவதாரை" என்பதை வார்த்தை பிரித்தால் "மத்ஸ்யாதிபி: அவதாரை:". அப்படியென்றால், 'மத்ஸ்யம் முதலான அவதாரங்களால்' என்று அர்த்தம். லோக ரக்ஷணத்துக்காக பகவான் தசாவதாரம் எடுத்ததைச் சொல்கிறார்.

லோக ரக்ஷணம் என்றால் என்ன? எல்லா தேசங்களுக்குமாக பெரிய கவர்ன்மெண்ட், பெரிய கோர்ட், பெரிய ஸைன்யம், பெரிய போலீஸ் டிபார்ட்மெண்ட் வைத்துக்கொண்டு பண்ணுகிற கார்யமா என்ன? இல்லை. வேதத்தை ரக்ஷித்துக் கொடுத்து, அவரவர்களும் ஸ்வதர்மத்தைப் பண்ணும்படியாக ஆக்கிவிட்டால் அதுதான் லோகரக்ஷணம். வேதரக்ஷணம்தான் லோகரக்ஷணம். வேத மந்த்ர சப்தங்கள் அட்மாஸ்ஃபியரில் குறையாமல் பரவிக்கொண்டு, வைதிக யஜ்ஞங்களால் ஸகல தேவதா ப்ரீதி ஏற்பட்டுவிட்டால், தன்னால் லோகம் முழுதும் ரக்ஷிக்கப்பட்டதாக ஆகிவிடும். அதனால் எப்போதெல்லாம் வேத தர்மத்துக்கு ஹீனம் உண்டாகி, லோகம் க்ஷீணமாயிற்றோ அப்போதெல்லாம் பாலன கர்த்தாவான மஹா விஷ்ணு அவதாரம் பண்ணி வேதத்தை புநருத்தாரணம் செய்வார். இதனால் லோகம் க்ஷேமம் அடைந்துவிடும்.

ஸோமுகாஸுரன், ஹயக்ரீவன் போன்ற அஸுரர்கள் வேதத்தையெல்லாம் ஜலக் காட்டிலே ஒளித்து வைத்த போது பகவான் மீனாகத் தோன்றி அதை மீட்டுவந்தது தான் மத்ஸ்யாவதாரம். 'ப்ரளய பயோதி ஜலே' என்று ஜயதேவர் அஷ்டபதியில் இதைச் சொல்லியிருக்கிறது.

இது மாதிரியான பத்து அவதாரங்களில் பகவான் தம்முடைய உயர்ந்த ஸ்தானத்தை விட்டு இந்த பூலோகத்துக்கு இறங்கி வருகிறார். பரமபதம் என்று சொல்கிற உத்தமமான வைகுண்டத்திலிருந்து இறங்கி நம் லோகத்துக்கு வருகிறார். 'அவதாரம்' என்றாலே 'இறங்கி வருவது'

Koviloor Digital Library

என்பதுதான் அர்த்தம். 'தார' என்றால் உச்சி. தார ஸ்தாயி என்று மேல் ஸஞ்சாரத்தைச் சொல்கிறோம் அல்லவா? 'அவ - தாரம்' என்றால் reverse order-ல் அந்த உச்சியி லிருந்து கீழே வருவது. பரம கருணையால் பகவான் இப்படி இறங்கி வருகிறான். கீழே இருக்கிற நம்மைக் கையைப் பிடித்து மேலே அழைத்துக்கொண்டு போகவேண்டும் என்ப தற்காக, உச்சத்துக்கெல்லாம் உச்சத்திலுள்ள பகவான் நம் லெவலுக்கு இறங்கி வருகிறான்.

'அவதாரவதா' என்று ச்லோகத்தில் வருவதற்கு 'இறங்கி வந்தவனாக ஆனதால்' என்று அர்த்தம்.

"மத்ஸ்யாபி: அவதாரை:" - மத்ஸ்யம் முதலான அவதாரங்களால்: "அவதாரவதா" - கீழே இறங்கி வந்தவ னாக ஆனதால்.

அவதாரவதா + அவதா என்பதே 'அவதாரவதா வதா' என்று அடுத்தடுத்து மூன்று 'வதா'வைக் கொடுக் கிறது. பின்னே சொன்ன 'அவதா' என்பதில் 'அவ' என்பது ரக்ஷிப்பதைக் குறிக்கும். 'மாமவ', 'மாமவ' என்று அநேக கீர்த்தனைகளில் வருவது 'மாம் + அவ' என்பதே. "மாம் - என்னை; அவ - காப்பாற்று' என்பது அர்த்தம்.

'அவதா ஸதா வஸுதாம்' என்று இங்கே ச்லோகத் தில் இருப்பது, எப்பொழுதும் (ஸதா) லோகத்தை (வஸுதாம்) பகவான் அவதாரங்களால் அவனம் (ரக்ஷணை) செய்துகொண்டிருப்பதைச் சொல்கிறது.

வஸு என்றால் பல தினுஸான செல்வங்களையும் குறிக் கும். இயற்கை என்கிற எல்லாச் செல்வங்களையும் (natural resources) பூமி கொடுப்பதால் பூமிக்கு 'வஸுதா' என்று பேர். 'வஸுந்தரா' என்றும் சொல்வதுண்டு. இப்படிச் செல்வம் நிரம்பின பூமியானது ஜனங்களின் பாபத்தினால் வற்றி வாடிப் போகிற போதெல்லாம் அதை ரக்ஷித்துப் பழையபடி ஆக்குவதற்காக ஸ்வாமி அவதரிப்பதை ஆசார்யாள் சொல்கிறார். ஜனங்கள் பண்ணும் ஸகல பாபத்

Koviloor Digital Library

தையும் தாங்கிக்கொள்கிற பூமாதேவி ஒரு ஸ்டேஜுக்கு மேல் தாங்க முடியாமல் பகவானிடம் போய் முறையிடு வாள். உடனே அவர் அவதாரம் பண்ணிவிடுவார். பூமா தேவி பசு ரூபத்தில் போய் முறையிட்டவுடன் பகவான் க்ருஷ்ணனுக அவதாரம் பண்ணிப் பசு மந்தைகளை மேய்த்த தாக பாகவதத்தில் இருக்கிறது.

'இப்படி லோகத்தை மத்ஸ்யம் முதலான அவதாரங் களால் எப்போதும் ரக்ஷிக்கிற பரமேச்வரா! ஸம்ஸார தாபத்தினுல் பயந்து கிடக்கிற நானும் உன்னுல் ரக்ஷிக்கப்பட வேண்டியவன்' என்பது இந்த ச்லோகத்தின் அர்த்தம்.

லோகரக்ஷணத்துக்காக பரம கருணையோடு திரும்பத் திரும்ப பகவான் அவதரிப்பதை வாக்கின் போக்கிலேயே காட்டி விடுகிறமாதிரி, "அவதாரவதாவதா...பவதா பவதாப" என்று ஒரே சப்தங்களைத் திரும்பத் திரும்ப அடுக்கி வைத்திருக்கிருர்!

'திருப்பித் திருப்பி அவதாரம் பண்ணுகிற விஷ்ணுவுக் குத்தான் கர்ப்பவாஸம் உண்டு. எங்கள் ஈச்வரனுக்குக் கிடையாது' என்று சைவர்கள் பெருமையாகச் சொல்லிக் கொள்வதும், 'தான் கீழே இறங்கி வந்தாகிலும் ஜனங்களை உயர்த்தவேண்டும் என்று அவதாரம் பண்ணும் பரம காருண்யம் எங்கள் பெருமாளுக்குத்தான் உண்டு; ஈச்வர னுக்கு இல்லை' என்று வைஷ்ணவர்கள் பெருமைப்பட்டுக் கொள்வதுமாக இருக்க, நம் ஆசார்யாளோ பெருமாளையே, 'பரமேச்வரா!' என்று கூப்பிட்டு அவதாரங்களையும் சொல்லி ஸமரஸப்படுத்தியிருக்கிருர்.

'புருஷர்களுக்குள் உயர்ந்த புருஷோத்தமனே ஹரி; மஹேச்வரன் என்பதாக ஈச்வர பட்டம் உடையவன் த்ரயம்பகனுன (முக்கண்ணனுன) ஒருவனே அன்றி வேறில்லை' என்று காளிதாஸன் சொல்லியிருக்கிருன் : ஹரிர் யதைக: புருஷோத்தம ஸ்ம்ருத : மஹேச்வரஸ்-த்ரயம்பக ஏவ நாபர : *

---

* ரகுவம்சம் 3,.49

Koviloor Digital Library

'அமரம்' என்கிற ஸம்ஸ்க்ருத டிக்ஷனரியிலும் ஈச்வர : சர்வ ஈசாந : என்பதாக 'ஈச்வர' என்கிற டைட்டிலே சர்வனும் ஈசானனுமான சிவனுக்கே கொடுத்திருக்கிறது.

ஆனுல் சிவனுக்கும் விஷ்ணுவுக்கும் இடையில் கொஞ்சம் கூட வித்யாஸம் பாராட்டாத நம் ஆசார்யாள் இங்கே "பரமேச்வர" என்று மஹாவிஷ்ணுவையே கூப்பிடுகிருர். "என்னை ரக்ஷியப்பா" என்று அவனை வேண்டிக் கொள்கிருர்.

பன்னிரு நாமங்கள்; நெற்றிக்கிடும் நாமம்

அடுத்த் ச்லோகம் :

தாமோதர குணமந்திர
ஸுந்தரவதநாரவிந்த கோவிந்த |
பவஜலதி மதந மந்தர
பரமந்தரம் அபநய த்வம் மே ||

"ந்த" என்ற சப்தம் திரும்பத் திரும்ப வருகிற மாதிரி மதுரமான பதங்களினுல் ச்லோகத்தைச் செய்திருக்கிருர் நம்முடைய ஆசார்யாள். ஒவ்வொரு வரியிலும் இந்த சப்தம் வரவேண்டும் என்பதால் நாலாவது வரியில் இரண்டு பதங்களின் ஸந்தியில் 'பரமந்தரம்' என்று வைத்திருக்கிருர். பரமம் - தரம் என்ற இரண்டு வார்த்தைகள் சேர்ந்து 'பரமந்தரம்' என்ருகியிருக்கிறது. 'அநேகதம் – தம்' என்பது 'அநேகதந்தம்' என்ருன மாதிரி.

முதல் இரண்டு வரிகளில் பகவானைக் கூப்பிடுகிருர். "தாமோதர, கோவிந்த" என்ற இரண்டு பெயர்களைச் சொல்லிக் கூப்பிடுகிருர். 'குணமந்திர', 'ஸுந்தர வதநாரவிந்த' என்பதெல்லாமும் ஸ்வாமியை அழைப்பதுதான். ஆனுல் தாமோதரன், கோவிந்தன் என்பன பகவானின் ப்ரஸித்த நாமாக்களாகவே இருப்பவை.

பன்னிரண்டு நாமாக்கள் மஹாவிஷ்ணுவுக்கு முக்யம். பரமேச்வரனுக்கு (சிவபெருமானுக்கு) பவன், சர்வன்,

Koviloor Digital Library

ஈசானன், பசுபதி, உக்ரன், ருத்ரன், பீமன், மஹாதேவன் என்ற அஷ்ட நாமாக்கள் முக்யமாயிருப்பது போல் மஹா விஷ்ணுவுக்குப் பன்னிரண்டு. ஸஹஸ்ர நாமம், த்ரிசதி (முந்நூறு நாமம்), அஷ்டோத்தர சதம் (108 நாமம்) முதலியன சொல்லி அர்ச்சனை பண்ணினாலும் முடிவில் இந்த அஷ்ட நாமாவையோ, த்வாதச (பன்னிரண்டு) நாமாவையோ சொல்லி முறையே ஈச்வரனையும், பெருமாளையும் அர்ச்சனை பண்ணவேண்டும். அஷ்டோத்தரம் முதலியன பண்ண முடியாதபோது இந்த எட்டு அல்லது பன்னிரண்டு நாமாக்களை மட்டும் மனஸாரச் சொல்லி அர்ச்சனை பண்ணினால் போதும் என்று சொல்லி இருக்கிறது. பிள்ளையாருக்கும் இப்படி விசேஷமான நாமாக்களாகப் பதினாறைச் சொல்லியிருக்கிறது.*

மஹா விஷ்ணுவுக்கு த்வாதச நாமாக்கள் முக்யமானவை. வைஷ்ணவர்களாக இருக்கப்பட்டவர் நெற்றியிலே போட்டுக்கொள்வதை 'நாமம்' என்று சொல்கிறோம். இந்தப் பேர் எப்படிவந்தது? வைஷ்ணவர், சைவர், ஸ்மார்த்தர், மாத்வர் யாவரும் நெற்றியில் மட்டுமில்லாமல் மார்பு, வயிறு, புஜம், மணிக்கட்டு முதலான இடங்களில் நாமமோ, விபூதியோ, கோபி சந்தனமோ இட்டுக்கொள்ள வேண்டும். ஆசார சீலர்கள் இப்படியே இன்றைக்கும் செய்கிறார்கள். இப்படிப் பன்னிரண்டு இடங்களில் நாமம் போட்டுக் கொள்ளவேண்டும். 'த்வாதச நாமம் போட்டுக்கொண்டு வந்தார்' என்று சொல்கிறோம். மஹா விஷ்ணுவுக்கு ரொம்பவும் ப்ரீதியாக இருக்கப்பட்ட பன்னிரண்டு நாமாக்களில் (பெயர்களில்) ஒவ்வொன்றுக்கும் அடையாளமாக சரீரத்தின் ஒவ்வொரு இடத்திலும் உலகளந்தவனும், உலகமே உருவானவனுமான பகவான் நினைப்போடு திருமண் இட்டுக் கொள்ளவேண்டும் என்பதே தாத்பர்யம். இப்படி பகவானின் த்வாதச நாமாக்களுக்கு அடையாளமாக இருப்பதாலேயே

---

* இப் பகுதியில் விநாயகரைக் குறித்த "கண்ணன் பூஜித்த கணநாதன்" என்ற உரையில் "பாலசந்த்ரன்" என்ற பிரிவு பார்க்க.

Koviloor Digital Library

இந்தப் பன்னிரண்டு திருமண் சின்னங்களுக்கும் த்வாதச நாமம் போடுவது என்று பேர் வந்தது. அப்புறம் திருமண் சின்னத்துக்கே "நாமம்" என்று பேராகிவிட்டது.*

இந்தப் பன்னிரண்டு நாமாக்களையே ஆசமனம் செய்யும் போதும் நாம் சொல்லி கன்னம், கண், மூக்கு, காது, புஜம், ஹ்ருதயம், தலை முதலான அவயவங்களைத் தொட்டுக் கொள்கிறோம்.

கேசவ - நாராயண - மா தவ - கோவிந்த - விஷ்ணு - மதுஸூதன - த்ரிவிக்ரம - வாமன - ஸ்ரீதர - ஹ்ருஷீகேச - பத்மநாப - தாமோதர என்பவையே இந்தப் பன்னிரண்டு நாமாக்கள்.

இதிலே வேடிக்கையாக, முக்யமான அவதாரங்களான க்ருஷ்ண, ராம என்ற இரண்டு பெயர்களும் இல்லை. ஆனாலும் கேசவன், கோவிந்தன், தாமோதரன் முதலானவை க்ருஷ்ண பரமாத்மாவின் பெயர்கள்தான். 'கேசி' என்ற அஸுரனைக் கொன்றதால் கேசவன்; கோக்களை (பசுக்களை) ரக்ஷித்த தால் கோவிந்தன்.

தாமோதரன்

'தாமோதரன்' என்றால், 'கயிற்றால் கட்டப்பட்ட வயிற்றை உடையவன்' என்று அர்த்தம். தாமம் என்றால் கயிறு. 'கேஸ் பெட்டி', 'கேட் வாசல்' என்று ஒரே அர்த்த முள்ள இரண்டு வார்த்தைகளைச் சேர்த்துச் சொல்கிறமாதிரி 'தாமக் கயிறு' என்று சொல்லிச் சொல்லித்தான் 'தாம்புக் கயிறு' என்று வந்துவிட்டது!

தாமம்-கயிறு; உதரம்-வயிறு. கயிற்று வயிற்றனே தாமோதரன்.

"வெண்ணெய் திருடுகிறாயா? உன்னைக் கட்டிப் போடு கிறேன், பார்" என்று யசோதை பாலக்ருஷ்ணனைப் பிடித்துக்

---

* முதற் பகுதியில் "விபூதி, திருமண்ணின் மஹிமை" எனும் உரையும் பார்க்க.

Koviloor Digital Library

கயிற்றால் கட்டிப் போடப் பார்த்தாள். அவள் எத்தனை கயிறுகளைச் சேர்த்து ஒட்டுப்போட்டுக்கொண்டே போன போதிலும் தன்னுடைய சின்ன வயிற்றைச் சுற்றிக் கட்டுவதற்குப் போதாதபடி மாயாஜாலம் பண்ணினார் பகவான். அப்புறம் அவள் வேர்த்து விருவிருத்துப் போனதைப் பார்த்துப் பரிதாபப்பட்டுத் தாமாகவே கயிற்றிலே கட்டுப்பட்டார். அந்த அவஸரத்திலேதான் 'தாமோதரன்' என்று பேர் ஏற்பட்டது. "உரலோடு சேர்த்து யசோதை கட்டிப்போட, மிருதுவான உன் வயிற்றைக் கயிறு உறுத்தும்படி எளிமையாகக் கட்டுப்பட்டாயே!" என்று ஆழ்வாராதிகள் இதை உருகி உருகிப் பாடி அநுபவித்திருக்கிறார்கள். "தான் பக்தர்களின் அன்புக்குக் கட்டுப்படும் பக்த பராதீனன்; ஆனாலும் அவர்கள் 'என்னால் கட்டிவிட முடியுமாக்கும்' என்று அஹம்பாவத்தோடு நினைக்கிறவரையில் தன்னைக் கட்டமுடியாது; தானே கருணைகொண்டு கட்டுப்பட மனஸ் வைத்தால்தான் முடியும் என்று காட்டுபவன் தாமோதரன். பிற்பாடு பாரத யுத்தம் ஏற்படுவதற்கு முன், ஸ்வாதீன ப்ரேமையில் ஸஹாதேவன் 'உன்னைக் கட்டிப் போடுகிறேன் பார்' என்று ஸவால் விட்டபோது, அவன் நிஜமாகவே கட்டிப் போடும்படியாகவும் பகவான் நின்றிருக்கிறான். தாமோதரனாய் இருக்கும்போது, இந்த ஷட்பதீ ஸ்தோத்ர ஆரம்பத்திலிருந்து வலியுறுத்தி வந்துள்ள விநயத்தோடு கூடிய பக்தியை எடுத்துக் காட்டியிருக்கிறான்.

"தாயைக் குடல் விளக்கம் செய்த தாமோதரனை" என்று ஆண்டாள் சொல்லியிருக்கிறாள். தன்னை தரித்த தாயாரான தேவகியின் குடலைத் தன்னுடைய கர்ப்பவாஸத்தால் பரிசுத்தி பண்ணிவிட்டான் என்பது அவள் சொல்வதற்கு அர்த்தம். எவனது குடலுக்கு வெளியிலே மேல் பக்கம் தாம்புக்கயிற்றைப் போட்டு வளர்ப்புத் தாய் யசோதை புண்ணாக, அழுக்காக ஆகும்படிச் செய்தாளோ அவன் தன் ஜனக மாதாவின் (பெற்ற தாயாரின்) குடலை தன்னுடைய வாஸத்தாலேயே தூய்மை செய்தவனுக்கும் என்று காட்டியிருக்கிறாள்.

Koviloor Digital Library

இது பக்தி பூர்வமாகச் சொல்கிற அர்த்தம். Philo-sophical-ஆக (தத்வரீதியில்) 'தாம உதரன்' என்றால் 'எல்லாவற்றுக்கும்இருப்பிடமான வயிற்றைக் கொண்டவன், அதாவது எல்லாவற்றையும் தன்னுள் அடக்கிக் கொண்டிருப்பவன்' என்று அர்த்தம் பண்ணுவார்கள்.

திருப்பெயர்களின் பொருள்

'கோவிந்தன்' என்றால் 'இந்த்ரியங்களை அடக்கி ஆளுகிறவன்' என்றும் அர்த்தம் சொல்வார்கள். இந்த இடத்தில் 'கோ' என்றால் இந்த்ரியங்கள். 'பார்ப்பார் அகத்துப் பாற் பசு ஐந்து' என்று திருமூலர் சொன்ன இந்த்ரியப் பசுதான் 'கோ'. 'கேசவன்' என்பதற்கும் இப்படியே தத்வார்த்தமாக 'க+அ+ஈச+வ' என்பதே கேசவன் என்று வ்யாக்யானம் செய்வார்கள். க என்றால் ப்ரம்மா. வேதத்திலேயே அப்படிப் பெயர் சொல்லியிருக்கிறது. அ என்பது விஷ்ணு. 'அகர முதல எழுத்தெல்லாம்' என்றபடி விச்வத்தின் ரூபமாக இருக்கிற விஷ்ணுதான் அ! அ, உ, ம என்ற மூன்றும் சேர்ந்த ப்ரணவமான 'ஓம்' என்பதில்கூட அ என்பது விஷ்ணு, உ என்பது ஈச்வரன், ம என்பது ப்ரம்மா என்ற த்ரிமூர்த்தி ஸ்வரூபமாகத்தான் சொல்லியிருக்கிறது. அப்படியே "கேசவ" நாமாவிலும் க என்பது ப்ரம்மா, அ என்பது விஷ்ணு, ஈச என்பது ஈச்வரன் (சிவன்)—இந்த மூவரையும் தன் வசத்தில் வைத்துக் கொண்டிருக்கிற பரமாத்மாதான் 'கேசவன்' என்று அர்த்தம் பண்ணுவதுண்டு.

மது மாதிரி - தேன் மாதிரி - மதுரமான ரூபத்தோடும் ஸ்வபாவத்தோடும் இருப்பவன் மாதவன். இதுவும் விசேஷமாக க்ருஷ்ணன் பேராகவே இருக்கிறது, ஆனால் மஹாவிஷ்ணுவுக்கே இந்தப் பெயர் உண்டு. மது - கைடபர் என்ற இரண்டு அஸுரர்களை மஹாவிஷ்ணு ஸம்ஹாரம்பண்ணினார். மதுவைக் கொன்றதால் மாதவன் என்ற பெயர் வந்தது. இன்னொரு அர்த்தமும் உண்டு. 'மா' என்றால் லக்ஷ்மி. காமாக்ஷி என்று அம்பாளின் பெயர் இருக்கிறதே, அதில் நடுவே வருகிற 'மா'வுக்குக்கூட 'லக்ஷ்மி' என்று அர்த்தம்

Koviloor Digital Library

பண்ணுவதுண்டு. 'சிவ' பத்னி 'சிவா' என்பதுபோல, 'க என்ற ப்ரம்மாவின் பத்னியான ஸரஸ்வதிக்குக் 'கா' என்று பெயர். 'கா'வான ஸரஸ்வதியும் 'மா'வான லக்ஷ்மியும் எவளுக்கு இரண்டு அக்ஷங்களாக (கண்களாக) இருக்கிறார்களோ, அவளே 'காமாக்ஷி'! தீக்ஷிதர்கூட 'நீரஜாக்ஷி காமாக்ஷி' க்ருதியில் லக்ஷ்மியும் ஸரஸ்வதியும் காமாக்ஷிக்கு இரண்டு கண்களாக இருப்பதை, 'சாரதா ரமா நயனே' என்கிறார். 'மா' என்றே தமிழிலும் லக்ஷ்மியைச் சொல்லியிருக்கிறது. 'தவன்' என்றால் புருஷன் (கணவன்). தவன், அதாவது புருஷன், இல்லாதவள் விதவா. லக்ஷ்மீ நாயகனுதலால் மஹா விஷ்ணுவுக்கு மா + தவன் ; மாதவன் என்று பேர். மாரமணன் என்றும் ஒரு பேர்.

பன்னிரண்டு நாமாக்களில் இன்னொன்றான 'மதுஸூதன' என்பதும் மது என்ற அஸுரனைக் கொன்றதைத்தான் குறிப்பிடுகிறது. இது மஹாவிஷ்ணு பண்ணின கார்யமானாலும் க்ருஷ்ணன் பூர்ணாவதாரமானபடியால் பொதுவில் அவரையே மதுஸூதனன் என்று சொல்கிறோம்.

இப்படியே 'ஹ்ருஷீகேசன்' என்ற பெயரும். 'ஹ்ருஷீகம்' என்றால் இந்த்ரியங்கள். அவற்றை அடக்கி ஆளுகிற ஈசன் தான் ஹ்ருஷீகேசன். கீதையில் 'ஹ்ருஷீகேசன்' என்ற பெயரையே அநேக இடங்களில் க்ருஷ்ணனுக்குக் கொடுத்திருக்கிறது.

பன்னிரண்டு நாமாக்களில் நாராயணன், விஷ்ணு, ஸ்ரீதரன், பத்மநாபன் என்ற நாலு பெயர்கள் நேராக மஹா விஷ்ணுவைக் குறிப்பதாக இருக்கின்றன. த்ரிவிக்ரம, வாமன என்ற இரண்டும் வாமன ப்ரம்மச்சாரியாகக் குட்டையாக வந்து அப்புறம் த்ரிவிக்ரமனாக வளர்ந்து உலகளந்த அவதாரத்தைச் சொல்கின்றன. கேசவன், மாதவன், கோவிந்தன், மதுஸூதனன், ஹ்ருஷீகேசன், தாமோதரன் என்ற பாக்கியுள்ள ஆறு பெயர்களும் லோக வழக்கில் க்ருஷ்ண நாமாக்களாகவே கருதப்படுகின்றன. ராமாவ

Koviloor Digital Library

தாரம், நரஸிம்ஹாவதாரம் முதலிய மற்ற அவதாரங்களுக்கு ஏற்பட்ட தனிப் பெயர்கள் இந்தப் பன்னிரண்டில் இல்லை.

வேத ஸூக்தங்களில் மஹாவிஷ்ணு த்ரிவிக்ரமனாக வந்ததையே விசேஷமாய்ச் சொல்லியிருக்கிறது. பிற்பாடு புராணங்களிலும், பஜனை, ஸங்கீர்த்தனம் முதலானவைகளிலும் க்ருஷ்ணனையே பூர்ணாவதாரம் என்று விசேஷித்திருக்கிறது. த்வாதச நாமாக்களிலும் இந்த இரண்டு அவதாரப் பெயர்களே இருக்கின்றன!

இந்தப் பன்னிரண்டு பெயர்களில் தாமோதர, கோவிந்த என்ற இரண்டை "ஷட்பதீ"யின் ஆறாவது ச்லோகத்தில் ஆசார்யாள் ப்ரயோகித்திருக்கிறார். முதல் ச்லோகத்தில் "அவிநயம் அபநய விஷ்ணோ!" என்று விஷ்ணுவை அழைத்து இந்த ஸ்தோத்ரத்தை விஷ்ணு பரமாகவே ஆரம்பித்தாலும், இங்கே பூர்ணாவதாரமான க்ருஷ்ணனின் இரண்டு பெயர்களாலே கூப்பிட்டு முடிக்கிறார்.

நிர்குணமும் குணநிலயமும்

"தாமோதர குணமந்திர!" என்று ஆறாவது ச்லோகத்தை ஆரம்பிக்கிறார் ஸ்ரீ ஆசார்யாள்.

'தாமோதர' சப்தத்துக்கு முன்பே அர்த்தம் சொன்னேன்.

'குண மந்திர' என்றால் 'குணங்கள் யாவும் குடிகொண்டவனே' என்று அர்த்தம். மந்திரம் என்றால் குடியிருக்கும் இடம். முக்யமாக, பகவான் அர்ச்சா ரூபத்தில் (விக்ரஹ வடிவில்) குடிகொள்ளும் கோயிலை மந்திரம் என்கிறோம். வடக்கே 'மந்திர்', 'மந்திர்' என்று சொல்கிறார்கள். அனந்த கல்யாண குணங்களும் ஒரு கோயிலாகக் குடிகொண்டிருப்பவனே 'குண மந்திரன்'.

'குணம்' என்பதற்குக் கயிறு என்று ஒரு அர்த்தம். 'தாமோதர' என்ற பெயரில் 'தாம' என்பது கயிற்றைக்

Koviloor Digital Library

குறிப்பிடுவதால், இந்த ஸ்தோத்ரம் பூராவும் சொற்களையும் பொருளையும் inter - linked - ஆக (ஒன்றுக்கொண்டு தொடர்புள்ளதாக)ப் பின்னிக்கொண்டு போயிருக்கும் ஆசார்யாள் அடுத்ததாக 'குண மந்திர' என்று போட்டிருப்பதாகவும் வைத்துக்கொள்ளலாம்.

குணமந்திரன் என்றால் அனந்த கல்யாண குண நிலயன்.

அத்வைத சாஸ்த்ரம் அரை குறையாகத் தெரிந்தவர்கள், 'நம் ஆசார்யாள் இப்படி அனந்த கல்யாண குண நிலயனாக பகவானைச் சொல்லி ஸ்தோத்ரம் செய்யலாமா?' என்று கேட்கக்கூடும். ஏனென்றால் சங்கர பகவத்பாதாள் முடிந்த முடிவாக ஸ்தாபித்த அத்வைத ஸித்தாந்தத்தின் படி ப்ரஹ்மம் அல்லது பரம்பொருள் என்பது நிர்குண மானதுதான்—அதாவது, அதற்கு எந்த குணமும் கிடையாது. அதுவேதான் ஜீவாத்மாவும். ஜீவாத்மாவுக்கு மனஸ் என்று ஒன்று இருக்கிறவரையில்தான் குணங்கள், கார்யங்கள், நாம - ரூபம் (பெயர் - வடிவம்) எல்லாம் உண்டு. ஞான விசாரம் பண்ணிப் பண்ணி மனஸைத் தொலைத்து விட்டால், அப்புறம் நிர்குணமான, ஏக வஸ்துவான ப்ரஹ்மமாகவே ஜீவனும் ஆகிவிடுகிறான். அதுதான் மோக்ஷம். இப்படிப்பட்ட ஸித்தாந்தத்தை அவலம்பித்தவர் (பிடிப்பாகக் கொண்டவர்) பகவத்பாதாள்.

ராமாநுஜாசார்யார், மத்வாசார்யார் போன்றவர்களே ப்ரஹ்மத்தை அனந்த கல்யாண குணம் கொண்ட ஸ்ரீமந் நாராயணன் என்று சொல்பவர்கள். அனந்த கல்யாண குணங்களை அநுபவித்து ஆனந்தப்பட்டுக் கொண்டிருப்பதுதான் அவர்களுடைய ஸித்தாந்தப்படி மோக்ஷம்.

அதாவது சங்கரர் நிர்குண ப்ரஹ்மத்தையும், மத்வ ராமாநுஜர்கள் ஸகுண ப்ரஹ்மத்தையும் சொன்னவர்கள். இப்போது நம் விஷயத்துக்கு இவ்வளவு போதும்.

Koviloor Digital Library

"நிர்குண ப்ரஹ்மத்தையே சொன்ன பகவத்பாதாள் 'குண மந்திர' என்று கொண்டாடிச் சொல்லலாமா?" என்பது கேள்வி.

சொல்லலாம் என்பது பதில். (சங்கர) ஆசார்ய பாஷ்யங்களைப் பார்த்தால் என்ன தெரிகிறது? முடிவிலே எல்லாம் நிர்குணமாகிறதுதான் மோக்ஷம். அதுதான் ஜீவாத்மா பரமாத்மா இரண்டும் ஒன்றாகிவிடுகிற ஸ்வ-ஸ்வரூபம் என்றாலும், இவர்களிலே பரமாத்மாவானவர் மாயா சக்தியினால் ஜீவ - ஜகத்துக்களை உண்டுபண்ணி, நடத்துகிற ஈச்வரனாக இருக்கிறார் என்றும் சொல்கிறார். இந்த ஈச்வரன்தான் ஸகுண ப்ரஹ்மம் என்பது.

ஈச்வரனை வேறாக இருந்து உபாஸித்துப் பெறுகிற ஆனந்தங்களையே ராமாநுஜரும் மத்வரும் சொன்னார்கள். அந்த உபாஸனையையும், ஆனந்தத்தையும் நம் (சங்கர) ஆசார்யாளும் நிறையச் சொல்லியிருக்கிறாரென்பதை இதுவரை "ஷட்பதீ"க்கு அர்த்தம் கேட்டதிலேயே புரிந்து கொண்டிருப்பீர்கள்.

ஆனால் இந்த உபாஸனையை முதல் படியாகக் கொண்டு, இதிலிருந்து இரண்டாம் படியாக உபாஸகனே உபாஸ்யமாகவும் (உபாஸிக்கப்படும் பொருளாகவும்) ஆகிவிடுகிற நிர்குண அத்வைதத்துக்குப் போகவேண்டும் என்றார்.

ஸரி, ஆனால் இப்படி அத்வைதாநுபம் பெற்றுவிட்ட ஞானி எப்போதும் நிர்குணத்திலேயேதான் இருக்கிறானா? அப்படிக் காணோமே! மஹா ஞானிகளும் வெளிலோகத்தில் நிறையக் கார்யங்களை, அநுக்ரஹங்களைச் செய்துகொண்டு தானே இருக்கிறார்கள்? சுக ப்ரம்மத்திலிருந்து, நம் ஆசார்யாளிலிருந்து, ஸதாசிவ ப்ரம்மேந்த்ராள் வரை இப்படித்தானே இருந்திருக்கிறார்கள்? அப்படியானால் ஸமாதியில் அவர்கள் பெற்ற நிர்குண அநுபவம் இவர்களை விட்டுப் போய்விட்டதா?

Koviloor Digital Library

இதற்கு பதில் என்னவென்றால்: நாம், 'லோகம் தெரியாத நிலைமைதான் ஸமாதி; ஞானி லோக கார்யம் பண்ணும்போது அவனுடைய ஸமாதி கலைந்துவிட்டது' என்று சொன்னாலும், வாஸ்தவத்தில் அந்த ஞானி லோகத்தில் கார்யம் பண்ணுவதாக நமக்குத் தெரிகிறபோதும் கூட ஸமாதி நிலையிலேயேதான் இருக்கிறான். நமக்கு அவன் வேலை செய்வதாகத் தோன்றினாலும் அவனுக்கு இந்த எண்ணமோ, 'நாம் செய்கிறோம்' என்கிற கர்த்ருத்வமோ இல்லை. அவனுடைய பழைய தனி மனஸ் போனது போனது தான். அப்புறம் அவன் மூலம் ஈச்வரனேதான் கார்யங்களைப் பண்ணுகிறான்.

இப்படி இவனை லோக ஸங்க்ரஹத்துக்காக (உலக நன்மைக்காக) ஈச்வரனே பல தினுஸாக இயக்கிவைக்கிற போது, இந்த நாம - ரூப ப்ரபஞ்சத்தைப் பண்ணி, நடத்திக் கொண்டிருக்கிற ஸகுண ப்ரஹ்மமான தன்னையும் அவன் ரஸித்து, பக்தி பண்ணும்படியாக ஒரு விளையாட்டுப் பண்ணுகிறான்.

இப்படிப்பட்ட ஞானிக்கு ஸகுண - நிர்குண பேதங்களே அடிபட்டுப் போய் ஸகுண ப்ரஹ்ம அநுபவத்திலேயே நிர்குண ப்ரஹ்மாநுபவ ஆனந்தம் தெரிகிறது. இன்னும் சில ஸமயங்களில் இந்த த்வைதமும் (பலவாக இருக்கிற variety-யும்) அந்த அத்வைதத்தின் வேஷம்தானே என்ற உணர்வு அவனுக்கு நன்றாக ஸ்திரப்பட்டு விட்டதால், 'நிர்குணமாக இருக்கிற ஏக சாந்தத்தைவிட இப்படி ஸகல கல்யாண குணமாக இருக்கிற variety-ஐத்தான் அநுபவிக்கலாமே' என்றுகூடத் தோன்றிவிடுகிறது.

க்ருஷ்ண பக்தர்களான அத்வைதிகள்

இம்மாதிரி நிலையில்தான் பரம அத்வைதியான (ஸதாசிவ) ப்ரம்மேந்த்ராள் 'ப்ரஹ்மணி மானஸ ஸஞ்சர ரே' ('ஹே மனமே, நிர்குண ப்ரஹ்மத்திலேயே ஸஞ்சாரம் பண்ணு') என்று சொல்லிவிட்டு உடனே, மயிலிறகைத்

Koviloor Digital Library

தலையில் சொருகிக் கொண்டிருக்கிற ஸகுணமான க்ருஷ்ண பரமாத்மாவைப் பரவசமாக வர்ணிக்க ஆரம்பித்து விடுகிறார்.

இப்படித்தான் ஆசார்யாளும் ஏராளமான ஸ்தோத்ரங்களை ஸகுணப்ரஹ்மத்தின் பல ரூபங்களாக இருக்கப்பட்ட அநேக மூர்த்திகளின்மீதும் பாடியிருக்கிறார். அவற்றில் கேசாதி பாத வர்ணனை, பாதாதி கேச வர்ணனை எல்லாம் பண்ணி, அந்தந்த தெய்வத்தின் குணகண மஹிமைகளையும் லீலைகளையும் உள்ளமுருகிக் கொண்டாடியிருக்கிறார்.

'குண மந்திரம்' என்பதால் நிர்குணத்தை மறந்து விட்டார், அல்லது அதை மறுத்து முரணாகப் பேசுகிறார் என்று அர்த்தமில்லை. மாறாக, குண மந்திரம் என்பதாலேயே நிர்குணத்தைத்தான் அவர் சொல்கிறார் என்று எனக்குத் தோன்றுகிறது.

இது எப்படி?

VIBGYOR என்று ஏழு கலர்களைச் சொல்கிறோம். இந்த ஏழையும் ஒன்றாகச் சேர்த்துவிட்டால் என்ன ஆகிறது? ஒரு கலரும் இல்லாமல் வெள்ளை வெளேர் என்று ஆகிவிடுகிறதல்லவா?

இதே மாதிரி அத்தனை குணங்களும் அவனிடம் குடி கொண்டிருப்பதாலேயே அவன் ஒரு குணமும் இல்லாத நிர்குண வஸ்துவாக இருக்கிறான்.

ஒரு கலரும் இல்லாத ஸூர்ய வெளிச்சம் refraction-ல் ஏழு கலர்களுமாகப் பிரிகிற மாதிரி அந்த நிர்குணம்தான் மாயையில் பட்டு, அந்த refraction-ல் இத்தனை குணங்களுமாகிறது. நாம - ரூப ரஹிதமான ப்ரஹ்மம் இத்தனை நாம - ரூப ஜீவ ஜகத்துக்களாகிறது.

'தாமோதர' என்றவுடன் 'குணமந்திர' என்று ஆசார்யாள் சொல்வதில் ஒரு வார்த்தை விளையாட்டே இப்போது தெரிகிறது. தாம—உதரன் என்றால் 'கயிற்றால் கட்டப்பட்ட

Koviloor Digital Library

வயிற்றை உடையவன்'. 'குணம்' என்ருலும் கயிறு என்று அர்த்தம் உண்டு என்றேன். 'குண மந்திர' என்பது குணங் களிலே கட்டப்பட்ட மாதிரி நிர்குண வஸ்து இருக்கிறது என்று சொல்வதுபோலத் தோன்றுகிறது. வாஸ்தவத்தில் குணங்களால் கட்டுப்படுத்த முடியாதவன். ஆனுலும் யசோதை எத்தனை கயிற்ருலும் கட்டி முடியாத வயிற்றை பகவானே பிறகு கட்டுக்கு அகப்படுத்திக் கொண்டதுபோல ப்ரஹ்மமும் இப்படி ஸகுணம் மாதிரிக் கட்டுப்பட்டு வேஷம் போடுகிறது.

"என்ன ஆச்சர்யம்! உபநிஷதங்களின் அர்த்தமான நிர்குண ப்ரஹ்மம் இப்படி உரலில் கட்டுப்பட்டிருக்கிறதே!" என்று 'க்ருஷ்ண கர்ணாம்ருத'த்தில் ஒரு ச்லோகமுண்டு.* குண மந்திரமாக இருப்பதும் இப்படிக் கட்டுப்பட்டிருக்கும் நிலைதான் என்கிற மாதிரி 'ஷட்பதீ ஸ்துதி'யில் அடுத்தடுத்து "தாமோதர, குணமந்திர" என்று வருகிறது!

இப்படி குணத்தோடு ரூபத்தோடு அது வருகிறபோது அதை ரஸித்து ஆனந்தப் படுகிற நிலையிலேயே, அடுத்து "ஸுந்தர வதநாரவிந்த" என்கிருர்.

ஸுந்தர—அழகான; வதந—முகமாகிய; அரவிந்த—தாமரை. "தாமரை போல அழகான முகம் படைத்தவன்" என்று பகவானை வர்ணிக்கிருர்.

பரம அத்வைதிகள், பேச்சிலே மட்டுமில்லாமல் அநுபவிகளாக இருந்த அத்வைதிகள், பகவானின் ரூபஸௌந்தர்யத்தை 'ஓஹோ' என்று வர்ணித்து ஆனந்தித்திருக்கிருர்கள். அத்வைதிகள் பக்தர்களாயிருப்பதில் குறிப்பாக க்ருஷ்ணரை இஷ்ட தெய்வமாகக் கொண்டவர்களாகவே அதிகம் இருந்திருக்கிருர்கள்.

"க்ருஷ்ண கர்ணாம்ருதம்" பண்ணிய லீலாசுகர் அத்வைத ஸம்ப்ரதாயத்தைச் சேர்ந்தவர்தான். மலையாளத்தைச் சேர்ந்தவர் அவர். அங்கே அத்வைத ஸம்ப்ரதாயம்தான்

* 2, 28

Koviloor Digital Library

உண்டு. அதோடுகூட அவர் தங்கள் குடும்பத்தைப் பற்றிச் சொல்லிக் கொள்ளும்போது தங்களுடைய குலதெய்வம் சிவபெருமான் என்றும், தாங்கள் சிவ பஞ்சாக்ஷரீ ஜபத்தையே உயர்கதியாகக் கொண்டவர்களென்றும் சொல்லிக் கொள்கிறார்*. "ந கலு விசாரணீய:"—இதைப் பற்றிக் கொஞ்சம்கூட ஸந்தேஹமில்லை—என்று உறுதிப் படுத்திச் சொல்கிறார். அப்படியிருந்தும் க்ருஷ்ணனிடமே உயிரை வைத்து, நம்முடைய மனஸைக் கொள்ளை கொள்கிற முறையில் அவர் "கர்ணாம்ருதம்" செய்திருக்கிறார்.

நானூறு நானூற்று ஐம்பது வருஷத்துக்கு முந்தி மதுஸூதன ஸரஸ்வதி என்று ஒரு பெரியவர் இருந்தார். பெங்காலை (வங்காளத்தை) சேர்ந்தவர் என்பது பொது அபிப்ராயம். "அத்வைத ஸித்தி" என்று ஒரு உத்தம க்ரந்தம் உபகரித்திருக்கிறார். அத்வைத ஸம்ப்ரதாயத்துக்கு வேறு நூல்களும் உதவியிருக்கிறார். இவரே "பக்தி ரஸாயனம்" என்றும் ஒரு க்ரந்தம் செய்திருக்கிறார். நிர்குண ப்ரஹ்ம அநுபவமான ஞானத்துக்கும், ஸகுண ப்ரஹ்ம உபாஸனையான பக்திக்கும் contradiction (முரண்பாடு) இல்லை என்று நிலை நாட்டுவதற்காக இந்த நூலை எழுதினார்.

மதுஸூதன ஸரஸ்வதி க்ருஷ்ண பரமாத்மாவின் பரம பக்தர். 'சிவ மஹிம்ந ஸ்தோத்ரம்' என்று ரொம்பவும் உயர்ந்த சிவபரமான ஸ்தோத்ரம் ஒன்று உண்டு. மஹாராஷ்ட்ரத்திலிருந்து ஆரம்பித்து வடக்கே போகப் போக அது ஸகல ஜனங்களுக்கும் தெரிந்திருக்கும். இங்கே உங்களில் பல பேருக்கு அதன் பெயர்கூட நான் சொல்லித்தான் தெரிய வேண்டியிருக்கிறது! இந்த 'சிவ மஹிம்ந ஸ்தோத்ரம்' க்ருஷ்ணனையும் ஸ்தோத்ரம் பண்ணுவதாக அதன் வார்த்தைகளுக்கு அர்த்தம் பண்ணி அவர் (மதுஸூதனர்) ஒரு வ்யாக்யானம் எழுதியிருக்கிறார். அதாவது அதற்கு சிவபரமாக

* 2-24

Koviloor Digital Library

அர்த்தம் பண்ணியதோடு விஷ்ணுபரமாகவும் அர்த்தம் பண்ணி எழுதியிருக்கிறார்.

'அத்வைதிக்கு பக்தியே இருக்கக்கூடாது; அப்படி இருந்தாலும் அது ஆசார்யாளுக்கு இருந்த மாதிரி ஸகல தெய்வங்களையும் ஒன்றாகவே நினைக்கிற பக்தியாகத்தான் இருக்கவேண்டும்' என்று புஸ்தகம் படித்தே அத்வைதத்தைப் பற்றித் தெரிந்துகொண்டுள்ள நாம் நினைத்தாலும், அத்வைத அநுபவியான மதுஸூதன ஸரஸ்வதி க்ருஷ்ண பரமாத்மா என்ற ரூபத்திலேயே விசேஷ பக்தி வைத்திருந்தார்,

உடுபியில் க்ருஷ்ணனை ப்ரதிஷ்டை பண்ணினவர் மத்வாசார்யார். அவருடைய ஸித்தாந்தத்தை வலியுறுத்திச் சொல்லி, (சங்கர) ஆசார்யாளின் அத்வைதத்தை வன்மையாகக் கண்டித்தவர்களுள் வ்யாஸ தீர்த்தர் முக்கியமானவர். வ்யாஸதீர்த்தருடைய ஆக்ஷேபனைகளுக்கு எதிராகப் 'பாயின்ட்'களை கொடுத்தே மதுஸூதன ஸரஸ்வதி பரம அத்வைதமான நூல்களை எழுதினார். இப்படி நிர்குண ப்ரஹ்மாநுபவத்தை நிலைநாட்டிய இவரே, குழந்தைக் கண்ணன் விழித்தெழுந்தவுடன் கொட்டாவி விட்டுக்கொண்டு சோம்பல் முறித்ததை நெஞ்சுருகிப் பாடியிருக்கிறார்!

"ஆநந்த மந்தாகிநி ஸ்தோத்ரம்" என்று க்ருஷ்ணன் மேல் நூற்றுக்கு மேல் ச்லோகம் செய்து குணாநுபவ ஆனந்தத்தைக் கொட்டியிருக்கிறார்.

'அத்வைத தத்வமாவது, த்வைத தத்வமாவது?' என்கிற மாதிரி ஒரு இடத்தில், "எனக்கு க்ருஷ்ணனைத் தவிர வேறு ஒரு தத்வமும் தெரியவில்லை"—

க்ருஷ்ணாத் பரம் கிமபி தத்வம் அஹம் ந ஜாநே

என்று அவர் சொல்லியிருக்கிறார்.

Koviloor Digital Library

'த்யாநாப்யாஸ' என்று ஆரம்பிக்கிற ஒரு ச்லோகத்தில்,* 'யோகிகள் மனஸை அடக்கி, உள்ளுக்குள்ளே நிர்குணமாக, நிஷ்க்ரியமாக (கார்யம் இல்லாததாக) உள்ள ஏதோ ஒரு ஜ்யோதிஸை(ஜோதியை)ப் பார்க்கிறார்களென்றால் நன்றாகப் பார்த்துவிட்டுப் போகட்டும்! நம்மால் அப்படி த்யான அப்யாஸம் பண்ணி, மனஸை அடக்கி ஜ்யோதி தர்சனம் செய்ய முடியவில்லையே என்று அழவேண்டாம்! அந்த ஜ்யோதி நமக்கு வேண்டாம்! அதே ஜ்யோதி நல்ல நீல ஒளியாக இந்த யமுனா நதிக்கரையில் ஓடி விளையாடுகிற தல்லவா? (க்ருஷ்ண பரமாத்மாவைத்தான் சொல்கிறார்.) இதையே நாம் பார்த்துக்கொண்டிருப்போம்! இது நம் கண்களுக்கு ஆனந்தமூட்டுவதாக, சிரஞ்ஜீவியாக இருந்து கொண்டிருக்கட்டும்'' என்கிறார்.

எல்லாவற்றையும் விட்டு விட்டுப் பரமாத்மாவைப் பிடித்த பிறகு, 'எல்லாவற்றிலும் அந்தப் பரமாத்மாதான் இருக்கிறது; எல்லாம் அந்தப் பரமாத்மாவில்தான் இருக்கிறது; எல்லாமாகவும் அந்தப் பரமாத்மாவேதான் இருக்கிறது' என்று அநுபவ பூர்வமாகத் தெரிந்துவிடுவதால் எதையும் விடவேண்டிய அவச்யம் இருப்பதில்லை. இந்த நிலையில்தான் அத்வைதிகள் ஸகுண ப்ரஹ்மத்தை ஸ்தோத்ரம் செய்வது ''வாஸ்தவத்தில் பிரிவு இல்லையே! பிரிவு மாதிரி இருப்பது விளையாட்டுத்தானே? நாமும்தான் பக்தனாகப் பிரிந்திருந்து ஸகுணத்தை ரஸிக்கலாமே! ஸமுத்ரமும் அலையும் மாதிரி ஏகத்திலேயே பிரிந்த மாதிரி இருக்கலாமே!'' என்று இருக்கிறார்கள்.

அப்படித்தான் ஆசார்யாளும் குண மந்திர, ஸுந்தர வதநாரவிந்த'' என்று குண, ரூபங்களை ஸ்துதிக்கிறார்.

---

* த்யாநாப்யாஸ வசீக்ருதேந மநஸா யந் நிர்குணம் நிஷ்க்ரியம்.
ஜ்யோதி; கிஞ்சா, யோகிநோ யதி பிரம் பச்யந்தி பிர்யந்து தே |
அஸ்மாகம் து ததேவ லோசந, சமத்காராய பூயாத் சிரம்
காளிந்தி புலிநோதரே கிமபி யந்-நீலம் மஹோ தாவதி

Koviloor Digital Library

எல்லா குணமும் குடிகொண்டிருப்பதாலேயே, ஒரு குணமும் இல்லாத நிர்குண ப்ரஹ்மமாக பகவான் இருக்கிறுன் என்பதுதான் 'குண மந்திர' என்பதற்கு அர்த்தம். ஒரு குணமோ, அல்லது சில குணங்களோ மட்டும் பகவானுக்கு இருப்பதாகச் சொன்னுல் அவன் நிர்குணம் இல்லை. இந்த ஒருசில குணங்களுக்குள்ளேயே கட்டுப்பட்டிருக்கிறுன் என்று ஆகும். ஒருத்தன் வெளுப்பா யிருக்கிறுன் என்று சொன்னுல் அவன் வெள்ளை கலர் மட்டும் உள்ளவன் என்று அர்த்தம். ஒருத்தன் வெள்ளை யாகவும் இருக்கிறுன், கறுப்பாயும் இருக்கிறுன், பச்சை யாகவும் இருக்கிறுன் என்று சில கலர்களை மட்டும் சொல்லி நிறுத்தினுலும் அவன் அந்தச் சில கலர்கள் மட்டுமே என்ருகும். ஆனுல் ஒருத்தன் இன்னம் மற்ற எல்லாக் கலர்களாகவும் இருக்கிறுன் என்ருல் என்ன ஆகும்? அவன் வாஸ்தவத்தில் இவற்றில் எந்தக் கலருமே இல்லை; ஒரு கலருமே இல்லாமலிருக்கிறவன்; ஒவ்வொரு ஸமயத்தில் இப்படி ஒவ்வொரு கலராகத் தெரிகிறவன்—என்றுதானே ஆகும்? இப்படியேதான் நல்லது—கெட்டது, அழகானது—அழகில்லாதது, புண்யம்—பாபம், தர்மம்—அதர்மம் முதலிய எல்லாக் குணங்களுமாக குணமந்திரமாக பகவான் இருக்கிறுன் என்பதாலேயே அவன் வாஸ்தவத்தில் இந்த எதுவுமில்லை; அப்படிப்பட்ட நிர்குணமாக இருந்து கொண்டே இப்படிப் பல குணங்களுள்ளவனுகத் தெரிகி ருன் என்பதுதான் தாத்பர்யமாகும்.

நமக்குப் பிடித்த மாதிரி, நாம் ப்ரீதியோடு பக்தியோடு நினைத்து உருகுகிற மாதிரி, அரூபமான அவனே அழகான ரூபத்தோடு வருகிறுன். 'ஸுந்தர வதநாரவிந்த' என்று ஆசார்யாள், தாமரைத் திருமுகத்தோடு கூடிய இந்த அழகு ரூபத்தைச் சொல்கிருர்.

அரூபத்துக்கு ரூபம் வந்தவுடனேயே, பெயரில்லாத அதற்குப் பெயரும் வந்துவிடுகிறது. நாம—ரூபம் என்று சேர்த்துச் சொல்வதுபோல் உருவம் வந்தவுடன் பேரும்

Koviloor Digital Library

வேண்டும். "கோவிந்த" என்று பேர் சொல்லிக் கூப்பிடு கிறார் ஆசார்யாள்:

ஸுந்தர - வதநாரவிந்த கோவிந்த

கோவிந்த - ஹர நாமச்சிறப்பு

"கோவிந்த" என்கிற நாமம் ரொம்பவும் விசேஷமானது. ஈச்வர நாமாக்களுக்குள் 'ஹர' என்பதற்கும், விஷ்ணுவின் நாமாக்களுக்குள் 'கோவிந்த' என்பதற்கும் ஒரு தனிச்சிறப்பு உண்டு.

ஸத்ஸங்கத்துக்காக, ஸத்விஷயத்துக்காகப் பல பேர் கூடினாலும், மநுஷ்ய ஸ்வபாவத்தில், கொஞ்ச நேரம் போனதும் கூட்டத்தில் பலர் பல விஷயங்களைச் சளசள வென்று பேச ஆரம்பிக்கிறார்கள் அவர்கள்பேச்சை நிறுத்தி பகவானிடம் மனஸைத் திருப்புவதற்கு என்ன செய்கிறோம்? யாராவது ஒருத்தர் "நம: பார்வதீ பதயே" என்கிறார். உடனே, பேசிக்கொண்டிருந்த எல்லாரும் "ஹரஹர மஹா தேவ" என்கிறார்கள். அதற்கப்புறம் ஒரு பஜனையோ உபந் யாஸமோ ஆரம்பிக்கிறது. இப்படிப் பல பேருடைய மனஸை ஈச்வரனிடம் லகான் போட்ட மாதிரி இழுக்கிற சக்தி ஹரநாமத்துக்கு இருக்கிறது! அரன் நாமமே சூழ்க, வையக மும் துயர் தீர்கவே என்று ஞானஸம்பந்தக் குழந்தை வாழ்த் திய விசேஷத்திலேயே இப்படி ஹரன் நாமத்துக்கு சிறப்பு ஏற்பட்டிருக்கிறது!

"நம : பார்வதீ பதயே" மாதிரியே இன்னொன்றும் ஒரு கூட்டத்தின் மனஸை பகவத் பரமாகத் திருப்பி விடுவதற் காக கோஷிக்கப்படுகிறது. அதுதான் "ஸர்வத்ர கோவிந்த நாம ஸங்கீர்த்தனம்" என்பது. இப்படி ஒருத்தர் சொன்ன வுடன் கூட்டம் முழுவதும் "கோவிந்தா கோவிந்தா" என்கிறது." பஜகோவிந்தம்" என்று நம்முடைய ஆசார்யாள் குழந்தையாயிருந்தபோதே சொன்னதன் மஹிமை!

Koviloor Digital Library

"அண்ணாமலைக்கு அரோஹரா" என்று லக்ஷோபலக்ஷம் பக்தர்கள் சேர்ந்தபொழுது கோஷிக்கிறோம். காவடி எடுக்கிறபோது ஸுப்ரமணிய ஸ்வாமிக்கும் அரோஹரா' போடுகிறோம். அரநாமமே சூழ்கிறது, இப்படியே நித்ய உத்ஸவமாக இருக்கிற திருப்பதியில் லக்ஷோபலக்ஷம் ஜனங்களும் 'கோவிந்தா' போட்டுக்கொண்டேதான் மலையேறுகிறார்கள்.

இரண்டு தெய்வக் குழந்தைகளின் வாக் விசேஷம்! *

ஹர நாமத்தைவிடக்கூட கோவிந்த நாமாவுக்கு ஜாஸ்தி விசேஷம் தோன்றுகிறது. ஒருத்தர் 'பார்வதீ பதி'யைச் சொன்ன பிறகுதான் மற்றவர்கள் 'ஹர ஹர' என்கிறார்கள். ஆனாலும் கோவிந்த நாம விஷயமாகவோ, முதலில் சொல்கிற ஒருத்தரும் 'ஸர்வத்ர கோவிந்த நாம ஸங்கீர்த்தனம்' என்று இந்தப் பெயரையேதான் கோஷிக்கிறார். மற்றவர்களும் அதே நாமாவைத் திருப்புகிறார்கள்.

இன்னொன்று கூட: தீவிர வைஷ்ணவர்கள் ஹர நாமாவை கோஷிப்பார்கள் என்று சொல்வதற்கில்லை. ஆனால் கோவிந்த நாமாவை ஸகலருமே சொல்வார்கள். அதனால்தான் போலிருக்கிறது இதற்கு மட்டும் 'ஸர்வத்ர' என்று, அதாவது எல்லா இடத்திலும், எல்லாக் காலத்திலும் என்று அடைமொழி கொடுத்திருக்கிறது. 'ஸர்வத்ர கோவிந்த நாம ஸங்கீர்த்தனம்!' அதனால், என்னை யாராவது ஹிந்து மதத்தில் ரொம்ப ரொம்ப விசேஷமான நாமா எது என்று கேட்டால் 'கோவிந்தா'தான் என்று சொல்வேன்.

ஸர்வலோக சக்ரவர்த்தியாக இருக்கப்பட்ட பகவான் பரம கருணையோடு பரம எளிமையோடு வந்து மாடு மேய்த்து, கோபர்களையும் (ஆயர்களையும்) கோபிகளையும் அத்யந்த ப்ரேமையோடு அநுக்ரஹித்த அவஸரத்திலேயே அவருக்கு கோவிந்த நாமா ஏற்பட்டது. இந்த நாமா

---

* முதற்பகுதியில் "சிறுவர் இருவரின் சிறப்பு வாக்கு" என்ற உரையும் பார்க்க.

Koviloor Digital Library

ஏற்பட்ட வ்ருத்தாந்தத்தை பாகவதம் சொல்கிறது. "உத்த்ருதநக" ச்லோகத்தில் refer செய்த வ்ருந்தாந்தம்.

'தான் மழை பெய்வதால்தானே லோகம் உயிர் வாழ்கிறது?' என்ற கர்வம் இந்த்ரனுக்கு ஏற்பட்டது. அப்போது க்ருஷ்ணன் கோகுலத்தில் குழந்தையாக இருந்த ஸமயம். அவர் இந்த்ரனுக்கு புத்தி கற்பிக்க எண்ணினார். அதனால் கோபர்களிடம், அவர்கள் வழக்கமாகச் செய்யும் இந்த்ர பூஜையை நிறுத்திவிட்டு, அதற்கு பதிலாக கோவர்த்தன கிரிக்குப் பூஜை பண்ணச் சொன்னார். அதே போலச் செய்தவுடன் இந்த்ரனுக்கு ஒரே ஆத்திரமாக வந்தது. அந்த ஆத்திரத்திலே கோகுலத்தையே அடித்துக் கொண்டு போய் விடுகிறாற்போல் பெரிய மழையைக் கொட்ட ஆரம்பித்துவிட்டான். அந்த ஸமயத்தில் தான் பகவான்கிரிதர கோபாலனாக கோவர்த்தன மலையைத் தூக்கி, மழையைத்தடுத்து, தீன ஜனங்களையும் பசு முதலான ப்ராணிகளையும் ரக்ஷித்தார். பிறகு தேவேந்த்ரனே மழை பெய்ய முடியாமல் களைத்துப் போய் அவரிடம் வந்து மன்னிப்புக் கேட்டுக்கொண்டு, ஸகல உயிர்களையும் ('கோ' என்பது பசுவை மட்டும் குறிக்காமல் எல்லா ஜீவராசிகளை யும் குறிப்பதாகும்—பசு என்பதும் எல்லா ப்ராணியையும் குறிப்பது போல! இப்படி எல்லா உயிர்களையும்) ரக்ஷிப்பவர் அவர் தான் என்று அர்த்தம் தொனிக்கும்படியாக "கோவிந்த" என்று அவருக்குப் பட்டம் சூட்டி அபிஷேகமும் பண்ணிவைத்தான். அதனால் இந்த கட்டத்திற்கு கோவிந்த பட்டாபிஷேகம் என்றே பெயர். 'கோ'க்களுக்கு 'இந்த்ரன்' கோவிந்தன். 'விந்த' என்றால் ஒன்றைத் தேடி, நாடிப்போய் அடைவது. பசுக்கள் இப்படி க்ருஷ்ணனிடமே உயிராயிருந்து அவரைத் தேடி அடைந்ததால் கோவிந்தன். 'கோ' என்பது பசுவை மட்டுமில்லாமல் பூமி, ஆகாசம், வாக்கு, இந்த்ரியங் கள் ஆகியவற்றையும் குறிப்பது. இவையெல்லாம் தேடிப் போய் அடையும் லக்ஷ்யமான பரமாத்மா அவர் என்பதை யும் கோவிந்த நாமம் தெரிவிக்கிறது.

Koviloor Digital Library

"குறைவொன்றுமில்லாத கோவிந்தா"

ராமாயணத்தில் ஸ்ரீ ராம பட்டாபிஷேகம் மாதிரி, பாகவதத்தில் பகவானுக்குப் பட்டாபிஷேகமான ஸந்தர்பத்தில் சூட்டப்பட்ட பேர் "கோவிந்த" என்பதே. ராமர் மாதிரி க்ருஷ்ணர் பெரிய ராஜ்யத்துக்கு ராஜாவாகப் பட்டாபிஷேகம் பண்ணிக்கொள்ளாவிட்டாலும், தேவ ராஜாவாலேயே பட்டாபிஷேகம் பெற்றதால் இதற்கு ரொம்ப முக்யத்வமுண்டு. "கோவிந்தராஜா" என்று க்ருஷ்ணனுடைய பல பெயர்களில் இதற்கு மட்டுந்தான் "ராஜா" சேர்க்கிறோம்!

எனக்கு ஒன்று தோன்றுவதுண்டு. ஆண்டாள் திருப்பாவையில் "குறைவொன்றுமில்லாத கோவிந்தா!" என்று கூப்பிடுகிறாள் அல்லவா? பகவானுக்குக் குறை இருந்தது என்று யாராவது நினைப்பதுண்டா? ஸாதாரண மநுஷ்யன் குறைபட்டுக் கொண்டேயிருக்கும் ஸ்வபாவமுள்ளவன். அதனால் அப்படியில்லாத ஒருவனைக் 'குறைவொன்று மில்லாத மநுஷ்யா' என்று விசேஷிப்பது பொருத்தம். பகவானை ஏன் இப்படிச் சொல்லவேண்டும்? இப்படிச் சொல்வதாலேயே, 'அப்பா குதிருக்குள் இல்லை' என்கிற மாதிரி, பகவானுக்குக் குறையிருந்தது போலத்தானே த்வனிக்கிறது!

யோசித்துப் பார்த்ததில், பகவானுக்கு வாஸ்தவமாகவே பூர்வத்தில் ஒரு குறை இருந்து, அது கோவிந்தனாக அவன் ஆனபோதுதான் தீர்ந்தது என்று தெரிந்தது.

பகவானுக்கு என்ன குறை இருந்தது? 'ராம பட்டாபிஷேகம்' என்றேனே, அதிலேயேதான் குறை! சக்ரவர்த்தியாக முடி சூடியதில் என்ன குறை என்றால், இதை வால்மீகி தம்முடைய ராமாயணத்தில் வர்ணித்திருக்கிற தினுஸிலேதான் குறை ஏற்பட்டுவிட்டது.

'வஸிஷ்ட வாமதேவாதி ரிஷிகள் எட்டுப் பேர் ஸ்ரீராம சந்த்ரமூர்த்திக்குப் பட்டாபிஷேகம் பண்ணினார்கள். அது எப்படித் தெரியுமா இருந்தது? அஷ்ட வஸுக்கள் தேவேந்த்

Koviloor Digital Library

ரனுக்குப் பட்டாபிஷேகம் பண்ணின மாதிரி இருந்தது' என்று வால்மீகி வர்ணித்திருக்கிறார். "வஸவோ வாஸவம் யதா"—"வாஸவன் எனப்படும் இந்த்ரனுக்கு வஸுக்கள் பண்ணியதுபோல" என்று அர்த்தம்.

இந்த Comparison (ஒப்புவமை)தான் ராமருக்குக் குறை உண்டாக்கிவிட்டது. ஏன்? இந்த்ரன் சீரழிந்த கதையை இதே வால்மீகி பாலகாண்டத்தில் சொன்னார். கௌதம பத்னியாகிய—அதாவது தாய் போல் மதிக்க வேண்டிய—ரிஷிபத்னி அஹல்யையிடம் தப்பாக நடந்து கொண்டு, மஹாபாபம் பண்ணினவன் இந்த்ரன். அதற்காக சாபத்தை வாங்கிக் கட்டிக்கொண்டு அவமானப்பட்டவன். பதிதையாகிவிட்ட அஹல்யைக்கு ஸ்ரீ ராமசந்த்ர மூர்த்தி புனருத்தாரணம் தந்த பெருமைதான் இன்றைக்கும் அவரை "பதித பாவன ஸீதாராம்" என்கிறோம்.

கதை இப்படியிருக்க, அந்த இந்த்ரனையே தனக்கு உவமையாக வால்மீகி மஹர்ஷி சொல்லிவிட்டதில் ராமருக்கு உள்ளூரக் குறை ஏற்பட்டுவிட்டது. ஏகபத்னீ வ்ரதனான தம்மை, தகாத பாபம் பண்ணினவனோடு ஒப்பிட்டுவிட்டாரே என்று ஒரு குறை.

ஆதியிலே ஒரு பட்டாபிஷேகம் நிச்சயமான ஸமயத்திலே அது நிறைவேறாமலே ராமர் வனவாஸம் பண்ணும்படி ஆயிற்று. அப்புறம் பதிநாலு வருஷங்கள் ஜனங்கள் தவியாய்த் தவித்துக் காத்திருந்து மறுபடி பட்டாபிஷேகம் நடக்கிறது. அதனால் பட்டாபிராமன் என்றே பகவானுக்கு ஒரு பேர் ஏற்பட்டிருக்கிறது. ராமாயண பாராயணம், ப்ரவசனம் எதுவானாலும் பூர்த்தி செய்யும் மங்களமான கட்டம் அதுதான். அங்கேபோய், பால காண்டத்தில் தன் கால் தூசியினாலேயே பரிசுத்தி பெற்ற ஒருத்தியை ஆதியில் தூசுபடுத்தியவனோடு தன்னை ஒப்பிட்டால் பகவானாகத்தானிருக்கட்டும், அவர் மநுஷ்யம் மாதிரிதானே நன்றாக 'ஆக்ட்' பண்ணினார், அதனால், வருத்தம் ஏற்படத்தானே செய்யும்?

Koviloor Digital Library

இன்னொரு குறை : இந்த்ராதி தேவர்கள் ராவணனின் ஹிம்ஸையைத் தாங்கமாட்டாமல் ப்ரார்த்தனை பண்ணிக் கொண்டதன் மேல்தான் மஹாவிஷ்ணு ராமாவதாரம் பண்ணினது. ராவணனின் புத்ரன் மேகநாதனே இந்த்ரனை ஜயித்து "இந்த்ரஜித்" என்று பேர் பெற்றிருந்தான். அப்படிப்பட்ட ராவணனைத் தாமே ஜயித்தும், இந்த்ரஜித்தைத் தாம் ஜயிக்கவேண்டுமென்று இல்லாமல் தம்பி லக்ஷ்மணனை விட்டே ஜயித்தும் விஜயராகவனானவர் ராமர். இப்படி ஸமூலம் ராக்ஷஸ ஸம்ஹாரம் பண்ணிவிட்டுப் பட்டாபி ஷேகம் பண்ணிக்கொள்கிறபோது, தம்மிடம் தோற்றுப் போனவனிடம் தோற்றுப்போன இந்த்ரனுக்கே தம்மை 'கம்பேர்' பண்ணினால் குறையாகத்தானே இருக்கும்?

வால்மீகி பாத்திரங்களின் குணத்தை compare பண்ணி இப்படிச் சொல்லவில்லை. பட்டாபிஷேக வைபவத்திலிருந்த ஆனந்த கோலாகலத்தைப் பார்த்ததும் தேவலோகத்தில் நடந்த இந்த்ர பட்டாபிஷேகத்தின் விமர்சைக்கு இதை ஒப்பிடலாம் என்று நினைத்தார். எட்டு வஸுக்கள் மாதிரியே இங்கேயும் ஸரியாக எட்டு ரிஷிகள் அபிஷேகம் பண்ணினவுடன், "வஸவோ வாஸவம் யதா" என்று உத்ஸாஹத்தில் எழுதிவிட்டார்.*

இதனால் பகவானுக்கு உள்ளுக்குள்ளே ஏற்பட்ட குறை, அப்புறம் க்ருஷ்ணாவதாரத்தில் ஸாக்ஷாத் அந்த இந்த்ரனே, "தோற்றேன்" என்று இவர் காலில் வந்து விழுந்து இவருக்கு 'கோவிந்த' பட்டம் தந்து அபிஷேகம் பண்ணின போதுதான் தீர்ந்தது. ராமபட்டாபிஷேகத்தில் உண்டான குறை கோவிந்த பட்டாபிஷேகத்தினால்தான் தீர்ந்தது. இதைத்தான் ஆண்டாள் suggestive-ஆக (குறிப்பால் உணர்த்துமுகமாக) "குறைவொன்றுமில்லாத கோவிந்தா" என்று சொன்னாள்.

---

* வஸிஷ்டர், வாமதேவர், ஜாபாலி, காச்யபர், காத்யாயனர், ஸுயஜ்ஞர், கௌதமர், விஜயர் என்ற எட்டு ரிஷிகள்.

Koviloor Digital Library

'குறைவேயில்லாத' என்றால் பரிபூர்ண வஸ்து என்று அர்த்தம். 'பூர்ணம் ப்ரஹ்ம ஸநாதனம்', 'பூர்ணாவதாரம்' என்று க்ருஷ்ண பரமாத்மாவைச் சொல்வது இதனால் தான்.

குரு - தெய்வ "கோவிந்த"

கோவிந்த நாமாவுக்கு இருக்கப்பட்ட அநேகச் சிறப்புக்களில் இன்னொன்று நம் ஆசார்யாளுக்கு அதுதான் ரொம்பவும் பிடித்தது - favourite - என்பது! 'பஜ கோவிந்த'த்திலிருந்து இது தெரிகிறது. 'பஜகோவிந்தம்' என்பது அவருடைய 'சிவானந்த லஹரி', 'ஸௌந்தர்ய லஹரி', அல்லது இந்த 'ஷட்பதீ' ஸ்தோத்ரம் போல ஒரு ஸ்வாமியை ஸ்தோத்திரிக்கும் ப்ரார்த்தனை இல்லை. அதிலே ஜெனரலாக ஒரு மநுஷ்யன் இருக்கவேண்டிய வாழ்முறையையும், தத்வ உபதேசங்களையும், விவேக வைராக்யங்களையும்தான் சொல்லியிருக்கிறார். அது வைஷ்ணவர், சைவர் என்ற பேதமில்லாமல் ஸகல ஜனங்களுக்குமானது. இப்படிப்பட்ட க்ரந்தத்தில் ஆசார்யாள் 'பரமாத்மாவை பஜியுங்கள்' என்று பொதுப்பெயரை சொல்லாமல் 'கோவிந்தனை பஜியுங்கள்' என்று சொல்கிறாரென்றால், அந்தப் பெயரில் அவருக்கு ரொம்பவும் பிடித்தம் என்றுதானே தெரிகிறது?

லோகத்தில் உள்ள உபதேச க்ரந்தங்களுக்கெல்லாம் உச்சியில் உள்ள கீதையை அர்ஜுனனுக்குச் சொன்னதால் க்ருஷ்ணருக்கு "ஜகத்குரு" என்ற பட்டம் உண்டு. "க்ருஷ்ணம் வந்தே ஜகத்குரும்" என்று ச்லோகம் சொல்கிறோம். அதற்கு அப்புறம் நம் பகவத்பாதாளுக்குத்தான் ஜகத்குரு பட்டம் ஏற்பட்டது. ஜகத்குருவாயினும் ஆசார்யாளுக்கு, சிஷ்யபாவத்தில் இருந்துகொண்டு தம்முடைய குருவை ஸ்துதிப்பதிலேயே ஸந்தோஷம். அவருடைய குருவின் பேர் என்ன என்றால் கோவிந்த பகவத் பாதர் என்பதே. அதனால் குரு - தெய்வம் இரண்டின் பெயராகவும் உள்ள 'கோவிந்த' சப்தத்தில் ஆசார்யாளுக்கு அலாதி ப்ரீதி. 'கோவிந்த' என்னும்போது க்ருஷ்ண பரமாத்மாவை

Koviloor Digital Library

மட்டுமின்றி தம் குருவையும் ஆசார்யாள் நினைத்துக் கொண்டார் என்பதற்கு internal evidence (உட்சான்று)-ஆக "விவேக சூடாமணி"யின் ஆரம்ப ச்லோகத்தில்.

கோவிந்தம் பரமாநந்தம் ஸத்குரும் ப்ரணதோஸ்ம்யஹம் என்று சொல்லியிருக்கிறார்.

மூன்றில் ஒன்று

கோவிந்த நாமத்துக்கு இன்னொரு விசேஷமும் இருக்கிறது. முன்பு மஹாவிஷ்ணுவுக்கு ப்ரீதியான நாமாக்கள் என்று பன்னிரண்டைச் சொன்னேன் அல்லவா! அவற்றில் 'கோவிந்த' என்பது ஒன்றாக வருகிறது. இது தவிர மூன்றே மூன்று நாமாக்கள் மஹாவிஷ்ணுவுக்கு ரொம்பவும் விசேஷமானவை என்று எடுத்திருக்கிறார்கள். இந்த மூன்று நாமாக்களில் ஒவ்வொன்றுக்கும் ஒரு ஆசமனமாக மூன்று ஆசமனம் பண்ணிவிட்டு, அப்புறம் அந்தப் பன்னிரண்டு நாமாக்களைச் சொல்லிக் கன்னம், கண், மூக்கு, காது, புஜம், ஹ்ருதயம், சிரஸ் முதலியவைகளைத் தொட்டால் தேஹசுத்தி உண்டாகிறது. எந்தக் கர்மாவானாலும் முதலில் இப்படிச் செய்து சரீரத்தைத் தூய்மைப்படுத்திக் கொள்ளவேண்டும். மூன்று முறை ஆசமனம் செய்கிறபோது சொல்கிற நாமாக்கள், "அச்யுத, அனந்த, கோவிந்த" என்கிறவையே.

இப்படியாக, விசேஷமான பன்னிரண்டு நாமாக்கள், அதனிலும் விசேஷமான மூன்று நாமாக்கள் இரண்டிலும் வருகிற ஒரே ஒரு நாமம் 'கோவிந்த' என்பதுதான்.

கேசவ - நாராயண - மாதவ - கோவிந்த - விஷ்ணு - மது ஸூதன, த்ரிவிக்ரம - வாமன - ஸ்ரீதர - ஹ்ருஷீகேச - பத்மநாப - தாமோதர.

அச்யுத - அனந்த - கோவிந்த.

மூன்றிலே ஒரு நாமாவாக இருக்கப்பட்ட "கோவிந்த" என்பதை "பஜ கோவிந்தம், பஜ கோவிந்தம், பஜ கோவிந்தம்" என்று மூன்று தரம் ஆசார்யாள் சொல்லிச் சொல்லி ஸந்தோஷப்பட்டிருக்கிறார். ஒன்றை ஸத்ய

Koviloor Digital Library

ப்ரமாணமாகச் சொல்ல வேண்டுமானால் மூன்று தரம் திருப்பிச் சொல்வார்கள்.

இப்படி ஆசார்யாள் சொன்னது மட்டுமில்லாமல், ஆண்டாளும் மூன்று இடங்களில் கோவிந்த நாமாவை ப்ரயோகித்திருக்கிறாள். அவளுடைய "திருப்பாவை"யிலே. "திருப்பாவை"யின் கடைசியான முப்பதாவது பாட்டு அதற்கு பலச்ருதி. அதை விட்டுவிட்டால் அதற்கு முந்திய மூன்று பாட்டுக்களிலும் "கோவிந்தா!" என்றே பகவானைக் கூப்பிட்டிருக்கிறாள். இருபத்தேழாவது பாட்டில் "கூடாரை வெல்லும் சீர்க் கோவிந்தா!" என்கிறாள். இருபத்தெட்டாவதில்தான் "குறைவொன்றுமில்லாத கோவிந்தா" என்பது. இருபத்தொன்பதாவது பாட்டில் "இற்றைப் பறைகொள்வான் அன்று காண் கோவிந்தா!" என்கிறாள்.

பவக்கடல் கடையும் பகவத் மத்து!

இப்படி அநேகச் சிறப்புக்கள் பொருந்திய கோவிந்த நாமாவைச் சொல்லி பகவானை அழைத்து, "பவ ஜலதி மதன மந்தர" என்கிறார் ஆசார்யாள்.

'பவம்' என்றால் ஸம்ஸாரம்; 'ஜலதி' என்றால் ஸமுத்ரம். 'பவ ஜலதி' என்றால் ஸம்ஸார ஸாகரம். 'மதன' என்றால் கடைவது. Mathana என்று சொல்லவேண்டும். Madana என்றால் மன்மதனுக்குப் பேராகிவிடும். Madana என்றால் போதை உண்டாக்குவது என்று அர்த்தம். அப்படிப் பண்ணும் மதனவேள் ஜனங்களின் மனஸை மதனம் (Mathanam) பண்ணுகிறார் போல் காமத்தினால் கடைந்து கொந்தளிக்கச் செய்வதால்தான் மன்மதன் (Manmathan) என்றும் பெயர் பெற்றிருக்கிறான். தயிரை மத(tha)னம் பண்ணுகிற படியால்தான், தயிர் சிலுப்பும் குச்சியை 'மத்து' என்கிறோம். 'மந்தர' என்பது மந்தர மலை என்று பொருள் படும். 'பவ ஜலதி மதன மந்தர' என்றால் 'ஸம்ஸார ஸாகரத்தைக் கடைகிற மந்தரமலையாக இருக்கிறவனே!' என்று அர்த்தம்.

Koviloor Digital Library

அம்ருத மதனத்துக்காகப் பாற்கடலை தேவாஸுரர்கள் கடைந்தபோது மந்தரமலையைத்தானே மத்தாகப் போட்டு, அதிலே வாஸுகிப் பாம்பைக் கயிறாகச் சுற்றிக் கடைந்தார்கள்? அந்த மாதிரி இப்போது நாம் மாட்டிக் கொண்டிருக்கிற இந்த சாவுக்களமான ஸம்ஸார ஸாகரத்தி லிருந்தும் நித்யத்வமுள்ள மோக்ஷமான அம்ருதத்தைப் பெறுவதற்காக பகவானே மந்தர மலையாக வரவேண்டும் என்று ப்ரார்த்திக்கிறார். பாற்கடலைக் கடைந்தபோது மந்த்ரமலை அலைகளில் நிலை தடுமாறாதபடி மஹாவிஷ்ணு தான் ஆமை ரூபத்தை எடுத்துக்கொண்டு அதைத் தூக்கித் தாங்கிக்கொண்டார். அதுதான் கூர்மாவதாரம். இந்த ஷட்பதீ ஸ்தோத்திரத்திலேயே நாலாம் ச்லோகத்தில் "உத்த்ருத நக" என்றபோது இப்படி பகவான் மலையைத் தாங்கியதைச் சொல்லியிருக்கிறது. (கூர்மாவதாரத்தில் மந்தர மலையைத் தாங்கினது, க்ருஷ்ணாவதாரத்தில் கோவர்த்தனகிரியைத் தூக்கினது என்ற இரண்டு ஸந்தர்ப் பங்களில் பகவான் 'உத்த்ருத நக'னாக இருந்திருக்கிறான்.)

பாற்கடலில் மந்தர மலையைத் தாங்கினவனையே இங்கே, 'பவஜலதி மதன மந்தர, என்னும்போது ஸம்ஸார ஸாகரத்தைக் கடைய உதவுகிற ஒரு மந்தர மலையாக உருவகப்படுத்துகிறார். இங்கே மலையைத் தாங்குகிறவனாக அன்றி மலையாகவே வர்ணிக்கிறார். இதற்கு அர்த்தம் என்ன? ஸம்ஸார ஸாகரத்திலிருந்து கடத்துவிக்கிறான் என்று வழக்கமாய்ச் சொல்வதுபோல் சொல்லாமல், ஸம்ஸார ஸாகரத்தைக் கடைகிற மத்தாக இருக்கிறான் என்று ஏன் சொல்லவேண்டும்?

பாற்கடலைக் கடைந்தபோது முதலில் விஷம் வந்தது; அப்புறம்தான் அம்ருதம் வந்தது. கடைந்து கடைந்து முதலில் அதிலிருக்கிற கெட்டதை எல்லாம் விஷ ரூபத்தில் திரட்டி வெளிப்படுத்திய அப்புறந்தான், நல்லதான அம்ருதம் வந்தது. நம்முடைய வாழ்க்கையையும், ஸம்ஸாரத்தையும் இப்படிக் கடையவேண்டும். தன்னாலே

Koviloor Digital Library

அது அலை அடித்துக் கொண்டிருப்பதுதான். காம, க்ரோதாதிகளான பல சலனங்களால் அது அலைவீசிக் கொண்டிருக்கிறது. ஆனால் அதற்குள்ளேயே ஈச்வர தத்வமும் அம்ருதம் போல் இருக்கத்தான் செய்கிறது. இந்த ஸம்ஸாரக் கடலை நன்றாகக் கடைந்து காம, க்ரோதாதிகள் விஷயமாகத் திரண்டு வெளியே போகும்படி செய்து விட்டால் அப்புறம் திவ்வ அநுபவம், ஈச்வர ஸாக்ஷாத்காரம் என்கிற அம்ருதம் வந்துவிடும். முதலில் கெட்டதை எல்லாம் திரட்டவேண்டும். எதற்காக என்றால் வைத்துக் கொண்டு அநுபவிப்பதற்காக அல்ல. வெளியிலே துரத்து வதற்காகத்தான்! குப்பையை எல்லாம் ஒரு இடமாக பெருக்கித் திரட்டி வெளியிலே கொட்டுவதுபோல! அப்படி வெளியிலே துரத்துகிறவரை கெட்டதுகள் இருக்கத்தான் செய்யும். அவற்றை பகவானே மத்தாக வந்து ஒன்றாகச் சேர்த்து ஒரு இடத்தில் concentrate செய்து (திரட்டிக்) கொடுக்கிறான். பூஜை, க்ஷேத்ராடனம், ஸ்தோத்ரம் படிப்பது, ஜபம், த்யானம் என்கிற ஸாதனையெல்லாம் பகவானின் அநுக்ரஹ ஸ்வரூபம்தான். இப்படிப்பட்ட ஸாதனைகளால் வாழ்க்கைக் கடலைக் கடந்து முதலில் விஷத்தைத் திரட்ட வேண்டும். பிறகு, அதை வெளியே அனுப்பிவிடவேண்டும். அப்புறம் அம்ருதத்தை அடையவேண்டும்.

ஆகக் கூடி, எடுத்தவுடன் அம்ருதம் வேண்டும் என்றால் முடியாது. வி ஷ த் தை த அநுபவித்து தீர்த்தபின்தான் அம்ருதம் வரும். வாழ்க்கையில் கெட்டது, கஷ்டம், காம, க்ரோதம் எல்லாம் இருந்துதான் ஆகவேண்டும். போக போக இதையெல்லாம் விலக்கிவிட்டு ஒரே நல்லதாக, பேரின்பமாக ஆகவேண்டும்.

கெட்டதுகள் இருக்கின்றனவே என்று நாம் ஓயாமல் அழுதுகொண்டும், பயந்துகொண்டும், நம்பிக்கை இழந்து கொண்டும் இருக்க வேண்டாம் என்று ஆறுதலாகத் தெம்பு ஊட்டுகிற விதத்தில் 'பவஜலதி மதன மந்தர' என்று ஆசார்யாள் சொல்கிறார். மத்து போட்டுக் கடைகிறபோது

Koviloor Digital Library

எத்தனை கொந்தளிப்பு, எத்தனை பாடுபடவேண்டியிருக்கிறது? அம்மாதிரி நம் பூர்வ கர்மா, பழைய வாஸனைகள் தீருவதற்கும் வாழ்க்கையைக் கடைகிற கடையலில் மொத்துப்படவேண்டும். இப்படிப் பல சோதனைகளில், பரீக்ஷைகளில் தேறின பிறகுதான் விமோசனம் கிடைக்கும். அப்புறம் விமோசனம் கிடைப்பதற்காகவே, இப்போது ஸாக்ஷாத் பகவான்தான் இத்தனை கொந்தளிப்பை உண்டாக்குகிறான் என்று தெரிந்துவிட்டதானால் நம்முடைய பயம், அழுகை, நம்பிக்கைத் தளர்ச்சியெல்லாம் போய் விடும்.

மத்வாசார்யார் உடுப்பியிலே ப்ரதிஷ்டை பண்ணிய க்ருஷ்ணன் கையில் மத்து இருக்கிறது. பகவானே மந்தர மலை என்ற மத்தாக வந்து ஸம்ஸார ஸாகரத்தைக் கடைகிறான் என்று சங்கராசார்யார் சொல்கிறார்!

மத்தைக் கயிற்றால் சுற்றுகிற மாதிரி பகவானையே சுற்றிக் கட்டிப் போட்டிருந்தபோதுதான் அவன் தாமோதரனானது. மத்தைப்போட்டு யசோதை தயிர் கடைந்து கொண்டிருந்தபோது அவளிடம் பாலக்ருஷ்ணன் பால் குடித்துக்கொண்டிருந்தான். அடுப்பிலே பால் பொங்கி வந்தது. அதனால் குழந்தைக்குப் பால் கொடுப்பதை விட்டுவிட்டு அவள் எழுந்திருந்தாள். அதிலே ஏற்பட்ட ஆத்திரத்தில்தான் ஸ்வாமி தயிர்ச் சட்டியை உடைத்து, உறி வெண்ணெயை எடுத்துக் குரங்குகளுக்கு உபசாரம் பண்ணி, முடிவிலே யசோதை கட்டிப்போட, தாமோதரனாக ஆனது. "தாமோதர" என்று ச்லோகத்தை ஆரம்பித்து, அப்புறம் அவனையே மத்தாகச் சொல்வதில், இந்த ஸ்தோத்ரம் பூராவும் ஒன்றிலிருந்து ஒன்றாக அபிப்ராயங்கள் கிளைவிட்டுக்கொண்டு போகிற அழகில் இன்னொன்றைப் பார்க்கிறோம்!

ஸம்ஸார ஸாகரத்தைக் கடையும்போது முதலில் ஏன் விஷம் வரவேண்டும், லோக வாழ்க்கையில் ஏன் கஷ்டம் இருக்கவேண்டும், கெட்டது இருக்கவேண்டும் என்றால் அது

Koviloor Digital Library

தான் பகவானுடைய விளையாட்டு. இயற்கை நியதியிலேயே இப்படித்தான் வைத்திருக்கிறார். காய் கசக்கத்தான் வேண்டும், அப்புறம் கசப்புக் காயே துவர்ப்பாகவேண்டும், அதற்கப்புறம் துவர்ப்பு புளிப்பாகவேண்டும், கடைசியில் தான் புளிப்பு தித்திப்பாகவேண்டும் என்று வைத்திருக்கிறார். அப்படியே நம்முடைய காமம், க்ரோதம் முதலிய கசப்பு எல்லாம் படிப்படியாகத்தான் துவர்த்து, புளித்து அப்புறம் ப்ரசாந்த மதுரமாக வேண்டும். ஆனதால் நமக்கு இந்த தோஷங்கள் இருக்கிறதே என்று அழவேண்டாம். பகவானை நினைத்துக்கொண்டு, பக்தியோடு இருந்துகொண்டு, கர்மாநுஷ்டானங்களைப் பண்ணிக்கொண்டு, ஜனங்களுக்கு நம்மாலான தொண்டைச் செய்துகொண்டு இருந்தால் தன்னால் காலக்ரமத்தில் இந்த தோஷம் எல்லாம் போய்ப் பழுத்த பழமாக, அன்பு என்கிற ஒரே மதுரமயமாக ஆகிவிடுவோம். இம்மாதிரி பக்தி, கர்மாநுஷ்டானம், ஸேவை, த்யானம் முதலியவை இல்லாவிட்டால் கசப்பு மாறவே மாறாது.

இப்போது இத்தனை தோஷங்களோடு இருக்கிற மாதிரியே மனம் போனபடி இருந்துகொண்டு எப்போதும் கசப்பாக இருப்பதும் ஸரியில்லை. தோஷம் இருக்கிறதே என்று ஓயாமல் அழுதுகொண்டிருப்பதும் ஸரியில்லை. செய்ய வேண்டிய கர்மாக்களைப் பண்ணிக்கொண்டே போனோமானால் கசப்பு எல்லாம் மாறவேண்டியபோது மாறும்; மதுரமயமாய்விடும்.

சில உதாரண புருஷர் போதும்

தனியாக ஒரு பழத்தை எடுத்தால் இப்படி. பூவிலிருந்து கொஞ்சம் கொஞ்சமாகப் பழுக்க வேண்டும் என்பது தனி மநுஷ்யன் விஷயம். ஸமூஹம் என்று எடுத்துக்கொண்டால் அதிலே எங்கேயோ அபூர்வமாக ஒருசில மநுஷ்யர்கள் தான் இப்படிப் பழுக்கிறார்கள். இதற்காகவும் குறைப்பட வேண்டாம். ஸமூஹத்தை ஒரு மரம் என்று வைத்துக்கொண்டால் ஒரு மரத்தில் எத்தனை இலைகள் இருக்கின்றன?

Koviloor Digital Library

ஸீஸனுக்கு ஸீஸன் எத்தனை ஆயிரம் இலையும் பூவும் உதிர்ந்து கொண்டிருக்கின்றன? விழுகிற பூக்களோடு ஒப்பிட்டுப் பார்த்தால் பூ விழுந்த பின் உண்டாகிற பிஞ்சுகள் கொஞ்சந் தான். அந்தப் பிஞ்சுகளிலும் வெம்பி விழாமல் கடைசி ஸ்டேஜ்வரை பக்வமாகிக்கொண்டே போய்ப் பழுத்த பழமாகிறவை ரொம்பவும் ஸ்வல்பம்தான். இயற்கையில் இப்படித்தான் இருக்கிறது. ஜீவ ஸ்ருஷ்டியிலும் ஏராள மானவர் இலையாயும் பூவாயும் சருகாய், வாடலாய்க் கருதி விழுந்து, காயிலும் ஏராளமானவை வெம்பி விழுந்தும், பக்ஷிகளும் குரங்குகளும் கடித்து விழுந்தும், முடிவாக மிஞ்சும் கொஞ்சமே பழமானாலும் போதும்; அதுவே ஸ்ருஷ்டிக்கு ப்ரயோஜனம் என்றுதான் பகவான் லீலை பண்ணிக்கொண்டிருக்கிறான்.

ஜன ஸமுதாயத்தில் அடங்கிய எல்லோரும் நிறைந்த நிறைவாக ஆகி பூர்ணத்வம் அடையாவிட்டால் பரவா யில்லை; மரத்துக்குப் பழம் மாதிரி, ஜனத்தொகையில் எவரோ ஒருத்தர், ஆயிரத்தில் லக்ஷத்தில் ஒருத்தர் பூர்ணமாகி விட்டால் கூடபோதும்; அப்படி ஒரு ஆத்மா நிறைகிறதற்குத் தான் இத்தனை பேர் ஸ்ருஷ்டியாகி, இத்தனை காம க்ரோதாதி களில் மாட்டிக்கொண்டு தவிக்கிறதெல்லாம். அத்தனும் பெரிய ஸமுத்ரத்தைக் கடைந்து ஒரு சின்னக் கலசம் அம்ருதம் எடுத்ததுபோல் இவ்வளவு ஜீவ கோடிகளுள்ள ஸம்ஸாரத்தை கடைவதிலிருந்து அம்ருத தத்வமாக ஆன உதாரண புருஷர்கள் ஸ்வல்பம் உண்டானாலும் போதும். பவக்கடலைக் கடைந்து அதன் ஸாரமாக ஸ்வல்ப அளவு அம்ருதத்தை எடுக்க உதவுகிற மத்தாகத்தான் ஆசார்யாள் இங்கே பகவானை நினைத்து 'பவஜலதி மதன மந்தர, என்கிறார். அப்படிச் சொல்வதால், இந்த ஸம்ஸாரத்துக் குள்ளேயே விஷம் மட்டுமில்லாமல் அம்ருதமும் இருக்கிறது என்று நமக்கு ஆறுதல் உண்டாக்குகிறாற் போலிருக்கிறது. மத்தைப் போட்டுக் கடைந்த உடனே வெண்ணெய் வந்து விடுமா? எத்தனையோ நாழி சிலுப்பினால்தான் வரும்,

Koviloor Digital Library

அதுவரை அவஸரப்படக்கூடாது, ஆத்திரப்படக் கூடாது. நம்பிக்கை இழக்கக் கூடாது.

நிதானமாக, படிப்படியாக அபிவ்ருத்தி எவருக்கும் உண்டு. ஆகவே நாம் செய்யவேண்டியதெல்லாம், அந்த மத்து கயிற்றிலிருந்து நழுவி விடாமல் பார்த்துகொள்ள வேண்டியதுதான். என்ன கயிறு? பக்தி என்கிற கயிறுதான்! 'சிவாநந்த லஹரி'யில் ஆசார்யாள் பரமேச்வரனிடம், "பக்திக் கயிற்ருல் என் மனக்குரங்கை நன்ருகக் கட்டிப் போடு" (த்ருடம் பக்த்யா பத்த்வா) என்று சொல்லியிருக் கிருர். நாம் பக்திக் கயிற்ருல் பகவான் என்ற மத்தைச் சுற்றி, பிடிப்பை நழுவ விடாமலிருந்தால் அவர் இந்த ஸம்ஸார ஸாகரத்தைக் கடைந்து முதலில் விஷங்களைத் திரட்டி அப்புறப்படுத்திவிட்டுப் பிறகு நமக்கு அம்ருதம் எடுத்துக் கொடுத்துவிடுவார். அதாவது அமர நிலையான மோக்ஷத்தைக் கொடுத்துவிடுவார்.

பிறப்பு - இறப்பு, ஜனன - மரணம்தான் ஸம்ஸாரம். அம்ருதம் என்ருல் இறப்பில்லாதது. இறப்பேயில்லை என்ருல் அப்புறம் மறு பிறப்பு இல்லை. அப்படிப்பட்ட சாச்வதமான மோக்ஷானந்தமான அம்ருதத்தை இந்த ஸம்ஸார ஸாகரத் திலிருந்தே பக்தியின் துணை கொண்டு பகவதநுக்ரஹத்தால் பெறவேண்டும் என்பது தாத்பர்யம்.

ஸம்ஸார ஸாகரத்தை விட்டுக் கடத்துவிப்பது என்ருல் லோகத்தை அப்படியே துறந்துவிடச் செய்வது. ஸம்ஸாரத் தைக் கடைந்து அம்ருதம் பெறுவது என்ருல், அதை விட்டுப் போகாமல், எல்லாவற்றிலும் உள்ள எல்லாமுமான ப்ரஹ்மம் லோகத்திலும் இருக்கிறது என்று தெரிந்து கொண்டு இஹத்திலேயே பரத்தைப் பெறுவது—என்றிப்படி அர்த்தம் பண்ணிக்கொள்ளலாம். ஞானமாகவே போனுல், வைராக்யத்தில் ஸம்ஸாரத்தைத் துறந்து அதைக் கடப்பது; பக்தியாகப் போனுல், அவன் க்ருபையிலுள்ள நம்பிக்கை யால் ஸம்ஸாரத்தை விட்டுப் போகாமலே இதிலேயே

Koviloor Digital Library

அவனுடைய அம்ருத தத்வத்தைக் கடைந்து பெறுவது என்று வேண்டுமானாலும் அர்த்தம் செய்து கொள்ளலாம்.

''ஷட்பதீ"யை ஸம்ஸாரத்திலிருந்து கடப்பதில் ஆரம்பித்து, —''தாரய ஸம்ஸார ஸாகரத :'' என்று முதல் ச்லோகத்தில் ஆரம்பித்து கடைவதில் முடிக்கிறதால் எதையுமே விடாமல், ஒதுக்காமல், எதிலும் ஆத்ம தத்வத்தை அறிகிற பெரிய விசாலமான நிறைவில் முடிப்பதாக ஆகிறது.

துதியின் ஸாரம் : ஸம்ஸாரத் துன்ப நீக்கம்

முதல் ச்லோகத்தில் ''தாரய ஸம்ஸார ஸாகரத :''— ''ஸம்ஸார ஸாகரத்திலிருந்து அக்கரை சேரு!'' என்று ப்ரார்த்தித்தார். அடுத்த ச்லோகத்தில் ''ஸம்ஸார பயத்தையும் வேதனையையும் சிதைக்க வல்லதான பாதாரவிந்தத்தை நமஸ்கரிக்கிறேன்": ''பவபய கேத-ச்சிதே வந்தே'' என்றார். மூன்றாவதில் ஸம்ஸாரத்தைப் பற்றி 'ரெஃபரன்ஸ்' இல்லை. பரமாத்ம - ஜீவாத்மாக்கள் ஒன்றேயானாலும் வ்யவஹாரத்தில் ஸமுத்ரமும் அலையும் மாதிரி இருப்பவர்கள் என்று அதில் சொல்கிறார். யோசித்துப் பார்த்தால் இதிலும் ஸம்ஸார ஸமாசாரம் உட்கிடையாக இருக்கிறது. வ்யவஹார நிலை என்பதுதான் ஸம்ஸாரம். அதையேதான் பொதுவாக ஸமுத்ரம் என்பது. (முதல் ச்லோகத்தில் வரும் 'ஸாகரம்', ஆறாவதிலே வரும் 'ஜலதி' என்பனவற்றுக்கு ஸமுத்ரம் என்றே அர்த்தம்.) இந்த ஸம்ஸார ஸமுத்ரத்திலே அடிபட்டு, முழுகிப் போகாமலிருக்க வழி, இப்படி இதிலே த்வைதமாக உள்ளபோதுகூட, 'நாம் இந்த ஸமுத்ரத்தின் அங்கமல்ல. பரமாத்ம ஸமுத்ரத்தின் அங்கம்தான், அதன் அலைதான். அலை ஸமுத்ரத்தில் ஒடுங்கி ஒன்றாய்விடுகிறது போல நாம் பரமாத்மாவிலேயே ஐக்யமாகி விடவேண்டியவர்கள்தான்' என்ற நினைவுடன் இருப்பதேயாகும். 'ஸமுத்ரம் தானே அலையாக ஆகியிருப்பது? அப்படி பரமாத்மா அல்லவா நாமாக ஆகியிருப்பது? அவன் நினைவோடு அவனுடைய அலை நாம் என்ற உறுதியோடு

Koviloor Digital Library

இருந்தால் இந்த ஸம்ஸார ஸமுத்ரம் நம்மை என்ன பண்ண முடியும்?' என்று மூன்றும் ச்லோகம் எண்ண வைக்கிறது. அத்வைதப் பார்வையில் பார்த்தபோது அதில் த்வைதத்தின் நைச்யம் (எளிமை, தாழ்மை) இருப்பதாகச் சொன்னேன். த்வைதமான ஸம்ஸாரத்தின் கோணத்தில் பார்க்கும்போது 'ஸமுத்ரத்துக்கு வேருக இல்லாத அலை மாதிரி பரமாத்மாவுக்கு 'நாம்' என்கிற கருத்தே அத்வைதத்தின் கம்பீரத்தை நமக்கு அழுமூஞ்சி ஸம்ஸாரத்திலும் ஊட்டுவதாகத் தெரிகிறது. நாலாம் ச்லோகத்திலும் ஸம்ஸாரத்தைப்பற்றி வருகிறது.“பகவத் தர்சனம் கிட்டிவிட்டபின் ஸம்ஸாரத்தின் அழிவு எப்படி ஏற்படாமலிருக்கும்?—ந பவதி கிம் பவ திரஸ்கார :” என்று அது கேட்கிறது. அடுத்த ச்லோகத்தில், ஸம்ஸார தாபத்தில் பீதியுற்ற தம்மை பகவான் பரிபாலிக்க வேண்டிக்கொண்டார். “பவதாப பீதோஹம்” என்று அதில் வருகிறது. கடைசியான ஆருவதில் ஸம்ஸார ஸமுத்ரத்திலிருந்து அம்ருதமான ஆத்ம தத்வத்தைக் கடைந்து கொடுக்கும் மத்தாக பகவானை வர்ணிக்கிருர். ஆக ஸமய அநுஷ்டானங்கள், ஆத்மிகமான ஸாதனைகள் ஆகிய எல்லாவற்றுக்கும் ஒரே லக்ஷ்யமான ஸம்ஸார கஷ்ட நிவ்ருத்தியை பக்தியில் ஆரம்பித்துப் பெற முயல்வதே “ஷட்பதீ”யின் ஸாரதத்வம் என்று தெரிகிறது.

பரமம் தரம் அபநய த்வம் மே என்று இந்த ச்லோகம் முடிகிறது.

'தரம்' என்ருல் பயம் என்று அர்த்தம். மே - எனக்கு (அதாவது என்னுடைய;) பரமம் - மிகுந்த; தரம் - பயத்தை த்வம் - நீ; அபநய - போக்குவாயாக!

உருப்படுவோமோ மாட்டோமோ, கதிமோக்ஷம் கிடைக்குமோ கிடைக்காதோ என்கிற பயம், மரண பயம், மறுபடியும் ஜன்மா வந்துவிடுமோ என்கிற பயம், நம் பாபங்களை நினைத்து நரக பயம்—இப்படிப் பல தினுஸாகப் படுகிற பெரிய ஸம்ஸார பயத்தைப் போக்க பகவானிடம் ப்ரார்த்தனை செய்கிருர்.

Koviloor Digital Library

ஆதி வார்த்தை அந்தத்திலும்

'ஷட்பதீ' ஆரம்பச்லோகத்தில் 'அவிநயம் அபநய' என்று தொடங்கினுர். ஆருவது ச்லோகத்தை முடிக்கிறபோதும் 'தரம் அபநய த்வம் மே' என்பதாக அதே 'அபநய' என்ற வார்த்தையைப் போட்டிருக்கிருர். ஆதி வார்த்தையே அந்தத்தில் வருவதால் circle complete ஆகிவிடுகிறது (வட்டம் பூர்த்தியாகிவிடுகிறது). இது ஸ்தோத்ரத்தின் பூர்ணத்வத்துக்கு அடையாளம்.

'அபநய' என்பதற்கு அப்புறம் 'த்வம்', 'மே' என்ற இரண்டு வார்த்தைகள் வந்தாலும், மேலே காட்டினமாதிரி 'எனக்கு மஹாபயத்தை நீ போக்குவாயாக' என்பதற்கு நேர்வாக்யம், 'மே பரமம் தரம் த்வம் அபநய' என்று 'அபநய'வைக் கடைசி வார்த்தையாக வைத்து முடிப்ப தாகத்தானிருக்கும். வசன நடையில் அப்படித்தான் இருக்கும். கவிதையானதால் அதன் லக்ஷணங்கள் பொருந்து வதற்காக இப்படி 'அபநய'வை கொஞ்சம் முன்பே கொண்டு வந்து 'மே' என்று முடிக்கும்படி ஆயிற்று.

பகவத் கீதையில் இப்படியேதான் இருக்கிறது. அதிலே பகவானின் உபதேசம் இரண்டாம் அத்யாயத்தில் 'அசோச் யாந் அந்வசோசஸ்த்வம்' என்கிற (11-வது) ச்லோகத்தில் ஆரம்பிக்கிறது. கடைசியில் பதினெட்டாவது அத்யாயத் தில் 66-வது ச்லோகத்தில்,

ஸர்வ தர்மாந் பரித்யஜ்ய மாம் ஏகம் சரணம் வ்ரஜ ।
அஹம் த்வா ஸர்வ பாபேப்யோ மோக்ஷயிஷ்யாமி மா
சுச: ॥

என்று உபதேசத்தை முடிக்கிருர்.

இந்த இரண்டிற்கும் முந்தியும் பிந்தியும் இருக்கிற ச்லோகங்கள் Preface (முன்னுரை,) Epilogue (பின்னுரை) தான்.

'சுச' - 'சோச்ய' என்கிற வார்த்தைகள் 'வருத்தப்படு வதை'க் குறிக்கும் முதலில், 'அசோச்யாந் அந்வ சோசஸ்

Koviloor Digital Library

த்வம்' என்றதற்கு 'வருத்தப்பட வேண்டாதவர் விஷயத்தில் நீ வீணுக்கு வருத்தப்படுகிறாய்' என்று அர்த்தம். 'ஐயோ, இந்தக் கௌரவ ஸேனையை எப்படிக் கொல்வேன்?' என்று வருத்தப்பட்ட அர்ஜுனனிடம், 'தர்மத்தை உத்தேசித்து இந்த யுத்தம் நடந்தாக வேண்டியிருக்கிறது. பூபாரம் தீருவதற்காக, இவர்கள் எல்லாரும் ஸம்ஹாரம் ஆக வேண்டும் என்று ஏற்கெனவே ஈச்வர ஸங்கல்பமாகிவிட்டது. ஆகையால் நீ வருத்தப்பட வேண்டாதவர்களுக்காக அநாவச்யமாக வருத்தப்படுகிறாய்!' என்று சொல்ல வந்த பகவான், 'அசோச்யாந் அந்வசோசஸ்த்வம்' என்று ஆரம்பிக்கிறார். கடைசியில் முடிக்கிறபோது, "எல்லாத் தர்மங்களையும் விட்டுவிட்டு (அதாவது, எல்லா தர்மங்களுக்கும் மேலாக) என்னிடம் சரணாகதி பண்ணி, நான் விட்டவழி என்று இருந்துவிடு. நான் உன்னை ஸகல பாபங்களிலிருந்தும் விடுவிக்கிறேன். இது நிச்சயம். ஆதலால் கொஞ்சங்கூட வருத்தப்படாதே" என்று அர்ஜுனனுக்குத் தன் வாக்குறுதியைக் கொடுக்கிறபோது மா சுச: என்கிறார். 'மா சுச:' என்றால் 'வருத்தப்படாதே' என்று அர்த்தம். ஆரம்பத்தில் வந்த 'அசோச', முடிந்த முடிவில் வரும் 'மா சுச' இரண்டும் ஒன்றேதான். 'சுச்' என்கிற root (தாது) இரண்டிற்கும் பொது.

கீதையில் போலவே ஷட்பதீயிலும் முதல் ச்லோக ஆரம்பத்தில் வந்த "அபநய" ஆறும் ச்லோக முடிவிலும் வருகிறது. "விநயமின்மையைப் போக்கு" என்று ஆரம்பித்தவர் "பயத்தைப் போக்கு" என்று முடிக்கிறார். போக வேண்டியதைப் போக்கிக் கொள்ளவேண்டியது, வரவேண்டியதை வரவழைத்துக் கொள்வதைவிட முக்யம். முதலில் இதைச் செய்துகொண்டால்தான் அப்புறம் அதைச் செய்து கொள்ளமுடியும். செய்து கொள்வது, போக்கிக்கொள்வது என்றாலும் அது நம்மாலாகிற கார்யமா? இல்லை. அவனுடைய அருள்தான் அப்படிப் போக்க வைக்கவேண்டும். அதனால்தான் ஆரம்பம் முடிவு இரண்டிலும், போகவேண்டிய

Koviloor Digital Library

இரண்டை—திமிரையும் பயத்தையும்—போக்கு, "அபநய", என்று வேண்டிக் கொள்கிறார். பயம் என்பது திமிருக்கு நேரெதிர். பூஞ்சை மனஸைக் காட்டுவது. உத்தம மானவருக்குத் திமிரும் இருக்காது, பூஞ்சையான பயங் காளித்தமும் இருக்காது. நமக்கு இரண்டும் இருக்கிறது. சிலவற்றைக் குறித்துத் திமிர், சிலவற்றைக் குறித்து பயம் என்று இருக்கிறது. இது இரண்டையும் போக்கிக்கொள்ள பகவானை ப்ரார்த்திக்கச் சொல்லிக் கொடுக்கிறார் ஆசார் யாள்.

ஒரு ச்லோகத்தின் முடிவு வார்த்தை அடுத்ததன் ஆரம்பமாக இருப்பதைத்தான் அந்தாதி என்பது. "உத்த்ருத நக"வில் ஒரே ச்லோகத்துக்குள்ளேயே ஆசார்யாள் அந்தாதி விளையாட்டுப் பண்ணியதைப் பார்த்தோம். இப்போது ஆறு ச்லோகம் கொண்ட முழு ஸ்தோத்ரத்துக்கு மாகச் சேர்த்து முதல் வார்த்தையான 'அபநய' என்பதையே கடைசியிலும் போட்டு ஒரு விநோதமான அந்தாதி பண்ணி யிருப்பதைப் பார்க்கிறோம். முதல் வார்த்தை, கடைசி வார்த்தை என்பதற்குப் பதில் முதல் வினைச்சொல், கடைசி வினைச் சொல் என்று வைத்துக் கொள்வதுதான் இன்னும் ஸரியாயிருக்கும். முதல் வார்த்தை 'அவிநய' என்பதே. அதையடுத்து முதல் வினைச்சொல்லாக 'அபநய' வருகிறது. கடைசி வார்த்தைகள் 'அபநய த்வம் மே'. 'அபநய'வுக்கு அப்புறம் 'த்வம் மே' இருக்கிறது. ஆனால் வினைச்சொல்லில் எது கடைசி என்று பார்த்தால் 'அபநய' தான்!

Verb என்பதைத் தமிழில் வினைச்சொல் என்றும், ஸம்ஸ் க்ருதத்தில் க்ரியா பதம் என்றும் சொல்கிறோம். இதி லிருந்து, அது ஒரு வேலையைக் கொடுப்பது என்று தெரிகிறது. இப்படி, நம்மை விடாமல் ஒரு வேலை வாங்குவதற்கே ஸௌக்ஷ்மமாக இப்படி ஷட்பதீ ஸ்தோத்ரம் முழுதையும் வினைச் சொல்லால் ஒரு அந்தாதியாக ஆசார்யாள் பண்ணி யிருக்கிறார் போலிருக்கிறது! ஆரம்ப verb-ஐ முடிவிலே போட்டதால், "மறுபடியும் 'அவிநயம் அபநய' என்று அந்தாதிக்ரமத்திலே ஆரம்பி. அதாவது, திரும்பத் திரும்ப

Koviloor Digital Library

இந்த ஸ்தோத்ரத்தை ஜபம் பண்ணு'' என்று வேலை கொடுக்கிற மாதிரி இருக்கிறது!

பலச்ருதி போன்ற சரணுகதி விண்ணப்பம்

இதற்கு அடுத்ததாக வரும் ஏழாவது ச்லோகம் இந்த ஸ்தோத்ரத்தின் சிறப்பை, பலனைச் சொல்கிற பலச்ருதி மாதிரியானது.

'ஷட்பதீ' என்ருல் ஆறு செய்யுள்கள் என்று அர்த்தம் பண்ணிஞல், அது

தாமோதர குணமந்திர
ஸுந்தர வதநாரவிந்த கோவிந்த |
பவஜலதி மதந மந்தர
பரமம் தரம் அபநய த்வம் மே ||

என்கிற ச்லோகத்தோடு முடிந்துவிடுகிறது.

ஜயதேவர் பாடிய 'கீத கோவிந்த'த்திலுள்ள பாட்டுக்களை 'அஷ்டபதி' என்பது எதனுல்? அந்தப் பாட்டு ஒவ்வொன்றிலும் எட்டு அடிகள் இருப்பதனுல்தானே? இவ்வாறு பதம் என்பது வார்த்தையை மட்டுமின்றி ஒரு முழுச் செய்யுளை, ச்லோகத்தைக் குறிப்பிடுவதுமாகும் என்று முன்னேயே சொன்னேன். 'அஷ்டபதி' என்பது எட்டு ச்லோகமென்பதுபோல், 'ஷட்பதி'யும் ஆறும் ச்லோகத்தோடு பூர்த்தியாகிவிட்டது என்று அர்த்தம்.

நூற்சிறப்பு அல்லது பயனை 'பலச்ருதி' என்று சொல்கிற மரபுப்படியே, ஏழாவதாக ஒரு ச்லோகம் வருகிறது.

கீதையில் பகவான் சொன்ன மாதிரியே ஆசார்யாளும் ஆதிவார்த்தையை அந்தத்தில் வைத்திருக்கிருர் என்று சொன்னேனல்லவா? ஆசார்யாள் கீதையின் 'மாடலை' புத்தி பூர்வமாக நினைத்தே (கீதையை இந்த ஸ்தோத்ர அமைப்புக்கு முன்ஞேடி என்று புத்திபூர்வமாக எண்ணியே) இப்படிப் பதப்ரயோகம் பண்ணியிருப்பார் போலிருக்கிறது

Koviloor Digital Library

என்று ஏழாம் ச்லோகத்தைப் பார்த்தால் தோன்றுகிறது. ஏனென்றால் இதிலே கீதையின் கடைசி ச்லோகத்தில் சொல்லப்பட்டிருக்கும் சரணுகதியைத்தான் ஆசார்யாளும் சொல்கிறார்.

நாராயண, கருணுமய.
சரணம் கரவாணி தாவகௌ சரணௌ ।
இதி ஷட்பதீ மதீயே
வதந ஸரோஜே ஸதா வஸது ॥

என்பது ஷட்பதீக்கு பலச்ருதி மாதிரி உள்ள ஏழாவது ச்லோகம்.

'பலச்ருதி மாதிரி' என்று ஏன் சொல்கிறேன் என்றால், இதிலே ஆசார்யாள் அசல் பலச்ருதியாக, 'இந்த ஸ்துதிக்கு இன்னின்ன பலன்' என்று உடைத்துச் சொல்லாமல், மறை முகமாக நாம் ஊஹித்துப் புரிந்து கொள்ளும் விதத்திலேயே பலனைச் சொல்லியிருப்பதால்தான்! ரொம்பவும் விநய சீலரான நம் ஆசார்யாள் "சிவாநந்த லஹரி", "ஸௌந்தர்ய லஹரி" முதலியவற்றின் முடிவில்கூட, "இந்த ஸ்தோத்ரத் தைச் சொன்னால் இப்படியாகப்பட்ட பலன்கள் வரும்" என்று பலச்ருதி சொல்லவில்லை. ஸூசனையாகவே தெரிவித் திருக்கிறார்.

"நாராயண - நாராயணனே! கருணுமய - கருணை மயமானவனே! தாவகௌ சரணௌ - உன்னுடைய இரண்டு பாதங்களை; சரணம் கரவாணி - சரணமாக, அடைக்கலமாகக் கொள்கிறேன். இதி - இப்படிப்பட்ட; ஷட்பதீ - ஷட்பதீயானது; மதீயே - என்னுடைய; வதந ஸரோஜே - வாய் என்கிற தாமரையில்; ஸதா - எப்பொழுதும்; வஸது - வஸிக்கட்டும்."

ஷட்பதீ ஸ்தோத்ரம் தம்முடைய வாக்கில் ஸதா இருக் கட்டும் என்று ஆசார்யாள் சொல்வதற்கு அர்த்தம், சற்று முன்னால் நான் சொன்னாற்போல அதை நாம் திரும்பத் திரும்ப ஜபித்துக் கொண்டிருக்க வேண்டுமென்பதே.

Koviloor Digital Library

"தாவகௌ சரணௌ" என்கிறபோது charanau என்று சொல்லவேண்டும். "சரணம் கரவாணி" என்னும்போது சங்கரன், சங்கு, சட்டை என்பதில் சொல்கிற 'ச'வாக saranam என்று சொல்லவேண்டும். Charanam என்றால் கால்; saranam என்றால் அடைக்கலம், புகலிடம்.

த்வைத, விசிஷ்டாத்வைத, அத்வைத வித்யாஸங்களை நினைக்காமல் பக்தி பரவசத்தில் எப்படியெப்படி பாவம் வருகிறதோ அப்படியெல்லாம் ஆசார்யாள் இந்த ஸ்தோத்ரத்தைப் பண்ணிக்கொண்டு போயிருக்கிறார் என்று நடு நடுவே தெரிந்தது அல்லவா? ஸ்வச்சமான அத்வைதம் என்று பார்த்தால் அதிலே சேராத ஸகுண ப்ரஹ்ம வர்ணனை; ஸமுத்ரத்துக்கு அலை அடக்கமானதே என்பது போல ஈச்வரனுக்கு ஜீவன் அடங்கினவன் என்கிற தத்வம் ஆகியவற்றை இந்த ஸ்தோத்திரத்தில் ஆசார்யாள் சொல்லியிருப்பதைப் பார்த்தோம். முடிக்கிறபோதும் அத்வைதத்துக்கு முக்யமான ஞான மார்க்கத்தைச் சொல்லாமல், பக்திக்கு ப்ரதானமாக இருக்கிற சரணாகதியைத்தான் சொல்லியிருக்கிறார்.

சரணம் கரவாணி தாவகௌ சரணௌ

ப்ரஹ்ம பாவனையும் சரணாகதியும் ஒன்றே

பிற்காலத்தில் ராமானுஜர் இந்த சரணாகதியைத்தான் முக்யமான உபாயமாக வைத்து விசிஷ்டாத்வைத மதத்தை உருவாக்கினார். ஸ்ரீவைஷ்ணவர்களுக்கு முக்யமானவை அஷ்டாக்ஷரம், த்வயம் என்ற இரு மந்த்ரங்களும், கீதையின் சரம ச்லோகமான 'ஸர்வதர்மாந் பரித்யஜ்ய' ச்லோகமும், வீபீஷண சரணாகதியின்போது ஸ்ரீராமசந்த்ர மூர்த்தி தம்முடைய சரணாகத ரக்ஷக வ்ரதத்தைச் சொல்கிற ராமாயண ச்லோகமும் ஆகும்.

ராமாநுஜருக்குப் பிற்பாடு வடகலை, தென்கலை என்று இரண்டாகப் பிரிந்ததும் இந்த சரணாகதிக்குள்ளேயே

Koviloor Digital Library

இருக்கிற மாறுபாடுகளை வைத்துத்தான். பூனைக் குட்டி தனக்கென்று ஒரு ப்ரயத்னமும் இல்லாமல் கிடக்கிறதல்லவா? அதைத் தாய்ப்பூனை தானுகத் தானே வாயில் கௌவிக் கொண்டுபோகிறது? இம்மாதிரி நாம் பெருமாள் விட்ட வழி என்று கிடப்பதுதான் நிஜ சரணுகதி என்பது தென்கலைக்காரர்களின் அபிப்ராயம். இதற்கு 'மார்ஜார கிசோர ந்யாயம்' என்று பேர். மார்ஜாரம் என்றுல் பூனை; கிசோரம் என்றுல் குட்டி. "பூனைக்குட்டி முறை"தான் தென்கலை. வடகலைக்காரர்களின் அபிப்ராயம் என்னவென்றுல்; 'குரங்குக்குட்டி என்ன பண்ணுகிறது? அதுதானே தாய்க் குரங்கை இறுகக் கட்டிக்கொண்டிருக்கிறது? இந்த மாதிரி நாமேதான் ப்ரயத்னம் பண்ணி பகவானைப் பிடித்துக் கொள்ளவேண்டும். இந்த ஒரு யத்னம் தவிர பாக்கி விஷயங்களில்தான் அவன் விட்ட வழி என்று இருக்க வேண்டும்' என்று 'மர்க்கட கிசோர ந்யாய'மாக இவர்கள் சரணுகதியைச் சொல்கிருர்கள். 'மர்க்கடம்'—குரங்கு. 'மர்க்கட கிசோர ந்யாயம்'—குரங்குக் குட்டி முறை.

இரண்டிற்கும் basic - ஆக (அடிப்படையாக) இருப்பது சரணுகதி.

'தானே ப்ரஹ்மம்' என்கிற ப்ரஹ்மபாவனை ஞான மார்க்கத்துக்கு மையமாக இருக்கிற மாதிரி, 'தான் ஒன்றுமே இல்லை' என்று பகவானிடம் சரணுகதி செய்து கிடப்பது பக்தி மார்க்கத்துக்கு மையமாக இருக்கிறது. இந்த இரண்டும் ஒன்றேதான்.

'அதெப்படி? ஒன்றுக்கொன்று மலைக்கும் மடுவுக்குமாக அல்லவா இருக்கிறது?' என்று மேலெழுந்தவாரியாகப் பார்க்கிறபோது தோன்றும். ஆழ்ந்து பார்த்தால் இரண்டும் ஒன்றுதான். 'தானே ப்ரஹ்மம்' என்கிறபோது சொல்கிற 'தான்' வேறு; 'தான் ஒன்றுமே இல்லை' என்கிறபோது சொல்கிற 'தான்' வேறு! தானே ப்ரஹ்மம் என்று அத்வைதி சொல்கிறபோது தன்னுடைய சரீரம், இந்த்ரியம், புத்தி,

Koviloor Digital Library

மனஸ் இந்த எதுவும் நிஜமானதான் இல்லை என்று தள்ளி விட்டு, மிஞ்சி நிற்கிற ஆத்மாவைத்தான் ப்ரஹ்மம் என்கிறன். 'ஸாதாரணமாக எந்த ஜீவாத்மாவும் அஞ் ஞானத்தினால் "தானுக" நினைக்கும் இந்த சரீரம், இந்த்ரியம். புத்தி, மனஸ் இதுகளிலிருந்தெல்லாம் நாம் விடுபட வேண்டும். இவை இழுத்துக்கொண்டு போகிறபடி ஓடாமல் இவற்றை இறைவனின் பொற்பாத கமலங்களில் ஒன்றுமே யில்லை என்கிற மாதிரி கிடத்திவிட வேண்டும்', என்கிற அர்த்தத்தில்தான் 'தான் ஒன்றுமேயில்லை' என்று பக்தி மார்க்கக்காரன் சரணுகதி பண்ணுகிறன். அத்வைதி "தானுக"ச் சொல்லும் ஆத்மாவுக்கு அந்யமாக அவன் தள்ளுவதையேதான் த்வைத, விசிஷ்டாத்வைதிகள் "தான்' என்று வைத்து பகவானின் பாதத்தில் தள்ளுகிறர்கள்! ஆகையால் இரண்டும் ஒன்றுதான். அஹங்காரம் (ego) போகவேண்டும் என்பதுதான் இரண்டு மார்க்கத்துக்கும் பொதுவான லக்ஷ்யம்.

அத்வைத பாஷ்யங்களிலும் ப்ரகரண க்ரந்தங்களிலும் ஞான மார்க்கத்தைச் சொன்ன ஆசார்யாள் இங்கே பக்தராக இருந்து, அதே லக்ஷ்யத்துக்கு சரணுகதியை வழியாகச் சொல்லியிருக்கிறர் : "ச ர ண ம் கரவாணி தாவகௌ சரணௌ—உன் இணையடிகளில் சரணுகதி செய் கிறேன்" என்கிறர்.

"கருணமய" என்றதால் கருணைக் கடலான பகவான் சரணுகதனை நிச்சயம் ரக்ஷிப்பான் என்று உணர்த்துகிறர்.

நாராயண கருணமய

முதல் ச்லோகத்தில் 'விஷ்ணே' என்று ஆரம்பித்து விட்டு, ஆருவது ச்லோகத்தில் 'தாமோதர' என்று க்ருஷ்ண வதாரத்தைச் சொல்லி அழைத்தவர், இங்கு 'நாராயண என்கிறர். மதத்தின் பெயரைப் பார்க்கும்போது 'விஷ்ணு' வின் பெயரை வைத்து அது 'வைணவம்' எனப்பட்டாலும், அதற்கு முக்யமான அஷ்டாக்ஷரீ மந்த்ரத்தில் 'நாராயண'

Koviloor Digital Library

நாமம்தான் வருகிறது. "கண்டு கொண்டேன் நாராயணா என்னும் நாமம்" என்று ஆழ்வாரும் பாடியிருக்கிறார். ஆசார்யாளே தமது அத்வைத பாஷ்யங்களில் ஸகுண ப்ரஹ்மத்தைச் சொல்லும்போது நாராயணன் என்றே குறிப்பிட்டிருக்கிறார். ஸந்யாஸிகளுக்கு யார் நமஸ்காரம் பண்ணினாலும் அவர்கள் "நாராயண நாராயண" என்றே ஆசீர்வதிக்கணுமென்று அவர் ஏற்பாடுபண்ணியிருக்கிறார்.

இங்கே ஆசார்யாள், 'நாராயணனின் சரணத்தை நான் சரண் அடைகிறேன்' என்கிறார் அல்லவா? இதே அர்த்தத்தில் தான், ஏறக்குறைய இதே வார்த்தைகளிலேயே வைஷ்ணவர் களின் த்வய மந்த்ரம் இருக்கிறது.

இந்த மாதிரி அத்வைத, விசிஷ்டாத்வைத ஒற்றுமை களைப் பார்க்கிறபோது ரொம்பவும் ஸந்தோஷமாயிருக் கிறது.

ஆறு ச்லோகமும் ஆறு வார்த்தையும்

'இதி ஷட்பதீ மதீயே வதந ஸரோஜே ஸதா வஸது' என்பதற்கு, "இந்த ஆறு ச்லோகங்கள் கொண்ட ஷட்பதீ ஸ்தோத்ரம் என வாய் என்கிற தாமரையில் எப்போதும் இருக்கட்டும்" என்று அர்த்தம் பண்ணிக்கொண்டால் "ஷட்பதீ' என்பது 'ஆறு ச்லோகம். என்ற பொருள் கொடுக் கும். 'பதம்' என்றால் 'ச்லோகம்' என்று பொருள் கொள்ளா மல், 'வார்த்தை' என்றே அர்த்தம் செய்து கொண்டாலும் பொருத்தமாக அமைகிறபடி இங்கே ஆசார்யாள் ஒரு வார்த்தை விளையாட்டுப் பண்ணியிருக்கிறார். "இந்த ஆறு வார்த்தைகள் என் வாய்த் தாமரையில் எப்போதும் இருக்கட்டும்" என்றும் ஒரு பொருள் கொள்ள இடமிருக் கிறது. அதுவும் பொருத்தமானதே! எப்படி? எந்த ஆறு வார்த்தைகள்?

ச்லோகத்தின் முதல் பாதியில் வருகிற ஆறு வார்த்தை கள்தான்! 'நாராயண', 'கருணாமய', 'சரணம்', 'கரவாணி',

Koviloor Digital Library

'தாவகௌ', 'சரணௌ' என்ற ஆறு வார்த்தைகள்தானே முதல் பாதியில் இருக்கின்றன? "கருணாமயமான நாராயணா! உன் இணையடியில் சரண் புகுகிறேன்" என்ற இந்த ஆறு வார்த்தைகள் ஸதா ஸர்வ காலமும் தம் வாய்த் தாமரையில் இருக்கவேண்டும் என்று சொல்வதாகவும் அர்த்தம் பண்ணிக் கொள்ளலாம்.

ஷட்பதீயின் முதல் ஆறு ச்லோகங்களையோ அல்லது ஏழாவது ச்லோகத்தின் முதல் பாதியான ஆறு வார்த்தைகளையோ எப்போது பார்த்தாலும் சொல்லிக்கொண்டேயிருந்தால் பகவத் அநுக்ரஹம் கிடைத்துவிடும். 'விநயமின்மை போகவேண்டும்; மனஸின் ஓட்டம் நிற்கவேண்டும்; ஜீவதயை வ்ருத்தியாக வேண்டும்; ஸம்ஸார ஸாகரத்திலிருந்து கடத்தப்பட வேண்டும்; ஸம்ஸார ஸாகரத்தைக் கடைகிற மத்தாக பகவானே வந்து அம்ருதத்தை—அமரத் தன்மையை—அநுக்ரஹிக்க வேண்டும்' என்றெல்லாம் இந்த ஸ்தோத்ரத்தில் ஆசார்யாள் பல ப்ரார்த்தனைகளைச் சொன்னாரல்லவா? அந்த ப்ரார்த்தனையெல்லாம் இந்த ஆறு ச்லோகங்களையும், அவற்றுக்குப் பிறகு வரும் ஆறு வார்த்தைகளையும் ஸதா சொல்லிக் கொண்டிருப்பதாலேயே நிறைவேறிவிடும் என்று சொல்லாமல் சொல்கிற பலச்ருதியாக ஏழாவது ச்லோகம் இருக்கிறது.

"வண்டு"ப் புதிர் அவிழ்கிறது!

"மதீயே வதந ஸரோஜே'—'என்னுடைய வாயான தாமரையில்' என்று ஏன் சொன்னார்? 'என் வாய்' என்றாலே போதும்; வதநம் என்றாலே போதும். வாய்த் தாமரை, வதந ஸரோஜம் என்று அதற்கு ஏன் ஒரு அடைமொழி கொடுத்தார்? பகவானைப் பற்றி நயன கமலம், முகத் தாமரை, பாதபத்மம் என்று சொன்னால் ஸரியாகப்படுகிறது. இந்த ஸ்தோத்ரத்திலேயே இப்படி பகவானுடைய பாத கமலத்தையும் (ஸ்ரீபதி பதாரவிந்தே) முக கமலத்தையும் (ஸுந்தரவதநாரவிந்த) முன் ச்லோகங்களில் சொன்னா

Koviloor Digital Library

ஸரி. ஆனால் பக்தனுன தன்னைச் சொல்லிக்கொள்ளும் போது ஏன் 'வதந ஸரோஜே' என்று தாமரையோடு வாயை ஒப்பிட்டுக் கொள்ளவேண்டும்?

பல ச்ருதியைக்கூட விண்டு சொல்லாத அளவுக்கு விநய ஸம்பத் படைத்த ஆசார்யாள், 'அவிநயத்தைப் போக்கு' என்றே இந்த ஸ்துதியை ஆரம்பிக்கிற ஆசார்யாள், இங்கே இப்படித் தம்முடைய வாயை 'வதந ஸரோஜே' என்று அடைமொழி கொடுத்துச் சிறப்பித்துச் சொல்வதற்கு ஒரு காரணம் உண்டு.

இந்த ஸ்தோத்ரத்தைச் சொல்ல ஆரம்பிக்கும்போது 'ஷட்பதீ, என்ருல் 'ஆறுகால் உடைய வண்டு' என்று அர்த்தம் சொல்லி, இதில் ஆறு ச்லோகம் இருப்பதாலும், வண்டு ஸம்பந்தம் இருப்பதாலும்தான் ஆசார்யாள் ச்லேஷையாக 'ஷட்பதீ ஸ்தோத்ரம்' என்று பெயர் வைத்தார் என்று சொன்னேன் அல்லவா? வண்டு என்பது எப்படிப் பொருந்தும் என்கிற புதிர் இங்கேதான் அவிழ்கிறது.

'ஆறு சலோகம் — அதோடு (ஏழாவது ச்லோகத்தின்) ஆறு வார்த்தைகள் — ஸதா என் வாக்கில் இருக்கட்டும்' என்று ஆசார்யாள் சொல்லவந்தார். அப்படிச் சொல்கிற போது 'ஷட்பதீ' என்ருல் வண்டுக்கும் பேர் அல்லவா என்று தோன்றிவிட்டது. வண்டு என்கிற அர்த்தத்தில் 'ஷட்பதீ' என்கிற வார்த்தையை ஆசார்யாள் "ஸுப்ரஹ்மண்ய புஜங்க"த்திலும், "ஸௌந்தர்ய லஹரி"யிலும் உபயோகித் திருக்கிருர்.

திருச்செந்தூர் முருகன்மீது 'புஜங்கம்' பாடி ப்ரார்த் திக்கும்போது, "ஹே ஸ்கந்தா! பத்மத்தில் வண்டு மொய்த்துக் களிக்கிறது போல் பவ வினையால் க்லேச முற்றுக்கொதிக்கும் என் மன வண்டானது உன் பாத பத்மத்தில் ஸதா ரமித்துக் கொண்டிருக்கட்டும்" என்று சொல்லியிருக்கிருர். அங்கே,

Koviloor Digital Library

மந: ஷட்பதோ மே பவ க்லேச தப்த :
ஸதா மோததாம் ஸ்கந்த தே பாதபத்மே

என்கிறார்.

வண்டுக்கு ப்ருங்கம், ப்ரமரம், மதுபகம் என்றெல்லாமும் பெயர் இருக்க, அதை மனஸுக்கு ஒப்பிடும்போது ஷட்பதப் பெயரை ஏன் குறிப்பிட்டார் என்பது 'ஸௌந்தர்ய லஹரி' யில் வெளியாகிறது. அதில் (ஸௌந்தர்ய லஹரியில்) 'பஞ்ச இந்த்ரியங்கள் என்கிற ஐந்து கரணங்களோடும் மனஸ் என்ற ஆறாவது கரணத்தோடும் சேர்ந்ததால் ஆறுகால் கொண்ட வண்டு போலிருக்கிற என் ஜீவனானது உன் பாத பத்மத்தில் புதைந்து கிடக்கட்டும்' என்று அம்பாளிடம் ப்ரார்த்திக்கிறார்.

நிமஜ்ஜன் மஜ்ஜீவ: காரண சரண: ஷட்சரணதாம்!

பதம், சரணம் இரண்டும் காலைக் குறிக்கும். 'ஷட்சரண' என்றால் ஷட்பதமான வண்டு என்றுதான் அர்த்தம்.

மனஸை ஐந்து இந்த்ரியங்களோடு ஆறாவதாகச் சொன்னாலும் மற்ற ஐந்தையும்கூட ஆட்டிப் படைப்பது அதுதான். அதனால் மனஸையே அதுவும், அதன் ஐந்து அங்கங்களான பஞ்சேந்தரியங்களும் கொண்ட ஆறுகால் வஸ்துவாகச் சொல்வதுண்டு. அதனால்தான் "மன: ஷட்பதோ" என்றார்.

ஆகையால் இங்கே, 'ஆறு ச்லோக — ஆறு வார்த்தை —ஷட்பதீ என் வாயில் எப்போதும் இருக்கட்டும்' என்று சொல்ல வந்தபோது அவருக்கு வண்டு நினைவு வந்து விட்டது. வண்டு ஸதா இருக்கிற இடமாகத் தம் வாய் இருக்க வேண்டுமென்றால் அந்த வாயானது தாமரைப் பூவாக இருந்தால்தானே முடியும்? வண்டு தாமரையைத் தானே ஸதா மொய்க்கும்? அதனால்தான் 'வதந ஸரோஜே' என்று போட்டுவிட்டார்!

ஸ்ரீபதியின் பதாரவிந்தத்தை, ஸுந்தர வதநாரவிந்தத்தைப் பற்றிச் சொல்லிக் கொண்டேயிருக்கிற ஒரு பக்தனின் வாயும் அரவிந்தமாக ஆகிவிடுமாதலால், 'என் வாய்த்

Koviloor Digital Library

தாமரை' என்று போட்டதில் எந்த அநுசிதமும் இல்லை. அந்த வதன ஸரோஜத்தில் உள்ள வண்டு எது என்றால், அதுதான் ஷட்பதீ ஸ்தோத்ரம்.

"வண்டு ஸ்தோத்ரம்" என்ற நாமகரணம் இப்போது புரிந்துவிட்டதல்லவா? புதிர் அவிழ்ந்து விட்டதல்லவா?

வதந ஸரோஜத்தை - முக கமலத்தை - சொல்கிற போது ஆசார்யாளைப் பற்றி அவரது நேர் சிஷ்யரான பத்ம பாதாசார்யாளும், பிற்பாடு அப்பைய தீக்ஷிதரும் பண்ணின ச்லோகங்கள் மறுபடி நினைவு வருகின்றன. முன்பே சொன்னேன்*. ஆசார்யாளின் முகமாகிற மாநஸ ஸரஸிலே வாயாகிற தாமரையில் பாஷ்யம் என்கிற தேன் பொழிகிறது என்றும் அதை சிஷ்ய கணங்களான வண்டுக் கூட்டம் பருகுவதாகவும் சொன்னேன். அப்பைய தீக்ஷிதர் ச்லோகத்தில் விஷ்ணுவின் பாதகமலத்திலிருந்து கங்கை பெருகினது போல, ஆசார்யாளின் முக கமலத்திலிருந்து பாஷ்யம் பெருகிற்று என்கிறார். "பகவத்பாத ஸ்ரீமன் முகாம்புஜ" என்கிறார். முகாம்புஜம் (முக அம்புஜம்) என்பதும் "ஷட்பதீ" முடிவில் சொல்லும் 'வதந ஸரோஜம்' என்பதும் ஒன்றுதான். அந்த பகவத் பாதாளே இந்த 'ஷட்பதீ'யின் இரண்டாவது ச்லோகத்தில் ஸ்ரீபதியின் பாதாரவிந்தத்திலிருந்து தேவ கங்கை பொழிகிறதைப்பற்றிச் சொல்லியிருப்பதைப் பார்த்தோம். ஜனன மரணமாகிய பவபய கேதங்களை பகவானின் பாதம் போக்குகிறது என்று இங்கே நம் பகவத் பாதாள் சொல்கிறாரென்றால், அப்பைய தீக்ஷிதரோ ஆசார்ய பாஷ்யத்தையே 'ஜநந ஹரணீ' (பிறவியைப் போக்குவது) என்கிறார்!

ஸுப்ரஹ்மண்யர், அம்பாள் முதலியவர்களின் பாத கமலத்தில் தமது உள்ளம் வண்டாகப் படியவேண்டும் என்று ஆசார்யாள் சொல்கிறாரென்றால், பழங்காலத்துக்

---

* இவ்வுரையில் "சங்கரரும், சிஷ்யர்களும், விநயமும்" என்ற பிரிவு பார்க்க.

Koviloor Digital Library

கம்போடியா தேசக் கல்வெட்டில், நம் ஆசார்யாளுடைய பாத கமலத்தில் ஸகல பண்டிதர்களுடைய தலைகளும் வண்டுக் கூட்டம் மாதிரி மொய்த்துக் கொண்டிருப்பதாக இருக்கிறதென்று முன்னே சொன்னேன். இப்படிப் பல தினுஸில் வண்டுப் பொருத்தமுள்ள ஆசார்யாள் 'வண்டு ஸ்தோத்ரம்' என்றே ஒன்று பண்ணியிருப்பது ந்யாயம் தானே? இன்னொரு பொருத்தம் சொல்கிறேன் :

நம் ஆசார்யாளுக்கு அவருடைய குருவான கோவிந்த பகவத்பாதர்களிடமிருந்த பக்தியைப் பற்றிச் சொன்னேனல்லவா? இதற்கேற்றாற்போல், இங்கே மடத்திலே, ராஜாக்களுக்கு பராக் சொல்கிற மாதிரி நம் ஆசார்யாளுக்குச் சொல்லும்போது, "ஜயகோவிந்த பகவத்பாத பாதாப்ஜ ஷட்பத" என்று ஆரம்பிக்கிறோம். கோவிந்த பகவத்பாதாளின் பாதாரவிந்தத்தில் நம் ஆசார்யாள் ஷட்பதமாக (வண்டாக) இருந்தார் என்று அர்த்தம். இப்படியாக, தாமரை- வண்டு இவற்றின் ஸம்பந்தம் ஆசார்யாளின் குருவான கோவிந்த பகவத்பாதாள், ஆசார்யாள், அவருடைய சிஷ்யரான பத்மபாதர் என்று தொடர்ந்து வருகிறது. பகவானின் முக கமலம், பாத கமலம் இவற்றோடு அந்த பகவானை ஸ்தோத்ரிக்கும் பகவத்பாதாளின் முக கமலம், பாதகமலம் இவற்றையும் ஸ்மரிக்கிற பாக்யம் நமக்கு ஏற்படுகிறது.

"ஸதாஸர்வ காலமும் இந்த ஷட்பதீ என்று வாக்கில் இருக்கட்டும்" என்று ஆசார்யாள் ப்ரார்த்தித்தது, நம் எல்லோர் பொருட்டும் அவர் செய்த ப்ரார்த்தனையாகும். இந்த 'வண்டு ஸ்தோத்ரம்' மொய்க்கிற தாமரைகளாக நம் எல்லோருடைய வாயும் ஆகவேண்டும். அப்படியிருந்தால் பஞ்சேந்த்ரியமும் மனஸுும்சேர்ந்து ஷட்பதமாக இருக்கிற நம்முடைய ஜீவனாகிற வண்டு எப்போதும் பகவானின் பாத கமலத்தில் படிந்துகிடக்கும். ஆரம்பத்தில். "தமய மந: சமய விஷய ம்ருக த்ருஷ்ணாம்......தாரய ஸம்ஸார ஸாகரத:" என்கிறபோது ஆசார்யாள், மனஸுும் இந்த்ரியங்களும்

Koviloor Digital Library

அடங்கி ஸம்ஸார ஸாகரத்திலிருந்து கடைத்தேற்றுவிக்கப் படவேண்டும் என்றுதான் ப்ரார்த்தனை செய்தார். கடைசியில் பகவானின் பாதங்களில் மனஸ், இந்த்ரியங்கள் எல்லாவற்றையும் சரணுகதி பண்ணுவதைச் சொல்லி முடித்திருக்கிருர். அழகாலும், அருளாலும் நம்மை வசீகரித்து, தன்னிலே நம் உள்ளத்தை லயிக்கப் பண்ணி, ஸுலபமாக நம்மை பவஸாகரத்திலிருந்து கரைசேர்ப்பது பகவானின் பாத கமலம்தான். அதுதான் "பகவத்பாதர்" என்றே சொல்லப்படுகிற நம் ஆசார்யாள். அவரே பகவானின் பாதகமலம் என்ருல் அதிலும் அவரது முகம் ஒரு கமலமாக இருக்கிறது. அதிலே ஸதாவும் இருக்கிற வண்டு ஷட்பதீ ஸ்தோத்ரம். அது ஆசார்யாளுடைய வாக்குத் தேனையும், அதன் வழியாக பகவானின் அருள்தேனையும் நமக்குக் கொடுத்துக் கொண்டேயிருக்கட்டும்!

அவிநய - மபநய விஷ்ணே
　　தமய மந : சமய விஷய ம்ருக த்ருஷ்ணும் |
பூத - தயாம் விஸ்தாராய
　　தாரய ஸம்ஸார - ஸாகரத : || 1 ||

திவ்ய - துநீ மகரந்தே
　　பரிமள பரிபோக ஸச்சிதாநந்தே |
ஸ்ரீபதி பதாரவிந்தே
　　பவ - பய - கேத - ச்சிதே வந்தே || 2 ||

ஸத்யபி பேதாபகமே
　　நாத தவாஹம் ந மாமகீநஸ் - த்வம் |
ஸாமுத்ரோ ஹி தரங்க :
　　க்வசந ஸமுத்ரோ ந தாரங்க : || 3 ||

உத்த்ருத - நக நகபிதநுஜ
　　தநுஜகுலாமித்ர மித்ர - சசி - த்ருஷ்டே |
த்ருஷ்டே பவதி ப்ரபவதி
　　ந பவதி கிம் பவ - திரஸ்கார : || 4 ||

Koviloor Digital Library

மத்ஸ்யாதிபி - ரவதாரை -
ரவதாரவதா - வதா ஸதா வஸுதாம் |
பரமேச்வர பரிபால்யோ
பவதா பவ - தாப - பீதோஹம் || 5 ||

தாமோதர குணமந்திர
ஸுந்தர - வதநாரவிந்த கோவிந்த |
பவ - ஜலதி - மதந மந்தர
பரமம் - தர - மபநய த்வம் மே || 6 ||

* * *

நாராயண கருணாமய சரணம் கரவாணி தாவகௌ சரணௌ!
இதி ஷட்பதீ மதீயே வதந - ஸரோஜே ஸதா வஸது ||

ஸர்வத்ர கோவிந்த நாம ஸங்கீர்த்தநம்!

கோவிந்தா, கோவிந்தா!

Koviloor Digital Library

Koviloor Digital Library

பண்பாடு

Koviloor Digital Library

Koviloor Digital Library

கவிகளின் தன்மான உணர்ச்சி

அரசருக்கும் மேலே!

மன்னர்க்குத்
தன்தேசம் அல்லால் சிறப்பில்லை;
கற்ருேர்க்குச்
சென்றவிட மெல்லாம் சிறப்பு*

—இப்படி அவ்வைப் பாட்டி சொல்லியிருக்கிருள். அப்படிச் சொல்ல அவளுக்கு ரொம்ப உரிமை உண்டு. அவளுக்குச் சென்ற இடமெல்லாம் ஒரே சிறப்பாக, போகிற இடங்களி லெல்லாம் ஒரே புகழாகத்தான் இருந்தது. மன்னர்களுக்கு மேலே அவள்தான் கொடிகட்டிப் பறந்தாள். சேர, சோழ பாண்டிய மன்னர்கள் மூன்று பேருமே அவள் ஒன்று சொல்லிவிட்டால் அதை ரொம்பவும் மரியாதையோடு கேட்டுக் கொண்டார்கள்.

கவிகளை ரொம்பவும் ஆதரித்த பாரி வள்ளல் காலமாகி, அவனுடைய இரண்டு பெண்கள் அநாதையாக நின்றபோது அவ்வைதான் மிகவும் நன்றியறிதலோடு அவர்களுக்கு வரன்

* மூதுரை (வாக்குண்டாம்). 26

Koviloor Digital Library

தேடிக் கல்யாணம் பண்ணிவைத்தாள். அந்தக் கல்யாணத்துக்கு அவள் அழைப்போலே (இன்விடேஷன்) அனுப்பினுள் என்பதற்காக மூவேந்தர்களுமே வந்துவிட்டார்கள். பரஸ்பரம் குஸ்தி போட்டுக் கொள்பவர்களானுலும் அவ்வையின் அழைப்பைத் தட்டப்படாது என்றே வந்து அப்படி மூன்று பேரும் ஒன்றுசேர்ந்ததைப் பார்த்தவுடன் அவள் ரொம்பவும் ஸந்தோஷமடைந்தாள். "இரு பிறப்பாளர்களான ப்ராம்மணர்கள் வளர்க்கிற கார்ஹபத்யம், ஆஹவநீயம், தக்ஷிணுக்னி என்ற த்ரேதாக்னி (முத்தீ) மாதிரியல்லவா நீங்கள் மூவரும் ஒரே இடத்தில் சேர்ந்து ஜ்வலிக்கிறீர்கள்!" என்று பாடினுளாம். புறநானூற்றிலே அந்தப் பாட்டு இருக்கிறது.*

பொம்மனுட்டி; அதிலும் கிழவி; கூழுக்குப் பாடுவது என்று அத்தனே எளிமையாக இருந்தவள் அவ்வை. ஆனுலும் ராஜாக்களும் அவள் சொல்வதை பயபக்தியோடு கேட்டுக் கொண்டார்களென்ருல் அதற்குக் காரணம் அவள் கற்றவளாயிருந்ததுதான்.

கவிகள், பாவாணர்கள் என்பவர்கள் ரொம்பவும் கற்றறிந்தவர்களாக இருப்பார்கள். அதனுல் அவர்கள் ராஜாவுக்கு மேலே, சென்ற இடமெல்லாம் சிறப்புப் பெற்றிருந்தார்கள்.

இப்படித் தங்களுக்கு இருக்கிற சிறப்பை அவர்கள் நன்ருகத் தெரிந்து கொண்டிருந்தார்கள். அதனுலேயே ஒரு ராஜாவுக்குக்கூடத் தாங்கள் ஸலாம் போட வேண்டியதில்லே என்பதாக ரொம்பவும் மானம், ரோஷம், தைர்யம் உள்ளவர்களாக இருந்தார்கள். இப்படி அவர்கள் இருந்ததற்கு அந்தக் கிழப்பாட்டி,

---

* ஒன்று புரிந்து அடங்கிய இரு பிறப்பாளர்
முத்தீ புரையக் காண்தக இருந்த
கொற்ற வெண்குடைக் கொடித்தேர் வேந்திர்
(புறம் 367)

Koviloor Digital Library

மன்னர்க்குத்
தன்தேசம் அல்லால் சிறப்பில்லை;
கற்றோர்க்குச்
சென்றவிட மெல்லாம் சிறப்பு

என்று தைர்யமாகப் பாடி ப்ரசாரம் பண்ணியதே பெரிய சான்று!

மஹான்—கவி வித்யாஸம்

ரொம்பவும் ஞானியாக, பக்திமானாக ஆகிறபோது மானாவமானம், த்வேஷ - ரோஷங்கள் இருக்காது, இருக்கப் படாது. ஆனாலும் கவிகளை அப்படிப்பட்ட மஹான்கள் கோஷ்டியிலே வைப்பதற்கில்லை. ஸாதாரண ஜனங்களை விடக் கவிகள் உயர்ந்த நிலையில் இருப்பவர்கள். அழகு - அதிகாரம் - ஸொத்து முதலியவற்றால் பெரியவர்களாயிருப் பவர்களை விடவுங்கூடக் கற்றறிந்த கவிவாணர்கள் உயர்ந்த நிலையில் இருப்பவர்கள்தான். என்றாலும் லோகம், லோக வாழ்க்கை வேண்டாமென்று பாரமார்த்திகமாகப் போய் விட்ட பக்தர்களோடு, ஞானிகளோடு அவர்களைச் சொல் வதற்கில்லை.

மஹா பக்திமான்களிலும் பரம ஞானிகளிலுங்கூட உத்தமமான கவிகளாக ரொம்பப் பேர் இருந்திருக்கிறார்கள். வேதரிஷிகளிலிருந்து ஆரம்பித்து வால்மீகி, வ்யாஸர், அப்புறம் நம் ஆசார்யாள், நாயன்மார்கள், ஆழ்வார்கள், வேதாந்த தேசிகர், இன்னும் ஞானதேவ், துளஸிதாஸ், புரந்தரதாஸ், போதனா என்று நம் தேசத்தில் ஆத்மிகமாக மிகவும் உயர்வைப் பெற்றவர்களே மஹாகவிகளாகவும் இருந்திருக்கிறார்கள். "நான் - ரிஷி: காவ்யம் குர்வதே", அதாவது, ரிஷியாக இருப்பவனைத் தவிர இன்னொருத்தனால் காவ்யம் பண்ணமுடியாது என்றே வசனம் இருக்கிறது. வேதத்தில் 'கவி' என்றாலே 'ரிஷி' என்றுதான் அர்த்தம். கவிக்கு லக்ஷணம் சொல்லும்போது "க்ராந்த தர்சீ" என்று

Koviloor Digital Library

சொல்லியிருக்கிறது. அதாவது, ஸகல ஸ்த்யத்தையும் தெரிந்துகொள்கிற திறமை வாய்ந்தவனே கவி என்று அர்த்தம். அதற்கேற்ப நம் தேசத்து மஹான்களெல்லாம் கவிகளாக இருந்திருக்கிறார்கள்.

நான் இங்கே அவர்களைச் சொல்லவரவில்லை. அந்த ஆதி வேத இதிஹாஸ காலத்துக்கப்புறம் காவ்யம் இலக்கியம் படைப்பதே வாழ்க்கையாகக் கொண்டிருந்தவர்களைத்தான் சொல்ல வந்தேன். கவி, இலக்கிய ஸ்ருஷ்டி கர்த்தா என்பதாகவே முக்யமாக நினைக்கப்படுபவர்களைப் பற்றிச் சொல்லவந்தேன்.

அக்காலங்களில் ராஜாதான் கலைகளை ரொம்பவும் ஆதரித்து, கலைகளை ஸம்மானிக்கிற patron - ஆக இருந்தான். அதனால் ராஜ ஸதஸில் இடம் பெறவேண்டும், ராஜாவிடமிருந்து 'அக்ஷர லக்ஷம்' என்கிற மாதிரியாக யதேஷ்டமான ஸம்பாவனை பெறவேண்டும் என்கிற ஆசையில் ராஜாவை ரொம்பவும் ஸ்துதி பாடிய கவிகளும், வித்வான்களும் இருக்கத்தான் செய்தார்கள். ஆனால் அப்படியில்லாமல், ஸ்வயமரியாதைக்குக் குறைவாக இருக்கிறது என்னும்போது, 'ராஜாவும் கெட்டான்; ராஜ ஸதஸும் கெட்டது' என்று உதறிவிட்டுப் போன கவிகளும் இருந்திருக்கிறார்கள். ஒரு காலத்தில் ரொம்பவும் நெருக்கத்தோடு ஸ்வாதீனமாகப் பழகின ராஜாவையேகூட எடுத்தெறிந்துவிட்டுப் போன ஸ்வாதந்த்ரிய உணர்வு படைத்த கவிகளும் இருந்திருக்கிறார்கள். ஸம்ஸ்க்ருத கவிகளில் ப்ரதம ஸ்தானம் வஹிக்கும் காளிதாஸன், தமிழ்க் கவிஞர்களில் முதலிடம் பெற்ற கம்பர் ஆகிய இரண்டு பேர் விஷயத்திலுமே இப்படி நடந்திருக்கிறது.

மன்னனைப் பொருட்படுத்தாத மஹான்கள்

மஹான்கள் ராஜ ஸதஸ் வேண்டாம் என்று ஒதுக்கினால் அதில் ரொம்ப ஆச்சர்யப்படும்படியாக எதுவுமில்லை. 'ராஜாவே கூப்பிடுகிறான்; அதனாலே எத்தனையோ பேரும்

Koviloor Digital Library

புகழும் பெறலாம்' என்னும்போது, அந்த வச்யத்துக்கு ஆட்படாமல் அவர்கள் இருந்ததற்கு நாம் மதிப்புக் கொடுக்க வேண்டும்தான். இப்படி, த்யாகையர்வாள் சரபோஜி ராஜா கூப்பிட்டபோது, "ராஜாவுடைய நிதி ஸௌக்யம் தருமா? ராமனுடைய ஸந்நிதி ஸௌக்யம் தருமா?" என்று பாடினதை எல்லாரும் கொண்டாடிச் சொல்கிறோம். இப்படியே இன்னும் அநேக மஹான்களும் ஈச்வரனைத் தவிர ராஜா, கீஜா யாரைப் பற்றியும் பாடுவதில்லை என்ற தங்கள் அபிப்ராயத்தை வெளியிட்டுச் சொல்லியிருக்கிறார்கள்.

"வாய்கொண்டு மானிடம் பாட வந்த கவியேன்
அல்லேன்"

என்று நம்மாழ்வார் சொல்லியிருக்கிறார்.[1]

புலவர்களையெல்லாம் பார்த்து ஸுந்தரமூர்த்தி ஸ்வாமிகள், "அவனையும் இவனையும் எதற்காகப் பாடுகிறீர்கள்? சிவனையே பாடுங்கள்" என்று அறிவுறுத்தி ஒரு முழுப் பதிகமே பாடியிருக்கிறார்.[2] "கொடுக்கிலாதானை" ஏன் பாரிவள்ளல் என்று புகழவேண்டும் என்று கேட்டிருக்கிறார்.

சைவத்தை அப்பர் ஸ்வாமிகள் பரப்புகிறாரே என்று கோபங்கொண்டு, அப்போது ஜைன மதத்திலிருந்த மஹேந்த்ரவர்மப் பல்லவன் அவரைத் தண்டிப்பதற்காக ஆளனுப்பியபோது அவர் "நாமார்க்கும் குடியல்லோம்" பாடியதைவிட மஹான்களான கவிகளின் தீரத்துக்கு த்ருஷ்டாந்தம் இல்லை.

பக்தி, ஞானங்கள் போலவே பாண்டித்யத்திலும் சிறந்து விளங்கிய வேறே பல மஹான்களும் ராஜாவின் ஆஸ்தான வித்வானாயிருப்பதை த்ருண மாத்ரமாக உதறியிருக்கிறார்கள். ஆஸ்தான வித்வானாக மட்டுமில்லாமல்

---

1. மூன்றாம் பத்து - ஒன்பதாம் திருமொழி - ஒன்பதாம் பாடல்.

2. "தம்மையே புகழ்ந்திச்சை பேசினும்" என்று தொடங்கும் திருப்புகலூர் தேவாரம்.

Koviloor Digital Library

திருமலை நாயகருக்கு முக்ய மந்த்ரியாகவே இருந்தார் நீலகண்ட தீக்ஷிதர். அவர் ஒரு ஸமயம் நாயகரின் தகாத ஸந்தேஹத்துக்கு ஆளானபடியால், அப்புறம் அவர் (நாயகர்) தப்பை உணர்ந்து மன்னிப்புக் கேட்டு கொண்டுங் கூட, "போதும் ராஜஸேவகம்" என்று மந்த்ரி பதவியை ராஜிநாமா பண்ணிவிட்டுத் தாம் பாட்டுக்கு ஒதுக்குப்புற மான ஒரு க்ராமத்துக்குப் போய்ப் பரம வைதிகமாக வாழ்க்கை நடத்த ஆரம்பித்துவிட்டார். இனிமேல், தம்முடைய வம்சத்திலேயே எவரும் ராஜ ஸேவகத்துக்குப் போகப்படாது என்றும் அவர் சொல்லிவிட்டதாகச் சொல்வார்கள். முடிவிலே ஸந்நியாஸமே வாங்கிக் கொண்டார்.*

வேதாந்த தேசிகரைப் பற்றிக்கூட இப்படிச் சொல்கிறார் கள். விஜய நகர ஸாம்ராஜ்யம் ஸ்தாபிதமானதற்குக் காரணமாயிருந்தவர் வித்யாரண்ய ஸ்வாமிகள், அவர் பேரிலேயே அவருடைய சிஷ்யர்களான ஹரிஹர-புக்க ஸஹோதரர்கள் "வித்ய நகரம்" என்று ஏற்படுத்திய ஸாம்ராஜ்யந்தான் "விஜய நகரம்" என்று திரிந்துவிட்டது. அவர் பரம அத்வைதி. (ஸ்ரீ சங்கர மடத்துப்) பீடத்திலேயே இருந்த அத்வைத ஆசார்யர். அஸாதாரணமான பாண்டித்யம் பெற்றவர். கற்றாரைக் கற்றாரே காமுறுவர் என்றபடி அவர் தேசிகரிடம் மதிப்புக் கொண்டிருந்தார். இத்தனைக்கும் தேசிகர் அத்வைதத்தைக் காரஸாரமாகக் கண்டித்த வைஷ்ணவ ஆசார்யபுருஷர். யாரானாலும் அவர் களுடைய புலமையைப் போற்றி கௌரவிக்க வேண்டு மென்ற எண்ணம் கொண்டவர் வித்யாரண்யர். அவர் விஜயநகர ராஜ்யத்துக்கு ராஜகுருவாக இருந்ததால், அந்த ஆஸ்தானத்துக்கு வந்து அலங்கரிக்கும்படியாக தேசிகருக்கு அழைப்பு அனுப்பினார். ஆனால் தேசிகர் தமக்கெதற்கு ராஜ ஸதஸ் என்று அதை மறுதலித்துவிட்டார். அப்படி அவர்

---

* மூன்றாம் பகுதியில் "மீநாக்ஷி" என்ற உரையில் விவரம் காணலாம்,

Koviloor Digital Library

அனுப்பிய பதில்தான் 'வைராக்ய பஞ்சகம்' என்ற ஐந்து சலோகங்கள்—என்று சொல்கிறுர்கள்.

இப்படிப்பட்ட பெரியவர்கள்—'மஹான்கள்' என்ற கணக்கிலே சேர்க்கப்பட வேண்டியவர்கள்—பட்டம், பதவி, ராஜாவின் பஹுமானம் ஆகியவற்றை வேண்டாமென்று உதாஸீனம் செய்தது போற்றத்தக்கதுதான் என்ருலும் இதை நாம் விசேஷமாக ஆச்சர்யப்பட்டுக் கொண்டாடு வதற்கில்லை. கவிகள் என்றே லோக வாழ்க்கையை ரஸித்து நடத்திக் கொண்டிருந்தவர்களுங்கூட "ஆஸ்தான கவி" என்ற பிருது வேண்டாம் என்று ஒதுக்கியதாக உள்ள எடுத்துக்காட்டுக்கள்தான நாம் ஆச்சர்யப்பட்டுக் கொண்டாட வேண்டியவை.

வைராக்கியமும் மான உணர்வும்

மஹான்கள் வைராக்கியத்தின் மேல் ராஜ கௌரவத்தைப் புறக்கணித்தார்கள். கவிகளாகவே இருந்த வர்கள் மான உணர்ச்சியின்மேல் இப்படிப் பண்ணியிருக் கிறுர்கள்.

மஹான்கள் மான உணர்ச்சிக்கு மேலே போனதால் மானுபிமானங்களை விட்டுவிட்டவர்கள். மஹான்களாக இல்லாத மற்ற ஜனங்கள் மானத்தை விட்டு ஹீனமாகப் பிழைப்பதை அதோடு சேர்த்து நினைப்பதற்கில்லை. என்ன அவமானம் வேண்டுமானுலும் பட்டுக்கொண்டு ஆஸ்தான கவி என்ற பெரிய பெயரில் இருந்துவிட்டால் போதும் என்று புகழ், ஸன்மானம் முதலியவற்றுக்காக மானத்தை விட்டால் அது ரொம்பவும் குறைவு. அப்படியில்லாமல் தீரத்துடன், துணிச்சலுடன், 'இன்டிபென்டென்டா'க (ஸ்வதந்த்ரமாக) ஒரு கவி இருந்தானென்ருல் அதை அவனுடைய ஸ்டேஜை வைத்துப் பார்க்கும்போது விசேஷ மாகப் போற்றிக் கொண்டாடத்தான் வேண்டும். நாம் இருக்கிற ஸ்டேஜில் நாமும் ஸ்வய லாபத்துக்காக

Koviloor Digital Library

மானத்தை விடாமல் அவர்களைப் போலத்தான் இருக்கணும் என்று பாடம் பெறவேண்டும்.

இவர்களில் காளிதாஸன், கம்பன் என்ற இரண்டு பேரையும் சொல்லிவிட்டேனே! அதனால் அவர்கள் கதையைச் சொல்லிவிடுகிறேன்.

காளிதாஸனும் போஜராஜனும்

வள்ளலாக வாரிக் கொடுத்துக் கவிஞர்களையும் அறிஞர்களையும் ஆதரித்தவன் போஜராஜா. அவனுடைய ஆஸ்தான கவியாகக் காளிதாஸன் இருந்தான். போஜனுக்கு நல்ல ரஸிக்யம் உண்டு. அவனுக்கேகூடக் கவி பண்ணும் ஸாமர்த்யமுண்டு. அதனாலே ஆதரிக்கிற ராஜா, அவனால் ஆதரிக்கப்படும் கவி என்று அந்த இரண்டு பேரும் இல்லாமல் கவியோடு இன்னொரு கவி என்று ஸமதையாக, ஸ்நேஹித மாக equal level - ல் (ஸம மட்டத்தில்) பழகி வந்தார்கள். இப்படிப் பழகிப்பழகி ஒருத்தருக்கொருத்தர் பரம ப்ரியமாய் விட்டார்கள்.

நட்பு முறிந்தே பகைமை

இயற்கை எப்படி என்றால், எது ஒன்று ரொம்ப உச்சமாயிருக்கிறதோ அது மாறினால்தான் படு மோசமாகிவிடும். நல்ல பழம் அழுகிவிட்டால் ஸஹிக்கமுடியாமல் நாற்றமெடுக்கிறது. சுத்தமான நெய் கெட்டுப்போனால் வயிற்றைப் பிடுங்கிக்கொண்டு குமட்டுகிறது. கள்ளிச் சொட்டு மாதிரியான பால், துளி ஏதோ சேரப்படாத வஸ்து சேர்ந்துவிட்டால் கட்டி கட்டியாய்த் திரிந்து எதற்குமே ப்ரயோஜனமில்லாமல் ஆகிறது. இப்படித்தான் அத்யந்த ஸ்நேஹத்தில கொஞ்சங் கொஞ்சம் எங்கேயாவது விரிசல் விட்டுவிட்டால் அதுதான் பரம விரோதமாகிவிடுகிறது. அதி ப்ரியம், அதிலே அடைகிற இன்பம் ஆகியவை கொஞ்சம் பங்கப்பட்டுப் போனாலும் பரம த்வேஷம், ஒரே

Koviloor Digital Library

கோபம். துக்கம் என்றாகிவிடும். முதலில் இருந்ததற்குத் தலை கீழாகிவிடும்.

இப்படித்தான் ஒரு ஸமயத்தில் காளிதாஸனுக்கும் போஜராஜாவுக்கும் இடையே இருந்த நெருக்கமான நட்பும் நேர்மாறாய் மாறிற்று.

தனக்கே சரமகவி கேட்டவன்!

ஏதோ போதாத காலம், அவர்களுடைய பரஸ்பர அன்புக்கு த்ருஷ்டி பட்டாற்போல், திடீரென்று போஜனுக்கு ஒரு விபரீத ஆசை வந்தது. என்ன ஆசையென்றால், 'காளிதாஸனின் காவ்யச் சுவையை நாம் பல தினுஸிலே பருகியாய்விட்டது. இருந்தாலும் ஒன்று பாக்கி. அதை நம் ஆயுஸிலே நாம் கேட்டு அநுபவிப்பதற்கில்லை. என்ன வென்றால், நாம் செத்துப்போய் விட்டால் அப்போது அவன் சரம கவி பாடுவானேல்லியோ? அதிலே நம் அந்யோந் யத்தை மனஸை பிசைகிற மாதிரி கொட்டி சோக ரஸம் அப்படியே ததும்பும்படியாகச் செய்வான். இதுவரைக்கும் கேள்விப்படாத உபமானம் கொடுத்து பிரிவுத் துயரம் நெஞ்சை உருக்கும்படியாக—'இரங்கற்பா' என்று இப்போது சொல்கிறார்களே அந்த— சரம ச்லோகம் பண்ணுவான். அதை நாம் எப்படிக் கேட்பது?' என்றிப்படி ஆசை வந்து விட்டது.

அந்தச் சரமகவி ரொம்பவும் உசந்ததாக இருக்குமென்ற எண்ணத்தில் அதைத் தான் எப்படியாவது கேட்டாக வேண்டும் என்ற ஆசை போஜனுக்கு தலைக்கேறிவிட்டது. அதனால் விபரீதமாக ஒன்று பண்ணினான்.

காளிதாஸனை அழைத்துக் கொண்டுவரச் சொன்னான்.

"நான் செத்துப்போய் விட்டதாக நீ கற்பனை செய்து பார்த்துக்கொள். நீதான் அம்பாளின் கடாக்ஷத்தினால் எதையும் அஸாத்யமாகக் கல்பனையிலேயே பார்க்கிறவனா யிருக்கிறாயே! அதனால், இப்படிக் கல்பனை பண்ணி, அப்போது

Koviloor Digital Library

உன் மனஸ் துடித்து எப்படி துக்கத்தில் சரம ச்லோகம் செய்வாயோ அந்த மாதிரி இப்போதே கவனம் பண்ணி எனக்குச் சொல்லிக்காட்டு. யாருக்கு எப்போது என்ன ஆகுமோ? எனக்கே அடுத்த க்ஷணம் என்ன ஆகுமோ? அதற்கப்புறம் நீ கவி செய்தால் அதில் எனக்கென்ன லாபம்? ஆகையால் இப்போதே இப்படிப் பண்ணிக்காட்டு'' என்றான்.

காளிதாஸன் மறுப்பும் அதன் சிறப்பும்

அதற்குக் காளிதாஸன் ஒப்புக்கொள்ளவில்லை. யாராயிருந்தாலும் உயிரோடே இருக்கிற ஒருவனை, அதிலும் ராஜாவைப் பற்றி அவன் எதிரிலேயே சரம ச்லோகம் பாடுவதற்கு இஷ்டப்படத்தானே மாட்டார்கள்?

ஆனால் இப்படி ஒப்புக்கொள்ளாத பிறகும் போஜ ராஜா விடாப்பிடியாக, "நான் ராஜா. இது ராஜாக்ஞை. இதற்கு நீ கீழ்ப்படியாவிட்டால் என் ராஜ்யத்திலேயே இருக்கக் கூடாதென்று தேச ப்ரஷ்டம் பண்ணிவிடுவேன்'' என்று மிரட்டி வற்புறுத்தியபோது, மற்ற ஸாதாரணப்பட்ட கவிகளாயிருந்தால் ஒப்புக்கொண்டிருக்கக்கூடும். "நமக்கு என்னத்துக்கு ராஜவிரோதம்? இவன் லோகத்தை விட்டுப் போனானென்று பாடப்படாது என்பதற்காக நாம் ஏன் வீட்டையும் வாசலையும் ஊரையும் விட்டு ப்ரஷ்டமாகிப் போய் அவதிப்படணும்? சரம ச்லோகந்தான் பாடித் தாம்பாளம் நிறைய ஸ்வர்ணமும் ரத்னமுமாக வாங்கிக் கொள்ளலாமே!'' என்றுதான் நினைத்திருக்கக்கூடும்.

ஆனால் காளிதாஸன் அப்படி ஸம்மதிக்கவில்லை. 'ராஜாக்ஞையை மீறி நாம் ஏன் கஷ்டத்துக்கு ஆளாக வேண்டும்?' என்ற கோழைத்தனமான எண்ணமோ, அவன் சொல்கிறபடி தான் பாடி அக்ஷரலக்ஷமாகக் குவித்துக் கொள்ளலாமே என்ற தாழ்வான ஸ்வயலாப எண்ணமோ அவனுக்குத் துளிக்கூட இல்லை. போஜன் சொன்னதைக் கேட்காமல், தன்னுடைய ஸ்வய மரியாதையை விடாமல் ஸ்வாதந்த்ரியமாகக் கடைசி மட்டும் அவனிடமே 'ஸ்ட்ராங்'

Koviloor Digital Library

க்காக மறுத்துப் பேசினான். "ப்ரஷ்டனாகவே போகிறேன்" என்று சொல்லிவிட்டு தனக்குப் பரம ப்ரியமான போஜன், அவனுடைய ராஜ்யம், தன் வீடு வாசல் எல்லா வற்றையுமே விட்டுவிட்டுப் போய்விட்டான்!

கவிவாணர்களின் தன்மானத்தைப் பற்றிச் சொல்ல வந்தேன். ஆனால் காளிதாஸன் விஷயத்தில் மான உணர்ச்சி மாத்ரமில்லாமல் இன்னும் அவனுடைய வேறு பல குண விசேஷங்களும் இதிலே தெரிகின்றன. அவனுடைய உண்மை யான ஸ்நேஹ ஹ்ருதயம் இதில் தெரிகிறது. உயிரோடே இருக்கிற தன்னுடைய குழந்தை செத்துப் போய்விட்ட தென்று பாடவேண்டுமென்றால் எப்படி ஒரு தாயாருக்கு மனஸ் இடம் கொடுக்காதோ, அப்படி ஸ்நேஹ தர்மத் தினாலே காளிதாஸனுக்கு போஜனின் மரணத்தைக் கல்பித் துப் பார்த்துக் கவிதை கட்ட மனஸு இடங்கொடுக்க வில்லை.

இன்னொரு காரணத்தாலும் அவன் கல்பனையாகச் சரமகவி பாடமுடியாமலிருந்தது. ரிஷிகளைப் பற்றி பவபூதி "உத்தரராம சரித"த்தில் ஸ்ரீ ராம சந்த்ர மூர்த்தியின் வாயிலாக ஒரு உண்மையைச் சொல்கிறார். "ஏனைய மக்கள் என்ன நடக்கிறதோ அதைச் சொல்வார்கள்; ரிஷிகளோ என்ன சொல்கிறார்களோ அது நடந்துவிடுகிறது. ஒரு விஷயத்தை மற்றவர்கள் வார்த்தையாகச் சொல்கிறார்க ளென்றால், ரிஷிகளைப் பொறுத்தமட்டிலோ அவர்கள் சொல்கிற வார்த்தையை விஷயம் ஓடிப்போய்ப் பிடித்துக் கொண்டு நிஜமாகிவிடுகிறது—வாசம் அர்த்தோ(அ)நுதாவதி" என்று ராமர் வஸிஷ்டரைக் குறித்துச் சொல்வதாக பவபூதி ஒரு general truth-ஐ (பொது உண்மையை)ச் சொல்கிறார்.

ரிஷியும், தெய்வாநுக்ரஹம் பெற்ற அருட்கவியும் ஒன்று என்பதற்கேற்ப, அம்பாளின் பரிபூர்ண க்ருபையைப் பெற்றிருந்த காளிதாஸனின் வாக்குக்கும் இப்படிப்பட்ட சக்தி இருந்தது. அதாவது அவன் வாக்கால் என்ன கவிதை

Koviloor Digital Library

வந்தாலும் அது நிஜமாகிவிடும். அவன் கல்பனையாகச் சொல்வதே ஸத்யமாகிவிடும்.

ஆனபடியால், போஜராஜா சொன்னபடி அவன் கல்பித்துச் சரமகவி பாடினால்கூட போஜன் நிஜமாகவே சரமகவிக்குப் பாத்ரமாகி விடுவான்!

இதையும் காளிதாஸன் மனஸைவிட்டு போஜனுக்குச் சொல்லத்தான் செய்தான்.

அப்படியும் அவனுக்கு, எவ்வளவோ உயர்ந்த குணங்களுள்ள அந்த போஜனுக்கு, 'நாம் ராஜா. நம் வார்த்தையை ஒரு ப்ரஜை கேட்காமலிருப்பதா? உயிரே போவதானாலும் நம் வார்த்தையை நாமே ரத்து பண்ணிவிட்டு ஒரு ப்ரஜை சொல்வதை ஒப்புக்கொள்வதா?' என்ற எண்ணம் ஏற்பட்டது. இதுதான் அதிகாரம் பண்ணுகிற கோளாறு! ஒரே பிடிவாதமாயிருந்தான்.

காளிதாஸனும் அதற்கு மேலே பிடிவாதம் பிடித்து, ஊரைவிட்டே போய்விட்டான். அதிலே அவனுடைய த்யாக சிந்தையும், மற்ற கவிகளிடம் அவனுக்கு இருந்த பரிவும்கூடத் தெரிகிறது.

எப்படியென்றால்,

போஜனின் வற்புறுத்தல் தாங்காமலோ, அல்லது உயிரையே கொடுத்தாவது ஒரு உத்தமமான கவிதையைப் பெற வேண்டுமென்று விரும்பும் அந்த அதிசய ரஸிகனின் ஆசையைப் பூர்த்தி செய்வதுதான் தன்னுடைய கவி தர்மமென்று கருதியோ காளிதாஸன் சரம ச்லோகம் பாடினால் என்ன ஆகும்? போஜன் போய்விடுவான். ஆனால் அதனால் காளிதாஸனுடைய கீர்த்தி, ஸம்பத், அந்தஸ்து முதலானதுகளுக்கு ஒரு குறைவும் வந்துவிடாது. 'நான் முந்தி', 'நீ முந்தி' என்று மற்ற ராஜாக்கள் அவனைக் கூப்பிட்டு உபசாரம், ஸன்மானம் நிறையப் பண்ணிவிடுவார்கள். ஆனாலும் காளிதாஸன் தன்னைப் பற்றி மட்டும் நினைக்கவில்லை. மற்ற எல்லாக் கவிகளின் நிலைமையைப் பற்றி

Koviloor Digital Library

நினைத்தான். அவனுக்கும், அவனுக்கு அடுத்தபடி ரொம்பவும் யசஸோடு இருந்த ஒருசில கவிகளுக்கும், எந்த ராஜா இருந்தாலும் போனாலும் கவலையில்லை. அவர்களுக்கு ஜாம் ஜாமென்று நடந்துவிடும். ஆனால் அவ்வளவு புகழ், அவ்வளவு ப்ரதிபா சக்தி இல்லாத மற்ற கவிகள் பலபேர் இருக்கிறார் களே, அவர்கள் பாடு போஜன் போய்விட்டால் என்ன ஆகும்? யாராயிருந்தாலும் உதாரமாக வாரிக் கொடுத்த போஜன் போய்விட்டால் அப்புறம் வேறு எந்த ராஜா, அல்லது ப்ரபு இந்தக் கவிகளை ஆதரிப்பான்? தான் சரம ச்லோகம் பாடி போஜன் மரணமடைவதால் ஏற்படக்கூடிய எத்தனையோ கஷ்டங்களுக்கு மேலாகக் காளிதாஸன் தன்னுடைய poet fraternityயில் (ஸஹோதர கவி குலத்தில்) அவ்வளவாக சரக்குப் போதாதவர்களுக்கு ஏற்படக்கூடிய அநாதரவைத்தான் பெரிசாக நினைத்தான்.

அதனால் இப்போது சரம ச்லோகத்துக்கு அக்ஷர லக்ஷமாக இல்லாமல் அக்ஷர கோடியாகவே அட்வான்ஸில் போஜனிடமிருந்து வாங்கிக்கொண்டு கவி கட்டிவிடலாமாயி னும், அந்த மாதிரிப் பண்ணாமல், த்யாக புத்தியுடன், அவ் வளவாக ஸாமர்த்யம் போதாத lesser poets-இடம் உள்ள அன்பும் ஒரு காரணமாகி, அதனால் ப்ரஷ்டனாவதற்கு ஸம்மதித்து ஊரை விட்டே போய்விட்டான்.

மாறு வேஷம்

தாரா நகரம் என்பதுதான் அந்த ஊர். தற்போது Dhar என்று வழங்குகிறது. மத்யப்ரதேஷில் இருக்கும் ஊர். விக்ரமாதித்யனின் தலைநகரமாக வித்வத் ஸமூஹமும் கவி ஸமூஹமும் உன்னத ஸ்திதியிலிருந்த உஜ்ஜயினிக்குத் தெற்கில் நாற்பது ஐம்பது மைலுக்குள் "தார்" இருக்கிறது.

போஜ ராஜ்யத்தை விட்டு எங்கே ஓடினாலும் காளிதாஸனை லோகம் அடையாளம் கண்டுகொண்டு கொண்டாட ஆரம்பித்துவிடும். அப்படிக் கொண்டாட வேண்டாம் என்றே காளிதாஸனுக்கு இருந்தது. ப்ராண

Koviloor Digital Library

ஸகாவாக இருந்த போஜன் தன்னைத் திரஸ்காரம் பண்ணின் விட்டு லோகத்தில் வேறு யாரும் தன்னை ஆதரிக்க வேண்டிய தில்லை; அப்படி ஆவதற்குத் தான் விட்டால் அது அவனிடம் தனக்குள்ள உத்தமமான ஸ்நேஹத்துக்கே த்ரோஹம் செய்கிற மாதிரி என்று காளிதாஸன் நினைத்தான். அத்தனை உசந்த எண்ணம் அவனுக்கு இருந்தது. அதனால் ஊரை விட்டு ஓடின அப்புறம், தான் காளிதாஸன் என்றே தெரியாமல் ஏதாவது மாறுவேஷம் போட்டுக்கொண்டு சுற்றுவது என்று முடிவு பண்ணினான். என்றைக்காவது ஒரு நல்ல காலம் பிறந்து மறுபடியும் தான் போஜனோடு சேரும்படியாக இருக்கலாமென்பதற்காக, இப்படி மாறுவேஷத்தில் உயிரை வைத்துக்கொண்டிருக்கலாமென்று நினைத்தான்.

என் மாதிரி வேஷம் போட்டுக்கொண்டான் என்று கதை! அதாவது, பைத்தியக்கார சாமியார் மாதிரி வேஷம் போட்டுக் கொண்டானாம்!

அவன் ஊரை விட்டுப் போன கொஞ்ச நாளுக்கு அப்புறம், போஜராஜாவினால் அவனில்லாமல் தாங்க முடியவில்லை. அதனால் அவன் குடுகுடுப்பாண்டி வேஷம் போட்டுக் கொண்டு காளிதாஸனைத் தேடிக்கொண்டு புறப்பட்டான். விநோதமான ஒரு விதத்தில் அவனைக் கண்டுபிடித்தான் என்று கதை*.

நான் சொல்ல வந்தது, ஒருத்தன் ராஜா என்பதற்காகக் கூட அவன் சொல்வதற்கெல்லாம் ஸலாம் போடுவது என்றில்லாமல் தங்கள் தன்மானப்படி மனஸ்ஸாக்ஷியை காப்பாற்றிக் கொண்டவர்களாக அநேக கவிகள் இருந்திருக்கிறார்கள்; அவர்களில் காளிதாஸனும் ஒருவன் என்பது தான்.

மரபுவழிக் கதைகளும் ஆராய்ச்சியும்

தாரா, உஜ்ஜயினி என்று இரண்டு ஊர்ப்பெயர் சொன்னேன். தாராதான் போஜன் ஆட்சி செய்த மாளவ ராஜ்யத்

---

* இந்த 'விநோதமான கதை' ஸ்ரீசரணர்கள் பிறிதொரு ஸமயத்தில் விரித்துரைத்தபடி நம் நூற்பகுதிகளிலொன்றில் வெளியாகலாம்.

Koviloor Digital Library

துக்குத் தலைநகரம், உஜ்ஜயினி அதை அடுத்து மேற்கிலே உள்ள அவந்தி ராஜ்யத்துக்குத் தலைநகர். க்ருஷ்ணா, கோதாவரி நதிகளுக்கிடையில் ஆதியில் விஸ்தாரமாயிருந்து, இப்போது பேரார் (Berar) என்கிற பகுதிக்கு மட்டும் பேரா யிருக்கிற 'விதர்ப'த்துக்கு வடக்காக இருப்பவை மாளவமும் அவந்தியும். தலைநகரான உஜ்ஜயினிக்கே அவந்தி என்றும் பெயர் உண்டு. அங்கேயிருந்து ஆட்சி பண்ணின விக்ரமாதித் யன்தான் காளிதாஸனின் patron-ஆக இருந்தவன்; போஜன் இல்லை; பல்லாளன் என்கிறவன் ஏதோ கர்ண பரம்பரைக் கட்டுக்கதைகளைத் திரட்டி "போஜ ப்ரபந்தம்" என்று எழுதி யிருப்பதில் சொல்லப்பட்டுள்ள விஷயங்களுக்கு authenticity (உறுதி செய்யும் ஸத்யத்தன்மை) இல்லை என்று ஆராய்ச்சி செய்கிற 'ஸ்காலர்'கள் சொல்கிறார்கள். அப்புறம், 'அந்த விக்ரமாதித்யன் யார்? சகர்களை ஜயித்து விக்ரம சகாப்தம் ஏற்படுத்திய உஜ்ஜயினி சக்கரவர்த்தி சந்த்ர குப்தனா, பாடலிபுத்ரத்திலிருந்து ஆட்சி செய்த குப்த வம்சத்து இரண்டாவது சந்த்ரகுப்தனா - என்றிப்படி, பல சந்த்ர குப்தர்களில் எவன்?' என்பதிலும் அவர்களுக்குள்ளேயே அபிப்ராயபேதங்கள் இருக்கின்றன!

காளிதாசன் மட்டுமில்லை, இன்னும் அநேக கவிகளைப் பற்றி—ஸம்ஸ்க்ருத இலக்கியத்தில் மட்டுமில்லை, எல்லா பாஷையிலும் இருந்த இலக்கிய கர்த்தர்களைப் பற்றி— இப்படி அவர்கள் வாழ்ந்த காலம், தேசம் எல்லாவற்றை யும் பற்றி இட்டுக் கட்டின கதைகள் பரவி விட்டன என்கிறார்கள். உதாரணமாக, தமிழிலே எடுத்துக் கொண்டால், திருவள்ளுவரும் அவ்வையாரும் ஸமகாலத் தவர்கள், அவர்கள் அண்ணா - தங்கையாக வேண்டும் என்று ஒரு கதை; இன்னொரு பக்கம் அவ்வையார், கம்பர், ஒட்டக் கூத்தர், புகழேந்தி எல்லாரையுமே ஸம காலத்தவர் களாக்கி வழங்குகிற அநேக கதைகள். இவையெல்லாமே வெறும் கதைதான், 'ஹிஸ்டாரி'கலாக ஸரியாயில்லை என்கிறார்கள்.

Koviloor Digital Library

கதையாகத்தானிருக்கட்டும், factஆகத் தானிருக்கட்டும், எதுவானாலும் இவற்றை எடுத்துக்கொண்டு ரஸிக்க வேண்டுமென்றுதான் எனக்குத் தோன்றுகிறது. இந்தக் கதைகள் எந்தக் கவிவாணர்களைக் குறித்தனவோ அவர்கள் கல்பனையாகப் பல பாத்ரங்களை வைத்துக் காவ்ய, நாடகங்கள் எழுதியிருக்கிறார்கள். நிஜமாக இருந்த பாத்ரங்களின் மேலேகூடத் தங்கள் கல்பனையை ஏற்றி, ஸம்பவங்களை மாற்றி, இலக்கியச் சுவை அதிகரிக்கும்படியாக மெருகு போட்டிருக்கிறார்கள். ஒரே ராமாயணத்தையே வால்மீகி ஒருவிதமாகச் சொன்னார், கம்பர் ஒருவிதமாக, துளஸி தாஸ் இன்னொருவிதமாக, க்ருத்திவாஸ் இது எல்லாவற்றுக்கும் வித்யாஸமாகச் சொன்னார்கள் என்றால் எதனால்? அவரவரும் தங்கள் கல்பனா சக்தி, அநுபவம், 'டேஸ்ட்', தாங்கள் எடுத்துக் கொண்டுள்ள நோக்கம் ஆகியவற்றை அநுஸரித்து, நிஜமாக நடந்ததையே மாறுதல்கள் செய்து சொல்லலாம் என்று நினைத்ததனால்தான். Fact-க்கு (நடைமுறை உண்மைக்கு) ஒரு ஸத்யத்வம் உண்டு என்றால், ஒரு உத்தமமான கவியின் கல்பனை, நோக்கம் முதலானதுகளுக்கும் ஒரு ஸத்யத்வம் உண்டு என்று நினைத்து இப்படி மாற்றியிருக்கிறது. நாமும் அந்தக் காவ்ய, நாடகங்களை ரஸித்துப் படித்துப் பலவிதத்தில் பயனடைகிறோம்.

அந்தக் கவிகள் வேறே பாத்ரங்களைப் பண்ணினது போலவே, அவர்களையே பாத்ரங்களாக்கி மற்றக் கவிகளும், ஜனங்களும் கதைகள் பண்ணினால், இதையும் நாம் ரஸித்து இதிலும் வெளியாகிற அநேக உண்மைகளாலும் நீதிகளாலும் பயனடைய வேண்டியதுதானே? கவி ஸமூஹமாக இல்லாத ஜன ஸமூஹம் இப்படிக் கதை கட்டிற்று என்றால் கூட, ஒரு பெரிய பண்பாட்டின் கீழே வருகிற நம் தேசத்தில் பரம்பரை பரம்பரையாக மக்கள் ஏற்றுக்கொண்டு, ஸந்தோஷப்பட்டுப் பயன் பெற்ற மரபுவழிக் கதைகள் இவை என்னும்போது அவற்றுக்கு ஒரு 'வெய்ட்', அவற்றை அப்படியே தள்ளிவிட முடியாததான ஒரு மதிப்பு, ஏற்படத்தான் செய்கிறது.

Koviloor Digital Library

'நெருப்பில்லாமல் புகையாது' என்ற மாதிரி ஒரு ஆதாரமும் இல்லாமல் இந்த எல்லாக் கதைகளும் தோன்றியிருக்காது. சிலதோ, பலதோ கூட, ஆதாரமில்லாமலிருந்தாலும், எல்லாமே அப்படி இருந்துவிடாது. ஸம்பந்தப்பட்ட ஊர்கள், பேர்கள், காலம் முதலான details (விவரங்கள்) தப்பாக இருக்கிறபோதுகூட இந்தக் கதைகளில் வருகிற ஸம்பவத்துக்கும், அதிலே வெளியாகிற கவியின் குணப்பான்மைக்கும் ஆதாரம் இருக்கவே செய்யும்.

இந்த மாதிரிக் கதைகளில் ஒன்றுமட்டும் ஒப்புக்கொள்ள முடியாததாக இருப்பதைச் சொல்லவேண்டும். கம்பனுனுலும், ஸரி, காளிதாஸனுனுலும், ஸரி, எந்தக் கவியையும் தாஸிகளோடு ஸம்பந்தப்படுத்தி உண்டாயிருக்கும் கதைகளைத்தான் சொல்கிறேன். எத்தனையோ பக்தியை ஊட்டும்படியாகவும், உசந்த தத்வ-வேதாந்தக் கருத்துக்கள் ஜ்வலிக்கும்படியாகவும், 'கல்ச்சர்' என்று எடுத்துக்கொண்டாலும் அதில் உச்சமான அம்சங்களை ப்ரதிபலிப்பதாகவும் காவ்ய நாடகாதிகள் செய்துள்ள மஹாகவிகளை ஸொந்த வாழ்க்கையில் பிசகி நடந்தவர்களாகச் சொல்வதில் ஸத்யம் இருப்பதற்கில்லை. 'பின்னே ஏன், நெருப்பில்லாமல் இங்கே மட்டும் புகையணும்?' என்று கேட்டால், இந்தப் புகைக்கும் ஆதாரமாக ஒரு நெருப்பைச் சொல்லலாம். என்னவென்றால், காவ்யங்களின் லக்ஷணப்படி அவற்றிலே ச்ருங்கார ரஸம் நிறைய இருக்கத்தானே செய்யும்? அதுதான் புகைக்கு நெருப்பு! இத்தனை ச்ருங்காரமாகக் கவிதை பண்ணினவர்களென்றால், அவர்களே இதிலே ரொம்பவும் ஈடுபட்டவர்களாகத்தான் இருந்திருக்கவேண்டும் என்று தப்பாக நினைத்துக் கதைகள் செய்துவிட்டார்கள்.

பிற்காலத்தில் நடிகர்கள், கவிகள் ஆகியவர்கள் ரொம்பவும் உல்லாஸப் பேர்வழிகளாக ஆகிவிட்டதை வைத்து, முற்காலத்தில் சாஸ்த்ரோக்தமாக ஆட்சி நடந்தபோது ராஜஸதஸிலே ஸத்வித்வான்களும் மெச்சும்படியாக இருந்த கவிகளும் இப்படியே இருந்திருப்பார்களென்று

Koviloor Digital Library

நினைத்து விடப்படாது. ஒருத்தர், இரண்டுபேர் அப்படி இருந்தும் இருக்கலாம். ஆனால் எல்லாரையும் அப்படி வைத்துவிடுவது ஸரியில்லை.

இந்த ஒரு அம்சத்தைத் தவிர மற்றபடி மொத்தத்தில் குறைந்த பக்ஷம் கதையாகவேயாவது எல்லாவற்றையும் ஏற்று ரஸிக்க வேண்டியதுதான்.

கம்பரும் குலோத்துங்கனும்

கம்பருக்கு வருகிறேன்.

பத்தாம் நூற்றாண்டிலிருந்து பன்னிரண்டாம் நூற்றாண்டு வரையில் அதுவா, இதுவா என்று கம்பருடைய காலத்தைப் பற்றி உள்ள ஆராய்ச்சிகள் இப்போது நமக்கு வேண்டாம். அவர் நாளில் ஆட்சி பண்ணினது விக்ரம சோழனா, குலோத்துங்கனா. குலோத்துங்கன் என்றால் எத்தனாவது குலோத்துங்கன் என்ற விவாதம் வேண்டாம். கதைதான் வேண்டும். கதையானாலும் அதிலே அவருடைய குணப் பண்புக்கு விதை இருக்கிறது என்று மதித்துக் கேட்பதுதான் நமக்கு வேண்டியது.

போஜனும் காளிதாஸனும் மாதிரிதன் குலோத்துங்க சோழனும் கம்பரும் அத்யந்தமாயிருந்திருக்கிறார்கள். அதனாலே கம்பர் அவனிடம் ரொம்ப ஸ்வாதீனமாகப் பேசுவார்.

பெரிய ராஜ்யத்தைத் தன் ஆதீனத்தின் கீழே வைத்திருக்கிறோம் என்பதை ஒரு நாள் குலோத்துங்கன் ரொம்பப் பெருமையாகச் சொல்லிக்கொண்டான்.

உடனே கம்பர் ஸ்வாதீனத்தின் பேரில், "ராஜ்யமே உன் ஆதீனத்திலிருக்கிறதென்றாலும், நீ என் ஆதீனத்தில்தானே இருக்கிறாய்?" என்று கேட்டுவிட்டார். ப்ரியத்தின் பேரிலே, மனஸிலே எந்த அதிகார அஹங்காரமும் இல்லாமல்தான் இப்படிச் சொன்னார்.

ஈச்வரனையே பக்த பராதீனன் என்பது—"இறைவரோ தொண்டருள்ளத்(து) ஒடுக்கம்" என்பது—ஈச்வரனுக்குத்

Koviloor Digital Library

தானே பெருமை? அப்படி பெரிய புவியரசனும் கவியரசரான தமக்கு அடக்கமென்பது அவன் பெருமையை—கலையை மதிக்கும் அவனுடைய ராஸிக்யப் பெருமையை—காட்டுவது தான் என்று நினைத்து வெள்ளையுள்ளத்தோடு கம்பர் சொன்னார்.

அதிகாரத்திலுள்ள ஒருவர் ரொம்பவும் ஜாக்ரதையாயிருந்தாலொழிய அந்த ஸ்தானத்தின் போதை எப்போதாவது ஒரு போது தலைக்கேறத்தான் செய்யும்.

இப்போது குலோத்துங்கனுக்கு அப்படித்தான் ஆயிற்று. 'ராஜாவான தனக்கு மேலே என்று இந்தப் பாட்டுக்காரன் சொல்லிக் கொள்வதா?' என்று அஸாத்ய கோபம் வந்தது.

அதிஸ்நேஹம்தான் பரம விரோதமாக மாறுமென்று முன்னேயே சொன்னேனல்லவா? இந்தக் கதையிலும் அப்படி ஆயிற்று.

நட்பு பகையாவதன் நுட்பம்

காரணம் என்னவென்றால்—அவ்வளவாக நெருங்கிய பழக்கமில்லாதவர்கள் நமக்குப் பிடிக்காததாக ஏதாவது செய்துவிட்டாலோ, சொல்லிவிட்டாலோ, 'நம் மனஸு இவர்களுக்குப் புரிய வேண்டுமென்பதில்லை. அதனாலே அதற்கு எப்படி ஹிதமாக நடந்துக்கணும் என்று தெரியாமல் இவர்கள் வேறு தினுஸாக நடந்துகொள்கிறார்கள். இதைப் பெரிய குற்றமாக எடுத்துக்கொள்வதற்கில்லை' என்று நம் மனஸே கொஞ்சம் ஸமாதானம் பண்ணிக்கொண்டுவிடும். நமக்குப் பிடிக்காததைப் பழக்கமில்லாதவர் பண்ணினாலும் குற்றமாகத்தான் தெரியும்; கோபம்தான் வரும். ஆனாலும் பெரிய குற்றமாகத் தெரியாது; ஸஹிக்கமுடியாத கோபம் வராது. நமக்கு ரொம்பவும் பழக்கமானவர் பிடிக்காததைப் பண்ணும்போதுதான், 'நம் மனஸ் நன்றாகத் தெரிந்தும் அதைக்லேசப்படுத்தும்படியாக இப்படிப் பண்ணுகிறார்களே! இவர்கள் நம் எண்ணத்தை மதிக்காமல் இந்த மாதிரி செய்வதா, செய்வதா?'' என்று மஹா கோபம் வந்து, அவர்கள்

Koviloor Digital Library

மன்னிக்க முடியாத குற்றம் பண்ணினதாகத் தோன்றிவிடுகிறது.

இப்படித்தான் தன்னைக் கம்பர் மதிக்கவில்லை என்று சோழ ராஜாவுக்கும், தன் மனஸைத்தான் அவன் புரிந்து கொள்ளவில்லை என்று கம்பருக்கும் தாங்கமுடியாத ஆற்ருமை உண்டாகி, வார்த்தை வலுத்தது.

காளிதாஸன் கதை போலவே சோழராஜாவும் "நீ என் ராஜ்யத்தைவிட்டுப் போ!" என்று கம்பரிடம் சொல்லிவிட்டான்.

"'பெரிய ராஜ்யம் எனக்கு அடக்கம்' என்று நான் சொன்னதற்கு, 'நீ எனக்கு அடக்கம்' என்று சொன்னுயே! இப்போது பார், நீதான் என் ஆக்ஞைக்கு அடங்கி, எனக்கு அடக்கமான இந்த சோழ ஸாம்ராஜ்யத்தை விட்டுப் போக வேண்டும்" என்று சொல்லிவிட்டான்.

கம்பரின் ரோஷமும் சபதமும்

இப்படி ஒரு ராஜாக்ஞை என்ருல் மற்றவர்கள் ராஜாவின் காலிலே விழுந்து கெஞ்சிக் கூத்தாடி மன்னிப்புக் கேட்டுக் கொண்டிருப்பார்கள். ஆஸ்தான கவியாக வேறே யாராவது இருந்தால் ராஜாவின் பேராதரவை இழக்கக் கூடாது என்று நினைத்து, 'என்ன இருந்தாலும் நாடாளும் மன்னனை நமக்கு அடங்கியவன் என்றது ஸரியில்லைதான்' என்று வாபஸ் வாங்கிக்கொண்டு ஸ்தானத்தைத் தக்க வைத்துக்கொண்டிருக்கக் கூடும்.

ஆனுல் கம்பர் என்ன பண்ணினுரென்ருல்..., அவருக்கு ஓரேயடியாகத் தன்மான உணர்ச்சி பொங்கி, ரோஷத்தோடு,

"மன்னவனும் நீயோ? வளநாடும் உன்னதோ?
உன்னையறிந் தோதமிழை ஓதி னேன்?"

என்று குலோத்துங்கனைத் தூக்கி எறிந்து பேசிவிட்டு, ராஜ்யத்தை விட்டுப் போயே போய்விட்டார்!

போகிறதற்கு முன்னுடி இன்னென்றும் சொன்னுர்.

Koviloor Digital Library

இப்போது நான் சொன்னது அந்த ஸந்தர்பத்தில் கம்பர் சொன்ன செய்யுளின் முதல் பாதிதான். 'நீ காப்பாற்றுவாய் என்பதற்காகவா நான் தமிழ் படித்ததும் கவிதை செய்வதும்?' என்று இங்கே கேட்டவர், பின்பாதியில் என்ன சொன்னாரென்றால், "நீ இல்லாவிட்டால் என்ன? என்னை, 'வா, வா' என்று கூப்பிட்டு மரியாதை செய்ய வேறே மன்னர்கள் இல்லையா என்ன? என்னை ஆஸ்தான கவியாக வைத்துக்கொள்ள ஆசைப்படாத வேந்தர்கூட உண்டா?" என்று ஸவால் விடுகிற மாதிரிக் கேட்டார்.*

(ஸவால் விடுகிற) மாதிரி மட்டுமில்லை. நல்ல ஸவாலாகவே, "புவியரசனைக் கவியரசன் தனக்கு அடக்கமாக்கிக்கொள்ள முடியாது; இவன்தான் அவனுக்கு அடங்கி நடக்க வேண்டும் என்றாயல்லவா? நீயே பார்த்துக்கொள், இப்போது நீயே யாரை நினைத்து பயப்பட்டுக் கொண்டிருக்கிறாயோ அந்த சேர மஹா ராஜாவையே எனக்கு அடங்கியிருக்கும் அடைப்பைக்காரனாகப் பண்ணி அழைத்துக் கொண்டு வருகிறேன்" என்று சபதம் கூறிவிட்டுப் புறப்பட்டார்.

அடைப்பைக்காரன் என்றால், ஒரு பெரிய மநுஷரின் கூடவே அவருடைய தாம்பூலப் பெட்டியைத் தூக்கிக் கொண்டுவந்து, அவர் கேட்கிறபோது அவருக்கு வெற்றிலை மடித்துத் தருகிற பணியாள். அடைக்காய் என்றால் பாக்கு. அதை வெற்றிலையோடு போட்டு வைத்திருக்கிற பை, அல்லது பெட்டியைக்கூட, அடைப்பை என்றும் அடப்பம் என்றும் சொல்வார்கள்.

கம்பர் - காளிதாஸன் ஒப்பீடு

அன்றுவரையில் ப்ராண ஸ்நேஹிதமாயிருந்த போஜன் ப்ரஷ்டம் பண்ணின பிறகுகூட, உலகத்தின் கண்ணில் அவன்

---

* செய்யுளின் பிற்பாதி :

என்னை
விரைந்தேற்றுக் கொள்ளாத வேந்துண்டோ? உண்டோ
குரங்கேற்றுக் கொள்ளாத கொம்பு?

Koviloor Digital Library

தப்பைக் காட்டிக் கொடுக்கிற மாதிரி தான் வேறே எந்த ராஜாவிடமும் போவதில்லை என்று காளிதாஸன் பெரிய மனஸோடு இருந்திருக்க, கம்பர் இந்த மாதிரி ஸவால் விட்டிருக்கலாமா என்றால்:

அவரவர் இருந்த ஸந்தர்பத்தில் காளிதாஸன் அப்படிப் பண்ணியதும், கம்பர் இப்படிப் பண்ணியதுந்தான் ஸரி. காளிதாஸனுக்கு போஜனிடம் அபிப்ராய பேதம் உண்டானது எதை வைத்து? அவன் சரம கவி கேட்டதை வைத்துத்தான். அவன் ஏன் அப்படிக் கேட்டான்? காளிதாஸனுடைய வாக்விசேஷத்தில் மிகுந்த பற்று வைத்திருந்ததால்தான்! தான் போனபின் காளிதாஸன் செய்யும் சரம கவி உள்ளத்தை அப்படியே உருக்குவதாக இருக்கும் என்ற உசந்த எண்ணத்தினால்தான், அப்படிப்பட்ட கவிதையைத் தான் உயிரோடிருக்கும்போதே கேட்டுவிட வேண்டுமென்று வற்புறுத்தினான். ஆக, அபிப்ராய பேதம் ஏற்பட்டாலும் அதற்கு அடிக்காரணம் போஜன் காளிதாஸனின் கவிதையில் வைத்திருந்த மோஹந்தான். அப்படி தன்னுடைய கவிதை கேட்பதற்காகவே உலகத்தில் யாரும் பயப்படுகிற அச்சான்ய எண்ணம் இல்லாமல் போஜன் அவனுடைய மரணத்தைப் பற்றியே பாடிக் கேட்க வேண்டுமென்றபோது, அப்படிப்பட்ட மஹா ரஸிகனை விட்டபின் இன்னொருத்தன் ஆதரவைப் பெறக் காளிதாஸன் மாதிரியான ஒரு பெரியவருக்கு எப்படி மனஸ் வரும்? அதனால்தான் போஜனுக்கு இல்லாத தன் கவிதை யாருக்கும் வேண்டாம் என்று பைத்தியக்கார ஸந்நியாஸி வேஷம் போட்டுக் கொண்டான். அந்த நிலையில் கம்பர் இருந்தாலும் அப்படித் தான் பண்ணியிருப்பார்.

வாஸ்தவத்தில் கம்பர் இருந்த நிலை என்ன? இவர் ப்ரிய ஸ்வாதீனத்தின் பேரிலே சொன்னதை சோழராஜா நல்ல 'ஸ்பிரிட்'டில்தானே எடுத்துக் கொண்டிருக்க வேண்டும்? அல்லது அதை ஸீரியஸாக எடுத்துக்கொள்ளாமல் விளையாட்டாக விட்டிருக்கத்தானே வேண்டும்? அல்லது,

Koviloor Digital Library

இன்னம் ஒரு படி கீழே போனுல்கூட, "என்ன இருந்தாலும் நான் ராஜா. ஆனதால் ப்ரஜைகளின் கண்ணில் என் ஸ்தானத்தின் கெடுபிடியைக் கட்டிக் காப்பாற்றிக் கொள்ளவேண்டும். அதனுல் நீ ரொம்ப ஸ்வாதீனம் எடுத்துக்கொண்டால், லோகத்திலே அது பரவி ராஜ மரியாதை கெட்டுப்போகும்படி ஆகலாம்" என்று லேசாக 'வார்ன்' செய்தாவது விட்டிருக்கலாம். இப்படி யெல்லா மில்லாமல், "ஹா, ஹூ! யார் யாருக்கு அடங்கினவா, பார்த்துடலாம்!...ராஜாக்ளு" என்று அவன் எகிறினுல் அவருக்கும் கோபம் வந்து ஸவால்விடத் தானே தோன்றும்? அந்த நிலேயில் காளிதாஸன் இருந்தாலும் அப்படித்தான் பண்ணியிருப்பான்.

கம்பருடைய பெரிய மனஸும் பிற்பாடு கதையில் தெரி கிறது.

சேரநாட்டு விஜயமும் சேரன் குணநலமும்

சொன்ன மாதிரியே அவர் சேர ராஜ்யத்துக்குப் போய் அதன் ராஜாவைத் தம்முடைய கவிதையினுல் ஆகர்ஷித் தார். அவனுடைய அபாரமான மதிப்பு மரியாதைகளேப் பெற்றுவிட்டார்.

இங்கே, அவரைத் துரத்திவிட்ட சோழ ராஜாவுக் கானுல் இருப்பாக இல்லே. அவனும் ரஸிகன்தான். உயர்ந்த குணங்கள் உள்ளவன்தான். அதனுல், தமிழ் பாஷையில் தோன்றிய கவிகளுக்கெல்லாம் சக்ரவர்த்தி எனப்பட்டவர் தன்னேயும் தன்னுடைய ஸதஸையும் விட்டுப் போனதை, நாளாக ஆக அவனுல் தாங்கிக்கொள்ள முடியவில்லே.

அவரைப் பற்றி விசாரித்து, திரும்பவும் அழைத்துவர தூதர்களே எல்லா திசையிலும் அனுப்பினுன். ஒற்றர்களேயும் அனுப்பினுன்.

சேரன் ஸபையில் அவர் இருப்பதாகவும், சேர ராஜா அவரிடம் மிகுந்த பக்தி விச்வாஸம் வைத்து ஆதரிப்ப தாகவும் தெரிந்தது.

Koviloor Digital Library

அங்கேயும் ஆளனுப்பினுன். தான் அவரிடம் நடந்து கொண்டது தப்பு என்று வருத்தம் தெரிவித்து, மறுபடியும் சோணுட்டுக்குத் திரும்பி ஆஸ்தானத்தை அலங்கரிக்க வேண்டுமென்று கேட்டுக்கொண்டு ஓலே அனுப்பினுன்.

பழைய வாஞ்சை கம்பர் மனசையும் கவ்வியது.

சேர ராஜாவிடம் பிரியாவிடை பெற்றுக்கொண்டு சோழ தேசத்துக்குப் புறப்பட்டார்.

பழைய கதையெல்லாம் சேரனுக்குத் தெரியும். அதனுல், "நீங்கள் என்னே அடைப்பைக்காரனுக ஆக்கிக் கொண்டல்லவா திரும்பி வருவதாகச் சோழனிடம் சபதம் பண்ணியிருந்தீர்கள்? இப்போது என்னே விட்டுவிட்டுப் புறப் படுகிறீர்களே! இதோ நானும் காளாஞ்சியை (தாம்பூலம் பெட்டியை)த் தூக்கிக்கொண்டு வருகிறேன்" என்ருன்.

இங்கே சேரனின் குணச் சிறப்பு தெரிகிறது. தன்னுடைய மதிப்பைப் பெற்ற ஒருவருக்காக போட்டியரசனின் முன்னே அடைப்பைக்காரனுகப் போகிற அளவுக்குத் தன்னே அடக்கிக்கொள்ளும் விநயம் அவனுக்கு இருந்திருக்கிறது! ஒரு ராஜாவின் அஹங்காரத்தைச் சொன்ன கதையே இன்னெரு ராஜாவின் எளிமையையும் சொல்கிறது! அதனுல் தான், கதையேயானுலுங்கூட இவற்றை எடுத்துக் கொள்ள வேண்டும் என்றது.

சேர ராஜா இப்படி சொன்னவுடன் கம்பர் சொன்ன பதிலில் அவருடைய உயர்வு தெரிகிறது. என்ன சொன்னுரென்ருல், "அப்போது அவன் கோபத்தில் ஏதோ சொல்ல, நானும் ரோஷத்தில் பதிலுக்கு ஏதோ சபதம் செய்துவிட்டு வந்தேன். அவன் கோபத்தை மறந்து, மறுபடி என்னேக் கூப்பிட்டனுப்பியிருக்கும் இப்போது, நானும் பழைய ரோஷத்தையும் சபதத்தையும் மறந்துவிட்டுப் போவதுதான் அழகு. அதுவுமில்லாமல், நீ நாடாளும் மன்னன். உன்னுடைய பணிவாலும், ப்ரியத்தாலும் நீ எனக்குப் பணி செய்ய முன்வந்தாலும், அத்யாவச்யம்

Koviloor Digital Library

ஏற்பட்டாலொழிய நான் அதை ஏற்றுக்கொள்வது கொஞ்சங்கூட உசிதமாகாது" என்று சொல்லிவிட்டுப் புறப்பட்டார்.

இதைவிடவும் உயர்வாக அவருடைய பண்பு ப்ரகாசித்ததைக் கதை முடிவிலே பார்ப்போம்.

சோழ ஸபையில் "அடைப்பைக்கார"ச் சேரன்

நாடு திரும்பிய கம்பரைக் குலோத்துங்க சோழன் மிகவும் மரியாதை செய்து வரவேற்றான். பழையபடி கம்பர் அவனுடைய ஸதஸில் ஆஸ்தான கவியானார்.

ஆனால் கொஞ்ச காலத்துக்கப்புறம் அவர் தன்னிடம் விட்ட ஸவாலை நிறைவேற்றக் காணோமே என்கிற மாதிரி 'ஹின்ட்' பண்ணிச் சோழன் என்னவோ சொன்னான்.

கம்பர், தாம் சேரனிடம் சொன்ன 'அத்யாவச்யம்' வந்துவிட்டது என்று கருதினார். ஸ்வய மரியாதையைக் காப்பாற்றிக் கொள்ளத்தான் வேண்டுமென்று நினைத்தார்.

சேரனுக்கு ஓலை அனுப்பினார்.

சேர மஹாராஜாவும் உடனே புறப்பட்டு சோழ மஹாராஜாவின் ஸதஸுக்கு அடைப்பைக்காரக் கோலத்தில் வந்துவிட்டான்.

அப்போது சோழனும் கம்பரும் ஸம்பாஷித்துக் கொண்டிருந்தார்கள். அடைப்பைக்கார வேஷத்தில் சேரனைப் பார்த்ததும் கம்பருக்கு மனஸ் கேட்கவில்லை. ஆனாலும், 'சபதம் பண்ணியிருக்கிறோமே! சோழன் இன்னொரு தரமும் அதை நினைவுபடுத்திக் குத்திக் காட்டும்படி விடப்படாது!' என்று நினைத்தார்.

அதனால் வேஷ - அடைப்பைக்காரனை லக்ஷ்யம் பண்ணி வரவேற்கக்கூட இல்லை.

சோழனுக்கோ, அத்தனை பணிவுடன் காளாஞ்சியும் கையுமாக நிற்கிறவன் சேர மஹராஜன் என்று கொஞ்சங்

Koviloor Digital Library

கூட ஊஹிக்க முடியவில்லை. புதுசாகச் சேர தேசத்தில் கம்பர் வேலைக்குப் போட்டுக்கொண்ட எவனோ ஒருத்தன் என்றே நினைத்துவிட்டான்.

கம்பர் என்ன பண்ணினாரென்றால், சோழனோடு நடத்திக் கொண்டிருந்த ஸம்பாஷணைக்கு நடுவிலேயே அலக்ஷ்யமாகச் சேரன் பக்கம் கையை நீட்டினார். உடனே அவன் அடக்க வொடுக்கமாக வேற்றிலை மடித்து அவரிடம் நீட்ட, அதை அவனைத் திரும்பிக்கூடப் பார்க்காமல் வாங்கி, இரண்டு விரலுக்கு நடுவில் இடுக்கிக்கொண்டார். வாயில் போட்டுக் கொள்ளவில்லை.

இப்படி ஸம்பாஷணைக்கு நடுவிலேயே இரண்டு மூன்று தரம் தாம்பூலச் சுருளை வாங்கிக்கொண்டு, அவற்றை விரல் களிலேயே இடுக்கிக்கொண்டார்.

அப்புறம், "போகலாம்" என்று அவர் சேரனுக்கு ஜாடை செய்தார். உடனே அவன் புறப்பட்டுவிட்டான்.

வாசலுக்குப் போய் அவன் குதிரையைத் தட்டிவிட, அது காற்றாகப் பறந்து போய்விட்டது. அப்போதுதான், வந்தது சேரன் என்று சோழனுக்குப் பளிச்சென்று புரிந்தது.

அடையாளம் தெரிவிப்பதற்காக சேரனும் போகிற போக்கில் தன்னுடைய முத்திரை மோதிரம் ஒன்றைப் போட்டுவிட்டுப் போயிருந்தான்!

"கம்பரே! என்ன இப்படிப் பண்ணிவிட்டீர்கள்? வந்திருந்தது சேர ராஜா என்று சொல்லாமலே இருந்து விட்டீர்களே! அச்வ ஸாரத்யத்தில் ரொம்பவும் வல்லவனான அவனை இனிமேல் பிடிக்க முடியாதே!" என்றான் சோழன்.

கம்பரின் உயர் பண்பு

அதற்குக் கம்பர் "அப்பா குலோத்துங்கா! சேரன் என்னுடைய அழைப்புக்காகத்தான் இங்கே வந்தானே யொழிய, உன்னுடைய அழைப்பு அவனுக்கு இல்லை.

Koviloor Digital Library

என்னுடைய மானத்தைக் காப்பாற்றுவதற்காக அவன் அழையா வீட்டுக்கு வந்தபோது, அவனுடைய மானத்தை நான் காப்பாற்ற வேண்டுமல்லவா? அவன் சேரன் என்று தெரிந்தால் நீ அவனை எந்த தினுஸில் வரவேற்றிருப் பாயோ? எனக்காக வந்தவன் என் காரியத்தை முடித்துத் தந்துவிட்டுப் போக விடவேண்டுமென்றுதான், உனக்கு அவனை அறிமுகம் பண்ணாமலே விட்டேன்" என்றார்.

மறுபடியும் கம்பரின் பண்பு தெரிகிறதல்லவா?

"அப்படியா? அது ஸரி. ஆனால் அவன் கொடுத்த வெற்றிலைச் சுருள்களை ஏன் வாயில் போட்டுக்கொள்ளாமல் விரலிலேயே இடுக்கிக் கொண்டிருக்கிறீர்கள்?" என்று குலோத்துங்கன் கேட்டான்.

அதற்குக் கம்பர் சொன்ன பதிலில்தான் அவருடைய உயர்ந்த குணத்தின் உச்சியைப் பார்க்கிறோம்.

"ஒரு ராஜாவாக இருக்கப்பட்டவன் இன்னொருத்த னுக்கு 'அடைப்பை தூக்குகிறேன்' என்றால் அது அவனு டைய விநயத்தைக் காட்டுகிறது. அப்போது, அவனுடைய பணியைப் பெருகிறவன் மட்டும் ஒரேயடியாக விரைத்துக் கொள்வதா? இவனும் விநயத்தைத்தானே காட்ட வேண்டும்? என்னவோ வேளை பொல்லாப்பு, ஆதியில் நீ ஒன்று சொல்ல, நான் ஒன்று சொல்ல இப்படிச் சபதம் பண்ணி, அப்புறம் என் ஸ்வய மரியாதைக்காக அதை நிறைவேற்றும்படி ஆயிற்று. அதற்காக, மூவேந்தர்களில் ஒருத்தனாக இருக்கப்பட்டவனை அடைப்பைக்காரனாக வர வழைக்க வேண்டியதாயிற்று. நீ அவனை அடையாளம் கண்டு கொள்ளக்கூடாது என்பதற்காகவும், நான் நிஜமாகவே அவனுக்கு யஜமானனைப்போல நடக்கவேண்டும் என்பதற்காகவும் அலக்ஷ்யமாகவே அவனிடமிருந்து தாம்பூலம் வாங்கிக்கொள்ள வேண்டியதாகவும் ஆயிற்று. இதெல்லாம் போதாது என்று அதை நான் வாயிலேயே போட்டுக்கொண்டு சாப்பிட்டிருந்தேனானால் அவனிடம்

Koviloor Digital Library

நன்றாகவே ஊழியலாபம் பெற்று, நிஜ யஜமானனாகவே என்னை நிலைநாட்டிக் கொண்டதாக ஆகியிருக்கும்.

“நான் பண்ணின சபதம் என்ன? சேர ராஜாவை அடைப்பைக்காரனுக்கிக் கொண்டு வருகிறேன் என்பதுதான். அடைப்பை தாங்குவதும், தாம்பூலம் எடுத்துக் கொடுப்பதுந் தான் அவன் கார்யம். அதற்குமேலே, அந்தத் தாம்பூலத்தை வாங்கிக்கொண்டவன் அதைச் சாப்பிடும்படிப் பண்ணுவது அவன் கார்யமல்ல. அதனால் சேர ராஜாவை அடைப்பைக்கார வேலை முழுசாகப் பண்ண வைத்து என் சபதத்தை நிறைவேற்றிக் கொண்டாலும் அதை நான் தின்று எனக்கு யஜமானத்வத்தை உண்டாக்கிக் கொள்ளவில்லை” என்றார்.

தன்மானம் ஸ்வய மரியாதையைக் காப்பாற்றிக் கொண்டது மட்டுமில்லாமல் இப்படி சேரனுடைய மான. மரியாதைகளையும் கம்பர் காப்பாற்றிக் கொடுத்தார்.

ஒட்டக்கூத்தர், புகழேந்திப் புலவர் முதலானவர்கள் அரசவைக் கவிஞர்களாக இருந்திருக்க, கம்பர் மட்டும் சடையப்பவள்ள்ல் என்ற ஒரு ப்ரபுவையே தம் ஆதரவாளராகக் கொண்டிருந்ததிலிருந்து அவர் ரொம்பவும் ஸ்வதந்த்ர உணர்ச்சியுள்ளவராக யிருந்திருப்பாரென்று ஊஹிக்கலாம்.

இரண்டு “குட்டி”கள்

கம்பன், காளிதாஸன் போல் ஜகத் ப்ரஸித்தமான கவிகள் தானென்றில்லை, இன்னம் அநேக கவிஞர்களும் ராஜாவுக்குக்கூட பயப்படாத தீரத்தோடு இருந்திருக்கிறார்கள். மஹாகவிகள் இரண்டு பேரைச்சொல்லி விட்டேன். குட்டி கவி, குட்டி சாஸ்த்ரி என்றே பேருள்ள இரண்டு பேரைப் பற்றி சொல்கிறேன்.

இவர்களில் முதலாமவரான குட்டி கவியின் நிஜப்பெயர் —‘இயற்பெயர்’ என்பது—வாஞ்ச்யேச்வரன் என்பதாகும்.

Koviloor Digital Library

அவருடைய முன்னோர்களின் ஊர் ஸ்ரீ வாஞ்சிய க்ஷேத்திர மான படியால் அந்த க்ஷேத்ர மூர்த்தியின் பேரை அவருக்கு வைத்தார்கள். குழந்தையிலேயே அவருக்குக் கவிதா விலாஸம் ஏற்பட்டுவிட்டதால் 'குட்டி கவி' என்று பேர் ஏற்பட்டது.

ஷாஹஜி மன்னர்

17-வது நூற்றுண்டுக் கடைசியில் தஞ்சாவூர் ராஜ்யம் நாய்க்கர்களிடமிருந்து சிவாஜி வம்சத்தைத் சேர்ந்த மஹாராஷ்ட்ரர்களிடம் கை மாறிற்று. அந்த வம்சத்தில் வந்த முதல் ராஜாக்களில் ஒருவர் ஷாஹஜி. அவர் ஸகல கலா வல்லபர். வித்வான்களை நிரம்பப் போஷித்தவர். சிவபக்தியில் சிறந்த அவரே, ஜயதேவர் க்ருஷ்ணரை வைத்துப் பண்ணினாற்போல, திருவாரூர் த்யாகராஜாவின் பேரில் இருபத்து நாலு அஷ்டபதி செய்திருக்கிறார். அவருக்குச் சிறந்த பண்டிதர்களைக் கொண்டதாகவே ஒரு முழு ஊரை நிர்மாணிக்க வேண்டுமென்று ஆசை ஏற்பட்டது. என்ன பண்ணினாரென்றால் காவேரியின் தென் கரையிலுள்ள திருவிசைநல்லூர்—தேவாரத்தில் திருவியலூர் எனப்படுவது—அந்த ஊரில் பெரிசாக ஒரு ஸர்வமான்ய அக்ரஹாரம் நிர்மாணம் செய்தார். அதிலே நாம் குஜராத் என்கிற கூர்ஜரத்திலிருந்து ஆரம்பித்து, மஹாராஷ்ட்ரம், ஆந்த்ர தேசம், கர்நாடகம் முதலியவற்றிலிருந்தும், நம்முடைய த்ராவிட தேசத்திலிருந்தும் உத்தம வித்வான்களை ப்ரார்த்தனை பண்ணி வரவழைத்துக் குடியேற்றினார். அவர்கள் ஒவ்வொருவருக்கும் பூதானம், க்ருஹதானம் எல்லாம் வழங்கினார். அப்படிக் குடியேறியவர்களில் ஒருவர்தான் அந்த சீமையிலேயே நன்னிலத்தின் கிட்டேயுள்ள ஸ்ரீ வாஞ்சியத்திலிருந்து வந்த குட்டி கவியின் அப்பா.

ராஜாக்களையும் பொருட்படுத்தாத கவிகளைப் பற்றி ஆரம்பித்தேன். இப்போது ஷாஹஜி ராஜாவுக்குக் குழந்தை ப்ராயத்திலிருந்த குட்டிகவி புகழ்மாலை, பாமாலை சூட்டியதைக் கொஞ்சம் சொல்கிறேன்.

Koviloor Digital Library

அரசனைப் போற்றும் கவிதை

'ராஜாக்கள் நல்ல ரஸிகர்களாகவும் வள்ளல்களாகவும் இருக்கும்போது அவர்களை உத்ஸாஹப்படுத்தி, அதன் மூலம் அவர்கள் கவிகளை மேலும் ஆதரிக்கப்பண்ணி, இதனால் கவிகள் பெறுகிற உத்ஸாஹத்தில் மேலும் நல்ல நல்ல காவ்யங்கள் உண்டாக உதவவேண்டும்'—என்ற எண்ணத்தில் இப்படிப்பட்ட ராஜாக்களின் மேல் கவிகள் ஸ்தோத்ரமாகக் கவிதைகள் பாடுவதுண்டு. Exaggeration ஆகத்தானிருக்கும். இலக்கியச் சுவைக்காக அதையும் "அதிசயோக்தி", "மிகைபடக்கூறல்", "உயர்வு நவிற்சி" என்று சொல்லி அங்கீகரித்திருக்கிறது. "சாடு" (Chaatu) கவிதை என்று இவற்றுக்குப் பேர்.

ராஜாவை உத்ஸாஹப்படுத்த ரொம்பவும் சிறந்த வழி அவனைப் புகழ்வதைவிட அவனுடைய பத்தினியைப் போற்றுவதுதான் என்பதால் ராணிகளையும் உசத்தி வைத்துப் பாடுவதும் உண்டு.

ஒன்று நினைவுக்கு வருகிறது.

அப்பய்ய தீக்ஷிதரின் தாத்தாவுக்கு ஆச்சான் தீக்ஷிதர் என்று பெயர். ஆசார்ய தீக்ஷிதர் என்ற பெயர்தான் அப்படி மாறி இருந்தது. அவருக்கே 'வக்ஷஸ்தலாசார்யார்' என்றும் பெயர் சொல்வார்கள். இப்படிப் பேர் வந்ததற்குக் காரணமே அவர் க்ருஷ்ணதேவராயரின் ராணியைப் புகழ்ந்து கவி பண்ணியதுதான்.

க்ருஷ்ணதேவராயர் காஞ்சீபுரத்திலே வரதராஜப் பெருமானை தர்சிப்பதற்காக வந்திருந்தார். அவருடைய ஸதஸைச் சேர்ந்த பண்டிதோத்தமரான ஆச்சான் தீக்ஷிதரும் கூட வந்தார்.

பட்டர் வரதராஜாவுக்கு கர்ப்பூராரத்தி நன்றாகத் தூக்கிக் காட்டி கீழே இறக்கிக் கொண்டே வரும்போது முக மண்டலத்திலே பல தினுஸாக நிழலாடியதிலோ

Koviloor Digital Library

என்னவோ, ராயருக்குப் பெருமாள் கண்ணைக் கொஞ்சம் தாழ்த்திக் குனிந்து பார்த்துக் கொள்கிற மாதிரி தோன்றிற்று. அதை ஆச்சான் தீக்ஷிதரிடம் சொல்லி "தீக்ஷிதர்வாள்! இதற்கு ஏதாவது காரணம்—ஐதிஹ்யம் (ஐதீகம்)—தங்களுக்குத் தெரிகிறதா?'' என்று கேட்டார்.

ராயர் கேட்டவுடனேயே தீக்ஷிதர் பளிச்சென்று ஒரு ச்லோகமாக பதில் சொல்லிவிட்டார். "அதுவா? ஸ்வர்ண காந்தியாக ஜ்வலித்துக்கொண்டு உன் பக்கத்திலே நிற்கிற ராணியைப் பார்த்ததும் பெருமாளுக்கு ஸாக்ஷாத் மஹாலக்ஷ்மி என்று தோன்றிவிட்டது. 'அப்படியானல் தன்னுடைய வக்ஷஸ்தலத்திலே (திருமார்பிலே) அவள் இல்லாமல் இறங்கிப் போய்விட்டாளா என்ன?' என்று ஸம்சயம் ஏற்பட்டுத்தான் கண்ணைத் தாழ்த்தி மார்பைப் பார்த்துக் கொள்கிருர்'' என்று அர்த்தம் கொடுக்கும் ச்லோகமாக பதில் செல்லிவிட்டார்!

காஞ்சித் காஞ்சந கௌராங்கீம் வீக்ஷ்ய ஸாக்ஷாதிவ ச்ரியம் |
வரத: ஸம்சயாபந்நோ வக்ஷஸ்தலம் அவேக்ஷதே ||

"வக்ஷஸ்தலத்தைப் பார்த்துக் கொள்கிருர்'' என்று முடித்ததாலேயே ராயர் அவருக்கு "வக்ஷஸ்தல'' என்ற பட்டம் தந்தார். "ஆசார்ய'' என்ற அவருடைய பேரோடு சேர்ந்து, அதுமுதல் அவர் "வக்ஷஸ்தலாசார்யா"ராகி விட்டார்.

இப்படி, போஜனைக் காளிதாசன் அதீத கல்பனையாகப் புகழ்ந்திருப்பதில் வேடிக்கையாக ஒன்று:

பூலோகத்தில் கோகுலத்திலே குழந்தையாய் வளர்ந்த க்ருஷ்ண பரமாத்மா அவதாரத்தை முடித்த பிறகு ஆகாசத்திலே கோலோகம் என்பதில் வாஸம் பண்ணிக் கொண்டிருக்கிருரென்று சொல்வார்கள்.

Koviloor Digital Library

ஒருநாள் அவர் அந்த திவ்யலோகத்தைவிட்டு மறுபடியும் பூலோகத்துப் போய்க் கொண்டிருப்பதை நாரதர் பார்த்தாராம்.

"கோபாலா! உன்னுடைய லோகத்தை விட்டு எங்கே, எதற்காகப் போகிறாய்?" என்று கேட்டாராம்.

"தேவர்ஷே (தேவரிஷியே)! வேறே ஒன்றுமில்லை. இங்கே முக்யமான பசுவாயுள்ள ஸாக்ஷாத் காமதேனுவே கன்றுக்கு ஊட்டக்கூடப் பாலில்லாமல் மரத்துப் போய்விட்டது. யார் எது கேட்டாலும் கொடுக்கும் காமதேனுவுக்கு ஏன் இப்படி ஆச்சு என்றால், பூலோகத்திலே கவிவாணர்கள் கேட்காமலே வாரி வாரிக் கொடுக்கும் போஜனைப் பற்றி அதற்குத் தெரிந்தது. 'நம்மையும் மிஞ்சி ஒருத்தனா?' என்று ஏங்கி ஏங்கி இளைத்தே பால் மரத்துவிட்டது. அதனாலே அதன் கன்றுக்குப் புல் பிடுங்கிக்கொண்டு வரத்தான் அவனுடைய உலகத்துக்குப் போகிறேன்" என்று பகவான் பதில் சொன்னாராம்.

அதற்கு நாரதர், "அடாடா! நீ போகிற கார்யம் நடக்கிறதற்கு இல்லையே! ஏனென்றால், எங்கே பார்த்தாலும் போஜனிடம் வீரத்திலோ, ஈகையிலோ, அழகிலோ, படிப்பிலோ, எதிலேனும் தோற்றுப்போன ஏராளமான எதிரிகள் மண்ணைக் கவ்விக் கவ்வி அங்கே இப்போது புல் என்பதே முளைத்திருக்கவில்லையே!" என்றாராம்*!

"போற்றினும் போற்றுவர். தூற்றினும் தூற்றுவர்" என்கிறபடி, ஸ்துதிக்கவேண்டிய ஸமயத்தில் இப்படி புகழ்ந்த அதே போஜனையேதான், அவன் வலுக்கட்டாய

---

* ஸ்வர்காத் கோபால குத்ர வ்ரஜஸி ஸுரமுநே பூதலே காமதேநோ:
வத்ஸஸ்யாநேது: காமஸ் - த்ருணசயம் - அதுநா முக்த - துக்தம்
ந தஸ்யா: |
ச்ருத்வா ஸ்ரீ போஜராஜ - ப்ரசுர - விதரணம் வ்ரீட - சுஷ்க - ஸ்தநீ ஸா
வ்யர்தோ ஹி ஸ்யாத் - ப்ரயாஸஸ் - ததபி தத் - அரிபிச் - சர்விதம்
ஸர்வமுர்வ்யாம் ||

Koviloor Digital Library

மாக கவி கேட்டபோது காளிதாஸன் விட்டு விட்டுப் பேர்யே போய்விட்டான்.

"மன்னவனும் நீயோ? வளநாடும் உன்னதோ?" என்று கேட்ட அதே கம்பர், குலோத்துங்கனைப் பாராட்ட வேண்டிய ஸந்தர்பத்தில்,

"தண்ணீரும் காவிரியே; தார்வேந்தன் சோழனே;
மண்ணாவ தும்சோழ மண்டல மே!"

என்று கொண்டாடியுந்தான் பாடியிருக்கிறார்.

கார்யத்தைப் பார்த்துத்தான் தூற்றுவதோ போற்றுவதோ செய்திருக்கிறார்களேயொழிய, அல்பத்தனமாக இச்சகம் பாடியோ த்வேஷாரோபம் செய்தோ அல்ல.

போற்றுகிறபோது, தங்களை ஆதரித்தவர்கள் த்ரவ்யத்தில் எவ்வளவு ஔதார்யம் (உதாரத்தன்மை) காட்டினார்களோ அதைவிடவும் ஔதார்யமாக அவர்கள் மேல் புகழ்மொழியைப் பொழிந்திருக்கிறார்கள்.

ராமபட்டாபிஷேகத்தைச் சொல்லும்போது கம்பர், தம்மை ஆதரித்த திருவெண்ணெய் நல்லூர் சடையப்ப வள்ளலின் முன்னோர் ஒருவருடைய கையிலிருந்துதான் வஸிஷ்டர் கிரீடத்தை வாங்கி ராமருக்குச் சூட்டினாரென்றே பாடியிருக்கிறார்!*

மன்னரும் குழந்தையும் : பரஸ்பரப் பாராட்டு

ஷாஹஜி மீநாக்ஷியம்மனை தர்சிப்பதற்காக மதுரைக்குப் போயிருந்தார். கூடவே வித்வான்களின் பரிவாரத்தையும் அவர் அழைத்துக் கொண்டு போனதால் குட்டி கவியின்

---

* "..............வெண்ணெயூர்ச் சடையன் தங்கள்
மரபுளோர் கொடுக்க வாங்கி வசிட்டனே புனைந்தான்
மௌலி"

Koviloor Digital Library

அப்பா, குட்டிகவி, ஆகிய இரண்டு பேருக்கும் ஜகன்மாதா மீநாம்பிகையின் தர்சன ப்ராப்தி கிட்டிற்று.

அம்பாளைப் பார்த்த மாத்ரத்தில் ஷாஹஜியின் வாயிலிருந்து ஆசுகவியாக ச்லோகம் வந்தது. வார்த்தை ஜாலமுள்ள ச்லோகமாக அது இருந்தது!

புரிமதுரம் கிரிமதுரம் கரிமதுரந்தர - நிதம்ப - பாராட்யம் |
ஸ்தூல குசம் நீல கசம் பாலக சந்த்ராங்கிதம் பஜே தேஜ: ||

என்பதே ச்லோகம்.

முதலில் 'மதுரம்', 'மதுரம்' என்று இரண்டு முறை வந்ததற்குப் பொருந்த, 'கரிம - துரந்தர' என்பதையே "கரிமதுரந்தர" என்று ப்ராஸம் போட்டுச் சொன்னேன்.

அம்பாள் வாஸம் செய்யும் ஊரின் பெயரே இனிமை - மதுரம்—மதுராபுரி. "புரி மதுரம்".

அம்பாளுடைய வாக்கு—அல்லது அவளுடைய பேர் என்றும் வைத்துக்கொள்ளலாம்—அதுவும் இனிமை. "கிரி மதுரம்."

அப்புறம் அவளுடைய மதுரமான ரூபத்தை வர்ணித்து "நீலகசம்" என்று அவளுடைய கரிய கூந்தலையும், அதிலே அவள் தரித்திருக்கிற பிறை மதியையும் சொல்லி ("பாலக சந்த்ராங்கிதம்" என்று சொல்லி), இப்போர்ப்பட்ட ஒரு தேஜஸாக்கும் அம்பாள் என்று முடித்திருக்கிறது.

இந்த ஆனந்தமான கவிதா ரஸ ப்ரவாஹத்தைக் காதாரப் பருகிற்று பக்கத்திலிருந்த குழந்தைக் கவி. உடனே அதுவும் ஆசுகவியாகி ராஜாவையே பாராட்டிப் பாடிவிட்டது. ராஜா பண்ணியதற்கு மேலே வார்த்தை ஜாலம் பண்ணிப் பாடிவிட்டது.

கவிலோகே நவிலோகே புவி லோகேசஸ்ய ஸாஹஜே ரூபமாம் |
ஹ்ருதிதரஸா (அ)விதிதரஸா - ததிதரஸாஹித்ய-வா-ந-மே-லகதி ||

Koviloor Digital Library

முதல் பாதிக்கு அர்த்தம், "உலகத்தை ஆளுபவனுன ஷாஹஜிக்கு ('ஸாஹஜி' என்று ச்லோகத்தில் இருக்கிறது) உவமிக்கும்படியாக பூமியில் கவிலோகம் முழுதிலும் நான் எவரையும் பார்க்கவில்லை" என்பது. இதில் 'கவிலோகே' வுக்கு அப்புறம் 'நவிலோகே' என்று இருப்பது 'ந விலோகே' என்று பிரியும். "லோகேசனுயுள்ள ஸாஹஜிக்கு உபமான மாகிறவரை பூலோகத்திலே 'கவி லோகே கவியுலகில், 'ந விலோகே': பார்க்கவில்லை." 'பூலோகத்திலே லோகேச ஞயுள்ள' என்கிற இடத்தில் 'புவி - லோகேசஸ்ய' என்று வருவதற்குள்ளும் ஒரு 'வியோகே' இருக்கிறது.

இரண்டாம் பாதியில் முதல் வார்த்தை 'ஹ்ருதி-தரஸா' என்று பிரியும். அடுத்தது '(அ)விதி-தரஸா' இல்லை. அதை '(அ)விதித-ரஸா' என்று பிரிக்கவேண்டும். 'தத்-இதர-ஸாஹித்ய' என்பதிலேயும் ஒரு 'தரஸா' வந்து உட்கார்ந்துகொண்டிருக்கிறது!

முதல் பாதியில் மூன்று 'விலோகே'. இரண்டாம் பாதியில் மூன்று 'தரஸா'.

இரண்டாவது வரியில் குழந்தைக் கவி, "இப்படிப்பட்ட ராஜாவுடைய கவிதா வாக்கைத் தவிர வேறெந்த ஸாஹித்ய வாக்குகளிலும் இப்பேர்ப்பட்ட ரஸத்தைக் காணமுடியாததால் அவை எதுவும் இதுபோலச் சடேரென்று என் ஹ்ருதயத்தில் ஒட்டிக்கொள்ளவில்லை" என்கிறது.

ராஜாவுக்கு ஸர்ட்டிஃபிகேட் கொடுக்கும்போதே தனக்கும் ஸர்ட்டிஃபிகேட் கொடுத்துக் கொண்டிருக்கிறது— தனக்குக் கவிதாரஸ ஞானம் நன்ருக உண்டு என்று! மற்ற எல்லாருடைய கவிதையிலும் காண முடியாத ரஸத்தைத் தன்னுல் ஷாஹஜியின் கவிதையிலேயே காணமுடிகிறது என்கிறது. ஷாஹஜியின் வாக்கே அதன் ஹ்ருதயத்தில் சடேரென்று ஒட்டிக்கொள்கிறதைக் குறிப் பால் சொல்கிறது. 'தரஸா' என்ருல் 'சடேரென்று'. 'லகதி' ஒட்டிக்கொள்கிறது.

Koviloor Digital Library

ராஜாவை உதாஸீனமாகப் பேசுவதற்கு தைர்யம் வேண்டுமென்றால், ஒரு குழந்தையாகப்பட்டது அவனுக்கு ஸர்ட்டிஃபிகேட் கொடுப்பதற்கு அதைவிட தைர்யம் வேண்டும். அம்பாள் ஸந்நிதானத்திலே அரசன் தன்னை மறந்து கவிதை பண்ணினபோது, மற்ற பெரிய வித்வான்கள்கூட அதைக் கேட்டுக்கொண்டு அடக்கமாகத்தான் இருந்தார்கள். அந்த ஸந்தர்பத்தில் குழந்தை இப்படி 'டாண்' என்று அவனுக்கு ஸபாஷ் போட்டு ச்லோகம் பண்ணிற்று என்றால் இதுவும் ஒரு கவிக்கு அரசனுக்கும் மேலான ஸ்தானம் உள்ளதைத்தான் காட்டுகிறது.

இந்த ஸமயத்தில்தான் ராஜா குட்டிகவி என்று வஞ்ச்யேச்வரனுக்கு பட்டம் கொடுத்தார் என்று சொல்வதுண்டு.

ராஜா நல்ல கவிதை பண்ணினபோது ஸபாஷ்போட்ட அதே குட்டிகவி, ராஜா தப்புப் பண்ணினபோது அவனை வாங்கு வாங்கு என்று வாங்குவதற்கும் சளைக்கவில்லை. ஆனால் தப்புப் பண்ணின அந்த ராஜா ஷாஹஜி இல்லை.

ப்ரதாப ஸிம்ஹனும் குட்டிகவியும்

ஷாஹஜிக்கு அப்புறம் அவருடைய பிள்ளை ப்ரதாப ஸிம்ஹன் ராஜாவானான். ராஜ்ய நிர்வாஹத்தைத் திறம்பட நடத்தி வந்த முக்ய அதிகாரிகளான நாணஜி ப்ரபு, சந்த்ரபானு, ஆனந்தராயர் முதலான பெரியவர்கள் கால க்ரமத்தில் காலமாகிவிட்டார்கள். துரத்ருஷ்டவசமாக ப்ரதாப ஸிம்ஹன் கல்வி கேள்விகள் இல்லாத சில சில்லறை ஆஸாமிகளின் வசப்பட்டுவிட்டான். அவர்களை ஆலோசகர்களாக வைத்துக்கொண்டு நிர்வாஹம் செய்ததில் ஆட்சி சீர்குலைந்து, கோணாட்டு மக்கள் பலவிதத்தில் கஷ்டப்படும்படி ஆயிற்று. முறையாக அறிந்த வித்வான்கள், கவிகள் ஆகியோருக்கும் ஆதரவு இல்லை.

இப்போதுதான் ராஜாவை தைர்யமாக இடித்துரைக்க வேண்டுமென்று குட்டி கவி ஒரு காவ்யம் எழுதப் புறப்

Koviloor Digital Library

பட்டது. இப்போது "குட்டி" யாக இல்லாமல் நல்ல வயஸு வந்தவராகவே அவர் ஆகியிருந்தார். வெறுமனே ஆத்திரத்தைக் கொட்டித் திட்டித் தீர்ப்பதற்காக அவர் எழுதவில்லை. தம்முடைய எழுத்தின் மூலம் ப்ரதாபஸிம்ஹனுக்கு புத்தி புகட்டி நல்வழிப்படுத்தவேண்டுமென்ற எண்ணத்துடனேயே எழுதினார். அவன் அவனைப் பொறுத்தமட்டில் நல்லவன் தான். ஆனால் எடுப்பார் கைப்பிள்ளையாகத் தகாதவர்களின் வலையில் விழுந்து அவர்களுக்குத் தலையாட்டிக் கொண்டிருந்ததால்தான் ப்ரஜைகளையெல்லாம் கஷ்டப் படுத்திக் கொண்டிருந்தான்.

இவனை எப்படி வழிக்குக் கொண்டுவருவது என்று யோசித்த குட்டிகவி, இக் காலத்தில் Satire என்றும் Irony என்றும் சொல்கிறார்களே—மறைமுகமாக, ஹாஸ்ய ரஸத்தோடு குத்திக்காட்டி எழுதுகிறார்களே—அப்படி ஒரு காவ்யம் எழுதுவது என்று ஆரம்பித்தார். இப்படி எழுதுவதைச் "சலோக்தி" என்பார்கள். வெளியிலே ஒன்றைச் சொல்லி உள்ளே இன்னொன்றை உணர்த்துகிற முறையையும் கையாண்டார். இந்த அணிக்கு 'அந்யாபதேசம்' என்று பெயர். இக்காலத்திலே கார்ட்டூன் என்று போடுகிறார்கள். அதில் மநுஷ்ர்களையே ம்ருகங்கள் மாதிரி கூடக் கேலியாகச் சித்ரிக்கிறார்கள். குட்டிகவி வார்த்தையாலேயே கார்ட்டூன் போட்டுவிட்டார்!

எருமைத்துதி

அந்த நூல் இப்போது இருக்கிறது. நூறு ச்லோகம் கொண்ட அதற்கு "மஹிஷ சதகம்" என்று பெயர் எருமையை ஸ்தோத்ரம் பண்ணும் நூறு பாட்டு என்று புரிகிறதோல்லியோ? தலைப்பிலேயே பரிஹாஸமாக இடித்துச் சொல்லுதல்!

"மஹிஷி" என்று ராணிக்குப் பெயர் இருக்கிறது. 'பட்ட மஹிஷி' என்கிறோம். ஆனால் ராஜாவுக்கு 'மஹிஷன்' என்று

Koviloor Digital Library

பேரில்லே. 'மஹி' என்ருல் பூமி என்பதை வைத்து 'மஹீசன்', 'மஹிபதி' என்றுதான் பெயர்கள் இருக்கின்றன.

குட்டிகவி மஹிஷ சதகம் பண்ண ஆரம்பித்துவிட்டார். அவர் 'சதகம்' பண்ணத்தான் நினைத்தாரோ அல்லது 'ஸாஹஸ்ரீ'யாக ஆயிரம் ச்லோகம் பண்ண நினைத்தாரோ? கொஞ்சம் கொஞ்சமாக ச்லோகம் பண்ணிப் பண்ணி, அவற்றை ராஜாவுக்கே அனுப்பிவந்தார்.

அதன் ஸப்ஜெக்ட்டைச் சுருக்கமாகச் சொன்னுல், அஸத்தானவர்களைத் தன் ஸபையில் வைத்துக்கொண்டு அவர்களுக்கு 'ஆமாம் பூசாரி' போடுகிற ஒரு ராஜாவுக்கு ஸேவகம் செய்து பிழைப்பதைவிட ஒரு எருமைக்கடாவை வைத்துக்கொண்டு அதனுல் "உழுதுண்டு வாழ்வதே மேல்" என்பதுதான்! உழுதுண்டு வாழ்வதற்காக எதை ஏரிலே பூட்டிப் பின் செல்கி"ருேமோ அந்த எருமையையே "தொழுது" ஸ்துதிப்பதாகத்தான் ச்லோகங்கள் செய்தார்!

அதிலே இரண்டே இரண்டின் தாத்பர்யத்தை மட்டும் சொல்கிறேன்.

மஹாபண்டிதரான ஸ்ரீதரர் தம் வித்தையைக் காசுக்கு விற்கிருர். ஷட் - தர்சனம் கற்ற அம்பு தீக்ஷிதர் சோற்றுக்குத் தாளம் போடுகிருர். ஷட் - தர்சனமாவது, சை! க்யாதி வாய்ந்த குட்டிக்கவியுங்கூட துஷ்ட தனிகரின் வாசலில் காத்துக் காத்து ஒய்ந்து போய்த் தூங்கி விழுந்து விட்டார். இத்தனையும் எதனுல்? மஹிஷேச்வரனுன— எருமைக் கடவுளான—உன்னை அநுஸரித்து ஆச்ரயிக்காத துர்பாக்கியத்தின் பலன்தான்!" என்று ஒரு ச்லோகம்[1].

இன்னென்றில், "எருமையே! ராப் பகலாக நிலத்தை உழுது உழுது ஏன் கஷ்டப்படுகிருய்? இப்போது ராஜஸபை யில் இருப்பவர்களோடு நீயும் சேர்ந்து ஸுகஜீவனம் பெறலாமே! 'எனக்கு அறிவில்லையே, ஸாமர்த்திய மில்லையே!' என்றெல்லாம் வீணுக்கு அலட்டிக்

---

1. "வித்யாபண்யவிசேஷ"

Koviloor Digital Library

கொள்ளாதே! தற்போதைய ஸபாக்காரர்களோடு பார்த்தால் உன்னை ப்ருஹஸ்பதீ என்றே சொல்லணுமாக்கும்!'' என்கிறார்[2].

இவர் அனுப்ப அனுப்ப ச்லோகங்களைப் பார்த்துக் கொண்டேபோன ராஜாவுக்கு—அவனும் உள்ளூர நல்ல ஸ்வபாவமுள்ளவன் என்றேனே, அதனால்—மனஸிலே நன்றாகத் தைத்து, தான் பண்ணுகிறது தப்பு என்று உணர்ந்தான்.

நாட்டைக் காத்த கவி

ராஜரீக ஹோதாவைப் பார்க்காமல் ப்ரதாப ஸிம்ஹன் குட்டிகவியிடம் போய், தனக்கு நல்லறிவு பிறந்துவிட்டதாகவும், ஞான சூன்யமான ஸ்வய நல கோஷ்டியை நீக்கி விட்டு, விஷயமறிந்த ஸத்துக்களை ஆலோசகர்களாகப் போட்டுக்கொண்டு ஆட்சி நடத்துவதாகவும் வாக்குக் கொடுத்தான்.

தேசத்துக்கு உபகாரமாகத் தாம் எடுத்துக் கொண்ட கார்யம் பலிதமானதில் குட்டிகவி ஸந்தோஷம் அடைந்தார்.

அதோடு அவர் தாம் கவனம் செய்துகொண்டிருந்த பரிஹாஸ காவ்யத்துக்கும் 'ஃபுல் ஸ்டாப்' போட்டுவிட்டார். அதுவரை ஸரியாக நூறு ச்லோகங்கள் ஆகியிருந்ததால் 'மஹிஷ சதகம்' என்று அதற்குப் பெயர் கொடுத்து வைத்து விட்டார்.

'ராஜாதான் திருந்திவிட்டானே, ஏன் அந்த ச்லோகங்களைக் கிழித்துப் போட்டிருக்கக் கூடாது?' என்றால், 'ராஜாவையுங்கூட ஒரு கவியானவன் அடக்கி நல்வழிக்குக் கொண்டு வரமுடியும். நாட்டை அடக்கி ஆள்கிறவனுக்கும் மேலான சக்தியைக் கவி நிஜமாகவே பெற்றவன்' என்பதற்கு ப்ரத்யக்ஷ நிரூபணமாக இந்தக் காவ்யம் இருந்து கொண்டிருக்

2. ''ஸர்ஷகர்ஷமஹர்நிசம்''

Koviloor Digital Library

கட்டும் என்றே கிழித்துப் போடாமல் வைத்துவிட்டார். வருங்காலத்தில் ஆட்சிக்கு வருபவர்களுக்கும் பாடமாக, எச்சரிக்கையாக இருக்கட்டுமென்று வைத்துவிட்டார்.

ராஜாவும் அந்தச் சுவடிகளை confiscate பண்ணுவது, proscribe பண்ணுவது என்று பறிமுதல், தடை செய்யாததை இங்கே சொல்லவேண்டும்.

இப்படியாக, ஒரு கவியின் தைர்யம் ஒரு ராஜ்யத்துக்கே நன்மை செய்திருக்கிறது!

வங்க வித்வானை வென்ற வாலிபர்

குட்டிகவியின் கொள்ளுப் பேரரும் அவருடைய இயற் பெயரையே கொண்ட இன்னொரு வாஞ்ச்யேச்வரர்தான்.* (தாத்தாவேதான் பேரனாகப் பிறக்கிறார் என்ற கருத்தில் அவர் பேரையே இவனுக்கு வைப்பதால்தான் 'பேரன்' என்று சொல்வது!) கொள்ளுப் பேரரை வாஞ்ச்யேச்வர யஜ்வா என்பார்கள். ஸோம யாகம் செய்தவரானதால் 'யஜ்வா'. கொள்ளுத் தாத்தாவைப் போலவே இவரும் பாண்டித்யம், ஸாஹித்ய ஆற்றல் எல்லாம் உள்ளவர், அவரைப் போலவே மஹா தீரர் என்பதுதான் நாம் எடுத்துக் கொண்டுள்ள விஷயத்துக்கு முக்யமானது. ப்ரபிதாமஹரின் அச்சாக இவர் இருந்ததால் இவரைக் "குட்டி சாஸ்த்ரியார்" என்றே பொதுவில் சொல்ல ஆரம்பித்தார்கள்.

இவர் தம்முடைய தைர்யத்தை முதலில் காட்டியது ராஜாவிடமல்ல; வேறொரு மஹர பண்டிதரிடமேயாகும். அப்போது அவருக்கு வயஸு பதினெட்டுதான்.

பெங்காலில் 'நாடியா' என்கிற நவத்வீபத்தில் விசேஷமாக உருவாக்கப்பட்ட நவீன தர்க்க சாஸ்த்ரத்தில் கரை கண்ட அந்த ஊர் வித்வான் ஒருவர் திருவிடைமருதூருக்கு

---

* இவரைக் குறித்த விரிவான உரை இனிவரும் பகுதிகளில் ஒன்றில் வெளியாகலாம்.

Koviloor Digital Library

வந்து அமரஸிம்ஹ மஹாராஜாவின் முன்னால் வாதம் நடத்தினார். அவருக்கு ஈடு கொடுக்கத் தஞ்சைச் சீமையில் யாருமே இல்லாமல் ஸதஸ் விக்கித்து அவமானப்பட்டு நின்ற போது யுவாவான குட்டி சாஸ்த்ரி பதில் கொடுத்து என்னவோ முனகினார். சிறுபிள்ளை என்று அலக்ஷ்யமாக பெங்கால் பண்டிதர் கையமர்த்த, இவருக்கு மானம் பொங்கிக்கொண்டு வந்தது. முனகலாக ஆரம்பித்தவர் கர்ஜனையாகவே முழங்க ஆரம்பித்தார். "காதாதரி" என்ற தலைசிறந்த நவீன தர்க்கப் புஸ்தகத்தில் சொல்லியுள்ள அறுபத்துநாலு வாதங்களையும் அலசினார். பெங்கால் பண்டிதரை முனகக்கூட முடியாமல் வாயடைத்து உட்காரச் செய்துவிட்டார்! இப்படித் தமிழ்நாட்டின் வித்வத் ஸமூஹத்துடைய மானத்தையே அவர் காப்பாற்றியதில்தான் அவருடைய தைர்யம் அங்குரார்ப்பணமாயிற்று.

சரபோஜிக்குப் பணியாத சாஸ்த்ரியார்

ராஜாவிடம் அவர் மானம் மரியாதைகளைத் துணிந்து காப்பாற்றிக் கொண்ட கதைக்கு வருகிறேன்.

அவருக்கு வயஸானபோது சரபோஜி மஹாராஜா தஞ்சாவூரிலிருந்துகொண்டு ஆட்சி நடத்திவந்தார். அவர் தினமும் பக்கத்திலே ஒரத்தநாட்டுக்குக் குதிரையின் மேல் ஆளனுப்பி, அங்கே தாம் குடியேற்றியிருந்த ஸத்ப்ராம்மணர்கள் அன்றன்றும் வைதிக கர்மாக்களும் பூஜையும் முடித்துவிட்டுத் தருகிற மந்த்ராக்ஷதையைக் 'கலெக்ட்' பண்ணிக் கொண்டு வரச் செய்து, அதைத் தம் சிரஸில் போட்டுக் கொண்ட பிறகே போஜனம் செய்வார். இந்த ப்ராம்மணோத்தமர்களில் குட்டி சாஸ்த்ரிகளும் ஒருவர்.

அவர் கொஞ்சங்கூட லோபமில்லாமல் தீர்க்கமாக அநுஷ்டானங்கள் பண்ணுகிறவர். ராஜாவின் குதிரைக்காரன் வந்துவிட்டானே என்பதற்காக "ஓட்ட" மாட்டார். (குதிரையைச் சொல்லவில்லை; அநுஷ்டானத்தை!) கவனமாக, நிறுத்தி நிதானமாக அநுஷ்டானங்களை முடித்தே

Koviloor Digital Library

அக்ஷதை தருவார். இதனால் மஹாராஜாவின் போஜனம் பல நாட்களில் 'டிலே' ஆயிற்று.

ஒரு ஸமயம் சரபோஜி அவரைப் பார்த்தபோது, "சாஸ்த்ரிகளே! அநுஷ்டானம் ரொம்ப நிதானமா நடக்கிருப்பலே இருக்கே" என்று கேட்டுவிட்டார்.

சரபோஜி மதிப்புக்குரியவர். கலைகளுக்கு அளவில்லாத பணி செய்திருக்கிறவர். ஸரஸ்வதி மஹால் கலெக்ஷன் ஒன்று போதும் அவருடைய உயர்ந்த பணிக்கு! ஆனாலும் ராஜா என்பது எங்கேயாவது, எப்போதாவது துருத்திக் கொண்டு வருமாதலால் இப்படிச் சொன்னார்.

அவ்வளவுதான்! சாஸ்த்ரியாருக்குத் தாளவில்லை. 'ஒரு ராஜாவுக்காக ப்ராம்மணனானவன் வேத கார்யத்தையும் தேவ கார்யத்தையும் அவற்றுக்கான விதிமுறைகளை 'ரிலாக்ஸ்' செய்து பண்ணுவகா? ராஜாவுக்கே ஆசீர்வாதமாக அக்ஷதை அனுப்பி வைக்கிறவனை வெளிப்பார்வைக்கு வைத்தாலும் அவனுக்கு ஊழியம் செய்கிற ஸேவகன் என்ற நிலையில்தானே நம்மை உள்ளுக்குள்ளே நினைப்பதாகத் தெரிகிறது?' என்று குன்றி, மனம் வெதும்பினார்.

அன்றைக்கே ராவோடு ராவாக ஊரைக் காலி பண்ணிக் கொண்டு பெண்டாட்டியுடன் கூடக் கிளம்பிவிட்டார். நேரே அர்த்த ஜாமத்துக்குத் திருவையாறு வந்துசேர்ந்தார். அம்பாள் தர்மஸம்வர்த்தனியிடம் ஓடிப்போய் அப்படியே அவள் சரணத்தில் விழுந்து இப்படித் தம்முடைய ஸ்வதர்மத்துக்கு பங்கம் வரும் ஹேது நேர்ந்துவிட்டதற்காகக் கதறி முறையிட்டார். ஸதிபதிகள் அதோடு அப்படியே கிளம்பி, நின்ற இடத்தில் நிற்காமல் மஹாராஷ்ட்ராவுக்குப் போய்ச்சேர்ந்தார்கள்.

ஸ்நேஹத்திலும் சிறந்த சாஸ்த்ரியார்

குட்டி சாஸ்த்ரிகள் அங்கே எத்தனையோ இடையூறுகளுக்கு ஈடு கொடுத்து, அப்புறம் பாஜிராவ் ஸ்ரீமந்தன் என்ற பேஷ்வாவின் ராஜாங்க ஸதஸில் வித்வானானார்.

Koviloor Digital Library

மஹாராஷ்ட்ராவில் முக்ய மந்த்ரிகளாக இருந்த பேஷ்வா என்பவர்களே ராஜாவைப் போன்ற ஆட்சியதிகாரம் பெற்றிருந்தார்கள். "ஸ்ரீமந்த" என்பது அவர்களுடைய "டைட்டில்."

பண்டிதர்களான கவிஞர்கள் முறை தவறி நடக்கிற அரசனை விட்டுவிடுவது போலவே, வித்வானாகவும் ரஸிகனாகவும் உள்ள அரசனோடு ஒட்டிக்கொண்டு உறவு வைத்துக் கொள்வார்கள். குட்டிகவி ஷாஹஜியைப் போற்றி ஆசு கவி செய்ததாகப் பார்த்தோமல்லவா?

இம்மாதிரி குட்டி சாஸ்த்ரியாரும் நல்ல விஷய ஞானமுள்ளவரான ஸ்ரீமந்தனைப் போற்றி, அவரிடம் நெருக்கமான அன்பு பாராட்டினர்.

அவர் காட்டிய தீரத்தைப் போலவே இந்த அன்பு விச்வாஸத்தையும் ச்லாகித்துச் சொல்லும்படியாக ஒன்று செய்தார்.

வெள்ளைக்காரர்கள் இங்கே சண்டை செய்தும், வேறே க்ருத்ரிமங்கள் செய்தும் நாடு பிடித்துக்கொண்டிருந்த காலம் அது. மஹாராஷ்டிரத்தின் சின்னச்சின்ன ராஜாக்களையும் ஸ்ரீமந்தன் ஒன்று திரட்டித் துணை சேர்த்துக்கொண்டு வெள்ளைக்காரப் படையெடுப்பை இரண்டுமுறை எதிர்த்தார். கடைசியில் 1818-ல் அவர் தோற்றுப்போகும்படி ஆயிற்று. அதோடு பேஷ்வா வம்சமே முடிந்து வெள்ளைக்காரர் ஆதிக்கம் ஏற்பட்டுவிட்டது.

தோற்றுப்போய் பேஷ்வா பதவியும் போனவுடன் ஜயித்தவர்கள் "ஸ்ரீமந்த" டைட்டிலையும் பிடுங்கிக்கொண்டு, தோற்றுப் போன எல்லா ஸ்வதேச ராஜாக்களுக்கும் "உப்புக்குச் சப்பாணி" என்று கொடுத்திருந்த "மஹாராஜ்" என்ற பெயரை பாஜிராவுக்கும் கொடுத்தார்கள். ரொம்பவும் பெரிய மனஸு பண்ணியதுபோல அவருக்கு ஒரு பென்ஷனைக் கொடுத்து, வடக்கே பஹு தூரத்துக்கு அந்தண்டை, கான்பூர் பக்கத்திலே உள்ள பிதுர் (Bithur) என்ற

Koviloor Digital Library

ஊருக்கு அனுப்பினுர்கள், ஜெயிலில் வைப்பதையே திரிசமனுக பெரிய பங்களாவில் வைக்கிறதுபோலக் காட்டி விட முடிவு பண்ணினுர்கள். ஜனஸமூஹத்தை விரோதித்துக் கொண்டால் கஷ்டம் என்பதற்காகவேதான் இப்படி, தோற்றுப் போனவர்களைக் கொல்லாமல், பென்ஷன் தருவது, ஊரை மட்டும் விட்டுக் கொண்டுபோய் பங்களாவில் வைப்பது என்றெல்லாம் கண்துடைப்பதை வெள்ளைக்காரர் கள் நிறையப் பண்ணியிருக்கிருர்கள்.

வெள்ளைக்காரர்கள் அவரைச் சிறைப் பிடித்துவிட்டார் கள், கான்பூர் பக்கத்தில் எங்கேயோ ஜெயில் மாதிரி கொண்டு போய் அடைத்து வைக்கப்போகிருர்கள் என்ற செய்தி குட்டி சாஸ்த்ரிகளுக்குத் தெரிந்தது.

உடனே ஓடினுர். கைதியாயிருந்த பாஜிராவோடு வெள்ளைக்கார அதிகாரிகள் புறப்படும் ஸமயம். "நீ நன்று யிருந்த காலத்தில் உன்னோடு வாழ்ந்தேன். இப்போது உன் கஷ்ட காலத்தில் உன்னைவிட்டுப் பிரியமாட்டேன். நானும் கான்பூர் வருவேன்" என்ருர்.

பாஜிராவ் எவ்வளவோ தடுத்துப்பார்த்தும் அவர் கேட்கவில்லை.

குட்டிசாஸ்த்ரியாரும் அவர்களோடேயே போனுர். வழி யெல்லாம் பிச்சை எடுத்துச் சாப்பிட்டுக் கொண்டே அத்தனும் தூரம் போனுர்.

கங்கைக்கரையில் பாஜிராவைக் காவல் வைத்திருந்த இடத்திலேயே தாமும் தங்கிவிட்டார். அத்தனை அன்பு, விச்வாஸம், நன்றி!

அப்புறம் ஒரு வருஷத்துக்குப் பிறகு காசிக்கு வந்தார்.

அந்த ஸமயம் சரபோஜியும் ஸரஸ்வதி மஹாலுக்காக நிறைய அபூர்வச் சுவடிகள் சேகரிப்பதற்காகக் காசிக்கு வந்திருந்தார், குட்டி சாஸ்த்ரியாரைப் பார்த்ததும், ஏதோ வேளைக் கோளாற்றினுல் ஆதியிலே தாம் அவரிடம் சொன்ன தற்கு ரொம்ப வருத்தம் தெரிவித்து, அவரைத் தஞ்சாவூருக்

Koviloor Digital Library

கும் திரும்பி வருமாறு கேட்டுக்கொண்டார். பாஜிராவும் தம்மோடு பிணைத்துக்கொண்டு சாஸ்த்ரிகள் கஷ்டப்படு வதைப் பொறுக்காமல் அவரை ஊருக்குத் திரும்பும்படி வற்புறுத்தினுர். முடிவில் சாஸ்த்ரியார் ஒப்புக்கொண் டார். ஊருக்குத் திரும்புவதற்கு முந்தி அப்போது காசி யிலே வாஸம் செய்துகொண்டிருந்த அஹோபில பண்டிதர் என்ற மஹா பண்டிதரிடம் வேதாந்த சாஸ்த்ர அப்யாஸம் பண்ணினுர்.

பிறகு, ஸொந்த ஊருக்கே புறப்பட்டார். பழைய ஸ்நேஹிதர்களைப் பார்க்க எண்ணி மஹாராஷ்ட்ரா வழி யாக வந்தார். அப்புறம் தமிழ் நாட்டுக்கு வருவதற்காக கர்நாடகத்தை 'டச்' பண்ணினபோது, அப்போது மைஸூர் மஹாராஜாவாயிருந்த ஒரு க்ருஷ்ண ராஜ உடையார் தம்முடைய ஆஸ்தானத்தை சாஸ்த்ரிகள் அலங்கரிக்க வேண்டுமென்று ரொம்பவும் கேட்டுக் கொண்டார். ப்ரியத்தினுலேயே நிர்பந்தப்படுத்தி அவரை அங்கேயே நிறுத்திக்கொண்டுவிட்டார்.

அதிலிருந்து சாஸ்த்ரிகளுக்கு மைஸூர் ராஜா யதேஷ்ட மாக ஸம்பாவனைகள் செய்துவந்தார்.

அப்படியிருந்தும் அவரிடமும்கூட சாஸ்த்ரிகள் தம் முடைய 'இன்டிபென்டென்ட்' மனப்பான்மையை ஒரு ஸமயம் நிலைநாட்டிக் காட்டினுர்.

மைஸூர் மன்னருக்கு மறுதலிப்பு

மைஸூரிலிருந்தபோதுதான் குட்டி சாஸ்த்ரி ஸோம யாகம் செய்து யஜ்வா ஆனது. இதையறிந்த உடையார், "வாஜபேய யாகம் செய்கிறவருக்கு ராஜாவே குடைபிடிக்க வேண்டுமென்று இருக்கிறது. எனக்கு அந்த பாக்யத்தைத் தருவதற்காகத் தாங்கள் ஒரு வாஜபேயம் பண்ணவேண்டும்" என்று கேட்டுக்கொண்டார்.

ஆனுல் குட்டி சாஸ்த்ரிகள், "பாச்சாத்யர்கள் (மேல் நாட்டினர்) கையில் மாட்டிக்கொண்டு காலம் இருக்கிற

Koviloor Digital Library

இருப்பில் முறை தப்பாமல் யாகம் பண்ணுவது மிகவும் ச்ரமமாயிருக்கிறது. ப்ராம்மண தர்மத்துக்கு நான் இழைத்திருக்கக்கூடிய தவறுகளை நிவ்ருத்தி செய்துகொள்வதற்காகவே வயிற்றில் நெருப்பைக் கட்டிக்கொண்டு இந்த ஒரு யாகம் பண்ணினேன். வாஜபேயம் பண்ணப்போய் என்ன அபசாரத்தைச் செய்யும்படி ஆகுமோ என்று பயப்படுகிறேன். ஸமூஹத்தில் இதைப் புரிஞ்சுக்கணும்'' என்று மறுத்துவிட்டார். மரியாதையாகவே ஆனாலும், தீர்மானமாக மறுத்துவிட்டார்.

ராஜாவின் வார்த்தைக்குக் கட்டுப்படவேண்டும் என்ற பயமும் அவருக்கில்லை; வெண்கொற்றக்குடை வேந்தனே தமக்குக் குடை பிடிக்கத் தாம் அவப்ருத ஸ்நானத்துக்கு பவனி செல்லலாமே என்ற ஆசை, சபலமும் இல்லை.

''நம் பந்து''

குட்டி சாஸ்த்ரிகள் நமக்கெல்லாம் பந்துவைப் போல. எப்படியென்றால் அவர், அவருடைய பிதா நரஸிம்ஹ சாஸ்த்ரி, பாட்டனார் மாதவ சாஸ்த்ரி ஆகிய எல்லோரும் நம் ஸ்ரீ மடத்து வித்வான்களாக இருந்திருப்பவர்கள் வாஜபேயத்தில் ராஜா பிடிக்கும் குடை வேண்டாமென்று சொன்ன அவர் தமது கொடையாக நம் மடத்துக்கு அனுப்பி வைத்த அலங்காரக் குடைகள் நிறைய உண்டு!

ஸ்வாதந்த்ரியம், ஸ்வய மரியாதை இவற்றோடு பிறர் மரியாதையைப் பேணுவது, பிறர் நலனைப் பேணுவது, அன்பு ஆகிய சிறந்த குணப்பண்புகளைக் கொண்ட கவிகளில் ''மஹா'' பட்டம் பெற்ற இரண்டு பேர் கதையும் ''குட்டி'' பட்டம் பெற்ற இரண்டு பேர் கதையும் கேட்டீர்கள். இன்னம் இப்படி அநேகம் பேர் உண்டு. த்யாகையர்வாள் சொன்னாற்போல, ''அந்தரிகி வந்தனமு''.

Koviloor Digital Library

கவிஞர், அறிஞரின் தற்பெருமை

அதுவும் ஓர் அழகு!

ஸ்வய மரியாதை என்பது சொஞ்சம் கவனக் குறைவாக இருந்துவிட்டால் தற்பெருமையாகி விடும். அப்படிப்பட்ட ஸமயங்களில் மற்றவர்களைத் தூக்கி எறிந்து ஆணவமாகவே கூடப் பேசிவிடுவதுண்டு. அதாவது மற்றவரின் ஸ்வய மரியாதையை பங்கப்படுத்துவதுண்டு. நல்ல கவிஞர்களாக, அறிந்தவர்களாக உள்ளவர்களும் இப்படி ஒவ்வொரு ஸந்தர்ப்பத்தில் பண்ணியிருக்கிறார்கள். காளிதாஸன், கம்பன் ஆகியவர்களைப் பற்றியே இம்மாதிரியான கதை களும் இருக்கின்றன. அதிலும் கதா ரஸம் இருப்பதால் சொல்கிறேன்.

இந்த விஷயங்களை 'deep'-ஆக எடுத்துக்கொண்டு அவர்களை எடை போட்டுவிடக்கூடாது. அவர்களுடைய உயர்ந்த குணங்களும் பண்புகளும் பெரிய 'ரிஸர்வாயர்' மாதிரித் தேங்கியிருந்ததென்றால், அதிலே மேல் பரப்பிலே எப்போதோ எழுந்திருந்து அப்புறம் அமுங்கிப் போய் விடுகிற அலைகள் மாதிரிதான் இவற்றை நினைக்கவேண்டும். இப்படி அலை கொஞ்சம் வீசுவதே ரிஸர்வாயருக்கு அழகு. நம்மிடம் தற்பெருமை அலையடித்தால் அது சொம்பு மாதிரி,

Koviloor Digital Library

டம்ளர் மாதிரி இருக்கிற ஜலத்தில் அலை அடிப்பதுபோன்ற விபரீதமாக ஆகும்!

தங்களுடைய மேதாவிலாஸத்தைக் 'கான்ஷஸாக'த் தெரிந்துகொண்டிருந்த கவிகளும் அறிஞர்களும் இப்படி மற்ற கவிகளையோ, பண்டிதர்களையோ, ஆதரவாளர்களான ப்ரபுக்களையோ அலக்ஷ்யமாகப் பேசி, பாடியிருப்பதாக அநேகத் துணுக்குகள் இருக்கின்றன.

ஸாதாரணமாக போட்டி, பொறாமை இருப்பது தப்புதான். ரொம்பத் தப்புதான். ஆனாலும் வித்யை வளர வேண்டுமானால் அதற்கு இதுவும் உதவி பண்ணுகிறது: ஸ்பர்தயா வர்ததே வித்யா என்பார்கள். ரன்னிங் ரேஸில் கலந்துகொண்டவன் போட்டி தப்பு என்று பின்னடி நின்று விட்டால் எப்படியிருக்கும்? ஒரு மாணவன் மற்றவர்கள் rank எடுக்கட்டுமென்று போட்டிபோடாமல் இருந்தால் ஸரியா?

பொறாமையில்லாமல் போட்டி இருப்பதுதான் உத்தமம். அதுதான் ஸரி. ஆனால் பெரியபண்டிதர்கள், கவிகள் விஷயத்தில் இந்தப் பொறாமைகூட மிஞ்சிப் போகாதபோது அவர்களுடைய குணசித்ரத்துக்கு ஒரு 'கான்ட்ராஸ்ட்' (வேறுபாட்டு ருசி) தருவதாகவே அழகு செய்கிறது. மிஞ்சிப் போகும்போது அவர்களுக்கும் ஒரு குட்டு விழுந்து பாடம் பெற்று அடங்கியும் போயிருக்கிறார்கள்.

காளிதாஸன் யாரை எடுத்தெறிந்து பேசினானென்றால், தன்னுடைய ஸஹ கவிகளையோ ராஜாவையோ அல்ல; அதற்கும் மேலே அம்பாளை, ஸாக்ஷாத் பராசக்தியையே அப்படிப் பேசிவிட்டான்!

அவளுடைய உச்சிஷ்ட தாம்பூலம்தான் அவனுக்குக் கவித்வ சக்தியே கொடுத்தது! "காளி-தாஸன்" என்பதாக அவளுடைய அடிமை என்றே பேர் வைத்துக் கொண்டிருந்தான். அம்பாள் ஸ்தோத்ரம் என்றவுடன் யாரும் கற்றுக்

Koviloor Digital Library

கொண்டு செல்லும் "ச்யாமளா தண்டகம்" அவன் வாக்கிலிருந்து வந்ததுதான்.

ஆனாலும் என்ன ஆயிற்று என்றால்:

தெய்வத் தீர்ப்பு கோருவது

கவிகளுக்குள்ளே ரொம்ப பொட்டி முற்றி, வாதத்தினாலே அவர்களில் எவருடைய ஸுபீரியாரிடியையும் நிச்சயிக்க முடியாமல் போனால், அப்போது ராஜா தெய்வத்தின் தீர்ப்புக்குத்தான் விஷயத்தை விட்டு விடுவான். எல்லாக் கவிகளையும் வித்வான்களையும் கோவிலுக்கு அழைத்துக்கொண்டு போவான். அங்கே பூ கட்டி வைத்து எடுத்துப் பார்ப்பார்கள். அல்லது போட்டிக் கவிகளின் கவிதைகளைக் கொண்ட சுவடிகளைத் தராசிலே நிறுத்துப் பார்ப்பார்கள். ஸாதாரணமாகப் பார்த்தால் அந்தச் சுவடிக் கட்டுகளில் எதில் ஜாஸ்தி கவிதைகள், அதாவது ஓலைகள் இருக்கிறதோ அதுதான் அதிக எடையாக இருக்கும். ஆனாலும் இப்படி தெய்வ ஸந்நிதானத்தில், தெய்வமே கதி என்று அவர்கள் அத்தனைப் பேரும் நம்பி, நாஸ்திக வாதமும் பரிஹாஸமுமில்லாமல் பூர்ணமாய் நம்பி, நிறுத்துப் பார்த்த போது, ஓலை 'வெய்ட்டி'யில் ரொம்ப லேசாயிருந்தால்கூட, எது கவிதையிலே உசந்த தரமானதோ அதை வைத்த தட்டுதான் கீழே இறங்கும். துளியூண்டு திருக்குறளை சங்கப் பலகையில் வைத்ததும் பாக்கி அத்தனை சங்கப் புலவர்களும் பொற்றாமரைக் குளத்தில் விழுந்துவிட்டார்களல்லவா? அந்த மாதிரி! ஞானஸம்பந்தர் கதையிலே வருவதுபோல அனல் வாதம், புனல் வாதம் என்று நடத்தியும் திவ்ய சக்திகளின் முடிவுக்குப் போட்டியை விடுவதுண்டு*. அல்லது எல்லாருமாக ஸந்நிதிக்குப் போய் அப்படியே மௌனமா ப்ரார்த்தித்து த்யானம் பண்ணுவார்கள்.

---

* முதற் பகுதியில், "முருகனின் தமிழ்நாட்டு அவதாரம்" எனும் உரை பார்க்க.

Koviloor Digital Library

அர்ச்சகரின் மேல் ஆவேசம் ஏற்பட்டு ஈச்வர சித்தம் தெரியும். அல்லது அசரீரி கேட்கும்.

காளிதாஸனும் அம்பிகையும்

காளிதாஸன், பவபூதி, தண்டி இந்த மூன்று பேரில் யார் உசத்தி, அவர்களை எப்படி rank பண்ணுவது என்று வாதப் பரீக்ஷைகள் மூலம் முடிவுகட்ட முடியவில்லை. அதனால் போஜன் எல்லாரையும் அம்பாள் ஸந்நிதானத்துக்கு அழைத்துக்கொண்டு போனான்.

அம்பாள் அசரீரியாக முடிவு சொன்னாள்.

"கவிர் - தண்டி கவிர் - தண்டி
பவபூதிஸ்து பண்டித :|"

"தண்டியைக் கவி என்று சொல்லவேண்டும். ஒரு தரத்துக்கு இரண்டு தரமாக நிச்சயப்படுத்தி அப்படிச் சொல்லலாம். பவபூதியோ என்றால் பண்டிதர் என்க வேண்டும்" - என்று அர்த்தம் கொடுக்கும்படியாகச் சொன்னாள்.

பாண்டித்யம் அதிகமென்றால் அநேக விஷயங்களைப் பற்றிய அறிவு, பாஷையின் இலக்கணத்தில் நல்ல ஞானம் இருப்பது என்று அர்த்தம். ஆனால் இலக்கணம் வேறே, இலக்கியம் வேறே! கவிக்கு ரொம்பவும் விஷயம் தெரிந்து, பாஷா சாஸ்த்ர ஞானம் நிறைய இருக்கணுமென்ற அவச்யமில்லை. ஹ்ருதயத்தாலே எதிலோ, ஒன்றிலே, சின்ன விஷயமானாலும் அதிலே, அப்படியே ஊறி ரஸத்தை அநுபவித்து, அதைப் பெரிய grammar இல்லாவிட்டாலும் மதுரமான லளிதமான வாக்கிலே மற்றவர் ஹ்ருதயத்திலும் புகும் விதத்தில் நயமாக நகாஸ் செய்து சொல்கிறவன்தான் கவி. பாண்டித்யம் கவித்வம் இரண்டும் ஸமமாகச் சேர்ந்திருந்தால் விசேஷம். ஆனாலும் அவை பொதுவாகக் 'கவி' என்கப் பட்டவர்களில் வெவ்வேறு 'ப்ரபோர்ஷனி'ல் (விகிதத்தில்)

Koviloor Digital Library

தான் சேர்ந்திருப்பதைப் பார்க்கிறோம். சிலதைத்தான் poetic என்னும்படியாகவும், சிலதை scholarly என்னும்படியாகவும் இருக்கிறது.

இதிலேதான் தண்டியிடம் பாண்டித்யத்தைவிடக் கவிதாரஸம் அதிகம் என்றும், பவபூதியிடம் கவிதா ரஸத்தைவிட அறிவின் கனம் அதிகம் என்றும் பொருள் ஏற்படும்படியாக அம்பாள் ரத்னச் சுருக்கமாகத் தீர்ப்புக் கொடுத்தாள். காளிதாஸனைப் பற்றி இதில் எதுவும் இல்லை.

'அப்படியானுல், தன்னை அவள் கவிஞன் என்றும் வைக்காமல், அறிஞன் என்றும் வைக்காமல் அடியோடு கழித்துக் கட்டிவிட்டாளா?' என்று அவனுக்குப் பொத்துக் கொண்டு வந்துவிட்டது.

அப்போதுதான், கவித்வ சக்தியான சிந்தனைக்கும் வாக்குக்குமே எவள்தான் மூலமோ, எவளால்தான் காளிதாஸன் ஆளானதோ அவளையே தூக்கி எறிந்து ஒரு வார்த்தை சொல்லிவிட்டான். நம்மைத் தூக்கிவாரிப் போடுகிறமாதிரி வார்த்தை சொல்லிவிட்டான்.

"அப்படின்னு நான் யார்டீ.......?" என்று திட்டி ஒரு வார்த்தை போட்டுவிட்டான். "கோ (அ)ஹம்......;" என்று ஸம்ஸ்க்ருதத்திலே கோபமாகக் கேட்டுவிட்டான்.

அவன் அவஸரப்பட்டுவிட்டான்! தண்டியையும், பவபூதியையும் பற்றிச் சொன்னதோடு அம்பாளுடைய 'ஜட்ஜ்மென்ட்' முடிந்துவிடவில்லை. அதைத் தொடர்ந்து காளிதாஸனைப் பற்றியும் அவள் சொல்வதற்குத்தான் இருந்தாள். ஆனுல் ஒருத்தர் கவிஞர், இன்னொருத்தர் அறிஞர் என்று அவள் சொன்னவிட்டு, இனிமேலே சொல்ல எதுவுமில்லை என்று காளிதாஸன் அவஸரப்பட்டுவிட்டான். பரதேவதையை துச்சமாக வார்த்தை சொல்லிவிட்டான். அதற்காக அவள் கோபம் கொள்ளவேயில்லை,

Koviloor Digital Library

நம் குழந்தையை நாம் ஏதோ அலக்ஷ்யப் படுத்திவிடுகிறோம்; ரொம்பவும் கார்யமாயிருந்ததில், அது சொல்ல வந்ததைக் காதில் போட்டுக் கொள்ளாமலிருந்து விடுகிறோம். அதனாலே அது கோபித்துக்கொண்டுபோய் உம்மென்று உட்கார்ந்துவிடுகிறது. அந்தக் குழந்தைக்காக அடுப்பிலே பக்ஷணம் பண்ணிக்கொண்டிருந்ததால்தான் நாம் அது சொல்ல வந்ததை கவனிக்காதது. பக்ஷணம் பண்ணியானதும் எடுத்துக்கொண்டுபோய், "உர்உர்" என்று உட்கார்ந்திருக்கிற குழந்தைக்குக் கொடுக்கிறோம். "வேண்டாம், போ!" என்று வாரி நம் மூஞ்சியிலேயே அடிக்கிறது. அதனிடம் நமக்குக் கோபமா வருகிறது? "ராஜாப் பயலே! உனக்கு இத்தனை ரோஷமா? உன்னைக் கவனிக்காத இந்த அசட்டு அம்மாவை நன்னா அடி!" என்று குனிந்து காட்டத் தானே தோன்றுகிறது?

அம்பாளுக்கும் அவளுடைய குழந்தையானகாளிதாஸன் சீறியதில் கோபமே வரவில்லை; பெருமைதான் பட்டாள்!

"நான் யாருடீ?......" என்று அவன் கேட்டதற்கு பதிலாக,

"த்வமேவாஹம், த்வமேவாஹம்,
த்வமேவாஹம் ந ஸம்சய:"

என்றாள்.

"நீ நானேதான், நீ நானே தான், நீ நானேதான். இதில் ஸந்தேஹமேயில்லை" என்று ஒருதரத்துக்கு மூன்று தரமாக ஸந்தேஹத்துக்கிடமில்லாமல் சொல்லிவிட்டாள்.

"நீ நானேதான்", அல்லது, "நீயேதான் நான்" என்று சொல்லவேண்டும். (த்வம் ஏவ-நீயேதான்; அஹம்- நான்.)

குறுக்கே சீறிக்கொண்டு இவன் கேட்டிருக்காவிட்டால் அவளாக என்ன சொல்லியிருப்பாளோ? 'ஒரு கவி நிஜமான கவி, இன்னொரு கவி அறிஞர்' என்று சொன்ன அப்புறம்,

Koviloor Digital Library

'இவன் (காளிதாஸன்) இரண்டும் பூர்ணமாகச் சேர்ந்த பண்டித கவி' என்கிற மாதிரி ஏதாவது 'ட்ரிப்யூட்' (பாராட்டு) கொடுப்பதோடு நிறுத்திக்கொண்டிருப்பாளோ என்னவோ? அவன் கோபத்தில் இடை மறித்ததாலேயே, அவனைத் "தானே" என்று உச்சிக் கோடிக்கு உசத்திச் சொல்லிவிட்டாள்!

பண்டிதர்களுடைய அறிவெல்லாம் அடங்கிய ஞானம் அவள்தான். ஜ்ஞாநதா, ஜ்ஞாநவிக்ரஹா (ஞானமளிப்பவள், ஞானவடிவினள்) என்று ஸஹஸ்ர நாமத்தில் சொல்லியிருக்கிறது. கவிதா ரஸத்துக்கும் அவள்தான் மூலம். தைத்திரீயத்தில்* பரமாத்ம தத்வமாகச் சொன்ன ரஸம் அவள்தான். ரஸஜ்ஞா, ரஸசேவதி : அதாவது, ரஸமறிந்த ரஸிகை, ரஸம் நிரம்பிய களஞ்சியம்—என்று ஸஹஸ்ரநாமம் சொல்கிறது. இப்படி இரண்டும் சேர்ந்திருப்பதில் தனக்கு ஸமம், தானேகூட, யாரென்றால் காளிதாஸன்தான் என்றாளாம்!

'தான் இப்படிப் பாராட்டிச் சொன்னதில், ஏதோ ஒரு ஸமயம் தற்பெருமை என்றில்லாமல் எப்போது பார்த்தாலும் மண்டைக்கனம் பிடித்தவனாகக் காளிதாஸன் ஆகிவிட்டால் என்ன பண்ணுவது? அப்படி ஆகிவிடக் கூடாது' என்பதால் இன்னொரு ஸந்தர்பத்திலே அம்பாள் அவனை ஒரு இறக்கு இறக்கவும் செய்தாள்.

இப்போது பவபூதிக்கும் காளிதாஸனுக்கும் மட்டும்தான் போட்டி. இந்த ஸமயம் தராசிலே இரண்டு பேர் கவிதையையும் எதிரெதிர்த் தட்டுக்களில் வைத்து அம்பாள் ஆலயத்தில் எடைபோட்டுப் பார்க்கத் தீர்மானமாயிற்று. ஏதோ ஒரு விஷயமாக போஜன் இரண்டு பேரையும் கவி பண்ணச் சொன்னதில்தான் எது உசத்தி என்று அவனாலும் ஸதஸாலும் சீர்தூக்கிச் சொல்லத் தெரியாமல் அம்பாள் சித்தத்துக்கு விட்டது. போஜனே ஒரே அளவான

* 2-7.

Koviloor Digital Library

ஓலை நறுக்குகளில் இரண்டுபேர் கவிதையையும் எழுதி எதிரெதிர்த் தட்டுக்களில் வைத்தான்.

அம்பாள் தர்ம ந்யாயமாகக் கவிதைகளின் தரத்தில் சித்தத்தைச் செலுத்தியதில் பவபூதியின் தட்டு மேலாகவும், காளிதாஸனுடையது கீழாகவும் போக ஆரம்பித்தது. அதாவது காளிதாஸனுக்கே வெற்றி சேர இருந்தது.

உடனே அம்பாள், கவிதைகளை மட்டும் ந்யாயமாகச் சீர்தூக்கிக் காட்டிவிட்டால், கவிகளை அந்யாயமாகச் சீர்கெட்டுப்போகப் பண்ணுவதாகிவிடுமென்று நினைத்தாள். 'இப்போதும் காளிதாஸனே ஜயித்தால் அப்புறம் ரொம்பவும் மண்டைக்கனம் ஏறி வீணாய்விடுவான். அதேபோல, ரொம்பவும் 'சரக்கு' உள்ள பவபூதியும் ஏற்கெனவே கொஞ்சம் மறைமுக இறக்கலாக 'பண்டித'ப் பேர் வாங்கினது போதாதென்று, இப்போது நேராகக் காளிதாஸனுக்குத் தோற்றுப் போனால் மனஸ் உடைந்து சீர்குலையும்படி ஆகும். இரண்டு குழந்தைகளையுமே இப்படி ஆக விடப்படாது' என்று நினைத்தாள். க்ஷணகாலம்தான். அல்லது அதைவிடவுங்கூட குறைவு. அம்பாளானதால் அதற்குள் இப்படி நினைத்து, தராசுத் தட்டுகள் ஏறி இறங்குவதை மாற்றுவதற்கும் அந்த க்ஷணத்துக்குள்ளேயே ஒரு வழியை நிச்சயம் செய்துகொண்டாள்.

அழகுக்கு அழகு செய்பவளான பரதேவதை ஸர்வாலங்கார பூஷிதையாக இருப்பவள். அவள் தலையில் கேசத்தில் பின்னலின் உச்சியில் புஷ்பம் வைத்துக்கொண்டிருப்பது மட்டுமில்லை; காதின் மேலேயும் ஒரு புஷ்பத்தைச் சொருகிக்கொண்டிருப்பாள். (லலிதா)ஸஹஸ்ரநாம வர்ணனையில் இப்படி இருக்கிறது: கேசத்தில் சம்பகம், அசோகம், புன்னாகம், ஸௌகந்திகம் ஆகிய புஷ்பங்களைச் சூட்டிக்கொண்டிருப்பவள் என்று முதலில் வருகிறது: சம்பகாசோக-புந்நாக - ஸௌகந்திக - லஸத் - கசா. அப்புறம் ரொம்பவும் மனஸைக் கொள்ளை கொள்ளும் விதத்தில் செவிப்பூவாகக் கதம்ப புஷ்பக் கொத்தை வைத்துக் கொண்டிருக்கிறவள்

Koviloor Digital Library

என்று வருகிறது: கதம்ப - மஞ்ஜரீ - க்லுப்த - கர்ணபூர - மனோஹரா.

நம் கதை நடந்தபோது இம் மாதிரி கல்ஹாரம் என்ற குவளை மலரை அம்பாள் காதின்மேல் அணிந்துகொண்டிருந் தாள்.

பவபூதியின் தட்டு மேலே கிளம்பியபோது, அந்தக் காதுப் பூவை ஸரிசெய்து கொள்கிறதுபோல் விரலாலே மெதுவாக அழுத்திக்கொண்டாள். அப்படிப் பண்ணுவதி லேயே ஸாமர்த்யமாக அந்தப் புஷ்பத்திலிருந்த தேன் சொட்டைச் சுண்டிவிட்டு அது போய் நேரே பவபூதியுடைய ஏட்டின் மேலே விழும்படிச் செய்துவிட்டாள்!

கவிதா "ரஸம்" என்று தேனை நினைத்துத்தான் சொல் கிறோம். மதுர ஸ்வரூபிணியான அம்பாளுடைய செவிப் பூவின் தேன்சொட்டு விழுந்த கனத்தில், பவபூதியுடைய கவிதையில் குறைந்த ரஸம் 'மேக் - அப்' ஆகிவிட்டது. சட்டென்று அவனுடைய கவிதை (தட்டு) கீழே இறங்கி, காளிதாஸன் கவிதை உயரே போயிற்று. கவிஞர்களை எடுத்துக்கொண்டாலோ இதற்கு நேர்மாறாக பவபூதிக்கு உயர்வு கிடைத்தது; காளிதாஸனை ஒரு இறக்கு இறக்கின தாக ஆயிற்று!

ஆனால் உடனேயே காளிதாஸனுக்கு அம்பாள் செய்த 'ட்ரிக்' புரிந்துவிட்டது. எப்படிப் புரிந்தது என்றால் அவளே, "நானேதான் நீ!" என்று சொல்லியிருந்தாளோ,இல்லையோ? அவள் வாக்கு பொய்க்குமா? அவளாகவே இருந்து அவளுடைய கார்யத்தைப் புரிந்துகொண்டுவிட்டான்!

உடனே இதை ஆசுகவிதையாகப் பாடியும்விட்டான்.

ஆனால் முன்னே அவஸரப்பட்டுத் திட்டினானே, அப்படி திட்டியா பாடினான்? இல்லை. உண்மையில் ஸுபீரியராக இருந்த அவனுடைய கவிதையை அவள் மட்டப்படுத்தின தற்காக அவன் திட்டியிருந்தால்கூடத் தப்பு என்று சொல்ல முடியாது. ஆனால் இப்போது திட்டாமல், கொஞ்சம்கூடக்

Koviloor Digital Library

கோபப்படாமல், ''அஹோ மே ஸெளபாக்யம்'', "ஆஹா, என்னுடைய பரம பாக்யத்தை என்ன சொல்ல!'' என்றே ஆரம்பித்து, அம்பாளுடைய காதணியான கல்ஹாரத்தின் தேனுல் அவள் பவபூதியின் கவிதைக்கு கனம் கொடுத்ததைப் பாடினுன்!*

நல்லறிவு உதித்ததாலேயே (அதுவும் அவள் க்ருபைதான்) மனஸ் மாறி இப்படிப் பாடினுன். "நீயும் நானும் ஒன்று'' என்றவள் இப்போது பக்ஷபாதமாகப் பண்ணினுளென்ருல் ஏன்? அவளேத் தவிரத் தான் வேறில்லை என்று இல்லாமல் தனக்கு அஹங்காரம் தலை தூக்குகிறதே, அந்த கனத்தை இறக்கத்தான் பவபூதியின் பாடலுக்கு கனம் தந்தாள் என்று புரிந்துகொண்டான். அதனுலேயே இதைத் தன் பாக்யமாய் நினைத்துப் பாடினுன்.

"அப்படியா விஷயம்?'' என்று உடனே பவபூதி காளிதாஸனுக்கு நமஸ்காரம் செய்ய, காளிதாஸன் போஜனிடம் சொல்லி பவபூதிக்கு நூறு மத்த கஜங்களை ஸம்பாவனை செய்யச் செய்தானும்!

போட்டியும் பொருமையுமாய் இருந்த இரண்டு மஹா கவிகள் இப்படி ஒற்றுமையானதைத் தெரிந்துகொள்ள நம் மனஸுக்கு மிகவும் ஸந்தோஷமாயிருக்கிறது.

அப்புறம் காளிதாஸனுக்கு நல்ல அடக்கமுண்டாயிற்று. அவையடக்கமாக அவன் செய்துள்ள ச்லோகங்களைப் பார்த்தால் தெரியும். உதாரணமாக, "ரகுவம்ச''த்தின் ஆரம்பத்தில் இப்படி ஒரு காவ்ய முயற்சியில் தான் இறங்கியிருப்பது ஏதோ ஒரு சின்னப் படகைக் கொண்டு கடக்கமுடியாத ஸமுத்ரத்தைக் கடக்கப் புறப்படுவது போலத்தான்; ரகுவம்ச திலகனின் கதையை எழுதிய வால்மீகி போன்ற உயர்ந்த கவிகளே ஸாதிக்கக்கூடிய இந்தக் கார்யத்தில் தான் முயற்சி

---

* அஹோ மே ஸெளபாக்கியம் மம ச பவபூதேச்ச பணிதம்
தடாயாம் ஆரோப்ய ப்ரதிபலதி தஸ்யாம் லகிமநி ।
கிராம் தேவீ ஸத்ய : ச்ருதி-கலித-கல்ஹார-கலிகா-
மாதூலீ-மாதுர்யம் க்ஷிபதி பரிபூர்த்யை பகவதீ ॥

Koviloor Digital Library

பண்ணுவது நல்ல நெட்டையானவனே பறிக்கக்கூடிய பழத்துக்கு ஒரு குள்ளன் கை நீட்டிப் பார்ப்பது போலத் தான் என்று விநயமாகச் சொல்கிறான்.

கம்பரும் அவ்வையும்

கம்பருக்கும் இப்படிக் கொஞ்சம் "தான்" ஜாஸ்தியான போது, தமிழ் நாட்டைப் பொருத்தமட்டில் ஸரஸ்வதி அவதாரம் எனத்தக்க அவ்வை அவருடைய "தானை" இறக்கினதாகக் கேள்விப்பட்டிருப்பீர்கள்.

தண்டுக்கு நன்னாலு இலையாக முளைக்கிற ஆரைக் கீரையைக் கம்பர் பார்த்தாராம். அதன் பேரைச் சொல்லாமல் புதிர் போட்டு அவ்வை கண்டு பிடிக்கிறாளா என்று பார்க்க நினைத்தாராம். "ஒரு காலில் நாலிலைப் பந்தலடீ" என்று அவளை "அடீ" போட்டுச் சொல்லி விட்டாராம். தனக்கு அவர் டெஸ்ட் வைத்ததே தப்பு, அதிலும் "அடீ" போட்டது மஹா தப்பு என்று அந்தப் பாட்டிக்குக் கோபமான கோபம் வந்து, "எட்டேகா லட்சணமே!" என்று ஆரம்பித்து கம்பருக்கு ஒரே "அர்ச்சனை"யாய்ப்பண்ணி "ஆரை அடா சொன்னாய் அது?" என்று முடித்தாளாம். "அடீ என்று ஆரை அடா சொன்னாய்?" என்று பதிலுக்கு 'டா' போட்டுப் பழி வாங்கினது மட்டுமல்லாமல், ஆரைக் கீரையையும் தான் புரிந்து கொண்டதை "ஆரை, அதாவது, யாரை அடா" என்று கேட்டதன் மூலம் தெரிவித்து விட்டாளாம்! இப்படிக் கதை.

"எட்டே கால் லக்ஷணம்" என்ன, எப்படி? தெரியுமோல்லியோ?[2]

அப்புறம் அந்தக் கம்பர் எத்தனை அடக்கமாக ஆனார் என்பதற்கு அவருடைய ராமாயணத்தைப் பார்த்தால்

---

1. முதல் ஸர்கம் - ச்லோகம் 2,3.
2. 'அ' என்பது எட்டுக்கும், 'வ' என்பது காலுக்கும் இலக்கமாகும் எனவே 'எட்டேகால்' என்பது 'அவ'. "அவலக்ஷணமே!" என்பதையே அவ்வை 'எட்டேகா லக்ஷணமே!' எனக் குறிப்பிட்டாள்.

Koviloor Digital Library

போதும். ராமர் உள்பட அவர் அவதரித்த ரகு வம்சத்தின் கதையைத் தான் பாட முயல்வது பெரிய ஸமுத்ரத்திலே குட்டிப் படகை இறக்குகிறது போல என்று காளிதாஸன் சொன்னுனென்ருல், கம்பரோ ராம சரித்ரத்தைத் தாம் பாட நினைப்பது க்ஷீரஸாகரத்தை ஒரு பூனை நக்கி நக்கிக் குடித்தே தீர்த்துவிட நினைப்பதுபோலத்தான் என்று சொல்லியிருக்கிருர்.* அவ்வளவு அடக்கம் வந்துவிட்டது!

ஸரி, அந்த அவ்வையாருக்கும் "தான்" முற்றிவிடப் படாதே! அதை இறக்கின கதையும் கேட்டிருப்பீர்கள்.

ஸுப்ரஹ்மண்ய ஸ்வாமிதான் அப்படி இறக்கியவர். அவள் போகிற வழியில் மாட்டுக்காரப் பையனுக வந்து ஒரு நாவல் மரத்தின் மேலே உட்கார்ந்து கொண்டிருந்தார் முருகன். "பாட்டீ! சுட்ட பழம் வேணுமா? சுடாத பழம் வேணுமா? எதைப் பறிச்சுப் போடட்டும்? என்று கேட்டார்.

மஹாமேதையான அவ்வைக்கே பழம் எப்படிச் சுடு மென்று புரியவில்லை. இருந்தாலும் சூடாக இருக்கிற பழத்தைக் கேட்பானேன் என்று சுடாத பழம் கேட்டாள்.

ஸுப்ரஹ்மண்யர் நன்ருகக் கனிந்த பழமாய்ப் பார்த்துப் பறித்துப் போட்டார்.

உள்ளே கொஞ்சம் 'கொள கொள' ஆகியிருந்ததால் அது பூமியிலே நன்ருய்ப் பதிந்து மண் ஒட்டிக்கொண்டது.

அவ்வை மண்போக அதை ஊதினுள்.

ஸ்வாமி கலகலவென்று சிரித்து, "பாட்டீ! பழம் சுடற தால்தானே ஊதறே?" என்று கேட்டார்.

அவ்வைக்கு ஆச்சர்யமாகவும் வெட்கமாகவும் ஆகி விட்டது. 'ஆனைப்பட்ட கம்பர் மாதிரியானவர்களை ஒரு கை பார்த்த நாம் ஒரு மாட்டுக்காரப் பையனிடமல்லவா

* கம்பராமாயணம் : பாயிரம், நான்காம் பாடல்

Koviloor Digital Library

தோற்றுப் போய்விட்டோம்? நல்ல வஜ்ரம் பாய்ந்த கருங்காலி மரத்தைக்கூட ஒரே போடாகப் போட்ட கோடாலி ஒரு வாழை மரத்தை வெட்டமுடியாமல் ஆனமாதிரி அல்லவா இருக்கிறது!

'கருங்காலிக் கட்டைக்கு நாணுக்கோ டாலி
இருங்கதலித் தண்டுக்கு நாணும்'

என்று நினைத்து அதிலிருந்தே பாடம் பெற்று, இனிமேலே அடங்கியிருக்கவேண்டுமென்று தீர்மானித்தாள். கனியாத தன்னைக் கனிவித்துக் கொள்ளவே இது பாடமென்று எடுத்துக்கொண்டாள்.

உடனேயே ஸுப்ரஹ்மண்யர் நிஜமான ரூபத்தை எடுத்துக்கொண்டு அவளுக்கு நிரம்ப அநுக்ரஹம் செய்து, எதெது கொடியது, எதெது இனியது, எதெது பெரியது, எதெது அரியது என்று ஒவ்வொன்றைப் பற்றியும் அவளைப் பாடவைத்துக் கேட்டுப் பாராட்டினார்.

வில்லிப்புத்தூராரும் அருணகிரிநாதரும்

கவிதைப் புலமைச் செருக்கில் ரொம்பவும் உக்ரமாகப் போனதை வில்லிப்புத்தூரார் கதையில் கேள்விப்படுகிறோம். புலவர்களையெல்லாம் வாதுக்குக் கூப்பிட்டு, அதிலே தோற்றுப் போனவர்களின் காதையே அவர் மிகவும் க்ரூரமாக அறுப்பது வழக்கம் என்று சொல்கிறார்கள். அருணகிரிநாதர்தான் அவரைக் 'கந்தரந்தாதி' பாடி ஜயித்தார். ஜயித்ததற்காக, அவர் மற்றவர்களைப் பண்ணின மாதிரி இவர் அவரைப் பண்ணாமல், அவருக்கு அடக்கம் வரும்படியாகவே உபதேசம் பண்ணி, விட்டுவிட்டார். அதனால்தான் "கருணைக்கு அருணகிரி" என்று சொல்வது.

நீலகண்டரும் மஹாதேவரும்*

நீலகண்ட தீக்ஷிதர் பல விதத்தில் பெரியவர். குடிப் பெருமையை எடுத்துக்கொண்டால் பரமேச்வரனின் அம்ச

---

* இப்பகுதியில் "குருகுலம்; கடிகாஸ்தானம்" என்ற உரையில் "அரைகுறை ஞானத்துக்கே ஆதரவு" என்ற பிரிவில் குறிப்பிடப்பட்டதன் விரிவு.

Koviloor Digital Library

பூதரான அப்பைய தீக்ஷிதரின் தம்பிக்குப் பேரர். படிப்பு, அநுஷ்டானம் எல்லாவற்றிலும் சிறந்தவர். மஹாவித்வான். நல்ல பக்தர். பதவியிலும் பெரியவர். மஹால், மஹால் என்று மதுரையிலே சொல்கிற மஹாலையும், மீநாக்ஷி கோயில் புது மண்டபத்தையும் கட்டிய திருமலை நாயகருக்கு மந்த்ரியாக, அவருக்கு வலது கை மாதிரி விளங்கியவர். குணஸம்பத்தும் நிரம்பப் பெற்றவர். இப்படிப்பட்டவரும் ஒரு ஸமயம் தன் ஸ்தானம், யோக்யதை, குலம் முதலியவற்றினாலே உயர்வு மனப்பான்மை அடைந்துவிட்டதாக இருக்கிறது.

தீக்ஷிதரின் காலத்தில்—அதாவது 16-ம் நூற்றாண்டின் பின்பாதி, 17-ம் நூற்றாண்டின் முன் பாதியில்—தஞ்சாவூர் ஜில்லா பழமார்நேரி க்ராமத்தில் மஹாதேவ சாஸ்த்ரி என்ற மஹா பண்டிதர் இருந்தார். பாண்டித்யம் குறைவில்லாமலிருந்தும் தீக்ஷிதரைப் போல இவருக்கு எல்லா ஜனங்களிடையேயும் ப்ரக்யாதி இல்லை. பண்டிதருலகுக்கு இவருடைய பெருமை தெரியும்.

பழமார்நேரிக்குப் பக்கத்தில் ஐராவதேச்வரர் கோயில் இருக்கிறது. அங்கே அலங்காரேச்வரி என்று அம்பாள் இருக்கிறாள். அந்த அம்பாளைத்தான் மஹாதேவ சாஸ்த்ரி நல்ல பக்தியோடு வழிபட்டுக் கொண்டிருந்தார். ப்ரார்த்தனை அப்யாஸத்தில் அவர் நன்றாக ஊறிப் போய் நாளாவட்டத்தில் அவருக்கு அலங்காரேச்வரியின் உத்தரவுகள் கிடைக்க ஆரம்பித்தன.

புத்ர ஸந்ததி இல்லை என்ற குறை அவருக்கு இருந்தது. இதற்காக ப்ரார்த்தித்தபோது மதுரைக்குப் போய் அங்கே பராசக்தியின் பரிபூர்ண சைதன்ய விலாஸத்தோடு விளங்கும் மீநாக்ஷியம்மனை ஆராதனை செய்யும்படி அவருக்கு உத்தரவாயிற்று.

அப்படியே மதுரைக்குப் போனார். மீநாம்பிகையைப் பார்த்ததும் அவளிடம் ஆழ ஈடுபட்டு ஆராதித்துவர ஆரம்பித்துவிட்டார்.

Koviloor Digital Library

தீக்ஷிதர் ஏற்கெனவே அவரைப் பற்றிக் கேள்விப்பட்டிருந்தார். இப்போது அவர் மதுரை வந்திருப்பது தெரிந்தது. அவரை ஸந்திப்பதற்கு ஆசைப்பட்டார். ஆனாலும்...

மஹாபெரியவர்களானாலும் பதவி, ஸ்தானம் என்பவை எவரையும் எப்போதேனுமாவது கொஞ்சம் "அசக்கி" விடும். ஆனதால் தீக்ஷிதருக்கு, மந்த்ரி பதவியிலிருந்த தாம் தம்முடைய அந்தஸ்துக்குக் குறைவில்லாமலே சாஸ்த்ரிகளைப் பார்க்கணுமென்ற எண்ணம் ஏற்பட்டது. மஹாதேவ சாஸ்த்ரிகளே பேட்டிக்குக் கேட்டு அனுப்புவாரா என்று எதிர்பார்த்துக் கொண்டிருந்தார். ஆனால் சாஸ்த்ரிகளுக்கா, மீநாக்ஷியை தர்சனம் பண்ணினதிலிருந்து அவளுடைய ஆராதனையைத் தவிர எந்தச் சிந்தனையுமில்லை. 'அவாளைப் பார்ப்போமா, இவளைப் பார்ப்போமா?' என்ற ஆசை கொஞ்சமுமில்லை.

எல்லாம் அறிந்த அம்பாளே—அவள் ஸகல வித்யா ஸ்வரூபிணியானதால்—இந்த இரண்டு மஹாவித்வத்-குழந்தைகளும் ஸந்திப்பதற்கு ஸங்கல்பம் பண்ணினாள். இதனால், வித்வத்தோடு விநயமும் இருந்தாலே ஒருவருக்கு அழகு என்று தீக்ஷிதரும், அவர் மூலமாக லோகமும் தெரிந்துகொள்ளப் பண்ணணுமென்று நினைத்து, ஸம்பவங்களை உருவாக்கினாள்.

ஒருநாள் வீதியிலே தீக்ஷிதர் மந்த்ரி ஜபர்தஸ்துக்குரிய மரியாதைகளோடு பல்லக்கில் போய்க்கொண்டிருந்தார்.

மஹாதேவ சாஸ்த்ரிகள் பாட்டுக்கு அதே ஸமயத்தில் அம்பாளை தர்சனம் பண்ணிவிட்டு, அவளுடைய சரணாரவிந்தத்தை த்யானம் செய்தபடி அந்த வழியாகத் தம்முடைய ஜாகைக்குத் திரும்பிக்கொண்டிருந்தார். பல்லக்கை அவர் கவனிக்கவில்லை.

வீதியிலே அத்தனைபேரும் மந்த்ரியை மரியாதை பண்ணிக்கொண்டிருக்கும்போது, அசட்டுப் பிச்சு மாதிரி இப்படி ஒரு ப்ராம்மணன் அலக்ஷ்யமாகக் குறுக்கே

Koviloor Digital Library

போவதைப் பார்த்தார் தீக்ஷிதர். 'அசட்டுப் பிச்சு மாதிரி இருந்துகொண்டு இத்தனை அஹங்காரம் வேறேயா?' என்று தப்பாக நினைத்துவிட்டார்.

அதனால் அதட்டலாக, தம்முடைய பரிவார ஜனங்களைப் பார்த்து, "தொங்கல் காதோடு குறுக்கே வரும் இந்தப் பேர்வழி யார்? இவருக்கு 'அர்த்த சந்த்ர' உபசாரம் பண்ணி அனுப்பி வையுங்கள்" என்றார்.

மஹா பாண்டித்யமும், ரஸஞானமுமுள்ளவரானதால் கோபத்தில் உத்தரவு போடும்போதுகூடச் சமத்கார பாஷையில் "அர்த்த சந்த்ர உபசாரம்" என்று சொன்னார். "கல்தா" கொடுப்பதுதான் அர்த்த சந்த்ர உபசாரம் என்பது! கல்தா கொடுக்கிறபோது கையை அர்த்தசந்த்ரனைப் போல அரை வட்டமாக வைத்துக்கொண்டுதானே ஒருத்தர் கழுத்தைப் பிடித்துத் தள்ளுவது? அதனால் இப்படிப் பெயர்!

ஆயாந்த-மத்வந்-யதி-தீர்க-கர்ணம் புதம் மஹாதேவ ஸுநாமதேயம் |
விலோக்ய மந்த்ரீ மகி ஸார்வ பௌம: ஸ்ரீநீலகண்ட: சிபிகாதிரூட: ||
நிஷ்காஸயைநம் த்வதி-தீர்க-கர்ணம் க்ருத்வார்த-சந்த்ரம் த்ருதமித்யுவாச |
சாஸ்த்ரீ ததாகர்ண்ய ஜரித்-யுவாச தம் தீக்ஷிதம் ஞாந-லாவட்ய மூடம் ||

அத்வநி - வழியில்; அதி தீர்க கர்ணம் - தீர்க்கமான தொங்கல் காதுடன்; ஆயாந்தம் - வருகிற; புதம் - அறிவாளியான; மஹாதேவ ஸுநாமதேயம் - மஹாதேவ சாஸ்த்ரி என்ற நல்ல பெயருள்ளவரை: மகி ஸார்வபௌம:- தீக்ஷிதேந்த்ரரும்; மந்த்ரீ - மந்த்ரியும்; சிபிகாதிரூட :- சிவிகையில் வீற்றிருந்தவருமான; ஸ்ரீநீலகண்ட; ஸ்ரீநீலகண்ட தீக்ஷிதர்; விலோக்ய - பார்த்து; அதி தீர்க கர்ணம் - தொங்கல் காதுக்காரரான; ஏநம் - இவரை; த்ருதம் -

Koviloor Digital Library

உடனே; க்ருத்வா அர்த சந்த்ரம் - 'அர்த்த சந்த்ர மரியாதை' செய்து; நிஷ்காஸய - விரட்டுங்கள்; இத்யுவாச - என்று சொன்னார்.

ச்லோகத்தில் முதல் மூன்று வரியில் வரும் இந்தக் கதையைத்தான் இதுவரை சொன்னேன்.

நாலாம் வரியில் என்ன சொல்லியிருக்கிறதென்றால், இப்படி தீக்ஷிதர் சொன்னதைக் கேட்டதும் சாஸ்த்ரிகளும் உடனே பளிச்சென்று பதில் கொடுத்தார். "மகி ஸார்வ பௌமர்", "மந்த்ரி" என்று பெயர் பெற்றிருந்த தீக்ஷிதர் லவலேச ஞானத்தினாலே ஊதிப்போயிருந்த கற்றறி மூடர் தான் என்று மஹாதேவ சாஸ்த்ரி சுடச்சுட பதில் சொன்ன தாக அந்த வரியில் இருக்கிறது.

தத் - அதை (தீக்ஷிதர் சொன்னதை); ஆகர்ண்ய - கேட்டு; சாஸ்த்ரீ - மஹாதேவ சாஸ்த்ரிகள்; ஜ்ஞாந லவாட்ய மூடம் - லவலேச ஞானத்தாலே வீங்கிப் போன அறியாதாராகிய; தம் தீக்ஷிதம் - அந்த தீக்ஷிதரிடம்; ஜரித் யுவாச - ஜடிதியில் பதில் சொன்னார்.

என்ன பதில்?

'தெருவோடு, தான்பாட்டுக்கு தேவி சிந்தனையோடு போகிற ஒரு அப்பாவியைக் கழுத்தைப் பிடித்துத் தள்ளு என்கிறவர் எப்படிப்பட்டவராயிருப்பார்? படாடோபத் தைப் பார்த்தால் பெரிய பதவிக்காரரென்று தெரிகிறது. 'அர்த்தசந்த்ர உபசாரம்' என்கிறதிலிருந்து படிப்பும் இருப்பது தெரிகிறது. ஆனால் அது வெறும் படிப்பாயில்லா மல் நிஜமான கல்வியாயிருந்தால் இத்தனை டம்பமும் இறுமாப்பும் இருக்குமா? இந்தப் பாண்டிய தேசத்தில் தற்போது நிஜமான ஸத்வித்வான்கள் இல்லாத குறை யினாலேதான் இந்த அரைகுறை ஆஸாமி பெரிசாக சோபித்துக்கொண்டு 'தாட்பூட்' பண்ணமுடிகிறது' என்று மஹாதேவ சாஸ்த்ரி நினைத்தார். தம்முடைய இந்தக் கருத்தைக் கவிநயத்தோடு சொல்லாமல் சொல்லி,

Koviloor Digital Library

தீக்ஷிதரைத் தலை குனியவைத்துப் பாடம் பெறும்படிச் செய்யவேண்டும் என்று நினைத்தார். பளீரென்று ச்லோக ரூபத்திலே பதில் கொடுத்தார்.

"ஸூர்யன் அஸ்தமித்தாச்சு. இன்னும் சந்த்ரனும் உதிக்கவில்லை. நக்ஷத்ரங்கள் சிலதுதான் ஏதோ கொஞ்சம் முணுக் முணுக்கென்று தெரிகிற ஸமயம். இப்படி ஒரே இருட்டாக இருக்கிறபோது மின்மினிப் பூச்சி படாடோபமாக ஜ்வலித்துக் காட்டுவதில் ஒன்றும் ஆச்சர்யமில்லையே!"
—இவ்வளவுதான் சாஸ்த்ரிகள் சொன்னார் :

ஸூர்யே ப்ரநஷ்டே சசிநிஹ்யத்ருஷ்டே தாராஸு
மந்த-த்யுதிஷு ப்ரகாசம் |
மஹாந்தகாரே (அ)திவிராஜிதே ஹி கத்யோதகோப்-
யல்ப-ருசிர்-ந சித்ரம் ||

ஸூர்யே ப்ரநஷ்டே - ஸூர்யன் மறைந்து; சசிநி ஹி அத்ருஷ்டே - சந்த்ரன் பார்வைக்கு வராமல்; தாராஸு - நக்ஷத்ரங்கள்; மந்த த்யுதிஷு ப்ரகாசம்-ஒளிமங்கி இருக்கிற; மஹாந்தகாரே - நல்ல கும்மிருட்டின்போது; கத்யோதக; அபி - மின்மினிப் பூச்சிகூட ('க' என்றால் ஆகாசம், 'த்யோதகம்' என்றால் ஒளியுள்ளது. வானத்தில் ஒளியைப் பரப்பிக்கொண்டு போவதால் மின்மினிப் பூச்சிக்கு இப்படிப் பெயர்); அல்ப ருசி: - தன்னுடைய ஸ்வல்ப ப்ரகாசத்தாலேயே; விராஜதே - பெரிசாக ஜொலிப்புக் காட்டுகிறது; (இதிலே) ந சித்ரம் - ஆச்சர்யமில்லை.

இப்படி அவர் ஜாடையாகச் சொன்னதே தீக்ஷிதருக்குப் போதுமானதாக இருந்தது. நல்ல மாட்டுக்கு ஒரு சூடு என்பார்களல்லவா? அநேக விதத்திலே மேன்மை பெற்றிருந்த தீக்ஷிதர் உடனே அம்பாளை த்யானித்துப் பார்த்ததில் அவருக்கு எல்லாம் தெரிந்துவிட்டது. தாம் எந்த மஹா பண்டிதரைப் பார்க்க ஆசைப்பட்டோமோ, அவரையே தான் 'தொங்கல் காதர்' என்று எடுத்தெறிந்து பேசிவிட்டோம்; அவர் உபாஸிக்கிற அலங்காரேச்வரிதான் அவரை

Koviloor Digital Library

இங்கே தம்முடைய இஷ்டமூர்த்தியாக உள்ள மீநாக்ஷியிடம் அனுப்பியிருக்கிருள்—என்று தெரிந்துவிட்டது.

பெரியவர்களாகப்பட்டவர்கள் தாங்கள் செய்த தப்பை மனஸ் விட்டு ஒப்புக்கொள்வதிலும் பெரியவர்களாக இருப்பார்கள். உடனே தீக்ஷிதர் பல்லக்கிலிருந்து குதித்து நேரே மஹாதேவ சாஸ்த்ரியிடம் போய், அவருக்கு சாஸ்த்ரோக்தமாக ரொம்பவும் மரியாதைகள் பண்ணி, "அலங்காரி அனுப்பிவைத்துத்தானே மீநாக்ஷியை தர்சிக்க வந்திருக்கிறீர்கள்?" என்று கேட்டார்.

இவர் இப்படிக் கேட்டதிலேயே சாஸ்த்ரிகளுக்கும் இவருடைய பெருமை தெரிந்தது.

அம்பாளுடைய வித்வித்-குழந்தைகள் இரண்டும் அவள் ஆசைப்படியே ஒற்றுமையாய்ச் சேர்ந்துவிட்டன!

நிசம்ய தத்-துஷ்ட-மநா மகீ ச தஸ்மை ஸபர்யாம்
விதிவத் சகார ।
பவாந் அலங்கார்யபி-சோதித: ஸந் மீநாம்பிகாம்
ஸேவிதும் ஆஜகாம ॥

மகீச-தீக்ஷிதரும்; தத்-அதை (சாஸ்த்ரி சுடச்சுடச் சொன்ன பதிலை): நிசம்ய-கேட்டு; து(tu)ஷ்ட மநா: -ஸந்தோஷமுற்ற மனத்தவராக...

நமக்காயிருந்தால், 'மந்த்ரியாயும் வித்வானுயுமுள்ள நம்மை நடுவீதியிலே எவனே ஒருத்தன் வெறும் மின்மினிப் பகட்டுக்காரன் என்று சொல்வதா?' என்று பற்றிக்கொண்டு வரும். உத்தம குணமுள்ள தீக்ஷிதரின் மனஸோ, இப்படி அவர் தமக்குப் பாடம் புகட்டியதில் ஸந்தோஷமே அடைந்தது. பவபூதியின் ஓலையில் அம்பாள் தேனைச் சுண்டிவிட்டு தன்னைத் தோற்கப் பண்ணினதையே காளிதாஸன் "மே ஸௌபாக்யம்" என்று பாடினுற்போலத்தான்!

(தீக்ஷிதர் சாஸ்த்ரிகளின் சூடான பதிலைக் கேட்டு ஸந்தோஷம் அடைந்தவராக) தஸ்மை-அவருக்கு;

Koviloor Digital Library

ஸபர்யாம் - மரியாதைகளை; விதிவத்-விதிப்படி; சகார - செய்தார். பவாந்-தாங்கள்; அலங்காரி-அபிசோதித: ஸந் - அலங்காரியால் தூண்டப்பட்டவராகி; மீநாம்பிகாம்-மீநாம்பிகையை; ஸேவிதும்-ஸேவிப்பதற்கு; ஆஜகாம - வந்திருக்கிறீர்கள். இல்லையா? (என்று கேட்டார்).

தாம் ராஜாவின் வலது கையாக, அல்லது ராஜாவும்கூட தம்முடைய வார்த்தைப்படி நடக்கிறவனாக, எந்தப் பட்டணத்தில் பெரிய கௌரவம் பெற்றிருந்தாரோ, அங்கேயே நட்ட நடுவீதியில் சற்றுமுன்தான் தம்மால் வெகு அலக்ஷ்யமாகப் பரிஹாஸம் செய்யப்பட்ட ஒரு ஊர்பேர் தெரியாதவரிடம், அவர் தம்மை பதிலுக்கு ஒரு போடு போட்டபோது, அடக்கத்தோடு போய் ஸத்காரம் செய்து தீக்ஷிதர் குசலம் விசாரித்திருக்கிறார்!

இப்படியாக, பெரிய அறிஞர்களுக்கும் கவிஞர்களுக்கும் அஹங்காரம் ஏறுவதுகூட முடிவிலே அவர்களை மேலும் உசத்தி, நமக்கும் பாடம் புகட்டுவதாகவே அமைகிறது.

விகாரமும் ஏற்றம் பெறுகிறது!

புஷ்பதந்தர் "சிவ மஹிம்ந ஸ்தோத்ர"த்திலே ஒரு இடத்தில்,* "விகாரோ அபி ச்லாக்ய:'-"விகாரமானதுங் கூட ச்லாகிக்கக் கூடியதாகிறது" என்று சொல்கிறார். விஷத்தைப் பரமேச்வரன் பானம் பண்ணி, அது அவருடைய வெள்ளைவெளேரென்ற சங்குக் கழுத்தில் நீல மணி மாதிரி ப்ரகாசிப்பதைப் பார்த்து, "விகாரமானதுகூட ச்லாகிக்கக் கூடியதாகிறது" என்கிறார். அப்படித்தான் இந்தப் பெரியவர்களுக்கு உண்டான அஹங்காரங்கூட முடிவில் அவர்களுடைய உட்சிறப்பை வெளிப்படுத்தி, மெச்சுதலுக்கு உரியதாகிறது. "விகாரோபி ச்லோக்ய."

---

* ச்லோகம் 14.

Koviloor Digital Library

மங்களாரத்தி

மாருதி மஹிமை

"குரங்கு புத்தி" என்றே சொல்வது வழக்கம். எது ஒன்றிலும் சித்தம் க்ஷணகாலங்கூட நிற்காமல் ஸதா ஸர்வதா ஒன்று மாற்றியொன்ருகப் பாய்ந்துகொண்டே இருப்பதற்குப் பேர் போனது குரங்கு. துளிக்கூட கட்டுப்பாடே இல்லாமலிருப்பதற்கு உதாரணம் அதுதான். இதனுல்தான் மநுஷ்யர்களான நம் சித்தமும் எதிலும் கட்டுப்பட்டு நிற்காமல் சாஞ்சல்ய மயமாக இருக்கிறபோது "குரங்கு புத்தி" என்கிருேம்.

ஹ்ருதய - கபிம் அத்யந்த சபலம்

என்று ஆசார்யாளே சொல்கிருர்.* "பரமேச்வரா! ரொம்ப ரொம்பச் சபலமான இந்த என்னுடைய மனக்குரங்கை பக்திக்கயிற்ருலே கட்டி உன் கையிலே பிடித்துக்கொண்டு குரங்காட்டி வித்தை பண்ணிப் பிழைத்துப் போ! வெறுமனே கபாலத்தை வைத்துக்கொண்டு பிச்சை கேட்பதைவிட இப்படி ஒரு வித்தை, கித்தை செய்து காட்டினுயானுல், உனக்கும் நல்ல வரும்படி வருகிற பிழைப்புக் கிடைக்கும்; நானும் பிழைத்துப் போவேன்" என்று பரமேச்வரனிடம்

---

* சிவாநந்தலஹரி—20

Koviloor Digital Library

அவர் வேடிக்கையாக ப்ரார்த்திக்கும்போது, "ஹ்ருதய கபி" அதாவது "மனக்குரங்கு", என்ற வார்த்தையைப் போட்டிருக்கிறுர்.

வெள்ளைக்காரர்களும் "monkey mind" என்கிறுர்கள்.

கட்டுப்பாடேயில்லாமல் ஸதா ஸர்வகாலமும் சரீரத்தாலோ, மனஸாலோ, அல்லது இரண்டினுலுமோ அலையாக அலைந்து கொண்டேயிருப்பதற்குக் குரங்குதான் ரூபகம்.

ஒரு பசு இருக்கிறது, யானை இருக்கிறது—இவை மாம்ஸம் சாப்பிடுவதேயில்லை, சாக உணவுதான் தின்கின்றன என்றுல் அதிலே ஆசார்யப்படுவதற்கு ஒன்றுமில்லை. 'பசித்தாலும் புல் தின்னுது' என்கிற ஒரு புலி சாக பக்ஷிணியாக மாறினுல் அதுதான் ஆச்சர்யம்!

ஆஞ்ஜநேய ஸ்வாமியின் ஆச்சர்யமான பெருமை இதில்தான் இருக்கிறது. சாஞ்சல்யத்துக்கே (சஞ்சலத் தன்மைக்கே) பேர்போன கபியாக அவர் இருந்தபோதிலும், அதோடு மஹா பலிஷ்டராக இருந்தபோதிலும், மனஸைக் கொஞ்சங்கூடச் சஞ்சலம், சபலம் என்பதேயில்லாமல் அடக்கி, புலன்களையெல்லாம் அடக்கி, இந்த்ரிய நிக்ரஹம் பண்ணி, சரீரத்தையும் ராமசந்த்ரமூர்த்தியின் தொண்டுக்கே என்று அடக்கி அடிபணிந்து அவர் இருந்தது தான் அவருடைய மஹிமை.

இதிலே இன்னொரு ஆச்சர்யம், அவர் மனஸை அடக்கினுர், பூர்ணமான இந்த்ரியக் கட்டுப்பாட்டோடே இருந்தாரென்றுல், எல்லாக் கார்யத்தையும் விட்டுவிட்டு எங்கேயோ குஹையிலே மூக்கைப் பிடித்துக்கொண்டு உட்கார்ந்துவிடவில்லை. ஜன ஸமூஹ ஸம்பந்தமில்லாமல், கார்ய ப்ரபஞ்சத்தில் பட்டுக்கொள்ளாமல் எங்கேயோ ஒதுங்கி மூக்கைப் பிடித்துக்கொண்டு உட்காருபவர்கள் இந்த்ரியம், சித்தம் ஆகியவற்றை ஓடாமல் அடங்கிப்போட்டு விடலாம். ஆஞ்ஜநேயர் அப்படி இல்லை. 'அஸாத்ய ஸாதகர்'

Koviloor Digital Library

என்கிற அளவுக்குக் கார்ய ப்ரபஞ்சத்திலே செய்திருக்கிறார். ஸமுத்ரத்தையே தாண்டுவது, ஒரு மலையையே* தூக்கிக் கொண்டு வருவது, ஒரு பெரிய வனத்தை* அப்படியே நிர்மூலம் பண்ணுவது, ஒரு பெரிய பட்டணத்தையே* தஹனம் பண்ணுவது—என்றிப்படிச் செய்தவர் அவர்.

மனஸ் கொஞ்சங்கூடச் சலிக்காதவர்; ஸ்ரீ ராமனின் பாதாரவிந்தத்தை விட்டு இந்தண்டை, அந்தண்டை துளிக் கூட ஆடாமல் ஓடாமல் மனஸை நிறுத்தியிருந்தவர். ஆனால் உடம்பால் அவரைப்போல ஓடி ஆடித் தொண்டு செய்த இன்னொருத்தர் இல்லை. ராம த்யானத்திலே அசையாத மனஸு; ராம கார்யத்திலே 'இதைவிட வேகமில்லை' என்னும்படியாக ஓடியாடுகிற உடம்பு!

ரொம்ப வேகமாக ஓடுவது எது?

'வாயுவேகம், மனோவேகம்' என்பார்கள்.

காற்றுதான் ஸ்தூலத்திலே பஹுவேகமாகச் செல்வது, ஸூக்ஷ்மத்திலே மனஸின் ஓட்டத்துக்கு மிஞ்சி எதுவுமில்லை.

''காற்று மாதிரி இந்த மனஸு கிடந்து பறக்கிறதே! காற்றைப் பிடித்து வைத்து அடக்க முடியாத மாதிரியே அல்லவா இந்த மனஸையும் கட்டுப்படுத்தி வைக்க முடியவில்லை?'' என்று அர்ஜுனன் முறையிடுகிறான்:

சஞ்சலம் ஹி மந: க்ருஷ்ண...வாயோரிவ ஸுதுஷ்கரம்
(கீதை 6-34)

பகவானும் ஆடாமல் அசையாமல் நிறுத்தப்பட்ட யோகியின் மனஸைக் கொஞ்சங்கூடக் காற்றேயில்லாத இடத்தில் 'ஸ்டெடி'யாக ஜ்வலிக்கிற தீபத்தோடு உவமித்துத்தான் சொல்லியிருக்கிறார்:

---

* மலை - ஸஞ்ஜீவி பர்வதம்; வனம் - அசோகவனம்; பட்டணம் - லங்காபுரி.

Koviloor Digital Library

யதா தீபோ நிவாதஸ்தோ நேங்கதே ஸோபமா...
(கீதை 6-19)

'நிவாதம்' என்றால் 'காற்று இல்லாமல்' என்று அர்த்தம். வாதம் என்றால் காற்று. வாதம், வாயு இரண்டும் ஒன்றுதான். 'வாயுப் பிடிப்பு' என்றும் 'வாத ரோகம்' என்றும் ஒன்றையேதானே சொல்கிறோம்?

ஆஞ்ஜநேய ஸ்வாமி யார்?

சஞ்சலத்துக்கே பேர்போன கபி இனத்தில் பிறந்த அவர் ஸதாகாலமும் சஞ்சலித்துக்கொண்டேயிருக்கும் வாயுவுக்குப் புத்ரர்! வாயு குமாரர். 'வாதாத்மஜர்' என்றும் சொல்வார்கள். 'வாத' என்றாலும் வாயுதானே? 'ஆத்மஜன்' என்றால் புத்ரன். வாத-ஆத்மஜன் என்றால் வாயு புத்ரன்.

வாதாத்மஜம் வாநர - யூத - முக்யம்
ஸ்ரீராமதூதம் சிரஸா நமாமி

'யூதம்' என்றால் கூட்டம், ஸேனை. வானரப்படையில் முக்யஸ்தர் இவரே ஆனபடியால் 'வாநர - யூத - முக்யர்'.

இது ச்லோகத்தின் பின் பாதி. முன் பாதி என்ன? அதிலே என்ன சொல்லியிருக்கிறது?

வாயுவேகம், மனோவேகம் என்று இரண்டு சொன்னேனே, அந்த இரண்டு வேகமும் படைத்தவர் இவர் என்று சொல்லியிருக்கிறது. ஆனால் மனஸ், இந்த்ரியங்கள் ஆகியவற்றின் சலனத்தில் அல்ல. சரீரத்தாலே செய்கிற கார்யத்தில்தான் வாயுவேக, மனோவேகக்காரராக இருக்கிறவர்.

மனோ - ஜவம் மாருத - துல்ய - வேகம்
ஜிதேந்த்ரியம் புத்திமதாம் வரிஷ்டம்

"மனோ - ஜவம்" —மனஸைப் போன்ற வேகம் கொண்டவர். 'ஜவம்' என்றால் வேகம்.

"மாருத - துல்ய - வேகம்"—காற்றுக்கு ஸமமான வேகமுடையவர். 'மாருதம்' என்றாலும் காற்றுதான்.

Koviloor Digital Library

'மந்த மாருதம்' என்கிறேமல்லவா? மாருதத்தின் புத்ரர் என்பதால்தான் அவருக்கு 'மாருதி' என்று பெயர். 'வீர மாருதி கம்பீர மாருதி' என்று (பஜனையில்) பாடுவார்கள்.

ஓயாமல் சலிக்கிற மனஸைப் போல 'மநோஜவர்': அப்படியே, ஓயாமல் சலித்துக்கொண்டிருக்கிற வாயுவைப் போல 'மாருத - துல்ய - வேகர்'; அவரே வாயுவின் பிள்ளைதான்-'வாதாத்மஜர்'; சஞ்சல ஸ்வபாவத்துக்கே பேர் போன கபிகுல முக்யஸ்தராக இருப்பவர் வேறே—'வாநர - யூத - முக்யர்!'

இப்படியெல்லாம் இருக்கிறவருடைய ஆச்சர்யமான மஹிமை என்ன என்றால், இவரையே ச்லோகம்,

ஜிதேந்த்ரியம் புத்திமதாம் வரிஷ்டம்

என்று ஸ்தோத்ரிக்கும்படியாவும் இருக்கிறார்!

புலன்களை வென்றவர் இவர்: 'ஜிதேந்த்ரியர்'' - ஜித இந்த்ரியர்: ஜயிக்கப்பட்ட இந்த்ரியத்தை உடையவர். மனஸ்தான் அத்தனை இந்த்ரிய கார்யத்துக்கும் மூலம். ஆகையால் அதை ஜயிப்பவர்தான் ஜிதேந்த்ரியர். மஹா சஞ்சலம் வாய்ந்த மனஸை ஜயித்த ஜிதேந்த்ரியர் இவர்.

அதனாலேதான் புத்திமான்களுக்கெல்லாம் உச்சியிலுள்ள 'புத்திமதாம் வரிஷ்ட'ராகி யிருக்கிறார். மனஸை நல்லதிலேயே 'ஸ்டெடி'யாக நிறுத்தி வைப்பதுதான் புத்தி. ஆகையினாலே ஜிதேந்த்ரியாக மனோ நிக்ரஹம் செய்துள்ள ஆஞ்ஜநேய ஸ்வாமி ''புத்திமதாம் வரிஷ்ட'' ராயிருக்கிறார்.

'புத்திமான்' என்று சொன்னாலே உசத்திதான். அதை விட உசத்தி 'புத்திமதாம் வர' என்று சொல்லியிருந்தால். அப்படிச் சொல்லியிருந்தால் 'புத்திமான்களில் சிறந்தவர்' என்று அர்த்தம் கொடுக்கும். அதையும் விட உசத்தி, 'புத்திமதாம் வரீய' என்று சொல்லியிருந்தால். சிறப்புப் பொருந்தியவர்களிலேயே ஒருத்தரை மற்றவரோடு ஒப்பிட்டு, 'கம்பேரடிவ்' - ஆக அவர் மற்றவரைவிட உயர்வு பொருந்தியவராக இருக்கும்போது 'வரீய' என்பார்கள்.

Koviloor Digital Library

ஆனால், ஆஞ்ஜநேயரை இப்படிச் சொன்னால்கூடப் போதாது! இதையும்விட உசத்தியாக, "இதற்கு மேலே உசத்தியில்லை; இவரோடுகூட 'கம்பேரிஸ'னுக்கும் இடமில்லை; இவர்தான் புத்திக்கு 'ஸூபர்லேடிவ்'; புத்திமான்கள் அத்தனை பேருக்கும் உச்சத்தில் இவரைத்தான் வைக்கணும்" என்றே (ச்லோகத்தில்) "புத்திமதாம் வரிஷ்ட" என்று சொல்லியிருக்கிறது. "வரிஷ்ட"தான் சிறப்பின் உச்சஸ்தானம். அதற்கு மேலேயும் இல்லை, ஸமதையும் இல்லை, அதற்கு அடுத்தபடியாக 'கம்பேர்' பண்ணக் கூட இன்னொன்று இல்லை.

ஞானிகளில்கூட இப்படி ப்ரஹ்மவித், ப்ரஹ்மவித்வரன், ப்ரஹ்மவித்வரீயன், ப்ரஹ்மவித்வரிஷ்டன் என்று உயர்த்திக் கொண்டே போவதுண்டு. மாருதி புத்திமதாம் வரிஷ்டர்.

ஆனால் இந்த இந்த்ரிய ஜயம், புத்திச் சிறப்பு எல்லாவற்றையும்விடப் பெரிய அவருடைய பெருமை என்ன என்றால் அவர் ராமதாஸனாக இருந்து, "பகவானுக்கு இவரைப் போலப் பணி புரிந்தவரில்லை" என்று அக்ரஸ்தானம் (முதலிடம்) பெற்றிருக்கிறாரே, அதுதான். புத்திமான்களைப் போலவே பக்திமான்களுக்கும் வரிஷ்டராயிருக்கிறாரே, அதுதான். தேஹ சக்தியோடு, புத்தி நுட்பத்தையும் ரொம்பவும் காட்டிச் செய்ய வேண்டிய பணி தூது போவது. அந்த தூதுப் பணியை ரொம்பவும் சிற[illegible]ச் செய்து, ஸாக்ஷாத் ஸீதா - ராமர்களுக்கே துக்கத்[illegible] போக்கிப் பெரிய நம்பிக்கையையும் உத்ஸாஹத்தையம் ஊட்டினாரே, அதற்காகத்தான் முக்யமாக அவ[illegible] வணங்கிப் பணியவேண்டும். "ஸ்ரீ ராமதூதம் சிர[illegible]" என்று பாதத்தில் விழுந்து நமஸ்காரம் பண்ணவேண்டும்.

மனோஜவம் மாருத - துல்ய - வேகம்
ஜிதேந்த்ரியம் புத்திமதாம் வரிஷ்டம் |
வாதாத்மஜம் வானர - யூத - முக்யம்
ஸ்ரீராமதூதம் சிரஸா நமாமி ||

மங்களம்

Koviloor Digital Library

Koviloor Digital Library